ஸ்ரீராமயண வசனம்

ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.



பி. நா. சி. பிரதர்ஸ்

வெளியிட்டது.



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ராமாயண வசனம்

சப்தகாண்டங்களின் சுருக்கமும்

பீம கவிராயரியற்றிய

ஸ்ரீராமர்

அஸ்வமேதயாகமும்.

திரிசிரபுரம் - வித்வான்

வி. கோவிந்தபிள்ளையவர்கள்செய்த

மகாவிந்த வசனமும்

புதுவை

நாராயணதாசரவர்களால்

பெரும்பான்மை திருத்தியும், புதுக்கியும்,

விளக்கியும் தரப்பெற்று

லெத்தகிராப் படங்களுடன்

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

வித்யா ரத்நாகரம் பிரஸில்

பதிப்பித்தது

சென்னை.

இதன் விலை] 1933. [ரூபா—20



ஆஞ்சநேயர்.   லட்சுமணர்.   ஸ்ரீராமர்.   சீதையம்மன்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நம்மாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத் கம்பராமாயணம்.

தோத்திரக்கவிகள்.

உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணாங்களே. 1

சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணத்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதனன்றரோ. 2

ஆதியந்தமரியெனயாவையும்
ஓதினாரலகில்லனவுள்ளன
வேதமென்பனமெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார். 3

தருகைநீண்டதயரதன்றான்றரும்
இருகைவேழத்திராகவன்றன்கதை
திருகைவேலைத்தரைமிசைச்செப்பிடக்
குருகைநாதன்குரைகழல்காப்பதே. 4

அஞ்சிலேயொன்றுபெற்றானஞ்சிலேயொன்றைத்தாவி
அஞ்சிலேயொன்றாறாகவாரியர்க்காகவேகி
அஞ்சிலேயொன்றுபெற்றவணங்கைக்கண்டயலாரூரில்
அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்துக்காப்பான். 5

பொத்தகம்படிகமாலைகுண்டிகைபொருள்சேர்ஞான
வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதன்னை
பொய்த்தகொந்தளகபாரமுகின்முலைத்தவளமேனி
மைத்தகுகருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம். 6

நாடியபொருள்கைகூடும்ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும்வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே. 7

நன்மையுஞ்செல்வமுநாளுநல்குமே
தின்மையும்பாபமுஞ்சிதைந்துதேயுமே
சென்மமுமரணமுமின்றித்தீருமே
இம்மையேராமவென்றிரண்டெழுத்தினால். 8

வடகலைதென்கலைவடுகுகன்னடம்
இடமுளபாடையாதொன்றினாயினும்
திடமுளரகுகுலத்திராமன்றன்கதை
அடைவுடன்கேட்பவரமரராவரே. 9

வென்றிசேரிலங்கையானைவென்றமால்வீரமோத
நின்றராமாயணத்தினிகழ்ந்திடுகதைகடம்மில்
ஒன்றினைப்படித்தோர்தாமுமுரைத்திடக்கேட்டோர்தாமும்
நன்றிதுவென்றோர்தாமும்நரகமதெய்திடாரே. 10

இராகவன்கதையிலொருகவிதன்னிலேகபாதத்தினையுரைப்போர்
பராவருமலரோனுலகினிலவனும்பன்முறைவழுத்தவீற்றிருந்து
புராதனமறையுமண்டர்பொற்பதமும்பொன்றுநாளதனினும்பொன்றா
அராவணையமலனுலகெனும்பரமபதத்தினையணுகுவரன்றே. 11

இறுவரம்பினிராமவென்றோரும்பர்
நிறுவரென்பதுநிச்சயமாதலான்
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்
பெறுவரென்பதுபேசவும்வேண்டுமோ. 12

அன்னதானமகிலநற்றானங்கள்
கன்னிதானங்கபிலையின்றானமே
சொன்னதானம்பலவெனச்சொல்லுவர்
மன்னிராமகதைமறவார்க்கரோ. 13

ஆதியரியோநமநாராயணர்திருக்கதையறிந்தனுதினம்பரவுவோர்
நீதியனுபோகநெறிநின்றுநெடுநாவதினிறந்துசெகதண்டமுழுதுங்
காதிபர்களாயரசுசெய்துளநினைத்ததுகிடைத்தருள்பொறுத்துமுடிவில்
சோதிவடிவாயழிவில்முத்திபெறுவாரெனவுரைத்தசுருதித்தொகைகளே.

இளையநற்காதைமுற்றுமெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதுதன்னைச்சொல்வோர்க்கரும்பொருள்கொடுத்துக்கேட்போர்
கனைகடற்புடவிமீதேகாவலர்க்கரசாய்வாழ்ந்து
வினையமதறுத்துமேலாம்விண்ணவன்பதத்திற்சேர்வார். 15

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் கம்பராமாயண

வசனச்சுருக்கம்.

பாலகாண்டம்.

நெடிய கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தின்கண்மிகவும் சிறப்புற்றோங்குங் கோசல நாடென்னும் அயோத்திமா நகரமானது பூமிதேவிக்குத் திருமுகம்போலவும், திலர்தம்போலவும், கண்போலவும், திருமங்கல நாண்போலவும், மார்பிலசையா நின்ற முத்தாரம்போலவும், மகாலட்சுமி வாசமாயிருக்கும் பொற்றாமரைக் கமலம்போலவும், உங்களுக்கெல்லா மேலாகிய உலகம்போலவும், ஊழிகாலப் பிரளயத்திலுமழியாமல் நின்று சகலசீவகோடிகளும் வந்துசேர்ந்து வாசஞ்செய்திருக்கிறதற்கு மேலான ஒருவீடுபோலவும் பிரகாசித்துக்கொண்டு, மிகுந்த உயர்ச்சியும் விஸ்தீரணமும் பொருந்திய கோட்டையும், பாதாளமட்டும் ஆழ்ந்திருக்கின்ற அகழியும், அனேக மாடமாளிகை கூடகோபுரங்களுடனே கோடிசூரியப் பிரகாசம்போல விளங்கிக்கொண்டு பலபல விதங்களான பண்டங்களும் நிறைந்திருக்கிற கடைவீதிகளும் வீராதிவீரர் வீற்றிருக்கின்ற இராஜவீதிகளும், குபேரனுக்கு நிகரான சம்பத்துடைய வைசிய வீதிகளும், அநேக சாம்பிராச்சியங்களுண்டான சூத்திரவீதிகளும், கல்விச்சாலைமுதலிய பலசாலைகளும், ஆனைகள்கட்டியிருக்கிற கூடங்களும், குதிரைத்திரள்கள் கூடியிருக்கிறபந்திகளும், நாடகசாலைக ளிவைமுதலான சம்பிரம

சிங்காரங்கள் நிறைந்து நான்குவேதங்கள்போல நான்குவாயி லுண்டாகிப் பிரகாசித்திருக்கும் அந்த தேவேந்திரனுடைய அமராவதியும், குபேரனுடைய அளகாபுரியும் இந்த அயோத்திமா நகரத்துக்குச் சமானமாக மாட்டாதென்றால் அப்பட்டினத்துக்கு நிகரான பட்டினம்வேறே எங்கேயிருக்கின்றது. மேலும், விண்ணளாவிய உப்பரிகைகளில் அநேகவர்னமுள்ள கொடிகளும், பூரணகும்பங்களும், மகரதோரணங்களுமுள்ள வீடுகள்தோறும் மங்கள கீதங்களும், பேரிகை முதலான மேள வாத்தியங்களும், சின்னம் பூரி காகள முதலான கருவிகளின் ஒலிமிகுத்திருக்கும்பராபரவஸ்துவான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின்பொருட்டு ஸ்ரீ ராமமூர்த்தியாகவும், ஸ்ரீ இலக்குமிதேவியே சீதாபிராட்டியாகவும் திருவவதாரஞ் செய்தருளி, மகாலட்சுமியுடன் அனேக காலங் குடியிருந்து இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்தலம் இஃதானல் அதற்குச் சிங்காரமும் பெருமையும் மகிமையும்பிரமதேவனலேயும் சொல்லக்கூடாத பிரதாபங்கொண்டிருக்கிற அப்பட்டணத்தினுடைய சிங்காரத்தை புத்தியீனமான அடியேன் என்னசொல்லப்போகிறேன் சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுலோகத்திலேயும் நிகரில்லாத அழகையுடைய நகரமாகவிளங்கும் மேலும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் ருஷிகளும் நித்தியஸ்நானம்செய்து தத்துவக்கியானத்தைப் பெறக்கருதியும், இவ்வுலகத்தாருக்குப் பெருமையும் அருமையு நிறைந்த தாயைப்போலிரட்சிக்கும் தன்மையைச் சகலவளங்களுடனுதவி இப்பாப விமோசன பவுத்திரமுடன் பிரகாசிக்குஞ் சரயுநதிவளைந்து கோசல தேசஞ் சூழ்ந்த அயோத்திமா நகரம்.

தசரதமகாராஜன் அரசியல்.

அந்த நகரத்தைச் சூரியன்முதல் பரம்பரையாய் ராச்சிய பாரம் செய்துவந்த அரசருடைய வம்சத்தில் அயனெனும் ராசனுடையபுத்திரன் இராசாதிராசன் அவன் தன் செங்கோலினுடையபிரதாபமும் ஈரேழுபதினுலுலகமும் சொல்லும்படியானகீர்த்தியுடையவன் தருமசொரூபன் உலகத்திலுண்டான உயிர்களை தன்னுயிர்போல் பாதுகாக்கப்பட்டவன் புலியும் பசுவும் ஒருதுறையில் நீரருந்தவும், சிங்கமும் யானையும் சிநேகித்துக்கூடி விளையாடவும், பூனையும் எலியும் ஒருமித்து உலா

வும், மாதமும்மாரி பெய்யவும், முப்போகம் விளையவும் குடிகளிடத்தில் ஆறிலொரு கடமைகொண்டு மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தப்பட்ட மகானுபாவன், தசரதமகாராஜாவென்னும் நாமதேயமுடையவன், தனது பத்தினிமார் மூவருடன் வாழ்ந்துக்கொண்டு உத்தமமாய் உலகத்தை ஆண்டு வருங்காலத்தில் வெற்றிமிகுந்த மன்னனுக்குப் புத்திரனில்லாமையால் மெத்த வருத்தமுற்று குலகுருவாகிய வதிஷ்டரை நோக்கியழுது அவர் மலரடியைத்தொழுது நெடுநாளாய்ப் புவியாண்டேன் பிள்ளைகாணேன் இரவிகுலம் பழுதுபடலாச்சே என்றொருவனுடன் பேரற்றுப்போச்சே மலடனென்னும் வசையாச்சே புத்திரப்பேறுடையோர் என்னைப் பிள்ளைப்பேறற்றப் பாவி எனமொழிய இழிவாச்சே என்னால்மகனில்லையென்று சொல்லவும் புத்தென்னும் நரகத்துக்காளாகி, மோட்சமில்லையென்ற வாக்கியத்தை வெல்லவும் தவம்பெறாப் பாவியானேனே என்று வருந்துகையில், வசிஷ்டமகாமுனியானவர் கியான திருஷ்டியினாலாராய்ந்து பிரம உருத்திராதி முதலிய தேவர்கள் இராக்கதர்கள் செய்யும் துன்பத்தைச் சகிக்க முடியாமல் மகாவிஷ்ணுவினுடன் சொல்ல, அவர் அந்த ராட்சதரை நாமே சங்கரிக்கிறோம் நீங்களஞ்சவேண்டாம் பூலோகத்தில் அயோத்தியாபுரியை ஆளும் தசரதமகாராஜனுடைய பிள்ளையாக நாம் பிறப்போம் நீங்களெல்லோரும் வானரங்களாய்ப் பிறந்து அவ்விடம் வந்து சேருங்களென்று சொன்னதைத் தாமறிந்து சொல்லுகிறார்.

புத்திரகாமேட்டியாகம் செய்தல்.

கேளும் சக்ரவர்த்தியே இப்போது நீர் புத்திரகாமேட்டியாகம் செய்யவேண்டுமென்று அவ்வியாகத்தைக் கலைக்கோட்டு மகாரிஷியினால் செய்தால் புத்திரனைப் பெறலாமென்று சொல்லிய வதிஷ்டர் வாய்மொழிப்படி தசரத மகாராஜன் யாகத்தைச்செய்து பூரணாகுதிகொடுக்குங் காலையில் ஒரு பூதம் பொற்கிண்ணத்தில் பாயாசங்கொண்டு வரக்கண்டு அதைவாங்கி அந்த பாயாசத்தை சரிபாகமாகப்பகிர்ந்து கோசலைக்குப் பாதி கொடுத்து, மற்றப்பாதியை இரண்டாக்கி கைகேசிக்கொன்றும் மிகுந்த பங்கையும் உதிர்ந்த சேஷத்தையும் சுமித்திரைக்குக் கொடுக்க அவர்கள் நமஸ்கரித்து வாங்கிப் புசித்துக் கர்ப்பவதிகளானார்கள்.

ஸ்ரீராமர் ஜனனம்.

கௌசலை கர்ப்பத்தில் சித்திரைமாசத்தில் சுக்கிலபட்ச நவமிதிதியில் புனர்பூச நட்சத்திரத்தில் நான்குகிரகங்கள் உச்சத்தில்நிற்க கற்கடகலக்கினத்தில் ஸ்ரீமந்நாராயணரேஸ்ரீராமராகவும், கைகேசியினிடத்தில் பரதர், சுமுத்திரையினிடமாக இலட்சுமணர் சத்ருக்கருமாக சுபமுகூர்த்தத்தில் நான்கு வேதங்களைப்போற் பிறந்த புத்திரரைக் கண்டு களித்து ஜாத கன்மமுதலிய சத்கருமங்களும் நடத்திச் சுக்கிலபட்ச சந்திரனைப்போல விர்த்தியடைந்து வளர்ந்து வரும்காலையில் வசிஷ்டமகாமுனியால் சகல சாஸ்திரங்களும் சதுர்வேதங்களும் ரதாரூடங்களும் யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவை கற்றுணர்ந்தும் சந்தி செய்தலும் லகித்தலும் போர்க்குப்போதலும் போர்புரியும் காலத்திற் கெதிர்நோக்கலும் போதித்தலும் பலவான்களை யாசரித்தலும் முதலான சட்குணங்களும் விளங்கக்கண்டு தசரதமகாராஜன் பரமானந்த முற்றிருக்குநாளையில் விஸ்வாமித்திரர் தாடகையினால் வருத்தமடைந்து வந்து தசரதமகாராஜனைக்காண அவரெழுந்து நமஸ்கரிக்க கௌசிகர் இருகரத்தையும் குவித்து இரப்பவர்போல் எனக்கொருவரம் கொடுக்கவேண்டும். அஃதென்னெனில் இறைவனே என்னுடைய யாகம் நிறைவேற வுன்னுடைய பிள்ளைகளில் நீலமேக சியாமளவர்ணனாகிய ஸ்ரீராமனை அனுப்ப வேண்டுமென்று கேட்டார்.

அப்போது தசரதனானவன் உடல்பதறி உயிரை யெமன் கேட்கும்போது ஒருவனடையுந் துன்பம்போல் அயர்ந்து பூமியில் விழுந்து திருவடிகளிற்றொழுது சுவாமி அறியாத குழந்தையான ஸ்ரீராமனுக்கு சண்டைசெய்யுந் திரமைபோதாது தநுர்வேத முதலிய மந்திரங்களிலும் சிறிதே கற்றுணர்ந்திருக்கிறான். உமது திருவடிக்கடிமை யான் இருக்கும்போது என் சிறுவனாலாகத்தக்கதோ இராக்கத மாயையோ பெருஞ்சூது ஆதலின் நாயினேன் அவர்களையழிந்து நாசப்படுத்தி உமது யாகத்தை நிறைவேற்றுவே னிப்போதென்று சொன்னார். அதைக்கேட்ட விஸ்வாமித்திரர்மிகவும்கோபித்தெழுந்த தன்மையை சமீபத்தில் இருந்த வசிஷ்டரானவர் அறிந்து அரசனைத்தேற்றி உன்குமாரனுக்கு இதுநல்லகாலம் இவருடன் கூட்டியனுப்புவதேநலம். இதுசமயம் இம்முனிவரால் சகல நன்மைகளும் இராமனடையவிருக்கிறார், இணையற்ற

தசரதரும் வசிஷ்டரும் யோசித்தல். புத்திரகாமேஷ்டியாகம். ஸ்ரீராமர் ஜனனம்.



ஸ்ரீராமரை விஸ்வாமித்திரர் அழைத்தேகுதல். தாடகை வதை. சீதாகல்யாணம்.

கீர்த்தியுமுமக் குண்டாகப்போகிறதென்று சொல்லிய வார்த்தையைத் தசரதர்கேட்டு கௌசிகரதுபாதத்தை வணங்கி ஸ்ரீராமரையும் இலட்சுமணரையும் கையைப்பிடித்துக் கொடுத்துக் காப்பதுன் கடனென்று விடுத்தார்.

ஸ்ரீராமரையும் இலட்சுமணரையும்
கௌசிகர் அழைத்துக்கொண்டு போதல்.

விஸ்வாமித்திரர் மகிழ்ந்து தசரதமகாராஜனைப் புகழ்ந்து பிள்ளைகளிருவரையு மழைத்துக்கொண்டுபோய் இராட்சதமாயையும் அவர்கள் செய்யும் அக்கிரமத்தையுஞ்சொல்லி மந்திரார்த்தங்களு முபதேசித்து இருபக்கத்திலும் காவல்வைத்து தனது யாகத்தை நிறைவேற்ற எத்தனமுற்றிருந்தார்.

தாடகை வதை.

அந்தச்சமயத்தில் தாடகைவந்து மலைமரமுதலியவற்றையெறிந்து யாகத்தையழிக்க அப்போது இராமரானவர் பெண்ணென்று நினைத்து நிதானிக்க அதைக்கண்ட கௌசிகர் தரும சாஸ்திரஞ்சொல்ல, இராமர்கேட்டு விண்ணின்றிழி மேகம்போல் திண்ணென்று பூமியில்விழ கணைதொடுத்து தாடகையைக்கொன்றார் உடனே அவள் பிள்ளைகள் சுவாகு மாரீசனெனுமிருவருஞ் சேனையுடன்வந்து வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்தார்கள். அவர்கள்பேரிலும் திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்து சுவாகுவையுங்கொன்று மாரீசனுடைய தலைக்குக்கணையைப்பிடித்தார் அஃதை மாரீசன்கண்டு மயங்கி கடலிலொளித்தான் உடனே விஸ்வாமித்திரர் யாகத்தை நிறைவேற்றிக் களிப்புற்றிருக்கையில் மிதிலையிலிருந்து சுப ஓலைவர அதை வாசித்தறிந்து இராமலக்ஷுமணரிருவரையு மழைத்துக் கொண்டுபோகும் வழியில்,

அகலிகை சாபவிமோசனம்.

கருங்கல்லாய்க்கிடந்த உருவின்பேரில் இராமருடைய பாததூள் பட்டமாத்திரத்தில் வடிவுடையபெண்ணாய் வரக்கண்டு ஸ்ரீராமரானவர் இஃதென்னவென்றவினவ, விஸ்வாமித்திரர் சுருக்கமாகச் சொல்லுகிறார் கேளும் ஸ்ரீராமா இவ்வகலிகை கௌதமர் மனைவி இவளை இந்திரன்சேர ஆயிரங் கண்ணுற்றான். இவள் கல்லானாளென்று சொல்லக்கேட்டு கருணைகூர்

ந்து அகலிகையை அழைத்துக்கொண்டுபோய் கௌதமரிடத்தி லொப்புவித்தார்கள்.

மிதுலாபுரிப் பிரவேசம்.

பின்பு மிதுலாபுரிக்குச்சென்று சபாமண்டபத்தி லிருந்த வேந்தர் வேந்தர்கள் யாவரும் களிக்க ஸ்ரீராமருடைய குலமுறைகளெல்லாஞ்சொல்லி இவரதுகரத்தின்றிரத்தை தாடகை சவாகுபேரிற்கண்டேன் இவர்கால்வண்ணம் கல்லாய்க்கிடந்த அகலிகையின்பேரிற்கண்டேன். இன்று உம்முடைய வில்லைக் காணவும் வந்தேனென்று விஸ்வாமித்திரர்சொன்னார். அந்தச்சொல்லைச் சகலருங்கேட்டு சந்தோஷ முற்றிருக்கச் சனகமகாராஜன் சொல்லுகிறான். அப்படியேநேரிடுமாகில் என்னுடைய தவப்பயன்தான் என்று மகிழ்ந்து அறுபதினாயிரம் வில் வீரர்களால் வில்லையெடுப்பித்துக் கொண்டுவந்து சபையிற்சேர்க்கவும், ஸ்ரீராமன் முகத்தை விஸ்வாமித்திரர்நாடவும் அக்குறிப்பையறிந்து அப்போது ஸ்ரீராமரானவரெழுந்திருந்து அறுபதினாயிரம் வீரர்களால் எடுப்பித்துக்கொண்டு வந்த அந்தவில்லை வெகுசுலபமாகவெடுத்து மளமளவென்று வளைத்து படீலென்று இரண்டுதுண்டாய் ஒடித்தெறிந்து விட்டனர். அந்தவில்லின் ஓசையானது அண்டகடாகத்தையுமதிரச்செய்தது.

சீதா கல்யாணம்.

அக்கணமே மங்களஸ்திரீகள் சோபனம்பாடவும் பாங்கிமார்கள் சீதையம்மையினிடத்தோடவும் சீதாபிராட்டியாருக்கும் ஸ்ரீராமருக்கும் கல்யாணங்கைகூடவும் தசரதன் முதல் தாய்மார்களும் வந்து கொண்டாடவும் சகலசனங்களும் பிராமணர்களும் புகழ்ந்துபாடவும் சகலவாத்தியங்கள் முழங்கவும் தம்பிமார்களியாவருக்கும் கலியாணச்சடங்கை நிறைவேற்றி விவாகம்செய்துக்கொண்டு சனகமகாராசனிடத்தில் விடைபெற்றுச் சதுரங்க சேனைகள் புடைசூழ அயோத்தியை நோக்கி சகல ஆடம்பரங்களுடன் மிதிலையினின்றும் புறப்பட்டார்கள்.

பரசுராம கர்வபங்கம்.

இப்படிச் சகல சம்பிரமங்களுடன் பவனிவரும்போது வழியில் பரசுராமர்வந்து தடுத்ததைச் தசரத சக்கிரவர்த்தி

கண்டு நடுநடுங்கி நிற்க, வந்தவர் சிற்சில வார்த்தைகளை பேசும் பொழுது இராமர் பயப்படாம லெதிர்நின்று அவரை ஓட்டிவிட்டு அவருடைய வில்லை வருணனிடத்திலொப்பித்து அயோத்தியாபுரிவந்து நமஸ்கரிக்க எல்லாருக்கும் விஸ்வாமித்திரர் ஆசீர்வதித்து தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர். சகலரும் அயோத்தியாபுரியில் மிகுந்த சந்தோஷத்துடனிருந்தார்கள்.

பாலகாண்டம் முற்றிற்று.

இரண்டாவது,

அயோத்தியாகாண்டம்.

காப்பு.

வானின்றிழிந்துவரம்பிகத்தமாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனுமுயிருமுணர்வும்போ லுள்ளும்புறத்துமுளனென்ப
கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோற்றுறந்து
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை.

அயோத்திமாநகரத்தில் ஸ்ரீராம இலட்சுமண பரத சத்துருக்கர்களுடனும் தந்தை தாய்மார் முதலியயாவருடனும் சுகமாக வாழ்ந்துக்கொண்டு வரும்போது மணவாளக் கோலமுடைய பரதனும் சத்துருக்கனும் பாட்டனாகிய கேகயனிடத்துக்குப் போயிருக்கப் பட்டணத்தில் இராமரும் இலட்சுமணரிருக்குநாளையில் ஒருநாள் தசரதச்சக்கிரவர்த்தியானவர் வதிஷ்டர் மந்திரிமார் முதலிய பெரியோர்களைப் பார்த்துச் சொல்லுகிறார், இதுவரையிலும் நான் சுமந்திருந்த இந்த பூமிபாரத்தை எனது ஜேஷ்டபுத்திரனாகிய இராமனிடத்தில் ஒப்பிவைத்து யான் நாட்டைத்துறந்து காட்டுக்குச்சென்று காய்கனிகளையருந்தி அரிய தவஞ்செய்யக் கருதுகிறேனென அதைக்கேட்ட பெரியோர்களெல்லாஞ் சந்தோஷித்து பிரமானந்தமுற்று நல்லகாரியமென்றார்கள். உடனே முகூர்த்தநாள் நேமித்து சகல சாமக்கிரியைகளும் புண்ணிய தீர்த்தங்களுஞ் சேகரிக்கச்செய்து நாடு நகரங்களெல்லாம் அலங்கரிக்கும்படி பறையறைவித்துப் பட்டணமியாவும் புகழ்கொண்டாட மறுநாள்காலமே இராமருக்குப் பட்டாபிஷேகமென்று பரவசங்கொண்டு அன்றிராத்திரி யாவரும் தங்கள் தங்களிடத்திற்குச் சென்றார்கள்.

கூனி கைகேசியைக் கலைத்தல்.

அரசனும் அரண்மனைக்குப் போயினன் சபையில் நடந்த சமாச்சாரமெல்லாம் கேட்டிருந்த மந்தரையானவள் கேகயன் பாவையாகிய கைகேசியினிடத்திற்குச் சென்று அம்மா ஏன் சும்மாவிருக்கிறாயென்று விம்மி விம்மி உன் புருஷனாகிய தசரதமகாராஜன் கௌசலையின்பேச்சைக்கேட்டு அவளுடைய மனங் கோணாமல் ஸ்ரீராமனுக்குப் பட்டங்கட்ட நாளைக்கே நாள் நியமித்துக் கொண்டார்களாம். நீயேதுந் தெரியாமல் நித்திரை போகின்றாயே யென்றுசொல்ல அதைக் கைகேசி கேட்டு புளகமுற்று தன் கழுத்திலிருந்த முத்தாரத்தை கூனிக்கு வெகுமானமாகக்கொடுத்தாள். கூனியானவள் அதை வாங்காமல் கடுகடுத்துத் தடுத்துச் சொல்லுகிறாள்.

ஆ! ஆ! இஃதென்ன? அனியாயம் இராமனுக்குப் பட்டமானாலுன்பிள்ளை பரதன் அவனுக்கு ஊழியனாகவும் நீகோசலாதேவிக்குப் பணிப்பெண்ணாகவும் உன்மருமகள் சீதைக்கு வேலைசெய்யவும் உன்தகப்பன் இராமனுக்குப் பகுதிகட்டவும் உன்னுடைய மக்கள் வந்தால் கோசலையை நீவணங்கி அன்ன வஸ்திர முதலியவைகள் வாங்கிக் கொடுக்கவும் தன்னைப் பணிவாரைத் தான்பணிந்தேத்தவும் உன்னை நம்பியிருந்த நானலைந்துவாடவும், ஏதொரு சுதந்தரமு முனக்கில்லாமலே எல்லாம் மூத்தபெண்சாதிவசத்தி லொப்பிவைத்துப் பிண்டமுந் துண்டமுங் கண்டதன்றி வேறொன்று மில்லையென்று அரசன் உன்னையடக்கிவிட்டானே அஃதை யறியாமல் ஐயையோ! நீ பிறந்தசீரும் உன்பேரும் உன்தந்தையினூரும் உன் இச்சையின்படி நீ யனுபவித்த செல்வமும்போய் கோசலை வீட்டுத் தாதிக்குத் தாதியாய்ப்போகக் காலம் நேரிட்டதே சூரியன் முன் சந்திரனும் சந்திரன்முன் உடுக்கள் நிற்பதுபோலுமொத்த பிள்ளையை ஸ்ரீ இராமபிரானுக்கு நிகராய்ச்சொல்லத் தகாதே என, பரதனோ மெத்த அறியாதவன் கள்ளங்கபடுசூது வஞ்சகமொன்றும் தெரியாதவன். உன்னைப்போற் களங்கமற்றவன் அஃதெங்ஙனமெனில் கலியாணப்பிள்ளையும் பெண்ணும் வீட்டிற்குவந்து பெரியோரைப்பணிந்து ஆசீர்வசனம் பெறுவதற்கு முன்னமே கோசலையுரைத்த தலையணைமந்திரத்தை மனதிலே வைத்துக்கொண்டு வஞ்சகநினைப்புடன் வழியிற்றானே பாட்டன் வீட்டிற்குப்போய்வாவென்று சூட்டினையுடைய இராஜன் அனுப்பிவிட்டுப் பட்டத்தை இந்த இராம

கூனி கைகேசியைக் கலைத்தல்.



ராமலட்சுமணனை வனத்திற்கனுப்புதல்.



தசரதர்மூர்ச்சை.





தசரதர்க்குக் கர்மம்செய்தல்.



குகன் ஓடம்விடல்.



பாதுகை தந்தது.

னுக்குக்கட்ட நினைத்தான் இந்தக்கெட்ட நினைப்பைப் பார்த் தாயா இனி பேசுவதென்பது வார்த்தையா இன்னம் உன் னுடைய மனதுக்குத் தெரியவில்லையா எனக்கு மறுமொழி சொல்ல வாயில்லையா அழகிய சிங்காரவனத்தில் இராமனுை வனிருக்கச் சுமித்திரையினுடைய பிள்ளையாகிய இலட்சுமண னுங்கூடியிருக்க உன்பிள்ளையான பரதன் அவர்கள் கால்பிடித் துக்கொண்டிருக்க நேரிட்ட காலத்தைக்குறித்து நானென்ன செய்வேனென்று மார்பி லடித்துக்கொண்டு வாய்விட்டழு தனள்.

இந்த வார்த்தையைக்கேட்ட கைகேசி மெத்தவும் வியா கூலமுற்று மதிமயங்கி நீ சொன்ன வசனங்களெல்லா முண் மையே நானென்னசெய்வேன் இதற்கோருபாயம் எனக்குச் சொல்லுவாயாகில் அந்தப்படி நடப்பேனென்று கைகேசி சொல்ல, அதைக்கேட்டுகூனிசொல்லுகின்ருள் அம்மா தசரத மகாராஜன் உனக்குப்பூர்வத்தில் இரண்டுவரங் கொடுத்திருக் கிருரல்லவா அவைகளை மறந்தனைபோலும் அதற்கு இது நல்லசமயம்வாய்த்ததுசொன்னசொற்படிபேச அறியாத அர சனிடத்தில் முன்கொடுத்தவர மிரண்டையுந் தரவேண்டு மென்று நீகேட்டு பரதன் நாடாள ஒருவரமும், இராமன் பட் டம் நீக்கிக் காடாள ஒருவரமும் பெற்றுக்கொள்வாயாகில் நமக் கெதிர் ஒருவருமில்லை. சகலசெல்வமும் நம்முடையவைகளே என்று மந்தரைசொன்னுள். அவள் புத்தியைக் கைகேசி கேட்டு தலைமயிர்களெல்லாம்விரித்துக் கீழேபுரளவும், வஸ்தி ரஞ்சோரவும், பரிமளகந்தபுட்பமெல்லாம் பக்கத்தில் சிதறி யிருக்கவும் அலங்கோலமாகவும் படுத்துக்கொண்டிருந்தாள். அங்கு அப்பேரது தசரதராசன் ஆசையுடன் வந்து உன்குமா ரனுக்குப் பட்டாபிஷேகம் நாளையென்று •சொல்லி பார்க்கும் போது மிகுந்த விசனத்துடன்புலம்ப தேவியையெடுத்துமார் போடணைத்து இந்தமனோதுக்கம் உனக்கு வந்தவிதம்யாது உற்றதுரைப்பாய் சிற்றிடைமயிலே யென்று வருந்திக்கேட்க அப்போது கைகேசியானவள் சிற்சிலவசனங்களை வெடிப்பாக வும் வெறுப்பாகவும்பேசி யெத்தனைவித சமாதானஞ்சொன்ன போதிலும் கேளாமல் எனக்கு நீர் ஆதியில் கொடுத்திருக்கும் இரண்டுவரங்களை இப்போதெனக்குத் தரல்வேண்டுமென்று கேட்க தனது தேவியை நோக்கி தசரதன் சொல்லுகிருர். கேளும் பெண்ணே! அன்று சொல்லிய வாக்கியத்தை அழித்

துப் பேசமாட்டேன், அப்படியே தடையில்லாமல் தந்தேன் பெற்றுக்கொள்ளும் எழுந்திரும் முகத்தை யலங்கரித்துக்கொண்டு உன்பிள்ளையாகிய இராமனுடையபட்டாபிஷேகத்துக்கு வாருமென்று அழைத்தார். அதைக்கேட்டு கைகேசி நகைத்து நீர்கொடுத்த இரண்டுவரத்தில் ஒருவரம் பரதன் நாடாளவும், மற்றொருவரம் இராமன் காடாள்வும் வேண்டுமென்று சொன்னாள் அந்தசொல்லானது இரும்புநாராசங் காய்ச்சிவிட்டது போல அரசனுடைய காதுகளில்நுழைந்து வேடன்கைப் பாணம்பட்டு வெருண்டு உருண்டுவிழுந்த கிளைமான்போல அரசன் பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்து மறுபடியுந் தேறி எழுந்து பெண்ணே! கைகேசி, எனக்கு உயிர்ப்பிச்சை நீ தரவேண்டும் உன்மகன் பரதன் நாடாளட்டும் இராமன் மாத்திரம் வனத்திற்போகாம லிவ்விடத்திலிருக்கட்டுமென்று எத்தனைவிதத்திற்சொல்லியுங் கேளாமையால் முத்திரைமோதிரத்தைக்கழட்டி கைகேசிக்கு முன்னெறிந்துவிட்டு அடா ஒழிந்தாய், ராமா ராமா வென்று பூமியில் விழுந்து தன்னை மறந்தான் தசரதமகாராஜன்.

கைகேசியின் சொற்படி ஸ்ரீராமர் சீதா லட்சுமண சமேதராய் வனமேகுதல்.

இவ்விடத்திலிப்படியிருக்க மறுநாட்காலமே சபாமண்டபத்தில் வசிஷ்டர்முதலிய மந்திரிமார்களும் மன்னவர்களும் வந்து நிறைந்து மங்களவாத்தியமுழங்க இராமனுக்குப் பட்டாபிஷேகமென்று யாவரும் உள்ளக்களிப்புடனிருக்குங்காலையில், அந்தப்புரத்தில் நடந்தசங்கதிகளியாவுமறிந்துகொண்டு ராமன் மனமகிழ்ச்சியுடன் தசரதசக்கிரவர்த்தியி னிடத்திற்கு வரும்போது அந்தப்புரவாசலில் நிற்கிற கைகேசியை நோக்கித்தீர்க்கதெண்டனிட்டார். அதைக்கண்ட தாயாகிய கைகேசியார் இராமனைப்பார்த்துச் சொல்லுகின்றாள். ஏ ராமா உன் தந்தை உன்னிடத்தில்சொல்ல மனம்வராமல் சங்கடப்படுகின்றனர். ஆயினும் நான் சொல்லுகிறேன் கேள் நீ பதினான்கு வருஷம் காட்டிற்றிரிந்து வரக்கடவை, உன் தம்பி பரதன் இந்நாட்டை யாளக்கடவனென் றுரைத்தாள். அம்மொழியைக்கேட்டு மகிழ்ந்து அம்மணி என்பாக்கியமே பாக்கியமென்று அநேக முறை பணிந்து எனரசன் சொல்லாமற்

போனாலும் தேவரீர் கட்டளையைத்தள்ளிநடக்கவென்றமோ தாயே நீர்சொல்லிய வாக்கியமே வேதவாக்கிய சிலாக்கியமன்றிவேறில்லை இதுவே பிரயாணமாய்ப் போய்வருகிறேனென்றுவணங்கி அடிக்கடி மண்மீதில் வீழ்ந்து தாழ்ந்து எழுந்து விடைபெற்றுக்கொண்டு தந்தையிருக்கும் அந்தப்புறத்திற்குப் போகாமல் தன் சொந்த கிருகத்திற்புகுந்து ஆரகேயூரமணிமகுடகுண்டலமுதலிய யாவுங் களைந்து சிற்றன்னையா லனுப்பப்பட்ட மரவுரியைத் தரித்துக்கொண்டு காடே காணியாட்சியாகப்புறப்பட்டார். அப்போது தேவர்களெல்லாம் புகழ்ந்து பாரிசாதமலர்களைப் பொழிந்து எங்கள் குறையை யகற்றுமேந்தலே என்று வாழ்த்தினார்கள். அக்காலையில் ஸ்ரீராமர் பட்டாபிஷேகக்கோலம் நீங்கி சடைமுடி மரவுரியுடன் வருந்தன்மையைக்கண்டு வசிஷ்டர் மன்னர்கள் முதலிய மற்ற யாவர்களும் வாடிக்கலங்கி யாதொன்றும் தோன்றாமல் ஏங்கியிருந்தார்கள். அப்போது ஸ்ரீராமரானவர் வசிஷ்டரை வணங்கி தாயாகிய கோசலையைத் தொழுதார். அந்தம்மாளும் அழுது விடைதர நீங்கிச் சீதையினிடத்திற்கு வரக்கண்டு கலங்கி கூடவரும்படி காட்டிய குறிப்பையுணர்ந் தழைத்துக்கொண்டு சுமித்திரையைக் கண்டிறைஞ்சி இவ்வார்த்தைகளைச் சொல்லக்கேட்ட தம்பி இலட்சுமணன் கோபங்கொண்டதைமாற்றி அவனையுமழைத்துக்கொண்டு தாங்கள் மூவரும் (இராம லட்சுமண ஜானகி) புறப்பட்டு அயோத்தியைவிட்டு நீங்கும்போது உயிரிழந்த வுடல்போலும் யாவரும் துயரங்கொள்ள, அதைக்கண்ட கோதண்டராமரானவர் அவரவர்களுக்குத் தக்க சமாதானஞ்சொல்லி யாவர்களையும் நிறுத்திவிட்டு மூன்று யோசனை தூரஞ்சென்று கங்கையைக்கடந்து குகப்பெருமானுடைய உறவுகொண்டு அப்பால் சித்திரகூடம் போய்ச்சேர்ந்து, சிவனடியார் திருமாலடியார் பெரியோர்கள் வந்து ஆசீர்வதிக்கவும் அவர்களை இம்மூவர்களும் வணங்கி உபசரித்துக்கொண்டிருந்தார்கள்.

தசரதமகாராஜன் சுவர்க்கமடைதல்.

இந்தச் செய்திகளெல்லாவற்றையும் ஆதியோடந்தமாக மந்திரியாகிய சுமந்திரன் சொல்ல தசரதமகாராசன் கேட்டு ஆ ஆ மகனே மகனே யென்று ஆவியகன்றார். உடனே வசிஷ்டர் திருமுகமனுப்பக்கண்டு பரதசத்துருக்கா ளிரண்டு


பேரும் அயோத்தியா புரியில்வந்து அரண்மனையிற் புகுந்து அரசனிறந்ததை யுணர்ந்து அண்ணன் அகன்றது தெரிந்து தாய்முகம்பார்க்க வயறெறிந்து தந்தைக்குச் செய்யுங் கரும விதிகளையெல்லாம் புரிந்து கைகேசியைநோக்கி அடீ பாதகி இப்படி என்னைப் பழிக்காளாக்கி விட்டாயேயென்று கண்ணீர் சொரிந்து கோசலை தாயைப்பிரிந்து ஜபதபங்க ளனேகம் புரிந்து இனிமேல் என்தமையனைப் பிரிந்து இகத்தில் இமைப் போதும் உயிர்வைத்துயிருக்கேனென் றிறைந்து என் அண் ணலைப்போலவே நானுங் காட்டுக்குச் செல்லுகின்றேனென்று விரைந்து தவவேடங்கொண்டு பரதன் புறப்பட்டான்.

பரதமகாராஜன்
சத்துருக்கருடன் ஸ்ரீராமரைக் காண ஏகுதல்.

தாய்மார் மூவரும் வசிஷ்டர் முதலிய மந்திரி பிரதானிக ளும் ரதகஜதுரகபதாதிகளும் நகரத்திலுள்ள ஜனங்களியாவ ரும் கடல் நெருங்கி வருவதுபோல் கலந்து சென்றார்கள் பரதரானவர் கண்ணீராருகப் பெருகும் படியாய்க் கங்கைக் கரைபோய்ச்சேர்ந்து குகனைக்கண்டு சிலவார்த்தையாடி ஓடத் திலேறிச் சென்று சித்திரகூடம்போய் இராமரைக்கண்டு தாயைக்கண்ட சேயைப்போலும், பசுவைநோக்கிய கன்றைப் போலும் பரதன் கதறி முறையிட்டலறி தந்தையிறந்த சங் கதியைக்கூறி தாயாகிய சீதையம்மன் சரணங்களிற் பணிந் தான் அப்படிப்பணிந்த பரதனை வாரியெடுத்து மார்போட ணைத்து மாமனிறந்த வகையுணர்ந்து கண்ணீர் மாரிபோற் பொழிய இராமலட்சுமணரும் வெகுவாக விசனங்கொள்ளுங் காலையில் வசிஷ்டரு மற்றுமுள்ள மகாமுனிவர்களும் துயரம் நீங்க சில நீதிவசனஞ்சொல்லி ஸ்நானஞ் செய்வித்து அவ் விடத்தில் நடக்கவேண்டிய கருமங்க ளெல்லாவற்றையும் முடித்து பரதனைநோக்கி இராமர் சொல்லுகிறார். தம்பி மாதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்படியாய் வனத்திற் பதி னன்கு வருடங்கழித்து பதினைந்தாவது வருடமுதலில் தசமி கூடிய சுபதினத்தன்று வருகிறேன். அதுவரையிலும் தாய் மார்கள் மனங்கோணமல் நடந்து நீதிசெலுத்தி மந்திரிமார் சேனதிபர் ஆசிரியர் யாவருமகிழத் துரைத்தனஞ் செய்யக் கடவை யென்று கட்டளையிட்டார். அதற்குப் பரதன் சீதா ராமருடைய திருவடிகளிற் பணிந்து தேவரீருடைய திருவடி

லும் புல்லும் நீக்கிக்கொண்டு வருகிறேன். அல்லும்பகலும் விழித்துக் காவலிருக்கிறேன். சொல்லும் ஏவற்றொழில்களைச் செய்துவருகிறேன் அண்ணாவென்றலறியழ, அதற்கு ஸ்ரீராமரானவர் பரதனையெடுத்தணைத்து தாய்தந்தையர் வாக்கியம் தப்பி நடப்பது நமக்கு யோக்கியமல்லவே தம்பி யென்போலொத்த பிள்ளைபிறந்து மாதா பிதாவை வையகத்தார் பழிக்கச்செய்து நன்கு புரிவதழகல்ல, நமது குலமுறைக் கடுத்ததல்ல, என்வார்த்தையை நீ தள்ளிநடப்பது இயற்கையுமல்ல ஆகையால் பதினான்குவருடமும் பதினாறு நாளாய் நினைத்து அரசு செய்திருப்பையாகில் நானும் பதினான்கு வருடத்தையும் பதினான்கு நாழிகையாகக் கழித்து வருவேனென்று சொன்னார்.

அந்த வாக்கியத்தைக்கேட்டு பரதன்முகம்வாடி இராமருடைய பாதுகையைத்தேடி நாடி கண்ணி லொத்திக்கொண்டு இதையாகிலுங்கருணைபுரிந்தால் சிங்காதனத்திலேற்றி இறைவனான உம்மை பூசைபுரிந்து எப்போதும் நடந்துவரும் அரசாட்சியைத் தப்பாம லொப்பிவைத்து நானிப்போ திருக்குங் கோலத்துடன் தேவரீர் வருமளவும் முப்போதுண்ணாமலிருப்பேன். தேவரீர் வருங்கால மெனக்குச் சொன்ன வராதிருப்பீரேல் அக்கினியி லிறப்பேனென்று சொன்



சீதையை ராவணன் எடுத்தேகுதல்.

அப்படிச் சொல்லிய தம்பிக்குப் பாதுகை
டியனுப்ப விடைபெற்றுக்கொண்டு யாவரு
உடல்போலும் துன்பமுடன், திருப்பி
வந்தார்கள். பரதமகாராஜன் நந்திக்கி
மேற்படுத்தி அதன்பேரில் பாதுகை
சமாச்சாரங்களும் சுமந்திரனு லு
முடி மரவுரியுடன் இராம மந்திரத்
ராமல் தென்றிசையைநாடி இர
ளெண்ணிக்கொண்டு பரத சத்
கழித்து அண்ணன்வரும்
முடன் இனிது வீற்றிருந்

அயோத்தியா

மூன்ருவது,

ஆ ர ணி ய கா ண் ட ம்.

காப்பு.

பேதியாதுயிர்பேதஉருவம்பிறழ்கலா
தோதியோதிஉணருந்தோறுமுணர்ச்சியுதவும்
வேதவேதியர்விரிஞ்சன்முதலோர்தெரிகலா
ஆதிதேவாவரெம்மறிவினுக்கறிவரோ.

ஸ்ரீராமரானவர் பரதசத்துருக்கர் முதலியோர்களுக்கும் விடைகொடுத்தபிறகு இவ்விட மிருந்தால் மறுபடியும் வருவார்களென்று நினைத்து ஸ்ரீராமர் முன்னும் சீதாதேவியார் நடுவிலும் இலட்சுமணர் பின்னுமாக நடந்து மகானுக்களை நமஸ்கரித்து அவர்கள் ஆசீர்வாதம்பெற்று யாளி சிங்க முதலிய மிருகங்கள் சஞ்சரிக்கும் வனங்களிற் சென்ருர்கள்.

விராதன் வதையுந் துதியும்.

அப்போது வடவாமுகாக்கினி குடியிருக்கும் கண்களும் சடைமுடியும் திடகாத்திர தேகமுடைய விராதனென்னுமிராக்கதன் வந்து திடுக்கிட்டுச் சீதாதேவியை யெடுத்துத்தோளில் தூவத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது போதூாபிராட்டி துயரமுற்று கூச்சலிட் டலரக்கண்ட ஸ்ரீராம கதியைக்ஷ்ட்சுமணரும் பயப்படாதேயென் றுறுதிகூறி திவ்வி தான் அப்பு ளைத் தொடுக்கவும் தாங்கள் அதைக்கண்ட விரா ணைத்து மாமண்றங்கி இவர்களிருவரையும் சேர்த்தெடுத்து பொழிய இராமலட்க்சொள்ளவே வாளையுருவி யோங்கி வெட் காலையில் வசிஷ்டருண்டு புஜமு மற்றுப் பூமியில் விழவும், நீங்க சில நீதிவசனஞ்மனும் இளையபெருமாளும் நிலத்திற் விடத்தில் நடக்கவேண்விராதனுனவன் தேவவிமானத்துடன் முடித்து பரதனைநோக்கூபுரிந்து பணிந்துசென்ருன். தேவர் மா துர்வாக்கிய பரிபாலனன் புட்பமாரி பொழிந்தார்கள்.

ஞன்கு வருடங்கழிந்து பதிகோகாவனஞ் சேர்தல்.

கூடிய சுபதினத்தன்று வருகிறே—
மார்கள் மனங்கோணுமல் நடந்துரஞ்சென்று பிரபஞ்சத்தின் சேனுதிபர் ஆசிரியர் யாவருமகிழ்ந்து மெய்யாகிய வஸ்துவை கடவை யென்று கட்டளையிட்டார்கருடைய ஆசிரமத்திற்குச் ராமருடைய திருவடிகளிற் பணிந் மாதவத்தினர்க்கு நமஸ்கா ம் பெற்று தண்டகாவனத்



சூர்ப்பநகை பங்கம்.



மாரீசன் வதை.



சீதையை ராவணன் எடுத்தேகுதல்.



ஜடாயு வதை.



ஜடாயு தகனம்.



விராதன் வதை.

இல் இராக்கதரால் வருந்தும் உத்தமரிஷிகளுடைய துன்பம் நீங்க அபயஸ்தங்கொடுக்க அப்போது அவ்விடமிருந்த அகஸ்தியர் சொல்லுகிறார். நீங்கள் போகும்வழியில் உனது தகப்பனுருக்கு மிகுந்த இஷ்டனுகிய சடாயுவென்பவர் இருப்பார். அவரைக்கண்டால் உங்களுக்குத் தகுந்தவிடம் சொல்லுவாரென்றுரைக்க மூவரும் நடந்து சடாயுவைக்கண்டு வார்த்தையாடி அவ்விடத்திலிருந்த கோதாவிரி தீர்த்தந்தாண்டி பஞ்சவடி தீர்த்தத்தில் லட்சுமணரால் கட்டப்பட்ட பர்ணசாலையில் சீதாசமேதராய் ஸ்ரீராமர் எழுந்தருளியிருக்க இளைய பெருமாள் கந்தமூல பழவர்க்கங்கள் கொண்டுவந்தவைகளாற் சீதாபிராட்டியையும் ஸ்ரீராமரையும் உபசரித்துக்கொண்டு தலைவாயலில் காவல்வைத்துக் கொண்டிருந்தார்.

சூர்ப்பநகையை வின்னப்படுத்துதல்.

இப்படியிருக்க சூர்ப்பநகை யென்னும் அரக்கியானவள் திரிலோக சஞ்சாரியாகவும் கானகங்களிற்றிரிந்தும் முனிவர்கள் தவமுதலிய ஜெபங்களையழித்துவரும் நாட்களில் ஒரு நாள் ஸ்ரீராமமூர்த்தி சீதாசமேதராய் எழுந்தருளி யிருக்கின்ற பஞ்சவடி தீரத்திற்கு அவ்வரக்கிவந்து ஸ்ரீகோதண்டபாணியின் திவ்விய திருவுருவத்தைக்கண்டு தீராக்காமனேய் மேற்கொண்டு தியங்கி மயங்கி உயங்கி யிளைத்து களைத்து தளர்ந்து விழுந்து எழுந்து கொழுந்துவிட்டெரியுங்கொடிய காமத்தால் வருந்தி தனது இராக்கத ரூபத்தைமறைத்து அரம்பா ஸ்திரீகளைப்போலே வேடந்தரித்தலங்காரத்துடன் துலங்கநடந்து குலுங்கநகைத்து ஆரியகுல வீரியத்தி லுதித்தவள்போல அபிநயித்து அவரை இணங்கி வணங்கி ஒதுங்கி ஒதுங்கி ஐயனே யான்செய்த மாதவபலனுற்றேன். கைநிறைந்த பொன்னிலும் கண்ணிறைந்த கணவனே போதும் என்பதைப் பெற்றேன் என்று தனது மாயமோகினி நடத்தைகள் யாவற்றையும் பலவாருகக் காணப்படுத்தினள். இவைகளையெல்லாம் மாருமற்கண்ட வீரகோதண்டபாணி அவளைநோக்கிச் சொல்லுகின்றார்.

ஓ பெண்பாவாய்! உன் எண்ணமெல்லாந் திண்ணமே? ஆனல் எனக்கோர் மனைவியிருக்கிறுள், தரும விருத்தமாகக் கொண் டவளைவிட்டுக் கண்டவளைச்சேரலாமோ உலகப்பழிப்புக் குடன்படலாமோ ஓர் உறையிலிரண்டுவாளோ ஆகை

யால் அதோ இலட்சுமண னென்றிருக்கும் குமாரப்பருவ முள்ள பிள்ளைக்குத் தருமபத்தினி இவ்விடத்திலில்லை அவ னிடம்போய்ச் சேருவையாகில் உனக்குத் தகுந்தபடி செய்யத் தக்கவன் என்று வழிகாட்டினுர் பழிவினையுடைய பாவி இளை யவனிடத்தில் மேவி மோகத்துயரினைக்கூவி இருகரத்தையும் விரித்துத்தாவி பஞ்சபாணஞல் அடிபட்டு என்னுவி பதைக் குதே தாலிகட்டிக்கொண்டு பணிவிடைக்கு தகுந்த என்மேற் பரிந்து உங்கள் பட்சத்தைவையும் என்று பற்பல விதத்தில் அவரை மயங்கப்பண்ணினுள், இளையபெருமாளானவர் அத ற்குமனஞ்சலியாமல் திடசித்தராகி அவ்வரக்கி தன் அண்ண னிடத்திற்போய் பேசிவந்த வண்மையும் அவளது நடை நொடி பாவனைகளையு முணர்ந்து இவள் அரக்கியேயல்லது வேறல்லவென் னுந் தன்மையையும் அறிந்துகொண்டுபெருங் கோபத்துடன் தன் அரையிலிருக்கும் வாளை உருவிக்கொண்டு அவள் தலையிலிருக்கும் சுருட்டைமயிரையும் பிடித்திழுத்துத் தள்ளிக்கொண்டு மலைக்குகை போலொத்த மூக்கையும், கறுத்த மணியினையுடைய தனத்தையும் அறுத்துவிட்டார். அப்போ தவள் மனம்வெறுக்கவும், அண்டமும் நடுநடுங்க உறுக்கவும், அபயமபயமென்று காகுத்தனிடத்திலோடிவந்து அலறிவி ழுந்து தேவரீரையறியாமல் இளையவனிப்படி செய்தான், ஆகிலும்பெரிதல்ல அடியேன்மீதில் ஏதோ தப்பிதமிருந்து தண்டித்தீர்கள், நான் சுதந்தரியாய் விட்டேன் என்னை அங்கீ கரிக்கவேண்டும் சுவாமி கரும்புக்குக் கணுவிருந்தாலுங் கசக் குமா வென்றுசொல்லி செந்நீர் பெருகியோட திடுதிடுவெனச் சேரவருவதை வேர்த்த முகத்தினையுடையவரான இராமர் கண்டு உடைவாளை யுருவிக்கொண்டு அரக்கியைநோக்கி நீ ஓடிப்பிழை இவ்விடத்திலிருந்தால் இன்னம் பிழைவருமென் றுசொல்ல அதை அவள்கேட்டு சப்தமேகம்போல் இரைந்து தனிவனமெல்லாங் கரிந்து புகையவும், தாரைதாரையாய் உதி ரம்பெருகவும் தம்பி அறுத்த மூக்குமுலை கொண்டையையும்கை க்கொண்டு கரனிடத்திற்சென்று கதறிப்பதறி கலங்கியழுதாள்.

கரதூஷணுள் வதை.

அதைக்கண்ட கரனுடைய கண்களிரண்டுஞ் சிவந்து மெய்மறந்து பதினுலாயிரந்தேர்கூட்டமும் திரிசிரன் தூஷ

ணன் மற்றுமுள்ள படைகளும் பயணப்படவும், சூர்ப்பநகை வழிகாட்ட நடந்து காட்டில்வந்திருக்கவும் ஸ்ரீராமமூர்த்தியைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது ஸ்ரீராமரானவர் தம்பியை நோக்கிச் சொல்லுகிறார் தம்பி நீ ஜானகியைச் சற்று நேரம் காத்திடு இந்தச் சேனைகளை இதோ எமலோகம் ஏற்றித் தூற்றிவிட்டு வருகிறேன் என்று விஜயகோதண்டத்தையெடுத்துப் பிடித்து வளைத்து இழுத்து நாணிமாட்டி டங்காரஞ்செய்து ஓங்காரமிட்டு வந்தசேனைகளையும் திரிசிரன் தூஷணனையுங் கொன்றுவிட்டார். கரன் அதைக்கண்டு வாகையிற்கொண்டு கையோயாமற் போர்செய்ய ஸ்ரீராமரானவர் அவன் வில்லை முறித்துப் பல்லைக்கடித்து தலையைத்தறித்து கைகால் சுத்திசெய்துக்கொண்டு சீதை இலட்சுமணர் ஸ்ரீராமர் மூவரும் மகிழ்ந்திருந்தார்கள். இவைகளைக்கண்ட சூர்ப்பனகை நடுநடுங்கிப் பயந்து இனி நின்றால் நமது தலையும்போம் இன்னொரு மூலையும்போம் என்று இலங்கையில் ஓடி இறைந்து வாடி இராவணனைநாடி ஒப்பனைச் சொல்லிப்பாடி இந்திரசித்தே என்னருமை மருமகனே யென்று கூவி ஆவிணைப்பிரிந்த கன்றுபோற்கதறி ஓவென்றலறினாள். அவளைப்பார்த்து இராவணன் பதறினான். கோபாக்கினிப் பொறிச் சிதறிப் பறக்க ஓங்கி அறைந்து அஷ்டநாக மஷ்டகெஜங்களும் அலைந்து அலைந்து உலைந்து பெருமூச்சு விடவும் ஆங்காரமிட்டெழுந்து அதட்டி ஆரடி உன்னை அங்கவீனஞ்செய்தவன் அரனு அரியா அயனு மற்றவரியாரோ! இவர்கள் மூவருங் கூடிச்செய்த வேலையோ! கரன் முதலிய நமதுபடைகள் அவ்விடத்தில் இல்லையோ! நான் பிழைத்த பிழைப்பு இன்று இப்படியாச்சோ! என்கீர்த்தி முதலிய வலிமைகள் இன்று போச்சோ! ஓ! சூர்ப்பனகா சீக்கிரஞ்சொல்லென்றுகேட்டான்.

இராவணனுடன் சூர்ப்பனகை முறையிடல்.

அதைக்கேட்டு சூர்ப்பனகைசொல்லுகிறாள் ஓ! அண்ணை தேவர்கள் முதலிய திரிமூர்த்திகளுமல்ல அயோத்தியை யாளும் தசரதனுடைய பாலரான இராமன் இலட்சுமணனென்னும் இருவர் ஸ்ரீராமர் பெண்சாதி சீதை என்பவள் இவர்கள் மூவரும் இருடிவேடத்துடன் பஞ்சவடியிலிருக்கக்கண்டேன்.

கலைமகளும் மற்ற அரம்பாஸ்திரீகள் முதல் யாவரும் அந்த சீதையினுடைய அழகுக்கு நிகராகமாட்டார்கள். அந்த அம்மாளை வருணித்துச்சொல்ல ஆயிர நாவுடைய ஆதிசேடனுக்கும் அசாத்தியமென்றால் அப்பேர்ப்பட்ட நாயகியினழகை ஒரு நாவுடையவளாகிய யானோ பேசத்தகுந்தவள் திக்கெல்லாம் ஜெயங்கொண்ட செல்வப் பிராணனாகிய தேவரீருக்கு அவள் பட்டபுதேவியாகக்கிடைத்திருந்தால் அதுவே இலட்சுமி கரமென எண்ணி எப்படியாகிலுங் கொண்டுவந்து உம்மிடத்திற் சேர்த்துவிடவேண்டுமென்று நினைத்து மெள்ள வசப்படுத்தப்போனேன் அவ்விடத்தில் காவலிருந்த இளையவன் என்னைப்பிடித்து இப்படி அங்கவீனஞ்செய்து உன் தமையனிடத்தில் சொல்லிக்கொள்ளடியென்று அனுப்பினார்கள் நான் அழுது மூக்கு முதலியவற்றை யெடுத்துக்கொண்டு கரனிடத்திற் காட்டி முறையிட்டேன் அவன் கோபத்துடன் திரிசிரன் தூஷணன் முதலிய சேனைகளுடன்வந்து கொடிய யுத்தஞ்செய்தான் அந்த ராகவன் நொடியில் புழுதிபோல மடியச்செய்து கெடிவீரப்பிரதாபனாகவுமிருக்கின்றான். அவர்களிடத்தி லிருக்கிற பெண்ணரசியை, பெண்கள் பெருமாளை பெண்கள் மாணிக்கத்தை, பெண்கள் திலகத்தை பெண்ணிற் பெருந்தகையை நீர்கண்ணாரக்கண்டால் அண்ணா நான் அவ்விடத்திற்குப்போகத்தகும் தகாதென்று தேவரீருக்கு நன்றாகத் தெரியும், நான் இப்படி அங்கவீனமாய்ப்போனாலும் போகட்டும் அந்த அணங்கரசியானவள் உன்னிடத்திலிருக்க என்கண்ணால் ஒருநாள்பார்த்தாலும் போதும் அண்ணா நானின்னமும் யென்னசொல்லப் போகிறேனென்றாள்.

இராவணன் தண்டகாரவனம் வருதல்.

இப்படிச் சொல்லிய சூர்ப்பநகையின் வார்த்தையை இராவணன் கேட்டு அனலிற்காட்டிய மெழுகுபோலுருகி ஆசைமேலிட்டு ஐயோ! சூர்ப்பனகா நீ சொல்லிய பெண்ணை நினைத்தால் என்னுடலுருகுது நல்லதாகட்டும் உன்னையிப்படி பங்கப்படுத்திய மனிதர்களை யிக்கணமே இவ்விடங் கொண்டுவருகிறேன் நீ இவ்விடத்திற்றானே யிருவென்றுசொல்லி இலங்கையைவிட்டுப் புறப்பட்டு கோகரணம்வந்தான். அவ்விடத்தில் தாடகை சம்மாரகாலத்திலே ஸ்ரீராமருடைய பாணங்களுக்குத் தப்பி தபசுசெய்கிற மாரீசன் பக்கலிற்போய் நின்

ருன். அந்த மாரீசன்கண்டு திடுக்கென்றெழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு, இவ்வளவுதூரம் தயைசெய்ததை சொல்ல வேண்டுமென்று கேட்க இராவணன் சொல்லுகிருன் தசரத குமாரர்கள் இரண்டுபேரும் சீதாதேவியுங் காட்டிலிருக்கின்ருர்களாம் நயது சூர்ப்பனகையைக் கொண்டை மூக்கு முத லியவைகளை யறுத்து கரதூஷணன் முதலிய பேர்களைக்கொ ன்று இறுமாப்படைந்துயிருக்கிருர்களாம் அந்தச் சீதை பே ரழகுடையவளா யிருக்கின்ருளாம் அவளை நான் கைப்பற்றும் படியாய் அந்த ராமலட்சுமணுளிருவரும் சீதையை விட்டுப் பிரிந்து போகும்படியாகிய தந்திரங்களை நீ செய்யவேண்டும் இது உன்னைவிட மற்றொருவரால் நடக்கமாட்டாது என் எண்ணமும் நிறைவேறமாட்டாது எனக்கு இந்த உபகாரம் நீசெய்யவேண்டுமென்று சொல்லவே மாரீசன் நடுநடுங்கிச் சொல்லுகிருன். அவர்களுடைய திருஷ்டிக்கு நீர் நிகரல்ல உன்பலத்தையும் உன்வரத்தையும் பெரிதாக வெண்ணியிருக் கிருய் அவர்கள் பலத்துக்கு ஒருதிரணங்கூட சரிப்படமாட் டாய் இதல்லாமல் உன்னைச் செயித்த பலசாலிகளாகிய வீரர் களை யெல்லாம் ஒவ்வொருகணையினுற் கொல்லத்தக்கவர்கள் வீராதிவீரர்கள் அவர்களை வஞ்சனை செய்வதென்பது நட வாது. ஒருவேளை வஞ்சனையினுற் பிரியச்செய்தாலும் உலக மாதாவாகிய வைதேகியை நீதொட்டு யெடுக்கமாட்டாய் எடு த்துப்போனுலும் உனக்குகந்த பொருளல்ல நாய்க்கு முழுத் தேங்காய் அகப்பட்டால் என்னசெய்யும் அக்கிரமம் யாரை யும் விடாது என்னும் பழமொழியை நீ யுன்னிப்பார் என் வார்த்தையைத்தள்ளி உன் எண்ணப்படி செய்யத் துணிவை யாகில் உன் புத்திராதிகளுடன் கோட்டையும் தனம் கனம் தம்பிமார்களுடன் நீயும் எல்லாரும் மடிந்துபோய் விடுவீர் கள் இதுமுடியாதகாரியம் நீர்மறந்து விடுமென்று மாரீசன் சொல்ல இராவணனுக்கு கோபம்பிறந்து, கைலையங்கிரியைப் பேர்த்த தோளும், திக்கஜங்களை வென்ற மார்பும் உடைய என்னை அந்த அற்பமனிதர்களுக்கு ஈடல்லவென்று சொல் லப்போமா! ஐம்பதுலட்சம் வருஷம் கடந்தல்லவா! சகல தேவதைகளையும் நான்செயித்தேனேயல்லாமல் என்னை ஒரு வரும் வென்றவர்களில்லை அப்படியிருக்க சொற்ப மனிதர்களு க்கு இளைத்தவனுக வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று சொல்லிவிட்டாய், இப்போது என் படைகளுடன்

வந்துயுத்தஞ்செய்து அந்த இரண்டுமனிதர்களேயுங்கொன்று அந்தச் சீதையை நான் கைப்பற்றிக்கொள்ளத் திறமிருந்தும் நாள்செல்லுமென்று யோசித்தும் நீயானல் விரைவாய்முடித் துக்கொடுப்பையென்று உன்னிடத்திற் சொன்னல் எனக்குப் புத்தி சொல்லுகிருயல்லவா நல்லது இப்போதும் நான் சொல்லிய வண்ணங்கேட்டு உனக்குத்தெரிந்த மாயைகளெல் லாஞ்செய்து அந்தப் பெண்ணை எனக்குக் கிடைக்கச்செய்யா விட்டால் உன்னை யென்கைவாளுக்கு இரையாக்குவேன் இந்த மண்ணுலகத்தைவிட்டுப் போக்குவேனென்று சீறவும் அதைக்கேட்ட மாரீசன் சொல்லுகிருன்.

ஓ! இராவணு கேளும், உம்முடைய கையினு லிறந்தால் கொடிய நரகங்கிடைக்கும், தாசரதி கைக்கணையா லிறந்தால் சுவர்க்கங்கிடைக்கும், ஆதலால் உன்கையால் இறப்பதைவிட எனக்கு அதுவேமேல், இதோ நான்போய் இறந்து இடம் பண்ணிவைக்கிறேன் சீக்கிரத்திற்குடும்பத்துடன் நீயும்வந்து சேரக்கடவை என்றுசொல்லி பொற்பிரகாசமாகிய மானுருக் கொண்டான். அதை இராவணன் கண்டுமகிழ்ந்தான் அப் போதே அந்த மானனது ஸ்ரீராமருடைய பர்ணசாலையினிட மேபோய் சீதாதேவியார் கண்ணுக்கெதிரில் எத்தேசங்களிலுங் கிடையாத சிங்கார நிறத்துடன் திரிந்து விளையாட, அதைச் சீதையம்மன் கண்டு அற்புதமடைந்து ஒருநாளும் நான் பார் த்தறியாத இந்த மானைப்பிடித்துக் கொடுமென்று மேல் விளை யப்போகிற காரணங்கள் தெரியாமல் ஸ்ரீராமரைக்கேட்க, இர குபதியானவர் தம்பியைப் பர்ணசாலைக்கு காவலாக்கி வில்லும் அம்புங் கைக்கொண்டு விரைவுடன் மானைத் தொடர்ந்துபோ கையில், தம்பியாகிய இளைய பெருமாள் சில நீதிகளேயும், இராக்கதர் மாயைகளையுஞ் சொல்லித்தடுக்கவும், அதைக்கே ளாமல் மானனது சமீபத்திலடுக்க அந்த சந்தோஷத்தின் பேரில் நெடுந்தூரம்போயும் கையில் அகப்படுந்தன்மைபோல் இளைத்தும் படுத்தும் ஸ்ரீராமர் எட்டிப் பிடிக்க ஓடியும், இப் படி ஒருயோசனை தூரங் கொண்டுபோகையில் ஸ்ரீராமருக்குக் கைகால்களெல்லாம் வருந்தி மேலும் வெய்யலால் ஆயாசம டைந்தபோது இது உண்மையான மானல்ல தம்பிசொல்லிய படி மாயமானென்று எண்ணி வில்லிற்றொடுத்திருந்த பாணத் தைவிட்டார் அந்தபாணம்பட்டு மாரீசனனவன் ஓ லட்சுமணு வென்றுகூவி ராட்சதரூபத்துடன் பூமியில் விழுந்திறந்தான்.

அதை ஸ்ரீராமர்கண்டு விசுவாமித்திரர் யாகத்தில் அடிப்பட்டு ஓடிப்போன மாரீசன் இவன் ஏதோ ஒருவஞ்சனைசெய்யக்கருதிவந்தான் இவன் கூவிய ஓசையால் பர்ணசாலையில் ஒருவிந்தை யுண்டாயிருக்குமென்று கருதி அதிக விரைவுடன் ஐயன் நடந்துவருமுன்னமே சீதாபிராட்டியார் காதில் இலட்சுமணாவென்று கூவிய ஓசையைக்கேட்டு மைத்துனனை நோக்கி அரக்கராலே ஏதோ அபாயம் வந்து உம்மைக் கூப்பிட்ட ஓசையைக்கேட்டும் போகாமலும் பாராமலுமிருக்கலாமாவென்றுசொல்ல, அதற்கு இலட்சுமணர் சொல்லுகிறார் அம்மா தாயே கேளும், அரக்கராலும் அரசராலும் ஆகாயவாசிகளாலும் மற்றெவர்களாலும் எங்கள் அண்ணனுக்கு அபாயம் ஒருக்காலும் வராது இது மாறுபாடாகிய வஞ்சகமாயையேயன்றி வேறல்ல எங்களண்ணனுடைய கூக்குரலல்ல, இந்த பதினாலு உலகமழிந்தாலும் எங்களண்ணன் கலங்கத்தக்கவரல்லர், நீ மயங்கவேண்டாம் இதோ வரப்போகிறார் என்று அனேகவிதத்திற் றேறுதலை சொல்லியும் அதற்கு மனது ஒப்பாமல் சொல்லுகிறாள். செத்தவனுடைமை இருந்தவனுக்கு அடைக்கலம் என்னும் பழமொழிபோலும் மைத்துனனிறந்தால் நமக்கென்ன கம்பளமெனக்காச்சு என்பதுபோலும், மனம்பொறுத்து இருக்கின்றீரல்லவா வென்று சொல்ல, இளையபெருமாளானவர் இரண்டு காதுகளையும் மூடி ஸ்ரீராமா ராமாவென்று தோத்திரஞ்செய்துக்கொண்டு தாயே உந்தன் இஷ்டப்படி இதோ போய்வருகிறேன் நீபத்திரமாய் பர்ணசாலையில் இருமென்றுசொல்லி பற்பலவிதமாயோசித்து ஏக்கங்கொண்டு நடந்தனர்.

இராவணன் சீதையை யெடுத்தேகுதல்.

இவ்விடத்தில் சீதாதேவியார் ஸ்ரீராமரைக்குறித்து ஏங்கி பர்ணசாலையில் தனிமையாகவிருக்குங்காலத்தில் இது நல்ல சமயமென்று இராவணன் விருத்தவேடம்பூண்டு பர்ணசாலையில் வரக்கண்டு ஜானகியம்மனவள் எதிர்கொண்டோடி மகரிஷியென்று அர்க்கியபாத்தியமளித்து ஆசனங்கொடுத்து உபசரிக்கவும், மாறுவேடத் தரக்கன் ஆசனத்திருந்து நீ யார் இவ்விடத்தில் தனிமையாக விருக்கவேண்டிய காரணமென்னவென்று கேட்க ஜானகியம்மன் சொல்லுகிறாள்

ஐயா அயோத்தியாபுரியாளும் தசரதமகாராஜன் புத்திரர்களாகிய ஸ்ரீராமலட்சுமணர் பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்ய பதினான்குவருடம் கானகம் வந்தார்கள் தான் கோதண்டபாணியின் தருமபத்தினி என்பெயர் சீதை நான் இவ்விடமிருக்கிறேன் அவர்கள் ஒரு மானைத்தொடர்ந்து போயிருக்கின்றார்கள் இதோ வருவார்களென்று சொல்ல, அதைக் கேட்டு ஐயோ உம்மைப்போலொத்த சவுந்தரியவதிக்கு இந்தக் காட்டில் பஞ்சைக் குடிசையி லிருக்கவும் அற்பமனிதர்களுக்கு ஸ்திரீயாகி யெவ்வனகாலத்தை வீணாய்போக்கவும் உனக்கேன் இந்தத் தலைவிதி என்று இன்னுஞ் சில கடுஞ்சொற்களைச் சொல்லக்கேட்டு இடிவிழுந்த அரவம்போலேங்கி இந்தப்பாவி அரக்கனென்று மதித்து சிலவசனங்களைப்புகல அப்போது மாயரூபத்தைவிட்டு தன் சுயரூபத்துடனிற்க, சீதையம்மன் கண்டு தியக்கங்கொள்ள, இராவணனனவன் நிலத்துடன் சீதையம்மனைத் தூக்கித் தனது தேரில் வைத்து ஆகாயமார்க்கமாய் போகும்போது சீதையம்மனவள் இரதத்தில் விழுந்து புரண்டு ஓவென்றலறினள்.

சடாயுயுத்தம்.

அந்த சத்தத்தைக்கேட்டு சடாயுவானவர் வந்து வளைத்து அனேகம் புத்திகளைச் சொல்லியும் அரக்கன் கேளாமல் தேரை நடத்த ஸ்ரீராமஜெயமென்று இறக்கையால் மோதி தேரைப்பொடியாக்கிப் போர்புரியும்போது இராவணனுக்கு கோபம்வந்து வாளினல் இறகினைவெட்டி பூமியிற்றள்ளி புஜத்தின்மேல் ஜானகியைத்தூக்கி ஆகாயமார்க்கமாய்ப் போகையில் அம்மன் அழுது சடாயுவைக்கூவி சாமிவருமளவும் உயிருடனிருந்து என்செய்தியை யுரைக்கவென்று சொல்லித் துன்பமுற்றுப் போகையில் ஒருமலையினுச்சியினிற் சிலபேர் கூடியிருக்கக்கண்டு தன்னாபரணங்களைக்கழற்றி அழகிய கச்சிற் சுருட்டி அவ்விடத்திற்போட்டு என்னாண்டவன் வந்தால் கொடுங்களென்று அயர்ந்து சோர்ந்திருக்க இராவணன் இலங்காபுரி சேர்ந்து அசோகவனத்தில் அம்மனைவைத்து அறக்கியர்களைக் காவல்வைத்து என்வசப்படுத்துங்களென்று சொல்லி இராவணன் தன்னரண்மனைக்குட் புகுந்து சந்தோஷமுற்றிருந்தான்.

ஸ்ரீராமலட்சுமணர் சீதைபிரிவினாலிறங்கல்.

இப்பால் தமையனைத்தேடிக்கொண்டுபோன தம்பி தனக்கெதிரில் வரும் ஸ்ரீராமருடைய பாதங்களில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்ய தம்பி சீதையை ஒண்டியாய் விட்டு வந்தகாரண மென்னவென்றுகேட்க அண்ணனுக்கு நடந்த சேதிகளும், தாயார்கூறிய கடுமொழியும் அதனால் தான்வந்து விட்டதையுஞ் சொல்ல ஸ்ரீராமர் கேட்டு அந்தோ சீதையை யிழந்தோமென்று இரண்டு வீரர்களும் விரைவாக ஓடிவந்து சீதையைப்பார்க்க அங்கு காணாமையால் பெருமூச்சு விட்டு வியாகூலமுற்று தம்பி சீதையைப் பிரிந்தோம் என்று ஏங்கி பூமியிற்சாய்ந்து விசாரத்துடன் ஸ்ரீராமர் மூர்ச்சையாக இலட்சுமணர் தமயனைத்தேற்றி தேவரீரே யிப்படி விசனப்படலாமா அடியேனுக்கு விடைகொடுத்தால் எப்பேர்ப்பட்டவனாகி விருந்தபோதிலும் அவனையு முடித்து எங்கள் தாயாரையும் தேவரீரிடங் கொண்டுவந்து சேர்ப்பேனென்று தம்பி சொல்ல, அந்த வாக்கியத்தைக் கேட்டு ஸ்ரீராமரானவர் பிரளயகால ருத்திரனைப்போற் கண்கள்சிவந்து சினங்கொண்டு தேவர்களும் பார்த்திருந்தார்களல்லவா இந்த மூன்றுலோகத்தையும் மாண்டுவிழச் செய்கிறேன் தம்பியென்று கோதண்டத்தைவளைத்து நாணேற்றினார். அப்போது லட்சுமணர் சமீபித்து அண்ணா ஒருவன் செய்த பெரும்பழிக்கு உலகத்தைப் பாழாக்க நினைப்பது தருமமல்லவே, என்தாயை எடுத்துப்போன பாவியைக்கண்டு அவனுயிரைக்கொண்டு தேவரீர் தேவியைப் பண்டுபோலிருக்கச் செய்வது எனதுவீரம் என்று தம்பிசொல்ல, அதை இரவிகுல புங்கவன்கேட்டு மனந்தேறி ஊழின்படி நடக்குமல்லாமல் வேறில்லையென்று சீதையைத் தேடி யிருவரும் போகையில் அவ்விடத்தில் ஓரிரதம் வந்து திரும்பிப்போயிருக்கும் வழியைப்பற்றிச் சிலதூரம் போகையில் இறகு துணித்துகிடக்கப்பட்ட சடாயுவைக்கண்டு வினவ இன்னானெடுத்துப் போனானென்று பெயரைச் சொல்லினவுடனே சடாயுவுக்குப் பிராணன் போய்விட்டது. உடனே சிறியதந்தையென்று புலம்பித் தகனஞ்செய்து கருமக்கிரிகைகள் யாவற்றையுமுடித்து தென்திசையைநோக்கிச் சீதையைத் தேடி யிருவரும் வந்தார்கள்.

கவந்தன் வதை.

அப்படி வரும்வழியில் கவந்தனென்னும் இராட்சதன் ஒருயோசனைதூரங் கைகளை நீட்டி அதற்குள்ளகப்பட்ட

ஜந்துக்கள் எல்லாவற்றையுந் தனக்குணவாக வாயிற்றள்ளிக்கொண்டு அனேகநாளாய் பிழைத்திருக்கிறவன் அவன் கையில் அப்போது இராமலட்சுமணுளை அவன் தன்வயிற்றிற்றள்ளிக்கொள்ளக் கொண்டுவருவதை இவர்களிருவருங்கண்டு வாளையுருவிக்கொண்டு கவந்தனுடைய புயத்தை வெட்டித்தள்ளினவுடனே அவன் தேவவிமானத்திலேறி இவர்களை வந்தித்து பூர்வத்தில் நான் வித்தியாதரன் பிரமதேவர் சாபத்தினுல் இந்த தேகம்பெற்று வெகுநாளாய் துன்பமுற்றேன் தேவரீர் கிருபாநோக்கத்தினுற் சாபந்தொலைந்து பரிசுத்தனுனேன் நீங்கள் சுகமாக வாழக்கடவீர்களென்று வாழ்த்தி வணங்கி, சீதாதேவியாரைத் திருடிக்கொண்டு போனவன் இலங்கையிலிருக்கும் இராவணன் அவன் அனேக வரங்களையும் அனேகங்கோடி ஆயுளும்பெற்றவன் ஆகையால் இன்னுஞ் சிலதூரம் தெற்குநோக்கிச் செல்வீர்களாகில் பம்பாநதியொன்றிருக்கிறது அவ்விடத்தில் கிஷ்கிந்தமென்ெருரு நகரமிருக்கின்றது அந்த நகரத்தில் வாலி சுக்கிரீபரென்று இரண்டு சகோதரர்களிருக்கிறர்கள் அவர்களிலொருவருக்கொருவர் கொடியபகை நேரிட்டு சுக்கிரீபனென்பவன் குமுதமென்னப்பட்ட மலையிலிருக்கிறன் அவனுக்கு மந்திரிமார்கள் வாயுதேவனுக்கும் அஞ்சனு தேவிக்கும் பிறந்த அனுமார் முதல் நால்வரிருக்கிறர்கள். அவ்விடம் நீங்கள் போனுல் அவர்கள் உங்களுக்கு மிகுந்த நண்பரா யேற்பட்டு எழுபத்திரண்டு வெள்ளம் வானரங்களுடனே சுக்கிரீபனும் படைத்துணையாக வந்து கடலைக்கடந்து இலங்கையை வளைத்து இராவணனைக் கொன்று வெற்றியைப்பெறுவதற்கு உதவியாவார்கள். தேவரீர் என் தாயாகிய சீதையைக்கொண்டுவரலாம் சுவாமீயென்று வணங்கி வித்தியாதரலோகம் போய்ச்சேர்ந்தான். அதைக் கேட்டு இராமலட்சுமண ரிருவரும் சவரி ஆசிரமத்திற்குப் போய் அன்றையதினம் அவளுடைய உபசாரத்தைக்கொண்டு அமுதுண்டு சவுரிக்கு முத்திகொடுத்து அதன்பின்பு தெற்கு நோக்கி நடந்தார்கள்.

ஆரணியகாண்டம் முற்றிற்று.

ராமலட்சுமணரை ஆஞ்சநேயர் கண்டது.



வாலிசம்மாரம்.



சுக்ரீவருக்கு பட்டம்.





வானரர் லங்கைபோதல்.



அனுமார் லங்கையைத் தாண்டுதல்.



சம்பாதி சம்பாஷணை.

நான்காவது,

கிஷ்கிந்தாகாண்டம்.

காப்பு.

மூன்றுருவெனக்குணமும்மையாமுதற்
றோன்றுருவெவையுமிம்முதலைச்சொல்லுதற்
கேன்றுருவமைந்தவமிடையினின்றவர்
சான்றுருவுணர்வினுக்குணர்வதாயினர்.

பின்பு ஸ்ரீராமர் இலட்சுமணரிருவரும் பம்பா நதிக்கரையில் வந்திறங்கி சீதாதேவியை நினைத்து விசாரப் படுங்காலையில் சுக்ரீவன் அவர்களைக்கண்டு திகில்கொண்டு அனுமாரை அனுப்பிவைக்க அவர் சூட்சுமரூபமாய்வந்து விருட்சத்தினிழலிலிருக்கும் இவர்களுடைய திருவுருவத்தைப் பார்க்கும்போது ஸ்ரீராமர் அனுமாரைக்கண்டு குண்டலதாரியா யிருக்கும் நீயாரென்று வினவ வாயுவுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிறந்த அனுமானென்று அடியிணைவணங்கி நிற்கக்கண்டு ஸ்ரீராமர் தங்களுடைய வரலாற்றைத் தெரிவித்தவுடனே அனுமார் தன்விஸ்வரூபத்தைக் காண்பித்து சுக்ரீபனை யழைத்துவந்து சரணமடையச்செய்து இருவருக்கும் உறவுண்டாக்கி யாவரும்வணங்கி ஸ்ரீராமரை அழைத்துக்கொண்டு தாங்களிருக்கும் மலையிற்போய் அலங்காரச்சாலையில் எழுந்தருளச்செய்து சுக்ரீவன் தன்னுடைய தமையனுக்கும் தனக்கும் பெண்சாதியினால் நேரிட்ட பகையைச்சொன்னான். ஸ்ரீராமர் கேட்டு விசனமுற்று அந்த வாலியைக்கொன்று உனக்கு கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டி வைக்கிறேனென்று அபயஸ்தங்கொடுக்க சுக்ரீவன் அதைப்பெற்று சுவாமி! அடியேனுக்கு ஒரு சந்தேகம் வாலியானவன் வருஷத்திற்கொருதரம் ஏழுமரத்தை இழுத்துப் பார்த்து விட்டுவிடுகிறதும் துந்துபியென்னும் இராட்சதன் எலும்பை நித்தியம் அசைத்து விடுகிறதுமா யிருக்கிறான். ஆகையால் வாலியைக் கொல்வது உண்மையாகில் அவன் வலிமைக்குமேல் தேவரீருடைய வலிமையைக் காட்டினால் என்மனந் திடங்கொள்ளுமென்று சுக்ரீவன் சொல்ல அப்படியே நல்லதென்று ஸ்ரீராமரானவர் அந்த மராமரத்தினடியிற்போய் நின்று மிதிக்கவே ஏழுகோணலாயிருந்த மரம் ஒரே ஒழுங்கில் வரக்கண்டு ஒரு பாணத்தால் ஏழுமரமும் உருவச்செய்து துந்துபியின் எலும்பைத் தன்கால்விரலால் உந்திவிட அதைக்கண்டு சுக்ரீபனும் மற்றயாவர்களும்

புகழ்ந்து வணங்கி இவராலே வாலியைக்கொல்லப்படுமென்று நிச்சயங்கொண்டு, சீதாதேவிகழற்றியெறிந்துபோன ஆபரண மூட்டையை ஸ்ரீராமருக்கு எதிரில் கொண்டுவந்து வைத்தான்.

ஸ்ரீராமர் சீதையினுடைய ஆபரணத்தைக் காணுதல்.

அதை ஸ்ரீராமர் பிரித்து நகைகளைப்பார்த்து இது சீதையினுடைய ஆபரணமென்றறிந்து விசனப்படும்போது சுக்ரீவன் எழுந்து திருவடிகளில்விழுந்து விசனப்படவேண்டாம் என்னிடத்தில் எழுபத்திரண்டுவெள்ளம் வானரப்படைகளிருக்கின்றன ஒருநொடிப் பொழுதில் இலங்கையைக் கலங்கச்செய்து இராவணனைச் சாக அடித்துத் தாயாரையுங் கொண்டுவந்து தேவரீர் திருவடிகளில் ஒப்பிவைக்கிறேனென்று சுக்ரீவன் சொன்னான் அதை ஸ்ரீராமபிரான்கேட்டு மகிட்சியடைந்து இப்போது நடக்கவேண்டியகாரிய மென்னவென்றுகேட்க வாலியை சங்கரிப்பதே யென்று சுக்ரீவன் சொல்ல, நல்லதென்று சுக்ரீவனை யழைத்துக்கொண்டு வாலியினிடத்திற்சென்று போர்புரியும்படி அழைத்துக்கொண்டு வரக்கடவையென்று அனுப்பி, தானும் தம்பி இலக்குமணனும் குற்றுச்செடி மறைவில் கோதண்டபாணியாக நின்றார்கள்.

ஸ்ரீராமர் பாணத்தால் வாலி வல்லபங்கெடுதல்.

அக்காலத்தில் சுக்ரீவன் வாலியின் அரண்மனைக்குப் போய் யுத்தத்திற்கு வாவென்று கூவுவதை வாலிகேட்டு புஜத்தைத் தட்டிக்கொண்டு யுத்தத்திற்குப்பயணப்பட்டுத் தம்பியின் பேரில் மூண்டுகொண்டு எழுந்து பதுங்கி தாவிமேவி கூவி இடம் வலம் வலம் இடமாகச்சுழன்று கோடையிடிபோற் குத்தி கரத்தினாற்பற்றி சுக்ரீபனையடித்து உயிரை மூழ்த்திவிடவேண்டுமென்று நாடினான். அவனுடைய மனதைக் கண்டு சுக்ரீவன் ஓடி ஸ்ரீராமருடைய திருவடிகளில் மூடிசூடினான் அப்போது ஸ்ரீராமர் சொல்லுகிறார், நீங்களிருவரும் ஒரே ரூபமாக யிருப்பதால் நீயென்றும் அவனென்றும் வித்தியாசந் தெரியாமையால் மயங்கி யிருந்துவிட்டேன் இனி யிப்படியிரேன், இதோ இந்த மலர்மாலையை வேற்றுமை

தோன்ற நீ கழுத்தில் போட்டுக்கொண்டு இன்றையதினம் வாலியையழைத்து சண்டைசெய்வாயாகில் எப்படியும் அவனை மாட்டிவிடுகிறேன் சந்தேகமில்லையென்று பூமாலையை மிடற்றிற்போட்டு அனுப்பினர். அதைப் பெற்று சுக்கிரீவன் ஓடி அடாவாலி சண்டைக்கு வாடாவென்று கூவி அழைக்க அவனுக்குக் கோபம்பிறந்து யுத்தத்திற்கு வருஞ் சமயத்தில் தாரை யென்பவள் ஓடிவந்து புருஷனைத் தடுத்து நேற்றைய தினம் உன்னால் அடிப்பட்ட பச்சை உதிரம் காயாதிருக்கு முன்னமே வந்து சண்டைக்கு அழைக்கிறதை யோசிக்க வேண்டியதென்றும், ஸ்ரீராமர் இராவணசம்மாரஞ் செய்யும் பொருட்டு சுக்கிரீவனுக்கு அனுகூலமாக வந்திருப்பதையும், இன்னும் சிற்சில நியாயமொழிகளைச் சொல்ல, அதைக் கேட்டு வாலியானவன் சிலவசனங்களைப் புகன்று என்மயிரில் தொங்கிக்கொண்டிருந்த இராவணனை என்னைக்கொண்டு ஜெயித்துக்கொள்ளாமல் என்னாலடிப்பட்டு ஒதுங்கிக்கிடக்கும் அற்பனாகிய சுக்ரீவனைக்கொண்டு இவன்பகையை முடித்துக் கொள்ளப்பட்டவனா என்னை ஜெயிப்பவன். மேலும் அந்த இராமனுக்கும் எனக்கும் எவ்விதபகையுமில்லை. அப்படியிருக்க அவர்களையும் இந்தச் சுக்கிரீவனையும் முடித்துத் திரும்புவேன் நீ போவென்று அனுப்பிவிட்டு, சுக்கிரீவனிடம் சமர் செய்யும்போது தாசரதியானவர் தனது கோதண்டத்தில் தரித்திருந்த பாணத்தை ஆகர்ணபரியந்த மிழுத்துவிட்டு வாலியின் கண்ணிற்படாமல் மறைந்து இருக்குங்காலையில் அந்தப் பாணமானது வாலியின் மார்பில் நுழையும்போது காலினாலும் தன் வாலினாலும் பிடித்து இழுத்துப் பார்த்தான். அதில் ஸ்ரீராமன் என்று எழுதியிருந்த முத்திரையை நோக்கி மூர்ச்சையாய் விழுந்துபோகவும் ஸ்ரீராமலட்சுமணர் வெளியில்வந்து வாலியினிடத்தில் நிற்க, அப்போது சுக்கிரீவன் அங்கதன், அனுமார், தாரை முதலிய பேர்கள் வாலியின் பேரில் விழுந்து ஓவென்று அழும்போது வாலி மூர்ச்சை தெளிந்து எழுந்து ஸ்ரீராமருடைய திருமுகத்தை ஏற நோக்கிச் சொல்லுகிறான்.

வாலி ஸ்ரீராமரை நிந்தித்தல்.

இஃதென்ன ஆச்சரியம் சூரியவமிசத்திற் பிறந்த இராஜனாகிய உனக்கு சீதைபோய்விடவே உன்னுடைய பொறுமை

யும் சாந்தமும் புகழும் சீவகாருண்யமும் பேரறிவும் தரும மும் நற்குணமும் கூடப்போய் விட்டாலும், மேன்மக்கள் மேன்மக்களே, என்னும் ஆன்றோர் வாக்கியமும் உன்னாலழி ந்ததோ, மனுவிக்கியானமுதலிய நீதிசாஸ்திரத்தை மறந் தையோ, பாவம் பழிக்கஞ்சாதென்று துறந்தையோ, உன் னளவில் நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்க என்ன குற்றத் தைக்கண்டு இப்படிசெய்தாய், ஒரு இராக்கதன் உன் மனைவி யை எடுத்துப்போயிருக்க மலையில் வாசமாமிருக்குங் குரங்கர சனைக் கொல்லும்படி வேதத்திற் கூறியிருக்கின்றதோ! உன் அப்பன் பாட்டன் போதித்ததா, சூரியவமிசத்தில் நீ பிள்ளை யாகப்பிறந்து மிகுந்த பாவத்தையும் நிறைத்துவைத்தாயே, அப்பா ராமா! எனக்குப் பயந்துள்ளிருந்த பஞ்சையாகிய சுக்ரீவன் வார்த்தையைக்கேட்டு பாரியயோசனை செய்யாமலிக் காரியஞ்செய்தாய், உனது பத்தினியை யெடுத்துப்போன இராவணனை வெல்லவேண்டுமென்று ஒருவார்த்தை சொன் னல் என்னுடைய வால்மயிர் அவனையும் அவனிலங்கையை யும் கொண்டுவந்து வைக்குமே, சீதாபிராட்டியாரை என் தோள் கொண்டுவந் துன்திருவடியிற் சேர்க்குமே, அப்படி யிருக்க என்னை வஞ்சித்து மறைவிலிருந்து கணைவிடும்படி உனக்கு எந்த ஆசான் சொல்லிக்கொடுத்தான். என்ன விதி யைக்கொண்டு எய்தாய், வீரனே காலத்திற்குத் தகுந்த புத்தி நேரிட்டதோவென்று வெறுத்துக்கொள்ளும் வாலியை நோ க்கி இளையபெருமாள் சொல்லுகின்றார். தம்பிபெண்டு தான் பெற்ற பெண்ணென்று நினையாமல் அபகரித்த உன்னைக் கொல்லாமல் விட்டால் தருமவிருத்தமென்றும் எதிரில் நின்று அடித்தால் நீ சரணம்புகுவை என்றும் சுக்ரீவனுக்குக் கொடு த்தபட்டம் தப்பிப்போமென்றும் மறைந்திருக்க லானேமெ ன்று சொல்ல, அதைக்கேட்டு வாலி சொல்லுகிறான். கான கத்திலிருக்கும் மிருகம், அதிலும் குரங்குஜாதி இவைகளுக்கு முறையுண்டோ நீங்கள்செய்த தருமத்தின் துறைகண்டோ எதிரில் உங்களைநோக்கி சரணம் புகுந்தால் அனுக்கிரகஞ் செய்யக்கூடாதென்பது சூரியகுல நிறையோ! ஆனாலும் பரத மகாராஜன் தண்டிக்க வேண்டுமேயொழிய நீங்களார் சந்நி யாசி உங்களுக்குப் பாணமேது வில்லேது அரசின் முறை யைச்சார்ந்த சொல்லேது என்று கேட்கும்போது ஸ்ரீராமர் தம்பியைக் கையமர்த்தி வாலியைப் பார்த்துச் சிலவசனங்கூறு

கிருர். உனக்கும் எனக்கும் யாதொரு பகையுமில்லை நான்கேட்பார் பேச்சைக்கேட்டு மனைவியைப் பிரிந்திருந்த விசனத்தால் மற்றொருவனுக்கும் இப்படிதானே துன்பமிருக்குமென்று பாணப்பிரயோகஞ்செய்துவிட்டேன் மிஞ்சிப்போனதென்ன! இப்பவும் நான்விட்ட பாணத்தை வரவழைத்து உன்னையும் பிராணனுடன் பிழைக்கச்செய்கிறேன் உன் மனோபாவம் இப்போது தெரியவந்தது உன் தம்பியும் நீயும் சுகமாக வாழ்ந்திருங்களென்றுசொல்ல வாலி சொல்லுகிறுன்.

வாலி சுவர்க்க மடைதல்.

ஓ! சுவாமி எங்கள் குலத்தில் காயம் படக்கூடாது, காயம் பட்டால் உயிருடனிருந்து வாழக்கூடாது, திரிமூர்த்தியாகிய தேவரீர் அவதரித்து அசுரர் குலம் வேரறுக்க வந்திருக்குங் கடவுள் உம்முடைய பாணத்தால் நானிறக்க எத்தனை நாள் தவஞ்செய்தால் எனக்குக்கிடைக்கும் இஃதன்றி தேவரீரைச் சிறிது இகழ்வாகப்பேசிவிட்டேன் அவைகளை யெல்லாம் பொறுத்துத் தேவரீருடைய திருவடி எனக்குக் கட்டளையிட வேண்டியது என்தம்பி சுக்ரீவன் அறியாதவன், என்பேரில் காட்டியகையை அவன்பேரில் காட்டாமல் கிஷ்கிந்தைக்கு அரசனுகப் பட்டங்கட்டி அங்கதனை இளவரசனுக்கி இரட்சிக்கவேண்டும் ஐயனேயென்று வாழ்த்தி சுக்ரீவனையும் அங்கதனையுமழைத்து ஸ்ரீராமமூர்த்திகையி லொப்பிவைத்து தன் பக்கத்திலிருந்து அழும் தாரையை நோக்கி, பெண்ணே! நான் அனேக ஜன்மங்களிற்செய்த தபோபலத்தினுல் வைகுந்த வாசகனுகிய ஸ்ரீகோதண்ட பாணியின் திருவடிகளில் ஐக்கியமாகிறேன் நீ யாதொன்றுக்கும் விசாரப்படவேண்டாம். எனக்கு மோட்சங்கொடுத்த தெய்வம் உன்னையிரட்சிக்கும் என்றுசொல்லி, அங்கதனையழைத்து அவன் கையில் தாரையை ஒப்பித்து சோனுமேகம்போற் பொழியுங் கண்ணீரைத் துடைத்து ஸ்ரீராமமூர்த்தியை நோக்கி தேவரீருடைய பாணத்தை வரவழைத்துக்கொண்டு ஸ்ரீவைகுந்தங் கட்டளையிட வேண்டுந் தேவாதிதேவனே யென்று சிந்தையில் தியானஞ்செய்தான். அப்படியே ஸ்ரீராமரானவர் கிருபாநோக்கஞ்செய்யவே தேவர்கள் பாரிசாத புஷ்பங்களை வாரியிறைக்க வாலி நற்கதியடைந்தான். உடனே வானரவீரர் சுக்ரீவன் அனுமார்

அங்கதன் தாரைமுதலிய சகலரும் வாலிக்கு உத்தரக்கிரியைகள் யாவும் செய்து நிறைவேற்றி ஸ்ரீராமர் திருவடிகளிற் வந்து பணிந்தார்கள்.

சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டுதல்.

ஸ்ரீராமர் தன்தம்பியையழைத்து கிஷ்கிந்தைக்குப்போய் வாலிசொன்னவண்ணம் சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி அங்கதனுக்கு இளவரசுபட்டமும் அளித்து தாரையினிஷ்டத்தின் வண்ணம் நடக்கும்படி திட்டமுஞ்செய்து வரக்கடவையென்று ஆக்ஞாபிக்க இளையபெருமாள் அப்படியே சென்று சகல சம்பிரமத்துடன் பட்டங்கட்டிவைத்துவந்தார் எல்லோரும்வந்து ஸ்ரீராமருடைய பாதங்களில் வணங்கினார்கள். சுக்ரீவனும் வணங்கி சுவாமி? வானரப்படைகளை அழைக்கத் தூதர்களை அனுப்பிவிட்டேன். வருவதுமழைக்காலம் ஆகையால் இதையொழித்து வெய்யிற்காலம் வருகிறவரைக்கும் தயைசெய்யவேண்டுமென்று சரணம்புக அப்படியே ஆகட்டுமென்று சொல்லி நீயுங் கிஷ்கிந்தைக்குப் போயிருக்கக்கடவதென்றார் நல்லதென்று நமஸ்கரித்துநடக்க ஸ்ரீராம லட்சுமணரும் பர்னகசாலை ஏற்படுத்திக்கொண்டு மலைச்சார்பிலிருந்து சீதையைக் குறித்து விசனமடைந்திருந்தார்கள். சூரியபகவானும் மகரராசியில்வந்து பிரவேசித்தான். சிலநாட் சென்றவுடனே ஸ்ரீராமர் தம்பியை நோக்கி மழைக்காலம்கழிந்த பின்னர் வருகிறேனென்றுபோன சுக்ரீவன் இதுகாறும் வராமையால் அழைத்துவாவென் றனுப்பவும் இவரைக்கண்டவுடனே சுக்ரீவன் முதலியயாவரும் ஸ்ரீராமரிடம் ஓடோடியும் வந்து வணங்கி நான்கு திசைகளிலு மிருந்துவரும் வானரப் படைகளைச் சேகரித்தார்கள்.

சீதையம்மனைத்தேட அனுமார்முதலியவர்களை யனுப்புதல்.

இஃதிப்படியிருக்க ஆஞ்சனேயர் சொல்லுகிறார். சுவாமி சேனைகள் கூடுமுன்னாக எனது தாயாரிருக்கும் இடத்தை முன்னந் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுசொல்ல ஸ்ரீராமரும் சுக்ரீவனும் யோசித்து கிழக்கு வடக்கு மேற்கு இம்மூன்று திசைகளிலுந்தேட வானரங்களை அனுப்பிவைத்து, தெற்கு திசைக்கு அனுமார் அங்கதன் சாம்புவந்தர் முதலிய வானர

வீரர்கள் அனேகம்பேரை அனுப்பிவைத்தார்கள். மற்ற மூன்று திசைகளுக்குப்போன வானரங்கள் சீதையம்மனைத் தேடிக்காணாமல் ஒருமாதத்திற்குள் ஸ்ரீராமரிடம்வந்து நாங்கள் போனதிசைகளிற் காணோம் என்று தெரிவித்து வணங்கி நின்றார்கள். தெட்சணதிசையிற்போன அனுமார் முதலிய வீரர்கள் பற்பலவிடங்களிலுந் தேடிக்கொண்டு போகையில் மிகுந்த இருளுடனே ஒரு பிலத்துவாரத்தைக்கண்டு அதிலே வழிதெரியாமல் கால்களில் தடவிக்கொண்டு போகையில் அங்குபிரகாசம் பொருந்திய ஒருபட்டணம் காணப்பட்டது, அதிற்புகுந்து தேடிப்பார்க்கையில் பிரித்தசடையும், சரிந்தயிடையும் பிரிந்த உடையுமாக யோகஞ் செய்பவர்களைப்போலே அரைக்கண் பார்வையாய் கண்களை மூடிக்கொண்டு தபசிலிருக்கிற ஸ்வயம்பிரபை யென்கிற தெய்வப்பெண்ணை அனுமார் முதலிய பேர்களும் சீதாதேவியார் இவள்தானோ அல்லவோ வென்று அனுமானங்கொண்டு அவ்விடத்தில் நின்று ஸ்ரீராமமந்திரம் செபிக்க அதைக் கேட்டவுடனே அந்த ஸ்வயம்பிரபைக்கு இந்திரன் இட்ட சாபம் நீங்கி அனுமாரால் பிலத்துவாரத்தைவிட்டு சகலரும் வெளியில்வந்து அனுமாரிடத்தில் விடைபெற்று தேவலோகம் போய்ச்சேர்ந்தாள், அதை அனுமார் முதலிய யாவருங்கண்டு சந்தோஷித்து அவ்விடம் விட்டு வெளிப்பட்டு தெற்குநோக்கிச் சென்று பட்டணங்கள் நாடுகள் நகர்கள் மலைகள் குகைகள் வனமுதலிய சிலவிடங்களிலுந்தேடி தென்சமுத்திரக் கரை வந்து சேர்ந்து மாலியவந்தமென்னும் கிரிமுதலிய இடங்களிலுந்தேடி நாடிவந்த தாயார் அகப்படாமையால் நாமென்னசெய்வோம் ஸ்ரீராமரிடத்திற் சென்று அம்மனைக் காணோமென்று சொல்வதிலும் புண்ணியசாலியாகிய சடாயுவைப்போல் ஸ்ரீராமகாரியத்தில் நாமும் பிராணனை விட்டுவிட்டால் நற்கதியடையலாமென்று அனுமார் முதலியவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சம்பாதி வரலாறு.

அதைச் சடாயு தமையனாகிய சம்பாதிகேட்டு நீங்களார் இவ்விடம் வந்து விசனப்படுவானேன் சடாயுவின் வார்த்தை இவ்விடத்தில் வரவேண்டிய காரண மென்னவென்று கேட்க, அனுமார் சொல்லுகிறார். அயோத்தியா நகரத்தையாண்ட

தசரதச் சக்கிரவர்த்தியினுடைய குமாரர் ஸ்ரீராமர் சீதாதேவி இலட்சுமணருடனும் பிதுர்வாக்கியத்தால் காட்டில் வந்திருக்கவும், ஓரிராக்கதன் வஞ்சித்து வைதேகியைக்கொண்டுபோகவும், அதைக்கண்டு சடாயுவானவர் எதிர்த்து தாயை மீட்கும்படி அமர்செய்யவும், அரக்கன் வாளினுல் சிதைபட்டிறக்கவும் ஸ்ரீராமரும் இளையவருங்கண்டு உற்றுரிமைகளை நடத்தவும், எங்கள் அரசனுகிய சுக்ரீவனும் ஸ்ரீராமரும் நண்புபூண்டு ஜனகன்மாது இருக்கும் இடம் தேடிவர எங்களை அனுப்பவும், எவ்விடங்களிலுந் தேடிக்காணுமையால் நாங்கள் விசனமுற்று இறக்கத் துணிந்துக் கொண்டோம் என்று சொன்னுர்கள். அதைச் சம்பாதிகேட்டு சடாயுவைக்குறித்து துன்பப்பட்டு நாங்கள் ஒருதாய் பிள்ளைகள் என் தம்பியாகிய சடாயு இராமகாரியத்திலிறந்ததே தனக்கு மோட்சமென்று மனமகிழ்ந்து ஐயா வைதேகியாரை திருடிப்போனவன் இலங்கையிலிருக்கும் இராவணன் நேர் தெற்காகச் சமுத்திரத்தைத்தாண்டிப்போனுல் அம்மனையும் அவனூரையுங் காணலாம், பலசாலிகள் கடலைத் தாண்ட வேண்டுமென்று சொல்லி நீங்களெல்லோரும் ஸ்ரீராமமந்திரத்தைக் கூவிச் சொல்லுங்களென்று யோகத்திலிருந்தான், இவர்கள் இராமா இராமாவென்று கூவிய மந்திரம் இருகாதிலுங் கேட்கவே முன்னுளில் தீய்ந்த இறகுவளர்ந்து அனுமாரிடத்தில் விடைபெற்று ஆகாயத்திற் பறந்துபோனுன். அப்போதொருவரை ஒருவர் பார்த்து யோசித்து சாம்புவந்தர் முதலியபேரும் அனுமாரைத் துதித்து சுவாமியின் முத்திரை மோதிரத்தைக் கொண்ட மகானுபாவா நீயேயன்றி வேரல்ல, ஆகையால் இப்போது நீரேபோய் சந்தோஷ சமாச்சாரங் கொண்டுவந்து எங்களை யிரட்சித்து கீர்த்திசம்பாதித்துக் கொள்ளுமென்று சொல்ல, அதை அனுமார் கேட்டு சந்தோஷங் கொண்டு மகேந்திர பர்வதத்தின் மேலேறி விஸ்வரூபமெடுத்து வாலைசுருட்டிக்கொண்டு அதன் சிகரத்திலே நின்றுர்.

கிஷ்கிந்தாகாண்டம்

முற்றிற்று.

ஐந்தாவது,

சுந்தரகாண்டம்.

காப்பு.

அலங்கலிற்றோன்றும்பொய்மையாவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கல்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பர்கைவில்லேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார்.

அனுமார் கடல்தாண்டுதல்.

இப்பால் கிரிசிகரத்தின்மீதுநின்ற அனுமாரானவர் தம்முடைய கண்ணுக்கு நேராய்ச் சமீபத்தில் தெய்வலோகம் பிரகாசிக்கக்கண்டு இதுதானோ விலங்கையென்று நினைத்து ஐயப்பட்டு உடனே இது உயரத்திலிருக்கிறபடியால் இலங்கையல்ல, தெய்வலோகத்தில் சீதாபிராட்டியாரில்லையென்று தெரிந்துகொண்டு பார்வையைத் தாழ்த்திப்பார்க்க கூடகோபுர மாடமாளிகைகளுடன் இலங்கைதோன்ற அதைப்பார்த்து ஸ்ரீராமஜெயமென்று கந்தமாதனம் பந்துபோலெழும்பி ஆகாய மார்க்கமாய் போகும்போது மைநாகமென்னும் பருவதத்தைக்கண்டு அதனிடத் தன்புகூர்ந்து அப்புறம் பாய்ந்துபோக சுரசை என்பவள் மறிக்க அவள் வாயிற்புகுந்து வெளிப்பட்டு கேசரிமார்க்கமாய் எழும்பி சாயாக் கிராணியையுஞ் சிதைத்து, ஆவலுடன் பாய்ந்து இலங்கைக்கு அருகிலிருக்கும் பவளமலையின்மேற் குதித்து இலங்கைக்கு காவலாயிருக்கும் இலங்கணியை வதைத்து ஜயங்கொண்டு இலங்கையிற் புகுந்து அந்நகரத்திலுள்ள மாடமாளிகை கூடகோபுரம் மண்டபமேடை சாலை சோலை ஆலயமுதல் இராவணனும் மண்டோதரியும் சேரும் அந்தப்புரம் சயனக்கிரகங்களியாவும் புகைபோகா விடத்திலும் நுழைந்து தேடி அசோகவனத்திற் புகுந்து அணில் போற்றுவி அம்மனிருக்கும் இடத்தில்மேவி அவ்விடத்தில் நடக்கும் விதத்தையும் இராவணனாகிய பாவியின் எண்ணத்தையும் அறியவேண்டி மறைந்திருந்தார்கள். அப்படியிருக்க சீதாதேவியாரை இராவணன் எடுத்துவந்து அசோகவனத்தில் வைத்து இரண்டாயிரம்பேர் இராட்சத ஸ்திரீகளையும், விபீஷணன் பெண்ணாகிய திரிசடையையும் காவல்வைத்து பயங்காட்டி தனக்கு இணங்கும்படிச்செய்ய கூறிப்போனவண்ணம் அரக்கி

லங்கைதாண்டுதம்.   இலங்கணிவதை.   ஆஞ்சநேயர் மோதிரம்கொடுத்தல்.



ஆஞ்சநேயர் அசோகவனமழித்தல்.   ஆஞ்சநேயர் மதுவனமழித்தல்.   ராமலட்சுமணர் தெற்குபோகுதல்.

யர் கும்புகூடிக்கொண்டு இராவணன் இஷ்டப்படி செய்தால் ஈரேழுபதினுன்கு லோகமும் உமக்குப் பணிவிடை செய்யும், அப்படி நடவாவிட்டால் எங்கள் கையிலிருக்கும் ஆயுதங்களினுல் கொல்லுவோம், கசகசவென்று மெல்லுவோம், வெட்டித்தரிப்போம் என்று பலவித பயங்காட்டி மனதைக் கலைக்க பிரயத்தினம்செய்யுந் தன்மையை திரிசடைதேற்றவும், இராம நாம அமிர்தமே சீவனமாகவும், வேறு அன்னம் தண்ணீர் காய் கனி அருந்தாமலும், நித்திரையில்லாமலும், இருந்த விடத்தைவிட்டசையாமலும், எதற்குமஞ்சாமலும், கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகவும், அரக்கியர் முகத்தை யேரெடுத்துப்பாராமலும் வடக்கு பக்கம் முகம்வைத்து காலம் கழித்துவரும் தாயாரை அனுமார் கண்டு இவரே லோகாபிராட்டியென்று நிச்சயங்கொண்டு இருக்கையில், சூரியன் அஸ்தமயமாகி சந்திரனுதயமாகினுன்.

இராவணனை சீதையம்மன் நிந்தித்தல்.

அந்தவேளையில் இராவணனுனவன் அனேகம் ஸ்திரீகள் புடைசூழ அரக்கர் நெருங்கிவர சகல ஆடம்பரத்துடன் அசோகவனத்தில் வந்து சீதாதேவியாரைப்பார்த்துச் சொல்லுகிறுன் நான் பிரமனுடைய பேரனுக்குப்பிள்ளை, ஜாதியில் பிர்மகுலம். அநேகங்கோடி வேதங்களைச் சிக்கறுத்தவன். கயிலையங்கிரியைப் பேர்த்தெடுத்தவன். அரைக்கோடி ஆயுள் பெற்றவன் இந்திரன்முதலிய யாவரும்பணியப்பெற்ற திண்ணியன். நூருயிரம் பிள்ளைகளைப் பெற்றவன். தீவிரபராக்கிரமசாலிகளாகிய தம்பிமார்களையுடையவன். அளவிறந்த சேனைகளுக்கு இறையவன். சமுத்திரமத்தியில் நகரமுடையவன். தசக்ரீவனுகிய நான் உன்னைவிரும்பி வேறு ஸ்திரீகளையும் நினையாமல் விடுத்தும், உன்னையடுத்து வேண்டிக்கொண்டும் உன்மனம் இரும்பிலும் கொடியதாக விருக்கிறதே யென்று பலவிதமான பெருமைகளை எல்லாம் சொல்லி என்னளவில் அன்புவைத்தால் எல்லாபாக்கியமும் உன்னுடையதே, கோடிபெண்களும் உனக்கு அடிமையே; என்பிராணனும் உனக்குத் தத்தமே, அந்த மானிடர் இந்த சமுத்திரத்தைத் தாண்டி வரமாட்டார்கள். வந்தாலும் தப்பிப்பிழைக்க மாட்டார்கள். மும்மூர்த்திகளும் என்னை ஜெயிக்கமாட்டார்கள். உன்னை மீட்கமாட்டார்கள். ஆகையால் என்னிடத்தில்

கிருபாநோக்கம் வைத்து என்பிராணனை அடிமை கொள்ளு மென்று சாஷ்டாங்கமாகத் தெண்டஞ்செய்து எழுந்து கை கட்டி வாய்புதைத்து வணங்கி நின்றிருக்கும் இராவணனை சீதையம்மனுனவள் பாதகன்முகத்தை நோக்காமலே இராம மந்திரத்தை செபித்து தன் பிராணன்பேரில் ஆசைவையா மல் ஒரு துரும்பைப்போல மதித்துச் சொல்லுகிருள் அடா இராவணத் துரும்பே, கைலையைப் பெயர்த்தெடுத்தும் அரைக் கோடி ஆயுள்பெற்றும் இலட்சம் பிள்ளைகளைப்பெற்று தம்பி மார்கள் உற்றும் ஆயிரம் வேதம் வருமென்றும் வித்தியாகர்வ மும் கொண்டிருக்கிற நீ உன்னுடைய பத்துத்தலைகளும், இருபதுகைகளும் புத்திர மித்திர களத்திராதிகளுடனும் நாளையே நாசமடையப் போகிருய், பதிவிரதைகளுடைய வயிற்றெரிச்சல் உன் குலகோத்திரம் யாவற்றையும் எரிக்கும். தேவர்கள்முதலிய தண்டகாரணிய வாசிகளுக்கு ஸ்ரீராமர்கொ டுத்திருக்கும் அபயாஸ்தம் உன்னைவிடுமோ உன்பத்துதலை களையும் இருபதுகைகளையும்'பூமியில் உருள காக்கை கழு நரி நாய் பேய் பிடிங்கித்தின்னக் காலம் சமீபித்ததுவோ அடா ராவணப்பதரே என்றுசொல்ல, இராவணன் கோபங்கொண்டு வாளையுருவிவெட்ட கிட்டிவரவும் சமீபத்திலிருந்த திரிசடை தடுக்கவும் சீதைபோனல் தன்னுயிர் போமென்று நினைத்து இராவணன் இராட்சச ஸ்திரீகளை நோக்கி இன்னும் பயம் காட்டி வசியப்படுத்தும்படி சைகைசெய்து தன்னரண்மனைக் குப் போய்விட்டான் அப்படியே அவ்வரக்கியர்கள்கூடி சில மொழிகளைக்கூறி அநீதியோதி நீ இராவணனைத் தழுவி வாழ்ந்தால் சுகப்படுவை இல்லாவிட்டால் வாளுக்கிரையாக்கு வோமென்று பயமுறுத்த அவர்களை திரிசடையானவள் கை யமர்த்தி அப்பால் போகும்படிசெய்து சீதையைப் பார்த்துச் சிலவசனஞ் சொல்லுகின்ருள்.

திரிசடை சீதையம்மனைத் தேற்றுதல்.

அம்மா என் தகப்பனுகிய விபீஷணரால் ஸ்ரீராமருடைய செய்திகளைச் சொல்லக்கேட்டேன். அவை யென்னவெனில் மாயமானை துரத்திப்போனது இலக்குமணுவென்று அது மடிந்ததும், அவ்வோசை நீகேட்டு இலட்சுமணனை நீயனுப் பிவிட்டதும், இராவணன் மாறுவேடங்கொண்டு உன்னை

எடுத்துக்கொண்டுவந்ததும், ஸ்ரீராமலட்சுமணர் பர்ணசாலை யில்தேடி விசனப்பட்டு வரும்வழியில் சடாயுவைக்கண்டு தக னஞ்செய்து சுக்ரீவர் சினேகங்கொண்டு அவர் பகைவனாகிய வாலியைக்கொன்று சுக்ரீவருக்குப் பட்டங்கட்டி மழைக்கா லம் நீங்கி வானரப்படைகளைக்கூவி நான்கு திசையிலும் அனுப்பி தேவரீரைத் தேடுகிறதாய்க் கேள்விப்பட்டேன். எனக்கும் ஒரு சொற்பனமாயிற்று ஸ்ரீராமதூதன் இவ்விடத் தில்வந்து உமக்கு நல்லசமாச்சாரம் சொல்லக் கேட்கப்போகி றீர். பள்ளம் உள்ளவிடத்தில் தண்ணீர் நிற்கும் பதிவிரதை களின்மேல் அந்நியர் பாசம்வைத்தால் நாசப்படுவார்கள் நீர் கிலேசிக்கவேண்டாம் அம்மாவென்று சில தேறுதலான சொற்கள்மொழிய அவைகளைச் சீதையம்மன்கேட்டு பிராண னையொழிக்க நினைத்த எண்ணத்தைவிட்டு சந்தோஷமடைந் திருந்தாள்.

அநுமார் சீதையம்மனிடம்வந்து திருவாழி கொடுத்தல்.

அநுமாரானவர் தேகப்புளகாங்கிதங்கொண்டு அரக்கிய ரெல்லாம் அயர்ந்து நித்திரைபோகும்படி அபிமந்திரித்து தான்மெள்ள இறங்கி தாயாருக்கெதிரில் ஸ்ரீராமாராமா வென்று துதித்து வந்து தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து வணங்கி யெழுந்து அடக்கம் ஒடுக்கத்துடன் நிற்க, அதை சீதையம்மன் பார்த்து நீயாரப்பா, அரக்கர்மாயமோ, இரா வணன் செய்யும் அனியாயமோ, அல்லது ஸ்ரீராமருடைய அன்பனோ, அரிபரந்தாமனுடைய தூதனோ, எனக்குத் தெரி யச்சொல்லென்றுகேட்க, தாயாருடைய திட்சித்தத்தை அநு மார் கண்டுகளித்து தெண்டனிட்டு தாயே, நான் ஸ்ரீராம ருடைய தூதன். என்பேர் அநுமார், நான்கு திக்குகளிலும் வானரச்சேனைகள் உம்மைத் தேடிப்பார்க்கப்போய் இருக்கி றார்கள். நான் தட்சணதிசைக்கு வந்தவன் என்று சொல்லி யதை கேட்டு, ஸ்ரீராமரும் இலட்சுமணரும் சுகமாக யிருக்கி றார்களா? என்னை மறந்துபோனார்களா வென்றுவினவ, உம் முடைய வார்த்தையைத் தள்ளாமல் மாயமான்பின் சென்று அதைக்கொன்று திரும்புகையில் தம்பியைக்கண்டு பர்ணசாலை யில் உம்மைக்காணாமல் வருத்தமுற்று தேடிவருகையில் சடாயு

வைக்கண்டு சங்கதிதெரிந்து அவருக் குரியகடனை முடித்துக் கதியடையச்செய்து கவந்தனைமாட்டி பம்பாநதியோரத்தில் வந்திருந்து எங்களரசன் சுக்ரீவன்வந்து சரண்புக அவனுக்கு அபயஸ்தங்கொடுத்து தேவரீர் எங்கள்வசம் போட்டு வந்த நகைகளைக்கண்டு விசனங்கொண்டு மறுநாள் வாலியை பாட்டி சுக்ரீவன் பயம்ஓட்டி அவருக்குக் கிஷ்கிந்தையைப் பட்டங்கட்டி அங்கதனை இளவரசாக்கிக்கூட்டி எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படைகளைக் கூட்டச்செய்து மழைக்காலங்கழித்து உம்மைத்தேட அநேக வானரப்படைகளை அனுப்பிவைத்து தெற்குத்திசைக்கு வெகு வானரச்சேனையுடன் நானும்வந்து அவ்விடத்தில் அவர்களை நிறுத்திவிட்டு நான்மாத்திரம் இவ்விடம் புகுந்து இலங்கை முழுமையுந் தேடி இந்த அசோகவனத்தில் தாயாகிய உம்மைக்கண்டேன். சாயாம்பூவையொத்த திருமேனியையுடைய கருணையங்கடவுள் உம்மைக்காணும் வரையில் ஆவிவைத்திருப்பது அருமையாயிருக்கின்றது ரம்மாவென்று அனுமார்சொல்ல, அதற்கு அம்மன் சொல்லுகிறாள். ஸ்ரீராமருடைய சமாச்சாரங்களெல்லாந் திரிசடைசொல்லக் கேள்வியுற்றேன். ஆனாலும் ஒரு பாவியானவன் தொட்டெடுத்துப்போனவன் நமக்குத் தேவியாகமாட்டாளென்று ஒருவேளை யிருந்தாலும் மோசஞ் செய்த பாவியை நாசஞ்செய்து வெற்றியைப் பெறுவது இராசதருமமென்று சொல்லக்கடவை, நானிருக்கும் சுகதுக்க முதலியயாவும் நீர் பார்த்தபடியே சொல்லுவாய், அப்பால் அவர் சித்தம் எப்படியோ நான் அறியேன் என்று கண்ணீர் பெருகச்சொல்லுந் தாயார் வசனத்தைக்கேட்டு, அம்மா உம்மை எப்போது காண்போமென்றும், இருக்கும் இடத்தை என்று கேட்போமென்றும், ஒருநாள் ஒருயுகமாகக் கழித்து வருகின்றனர். இப்போது நான்போய்ச் சொன்னமாத்திரத்தில் எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படையுடன் வந்து எட்டுநாளையில் இந்த துஷ்டனையும் அவன் குடும்ப முதலிய யாவரையும் நாசஞ்செய்து தேவரீரை மீட்க நாங்கள் பார்க்கப்போகிறோம் தாயே, இந்த திருவாழியை அடையாளமாகக் கொடுத்தாரென்று காட்டவும், கரங்களை நீட்டி வாங்கிச் சிரசின்மீது வைத்து கண்களில் ஒத்தி மார்பிலணைந்து மகிழ்ழ்ந்து அநுமாரைப் புகழ்ந்து குழந்தாய், அஞ்சனாதேவிக்கும் வாயுவுக்கும் புத்திரனாகிய மாருதியே நீ எப்போதும் சிரஞ்

சீவியாக வாழக்கடவையென்று ஆசீர்வதித்து என்துயர் நீக்கிய தெய்வமேயென்று மனமகிழ்ந்து அநுமாரை நோக்கி அநுமானே, ஸ்ரீராமருக்கு என்னுடைய சூடாமணியை அடையாளமாகக் கொடுவென்று கொடுத்து, இதுவரையிலும் ஒன்பது மாதமாயிற்று இன்றுமுதல் முப்பதுநாளைக்குள்ளாக இவ்விடம்வந்து பாதகனாகிய இராவணனை மாய்த்து என்னை மீட்டுக்கொண்டு போகாமற் போனால் என்னுவியை வைத்திரேனென்று சொல்லுமையா அநுமானே என்று சொல்ல, அநுமாரானவர் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அம்மணீ நானே இந்த லங்கையை யழித்து உன்னை மீட்டுக்கொண்டு போவேன், அல்லது இலங்கையோடும்மையும் என்றோள்மேலெடுத்து ஸ்ரீராமபிரான் முன்னேவைப்பேன், ஒரு தூதன் மீட்டான் என்கிறவசை பூமியுள்ளளவும் மாறாது ஆகையால் அதிக சீக்கிரத்தில் ஸ்ரீராமமூர்த்தியை இவ்விட மழைத்து வந்து பகையை முடித்து உமது சிறையை விடுத்து சந்தோஷம் பெறச்செய்கிறேன் உத்தாரந்தாரும் தாயே என்று வணங்கி விடைபெற்றுக்கொண்டு அசோகவனத்தை யழிக்கத் தொடங்கினார்.

அநுமார் அசோகவன மழித்தல்.

அப்போது அனேகங்கோடி யரக்கரையும், சம்புமாலி முதலிய பஞ்ச சேனாபதிகளையும், அட்சதன் முதலாகியவர்களையுங்கொன்று செயங்கூறிய காலத்தில் இந்திரசித்துவந்து எதிர்த்து பிர்மாஸ்திரத்தில் கட்டிக்கொண்டுபோய் இராவணன் சமுகத்தில் விடுக்க, அநுமாரானவர் வாலைச் சுருட்டி உயர்ந்த ஆசனமாகவமைத்து இருக்க, இராவணன் பார்த்து கோபித்து ஆரடா குரங்கே யென்றவன் ஒருமொழிகேட்க, ஸ்ரீராமருடைய தூதன் நானடா, அடா இராவணா என்று ஆயிரமடாப்பட்டங்கூற, இருபது கண்களும் சிவந்து வாளையுருவி வெட்டவருங் காலையில் தூதரைக் கொல்ல லாகாதென்று விபீஷணன் விலக்க, வாலில் துணிசுற்றி தீக்கொளுத்தும்படி இராவணன் கட்டளையிட் அப்படியே செய்தபோது அசோகவனத்தில் சீதையம்மன் இருந்தயிடம் தவிர மற்றவைகளும் இலங்கை பட்டணம் முழுதும் எரித்துக் கரியாக்க, இராவணன் முதலிய பேரும் அந்தரத்தில் ஒளிக்க, அர

க்கர் அரக்கி யாவருமிருக்க யிடமில்லாமல் எவ்விடத்திலும் அக்கினி மயமாகச்செய்து சீதையம்மனைக்கண்டு பணிந்து ஸ்ரீராமஜெயமென்று ஆகாயத்தில் எழும்பிப்பாய்ந்து மேனு தேவியின் பிள்ளையாகிய மைநாகபர்வதத்தின்மேல் குதித்து அங்கிருந்து கிளம்பி மகேந்திர.பர்வதத்தின்மேல் குதித்தார்.

அநுமார் முதலியவர்கள் மது வனத்தை யழித்தது.

அநுமாரானவர் சூடாமணியைக் கைக்கொண்டு வருவதை அங்கிருந்த அங்கதன் சாம்புவந்தர் முதலியபேர்களும் கண்டு ஜெயம் ஜெயமென்று விண்டு அநுமாரை தழுவிக் கொண்டு சகல செய்தியும் கேட்டு மகிழ்ந்து மதுவனத்தில் வந்து நுழைந்து கொள்ளைகொண்டு தெற்கேபோன தூதரைக்காணோமேயென்று விசனப்பட்டுக்கொண்டு இருக்கின்ற ஸ்ரீராமர் திருவடிகளுக்கு எதிரில் வரும்போது கண்டேன் சீதையைக்கண்டேன் ராகவாவென்று ஓடிவந்து வணங்கி சகல சமாச்சாரங்களையுஞ் சொல்லி சூடாமணியைக் கொடுக்க, ஸ்ரீராமர் வாங்கி அளவிறந்த சந்தோஷமடைந்து புளகிக்கவும், சுக்ரீவன் முதலியபேர்கள் ஆனந்தக் கூத்தாடவும், அநுமாரை யாவரும் ஆலிங்கனம் செய்துக் கொள்ளவும், அரம்பா ஸ்திரீகள் சுபசோபனங்கள் பாடவும் வீற்றிருந்தார்கள்.

ஸ்ரீராமர் வானரச் சேனையுடன் தெற்கு நோக்கி வருதல்.

அந்தச் சமயத்தில் நூறுகோடி வானரங்கள் புடைசூழ்ந்துவர நீலனென்னும் படைத்தலைவன் வந்து ஸ்ரீராமர் இலட்சுமணர், சுக்ரீவன், இவர்கள், பாதங்களில் வீழ்ந்து வணங்கினன், இரண்டு சதகோடி வானரரும் புடைசூழக் குமுதனென்னும் படைத்தலைவன் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றான். கனவயன், கனவயாக்கன், மயிந்தன், அளவிறந்த வானரப்படைகளுடனே வந்து வணங்கியிருந்தார்கள். இன்னம் வரப்பட்ட சேனைகளையும் பதினெண்

படைத்தலைவர்களையும் நோக்கி மகிழ்ந்து தென்முகமாகச் செல்லும்படி உத்தரவுசெய்து ஸ்ரீராமரும் இலட்சுமணரும் புறப்பட்டார்கள் இந்த சேனைகள் பத்துயோசனை அகலத்தில் பத்துநாள் இரவும் பகலும் நடத்துவதற்கு சமுத்திரக்கரையைச் சேரவும், ஸ்ரீராமர் சுக்ரீவனை நோக்கி நீர்சொன்ன தொகைக்கு மேற்பட்டிருக்கும்போல் இருக்கின்றன சேனைகளென்று சொல்ல, சுக்ரீவன்கேட்டு ஆதியில் பிரமன் ஏற்படுத்திய தொகை அவ்வளவு இதன் மத்தியில் விர்த்தியாகியதெல்லாம் கூடியிருக்கிற தல்லவாவென்றுசொல்ல, ஸ்ரீராமர்கேட்டு மகிழ்ந்து தென்சமுத்திரத்தைக்கண்டு இதைத் தாண்டிப்போகும் உபாயம் எப்படியென்று யோசித்திருந்தார்கள்.

சுந்தரகாண்டம் முற்றிற்று.

விபீஷணர் சரணமடைதல்.



சுக்ரீவன் இராவணன்முடியை எடுத்துவரல்.



முதல்நாள்யுத்தம்.





கும்பகர்ணன்யுத்தம்.



இந்திரஜித்துயுத்தம்.



ஆஞ்சநேயர் சஞ்சீவிமலைகொண்டுவந்து மூர்ச்சைதெளிவித்தல்.

ஆருவது,

யுத்தகாண்டம்.

காப்பு.

ஒன்றேயென்னினொன்றேயாம் பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேயென்னினன்றேயா மாமேயென்னினுமேயாம்
இன்றேயென்னினன்றேயா முளதென்றுரைக்கினுளதேயாம்
நன்றேநம்பிகுடிவாழ்க்கை நமக்கிங்கென்னோபிழைப்பம்மா.

ஸ்ரீராமரிடத்தில் விபீஷணன் சரணமடைதல்.

ஆஞ்சநேயரால் கொளுத்தப்பட்டு எரிந்து நீருய்ப் போன இலங்கையை தெய்வதச்சனுகிய மயனென்பவனுல் முன்போல் சிருஷ்டித்து மந்திராலோசனை சபையில் இராவணன் வீற்றிருந்து தனது தம்பிமார் முதலிய மந்திரிமார்களுடன் ஆலோசிக்க கும்பகர்ணனுனவன் சில நீதிகளை அண்ணனுக்குச்சொல்ல, இந்திரசித்தனுனவன் அதைமறுக்க அடா பயலே! நாளைக்குத்தெரியுமென்று சீறி தன் னரண்மனைக்குப்போய்விட்டார். அக்காலத்தில் விபீஷணர் இராவணனுக்கு அநேக தரும நீதிகளைச் சொல்லி சீதாபிராட்டியாரைக் கொண்டுபோய்விட்டு ஸ்ரீராமரை வணங்கிக்கொண்டால் நமக்கு நலம், இல்லாவிட்டால் ஒரு குரங்கால்வந்த அவகேடு இப்படியிருக்க எழுபத்திரண்டு வெள்ளங் குரங்குகளும் வந்தால் இந்த இலங்கை, என்னபாடுபடுமோ! எப்படி முடியுமோ! வென்றுசொல்ல, இராவணன் கேட்டு கோபங்கொண்டு நீபயந்தால் ஓடிப்பிழை போவென்று காலாலுதைத்து வாளையுருவிவெட்டவரவும், கிட்ட நின்ற விபீஷணர் தப்பித்துக்கொண்டு தாயாரிடம்வந்து உரைத்து நாலு பத்தினிமார்களுடன் ஆகாயவீதியாய் புறப்பட்டு வந்து இராமமூர்த்தியின் பாதங்களில் சரணம் அடைய, இராமர் அவனுக்கு அபயஸ்தங்கொடுத்து இலங்காபுரி பட்டணம் உன்னுடையதென்று அருள்புரிந்து சிரஞ்சீவியாக விருக்க வரங்கொடுத்து ஆதரித்தார். தேவர்கள் புட்பமாரி பொழிந்தார்கள். அப்பால் விபீஷணரானவர் இராவணனுடைய சம்பத்துமுதல் சேனைப்பெருக்கங்களையுங்கூறி அனுமார் இலங்கையில்வந்து அசோகவனமுதலிய இராட்சதரை யழித்ததும், இலங்கையைச் சுட்டெரித்ததும் ஆதியோடந்தமாகச் சொன்னார்.

அஃதை இராமர் கேட்டு மகிழ்ந்து அனுமானரைப்பார்த்து நீ சிரஞ்சீவியாக வாழக்கடவை என்று ஆசீர்வதித்தார்.

திருவணை கட்டுதல்.

அதன் பின்பு கடலைத்தாண்டும்பொருட்டு ஏழுநாள் தர்ப்பாசனத்திலிருந்து வருணனைப்பிரார்த்திக்க, அவ்வருணன் வராமையால் சினங்கொண்டு விஜயகோதண்டத்தை வளைத்து அக்கினியாஸ்திரத்தைத் தொடுக்க, வருணனானவன் பொரிந்துகரிந்து அபயம் அபயமென ஓடிவந்து திருவடிகளில் வீழ்ந்து புகழ்ந்து வருவதைக்கண்டு ஸ்ரீராமர் திருவணைக்கட்டுதற்கு எப்படி வகையென்றுகேட்க யான் முதுகுகொடுக்கிறேன் என்று உடன்படவும், ஸ்ரீராமருக்குச் சந்தோஷம் வந்து வானரங்களை ஏவி மலைகளைப்பிடுங்கிவந்து போடும்படி சொன்னார் அப்படியே கோடி கோடி மலைகளைக் கொண்டுவந்து போடவும், நளன்வாங்கி அடுக்கி, பத்துயோசனை அகலமும், நூறு யோசனை நிகளமுமாய்த் திருவணை ஏற்படுத்தி ஸ்ரீராமருடைய திருவடிகளில் நமஸ்கரித்து சொல்லக்கேட்டு இராமர் இலட்சுமண சுக்ரீவ அநுமனங்கதர் முதலாகிய சகலசேனைசைனியங்களுடன் சேதுபந்தனத்திற்சென்றுகடலைக்கடந்து இலங்கைக் கருகாமையிலிருக்கும் ஸ்வேலமலையின்மீது வந்துசேர, நளனானவன் அவர்களுக்குத் தகுந்தபடி கூடாரமுதலியவைகளும் ஏற்படுத்த அதில் இராமலட்சுமணர் முதலானவர்களுமிருந்தார்கள்.

இந்தசங்கதிகளையெல்லாம் தசக்ரீவன்கேட்டு சுகசாரணரையழைத்து நீங்கள்போய் உளவறிந்து வாருங்களென்றனுப்ப அவர்கள் வானரப்படைகளில் வந்து புகுந்த மாயத்தை விபீஷணர்கண்டு அவர்களைப்பிடித்து ஸ்ரீராமமூர்த்தியின் முன்விட அவர்களிடத்தி லனேக நீதியைச்சொல்லி இராவணனுக்குத்தெரிவித்துப் பிழைக்கும்விதத்தைத் தேடிக்கொள்ளச்சொல்லும் என்று அனுப்ப, அவர்கள்போய் இராவணனிடத்திற்சொல்ல அதைக்கேட்டு கலகலவென்று நகைத்து நரித்திரள்கள் நாலுகோடி வந்தாலும் சிங்கத்தை அசைக்கலாகுமோ இவர்களெல்லோரும் ஏககாலத்தில் என்கையால் மடியப் பிரமன் எழுதியிருந்தானுக்கும் என்று வீரமேன்மைகளைப்பேச, அவைகளைக் கேட்டிருந்த பாட்டனாகிய மாலியவா

சொல்லுகிறான். கேளடா இராவணா, தூதர்கள் சொன்னால் ஏண்டா வாயைக் கிழித்துக் கொள்ளுகிறாய், நீ பிழைக்கிறது மெய்யானால் சீதையைவிட்டுவிடு, இல்லையாகில் உயிரைவிட்டுவிடு, உண்டான வார்த்தை சொன்னேன் என்று சிலமொழிகளைச்சொல்ல, அவைகளைக்கேட்டு ஏழைமதியுடைய மாலியவானே விபீஷணனைப்போல் என்னை நினைத்தாயோ வாயை மூடடாவென்று பாட்டனை அவமதித்து, அநேக கன்னியர்கள் புடைசூழ உத்தரகோபுரத்தின் மீதேறி சுவேலமலைமீதிருக்கும் ஸ்ரீராமலட்சுமணர் சுக்ரீவன் முதலிய வானரப்படைகளை சாரணர்காட்ட இராவணன்பார்த்துக்கொண்டிருந்தான்.

சுக்ரீவன் இராவணனுடைய கிரீடத்தை கொண்டுவருதல்.

அப்போது சூரியகுமாரனாகிய சுக்ரீவனுக்கு வீராவேசம் வந்துகிளம்பி கோடையிடிபோல் வடக்கு கோபுரத்தில் வேடிக்கை பார்த்துநின்ற இராவணன்மேற் பாய்ந்து இருவருங் கட்டிப்புரண்டு அகழியில்விழுந்து எழுந்து கரகரவென்று சுழன்று கரங்கள்பிடித்து சுழற்றியெரிந்து இடசாரி வலசாரி கால்மாடு தலைமாடாகத்திரிந்து, இராவணன் தலையிலிருந்த கிரீடங்கள் பத்தையும் பரித்துக்கொண்டு முண்டம்போலாகி சுவேலமலையிற்குதித்து இராமருடைய பாதங்களில்வைத்து இராவணன் தலைகளைக் கொண்டுவந்தேன் கடவுளே யென்று வணங்கி நின்றான். இதைக்கண்டு யாவரும் சந்தோஷமடைந்தார்கள். இராமர் சுக்ரீவனை நோக்கி விசனப்பட்டு இப்படி தனிமையிற் செல்லலாகாதென்று சில நீதிகளையும் அரசமார்க்கத்தையும் போதித்தருளினார்.

வானரசேனைகள் இலங்கையைவளைத்தல்.

இராவணன் பத்துகிரீடத்தையும் போக்கடித்துக் கொண்டு சுக்ரீவன் கைக்குத்தால் சரீரமுழுவதும் நொந்து இராஜமண்டபம் போயிருந்தான். இப்பால் இராமர் மறுநாள் இலங்கையின் வடக்குவாயிலில் சுக்ரீவனையும், மேற்குவாயலில் அனுமாரையும், தெற்குவாயலில் அங்கதனையும், கிழக்குவாயவில் நீலனையும், இப்படியாக வகுத்து ஒவ்வொருவருக்கும்

தனித்தனி பதினேழுவெள்ளம் வானரப்படைகளையுங்கூட்டி இலங்கையைச்சுற்றி காவல் வைத்துத் தானும் தம்பி இலட்சுமணனும் விஜய கோதண்டத்தை ஏந்தி மற்ற வானரப் படைகளுடன் யுத்தத்திற்கு ஆயத்தமாக நின்றார்கள். இச் செய்தியை இராவணன் கேட்டு இலங்கைப்பட்டணம் நாலு வாசற்படியிலுள்ளும் இந்திரசித்து முதலாகிய சிலவீரர்களை யேவிக் காவல்வைத்துத் தானும் யுத்தத்திற்குச் சித்தமாக விருந்தான்.

அங்கதன் தூதுபோகுதல்.

அப்போது ஸ்ரீராமர் அங்கதனையழைத்து இராவணனிடத்திற்சென்று சீதையைக் கொண்டுவந்து விட்டு சரணம் அடைகின்றையா? அல்லது யுத்தத்திற்கு வந்து மடிகின்றையா? இரண்டிலொன்று இராசமுறைப்பிரகாரம் கேட்டுவாவென்றனுப்ப, நல்லதென்று நமஸ்கரித்துப்போய் இராவணனுக்கு எதிரில் நிற்கவும் நீயாரென் றவனும்கேட்க, நான் இராமசாமி தூதன், உன்னை வாலில் கட்டியாட்டிய வாலியின் குமாரன், என்பேர் அங்கதன் என்பார்கள், நீவஞ்சித்து உலக மாதாவைத் திருடிவந்தையே பாவி அந்த அம்மனை கொண்டு வந்து விடுத்துச் சரணமடைந்தால் பிழைக்கு முன்னவி இல்லாவிட்டால் இறப்பாய், உனக்கு நல்லகாலமிருந்தால் என்னுடன் கூடவரலாம், பொல்லாத காலமிருந்தால் நிற்கலாம் "கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது, விநாசகாலே விபரீதபுத்தி" இவைகளை யெல்லாம் பரியாலோசித்து சரணமடையலாம், இல்லையாயின் யுத்தத்திற்கு வரலாம் எல்லாச் சேனையும் வந்து இலங்கையை வளைத்துக்கொண்டார்கள். என்ன சொல்லுகிறாயென்று கேட்கவந்தே னென்ற அங்கதனைப்பார்த்து அரக்கைப்போற் கண்சிவந்து நெற நெற வென்று பல்லைக்கடித்து இராவணன் சொல்லுகிறான். அடா அங்கதா, நீயோ சிறுபிள்ளை நான் கருதிக் கொண்டு வந்த சீதை திரும்பி வருவாளென்று கனவிலும் நினைக்க வேண்டாம் யுத்தத்திற்குவரச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒரு பாணத்தால் குரங்குகளையும் கறுத்த மனிதர்களையும்கொன்று விட்டால், அப்பாலிருக்கும் பாணத்திற்குயாரும் இரையில்லையே யென்று இலச்சைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் மேலும் உன் தகப்பனுக்கும் எனக்கும் நெருங்கிய சிநேகிதமென்று

நீயதை யறிந்திருந்தும் உன் தகப்பனைக் கொல்லச் சொல்லிய சுக்ரீவனையும், அவன்பேச்சின்படி கொன்ற ராமனையும் பகையாளிகளாய்க் கருதி என்னிடத்திற்சேர்ந்து அவர்களைக் கொன்று பழிக்குப் பழிவாங்காமல் அவர்களுக்கு அடிமை போலிருப்பது ஞாயமா, இதுவீரமா, தீரமாய் யோசித்துப் பார் நீ என்னதூரமா, எனக்குநீ பிள்ளைமரியாதை உன்னைப் பார்க்கவே மெத்தவிசனம் நேரிட்டது. இப்போது சுக்ரீவனைக்கொன்று கிஷ்கிந்தைப்பட்டம் உனக்குக் கட்டுகிறேன். நரனையுங்கொன்று சீதையை நான் கட்டிக்கொள்ளுகிறேன் என்ற இராவணனை நோக்கி தனதுதோள்களைத்தட்டி அண்டங்குலுங்கநகைத்து அதட்டி அடா இராவணா, நீயோ சிங்கக்குட்டிக்குப் பட்டங்கட்டுவது நீ கெட்டாய்போடா ஸ்ரீராமமூர்த்தியும் இலட்சுமணரும் ஒருகட்டாகவந்து வில்லைவளைத்து பாணம்பூட்டி உன்தலைக்கு வைத்திருக்கிறதைத் தப்பித்துக்கொள்ளடா பதரே என்றேசவும், இராவணனுக்குக் கோபம்வந்து எதிரில் நிற்கும் நூருயிரம்பேர் இராக்கதரை நோக்கி இவனைக் கொல்லுங்களென்றுசொல்ல, அவர்களும் வந்து நெருங்க, அதை அங்கதன் பார்த்து ஒவ்வொரு உதையும் இடியும் அடியும் அறையும் மூறையாகக் கொடுத்து உதறி தரையில் வீழ்த்தி இராட்சதனைப் பார்த்து அடா துரோகி, தூதனைக் கொல்லச்சொல்லி மறையோன் கற்பித்ததா இதோ வந்தது வேதனை யென்றுகூறி ஸ்ரீராமரிடத்தில் வந்து பணிந்து சீதையம்மனை விடுகிறதானுல் தன்னுவியை முன்னமே கொடுக்கிறேனென்று சண்டைக்குக் கங்கணங்கட்டி யிருக்கிருனென்று சொல்ல, இளையபெருமாளுக்கும் அனுமாருக்கும் சந்தோஷமதிகரிக்க, ஆகாயவாசிகள் சுகப்பட்டோமென்றும் பூரிக்க ஸ்ரீராமரும் இலட்சுமணரும் வில்லைவளைத்து குணத்தொனிசெய்து வானரப்படைகளைப் பார்த்து இலங்கை மதிலையும் கோட்டைக் கொத்தளங்களையும் பெயர்த் தெரியுங்களென்று கட்டளையிட்டருளினுர்.

வானரசேனைகள் இலங்கையை அதஞ்செய்தல்.

அப்போது வானரப்படைகள் சுற்றும் மதிலைப் பெயர்த்து அகழியைத்தூர்த்து இலங்கைக்குப் பிரவேசித்து மாடமாளிகை கூடகோபுரங்களை இடித்துப் பொடியாக்கி இராக்க

தர் முதலிய பேர்களை வதைத்துப் பதைக்கப்புடைத்து ஆயுதங்களினாலும் கரங்களினாலும் சிதைத்து காலினாலும் உதைத்து துறத்தியடிக்க இராக்கதசேனைகள் பாதாளம்நடுங்க மீதலங் குலுங்க பற்பல முகத்திலும் பரவி குரங்கினங்களைக் குப்பல் குப்பலாய்க்குவித்து ஓடவிடாமல் அடித்தும் வளைந்து கவிந்து வாட்ட அவர்கள் ஓட்டங்காட்ட ஸ்ரீராமர் திருவடியில் வந்து வீழவும் இதைக்கண்ட சுக்ரீவன் முதலிய வானர வீரர்களும் புறப்பட்டு ஓடிவந்த வானரப்படைகளைச் சேர்த்துக் கொண்டுபோய் இராட்சதர் இரதகஜ துரகபதாதிகள் இறந்து இரத்தவெள்ளங் கடலைப்பொருதவும் இப்படியாக இலங்கைப்பட்டினங் கிடுகிடுவென்று தங்குவதை சாரணர்கள் கண்டு ஓடி இராவணனுடனே சொன்னார்கள்.

இராவணன் முதல்நாள்யுத்தம்.

அந்தவார்த்தையைக்கேட்டு அதிக கோபங்கொண்டு பத்துமுடியுந் திருத்தி இருபதுதோளும் தினவுஎடுத்து ஆயுதந் தாங்கி ஆரகேயூர மணிமகுட குண்டலமணிந்து வீரகண்டை தரித்து இரதம் ஏறிவரவும், இந்திரசித்தனும் இருநூறுவெள்ளஞ் சேனைகளுடன் வரவும், கழுகு காக்கை அடித்து திரியவும், உதிரமாரி சொரியவம், இந்த அவசகுனத்தைக்கண்டு ஆறுக் கோபங்கொண்டு, ஸ்ரீராமர் இலட்சுமணர் சுக்ரீவன் அனுமார் அங்கதன் விபீஷணன் சாம்புவந்தன் முதலிய எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படைகளுடன் இவர்களும் வந்து எதிர்த்து இருதிறச் சேனைகளும் கைகலந்து யுத்தஞ் செய்கையில் வானர வீரர்களெல்லாம் மலைகள் மரங்கள் இவைகளை ஓயாமாரிபோல வாரியிறைத்துச் சாயாமல் நிற்க இராட்சதர்களெல்லாம் யானைகுதிரை இரதம் விமானம் புலி கரடி சிங்கம் யாளி கோவேறுகழுதை பேய்க்கணங்கள் கூளிகள் நாய் முகம் நரிமுகத்துடன் வில் வாள் வேல் சூலம் பாகு கந்தம் சக்கரம் பிண்டி பாலம் எறியீட்டி வாங்கு குருந்தடி குண்டாந் தடி சுக்குமாந்தடி கிலுக்குத்தடி வளைத்தடி இன்னும் பற்பல ஆயுதங்களைக்கொண்டு போர்புரியும்போது ஆயுதங்களினால் சிலமர முதலியவைகளினால் மலை மரங்களினால் அஸ்திரசகஸ்திர ஆயுதங்க ளொழியவும், அரக்கர் அனேகர் இறக்கவும், வானரங்கள் வெகுபேர் பறக்கவும். உதிரவெள்ளங்கள் எங்கெங்குஞ் சிதறவும் இவ்விதமாக சிலநேரஞ் யுத்தஞ்செய்து

இருபடைகளும் இளைப்பாறி மறுபடியும் போர்செய்யத் தொடங்கினார்கள்.

அங்கு இராவணன் வரும்போது இலட்சுமணர் வளைத்துக்கொண்டு பொருதினார். விருபாட்சன் சுக்ரீவனுடன் எதிர்த்தான் அங்கதன் அரக்கர்கூட்டத்தின் ஆண்புலிபோற்சீறியேறினான். விபீஷணன் பிரகஸ்தனுடன் யுத்தஞ்செய்தான். இவ்விதமாக ஒருவருக்கொருவர் தேர்ந்தயுத்தஞ் செய்யுங்காலத்தில் இராவணன் வானரப்படைகளை வதைத்ததை அநுமார் பார்த்து ஆகாயத்திற்கிளம்பி இராவணனுக்கு நேர்குதித்து புஜத்தைத் தட்டி அடா இராவணா நாமிரண்டுபேரும் குத்துச்சண்டை செய்வோம் வாடாவென்று அழைத்து அவனுடைய மார்பில் ஓங்கி ஒருகுத்துவிட்டார். அதோடே இராவணன் மூர்ச்சைபோய் மறுபடியுந் தெளிந்து அநுமாருடைய மார்பில் ஒருகுத்துவிட்டார். அப்போது அநுமார் சற்றே அசைவற்று நின்றார். இப்படி குத்துச்சண்டை செய்த பிறகு அநுமார் இராட்சதசேனைகள் நிற்கத்தரியாமல் ஓட்டமெடுத்தன, இளையபெருமாளுடன் யுத்தஞ்செய்த இந்திரசித்தனனவன் சாரதி குதிரை தேரும்போய் வில்முதலாகிய தேரும்போய் மிகுந்தபயமும் விசனமும் மேலிட்டு பாதசாரியாகப் பட்டணம்போனான். விபீஷணனிடத்தில் யுத்தஞ் செய்த பிரகஸ்தனனவன் குடை கொடி குதிரைப் படைமுதல் தேரும் குழுங்கிப்போய் வையகமாசையை மறுத்து எமலோகம்போய்ச் சேர்ந்தான், இராவணன் ஸ்ரீராமருடன் நெடுநேரஞ் சண்டைசெய்து தேர்கள் குதிரைகள் கூளி யாளி சாரதி கைவில்லும் பாணமும் கொடி படைமுதலிய யாவுமழிந்து இரத்தவெள்ளம் வழிந்து உள்ளமழிந்து இருநூறு வெள்ளஞ்சேனைகளும் பெருங்காற்றி லகப்பட்ட பஞ்சுபோல் ஒழிந்து கெஞ்சிப்பறந்தார்கள் தன்தேரும் ராமபாணத்தால் துறந்துபோனதை இராவணன்கண்டு லச்சைகொண்டு நாணமுற்றுப் பத்துத்தலையும் நிலத்தைநோக்கி யிறங்கி நின்ற தசக்ரீவனைத் தாசரதிபார்த்து ஜானகியைக் கொண்டுவந்துவிட்டு சரணம் அடைகிறது, நன்மையா, அல்லதுசண்டைசெய்வது நன்மையா, முதனாள் யுத்தத்தில் நீ இப்போர்க்கொத்த கெதியடைந்தாய், இதையோசித்துக்கொண்டு இன்றுபோய் நாளை வாவென்றுசொல்ல, மறுவார்த்தையொன்றும் சொல்லாதவ

ஞய்க் கால்நடையாக தன் அரண்மனைபோய்ச் சேர்ந்தான் தேவர்களெல்லாம் ஸ்ரீராமரை ஏத்தித் தொழுதுபோனார்கள்.

கும்பகர்ணனை யெழுப்ப அவன் இராவணனுக்குப் புத்தி சொல்லுதல்.

இப்பால் இராவணன் தன்பாட்டனாகிய மாலியவானுடன் தான்பட்ட அவஸ்தையெல்லாஞ் சொல்ல, அவன் இதுசமயம் சீதையை விடென்று சொல்ல, மகோதரன் கேட்டு இராவணனுக்கு சில துர்ப்புத்திகளுரைக்க, இடிவிழுந்த மரம்போலெரிந்து இவ்வளவு வானரங்களையும், இரண்டு நரர்களையும் எடுத்துவிழுங்க ஏப்பமிடும்படியாகிய என் தம்பி கும்பகர்ணனை இப்போதே எழுப்பிவிடுங்களென்றுசொல்ல, உடனே கதை ஈட்டி உலக்கை முதலிய ஆயுதங்களா லெழுப்பவும் எழுந்திராமல் ஆட்டுமந்தைகளை மேலே செலுத்தி விதிவசத்நால் பாதிதூக்கத்தில் விழித்துக்கொண்டு என்னகாரியமென்றுகேட்க விளைந்த தன்மைகளை விபரமாகச் சொல்லக் கேட்டு மகம்மேரு இரண்டுகாலுங்கையும் முளைத்துவருவதைப்போல் தமயனிடத்திற்குவந்து நிற்க, அவனை நோக்கி அடாதம்பி, இராமன் இலட்சுமணன் இரண்டுபேர் நரர்கள் சுக்ரீவனைத் துணைகொண்டு வானரவெள்ளத்துடன் வந்து பிரகஸ்தன் முதலிய படைத்தலைவர்களையுங்கொன்று சேனைகளையும் வென்று செயங்கூறி நின்றார்களாம் அவர்கள் முழுமையும் உன் சூலத்திற்கிரையாகவும் அமரர் முதலியவர்களின் சந்தோஷமழியவும் வெற்றி பெற்று வரக்கடவை விண்ணவர்க் கெமனேயென்று இராவணன் சொல்ல, கும்பகர்ணன் கேட்டு அண்ணா மும்மூர்த்திகளும் ஒருமூர்த்தியாகி யவதாரஞ் செய்த இராமன் அவருடன் பகைத்து பாரினில் வாழ்வாரோ அம்மனைக்கொண்டுபோய் இராமபிரானுடைய அடிமலர் சேர்த்துவிட் டபயமென்றிருந்தால் அருள்பெறலாமே, தம்பி வார்த்தையுந் தள்ளினை முன்னம் துஷ்டர்வார்த்தையை இஷ்டமாகக்கேட்டனை, அழியாத இலங்கைக்கு அழிவுதேடிக்கொண்டனையென்று சொல்லிய இளையவனை வெகுண்டு எனக்கு நீதிசொல்லவா எழுப்பினேன் விபீஷணனைப்போல் நீயும் போய்ச்சேரு போபோவெனக்கடிந்து புழுங்கினான் கும்பகர்ணன் அந்தவேளையில் அண்ணன் அடிமலர்தொழுது அடியேன்மீது ஆயாசம்வேண்டாம் அண்ணாவென்று

சூலத்தைத்தாங்கி ஆயிரம் பேய்ப்பூட்டிய ரதத்திலேறி யுத்த கோலத்துடனே வெளிப்பட்டு இராட்சதப் படைகளுடன் சர்வசம்மாரகால உருத்திரனைப்போல யுத்தத்திற்குப் புறப் பட்டுவந்தான்.

கும்பகர்ணன் யுத்தம்.

ஸ்ரீராமர்கண்டு மகிழ்ந்து இவனாரென்று விபீஷணனைக் கேட்க என்தமயன் இராவணன்தம்பி கும்பகர்ணன் அண்ண னுக்கு அநேக புத்திகளைச் சொல்ல அவைகளைக் கேளாமல் கோபங்கொள்ள அவனாலிறப்பதைவிட தேவரீரால் மடிவது மோட்சமென்று கருதிவருகிறார் என்றுசொல்ல, ஸ்ரீராமர் கேட்டு நீபோய் அந்தப்பாவி அரக்கனால் அழியவேண்டாம் நன்மைமேவி சுகப்படலாமென்று அழைத்துவாருமென்றனு ப்ப அப்படிபோன விபீஷணனைக் கும்பகர்ணன்கண்டு தம்பீ ஏன்வந்தாய் ஐயோ நீ நல்ல தவத்தையுடையவன், இம்மை யில் தானே நன்மையைப் பெற்றாய், என்வினை எனக்கு உன் வினையுனக்கு ஸ்ரீராமரிடம்போய்ச் சேரெனச் சொல்லி வில்லை வளைத்து நெற நெற நெறவென்று பல்லைக்கடித்து நாணியே ற்றி கணைமாரி தூற்றி குரங்குபடைகளை கலங்க அடித்து கும் பல் கும்பலாகக் குவியச்செய்தான். அதுகாலையில் அனுமார் அங்கதன் நீலன் சாம்புவந்தன் முதலிய படைவீரர்களும் தொடை தட்டிக்கொண்டு மலைமரங்களையும் பிடுங்கி கும்பகர் ணன்மீதி லெறிந்து நான்குதிக்குகளிலும் வளைத்து நமனும் உயிரிளைத்து நடுங்கும்படிவீசி நானாவித வார்த்தைகளினால் பேசி போர்விளைத்தார்கள். சில வானரவீரர்க ளோடிவந்து பாரிய பருவதங்களையும் வாரிக்கொண்டுவந்து அவன் மார் பில் எறிந்தும் கரங்களினாற் குத்தியும் கையிளைத்து இவன் காலகாலனோ ஊழிக்காலத்தில் உண்டாகும் ஆலகாலமோ வென்று வருந்தியிருந்தார்கள். இஃதை ஆஞ்சனேயர்கண்டு ஒரு பெரியகிரியை அடிவேருடன் பிடுங்கிவந்து கும்பகர்ணன் உரத்திலும் சிரத்திலும்பட எறியவும், அண்ட முகடு அதிர வும், அந்தமலை பொடியாய் உதிரவும், அதை அனுமார்கண்டு இவனைவெல்ல நம்முடைய தரமல்ல ஸ்ரீராமருடைய கோத ண்டம் இவனைக்கொல்லக் காத்திருக்கிறதென்று படைத்தலை வர்களுடன்சொல்ல, இதைக் கேள்விப்பட்ட சுக்ரீவன் வாயு வைப்போலெழுந்து அவன்ரதத்தில் விழுந்து கொழுந்து

விட்டெ யும் கண்களுடன் சுக்ரீவன் அடித்துத்தள்ள அந்தச்சுக்ரீவனை கும்பகாணன்பிடித்து தேரிற்கட்டி இலங்காபுரிக்குத்திரும்ப வசந்தன்முதலிய நீலன்வந்துமீட்க வசந்தனைக் கசக்கித் திலதமிட்டுச் சங்கத்தொனிமுழக்கி நடக்கும்போது வானரச்சேனைகள் கரங்களைநெறித்து கண்ணீரால் கையலம்பிக் கலங்கி நிற்க அதைக்கண்ட இளையபெருமாள் கரத்திலிருந்த உத்தண்ட வில்லைவளைத்து கும்பகர்ணன் அப்பாற் செல்லாமல் அசந்துநிற்க அனேக பாணங்களை அனுசந்தித்து இவனுடைய நெற்றியில் பத்துபாணம் ஊடுருவிப்போகும்படிதொடுக்க அதனால் அவன்மயங்கி மூர்ச்சையாய் படுக்க அந்தவேளையில் சுக்ரீவன் அவனுடைய மூக்கையுங் காதுகளையும் பிடுங்கிக்கொண்டு ஓடிவந்து ஸ்ரீராமருடைய பாதங்களிற் பணிய அனுமார் யாவரும் பனிமலர்களைச்சொரிய கும்பகர்ணன் மூர்ச்சைதெளிந்து மூக்குங்காதுகளும் மூளியாயிருப்பதையறிந்து தங்கைமூக்குப்போலே என்னையுஞ்செய்த சமர்த்தர்களே ஒருமூளிக் கிரண்டு மூளிகளாய் இலங்கைக்கு எப்படிப்போவது உங்கள் கரத்தால் சாவேன் இதோ வருகின்றது விஷக்கணை என்று விடுத்து இலட்சுமணருடன் சண்டைகள்செய்து இரதமுதலிய சாரதியும் ஒழிந்து போகவே பூமியிற்குதித்தான்.

அப்படி பூமியிற்குதித்த கும்பகர்ணனனவன் வானரச்சேனைகளை வாரியெறிந்து கரங்களால் எற்றி பாசங்களாற் கட்டி தரையில்தேய்த்து போர்க்களமெல்லாம் புருஷதீரனாய் ஆருக்குமடங்காமல் உலாவும்போது வானர அரசனும் பதினெண் படைத்தலைவர்களும் விபீஷணரும் இளையபெருமாளும் ஸ்ரீராமரிடம்வந்து மனம்நொந்து இந்தப்பாவியைக் கொல்லாமல் தேவரீர் வேடிக்கைப்பார்த்து விஷப்பரிக்ஷை செய்கிறதுபோலிருக்கின்றது இன்னஞ் சற்றுநேரத்தில் எம்மையும் உம்மையுமுறித்து அம்மையையும் அபகரிப்பான் என்றுசொல்ல இதை ஸ்ரீராமர்கேட்டு கரததிற்பிடித்த வில்லை குணத்தொனிபண்ணி யுத்தகளத்தில் எதிர்க்கவும், கும்பகர்ணன் பல்லைக்கடித்து அளவிறந்த அஸ்திரங்களை அபாரமாய்ச் சொரியவும், அவைகளைப் பொடி பொடியாய்த் தகர்க்கவும், இருவரும் நெடுநேரம் யுத்தம்புரிந்து கும்பகர்ணன் வில்லை ஸ்ரீராமர் அழித்தார் உடனே ஒரு தண்டாயுதத்தைச் சுழற்றிக் கொண்டல் வண்ணன்மேல்வீச அது இரண்டாய்ப்போக ஒரு சூலாயுதத்தைப்போடவும் அதைத்தூளாகமாற்றவும் இரண்டு மலைகளைப்பிடுங்கி அரக்கன் எறியவும், இரண்டு கணைகளால்

அவையும் பொடிபடவும், யுத்தகளமெல்லாம் உலாவி வானரங்களை வாரிப்பிடித்து வாயில்போட்டு கசகசவென்று மென்று தின்னும் கரம் கால்வாய்களைப் பற்றிக்கொன்றும் ஸ்ரீராமர்பேரில் குரங்குகளைப் பிடித்து கரகரவென்று சுழற்றி யெறிந்தும் அமர்செய்யும் கும்பகர்ணனுடைய இரண்டு கைகளையும் ஸ்ரீராமர் அறுத்துவிட்டார், அப்போது இரண்டுகாலினால் உதைத்தும் மிதித்தும் குதித்தும் சின்னபின்ன மாக்கும்போது மறுபடியும் இரண்டு அஸ்திரத்தினால் இரண்டுகாலையுந் தரித்தார். அக்காலையில் தேகங்குழவியாகவும், பூமி அம்மியாகவும், வானரப்படைகளை அறைத்து மானிடரையுங் கொல்வேனென்று நாக்கை நீட்டி யுத்தகளத்திற் கிடக்கிற ஒரு பெரிய மலையைக் கெல்லியிழுத்து வாயிற்சேர்த்து நடமுடவென்றுகடித்து சீனக்குழலில் ஊன் வைத்தூதுந் தன்மைபோலூதி ஸ்ரீராமலட்சுமணர்முதல் யாவருக்கும்பட்டு மயங்கச் செய்தான் ஸ்ரீராமர் அவனுடைய வீரத்தைக் கொண்டாடிப் புகழ்ந்து ஸ்ரீராமபாணத்தைவிட்டு அவன் தலையைக்கொய்து அவன் கேட்டுக்கொண்ட வரத்தின்படியே கடலில் விழும்படி செய்துவிட்டனர்.

அதிகாயன் யுத்தம்.

இவ்விடத்தில் கும்பகர்ணன் யுத்தத்திற்குப் போனபிறகு இராவணனவன் மகோதரன் சொற்படி மாயாஜனகனையுண்டாக்கி சீதையம்மன் முன்வந்து சில வார்த்தைகளைச் சொல்லிக்கொண் டிருக்கும்போது சாரணர்களோடிவந்து கும்பகர்ணன் இறந்தானென் றுரைக்க அதைக் கேட்டு இராவணன் புலம்பிக் கொண்டிருக்க, அப்போது அவன் பிள்ளைகளில் இந்திரசித்துதவிர அதிகாயன்முதவிய யாவரும்வந்து வணங்கி யுத்தத்திற்கு உத்தரவுபெற்று இரணக்களம்வந்து இலட்சுமணர் சுக்ரீவன் அனுமாருடன் போர்புரிந்து இராட்சத சேனைகள் மடிந்து இலட்சுமணர் பாணத்தால் அதிகாயன் இறந்ததை தூதர்சொல்ல இராவணன் கேட்டு மிகவும், மனவருத்தமடைந்து துக்கித்திருக்கும்போது, தானியமாலையென்பவள் புத்திர சோகத்தால் இராவணன் முன்வந்து தலைவிரித்து அழுது சீதையம்மனை நீவிடாமல் உன்னைக் காமன் கொல்ல நீ என் மகனைக் கொன்றாயே என்று பலபல விதமாய்ச் சொல்லிப் புலம்ப அதனால் கடுஞ்சினமடைந்து இந்திர

ஜித்தையழைத்து அப்பாமகனே நீயிருந்தும் உன் தம்பியை யும் என் தம்பிமார்களையும் இழந்தேனென்று கண்ணீர்சொரிய விட்டான்.

இந்திரஜித்து யுத்தம்.

அப்படி கலுழ்ந்த இராவணனைத் தேற்றி ஐயா அவ்விர ண்டு மனிதரையும் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று நாகபாசம் பிர்மாஸ்திரமுதல் சகல அஸ்திரங்களு மெடுத்து சேமத்தேரேறி அனேகஞ் சேனைகளுடனே யுத்த களம்வந்து வில்லைவளைத்து குணத்தொனிசெய்து விண்ணவ ரொடுங்க வீரப் பிரதாபங்கூறி குரங்குசேனைகள் கொட்டமெ ல்லாமடங்க அனுமந்தன் அங்கதன் சுக்ரீவன் சாம்புவந்தன் நளன் நீலன் குமுதன் குமுதாக்கன் இவர்களெல்லோருஞ் சேர்ந்து யுத்தந் தொடங்க நீங்களெல்லாம் படுங்களென்று விஷங்களைப்போலச் சீறி வெகுவாய் வார்த்தைகளைக் கூறி நிராயுதருடன் யுத்தஞ் செய்வது நீதியல்லவென்று இலட்சு மணனென்னும் வில்லாளியுடன் சண்டைசெய்வேனென்று வரவும் இளையபெருமாள் வில்லில் நாணிபூட்டி இழுத்து டங்காரஞ் செய்யவும், இந்திரசித்தன் பாணங்களை வாசா மகோசரமாய்ச் சாடவும் வானரவீராள் தலையறுந்தாடவும் இளையபெருமாளுங் கோடி பாணங்களைப் போடவும், இப்படி இருவரும் யுத்தஞ் செய்யும்போது இந்திரசித்தன் தேரிலேரி யிருக்க இளையவர் பூமியில் நிற்பது நன்றல்லவென்று அங்க தன் தோளில் ஏற்றிக்கொண்டு இரதத்துடன் சுழன்று இட சாரி வலசாரியாக அங்கதன் தாவவும், வாயுவேகமும் அஞ்ச நமது ரதவேகத்திலும் மிஞ்ச வருகிறானென்று இராவணன் ஒரு கெதையைச் சுழற்றி அங்கதன் மார்பிலெறிய இளையவர் அதை வெட்டி முறிக்க மறுபடியும் ஒருவருக்கொருவர் ஓயா மல் கணைகளும் அஸ்திரங்களும் பற்பல ஆயுதங்களும் உற் பவம்போல எடுத்து விடுத்து சமர்செய்ய இலட்சுமணர் அனுமான்மீது ஆரோகணித்து அவனுடைய ஆயிரந்தேரை யும் பொடிப்பொடியா யுதிர்த்து நாற்பது வெள்ளஞ் சேனை யையுங் கொல்ல அப்போது சூரியன் அஸ்தமானான். இந் திரசித்து ஒருவனாய் நின்று மாயையால் ஆகாயத்தில் ஒளித் துக்கொண்டு நாகபாசத்தைவிட அதனால் இலட்சுமணர்முதல் யாவருங்கட்டுபட ஸ்ரீராமர் அறிந்து துக்கித்து நாரதரால்

பூர்வக்கியானம் வந்து தமது வாகனமாகிய கருடபகவானை நினைக்க கருடபகவானறிந்துவர அப்போதே நாகபாசத்தின் கட்டறுத்து யாவருமெழுந்து ஸ்ரீராமரை வணங்கி அதிக சந்தோஷத்துடன் கர்ச்சனை செய்தார்கள். கருடனும் வைகுந்தம்போய்ச் சேர்ந்தான். இவைகளை சாரணர்களோடிவந்து இராவணனுடன் சொன்னூர்கள். அவன் இந்திரசித்துடன் சொல்ல நாளைபோய் ஒரு பிர்மாஸ்திரத்தால் அடித்துக்கொன்று போடுகிறேன். இன்றைக்கு நான்போகமாட்டேன் அப்பா என்று சொன்னுன், இதைக்கேட்டு நீலன் முதலிய மகா இராட்சத வீரர்களை யேவினுன் அவர்கள்வந்து வானர வீரர்களுடனே போராடி யாவருமடிந்தார்கள்.

இந்திரசித்துவிட்ட பிர்மாஸ்திரத்தால் இலட்சுமணர்முதல் சகலரும் மூர்ச்சையடைதல்.

இந்தச் செய்திகளையெல்லாம் இந்திரசித்தன் கேட்டு அதிக கோபங்கொண்டு நான்போய் அந்த இரண்டு மனிதர் முதலிய வானரசைனியங்களை யின்றைக்கே முடித்துவருகிறேனென்று அறுபது வெள்ளஞ் சேனையுடன் யுத்தகளம் வந்து வெற்றிபெற நற்போர்புரிந்து அனுமார் முதலிய யாவரையும் ஜாடி வானரச்சேனைகளை நாடி இலட்சுமணரைக்கூடி சகல அஸ்திரங்களினுல் மூடி இளையபெருமாள் பாணத்தால் வாடி ஆகாயத்தில் மேவி இலங்கையிற்ருவி இராவணனிடம் சென்று சில யுத்திகளைச்சொல்ல அவன் உடனே அகம்பனையும் மகோதரனையும் அழைத்து சிலசேனைகளுடன் யுத்தத்திற்குப் போவென்றனுப்ப அப்படியே அவர்கள் வந்து அனுமாருடன் பிரசண்ட யுத்தம்செய்து அகம்பனிறந்தான்.

அனுமார்முதல் சகலரும் தனித்தனியாகப் போகச்செய்து இராக்காலமானதா லிளையவரிடம்போய்ச் சேர்ந்தார்கள் அக்காலையில் மகோதரனுனவன்தேவேந்திரனைப்போல்வந்து சமர்விளைத்தான் இதை இலட்சுமணர் பார்த்து திகைத்து மயங்கி யிருக்கையில் இந்திரசித்தன் வந்து ஒளித்திருந்து பிர்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணிவிட்டான். ஆதலால் ஸ்ரீராமர் இலட்சுமணர்முதல் சகலரும் கீழே விழுந்து சோர்ந்து மூர்ச்சையாய் விட்டார்கள் இந்திரசித்தனும் இராவணனிடம்போய்ச் சகலரும் மாண்டுவிட்டார்களென்று சொன்னுன். அப்போது இராவணன் சிலதூதரை யழைத்து ரணக்

களத்திற்போய் அவ்விடத்திலிறந்து கிடக்கும் நம்முடைய சேனைகளில் ஒருவரையாகிலும் விடாமல் எடுத்துக் கடலிற் போட்டுவிட்டு அசோகவனத்திலிருக்கும் சீதையை அழைத்துக் கொண்டுபோய் படுகளத்தைக் காண்பித்து முன்போல் அசோகவனத்தில் சீதையைவிட்டு அதிசீக்கிரமாய் எனக்குத் தெரிவியுங்களென்று சொன்னான். அப்படியே அசோகவனத் திற்சென்று சீதையம்மனைத் திரிச்சடையுடன் கொண்டுவந்து ஸ்ரீராமர் லட்சுமணர் முதலியவர்கள் படுகளத்தில் விழுந்து கிடக்கிறதைக் காட்டவும் அம்மன் அழுதுவாடவும், திரிச்சடைதேற்றி எந்தநந்தை யிருக்குமளவும் சிந்தனையில்லையென் றுபோற்றிப் பழையபடி அசோகவனத்தில்விட இவைகளை இராவணன் கேட்டு சந்தோஷங்கொண்டு ஸ்திரீகளுடைய ஆடல்பாடல்களைக் கேட்டு மனக்களிப்புடனிருந்தான்.

அனுமார் சஞ்சீவி மலையைக் கொண்டுவந்து சகலரையும் மூர்ச்சை தெளிவித்தல்.

அப்படியிருக்க விபீஷணர் அனுமார் சாம்புவந்தர் இம் மூவருக்கும் சிரஞ்சீவிபட்டமாகையால் விபீஷணர் மூர்ச்சை தெளிந்தெழுந்து கொள்ளிக்கட்டையைக் கையிற்றாங்கி அனுமாரைக்கண்டுபிடித்தார் அப்போது அனுமாரும் தூங்கிவிழித் தாற்போலக் கண்விழித்தார் பிறகு இவ்விருவரும் வார்த்தையாடி சாம்புவந்தரிடம் போய் அவரைக்கண்டு யோசித்து ஐம்பது லட்சம் யோசனை தூரத்திலிருக்கும் சல்லிய கருணி, சந்தான கருணி, சவ்விய கருணி, சஞ்சீவி கருணி இவைகளிருக்கும் மலையினிடமும் வழியும் அவரால் சொல்லக் கேட்டு அனுமார் பாய்ந்து அதற்குக் காவலிருக்கும் கந்தர்வருடன் அமர்புரிந்து அம்மலையைப் பெயர்த்துக்கொண்டு யுத்தகளம் வந்து அவர்களுடையதேகங்களிற் காயங்களில்லாமற்செய்து மாண்டுகிடக்கிற யாவரையும் பிழைக்கச்செய்து அனுமாரானவர் மறுபடியும் சஞ்சீவி மலையை முன்னிருந்த விடத்தில் கொண்டுபோய் வைத்து பொழுது விடியுமுன் வந்துவிட்டார், அப்போது ஸ்ரீராமர் அதிக சந்தோஷத்துடனிருந்து அனுமாரைப் புகழ்ந்து வானரவீரர்களை பார்த்து இலங்கையை அதஞ் செய்யுங்களென்று கூறினர். அதுகேட்டு வானர சேனைகள் வளைத்து இலங்கையிலே நெருப்பிட்டு ஆர்ப்பரிக்கும்போது இராவணன் கேட்டு மனங்கலங்கி இந்

நிகும்பலையாகம். மயில்ராவணன் ராமலட்சுமணரை எடுத்தேகுதல். மூலபல யுத்தம்.



சீதை அக்கினிப்பிரவேசம். பரத்துவாசர் விருந்திடல். பட்டாபிஷேகம்.

திரசித்தன் வெகுண்டு சிலசேனையுடன் வந்து அனுமாருடைய மனதைவாட்டி ஜானகியை வாலால்சுருட்டி அயோத்திக்குப் போக்குகாட்டி ஆகாயமார்க்கமாய் நிகும்பலையாகஞ் செய்யப் போய்விட்டனன்.

நிகும்பலையாகத்தை யழித்தல்.

அப்பால் அனுமார் மிகுந்தவிசனமடைந்து ஸ்ரீராமருடன் சொல்ல, அவரும் மெய்கலங்கி திப்பிரமைகொண்டு ஒன்றுந்தோன்றுமலிருக்க இளையபெருமாளும் அப்படியே தளர்ந்து ஸ்ரீராமரைப் பார்த்துச் சில கடுஞ்சொற்களை சொல்லினர் அப்போது சுக்ரீவன் சொல்லுகிறன். சுவாமி நாமிங்கிருந்து வருத்தப்படுவதேதுக்கு இந்தலோக மூன்றையு மழித்து சுற்றித்திரிந்து நமக்கு உதவிசெய்யாதிருந்த தேவர்களுடைய வமிசத்தையுங் கருவருத்து விடுகிறேனென்று லங்கையின்மேல் பாய்கிறதற்கு எத்தனித்தார். அப்போது ஆஞ்சனேயர் இந்திரசித்து அயோத்திக்குப்போனனென்று சொன்னர். அஃதை இராமர்கேட்டு முன்னிருந்த விசனத்தைவிட அதிக விசனமடைய அதை அனுமார் அறிந்து சுவாமி தங்களையும் படைவீரர் முதலிய நமது சேனுசைனியங்களையும் எனதுதோளிலேற்றி அயோத்தியிற்போய்குதிக்கிறேன் அந்த இந்திரசித்தை நானே வதைக்கிறேனென்று சொல்ல விபீஷணர் கேட்டு இலங்கையில் தான்போய் சகலமுமறிந்து வருகிறேனென்று ஒருவண்டாக ரூபமெடுத்து அசோகவனம் போய் அம்மனைக்கண்டு இந்திரசித்து செய்யும் நிகும்பலை யாகத்தையும் பார்த்து சுவாமிமுன்வந்து அம்மன் இருக்கிறதும் சொல்லி, மேலும் அதிசீக்கிரத்தில் அழித்து இந்திரசித்தையும் கொல்லவேண்கிமென்று சொன்னர். இராமர் தம்பியை அழைத்து ஆலிங்கனஞ்செய்து சகல தருமங்களும் யுத்தமுறைகளும் கூறிவிடுக்க, இளையவர் கோபங்கொண்டு நிகும்பலையாகத்திற் சென்று அனுமார் முதலிய பேர்களால் யாகத்தையழிப்பித்து அவன் தேகமுழுமையும் அஸ்திரத்தினல் அழுத்தி அதனல் அக்கொடியன் வெகுளிகொண்டு தேரேறி இலட்சுமணருக்கு பிராணத்தியாகஞ்செய்வது நிச்சயமென்று தேறி இதோபார் என்வீரத்திரம் பாணந்திறத்தினல் உன்னை அதஞ்செய்கிறேனென்று சீறி தூறி நாருயி

ரம் கணைகளை வாரி மாரிபோற் பொழிந்தான் அவைகளுக்கு பதிலஸ்திர மெடுத்து இலட்சுமணர் அடுத்து கடுகடுத்து அடா இந்திரசித்தே! உனக்கும் இராவணனுக்கும் விபீஷணனைவிடுத்துக் கருமம்செய்யத் தொடுத்துவைக்கிறேன் பாரடா பாதியுத்தத்தில் ஒளியுந் திருடாவென்று சப்தமேகமும் தாரைவிடு சப்தம்போல் பாணங்களைத் தூற்றவும், இந்திரசித்து வளைத்து இரதத்திலிருந்து அம்புகளை யேற்றவும் இலட்சுமணரும் அங்கதன் தோளிலேறிக்கொண்டு அரக்கன் விட்ட அஸ்திரங்களை அறுத்தெறிந்து அவன் உடம்பெங்கும் சல்லடைக்கண்களாய்த் தொளைக்கவும் இலட்சுமணர்விடுங் கணைகளினால் இராக்கதவீரர் ரதகஜ துரகங்கள் முதலியசேனைகள்யாவும் ஒன்றொழியாமல் இளைக்கவும் இந்திரசித்தனுடைய கவசம் வீரபட்டம் கைவில் தேர் குதிரை சாரதி முதலியவைகளழிய அஸ்திரங்களெல்லாம் பொடிப்பொடியாய்ப் படியில்விழக்கண்டு பயந்து ஆகாயத்தில் ஒளித்து இலங்கையிற்புகுந்து இராவணனைப்பணிந்து ஜானகியை விடுத்துச் சரணம் அடைவது தன்மை யில்லாவிட்டால் துன்மை என்னுடைய மாய்கை வல்லமை பிர்மாஸ்திரம் நாகாஸ்திர முதலியயாவும் சூரியனைக்கண்ட பனிபோலாய் விட்டன. குடத்திலிட்ட விளக்காயிற்று இனிமேல் என்னால் சண்டைசெய்ய முடியாது ஆவது ஒன்றுமில்லை என்று சொல்லிய மகனைக் கொன்று தின்றுவிடத்தக்க கோபங்கொண்டு அண்டர்களை வென்று நீலகண்டனைக்கண்டு எண்டிசையுஞ் சென்று வென்று எமகண்டகன் என்று பேர்கொண்டிருக்கும் சண்டப்பிரசண்ட உத்தண்டனாகிய என்னிடத்தில் கோதண்டனைக்குறித்துப் புகழ்ந்து நீ இளைத்துச் சொல்லியதை நோக்குங்கால் நீ என்குமாரனல்லன், கெட்டாய் போவென்று வாளையுருவி வெட்டவந்தான் துஷ்டனாகிய இராவணன்.

இந்திரசித்தன் வதை.

அதைக்கண்ட இந்திரசித்தன் விசனமடைந்து இவனிடத்தி லிறப்பதிலும் பட்டாபிராமனால் மடிவது பாக்கியமென்று நினைத்து சிறுசதங்கைகள் கட்டி சப்திக்குந் தேரேறி இலட்சுமணருக்கெதிரில் வந்து நின்று இருகண்களிலும் சலம்பொழிந்து இந்திராஸ்திரம் சந்திராஸ்திரம் வாயுவாஸ்

திரம் தேயுவாஸ்திரம் முதலியவைகளையிறைக்க, இளையபெருமாளுக்குக் கோபம் அதிகரித்து எத்தனைதரம் ஓடி ஒளித்து இவனும் வருவான் என்று அர்த்தசந்திர பாணத்தைத்தொடுத்து அவன் விடுத்த அஸ்திரங்களெல்லாவற்றையு மழித்து அழகு பொருந்திய கிரீடந்தரித்த அவனது சிரத்தையும் கரகரவென்றறுத்துத் தள்ளினர். வானரப்படைகளும் அனுமார் முதலிய யாவரும் சந்தோஷங்கொள்ள அங்கதன் இலட்சுமணரைச் சுமந்துகொண்டு இந்திரசித்தன் தலையையுங் கைக்கொண்டுபோய் சுவாமியின் அடியிணையில் வைத்துப் பணிந்து நின்று மகிழ்ச்சிகொள்ள அரம்பாஸ்திரீகள் கற்பக மலரை வாரியிறைத்து மங்களம்பாட இளையபெருமாளும் பெரிய பெருமாளைப் பணிந்துபோற்ற தம்பியை மார்புடன் தழுவி மகிழ்ந்து ஸ்ரீராமரானவர் சந்தோஷங் கொண்டிருந்தார்.

அக்கணமே சாரண ரோடிவந்து இராவணனைக் கண்டு இறந்தான் இந்திரசித்து என்றுகூற ஆருத் துயரங்கொண்டு மாருக்கண்ணீர் பொழிய தேருவிசனமுற்று சிங்காதனத்திலிருந்து பூமியில் திட்டென்றுவிழுந்து மூர்ச்சைபோய்த் தேறியெழுந்து மகனே! மகனே! என்றுகூவி ரணக்களமேவி இந்திரசித்தன் உடலைத்தாவி எடுத்துத் தனது அரண்மனையில் வந்துசேர்ந்தான். இதை மண்டோதரி யறிந்து கடகடவென்று புரண்டு ஒப்பாரி சொல்லியழ அதைக்கேட்ட இராவணன் சீதையைக் கொல்வேனென்று வாளைக் கையிலெடுத்து அசோகவனம் போகையில் மகோதரனனவன் பெண்களைக் கொல்லுதல் பெரியபாவம் ஆகையாலந்த இரண்டு மனிதரைக்கொன்று உன் பகையைமுடித்தால் கீர்த்தியென்று சொல்ல, அப்போதவன் கையிலிருந்த வாளை எறிந்துவிட்டு அரண்மனைவந்து ஒன்றுந்தோன்ருமல் என்னசெய்வதென்று யோசித்திருக்கும்போது மகோதரன் சொல்லுகிருன்.

கேளும் பிரதாப இலங்கேஸ்வரா உனக்கேன் மனக்கவலை பாதாள விலங்கையிலிருக்கும் உன் தம்பி மயிலிராவணனுடன் நீ ஒருவார்த்தை சொல்வாயேயானுல் அந்த மனிதரிருவரையும் நொடிப்பொழுதில் அதஞ்செய்துவிடுவான் அதன் பின்னர் நீ சீதையைக்கூடி வாழலாமென்றுரைக்க, அதைக் கேட்டு மெய்தானென்று மதித்து அப்போதே மயிலிராவண

னே வரவழைத்தவனுடன் ஆதியோடந்தமாகச் சொல்ல, அவன்கேட்டு இராமலட்சுமணு ளிருவரையும் நாளை யிராத்திரி பதினைந்து நாழிகைக்கு வந்து எடுத்துப்போய் சூரிய உதயத்துக்குள் பாதாள விலங்கையிலிருக்கும் காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேனென்று உறுதிசொல்லி அரண்மனை வந்துசேர்ந்தான். இச்சேதியை திரிசடையறிந்து வாயுபகவானால் விபீஷணருக்குத் தெரிவிக்க அவர் இராமர் முதலிய சகலருக்குந் தெரிவித்து இதற் கெப்படியென்று யோசித்திருக்கும்போது சூரியன் அஸ்தமயமானான். அப்போ தனுமார் தன் வாலினால் கோட்டைகட்டி யதற்குள் எழுபத்திரண்டு வெள்ளம் சேனையும் இராமலட்சுமணரையும் இருக்கச் செய்து தான் மேலாகவிருந்தார். அக்கோட்டைக்கு வழி எப்படி யென்றால், அனுமாருடைய வாயிற்புகுந்து செவியினிடமாகப் போகவேண்டும் மகா ஜாக்கிரதையுடன் அனுமாரிருக்கச் சுக்ரீவன் முதலியவர்களை நான்குபுறத்திலும் காவல் வைத்து விபீஷணரானவர் அக்கோட்டையைச் சுற்றிக்கொண்டிருந்தனர்.

மயிலிராவணன் இராமலட்சுமணுளை எடுத்தேகுதல்.

இப்படி யிருக்க இராத்திரி பதினைந்து நாழிகை வேளையில் பாதாள விலங்கையிலிருக்கும் மயிலிராவணனானவன் விபீஷணரைப்போல் வந்து அனுமாரே பத்திரம், பதினைந்து நாழிகையாகிறது மயிலிராவணன் என்னைப்போல் ரூபமெடுத்து வருவான் அவன் மகா மாயா விநோதி வழிவிடப் போகிறீர் என்று சொல்லி அனுமாருடைய வாயிற் பிரவேசித்து செவியிடமாகப் புகுந்து வாயினிடமாய் வெளியில் வந்து அனுமாரே பத்திரமாக இருமென்று சொல்லி கஸ்து வருகிறவன்போல் பாதாள இலங்கையிற்போய் காளிகாதேவியினருகில் அப்பெட்டியைவைத்து தன் அரண்மனையிற் போனான் இப்பால் விபீஷணர் அக்கோட்டையைச் சுற்றி அனுமாரிடம் வந்து ஜாக்கிரதையாயிரும் உள்ளேபோக வழிவிடுமென்று சொல்ல, இப்போதுவந்து போனீரே மறுபடியும் வந்த காரண மென்னவென்று அனுமார் கேட்க, இருவரும்

ஆலோசித்து உட்சென்று பார்க்க இராமலட்சுமணரைக் காணுமல் விசனப்பட்டு விபீஷணரால் பாதாள இலங்கைக்கு வழிதெரிந்து சூரிய உதயத்துக்குள் இராமலட்சுமணுளை யிவ்விடம் கொண்டுவருகிறேனென்று சபதங்கூறி அனுமார் புறப்பட்டு சமுத்திரத்தின் மத்தியிலிருக்கும் தாமரைத் தண்டின் வழியாய்ப் பாதாள இலங்கைக்குப்போய் மச்சயந்த அனுமானுடன் போர்புரிந்து முதற்கோட்டைமுதல் ஏழுகோட்டைகளையும் அவ்விடமிருக்கு மரக்கர்களையும் அதஞ்செய்து உத்தியானவனத்தி லழுதுக்கொண்டிருக்கும் தூரதண்டிகையுடன் சிலவார்த்தைகள்பேசி மர்மந்தெரிந்துகொண்டு நீலமேகனுடைய விலங்கை நீக்கி துலாயந்திரங்கடந்து இராட்சதாளை கொன்று மயிலிராவணனைக்கண் டமர்புரிந்தவனைக் கீழேதள்ளி அவன் மார்பிலொருகாலும், விந்தியாசலபருவதத்தில் ஒருகாலுமாகவைத்து அவ்விடமிருக்கும் ஐந்து வண்டுகளையும் பிடித்துத் தேய்த்து மயிலிராவணனையுங் கொன்று நீலமேகனுக்குப் பட்டங்கட்டி காளிகாதேவியினிடம் வந்து அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு பாதாள இலங்கையை விட்டு தாமரைத்தண்டின் வழியாய் வெளிப்பட்டு சூரியவுதயத்திற்குமுன் விபீஷணர் முதலியவரிருக்கும் கூடாரம் சேர்ந்து அந்தப்பெட்டியைவைத்து அனுமாரானவர் வணங்கி நின்றூர் உடனே பெட்டியும் மாய்கையாய் போய்விட்டது அதன் பின் சூரியன் உதயமாஞன். இராம லட்சுமணர் இருவரும் நித்திரை தெளிந்தெழுந்து சகலமுந் தெரிந்த ஆஞ்சனேயரைத் தழுவி மிகக்களிப்படைந் திருந்தார்கள் இந்தச் சங்கதிகளைச் சாரணர்களோடி மயிலிராவணனிறந்ததையும், இராமலட்சுமணர் மற்றுமுள்ள சகலரும் சுகமாக விருக்கிறதையும் சொல்ல இராவணன் கேட்டு சிந்தாக்கிரந்தனுய் மெய்ம்மறந்து பூமியில் விழுந்து மூர்ச்சை யடைந்திருக்கும் சமயத்தில் சாரணர்களால் மூலபலச் சேனைவருகிறதென்று இராவணன் கேட்டு எழுந்திருந்து கொலுவிருக்க, அப்போது வந்த மூலபலத்தின் பெருமையைச் சொல்லக்கேட்டு மகிழ்ந்து இராமனைக் கொல்லுங்கள், வானரப்படைகளை வெல்லுங்கள் எனக்கு ஜயத்தைத் தாருங்கள் இலங்கையில் என் கொடியை நாட்டுங்கள் என்று சொல்லி யுத்தத்திற்கு விடை கொடுத்தனுப்பினுன்.

மூலபலச்சண்டை.

அப்போது ஆயிரம் வெள்ளம் சேனைகளுடன் வந்து மிருந்த களிப்புடன் ஏழுசமுத்திரமும் ஒன்ருய்த் திரண்டது போல வந்து நெருங்கி இராமர் தங்கியிருக்குமிடம் வரைக் கும் நிறைந்து யாரவன் மனிதன், ஆரவன் என்றண்டமிடி யக்கூவி அகில புவனங்களையுந் தாவி நாய் நரிமுகம் பேய் முதம் கழுமு கழுதைமுகம் கரடிமுகம் புலிமுகம் இப்படி பல முகங்களும் விகாரரூபங்களும் உடைத்தாய் விளக்கை விட் டிற் பூச்சிகள் வளைந்ததைப்போலும் பாம்பைத் தேரைகள் சூழ்ந்தன போலும் சூரியனைப் பனி மறைத்ததைப்போலும் வந்து வளைந்துக்கொண்டு சகலவித ஆயுதம் அஸ்திரசஸ் திரம் அம்பு கணை வில் வாள் கதை முதலியவற்றைக் கொண் டுமோதவும், வானரப்படைகள் காதவழி கடலைக் கடந்து ஓடவும், அனுமார் சாம்புவந்தர் முதலியோரைத் தேற்றி அவர்கள் பயம் ஆற்றி திரும்பவும் பெரும்புறக்கடலை வுரு ஞ்சி குடித்து யேப்பமிட்டு வந்தெதிர்த்த சேனைகளை ஸ்ரீராமர் கண்டு விஜயகோதண்டத்தைக் கரத்திற் கொண்டு நாணி யே ற்றி குணத்தொனிகாட்டி சரமாரி பொழிந்து நான்கு திசை சேனைகளையும் பம்பரம்போலாட்டி பூமி முழுமையும் இரத்த வெள்ளங்காட்டி புரண்டழியமாட்டி போக்கிய சேனைகள்போ க மீதி மேலிட்டு வரும் படைகளை மோகனுஸ்திரந் தொடுத்து எங்கும் இராமனாக நின்று நிலத்தோடு மடிந்து வெறுங்கள மாக்க அப்போது பூதப் பிரேத பைசாசங்கள் தின்று கொழு த்துச் செயங்கொண்டாடின.

இராவணனுக்கும் இலட்சுமணருக்கும் யுத்தம்.

இஃதிப்படியிருக்க இராவணனனவன் மூலபலச்சேனை யை அனுப்பிவிட்டு தேரிலேரி அனேகஞ் சேனைகளுடன் புறப்பட்டு இலட்சுமணருடன் வந்தெதிர்த்து பிரசண்டயுத் தம் செய்கையில் விபீஷணர் வந்தெதிர்த்த இராவணன் வே லாயுதத்தை விடுக்க இளையவர் கண்டு விபீஷணரைத் தள்ளி விலக்க அந்த வேலானது இளையவர் மார்பில் தாக்க கீழ் விழுந்து மூர்ச்சையடைந்தா ராவணன் கெலித்தோமென்று இலங்கையிற் போய்ச் சேர்ந்தான். அப்போது அனுமார்

முன்போல சஞ்சீவிமலையைக் கொண்டுவந்து இளையவர் முத லிய சகலரையு மெழுப்பி ராமர் முன்சென்று சங்கதிகளைக் சொல்ல, ராமர் சந்தோஷங்கொண்டு சிரஞ்சீவியா யிருக்கக் கடவையென்று அநுமாரை ஆசீர்வதித்தார். விபீஷண ரானவர் சுக்ரீவன் முதலியயாவர்களுக்கும் மூலபலப் படுகளத் தைக் காண்பித்து மனவுச்சாகத்துடனிருந்தார்கள். இவைக ளை தூதர்கள் பார்த்து இராவணனுடன்சொல்ல அதைக்கே ட்டு மெய்ம்மறந்திருக்க மாலியவானனவன் இராமரைப் புகழ் ந்து இராவணனிடம் புண்ணில் கோலிட்டாப்போல சில வார்த்தைகள் சொல்ல, அதைக்கேட்டு தூதர் சொன்னதும் நீசொல்வதும் மெய்யென்று அறிய வேண்டுமென்று வடக் குக் கோபுரமேறிப் பார்த்து பிரம்மை கொண்டு கீழேயிறங்கி துடிதுடித்து நகைத்து கிரீடஞ்சூட்டி மாலைதரித்து குண்டல மணிந்து அரைப் பட்டையைக் கட்டி ஆடைதரித்து வீரகண் டையை வீக்கி விதவிதமாகிய ஆயுதம் யாவுமமைத்து சந்தன புட்பம் சவ்வாது மணிந்து யுத்தகோலத்தை யடைய அதைக் கண்டு மண்டோதரீயானவள் சொல்லுகிறாள்.

இராவணனுக்கு மண்டோதரி புத்திசொல்லுதல்.

கேளும் என் பிராண நாயகா! அந்த இராமலட்சுமணனை நீ ஒருக்காலும் செயிக்கப்போகிறதுமில்லை அவர்கள் உன்னை விடப்போகிறதுமில்லை ஆகையால் சீதையைக் கொண்டுபோ ய் விட்டுவிட்டால் நாம் சுகமாயிருக்கலாமென்று சொல்ல, அதைக்கேட்டு இராவணன் சஞ்சலமடைந்து எனது தம்பி கும்பகர்ணனையும் இந்திரஜித்து முதல் சகலரையுங் கொன் றார்கள், அவர்களைவிட என்பிராணன் பெரிதோ, இதோ நான் போய் அவர்களைக் கொன்று வருகிறேன். அப்படியல்லாமல் அவர்கள் பாணத்தால் நான் மடிந்துபோனால் நீ சும்மா யிருக்கவேண்டாம் அந்த சீதையை வாளினால் வீசிப்போடு நீயும் என்னுடன்கூட அக்கினிப் பிரவேச மாய்விடென்று சொல்ல, அதைக்கேட்டு சொல்லுகிறாள். மகா விஷ்ணுவா னவர் மச்ச கூர்ம வராக நரசிம்ம வாமன பரசுராமர் என் னும் ஆறு அவதாரமெடுத்து துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபா லனஞ் செய்து ஏழாவது திரிலோககண்டனாகிய உம்மைக் கொல்லும் பொருட்டு தசரதருக்கு இராமாவதாரமாகப் பிற

ந்து விசுவாமித்திரருடைய யாகத்தை முடித்து மிதிலையில் ஜனகனுடைய வீட்டிலிருக்கும் காளகண்டனுடைய வில்லை யொடித்து ஜானகியை மணம்புரிந்து பரசுராமனைப் பங்கப் படுத்தி பிதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும் பொருட்டு சீதா லட்சுமணர் சமேதராய் தண்டகாரணியம் வந்து உனது தங் கையின் மூக்கு முதலியவைகளைக்கொய்து கர தூஷணர் மாரீசன் முதலிய இராக்கதரை வதைத்து கிஷ்கிந்தையில் வாலி யைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி அநுமாரால் இலங்கையில் சீதையின் இருப்பிடத்தைத் தெரிந்து வானரச் சேனையுடன் சமுத்திரமணைகட்டி இலங்கையைவளைத்து அர க்கர் குலத்தை அதஞ்செய்து உன்னையு மடித்து இந்த இலங் கையை விபீஷணனுக்குப் பட்டந் தரிக்க நிச்சயித் திருக்கி றார்கள். எனக்கும் எனது தகப்பனாகிய மயனென்பவன் சாகா வரமும் நோயில்லா வாழ்வும் கொடுத்திருக்கிறார். ஆகையால் சீதையம்மனை இராமரிடம் விட்டு நாம் தவம் செய்வோமே யானால் நமக்கு முத்தி கிடைக்குமென்று சொல்ல, அதைக் கேட்டு நான்கு திக்கும் விஜயஞ்செய்து ரிஷிகள் தேவர்கள் முதலிய திரிமூர்த்திகளையுஞ் செயித்து இப்போது இரண்டு மனிதருக்குப் பயந்து மூச்சைப் பிடித்துத் தவஞ்செய்தால் ரிஷிகள் தேவர்கள் முதலியயாவரும் நகையார்களா! அதைவி டபோர்புரிந்து இராமபாணத்தா லிறந்தால் நன்மை, மேலும் நான் ஒரு ரகசியஞ் சொல்லுகிறேன் அஃதென்னவெனில், ஸ்ரீமந் நாராயணனே ஸ்ரீராமனாகப் பிறந்தாரென்றும் மகா லட்சுமியே சீதையாகப் பிறந்தாளென்றும், இந்தச்சீதையை நானெடுத்துவர ஸ்ரீராமர்பாணத்தால் நான் இறந்து சாயுச் சியமாக வைகுந்தபதவியை நான் அடைவேனென்றும் அறி வேன். ஆகையால் நீ சூரியனில்லாத தாமரை போலவும், அமங்கல ஸ்திரீயாய் இருக்கக் கடவதென்று சொல்ல, அ தைக்கேட்டு மண்டோதரியானவள் தலைகுனிந்து நிற்க இரா வணனனவன் அவ்விடம்விட்டு வெளியில் வந்து அந்தரத் தேர்கள் அலங்கரித்துத்தர மகோதரன்முதல் அரக்கர் சேனை யாவும் நெருங்க குடை கொடி குஞ்சம் சாமரை முதலிய விருதுகள் பறக்க, டமாரங் காகளம் பூரி கர்ணா சின்னம் உடுக்கை பம்பை முதலிய வாத்திய முழங்க, பாதாளம் நடுங்க மீதிலம் ஒடுங்க அண்டமளாவிய தேரிலேறி ராமனை யின்றே பழித்து சீதையைக் கொண்டு வாழ்ந்திருப்பே னென்று சமர்க்

களம்புக எரிகொள்ளிக்கட்டை தேரின்மேல்விழ இரத்த மழை பொழிய நாய் நரி ஊளையிட காரியமில்லை யென்று கண்கள் சிவந்து வீரியமாக யுத்தகளம் போனான். வீணைக்கொடி விண்டலம் அளாவ காண்போரெல்லாங் காலனென்றோட ராமர் முதலிய வானரவீரர்கள் யாவருங் கண்டு மகிழ்ந்து கண் களிகூரக் கண்டனன். இவ்விதமாக இராவணன் தேரின் மேலிருக்க சுவாமி பூமியில் நின்று யுத்தம் செய்வது நன்றல்ல வென்று அண்டர் நாயகன் கண்டு திருத்தேர் கொண்டுவரும் படி மாதலியாரும் சாரதிக்குச் சொல்ல அதிவேகமாக அவன் கொண்டுவந்த திருத்தேரின்மீது கோதண்ட பாணியானவர் ஏறிக் கோதண்டம் தாங்கி படைத்தலைவர்களுடன் வானரச் சேனைகள் இருபக்கத்திலும் சூழ, இளையபெருமாளும் அங்க தன் தோளின்மீதேறி எங்கும் உலாவிய அரக்கர் சேனைகளை அழித்துக்கொண்டுவர குரங்குப்படைகள் குலாவி மகிழ ஸ்ரீ ராமரும் மாதலியை எச்சரித்து மகோதரனெதிரில் வந்து வளைத்து யுத்தம்புரிய இராமபாணத்தால் அவனுடைய பெரு வயிறு சரிந்து எமபுரஞ்சேர்ந்தான்.

ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் கடைசிநாள் யுத்தம்.

அதன்பின்பு ஸ்ரீராமரும் இராவணனும் அதிககோபத் துடன் கண்கள்சிவந்து வில்லைவளைத்து குணத்தொனிகாட்டி குயவன் திகிரிபோற் குறைவறச் சுழன்று இருவரும் பகை யோயாமல் சரங்களையெய்தனர் இராவணன் ஏவிய கணைகளை யெல்லாம் சுழற்காற்றிலகப்பட்ட துரும்புபோலழிந்து பறக்க அரக்கர் சேனைகளெல்லாம் கார்வண்ணன் கணையால் கருதி இறக்க அதைக்கண்ட இராவணன் மீசைகள் துடிக்க அளவி றந்த அஸ்திரங்களைப் பொழிந்தான். ஸ்ரீராமர் கலகலவென் று நகைத்து அநேகபாணங்களைப் பிரயோகஞ்செய்தார். இரு திரத்தவரும் ஆக்கிரமத்துடன் பராக்கிரமத்தைக் காட்டி யுத் தஞ்செய்யும்போது இராவணனனவன் மறைந்துபோய் இற ந்தவர் பிழைக்குந் தன்மையை நாடி மாயமந்திரத்தை செபிக்க விபீஷணனறிந்து ஸ்ரீராமருடன் சொல்லக்கேட்டு ஞானஸ் திரத்தைப் பிரயோகஞ்செய்யவும் நெருப்பில் விழுந்த பஞ்சு போல மாயரூபங்கள் யாவுமடிந்து இராவணனுக்கு கோபம்

பிறந்து இராமருக்கெதிரில்வந்து மழு கொழு சக்கரம் முஷ்கரம் வேல் வாள்முதலிய திவ்வியாஸ்திரங்களையும் பலமாகிய ஆயுதங்களையும் வாரிவாரி ஆரியன்மீ திறைக்கவும் கோடிபாணங்களால் அவைகளைக் குறைக்கவும் இராவணன் தன்காலத்தைத்தானறிந்துகொண்டு ஒரு வேலையெடுத்து சந்தித்து ஓ மனிதர்களே நீங்கள்மடிந்தீர்கள் ஐயோபாவம் இந்தவிடமா உங்களுக்கு விதித்திருந்ததென்று விடுத்தான். அந்தவேலானது மகாமகிமையுடனேவருவதை ரகுநாதன்கண்டு க்ஞாவென்று,ஓங்காரமிட்டார். அந்தசப்தத்தினல் அந்தவேலானது பொடிப் பொடியாய்ப் போய்விட்டது. இப்படியனேகநேரம் போராடி பிறகுராமரானவர் இராவணனைநோக்கி அடா அரக்கனே, இப்பவும் நாஞெரஸ்திரம் விடுகிறேனென்று ஒரு பிர்மாஸ்திரத்தை யெடுத்து மந்திர வணக்கத்துடன் உந்திவிடவும், அந்தரத்தமர ரியாவருமகிழ்ந்து இராவணனுடைய பத்துத்தலைகளையும் அறுத்துத்தள்ள உடனே சிரங்கள் முளைக்கவும் மறுபடியு மறுத்துத்தள்ளி திரும்பி மூளைக்கவும் அப்போது ராமர் விபீஷணர் முகத்தைப் பார்த்தவுடனே அமுதம் உண்டவனென்று விளம்பி ராமரானவர் இராவணனுடைய நாபிஸ்தானம்நோக்கி பிரமாஸ்திரத்தை அன்புடன் விடுக்க உகாந்தகாலத்து உருத்திரனைப்போல் வந்து விழுந்து அமுர்த கலசத்தைமாற்றி சிரங்களைச்சிதைத்து தேவர் கொண்டாட பாற்சமுத்திரம்போய்ப் படிந்து அம்புறுத்தூணியில் வந்தடங்கியிருந்தது.

இராவணனிறந்து பூமியில்விழவே ஆகாயவீதியில் அமரர்யாவரும் அரம்பாஸ்திரீகளும் வேதவேதியர் மிகுந்த தவத்தோர்கள்யாவரும் புகழ்ந்து மலர்மாரிபொழிந்து வாழ்த்தி மங்களலாலிகூறி அடங்காமகிழ்ச்சிகொண்டு நாமிப்பொழுது சுகப்பட்டோமென்று இந்திரன் புளகமுற்று ராமரைத் துதித்தான். அனுமார் முதலிய வானரவீரர்கள் யாவருங் களித்தார்கள், விபீஷணன் முகம் தளர்வுடனிருக்கக்கண்டு தானுடாவிட்டாலும் தன்சதையாடுமென்னும் பழமொழி யுகத்தினில் வழங்கும் ஆனதால் நீர்போய் அடக்கஞ்செய்து வாருமென்று வானரச்சேனையுடனனுப்பித் தானுந் தம்பியுஞ் சுக்ரீவனைப்பார்த்து துன்பமுற இச்செய்தியை மண்டோதரி கேட்டு இராக்ஷதஸ்திரீகளுடன் யுத்தகளம்வந்து இராவணன்மேல் விழுந்தழுதுசோர விபீஷணன் அண்ணனுக்குச் செ

ய்யுஞ் சடங்குகளைச் செய்துவிட்டு அப்பாண்டரங்கன் அடியி ணைதொழுதான்.

விபீஷணருக்குப் பட்டங்கட்டுதல்.

ஸ்ரீராமர் இளையபெருமாளைப்பார்த்து தம்பி அந்தவிபீஷ ணனுக்கு இலங்கையைப் பட்டாபிஷேகஞ் செய்யென, அப் படியேசென்று மிகுந்திருந்த அரக்கர்களையும் வைத்துக்கொ ண்டு சம்பிரமத்துடனே இலங்கையை விபீஷணருக்குப் பட் டாபிஷேகஞ் செய்துவைக்க, அதைபெற்று மனமகிழ்ந்து ரா மருடைய மலரடியில்வணங்கி ஆசிபெற்றிருந்தார்.

சீதையம்மன் ஸ்ரீராமரிடம்வந்து சந்தேகம்தீர அக்கினியில் மூழ்கி வருதல்.

அந்தவேளையில் விபீஷணர் அனுமார் அங்கதன் சாம்பு வந்தர் முதலியபேரும் தாயாரிருக்கும் அசோகவனம் வந் துசெயங்கூறி சுபசோபனம்பாடி தாயார் பாதங்களை தங்கள் முடியாகச் சூடி இராமருடைய செயத்தைப் புகழ்ந்து சுவாமி யின் உத்திரவின்படி தரிசனத்திற் கெழுந்தருள வேண்டுமெ ன்று வணங்கிச் சொல்ல, அந்தச்சொல்லை சீதாதேவியார் தேவாமிர்தம்போற் கேட்டு அவ்விடம் விட்டெழுந்து திரி சடையுடனே இராமர் பாதங்களில் தெண்டனிட்டுச் சமீபத் தில் நிற்க, அதைக்கண்டு தேவதேவன் சீதையைப்பார்த்துச் சொல்லுகிறார். ஒரு அரக்கன் தொட்டெடுத்துப்போய்பத்து மாதஞ் சிறையில் வைக்கவும் பிராணனுடனிருந்து நம்மிட த்திற்கு நீ வரவும், நாமங்கீகரிக்கவும் உலகம் பழிக்கவும், என் னுடல் நடுங்கி இலச்சைப்படவும், இச்சைப்பட்டு யுத்தம் செய்து என்னை மீட்கவந்த நாங்களல்ல, எங்களையா ஜடாயு வைக் கொன்ற பழியை முடித்துக்கொள்ள வந்து வெற்றி கொண்டோமேயன்றி மறுவில்லாச் சூரியகுலத்திற்கு வடுவு தேடிக்கொள்ளவந்த நாங்களல்ல, ஆகையால் மாசற்றவ ளென்னும் வாகையைத் தெரிவித்தால் உன்னை ஒப்புக்கொள் ளலாகுமென்று சொல்லிய இறைவன் மொழியைக்கேட்டு பக் கத்திலொருவரு மொன்றுஞ் சொல்லாதிருப்பதைப் பார்த்து அம்மன் சொல்லுகிறாள். சுவாமீ! அரக்கன் வஞ்சித்தென் னை யபகரித்தான் அவனும் புத்திரமித்திர களத்திராதிகளு

டன் தேவரீருடைய பாணத்தாலிறந்தபிற்பாடு சரீரத்தைவிட்டுவிடுவது தருமம் ஆதலால் இப்போதவனிறக்கக் கண்டேன் இனிமேல் நான்பிறந்த குலத்திற்குப் பெருமை யுண்டாகும்படியாய் அக்கினி பிரவேசமாகிறேனென்று நமஸ்கரித்துத் திரும்பி அங்கதன் அனுமார் சுக்ரீவன் விபீஷணன் இவர்களைப் பார்த்து அருள்புரிந்து இளையபெருமாளைநோக்கி என் வினைவசத்தா லும்மை யிகழ்ந்து பேசினேன் அந்தக் குற்றத்தை மனதில் வைக்காமல் அக்கினிவிர்த்தி பண்ணிக் கொடுக்கவேண்டுமென்று கேட்க அண்ணனுடைய மனதறிந்த தம்பியானவர் ஒருநொடிப்பொழுதில் அக்கினியை வளர்க்கவும், வைதேகியார் அந்த அக்கினியைப் பிரதட்சணம் பண்ணி எனதுவாக்கினாலும் மனத்தினாலும் சகாயத்தினாலும் குற்றங்களுண்டாயிருக்குமாகில் என்சரீரத்தை கொளுத்தி சாம்பலாகக் கடவதென்று இரவிகுல புங்கவனை இருதயத்தில் சிந்தனை செய்து அன்னமானது செந்தாமரைத் தடாகத்தில் இறங்குந் தன்மைபோல் அக்கினியிற்பாய அக்கினிதேவன் குளிர்ந்து தாயாரைக்கரத்திலேந்தி ஸ்ரீராமமூர்த்தியை வணங்கி சுவாமீ! உலகத்திலுள்ள யாவற்றையுஞ் சுடுகின்ற என்னை இந்தக்கற்பின் சுவாலை சுடுகின்றது என்றுறைத்து வணங்க, மகாலட்சுமியைக் கண்டு இராமரும் இலட்சுமணரும் மனமகிழ்ந்து விசனப்பட்ட வானரவீரர் முதலியபேரும் புளகாங்கிதங் கொள்ள பிரமதேவன் முதலிய தேவர்களும் இருடிகளும் ஸ்ரீராமரைக்கண்டு அவர்களுடைய வீரப்பிரதாபங்களை வாழ்த்திப் புகழ்ந்து தாயாருடைய எண்ணமும் பதிவிரதா பக்தியையும் தெரிவித்து தசரத தரிசனமுஞ்செய்துவைத்து அயோத்தியாபுரிக்குப்போய் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சீதாலட்சுமண பரதசத்துருக்கர் அனுமத்சமேத ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியும் வாழக்கடவதென்று வாழ்த்தி உமக்குவேண்டிய வரங்களைக் கேட்டால் தருகிறோமென்று சொல்ல, அதைக்கேட்டு ஸ்ரீராமர்சொல்லுகிறார். உன்னுடன்வந்த எழுபத்திரண்டு வெள்ளம் வானரப்படைகளும் பதினெட்டுப் படைத்தலைவர்களும் யாதொரு குறைவில்லாமலிருக்க வேண்டுமென்றுகேட்க, அப்படியே அருள் புரிந்து தங்கள் தங்கள் இடம்போய்ச் சேர்ந்தார்கள். மாதலியும் திருத்தேரைக் கொண்டுபோனான் இப்பா லிராமர் ஜானகியைநோக்கி ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு உன்னுடைய பதிவிரதா தருமம் யாவருக்குந் தெரியும்படிச் செய்ததே

அல்லது வேறல்லவென்று சந்தோஷித்துத் தானும் படைவீரர்களும் அகமகிழ்ந்திருந்தார்கள்.

ஸ்ரீராமர் முதலியவர்களும் இலங்கையைவிட்டு பரத்துவாசர் ஆசிர்மம் வருதல்.

இப்படியிருக்க ஸ்ரீராமமூர்த்தியானவர் விபீஷணரைப்பார்த்துச் சொல்லுகிறார். நாம் அயோத்தியைவிட்டு வனம்வரும்போது என்தம்பி பரதனுக்குப் பதினலுவருஷங் கழித்து நசமியன்று வருகிறேனென்று சொல்லி நான் வந்தபடியால்நாம் சென்றவனைப் பார்க்கவேண்டியதென்று சொல்ல உடனே விபீஷணர் புஷ்பவிமானத்தைக் கொண்டுவந்துவைக்க அதில் யாவர்களு மேறிக்கொண்டு மந்திரத்தை ஜெபிக்க க்ஷணப்பொழுதி லிலங்கைப்பட்டண முழுமையுஞ்சுற்றிவர அப்போது ஸ்ரீராமர் சீதையம்மனுக்கு இலங்கையின் விநோதங்களைக் காண்பித்து திருவருணையைத்தாண்டி கிஷ்கிந்தைக்குவந்து தாரை முதலாகியவர்களை யழைத்துக்கொண்டு கம்பாநதி சடாயுவிறந்த இடம் அகஸ்தியர் ஆசிர்மம் பஞ்சவடி தீரம் யாவற்றையும் காண்பித்து பரத்துவாசர் ஆசிர்மத்திலிறங்கிப் போசனத்திற்கு ஒப்புக்கொண்டிருக்க, ஸ்ரீராமர் அனுமாரையனுப்பி குகப்பெருமானையும் பரத சத்துருக்கர்களையுங் கண்டு என்வருதலையுஞ் சொல்லி வரக்கடவையென் றனுப்பினர்.

அனுமார் பரதமகாராஜனுக்கு ஸ்ரீராமர் வருதலை யுரைத்தல்.

அப்போ தனுமாரானவர் ஸ்ரீராமஜெபமென் றந்தரத்திலெழும்பி கங்கைக்கரையில்வந் தோரிடத்தில் பந்துக்களுடனிருந்து இராமரைக்காணேமென்று கங்கையில் ஓடத்தைக் கவிழ்க்கப்போகிற குகப்பெருமானுக்கு இராமரிதோ பரத்துவாசர் ஆசிர்மத்தில் வந்தாரென்று சஞ்சீவி மருந்து உதயத்தைப்போல் குகப்பெருமானை நிலைநிறுத்திவிட்டு நந்திக்கிராமத்துக்கு வரும்போது கோசலை முதலிய தாய்மார்களும் பட்டிணத்து ஜனங்களெல்லோரும் விசனப்பட அக்கினியை வளர்த்தி பரதமகாராசன் மூன்ருவது சுற்றில்விழப் போகுஞ் சமயத்தில் வந்தான் இராமரென்று வானத்திலிருந்து மழை

போற்குதித்து அக்கினியை யவித்து அருள்மொழி கொடுத்து இராமர் அயோத்தி நீங்கி ஆரணியஞ் சேர்ந்து சூர்ப்பனகையை மூக்கு முலையை யறுத்து, கரதூஷணரைக் காய்ந்து, மாயமானைக் கொன்று, இராவணன் சீதையைக் கொண்டுபோனபின் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டந்தரித்து, வானர வெள்ளங்களுடன் கடலில் திருவணைக் கட்டி இலங்கையிற் சென்று இராவணன் முதல் யாவரையுங்கொன்று, சீதையம்மனுடன்பரத்துவாசருடைய ஆசிர்மத்தில் வந்திருக்கிறார். நான் இராமதூதன் என்பெயரனுமான் என்று விளம்பி யெழுந்து கிளம்பி ஆசிர்மத்திற்கு வந்து இராமருக் குரைத்து யாவருடனும் சமபந்தியிலிருந்து இராமருடைய பரிகலம்வாங்கிப் புசித்து பின்பு இராமர் இருஷிகள் முதலியபேர்களை நோக்கி உங்க ளாசீர்வசனத்தினாலும் இந்த அனுமாருடைய பேருதவியாலும் இராவணசம்மாரஞ் செய்தேனென்று புகழ்ந்து வாழ்த்த எல்லவரு மகிழ்ந்து ஆசீர்வதித்தார்கள். அன்றவ்விடத்திலிருந்து மறுநாட்காலமே புட்பகவிமானத்தி லேறிவருகையில் குகனையு மழைத்துக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணம்வந்து சனங்கள் குதூகலிக்க சேர்ந்தார்கள்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

பரதன் சத்துருக்கன் மந்திரிமார்கள் பட்டினத்துச் சனங்கள் ஜனகன்முதலியபேர்களும் கோசல கேகய தேசாதிபர்கள் முதலிய சகலதேசத்தரசர்களும்வந்து நெருங்கிவணங்க, விஷ்டாதிமுதலிய மகாமுனிவர்களுக்கும் தாய்மார்களுக்கும் தானும் தம்பியுஞ் சீதையும் வணங்கிச் சகல செய்திகளையும் சம்பிரமமாகப் பேசிக்கொண்டிருந்து எல்லோருக்கும்விடுதியமைத்தியாவருமிருக்க எழுபத்திரண்டு வெள்ளம் வானரச் சேனைகளும் படைத்தலைவர்களும் நிரைந்திருக்க எந்தலோகமும் இந்தலோகத்திற்கு ஈடில்லையென்று எவர்களும்புகழ ஸ்ரீமந்நாராயணனுடைய கர்ப்பம்போல நலம்பெற இருக்க, வசிஷ்டர் முதலிய மகாமுனிவரும் தாய்மார்முதலிய தம்பிமார்களும் மந்திரிமார்களும் மண்டலமுழுமையும் எண்டிசைப்பாலரும் அண்டரும்யாவரும் தொண்டர்கள்பலரும் கண்டுகளிக்க விண்முடிசூட்ட இன்றுநாள் நன்றெனக்கூறி வஷிஷ்டர் தம்பியரு

டனே சடைமுடிகளைந்து அம்புவியாள் அணிமுடிதரிக்க புண்ணிய தீர்த்தம் புநிதமாய் மூழ்கி மண்ணில் வேதியர் வாழ்த்தி அக்ஷதைகள் எண்ணிலாதளிக்க எவர்களுங் களிக்க மந்திர ஓமாக்கினி முதலியன வளர்த்தி சுந்தரன் றன்னைத்துலங்க அணிய சீதாசமேத ஸ்ரீராமரெழுந்து சிங்காசனத்தில் ஜெயமுடனிருக்க எங்கோன் வசிஷ்டர் எடுத்தணி முடியை தினந்தோறும் வாழ்க, சத்தியமாக மன்னுயிரெவையும் தன்னுயிர்போல் காத்திரட்சிக்கக் கடனுனக்கென்றே மங்களவோசை மழையென முழங்க, தருமந்தழைக்க, தானம் ஓங்க வரிசையாய் அரசர்வாரி யிரைகொடுக்க, மந்திரிமார்களும் மனுமுறை கூற, பகைவரின்றித் தொகையிலாச் செல்வம் நாளுக்குநாள் அபிவிர்த்தியாக பாலேயோதியாம் பாவை சானகியும் பரதசத்துருக்கர் இலட்சுமணருட னியாவருங் களிக்க அயோத்தியை ஆண்டனன் காயாம்பு மேனியன் களங்கரகிதன் இரவிகுலத்துங்கன் ஸ்ரீராமன் என்று இச்சரித்திரத்தை இயம்பினோர் கேட்டோர் நிச்சயமாக நினைந்துத் துதித்தோர் எழுதினோர் ஒருவருக்கின்பமாய்ச் சொன்னோர் யாவருங் களித்து இம்மைப்பயனை யடைந்து இன்பத்துடன் வாழ்ந்து மறுமையில் ஐயன் பதமடைந்து பேரின்பமடைவார்கள்.

உயுத்தகாண்டம் முற்றிற்று.

ஏழாவது,

உத்தரகாண்டம்.

காப்பு.

வெள்ளியங்கிரியையமீதே வேரொடுமெடுத்தவீரக்
கள்ளவன்புயநாலைந்துங் கனகமாமவுலிபத்தும்
துள்ளியம்புவிமேல்வீழ வொருகணைதொடுத்துவிட்ட
வள்ளலம்புயமேயன்ன மலரடிவணக்கஞ்செய்வாம்.

குபேரன்கதை.

பூலோகத்தில் சுவர்க்கலோகம்போல் விளங்கும் அயோத்தியாபுரி பட்டணத்தில் தேவேந்திரன் சபையைப் பார்க்கிலும் அதிக சிங்காரம் பொருந்திய கொலுமண்டபத்தி னடுவில் ஸ்ரீராமரானவர் ஸ்ரீமகாலட்சுமியாகிய சீதாதேவி சமேத

குபேரன்சபை.



ராவணன்கலியாணம்.



குபேரன்சபை.





இந்திரன் கட்டுப்படல்.



கார்த்தவீரியார்ச்சுனனிடம் ராவணன கட்டுப்படல்.



வாலிவாலில் ராவணன் கட்டுப்படல்.

ராய் சிங்காசனத்தின் மேவி வசிஷ்டர் முதலான மகாரிஷிகளு ம் தேவேந்திரன் முதலான சகலதேவர்களும் வேதப்பிராம ணர் முதலிய சகலரும் நிறைந்திருக்கவும், அங்க வங்க கலி ங்க காஸ்மீர மகத குகத மாளுவ சாளுவ மச்சர குச்சர கேகய கோசர காம்போஜ விதர்ப்ப பாண்டிய பாஞ்சால சிந்துசௌ ராஷ்டர கொங்கண நேபாள மராட கர்னுடக முதலான தேச ராஜாக்கள் வணங்கவும், பதினெட்டுவகை வாத்தியங்கள் முழங்க, இன்னம் அனேக சம்பிரமத்துடன் கொலுவாக வி ருக்குஞ் சமயத்தில், ஸ்ரீராமர் சமதக்கினிமுதலான மகாயோகி களைப்பார்த்து தேவரீருடைய ஆச்சிரமங்களும் யாகசாலை முதலானவைகளும் சுகமோவென்று கேட்டார். அப்படி கேட்ட இராமரைப்பார்த்து மகாசந்தோஷமடைந்து சொ ல்லத்தொடங்கினர்கள். கேட்பீர் ஏ! ராகவா சகல லோகங் களும் நசிக்கும்படியாய் மிக வுபத்திரவந்தன் துஷ்டன் கும் பனிகும்பன் அகம்பன் மகோதரன் மகாபாரிசுவன் தும்பி ராட்சதன் விருபாட்சதன் விருபாட்ச னதிகாயன் பிரகஸ்தன் கும்பகர்ணன் முதலானவர்களும் சேனுதிபதிகளும் இராட் சதசேனையும் மூலபலமும் தசக்கிரீவனும் யுத்தகளத்திலே மடிந்து வெற்றிபெற்று வாகைமாலைசூடிய கோதண்ட பாணி யாகிய தேவரீரும் இந்திரனை மாயாபாசத்தினுற் கட்டிச் சிறையில்வைத்து இந்திரசித்தை சங்கரித்து வெற்றிபெற்ற இலட்சுமணரு மிருக்க உங்களுக்கொரு குறையுண்டாகுமோ! வென்றுசொல்லி வாழ்த்தினர்கள். அவ்வண்ணஞ் சொல் லிய ரிஷிகளை நோக்கி இராகவர் சொல்லுகிறார், தசக்கிரீவ ன் கும்பகர்ணன் இந்திரசித்து முதலியவர்களுடைய உற்பத் தியும் அவர்கள்பெற்ற வரமும் இராட்சதர்களுடைய உற்ப த்தி காரணமும் நன்ருய்த் தெரிவிக்க வேண்டுமென்று கேட்க இருஷிகளெல்லாம் அகஸ்தியரைப் பார்த்து நீர் சொல்லு மென்று சொல்ல ஸ்ரீராமரைப் பார்த்து அகஸ்திய முனிவர் சொல்லத் தொடங்கினர்.

கேளும் ரகுநந்தன மகாவிஷ்ணுவினுடைய நாபிக் கம லத்திலே அவதரித்த சதுர்முகனுகிய பிரமதேவர்புத்திராகிய புலத்தியபிரமனுனவர் திரணபிந்துமகாரிஷியின்புத்திரியாகிய குணவதியை மணம்புரிந்து விச்சரவாவென்பவர் பாரத்து வாசர் புத்திரியாகிய தேவவள்ளியென்னும் கன்னிகையை விவாகஞ்செய்து வைச்சிரவணனென்னும் புத்திரனைப் பெற்

ரர் அப்புத்திரன் பதினாறு வயதுக்குள் சகல கலைக்கியானங்க ளும் ஓதியுணர்ந்து தபோவனத்திற் சென்று பிரமதேவரை நோக்கித் தபசுசெய்து திக்குப்பாலகருடன் தான் ஒரு திக்குப் பாலகனாகவும் நவநிதிக்கதிபதியாகவும் வரம்பெற்று நினைத்த இடங்களெங்கும் போய் மீண்டு வருவதற்குப் புஷ்பக விமா னமும் பெற்று வைச்சிரவணனாகிய குபேரன் பிதாவாகிய விச்சிர வாவினிடம் வந்து அவரா லிலங்கை சேர்ந்து சகல தேவர் கள் தன்னை வணங்கும்படியாய் செல்வச் சிறப்புடன் வாழ்ந் திருந்தான்.

அசுரர்கள் உற்பத்தி வரலாறு.

கேளும் ஸ்ரீராமரே பூர்வ மொருகாலத்தில் பிரமதேவரா னவர் பதினாலுலோகங்களையு முண்டாக்கி சகலஜீவகோடிகளை யும்படைத்து அதில் அறிவுள்ள பிராணிகளைப் பார்த்து இந் தலோகங்களை யிரட்சிப்பீர் என்று பொதுப்படச் சொன்னார். அதில் சில பிராணிகள் யக்ஷயம் என்று சொன்னார்கள். சில பிராணிகள் யட்சரட்சமென்று சொன்னார்கள். அவர்கள் சொ ல்லியபடியே யக்ஷயென்றவர் யட்சரர்களும் ரட்ச என்றவர் இராட்சதர்களுமாகக் கடவீரென்ன அந்த இராட்சதரில் எது என்றும் பரகெதியென்றும் அண்ணன் தம்பிகளிருவரில் பர கெதி யென்னப்பட்ட மூத்தவன் எனக்கொருவரும் நிகரில்லை யென்று சுமப்பாடுடையவனாக விருந்து யமனுடைய தங்கை யாகிய பயை என்பவளை விவாகஞ்செய்து வித்தியுற் கேசனெ ன்னும் புத்திரனைப்பெற்றான். அப்புத்திரன் சால கடங்கடை யென்னும் கந்தருவப்பெண்ணை மணம்புரிந்து தங்களுக்கிஷ் டமான விடங்களில் சுகமாக போகம் அனுபவிக்க அவள் ஒரு குழந்தையைப்பெற்று பிறந்தவிடத்திலே எறிந்துவிட்டு தன் கணவன் பின்னே தொடர்ந்துபோனாள். பரமசிவனும் பார் வதி தேவியாரும் உலாவிவரும்பொழுது பரமசிவன் அக்குழ ந்தையைப் பார்த்துக் கிருபைகூர்ந்து நிறைந்த ஆயுசும் யௌவன பருவமும் அழகும் பலமும் உண்டாகக் கடவதெ ன்று அநுக்கிரகஞ்செய்தார், பார்வதிதேவியாரும் உன் வமிச த்திலுண்டாகிய எல்லோருக்கும் உடனே பிள்ளையாகப் பிறக் கவும் அப்பிள்ளைக்கு பெற்ற தாய்க்குள்ள பருவமுண்டாக வேணுமென்று அருளிச் செய்தாள். அப்படியவர்கள் கொ டுத்த வரத்தினால் சகல சம்பத்தும் பொருந்திய ஒரு பெரிய

நகரத்திலே தேவேந்திர மகாராசனைப்போல சுதேசமென்னும் பெயர்வகித்து வீற்றிருந்து தெய்வத்திரை யென்னுங் கந்தருவப் பெண்ணைக் கலியாணஞ்செய்து அவள் வயிற்றில் மாலியவான் சுமாலி மாலியென்று மூவர்பிறந்து உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் ஏங்கிப்பயந்து நடுங்கும்படிக்கு நாளுக்குநாள் செழிப்பாய் வளர்த்து மகமேருவுக்கு வடபாரிசத்திலிருக்கும் தபோவனத்தைச்சார்ந்து அசுரர்முதலிய யாவரும் நடுக்கமுற, அப்போது பிரமதேவர் பிரசன்னமாகி தேவர்கள் அரசர்கள் முதலிய யாவரும் செயிக்கப்படாத பலமும் குறைவில்லாத ஆயுளும் சகல அஸ்திரங்களும் கொடுக்க அந்த வரங்களை இம்மூவரும்பெற்று தேவர்கள்முதலிய யாவரையும் இடுக்கண்செய்து விசுவகர்மாவை யழைத்து தேவலோகத்திற்கு மதிகமானதாய் நாங்களிருக்க ஒரு நகரமுண்டாக்கவேணுமென்று சொல்லி பூருவத்தில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானால் மகாமேரு சிகரங்களில் ஒன்றுமுறிபட்டு தெட்சண சமுத்திரத்தில் விழுந்திருந்த சிகரத்தின் மீதில் மாடமாளிகை கூடகோபுரங்கள் ஆஸ்தான மண்டபங்கள் புஷ்பதடாகங்கள் இன்னுமநேக விசித்திரமாக நிருமித்து இலங்காபுரியென்று பெயரிட்டார் விசுவகர்மாமுனிவர்.

மாலியவான் வரலாறு.

அந்த இலங்காபுரிபட்டணத்தில் மாலியவான் சுமாலிமாலியென்னப்பட்டவர்கள் மூன்று லோகத்திலுள்ள யாவர்களையும் தங்களுடைய ஆக்கினைப்பிரகாரம் ஏவல்கேட்டு நடக்கும்படி ராஜரீகஞ்செய்துக் கொண்டிருக்குங் காலத்தில் கந்தருவகுலத்திற்பிறந்த நருமதை என்பவளுடைய புத்ரிகள் மூவரில் மூத்தவளாகிய சுந்தரியென்பவளை மாலியவானும் அவளுக்கிளைய கன்னியை மாலியும் விவாகஞ் செய்துக்கொண்டு மகா சந்தோஷமடைந்திருக்க மாலியவானுக்கு வச்சிரமுஷ்டி விருபாட்சன் துன்முகன் பாபசித்தன் நியாயகோபன் மத்தன் உன்மத்தன் என்று எழுபேர் பிறந்தார்கள். சுமாலிக்கு கைகேசி பீநிசியென்று இரண்டுபெண் பிறந்தனர்கள். மாலிக்கு குரூரயுத்தன் நீலன் நிலயன் சம்பாதியென்று நான்குபேர் பிறந்தார்கள் இப்படியாகப் புத்திரர்களைப்பெற்றுதனக்கொருவரும் நிகரில்லாமல் தேவேந்திரன் முதலிய சகல தேவர்களையுந் துன்பப்படுத்தி குரூரதண்டமான அதிகாரஞ்செய்து வருங்

காலத்தில் மூன்றுலோகத்திலுள்ள இருடிகள் தேவர்கள்முத லியசகலரும் பரமசிவனிடம்சென்றுவணங்கி மாலியவான்முத லான ராட்சதர்களால் தாங்கள்படுந் துன்பங்களைச் சொல்லி முறையிட்டார்கள் அப்போது பரமசிவன் பார்த்து அவர்களு க்கு வரங்கொடுத்தது நாமாகையால் நாமேயழிப்பது தரும மல்ல ஆயினும் மகாவிஷ்ணுவினிடம் நீங்கள் போய்ச் சொ ன்னால் அந்த ராட்சதர்களை சங்கரிப்பாரென்று அனுக்கிரகஞ் செய்தார் அப்படியேபோய் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைக் கண்டு நமஸ்கரித்து சுவாமீ மாலியவான் சுமாலி மாலியென் னும் மூவரும் அவர்களுடைய புத்திர மித்திர வர்க்கங்களும் ராட்சதசேனைகளும் திரிலோகத்தையும் அதஞ்செய்து எங்க ளையும் அதிக வருத்தப் படுத்துகிறார்களென்று முறையமிட அதைக்கேட்டு நாமே அந்தத் துஷ்டராகிய ராட்சதர்களைச் சங்கரித்து ரட்சிக்கிறோமென்று சொல்ல, அவ்வனுக்கிரகம் பெற்றுத் தங்களிருப்பிடம்போய்ச்சேர்ந்தார்கள். அப்படியிரு க்க இவைகளையெல்லாம் உலகமெங்கும் சஞ்சரித்து சமாச்சா ரங்களை விசாரிக்கும் சாரணர்கள் கேள்விப்பட்டு சீக்கிரமாக இலங்கைக்குப்போய் தங்களுடைய அசுரராசனுக்குச் சொல்ல அவ்வசனத்தைக் கேட்டு மிகவுங் கோபங்கொண்டு அந்ததே வர்களை இக்கணமே அதஞ்செய்ய வேண்டுமென்று ரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையுங் கூட்டி யுத்த கோலமாய்வர அதைக்கண்டு தேவர்கள் அஞ்சி தேவதூத ஞல் நாராயணமூர்த்தியானவர் பஞ்சாயுதபாணியாய் கௌஸ் துவாபரணமுதலிய ஆபரணந்தரித்து கருடபகவான் தோளி லேறி யந்தராட்சத சேனைகளிற் புகுந்து அனேக யுத்தங்கள் புரிந்து கண்டதுண்டங்கள் செய்து சக்கரத்தைவிட்டு மாலி யென்பவனுடைய சிரசைக் கண்டிக்க அதை மாலியவான் சுமாலி இருவரும் பார்த்துப் பயந்து இலங்கைக்கு வோடிப் போய் மிச்சமிருந்த ராட்சத சேனைகளைக் கூட்டிக்கொண்டுபா தாளலோகத்திற்குப் போய் மறைந்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படியந்தப் பாதாளலோகத்திலே அநேககாலம் துன் பப்பட்டுக் கொண்டிருக்கும் நாளையில் ஒருநாள் சுமாலி மாலிய வான் இருவருங்கூடி நாமெத்தனைகாலம் இத் துன்பத்தி லிருப்போமென் றுலோசித்து மாலியவான் சொல்லுகிறான்: கேளாய்தம்பி நீபெற்ற கன்னிகளிருவரில் மூத்தப்பெண்ணை

வள் இந்த மூன்றுலோகத்திற்கும் ராசாக்களா யிருக்கத்தக்க புத்திரர்க்குத் தாயாவதற்கும் பிரமதேவனுக்குச் சமானமான ஒருபுருஷனுக்கு ஸ்திரீயாவதற்கும் காரணமாயுள்ள உத்தம லட்சணங்களைப் பொருந்தியிருக்கிறாள் ஆனதால் இந்தப்பெண்ணினாலே நாமும் சுகப்படலாம் குலமும்விர்த்தியாகும் இப்படி செய்வாயென்று தமயன் சொல்லியதை உண்மையாகக் கொண்டு அந்தயோசனைமுடியும் உபாயத்தைத் தேடினவனுகி தனது புத்திரியாகிய வைதேகியை யழைத்துக்கொண்டு பாதாளலோகத்தைவிட்டு பூலோகத்தில் சஞ்சரித்துவரும்பொழுது இலங்கைபட்டணத்தில் ராசரீகஞ் செய்துக்கொண்டிருக்கும் குபேரனுனவன் அனேக தேவர்களுடன் புஷ்பக விமானத்தில் கயிலாயகிரிக்குப்போனுர் அதைக் கண்டு சுமாலியானவன் பொருமைப்பட்டுகேளாயம்மா நாங்கள் மூவரும் சகல சப்பத்துடன் ராசரீகஞ் செய்துக்கொண்டிருந்த எங்கள் காணியாட்சியான இலங்கா பட்டணத்திலே இந்தக் குபேரனிருந்து ராசரீகம் பண்ணும்படியான காலம் நேரிட்டதே யென்று சொல்லிப் பின்னுமிந்தக் குபேரனுக்கு இவ்வளவு செல்வமுண்டானது இவன் பிதாவாகிய விச்சிரவா வென்பவருடைய மகிமையல்லது வேறில்லை ஆனதால் நீயும் அந்த விச்சிரவா வென்பவ ரிருக்குமிடத்திற்குப்போய் அவருன்னைக் கூடும்படிக்கு உபாயஞ்செய்து புத்திரரைப் பெறுவையேயானுல் அந்தப் புத்திரராலே நமக்கு பகைவராயுள்ள இந்தக் குபேரன் முதலான தேவர்களையும் வென்றும் நாமும் இலங்காபுரியில் வாழ்ந்திருக்கலாமென்று சொல்ல, அப்படியே செய்கிறேனென்று விச்சிரவாவென்பவர் சாயங்காலம் சந்தியாவந்தனஞ்செய்யுஞ் சமயத்தில் அவருக்கெதிரில் கண்டோர் மயங்க அதிதியைப்போல் அடுத்து கலசங்கள்போல் நெருங்கிய கொங்கைகளின்மேல் முக உத்தரீயத்தை அடிக்கடி விலக்கி மூடிகாட்டிமறைத்து புன்சிரிப்புடனே மயங்கிநின்றுள்.

விச்சிரவாவானவர் அவளைப் பார்த்து மோகங்கொண்டு நீயாரென்று கேட்க நான் அசுரேந்திரராகிய மாலியவான் தம்பி சுமாலியினுடைய புத்திரி, யென்பெயர் கைகேகி, நான் வந்த காரியம் தேவரீர் திருவுள்ளத்திற்கு தெரிந்திருக்குமென்று மிருதுவாகச் சொல்ல, அதைக்கேட்டுப் பின்னு மதிகக் கோபங்கொண்டு பெண்ணே! நீபுத்திரார்த்தமாக வந்தாய் வத்

தவேளை சந்தியாவந்தனமான மாலைப்பொழுதாகையால் நம் மோடுகூடிப் பெறுகின்றபுத்திரர்கள் மிகவுந் துஷ்டர்களாயிருப்பார்களென்றுசொல்லக் கைகேசியானவள் சுவாமி! உம்மைக்கூடிப்பெறுகிற புத்திரர்கள் துஷ்டர்களாகப் பிறக்கலாமோவென்று உபசரித்துச் சொல்லியதைக் கேட்டு சந்தோஷப்பட்டு எல்லாருக்கும் இளையவனாகப் பிறக்கிறவன் சற்புத்திரனாக விருப்பானென்று சொல்லி யப்பொழுதே அவளுடன் கூடியனுபவிக்குஞ் சமயத்தில் கருப்பமுண்டாகி பத்து தலைகளும் இருபதுகைகளுமுடைய தசக்கிரீவன் பிறந்தான். பின்னுமப்படியே அனுபவிக்கும்பொழுது முன்போல் கருப்பமுண்டாகி இருண்ட நீலகிரிபோலச் சரீரமும் நெருப்புப்போலச் சிகையும் அர்த்த சந்திரனைப்போல வச்ரதந்தங்களையுடைய கும்பகர்ணன் பிறந்தான். அதன்பின்பு பருத்தமுலையும் முறம்போன்ற நகமும் அனேக அவலட்சணங்களுடன் பொல்லாத பாவியாகிய சூர்ப்பனகை பிறந்தாள் பின்னரும் மனமகிழ்ந்து கூடிப் புணர்ந்தார்கள். அப்போது மூவருக்கு மிளையவனாய் நல்லகுணமுடையவனாய் கீர்த்திவானாய் புலஸ்தியருடைய குல முதலியவைகள் தழைத்தோங்கும்படியாய் விச்சிரவாவென்னப்பட்ட பிதாவைப்போல சற்புத்திரனான விபீஷணன் பிறந்தான் அதன்பின்பு தசக்கிரீவன் கும்பகர்ணன் இருவரும் பிதாவினிடத்திலே சகலவேத சாஸ்திரங்களுங்கற்று தனுர்வித்தைமுதலிய யாவற்றிலும் வல்லவர்களாய் மதோன்மத்தராய் அந்தப் பிரதேசத்திலுள்ள தபோதனர்களெல்லோரையும் உபத்திரவஞ் செய்துக்கொண் டிருந்னர். விபீஷணனானவன் பிதாவுக்கு மனமகிழும்படி பணிவிடைசெய்து அவரால் சகல சாஸ்திரசம்பன்னனாய் யோக்கியத்தோடு கூடியிருந்தனன். சூர்ப்பனகையானவள் அடங்காத காமவிகாரத்தையுடையவளாய் இருடிகள் முதலிய யாவரையும்பற்றியிழுத்து நடுங்கும்படி வலியப்புணர்ந்து இன்பமனுபவித்துக்கொண்டு திரிந்தனள். இப்படி யிருக்குங் காலத்தில் இவர்களைப்பெற்ற கைகேசியானவள் தன்பிதாவாகிய சுமாலியென்பவன் குபேரனைக்கண்டு அவன் சம்பத்துக்கு பொருமைகொண்டு புஷ்பகவிமானத்துக்கு ஆச்சரியப்பட்டுத் தனக்குப் போதித்த மனக்குரை தீரும்படிக்கு சமயம்பார்த்திருந்தவளாதலால் தன்னுடைய புத்திரராகிய தசக்ரீவன் முதல் மூவரைப்பார்த்து நீங்களொரு சிறப்புமில்லாமல் இந்தவனத்தி

லிப்படியிருக்க உங்களுக்குத் தாயாதியாகிய குபேரனானவன் நவநிதிச்செல்வமும் எல்லாச்சிறப்புமுடையவனாகியபரமசிவனுக்குத் தோழனுமாகிய உங்கள் பாட்டன்மார் அரசெய்திருக்க, இலங்கைமானகரத்திலே தேவர்களெல்லோரும் தன்னை வணங்கும்படி ராஜ்ஜியஞ்செய்துக்கொண் டிருக்கிறானல்லவா! இந்த அனியாயத்துக் கென்னசெய்வேனென்று துக்கப்பட்டு அதிககோப முண்டாகும்படி சொன்னாள் அந்த வசனங்களையெல்லாம் மூவருங் காதிற்கேட்டு மனங்கொதித்து உதடுமடித்துப் பல்லை நெறநெறவென்று கடித்து தாயே அந்தக்குபேரனுக்கு இத்தனை மேன்மைகள் உண்டா யிருப்பது அவன் செய்த தபோபலத்தினாலல்லவோ ஆகையால் நாங்களும் தவங்களைச்செய்து அவனிலுமேலான மேன்மைகளைப் படைத்து உன்மனக்குறை தீரும்படிச் செய்கிறோ மென்று அப்பொழுதே தாயாரிடத்தில் விடைபெற்று அந்த மூவரும் தபோவனத்திற்சேர்ந்து தவஞ்செய்யத் தொடங்கினார்கள்.

அவர்களில் கும்பகர்னனானவன் பிரமதேவரைநோக்கி பஞ்சாக்கினி மத்தியிலிருந்து ஆகாரம் நித்திரையில்லாமல் பதினாயிரம்வருடம் தபசுசெய்தான். விபீஷணனானவன் ஊசியைநிறுத்தி அதன்மேல் ஒருகாற்பெருவிரலை யூன்றி மற்றொருகாலைமடித்து இரண்டுகைகளையும் நீட்டிக்குவித்து ஐயர்முன்போல் ஐயாயிரவருடம் மடிந்திருந்தகாலை நீட்டியூன்றியகாலை மடித்து முன்போல ஐயாயிரவருடமும்ஆகபதினாயிரவருடந்தபசுசெய்தான் மூத்தோனாகிய தசக்ரீவனானவன் யாகசாலைநிருமித்து அக்கினியைமூட்டி வளர்த்திவந்த அக்கினியிலே ஆயிரம்வருடத்துக் கொருசிரசாக ஒன்பதினாயிரம்வருடத்தில் ஒன்பதுசிரசுகளையறிந்து ஆகுதிகொடுத்து பதினாயிரம்வருடத்தில் பத்தாவது சிரசையும் ஆகுதிகொடுக்க வாளினா லறியும்பொழுது அந்தட்சணமே பிரமதேவர் பிரசன்னமாகி உனக்கு வேண்டியவரங்களைக்கேள் தருகிறோமென்ன, தசக்ரீவன் பிரமதேவரை நோக்கி மானிடரை ஒரு பொருட்டாக எண்ணாமல் தேவர்கள் இராக்கத யக்ஷகின்னரர்கள் முதலா யுள்ளவரும் என்னுடைய ஆக்கினைப் பிரகாரம் ஏவல்கேட்டு நடக்கும்படிக்கு எல்லாவல்லமையு மெனக்கு உண்டாக வேணுமென்று கேட்க, அப்படியே கொடுத்தோமென் றனுக்கிரகஞ் செய்து பின்பு விபீஷணருக்குப் பிரசன்னமாகி உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயென்றுகூற, விபீஷணன்வணங்கிசுவாமி

பாபகிர்த்தியங்களென்னால் செய்யப்படாம லிருக்கும்படியாக வும் தேவர்கள் முதலானயாவராலுஞ் செயிக்கப்படாத வெற்றிமேன்மை பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று கேட்க, அப்படியே வரங்கொடுத்து பிரமதேவனவர் விபீஷணன் வரங்கேட்ட விவேகத்தைப்பார்த்து நீ யெப்போதுஞ் சிரஞ்சீவியா யிருப்பாயென்று அனுக்கிரகஞ்செய்ய, கும்பகர்ணனுக்கும் அனுக்கிரகஞ்செய்ய, வரும்போது தேவர்கள் முதலிய சகலரும் நடுங்கி பிரமதேவரை நோக்கி சுவாமீ உமக்கு நாங்கள்செய்த அபராதமென்ன இளங்கன்றை கொடும்புலிக்கிரையாய்க்கொடுப்பதுபோல் கண்டகனாகிய கும்பகர்ணனுக்கு வரங்கொடுத்து அவனால் எங்களை யழியச்செய்வதிலும் சிருஷ்டித்த நீரே கொல்வது மிகவும் நல்லதென்று முறையிட்டு வேண்டினார்கள். அதை பிரமதேவர்கண்டு அந்தக் கும்பகர்ணனால் உங்களுக்கு ஒரு துன்பமுமுண்டாகாதபடிக்குச் செய்கிறோமென் றனுக்கிரகித்து தமது தேவியாகிய சரஸ்வதியைப்பார்த்து நாம் கும்பகர்ணனுக்கு வரங்கொடுக்கும் பொழுது நீ அவனுடைய வாக்கிலிருந்து அவன் கேட்கும் வரம்பலியாமற் போகும்படி மாறுபடுத்தச் சொல்லிவிப்பாயென்றுகூறி கும்பகர்ணனுக்குப் பிரசன்னராகி உனக்குவேண்டிய வரமென்னகேள் தருகிறோமென்று சொல்ல அதற்கு கும்பகாணன் நித்திய தத்துவந் தரல்வேண்டுமென்று கேட்கிறவசனத்தை அவனாலறிந்த சரஸ்வதியம்மன் மாறுபடுத்தி நித்திரைதத்துவந் தந்தருள வேண்டுமென்று கேட்கச்செய்தாள். அவ்வண்ணமே வரங்கொடுத்து சத்தியலோகத்திற்குப்போனார். அப்பொழுதே கும்பகர்ணனுக்கு அறிவுமயங்கி சோகநித்திரை தோன்ற அதுகண்டு இப்படி மாறுபாடு செய்தவர்கள் தேவர்களேயல்லது வேறில்லை யென்று ஆலோசித்தவனாய் தமயனாகிய தசக்ரீவனிடத்திலும் தம்பியாகிய விபீஷணனிடத்திலும் புலம்பிப்பரிதாபப்பட அவனுக்குபலவித வுபாயங்களைக் காட்டி தேறுதலடையும்படிசொல்லி அவனுடன் மூவரும் பின்பு தாங்கள் வாசஞ்செய்திருந்த வனத்திற்சேர்ந்தார்கள்.

இராவணன் இலங்கையிற் சேருதல்.

இப்படியிருக்க தசக்ரீவன்முதலான மூவரும் தவஞ்செய்து பிரம்மதேவனிடத்தில் வரம்பெற்றிருக்கிற மேன்மைகளை

ல்லாந் தூதர்விசாரித்துவந்து பாதாளலோகத்தில்நெடுநாளா ய் துன்பப்பட்டுக்கொண் டொளித்திருக்கும் மாலியவான் சுமா லிமுதலிய இராட்சதர்களுடன் சொல்ல அவர்கள்கேட்டுமகா சந்தோஷத்தையடைந்து அந்த மூவரிருக்கும் வனத்திற்கு வந்து அவர்களைக்கண்டு உபசரித்து ஆதியோடந்தமாக தங்க ள் சம்பந்த விருத்தாந்தங்களைச் சொல்லி மனமகிழ்ந் திருந் தார்கள் அப்படியிருக்க சுமாலியானவன் தசக்ரீவனைப்பார்த்து ஐயனே மகாவிஷ்ணுவினலே இன்றையவரைக்கும் நாங்கள் படுந் துன்பங்களை அளவிட்டுச் சொல்லமுடியாது அன்றி யும் குபேரனுனவன் தம்முடைய இலங்காபட்டணத்தையா ண்டுவருகின்ருன். அந்தக்குபேரனையும் உன்னையும் பெற்ற பிதா ஒருவராகையாலும் அவனுனக்கு மூத்தவனுகையாலும் தானேயுடையவனென்றெண்ணி அந்த இலங்கா பட்டணத் தை உனக்குக் கொடுக்கமாட்டான் ஆகையால் எந்தவிதத்தி ஞலும் நீயந்த இலங்கைப்பட்டினத்தை உன்னுடையதாகச் செய்துகொள்ளாதவரையில் நீ தவஞ்செய்து பெற்ற வரத் திஞ லுண்டாகிய சவுரியங்களெல்லாம் அப்பிரயோசனமாய் விடும். நமக்குச் சத்துருக்களான தேவர்களும் மகிழ்ச்சி செய் யும்படியான அபகிர்த்தி யுண்டாமென்று அனேக துர்ப்போ தனைகளைச்சொல்ல அதைக்கேட்டு அப்பொழுதே பிரகஸ்த னைப்பார்த்து நீ தூதாகப்போய் என்னுடைய அபிப்பிராயத் தைச் சொல்லிவருவாயென்றனுப்ப அவனும் அவ்விலங் கைப்பட்டணத்திலிருக்கும் குபேரனிடந்திற்சென்று உன்னு டைய தம்பியாகிய தசக்ரீவன் தன்னுடைய பாட்டன்மார் முத லானேர் நெடுங்கால மரசுசெய்த இந்தப் பட்டணதுக்குடை யவனேயன்றி வேறெருவருண்டோ வென்று தன்னுடைய சிநேகம் வேண்டியிருக்குமாகில் இப்பொழுதே இந்த விலங் கையைவிட்டு அப்புறத்தே போகவேண்டு மென்றுஞ் சொ ன்னுனென்றுசொல்ல, அதுகேட்டு குபேரனுனவன் கால தேசவர்த்தமானங்கள் மூன்றையும் ஆலோசித்து இந்தப்பட் டணம் தசக்ரீவனுடையதே அவன் மனதின்படியே செய்கி றேனென்று அப்பொழுதே தன்னுடைய பரிவாரங்களோடு புட்பகவிமானத்தின் மீதேறி இயமகிரிசேர்ந்து தபசுசெய்து அவ்விடத்திலேயே வாசமாயிருந்தான் அதன்பின்பு தசக் ரீவன் தன்பாட்டனுகிய மாலியவான் முதலானவர்களுடன் இலங்கைப்பட்டணத்திற்பிரவேசித்து மந்திரி புரோகிதர்முத

லானவர்களினுல். பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு மகுடாதிபதியாய் சிங்காதனத்தின்மேவி இராசாதிகாரஞ் செய்துக் கொண்டிருந்தான்.

ராவணன் மணம்புரிதல்.

இப்படியிருக்குங் காலத்தில் தசக்ரீவனுனவன் பித்துச் சிங்கலனென்னும் இராட்சதனுக்குத் தனது தங்கையாகிய சூர்ப்பனகையை விவாகஞ்செய்துகொடுத்து அதன்பின்புதன் சேனைகளுடன் வேட்டையாட வனத்திற் செல்லுகையில் மயனைக்கண்டு, சிலவார்த்தைகளாடி அவன் குமாரத்தியான வண்டோதரியை விவாகஞ் செய்துகொண்டு அந்த மயனுல் கொடுக்கப்பட்ட வேலாயுதத்தைப்பெற்று வண்டோதரியுடன் தேரிலேறி சதுரங்கசேனைகள் புடைசூழ இலங்கையிற் பிரவேசித்திருந்தான். அதன்பின்பு கும்பகர்ணனுக்கு வச்சிரச்சுவாலையென்பவளையும் விபீஷணனுக்கு கந்தருவப் பெண்ணுகிய சுரசையென்பவளையும் விவாகஞ்செய்வித்து அவர்களும் மகிழ்ந்திருக்க தானும் வண்டோதரியும் சுகபோகமனுபவித்துக் கொண்டிருக்குங்காலத்தில் வண்டோதரி கருப்பவதியாகி மேகநாதனென்னும் பிள்ளையைப்பெற்ருள் அதன்பின்பு அநேக பிள்ளைகளும் அட்சயகுமாரனும் பிறந்தார்கள். கும்பகர்ணனுக்கு கும்பன் நிகும்பன் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில் கும்பகர்ணனுக்கு நித்திரைவந்து ஒருமண்டபத்திற்போய் படுத்து நெடுநாள் நித்திரைசெய்துக் கொண்டிருந்தனன்.

அளகாபுரியை அழித்தல்.

சுவர்ணம்போல்விளங்கும் இலங்கைபட்டணத்தில் தசக்ரீவனும் தம்பிமார் புத்திரமித்திரர்முதலான சம்பத்தினுலும், பிரமதேவர் கொடுத்தவரத்தின் செறுக்கினுலும், மதோன்மத்தராய் புண்ணியபாவத்தை இன்னதென்று சற்றேனும் எண்ணுமல் தேவர்கள் ரிஷிகள் எல்லோரையும் நிலைகெட்டோடத் துரத்தி தேவலோகத்தைக் கொள்ளைகொண்டு குரூரதண்டமான அதிகாரம்செய்து வருங்காலத்தில் அளகாபுரியி லிராநின்ற குபேரனுனவன் தசக்ரீவன்செய்கிற கொடுமைகளைக் கேட்டு ஒரு தூதனிடத்தில் சில நற்புத்திகளைச் சொல்லியனு

ப்பினுன். அந்த தூதன் தசக்ரீவனிடத்திற்சென்று குபேரன் சொல்லியனுப்பிய நற்புத்திகளைக்கூறினுன். அவனதைக்கேட்டு கண்கள் சிவந்து எவனே குபேரனும் பித்தனுகிய சித்தனுக்குத் தோழனும் அவன் தருமநியாயங்கள் சொல்லியனுப்பினுனென்று பயமில்லாமல் என் சபையில்வந்து சொல்லிய இவனுக்கு வெகுமதி இதுதானென்று கைவாளினுலே தூதன் தலையை வெட்டினுன் பின்பு தன்னுடைய சேனுதிபதிகள் முதலானவர்களைப்பார்த்து எனக்கு பயமுறுத்திச் சொல்லியனுப்பிய குபேரனுக் கெதிரில் நான்சென்று என்மனக்குறையை முடித்துப் பின்பு தவஞ்செய்து அதிக மேன்மையையும் பெறுவேனுதலால் நீங்கள் சேனைகளுடன் அளகாபுரிக்குப் புறப்படுங்களென்றுசொல்லி தானும் ரதமேறி சகல சைனியங்களுடன் அளகாபுரியை யடுத்து வளைத்துக்கொண்டான் அதுகண்டு பட்டணத்திலுள்ள காவலாளிகள் குபேரனிடத்திற்சொல்ல, அவன் கோபங்கொண்டு தனதுசேனைகளுடனே வந்து பிரபலமான யுத்தம்புரிந்து தசக்ரீவனுல் அடிபட்டு குபேரன் மூர்ச்சித்தான். அப்பொழுது தசக்ரீவன் வெற்றி பெற்றவனுய் அளகாபுரியைக் கொள்ளையிட்டு குபேரனுடைய புட்பகவிமானத்தைப் பற்றி சகலசைனியங்களுடன் அதின் மேலேறி அவ்விடம்விட்டு ஈசான்யதிசையில் கைலாயகிரியை நாடிச்சென்றுன்.

இராவணன் கைலேயங்கிரியைப்பேர்க்கப் பிரயாசைப்படல்.

மூன்றுலோகத்திலும் நிகரில்லாத ஐசுவரிய சம்பத்தும் விசயபராக்கிரமம் சௌரியங்களும் பொருந்திய தசக்ரீவன் குபேரனைச்செயித்தோம் இனிமேல் நமக்கு எதிரிகளொருவருமில்லையென்கிற கெர்வத்தையடைந்தவனுகி புட்பகவிமானத்தின் மீதேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லுமளவில் கைலாயகிரிக்குச் சமீபமாகவந்து தடைபட்டுநின்றது. அதுகண்டு தசக்ரீவன் இவ்விடத்தில் தடைபடவேண்டிய காரணமென்னவென்று ஆலோசிக்கும்போது நந்திகேசுவரர் அவ்விடத்தேதோன்றி தசக்ரீவனைப்பார்த்து இந்த கைலாயகிரியின் எல்லைக்குட்பட எவரும் வாகனமேறி போகக்கூடாது ஆகையால் நீ உன்னுடைய வாகனத்தைத் திருப்பிக்கொண்டு போ

மென்று சொல்ல, அவன் நந்திதேவரைப்பார்த்து ஓ! குரங்கே நீயாரடா சொல்லுகிறவனென்று சில நிந்தைமொழிகளைக்கூறினான், அதுகேட்டு நந்திதேவருக்குக் கோபம்வந்து அடா நீ என்னைக் குரங்கேஎன்று நிந்தைசெய்ததால் உன்னுடைய பட்டணத்தையும் குரங்குகளே நாசமாக்குமென்று சாபங்கொடுத்துப் போயினர்.

அதையொரு பொருட்டாய் எண்ணுமல் பேயனென்னமோ! பிதற்றிப்போனனென நினைத்து என்னுடைய விமானத்தைத் தடுத்த இந்தமலையை வேரோடேபிடுங்கி சின்னு பின்னப்படுத்துவேனென்று கோபத்துடனே நிலத்திற் குதித்து பாதாளத்திற் புகுந்து தன்னுடைய இருபது கைகளாலும் அடியோடே பெயர்க்கும் பொழுதில் அந்த மலையானது சற்றேயசைய அப்போது சிவகணங்கள் யாவரும் நடுக்கமுற உமையவளும்பயத்தினலே பரமசிவனைத்தழுவிக்கொண்டாள் அதைப் பார்த்துப் பரமசிவன் தம்முடைய திருவடியின்பெரிய விரல் நுனியையூன்றி சற்றே அமிழ்த்தினர் அந்தப் பாரத்தினல் கயிலைமலையானது கீழே அழுந்த தசக்ரீவன் சரீரமுழுதும் நெருக்குண்டு இருபதுகண்களும் அதிர தோள்களுநெரிய சற்று மசையவொட்டாமல் கதறிக்கொண்டு கிடக்கின்றதை நாரதர் பார்த்து ஓ தசக்கிரீவனே! பரமசிவனல் வரப்பட்ட துன்பம் அந்தசிவனலே தீர்க்கப்படுமல்லாமல் வேறொருவனல் தீர்க்கப்படாத இப்பொழுது உன்னுடைய செயலுக்குத் தக்கதாக பரமசிவனை நோக்கித் தோத்திரம் பண்ணுவையாகில் இந்தத் துன்பம் நீங்கிப் பிழைப்பாயென்று சொல்லிப் போனர். அவர் சொல்லியபடி மனவுறுதிகொண்டு தம்முடைய பத்துத்தலைகளி லொருதலையும், இருபது கைகளில் ஒரு கையுமறுத்து யாழாகப் பண்ணிக்கொண்டு மிகவும் அன்புடனே சாமகானம்பாடினன். அதை பரமசிவன்கேட்டு சந்தோஷப்பட்டு தசக்ரீவனை யழைத்து நீ இந்தப் பர்வதத்தின் கீழ் அகப்பட்டுக் கிடந்த காரணத்தினலே உனக்கு இன்று முதல் இராவணனென்னும் பெயருண்டாகக் கடவதென்று பெயர்கொடுத்து மூன்றறைகோடி ஆயுளும்ஒருவாளாயுதமுங் கொடுத்தார் இப்படி வரம்பெற்ற இராவணன் புட்பக விமானத்தின் மேலேறிக்கொண்டுவரும்போது மகாவிஷ்ணுவானவர் பிரமசந்நியாசி வேடங்கொண்டு இராவணனுக் கெதிரில் வர அவன்கண்டு விமானத்தினின்றும் கீழே குதித்துவந்து

வணங்கினன். அப்போது உன்னுடைய விர்த்தாந்தங்களைச் சொல்லென்றுவினவ அவன் அவரைப்பார்த்து தன்னுடைய பெருமையும் குபேரனைச் செயித்ததும் கயிலாயகிரியைப் பேர்த்ததும் விவரமாகச் சொல்ல, அதுகேட்டு நீ யெத்தனை காலமிருந்தாலும் உலகத்திற்கு அபராதமே யானதால் குறையாயிருக்கிற அரைகோடி ஆயுளும் பெற்றாயானால் எல்லாவுலகத்திலும் உன்னுடைய அதிகாரஞ் செல்லுமென்றுசொல்ல, அதைக்கேட்டு சீக்கிரமாகக் கைலாயகிரிக்குப்போய் சீவகாருண்யனாய் விளங்கப்படாநின்ற பரமசிவனை நோக்கித் தோத்திரஞ்செய்து வணக்கத்துடனிற்க, பரமசிவன் பின்னும் நீ வந்தகாரணமென்னவென்றுகேட்க, எனக்கு அரைகோடி ஆயுளும் கொடுக்கவேண்டுமென்று சொன்னான். பரமசிவன் கேட்டு இராவணா, நீ கேட்டபடியே உனக்கு அரைகோடி ஆயுளும் கொடுத்தோம் மேலும் நீ எந்த காலத்திலாவது அக்கிரமம் செய்வையேயானால் அக்காலத்தில் நாம்கொடுத்தவரமும் ஆயுளும் நம்மைச் சேரும்படி திருவாய்மலர்ந்தருளினார்.

வேதவதி வரலாறு.

தசக்ரீவனானவன் பரமசிவனிடத்தில்வாளாயுதமும் ஆயுளும் இராவணனென்னும் பெயரும் பெற்றவனாகித் தனது சேனைகளுடனே சகல தீவுகளிலுஞ் சஞ்சரிக்கு மளவில் ஒரு நாள் இமயவனமென்னும் ஆரணியத்திற்சேர்ந்தான். அவ்வனத்தில் ஒரு கன்னிகையானவள் தபசு செய்துக்கொண்டிருந்தாள். அக்கன்னிகையை இராவணன்கண்டு மோகங்கொண்டு நீயாரென்று கேட்க அவள் சொல்லுகிறாள். குசத்துவனென்று சொல்லப்பட்ட பிராமணனுடைய புத்திரி, அவரோதப்பட்ட வேதசொரூபத்தில் நான் பிறந்ததால் எனக்கு வேதவதியென்றுபெயர், எனதுபிதாவைசம்புவனென்னும்அசுரனானவன் வதைசெய்துபோனான். நான் மகாவிஷ்ணுவை நோக்கி தபசுசெய்கிறேன். என்று சொல்ல, அதை இராவணன்கேட்டு தன்னுடைய குலமுறைமைகளும் பராக்ரமமும் வரங்களைப்பெற்றதும் ஆதியோடந்தமாகச்சொல்லி என்னை விவாகஞ் செய்துக்கொள்ளென்று விஷ்ணுவை தூஷித்து வலிமையாகக் கையைப்பிடிக்கப்போனான். அப்போது அவள் மிகவும் கோபங்கொண்டு உன்னுடைய குலமும் செல்வமும்

நீயுங்கெடும்படிக்கு தானேபெண்ணுகப்பிறப்பேனென்று சாப மிட்டு அக்கினியில் வீழ்ந்திறந்துபோய் ஜனகமகாராஜாவின் யாகபூமியிற்பிறந்து சீதையென்று பெயர்வகித்து உமக்குப் பாரியாக வந்திருக்கிற இந்த சீதாலட்சுமியென்று அகஸ்திய முனிவர் சொல்லக்கேட்டு ஸ்ரீராமர் மகிழ்ந்து பின்னுமந்த இராவணனுடைய சரித்திரங்களைச் சொல்லவேணுமென்று கேட்க அகஸ்தியபகவான் சொல்லத்தொடங்கினுர்.

மருத்துவராஜன் வரலாறு.

கேளும் ஸ்ரீராமரே, இராவணனுனவன் வேதவதியிட்ட சாபத்தைப் பெற்றவனுய் புட்பகவிமானத்திலேறி அப்புறம் போம்பொழுதில் இமயகிரிக்குச் சமீபமான ஒரு வனத்தில் மருத்துவ மகாராஜனுனவன் சகலமானதேவர்கள் இருடிகள் கூட்டத்துடனே யாகஞ்செய்துக்கொண்டிருக்கிற கோஷ்டத் தைக்கேட்டு, இவ்வனத்தில் இப்படிப்பட்ட சத்தமேது இதையறியவேணுமென்று அவ்விடம்வந்தான். அவனைக் கண்டு தேவர்கள் இருடிகள் எல்லோரும்பயந்து இந்திரன் மயிலாகவும், எமன் காக்கையாகவும், வருணன் அன்னமாக வும், குபேரன் ஓந்தியாகவும், மற்றுமுள்ளவர் பற்பல ரூபங் களையெடுத்து ஒளித்தனர்கள். யாகசாலையில் மருத்துவராஜன் பிராணுயாகஞ் செய்துக்கொண்டிருந்தான். அவனை இராவ ணன்பார்த்து நீயுத்தத்திற்கு வருகின்றையா அல்லது தோற் றேனென்று சொல்லுகின்றையா என்னசொல்லுகிருயென் ருன் அப்போது மருத்துவராஜன் யுத்தஞ்செய்யத் தொடங் குமளவில் வதிஷ்டனுடன் யுத்தம்பண்ணி வெற்றிபெற்ருல் தானே சிலாக்கியம் இல்லாவிட்டாலில்லையேலாபம்யாகம்முடி யாமற்போனுல் குலத்துக்கு நாசம் வருமே என்றுசொல்ல, அதைக்கேட்டு முன்போலப் பிராணுயாகம் நிஷ்டைசெய்துக் கொண்டிருந்தான் அவனைப்பார்த்து இராவணன் இகழ்ந்து பேசினுன் பின்பு தேவர்கள் இருடிகளெல்லாரும் யாகசா லையைநோக்கி வரும்பொழுது இந்திரன் ஒருமயிலைப்பார்த்து என்னைப்போல் உடலெல்லாம்கண்களாகக்கடவதென்று வரங் கொடுத்தான் எமன் ஒரு காக்கையைப்பார்த்து பிதுர்தேவ தைகளுக்குப் பிரீதியுண்டாகும்படி மனிதருனக்குப் பலிகொ டுக்கக் கடவரென்றும் சகலபிராணிகளிலும் அதிகமான ஆயு ளுண்டாகக் கடவதென்று வரங்கொடுத்தான் குபேரன் ஓர்

ஒத்தியைப்பார்த்து பலபல நிறமான ரூபமெடுக்கவும் உடல் பச்சைநிறமாகவும் வரங்கொடுத்தான். அப்படி எல்லோரும் வந்து யாகத்தை நிறைவேற்றித் தங்களுடைய லோகத்தைச் சேர்ந்தார்கள். இராவணனும் தென்றிசை நோக்கிச் சஞ்சரித்துக்கொண்டுவந்தானென்று சொல்லிப் பின்னும் ஸ்ரீராமருக்கு அகஸ்தியர் சொல்லுகின்றார்.

அரண்ணியன் வரலாறு.

கேளும் இராகவா, அந்த இராவணன் தென்றிசையை நோக்கிவரும்போது அங்குள்ள சகல இராசாக்களையும் அழித்து இந்த அயோத்தியாபுரிபட்டணத்திலே உம்முடையகுலத்திலே தபோமகிமையும் கீர்த்தியும் பலமும் பொருந்தியிருக்கும் அரண்ணியராஜனைப்பார்த்து நீ எனக்குத் தோற்றேனென்று சொல்லுகின்றையா அல்லது யுத்தம்பண்ண வருகின்றனையாஎனத் திடீரென்று கேட்டான். அப்படியே யுத்தஞ்செய்வோமென்று இருதிறப்படைகளும் இவ்விருவரும் போர்புரியும்போது இராவணனனவன் தண்டாயுதத்தினலே அரண்ணியராஜனையடித்து மூர்ச்சையடையச்செய்து நீ எனக்கு தோற்றதற்குச் சந்தேகமில்லையென்று சிறித்து நிந்தையாக இகழ்ந்துபேசினன், அதைக்கேட்டு போர்க்களத்தில் முதுகு கொடுத்து ஓடினவனல்லவோ உனக்குத் தோற்றவ னெப்படியோடாமல் மூர்ச்சையடைந்த வேளையில் என்னை யிகழ்ந்து நிந்தித்தபடியினலே என்னுடைய குலத்திற்பிறக்கும் இராமருடைய பாணத்தினல் உன்னுடைய பத்துதலைகளுமறுபட்டு விழக்கடவதென்று மொழிந்து பொன்னுலகமுற்றனர். அந்தசாபத்தை எவ்வளவுமெண்ணமல் அவ்விடத்தில் நின்று நீங்கிவரும்போது எதிர்ப்பட்ட விராசாக்களையழித்த பெருமையினல் அகங்காரத்தை யடைந்தவனுக வருமளவில்அந்த இராவணனுக்கெதிராக நாரதமாமுனிவர்வந்து இராவணனைப்பார்த்து உம்முடைய சௌரிய வீரபராக்கிரமங்களிலே கோடியிலொருபங்குக்கும் நிகரில்லாத மனிதரைக் கொன்று வெற்றிகொண்டதனல் என்ன புகழுண்டாகும் பின்னை யெப்படியென்றல் கூற்றுவன் முதலானவர்களைவென்றல் அதனல் பெருமையுண்டாகுமென்று மித்திரபேதஞ்செய்து நாரதமுனிவர் போயினர். அந்த விராவணனும் அவ்விடமிருந்து ஆகாயமார்க்கமாக விமானத்தைச்செலுத்தி எமலோகத்

தைத் தேடிப்போனனென்று சொல்லிய பின்னும் ஸ்ரீராமர் கேட்க அகத்தியமுனிவர் சொல்லுவாராயினர்.

காலனை செயித்தல்.

கேளும் தசரதநந்தன நாரதமுனிவர் இராவணனிடத்தில் வந்து எமனிடத்தில் பகையுண்டாகும்படி செய்து சீக்கிரமாக எமனைக்கண்டு இராவணன் பிரமதேவரிடத்திலும் சிவனிடத்திலும் பெற்றவரத்தினல் குபேரனை ஜெயித்து பூலோகத்திலுள்ள அரசர்களையுமழித்துவெற்றிகொண்டோம். தேவலோகத்தில் எமனை ஜெயித்தோமானல் மற்ற தேவர்கள் தன்னை வணங்குவார்களென்றெண்ணி உம்மைத்தேடி வருகின்ருனும் அதையுமக்குச் சொல்லவந்தோமென்று சொல்லிப் போனர். அந்தச்சமயத்தில் இராவணன் தனது பரிவாரசேனைகளுடனே எமலோகத்திற் பிரவேசித்து வரும்பொழுது புண்ணியாத்மாக்கள் சுவர்க்கலோகவாசிகளாய் சுவர்ணமயமான மண்டபங்களிலே வீற்றிருக்கப்பார்த்து ஆச்சரியமடைந்து அப்புறம்போம்பொழுது மகாபாவிகள் கோர நரகங்களிலே நாவிலும் சரீரத்திலும் புழுக்கள்சொரிய நெடுங்காலமழுந்தி துன்பப்பட்டுக் கிடப்பதைப்பார்த்து நீங்களெல்லோரும் எமனுக்குப் பயப்படாமல் நரகத்தைவிட்டு கரையேறிப்போவீர்களென்று உத்தரவுசெய்தான் அவர்களுமதைவிட்டு நீங்கிப் போக அதுகண்டகாவலாளிகள் எதிர்த்துப்போர்புரிய இராவணன் அக்காவலாளிகளையழித்து அவ்விடத்தினின்றுமேற் சென்ருன். அதுகண்டு எமனுனவன் அளவில்லாத சேனைகளுடன் எதிர்த்து ஏழுநாளோயாமல் யுத்தஞ்செய்து கடைசியில் இராவணனைக் கொல்லும்படி தனதுகாலதண்டத்தை கையிலெடுத்தான் அது பிரமதேவர் கண்டு உலகமழிந்துபோமென்றெண்ணி எமனுக்கெதிராகச் சென்று அவனே தருமங்கெட்ட துஷ்டன் அன்றியும் பரமசிவனிடத்தில் அதிகவரங்களைப் பெற்றிருக்கின்ருன். ஆதலாலிவனை உம்முடைய தண்ட மொன்றுஞ் செய்யமாட்டாது தண்டத்தைப் பிரயோகம் பண்ணி அபசயப்படவேண்டாமென்று பிரமதேவர்சொல்ல அதைக்கேட்டு நன்மையென்று நினைத்து கையிலேஆயுதமெடாமல் நின்ருன். அதைக்கண்டு இராவணன் எமன் தோற்றுப்போனனென வெற்றிபேசிக்கொண்டு அப்புறஞ்சென்ருன்,

வருணனை வென்றது.

அந்த இராவணன் எமலோகத்தில் தருமராசனைச் செயித்து வெற்றிகொண்டவனாய் அவ்விடத்தினின்று நீங்கி பாதாளத்திற்கேகி நகரையெல்லாம் வென்று வசப்படுத்திக்கொண்டு அவ்விடத்தைவிட்டு மணிமதியென்று சொல்லும் பட்டணத்துக்குள் போகும்பொழுது அதில் வரப்பிரசாதம்பெற்று காலகேயர் நிவாதகவசர் முதலிய இராட்சதர்கண்டு நீயார் நில்லென்று தடுத்து ஒருவருக்கொருவர் யுத்தம்பண்ணி இரண்டுமாதம் போர்செய்துக் கொண்டிருந்தார்கள், அப்படி யிருக்க அவர்களிடத்திற்கு பிரமதேவர் வந்து நீங்கள் இருவரும் வரம்பெற்ற பராக்கிரமசாலிகள் ஆகையா லொருவருக்கொருவர் உறவுகொண்டிருக்கும்படி சமாதானப்படுத்தினர். அதன் பிற்பாடு இராவணனானவன் வருணனைச் செயிக்கவேண்டுமென்றெண்ணி வருணலோகத்தை நாடிச்செல்லும்போது இராவணனானவன் தனக்கு மைத்துனனாகிய வித்துச்சிஹுவனை காலகேயர்களால் கொல்லும்படிசெய்து பின்பு வருணலோகத்திற்குப் போம்போது காமதேனுவர அதற்கு உபகாரஞ்செய்தனுப்பிவிட்டு வருணனுடைய நூறுபிள்ளைகளுடனெதிர்த்து பிரசண்ட யுத்தஞ்செய்து முதுகு கொடுத்தோடும்படி யடித்து அதிக வருத்தத்தையடைந்து வருணலோகத்தைவிட் டிலங்கையை நாடிப்புறப்பட்டான். அப்படி வரும்போது கெந்தருவ கன்னிகளும் பிராமணக் கன்னிகளுமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரையும் பிடித்து புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொண்டுவர அவர்களைக் காக்கும்பொருட்டு வந்தவர்களையுங்கொன்று மிகவுஞ் சந்தோஷமாக இலங்காபட்டணம்வந்துசேர்ந்து அக்கன்னியர்களைச்சிறைசெய்தனன்.

ஜனஸ்தானமேற்படுத்தியது.

அக்கன்னியர்களெல்லாம் புலம்பி இப்பாவிக்குப் பெண் மூலமாகவே முடிவுவருகவெனச் சபித்தனர் அந்த இராவணன் இச்சாபத்தைமதியாமல் அந்தப்புரத்தில் நுழைகையில் சூர்ப்பனகை வயிற்றிலு மார்பிலு மறைந்துகொண்டு கோவெனக்கதறி அடாபாவி! என்னைக் கைம்பெண்ணாக்கினையே இதோ உன்காலின்கீழ் உயிரைவிடுகிறேனெனப்புலம்ப, அவ

வளையெடுத்து என் செல்வத்தங்காய், இது தெய்வச்செய
ல் நேர்ந்ததற்கு யாரென்னசெய்யலாம் விசனப்படாதே
ன்று தண்டகாரணியத்தில் ஜனஸ்தானமென வொருபட்
ணமுண்டாக்கி கரதூஷணர்முதலிய சேனைகளைக்கூட்டிஎன்
கோதரியே, இதோ உனக்குச் சகாயமாகக் கரன்முதலிய சே
களை நியமித்திருக்கின்றேன் அவர்களுடன் நீபோய்விரும்
படி செய்துக்கொண்டிருவென்று அனுப்பினன் அது
ட்டு வெரும்படையோடு கரனையுங்கூட்டிக்கொண்டு ஜனஸ்
னஞ்சேர்ந்து வனவாசிகளை இம்சைசெய்துக்கொண்டு உல்
சமாயிருந்தனள்.

இராவணனனவன் அளகாபுரி தெய்வலோகம் யமலோ
ம் வருணலோகம் என்று சொல்லப்பட்ட லோகங்களிற்போ
இலங்கைக்கு முன்னமே இராவணன் குமாரனாகிய மேகநா
னைவன் நிகும்பிலையென்று சொல்லப்பட்ட வனத்திற்போ
சுக்கிரபகவான் முன்னிலையாய் பரமசிவனைக்குறித்து ஆறு
கஞ்செய்து நிறைவேற்றி ஏழாவதுயாகஞ் செய்துக்கொண்
ருக்கும்போது இராவணன்வந்து குமாரனைக்கண்டு பரம
வனிடத்திலே பெற்றவரங்களைக்கேட்டு சந்தோஷத்துடன்
கத்தை நிறைவேற்றி குமாரனையழைத்துக்கொண் டிலங்கா
ரி வந்துசேர்ந்தான் சிலநாள் சென்றபின்பு ஒருநாள் இரா
ணன் காமவிகாரமேற்பட்டு முன்கொண்டுவந்து வைத்த
ன்னியர்களை அழைத்துவரச் சொல்லியதை விபீஷணரறி
து இராவணனிடத்திற்போய் சில நீதிகளைச் சொல்லி
ந்தப்படுத்தி இன்னமொரு குறைவான செய்திசொல்லக்
களுமண்ணு என்னவென்றால் நீர்பட்டணத்தைவிட்டுப்போ
பிற்பாடு மேகநாதன் யாகஞ்செய்துக்கொண் டிருந்தான் கும்
கர்னனனவன் நித்திரையிலிருந்தான். நான் ஜலத்திலே
பசுசெய்திருந்தேன் அந்தச்சமயத்தில் மதுவென்னப்பட்ட
சுரன் வந்து சேனைகளை யழித்து நமது சிறியதாயாராகிய
ம்பீநசியை வலிதிற் பற்றிக்கொண்டு தன்பட்டணம் போனு
னன்றுசொல்ல அவன்கேட்டு மனங்கொதித்து அவனை
ப்பொழுதே வதைக்கிறேனென கும்பகர்னன் முதலிய சகல
சனைகளையும் கூட்டிக்கொண்டு மதுவென்னப் பட்டவன்
த்திரையிலிருந்தான். அவன்பாரியாகிய கும்பீநசியானவள்
ராவணனுடைய காலில்விழுந்து அழுதாள் அவனும் சிறி
தாயையெடுத்து உபசரிக்க அவள் மங்கிலியப்பிச்சைகொடு

வென்று சில நீதிகளைச்சொல்ல, இராவணன் மனங்கசிந்து உன்னுடைய அபீஷ்டம் எனக்குஞ் சம்மதமே இனியொருவிகற்பமுமில்லையென்று மதுவென்பவனுடன் மனமகிழ்ந்துவிருந்துண்டு அன்றையதினம் அவ்விடத்தில் தங்கியிருந்தான்.

இராவணன் அரம்பை

நளகூபனிவர்களாற் சபிக்கப்பட்டது.

இராவணனனவன் மறுநாளுதயத்திலே மதுவென்பவன் தன்னுடைய சேனையுடனே வரும்படியாகப் புறப்பட்டுதேவலோகத்தை நாடிப்போக நடுவழியில் ஓர் வனத்தைக்கண்டு அதில் சகலசேனையோடு இறங்கித் தானொருவனாகப் புறப்பட்டு அந்தவனத்திலுள்ள சிங்காரங்களைப்பார்த்து வரும்போது அழகெல்லாந்திரண்டு ஒருவடிவமாகவிளங்கும் அதிரூபசௌந்திரியத்தையுடைய அரம்பையானவள் நள்கூபரனிடம் நாடிச்சென்றனள். அவளைக்கண்டு மோகங்கொண்டுபலாத்காரமாய் மேல்விழுந்து புணர்ந்து சுகம் அனுபவித்தான் அவள் மனங்கொதித்து அடா பாவியே நீ யென்னுடைய பதிவிரதா தருமத்தையழித்துப்போகிறுய் எந்தக்காலத்திலாவது பதிவிரதைகளா யிருக்கிற ஸ்திரீகளைத் தீண்டுவாயானல் அவர்கள் சாபத்தினலே இப்போதென் வயிறெரிகிறதுபோல நீ யெரிந்துபோவாயென்று சாபங்கொடுத்து அவனைத் தப்பிக்கடந்து தனது நாயகனுகிய நளகூபரனிடத்திற்சென்று நடந்த சங்கதிகளைச் சொல்ல அவர்கேட்டு பாவியான இராவணன் எக்காலத்திலாவது ஒருவருடைய ஸ்திரீயைத் தீண்டுவானுனல் அவனுடைய பத்துத்தலைகளும் ஏழு பிளவாக வெடிக்கக்கடவதென்று சாபங்கொடுத்தான், இராவணனனவன் அன்றிராத்திரி முழுதும் காமவிகாரத்தால் துன்பமுற்றிருந்தான்.

இந்திரன் கட்டுண்டல்.

இந்தப்பிரகாரம் அந்த வனத்திலே இராத்திரி முழுதும் மோகவிகாரத்தினல் நித்திரையின்றி துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற விராவணன் மறுநாளுதய காலத்திலே சிந்தைதெளிந்து சகல சேனைகளுடன் சுவர்க்கலோகத்தை நாடிப்போகும்பொழுதில் அந்தச்சேனையை தேவேந்திரனறிந்துபயந்து

வைகுண்டத்துக்குப்போய் விஷ்ணுவைக்கண்டு சுவாமி இராவணனனவன் வரத்தின் பலத்தினுல் பூலோகத்தைப் பாழாக்கி எங்களையுந் துன்பப்படுத்த தேவலோகத்தை நாடி சேனைகளுடன் வருகிருன் நாங்களென்ன செய்வோமென்று முறையிட மகாவிஷ்ணுகேட்டு நாமே அந்த இராவணன்முதலானவர்களைச் சங்கரித்து உங்களை யிரட்சிக்கிருேமென்று உத்தரவு கொடுத்தனுப்ப, தேவேந்திரன் நம்முடைய அமராவதி பட்டணத்திற்கு வருவதற்குமுன்னமே இராவணனுடைய சேனைகள் சுவர்க்கலோகமெங்கும் பரவி ஆரவாரித்திருக்கிற சப்தங்கேட்டு தேவர்களெல்லோருங்கூடி ராட்சதாளுடைய துன்பத்தினுல் உள்ள நாளளவும் உபத்திரவப்படுவமோ ஆனுலுமித்துடனே தேவர்களாவது அசுரர்களாவது செயிப்பது அல்லது இறப்பதென்று இரண்டிலொன்றை யின்றைக்கே யறியவேண்டுமென்று எல்லோருமொருமித்து வடவாமுகாக்கினிபோலக்கலந்து கொடியயுத்தம் செய்கையில் அந்த யுத்தத்தைப்பார்க்க பிரமதேவர் அவ்விடம் வந்தனர் அவர் மகிழும்படி தேவர்களெல்லோரும் அட்டகாசம்பண்ணி அஸ்திரங்களை பிரயோகித்து ராட்சதசேனைகளைக் கண்டதுண்டமாக்கும்போது சுமாலியானவர் பானுகோபன் முதலிய சேனுபதிகளுடன் நெருங்கி சூலம் வேல் முத்லிய ஆயுதங்களினுல் தேவர்களைச் சின்னபின்னப்படுத்த அதைச் சாவித்திரனென்னும் தேவசேனுபதியானவன் கண்டு மிக்க கோபங்கொண்டு சுமாலியைத்தடுத்து அனேக பாணங்களினுல் அவனுடையவில்தேர் முதலியவைகளை அதஞ்செய்து உடனே ஒரு தண்டாயுதத்தையெடுத்து சுழற்றியெறிய அந்தத்தண்டாயுதமானது சுமாலியினுடைய சிரசை நசுக்கிக்கொன்றது அதை மேகநாதன் கண்டு தேவசேனையைமடக்கி தும்சஞ்செய்யும்போது தேவேந்திரன் குமாரனுகிய சயிந்தவனனவ னெதிர்த்துக்கொண்டு மேகநாதனிவனே அவனேவென்று சந்தேகிக்கும்படி கொடுமையாகிய யுத்தம்செய்கையில் சயந்தன் சிலபாணங்களில் மேகநாதனுடைய சாரதி தலையை யறுத்துத்தள்ளினுன். சாரதிபோனதைக்கண்டு அனேக பாணங்களினுலே சயந்தனுடையமார்புமுழுதும் பாணத்தால் நிறைத்தான் அதனுல் சயந்தன் மூர்ச்சையடைந்தான் அதுகண்டு அவன் பாட்டனுகிய புலோமன் எதிர்த்து யுத்தஞ்செய்ய சயந்தன் மூர்ச்சையடைந்தசங்கதி தேவேந்திரன் கேட்டு மிகக் கோபங்கொண்டு மாத

லியை யிரதங்கொண்டு வரச்சொல்லி யுத்த சன்னுத்தனுய் சகலசம்பிரமத்துடனே தேரேறி யுத்தகளத்திற் பிரவேசிக்க மேகநாதன் கண்டு எதிர்த்து ஆகாயமெங்கும் பாணமயமாக நிறையும்படி சரவருஷம் பொழிந்து தேவர்களுடைய கண்ணிலுமனதிலும் தானுகவே காணும்படிக்கு வாயினுற் சொல்லி முடியாத கொடியயுத்தஞ்செய்யும் அளவில் கும்பகர்னனைவன் கண்கள் சிவந்து அண்டம் வெடிப்பட பூமிநடுங்க அதிசீக்கிரமாகச்சென்று போர்க்களத்திற்புகுந்து தண்டாயுதத்தினுலே அடித்து தேவர்களை நொறுக்கி மோதி சிதைத்துக்கொன்று இப்படி பலவிதமான யுத்தஞ்செய்தான் அதுகண்டு தேவர்கள் அஸ்திரங்களினுற் சாடினுர்கள், அப்போதிராவணன் பிரளயகால ருத்திரனைப்போலக் கோபங்கொண்டு அதிவேகமாகத் தேரைமுடுக்கி வில்லைவளைத்து நாணேறிட்டு நெருப்புமழை பெய்தாற்போல் பாணங்களைவருஷித்து சின்னபின்னமாய் வதைக்கும்போது தேவேந்திரன் பார்த்து மிகவுங் கோபங்கொண்டு சரமாரியாய் அஸ்திரங்களைப் பொழியும்போது இராவணன் சாரதியை யெச்சரித்து எதிரே நின்ற சேனையைப்பேதித்து உள்ளே போகும்பொழுது அதைக்கண்ட தேவேந்திரன் பிந்திப்போனுன் அப்பொழுது இராவணனுனவன் நூறுயோசனைதூரம் விஸ்தாரம் நிறைந்த தேவசேனையினுள்ளே தேரைமுடுக்கித் திரும்பி பாணங்களினுலேமடிக்கும்போது தேவேந்திரனுனவன் அநேக சேனைகளைக் கூட்டிக்கொண்டு பலம்பொருந்திய ஐராவதத்தின் மேலேறிக்கொண்டுவந்து இராட்சதசேனைகளைக் கண்டதுண்டமாக்கும்பொழுது மேகநாதன்கண்டு இவனை யுத்தஞ்செய்து வெல்லக்கூடாது வஞ்சனையினுலே வெல்லவேண்டுமென்றுகருதி உலகமெங்கும் யுகாந்தகாலத் திருள்மூடும்படி மாயைசெய்து மயங்கினுனப்போது தேவேந்திரன்முதல் சகலரும் சிந்தைகலங்கி மயங்கிநின்ருர்கள். அதுகண்டு மேகநாதன் பாசத்தினுலே தேவேந்திரனைக்கட்டி இராவணனுக்கு எதிர்கொண்டுபோய் நிறுத்தி இந்ததேவேந்திரன் என்கையிலகப்பட்டான் இனிமேல் நமக்கொருபகையுமில்லை யென்றுசொல்ல அதுகேட்டு ராவணன் மிகச்சந்தோஷமாகி மகனைத்தழுவி உபசரித்துத் தானும் மேகநாதனுங் கட்டுப்பட்ட இந்திரனும் கும்பகர்னனும் சகலசைனியங்களும் சுவர்க்கலோகம்விட்டு இலங்கைப் பட்டணத்திற் பிரவேசித்து தேவேந்திரனைச் சிறையில்வை

த்து மிகவுஞ் சந்தோஷத்தையடைந்திருந்தான் அப்படியிருக்க தேவர்களெல்லோரும் பிரமதேவரிடஞ்சென்று முறையிட்டார்கள் அதுகேட்டு தேவர்களையும் அழைத்துக்கொண்டிலங்காபுரிக்குவந் திராவணனைக்கண்டு ஆசீர்வாதஞ்செய்து ராவணனைப்பார்த்து கேளும் தசக்ரீவனே உமக்குச் சமானமானவர் திரிலோகங்களிலுமில்லை உம்முடைய புத்திரனானவன் திரிலோகாதிபதியாகிய இந்திரனைசெயித்து சிறையில்வைத்தான் இக்காரணத்தினாலே மேகநாதனுக்கு இன்றுமுதல் இந்திரசித்தென்று பெயர் விளங்கக்கடவதென்றுசொல்லி இந்திரனை சிறைவிட்டனுப்பும்படி தயைசெய்யவேணுமென்றார். அதற்கு இராவணன் சுவாமி தேவரீர் கட்டளையை யாங்கள் மறுப்பதில்லை ஆயினும் நித்தியதத்துவத்தை எனக்குக் கொடுத்தீரேயாகில் நீர்சொல்லியபடி நான்விடுவேனென்றான் அதை பிரமதேவர்கேட்டு ஈஸ்வரனைத்தவிர மற்றெவருக்கும் நித்தியதத்துவங்கிடையாது நம்மாலேகொடுக்கப்படாதவரத்தைக்கேட்கிறது தருமமல்லவென்று சொன்னார். அப்போது இந்திரசித்தனானவன் பிரமதேவரைப்பார்த்து நான் இனிமேற்செய்யும் யாகத்திலுண்டாகும்பலன் இரதத்தின்மீதேறி யுத்தகளம்புகுவேனாகில் செயம்பெறும்படியாக வரங்கொடுமென்றுகேட்க, அப்படியே அந்தயாகம் இடையூறின்றி முடியுமானால் நீ சத்துருக்களை செயிக்கக்கடவதென்று அனுக்கிரகஞ்செய்தார் இந்திரசித்தனானவன் மிகவுஞ் சந்தோஷத்தையடைந்து சிறையிலிருக்கும் இந்திரனைவரவழைத்து பிரமதேவருக் கெதிரில் விட்டான். அப்போது பிரமதேவர் இந்திரனைநோக்கி கேளாய் தேவராசனே முன்பு கௌதமர் கொடுத்த சாபத்தினாலே இப்படிப்பட்ட துன்பம் நேரிட்டது ஆனதால் விசனப்படவேண்டாமென்று தேவேந்திரனுக்குச் சொல்லி இராவணனிடத்தில் உத்தரவுபெற்று தேவர்களுடன் தேவேந்திரனை சுவர்க்கலோகத்தில் போயிருக்கும்படி யனுப்பி அந்தப் பிரமதேவர் தம்முடைய சத்தியலோகத்திற்குப் போனார்.

கார்த்தவீரியார்ச்சுனனால் இராவணன் கட்டுண்டல்.

இந்தப் பிரகாரம் அகஸ்திய மாமுனிவர் ராவணனுடைய திக்குவிஜயங்களெல்லாம்சொல்லக்கேட்டு ஸ்ரீராமர்மிகு

ந்த ஆச்சரியப்பட்டு அகஸ்தியரைப்பார்த்து அந்த ராவண னாலே அனேக ராசாக்கள் அழிந்துபோனாரென்றும் இந்திரன் கட்டுப்பட்டானென்றும் சொன்னீரே இந்த உலகத்திலே ராவணனுக்கு மேலானவ ரொருவருமில்லையோ அவன் ஒருவராலே அபஜயப்பட்ட தில்லையோவென்றுகேட்க, அகஸ்தியர் ஸ்ரீராமரைப்பார்த்து சொல்லுகிறார் கேளும் ராகவா இந்தஉலகமெல்லாம் தனது ஆக்கினைப்பிரகாரம் நடக்கும்படி அரசுசெலுத்திய கார்த்தவீரியார்ச்சுனனிடத்திலும் வாலியினிடத்திலும் இராவணன் கட்டுப்பட்டானென்று சொல்ல, பின்னும் அதிசயத்தை யடைந்தவராய் ராவணன் கட்டுப்பட்டவிதங்களை விவரித்து சொல்லுமென்றுகேட்க அகஸ்திய பகவான் சொல்லுகிறார். கேளும் ரகுநந்தனா முன்ன மொரு காலம் ஆயிரந் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனனென்னப்பட்டவன் உலகத்தில் யாவரையும் வெற்றிக்கொண்டு லங்காபட்டணத்தைச்சார்ந்து ராவணனென்பவனை யுத்தத்திற்கு வரச்சொல்லுங்க ளென்றுசொல்லி ராவணனுடைய மந்திரிகள் கேட்டு நதிதீரத்துக்குப் போயிருக்கிறாரென்று சொல்ல அதுகேட்டு ராவணனைத் தேடிக்கொண்டு வரும்வழியில்விந்தியபருவதத்தைக்கண்டு அவ்விடத்திலிருந்தான் அவனுக்கு முன்போன ராவணனும் அந்தப் பருவதத்தின் பக்கத்திற் செல்லும் நருமதையைக்கண்டு தீர்த்தமாடி மணலாலே சிவலிங்கம் வகுத்து பூசைசெய்திருக்குமளவில் அந்தநதிக்கு மேலாக நெடுந்தூரத்தில் கார்த்தவீரியார்ச்சுனன் அனேக ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடைசெய்ய தன்னுடையகைகளினால் அந்த நதியை யணையாகக்கட்ட அதனால் ஜலம்பெருக அந்த ஜலமானதுதேங்கி புரண்டு கரைகளையுடைத்து ஓடுகின்ற வெள்ளமானது ராவணன் பூசையை யழித்துப்போக அதுகண்டு வெகுண்டு சுகசாரணரையழைத்து வெள்ளம் வரவேண்டிய காரணமென்ன அறிந்து வாருங்களென்றனுப்ப அவர்கள் ஆக்கினைப்படிபோய் கண்டுவந்து ராவணனை நோக்கி கார்த்தவீரியனால்வந்தவெள்ளமென்று சொல்லக்கேட்டு கடுங்கோபங்கொண்டு மந்திரிமார்களுடன் அதிவேகமாய்ச்சென்று யுத்தத்திற்கழைத் தவனுடைய மந்திரிமார்கள் முதலிய சேனைகளை தும்சப்படுத்தும்போது இதைக் கார்த்தவீரியன்கேட்டு கடுங்கோபங்கொண்டு எதிர்த்து இராவணனுடைய சகல சேனைகளையும் சின்னபின்னப்படுத்தி ராவணனுடனெதிர்த்துப் போர்

புரியும்போது ராவணனனவன் ஒருகதையெடுத்து தன்பல முழுதுங்கொண்டு கார்த்தவீரியன் மார்பிலடித்தான். அதற்கு எள்ளளவும் சலியாமல் நகைத்து அடா ராவணா என்பலத்தைப்பாரென்று கதையினல் ஓரடியடித்தான் அந்த அடிபொறுக்காமல் இடிவிழுந்த நாகம்போல் செயலழிந்து நின்ருன் அதைக் கார்த்தவீரியன்கண்டு ராவணனைத் தோளோடுதோள் சேர்த்திறுக்கிக்கட்டி நடத்திக்கொண்டு போகும்பொழுது பின்னுமெதிர்த்த மகோதரன் முதலிய சேனைகளைத் துரத்தியடித்து தன்னுடைய பட்டணம்போய் ராவணனைச் சிறையில் வைத்து சந்தோஷத்தை யடைந்திருந்தான் இச்செய்தியை விபீஷணன்கேட்டு விசனமடைந்து தன் பாட்டனராகிய புலஸ்தியரிடத்திற்சென்று சகலமுந் தெரிவிக்க அவர் உடனே புறப்பட்டு கார்த்தவீரியார்ச்சுனன் பட்டணம் வந்து அரசனை ஆசீர்வதித்துச்சொல்லுகிருர். இராவணன் நெடுங்காலம் தபசுசெய்து பெற்றபலத்தினல் இந்திரனைச் செயித்ததனலிருமாப்புற்று உம்மிடத்தில் அகப்பட்டுக்கொண்டான் உமக்கு னிகரானவர் ஒருவருண்டோ ஆகையால் ராவணன்மேல் வைத்த கோபத்தை நீக்கி சிறைவிடும்படி தயைசெய்யவேணுமென்றுசொல்ல புலஸ்தியரும் பிரமலோகம்போனர் இராவணன் லங்காபுரிபட்டணஞ் சேர்ந்தான்.

வாலியின் வாலில் இராவணன் கண்டுண்டல்.

இந்தப்பிரகாரம் அகஸ்தியர்சொல்ல இராமர்கேட்டு சந்தோஷப்பட்டு வாலியினிடத்திலுங் கட்டுப்பட்டதை சொல்லவேணுமென்றுகேட்க அகஸ்தியர் சொல்லுகிருர் கேளும் சீதாலட்சுமிநாயகா அந்த ராவணன் கார்த்தவீரியனிடத்தில் முன்பு தான்பட்டபாட்டை எல்லாமறந்து அகங்காரத்தையடைந்து சகலசேனைகளுடன் புறப்பட்டு உலகத்திலெதிர்ப்பட்ட யாவையும் நாசமாக்கிக்கொண்டு கிஷ்கிந்தா பட்டணத்துக்குப்போய் வாலியென்னப்பட்டவன் எவன் அவனெங்கே போயிருக்கிருனென்றுகேட்டான். அதற்கு வாலியினுடைய மனைவியான தாரையானவள் இராவணனைப்பார்த்து நீவாலியைத்தேடுகிற காரணமென்னவென்றுகேட்டாள். நான் வாலியுடன் யுத்தம்பண்ணவந்தேனென்ருன் அதற்கவள் கேளாய் இராவணா நீ வாலியுடன் யுத்தஞ்செய்ய வலியுடையவனே முன்பு உன்னைப்போல அறிவில்லாமல் வந்து யுத்தம்பண்ணி

யிறந்துபோன துந்துபி முதலானவர்களுடைய எலும்பு
குவிந்துகிடக்கிற இந்த மலையைப்பார்த்ததில்லையோ ஆகை
யால் நீ போர்செய்ய நினைப்பாயாகில் உன்னுடைய எலும்பு
இம்மலையிற் குப்பையாய்ச்சேருகிறது நிச்சயந்தான். அப்படி
யல்லவென்றால் வாலியானவர் தென்சமூத்திரத்தீவுக்குப் போ
யிருக்கிறார் அவ்விடத்திற்குப்போனால் காண்பாயென்று சொ
ன்னாள். அப்படியே இராவணன் தன்னுடைய மந்திரிமார்
கள் முதலானவருடனே அவ்விடத்தில் நின்று நீங்கிப் புறப்
பட்டு தெற்கு சமூத்திரத்தீவுசேர்ந்தான். அப்பொழுது அங்
கேழுன்னம் ஒருகாலம் முப்பத்துமுக்கோடி தேவர்களும் ஒரு
பக்கமும் தானொருபக்கமாக நின்று திருப்பாற்கடலைக் கடைந்
துதேவர்களுக்கு அமிர்தங்கொடுத்த பராக்கிரமம் பொருந்திய
வாலியானவன் சிவபூசை முகத்திலே கண்மூடிக்கொண்டு தே
வத்தியானம் பண்ணிக்கொண்டிருக்கிற வாலியைக்கண்டு எளி
திற் பிடித்துக்கொள்ளலாமெனக்கருதி யடியோசைப்படாது
மெதுவாக நடந்துவர இதைக் கீழ்க்கண்ணாற்கண்ட வாலி
யானவன் கண்டுங் காணாதவன்போலிருந்தான் அந்தச் சமய
த்தில் இராவணன் வாலிக்குப் பின்னேவந்து ஒரேபாய்ச்சலா
கப்பாய்ந்து இருபதுகைகளினாலும் கட்டிப்பிடித்தான் அப்ப
டிப்பிடித்த இராவணனைவாலியானவன் ஒருகையினாலேபற்றி
கக்கத்துக்குள் இடுக்கி நெருக்கி தன்னுடைய வால்நுனியிலே
ஒரு மணியாகக் கட்டிவிட்டு சிவபூசை குறைவில்லாமற் செய்
து அந்த வாலியானவன் ஒரேபாய்ச்சலாக முப்பத்துமூவா
யிரம் யோசனைதூரங்கடந்து மேற்கடற்றீவுக்குப்போய் அவ்
விடத்தில் சிவபூசைமுடித்து அங்கிருக்கும் வடக்குக்கடல்
முதல் கிழக்குக்கடல்வரைக்கும் பாய்ந்து அங்கங்கு சிவார்ச்ச
னைசெய்து பின்னுமொரு பாய்ச்சலாகப்பாய்ந்து கிஷ்கிந்தா
பட்டணம் வந்துசேர்ந்தான் அப்போது அவன் பாரியாளா
கிய தாரையானவள் வாலியைப்பார்த்து உம்முடைய வாலிலே
கட்டுப்பட்டு சரீரமுழுவதும் நொறுங்கி மிகவுந் துன்பந்
துடனே பயந்துகிடக்கும் இவன் எவனென்று கேட்டாள் அ
தற்கு அவளைப்பார்த்து இன்றைக்கு பத்துத்தலைப்பூச்சி யக
ப்பட்டது இதை நீ பார்க்கும்படி கொண்டுவந்தேனென்று
சொல்ல, அவள் உமது வல்லமைக்கு இவனொருலட்சியமோ
ஆனதால் தயவுசெய்து விடவேணுமென்று வேண்டிக்கொ
ண்டாள், அப்படியேசெய்கிறேனென்று கட்டவிழ்த்துவிட்டு

இராவணனைப்பார்த்து யுத்தம்பண்ண இச்சையுண்டானால் இப்போதே செய்யென்று சொல்ல இராவணன் வாலியைப் பார்த்து நான் உம்முடன் யுத்தம்பண்ணத்தக்கவனல்லன் நீர் என்னை வேறுபாடாக நினையாமல் சிநேகிதனாகக் கொள்ள வேண்டுமென்று தாழ்ந்துசொல்ல, அப்படியே சம்மதித்து தன்னுடைய கிருகத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் போசனஞ்செய்வித்து நீ எனக்கு முதன்மையான தோழன் என்று சொல்லி யனுப்பிவிக்க இராவணனும் வாலியினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு தன்னுடைய இலங்கா பட்டணம்வந்து சேர்ந்திருந்தான்.

அநுமார் வரலாறு.

இந்தப்பிரகாரம் வாலியினுடைய பல பராக்கிரம முதலான மேன்மைகளையும் இராவணனுடைய உற்பத்தி முதற்கொண்டு வாலியினுடைய வாலிலே கட்டுப்பட்டதுவரைக்கு முள்ள சரித்திரங்களையெல்லாஞ் சொல்லக்கேட்டுஸ்ரீராமர்மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தவராய் அகஸ்திய பகவானைநோக்கி முன்புதான் வனவாசஞ்செய்து வரும்போது சுக்ரீவனுக்கும் எனக்கும் சிநேகஞ்செய்வித்து பெரிதான சமுத்திரத்தைத் தாண்டியும், அப்பொழுது எதிர்ப்பட்ட சாயாக்கிரகணியுடைய குடலைப்பிடுங்கி அவளைவதைத்தும், அசோகவனத்தை அழித்தும், சம்புமாலி முதலானவர்களைச் சிதைத்தும் இலங்காபுரி பட்டணத்தைக் கொளுத்தியும், சீதையினுடைய பிராணனை இரட்சித்தும், பின்பு எனது இடத்திற்குவந்து என்னுடைய சோகத்தை தீர்த்தும், சமுத்திரத்திலே சுலபமாக அணை கட்டிவித்தும், பிரம்மாஸ்திரத்தினாலே கட்டுப்பட்டு மூர்ச்சை யடைந்திருக்கும் பொழுதில் வடக்கே வெகுதூரத்தி லிருந்து சஞ்சீவிமலையைப் பேர்த்தெடுத்துவந்து சகலரையு மிரட்சித்தும் இன்னம் அனேகவித காரியங்களாலே எனக் குபகாரஞ் செய்தவனாய் தான் நினைத்தபடிக்கு ரூபங்கொள்ளத்தக்க சித்திவல்லமை முதலாயுள்ள சிலாக்கியகுணமெல்லாம் பெற்று விளங்கும் இந்த அநுமானுடைய உற்பத்தியும் சரித்திரமும் விபரமாகச் சொல்லவேணுமென்று கேட்க அகஸ்தியபகவான் சொல்லுகின்றார்.

கேளும் தசரதநந்தனா, முன்னமொருகாலம்வாய்வுபகவானிடத்திலிருந்த ருத்திர வீரியத்தினால் அஞ்சனாதேவி கர்ப்ப

பத்தில் சாமளவர்ணம் இரத்தினகுண்டலம் தவள எக்கியோ பவீதம் நீண்டகைகள் அகண்டமார்புகளுடன் அனுமான் பிறந்தவுடனே மாதாவைவணங்கி எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது இந்தப்பசி தீரத்தக்க பதார்த்தங்க ளென்ன வென்றுகேட்க, அதற்கவள் வனங்களில் சிவந்து பழுத்திருக்கும் மதுரமாகிய பழங்களென்றுசொல்லித் தன்மகனுடைய பசியாற்றவேண்டி கனிகள் கொண்டுவர வனத்துக்குப்போனாள். தாய்வருவதற்கு முன்னமே அனுமாருக்கு கொடுமையான பசியுண்டாகி பரிதாபப்பட்டுக்கொண்டிருக்கிற சமையத்தில் உதையகாலத்திற் சூரியனுதித்தான் அந்த சூரியவிம்பத்தைக் கண்டு தனக்குச் சொல்லிய சிவந்த கனிவகைகளில் இஃதுமொருகனிதானென்று நினைத்து சூரியன்மேற் பாய்ந்தான், அதை தேவர்கள்கண்டு நமது சத்துருக்களாகிய விராட்சதர்கள் இந்த அனுமானால் என்னதுன்பத்தை யடைவார்களோவென்று ஆச்சரியத்தை யடைந்தார்கள், பிதாவாகிய வாயுபகவான்கண்டு சூரியகிரணங்கள் குளிர்ந்திருக்கக் கடவதென்று வரங் கொடுத்தபடிக்குப் பாய்ந்து கவ்விக்கொண்டிருக்கும் அனுமானுடைய பராக்கிரமத்தைக் கண்டு பயந்து தேவேந்திரனிடத்திற்போய் சுவாமீ சந்திர சூரியமண்டலங்களைப் பற்றி யெனக்கு முன்னம்வரங்கொடுத்திருக்க இப்பொழுது வேறொருவன் பற்றும்படி நேரிட்டகாரணமென்ன நான்செய்த குற்றமென்னமோவென்று முறையிட்டான் அதுகேட்டுதேவேந்திரன் கோபத்துடனே ஐராவதமேறிக்கொண்டதிகவேகமாகப்போய் நீ சூரியனைப்பிடியென்று ராகுவையேவினான், அதையனுமான்கண்டு இராகுவின்மேல்பாய அவன்நடுங்கி உளறிக்கொண்டோடி தேவேந்திரன் காலடியில்விழுந்து புலம்பினான். அதுகண்டு தேவேந்திரன் மிகக்கோபத்துடனே ஐராவதயானையை பிரசண்டவேகமாக நடத்தி யனுமார்மீதில் சீறிவரும்பொழுது ஐராவத யானைமுகத்தில் சிவப்பாய் விளங்குஞ்சிந்தூரப்பொட்டு வட்டத்தை யிதுவுமொரு கனிதானோவென்றெண்ணி யனுமார் வெள்ளையானையின்மேற் பாய்ந்தனன், தேவேந்திரன் கண்டு தன்னுடைய வச்சிராயுதத்தினாலே அடித்தான், அந்த அடியினாலே அனுமார் மூர்ச்சையடைந்து பூமியில்விழுந்தான் அதைவாயுபகவான்கண்டு கோபித்து லோகமெங்கும் வாயுசஞ்சாரமில்லாமற்செய்து தனது புத்திரனாகிய அனுமானை யெடுத்துக்கொண்டு இமயகிரியைச்

சேர்ந்து ஒருகுகையில் பிரவேசித்திருந்தான் அப்பொழுது உலகமெங்கும் வாயுவிலக்கமில்லாதபடியினல் எண்பத்துநான்குநூருயிரம் யோனிபேதங்களாயுள்ள சகலபிராணிகளும் வயிறுவீங்கி துன்பப்படுகிற சமயத்தில் தேவர் முதலானவர்கள்போய் பிரமதேவரிடத்திற்சொல்ல, அவர் வாயுபகவானிருக்குமிடம்வந்து தேறுதலைச்சொல்லி மூர்ச்சித்துக்கிடக்கும் அனுமாரையெழுப்பி தம்முடன்வந்த தேவர்களைநோக்கி இந்த அனுமாருக்கு வரங்கொடுப்பீரென்றருள்செய்ய, அப்படியே இந்திரர்முதல் அஷ்டதிக்குப்பாலகரும் தங்கள் தங்களுடைய ஆயுதங்களினுல் மரணமடையாதிருக்கவும் விசுவகர்மா எந்த ஆயுதத்தினுலும் சாவில்லாமல் வரங்களைக் கொடுக்க அதன்பின்பு பிரமதேவர் தம்முடைய பிரமதண்டத்தினுலே நாசப்படாமலிருக்கக்கடவதென்று சிரஞ்சீவியாக விருக்கவும் வரங்களைக்கொடுத்து பிர்மாஸ்திர உபாய நிவாரண மந்திரோபதேசஞ்செய்து வாயுபகவானை நோக்கி உன்புத்திரன் இராவணனுடைய லங்காபட்டணத்தை யெரித்தழித்து இராட்சசர்குலத்தை வேரறுத்து ராமனையனுசரித்து அவருடைய அனுக்கிரகத்தினுலே பிரமபதத்தை யடையக்கடவதென்று யனுக்கிரகித்து தங்கள் தங்கள் லோகத்தைச்சேர்ந்தார்கள்.

கேட்டீரோ இப்படி சமஸ்ததேவர்களிடத்திலும் பெற்ற வரத்தினுடைய மகிமையினுலே இவ்வனுமான் சற்றுச்செருக்குற்று தனக்கு நிகரொருவரு மில்லையென்று அகங்கார கர்வத்தையடைந்தவனுய் மதோன்மத்தனுய் மகாரிஷிகளுடைய ஆச்சிரமங்களிற்புகுந்து யாகபாத்திரங்களை யுடைத்தன் முதலான பலவித விகாதஞ்செய்து திரியுங்காலத்தில் ஒருநாள் முனிவர்களெல்லோரும் அனுமார்செய்கிற துஷ்ட செய்கைகளைச்சகிக்க முடியாமல் மிகவுங் கோபங்கொண்டு எல்லோருமொருவாக்காகத் தன்னுடைய பராக்கிரமந் தனக்குத் தெரியாமற்போகக்கடவதென்று சபித்தார்கள் அந்த சாபத்தினுலே அனுமார் தன்னுடைய அகங்காரமும் கோபமுமடங்கி சாபத்தையடைந்தவனுகி நாமிந்த மகாரிஷிகளுக்கு அபசாரத்தைச்செய்தவனுனேமென்று, வெட்கத்தையடைந்தவனுகிய தன்பின்பு மதங்கமாமுனிவருடைய ஆசிர்மத்தை யடைந்து அவ்விடத்திலிருக்கும் சுக்ரீவனைப் பிராணசிநேகிதனுகதோழமைகொண்டு மதங்கமாமுனிவரைக்கண்டு வணங்கி அனுமதிபெற்று வேதவேதாங்கமுதலான சகலசாஸ்திரங்களுமோ

தியுணர்ந்தபின்பு இவன் அருக்கன் மாட்டுச்சென்று எல்லா வியாகரணங்களையும் அவற்றின் விருத்தி பாடிய முதலானவுரைகளையும் நவவியாகரணமும் போதிக்கவேணுமென்று கேட்க, அதற்கவர் நாமேரியிருக்கும் இந்தரதமானது ஒரு சுவாசகாலத்திற்கு இருபத்தோராயிரத் தறுநூறுயோசனை தூரம் வேகமாகச் சதாகாலமும் சஞ்சரித்துக்கொண்டிருப்பதால் ஓரிடத்திலிருந்து பாடஞ்சொல்வதற்கு சாவகாசமில்லையே இப்படியிருக்குமென்னிடத்தில் கற்றுக்கொள்வதற்கு வல்லமையுண்டாகில் ஓதுவிக்கிறேனென்றுசொல்ல அதற்கனுமான் சூரியபகவானைப்பார்த்து தேவரீருடைய அனுக்கிரகத்தினாலே இந்தவித்தையைக் கற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டாயிருக்குமென்றுசொல்லி யுடன்பட்டுக் குருவினிடத்தில் எதிரிலிருந்து பாடங்கேட்பதுபோல சூரியனுக் கெதிர்முகமாகவே அந்தரதவேகத்துக்குப் பின்னிடாமல் ஆகாசமார்க்கத்திற்பாய்ந்தபடியால் ஆறுதினத்திலே அந்த நவவியாகரண முழுதும் கற்றுக்கொண்டான் அன்றியும் தயாளம் சாந்தம் சத்தியம் ஞானம் நிகருவகுணம் பிரயத்தினம்செய்த காரியங்களை விகாதப்படாதபடி முடிக்கும் வல்லமை நம்பினோர்களைப் பாதுகாக்கும் மனோதிடமுதலான இவைகளில் இவனுக்குச் சமானமானவர்களொருவருமில்லை இவனாலே தேவர்களெல்லாம் சவுக்கியத்தை யடைவார்கள், இவனுமளவில்லாத மேன்மை பொருந்திய இந்த அனுமானனவன் உம்முடைய திருவடிப்பணிவிடையை விரும்பி யும்மைவிட்டு நீங்காதிருப்பானாகில் உம்முடைய குணத்துக்கும் கீர்த்திக்கும் சமானமுண்டோவென்று இப்படி யனுமானுடைய சரித்திரங்களெல்லாம் ஸ்ரீராமருக்கு தெரியச்சொன்னார்.

வாலிசுக்ரீவர் உற்பத்திவரலாறு.

அதுகேட்டு ஸ்ரீராமர் மிகவும் களிப்படைந்து வாலி சுக்ரீவருடைய உற்பத்தியும், தேவேந்திரன் சூரியன் அவர்களுக்குபிதாவான காரணமுந்தெரியச் சொல்லவேண்டுமென்றுகேட்க, குருமுனிசொல்லுகிறார். கேளும் ஸ்ரீராமச்சந்திரா, பூருவமொருகாலம் தான் தவஞ்செய்யுமிடத்திற்கு நாரதர்வந்தார் அவரைவாலிசுக்ரீவர் எந்தஸ்திரீயினிடத்திற் பிறந்தார்களென்று நான்கேட்க, அவர்சொன்னதைச் சொல்லுகிறேன்கேளுமென்றுசொல்லுகிறார். மகாமேருவின் மத்தியசிரகத்தில் பிர

மதேவரானவர்யோக நிட்டையி லிருக்கும்போ தவருடையநே த்திரங்களிலிருந்து ஜலத்துளிவர அதை நமதுகரத்திலேந்தி நோக்கும்போது மகாசூரத்தன்மையுடைய ருட்சவிருஜ னென் னும் புருஷவானரம்பிறந்தது அதைப்பார்த்து சந்தோஷ மடைந்து நீ இந்தபருவதத்தின் வனங்களில்சஞ்சரித்துகனி வர்க்கமுதலியவைகளைப் புசித்திருவென்று ஆக்யாபித்தார் அ தேபிரகாரம் அந்தவனங்களிலுள்ள புட்பங்களை யெடுத்துவ ந்துபிதாவாகிய பிரமதேவரைபூசித்துகனிவர்க்கமுதலியதைபு சித்து அவ்வனத்தில் சஞ்சரித்திருக்கும்போது ஒருநாள் வட க்குநோக்கும்போது அவ்விடத்தில் மகாசிரப்போடுங் கூடிய ஒருபொய்கையைக்கண்டு அதிலிறங்கி ஸ்தானபான முதலிய நேமநிஷ்டைகளை முடித்துக் கரையேறி யக்குளத்தைப் பார்க் கும்போது அக்குளத்தில் தன்னுடைய சாயைதோன்ற அச் சாயை வேருெரு குரங்கென்று நினைத்து வானர புத்தியில் அதைப்பிடிக்கக்கருதி தடாகத்திற் குதித்துத்தடவி காணுமல் படியேறி நின்றவுடனே அத்தடாகத்தின் மகிமையினுலே ஆ ண்ரூபம்போய் பெண்ரூபமாகி யவ்வனத்தில் சஞ்சரிக்கும்போ து பிரமதேவரிடம் வந்திருந்துபோகும் தேவேந்திரனுடைய வீரியமானது வெளிப்பட்டு அந்தஸ்திரீயினுடைய சிரசில் விழுந்து வாலினிட நிற்க வாலியுற்பத்தியாஞன் அப்போதே சூரியனுடைய வீரியமானது ஸ்கலிதமாகி அவளுடைய கண் டத்தில் விழுந்து கண்டத்தினிடமாகநிற்க சுக்ரீவன் பிறந் தான். இதை தேவேந்திரன்கண்டு மகிழ்ந்து வாலிகழுத்திற் போட்டு தன் தேவலோகத்தில் சேர்ந்தான். சூரியன்மகிழ்ந்து கண்டத்தினிடமாக நிற்கப்பிறந்தமையால் சுக்ரீவனென்றும் பெயர் கொடுத்தனுப்ப மச்சகி விருத்தியடையக் கடவதெ ன்றுசொல்லி யஸ்தமானத்திற்குப் போய்விடடான் இப்ப டியிருக்க மறுநாட்காலமே அவளுடைய ஸ்திரீரூபம் நீங்கி முன்போலப் புருஷரூபம்வந்தவுடன் கண்டு ஆச்சரியமடை ந்து தனது குமாரர்க ளிருவரையு மழைத்துக்கொண்டு பிரம தேவரிடம்வந்து நமஸ்கரித்து வணங்கி நடந்த சங்கதிகளைச் சொல்லி பிரமதேவர் தன் குமாரனையும் பேர்ப்பிள்ளைக ளிரு வரையுங் கண்டுமகிழ்ந்து நீ வானரப்புத்தியினுலே செய்த காரியம் ஆகிலும் பெரிதல்ல நீ இந்த குழந்தைகளை யழைத் துக்கொண்டு கிஷ்கிந்தா பட்டணத்திற்குப்போய் வானரர் களுக்கு அரசனுக வாலிக்குப் பட்டங்கட்டி சுக்ரீவனை

யிளவரசாக்கி நீங்கள் சுகித்திருங்களென்று சொல்ல அவ்வுத்தரவைப்பெற்று ருட்சவிருஜனென்னும் வானரன் சொல்லுகிறான். சுவாமி! அத்தடாகத்தில் முழுகினவுடன் ஸ்திரீயாகவேண்டிய காரணமும் மறுநாள் பழையபடி புருஷனாகவேண்டிய காரணமும் தெரியச்சொல்ல வேண்டுமென்று கேட்க பிரமதேவர் சொல்லுகிறார். முன்னமொருகாலம் பார்வதி தேவியார் தனது தோழிகளுடன் அக்குளத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது இராட்சதாள் ஸ்திரீ ரூபங்கொண்டு அவர்களும் அக்குளத்தில்வந்து விளையாடுவதைப் பார்த்து பார்வதிதேவியார் அறிந்து இன்றுமுதல் இக்குளத்தில் எவர்கள் வந்து முழுகினாலும் ஸ்திரீயாகப் போகக்கடவதென்று சாபமிட்டுப் போயினர். அப்படி யிருக்க நான் ஒருநாள் பார்வதி தேவியாரை அச்சாபத்தை நிவர்த்திரூபமாகி மறுநாள் முன்போல ஆண்ரூபமாகக் கடவதென்று வரங்கொடுத்தார். அதனால் நீ முழுகினவுடனே பெண்ரூபமாயும் மறுநாள் எப்போதும்போல ஆண்ரூபமாயினையென்று பிரமதேவர் சொல்லி மூவரையும் கிஷ்கிந்தைக்கு அனுப்பிவைத்தார். அப்படியே கிஷ்கிந்தைக்குவந்து வானர அரசனாக வாலிக்குப் பட்டந்தரித்து சுக்ரீவனை இளவரசாகவும் இராச்சியபாரஞ் செய்துவந்தார். அதன்பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் தங்களுக்குத் தெரிந்ததேயொழிய வேறில்லையென்று அகஸ்தியர் சொல்ல ராமர்கேட்டு அடங்கா மகிழ்ச்சி கொண்டிருக்க இப்பொழு தவ்விடத்திலுள்ள எங்களுக்கு நித்திய நியமகாரியங்க ளனேகமாயிருந்தாலும் சதாகாலமும் உம்மைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மனங்கொள்ள வில்லையென்றுசொல்ல; அதுகேட்டு ராமர் உங்களுடைய தபோமகிமையினாலல்லவோ எங்களுடைய ராஜரீகமும் லோகபரிபாலனமுண்டாயிற்று. ஆனதால் நீங்கள் நாடோறும் சகல நியமங்களினின்றும் தவறாமல் நித்தியாநித்திய நியமமான சத்கருமானுஷ்டானங்கள் வழுவாமல் நடத்திவருவதே உங்களுடையபார முங்களுடைய வாச்சிரமங்களுக்கு எழுந்தருளலாமென்று உபசரித்துவணங்கி பின்சென்றனுப்பிவைக்க அகஸ்தியபகவான் முதலான மகாரிஷிகளெல்லாரும் ஆனந்த சந்தோஷத்தை யடைந்தவர்களாய் ஸ்ரீராமனுக்கு அனேகமான ஆசீர்வாதஞ்செய்து வாழ்த்தித் தங்களுடைய ஆசிரம

னைச்சேர்ந்திருந்தார். அதன்பிற்பாடு ராமபிரான் தன்மாமனாகிய ஜனகமகாராஜாவைப்பார்த்து ஐயா நீங்கள் இங்குவந்து நாட்சென்றபடியால் நகரத்திற்கு செல்ல விருப்பமா யிருக்கலாம், எல்லாம் உங்கள் அனுக்கிரகம் என்று அருமையான்ள வஸ்திராபரண முதலானவைகளுங்கொடுத்து உபசரித்தனுப்பிவிட்டு சகலவித அரசர்களுக்கும் பூஷணாதிகள் கொடுத்து அவரவர்களுக்குத்தக்க மரியாதைசெய்து விடைதந்து அளவில்லாத பிராமணர்களுக் கனேகங்கோடி திரவியதானங் கொடுத்து சுக்ரீவனுக்கு இரத்தினமாலையும், அங்கதனுக்கு வைடூரியமாலையும், அனுமாருக்கு முத்துமாலையும் விபீஷணனுக்குத் தன்னுடைய தேவபூஜையாகிய மூலதனமும், சயிந்தன் துவிதன் சாம்புவந்தன் சுசேஷணன் ரிஷபன் முதலான வானரவீரர்களுக்கு விதம்விதமாயுள்ள வஸ்திரபூஷணங்களும் கொடுத்தனுப்பிவிக்க சுக்ரீவன் முதலான வெல்லோர்களும் மகாசந்தோஷத்துடனே தாங்கள் வாசஞ்செய்யு மிடங்களிற் போய்ச் சேர்ந்திருந்தார்கள் பிறகு முப்பத்து முக்கோடி தேவர்கள் வாழ்த்த அயோத்திமா நகரில் பரத சத்துருக்க லட்சுமண சீதா சமேதராய் ராமமூர்த்தியானவர் சகலவைபவத்துடன் அரசுசெலுத்திவந்தார்.

அப்படி வானரவீரர்முதலிய சகலருக்கும் விடைகொடுத்தனுப்பி உலகத்திலுள்ளவெல்லோருஞ்சந்தோஷத்தையடைந்து வாழ்ந்திருக்கும்படி மநுநீதிதவறாமற் செங்கோல்செலுத்தி யிராச்சியபரிபாலனஞ் செய்துகொண்டு வரும்நாளில் சில காலஞ்சென்றபின்பு ஒருநாள் மிகுந்த விசித்திரமாய் அமைக்கப்பட்டு நந்தவனத்திலு மேற்பட்டதா இராநின்ற பிருந்தாவனத்திற்சென்று மனையாட்டியாகிய சீதாதேவியுடன் ஸ்ரீராமமூர்த்தியானவர் வேடிக்கையான பல கதைகளைப் பேசிக் கொஞ்சிக்குலாவிக் கொண்டிருந்து கடைசியில் என்னுயிர்க்குயிரான காதலியாகிய சனகன்பெற்ற இரத்தினமே நீ வயிறு வாய்ந்திருப்பது எனக்குச் சர்வக் களிப்பைத் தருகின்றது, இப்போது உனக்கு என்னவேண்டுவது யாது விரும்புகின்றனை உண்மையாக எனக்குச் சொல்லென்று ஸ்ரீராமமூர்த்தியானவர் மிகுந்த மனக்களிப்புடன்கேட்க அதையந்த ஜானகிபிராட்டியார் கேட்டு அதிக சந்தோஷத்தையடைந்து புன்னகையுடன் ஸ்ரீராமனைப்பார்த்துச் சொல்லுகிறாள் சுவாமி தயைதாட்சண்ய

தைரிய சவுரியாதி சகலகல்யாணகுண பூர்ணரான கர்த்தாவா கிய தேவரீரைப் பெற்றிருக்கின்ற அடியாளுக்கு விரும்பத்தக் கதேதுமில்லை ஆயினும் சுவாமியே இங்ஙனம் நியமிப்பதினு ல் ஒன்று வேண்டுகிறேன் அஃதென்னவெனில் இன்னமொரு தரம் கங்கைக்கரையிலுள்ள முனிவர்களின் ஆச்சிரமங்களிற் சென்று அவர்கள் திருவடிக்கீழ் குற்றேவல் செய்துக்கொண்டு அவ்விடத்தி னழகைப்பார்த்து அனுபவிக்க வேண்டுமென் னும் விருப்ப மிருக்கிறதென்று சீதாதேவியார் விண்ணப்பஞ் செய்தாள் அதற்கு அந்த இராஜசிகாமணியான ராமமூர்த்தி யானவர் அப்படியே ஆகட்டுமென்றருளிச்செய்து பிறகு சபா மண்டபத்தில் தம்பிமார்களுடன் அரசாட்சி செய்துக்கொண் டிருந்தார்.

இந்த உத்தரகாண்டத்தில் இராவணன் கும்பகர்ணன் விபீஷணன் இந்திரசித்து முதலாகிய அசுரர்களுடைய உற் பத்தியும், அவர்கள் தவஞ்செய்து பெற்றவரங்களையும், இரா வணனுடைய திக்குவிஜயமும், அநுமாருடைய வுற்பத்தியும் வாலி சுக்ரீவர்களுடைய உற்பத்தி முதலானவைகளையுஞ் சொ ன்னோம், இனிமேல் சீதையம்மன் வனமேகுதலும், குசலவர் களுற்பத்தியும், ராமர் அஸ்வமேத யாகஞ்செய்ய குதிரையை விடுத்தலும், ஆங்காங்கு எதிர்த்த ராசாக்கள் முதலியவர்களை வெல்லுதலும், குசலவாளுடைய யுத்தமும், அஸ்வமேதயாக மும், மகாவிந்தமும், இவை முதலானவைகளை இனி கூறப் புகுவாம்.

ஸ்ரீமத் கம்பராமாயண வசனச்சுருக்கம்

உத்தரகாண்டத்துடன் ஏழுகாண்டமும்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ராமர்

அஸ்வமேதயாகம்.

உத்தரகாண்டம்.

கதையின் வரலாறு.

என்பது ஸ்ரீமத்ராமாயணகாவியமாகிய விராவணசம்மார முடிந்தவுடனே இராமரானவர் அஸ்வமேதயாகஞ் செய்யும் படியாய் நினைத்து வசிஷ்டர் திருவாக்கின்படி அஸ்வத்தை மந்திராபூதிகளினுற் பூசைபுரிந்து திக்குவிஜயஞ் செய்யும்படி யாய் குதிரையின் பின்னுல் சத்துருக்க மகாராசனையுஞ் சதுர் வித சேனைகளையுங்கூட்டி யனுப்பினுர்.

அப்போது அந்த அஸ்வமானது காடுகள் மேடுகள் வனங்கள் வனுந்திரங்கள் ஊர்கள் இவைகளையெல்லாங் கடந்து வரும்வழிகளில் குதிரையைப் பிடித்துக்கட்டிய இராசாக்களையெல்லாஞ் சத்துருக்கமகாராஜன் தனது அஸ்திரங்களினுற் சின்னப்பட அடித்து புறமுதுகுகாட்டி யோடும்படி செய்து வீராவேசத்துடன்வரும்போது அஸ்வமானது வால்மீகமகாரிஷி ஆசிர்மத்திலிருக்கும் ஜானகியம்மன் இளைய குமாரனுகிய லவனுனவன் அந்த அஸ்வத்தைப் பிடித்துக் கட்டி குதிரையின் பின்னேவந்த இராட்சதரையுங்கொன்று சிங்கத்தைப்போல கற்சித்து நின்றுன். அதைக்கண்ட சத்துருக்கமகாராசன் லவனேடெதிர்த்து வெகுநேரம் போராடி அவனை மூர்ச்சையாக்கி கைப்பிடியாகப்பிடித்து தனதுதேரிற் கட்டினுன்.

அதனைக்கண்ட அவ்வனத்துப்பெண்கள் சீதையினிடத்திற்கு ஓடிவந்து அம்மா உன்னிளையகுமாரன் யாகத்திற்கு விட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி குதிரையின் பின்னே வந்த சேனைகளையெலலாம்சொன்னுன். அந்தச்சேனைகளுக்கு எசமானனுகவந்த சத்துருக்கன் லவனைப்பிடித்துக்கொண்டு

போகிறான் அம்பணியென்றார்கள். அதைக்கேட்ட ஜானகியம் மனடித்துமோதி பூமியில்விழுந்து ஐயோமகனே லவகுமாரா வென்று புலம்புகிற சத்தத்தை குசலன்கேட்டு ஓடிவந்து ஏன ழுகிறாயம்மாவென்று கேட்க, அப்பா மகனே ஆரோ ஒரு ரா சன் உன் தம்பியைப் பிடித்துக்கொண்டு போகிறானும் நீபோய் அவனை செயித்து தம்பியை மீட்டுக்கொண்டுவருவாய் மகனே என்று இராமருடைய பிரசண்டகோதண்டமும் அஸ்திரங் களுங் கொடுத்தனுப்ப குசனப்படியே சென்று சேனைகளை யெல்லாங்கொன்று சூரசேனனையும் வீரசேனனையும் மூர்ச்சை யடையச்செய்து பின்பு சந்தனமகாராசன் சாத்மீகராசனைக் கொன்று சத்துருக்கமகாராசனோடெதிர்த்து அவரையும் பரத ரையும் தோல்வியடையச்செய்து லவனைக் கட்டவிழ்த்துவிட லவனும் வில்லை வளைத்து யெதிர்த்தான். அதுகண்ட அனு மார் அங்கதன் மட்சயந்தனுமார் முதலிய யாவருங் குசல னைக்கண்டு அக்கினியைக்கண்ட சருகுபோலும் அழகிய கரு டனைக்கண்ட அரவங்கள்போலுமாகி அல்லோலகல்லோலப் பட்டு அஸ்திர சஸ்திரங்கள் முரிபட்டு அரக்கருடன் வான ரர்களுங் குசலவர்களிருவரிடத்தில் வில்லாலடிப்பட்டு வெட் கங்கெட்டு விடாய்பட்டு விருதுகெட்டு வித்தைகெட்டு வெற்றி யடையாமல் புத்திகெட்டு தடுமாறி இராமருடைய திருவடி யைக்கோரி அவரிடஞ்சென்று அருகாமையில் நின்று இச் செய்தியைக் கூறினார்கள்.

அதனைக்கேட்ட இராமர் கோபமீறி தேரேறி சாரதியை த்தூறி கண்கள் சிவப்பேறி சித்தமிகநொந்து யுத்தகளம் வந்து மாண்டவர்களைப்பார்த்து மற்றவர்களைச்சேர்த்து நல்ல தென்ன மனதிலெண்ணி வில்லைகுணத்தொனிபண்ணி அட் டகாசஞ்செய்து குசலவர்களைப்பார்த்து அவர்களோடெதிர்த் து அவர்கள் தீரத்தைக்கண்டு மதித்து புத்திரரென்ற வாஞ் சையினாற் பொய்ப்போரினைக்கொண்டு போராடி இராமர் பா தர் சத்துருக்கர் மீளாமல் மாளவே குசலவர்களும் அவர் களுடைய ஆபரணம் முடிவிருதுக்கொடியு மெடுத்துக்கொண் டு அனுமார் ஜாம்புவந்தர் அஸ்வமேதக்குதிரையுடனுந்தங் களிருப்பிடமாகிய வால்மீகர் வனம்வந்தார்கள். இதனை ஜா னகியம்மன் கண்டு தந்தைகளைக் கொன்றுவந்தார்களென்று பயங்கரங்கொண்டு வால்மீகருக்குக்கூற வால்மீகர் வாயுபகவா

னல் கமண்டலத்திலிருந்த அமிர்தத்தினல் ஸ்ரீராமர் லட்சுமணர் பரதர் சத்துருக்கர் முதலியயாவரையுமெழுப்பினர். அக்காலையில் தேவர்கள் புஷ்பமாரிவருஷித்தார்கள் சகலரிஷிகளுடம்புடைசூழ முப்பத்து முக்கோடி தேவர்களுடன் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் சூழவும், பரமேஸ்வரர் பார்வதியுடன் வருகவும் அன்னவாகனத்தின்மீது பிரமதேவனனவர் மேவவுஞ் சிவசுப்பிரமணியர் வள்ளியம்மன் தெய்வயானையுடன் புள்ளிமயிலின்மீதுவந்து உலாவவும் வெள்ளையானையின்மீதில் இந்திரராசன்வந்து பொருந்தவும், கண்ணுவர் ஜமதக்கினி கலைக்கோட்டுமகாரிஷி வசிஷ்டர் கௌசிகர் துருவாசர் முதலான தபோதனர்கள் வந்துபோற்றவும் ஸ்ரீராமலட்சுமணர் பரதசத்துருக்கர்களுடன் அவ்வனத்திற் கொலுவிருந்தார், அத்தருணத்தில் வால்மீக மகாரிஷியும் நாரதரும் இராமரைப் பார்த்து ஓ ராமமூர்த்தியே நீ உம்முடைய பெண்சாதி பிள்ளைகளை சுகமாக அழைத்துக்கொண்டு அயோத்தியாபுரிக்குப் போமென்றுகூற இராமர் மௌனமாயிருந்தார். பின்னும் வால்மீகர் ஜானகியம்மன் தனது ஆசிரமம் வந்ததுமுதல் பிள்ளைகளுற்பத்தியானது வரையில் விரிவாகச் சொல்லியும் வேறுமொழி கூறாமலிருந்தார்.

அதனைக்கண்டுணர்ந்த ஜானகியம்மனனவள் முன்போல் மறுபடியும் அக்கினியைவளர்த்தி அதில் இருபிள்ளைகளோடுகுதித்து மாசுமறுவில்லாமல் தேஜசுபொருந்திய இருபிள்ளைகளோடு நீந்திவிளையாடி வெளியில் வந்ததைக்கண்ட தேவர்கள் முதலியயாவரும் ஆனந்தங்கொண்டு சிலர்வாழ்த்தவும் மலர் தூற்றவுமிருக்கையில் இராமபிரானனவர் தேவர்களிடத்திலு முனிவர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சீதாபிராட்டியுடன் இலட்சுமணர் பரதர் சத்துருக்கர் லவன் குசலரோடு தேரேறி யாவரும்புடைசூழ சேனைகள்தாழ அஸ்வமேதக்குதிரையுடன் அயோத்தியாபுரிபட்டணஞ்சென்று வசிஷ்டர் திருவாக்கின்படி அஸ்வமேதயாகத்தை நிறைவேற்றி தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொடுத்து அநேக தானதருமங்களைச்செய்து பின்பு சிலநாள்பொறுத்து அயோத்தியாபுரியை குசலவர்களுக்கு பட்டங்கட்டிவித்து தம்பிமார்களாகிய லட்சுமணர் பரதர் சத்துருக்கர் மூன்றுபேர்களுடனும் ஸ்ரீராமரானவர் வைகுந்தஞ் சேர்ந்ததாக நாரதர் வால்மீகருக்கு

அறிக்கைசெய்ய வால்மீகர் குசலவர்களுக்கு ஸ்நானபான நேமநிஷ்டைகள் செய்துகொள்ளச் சொல்லியபின்பு அஸ்வமேத யாகமண்டபத்தில் தெர்ப்பாசனத்தின்பேரி லுட்கார வைத்துக்கொண்டு ஒருவர்பேரில் சுவாசம் விடாமலும் வாயில் தாம்பூலம் போடாமலும் அட்டங்கால் போடாமலும் பக்தி விசுவாசத்துடனே இராமாயணம் ஆதிமுதல் ஸ்ரீராமர் வைகுந்தம் போனவரையில் மேற்படி குசலவர்களுக்கு அருளிச் செய்த இக்கதையைப்படித்தவர்களும் ஸ்ரீராமருடைய கிருபா கடாட்சத்தினுல் சகலபாக்கியங்களும் சம்பத்தும் அஷ்ட அயிஸ்வரியமுந் தீர்க்காயுளும் புத்திரசந்தானமும் மேன்மேலும் பெருகவுண்டாகி மிகவாழ்வார்கள் சாதம்.

கதையின் வரலாறு முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்.

உத்தராகாண்டம்.

காப்பு.

கலி விருத்தம்.

கையிலாழி யெடுத்தருள் கண்ணனை
மையுலாம்விழி மங்கையர் பாகனை
உய்யவந் துதையஞ்செய்த பானுவை
வையமுண்ட செவ்வாயனை வாழ்த்துவாம்.

என்றுண்டவராய் விளங்கப்பட்ட வால்மீகர் சொல்லிய ராமாயணத்தில் பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆர ணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், உயுத் தகாண்டம், உத்தரகாண்டமென்று விளங்கும் ஏழுகாண்டத் தி லிப்போது சொல்லப்பட்ட உத்தரகாண்டத்தினுடைய கதாப்பிரசங்கம் வால்மீகர் சுலோகப்படி பீமகவிராயரானவர் தமிழிலே அர்த்தசாரம் பண்ணிக்கொண்டு வருகிறார், இராமா வென்றால் பாவம்போம் ராமாவென்றால் ஜென்மசாபல்யபா தும் ராமாவென்றால் ஆபத்து நீங்கும் இப்படி சொல்லப்பட் ட உத்தரராமாயணப் பிரசங்கத்தில் சொற்பிழை பொருட்குற் றங்க ளிருந்தாலும் வித்துவ சிரோமணிகளா யிருக்கப்பட்ட பெரியோர்க ளங்கீகரிக்கக் கடவதென்று விநாயகர் பூசைசெய் து உததரராமாயணத்தில் குசலவர்களுடைய கதாப்பிரசங்கங் களை திருவாய்மலருகின்றார் எப்படியெனில்.



ஸ்ரீராமர் அரசிருத்தல்.

ஸ்ரீராமச்சந்திர சுவாமியானவர் இராவண சம்ஹாரஞ்
ய்து சீதாபிராட்டியுடன் பட்டாபிஷேகராயிருக்கையில் சத
ட ராவணனென்றுஞ் சகஸ்திரகண்ட ராவணனென்றுஞ்
ால்லப்பட்ட இரண்டு ராக்கதர்கள் பன்னீராயிரம்வெள்ள
சேனைகளுடனேவந்து யுத்தஞ்செய்து ரணக்களத்தில்
ந்தபிறகு சீதாதேவியுடன் அயோத்தியில்வந்து ராச்சிய
ஞ் செய்துக்கொண்டிருக்கும் நாளையில் ஒருநாட்காலமே
ழுந்து காலைக்கடன்களை தீர்த்துக்கொண்டு போசனமருந்தி
டையாபரணங்களணிந்து கிரீடம்பூண்டு கையில் கோதண்
தைப் பிடித்துக்கொண்டு ஆசாரவாசலிலேவந்தார். அப்
ாது ஆயிரங்கன்னிமார்கள் வந்து ஆலாத்தியேந்த தம்பி
ர் புடைசூழ பொற்பிறம்புக்காரர் பராக்கு எச்சரிக்கை கூற
ாரபேரிகை வாத்தியங்கள் முழங்கும்படியாய் சபாமண்ட
வருகிறபோது படைத்தலைவர் சேனாபதிகளும் எதிரே
து பணிந்து நிற்க சகலமானபேரையும் ஆசீர்வதித்து
ாமண்டபத்தி லுட்கார்ந்தார் அங்கு பரதர் லட்சுமணர் சத்
ருக்கர் ஒவ்வொருபடி தாழ்ந்துட்கார்ந்தார்கள் கட்டியக்கா
கட்டியங்கூற கவிவாணர் புகழ மேனகை அரம்பை ஊர்
திலோர்த்தமைக்குச் சரியான மாதர்கள் நடனம்புரிய, ஊ
கணக்கப்பிள்ளைகள் கணக்கைஒப்புவிக்கஊர்காக்குந் தலையா
ள் அயோத்தியில் நடக்கப்பட்ட சமாச்சாரங்களை அன்
க்கன்றுடம் வந்துசொல்ல, ஊர் பெரிதனக்காரர் தினந்
ாங் காணிக்கை கப்பத்துடனே எதிர்கொண்டுவந்து ஸ்ரீரா
ர்த்தியைவணங்க நால்வகைச் சேனைகளுடனும் நிறைந்து
ாலுவாயிருக்கையில் இராசாக்களுஞ்சேனாபதிகளும் தளவா
ளுஞ் சினேகிதர்களும் ஊரிலுள்ள பெரியோர்களும் வந்து
ணங்க ஸ்ரீராமரானவர் அவரவர்களை ஆசீர்வதித்து உட்கா
படியாய் உத்தரவுகொடுக்க யாவரும் உட்கார்ந்தார்கள்.

ப்படியாக ஸ்ரீராமமூர்த்தியானவர் நிறைந்தகொலுவா
கு ஆடம்பரங்களுடனே தேவேந்திரன் கொலுவைப்
ால சகலதேசத்தரசர்களும் வணங்க அவர்களுக்குத் தக்
உத்தரவு அளித்துக்கொண்டு ராஜநீதி முறைதவறாமல்

ராஜரீகம் பண்ணுங்காலையில் திங்கள் மும்மாரிபெய்ய யாதொன்றுங் குறைவில்லாமல் சம்பா கார் கேழ்வரகு முதலியநவதானியங்களும் விளையும் அதில் ஒன்பதுபங்கு குடிகளுக்கு வாரங்கொடுத்து ஒருபங்கு தானதருமங்கள் செய்துகொண்டு செபதப ஓமம் விரதம் புரிந்து தேவர்களும் ரிஷிகளும் வாழ்த்த ஒருவரும் நிகரில்லாமல் அயோத்தியாபுரி பட்டணத்தை அரசாட்சிசெய்து வருகிறநாளில் ஒருநாள் சூரிய னஸ்தமித்தவுடனே சகலருக்கும் விடைகொடுத்து ஸ்ரீராமர் லட்சுமணர் பரத சத்துருக்கருடனே சபாமண்டபம்விட்டு அரண்மனை சென்று மாலைஜெபதங்களை முடித்துக்கொண்டு போஜனமருந்தி பள்ளியறைபோய் சயனித்துக்கொண்டார்கள் சகல வுயிர்ப்பிராணிகளும் அரவமடங்கினபிற்பாடு ஊர்க்காவற்காரரும் தலையாரிகளும் இராத்திரிபதினைந்து நாழிகைக்குமேல் தடிதமுக்கை யெடுத்துக்கொண்டு ஏழுசுற்றுக் கோட்டையுஞ் சுற்றிபட்டணத்திற்குள் நுழைந்து பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்குசாதிவீதிகளுங் கஸ்துசுத்தி வருகிறபோது அந்த வீதிகள் சுபசந்தோஷ மங்களகரமாக ஆனந்தவைபோகத்துட னிருக்கிறதுகண்டு வீதிதோறுந்தப்பாமல் அங்கங்குசென்று வீடுகள்தோறும் பார்த்துக்கொண்டு வருகிறபோது ஒருவீட்டில் ஒருவண்ணான் தன்பெண்சாதியை யடித்தான். அப்பெண்சாதியானவள் பிணங்கி அண்டைவீட்டிற்போயிருந்தாள் மாமி நாத்தினியும்போய் அழைத்தார்கள் அதற்கந்தவண்ணான் மனையாள் சொல்லுகிறாள் நீங்களென்னை அழைக்கிறீர்கள் நான் வருகிறேன் மறுபடியும் என்னையடிப்பான் நானல்லவோ படவேண்டும் எனக்காக நீங்கள் தொந்தரவுபடவேண்டாம் என்புருஷன்வந் தழைத்தால்தான் வருவேனென்றாள். அதுகேட்டு அவர்களும் உண்மைதானென்றுவந்துவிட்டார்கள்.

அப்போது அந்தவண்ணானவன் தன்றொழிலை யெல்லாஞ்செய்து வீட்டிற்குவந்து போசனஞ்செய்து தாம்பூலமருந்தி வாசலிற்பாயைப்போட்டு படுத்துக்கொண்டான். அத்தருணத்தி லவன்தாயார் அவனைப்பார்த்து அடாதம்பி உன் பெண்சாதி சண்டைபோட்டு மூன்றுநாளாய் அயல்வீட்டில் போயிருக்கின்றாளே அவளைச் சமாதானப்படுத்தி நாளைகாலமே அழைத்துவாவென்றாள். அதுகேட்டுவண்ணான் கண்சிவந்

து அதிககோபங்கொண்டெழுந்து தாயாரைப்பார்த்து அடியம்மா பயித்தியம்பிடித்தவளே மூன்றுநாளாய் நமதுவீட்டைவிட்டு அண்டைவீட்டுக்கு போயிருக்கிற பெண்சாதியை நானென்னகூப்பிடுவேனோ அந்தராமன் பெண்சாதியான சீதையை ராவணனிடத்தில் பத்துமாதம் வைத்துவிட்டு குரங்குசேனைகளைக் கூட்டிக்கொண்டு ராவணனுடனே சண்டைபண்ணி ராவணனைக்கொன்று சீதையையழைத்துவந்து சிம்மாசனத்தின்பேரில் உட்காரவைத்து பட்டமுந்தரித்து பட்டாபிஷேகராய் ராஜரீகம்பண்ணுகிறான் மூன்றுநாள் அப்புறம்போயிருந்தவளை யழைத்து வீட்டில்வைத்துக் கொள்வேனேயானால் என்சாதிக்கீனம்வந்துவிடும். நமதினத்தார் நகைக்கமாட்டார்களா! என்குலம் அந்தராமன் குலத்தைப்போலல்ல வீடுவிட்டுப்போனவளை இனிநானழைக்கிறதில்லையென்றான். அதற்கு வண்ணான் தாயாரானவள்மறுவார்த்தைசொல்லாமல் மௌனமா யிருந்துவிட்டாள்.

இவைகளையெல்லாம் பதுங்கியிருந்து நன்றாய்க்கேட்ட தலையாரிக ளிதற்கென்ன செய்வோம் இராமருடன் எப்படி வாய்திறந்து சொல்லுவோம் சொன்னா லென்னமாய் முடியுமோ சொல்லாவிட்டாலும் ராமத்துரோகம்விடாது அவனை வெட்டித் தானெறிந்து போடுவோமானால் ராமத்துரோகம் விடாதே லட்சுமணர் கேட்டாரேயானால் ஒரேபாணத்தினாலெய்து போடுவாரே பரதர் சத்துருக்கர் கேட்பாரேயானால் வாளுக் கிரையாக்கிவிடுவாரே மகாபதிவிரதா சிரோமணியாகிய சீதை கேட்பாளேயானால் சாம்பலாக எரிந்துபோக சாபங்கொடுப்பாளே நாம் ராமருடைய அரசியல் பொய்சொல்லப் போகாதே என்னவென்றுதான் மனம்வந்து இராமருடனேபேரய் கூசாமற் சொல்லுவோம் சொன்னநாவு மழிந்துபோமே லோகமாதாவான சீதாலட்சுமிபேரிலே குற்றஞ் சொல்லத் தகுமோ லோகத்தையெல்லாம் யீன்றெடுத்த மாதாவாச்சுதே ரசகனுனவண்ணான் புத்தியில்லாமற் சொன்னசொல்லை நாம் எப்படிசொல்லுவோம் என்னசெய்வோம் ராமாராமாவென்று தலைமேற் கையைவைத்து கன்றிழந்த பசுபோற் கதறிக்கொண்டு வருகிறபோது பொழுதுவிடிய ஐந்துநாழிகையில் ராமரெழுந்திருந்து காலப்பிரவிர்த்தி தீர்க்க வெளியிலே வந்தார் அதுகண்டு தலையாரிகளும் நமஸ்கரித்து நின்றார்கள் ராமமூர்த்தி திடுக்கிட்டு மனதுகலங்கி அழுதுக்கொண்டுவந்த காரி

யமென்ன மலைகலங்கினாலும் உங்கள்மனது கலங்காதே யார்தான் உங்களையடித்தவர்கள் அசுரரோ எவர்களானாலுஞ் சரி எமலோகமேத்திவிடுகிறேன் சீக்கிரஞ் சொல்லுங்களென்று ராமமூர்த்தியானவர் வினவ.

அதுகேட்டு தலையாரிகள் சொல்லுகிறார்கள் ஐயா ரகுநந்தனா நாங்கள் சொல்லப் பயப்படுகிறோமென்றார்கள். அதற்கு ராமமூர்த்தியானவர் வாரும் தலையாரிகளே மழை காற்று இடி நெருப்பு என்கின்ற இந் நான்குக்கும் பயப்படுவீர்களேயல்லாமல் மற்றப்படி அசுரர் தேவர் எமன் இவர்களுக்கு என்கை பாணமிருக்கச்சே நீங்கள் பயப்பட்டுவந்தகாரணமென்ன பயப்படாமல் மனதைத்தைரியப்படுத்திக்கொண்டு சஞ்சலமில்லாமற் சொல்லுங்களென்றார் அப்போது தலையாரிகள் மனதைத் தயிரியப்படுத்திக்கொண்டு ஸ்ரீராமரைக்கொண்டாடி அவரைப் பார்த்து ஐயா ஜனார்த்தனா தங்களுத்தாரப்படிக்குத் தினந்தோறும் பட்டணத்தில் நகர்சோதனை பார்த்துக்கொண்டு வருவோம் உத்தமமான விசேஷமாயிருக்கும் சிலமொழிகளை நாள் தோறும் அறிக்கையிட்டுப்போவோம். இன்றிராத்திரி பதினைந்துநாழிகைக்குமேல் அயோத்தியாபுரி பட்டணத்திலுள்ள வீதிகள் வீடுகள்தோறும் பார்த்துக்கொண்டு கடைசியில் வண்ணாரவீதிவருகிறபோது புருஷனுடனேசண்டைபண்ணி அண்டைவீட்டில் மூன்றுநாளாய்ப் போயிருக்கிறாள் நாளை காலமே அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துவாவென்று மாதாவானவள் சொல்ல அதுகேட்டு பிள்ளையான வண்ணான் அம்மா பயித்தியம்பிடித்தவளே அந்தராமன் பெண்சாதியை ராவணன் எடுத்துக்கொண்டுபோய் பத்துமாதம் வரையில் வைத்திருந்தான். அதையறிந்து ராமன் குரங்குசேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தராவணனையும் ராட்சதர்களையுங் கொன்று சீதையை யழைத்துக்கொண்டுவந்து பட்டாபிஷேகமுந் தரித்து சிங்காதனத்தில் வைத்துக்கொண்டு ராசரீகம் பண்ணுகிறான் அப்படி என்வாசற்படிவிட்டு அயல்வீடேறி மூன்றுநாளாக போயிருப்பவளை நானழைத்துக்கொண்டு வீட்டில் வைத்துக்கொள்வேனேயானால் என்குலத்தார் என்வீட்டில் கைநனைக்கமாட்டார்கள். அந்தராமன் குலத்தைப்போல என்குலமென்றெண்ணாதே அப்படியல்லவென் றழைத்தாலும் நம்முடைய குலத்தார் நம்மையேசுவார்கள் அந்தராமனைப்போல் என்னையுமெண்ணாதே போபோ பயித்தியக்காரி

யென்று வண்ணான்சொல்ல வாய்வராமல் சும்மாயிருந்துவிட்டாள். அதுசமாச்சாரந் தங்களுக்குச் சொல்லாமற் போனேமேயானல் எங்களுக்கு ராமத்துரோகமல்லவோவென்று தலையாரிகள் கூறினார்கள்.

அதுகேட்டு ராமமூர்த்தி தலையையசைத்துக் குஞ்சிரிப்புக்கொண்டு தலையாரிகளைப் பார்த்துச் சொல்லுகிறார் தலையாரிகளே இதனால் அவன்மீது குற்றமென்னயிருக்கிறது "உலைவாயைமூடினாலும் ஊர்வாயை மூடப்போமோ" வென்றுசொல்லித் தலையாரிகளை யனுப்பிவிட்டுத் தான் காலப்பிரவர்த்திக்குப் போய் காலலம்பிக்கொண்டு தந்தசுத்திபண்ணி அனுஷ்டானங்களைமுடித்து அரண்மனையில்வந்து போசனமருந்தி கற்பூர தாம்பூலமெடுத்துக்கொண்டு லோகமாதாவான சீதையம்மனுடனே முகங்கோணாமல் சரசசல்லாபமாய்ப்பேசி விளையாடிக்கொண்டு சற்றுநேரமிருந்து ஆடையாபரணந்தரித்து கிரீடம்பூண்டு அம்புறுப்பொதி முதுகிற்றரித்து கையிற்கோதண்டத்தைப்பிடித்து ஆயிரங்கன்னிமார்புடைசூழ, வெற்றிசங்குகுறிக்க சன்னமுத ரத்தினகுடைகவிய, க்ஷாமரம் மயில்விசிறிபோட வேசியர்கள் நடனம்புரிய, கட்டியங்கூற, புலவர்கள் புகழ மத்தளம் புள்ளாங்குழல் ருத்திரவீணை சங்கீதமேளவாத்தியங்கள்முழங்க, ராமரானவர் அரண்மனையைவிட்டு வெளியேபுறப்பட்டார்.

அப்போது லட்சுமணரும் பரதர் சத்துருக்கரும் ஆடையாபரணம்பூண்டு கிரீடமணிந்து அம்புறுப்பொதியுஞ்சாத்திதனுசை கையிலே பிடித்துக்கொண்டு ராமரைவந்து நமஸ்கரிக்க ராமமூர்த்தியும் அவர்களையெடுத்து ஆசீர்வாதஞ்செய்தார். பிறகு மந்திரிமார்கள் சேனாதிபதிகள் தனவான்கள்படைத்தலைவர்கள் எதிர்கொண்டுசேவிக்க சகலருக்கும் ஆசீர்வாதம்புரிந்து சபாமண்டபம்வந்து முப்பத்திரண்டு சிங்கங்கள் தாங்கப்பட்ட இந்திரசிம்மாதனத்தில் ராமரானவர் வீற்றிருந்தார் பரதலட்சுமணர் சத்துருக்கரும் ஒவ்வொருபடிதாழ உட்கார்ந்தார்கள். சேனாதிபதியான சூரசேனனும் படைத்தலைவர் சேனாதிபதிகள் நால்வகைச் சேனைத்திரளும்வந்து ராமரைச் சேவித்து அவராசீர்வாதம்பெற்று உட்கார்ந்தார்கள் இப்படி நிறைந்த கொலுவாக சுவர்க்கராசனைப்போல ராமர் தம்பிமார்களுடனே மந்திராலோசனைகளும் இராஜநீதி திட்டங்களும் பேசிக்கொண்டிருக்கையிற் சூரியனஸ்தமித்ததைக்கண்டு ராம

மூர்த்தியானவர் மந்திரிபிரதானி நால்வகைச்சேனை பரிவாரங்களுக்கும் விடைகொடுத்து சபாமண்டபம்விட்டு தம்பிமார்களுடன் கூடப்புறப்பட்டு முப்பத்திரண்டு மேளவாத்தியங்கள் முழங்க அரண்மனைவந்து சந்தியானுஷ்டானம் முடித்துக்கொண்டு போசனமருந்தி சீதையம்மனுடன் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து ஒருவருக்குந் தெரியாமல் கருப்புக்கம்பளியொன்றைப் போர்த்துக்கொண்டு கரத்தில் ஒருகோலைப் பிடித்து வண்ணார வீதியாக வருகிறபோது அப்பெண்ணுக்குத் தாய்தகப்பனார் பத்துவண்ணாரைக்கூட்டி புருஷனையழைத்துக் கேட்கிறபோது தலையாரிகள் கூறியபடியே சொன்னான் ராமமூர்த்தியும் ஒன்றுமறியாதவரைப்போல் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போ தந்தவண்ணானும் ஒரேபிடிவாதமாய் அயல்வீடுபோன பெண்சாதிவேண்டாமென்று தீர்ப்புச்செய்துவிட்டான்.

அப்போது ராமபிரான் மூக்கின்மீது விரலைவைத்து இந்த ரசகனை வண்ணானுக்கு நாம் ஈடாகாமற் போய்விட்டோமென்று மனம்வெட்கித் தன்னரண்மனை வந்து வேஷத்தை மாற்றிக்கிரீடந்தரித்து புஜகீர்த்தியணிந்து ஆடையாபரணந்தரித்துக் கையிற் கோதண்டத்தைப்பிடித்து ஒண்டியாய்ப் புறப்பட்டு கொலுமண்டபம் வருகையில் அப்போதந்தக்கொலுமண்டப மெப்படியிருந்ததென்றால் தங்கத்தைச் சேறுசெய்து நவரத்தினத்தாலே கற்களழுத்தி பவளத்தினாற் புதுக்கிவைத்து பத்தரைமாற்றுத் தங்கத்தினாற் கால்கள்நிறுத்தி தங்கப்பாளத்தினாற் பலகைசேர்த்து அந்தப்பலகையில் நவரத்தினத்தாற் சித்திரங்களெழுதி அந்தமண்டபங்களில் நிலைக்கண்ணாடிகள்கட்டி நவரத்தின ராந்தல்கள்வைத்து அந்த நவரத்தின ராந்தல் விளக்கேற்றி ரத்தினத்தோரணங்கள்கட்டி மண்டபத்தினுள்ளே பாவுகல்பரப்பி முத்து நவரத்தினத்தாலே கோலங்களிட்டு ரத்தினக்கம்பிளிகள் விஸ்தாரமாய்ப் பரப்பி அதன்மீது ரத்தினசிம்மாசன மமைத்திருக்கின்றது அந்த சிம்மாதனத்தில் வந்துட்கார்ந்து ஆரடா சேவகனே யென்றார் அப்போது பதினாயிரஞ் சேவகரோடிவந்து சுவாமியை நமஸ்கரித்து கைகட்டி வாய்புதைத்து நின்றார்கள். அதுகண்டு ராமமூர்த்தி சேவகர் யாவரையு மனுப்பிவிட்டு ஒரு சேவகனையழைத்து பரதலட்சுமணர் சத்துருக்கருமிந்தமூன்று பேரையும் உன் தமையன் அழைத்துக்கொண்டு வரச்சொன்னா

றென்று சலுதியிற்போ அழைத்துவாவென்று அப்படியே அந்தச்சேவகன் வாயுவேக மனோவேகமாயோடி பரதர் லட்சுமணர் சத்துருக்கரை நமஸ்கரித்து சொல்லுகிறான் ஓ சுவாமிகளே! உங்களை ராமமூர்த்தியானவர் அதிசீக்கிர மழைத்துக் கொண்டுவரச்சொன்னார். பின்னையொரு சமாச்சாரமு மறியேனென்றான் சேவகனானவன்.

அதுகேட்டு தம்பிமார்மூவரும் வஸ்திரந்தரிக்க நேரமில்லாமல் கோதண்டத்தைக் கையிற்பிடித்துக்கொண்டு ஓட்டமு நடையுமாகவந்து சுவாமியை நமஸ்கரிக்க, ராமர் தம்பிமார்களுக்கு ஆசீர்வதித்து தம்பிமாரைப்பார்த்து வாருந்தம்பிமார்களே, நம்முடைய வம்மிசத்திலில்லாத நடத்தை நடந்தபடியினாலே சிரமமும் நமக்கு அபகீர்த்தியும் வந்து சேர்ந்தது அதென்னவெனில், இராவணன் சீதையைப் பத்துமாதமசோகவனத்தில்வைத்து நாம்போய் அவனைச் சங்கரித்துசீதையை யழைத்துவந்து பட்டாபிஷேகமாய்ப் பட்டணத்தில் வைத்துக்கொண்டபடியினாலே அபகீர்த்திவந்தது. அவளை அவ்விடத்திற்றானே விட்டுவந்தோமானால் நமக்கு அபகீர்த்தி வரமாட்டாது. காரணம் யாதென்றால், இப்போது நகர்சோனைக்குப் போயிருந்தேன் அவ்விடத்தில் என்னசமாச்சாரமெனில் புருஷனும் பெண்சாதியும் சண்டைபண்ணி பெண்சாதியானவள் அயல்வீடுபோயிருந்தாள். அவள் புருஷனுக்குத் தாயானவள் பிள்ளையைப்பார்த்து அடா! தம்பி? உன் பெண்சாதி பிணங்கிக்கொண்டு அண்டைவீட்டில் மூன்றுநாளாய்ப் போயிருக்கின்றாளே அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டுவாவென்றுசொன்னாள். அதுகேட்டு பிள்ளையானவன் அடியம்மா போபோபயித்தியம்பிடித்தவளே அந்தராமன் பெண்சாதியை ராவணன்கையில் பத்துமாத மொப்பித்துப் போட்டு அதற்குபிற்பாடு குரங்கு சேனைகளைக் கூட்டிக்கொண்டு ராவணனைக்கொன்று சீதையை யழைத்துவந்து பட்டமுந் தரித்து ராச்சியமுமாளுகிறான். அந்தராமன் குலத்தைப்போல என் குலத்தை எண்ணாதே என் வாசற்படிவிட்டு மூன்று நாள் அயல்வீட்டிற்போ யேறினவளை நான்போ யழைத்தேனேயானால் என்குலத்தாரெல்லோரு மென்னை யேசுவார்கள். அப்படி அயல்வீடுபோனபெண்சாதி எனக்கு அக்கரையில்லையென்று தீர்ப்புக் கொடுத்துவிட்டான் ரசகனானவண்ணானானவன், ஆனபடியினாலே சீதையை இப்போதுதானே கொண்டு

போய் வனத்தில் விட்டுவந்தால் உத்தமமாய் காணுகிற தென்ருர் ஸ்ரீராமமூர்த்தியானவர். அவ்வார்த்தையைக்கேட்ட தம்பிமார் மூவரு மிடிவிழுந்து சாய்ந்தமரம்போல் ஒன்றுஞ்சொல்லாமல் நின்றுவிட்டார்கள். அத்தருணத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்பியாகிய லட்சுமணனைப் பார்த்துச் சொல்லுகிருர், இலட்சுமணு! இட்சணமே காலதாமதஞ் செய்யாமல் சீதையை ரதத்திலேற்றிக்கொண்டு காடாந்த காரமானபுலி சிங்கம் சஞ்சரிக்கப்பட்ட வனத்திற் கொண்டுபோய் விட்டுவாவென்று திருவுளம்பற்ற லட்சுமணர் காதிலே நாராசத்தைக் காச்சிவிட்டதைப்போல பிரமைகொண்டு வாருமண்ணு, முன்னுலே ராவணசம்மார முடிந்தபிற்பாடு என்னம்மணியாகிய ஜானகிபேரில் சந்தேகமாய்ச்சொல்ல, அப்போது அக்கினியைவளர்த்தி முழுகிவருகையில் அக்கினியில் நம்முடைய தகப்பனுராகிய தசரதர்வந்து பழுதில்லையென்று சொல்லியிருக்க இப்போ வண்ணுன் சொன்னதினு லாகவேண்டிய தென்ன மற்றபேர் சொல்லியும் ஆகவேண்டியதென்ன, நீர்பூத்தநெருப்புக்கு கலக்கமுண்டோவென்றுகூறி, லட்சுமணரானவர் பின்வாங்கினர்.

அதனைக்கேட்ட ஸ்ரீராமர் பரதனைப்பார்த்து, வாராய் தம்பி பரதா நீயாகிலும்ஜானகியை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் வனத்தில்விட்டுவாவென்று சொல்லுகையில் பரதர்ஸ்ரீராமமூர்த்தியைநோக்கி கேளீர் அண்ணவே, தங்களுக்குத்தெரியாதயோசனை அடியேன் என்னசொல்லப்போகிறேன் அந்தஜானகியம்மன் அக்கினிக் கொழுந்தென்று யாவருக்குந் தெரியவரும் தேவர்ருக்குந் தெரியவரும் ஆனபடியினுலேயே உலகமாதாவாகிய லட்சுமியம்மன்பேரில் பழுதுசொல்லப்போமோவென்று பரதர் பின்னிடைந்தார் பிறகு ஸ்ரீராமமூர்த்தி சத்துருக்கரைப்பார்த்து, வாராய்தம்பி, சத்துருக்கா நீயாகிலும் சீதையைரதத்திலேற்றிக்கொண்டுபோய் யானைதோண்டான் நரிகள் வாழப்பட்ட ஆரணியத்தில் விட்டுவாவென்றுகூறச் சத்துருக்கர்மனது வெகுவாய்நொந்து ஆயாசப்பட்டு சர்வலோக ரட்சகராகிய சுவாமியே சகலமுந்தெரிந்து நிறைந்த மனதையுடைய உமக்கு ரசகனுனவண்ணுன் பகர்ந்தவார்த்தையைப் பெரிதாகயெண்ணி, நீர் நமது தந்தைமொழிக்கும் அதிகமான குருவாகிய வசிஷ்டரைப்பார்க்கிலும் வண்ணுன்சொல்லைச் சி

லாக்கியமாக நினைத்து சீதையம்மனை வனத்துக்கனுப்புதல் தகுமோவென்று சத்துருக்கரானவர் கூறிச் சற்றிடைந்தார்.

அப்போது ஸ்ரீராமமூர்த்தி ஆயாசமாய் வெகுதுயரத்துடனே தம்பிமாரைப்பார்த்துச் சொல்லுகிறார். தம்பிலட்சுமணா பரதசத்துருக்கா உங்களை நான் சகோதரரென்றும் எனக்கு வந்த ஆபத்தை தீர்ப்பீர்களென்றும், நினைத்தேன் அதுமாரி பங்காளியண்ணன் தம்பியைப்போல் பார்த்துக்கொண்டு என் வார்த்தையைத் தள்ளிப்போட்டீர்கள் இனி இப்பிராணனை வைத்துக்கொண்டு உங்கள் முகத்தில் முழிப்பதைபார்க்கிலும் இறப்பதே நலமென்று மந்திரவாளையுருவி கையிற்பிடித்துக் கொண்டு தம்பிமார்களே, நீங்களினி என்முகத்தின்முன்பு நிற்கவேண்டாம் அப்பாற் போய்விடுங்களென்று மந்திரவாளைக் கழுத்தின்பேரில் வைத்தார்.

அதைக்கண்ட பரதர் லட்சுமணர் சத்துருக்கர் ஓஓமோசம்வந்ததென்று ஓடிவந்து கழுத்தின்மீதுவைத்த மந்திரவாளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு லட்சுமணரானவர் சொல்லுகிறார். சுவாமி கொண்டபெண்சாதிக்காக உயிரைமாய்த்தால் தேவர்களும் நகைக்கமாட்டார்களா! நமது வமிசத்தில் அடாத குற்றத்தைச் சீதையம்மன்பேரிற்சொல்லி வனத்திற் கனுப்பிவிடலாமா! அப்படியே தேவரீருடைய மனதிற்கு கந்தபடி கொண்டுபோய் விடுத்து வருகிறேனென்று ராமமூர்த்திபாதத்தில் லட்சுமணர் விழுந்து நமஸ்கரிக்க, சுவாமியானவர் கோபந்தணிந்து மந்திரவாளைஉறையிற்போட்டுவிட்டார் பரதர் சத்துருக்கரும் நமஸ்கரித்து நின்றார்கள் அக்காலையில் சுவாமியானவர் லட்சுமணரைப்பார்த்து வாருந்தம்பி லட்சுமணா, முன்னால் சீதையானவள் வனம்பார்க்க வேண்டுமென்றுசொல்லியிருந்தாள் ஆனபடியினாலே சீதையை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் ஆரண்யத்தில் விட்டுவாவென்றார் இலட்சுமணர் சுவாமியைப்பணிந்து கொலுவைவிட்டு புறப்பட்டார் எப்படியென்றால், ஐயோதெய்வமே இப்பாதகத்திற்கு ஆளாகினேன் ஸ்ரீராமசுவாமியுடன் நான்பிறந்ததோஷம் என்னைப் பற்றிக்கொண்டது ஜானகியை அழைத்தால் அவளென்ன சாபமிடுவாளோ அண்ணா பரதா தம்பி சத்துருக்கா நீங்கள் நல்லபூசாபலம் பண்ணினீர்கள் முன்னாலே மாரீசனானவன் மானாகவரவும் ஜானகியம்மன்கண்டு அதைப்பிடித்துதரச்சொ

ல்லி என் தமயனைக்கேட்டுக்கொண்டதும், அவர் என்னை சீதை யண்டையில் காவல்வைத்து மான்பின்போகவும், அந்தமான் அகப்படாமல்போகவே ராமபாணத்தினுல் அதைக்கொல்ல வும், மானுகவிருந்த மாரீசன் இலட்சுமணுவென்று கூச்சலிட் டிறந்துபோகவும், அந்தசத்தம் ஜானகியம்மன்கேட்டு, இல ட்சுமணு உன்தமையனுக்கென்னமோ ஆபத்துவந்தாற்போல காண்கிறது ஆனபடியினுலே லட்சுமணுவென்றுகூப்பிட்டார் ஓடுமென்று ஜானகியம்மன்சொல்ல, என்னசொன்னுலுங் கே ளாமலிருக்க, பின்னுமந்த ஜானகியம்மனுனவள் கூறியது தமையனிறந்தால் தமையன்பெண்சாதி தம்பிக் குறியவளெ ன்றுகாத்துக்கொண் டிருக்கின்ருற்போல் காணுகின்றது அ ன்றியும் பாதன் உன்னுடனே சொல்லியனுப்பி யிருந்தார் அதையுங் கவனிக்காமற் போனபடியால் இனிநான் உனக்குச் சொந்தமல்லவோவென்று ஜானகிசொல்லவும் அப்பாவமான விசேஷத்தை என்காதில்கேழ்க்கவும், ஜானகியம்மனை கண்டு என் தமையனண்டைக்குப் போகவும், தமையனுனவர் எழுந் துதூரிக்கொண்டு ஜானகியம்மனிருந்த பர்ணசாலையை வந் துபார்க்கும்போது இராவணன் ஜானகியை எடுத்துக்கொண் டுபோய் அசோகவனத்தில் வைக்கவும் அதனுலே இராவ ணன் கும்பகர்ணன் இந்திரஜித்துடனே போராடி அவன் கையம்பினுல் சரீரத்தில் உயிர்ச்சதை யுண்டோ இல்லையோ வென்று அடிபட்டு நொந்து, அவனையுங்கொன்று அவனுற் பட்டகாயம் இன்னமும் ஆருமலிருக்க, இப்போது சீதையம் மனை வனத்துக்கு வாருமம்மாவென் றழைத்தால் என்னசொ ல்லுவாளோ ராமபத்திரா ராமச்சந்திரா என்னசெய்வேன் உமது கண்களுக்கு நேராக நான்தானே அகப்பட்டுக்கொண் டேன். என்னைப்போல் இன்னம் இரண்டு தம்பிமார்களிருக்க வில்லையோ, அரி அரி நான் முன்செய்த தீவினையோ, இப் போது உம்முடனே கூடப்பிறந்த தோஷமோ எவர்களும் படையாததமையனை நான்படைத்தபாவமோ, யிவ்வினைக் கெ ன்செய்வேன் தெய்வமேயென்று புலம்பிக்கொண்டு சீதையம் மனிருக்கும் அரண்மனைவந்து ஏழுகட்டுவாசற்படியுங் கடந் து எட்டாவதுகட்டில் நுழைந்துபோகிறபோது சீதையம்ம னுனவள் எப்படியிருக்கிருளென்ருல் பொன்னுஞ்சலிலேபஞ் சணை மெத்தையின்பேரில் பள்ளிகொண்டிருக்க, லக்ஷங் கன் னியர்கள் தாலாட்ட நவரத்தின குத்துவிளக்குகளெரிய, திர்

த்தனமாதர் நடனம்புரிய, சங்கீதவாத்தியம்முழங்க, சர்வ ஆடம்பரத்துடனிருக்கையில், இலட்சுமணர் சரேலென்று வந்துவிட்டார். அரண்மனை வாசற்படி காக்கப்பட்ட பெண்கள் கண்டு ஓடிவந்து ஜானகியம்மனைச் சேவித்து அம்மணீ இளையபெருமாளாகிய லட்சுமணர் வருகிறாரென்று சொல்லவே ஜானகியம்மனெழுந்து ஆடல்பாடல்களை நிறுத்தி உஞ்சலைவிட்டிரங்கி நின்றாள்.

அப்போது லட்சுமணர் சீதையம்மன் பாதாரவிந்தத்தில் தன்னுடைய கிரீடம்படியும்படியாக திர்க்கதெண்டஞ் சமர்ப்பித்தார். எப்படிக்கொத்ததென்றால், பிரமதேவர் தேவேந்திரன் மூப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் ஏகாதசருத்திராள் சித்தர் கின்னரர் கிம்புருடர் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் அஷ்டதிக்குப்பாலகர் அஷ்டவயிரவர்கள் வணங்கப்பட்டதும் சகலபுவனங்களையும் கெர்ப்பத்தில்வைத்திருக்கப்படாநின்ற ஸ்ரீமந்நாராயணருடைய மார்பிலே உரைகின்றதுமான திருவடிகளில் நமஸ்கரித்த லட்சுமணரையெடுத்து ஆசீர்வதித்து, சீதையம்மனவள் சொல்லுகிறாள் வாராய்தம்பிலட்சுமணா இன்னேரத்தில் என்னகாரியமாய்வந்தீர்சொல்லுமென்றுகேட்க, லட்சுமணர் தன்னுடையதுயரமெல்லாம்அடக்கிதிடப்படுத்திக்கொண்டுசொல்லுகின்றார்.

என்னம்மணியான சீதாகேளும், நீ முன்னாலே சுவாமியுடன் வனம்பார்க்க வேண்டுமென்று சொல்லியிருந்தாயாம் அதுவிஷயத்திற்காக சுவாமியானவர் இப்போது செலவுகொடுத்தார், வசந்தருதுகாலமாயிருக்கின்றது போய்வருவோம் வாருமம்மாவென்று இலட்சுமணரழைக்க, ஜானகியம்மன் தனக்கு ஆபத்துவருவது தெரியாமல் மனதில் மகாசந்தோஷமாகி தம்பி இலட்சுமணா நான் ஒருநாள் சுவாமியுடன் வனம்பார்க்கவேண்டுமென்று சொல்லியிருந்தது மெய்தான். அந்தச்சொல் இப்போது சுவாமிக்கு கவனம்வந்தது நான்செய்த பாக்கியமென்றெழுந்து, எங்கள் மாமியாரிடத்தில் செலவுவாங்கிக்கொண்டுவருகிறேன், சீக்கிரத்தில் ரதத்தை சிங்காரித்து வாருந்தம்பியென்று சீதையம்மன்சொல்லி லட்சங் கன்னியர்கள்புடைசூழ, முத்துப்பல்லக்கிலேறி மாமியார்களிடஞ்சென்று பல்லக்கை விட்டிழிந்து தண்டை சிலம்பு பாதச்சுருள் கொலுசுகள் சப்திக்க, அரண்மனைக்குட்புகுந்து கௌசலை

கைகேசி சுமித்திரை மூன்றுமாமிமாருக்கும் பூசைகள்செய்து நமஸ்கரித்தாள்.

அப்படி வணங்கிய ஜானகியம்மனை வாரியெடுத்து வாழ்த்தி மார்போடணைத்து முத்தமிட்டு ஒரு பொற்பீடங் கொடுத்து உட்காரச்சொல்லி அம்மூன்று மாமிமார்களுஞ் சொல்லுகிறார். அடியம்மா சீதா இந்நேரத்தில் என்னகாரியமாக வந்தாய், அப்படிப்பட்ட அவசர முண்டாகில் ஒரு தாதியுடன் சொல்லியனுப்பப்போகாதோ, அவ்வளவு அந்தரங்க விசேஷமுண்டானால் சொல்லுமம்மா வென்றுகேட்க, ஜானகியம்மன் சொல்லுகிறாள் அம்மா நான் வனம்பார்க்க வேண்டுமென்று சுவாமியுடனே சொல்லியிருந்தேன், இப்போது சுவாமிக்கு சித்தமிரங்கிச் செலவுகொடுத்தார் நான்போய் வனம்பார்த்து வருகிறேனம்மாவென, மாமியார் நீதான் எவ்வாறு போவாய் இப்போது காடுவனந்தான் பார்க்கப்போமோ, ஆறு மாதபிண்டம் கெற்பத்தில் நிற்கச்சே, ஆறுகள் கடக்கப்போகுமா, வாசற்படிதாண்டி வெளியில் போகப்போமோ சரீரம் அதிராதோ ரதத்திலேறினால் கெற்பங்கலங்காதோ நீபோகிறது யெங்கள்மனங் கலக்கமாகக் காணுகிறது நீ போகவேண்டாம் கெற்பமதிர்ந்து சரீரம்நோகும் எங்கள் வார்த்தையைத் தடுக்காதே உன்னரண்மனை போயிருமம்மாவென்று கௌசலையம்மன்சொல்ல, அதுகேட்டு சீதையம்மன் மூன்றுமாமிமாரையும்பார்த்து, அம்மாயெனக்கு வனம்பார்க்க பிரமையாயிருக்கின்றது, சுவாமிவார்த்தைக்கு மறுவார்த்தையுரைத்தால் ராமத்துரோகம் வந்துசேரும். அவருக்குச் சித்தமிரங்கி தம்பியாகிய லட்சுமணரையுங் கூட்டியனுப்பினர். அவரும் ஆசாரவாசலில்வந்திருக்கிறார் நானங்கே உங்களுத்தரவு கேட்கவந்துவிட்டேன் அதிசீக்கிரம் நீங்களும் மனங்களித்து விடைகொடுங்களென்று ஜானகியம்மன் மூன்று மாமிமாரையும் வணங்கினாள். அதற்கு கைகேசி சுமித்திரையும் சொல்லுகிறார்கள். அம்மா சீதா ஸ்ரீராமர் வனம்போகச் சொன்னரென்றும் இலட்சுமணர் காத்திருக்கிறாரென்றும் மனங்கூசாமல்சந்தோஷமாக எங்களைச் செலவுகேட்கவந்தாய் அல்லவா, நீ கெற்பசிகாமணியாயிருக்கையில் இந்தராத்திரி காலங்களில் இரதமேறி நடந்தால் உன்சரீரம் அதிருவதன்றி கெற்பவாதையுண்டாகும் அப்படியல்லவென்று ஸ்ரீராமன் வார்த்தை தள்ளாமற்போனாலும் வனங்களில் சஞ்சரிக்கப்பட்ட கரடி புலி சிங்க

ங்களைக்கண்டால் உனக்குப் பயத்தினாலே பிண்டமுங் கலங்கும். நீ வனம்பார்க்கப்போவது எங்கள்மனதிற்குச் சம்மதமில்லை, நாங்கள் சொல்லப்பட்ட வார்த்தை உன்கருத்திற்குத் தெரியவாராதென்றுசொல்ல, அதுகேட்டு லட்சுமியான சீதாதேவி திடுக்கிட்டுக் கைகேசி சுமுத்திராதேவியைப் பார்த்துச் சொல்லுகிறாள் என்மாமியாரே கேளுங்கள் நீங்கள்சொன்னதெல்லாமெய்தான் இப்போதுதான்காடுவனம்பார்க்கத்தகாது தான் அந்த ரகுநந்தருடைய திருவாக்குக் கெதிர்வாக்குச் சொல்வேனேயானால் நரகம்வந்து சம்பவிக்கும் அப்படி அடியாளுக்கு வராதபடி மனமிரங்கி செலவுதரவேண்டுமம்மாவென்று மூன்று மாமியாரையும் பார்த்து நயந்துசொல்ல, அதற்குள் கௌசலை கைகேசி சுமித்திரை மூவரும் ஜானகியை நோக்கி அம்மா சீதா நீ காடுவனம்பார்க்கப் போகவேண்டாமென்று கூறவில்லை கெர்ப்பவதி யானபடியால் இவ்வளவு தூரம்சொன்னோம் உன்மனத்திற்கு ஆயாசம்வேண்டாம் இராமன் மொழியைத் தள்ளாமல் ஆரணியத்தில் நீ நாள்படனில்லாமல் சலுதியில்வந்து சேரென்று மூன்று மாமிகளும் உத்தரவுகொடுக்கவே ஜானகியம்மன் மூவரிடத்திலும் செலவு பெற்றுக்கொண்டு முத்துப்பல்லக்கிலேறி ஊர்மளாதேவி சுருதகீர்த்தி மாண்டலி இம்மூன்று தங்கையர் அரண்மனைக்குப் போய் அவர்களிடத்திலும் உத்திரவு பெற்றுக்கொண்டு வருகையில் லட்சுமணரானவர் அச்சுக்கு எண்ணையிட்டு மச்சுக்கு வர்ணந்தீர்த்து குத்துக்கால் கொடுங்கை குடை கொடிச்சீலைகளிட்டு சிங்கம் யாளிகளைக்கட்டி டால் துவசம் பறக்கத்தக்க நான்கு குதிரைகளைப்பூட்டி மகாவேடிக்கையுடனே ரதத்தைச் சிங்காரித்து ஒருகையில் சவுக்கை யேந்தினார்.

சீதாபிராட்டியார் தேர் ஏறுதல்.

சீதையம்மனும் பல்லக்கைவிட்டிறங்கி அரண்மனைக்குள் நுழைந்து ஆடையாபரணங்க ளணிந்து தாம்பூலந்தரித்து தனக்குவேண்டிய இஷ்டமான பண்டங்களையுந் தாதிகளால் எடுப்பித்துக்கொண்டு இலக்ஷங்கன்னிமார்கள் புடைசூழ மத்தளம் ருத்திரவீணை சங்கீதவாத்தியங்கள் தாம்தாமென்றுமுழங்க ரதத்தின்மீது வந்தேறினாள் உலகமாதாவாய் விளங்கப்பட்ட சீதையம்மனனவள்.

இலட்சுமணரும் சீதாபிராட்டியும் தேர்மறி வனம்போகுதல்.

அதையறிந்து இலட்சுமணரும் அளவற்ற துயரத்துடனே சவுக்கினுல்சடாலென்று குதிரையின்மீது தட்டிவிட்டார் அந்தச்சத்தங் கேட்டமாத்திரத்தில் குதிரைகளானது வாயுவேகமனோவேகமாய் நடக்கும்போது அச்சுகுலுங்க மச்சு அசைய டால்துவசம்பறக்கக் கருடக்கொடிசாய்ந்தாட ரதத்தில் கட்டிய மணிகளெல்லாம் கணகணவென்று ஓசைப்பட பூமியானது கிடுகிடென்ன மகா சிங்காரத்துடனே ரதமானது போகையில் அதைக்கண்டு தேவர்களெல்லாந் துயரமானார்கள் ரதம் நடக்கிற அதிர்ச்சியினாலே அயோத்தியாபுரி வீதியிலிருக்கப்பட்ட பிராமணஸ்திரீகளுஞ் சூத்திரஸ்திரீகளும் புருஷர்களுமெழுந்து கதவைத்திறந்து வீதியில்வந்து வேடிக்கைபார்ப்பவரும், அந்தரங்கமேறி பார்ப்பவரும், மேடைமெத்தைகளேறி பார்ப்பவரும் இன்னம் அந்தரதம்; போகிறது எப்படியிருக்கிறதென்றால் அயோத்தியில்வாழப்பட்ட இராஜலட்சுமி அந்நகரைவிட்டுப் பிரியமாட்டாமல் தானும் சீதையம்மனுடன்கூட வனஞ்சென்று பார்க்கப்போகிறவளைப்போலவும் சகலமானவர்கள் கண்களுக்குங் காணப்பட அப்போது ஜானகியம்மனுனவள் மனக்களங்கமில்லாமல் மகாசந்தோஷமாய் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்று சொல்லப்பட்ட நாலுவீதியுங்கடந்து கோட்டைவாசற்படிக்குள் நுழைந்து ஏழுவாசற்படியும்விட்டு மெத்தையைத்தாண்டி வருகிறபோது ரதமானதுகுலுங்க அச்சு ஆணி கழண்டு முறிந்தது லட்சுமணரும் சீதையம்மனும் திட்டென்று பூமியில் லகுவாய் குதித்துவிட்டார்கள்.

அப்படி குதித்தமாத்திரத்தில் ரதமானதுபுரண்டு கீழேவிழுந்துபோய்விட்டது அதைப்பார்க்கத் தேவர்கள் மனஸ்தாபமடைந்தார்கள் இலட்சுமணரும் விசனமடைந்து ஆஹா இந்தரதமானது அச்சுமுறிந்து ஆணிகழண்டு பூமியில்விழக் காரணமென்ன இதென்ன காலக்கேடோ இந்த அயோத்தி நகருக்கென்ன அனர்த்தமோ தெரியவராதென்று மனதிலெண்ணி சிந்தாக்கிராந்தனாகச் சீதையம்மனை ரதத்தண்டை நிறுத்திவிட்டு தாம் அயோத்திக்குள் நுழைந்து ரதசாலையிற்போ

லட்சுமணர் சீதையும் சகுனம்பார்த்தல். சீதையம்மன் வால்மீகர் ஆசிரமம்சேர்ந்தது. சீதையம்மன் புத்திரனைப் பெற்றது.



ஆஞ்சநேயர் ராஜர்களுக்கு அறிவித்தல். ராஜர்கள் அயோத்தியைச் சேர்ந்தது. குதிரைவிட்டது.

ய் வேறொரு அச்செடுத்துவந்து ரதத்திற்பூட்டி ஆணிபிகிந்து நான்குகுதிரைகளையும் அந்த ரதத்திற்கட்டி ஏறம்மாவென்ன அதுகேட்டு ஜானகியம்மன் சொல்லுகிறாள். தம்பிலட்சுமணா ஒருகாலத்திலும் அழிவில்லாத ரதம் இன்றையதினம் அச்சியானது முறிந்து பூமியில்விழக் காரணமென்ன நான் வனம்பார்க்கப்போகையில் இப்படிப்பட்ட அவசகுனங்கள் எனக்குநேரிட்டது என்மாமிமார்களாகிய கவுசலை கைகேசிசுமித்திரை யிவர்கள் உறியவசனம் முன்னுக்கு வந்தது ஆனபடியினாலே அயோத்திக்கு ரதத்தைத் திருப்புமென்று ஜானகியானவள் சொல்ல அதுகேட்டு லட்சுமணர் சொல்லுகிறார் வாருமம்மா சீதா எப்போதும் ரதத்தின்பேரிலேறினால் விநாயகர்பூசை செய்கிறதுண்டு அதை நான் மறந்தபடியினாலே ரதத்திற்கு அழிவு நேரிட்டது இப்போது சூரியன் அஸ்தமித்து இரண்டரை ஜாமமாயிற்று இதோ விநாயகர் பூசைசெய்தேன் ரதத்தின்மீது யேறுமம்மா வெனவே சீதையம்மன் தயிரியமாய் வந்தேறினாள் அத்தறுவாயில் அதிவேகமாய் லட்சுமணரானவர் இரதத்தை நடத்தவே அந்தரதமானது அயோத்தியாபுரி கோட்டையைவிட்டு ஐந்துநாழிகை வழிதூரம்வரையில் வந்துவிட்டது.

சீதாபிராட்டி வழியில் சகுனங்காணல்.

அப்போது சீதையம்மன் நிலவிலே குளிர்ந்தநேரத்தில் இலட்சுமணருடனே வெகுசந்தோஷவார்த்தையாடி இராமரைத்துதித்துக்கொண்டு மனச்சஞ்சலமில்லாமல் போகும்போது ஒருநாயும் நரியும் லட்சுமணருடையரதத்திற்கு முன்வந்து நாய் அழ நரி ஊளையிடக்கண்ட லட்சுமணரானவர் இதென்ன நமதுரதத்தின்முன்னே நாயும் நரியும் அழவேண்டியதென்னவென்று சிந்தித்து நாள்பட கலகம் வருமென்றறிந்தும் அறியாதவரைப்போல் ரதத்தை அதிவேகமாய் நடத்தினார் சீதையம்மனனவள் தம்பிலட்சுமணா நமதுரதத்தின் முன்பாக நாயும் நரியும்வந்து அழுகிறதைப்பார்க்கவில்லையோ ரதத்தை நிறுத்தும் என்றாள். லட்சுமணரானவர் வாராயம்மாசீதா இப்படிக்கெல்லாம் துயரப்படவேண்டாம் இப்போது நாமிருப்பதற்கும் அயோத்தியாபுரிக்குங் காதவழிக்குமேலாச்சுது இது நமது ஊரைச்சார்ந்த காடாகையால் சகுனம்பார்க்கவே

ண்டியதில்லை கவலைப்படாமல் வாருமம்மாவென்று ரதத்தை மெள்ள நடத்துகிறபோது அம்மன் மெய்தானென்று லட்சுமணருடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு போகுந்தருணத்தில் ஒரு இருண்டதோப்பானது தோன்றியது அத்தோப்பில் ஒரு ஆந்தையானது சீறல்சீறினது லட்சுமணர் இதென்ன விபரீதமானவார்த்தை சொல்லுகின்றது என்னமாய்முடியுமோ ஏதாய்விளையுமோ ஐயோ சீதைதானிறந்துபோவாளோ தெரியவராதென்று சித்தம்நொந்து மெத்தவருத்தம்வந்து கர்த்தனே கமலக்கண்ணனே அரி அரியென்றுளரியும் நெருப்பில் விழுந்த மெழுகுபோலாகி ரதத்தைச்செலுத்துகையில் ஜானகியானவள் தம்பிலட்சுமணு ஆந்தைசீரல் சீறினதுகேழ்க்கவில்லையோ நில்லென்றாள். அதற்குலட்சுமணர் அம்மணிநீயேன் சகுனம் பார்க்குறாய் காடானபடியினாலே கண்டபட்சிகளெல்லாம் காகூவென்றுகூச்சலிடும் இதெல்லாம் தெரிந்தவர்கள் பாராட்டுவார்களோ கலக்கமுறாமல் வாருமம்மாவென்று ரதத்தை நடத்தவே அதுவு மெய்தானென்று சீதையம்மனும் வருத்தமுந்தீர்ந்து நடக்குங்காலத்தில் ரதமானது அயோத்தியாபுரி பட்டணத்தைவிட்டு ஊர் நாடு கடந்து வெகுதூரம் வந்துவிட்டது அப்படிவருகிறபோது காடு செடி மலை பர்வதங்களெல்லாம் கிடுகிடென்று அதிரும்படியாய் வருகையில் அக்காட்டில் ஓர் வேடுவச்சி ஒற்றைக் குரலிட்டு அழுதுக்கொண்டு ரதத்திற்கெதிரே வருகிறதைக்கண்ட லட்சுமணரானவர் மெத்தவுந்திகிலடைந்து சிறகற்றபட்சிபோலுந் தீயில் விழுந்த புழுப்போலும் தியங்கி மயங்கி ஐயனே! வைகுந்தத்தில்வாழும் மெய்யனே! சங்குசக்கரக்கையனே! நிகரில்லாத்துய்யனே! இந்த சீதையம்மனுலே அயோத்தியாபுரிக்கு என்ன அனர்த்த முண்டாகிறதோ தெரியவில்லையென்று சித்தத்திலெண்ணி செடியடர்ந்த காட்டை நண்ணி ரதத்தை வேகமாய் நடத்தினர்.

அப்போது சீதையம்மனுனவள் அரவின்வாயகப்பட்ட தேரையைப்போலும் ஆலையிலிட்ட கரும்புபோலும் நைந்து சிந்தைநொந்து சொல்லுகிறாள். தம்பிலட்சுமணு பார்த்தாயோ ஒரு வேடுவச்சியானவள் தலைமீது கையைவைத்து ஒற்றைக்குரலிட்டு அழுதுக்கொண்டு வந்தாளே அவளையுங் கண்ணுற் காணவில்லையோ இந்தச் சகுணங்க ளாகாதென்பது மனதிற் றோணவில்லையோ ஆ! ஆ! அரி அரி நான்

வனம்பார்க்க வந்ததும் போதும் போதும் மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம் என்ற ஔவையார் மொழிக்கிணங்க, மாமி மார்கள் வார்த்தையைத் தடுத்து வந்ததற்கு வழியிற் காணுஞ் சகுணமே சாட்சியாகத் தோன்றுகிறதே ஆகையால் ரதத்தை அயோத்திக்குத் திருப்புமென்றாள் அதுகேட்டு லட்சுமணர் பயந்து வாருமம்மா தாயே துக்கமுள்ளபேர்கள் அழாம லிருப்பார்களா துதிமிகுந்தவர்கள் தொழாம லிருப்பார்களா நாம் இதுகளெல்லாம் பார்க்கவேண்டியதில்லை ஸ்ரீராமர் செலவு கொடுத்த சகுணமே பெரிது அந்த சகுணத்திற்கு முன்பு இந்தச் சகுணமெல்லாம் பெரிதல்ல, நீ சஞ்சலப்படாமல் வாருமம்மாவென்று சொன்னார். அதுகேட்டு ஜானகியம்மன் மனந்தேறி சந்தோஷ வார்த்தைகளுடன் அதிகவேகமாய் ரதத்தை நடத்திக்கொண்டு பாலைவனம்போய்ச் சேர்ந்தார்கள்.

அந்தப் பாலைவனத்திற்கும், அயோத்தியாபுரி பட்டணத்திற்கும் நூறுகாதமாகியும் பொழுதுவிடிகிறதற்கு ஜாமபரியந்தமிருக்கிறது அப்போது ரதமானது ஆறுகள், மடுவுகள், குட்டைகள் கடந்து, அப்பால் வனத்தினடுவே போகும்போது நான்குகுதிரைகளுக்கும், கால்கள் ஓய்ந்து ஓடமாட்டாமல் திகைத்து நின்றுவிட்டது. அதுகண்டு நான்கு குதிரைகளையும் அதட்டினார். அந்தக்குதிரைகளானது, சீதையம்மனவள் நான் வனம்பார்க்கப்போகிறது குதிரைகளுக்கு மனமில்லை, ஒதுங்கி நிற்கவேண்டிய காரணமென்ன, குதிரைகளைச் சிக்குவாங்கி ரதத்தை அயோத்திக்குத் திருப்புமென்றாள், வாராயம்மா சீதா காடுவிழுது கொடியபள்ளமானதாலும் இராகுகாலமானபடியினாலும், குதிரைகள்வேசாரிக்கொடிவிழுதில் கால்கள் சிக்குப்பட்டு நடக்கமாட்டாமல் திகைத்துவிட்டன. அதனாலாகவேண்டிய சகுனமென்ன. இதோ சிக்குவாங்கி ரதத்தைநடத்துகிறேன். விசனப்படாமல் வாருமம்மாவென்று சிக்குப்பட்ட குதிரைகளைத்தடவி தட்டிக்கொடுத்து ரதத்திலேறி அந்தப்பாலைவனத்தையுங் கடந்து, அப்பாற்செல்லுகையில், காடுசெடியில்லாமல் ஏகவெளியாய் ஓர் மைதானந்தோன்ற அம்மைதானத்தில் ரதமானது அதிகவேகமாய் வருகையில், ஒருசர்ப்பமானது இரதத்திற் குறுக்கேயோடிற்று ஓடவே இலட்சுமணர்கண்டு, ஐயோ இந்தச் சீதையம்மனாலே நமக்கு என்னசாபம்வந்துநேரிடுமோ, எத்த

ன யென்றுதான் சொல்லுவோம். எவ்வளவுதான் மனந்தா
நவோமென்று சிந்தைவாடி ஒன்றுஞ்சொல்லாமல் ரதத்தை
விரைவாய் நடத்தவே அப்பால் சீதையானவள் தம்பி லட்சு
மணு பாம்பு குறுக்காகப் பாய்ந்துதே நீ பார்க்கவில்லையோ!
என்ன பாபமோ எவரிட்ட சாபமோ தெரியாது.

நான் வனம்பார்க்க வேண்டுமென்று சுவாமியுடன் கூறி
பதும்போதும், அவறின்றைக்குச் செலவு கொடுத்ததும்போ
தும் ரதத்தை திருப்புமெனவே வாராய் தாயே நாமிருவரும்
ரதத்திலேறி நடக்கிற அதிர்ச்சியினுலே பூமியிலுள்ள ஜீவரா
சிகள் வெளிப்பட்டுவருகின்றது. ஈதொரு சகுனமோ இச்சகு
னங்களை யோசிக்க வேண்டிய தில்லையென்று சந்தோஷ வார்
த்தைகளைச் சொல்லிக்கொண்டும் ரதத்தை நடத்துகையில்,
பொழுது நிலந்தெளிந்து வருவதைக்கண்ட சீதையம்மனுன
வள் மனந்தேறி விசனமாறி ஸ்ரீராம நாமத்தைக் கோறி, ரத
ம்போகிற வேகத்தை இலட்சுமணருடனே சொல்லிக்கொ
ண்டு செல்லுகையில், அந்தவேளையிலே ஒரு ஆலமரமானது
சொள்ளைவிழுந்து டோங்காயிருந்தது, அந்த டோங்கிலிருந்
து ஒருகோட்டானுனது, வெளிப்பட்டுக் கூச்சலிடவே லட்சு
மணர்கண்டு, மிகவுந் திகிற்பட்டு, ரதத்தை நடத்துகையில்,
சீதையம்மனுனவள் தம்பி லட்சுமணு, கோட்டான் கூவின
தைக் கேழ்க்கவில்லையோ! இரதம்போகும் வேகத்தில் உன்
னுடையகாது கேளாமற் போச்சுதோ, நான் வனம் பார்க்க
வந்த பிரமை எனக்குப் போதும் போதும் கோட்டான் சகு
னம் பொல்லாதது. இத்தனை சகுனத்திலும் கோட்டான் சகு
னம் நான்சோதித்திருக்கிறேன். இந்தசகுனம்கண்டு அடியெ
டுத்து வைக்கப்போகாது தம்பிலட்சுமணு சுவாமிக்குத்தானெ
ன்னமோ பரதருக்குத்தானென்னமோ வலதுபுஜமுந் துடிக்கி
ன்றது, முன்னுலே இராவணன் என்னைப் பர்ணசாலையோ
டே தூக்கி, இரதத்தில் வைத்துக்கொண்டு போகிறபோது,
கண்ட சகுனமெல்லாம் இப்போது கண்டேன் ஆனபடியி
னுலே என்வார்த்தையைத் தள்ளாமல் இரதத்தைத் திருப்பு
மென்று ஜானகியம்மன் சொல்லவே இலட்சுமணரானவர்
கேட்டு, வாராயம்மா சீதா ஆருக்கு ஆபத்துவந்தாலும், என்
தமயன் தம்பிமாருக்கு யாதொருதுன்பமுந் துயரமும் வரமாட்
டாது. நீ முன்பும் இப்படிதான் மானைப் பிடித்துக்கொடுக்க
ச்சொல்லி, என் தமயனை மானின்பின்னுலனுப்பிவிட்டு, என்

னேயுந் தூஷணித்து, துரத்திவிட்டாய் என்வார்த்தையைக் கேளாமலு மிருந்தாய், உன்னாலே நாங்கள் வெகுவாகக் கஷ்டமடைந்தோம். இன்னம் அந்தப் புண்ணனது ஆறவில்லை, அதெல்லாம் உனக்குத் தெரிந்தும் இப்போது நான்சொல்லி வருகிறதும் உனக்குத் தெரியவரும் அப்படி என் தம்பிமார் தமயனுக்கு இக்கட்டு வருவது ஒருக்காலுமில்லை. அல்லது அவர்களுக்கு யேதாகிலும் சங்கடம் நேரிடுமாகில் இந்த உலகந்தானேது. அந்த உம்பருலகந்தானேது நீ யறியாயோ! அப்படிக்கிருக்க, அந்தச் சகுனமெல்லாம் என்தமயன் தம்பிகளை ஒன்றும் செய்யமாட்டாது நான் சொல்வதை நம்பும் அம்மணி உனக்கு ஆர்தானீடு தேவேந்திராதி தேவர்கள்தானீடோ! உலகந்தானீடோ! சர்வ சம்மாரம்பண்ணப்பட்ட சங்கரன்றானீடோ! சர்வலோகத்தையுஞ் சிருஷ்டிக்கப்பட்ட சதுர்முகன்றானீடோ! சமஸ்தமும் ஒரு குட்சியில்வைத்த ஸ்ரீமந் நாராயணர்தானீடோ! எவர்கள்தான் உனக்குச் சமானமென்று பயப்படுகிறாய் இவ்வுலகத்தை கவிழ்க்கவேண்டுமென்றாலும் கவிழ்ப்பாய், கார்க்கவேண்டியதானாலுங் கார்ப்பாய், அப்படிப்பட்ட லட்சுமியான உனக்கு ச்சகுனமெல்லாம் என்னத்திற்கு, இந்த லோகநடத்தையை விட்டுவிடு என்னைப் பயப்படுத்தாதே விசனமின்றி, வாராயம்மாவென்று, லட்சுமணர் சொல்ல, அம்மொழியை சீதையம்மன் கேட்டவுடனே, அம்மனுக்குப் பூர்வக்கியானம்பிறந்து, இனி நடக்கப்போறதெல்லாந்தெரிந்து சந்தோஷமானாள். அதற்குள் அப்பூர்வக்கியானம் மாறிவிட்டது அப்போது அம்மனுக்குக் கினவுகண்டதுபோலாயிற்று.

அப்போது சீதையம்மன் இலட்சுமணரைப் பார்த்துச் சொல்லுகிறாள். தம்பிலட்சுமணா இப்போது நீ சொல்லிவருந்தருணத்தில் நானொரு சொற்பனங்கண்டேன். அதனையுன்னுடன் கூறும்படியாய் வாயெடுத்தேன், உடனேமறந்துவிட்டேன் இனி ரதத்தை நடத்தென்றாள். அப்படியே லட்சுமணர் இரதத்தை நடத்துகையில் பொழுதுவிடிந்தது. பட்சிகள் யாவுங் காகூவென்று கூச்சலிட்டு வெளியேபுறப்பட்டது கள் அக்காலையில் இலட்சுமணரும் ஓயாமல் இரதத்தை அதிக வேகமாய் காடு செடி மேடு பள்ளங்க ளொன்றும் தோன்றாமல் நடத்தவே அந்த ரதத்திற் கட்டியமணிகள் கலகலவென்று அடிபட கும்பகலசங்கள் குத்துக்கால்கள் குலுங்க இரதத்

திற்குள்ளே சீதையம்ம னுட்கார்ந்திருக்கிற நவரத்தின உஞ் சல்களசைய அந்த உஞ்சலில் அம்மனனவள் சாய்ந்தாடுகிற போது, சரீரம்புளகிதமாய், மகாசந்தோஷ வார்த்தையோடு இலட்சுமணருடனே நடக்கிறபோது சுக்கலாதேவி குமாரன ன சூரியபகவானும், நம்முடைய வமிசத்திற்பிறந்த மகாலட் சுமியான சீதையம்மனனவள் வனம்பார்க்கப் போகிறவளை நாமும்போய்ப் பார்க்கவேணுமென்று புறப்பட்டவரைப்போ ல, ஒற்றை உருளைபூண்ட ரதத்தின்பேரிலேறி அருணன் சார த்தியம்பண்ண, இமயகிரி பருவதத்தில் உதயமானன். அப் போது அந்த வெட்டாரவெளியில் ஒருதோப்பானது தோன் றிற்று அவ்விடத்தில் இரதத்தை லட்சுமணர் நிறுத்தினர் சீதையம்மனும் நவரத்தின உஞ்சலைவிட்டு ஆடைகுலுங்க ஆ பரணமசைய, பாதச்சிலம்பு தண்டைச்சுருள்கொஞ்ச, மார்பி லணிந்த மாணிக்கமாலை முத்துமாலை மோகனமாலைகள் சோ திப்பிரகாசமாயசைய, கரத்திலிட்ட அஸ்தகடகமின்ன, இர ண்டு காதிலும், இரண்டு சூரியனைப்பிடித்து வைத்ததுபோல கம்மல் ஜிமிக்கைகள் ஒளிவீச, இரத்தினமூக்குத்திமின்ன,முப் பத்திரண்டு சூரியனைப்பிடித்து ஒரு பளிங்குமா மண்டபத்தி லடைத்து பலகணியைதிறந்தால் எவ்வளவு சோதிவிளங்கு மோ! அவ்வளவு பிரகாசத்துடனே எழுந்து இரதத்தைவிட் டிழிந்து அத்தடாகத்தில் தந்தசுத்திசெய்து அபரஞ்சிப் பட் டுடுத்தி நேமநிஷ்டை முடித்துக்கொண்டுவந்து பலகார கச் சாயவர்க்கங்களை இலட்சுமணரும் தானுமருந்தி தாகசாந்தி செய்து, கையலம்பி, மரத்தடியில் வந்து, கற்பூர தாம்பூலம் நுகர்ந்து, சந்தோஷவார்த்தைகளாடி, சற்றுநேரம் இளைப்பா றினர்கள். அத்தருணத்தில் சூரியபகவானனவர் தன்னுடை ய முப்பத்திரண்டு கிரணங்களையும் பரப்பி, உஷ்ணத்தையடக் கிக்கொண்டு, லட்சுமி தரிசனத்தைப் பார்க்கவந்தவரைப்போ ல, ஒரு மார்பொழுது வந்துவிட்டா ரக்காலையில், இலட்சும ணரானவர் அம்மா சீதாய் வெய்யிலேறுகின்றது, முன்னே போவோம் வாவென்றெழுந்து, நான்கு குதிரைகளையும் அவி ழ்த்து இரதத்தில் கட்டி காத்திற் சவுக்கைப்பிடித்து ரதமேறி முன்தட்டி லுட்கார்ந்தார்.

சீதையம்மனும் இரதமேறி நவரத்தின உஞ்சலில்வந்து ட்கார்ந்தாள் உடனே லட்சுமணர் குதிரைகளைச் சவுக்கினற் ஹண்டினமாத்திரத்தில் வாய்வேகத்திலும் மனோவேகமாய்

நடக்கையில் அம்மனவள் தாங்களிருந்தவிடத்தை எட்டிப் பார்த்தாள், கண்ணிற் கெட்டினதூரம் இரதமானது வருகையில், வலியனை ஒரு கருங்குருவி ரதத்திற்குமுன் வலமாகப் போகக்கண்டு, இலட்சுமணரைநோக்கி, ஓ தமபி வலியனிப் போது வலமாச்சுது சுவாமிக்குத்தா னென்றுமில்லாவிட்டாலும் கௌசலை கைகேசி சுமித்திரை யிவர்களுக்கு இயாதோ எது தீதோ! தெரியாதென்று மனவாட்டமாகச் சொல்லுகையில், இலட்சுமணர் அம்மணி முன்னே சொன்னேனே லோக நடத்தையை விட்டுவிடென்று இன்னமுஞ் சகுனமாவென்ன, அம்மனவள் மௌனமாயிருந்தாள். இலட்சுமணரும் எண்ணதும் எண்ணி, இருதயங்குன்ணி, சுவாமியினுடைய திருநாமத்தை தியானம்பண்ணி ரதத்தை மகாவேகமாகச் செலுத்துகையில், ஒரு விச்சுளியானது வலத்திலிருந்து இடதுபக்கம் பாய்ந்தது. அதையும்பார்த்து விசாரமிட்டு மிகவும் துயரப்பட்டு செல்லுகையில், கருடன் ஒன்று இடதுபக்கமிருந்து வலதுபக்கமாகச் சென்றது. செல்லவே லட்சுமணரானவர் ஐயோ! இந்த சீதையம்மனுக்கு என்னகாலகதி வந்ததுவோவென்று துயரத்திலாழ்ந்து, துரிதமாய் இரதத்தைத் தாண்டுகையில், சீதையம்மனவள் அக்கருடன் போனதைக்கண்டு கண்களில் நீர்பெருகி, உள்ளமுருகி, ஓகோ! நம்முடைய அயோத்திக்கு என்ன துன்பமோ அல்லது சுவாமிக்குத்தான் யாதோவென்று வாதையுற்று வேதனையடைந்து போகையில், ஒற்றைப்பார்ப்பான் எதிராகவந்தான். அவனைக்கண்டு, இலட்சுமணர் லவணசமுத்திர தீர்த்தத்தில் மூழ்கி, எழுந்திருந்தால் எவ்வாறு கண்கள் சிவப்பேருமோ அவ்வாறு கண்களானது செம்மானம்போற் சிவக்க, காதிரண்டிலும் புகைகளெழும்ப, பிராமணன் திடுக்கிடும்படியாய்க் கண்ணையுருட்டிப் பார்த்தார். அதுகண்டு சீதையம்மன் அவருடைய கோபந்தணியும்படியாய்ச் சொல்லுகிறாள், தம்பிலட்சுமணா அவனே ஏழைப்பிராமணன் புத்தியில்லாதவன், வேதசாஸ்திர விசாரணை செய்யாதவன், ஆனபடியினாலே அவன் போகட்டுமென்றுசொல்ல, ஆடியநாகம் அமர்ந்ததுபோலச் சினந்தணிந்து, லட்சுமணரானவர் இரதத்தைவிடுகையில், அவ்விடத்தில் ஒருகாட்டுப்பூனையானது ரதத்திற்கு இடதுபுரமாய் குறுக்கேவருகிறதைக்கண்ட இருவரும் எல்லாச்சகுனத்திற்கும், பூனைச்சகுனம் பொல்லாதென்று பெரியோர்சொல்லு

வார்களே ஐயோவென்று அழுது ஆண்டவனைத்தொழுது, அகம்வேர்த்து முகம்வேர்த்து வாராய்தம்பிலட்சுமணு; பூனைக் குறுக்கிட்டது, நீ பார்க்கவில்லையோவென்றார் அதுகேட்டு லட்சுமணர் சொல்லுகிறார் இது காடாயிருப்பதினால் இதுகள் குறுக்கு நெடுக்குமோடும் இவைகளைப் பாராதேயென்று தைரியஞ்சொல்லி, இலட்சுமணர் பின்னும் வேகமாய் இரதத்தைவிட்டார்.

அத்தருணத்தில் புள்ளிமான் ஒன்று துள்ளி எதிராக வருவதைக்கண்ட அம்மனவள் தம்பிலட்சுமணு புள்ளிமான் எதிராகவருவதைக்கண்டாயோ வென்றாள். அம்மணி எத்தனைவிதத்திற் சொன்னாலும், நீர் அடிக்கடி தொந்தரவு செய்கிறீர். இதுகளெல்லாம் சகுனமல்ல, சும்மாவாருமம்மா வென்று லட்சுமணர்கூற, அம்மனவள் முன்னும் இப்படிதான் லட்சுமணர் வார்த்தையைக்கேளாமல், வெகு அவஸ்தைப்பட்டோம் ஆனபடியினாலே இலட்சுமணர் மனதிற்கு ஆயாசம் வருவதுபோற் காணுகிறதென்று வாயை மூடிக்கொண்டு சும்மாயிருந்துவிட்டாள். பின்னும் இலட்சுமணரானவர் இரதத்தை நடத்துங்காலையில் ஒரு செம்போத்தானது இடபாரிசமிருந்து, குறுக்கேபாய்ந்தது. அதுகண்டு, இலட்சுமணர் யோசிக்கிறார். இதைக்கண்டும், அப்பால்போகலாமோ ஐயோ சீதையம்மன் நம்மை என்னபாடு படுத்துவாளோ என்னசாபம் நேரிடுமோ என்னசெய்வேன் ஸ்ரீராமா வென்று தியானம் பண்ணிக்கொண்டு தேரை நடத்துகையில் சரஸ்வதியாறு குறுக்கே நின்றுவிட்டது. அதுகண்டு லட்சுமணர் இரதத்தைவிட்டு பூமியிற்குதித்தார் சீதையம்மனுங் கீழேயிறங்கினாள். அந்த சரஸ்வதியாற்றின் பெருக்கமானது சமுத்திரம்போற் கோவென்ற சத்தமாய் அலைமோத நுறைகள் தளும்ப நீச்சு நிலைகொள்ளாமல் ஆழமாயிருக்கிறதைச் சீதையம்மன் கண்டுகலங்கிநிற்கையில் லட்சுமணர் ஓடக்காரனைக்காணமல் ஓடமாத்திரமிருக்கக்கண்டு ரதத்தையெடுத்து அவ்வோடத்தில் வைத்து முன்பாகத்தோன்றி சீதையம்மனுக்குக் கைகொடுத்து ஓடத்திலேற்றி லோகமாதாவான சீதையம்மனை நவரத்தின உஞ்சலிலுட்காரவைத்து தன்கையில் ஓடந் தள்ளுகிறகோலையெடுத்து பூமியிலூன்றி ஓடந்தள்ளினார்.

எவ்வாறென்றால் பல்லாயிரங்கோடி அண்டத்தையுங் கொர்ப்பத்தில்வைத்து ரட்சிக்கப்படாநின்ற ஸ்ரீமந் நாராயண

ராய்விளங்காநின்ற பகவானுக்குப் படுக்கையான அந்த ஆதி
சேடன் இலட்சுமணனாயவதரித்து லட்சுமியான ஜானகியம்
மனுக்கு ஓடந்தள்ளவே அம்மனானவள் நல்லவசனத்தினால்
அவர் மனதைசந்தோஷப்படுத்தி தம்பிலட்சுமணா முன்னாலே
சுவாமியும் நாமும் அயோத்தியைவிட்டு தண்டகாரணிய வன
ம்போகிறபோது குகன்விடுத்தவோடமும் நீ விடப்பட்ட ஓ
டத்துக்கு முன்சரியாகாதென்பதைக்கேட்டு லட்சுமணர் மிகவு
ஞ்சந்தோஷமாய் ஓடத்தைவிட்டிழிந்து ஜானகியம்மனை இர
ண்டுகையினாலும் ஏந்திக்கொண்டுவந்து பூமியில்விடவே சீ
தையம்மனும் அந்த ஆற்றுமணலிலுட்கார்ந்து சற்றுநேரம்
விளையாடிக்கொண்டிருந்து பின்பு லட்சுமணர் ஓடத்திலேறி
ரதத்தை யெடுத்துவந்து பூமியில் நிறுத்தினார்.

அந்த சரஸ்வதியாற்றுக்கும் அயோத்திமா நகருக்கும்
நூற்றைம்பது காதவழி தூரமாம் அப்போது எவ்வளவு நாழி
கையாச்சுதென்றால் ஒன்பது நாழிகையாச்சுது அந்தச் சமயத்
தில் லட்சுமணர் குதிரைகளைப்பூட்டி யதில் சீதையம்மனையே
ற்றி ரதத்தை நடத்தவே ரதமானது மகாவேகத்துடன் வரு
கிறபோது அங்கொருவனம் தோன்றியது அவ்வன மெப்படி
ப்பட்டதென்றால் ஈ நுழையாத காடாகி அப்பேர்ப்பட்ட வன
த்திற் காட்டானை கரடிபுலிசிங்கம் யாளி கண்டபேரண்டம் சக்
கிரவாளப்பட்சிகள் சஞ்சரிக்கப்பட்ட இடத்தில் ரதத்தைக்
கொண்டுவந்து நிறுத்தினார். நிறுத்தவே ஜானகியம்மன் பார்
த்து தம்பிலட்சுமணா, இந்த அகாதமானகாட்டில் இரதத்தை
ஏன் நிறுத்திவிட்டாய் இன்னந்தேரை நடத்தென்று சொன்ன
வார்த்தையைக்கேட்ட லட்சுமணர் மனதுபொங்கி கண்ணீர்
தாரைதாரையாய்ப்பெருக அழுது கருவி விம்மி விம்மிக்கொ
ண்டு சொல்லத்தொடங்கினார்.

வாராயம்மா சீதா ஸ்ரீராமர் சொன்னவசனத்தை மனந்து
ணிந்து நான் எவ்வாறு கூறுவேன் என்று முகங்கோணி அ
கம்நாணி துயரத்துடனே நிற்கின்ற லட்சுமணரைப்பார்த்து
சீதையம்மன் மனது கலங்கி தம்பி லட்சுமணா நீயேன் விச
னப்படுகிறாய் உமது துக்கத்தையடக்கி மனதைத் திடப்படுத்
திக்கொள்ளென்று மிகவும் தேறுதல்செய்யத் திடங்கொண்டு
லட்சுமணரானவர் கேளாயம்மணி என் தமயனான ஸ்ரீராமர் இ
ந்த இருண்டவனத்திலே உன்னைக்கொண்டுபோய்விட்டுவரும்
படியாய்க் கட்டளையிட்டார் நானும் அவர்சொல்லைக் கடவா

மல் இந்தவனத்திற் கொண்டுவந்துவிட்டேன் அதேனென்ருல் என்தமையனை இராமபத்திரஸ்வாமி நேற்றிராத்திரி நகர்சோதனைக்குப்போயிருந்தார். அவ்விடத்தில் ஒருவண்ணனைவன் பெண்சாதியுடனே சண்டைபோட்டுத் திட்டியடித்தானும் அதற்கவள்பிணங்கி மூன்றுநாளாய் அயல்வீட்டிற் போயிருந்தாள் அதற்கு அந்தவண்ணன்தாயானவள் அவனைப்பார்த்து அடாதம்பி உன்பெண்சாதிபிணங்கி மூன்றுநாளாய் அயல்வீட்டிற்போயிருக்கிருளே நீபோய் சமாதானம்பண்ணி அவளை அழைத்துக்கொண்டு வாவென்று தாயார்சொல்ல அதற்கந்த ரசகனுனவண்ணன் சொல்லுகிருன் தாயே இராமன்பெண்சாதியை இராவண னெடுத்துக்கொண்டுபோய் பத்துமாதம் வைத்திருக்கவும் அதன்பிறகு குரங்குசேனைகளை இராமன் கூட்டிக்கொண்டுபோய் அந்தராட்சதனைக்கொண்டு சீதையை மீட்டுக்கொண்டுவந்து பட்டணமும் ஆளுகிருன், அவன்குலம்போல என்குலமென்று பாராதே என்வாசற்படி விட்டு மூன்றுநாளாய் அயல்வீடு போயிருக்கிற பெண்சாதியை அழைத்துவந்தேனேயானுல் என்குலத்திற்கு ஈனம் வருமென்று தள்ளிப்போட்டான் ஆனபடியினுலே என்தமயனுரானவர் பரதசத்துருக்கரையும் என்னையுமழைத்து இந்தச்சமாச்சாரத்தைச்சொல்லி என்னை வனத்தில் விட்டுவரச்சொன்னுர் நாங்கள் மறுத்தும் எங்கள் வார்த்தையுங்கேளாமல் வாளையுருவி தன்பிராணனை விட்டுக்கொள்ளுகிறேனென்று கழுத்தின்மீது வைத்துக்கொண்டார். அதுகண்டு நாங்கள்பயந்து சுவாமிக்கு நமஸ்கரித்து உன்னை அழைத்துக்கொண்டுபோய் வனத்தில் விட்டுவருகிருேமென்ற பிற்பாடு சுவாமிக்குச் சித்தமிறங்கி வாளையுரையிற்போட்டு என்னையழைத்து முன்னுலே நம்முடனே சீதைசொன்னது வனம்பார்க்கவேண்டுமென்று சொல்லியிருந்தாள். அந்த அடையாளஞ்சொல்லி ஜானகியை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் ஆரணியத்தில் ஒருக்ஷணப்பொழுதிலே விட்டுவாருந் தம்பியென்றுசொன்னுர். அவ்வாறே நானும் அவர்சொல்லைத்தள்ளாமல் அழைத்துக்கொண்டு வனத்துக்கு வந்தேனம்மாவென்ருர். அம்மொழியைக்கேட்ட சீதையம்மனைவள் மனதுகலங்கி பாயற்றமரக்கலம்போலும் வேடன் வலையிற்பட்டமான்போலும் நிலைகலங்கி ஐயோதம்பி லட்சுமண என்னை இந்த ஆரணியத்தில் வஞ்சனைசெய்து ஒண்டியாய்விட்டுப்போகவோவந்தீர் நான்செய்த பாவமிதுவோ ராம

மூர்த்தியேயென்று அடியற்றவிருட்சம்போல் ஆவென்று வாயைத்திறந்து அலறியழுது மூர்ச்சையாய்விட்டாள்.

அதுகண்டு லட்சுமணரும் சீதையினுடைய அகோரத்தைப் பார்க்கமாட்டாமல் கோடுகோடென்று அழுது கடகடவென்று பூமியில் புரண்டு மூர்ச்சையானார். இவர்களிருவரும் அப்படியழுத ஓசையை அவ்வனத்திலுள்ள பட்சிகள் மிருகஜாதிகளெல்லாங்கேட்டு இன்று நமக்கு நல்லயிறை யகப்பட்டதென்று வெளியிற்புறப்பட்டு மூர்ச்சையாயிருக்கின்ற லட்சுமணர் முகத்தையும் லட்சுமியாகிய ஜானகியம்மன் முகத்தையும் ஏறப்பார்த்து விராட்ரூபமா யிருக்கப்பட்டவாளென்று தெரிந்துகொண்டு அப்புறம்போய் நின்றுவிட்டது. இதற்குள் சீதையம்மனவள் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து லட்சுமணரை பார்க்கையில் அவர் மூர்ச்சையடைந்திருக்க அவர் குணத்திற்குமெச்சி தன்னுடைய திருக்கரத்தினல் அவருடையமுகத்தைத் தடவிக்கொடுத்தாள் அமிர்தம் பொழியப்பட்ட அஸ்தமானது லட்சுமணர் பேரிற்படவே மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து சீதையம்மனுக்கு நமஸ்கரித்து வாராயம்மா சீதா நீயிந்தவனத்தில் தானே வாசம்பண்ணிக் கொண்டிருப்பாயேயானல் நான் சுவாமிக்கு மனது திருப்தியாகும்படி பிரியவசனங்களைச் சொல்லி மறுபடியும் வந்து உன்னையழைத்துக்கொண்டு அயோத்திக்குப் போகிறேன். சஞ்சலப்படாமலிருமம்மாவென்று லட்சுமணர்சொல்ல சீதையம்மனவள் கிளியைப்போல வாயைத்திறந்தெழுந்திருந்து ராமரைத்தொழுது தம்பி லட்சுமண நான் கெர்ப்பசிகாமணியாயிருக்கிற யிந்தவேளையில் ரசகனை வண்ணன்பேரிற் குற்றஞ்சுமத்தி ராமர் என்னை வஞ்சனையினல் இப்பேர்ப்பட்ட ஆரண்யமான கானகத்தில் விட்டுவரச் சொன்னாரல்லவோ தம்பி லட்சுமண நான் பழுதுசொல்லவில்லை என்னுடைய கெர்ப்பத்தைப்பாரென்று காண்பித்தாள் அதைக்கண்ட லட்சுமணர் ராமா இந்தப்பாவமான சொல்லைக் கேழ்க்கமாட்டேனென்று கண்ணையுங் காதையுமூடிக்கொண்டார். அதுகண்டு அம்மனவள் லட்சுமணருடைய புத்திக்குமெச்சி உள்ளம்பொங்கவும் மேலுக்கு துக்கமாய் இந்தக்காட்டிலே கரடி புலி சிங்கம் காட்டானை யாளி கண்டபேரண்டம் அதிகமாயிருக்கின்றதே என்னைப்பட்சித்துப்போடுமே அயோத்தியாபுரிபட்டணத்திற்கு அருகாமையாய்

விட்டுப்போமென்று மிகவும் இரக்கத்துடன் கேட்கையில் லட்சுமணர் சொல்லுகிருர்.

வாராயம்மா சீதா நீ இனி துயரப்படுவதினுல் ஆகவேண்டியகாரணமென்ன எனக்குச் செலவுகொடுத்தால் அயோத்தியாபுரிக்குப்போய் வருகிறேனென்றுகூற சீதையம்மனுனவள் தம்பி என்னை ரதத்திலேற்றிக்கொண்டுபோய் மனிதசஞ்சாரஞ் செய்யப்பட்ட ஊர்கிராமத்தில் விட்டுப்போவீராஞல் நான் பிழைப்பேன் இல்லாவிட்டால் இப்போதே உமது முகத்தின் முன்பாக என்ஜீவனை மாய்த்துக்கொள்ளுகிறேன் பாருமென்று அழுதுசொல்லவே அதற்கு லட்சுமணர் என்னம்மணியான சீதாகேளும் ராமர் சொன்னபடியே உன்னை யிந்தவனத்தில் விடாமல் மனிதர்கள் சஞ்சரிக்கப்பட்ட விடத்திலே விடுவேனேயாஞல் உனக்கும் எனக்கும் இராமத்துரோகமல்லவோ அதுவீண்போகாது நரகம்வந்து சித்திக்குமாகையால் நான் போய் சுவாமிக்கு விண்ணப்பஞ்செய்கிறேன் எனக்குச் செலவு கொடுத்தனுப்புமம்மாவென்று சொல்லுகையில் அம்மனுனவள் அழுதுபுலம்பி ரதத்தைவிட்டுக் கீழிரங்கி லட்சுமணு உன் தமையனுக்கு என்பேரிற் சந்தேகந்தோன்றிஞல் அவ்விடத்திற்றுனே வாளிஞலே ஒரேவெட்டாக என்னை வெட்டிப் போடுகிறதுதானே நான் மோட்சமடைவேனே அதைவிட்டு இப்படி என்னை சூதுபண்ணி வண்ணுன் மீது வழிகாட்டி என் பேரிற் குற்றஞ்சுமத்தி நான் கெர்ப்பவதியென்றும் பாராமல் துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கப்பட்ட இருண்டகாட்டில் என்னை விட்டுவரச்சொன்ஞரல்லவோ அவரே நன்ருக வாழட்டும் என்மாமியார் மூன்றுபேருக்கும் உன் தமையனுக்கும் ஆயிரம் நமஸ்காரம் பண்ணினேனென்று விண்ணப்பஞ் சொல்லும் என்தங்கைமார் மூவருக்கும் என்ஞசீர்வாதஞ் சொல்லவும், என் மைத்துனன்மார் பரதசத்துருக்கருக்கும் உனக்கும் ஆசீர்வாதஞ் செய்தேன். தம்பி லட்சுமணு இதோ நீ போனவுடனே கரடி புலி சிங்கம் காட்டானை இதுகளேதாவது என்னைப் பட்சித்துவிடும். இனி நான் உங்கள்முகம் பார்க்கப்போகிற தில்லையென்று சிறகறுந்த பட்சியைப்போலவும் சீதா லட்சுமியானவள் அழுது ஐயோதெய்வமே! அஞதியாகினேன் திக்கற்ற பாவியானேன் ராமருடைய கிருபை யிப்படியிருந்ததேயென்று மனமுருகி கண்ணீரானது தாரைதாரை

யாகப் பெருகத் தம்பி லட்சுமணரே நீர் போய்வாருமென்று சொல்லி பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தாள்.

அதை லட்சுமணர்பார்த்து அயோத்திக்குப்போக மனது வராமல் அழுதுக்கொண்டு அசைவற்ற சித்திரம்போல நிற்கையில் சீதையம்மனவள் மூர்ச்சைதெளிந் தெழுந் துட்கார்ந்து நான் பூமியிற் பெண்ணாகப் பிறந்து உன் தமையனுக்கு மாலையிட்டநாள் முதற்கொண்டு காடு வனமே சஞ்சரித்தனே யல்லாமல் ஒருநாளாகிலுஞ் சுகத்தை யனுபவித்தவ ளல்ல என் விதிப்பய னிப்படியிருக்க அந்த ராமர்தா னென்னசெய்வார் நீதான் என்னசெய்வீர் அந்த ரசகனை வல்லானந்தா னென்னபண்ணுவான் என்தலையெழுத்தைத் தள்ள என்னாற் றமோ சகல சராசரங்களையும் உயிர்ப்பிராணிகளையும், உண்டு பண்ணின பிரமதேவனைத்தான் விட்டுவிட்டதோ யாரையும் விடாது இப்பவோ இன்னஞ் சற்றுநாழிகையோ வென்றிருக்கிறது என்னுடைய காயமானது ஆனபடியினால் நீர் போய் என்னைப்பற்றி ராமரது திருப்பாதத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டியது அதென்னவென்றால் என்பேரை நினைத்து எள்ளுந் தண்ணீரும் இறைத்துப் போடச்சொல்லும் போய்வாருமென்று சஞ்சல வார்த்தையாகச் சொன்னதைக்கேட்ட லட்சுமணரானவர் சொல்லுகிறார். வாராயம்மா நீ இப்படிக்கெல்லாம் விசனப்படலாமோ கரடி புலி சிங்கம் காட்டானை உன்னை என்னசெய்யும் நெருப்பில் ஈமொய்க்குமோ அப்படியிருக்க உன்னருகில் யாதாவது நெருங்குமோ இந்த வனத்திற்றானே ராமஸ்மரணைப் பண்ணிக்கொண் டிருப்பாயேயானால் ஒருகாலத்திலும் உனக்குத் துன்பம் வரமாட்டாது இந்த லோகநடத்தையும் விட்டு அடியேனுக்கு சந்தோஷமாய் செலவு கொடுத்தால் நான் அயோத்திக்குச்சென்று சுவாமிக்கு தெரியப்படுத்தி உன்னை யழைத்துக்கொண்டு போகிறேனென்று சீதையம்மனிடஞ் செலவு பெற்றுக்கொண்டு லட்சுமணரானவர் தேரேறி ரதத்தை அயோத்தியாபுரிக்குத் திருப்பி சரஸ்வதியாற்றருகில் வந்து ரதத்தை ஓடத்திலேற்றி தாமும் யேறி ஓடத்தைத் தள்ளிக்கொண்டுபோய் அக்கரைவிட்டு ரதத்தையெடுத்து பூமியில் நிறுத்தினார் அப்போது என்னேரவேளை யாயிற்றென்றால் சூரியனுதயமாய் பதினெட்டுநாழிகை நேரமாச்சுதாம் அந்தச் சமையத்தில் லட்சு

மணரானவர் என்ன யோசனை செய்கிறாரென்றால் நான் சீதை யம்மனிடத்தில் யிருக்கும்போதே கரடி புலி சிங்கம் காட்டானைகள் செடிமறைவிற் காத்துக்கொண்டிருந்ததே இன்னேரம் ஜானகியம்மனைக் கொன்றனவோ பசிதீரத்தின்றனவோ என்னமோவென்று லட்சுமணர் சரஸ்வதி யாற்றிலிறங்கி ஸ்நானஞ்செய்து ரதமேறி அயோத்தியாபுரிக்கு நடந்தார்.

இப்பாற் சீதையம்மன் கண்ணுக்கெட்டின தூரம்பார்த்து ரதமறையவே கோவென்ற சத்தத்துடனே அழுது புலம்பி பூமியின்மீது மோதி விழுந்து அலறி யெழுந்திருந்து என்னைக் கைவிட்டாயே இனி யென்முன் கிட்டாயோ தம்பிலட்சுமணாவென்று கூவி மூர்ச்சையடைந்தாள், அத்தருணத்தில் அவ்வனத்திலிருக்கப்பட்ட பட்சிகள் கரடி புலி சிங்கம் காட்டானைகள் வந்து காவலிருக்கையில் சற்று நேரத்திற்குள் மூர்ச்சைதெளிந்து அம்மனெழுந்திருந்து பார்க்கையில் அவைகளெல்லாம் அப்புறம் விலகிப்போயின. அதுகண்டு ஜானகியம்மனவள் எப்படி துக்கப்படுகிறாளென்றால்,ஐயோ லட்சுமணா! என்னை இப்படி அனியாயமாய் ஆரணியமான வனத்திலே விட்டு மோசம்பண்ணலாமா, நான் உலகத்திலே யாரும் படைக்காத அழகைபடைத்தேனே, ராமாராமா உம்மை என்ன வஞ்சனைசெய்திருந்தாலும் இப்படி யிருண்டகாட்டிலேவிட்டுக் கொல்லலாமோ நான் கெர்ப்பவதியா யிருப்பது தெரிந்தும் மோசம் சூது வஞ்சனைபண்ணி மனிதர் சஞ்சரியாத காட்டிலே விட்டு காட்டானை புலி கரடி சிங்கங்கள் இவைகள் கையிற் காட்டிக் கொடுக்கலாமோவென்று புலம்புகிறதைக்கண்டு பட்சிகளொருபுறமும் விலங்குகளொருபுறமு மிருந்தழவும் இந்தமண்டலமுழுதும் அந்த விண்டலமுழுதும் துக்கமுறவும் பூமிதேவி ஆகாயவாணிமுதல் யாவரும் புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

வால்மீகரிஷி வருதல்.

விருத்தம்.

திருவுரைகமண்டலந்தெண் டெண்பவைகரத்திற்கொண்டு
பருமணிருத்திராட்சம் பன்னகரெங்குந்துன்ன
அருந்தவமுனிவரென்றே அறையும்வால்மீகர்தானும்
கருணையாய்சீதைபக்கல் கடுகியேவருகுவாரே.

அந்தச்சமயத்தில் வால்மீகரிஷியானவர் பாதத்தில் பாதக்குறடு துன்னவும் காவிவேஷ்டி யிடையிற்றரித்து சடாமண்

டலதாரியாய் அரிகோவிந்தா நமோ நாராயணுவென்று ஸ்ரீமந் நாராயணரைத் துதிசெய்துக்கொண்டு வருகையில் ஜானகியம் மனவள் தம்பிலட்சுமணு உன் தமையனை ஸ்ரீராமர் சொற் படியே கொண்டுவந்து இருளோங்கியவனத்தில் விட்டுபோக லாமோ நான் கண்ட அவசகுனமெல்லாம் எனக்கே பலித்தது ஐயோ ஸ்ரீராமா என்னே வஞ்சனே பண்ணலாகுமா நான் என் னசெய்தேன் எனக்கு பயமாயிருக்கிறதே ஓய் ரகுநந்தனு ராமா ராமாவென்று அழுகிற ஓசையை வால்மீகர் கேட்டு ஏதடா இந்த அத்வானகாட்டிலே ராமாவென்கிற சத்தங் கேட்கிற தென்று கிட்டவந்து பார்த்தார் பார்க்கையில் அந்த அம்ம ணுடைய தேஜசு எப்படி யிருந்ததென்றால் வைகுந்தத்தில் வாசமா யிருக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணருடைய திருமார்பி லுரைகின்ற மகாலட்சுமியைப்போல விருக்கின்றதென்று வால்மீகர் கியானதிருஷ்டியினுல் அறிந்து அந்த மகாலட் சுமிதானென்று மனதிலெண்ணி சந்தோஷமாக துதிபண்ணி இன்றைக்கு எனது தவமீடேரிற்று என்றுஆநந்தசாகரத்தில் முழுகினவரைப்போல் ஓ அம்மா நீ யார் மனிதர் சஞ்சரியாத இடத்தில் வந்து இப்படிப்பட்ட துக்கமும் துயரத்துடன் பிரலாபித்து அழவேண்டிய காரணமென்ன உன்னேப்பார்த் தால் இராஜ ஸ்திரீயைப்போற் காணுகின்றதே உன்வரலாற் றை சொல்லம்மாவென்றுகேட்க ஜானகியம்மனெழுந்து நம ஸ்காரஞ்செய்து சொல்லுகிருள். ஐயா அயோத்தியாபுரி பட்டணத்தை யாளப்பட்ட தசரதமகாராசாவினுடைய குமா ரர் ஸ்ரீராமபுத்திரருடைய தேவி என்பேர் ஜானகியென்ருள் அதற்கு வால்மீகரானவர் வாரயம்மா ஜானகி ராமருடைய பட்டபுதேவியாயிருந்தும் அயோத்தியைவிட்டு இந்தவனத் தில் வந்து அழவேண்டியது யாதுகாரண மென்றுகேட்டார்.

ஜானகி தன் வளப்பங்களை வால்
மீகரிடத்தில் கூறல்.

விருத்தம்.

துட்டனிராவணனென்னைச்சிறையில்வைத்த
தோஷத்தாலவன்குலத்தைசுட்டிலங்கை
பட்டணத்தைவிபீஷணர்க்குநல்கினுனும்
பரிவுடன்றீயினிற்குளித்துபலரும்போற்ற

திட்டமுடனயோத்திவந்துவாழுநாளிற்
றேசத்திலேளிதஞ்செய்கிறுர்களென்றே
தொட்டமுடிராமரென்னைவனத்தில்விட்டார்
சுவாமிவுனைக்கண்டேனென்றுயர்விண்டேனே.

வாருமையா தபோநிதியே தசரதமகாராஜாவுக்குப் பிள்ளையில்லாமல் கலைக்கோட்டு மகாரிஷியினுல் யாகம் வளர்ப்பித்து பிண்டப் பிரசாதங்களினுலே ஸ்ரீராமர் லட்சுமணர் பரத சத்துருக்கர் என்னும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அக்காலையில் விசுவாமித்திரர் வந்து ஸ்ரீராம லட்சுமணரை யழைத்துக் கொண்டுபோய் தாடகை சுபாகுவைக் கொன்று யாகத்தைமுடித்து அகலிகைக்கு மோட்சங்கொடுத்து ஜனக ராசா வைத்திருந்த வில்லையொடித்து என்னையும் விவாகஞ் செய்து பரசுராமன் கர்வத்தையடக்கி அயோத்தியில்வந்து பிதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்பொருட்டு ஸ்ரீராமலட்சுமணரும் நானும் பதினுன்கு வருஷம் வனத்திலே வாசஞ் செய்யப் புகுந்து கங்கைக்கரை தாண்டி குகனுடைய ஆசிரமத்திற் சிலநாளிருந்து அவரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு நந்திக்கிராமம் வந்துசேர்ந்தோம்.

அக்காலத்தில் தசரதர் இறந்துபோனுரென்று பரத சத்துருக்கர்வந்துசொல்ல சுவாமியும் லட்சுமணரும் நானுங்கேட்டு துயரப்பட்டு பரதருக்குச் சுவாமி திருவடியைக் கொடுத்துப் பரதசத்துருக்கரை யனுப்பிவிட்டு அத்திரி மகாமுனி யாசிரமத்திற் சிலநாளிருந்து அவ்விடத்திலுஞ் செலவுபெற்றுக் கொண்டு பரத்துவாசர் ஆசிரமஞ்சேர்ந்து சிலநாளங்கிருந்து அவரிடத்திலும் விடைபெற்று பஞ்சவடிதீர்த்தத்தில் சடாயு பர்ணசாலையில் வந்துசேர்ந்தோம் அப்போது லங்கையை யாளப்பட்ட ராவணனிட தங்கையான சூர்ப்பநகை வந்து ஸ்ரீராம லட்சுமணரைத்தேடி தோத்திரம்பண்ணினுள் இலட்சுமணர் அந்த சூர்ப்பநகையை மூன்றுக்கினையுஞ் செய்து துரத்திவிட்டார், சூர்ப்பநகையானவள் இலங்கைக்குப்போய் அவள் தமையனுன ராவணனைக்கண்டு அவனிடத்தில் தான் பட்ட அவஸ்தைகளைச்சொல்லி பங்கம்பண்ணினதையுங் காட்டி மாரீசனை மானுகரூபங்கொண்டனுப்ப, அம்மானைக்கண்டு நான் ஸ்ரீராமரை பிடித்துக்கொடுக்கச் சொன்னேன் அவரும் என்சொற்பிரகாரம் மான்பின்செல்ல அது அகப்படாமல் ஓடுவதைப் பார்த்து ராமபாணத்தால் கொன்றுபோட்

டார், மானுகயிருந்த மாரீசன் உயிர் விடும்போது லட்சுமணு வென்று சத்தமிட்டிறந்தான். அந்தச்சத்தம்நான்கேட்டு என் மைத்துனனை லட்சுமணரைப்பார்த்து தூரிக்கொண்டு தமையனிடத்திலே அவரையனுப்பிவிட்டேன் அந்தச் சமயத்தில் ராவணன்வந்து நானிருந்த பர்ணகசாலையோடு பேர்த்தெடுத்துக்கொண்டு போம்போது நானழுகிறசத்தம் ஜடாயுபகவான் கேட்டு ஓடிவந்து குறுக்கேபாய்ந்து ராவணனைமறுத்தெதிர்த்து அவனுடைய வாளாயுதத்தினுலே சிறகான தறுபட்டு உயிரைவிட்டார்.

அப்பால் ராவணனுனவன் ரதத்தைநடத்தி லவணசமுத்திரத்தின் மத்தியிலிருக்கின்ற லங்காபுரிபட்டணத்திற் கொண்டுபோய் நிறுத்திப் பர்ணகசாலையோடெடுத்து பூமியிலிரக்கித் திரிசடையை காவலாகவைத்து என்னை பத்திரமாய் பார்த்துக் கொள்ளச்சொல்லி தான் ரதத்தை நடத்திக்கொண்டு கோட்டைக்குள் நுழைந்துவிட்டான் அதன்பின்பு சுவாமியும் லட்சுமணரும் என்னைவந்து பார்த்துக்காணுமல் தேடிக்கொண்டு வரும்போது அசமுகியைக்கொன்று விராதனுக்கு மோட்சத்தைத்தந்து கவந்தனைமாய்த்து சவரிக்கு மோட்சமளித்து அனுமாரைக்கண்டு சுக்ரீவனை ஆதரணைசெய்து வாலிக்கு மோட்சங்கொடுத்து சுக்கிரீவனுக்குப் பட்டங்கட்டி அனுமாரால் நானிருக்குமிடத்தைக் கண்டுபிடித்து எழுபத்திரண்டு வெள்ளம் வானரசேனையைக் கூட்டிக்கொண்டு நளனுலேசமுத்திரமடைத்து ராவணன் கும்பகர்ணன் இந்திரஜித்து அதிகாயன் கும்ப நிகும்பன் இவர்களைக்கொன்று இரண்டாயிரம் வெள்ளம் ராட்சதர்களையும் நாசப்படுத்தி விபீஷணர்க்குப் பட்டங்கட்டி என்னையும் சிறைமீட்டி நானும் அக்கினியில் மூழ்கி அயோத்தியாபுரி பட்டணம் வந்து பட்டாபிஷேகந் தரித்து பட்டமும் ஆளுகிறநாளில் ராவணனுக்கு உபபலமாய்வந்த சதகண்டராவணனையும் சகஸ்திரகண்டராவணனையும் அவர்கள் சேனுசமுத்திரமான பதினுயிரம்வெள்ளம் ராட்சதர்களையும்கொன்று மகாமாயன் சலவசந்தன் இரண்டுபேருக்கும் பட்டந்தரித்து அயோத்திக்குவந்து நிகரில்லாத பட்டமும் ஆண்டுக்கொண்டிருந்தோம்.

அப்படியிருக்கையில் அயோத்தியில் வசிக்கும் ஒரு ரசகனுன வண்ணன்பேரில் போக்குக்காட்டி என்மீது குற்றஞ் செலுத்தி கெர்ப்பவதியென்றும் பாராமல் தம்பியாகிய லட்

சுமணரைவிட்டு என்னையிந்த அத்துவானகாட்டிலே விட்டு
விட்டுவரச்சொன்னாரென்று இப்போது என் மைத்துனரான
லட்சுமணர் என்னை காட்டிலேவிட்டுவிட்டுப்போகிறார் நானெ
ன்ன செய்வேன் ஐயாவே ஐயாவென்று ஜானகியம்மன் சொ
ல்ல வால்மீகரிஷியானவர் கேட்டு மிகவும் வருத்தமடைந்து
சொல்லுகிறார் வாருமம்மா சீதாய் நானிந்தவனத்தி லிருக்கப்
பட்ட வால்மீகரிஷி என்னுடைய வனமிதுதான் நீபயப்படா
மல் நம்முடைய ஆசிரமத்தில் வந்திரு எத்தனைகாலமிருந்தா
லும் என்புத்திரியைப்போலே ஒரேசீராய்ப்பார்க்கிறேன் உன்
வயிற்றில் பிறக்கிற பிள்ளைக்கும் புத்திவித்தை கற்பித்துதருகி
றேன் வாருமம்மாவென்றழைத்தார், ஐயா நான் கெர்ப்பவதி
யாச்சுதே போதுகாலமாயிற்றே எனக்கும் பெண்திக்கில்லையே
நானெப்படிவருவேனென்று ஜானகியம்மன்கூற வால்மீகர்
சொல்லுகிறார் கேளாயம்மா அப்படி உனக்குப் போதுகாலம்
வரும்போது நான் தெய்வப்பெண்களை யழைப்பிக்கிறேன்
மேலும் பெற்றபெண்ணைப் பார்க்கிலும் எண்மடங்கதிகமாய்
பாவித்து பாதுகார்ப்பேன் ஒன்றுக்கும் சஞ்சலப்படவேண்
டாம் வாருமம்மாவென்று மகாபிரியவசனத்தோடு வால்மீக
ரிஷி யழைக்குந்தருணத்தில் ஜானகியம்மாளெழுந்து ஐயா
நீரே எனக்குத் தாயுந் தகப்பன் குருதெய்வமல்லாமல் வேறி
ல்லையென்று சொல்லி ஆடைகுலுங்க ஆபரணங்களசைய
ஒட்டியாணமின்ன ரத்தின மூக்குத்தி துலங்க முத்துமாலை
மோகனமாலை மார்பிலசைய வால்மீகர் பின்னால்நடக்கும் நட
த்தையைப்பார்த்து அந்தவனத்திலுள்ள அன்னங்கள் மயில்
கள் பலபட்சிகளும் வெட்கி வேடிக்கைப் பார்த்துக்கொண்டி
ருந்ததுகள் அதன்பின்னும் அவ்வனமானதெப்படியிருந்த
தென்றால் ஆச்சா அகில் சந்தனம் தேக்கு புன்னை வன்னிகா
ட்டுவாழை பலாவென்கிற விருட்சங்கள் உலகமாதாவான மகா
லட்சுமியென்று கூறப்பட்ட ஜானகியம்மன் வருகிறாளென்று
பூவும்பிஞ்சுகளும் காய்த்தும் பூத்தும் பழுத்தும் இருபக்கங்
களிலும் நின்று சேவிப்பதுபோலக் காணப்பட்டது மேலும்
மல்லிகை முல்லை சம்பங்கி மரு மருக்கொழுந்து ஆம்பல் செ
வ்வாம்பல் முதலிய இன்னம் பலவித புஷ்பச்செடிகளும் சர்
வலோக தயாபரியாகிய ஜானகியம்மன்வருகிறாளென்று மலர்
முகமலர்ந்து மொக்குகள் மலர்ந்து குளிர்ச்சியாயின காற்று
டன் வாசனை பரிமளித்திருந்தன இவ்வாறாக அவ்வனத்தின்

விநோதங்களைப்பார்த்து மகாகளிப்புடன் ஜானகியம்மன்வால் மீகர் ஆசிர்மம்வந்துசேர்ந்தாள் அப்போது சூரியன் உதய மாகி இருபத்தைந்து நாழிகையாயிற்று.

சீதையம்மன் வால்மீக ராசிர்மஞ்சேர்தல்.

விருத்தம்.

நம்மிட ஆசிர்மத்தில் நங்கைமாரனேகருண்டு
செம்மையாயேவற்செய்வார் சீருடனிருப்பாயம்மா
இம்மையில்வேணபாக்கிய மிட்சணமழைப்பிப்பேனுன்
நன்மையாசிர்மத்திற்கு நலமுடன்போவோம்வாராய்.

இப்படி ஜானகியம்மன் வால்மீகருடைய ஆசிர்மம்வந்து சேர்ந்தபோது அம்மனுக்கு காதுவிடாய்ப்பட்டு முகமெல்லா முத்து முத்தாய் குருவேர்வைகள் பரவ அதனை வால்மீகர் கண்டு காமதேனுவையழைத்து ஓ காமதேனுவே, சீதாலட் சுமி நினைத்தபோதுவந்து தனக்கு இஷ்டமான பதார்த்தத் தைக் கொடுவென்று உத்திரவுகொடுக்க அவ்வாறே காமதே னுவும் அம்மனிடத்தில் வந்துநிற்க அம்மனெழுந்து கைகா லலம்பி ஜெபதபங்களை முடித்துக்கொண்டுவந்துட்கார்ந்தாள் காமதேனுனது தலைவாழையிலைவிரித்து பஞ்சகச்சாயத்துட னே அமுதுபரிமாற சந்தோஷமாய்ப்புசித்து தாகசாந்திசெ ய்து கைகாலலம்பி ஆசிர்மத்தில் வந்துட்கார்ந்து காமதேனு வால் கந்தம் கஸ்தூரி பரிமளாதிகளுமணிந்து கற்பூர தாம் பூலமருந்தி வால்மீகருடனே ராமருடைய பிரதாபங்களைப் பேசிக்கொண்டிருக்கையில் சீதாபிராட்டியானவள் வால்மீக ருடைய ஆசிர்மம் வந்திருக்கிறுளென்று கேள்விப்பட்டு ரிஷி களும் தபோதனர்களுவந்து அம்மனுடைய தெரிசனையை க்கண்டு தபம் நிறைவேற்றித் தங்கள் தங்கள் ஆசிர்மம்போ ய்ச்சேர்ந்தார்கள் அப்போது சூரியனும் அஸ்தமயமானுர் சந்திரனுந் தனது முப்பத்திரண்டு கிரணங்களுடனே விளங் கினுர். அக்காலையில் வால்மீகரெழுந்து நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு பர்னகசாலையில்வந்து சீதையம்மன் மன விசனந்தீரத்தக்க கதைகளைச்சொல்லிக்கொண்டிருந்தார்.

லட்சுமணர் சுவாமிக்குச் சீதைசேதிகூறல்.

விருத்தம்.

என்னென்றுசொல்வேனண்ணு என்மனம்பதைக்குதிப்போ
அன்னையாம்சீதையாரை அடவியில்விட்டபோது
தன்விதிதன்னைநொந்து சாமிக்கோர்சரணமென்று
என்னையேபோகுமென்று ஏங்கியேபுலம்பிநின்றுர்.

ஜானகியம்மனுனவள் அவ்விடத்தி லிப்படியிருக்கையில் லட்சுமணராணவர் சீதையம்மனே நினைத்து கண்களில் நீர் சொரிய மகாதுயரத்துடனே அழுதுக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்திஜுள் நுழைகிறபோது அப்பட்டணம் எப்படி யிருந்ததென்ருல் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்று கூறப்பட்ட நான்கு ஜாதிவீதிகளும் பாழடைந்து லட்சுமீகரம் நீங்கிச் சந்தடியில்லாம லிருப்பதைக்கண்டு துயரங்கொண்டு, அரண்மனே வாசற்படியில் ரதத்தைவிட் டிழிந்து, ஆசாரவாசற்கு வந்து ராமரைக்கண்டு நமஸ்கரித்து நீர் சொன்னபடியே ஜானகியம்மனேக்கொண்டுபோய் வனத்தில்விட்டு விட்டுவந்தேன் இந்நேரமிருகங்கள் வாயிற் போட்டுக்கொண்டதோ யென்னமோ தெரியவராது, தேவரீர்கையில் எள்ளும் நீரும் இரைத்துபோடச் சொன்னுள் இதுவுமல்லாமல் உமக்கு ஆயிர நமஸ்காரஞ் சொல்லச்சொன்னுளென்று சொல்லிப் பிறகு தாய்மார்களிடத்திலும் வந்துசொல்லி தன்னரண்மனேயைப் புகுந்திருந்தார்.

ஸ்ரீராமர் சீதையின்பிரிவை நினைந்து விசனப்படல்.

அதுகேட்டு ராமமூர்த்தி சீதையை நினைத்து சீதாவென்று துயரமுற்று தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுகிருர், ஜனகராசனுடைய திருக்கண்ணே! என் அன்புநிறைந்த என்காதலியாகிய பெண்ணே! அந்தரசகனுனவண்ணன் சொல்லிய வார்த்தையினுல் உன்னே யடவியில் விட்டேனே அவ்விடத்தில் கரடி புலி சிங்கம் காட்டானே பக்ஷித்துப்போட்டதோ என்னமோ தெரியாதே இனியாது செய்வேனென்று அழுதுபுலம்பி மூர்ச்சையடைந்து சற்றுநேரம் பொறுத்தெழுந்து மறுபடியும் சீதா சீதாவென்று மனமானது அனலிலிட்டமெழுகுபோலுருகி ஐயனுகியராமர் அயர்ந்து நித்திரை போய்விட்டார். பின்பு கௌசலை கைகேசி சுமித்திரை ஊர்மளாதேவி சுகோதைமாண்டவிமுதலான சகலருங்கேட்டுக் கோவென்ருெருவர்க்கொருவர் கூடிக்கொண்டழுகிறசத்தம் பரதர் சத்துருக்கமகாராசர்கேட்டு துக்கசாகரத்தி லழுந்தினவரைப்போல துயரம்பெருகி வாயைத்திறந்து கதறி மனம்பதறி அழுதார்கள். அந்த அழுகுரலோசையை அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்கப்பட்ட பந்துவர்க்கங்கள் மந்திரிப் பிரதா

னிகள் இன்னம் ஊரிலுள்ள சகலருங்கேட்டு நீங்காத துக்க சாகரத்தில் மூழ்கினவர்களாய் விசனமடைந் திருந்தார்கள். அதையறிந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தி அடங்காத துக்கத்தினுல் சீதா சீதாவென்று விகாரமேலிட்டு தனக்குத்தானே தேரி அந் தப்புறஞ்சென்று ஸ்நானம்பண்ணி நேமநிஷ்டைகளை முடி த்துக்கொண்டு அரண்மனைவந்து பரதரையழைத்து செங் கோல் முத்திரையுங் கையில்கொடுத்து நீதிமுறைதவருமல் பட்டணத்தை யாளுமென்று திட்டப்படுத்தி தான் சீதைபோ ன நாள்முதற்கொண்டு விசனமேலிட்டு ஆயாசத்தினுலிருந் துவிட்டார்.

பரதர் சத்துருக்கரும் பட்டணத்தில்வந்து நடக்கப்பட்ட அதிசயங்களை அன்றைக்கன்ருடம் சமாச்சாரஞ்சொல்ல மந் திரிபிரதானிகளும் பெரியோர்களும் ஊரிலுள்ள பேர்களும் வந்து கண்டுகொண்டு போவார்கள் இலட்சுமணர் மாத்திரந் தமையன்முகத்தில் முழிக்கப்போகாதென்று தன்னரண்மனை யிலிருந்துவிட்டார். ஸ்ரீராமமூர்த்தியும் லட்சுமணர் என்னமா யிருக்கிருரென்று கேளாமல் சீதைபிரிந்த வருத்தத்தினுல் மற ந்துவிட்டார் அக்காலையிற் கௌசலை கைகேசி சுமித்திரை மூன்று தாய்மாரும் ஸ்ரீராமரிடம்சென்று ஸ்ரீராமமூர்த்தியெதி ர்க்கண்டு நமஸ்கரித்து நின்றனர் அந்த மூன்றுதாய்மார்க ளும் ஆசீர்வாதங்கூறிஅப்பனே எங்கள் குமாரரத்தினமே உன் தேவியான சீதாக்கினி யென்னகுற்றம் பண்ணினுளென்று அம்மாதினை கரடி புலி சிங்கம் காட்டானை வாழும் காட்டிற் கனுப்பிவிட்டாய் கெர்ப்பவதி என்றும் பாராம லம்மிருகங்க ளுக்கோ இரையாக்கிவிட்டாய் அவள் செய்தகுற்றத்தை தெ ரியச்சொல்லென்று அம்மூவரும்கேட்க ஸ்ரீராமர் சொல்லுகி ருர். வாருமம்மா தாய்மார்களே நான் ஜானகியை விவாகம்ப ண்ணின நாள்முதற்கொண்டு அவளுருக்கு இடமானேன் அதேனென்ருல் ஒரு வண்ணுனுக்கிருந்த புத்திகூட எனக் கில்லாமற்போயிற்று ஆனபடியினுலே வனத்திற் கனுப்பிவிட் டேனென்ருர் அதற்கு கௌசலை கைகேசி சுமித்திரை என்னு மூன்று தாய்மார்களுஞ் சொல்லுகிருர்கள் என்னையனே ஸ்ரீ ராமபத்திரா அந்த சீதாதேவியைக்குறித்து உங்களையர்வந்து பழுதில்லையென்று பகர்ந்து சீதை அக்கினியிற் குதித்தெழு ந்துவர அக்கினிதேவன் குற்றமில்லை என்னவும் பிரமருத்தி ரேந்திராதி தேவரிஷிகள் முனிவர்கள்வந்து கூறியும் உனக்கு

நம்பிக்கையில்லாமற் போச்சுதே மேலும் நமது குலகுருவா கியவதிஷ்டர்வந்து பழுதில்லையென்று சொல்லியிருக்க இப் போது வண்ணன் என்னதான் சொன்னன் விபரமாய்ச்சொல் லென்றுகேட்க ஸ்ரீராமர்சொல்லுகிறர் ஒருநாள் நகர் சோத னைபோயிருந்தேன், அவ்விடத்தில் வண்ணனெருவன்பெண் சாதியுடன் சண்டைசெய்ய அன்னுள்முதல் மூன்றுநாளாய் அயல்வீடுபோயிருந்தாள் அத்தருவாயில் அவன் தாய்வந்து அப்பா உன்பெண்சாதி மூன்றுநாளாய் அயல்வீடு போயிருக் கிறளே அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு வாவென்றுசொல்ல அதுகேட்டு வண்ணன்சொல்லியதாவது ராமன் பெண்சாதியை ராவணனெடுத்துக் கொண்டுபோய் பத் துமாதம் வைத்துக்கொண்டிருந்தான்.

பிற்பாடு ஸ்ரீராமன் குரங்கு சேனைகளைக் கூட்டிக்கொண்டு போய் ராவணனைக்கொன்று சீதையை மீட்டுவந்து பட்டாபி ஷேகத்தில் வைத்து பட்டமுந்தரித்து ராச்சியமாளுகிறன். அதுபோல என்வீட்டைவிட்டு மூன்றுநாள் அயல்வீடுபோ யிருப்பவளை அழைத்துவந்து வீட்டில் வைத்தேனேயானல் என்குலத்தார் என்வீட்டிற் கைநனைக்கமாட்டார்கள் அந்த ராமன் குலத்தைப்போல என்குலத்தைப்பாராதே என் வீட் டைவிட் டயல்வீடுபோயிருப்பவளை நானழைக்கமாட்டேனெ ன்று தீர்ப்புகொடுத்தான் அந்த யீனகுலத்தி லுதித்தவண்ண ன் பழிக்கப்பேரெடுத்தேன் ஆனபடியினலே ஜானகியை கெர் ப்பவதியென்றும்பாராமல் வனத்திற்கனுப்பிவிட்டே னென் றர், அதுகேட்டு தாய்மார் மூவரும் பதிலுத்தரவு சொல்ல வாய்வராமல் சற்றுநேரம் சும்மாயிருந்து பின்புசொல்லுகிறர் ஐயோமகனே! இந்த அயோத்திமாநகருக்கு என்ன அனர்த் தகாலம் வருகிறதோ தெரியாது. அதனல் மகாலட்சுமியான சீதையம்மன் பிரிந்து வனத்திற்குப்போய்விட்டதும் அன்று முதல் தம்பிலட்சுமணன் உன்னைவிட்டுப்பிரிந்ததுவும் நீ கொ லுமண்டபத்திற்குப்போகாமல் நின்றுவிட்டதும் என்னகார ணமோ லட்சுமியான சீதை வனம்போகவே அயோத்திமா ந கரிலிருக்கப்பட்ட கொலுமண்டபமும் ஆசாரமண்டபமும் சபாமண்டபமும் அரண்மனைவீடுகளும் மேடை மெத்தைகளு ம் நான்குவர்னச்சாதிகளும் பாழடைந்து லட்சுமிகரமில்லா மல் திங்கள் மும்மாரிபொழியப்பட்ட மழையுமட்டிட்டு விளை வுகளுமில்லாமல் குடிகள் மனம்நொந்திருக்கிறர்கள். மேலும்

உங்கள் முன்னோராகிய பகீரதன், அரிச்சந்திரன், லோகிதன், இரணியன், இவர்களெல்லோரும் பட்டபுஸ்திரீ வார்த்தைக் குப் பதில்வார்த்தைசொல்லாமல் சத்தியந்தவருமல் சக்கரத்தி னுடைய ஆக்கினைப்பிரகாரம் அதிபத்தி சிரேஷ்டராய் புருஷ ன்சொல்லைப் பெண்சாதி தள்ளாமலும் பயபக்தி பூஷணமாக ராஜநீதி முறைமை தவராமல் குடிகள்மனம் நோகாமல் திங் கள்மும்மாரிபொழிய அமோகமாய்விளையக் குடிகளுஞ் சாப்பி ட்டு சுபேட்சையாய் வாழ்ந்திருந்தார்கள்.

மேலும் புலியும் எருதும் ஒருதுரையில் தண்ணீர் குடிக்கு ம் ஆனையும் சிங்கமும் ஒன்ருய்க்கூடியிருக்கும் கீரியும் சர்ப்பமு ம்சேர்ந்துவிளையாடும் இவ்வாறு சக்கரத்தினுடைய ஆக்கினை ப்படியாக நடக்கும் அஷ்டலட்சுமிகளும் இந்த அயோத்தியி ல் வாசம்பண்ணுவார்கள், இப்போது அயோத்தியாபுரி பட் டணத்து லட்சுமியான சீதையம்மன் வனம்போன படியினு லே இன்னம் என்ன அனர்த்தம் வந்துவிளையுமோ தெரியவ ராதென்று மனஞ்சலித்து கண்ணீருதிர்த்து அழுதுக்கொண் டு போய்விட்டார்கள். அப்போது ராமர் தாய்மார் சொன்ன விசேஷமெல்லாங்கேட்டு சீதையை வனத்திற் கனுப்பிவிட்ட துயரம் ஒருபக்கமும் லட்சுமணர் தன்னிடத்திற்கு வாராமலி ருக்கிற துக்கம் ஒருபக்கமும் தாய்மார் மூவர்கள் சலித்துக் கொண்டுபோன சங்கடம் ஒருபுறமும் பட்டணமும் பரதவிக் கிற வேதனை யொருபக்கமும் இப்படி பலவாருய் சஞ்சலத்தி லாழ்த்திருக்கையில் ஜனங்களுக்கு சௌக்கியமும் முகத்தெளி வுமான லட்சுமிகரம் போய்விட்டது மண்மாரி பொழிந்தது மேடை மெத்தை கோபுரம் மண்டபம் அரண்மனை ஆஸ்தான ங்கள் மாடமாளிகை கூடகோபுரங்கள் காற்றுமழைகளாலடிப் பட்டுக் குன்றியது மனிதருடன் மனிதர் மோதிக்கொள்ளவும் யானைக்கொட்டாய் இடிந்தன மாடு கன்று குதிரைகள் மிதமில் லாமல் விபரீதகாலம்போல யிறந்துவிடவே அவைகளை நாய் நரி கழுகு கூளிகள் பிடுங்கித்தின்று பசியாரின இப்படி அ யோத்தியாபுரி பட்டணமெங்கும் அழுகிறசத்தம் பரதர் கேள் விப்பட்டு சத்துருக்கருடனேசொல்லி இதென்னவிபரீதம் பிர ந்தது நம்முடைய தமையன் நமக்கு செங்கோல் முத்திரைகொ டுத்தநாள் முதற்கொண்டு இதுவரைக்கும் மழைகளில்லாமல் குடிகள்நொந்து மண்மாரி பொழிந்து பெருங்காற்றடித்து மேடை மெத்தைகளிடிந்து ஆனை குதிரை பரிவாரங்கள் மா

ண்டு பிணநாற்றங்களெழும்பிய வீதிகளும் பாழடைந்து போயிற்று.

நானென்னகுறைசெய்தேன் இது ஆரிட்டசாபம் என் ராச்சியத்துக்கு அழிவுவந்ததுபோற் காண்கிறது யாரை அநீதஞ்செய்தேன் எவரை வதைத்தேன் நானென்னபாவம் பண்ணினேன் தம்பி லட்சுமணருங் கொலுமண்டபம் வருகிறதில்லை நமது தமயனிடத்திற்கும் போகிறதில்லை நம்மிருவரையுங் காட்டிகொடுத்துச் சாமியும் அரண்மனைவிட்டு வெளியில் புறப்படுகிறதில்லையென்று பரதர் விசனப்பட்டழுகையில் சத்துருக்கர் சொல்லுகிறார் வாரும் அண்ணாவே நமது தமயன் தேவி மகாலட்சுமியான ஜானகியம்மன் அயோத்தியை விட்டு என்றைக்கு வனம்போனாளோ அன்றே அஷ்டலட்சுமிகளுங் கூடநடந்தார்கள். அந்த லட்சுமிமாது சீதை மனம்நொந்து என்னசாபமிட்டாளோ அந்தசாப மிப்படிவிளைந்தது முன்னாலே அந்த ராவணன் ஏகசக்கிராதிபதியாய் ஆயிரத்தெட்டண்டம் (224) புவனம் ஈரேழுபதினாலுலோகம் சத்தசாகரத்திற்கு ராசனாகி தேவேந்திரனைப்பிடித்து விலங்கிற்போட்டு மகாரிஷிகள் தவத்தை ஈடேறவொட்டாமலும் சாம்பசிவன் கேட்டவரங்கொடுக்கவும் விஷ்ணுமனவர்த்தி செலவு நடத்தவும் பிரமதேவர் பஞ்சாங்கஞ்சொல்லவும் ரிஷிகள் தேவர்கள் மகூஷம்பிடித்துவந்துபோடவும் வருணன் சாணந்தெளிக்கவும் மூத்தம்பெருக்கவும் சூரியன் லங்கையைப்பாராமல் பத்துயோசனைதூரம் விலகிப்போகவும் சந்திரன் குளிர்ச்சியாய் லங்கைக்குள் வந்துகாயவும் ஒருவருந் தனக்கெதிரில்லாமல் யாவரும் வணங்கும்படியாய்வாழ்ந்த ராவணன் ஜானகியம்மனைப் பர்ணசாலையோடே யெடுத்துக்கொண்டுபோய் அசோகவனத்தில் வைக்கவும் அப்போது அவளழுத கண்ணீரினால் இலங்காபுரிபட்டணம் ஏழுநாள் தீப்பற்றி யெறியவும் இராவணன், கும்பகர்ணன், இந்திரசித்து, அதிகாயன், கும்பநிகும்பன், இவர்களுக்குண்டாகிய பந்துவர்க்கங்களும் குமாரவர்க்கங்களும் சினேகிதவர்க்கங்களும் ஆனை குதிரை சேனை பரிவாரங்களும் அடியோடே போனார்கள், அப்படியிருக்க இப்போது சீதாலட்சுமி வனம்போகவே அவளழுகிற கண்ணீர் விருதாவாகப்போகாமல் மண்மாரிபொழிந்து மண்காற்றடித்து ஆனை குதிரை பரிவாரங்களுமாண்டது இன்னம் என்னமாய் முடியுமோ யாதாய்வந்துவிளையுமோ அண்ணாவே யென்றான்

சத்துருக்கனனவன் அதுகேட்டு பரதாழ்வார் மிகவும் ஆயாச மடைந்து என்னசெய்வேன் ஸ்ரீராமா ராமாவென்று ராமஸ்துதிபண்ணி மனதைத் திடப்படுத்திக்கொண்டிருக்கையில் சத்துருக்கர் பரதருடைய வுத்திரவினுல் களஞ்சியத்தைத்திறந்து ஊரிலுள்ள குடிகளுக்கும் ஏழைபரதேசிகளுக்கும் தானியங்களை அவாரியாய் வாரிக்கொடுத்து பட்டணங்காபராவில்லாமல் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்ததை ஸ்ரீராமமூர்த்தியும்கேட்டு மகாவிசாரசித்தராய் சீதையைப்பிரிந்த துயரத்தினுல் ஒன்றுஞ் சொல்லாம லிருந்துவிட்டார் லட்சுமணரும் இதுகளெல்லாஞ் சீதாதேவியின் மகத்துவமென்று மனதிலெண்ணிக்கொண்டு துக்கசாகரத்தி லழிந்திருந்தார் அதுகண்டு மந்திரியான சுமந்திரரும் ஸ்ரீராமமூர்த்தி யண்டையில் வந்து நமஸ்கரித்து தசரதருக்கு பாட்டனுராகியசக்கிரவர்த்திகளுடைய பிரதாபங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அயோத்தியாபுரிபட்டணம் இவ்வாருகயிருக்கையில் வால்மீகமகாரிஷி ஆசிர்மத்தில் சீதையம்மன் யாதொரு குறைவுமில்லாமல் காமதேனுவால் தனக்குச் சகலவைபவமும் நடக்கச் சுகித்திருக்கையில் வால்மீகரானவர் தடாகத்திற்குச்சென்று ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைகள் முடித்துக்கொண்டு ஏழுதர்ப்பைப் புல்லைக்கிள்ளி பூமியில்வைத்து மந்திர ஆவாகனஞ்செய்து ஏழுபெண்களை நியமித்தார். அந்தயேழுமாதர்களும் தட்சணமெழுந்து வால்மீகரடிபாதத்திற்பணிந்து நிற்க அவர்களுக்கு வால்மீகர் ஆசீர்வாதஞ்செய்து சொல்லுகிருர் ஓ வனத்துப்பெண்களே! நீங்கள் நமது ஆசிர்மத்திலிருக்கும் மகாலட்சுமியாகிய சீதையம்மனுக்கு ஊழியஞ் செய்துக்கொண்டு இடைவிடாமல் காத்துக்கொண்டிருங்களென்று அனுப்பவே அம்மாதர்களெழுவருந் தட்சணம் அம்மனண்டையில் வணங்கி கைகூப்பி நின்ருர்கள். அவர்களை ஜானகியம்மன் பார்த்து நீங்கள் யாரென்றுகேட்க, அப்பெண்கள் அம்மா நாங்கள் வால்மீகர் நிஷ்டையில் உற்பவித்தவர்கள் அவர் எங்களை உனக்கு ஊழியஞ்செய்யும்படியாய் அனுப்பிவைத்தார். எங்கள்பேர் வனத்துப்பெண்கள் திரேகமே உனது பணிவிடைச்செய்ய உற்பத்தியாகையால் யாதுந்தடையில்லாமல் எங்கள் பணிவிடையை ஏற்றுக்கொண்டால் அதனுல் எங்களுக்கு கீர்த்தியுண்டாம் நற்பேரடைவோமென்று சந்துஷ்டியோடு கூறிய அவ்வெழுவர்களால் சகல ஊழியங்களுஞ் செய்யப்பெ

ற்ற ஜானகியம்மன் வால்மீகரையழைத்து எனக்குப்பள்ளிகொள்ள நவரத்தின ஊஞ்சல் நியமித்து தரச்சொல்லிகேட்க வால்மீகர் அவ்வாறே நவரத்தின ஊஞ்சல் நியமித்துக் கொடுத்தா ரவ்வூஞ்சலில் சீதையம்மனுனவள் சயனித்துக்கொள்ள வனத்துப்பெண்கள் எழுவரும் உஞ்சலாட்டுவது எப்படி யிருந்ததென்ருல், அயோத்தியாபுரியில் இலட்சம் கன்னியர்கள் நவரத்தினமான ஊஞ்சலில் திண்டு தலையணைபோட்டு சாய்ந்து பள்ளிகொள்ளத் தாதியர்கள் தாலாட்ட மத்தளம் ருத்திர வீணை முழங்கக் கட்டியக்காரர் கட்டியங்கூற, நிர்த்தனம்புரிய இப்படி சகல ஆடம்பரங்களுட னிருக்கிறதுபோலு மிருந்தன. அதுவுமன்றி வண்டுகள் கீதம்பாடவும் அன்னங்கள் குயில்கள் மயில்கள் நாட்டியம்பண்ணவும் ரிஷிகள் தபோதனர்கள் வந்துவணங்கவும் நினைத்தபோது காமதேனுனது வந்து பசியாற்றவும் சீதையம்மனுந் தன்னுடைய விசனமெல்லாந் தீர்ந்து அயோத்தியிலிருந்த சுகத்திலும் பதின்மடங் கதிகமாய்ச் சுகத்தை யனுபவித்துக் கொண்டிருந்தாள்.

சீதையம்மன் புத்திரனைப் பெற்றது.

விருத்தம்.

செந்திருவாஞ்சீதை சிறுவனைப்பயின்ருளென்று
துந்துமிவாத்தியங்கள் துலங்கவெக்காளமூத
விந்திரன்மற்றுந்தேவ ரிஷிகளும்பார்த்திருக்க
வந்துவால்மீகர்தானும் வழங்குவார்வேணதெல்லாம்.

இப்படியிருக்கிற நாளையில் சீதையம்மனுக்குப் போதுகாலம் வந்தது கெற்பவேதனைபடுகையில் ஆகாசவாணி பூமிதேவி சப்த கன்னிகளும் ரிஷிஸ்மாதர்களும் ஜானகியம்மனுக்கு கைகொடுத் தாதரிக்க பத்து மாதமுஞ்சென்று பூச நட்சத்திரம் கடகலக்கினத்தில் ஒரு புத்திரனைப் பெற்ருள், அப்புத்திர னெப்படி விளங்கினுனென்ருல் நீலமேகசுரூபமும் அகண்ட மார்பும் நீண்டகரமும் ஆலிலைபோல் வயிறும் இளவாழைத் தண்டுபோல் துடையும் அமர்ந்த பாதமும் ஸ்ரீராமருக்கு நிகராய் வார்ப்பட்ம்வார்த்த சிலையைப்போ லிருப்பதன்றியும் அந்தப்பிள்ளையை பார்த்தால் ஸ்ரீராமரைப் பார்க்க வேண்டியதில்லை அதுகண்டு சீதையம்மன் மகாசந்தோஷமாகி தன்மனதிலுள்ள விசனமெல்லாம் நீங்கிப் பிள்ளையைப் பார்த்து மனதிலடங்காத ஆனத்த சந்தோஷமா யிருந்தாள்.

அப்போது வால்மீகர் சகலருக்கும் கற்பூர தாம்பூலங் கொடுத்தனுப்பி பிள்ளைபிறந்த லக்கினம் நட்சத்திரம் வாரங்களும் பார்த்து சந்தோஷமாகி பத்துவயதிற்குமேல் இப்பிள்ளைக்கு சிவன் விஷ்ணு பிர்மா தேவேந்திரன் தேவர்கள் ராட்சதாள் யாவரும் நிகரில்லையென்று ஜாதகமெழுதி சீதையம்மனுக்கு வாசித்து காண்பிக்க அம்மனுங் காதுகுளிரக் கேட்டு வால்மீகரைப்பார்த்து சொல்லுகிருள். ஐயா! வால்மீகரே! பிள்ளையின் சாமர்த்தியஞ் சொன்னீரே யல்லாமல் பிள்ளைக்கு வயது வவ்வளவென்றும் விவாகம் எத்தனைவயதி லாகுமென்றும் பட்டாபிஷேகம் எவ்வளவு பிராயத்தில் நடக்குமென்றும் பிள்ளையானவன் தாய் தகப்பனுக்கு எப்போ கருமஞ் செய்வானென்றுஞ் சொல்லாமற்போனீரே அதுகளை நன்ருய்த் தெரியும்படி சொல்லவேண்டுமென்று ஜானகியம்மன் கேட்டருளினுள் அப்போது வால்மீகர் சொல்லுகிருர் வாருமம்மா சீதா நமக்குறிய நாள் முப்பதுங் கூடினுல் தேவர்களுக்கு ஒருநாள் இந்த நாள் முப்பதுஞ் சேர்ந்தால் ஒருமாதம் இப்படிப்பட்ட மாதம் பன்னிரண்டானுல் தேவர்களுக்கு ஒரு வருஷம் இப்படிப்பட்ட வருஷம் எண்பதில் உன் பிள்ளைக்கு வயது சரியாய்ப்போகும் இப்பேர்ப்பட்டவருஷம்பத்தொன்பதானுல் உமக்கு கருமஞ் செய்வான் முப்பதானுல் அரசாட்சி செய்வானென்ருர். அதுகேட்டு ஜானகியம்மன் அளவில்லாத சந்தோஷ மடைந்து சரீரம் பூரித்து பிள்ளையை சீராட்டி வளர்த்து வருங்காலையில் வால்மீகரானவர் சீதையம்மனைப் பார்த்து பிள்ளைபிறந்து மூன்று நாளாச்சுது இவனுக்கு என்ன பேரிடுவோம் சொல்லென்று கேழ்க்க ஜானகியம்மன் கூறுகின்ருள். வாருமையா வால்மீகரே இந்தப்பிள்ளைக்கு இருபதாம் பாட்டனுராகிய குசலவ மகாராஜரென்று விளங்கினுர். அவருடைய நாமதேயத்தை சாற்றுமென்று கூறவே அவருஞ்சம்மதித்து இன்றையதினம் பன்னிரண்டு நாழிகைக்குமேல் நாள் நன்ருயிருக்கின்றது. அந்தச் சுப முகூர்த்தத்தில் நாமகரணம் வைக்கவேண்டும் ஆகையால்வனத்துப் பெண்களை யழைப்பித்து ஓமத்துக்கு வேண்டிய சந்தன புஷ்பம் சமுத்துமுதல் தருவித்துக்கொள்ளென்று திட்டஞ்செய்ய அவ்வாறே வனத்துப் பெண்களை சாமக்கிரிகைகள் கொண்டுவரும்படி அனுப்பிவிட்டு ஜானகியம்மன் தன் பிள்ளையை வால்மீகர் பக்கத்தில் வளர்த்தி அவரைப் பார்த்

துக்கொள்ளச்சொல்லித் தடாகத்திற் சென்ருள், அப்போது வால்மீகரும் ஜெபத்தி லிருந்துவிட்டார் அந்தச் சமயத்தில் பிள்ளைக்குப் பசியெடுத்து காகாவென்றழவே அந்தச்சத்தஞ் சீதையம்மன் கேட்டு ஓடிவந்து பார்க்கையில் வால்மீகர் கண்ணை மூடிக்கொண்டு செபத்திலிருப்பதைக்கண்டு அழுகிறபிள்ளையையெடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு தடாகத்திற்குப் போய்விட்டாள்.

சற்றுநேரம் கடந்து வால்மீகர் ஜெபத்தை விட்டு கண்ணைத் திறந்து பார்க்கையில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளையைக் காணுமையால் கரடி புலி சிங்கம் வாயிற் போட்டுக்கொண்டதோ என்னமோ யிதற்கென்னசெய்வேன் சீதையம்மன் தன்பிள்ளை யெங்கேயென்று கேட்டால் நானென்னசொல்லுவேன் அம்மன் பிள்ளைமீதில் அபேட்சையாயிருக்கிறபடியினுலே நம்மை ரிஷியென்று பாராமல் சபித்துப்போடுவாளென்று சீக்கிரமாய் ஒரு தர்ப்பை புல்லைக்கிள்ளி பூமியில் வைத்து மந்திரோபதேசஞ்செய்து சீதா லட்சுமியின் பிள்ளைபோ லுருவுண்டாக்கி உயிர்கொடுத்து சிருஷ்டித்துவைத்தார் சீதையம்மனும் ஸ்நானம்பண்ணி பிள்ளையைத் தூக்கி இடுப்பில் வைத்து ஜலந்திரட்டி ஒரு கையிலெடுத்துக்கொண்டு பர்ணசாலைக்குவந்து இடுப்பிலிருக்கிற பிள்ளையை தொட்டிலில் வளர்த்தி ஜலத்தை பூமியிலிறக்கி ஆசிரமம் வருகையில் வால்மீகர் சிருஷ்டித்த பிள்ளையானது காகாவென்று அழும்போது அண்டையில் வந்துபார்த்து ஆச்சரியப்பட்டு, ஐயா! வால்மீகரே! இதேது என்பிள்ளையைப்போலிருக்கிறதே சொல்லென்று ஜானகியம்மன் கேட்க வால்மீகரானவர் அம்மா இதுவும் உன்பிள்ளைதான் எடுத்து வளர்த்துக்கொள்ளென்று கூரவே சீதையம்மன் சந்தோஷமா யெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கையில் வனத்துப் பெண்கள் ஓமத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளனைத்துங் கொண்டுவந்தார்கள்.

அப்போது வால்மீகரானவர் பன்னிரண்டு நாழிகைக்குமேல் ஓமம்வளர்த்தி விநாயகர்பூசைசெய்து நவக்கிரகப்பிரீதி பண்ணி மூத்தபிள்ளைக்கு குசலனென்றும் இளைய பிள்ளைக்கு லவனென்றும் நாமகரணமிட்டு இரண்டு பிள்ளைகளையுமெடுத்து ஆசீர்வாதஞ்செய்து சீதையம்மன்கையிற் கொடுத்தார். அம்மனவள் இரண்டுபிள்ளைகளையும்வாங்கி முத்தமிட்டுத்

தன்னுடைய பர்ணசாலையிற் கொண்டுபோய் வைத்துக்கொண்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துக்கொண்டு வருகையில் மழலைச்சொற்களை மாதாவான சீதையம்மன் கேட்டு மனமகிழ்ந்து அப் பிள்ளைகளுடனே தானுங் கொஞ்சிக்குலாவி இனியில்லாத ஆபரணங்களைப் பூட்டி அழகானது ஜொலிக்கும்படியாய் விழிக்குமைதீட்டி வாஞ்சையாக வசனித்து வருகிறநாளில் பிள்ளைக்கு ஐந்துவயதாகிக் கல்விக்குப் பருவகாலமென்று வால்மீகர் அவ்விரண்டு பிள்ளைகளையும் அழைத்து நல்ல சுபமூகூர்த்தத்தில் ஆடையாபரணங்கள் அலங்கரித்து விநாயக ஸ்துதிசெய்து ஹரி ஓம் நமோநாராயணவென்கிற திவ்விய அக்ஷரத்தைச்சொல்லிக்கொடுத்தார். அவ்வாறே பிள்ளைகளும் வாசித்துவர ஆறும் வயதில் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண் புராணம் சகல கணக்கு காரியங்களுங் கற்று ஏழாம்வயதில் சிலம்பங்கற்று எட்டாம் பிராயத்தில் தனுர்வேத சாஸ்திரங்களெல்லாங் கற்பித்துக் கொடுத்து ஒன்பதாம் பிராயத்தில் கரவேக சரவேகமும் பார்த்து இவர்களுக்குப் பிர்மாதிகள் முதல் யாரும் ஈடல்லவென்று அழைத்து வந்து சீதையம்மனிடத்தில் தனுர்வேத பரீட்சைகளுங் காண்பித்தார் சீதையம்மனும் பார்த்து ஸ்ரீராமர் லட்சுமணர் பரதசத்துருக்கரும் குசலவர்க்கு நிகரில்லையென்று மனமகிழ்ந்து பிள்ளைகளுக்கு தானறிந்த வித்தைகளுங் கற்பித்துக் கொடுத்தார் பிள்ளைகளுந் தாஷ்டீகமாய் வளர்ந்து ஸ்ரீராமர் லட்சுமணரைப்போல இணைபிரியாமல் வால்மீகர் வனத்திற் காமதேனுவாற் சகலவுபசாரணையும் பெற்றுக்கொண்டு அயோத்தியிலும் எண்மணங்கு அதிகமாய் அந்த வனத்தில் திங்கள் மும்மாரி சொரிய காடு செடிகள் தழைத்து செழிக்கும்படியாய் ஜானகியம்மனும் குசன் லவனென்னும் பிள்ளைகளிருவரும் சுகமாயிருந்தார்கள்.

வசிஷ்டர் அயோத்திக்கு வருதல்.

இப்படியிருக்குங்காலத்தில் வசிஷ்டரானவர் இதுசேதியறிந்து ஆ! ஆ! குடிகெட்டுப் போச்சுதென்று ஜடாமண்டலதாரியாய் கரத்திற் கமண்டலமேந்தி காவிவேஷ்டி தரித்து காலில் பாதக்குறடணிந்து சிலரிஷிகூட்டங்களுடனே அயோத்திக்குப் புறப்பட்டு இலட்சுமணரிடம் வரவே இலட்சுமண

ரானவர் எழுந்திருந்து எதிர்சென்று அழைத்துவந்து அர்க்கியபாத்தியங்கொடுத்து பூசைசெய்து ஆசனமளித்து உட்காரவைத்து தோத்திரம் பண்ணின இளைய பெருமாளாகிய இலட்சுமணருக்கு வதிஷ்டர் ஆசீர்வதித்துச் சொல்லுகிறார் வாராய் இலட்சுமணரே இவ்விடத்தில் நடந்த சமாச்சாரமென்ன அதை தெரியச்சொல்லென வதிஷ்டர்கேட்க இலட்சுமணர் சொல்லுகிறார் கேளுநமையா முனிநாதரே ஸ்ரீராமபத்திரனவர் ஒருநாள் நகர்சோதனைக்குப் போயிருந்தார் அவ்விடத்தில் வண்ணானவன் தன்பெண்சாதியை யடித்தான் அவள் பிணங்கி மூன்றுநாளாய் அயல்வீடு போயிருக்கிறாள் அவளைச் சமாதானப்படுத்தி யழைத்துவாவென்று தாயானவள் சொல்ல அதுகேட்டு வண்ணான் சொன்னது ஸ்ரீராமருடைய தேவியை இராவணன் எடுத்துக்கொண்டுபோய் பத்துமாதம் வைத்திருந்தான் அதன்பிறகு ராமன் சேனையைச் கூட்டிக்கொண்டுபோய் இராவணன் முதல் இராட்சதர்களையெல்லாஞ் செயித்துச் சீதையை அயோத்திக்கு அழைத்துவந்து பட்டாபிஷேகந்தரித்து இராச்சியம் ஆளுகிறான் அந்த ராமன் குலத்தைப்போல் என்குலத்தைப் பாராதே வீடுவிட்டு மூன்றுநாளாய் அயல்வீடுபோயிருப்பவளை நான் அழைத்து வீட்டில் வைப்பேனேயானால் என்குலத்தார் என்வீட்டில் கைநனைக்கமாட்டார்கள் என்குலத்திற்கு யீனம்வந்துவிடும் அப்படி வீடுவிட்டு அயல்வீடு போனவளை நான் அழைக்கிறதில்லையென்று தீர்ப்புக்கொடுத்தான்.

அச்சொல்லைக்கேட்ட என்தமையன் எங்களை யழைத்து அதனைசொல்லிச் சீதையைக் காட்டில்விட்டு வரச்சொன்னார் அப்போது நாங்களறிந்த நீதிமார்க்கங்களைச்சொல்லியுங் கேளாமல் வாளையுருவி கழுத்தின்பேரில் வைத்துக்கொண்டு பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளுவேனென்றார். நாங்கள் பயந்து உனது மனதின்படியே ஜானகியை வனத்தில்விட்டு வருகிறோமென்று சொன்னபிற்பாடு வாளை யுறையிற்போட்டார் பின்பு ஜானகியம்மனை ரதத்திலேற்றிக் கொண்டுபோய் நான் கானகத்தில்விட்டுவந்து என்தமையனுக்குச் சமாச்சாரஞ்சொல்லி அன்றுமுதல் இன்றையவரைக்கும் என்தமையனிடம் நான்போகிறதில்லை அவரும் என்னை நினைக்கிறதில்லை பரதர் சத்துருக்கர் இராஜரீகம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் சீதாலட்சுமி இறந்தார்களோ! இருக்கிறார்களோ! தெரிய

வராதென்று இலட்சுமணர்கூற வதிஷ்டர் ஞானதிருஷ்டியி ஞற்பார்த்து சீதாலட்சுமி சுகமாகப் பிள்ளையைப்பெற்று வால்மீக ராசிர்மத்தி லிருக்கிறுர்களென்று தெரிந்துவாரும் இலட்சுமணரே சீதையை மிருகங்கள் பட்சித்து போட்டதென்று உன்மனதில் நினையாதே மேல்வருஷம் பிள்ளையுந் தாயுமாய் வரப்போகிறுர்கள் நீ விசனப்பட வேண்டாமென்றுர் இலட்சுமணர்கேட்டு விசனமெல்லாந் தீர்ந்து சந்தோஷமாஞர். அப்போது வதிஷ்டர் வாராய் இலட்சுமணரே உனது தமையனுனவர் சீதைபிரிந்த சோகத்திஞலே உன்னையும் நினையாமல் கொலுமுகம் வாராமல் இருக்கிறுர் நீ இந்தவேளையில் ஸ்ரீராமரைப்போய் கண்டுகொள்ளென்று உத்தரவுகொடுத்து வதிஷ்டரானவர் தம்முடைய ஆசிர்மமெழுந்தருளிஞர் அந்தட்சணமே லட்சுமணரானவர் தேரேறி ஸ்ரீராமரிருக்கும் ஆசாரவாசலில் வந்து இரதம் விட்டிழிந்து அரண்மனைக்குள் நுழைந்து ஸ்ரீராமரைக்கண்டு நமஸ்கரிக்கவே ஸ்ரீராமரும் தம்பியைக்கண்டமாத்திரத்தில் தமது துயரத்தையெல்லாஞ்சொல்லி யாற்றிஞர். பின்பு ஸ்ரீராமரும் இலட்சுமணரும் சந்தோஷமாகிப் போசனமருந்தி தாம்பூலம் நுகர்ந்து கொலுமுகம் வந்தார்கள் வரவே பரத சத்துருக்கரெழுந்து வணங்கிஞர்கள் சேஞதிபதிகள் படைத்தலைவர்களெம் சேவிக்ககட்டியருங் கட்டியங்கூறிஞர்கள், அப்போது வதிஷ்டமகாமுனிவர் அச்சபைக்குச் சிலரிஷிகூட்டங்களுடன் எழுந்தருளிஞர் அதுகண்டு ஸ்ரீராமர் தம்பிமாருடன் எழுந்திருந்து பயபக்திவிசுவாசத்துடன் பூஜைசெய்து அழைத்துவந்து பொற்பீடம்வைத்து அதில் எழுந்தருளச்செய்து அவர்கள் ஆசிர்வாதம் பெற்றபின்பு ஸ்ரீராமமூர்த்தி சொல்லுகின்றுர்.

ஐயா! குலகுருவாகிய வதிஷ்டரே! சீதையைப் பாணிக்கிரகணம் பண்ணின நாள்முதல் அவதூருக்கிடமானேன் அதேனென்றுல் சீதையை ராவணன் எடுத்துப் போகவும், அதஞல் அவனுடைய அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் பிள்ளைகள் பேரன்மார் பந்துவர்க்கம் சினேகிதர் இரண்டாயிரம் வெள்ளம் ராக்ஷதப்படையுடன் அவனும் என்பாணத்துக்கிரையாஞர்கள் மேலும் அவனுக்குச் சகாயமாக சதகண்டராவணனும் சகஸ்திரகண்டராவணனும் பதிஞயிரம் வெள்ளம் ராக்ஷதர்களுடன் வந்து யுத்தஞ்செய்து, அவர்களும் மாண்டார்கள். இராவணன் கும்பகர்ணன் லேசானவர்

களல்ல மூன்றுகோடி சிவலிங்கம் வைத்து பூசை செய்தவர்கள். அதுவுமன்றி, மாதர்மிஷ்டிகளாயிருக்கப்பட்ட அதிகாயன் கும்பன் நிகும்பன் யவர்னனென்று சொல்லப்பட்ட அரிபக்தர்களையுங் கொன்றேன் அந்தகோரத்தை வாயினுற் சொல்லக்கூடாது, இந்த ஈதையினுலே வெகு பாவத்தைக் கட்டிக்கொண்டேன், ஆதலால் என்ன ராச்சியம், என்ன பிழைப்பு, என்னசுகம், இனி இந்த ராச்சியத்தை வேண்டேன் இதை தம்பிமார்வசத்தில் ஒப்பிவைத்து நான் பவித்திரனுக மரவுரிதரித்துக்கொண்டு, காட்டிற்குச்சென்று தவம்புரிந்து பாவத்தைப் போக்கடித்துக் கொள்ளல்வேண்டும் எனக்குச் செலவு தந்தருளுமென்று ஸ்ரீராமரானவர்கேட்க, வதிஷ்டர் சொல்லுகிருர்.

ஓய் இராமச்சந்திரா! நானுமக்கு எத்தனைவிதமாய்ப் பாவமில்லையென்று சொன்னுலுங் கேட்கவில்லையே. ராசாக்களுக்குத் தக்கது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்வதே, தர்மமென்று சொன்னுலும் உமக்கு தெளிவு பிறக்கவில்லை ஆகையால் நீர் அஸ்வமேதயாகம் பண்ணி தேவர்களுக்கு திருப்தி செய்து இராவணன் கும்பகர்ணனென்னும், இராட்சதாளுக்கு மோட்சத்தைக் கொடுத்து, உம்முடைய பாவத்தை போக்கடித்துக் கொள்ளுமென்று சொல்ல அதுகேட்டு இராமபத்திரர் சந்தோஷமாகி, வதிஷ்டமகாமுனியைப் பார்த்துச் சொல்லுகிருர். ஓய் சுவாமி, அந்தயாகம் பண்ணுகிற விதமெப்படி யெனக்குத் தெரியப்படச் சொல்லுமென்றுகேட்க, வதிஷ்டரானவர் கூறுகின்ருர் கேளும், ஸ்ரீராமபத்திரரே, அஸ்வமேதயாகம் பண்ணுகிற விதமெப்படியென்ருல் யாகத்திற் குறித்தான அஸ்வமானது சரீரம் வெண்மையாகவும், கழுத்து குங்குமநிறமாகவும், வலதுகாதுமஞ்சள் நிறமாகவும், இடதுகாலு பச்சைநிறமாகவும், உதடு பவழம்போலும், வயிறு கருப்புமாக யிருக்கவேண்டும், இப்படிக்கொத்த இலட்சணமுள்ள அஸ்வத்தைக் கொண்டுவந்து அதற்கு ஸ்நானஞ் செய்துவைத்து, உம்முடைய வீரப்பிரதாபசவுரியத்தை ஒருபொற்பட்டயத்திலெழுதி, அந்தப்பட்டயத்தை அஸ்வத்தினுடைய நெற்றியிற்கட்டி, ஒருவருஷம் பூமிப்பிரதட்சணஞ் செய்துவைத்து, அங்கங்கே அந்த அஸ்வத்தைப்பிடித்துக்கட்டி யெதிர்த்த ராசாக்களையெல்லாம் செய

ம்பண்ணி, குதிரையை விடுவித்துக்கொண்டு, யாககுண்டத்தி லே அக்கினிதேவனை நிறுத்தி, மந்திர பூர்வீகத்துடனே எக் கியம்வளர்த்தி அந்த எக்கியத்தில் அஸ்வத்தை ஆவாகனம் பண்ணி, பிறகு தேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகங் கொடு த்து, உத்தமராகிய பிராமணர்களுக்கு ஆனை, குதிரை-3-தேர்-7-காலாள்-9-ஸ்திரீ-1-ஒருபார நந்தங்கம் இந்தவிதமாய்த் தான ங்கொடுத்து, அந்த அஸ்வமேதபலனை அனுபவிக்க வேண் டும், ஆனபடியினாலே உன்னுடைய தேவியும் நின்னுடன் எக்கிய பவுத்திரங்களைக் கட்டிக்கொண்டு யாகதீட்சையில் நிற் கவேண்டுமென்று வசிஷ்டர்சொன்னார். அதுகேட்டு ஸ்ரீராம மூர்த்தி சிந்தாகிரந்தராய், விசாரப்பட்டு வசிஷ்டரைப்பார் த்து, ஓய், சுவாமி சீதையை வனத்திற் கனுப்பிவிட்டேனே! இத்தனை நாள் சீதை யிறந்துபோ யிருப்பாள்போல காண்கி றது நானென்ன செய்வேனென்று ஸ்ரீராமர் கூற, வசிஷ்டர் சொல்லுகிறார். வாரும் ஸ்ரீராமச்சந்திரரே. இலட்சுமியில்லா விட்டால் யாகத்திற்கும் பின்னம்வருமென்றார். அதுகேட்டு ஸ்ரீராமர் மிஞ்சிப்போன காரியத்திற்கு என்ன செய்யலாம். தங்கத்தினாற் சீதையைப்போல வார்ப்படம்வார்த்து யாகதீட் சைசெய்யலாமோவென்று கேட்க, வசிஷ்டர் சொல்லுகிறார் வாரும் ராமச்சந்திரா பௌர்ணமி இன்னம் ஒருமாத மிருக் கின்றது இதற்குள் யாகத்திற்கு வேண்டிய சாமக்கிரிகைகளெ ல்லாஞ் சேகரித்து வைத்துக்கொள் சித்திராப்பருவம் நவமி வந்தஉடனே என்னை நினைத்தால் நான் வருகிறேனென்று சொல்லி ஸ்ரீராமரிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு வசிஷ்டர் தன்னாசிரமஞ் சேர்ந்தார்.

இப்பால் ஸ்ரீராமமூர்த்தியானவர் தம்பிமார்களைப் பார்த் து, வாரும் தம்பிமார்களே! நாம் செய்யப்போகிற அஸ்வ மேதயாகத்திற்கு அனுமாரில்லாவிட்டால் முடியாது. ஆகை யால் அனுமாரை யழைத்துவரச் சொல்லுங்களென்று ஆக் கியாபிக்க அவ்வாறு சத்துருக்கரும் ஒரு தூதனை யழைத்துக் கிஷ்கிந்தாபுரி பட்டணஞ்சென்று அனுமாரைக்கண்டு சுவா மியாரழைத்துவரச் சொன்னாரென்று சொல்லிச் சீக்கிரமா யழைத்துவாவென்றனுப்ப, அந்த தூதனும் வாய்வேகமாய் புறப்பட்டுக் கிஷ்கிந்தாபுரி பட்டணஞ் சென்று அனுமா ரைக்கண்டு, நமஸ்கரித்து ஐயா ஸ்ரீராமமூர்த்தி தங்களை அ ழைத்துவரச் சொன்னாரென்று கூற, அனுமாரானவர் ஸ்ரீரா

ம்மூர்த்தியென்று சொல்லக்கேட்ட உடனே அதிக சந்தோஷமாய்ப் புறப்பட்டு, அயோத்தியாபுரி பட்டணம்வந்து, ஸ்ரீராமபத்திரசுவாமியைக்கண்டு பயபக்தி விசுவாசத்துடன் நமஸ்கரித்தார். அப்படி நமஸ்கரித்த அனுமாரைவாழ்த்தி, சுவாமி சொல்லுகிறார் ஓய் அனுமந்தா ! நாம் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறோம், ஆகையால் நாளையதினங் காலமேபுறப்பட்டு கிஷ்கிந்தைக்குப்போய், சுக்ரீவனுக்கும், அங்கதனுக்கும் தெரிவித்து அவருடைய சேனை சைனியங்களுடன் வரச்சொல்லி அப்பால் இலங்காபுரி பட்டணத்திற்குப்போய் விபீஷணரைக்கண்டு, தண்டு தளத்துடன் வரும்படியாய் உத்திரவுசெய்து, மந்திராபுரிபட்டணஞ்சென்று, மகாமாயனை வரும்படியாய் அறிக்கையிட்டு, இரத்தினபுரத்திற்குச் சென்று சலவைசந்தனையுங் கண்டு சொல்லி சீக்கிரம் வாவென்று திருவாய் மலர்ந்தருளினார். அனுமாரும் மகாபாக்கியமென்று பரதர் லட்சுமணர் சத்துருக்கருடன் வசனித்துக் கொண்டிருக்கையில் சீதாலட்சுமிபோன சமாச்சாரங் கேட்டு அனுமாரானவர் மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருந்தார். சூரியனும் அஸ்தமாயினான்.

அனுமார் அஸ்வமேதயாகத்தை அரசர்களுக்கு அறிக்கையிடல்.

மறுநாட்காலமே அனுமாரானவர் சந்தியானுஷ்டான ஜெபதபங்களைச்செய்துபோசனமுட்கொண்டு வாய்வேகமனோவேகமாய்ப் புறப்பட்டுக் கிஷ்கிந்தாபுரி பட்டணத்திற்குவந்து சுக்ரீவனுக்கும், அங்கதனுக்கும், தண்டுதளத்துடன் அயோத்தியாபுரிக்கு வரும்படியா யறிக்கைகூறி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, மயேந்திரகிரி பருவதம் வந்துசேர்ந்து அப்பருவதத்தின் உச்சியிலேறி இலங்காபுரிக்கு நேராய்ப் பார்த்து, விஸ்வரூபங்கொண்டு, ஓங்கி நிதானித்து ஸ்ரீராமா வென்று தியானித்துக்கொண்டே ஆகாயவீதியிற் கிளம்பினார், இப்படி அனுமார் கிளம்பும்போது அந்த பர்வதமானது ஐந்நூறு யோசனை தாழ்ந்து, பிறகு பந்துபோல மேலெழும்பியது. அப்பால் இரண்டுகரமும், கூப்பிக்கொண்டு ஸ்ரீராமபாணம் விட்டதுபோல் எங்குந் தங்காமல் வருகிறபோது, பவழமால்கிரியைக் கண்டு, சந்தோஷமடைந்து, அவ்விடம் வந்துகுதித்தார். குதிக்கவே அந்தப் பர்வதமானது ஐம்பது

யோசனை பூமியிற்றாழ்ந்து, குலுங்கி யதிரத்தலைப்பட்டது. அதனால் லோகமெல்லாம் செவிடுபட்டது மேலும், அந்தப் பர்வதத்திலிருந்த மிருகங்களெல்லாம் வலசை வாங்கிக்கொண்டது. அப்பால் அனுமாரானவர் அப்பவழகிரியைவிட்டுப் புறப்பட்டு அதிகவேகமாய் இலங்கையிற் குதித்து, சபாமண்டபத்திற்கு அனுமார் வருதலைக் கேள்விப்பட்டு, விபீஷணர் மந்திரி பிரதானிகளுடனே எழுந்திருந்து எதிர்வந்து அனுமாரைத் தழுவி ஆலிங்கனம்பண்ணி அழைத்து வந்து ஆசனங்கொடுத்து வீற்றிருக்கும்படி வேண்ட அனுமார் விபீஷணரைப் பார்த்து ஐயா விபீஷணரே ஸ்ரீராமமூர்த்தி அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறார். ஆகையால் நீர் உமது சேனை சைனியங்களைக் கூட்டிக்கொண்டு, சலுதியாய் வாருமென் றுத்தரவுசெய்து அசோக வனத்தை நோக்கித்திரும்பவே விபீஷணரானவர்பார்த்து ஐயா அனுமாரே இவ்வளவு ஆயாசத்துடனும் இளைப்புடனும் எங்கே போகிறீர் இருங்கள் தாகசாந்தி பண்ணும், போஜன முட்கொள்ளும் அப்பா லெங்கேயாவது போமென்று கூறுகையி லனுமார் சொல்லுகிறார் ஐயா விபீஷணரே நானெங்கும் போகவில்லை, பாதாள அரைக்குப்போய் தேவசுந்திரனுக்குச் சொல்லிவிட்டு வருகிறேனென்று புகன்ற அனுமாருக்கு விடை கொடுத்து, விபீஷணரானவர் காலசித்தனைப் பார்த்து, ஓய் காலசித்தனே ஸ்ரீராமா அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறாராம், நாம் போகவேணும் தண்டுதளங்களைப் பயணப் படுத்தென்று உத்தரவுசெய்ய, அவனும் அவ்வாறே திட்டப்படுத்தினன்.

இப்பால் அனுமாரானவர் பாதாள அரைக்குட் புகுந்து தேவசுந்திரனைக் கண்டு, அஸ்வமேத யாகத்திற்கு அவரை சேனைசமுத்திரங்களுடன் வரச்சொல்லி அசோக வனத்திற்கு வந்து, கோட்டைக்குள் நுழைந்து, சபாமண்டபஞ் சேர்ந்தார், அத்தருணத்தில் விபீஷணர் மந்திரி பிரதானிகளுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு அனுமாருடன் கூடி அரண்மனைக்குள் நுழைந்து, நேமநிஷ்டைகள் முடித்து போசன யருந்தி, கதம்ப கஸ்தூரிகளணிந்து கற்பூர தாம்பூலந் தின்று, சற்றுநேரஞ் சந்தோஷவார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்குள் சூரியனுதயமானார். அப்போது அனுமாரானவர் விபீஷணரிடத்திற் செலவு பெற்

றுக்கொண்டு, இலங்காபுரி பட்டணத்தின் கோபுரவாசற்படியில் நுழைந்து, வெள்ளியங்கிரி பர்வதத்தின் உச்சியிலேறி, இருகரத்தையுங்கூப்பி, ஓங்கி யுத்தரணித்து ராமஸ்துதிபண்ணி அவ்வெள்ளியங்கிரி பர்வதத்தை யுதைத்துக் கொண்டெழும்பி சண்டமாருதம் வீசியதுபோல் எங்குத் தங்காமல் ஆறு சமுத்திரமுந்தாண்டி, அப்பால் சமுத்திரக்கரை ஓரமாயிருக்கப்பட்ட சுவேலை பர்வதத்தில் வந்து குதித்தார் குதிக்கவே, அந்த பர்வதமானது நெக்குவிட்டதில் வாழும்பட்சி மிருகங்களும் நசித்தும் பிராணனை விட்டதுகளதுவுமன்றிச் சகரபுரி பட்டணமுழுது மதிர்ந்து அதிலுள்ள சீவராசிகளுந் திடுக்கிட்டு, பிதிர் கலங்கியதுகள். அக்காலையில் அனுமாரும் சுவேலை பர்வதத்தை விட்டு, தாழவிரங்கிச் சகரபுரி பட்டணத்தினுள் நுழைந்து வருகிறதைக் கேள்விப்பட்ட மகாமாயனவன் மந்திரி பிரதானிகளுட னெதிர்கொண்டு, வந்தழைத்துப்போய் பொற்பீடமளித்து, உட்காரச்செய்து சொல்லுகிறார். ஐயா, அனுமாரே சுவாமி இலட்சுமணர் பரதர் சத்துருக்கர் சுகமோவென்றுகேட்க, அனுமார் கூறுகிறார். ஓய் மகாமாயனே சுவாமி அவர் தம்பிமார்களும் உமதனுக்கிரகத்தினலே சுகமாயிருக்கிறார்கள், குறைவில்லை, இப்போது ஸ்ரீ ராமபத்திரசுவாமியானவர் அஸ்வமேதயாகஞ்செய்யப் போகிறார். அதுகாரியமாக உம்மிடத்திற்கு வந்தோம். நீர் சலுதியாய் தண்டுதளத்தைக்கொண்டு அயோத்திக்குப்போய்ச் சேருமென்றுகூறி, அன்றையதினம் சகலமரியாதைகளுடன் அங்கிருந்து மறுநாட்காலமே மகாமாயனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு சுவேலைபர்வதத் துச்சியிலேறி உத்தரணித்து ஸ்ரீராமாவென் றெழும்பினார்.

அஃதெப்படி யிருந்ததென்றால் கைதேர்ந்த வீரன்விட்டெறிந்த பந்தைப்போலவும், சரத்தைப்போலவுங் கிளம்பி, எங்கும் திகரில்லாமல் சமுத்திர மத்தியிலிருக்கப்பட்ட பவழவர்ணமலையிலேவந்துகுதித்தார். அந்த பர்வதமுங்குண்ணி, பூமிநகர்ந்து (50) யோசனை தாழ்ந்துபோய்விட்டது, அப்போ தனுமாரானவர் அப்பர்வதத்தை விட்டுக்கிளப்பி, ரத்தினபுரம்வருதலைத் தூதுவர்களாற் கேள்விப்பட்ட சலவசந்தனவன் மந்திரிபிரதானிகளுடன் எதிர்கொண்டு வந்தழை

த்துப்போய் சோடசவுபசாரத்துடன் ஆசனங்கொடுத்து வீற்றிருக்கச்செய்ய, அநுமார் சொல்லுகிறுர்.

ஓய், சலவசந்தனே! கேளும், இராமபத்திர சுவாமியானவர் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறுர் அதுகாரியத்திற்கு உன்னுடைய தண்டுதளத்தைக் கூட்டிக்கொண்டு விரைவாய் வரச்சொன்னுர். வாருமென்றுசொல்ல, சலவசந்தனும் மகாபாக்கியமென்று ஸ்ரீராமருடைய க்ஷேமங்களைக் குறித்து, இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், சூரியனும் அஸ்தமயமானுர். அப்போது சலவசந்தன் மந்திரிபிரதானிகளுடன் படைத்தலைவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, அநுமாரை அழைத்துக்கொண்டு, அரண்மனைக்குட் சென்று நேம நிஷ்டைகளைச்செய்து, பண்டுபலாதிகளுடன் அன்னம்புசித்து, கந்தகதம்ப கஸ்தூரிகளை மெய்யிலணிந்து, தாம்பூலந்தரித்துக்கொண்டு, ஆடல்பாடல் சங்கித விநோத கேளிக்கைகளைப் பார்த்திருந்தார்கள்.

சுக்கிரீவன் அயோத்திக்குவருதல்.

இப்படியிருக்க, கிஷ்கிந்தாபுரிபட்டணத்தில் சுக்ரீவனுனவன் அநுமார்வந்து, சொன்னவுடனே தீவு தீவாந்தரங்களுக்கு ஓலையெழுதி யனுப்பிவைக்க, அந்தப்படியே அவர்களும் ஓலையைப்பார்த்த நாழிகைக்கு, இருபத்துநாலு படைத்தலைவர்களும் எழுபத்திரண்டுவெள்ளஞ்சேனைகளும், கிஷ்கிந்தாபுரி பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அப்போது சுக்ரீவனுனவன் நீலனையழைத்து தண்டுகளை சேகரப்படுத்தென்று உத்திரவுகொடுத்தார். அந்தப்படியே, நீலன் வானரசேனையெல்லாம் பவுஞ்சிட்டு நிறுத்தினுன். அக்காலையில் சுக்ரீவனும், அங்கதனும், பட்டணத்தை மந்திரிகள்வசம் ஒப்பிவைத்து கிரீடமணிந்து ஆடையாபரணந் தரித்து, பட்டாவையிடுப்பிற்கட்டி, அவரவர் ஸ்திரீகளுடனே வாகனம் பல்லக்கு தண்டிகையிலேறவும் தாரையானவள் மூடுபல்லக்கிலேறி, ஆயிரங்கன்னியர்கள் புடைசூழவும், ஜெயபேரியானது தாம்தாமென்று முழங்கவும் கொடிச்சீலைபறக்கவும், சேனுசைனியங்களுடன் புறப்பட்டு வருகையில், கருந்தூளானது எழும்பவும், காடுமலைகள் கிடுகிடென்று அதிரவும், அட்டகாசஞ்செய்துக்கொண்டு, பூமிதேவியதிர, ஆதிசேஷனுங்கலங்க, சேனைகளுடன் புறப்பட்டான்.

விபீஷணர் அயோத்திக்கு வருதல்.

இவர்களிப்படி நடக்க, இலங்கையில் விபீஷணர் நீலாக்ஷதன் முதலான தூதுவர்களையனுப்பி, புஷ்பக விமானத்தை யெடுத்துவரச்சொன்னார். அப்படியே கொண்டுவந்தார்கள். அத்தருணத்தில் பத்துவெள்ளம்யானையும், இருபது வெள்ளந் தேரும், நாற்பதுவெள்ளம் புரவியும், எண்பது வெள்ளங் காலாள்களும், இன்னும் பலம்பொருந்திய ராட்சதர்களும் அறுபத்தையாயிரங்கோடி சேனாதிபதிகளும், நாற்பத்துநாலாயிரங்கோடி படைத்தலைவர்களும், ஏகோபித்து, புட்பகவிமானத்திலேறினார்கள் விபீஷணரும் சனமாலிகையுடனே சிங்காரித்துக்கொண்டு லக்ஷங்கன்னியர்கள் புடைசூழத் தன்மகளான திரிச்சடையும், பாட்டனான மாலியவானையும், ஐயாயிரங்கோடி ராசமன்னரையும், காலசுத்தனைங் கூட்டிக்கொண்டு புஷ்பகவிமானத்திலேறி, இலங்காபுரியரசைமந்திரிவசத்திலொப்பிவைத்து, விமானத்திற்கு மந்திரோபதேசஞ்செய்யவே, கேசரிமார்க்கமெழும்பி, விமானமானது லவணசமுத்திரந்தாண்டி, ஆகாயமார்க்கமாகவந்து, தண்டகாரணியவனஞ்சேர்ந்தது.

தேவசுந்திரன் அயோத்திக்கு வருதல்.

இப்பால் தேவசுந்திரனவன் படைத்தலைவனை சுந்திரராட்சதனைப்பார்த்து ஓய் சுந்தரராட்சதனே! ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறாராம் நாமும்போகவேண்டும் நம்முடைய பானையத்தைப் பயணப்படுத்தென்றுசொல்லி தன்னுடைய அரண்மனைசென்றான். பின்பு சுந்தரராட்சதன் தண்டுகளை வெளிப்படுத்தினன். அஃதெப்படியென்றால் கன்னமதம் கரடமதம், கபோலமதமென்றுஞ் சொல்லப்பட்ட யானைகளானது கரியமலைகளைப்போல, கால்கைகள் முளைத்து வந்ததுபோல் யானைகள்பேரில் சவுடாலும் அம்பாரிகளும் வைத்து இராசமன்னரும் ரணவரிசைகள் பூண்டு முப்பத்திரண்டுவித ஆயுதங்களும் எடுத்துக்கொண்டு கையிற்றனுசேந்தி யானையின்பேரிலேறிக்கொண்டு புறப்பட்டார்கள். அதெவ்வளவென்றால் மூன்றுவெள்ளம் யானைகளும் அதின்பின்னே இரதங்களானது அச்சுக்கு எண்ணெயிட்டு மச்சுக்குவர்ணந்தீர்ந்து சிங்கலலாடவும் சிரக்கத்துவசம்பறக்க நான்கு குதி

ரைகள்பூட்டியும் இழுக்கப்பட்டரதத்தின்மீது இராசமன்னரும் முப்பத்திரண்டாயுத முஸ்தீப்புகளுடனே தனுசைக் கையிற் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள், அதெவ்வளவென்ருலொருவெள்ளம் இரதங்களும் அதன்பின்னுற் சூரியன் ரதத்திற்கட்டியிழுக்கப்பட்ட புரவிகளுக்குச்சமானமான புரவிகளின்மீது கல்லணைவைத்துக்கொண்டு கத்திகேடயம் பிடித்துயேறி சுத்தவீரர்கள் புறப்பட்டார்கள்.

அதெவ்வளவென்ருல் பன்னிரண்டுவெள்ளங் குதிரைகளாம் அதன்பின் காலாள்களான ராட்சதர்கள் புறப்பட்டார்கள். அவர்களெப்படிப்பட்டபலவான்களென்ருல் ஒவ்வொரு ராட்சதனுக்கு இந்திரலோகமும்போதாது, அப்பேர்ப்பட்ட பலசாலிகளான ராட்சதர்கள் கையில் ஈட்டி எறியீட்டி குந்தம் வாள் சூலம் கத்தி சக்கரம் வேல் இடியீட்டி முதலியதும் பிடித்துத் தயாரானுர்கள். அப்போது தேவசுந்திரனும் கிரீடம் பூண்டு ஆடையாபரணந் தரித்து முதுகில் அம்புருப்பொதியுங்கட்டி பட்டணத்தை மந்திரிவசங்கொடுத்து நானுவித வாத்திய முழக்கத்துடனும் சேனைகளுடனும் யானை குதிரைகளுடனும் ரதமேறிப் புறப்பட்டதெப்படியிருந்ததென்ருல், ஈசலானது பெரும்போர்க்குப் புறப்பட்டாலெப்படியோ அப்படியாக அசோகவனத்துவழியாய் யாவரும்வந்து லவணசமுத்திரந்தாண்டி யானைகள்முன்னுந் தேர்கள்பின்னும் குதிரைகளும் அதன்பின் காலாள்களும் அணி அணியாகப்புறப்பட்டு வெளிப்பிரதேசம் பார்த்து பவுஞ்சிட்டுக் கூடாரங்களடித்து தண்டிறங்கினுர்கள் அப்போது சூரியனும் மேற்றிசைக்கடலில் மூழ்கினுன்.

மகாமாயன் அயோத்திக்கு வருதல்.

அப்போது மகாமாயனுனவன் பானுகோபனை அழைத்துச்சொல்லுகிருன் ஓ! பானுகோபா ஸ்ரீராமர் அஸ்வமேதயாகஞ்செய்யப்போகிருராம் நானும்போகவேண்டும் நம்முடைய சேனைகளை பிரயாணப்படுத்தென்று உத்தரவுசெய்து அரண்மனைக்குப்போனுன் பானுகோபனுஞ் சேனைகளை சித்தப்படுத்தினுன். அதெப்படியென்ருல் கன்னமதம் கபடமதம் கபோலமதமென்று சொல்லப்பட்ட மும்மதங்களும் பொழியாவின்ற கருமையான யானைகள்பேரிலே அம்பாரிசவுடால்கள்வைத்து யானைகள் கையில் இருப்புசங்கிலியை கொடுத்து இராசமன்

ளரும் ஆடையாபரணந்தரித்து ரணவரிசைகள் பூண்டு கையில்வில்லேந்தி முப்பத்திரண்டு ஆயுதங்களைப்பிடித்து யானையின்பேரிலேறிப் புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் பதினேழு வெள்ளம் யானைகளும் அதன்பின் ரதங்களின் அச்சுக்கு எண்ணையிட்டு மச்சுக்குவர்ணந்தீர்த்து கொடை கொடிச்சீலைகட்டி டால்துவசம்பறக்க, நாலுகுதிரைகள் பூட்டியும் எட்டுகுதிரைகள் பூட்டியும் பிசாசுபூதங்களால் இழுக்கப்பட்ட ரதத்திலே ராசமன்னர்கள்கையில் மகமேருவைப்போல வில்லைப்பிடித்து புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் முப்பத்து நான்குவெள்ள ராஜமன்னர்களும் அதன்பின்னுற் சூரியனிரதத்திற் கட்டியிராநின்ற புரவிகளுக்கு சமானமான குதிரைகள்பேரில் கல்லணைவைத்து இருப்பு சீருதரித்து கத்திகேடயமெடுத்து ஏறி புரப்பட்டார்கள். அதெவ்வளவென்றால் அறுபத்தெட்டு வெள்ளம் வீரர்கள் அதன்பின் கால்பலமான ராட்சதாள் ஈட்டி எறியீட்டி சுரிகை வாங்கு வளைதடி சக்கரம் இருப்புலக்கை கண்டகோடாலி சூலம் வேல் கத்திகள் முதலான முப்பத்திரண் டாயுதங்களும் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்களோ! அண்டத்தை கையிற்பிடித்து பந்தாடப்பட்டவர்கள் வெகுயுத்தங்களிற் கைகண்டவர்கள் அவர்களுக்கு திரிமூர்த்திகளு மீடல்ல எப்போது அஸ்வமேதயாகயுத்தம் வந்ததென்று கேட்டார்களோ அப்போதே மகா சந்தோஷத்துடனே அட்டகாசங்களும் வீரப்பிரதாபங்களும் பேசிக்கொண்டு புறப்பட்டார்கள் அதெவ்வளவென்றால் நூற்றுமுப்பத்தாறுவெள்ளம் காலாள்கள் அத்தருணத்தில் மகாமாயனனவன் கிரீடம்பூண்டு வச்சிரகவசமணிந்து ஆடையாபரணந்தரித்து மந்திரிபிரதானிகள்சூழ தன்னுடைய தேவிகளையும் அழைத்துக்கொண்டு ரதத்தில்வந்தேறினன், அவன் ஏரவே ஜெயபேரிகை வெண்கலபேரிகை அடித்தார்கள் எக்காளை சின்னம் தவுண்டை மல்லரி குடமுழா தம்பட்டம் மத்தளம் உருத்திரவீணைகள் முதலான வாத்தியங்கள் தாம்தாமென்று முழங்கச்செய்தார்கள் அப்போது நூற்றுமுப்பந்தினலாயிரங்கோடி படைத்தலைவரும் ரதமேறி மகரக்கொடி பிடித்து புறப்பட்டார்கள். இப்படியாக சகல ஆடம்பரத்துடனே ஆகாயமார்க்கத்திலெழும்பி சமுத்திரந்தாண்டி லவண சமுத்திரக் கரையோரமாய்த் தண்டுவிட் டிறங்கினர்கள்.

சலவசந்தன் அயோத்திக்கு வருதல்.

இவ்விடத்தில் இப்படியிருக்க அநுமாரானவர் போனபிற்பாடு சலவசந்தனானவன் சேனாதிபதியான பஞ்சகண்டனையழைத்து ஓய்பஞ்சகண்டனே! ஆதிபராபர வஸ்துவாகவிளங்கப்பட்ட ஸ்ரீராமமூர்த்தி அஸ்வமேதயாகஞ் செய்யப்போகிறாராம் அந்தயாகத்திற்கு நாம்போகவேண்டும் நம்முடைய தண்டுதளங்களைப் பயணப்படுத்தென்று கட்டளையிட்டு தன்னரண்மனைக்குச்சென்றான். அப்போது பஞ்சகண்டனானவன் தண்டைவெளிப்படுத்தி யானையின்மீது அம்பாரிவைத்து முப்பத்திரண்டு ஆயுதங்களைக்கொண்டு கையில் வில்லெடுத்து யானையின்மீதேறிப் பதிமூன்று வெள்ளம் ராஜமன்னர்கள் புறப்பட்டார்கள் அதன்பின் ரதங்களானது குடை கொடிச்சீலைகளால் அலங்கரித்து டால் துவசம்பறக்க அநேகங் குதிரைகள் பூட்டியும் இருபத்தாறுவெள்ளம் ரதம்புறப்பட்டது வாய்வேகத்திலு மிஞ்சினவேகமாகிய ஐந்துவெள்ளங் குதிரைகளின் மீதேறிப் புறப்பட்டார்கள். அதன்பின்னாற் காலபலமானபனிரண்டுவெள்ளம் ராட்சதாள் ஈட்டி எரிஈட்டி சூரிகை வாங்குவளைதடி சக்கரம் குந்தம் பாசம் இருப்புலக்கை தண்டாயுதம் கத்தி கேடயம் என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டு ஆயுதங்களு மேந்திக்கொண்டு புறப்பட்டார்கள். சலவசந்தனும் இரத்தினகிரீடம் பூண்டு ஆடையாபரண லங்கிர்தனாகி பட்டணத்தை மந்திரி வசப்படுத்தி ஸ்திரீயுந்தானு மிரதத்திலேறி யாவரையுங் கூட்டிக்கொண்டு ஜெயபேரிகை ரணபேரிகை யடித்துப் புறப்படுகையில் அண்டங்கிடுகிடென்று நடுங்கத்தக்கதாக கோட்டையை விட்டு சமுத்திரக்கரைவந்து யானை தேர் பரிகளுடன் ஆகாயத்திலெழும்பி சமுத்திரத்தையுந் தாண்டி, வருகிறகாலையில் எழாவது சமுத்திரத்தில் யானைகளானது நீய்ந்து நடப்பதால் அச்சமுத்திரம் சேராகக்குழம்ப அக்கரையேறி கூடாரம்போட் டிரங்கினார்கள். சூரியனும் மேற்றிசைக்கடலில் மூழ்கினான். அப்போதவ்விடத்தில் தேவசுந்திரன் பாளையமும் ஒன்றாய்க்கூடிக்கொண்டு சமுத்திரக் கரையில் நூறுயோசனை விஸ்திரணம்பரவி ஒருவர்க்கொருவர் வினவி சந்தோஷ வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள், இப்படியிருக்கையிற் பொழுதுவிடிந்தது சூரியபகவானும் உதயகிரி பர்வதத்தில் உதயமாகவே மூன்றுதண்டுகளும் ஒன்றாய்ச்

சேர்ந்து நடக்கிறபோது பூமியானது கிடுகிடென்று நடுங்கியது அஷ்டதிக்குப்பாலகரும் பயப்பட்டார்கள். அஷ்டகுலபர்வதங்களும் நடுக்கமுற்றது அண்டகடாகங்களும் குலுங்கிற்று தேவர்கள் திகிற்கொண்டார்கள். காட்டில்வாழுங் கரடிபுலி சிங்கம் யாளியென்று சொல்லு மிருகங்கள் பாரிவேட்டைவிட்டாற்போல காட்டைவிட்டு ஓடிப்போயின. இப்படி சகலரும் நடுங்கும்படியாக தண்டகாரணியவனம் வந்துவிட்டது தண்டுவருகிறதற்கு இடமில்லாமல் காடு செடி மலை குன்றுகள் சகலமும் வெட்டி திறவி பத்துயோசனை விஸ்திரணம் அகலமாக வழியுண்டாக்கி கங்குகரைகாணமல் சேனைகளானது வருகிறதை தண்டகாவனத்து ரிஷிகளெல்லாங்கண்டு மற்றொருவனம் ஓடினார்கள்.

இப்படியிருக்க அநுமாரானவர் கந்தாபுரிபட்டணம்போய் தன்னுடையபாளையமெல்லாம் தயார்படுத்தி தன்பிள்ளையான மட்சயந்த அநுமானை அயோத்தியாபுரிபட்டணம்வர வுத்தரவுசெய்து கங்கைக்கரைக்குவந்து குகனை தன்னுடனே வரச்சொல்லி ஆக்கியாபித்து குகனிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு அநுமார் அயோத்தியாபுரி பட்டணம்வந்து ஸ்ரீராமரைக்கண்டு நமஸ்கரித்துச் சுவாமி தேவரீர் உத்தரவு செய்தபிரகாரம் சமுத்திரந்தாண்டி சகலரையும் சேனை சைனியங்களுடன் வரும்படி உத்தரவு செய்துவந்தேன். அவர்களுமிப்போதே இன்னஞ் சற்று நாழிகைக்கோ வரப்போகிறார்களென்று அநுமார்சொல்ல ஸ்ரீராமமூர்த்தியும் அநுமாருடையவேகத்திற்கு மெச்சி இராசகாரியங்களைக்குறித்து பேசிக்கொண்டிருக்கையில் தண்டுகளானது கோவென்று பிரசண்ட வாய்வு சப்திப்பதுபோலக் கருந்தூள் செந்தூளெழும்பக் கண்ணுக்கெட்டாததூரம் பரவிக்கொண்டு வருகிறபோதுபட்டணத்து ஜெனங்கள் கண்டு வலசைவாங்கி ஓடிப்போகிறவர்கள் சொல்லிக்கொண்டுபோகிற தென்னவென்றால் நமது அயோத்தியாபுரி பட்டணத்திற்கு என்னமோ அழிவுகாலஞ் சம்பவித்ததுபோ லிருக்கின்றது சும்மாயிருக்கிற வானரர்களையெல்லாங் கூட்டிக்கொண்டுபோய் ராட்சத சேனையெல்லாங் கொன்றுபோட்டான் அவர்கள் கண்குத்திப் பாம்புபோலச் சமயம்பார்த்து வந்துவிட்டார்கள். ஓடிப்போவோமென்பாரும் ஒளிப்போமென்பாரும், ஐயோசீதாலட்சுமி என்று வனம்போனாளோ அன்றே போய்விட்டது ஸ்ரீராமன்வாழ்வென்பாரும்

சில ஸ்திரீகள் அடியோடே இப்படி அழிவுகாலம்வருகிறதற்கு த்தானோ முன்னமே மண்மாரிபொழிந்து பெருங்காற்றடித்தது இனி இந்தப் பட்டணத்தி லிருக்கப்போகாதென்று ஒருத்திக் கொருத்தி சொல்லிக்கொள்ளவும், அடியம்மா ஸ்ரீராமர் என் னமோ அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறார் அதற்கு சேனை வருகிறதென்பாரும், அடிபோடி பயித்தியக்காரி சீதையில்லா மல் அஸ்வமேதயாகம் பண்ணினால் உடனே பின்னம்வரு மென்பாரும், அடிதங்கை இன்னும் ஒருநாழிகைக்குள் எல் லாந் தெரியவருமென்பாரும், சிலமாதர்கள் அடிதங்கையே ஸ்ரீராமர் என்ன கையிலாகாதவரோ அவர்தம்பி லட்சுமணரு க்கு இதுவெல்லாம் ஒரு நிகராவென்பாரும், அடிபோடி பர தர் என்ன லேசானவரோ சத்துருக்கரென்ன அற்பமானவ ரோ அவர்களுக்கு ஆர்தான்யீடென்பாரும், அடியம்மா அ னுமாரென்னப்பட்ட ஒருகுரங்கு அவர்களிடத்தி லிருக்கிற மட்டும் அவர்களுக்கென்ன சங்கை யிருக்கிற தென்பாரும், அம்மா சீதையில்லாமல் யாகம் நிறைவேற மாட்டாதென்பா ரும், அடிதங்கையே ஸ்ரீராமர் இலட்சுமணர் சிறுபோதில் தா ய்சொற் றள்ளாமல் வனத்திற்குப்போய் வனத்து ரிஷிகளுக் கு அபயஸ்தங்கள் கொடுத்து இராவண ராட்சதரை யெல் லாம் கொன்று விபீஷணருக்குப் பட்டங்கட்டிப் பேர்பெற்ற வர்கள் என்பாரும் சிலமாதர்கள் அடியச்சி இப்போது இந்த சேனைகளைக்கொண்டு தான் யாகம்பண்ணி ராசாக்களையெல் லாஞ்செயித்து ஒருகுடையின்கீழாள காத்திருக்கிறா ரென்பா ரும், இப்படிப் பட்டணமாதியந்தமுஞ் சொல்லிக்கொண் டிருப்பதை ஸ்ரீராம லட்சுமணருங்கேட்டு அனுமாரைப்பார் த்து சொல்லுகிறார்.

ஒய், அனுமாரே! இவ்வளவு ஆரவாரத்துடன் உலகம் நடுங்கும்படியாய் வருகிறவன் யாரென்றுகேட்க அனுமாரான வர் பொன்மண்டபம் விட்டு வெளியேவந்து விஸ்வரூபங் கொண்டு எட்டிப்பார்த்தார் அப்போது ஆர்வருகிறானென்றால், முன்னே சுக்ரீவனும் அங்கதனும் தங்கள் தண்டுடனே வரு கிறதைக்கண்டு விஸ்வரூபத்தைவிட்டு சபாமண்டபம்வந்து சுவாமியை நமஸ்கரித்து சொல்லுகிறார்.

ஒய் நாதனே கிருபைக்கடலே சுக்ரீபனும் அங்கதனும் வருகிறார்களென்றார் அதுகேட்டு இராமபத்திரசுவாமி சந் தோஷமாய் பரதரையும் சுமந்திரனையும் பார்த்துச் சொல்லு

கிறுர் பரதாழ்வாரே மந்திரி சுமந்திரரே நீங்கள் சிலதுசேனை களைக் கூட்டிக்கொண்டு போய் சுக்ரீபமகாராசனையும் அங்கத னையுந்தழுவி அழைத்துக்கொண்டு வாருங்களென்று உத்தரவு பண்ணிஞர் அந்தப்படியே பரதாழ்வாருஞ் சுமந்திரரும் எழுந்து சேனைகளைக் கூட்டிக்கொண்டு டமாரபேரிகைமுழங்க எதிர்சென்றுர்கள்.

அப்போது வானரப்படையானது தென்கோபுர வாசற் படிமுன் கோட்டைக்குவெளியில் நின்றுவிட்டன அக்காலே யில் சுக்ரீவனும் அங்கதனும் இருபத்துநான்கு படைத்தலே வருஞ்சூழ காணிக்கை கப்பணங்களுடன் வந்து ஒருவர்க் கொருவர் தழுவி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு பட்டணத் திற்குள் வரும்போது பட்டணத்து ஜெனங்கள் இவன்ருனே எழுபத்திரண்டுவெள்ளம் வானருளுக்கும் இராசாவான சுக் ரீவனென்றும் இவன்ருனே அங்கதனென்பவனும் என்று பேசிக்கொள்ள சுக்ரீவமகாராசன் அங்கதனுடன் கூடிக்கொ ண்டு அவர்களைப் பாராததுபோலும் ஏழுகோபுரவாசற்படி யுந்தாண்டி பட்டணத்துக்கு வருகிறபோது பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்றும் சொல்லப்பட்ட நான்குவீதிகளும் பாழடைந்து ஸ்ரீ லட்சுமி வனம்போன சமாச்சாரம் பரதர் சுமந்திரர்சொல்ல சுக்ரீவர் கேள்விப்பட்டு வெகுமனஸ்தாப மாய் நான்குவீதியுங் கடந்து சபாமண்டபம்வந்து ஸ்ரீராம பத்திர சுவாமியார் பாதத்தில் தன்னுடைய கிரீடம்பட நமஸ் கரித்தான் அப்படிவந்து நமஸ்கரித்த சுக்ரீவனை வாரியெடு த்து மார்போடணைத்து ஆசீர்வதித்தார் அவர் ஆரென்ருல் பல்லாயிரங்கோடி அண்டங்களையுங் கெர்ப்பத்தில் வைத்து ரட்சிக்கப்படாநின்ற ஆதிகர்த்தாவாகிய விஷ்ணுவே ஸ்ரீராம னுகவும் அவதரித்த ஸ்ரீமந்நாராயணன் பின்பு சுக்ரீவன் இல ட்சுமணரை சேவிக்க இலட்சுமணருஞ் சுக்ரீவனுக்கு ஆசீர் வதித்து உட்காரச் செலவுகொடுத்தார்.

அப்போது அங்கதனும் இருபத்துநான்கு படைத்தலே வருங் கொண்டுவந்த காணிக்கை கப்பங்களை யெல்லாம் நிறு த்திப்போட்டு சுவாமியைவந்து நமஸ்கரித்தார்கள். அப்படி நமஸ்கரித்த அங்கதனுக்கும், இருபத்துநான்கு படைத்தலே வருக்கும் ஆசிர்வதித்தார். அவர்களும் எழுந்திருந்து இலட் சுமணரை சேவிக்க இலட்சுமணரும் ஆசீர்வதித்து வுட்காரச் செலவுதந்தார் அக்காலேயில் ஸ்ரீராமர் சுக்ரீவனை நோக்கி ஓய்

வர்னரசிரேஷ்டரே யாவருஞ் சுகமாவென்று வினவ, சுக்ரீவ மகாராசன் சொல்லுகிறார். ஓய் நாதனே! கிருபைக்கடலே தங்களுடைய கருணைகடாட்சம் அடியார்கள்பேரிலிருக்கிறவரைக்கும் நாங்களனைவரும் சுகமென்றான். அதுகேட்டு ஸ்ரீ ராமமூர்த்தி சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். அந்தச்சமயத்திலே தாரையுஞ் சுக்ரீவனுடைய பெண்டுகளும் அங்கதன் பெண்டுகளும் இன்னம் இரண்டுலட்சங் கன்னியர்கள் பல்லக்கு தண்டிகை விட்டிறங்கி அரண்மனைக்குள் நுழைந்து கௌசலை கைகேசி சுமித்திரை இவர்கள் மூன்று பேருக்கும் நமஸ்கரித்தார்கள். அன்னவாகள் அவர்களுக்கு ஆசீர்வதித்து ஆசனம்போட்டு உட்காரச்சொல்லி சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து அவர்களுக்கு விடுதிகொடுக்க அவ்விடுதியில் அவர்களும் போயிருந்தார்கள்.

இப்படியிருக்க, விபீஷணரானவர் வடக்குகோபுரவாசற்படியாய் புட்பகவிமானத்தை விட்டிறங்கி புற்றிலிருந்த ஈசலானது பெரும்போர்க்கு புறப்பட்டாலெப்படியோ அப்படியாக விமானத்திற்குள்ளிருந்து ஆனைகளானது கருமலையைப்போல பேரிகை சவுடால்களுடனே புறப்பட்டது அதின் பேரில் இராசமன்னரும் வில்லை கையிற் பிடித்து முப்பத்திரண்டுவித ஆயுதங்களுடனும் புறப்பட்டு அயோத்தியாபுரி பட்டணந் திடுக்கிட வருகிறபோதுண்டாகிய ஆரவார சத்தத்தைக்கேட்ட ஸ்ரீராமபத்திரசுவாமி அனுமாரைப்பார்த்துச் சொல்லுகிறார்.

ஓய் அனுமாரே இப்படி அதிக ஆரவாரத்துடன் பூமி தடுங்கும்படியாய் வருகிறவர் ஆரென்றுகேட்க அனுமாரெழுந்திருந்து சுவாமி லங்காதிபதியான விபீஷணர் வருகிறாரென்றார் அதுகேட்டு ஸ்ரீராமமூர்த்தி கூறுகிறார் தம்பி பரதா லட்சுமணா சத்துருக்கா நீங்கள் நமது சபையிலுள்ள மந்திரி பிரதானிகளையுங் கூட்டிக்கொண்டுபோய் விபீஷணரைத்தழுவியழைத்து வாருங்களென்று கட்டளையிட அந்தப்படியே அம்மூவரும் ஊர்வசி திலோர்த்தமை அரம்பை மேனகை இவர்களுக்குச் சமதையான பெண்கள் நாட்டியம் புரிய ஏழுகோபுர வாசற்படியுங் கடந்துவருகிற விபீஷணரையும் மாலியவானையுங்கண்டு இரதத்தை விட்டிழிந்து காணிக்கைகப்பங்களுடன் மந்திரிபிரதானிகள் புடைசூழ ஆடல் பாடல் பார்த்துக்கொண்டு மேளசங்கீதத்துடன் புறப்பட்டு எதிர்

கொண்டுவந்து ஒருவர்க்கொருவர் தழுவி வினவிக்கொண்டார்கள் சேனதிபதியான காலசித்தனும் நீலாக்ஷதனும் வந்து பரதர் இலட்சுமணருக்கு நமஸ்காரஞ்செய்ய பரதலட்சுமணர் சத்துருக்கரும் ஆசீர்வதித்தார்கள் சேனசமுத்திரங்களெல்லாங் கோட்டைக்கு வெளியிலே நிறுத்திப்போட்டுக் கிழக்கு கோபுரவாசற்படியுங் கடந்து பட்டணத்துக்குள் வருகிறபோது பட்டணத்திலுள்ள ஜெனங்கள் விபீஷணரையும் மாலியவானையும்பார்த்து ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறுர்கள் இவர்தானே இராவணனிட தம்பியான விபீஷணன் நல்லகுணசாலி இவராலேதான் இராவணசம்மாரம் பண்ணி இவருக்கு முடிசூட்டினது இவர்தானே விபீஷணர் இவரில்லாவிட்டால் அன்றே இராமலட்சுமணர் இறந்து போய்விடுவார்களென்பாரும் இந்த விபீஷணன் சச்சரவு செய்து ஸ்ரீராமருடன் சேர்ந்துகொண்டு தமயன்குடியைக் கெடுத்தானே இவன் முகத்தில் முழிக்கப்போகாதென்பாரும், அப்போது சீதையம்மனை இராவணன் யெடுத்துக்கொண்டு போய் அசோகவனத்தில் வைக்க அதுகண்டு இராவணன் சகோதரனை கும்பகர்ணன்மீது தூறிக்கொண்டான் பிறகு விபீஷணர் வந்து தமயனுக்குச் சீதையம்மனை விட்டுவிடும்படிபலநீதிகளை யோதியும் இராவணன் கேளாமல் வாளையுருவிக்கொண்டு வெட்டவந்தபோது அந்தவாளுக்கு பயந்து தம்பியான விபீஷணன் ஸ்ரீராமரண்டைவந்து சேர்ந்தான் ஸ்ரீராமரும் தன்னுடைய பகையாளியின் தம்பியென்றும் பாராமல் அவனுக்கு அழிவில்லாத சிரஞ்சீவியுங்கொடுத்துஇராவணனையுங் கொன்று பட்டமுந் தரித்தார் இந்த விபீஷணர் தான் சுவாமிக்கு வுகந்தபிள்ளையென்பாரும் அப்படியல்ல தமையனுனவன் தம்பியைக் கண்டவுடனே தம்பியானவன் தமயனைக்கண்டவுடன் சரியாய் நடந்துக்கொள்ளுவான். அப்படி இராவணனிடத்தில் துற்புத்தியில்லாவிட்டால் தமயன் பேரிற் கோட்சொல்லிக்கொன்றதற்கு இலட்சுமணர் முன்னுக்கு ஹரிஹரப் பிரம்மாதிகளுமீடல்ல, தமயன் மனதிற்குச் சந்தோஷமானல் தம்பிலட்சுமணனுக்கு சந்தோஷமாகுமேபாரும் அல்ல இந்த விபீஷணன் இராட்சசவம்சமாயிருக்கிறுர், இராஜவடிவாய்காண்கிறது இவருடைய அழகுக்கு மன்மதனும் ஈடல்ல, இவர் பராக்கிரமமும் இவர் வில்சிங்காணியும் அம்புராப்பொதியும் இரத்தினக்கிரீடமும் தேவேந்திரனுக்

கும் வராதென்பாரும், இப்படியாகச் சொல்லிக்கொள்ளும் நாலுவர்ன சாதிகளுடைய வீதிகளுங் கடந்து ராமரிருக்குஞ் சபாமண்டபம்வந்து அவர்பாதத்தில் தன்னுடைய ரத்தின கிரீடமும் படத்தாழ்ந்து சேவித்தார். அப்படி வந்து சேவித்த விபீஷணரை யெடுத்து ஆசீர்வதித்து பொற்பீடம்போட்டு உட்காரவைத்தார். மாலியவானும் சேனாதிபதியும் மந்திரி பிரதானிகள் சபாமண்டபத்தில் நடந்து வருகையில் ராமர் விபீஷணரை பார்த்து இவரார் மகாபெரியவராயிருக்கிறாரென்றுகேழ்க்க விபீஷணர் சொல்லுகின்றார்.

கேளும் ஓ நாதனே இவர்தான் எங்கள் பாட்டனாகிய மாலியவான். என் தமையனான இராவணனுக்குச் சீதையம்மனை விட்டுவிடும்படி வெகுபுத்திகளைச்சொல்லி உம்மையுங் கொண்டாடினவர் இவர்தானென்றுசொல்ல ஸ்ரீராமர்கேட்டு சிங்காதனம்விட்டுக் கீழிறங்கி மாலியவானுக் கெதிர்வரவே மாலியவான்கண்டு பயபக்தியுடன் தெண்டனிட அந்த மாலியவானை ஸ்ரீராமர் கிருபைகூர்ந்து வாரியெடுத்து ஆசீர்வதித்து ஓர் ஆசனங்கொடுத்து உட்காரவைத்து அவர்களுடைய சுபேக்ஷம சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது விபீஷணனிடம் பட்டபுதேவியான சணமாலிகையும் மகளான திரிச்சடையம்மனும் இரண்டு லக்ஷங் கன்னியர்கள் கௌசலை கைகேசி சுமித்திரை மூன்றுபேரையுஞ் சேவிக்க அன்னவர்கள் அவர்களையும் ஆசீர்வதித்து பீடம்போட்டு உட்காரவைத்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து அவர்களுக்குத்தக்க விடுதிகளமைத்து சகல சம்பிரமத்துட னடப்பித்தார்கள்.

இப்படி யிருக்கையில் மகாமாயனனவன் தன்னுடைய பரிவாரமான யானை தேர் பரி சேனைகளான தண்டு தளங்களுடனே தண்டகாரணிய வனத்தைவிட்டுப் புறப்பட்டுக் கங்கைக்கரை யிரங்கிப்போகையில் யானைகளானது தும்பிக்கைகளை உயரத் தூக்கிக்கொண்டு நடந்தது அதன் பின்வரும் யானைகள் ஜலங்களைக்குடித்து புரவிகளுந் தாகவிடாய் தீர்ந்து நடந்ததுகள் அதன்பின் வருங் குதிரைகளுக்கு சலமில்லாமற் சேராடி குழப்பிவிட்ட கால்பலமான இராக்ஷதர்கள் நடக்கிறபோது காய்ந்து உலர்ந்து துப்புந் தூளுமாய்க் கருந்தூளுஞ் செந்தூளு மெழும்பும்படியாய் ஆரவாரத்துடனே அட்

டகாசஞ்செய்து இரைச்சலிட்டு வருவதை ஸ்ரீராமர் கண்டு ஓய் அனுமாரே! இப்போது வருகிறவர் யாரென்று கேட்க அனுமார் சொல்லுகிறார். ஓ சுவாமி இப்போது மகாமாயன் வருகிறதுபோல் காண்கிறதென்றார், அதுகேட்டு ஸ்ரீராமர் தம்பியாகிய சத்துருக்கனைப்பார்த்து தம்பிசத்துருக்கா நீ சில படைத்தலைவரையுஞ் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு போ வென்றார், அவ்வாறே சத்துருக்கர் செல்லுகையில் மகாமாயன் தெற்குகோபுர வாசற்படியிற் பாளையங்களை நிறுத்திவிட்டு மந்திரி பிரதானிகள் படைத்தலைவர்சூழக் காணிக்கை கப்பங்களுடனே எதிர்கொண்டுவந்து சத்துருக்கரைக்கண்டு ஒருவர்க்கொருவர் தழுவி வினவிக்கொண்டு சந்தோஷமாய் வருகையில் அப்பட்டணத்து ஜனங்கள் மகாமாயனைப் பார்த்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அண்ணே இவனைப்பார்த்தால் பயமாயிருக்கின்றது இவனுடைய கோரப்பல்லுங் கையிற்பிடித்திருக்கின்ற வில்லும் பாரென்றான் மற்றொருவன் கூறுகின்றான் அப்பா இவன் முகத்திலிருக்கிற மீசைகளும் இவனுடைய புஜபல பராக்கிரமமும் பார்க்கவே யாவருக்கும் உதரலும் மனப்பதரலுமாமென்றான் வேறொருவன் கண்டு பயங்கொண்டு ஐயா இவன்கையோ கயிலையங்கிரியைக் காக்குமாப்போற் காலேற்கும்கண்ணோ விண்ணைமருட்டும் புஜமோ பதினாயிர மலையைப் புரட்டுமென்று சொல்லிக்கொள்ளும்படியாய் வீதிகளைக்கடந்து சபா மண்டபம் வந்து ஸ்ரீராமரை நமஸ்கரித்தான். அப்படி நமஸ்கரிக்க மகாமாயனுக்குப் பலவாசிகள் கூறியபின்பு மகாமாயனவன் பரதலட்சுமணரைச் சேவிக்க அவர்களும் ஆசீர்வதிக்க பிறகு மாலியவானையும் விபீஷணரையுங்கண்டு நமஸ்கரித்தான். அப்படி நமஸ்கரித்த மகாமாயனுக்கு இவர்களும் ஆசீர்வதித்து உட்கார செலவுகொடுத்தார்கள். அப்போது ஸ்ரீராமர் ஓய் மகாமாயனே நீங்களனைவரும் க்ஷேமமாவென்றார், ஓ! நாதனே கிருபைக்கடலே தங்களுடைய அனுக்கிரகம் அடியேன்பேரி லிருக்கிறமட்டுக்கும் அடியேன் க்ஷேமமே தவிர குறைவொன்று மில்லையென்று பணிவாகக் கூறினான். இதற்குள் மதனரஞ்சினி யென்னப்பட்டவள் ஆயிரங் கன்னியர்கள் சூழ முத்துபல்லக்கிலேறி கௌசலை கைகேசி சுமத்திரைமாரிருக்கும் அந்தப் புரத்திற்குட்சென்று அந்த மூன்றுபேருக்கும் நமஸ்கரிக்க அவர்களும் இவர்களை

ஆசீர்வதித்து அவர்களுக்கு விடுதிகள் கொடுத்து சகல சம்பிரமத்துடன் நடப்பித்துக் கொண்டுவந்தார்கள்.

இப்படியிருக்கையில் சலவசந்தனனவன் தன்னுடைய யானைசேனை பரிவாரங்களுடன் யானைகள் முன்னடக்க, அதன்பின் ரதங்கள் நடக்க அதன்பின்பு குதிரைகளும் அதன்பின் காலாபலமான சேனைகளும் நடக்கிறபோது பூமியானது கிடுகிடுவென்று நடுங்க ஆதிசேஷன் புஜமாற்ற அஷ்டகுலபர்வதங்களுமதிரப் பெருத்த ஆரவாரத்துடனே இராக்கதச்சேனைகளானது வருகிறபோது ஸ்ரீராமர் அனுமாரைப் பார்த்து அதோ வருகிறவன் யாரென்றுகேட்க, அனுமார் சொல்லுகிறார். ஓ நாதனே! இன்னஞ் சலவசந்தன் வரவில்லை "வ்வளவு ஆரவாரத்துடன் வருகிறவன் சலவசந்தனே யல்லாமல் மற்றொருவரு மல்லவென்று அனுமார் சொல்ல, அதுகேட்டு ஸ்ரீராமர் தம்பி சத்துருக்கா நீ நமது மந்திரி பிரதானிகளுடன் சேனைகளைக் கூட்டிக்கொண்டு எதிர்நோக்கிச் சென்று சலவசந்தனை அழைத்துவாவென்று கூறுகையில் சத்துருக்கர் அந்தப்படியே சர்வாடம்பரத்துடன் சலவசந்தன் முன் செல்லவே சலவசந்தன் கண்டு சட்டென்று ரதத்தை விட்டுக் கீழேகுதித்து சாஷ்டாங்க தெண்டம் சமர்ப்பிக்கச் சத்துருக்கரானவர் தழுவி ஆசீர்வாதஞ்செய் தழைத்து வருகையில் சேனசமுத்திரங்களைக் கோட்டை வெளியில் நிறுத்தி விட்டு படைத்தலைவனான பஞ்சகண்டன் சேனாதிபதிகள் தளவாய்கள் சூழும்படியாய்க் காணிக்கைக் கப்பங்களுடன் வருகிறபோது பட்டணத்து ஜனங்கள் சலவசந்தனைப் பார்த்துச் சொல்லிக் கொள்ளுகிறார்களிவனைப்பார்த்தால் இராக்கதனைப்போற் காண்கிறது சிறியவயதுபோலுந் தோன்றுகின்றது இவனுடைய அகோரதந்தங்களைப் பார்த்தால் சந்திரனை இருபிளவாய்ப்பிளந்து இரண்டு கடைவாயிலும் வைத்தது போலு மிருக்கின்றதென்று சொல்லிக் கொள்ளுகையில் சலவசந்தனனவன் ஸ்ரீராமமூர்த்தியைக் கண்டு வணங்கினான். அப்படி வணங்கிய சலவசந்தனை யெடுத்து வாயாரவாழ்த்தினார் பிறகு சலவசந்தனனவன் பரத லட்சுமணரையும் சேவித்தான் அவர்களும் ஆசீர்வாதஞ்செய்து ஆசனங்கொடுக்க அதன்மீ துட்கார்ந்தான் அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் ஓய் சலவசந்தனே! நீ நும்முடைய சேனாசைனியங்களும் சுகமோ வென்றார் சலவசந்தன் சொல்லுகிறான் உங்களு

டைய அனுக்கிரகம் அடியேனுக் கிருக்கிறமட்டுக்கும் ஒரு குறையுமில்லை யென்றான்.

இப்படி யிருக்கையில் சலவசந்தனுடைய பட்டபுதேவி யான திருமாலியும் நூறு தாதியர்கள் புடைசூழ முத்துப் பல்லக்கிலேறி கைகேசி சுமித்திரைகள் அரண்மனைக்குச் சென்று அவர்களடிவணங்கி நமஸ்கரித்தாள் அவர் களித்து திருமாலினுக்கு ஆசீர்வதித்து ஒருபீடம்போட்டு உட்காரவைத்து வந்தவர்களுக்கெல்லாம் விடுதியும்விடுக்க அதில் சகல வைபவத்துட னிருந்தார்கள் அப்படியிருக்கத் தேவசுந்தரனுனவன் யானை தேர் பரிகள் அணியாகவும் நாற்பத்தைந்து வெள்ளம் ராட்சத சேனைகளுடனும் இருபத்து நாலாயிரங் கோடி வானரா் கூட்டத்தோடு கங்கைக்கரைக்கு வந்தான் அப்படிவந்த தேவசுந்திரனை மட்சயந்த அனுமான்கண்டு ரதத்தை விட்டிழிந்து யெதிர் கொண்டுவந்து அழைத்துப் போய் தழுவி வினவிக்கொண்டு இருவர் தண்டுகளையும் ஒன்றாய்க் கூட்டி சங்கீத மேள வாத்தியங்கள் தாம்தாமென்று முழங்க பூமியதிர அஷ்டகுல பர்வதங்களும் நடுங்க வானரும் ராட்சதாளும் ஒன்றாய்க்கூடி ஆரவாரத்துடனே வருகிறபோது எங்குமிறங்க யிடமில்லாமல் நாலுமூலை கோபுர வாசற்படியும்போய்ப் பார்த்தார்கள். அவ்விட முழுமையும் ஆனையும் குதிரையும் ரதமும் வானராளும் ராக்ஷதாளும் எங்கும் டமார பேரிகை மேளவாத்தியங்களும் கொடைகளும் கொடிகளும் அவுதாக்களும் கூடாரங்களும் ஆடல் பாடல்களும் கூச்சல்களும் கோபுரவாசற்படிக்குத் தென்புறமாகக் கொஞ்சம் சந்து வெளிச்சமாய்க் கண்டது அதுகண்டு தேவசுந்திரன் மட்சயந்த அனுமாரைக்கண்டு தளத்தை விட்டு காணிக்கைக் கப்பங்களுடனே நாற்பத்து நாலாயிரங்கோடி சேனுதிபதிகள் சூழ ஏழுகோபுர வாசற்படியுங் கடந்து கோட்டைக்குள் நுழைந்து மகா ஆரவாரத்துடனே வருகிறபோது சபாமண்டபச் சபையிலுள்ள ஸ்ரீராமர் பரத லட்சுமணர் சத்துருக்கர் விபீஷணர் மாலியவான் சுக்ரீவன் அங்கதன் மந்திரியான சுமந்திரன் சகலருங் கேட்டு அவர்களார் வருகிறவர்களென்று மனதிலேயெண்ணினார்கள், அப்போது ஸ்ரீராமர் ஓ அனுமாரே! இப்போது வருகிறவர்களாரென்று கேட்கவே அனுமார் கூறுகிறார் சுவாமி வானரசிரேஷ்டர் இராட்சதசிரேஷ்டர் எல்லாரும்வந்து நிறைந்திருக்கி

ன்ருர்கள் தேவசுந்திரன்மாத்திரம் வரவில்லை அவன்ருன்வரு கின்றதுபோற் காணுதென்ருர். அதுகேட்டு ஸ்ரீராமமூர்த்தி யானவர் தம்பி சத்துருக்கனைப்பார்த்துச் சொல்லுகின்ருர், நீ சிலதுசேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் மரியாதைசெய்து அழைத்துக்கொண்டு வாவென் றுத்தரவுசெய்தார் அப்படியே சத்துருக்கர் மந்திரி சுமந்திரனையும் எதிர்கொண்டு போகவே தேவசுந்திரனும் மட்சயந்த அனுமாரும் நமஸ்கரித்தார்கள் அப்படி நமஸ்கரித்த அவ்விருவருக்கும் ஆசீர்வாதஞ்செய்து அழைத்துக்கொண்டுவருகிறபோது தேவசுந்திரனையும் மட்சயந்தஅனுமானையும் ஸ்ரீராமமூர்த்திகண்டு ஓ அனுமாரே! இராட்சதரூபனும் வானரரூபனுமாக வருகிருர்களே இவர்களாரென்றுசொல்லென்று கேட்கையில் அனுமார் சொல்லுகிருர்.

ஓ சுவாமி! அதோ ராட்சதசிரேஷ்டனுக வருகிறவன் பாதாளலோகத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட மயிலிராவணனுடைய மருமகனுன தேவசுந்திரன் வானரரூபமாய் வருகிறவன் அடியேனுடையகுமாரன் மட்சயந்த அனுமானென்னப்பட்டவன் இருவரும் வருகிருரென்று சொன்னுர். அதுகேட்டு இராமலட்சுமணர் சந்தோஷப்பட்டு ஓய் அனுமாரே நீர் நித்தியதத்துவ பிர்மச்சாரியராயிற்றே உமக்குப் புத்திரனேது எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று ஸ்ரீராமமூர்த்தி கேட்க அனுமார் சொல்லத்தொடங்கினுர்.

ஸ்ரீராமருக்கு அனுமார்
மட்சயந்த அனுமான் வரலாறு கூறுதல்.

ஐயா ஜகநாதனே! அடியேன் சீதா லட்சுமியம்மனைத் தேடிக்கொண்டு சமூத்திரந் தாண்டுகையில் அடியேனுடைய சுக்கிலங்கலிதமாய்ச் சமூத்திரத்தில் விழுந்தது. அதையொரு மச்சமானது விழுங்கிற்று. அந்தநாழிகைக்கு ரிஷிபிண்டம் இராத்தங்காமல் மட்சயந்தன் பிறந்தான் பிறந்த மாத்திரத்தில் சமூத்திரகரை யோரமாகத் தத்தளித்துக் கொண்டிருந்தான் அப்படியிருக்கையில் மயில்ராவணன் வேட்டைக்குப் பாதாளத்தைவிட்டு வெளியேவந்து சமூத்திரந்தாண்டி வருகிறபோது ஜலத்திலே தத்தளித்துக்கொண்டிருக்கிற மட்சயந்தனைக்கண்டு வெகுஆசையன்புடன் எடுத்துவளர்த்தான். அப்படியிருக்க அடியேன் சீதாலட்சுமியைக்கண்டு சமூத்திரந்தாண்டி தங்களுக்கு வந்துசொல்லத் தாங்களும் இளையபெருமா

ளுமாக எழுபதுவெள்ளம் வானராளுடனே சமுத்திரத்தைய டைந்து இலங்கைக்குப்போய் இராவணனைக்கண்டு கும்பகர் னன் இந்திரசித்து அதிகாயன் மூவரையுங் கொன்றபிறகு இராவணனனவன் யோசனைசெய்து பாதாளலோகத்தி லிருக் கப்பட்ட மயிலிராவணனையும் அவன் தம்பிமார் மூன்றுபே ரையுமழைத்து தங்களையும் இளைய பெருமாளையும் பாதாள லோகத்திற் கொண்டுபோம்படி உத்திரவு பண்ணினன் அந்த சமாச்சாரந் திரிசடையம்மனல் விபீஷணரறிந்து உமக்கும் இளையபெருமாளுக்கும் அடியேனுக்குஞ்சொல்ல, வாலினு லே சந்தில்லாமல் கோட்டையாய்கட்டி பத்திரமாய் காத்துக் கொண்டிருக்க, விபீஷணர் மந்திராபூதினலே ஒருபெட்டிசெ ய்து அந்தப்பெட்டியில் தாங்களும் இளையபெருமாளும் பள் ளிகொள்ள அந்தச்சமயத்தில் மயிலிராவணன் விபீஷண ரைப்போல வடிவுகொண்டு இந்தக்கோட்டைக்குவழி யெப்ப டியென்று கேட்டான். அந்தமர்மம் அடியேனுக்குத் தெரி யாமல் ஒருகாலைவாங்கினேன், அந்தக்கால்வழியாக நுழைந் து தங்களுக்கும் இளையபெருமாளுக்கும்சொக்குபொடியைத்தூ விபெட்டியுடனேயெடுத்துப் பாதாளலோகம்போய்விட்டான்.

கூடவே விபீஷணர் கோட்டையின்மீதில் வாளையுருவிக் கையில்பிடித்துக்கொண்டு வந்துவிட்டார். அப்படிவந்த விபீ ஷணரை அடியேன்பார்த்து ஐயா விபீஷணரே! இப்போது தான் உள்நுழைந்தீரே எந்தவழியாக எதிரே வந்தீரென்று கேட்டேன். அப்போது விபீஷணர்சொன்னது நான்வரவில் லையே மோசம்போனீரே அநுமாரேயென்று கேட்டார் அப்ப டிகேட்ட விபீஷணரும் அடியேனும்வந்துபார்த்தோம் உம் மையும் இளையபெருமாளையுங்காணுமல் மோசம் வந்ததென்று விபீஷணரும் சொன்னவழியைப் பிடித்துக்கொண்டு பாதாள வரைக்கும்போனேன். அவ்விடத்திற் சமாச்சாரம் ஒன்றுமகப் படாமல் தண்ணீர்துறையில் வந்திருந்தேன். அத்துறைக்கு மயிலிராவணன் தங்கையானவள் அழுதுகொண்டுவர அவளை நோக்கி நீ யிப்படி அழுதுகொண்டு வரவேண்டியதென்ன, அம்மாவென்றுகேட்டேன். அதற்கந்தம்மாள் நான் மயிலிரா வணன் தங்கை எனக்கொருபுத்திரன் பிறந்தான் அதற்காக என்தமையன் சோதிடரையழைத்து பிள்ளைபிறந்த லக்கினத் தைப்பார்க்கும்போது அவர்கள்சொன்னது நல்லம்மானுக்கு ஆகாது பதினறுவயதிற் பட்டாபிஷேகனுகி இந்தப்பட்டண

த்தையாளுவானென்று சொன்னார்கள். அதுமுதலிதுவரை யில் என்னையும் என்புருஷனையும் என்பிள்ளையையும் விலங்கு பூட்டி வைத்திருந்தான் இப்போது ஆரோ இரண்டுபேரை பெட்டியுடன் கொண்டுவந்து காவற்படுத்தியிருக்கிறான், அது வன்றி இன்று என்கால்விலங்கைவிடுத்து என்கையிற் குடத் தைக்கொடுத்து தண்ணீர் கொண்டுவரச்சொல்லி என்பிள்ளைக் கும் அந்த இரண்டுமானிடர்களுக்கும் ஸ்நானம் பண்ணிவை த்து காளிகாதேவிக்கு பெலிகொடுக்க இருக்கிறான், அதனால் அழுதுக்கொண்டுவந்தேனென்றாள்.

அதனைக்கேட்டு, அடியேன் சொன்னது அம்மா இங்கே வாரும் என்னையிந்த குடத்திற்குள் சந்தடிபண்ணாமல்வைத்து க்கொண்டுபோவீரேயானால் உன் தமயனான மயிலிராவணனைக் கொன்று யுன்பிள்ளைக்குப் பட்டங்கட்டி வைக்கிறேனென்று சொன்னேன் அதுகேட்டு அந்த அம்மனும் அடியேனை குட த்திலேவைத்துக்கொண்டு கோட்டைவாசற்படியில் நுழைகி றபோது கோட்டை காவற்காரர்கள் அதைக்கண்டு குடத்தையி றக்கச்சொன்னார்கள். அப்போது அடியேன் திடுக்கென கீழே குதித்து அங்கிருந்த காவற்காரரையெல்லாங் கொன்று அப் பாற்போகும்போது மகூஷயந்த அனுமானெதிர்த்தான். அவ னுடனுத்தம்பண்ணிப்பார்த்தேன் என்னால் முடியாமல் அவ னுடைய குலங்கோத்திரத்தைக் கேழ்க்கிறபோது அடியேனு டைய குமாரனாய் விளங்கினான். மேலும் அடியேன் அவனு க்குத் தந்தையென்றறியாமற் சண்டைசெய்த பாவந்தீர காசி க்குப்போய் ஸ்நானம்பண்ணி கந்தாபுரிபட்டணஞ்சேரென்ற னுப்பிவிட்டு மயிலிராவணனையும் அவன் தம்பிமார்களையுங் கொன்று தேவசுந்திரனுக்குப் பட்டங்கட்டிவைத்துப் பெட் டியை யெடுத்துக்கொண்டு லங்கைக்கு வந்தேனென்று அனு மார் சொன்னார்.

அப்போது இராமலட்சுமணர்கேட்டு அதிகசந்தோஷ மாகி விபீஷணரைப்பார்த்து ஓய் விபீஷணரே இப்படி நடந் தசமாச்சாரம் இதுவரையில் எங்களுக்குச்சொல்லாமலிருந்து விட்டீர்கள், அதேனென்றால் மூன்றுகாலமுந்தெரிந்த பெரி யோர்கள் தங்கள்பெருமையுந் தாங்கள்செய்த உபகாரத்தை யுஞ்சொல்லிக்கொள்ள மாட்டார்களென்று ராமமூர்த்தியும் இ லட்சுமணருஞ்சொல்லுகையில் அனுமாரும் விபிஷணருமெ ழுந்து சுவாமியை நமஸ்கரித்து சுவாமி இதொருகாரியமோ

வென்று சொல்லாமலிருந்துவிட்டோம் இப்போது தருணம் வந்துவாய்த்தபடியால் சொல்லவேண்டியதாயிற்று. அடியார்கள்செய்த அபசாரத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று அடிவணங்கித் தெண்டனிட்டார். அதுகேட்டு சுவாமியும் இலட்சுமணரும்பூரித்து மனங்களித்தார்கள். அச்சமயத்தில் தேவசுந்திரனும் மட்சயந்த அனுமாரும்வந்து சுவாமியின் பாதாரவிந்தத்தை துதித்துவணங்கினார்கள். அவர்களுக்கு சுவாமியானவர் ஆசீர்வதித்து உட்காரும்படி உத்தரவுகொடுக்க அவர்களுமிருந்தார்கள். அந்தவேளையில் தேவசுந்திரன் பட்டபுதேவியும் முத்துப்பல்லக்கிலேறி நூறு கன்னியர்சூழ, கௌசலை கைகேசி சுமித்திரையம்மன் இம்மூவரும் வசிக்கும் அந்தப்புரத்திற்குப்போய் மூன்றுபேரையுஞ் சேவிக்க, அவர்களும் வாழ்த்தி வசனித்துக்கொண்டிருந்து விடுதிகளமைத்து சம்பிரமத்துடனடத்திக்கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீராமரிடம் குகன்வருதல்.

இப்பால் குகனானவன் தன்னுடைய பதினோரக்ரோணி சேனைகளைக் கூட்டிக்கொண்டு டமாரபேரிகை சங்கீத மேளவாத்தியங்கள்முழங்கப் புறப்பட்டு வருகிறபோது கண்காணாத சேனைகளைக்கண்டு ஆச்சரியப்பட்டு தாங்களிருக்கிறதற்கிடமில்லாமல் நாலுகோபுரவாசற்படியும்போய்ப் பார்த்தார்கள். போகயிடமில்லாமல் வாசற்படிபக்கம்பார்க்கையில் கொஞ்சமிடமிருக்கக்கண்டு அவ்விடத்திற் றண்டுவிட்டிறங்கிக் குகனுஞ் சில சேனாபதிகள்சூழக் கோபுரவாசற்படிக்குள் நுழைந்து பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்றுசொல்லப்பட்ட நாலுவர்ண ஜாதிவீதிகளும் கடந்து சபாமண்டபம்வந்து ஸ்ரீராமமூர்த்தியைச்சேவிக்க, அவரும் குகனையெடுத்து மார்போடணைத்து ஆசீர்வாதஞ்செய்யக் குகனும் பரதலட்சுமணர் சத்துருக்கனென்கிறமூவருக்கும் நமஸ்காரம்பண்ணி அவர்களுங் குகனுக்கு ஆசீர்வதித்து ஒருபீடத்தின்பேரில் உட்காரச்செலவுகொடுக்க குகனுஞ் சந்துஷ்டியாயிருந்தான் பின்பு குகனுடைய தேவியும் சிலகன்னியர்கள் சூழும்படியாய் முத்துப்பல்லக்கிலேறி கௌசலை கைகேசி சுமித்திரை அரண்மனைபோய் அவர்களுக்கு சாஷ்டாங்கமாக தெண்டஞ்செய்ய, அவர்களும் ஆசீர்வாதஞ்செய்து சிலநேரம் வார்த்தையாடி விடுதிகளமைத்து தேவிகளும் தாதிகளும் சந்துஷ்டியோடிருந்தார்கள்.

ஸ்ரீராமர் சுக்ரீவனையும் விபீஷணரையுங் கேட்டுக்கொள்ளல்.

இப்படியிருக்க, ஸ்ரீராமபத்திரசுவாமியார் சிம்மாதனத்திற் சகல ராசசிரேஷ்டரும், வானரசிரேஷ்டரும், படைத்தலைவர்களும், சேனாதிபதிகளும் தண்டுதளங்களோடும் மந்திரி பிரதானிகளுடன் முத்துக்குடை ரத்னக்குடைகவிய, ஆலவட்டம் தாலவட்டம் சூசாமரங்கள் சுருட்டிகள் மயிர்க்குச்சு சொரிய இந்திரன் கொலுவைப்போற் கட்டியக்காரர் கட்டியங் கூற, பாடகர்புகழ, தேவதாசிகளுக்குச் சரியான பெண்கள் பாட, எக்காளம் சின்னமத்தளம் ருத்திரவீணை சங்கித மேள வாத்தியங்கள்முழங்க, நிறைந்தகொலுவாயிருக்க அப்போது சுக்ரீவ மகாராசனையும் இலங்காதிபதியான விபீஷணரையும் ஸ்ரீராமமூர்த்திபார்த்துச் சொல்லுகிறார். நீங்கள் மூன்றுலோகங்களுக்காக அவஸ்தைப்பட்டு இராவண சம்மாரம் பண்ணி சீதையை சிறையும்விடுவித்து எனக்கிந்த அயோத்தியாபுரிபட்டமுஞ்சூட்டிவைத்தீர்கள். அதுபோல் இப்போது அஸ்வமேதக்குதிரையின் பின்னால்போய் எதிர்த்த ராசர்களைச் சங்கரித்து உங்கள்கையினால் யாகத்தை நிறைவேற்றி வைக்கவேணும் இந்தநன்றியை யென்றுமறவேனென்று ரதுகேட்டு சுக்ரீவரும் விபீஷணரும் சுவாமியைப்பார்த்துச்சொல்லுகிறார்கள். ஓசுவாமி அடியார்களாலாவதொன்றுமில்லை எல்லாக் காரியமும் பலாபலமும் தேவரீருடைய மகிமையேயல்லாமல் வேறொன்றுமில்லையென்று பணிவாகச்சொல்ல, ஸ்ரீராமர் சந்தோஷமாய் சுமந்திரரையழைத்து ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் ஓலையெழுதியனுப்பி இராசாக்களெல்லோரும் வரும்படி திட்டஞ்செய்யுமென்றார்.

சுமந்திரர் ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்கு நிருப மனுப்புதல்.

அப்போது சுமந்திரரும் ஓலையெழுதி தூதுவரிடங் கொடுத்தனுப்ப அவர்கள் ஓலையையெடுத்துக்கொண்டு வாயுவேகமனோவேகமாய்ப்புறப்பட்டு ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்குங் கொடுக்க அவர்கள் வாசித்துப்பார்த்து உடனேபுறப்பட்டார்கள் அவர்களாரென்றால் கொங்கணராசன் முப்பதக்ரோணியானை தேர் பரி சேனைகளுடனே காணிக்கைகப்பங்கொண்டுபு

புறப்பட்டார் கோசலமகாராசாவும் இருபத்தைந் தக்ரோணி யானை தேர் பரிவாரங்களுடன் காணிக்கை கப்பங்கொண்டு புறப்பட்டார். புறப்படவே கேரளதேசத்தை யாளப்பட்ட கேரள மகாராசாவும் கலிங்கதேசத்தை யாளப்பட்ட கலிங்கமகாராஜாவும் மாளவதேசத்தை யாளப்பட்ட மருத்துவ மகாராசனும், பாண்டியதேசத்தரசனாகிய உக்கிரசேனமகாராசனும், சிந்துதேசத்திறைவனாகிய சிந்துமகாராஜனும், காம்போதிமகாராசனும் விக்கிரமதேசத்து வேந்தனாகிய வீரவிக்கிரமராசனும் ஒட்டியதேசத்தரசனாகிய ஒட்டியமகாராசனும், நகரதேசத்தை யாளப்பட்ட வீரவர்மமகாராசனும் இன்னுமிருக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் ஓலைகண்ட நாழிகைக்கு அவர்களுடைய யானை தேர் பரி காணிக்கை கப்பங்களுடனே கொடிச்சீலைகளுடனும் விருதுகள் பிடித்துக்கொண்டு எக்காளம் சின்னம் வெங்கலமுரசு சாமரம் பேரிகைகள் முழங்க வடகிழக்கு தெற்குமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு வடகிழக்கு வடமேற்குஎன்கிற அஷ்டதிக்கிலுமிருந்து இராசாக்கள்மகுடமாந்தாதிகள் அதிரதர் சமரதர் அர்த்தரதரென்று சொல்லப்பட்ட இராசாக்களும் வெள்ளைக்குடை வெண்சாமரம் செகப்புக்குடை செகப்புக்கொடி கறுப்புக்குடை கறுப்புதுவசம் பச்சைக்கொடி நீலக்கொடி மஞ்சகுட்டை மஞ்சட்கொடிபறக்கப் புறப்படும்போது பூமியானது கிடுகிடென்று நடுங்கவும், ஆதிசேஷன்புஜமாற்றவும், அஷ்டகுலபர்வதங்கள் அசைந்தாடவும், ஆர்ப்பரித்து அயோத்தியாபுரிபட்டணத்து நாலுமூலையும் கோபுரவாசற்படியும் வந்துபார்த்தார்கள், அப்படிவந்தசேனைகளும் இராசாக்களும் கருமலை பர்வதங்களைப்போ லிருக்கப்பட்ட ராட்சதர்களையும் வானரக்கூட்டங்களையும் சேனாதிபதிகளையும்தளகர்த்தர்களையும்பார்த்து ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள் ஓ! ராசாக்களே இவர்களார் இவர்களைப் பார்த்தால் கரியபர்வதங்களைப்போ லிருக்கின்றார்க ளிவர்களைன்னமனிதப்பிறப்போ இவர்கள்முகத்தைப்பார்த்தால் மகமேருபர்வதத்தில் சிகரம்போலிருக்கின்றது இவர்கள் மூக்கிலே இருபதுயானைகள் புகுந்துவரும்போற் காணுகின்றது. இவர்களுடைய வாயைப்பார்த்தால் ஆகாயம் பூமியைப்போலும் தோற்றுது மீசைகளைப்பார்த்தால் மணலில் முளைத்த கோரைப்புல்லைப்போற்றட்டுபடுது அந்தமீசையில் ஒவ்வொருமயிரிற்பத்துயானைகளைக்கட்டி தொங்கவிடலாம். அதுவுமன்றி கண்களைப்பார்த்தால் யமுனநதி கரைபோலு மிருக்கின்றது கோரை பற்களைப்பார்த்தால் சந்திரனைப் பிளந்து இருபக்கத்

துக்கடைவாயிலும் வைத்ததுபோலுமிருக்கின்றது இவர்கள் கிரீடத்தைப்பார்த்தால் கைலாயபர்வதத்தின் உச்சியிலிருக்கும் சிகரம்போலு மிருக்கின்றது மார்பிலணிந்த பதக்கங்களைப் பார்த்தால் அறுபத்துநாலு சூரியனைப்பிடித்து மார்பிலணிந்ததுபோலும் விளங்குகின்றது இப்படிப்பட்ட ரூபம்படைத்த இராட்சதர்களை ஸ்ரீராமமூர்த்தியெப்படி செயம்பண்ணினரோ இவர்களைப் பார்க்கும்போதே கெற்பங்கலங்குகிறதே கையில் பிடித்திருக்கிற வில்லைப்பார்த்தால் அண்டத்தைவில்லைப்பிடித்ததுபோலுந் தோற்றுதே இவர்கள் சாமார்த்தியமென்ன கொஞ்சமாயிருக்குமோ இப்பேர்ப்பட்ட இராட்சதர்களுக் கரசனுன இராவணேஸ்வரன் இலேசானவனுயிருப்பானே அவனே ஆயிரத்தெட்டண்டம் இருநூற்று இருபத்துநான்குபுவனத்தையும் ஆண்டவனுச்சுதே அவனை இவரென்னமாய்க் கொன்ருர் இவர் பரப்பிரம்மமானபடியினுலே தசரதமகாராசாவின்வயற்றில் ஸ்ரீராமராகப்பிறந்து இராவண இராட்சதாளையுங்கொன்ருர். நம்முடையவம்சம் இருபத்தொரு தலைமுறையிலும் இராட்சதாளை நாமறியமாட்டோம் ஸ்ரீராமமூர்த்தியாலே இப்போதுகண்டோமென்று பலவாருகப் பேசிக்கொண்டு கீழ்கோபுர வாசற்படியாக நுழைந்து நாலுவீதிகளுங்கடந்து சபாமண்டபம் வருகிறபோது ஸ்ரீராமமூர்த்திகேட்டு பரதசத்துருக்கருடன் சேனைகளையுங்கூட்டி யனுப்பிவைத்தார் அவர்களெதிர்கொண்டு வரவே ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களும் பரதர் சத்துருக்கரை நமஸ்காரம்பண்ண அவர்களும் மரியாதைசெய்து அழைத்துக்கொண்டு சபாமண்டபம் வந்தார்கள். அப்போது ஸ்ரீராமர் சிம்மாதனம் விட்டெழுந்துநின்ருர். அப்படி நின்ற ஸ்ரீராமர் பாதத்திலே ஐம்பத்தாறுதேசத் தரசர்களும் சேவித்தார்கள் அவர்களுக்கு ஆசீர்வதித்து உட்காரும்படியாய் செலவுகொடுக்க அவர்களுஞ் சந்தோஷமா யுட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் ஓய் இராசாக்களே கேளுங்கள் நான் இராவணராட்சதர்களைக் கொன்றபாவம் துலைய அஸ்வத்தின்பின்னுல் நீங்களுஞ்சென்று எதிர்த்த இராசாக்களைச் சங்கரித்தகையினுல் அஸ்வமேதயாகம் பண்ணிவைக்கவேணுமென்ருர். அதுகேட்டு ஐம்பத்தாறுதேசத் தரசர்களும் சுவாமி தங்களுடைய கருணகடாக்ஷம் அடியார்கள்பேரிலிருக்கிறவரையில் உம்முடையயாகந்திற்கு குறைவு வருகிற

இல்லை அப்படியே குதிரையின் பின்னாகச்சென்று பூமிப்பிரத
ட்சணம்வந்து உமதுகையில் யாகம் பண்ணிவைக்கிறோமென்
றார்கள். அப்போது ஸ்ரீராமரும் மகாசந்தோஷமாய்வந்தமகா
ராசாக்களையழைத்து அவரவர்கொண்டுவந்த காணிக்கை கப்
பங்களையெல்லாம் இராட்சதர்களைவிட்டு உக்கிராண களத்திற்
கொண்டுபோய்ச் சேர்க்கச்சொன்னார். அப்படியே பத்தக்ரோ
ணி இராட்சதரையழைப்பித்து எடுக்கமாளாமற்கொண்டுபோ
ய்கஜானாவிற்சேர்த்தார்கள். அப்போது களஞ்சிய மண்டபமெ
ப்படியிருந்ததென்றால் முத்துகளொருபக்கமும், நீலோற்பல
மொருபக்கமும், மரகதமொருபக்கமும், கோமேதக மொருபக்
கமும், இப்படி நவரத்தினங்கள் ராசிராசியாய் மலைபோற்
குவித்திருந்தது. அத்தருணத்தில் சூரியன் மேற்றிசையில் ம
றைந்தான். பின்பு இராமர்சொற்படி பரதமகாராசன் தண்டுத
ளங்களுக்கு வானரவீரர்களுக்கும் இராட்சத கூட்டங்களுக்கும்
ஐம்பத்தாறுதேசத் தரசர்களுக்கும் இன்னம் வந்திருக்கப்பட்
டவர்களுக்கும் பஞ்சகச்சாயங்களுடன் பரிமாரி சந்தன புட்ப
தாம்பூலங்களும் நடப்பித் தாடல்பாடல் விநோத வேடிக்கைக
ளுடனே அன்றிரவைப்போக்கிவைத்தார்.

ஸ்ரீராமர் அயோத்தியில் வந்திருந்து தண்டுதளங் களுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கும் படி பரதருக்கு ஆக்கியாபித்தல்.

மருநாள் ஸ்ரீராமர் காலைக்கடனென்னும் நியமநிஷ்டை
களைமுடித்து தம்பிமார்களுடன் ராட்சதவீரர்களும்சூழ, சேனா
திபதிகள் படைத்தலைவர் தாழவும் கட்டியக்காரர் கட்டியம்
கூறவும் கன்னியர் நடனமாடவுங் கவிவல்லோர் கவிபாடவுங்
கொலுமண்டபம் வந்து பரதரையழைத்து இன்றுமுதற்கொ
ண்டு நம்முடைய பட்டணத்தில் வந்திருக்கப்பட்ட தண்டு
தளங்களுக்கு என்னென்ன தேவையாயிருக்கின்றதோ அந்த
வஸ்துக்களையெல்லாம் கொடுக்கும்படி நம்முடைய வர்த்தக
ருக்கு உத்திரவுசெய்து அவ்வர்த்தகர் முன்னாடி யென்னகேட்
கிறாரோ அதைத் தடையில்லாமற்கொடுத்து வர்த்தகர் தண்டு
தளங்களிற் பயமில்லாமல் வரவும்போகவும் சரக்கு சாமான்
கள் கொடுக்கவும் ஸ்ரீராமபாணத்தினுடைய பெருமை இரா
ட்சதர்களுக்கும் வானரங்களுக்குந் தெரியப்படுத்தி வர்த்தகரி
டம் வாஞ்சையாய்ப்பேசவும் வியாபாரஞ்செய்யவும் அந்த

தண்டுகளின்சேனாதிபதிகளுக்கு அறிக்கைசெய்து ஒருவரோடொருவர் கூக்குரல்போடாமலும் சண்டைசச்சரவுகள் செய்யாமலிருக்கவும் திட்டஞ்செய்யென்று சொல்லிப்பின்பு அனுமாரையழைத்து ஓய் அனுமாரே நீரும் அடிக்கடிபோய்ப்பார்த்துக்கொண்டுவாருமென்று ஆக்கியாபிக்க அப்படியே அனுமாருஞ்சென்று அவர்களுக்கு ஸ்ரீராமபிரானுடைய ஆக்கினையைச்சொல்லி அறிக்கைப்படுத்தி வர்த்தகரையழைத்து ஒவ்வொருவருக்கு பதினாயிரம் விழுக்காடு பொன்னளித்து சரக்குகள் சாமான் கொடுக்கும்படி பறைசாற்றிவைத்தார்.

ஸ்ரீராமர் அயோத்தியை அலங்கிருதஞ் செய்யச்சொல்லுதல்.

அதன்பின்பு ஸ்ரீராமர் சுமந்திரரையழைத்து நம்முடைய பட்டணமுழுதும் அலங்கிருதஞ் செய்யும்படி பறை சாற்றிவையுமென்று ஆக்கியாபிக்க அவ்வாறே சுமந்திரரும் சாம்புவந்தரையழைத்து வெள்ளையானையின்மீதேறிப்போய் நம்முடையபட்டண மாதியந்தமும் அலங்காரஞ் செய்யும்படி பறைசாற்றிவாருமென, அப்படியே சாம்புவந்தர் பறைசாற்ற அதனை அயோத்தியாபுரிச்சனங்கள் கேள்விப்பட்டு இரவுமுப்பது நாழிகைக்கும் பந்தங்களேற்றிக்கொண்டு வீதிகளெல்லாம் பச்சைப்பந்தல்களிட்டு சாந்து சவ்வாதுகளினால் திண்ணைகள் மெழுகி சாந்தால் கோலங்களிட்டு வாழைகமுகுகள் நாட்டி பச்சைதோரணம் மாணிக்கத் தோரணங்கள்கட்டி வீதிதோறும் பன்னீர்கள்தெளித்து வீட்டிற்குவீடு பதுமைகள்கட்டி கற்பூரதீபங்களேந்தி வைகுந்தமாநகரம்போல பட்டணத்தை சிங்காரித்தார்கள்.

ஸ்ரீராமமூர்த்தி கொலுவு.

இப்பால் ஸ்ரீராமரானவர் காலை சபதபங்களை முடித்துக்கொண்டு போசனமருந்தி கிரீடம்தரித்து ஆடையாபரணம் பூண்டு முதுகில் அம்புருப்பொதியுங்கட்டி கையிற் றனுசுபிடித்து, கற்பூரதாம்பூலங்களணிந்து லக்ஷங்கன்னியர்கள் புடைசூழ மத்தளருத்திரவீணை மேளதாள சங்கீதங்கள் முழங்க முன்கட்டுவாசற்படியுந்தாண்டி ஆசாரவாசலில்வந்தார் அவ்விடத்தில்முப்பத்திரண்டு விருதுகளும் பிடித்து நவரத்னக்குடைகள் கவிய ஆலவட்டம்பரிமார மயிற்குச்செறிய சங்குகுறி

ந்தம் திருச்சின்னம்பரிமார கட்டியக்காரர் கட்டியங்கூற பொற்பிரம்புக்காரர் வெள்ளிப்பிரம்புக்காரர் பராமரிபண்ண மின்னூர்கள் நிர்த்தனம்புரிய சபாமண்டபம் வருகிறபோது சுக்ரீவன் அனுமார் அங்கதன் சாம்புதேவர் இருபத்துநாலுபடைத்தலைவரும்வந்து சுவாமிக்கு தண்டஞ்சமர்ப்பிக்க அவர்களுக்கு ஆசீர்வதித்தார். அப்போது பரதலட்சுமணர் சத்துருக்கர் மூவரும் வந்து ஸ்ரீராமர் அடிபணிய அவர்களுக்கும் வாழிகூறியபின்பு ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் வந்து அடிபணிய அவர்களுக்கும் ஆசீர்வதித்துச் சபாமண்டபத்தில் வீற்றிருந்தார் தம்பிமார்களும் ஓர்படி தாழவுட்கார்ந்தார்கள் ராசமன்னர்களும் உட்கார்ந்தார்கள் விபீஷணுதியர்கள் மகாமாயன் சலவசந்தன் தேவசுந்திரன் குகன் படைத்தலைவர்களும் சேனாதிபதிகளும் வந்துவணங்கி ஸ்ரீராமபிரானால் ஆசீர்வாதம்பெற்று உட்கார்ந்தார்கள் இப்படி தேவேந்திரன் கொலுவிலும் பதின்மடங்கதிகமாக ஸ்ரீராமமூர்த்தியானவர் நிறைந்த கொலுவாயிருந்தார்.

வதிஷ்டர் வருதல்.

விருத்தம்.

கரத்தினிற்றண்டுகொண்டு காவிவேஷ்டியுந்தரித்து
திருத்தமாய்தற்பைபுல்லுஞ் செபமாலையொருகையேந்தி
அருத்தியாய்ரவிகுலத்திற் கண்ணலாம்ஸ்ரீராமர்முன்பு
வருத்தமில்வதிஷ்டர்தாமு மகிழ்வுடன்தோன்றினரே.

இப்படியிருக்கிறபோது சித்ராபர்வம் வந்துவிட்டதென்றுவதிஷ்டமகாமுனிவர் சிலரிஷிகூட்டங்களுடனெழுந்து அயோத்திக்கு வருகையில் அயோத்தியலங்கிருதமும் அயோத்தியைச்சுற்றி யானை குதிரை தண்டு தளங்கள். வானரக் கூட்டம் எள்ளுவிழுந்தால் எடுக்கவிடமில்லாமல் நிறைந்திருப்பதைப்பார்த்து ஆச்சரியங்கொண்டு ஸ்ரீராமனுடைய பாக்கியமேபாக்கியமென்று மனதில்வியப்புற்று அம்முனிவர் வரும்போது வானரக்கூட்டங்களும் இராட்சதவீரர்களும் இராட்சதக்கூட்டங்களும்பார்த்து ஸ்ரீராமமூர்த்தியினுடைய குருவாகியவதிஷ்டமகாமுனிவர்வருகிருரென்றுஎழுந்துகைகுவித்து நின்றார்கள் அவர்களுக்கெல்லாம் ஆசீர்வதித்து சபாமண்டபம் வருகையில் ஸ்ரீராமமூர்த்தியானவர் கொலுவிருக்குஞ் சர்வத்திராளுடனும் எழுந்தெதிர்சென்று அழைத்துவந்து

அர்க்கியபாத்தியங்கொடுத்து ஆசனத்தில் அவரை வீற்றிருக்கச்செய்து யாவருக்கும் நமஸ்கரித்தார்கள் அவர்களுக்கு ஆசிர்வாதஞ்செய்து உட்காரச்செலவுகொடுத்து வசிஷ்டமகாமுனி கூறுகிறார்.

யாகமண்டபம் நியமித்து அஸ்வத்தை விடுதல்.

விருத்தம்.

வள்ளலாமுனியரைந்த வாய்மையைக்கேட்டுராமர்
உள்ளதோர்குதிரையெல்லா முடனவர்வந்துபார்த்து
வெள்ளையாயிட்சணத்தில் வீரமுமுள்ளதாகத்
தெள்ளியயாகத்திற்குத் தேசியைக்கொண்டுவந்தார்.

வாரும் ஸ்ரீராமபத்திரா சித்திராபர்வம் நவமி வந்துவிட்டது இப்போது முகூர்த்தம் நன்றாகயிருக்கிறது யாககுண்டம் வெட்டுபவனும் யாகத்திற்கு வேண்டிய முஸ்திபெல்லாம் அழைப்பிக்கவேண்டும் சலுதியாய் அஸ்வத்தை அழைப்பியுமென்றார், அதுகேட்டு ஸ்ரீராமபத்திரரும் அனுமாரையழைத்து ஓய் அனுமாரே! நம்முடைய குருசுவாமி உத்திரவுசெய்தபிரகாரம் யாகமண்டபமுஞ் சிங்காரித்து யாகமுஸ்திபும் அஸ்வமும் யாககுண்டமும்வெட்டி தயார்செய்யுமென்று உரைக்க அனுமார் பாக்கியமென்று நளனையழைத்து ஆக்யாபித்து உடனே நீலனையழைத்து அஸ்வத்தைக்கொண்டுவாவென்றுரைக்க, அவ்வாறே அவர்கள் யாகமண்டபம் சோடித்து சமுத்துகள் முதலானதுங் கொண்டுவந்து நிறுத்தி அனுமாருக்குச்சொல்ல அனுமாரும் ராமரும் வசிஷ்டமுனிவருக்குப் பகர அந்தவசிஷ்டரானவர் சில இருடிக்கூட்டங்களுடன் எழுந்திருந்தார் அவருடன் ராமமூர்த்தி பரதலட்சுமணர் சத்துருக்கர் அனுமார் விபீஷணர் மாலியவான் மகாமாயன் சல்வசந்தன் தேவசுந்தரன் காலசித்தன் பானுகோபன் நீலவட்சதன் சூதன் பஞ்சகண்டன் சுதாட்சன் சுக்ரீவன் அங்கதன் நீலன் குமுதன் சாம்பவன் தேசயாகன் மாதுவாலி அகம்பன் துய்யசாதகன் துன்முகன் சூரசேனன் என்று சொல்லப்பட்ட சகலமானபேரும் யாகமண்டபம்போய் உட்கார்ந்தார்கள்.

அப்போது வசிஷ்டருத்தாரப்படி அஸ்வமேதக்குதிரையை கங்காதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவைத்து ராமரும் சீதையம்மனைப்போலத் தங்கத்தினால் வார்ப்படஞ்செய்த சீதை



க்கும் திருமஞ்சனஞ்செய்வித்து பட்டாபரணமுடித்து அந்தி பலகையின்மீது வீற்றிருக்கச்செய்து வதிஷ்டரும் மந்திரஸ்தாபனஞ்செய்து யாககுண்டத்தில் அக்கினிதேவனை நிறுத்தி அந்த அக்கினி குண்டத்தில் சமுத்துகளையும் நெய்களையுஞ் சொரிந்து வதிஷ்டரும் ஸ்ரீராமரும் தங்கசிலைக்கு யாகதீட்சை கொடுத்து அதன்பிறகு அஸ்வத்திற்கு நவரத்தினபரணங்கள் பூட்டி கந்தபுட்பதாம்பூலம் நைவேத்தியங்களினால் அஸ்வத்திற்கு பூசைபண்ணி மந்திரஸ்தாபனஞ்செய்து தன்னுடைய பிரதாபசவுரியத்தை ஒருதங்கப்பட்டயத்திலெழுதியதை குதிரைநெற்றியிற்கட்டி ஐம்பத்தாறுதேசத்து ராசாக்கள் விருதுகளை அஸ்வத்தின் நான்குகால்களிலுங்கட்டி யாககுண்டத்தை மூன்றுதரம் பிரதட்சணம் பண்ணிவைத்து சகலதேவ மந்திரங்களும் ஆவாகனம்பண்ணி மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கும்படியாய் அயோத்தியாபுரி பட்டணத்தை பிரதட்சணம்பண்ணிவைத்து குதிரையைவிடுத்து அறுபதினாயிரம் பிராமணருக்கு ஆனை-10-குதிரை-10-சேவகர்-10-ஸ்திரீகள்-50-நபுரொன்றுக்கு 100 பாரம் தங்கம், இவ்விதமாக தானங்கொடுத்து பின்பு ஸ்ரீராமர் சொல்லுகின்றார்.

ஸ்ரீராமர் சத்துருக்கருக்கு விடைகொடுத்தல்.

விருத்தம்.

தம்பிசத்துருக்கா நீதான் சதுரங்கசேனையோடு
செம்மையாயயோத்தியோசை சிறந்திடச்சென்றேயிந்த
அம்புவிதாலுதிக்கும் அஸ்வத்தையறியப்பண்ணி
சம்பிரமதாகயிங்கு சலுதியில்வருகுவாயே.

தம்பிசத்துருக்கா! பிரசாட்சியமிகவுமாகவொட்டாமற் சீக்கிரமாக திக்குவிஜயஞ்செய்து சலுதியில் வரவேணுமென்று சொல்ல, சத்துருக்கர் அண்ணுவே! உம்முடைய மனதின்படி சலுதியில்வருகிறேன் செலவுகொடுமென்றார், அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் ஓ சலவசந்தனே! மகாமாயனே! நீங்களும் குதிரையின்பின்சென்று எதிர்த்தராசாக்களைவென்று வரவேண்டுமென்று விடைகொடுத்து சேனாதிபதியான காலசித்தனையும் படைந்தலைவனான நீலாட்சதனையும் அழைத்து நம்முடைய சேனைகளில் நல்ல வீரராயிருக்கப்பட்ட ஐம்பதுவெள்ளம் இராட்சதர்களுடன் நீங்களும்போய் வாருங்களென்று அவர்களுக்குங் கட்டளையிட்டு அதன்பின்பு இருபதினாயி

ரம் அக்ரோணிசேனைகளுக்கும் அதிகாரகர்த்தனுன சூரசேன மகாராசனைப்பார்த்து ஓய் சூரசேனனே! நமதுதேசத்தில் வந்திருக்கப்பட்ட ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களையும் அவர்கள் சேனுசைனியங்களுடன் கூட்டிக்கொண்டு அஸ்வத்தின்பின் போய் எதிர்த்த ராசாக்களை சங்கரித்து திக்குவிஜயம் பண்ணிவாருமென்றுர்.

சத்துருக்கர் சேனுசைனியங்களைக் கூட்டிக்கொண்டு குதிரையுடன் புறப்படுதல்.

விருத்தம்.

கண்ணுறுமன்னரேயிச் சதிருளதுரகந்தன்னை
வண்ணமாயலங்கரித்து வளர்ப்பட்டங்கட்டிவைத்தேன்
மண்ணுறுவீரசூர மன்னவரெவராறுலும்
திண்ணுறுமிதைபிடித்தார் செயம்பெறச்சண்டைசெய்வீர்.

இப்படியாக இராமபத்திரசுவாமியார் அனுமதிபெற்று காலசித்தனுனவன் யாககுண்டமண்டபம்விட்டு கோட்டைக்கு வெளியில்வந்து இராட்சத தண்டிற்புகுந்து நீலாட்சதனைக் கூட்டிக்கொண்டு தண்டை வெளிப்படுத்தினுர். எப்படியென்றுல், கன்னமதம்கரடமதமென்று மதங்களைப் பொழிந்துகொண்டு மேகங்களானது கன்னங்கரேலென்றுவந்து சூழ்ந்தாலெப்படியோ அப்படியாக ஆனைகள்பேரில் அம்பாரிசவுடால்கள்வைத்து அதிவீரபராக்கிரமமுள்ள ராட்சதாள் புறப்பட்டார்கள் அதன் பின்னுல் எட்டுக்குதிரை பதினுறு குதிரை முப்பத்திரண்டுகுதிரை பூட்டியும், இதுவுமல்லாமல் கோவேறுகழுதைகள் பூட்டியும், யானைகள் பூட்டியும், புலி யாளிபூட்டியுமிருக்கப்பட்ட ரதத்தின்பேரில் ராசமன்னர்கள் அஸ்திர சஸ்திரங்களை ஏந்திக்கொண்டுபுறப்பட்டார்கள். அதன்பின்பு சூரியன் இரதத்திற்கட்டிய புரவிகளுக்கு நிகரான புரவிகளின் மீதில் இராட்சதாள் பட்டாயுருவி கையிற் பிடித்துக்கொண்டு புறப்பட்டார்கள் அதன்பின் கால்பலமான இராட்சதாளோவென்றுல், பரட்டந்தலையும் சுருட்டமயிருள்ளவர்களாய் முகத்திலே அக்கினிகுடியாயிருக்கும், கண்களோ நெருப்புப்பொறிபறக்கும், மூக்கினிலே கோபமானது குதிகொள்ள, மீசைகளோ எந்நேரமும் படபடவென்று துடிக்க, பற்களோயாமற் நறநறவென்றுகடிக்க, கைகளோ எந்நேரமும் காட்டைதுழாவிக்கொண்டிருக்கும், கால்களோ எதுவேளையும் நடந்துகொண்டிருக்கும், அவர்கள் குணமோ பசித்தபோது தாய்தந்தை

யானுலும்பாராமற்கொன்றுவாயிற்போட்டுக்கொள்வார்கள். அவர்கள் கைகுத்துக்கோ இந்திரபர்வதம் எமபர்வதமானுலும் தும்புதூளாய் விபூதிபடலமாய்ப் போய்விடும் அவர்களுடையபலமோ ஆயிரத்தைந்நூறு சிங்கபலம்படைத்தவர்கள், அப்பேர்ப்பட்ட ராட்சதாள் நூற்றுக்கொன்ருய் பொறுக்கி இருபத்துநாலுவெள்ளம் ராட்சதாள் கத்தி கேடயம் இருப்புலக்கை வளைதடி சக்கரம் குந்தம் வேல் கதை இப்படி சொல்லப்பட்ட ஆயுதங்களெடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

இதல்லாமல் சூரசேனனும் உக்கிரசேனனும் சபாமண்டபத்தைவிட்டுப்புறப்படவே நாலாயிரம், அக்ரோணி யானைகளும் எண்ணுயிரம் அக்ரோணிரதங்களும், பதிஞயிரம் அக்ரோணி குதிரைகளும், மூப்பத்திராயிரம் அக்ரோணி காலாள்களும்புறப்பட்டது அதுகண்டு குகனும் மட்சயந்தனுமானும் இரதமேறிப் புறப்பட்டார்கள் அப்போது அஸ்வமேதக்குதிரையானது தன்னிச்சையாய் வடக்குமுகம்நோக்கி போகிறபோது குதிரைபுட்டைகள் போடுமிடத்தில் ஓமசாந்தி பண்ணிவைத்து தான தருமங்கள்செய்து பின்னுங் குதிரையின் பின் சென்று அது நடக்கும்வழியே தாங்களும் நடந்து அது படுக்குமிடத்தில் தண்டுவிட்டிறங்கி அவ்விடங்களிற் கோவிற் கட்டியும் குளங்கள் வெட்டியும் பிரதட்சணமாய் சத்துருக்கமகாராசர் குதிரையின்பின்னேவர அப்போது குதிரையானது அயோத்தியைவிட்டு, காடு செடி மலை குன்று ஆறு கழி குளம் கிராமம் நாடு சீமை இவைகளைக்கடந்து நடக்கிறபோது அதைக்கண்ட ராசாக்களெல்லாங் குதிரைக்கு கைகூப்பி தெண்டனிட்டுப்போக இந்தப்படியாய் மதஞபுரிபட்டணத்தின் சமீபம்போய் ஒருமரத்தின்கீழ் பச்சென்றிருக்கிற புல்லைக்கண்டு குதிரையானது மேய்ந்துக்கொண்டிருந்தது.

வீரசேனமகாராசன் குதிரையைப்பிடித்தல்.

விருத்தம்.

சீதரன்விடுத்த சுவேதவாம்புரவி செறியுருண் வனமெலாங்கடந்து
பூதலமதிக்கு மட்சயந்தன் புத்திரன் வீரசேனன்கோ
லேதனிஞ்செலுத்தி மதஞபுரியென்னும் நகரத்தைச்சார்ந்து
போதவர்வாவிக் கறைமருங்குற்றே புற்கனே மேய்ந்திருந்தனவே.

அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட மட்சயந்தமகாராசாவின்குமாரன் வீரசேனனென்பவன் அரிபக்தன் சத்தியவாச

கன் மகாவீரபராக்கிரமன் அவன்கைவில்லுக்கு அரியரப்பிரமா திகளும் நிகரல்ல, மகா வரப்பிரசாதி அவன் வித்தை புத்தி ஸ்ரீமந்நாராயணரேயறியவேணும் அவன்கையிற் குதிரைபிடி பட்டதேயானால் திரிமூர்த்திகளாலும் விடுவிக்கக்கூடாதென் று தேவர்கள் பேசிக்கொண்டு சத்துருக்கனுடைய யுத்தம்பார் ப்போமென்று அந்தரத்தில் வந்துநின்றார்கள். அப்படியி ருக்க வீரசேனமகாராசன் ஸ்ரீலோலகாமாந்தகாரனாக கன்னி யாஸ்திரீகளுடனே கோட்டையைவிட்டு நந்தவனம் புகுந்து ஜலக்கிரீடைசெய்து வருகிறபோது அஸ்வமேதக்குதிரையை க்கண்டு சந்தோஷமாய் அருகில்வந்து நெற்றியிற் கட்டியிரு க்கப்பட்ட விருதாவளியை வாசித்துப்பார்த்து, அதிலெழுதி யிருக்கிறதென்னவென்றால், சூரிய வம்சத்து ராசாவாக சூரி யனைப்போற் றுலங்காநின்ற பிரதாப சவுரியமுள்ளவர் ஆயிர த்தெட்டண்டமும் இருநூற்றிருபத்திநாலுபுவனமும் சத்தசா கரமும்ஈரேழுபதினாலுலகத்தையும் ஏகசக்கிராதிபதியாய்ஆள ப்பட்ட ராவணேஸ்வரனைஜெயித்த தசரத குமாரனான ராமப த்திரசுவாமிவிட்ட குதிரையின்பின்னே வருகிற தன் மேட்டா ணமேட்டியான சத்துருபயங்கர தனுர்வேத சாஸ்திர ரணரங் கசூரன் சத்துருக்கன் வருகின்றான். அந்தச்சத்துருக்கனை செ யிக்கத்தக்க சாமார்த்தியமுள்ளபேரிருந்தால் இந்தக்குதிரை யைப்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து வெற்றிபெறலாம் அப்ப டிசெய்ய சாமார்த்தியமில்லாதவர்கள் குதிரைக்குத்தெண்டனி ட்டு காணிக்கைகப்பங் கொண்டுவந்து சத்துருக்கனை வணங்கி பிழைக்கலாமென் றெழுதியிருந்தது.

அதை வீரசேனமகாராசன் பார்த்து குஞ்சிரிப்புகொண்டு தலையையசைத்துச் சொல்லுகிறான். ஐயா ஸ்ரீராமன் புத்தியி ல்லாமற்கர்வித்தானே கையாலாகாத சிலராட்சதரைக் கொன் றேமென்று தன்பெருமையைத்தானே புகழ்ந்து சுத்தவீராதி வீர ரணரங்கசூரனுமான சத்துருக்கன் வருகிறாரென்று எழுதி விட்டான், நம்மையெல்லாம் பெண்டுகளாக்கினான், அவனே மீசையுள்ளவன், ஸ்திரீசுகங்கண்டவன் அவனுடைய சவுரி யத்திராணியைப்பார்ப்போமென்று பற்களை நறநறவென்று கடித்து சேவகரையழைத்து குதிரையைப்பிடித்து தன்பட்ட ணங் கொண்டுபோகச்சொல்லி அங்கிருந்தபடி தன்சேனைக ளுக்கெல்லாந் தளகர்த்தனான சுவேதனையழைத்து ரதகஜ துரகபதாதிகளை[தயார்பண்ணென் றுத்திரவுசெய்ய வந்தப்படி

யே சுவேதனனுந் தண்டைவெளிப்படுத்தினன். கன்னமதம் கபோலமதம் கரடமதமென்னும் மும்மதங்களும் பொழியப் பட்ட ஐராவதத்திற்குச் சமமான யானைகள்பேரிலே ராசாக்க ளேறிக்கொண்டு கையில்வில்பிடித்து மாவுத்தனை யெச்சரித்து ஐம்பதக்ரோணி யானைகள் நடத்தினர்கள் அதன்பின்னே மே கமண்டலத்தை யளாவிக்கொண்டிருக்கிற ரதங்கள்மீது சுத்த வீரரான ராசாக்கள் இருநூறு அக்ரோணி சேனைகள் அஸ் திராயுதங்களை மிதமில்லாம லேற்றிக்கொண்டு சாரதியை யெச் சரித்து ரதத்தைத் தூண்டினர்கள் அதன்பின் கால்பலமா னது நானூறு அக்ரோணிசேனைகள் ஆயுத அஸ்திரங்களெ டுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். தளகர்த்தரான இருபத் தைந்து ராசமன்னரும் புறப்பட்டார்கள் இதுசங்கதியை மட் சயந்தமகாராசனுங் கேள்விப்பட்டு அதிக கோபமுண்டாகி யாளிக்கொடி பறக்கும்படி ரதமேறிப்புறப்பட்டான், அவன் புறப்படவே பன்னீராயிரம் மந்திரிகளும் ரதமேரி பிரயாண மானர்கள். ஒருபந்தியாய் போசனஞ்செய்யப்பட்ட பதினுயி ரம் இராசமன்னருந் துணையாகவந்தார்கள். அந்தச் சமயத் தில் முப்பத்திரண்டு மேளவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கவும் கோட்டைக்கு வெளியிலே நல்ல வெட்டாரவெளி யைப்பார்த்து சேனைகளை அணியணியாக நிறுத்தி ரணபேரி கைகொண்டடித்தார்கள், அந்தரணபேரிகையின் முழக்கமா னது எப்படியிருந்ததென்றல் ரணம் பிணம் கணம் மணம் அணம் களம் சினம்என் றடிப்பட்டது அதுகேட்டு சகலருந் திடுக்கிட்டார்கள் அந்தசத்தம் வீரசேனமகாராசன் கேட்டு மனஞ் சஞ்சலப்படாமல் ஒருக்ஷணத்தில் இரணவரிசை பூண் டு வில்லைக் கையிலெடுத்து ரதமேறி தண்டுக்கு முன்னகவந்து வில்லைக் குணத்தொனி பண்ணிநின்றன்.

வீரசேனமகாராஜன் நீலாட்சதனை வெட்டுதல்.

அப்போது குதிரையின்பின்போன ராட்சதாள் குதிரை பிடிபட்டுப்போன சமாச்சாரத்தை நீலாட்சதனுக்குச் சொல்ல அதுகேட்டு நீலாட்சதன் கோபநிக்குரோதனகி அதிவேக மாய் இரதத்தைநடத்தி வீரசேனனைப்பார்த்து ஓய் இரா சனே கேளும் ஸ்ரீராமமூர்த்திவிட்ட அஸ்வமேதக் குதிரை யை ஏன்பிடித்தாய், என்னுடைய பாணத்துக்கு இரையாகா

மல் காணிக்கை கப்பங்கொண்டுவந்து சத்துருக்கமகாராசனை வணங்கினாலாயிற்று இல்லாவிட்டால் ஒரேபாணத்தினாலே உன்னையும் உன்சேனைகளையுங்கொன்று பட்டணத்தை கொள்ளையிடுவிப்பேன் அப்படி வரவொட்டாமல் நடந்து கொள்ளென்றான் நீலாட்சதன் அதைக்கேட்டவுடனே வீரசேன மகாராசனுக்கு கண்களிரண்டும் நெருப்புப்பொறிபரக்க, காதுகளிரண்டிலும் புகைகளெழும்ப, மீசைகள் துடிக்க, பற்கள் நெறநெறவென்று கடித்துச் சொல்லுகிறான் அடா ராட்சதப் பட்டிமகனே அச்சம்பயமில்லாமல் என்னவசனஞ்சொன்னாய் சத்துருக்கனுக்கு வணங்காவிட்டால் என்னையும் என்சேனைகளையும் ஒரேபாணத்தினாற்கொன்று என்பட்டணத்தையுங் கொள்ளையிட நீ வல்லவனோ இதோ உன்னை என்னுடைய வாளாயுதத்தினால் ஒரேவீசாய் வெட்டியெறிந்து போடுகிறேன் பாரென்று வாளாயுதத்தையுருவி சிவ்வென்றுபாய்ந்து நீலாட்சதன் சிரசை யறவெட்டித்தள்ளினான் அப்போது நீலாட்சதன் எமலோகம்போய்ச் சேர்ந்தான்.

முதல்நாள் யுத்தம்.

அதுகண்டு பதினாயிரம் இராட்சதர்கள் வீரசேனமகாராசனைவளைத்துக்கொண்டு யுத்தம்பண்ணினார்கள் அப்படி வந்து யுத்தம்பண்ணின ராட்சதர்களையெல்லாம் ஒவ்வொருவருக்கு நான்குபாணம்விட்டு எமலோகமனுப்பிவிட்டான். அதிலொரு இராட்சதன் தப்பித்துக்கொண்டு ஓட்டமாகஓடி வெகுதூரம் வருகின்ற தண்டுக்கு அதிபதியான காலசித்தனைக்கண்டு நமஸ்கரித்துச்சொல்லுகிறான். ஐயா காலசித்தனே கேளும் மதனாபுரிபட்டணத்தையாளப்பட்ட மட்சயந்தமகாராசன் குமாரன் வீரசேனமகாராசன் நம்முடைய குதிரையைப்பிடித்துக்கட்டி சேனாதிபதியான நீலாட்சதனையும் பதினாயிரம் இராட்சதாளையுங்கொன்றுவிட்டான் நான்மாத்திரம் தப்பிப்பிழைத்தோடிவந்தேனென்றான். அதுகேட்டு காலசித்தனானவன் சத்துருக்கமகாராசாவினிடம் வந்து ராட்சதன் சொன்னவசனமெல்லாஞ் சொல்லக்கேட்டு சத்துருக்கமகாராசனானவன் வெகுகோபதீப்தனாகி கண்கள்சிவந்து பல்லைநறநறவென்று கடித்து உக்கிரமாக ரதத்தை நடத்தவே யானை தேர் பரி சேனைகளும் அதிவேகமாய் நடந்துவருகிறபோது பூமியானது கிடுகிடென்றதிர ஆதிசேஷனும் நடுங்க அஷ்டகுலபர்வதங்

களும்கலங்க அஷ்டதிக்குமதிர ஆர்ப்பரித்து மதனுபுரிபட்டணத்து மத்தியில் வெட்டாரவெளியிற் பாளையம் வந்திறங்கியது. அப்போது சூரசேனனென்பவன் சேனைகளை யூகங்கட்டினன் எப்படியென்றால் இராட்சதாளுடைய யானை தேர் பரி சேனைகளை உள்வட்டமாக நிறுத்தி ராட்சதர்களையும் அதற்கருகில் வட்டமாக நிறுத்தி ராட்சதப் படைத்தலைவர்களையும் சேனாதிபதிகளையும் எட்டுதிக்கு பதினாறுகோணமாய் பிரித்து வைத்து சத்துருக்கமகாராசனை உள்ளணியிலேவைத்து உக்கிரசேனனையும் மட்சயந்த அனுமானையும் நடுவணியிலே வைத்து தான் முன்னணியில் நின்று சலவசந்தனையும் முன்னணியில் நிறுத்தினன் அப்போது ரணபேரிகை யறைந்தார்கள். அதெப்படியிருந்ததென்றால் ஜெயஜெயவென் றடிபட்டது அந்த ஓசையைக்கேட்டு சேனைகளியாவருஞ் சந்தோஷமானார்கள்.

சூரசேனனுக்கும் வீரசேனனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

அந்தவண்ண னருட்சூரசேனனும்
வெந்தழற்கணை யேந்திவிரைவினில்
விந்தைசேர்வீர சேனனைமேவிய
முந்துபோரின் முலைகொண்டுநின்றனன்.

அப்போது சூரசேனனென்பவன் இரதத்தைநடத்தி வீரசேனன் முன்னுக்குக்கொண்டுபோய் வீரசேனனைப்பார்த்து ஒரு வசனஞ்சொல்லுகிறான், அடாவீரசேனா! நீயோ எங்கள் முன் நிற்கிறவன் வீண்சண்டை பண்ணவேண்டாம் குதிரையைக் கொண்டுவந்துவிட்டு சத்துருக்கராசனை வணங்கிப் பிழைக்கிறதேநலமென்றான். அதுகேட்டு வீரசேனன் அதிககோபமாகி சூரசேனனைப்பார்த்துச் சொல்லுகிறான், அடா சூரசேனா! போருக்கென்று நேராகவந்தால் வீரமுடையயாவருக்கும் அதிகவீரசூர கெம்பீரர் உங்களுக்குமிஞ்சின சுத்தவீரர் இந்த எண்புவியிலுங்கிடையாதோ இதோ ஒருக்ஷணநேரத்தில் உங்களுடைய நாமங்களை வெளிப்படுத்திவைக்கிறேன் நில்லுநில்லுமென்று வில்லைக் குணத்தொனிசெய்து பாணங்களைப் பிரயோகம்பண்ணி வருகிறபோது சூரசேனனென்பவன் களையாமல் இளையாமல் ரோஷத்துவேஷனாய் வில்லை நாணிபிகிந்து சில அஸ்திரங்களைப்பிரயோகிந்து வீரசேனன்விட்ட பாணங்

களையெல்லாம் நடுவதுபாதியில் அறுத்தெரிந்து பத்துபாண ம்பட்டு வீரசேனனுடைய மார்பிலணிந்த கவசத்தையும் பொ டியாக்கிவிட்டான் அந்தவில் குணத்தொனி சத்தங்கேட்டு இருதிறசேனைகளுங் கலந்து யுத்தம்பண்ணினார்கள் அது கண்டு வீரசேனனுக்கு கடுங்கோபமுண்டாகி தன்னுடைய தேரை அதிவேகமாகக் கொண்டுவந்து முன்பாகநிறுத்தி அடா சூரசேனா ஏன் தலைகீழாய் விழுகிறாய் பொறுபொறு பத றுதேயென்றும் நீயென்முன்னே நின்று போராட மாட்டுவா யோவென்று கெர்ச்சித்து தன்னுடைய வில்லிலே அதிகதீட் சண்ணியமான பாணங்களை எடுத்து சந்தித்து பிரயோகம்பண் ணினான் அந்த பாணங்களினால் சூரசேனன் அடிபட்டு மிக வும் நொந்து ஆயாசமுற்று தன்னுடைய வில்லிலே அதிக தீட்சண்ணியமாகயிருக்கப்பட்ட பாணத்தை தொடுத்துவிட் டான் அக்குரூரபாணங்கள் வீரசேனன்மார்பை பத்தலாய்ப் பிளந்துவிட்டது அதற்கவன் கடுஞ்சினங்கொண்டு வில்லை முகத்திற்குநேராகப்பிடித்து அதிக தீட்சண்ணியமா யிருக்கப் பட்டபாணத்தை தொடுத்துவிட்டான், அந்தபாணங்களும் வில்லில் நின்றும் விடுபட்டு குபீலென்று நெருப்புப்பொறிகளை வாரியிறைத்துக்கொண்டு எரிபுகைகளுடன் சடசடவென்ற தொனிகளுடன் அதிவேகமாய்வந்துசூரசேனனுடையவில்லை இரண்டுதுண்டாக ஒடித்து அவன்மார்பிலிருந்த கவசங்களை யும்பொடியாக்கி ரதசாரதிகளுடனே அதம்பண்ணிவிட்டது அதுகண்டு சூரசேனன் உக்கிராகாரத்துடனே வேறொருதேரி லேறி வில்லைவளைத்து நாணேறிட்டு மிகவும் கூர்மையாயிருக் கப்பட்ட பாணங்களை வில்லில் சந்தித்துவிட்டான் அந்தபா ணங்கள் வில்லிலிருந்துவிடுபட்டு வீரசேனன் தேரை சுக்கல் சுக்கலாய்பேர்த்தெரிந்து சாரதிகுதிரைகளையுங்கொன்று கையி ற்பிடித்திருந்தவில்நாணியை திடீலென்று அறுத்துப்போயிற் று அதுகண்டுவீரசேனன் மறுதேரேறி வில்லைவளைத்து அக் கினியாஸ்திரத்தைவிடுக்க அதுவில்லிலிருந்து விடுபட்டு வட வாமுகாக்கினிபோல தகத்தகாயமாய் எறிந்துகொண்டு வேகத் துடன்வருகிறதை சூரசேனன்கண்டு ஒருவருணாஸ்திரத்தை ச ந்தித்துவிட்டான் அந்த வருணாஸ்திரமானது வில்லைவிட்டு வெளிபட்டு சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி இடிமின்னல் கு முறலுடனே வருஷித்தாலெவ்வாறோ அவ்வாறு அக்கினியா ஸ்திரத்தின்பேரிற் பொழிந்து வேகத்தை யடக்கிவிட்டது.

அதுகண்டு வீரசேனன் பர்வதாஸ்திரத்தை எடுத்து வில்லிற் சந்தித்து மந்திராபூதியுடன் அபிமந்திரித்துப்பிரயோகம்பண்ணினான். அந்த பர்வதாஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டு அனேகபர்வதங்களுண்டாகி வருகிறதை சூரசேனன் கண்டு முன்னம் தனக்கு தேவேந்திரன் கொடுத்த வச்சிராயுதத்தை எடுத்து விட்டுவிட்டான். அந்த வச்சிராயுதமானது புறப்பட்டு அதிவேகமாய்வந்து மலைகளையெல்லா மறுத்துத்தள்ளிவிட்டுப் பழையபடி தேவேந்திரனிடம் போய்ச்சேர்ந்தது அதுகண்டு வீரசேனன் மிகவும் உக்கிராகாரனாகி சிவசுப்பிரமணியர்கையில் வரம்பெற்ற வேலையெடுத்து அபிமந்திரித்து விட்டுவிட்டான் அவ்வேலானது அண்டபகிரண்டங்களும் நடுங்க கெர்ச்சித்துக்கொண்டு வருகிறபோது தேவர்கள்கண்டு திகிற்கொண்டு ஓடிப்போனார்கள் அப்படி திகுதிகுவென் றெரிந்துக்கொண்டு தன்பேரில்வருகிற வேலின்பேரில் சூரசேனனனவன் அனேக திவ்வியாஸ்திரங்களை ஒன்றின்மேலொன்றாக வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தினான். அவைகளையெல்லாம் வேலானது அறுத்துத்தள்ளி சூரசேனனுடைய மார்பில்வந்துதாக்கி முதுகிலுருகிப்போய்விட்டது. அப்போது சூரசேனனனவன் அடியற்ற வாழைமரம்போல தேரின் பேரிற் சாய்ந்தான்.

வீரசேனனுக்கும் சூரசேனனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வீரசேனன் விடுத்தவைவேலினாற்
சூரசேனன் துடித்துபல்சோர்ந்தவன்
கோரவாளிகொண் டெங்கனும்பெய்யவன்
வாரங்கண்டுக்கிர சேனன்நடந்தனன்.

அதுகண்டு வீரசேனன் சந்தோஷமாய்த் தேரை நடத்திச் சேனைகள்பேரிற் பாணங்களைவிட்டுக்கொல்லுகிறபோது உக்கிரசேனனனவன் இரதத்தை வீரசேனன் முன்பாகக் கொண்டுவந்துநிறுத்தி வில்லைவளைத்துப் பாணங்களை அமோகமாய்ப் பெய்யக்கண்டு வீரசேனமகாராசன் காலாக்கினிக்குச் சமதையான மூன்று திவ்வியாஸ்திரங்களைச்சந்தித்துப் பிரயோகம் பண்ணினான் அந்த மூன்றுதிவ்வியாஸ்திரமும்வருவதை உக்கிரசேனன்கண்டு காலாக்கினிருத்திரனைப்போற் பாய்ந்து ஒன்பது நாராசபாணத்தைப்பிரயோகித்தான். அப்போது சேனை

களானது எப்படி விழுந்ததென்றால் கால்வேறு தலைவேறு கைவேறு மூண்டம்வேறு துண்டம்வேறு இப்படியாக விழுவதைக்கண்ட சலவசந்தன் தேரைச் சேனைகளின்பேரிற் றூரத்திபாணங்களைவிட்டுச் சின்னாபின்னமாய்க் கொல்லுகிறபோது சேனைகளானது சலவசந்தனைக்கண்டு மூன்னின்று யுத்தம்பண்ணமாட்டாமல் பார்க்கபயங்கரமாய்த் தட்டுக்கெட்டுத் தடுமாறிச் சேனைகள் ஓடத்தலைப்பட்டது அப்போது சேனாபதியான சுவேதன் ஓடுகிறசேனைகளையெல்லாம் நிறுத்தி சலவசந்தனைவளைத்துக்கொண்டு பாணங்களைபூட்டி யெய்கிறபோது சலவசந்தனானவன் பத்துபாணம்விட்டு சுவேதன்விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துத்தள்ளி சுவேதனையும் சல்லடைக்கண்களாகத் துளைத்தூவிட்டான், அத்தருணத்தில் மட்சயந்தமகாராசன் நாம் இனி சும்மாயிருக்கப் போகாதென்றுசேனைகளின்பேரில் தென்பாரிசமாய் இரதத்தை நடத்தினார், இரதத்தை நடத்தவே யிருபத்தைந்துலட்சம் படைத்தலைவரும் சேனாதிபதிகளும் சேனைகளுக்குக் கீழ்பாரிசமாகத் தேரை நடத்தினார்கள் அவர்கள் புறப்படவே பதினாயிரம் மந்திரிகளும் மேற்பாரிசமாய் இரதத்தைநடத்திச் சக்கிரயூகமா யிருக்கப்பட்ட சேனைகள்பேரிலே நாலுமூலை எட்டுதிக்கு பதினாறுகோணமாய்வளைத்து இருதிரவர்படைகளும் இராசாக்களு மூனைந்து யுத்தம்பண்ணிக்கொண்டிருக்கையில் வீரசேனனானவன்மிஞ்சி உக்கிரசேனனுடைய கைவில்லைக் கண்டித்தான் அதைப்பார்த்து உக்கிரசேனன் ஒருதண்டாயுதத்தை யெடுத்து கிறுகிறென்றுசுழட்டி இரதத்தைப்பார்த்து ஒரு தெப்பலான துவிட்டான் அந்தத்தெப்பம் இரதத்தின்பேரிற்படவே ரதமானது அச்சுவேறு ஆணிவேறு கும்பகலசம்வேறு குத்துக்கால்வேறு கொடுங்கைவேறு சட்டம்வேறு பலகைவேறு குதிரைவேறு சாரதிவேறாகத் தூள் தூளாய்ப் போய்விட்டதுகள்.

அதனைப்பார்த்து வீரசேனன் லகுவாய்குதித்துத் தானும் ஒருதண்டாயுதமெடுத்து முன்கந்து பின்கந்து முப்பத்திரண்டு கந்தும் பாய்ந்து உக்கிரசேனனுடைய தெண்டாயுதத்தைப் பார்த்து ஒருஅடிவிட்டான். அதையவன்தட்டிவிட்டு இடசாரிவலசாரியாக கந்துபாய்ந்து வீரசேனனுடைய சிரசைப்பார்த்து அடித்தான். அதையவன் தட்டிவிட்டு தண்டாயுதத்தைச்சுழட்டி உக்கிரசேனன் உடம்பிற்றூக்கினான் அதற்கவன் மிகவும்நொந்து ஆயாசப்பட்டு தெண்டாயுதத்தைச் சுழட்டி

வீரசேனனுடைய புஜத்தைப்பார்த்து ஓாடியானது அடித்தான். அந்த அடியானது வானங்குமுறி நுனிவானங் கறுத்துபேரிடிவிழுந்தால் எவ்வண்ணமாக விருக்குமோ அவ்வண்ணமாக வீரசேனன் புஜத்தின்பேரில் விழுந்தது, அப்படிதெண்டாயுதத்தினுற் கண்டித்த உக்கிரசேனனைப் பார்த்து வீரசேனன் பல்லைநறநறவென்றுகடித்து கடுங்கோபமுண்டாகி தெண்டாயுதத்தைச்சுழட்டி மூச்சுவிடாமல் மகாராசன்பேரிற் சாடுகிறபோது உக்கிரசேனனுனவன் வீரசேன மகாராசனுக்குப்பின்வாங்காமல் தன்னுடைய தெண்டாயுதத்தினுல் தட்டிவிட்டு வீரசேனமகாராசன் மார்பைப்பார்த்து சிவ்வென்று ஆகாயமார்க்கமாகக் கிளம்பிவந்து மார்பிலே ஒரு உதை விட்டான் அவ்வுதையை சட்டைபண்ணுமல் உக்கிரசேன மகாராசனைச் சேர்த்துக் கட்டிப்பிடித்து மார்போடு சாத்திக்கொண்டு தன்னுடைய பலத்தையெல்லாம் முன்கையிலே வைத்து தெண்டாயுதத்தினுலே மார்பிற்குக்கினுன். அதனுல் அவன் மார்புபிளந்து உதிரவெள்ளம்பெருகிச் சீவனைவிட்டான் அப்போது வீரசேனன் அவன்விட்டு எழுந்து வேறொருரதத்திலேறி வெற்றிகையெடுத்துப் பம்பம்பென்று ஊதினுன். அதுகண்டு அவனுடைய சேனைகளெல்லாஞ் சந்தோஷமானுர்கள் தண்டுகள் மிகவும் விசனமடைந்தார்கள் சூரியனும் மேற்றிசையில் மறைந்தான்.

இரண்டாம்நாள் வீரசேனனுக்கும் சலவசந்தனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

சிங்கநேர்வீர சேனனுமுக்ர சேனனைமுருகுத்துப் பாசறைபட்
டங்கியேவன்று போதைப்போக்கி தடவரைபொன் னிரதமேறி
துங்கமாங்கணைகள் மாரிபோற்சொறியத் துரகதர்யாவரும் வெருண்டு
மங்குவினேர்கள் சலவனைக்கூவ வந்தமர் செய்கின்றுன்.

மறுநாள் வீரசேனனுனவன் சத்துருக்கமகாராசருடைய தண்டுக்குள்ளே இரதத்தைநடத்தினுன். அக்காலையில் சலவசந்தன் மகா உக்கிராகாரனுய் அநேகபாணங்களைவிட்டு சுவேதனதுசரீரத்தைச் சல்லடைக்கண்களாக துளைத்து ஒருநாராசம்விட்டு சேனதிபதியான சுவேதனனுடைய சிரசையறுத்துத் தள்ளிப்போட்டு சேனைகள்பேரிற் கவிந்து இரதத்தைச் சக்கிராகாரமாய்த்திருப்பி பாணங்களை மிதமில்லாமல் விட்டு கொல்லுகிறபோது கால்பலமான சேனைகள் சின்னுபின்ன

மாக ஓடியொளிக்கத் தலைப்படவே சலவசந்த மகாராஜன் இர தத்தை நடத்தி வீரசேனமகாராசனைச் சக்கிராயுதத்தினுள்ளே யோகவொட்டாமல் வளைத்துக்கொண்டு சரங்களை ஓய்வில்லா மலும் விட்டு வீரசேனனை அப்புறமிப்புறம் அசையவொட் டாமலும் வில்லையெடுத்துப் பாணங்களைப் பூட்டவொட்டாம லும் சாரதி இரதத்தை நடத்தவொட்டாமலும் பாணங்க ளால் அடிக்கிறபோது வீரசேனமகாராசன் மிகவும் நொந்து மெத்தவும் ஆயாசப்பட்டு சற்றுநேரம் இரதத்திற் சாய்ந்து ஆயாசந்தெளிந்து வில்லையெடுத்து நிறுத்திப் புங்கானுபுங்க மாய்ச் சரமாரிபொழிவதுபோல் பாணசரங்களாலே சலவசந் தன் பாணத்தையறுத்து அவனுடைய ரதத்தை முன்னுக்கு வரவொட்டாமலும் செய்தான். அப்போது சலவசந்தமகா ராசன் இடியைப்போன்ற பத்துபாணங்களைப் பூட்டிவிட் டான். அப்பாணமானது புறப்பட்டு வீரசேன மகாராசன் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்துப்போட்டு வீர சேனனுடைய ரதம் சாரதி குதிரைகளுடன் பொடிப்பொடி யாய் தும்சம்செய்துவிட்டான்! அதனாலே வீரசேனன் லகு விலே குதித்து மறுதேறிலேறினன். அந்த தேரையும் சலவ சந்தமகாராசன் மூன்றுபாணம்விட்டு உடைத்தெறிந்து போ ட்டான். இப்படி அறுபதுரதம் சலவசந்தமகாராசனாலே உ டைந்துபோய்விட்டது. அதுகண்டு வீரசேனன் ஏதடா இ ராட்சதன் பொல்லாதவனாயிருக்கிறான் இவனை நேரிலே யுத்த ம்பண்ணி செயிக்கவேண்டுமென்று மறுதேரிலேறி வில்லை யெடுத்து நிறுத்திக் குணத்தொனிபண்ணி யுகாந்தகாலத்தில் சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி இடிமின்னல் குமுறலுட னே மழைபொழிந்தா லெப்படியோ அப்படி சரவருஷங்க ளை ஓய்வில்லாமற் பொழிகிறபோது சலவசந்தமகாராசன் நூ று திவ்யாஸ்திரங்கள்விட்டு வீரசேனன் விடப்பட்ட அஸ்தி ரங்களை யெல்லாம் கண்டித்து அவனுடையமார்பில் கவசத் தையும் பொடியாக்கி வில்லினுடைய நாணியையறுத்து வீர சேனனை நோகச்செய்தான். அதுகண்டு வீரசேனன் ஒரு அக் கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகம்பண்ணினன் அது வில்லில்விடுபட்டு சடசடென்கிறதொனியுடனே நெருப்புகளை வாரியிறைத்துக்கொண்டு தகத்தகாயமாய் காடுசெடிகளெல்லா ம்பத்தியெரிய வடவாமுகாக்கினியைப்போலும் வருகிறபோ து சலவசந்தனனவன் ஒருவருணாஸ்திரத்தை யெடுத்து அபி

மந்திரித்துப் பிரயோகம் பண்ணிவிட்டான். அந்தபாணமும் வில்லிலிருந்து விடுபட்டுவருகிறபோது சப்தமேகங்களும்ஒன் ருய்க்கூடி சமுத்திரத்து நீரையெல்லாம் வாரிக் கொட்டினது போல் அக்கினியாஸ்திரத்தின்பேரில் விழுந்து யானை துதிக் கைபோற் பொழியும்போது அக்கினியாஸ்திரமும் பலனுங்கு ன்றி அடிபட்டுவிழுந்துபோயின. அதுகண்டு வீரசேனன் உக்கிராகாரனுகிப் பிர்மாஸ்திரத்தை யெடுத்து ஆகுதி மந்தி ரங்களுடன் பூசைசெய்து விட்டுவிட்டான்.

அந்தப் பிரமாஸ்திரமும் வில்லில்விடுபட்டு காலக்கோட் டிவிஷமபோலும் நெருப்புகளை வாரி யிறைத்துக்கொண்டு அதிவேகத்துடன் வருகிறபோது சலவசந்த மகாராசனுன வன் தானும் ஒரு பிர்மாஸ்திரத்தையெடுத்து வில்லிற்ருெடுத் து மந்திராபூதி கொடுத்து ஆவாகனத்துடனே விட்டுவிட் டான். அந்தப்பிர்மாஸ்திரமும் வில்லில் விடுபட்டு ஒன்ருே டொன்று ஊடுதாக்கி யுத்தம்பண்ணி இரண்டு பிரமாஸ்திர மும் மல்லுகட்டி அடித்தும் உதைத்தும் குத்தியும் வெட்டி யும் கட்டியும் எரித்தும் இப்படியாக வெகுநேரம் போராடி கடைசியிலே இரண்டு அஸ்திரமு முறிந்து பூமியிலே விழுந் துவிட்டதுகள். அதுகண்டு வீரசேன மகாராசன் முன்னு லே ஸ்ரீமந்நாராயணனிடத்திலே தவசுசெய்து வரம்பெற்ற நாராயணுஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து வில்லிற்சந் தித்துப் பிரயோகம் பண்ணிவிட்டான் அந்த அஸ்திரம் ஆயி ரத்தெட்டண்டமும் நடுங்க நெருப்புகளை வாரி யிறைத்துக் கொண்டு ஆகாயம் பூமியும் ஒன்ருய் ஆவென்று வாயைத்திற ந்துக்கொண்டு வருகிறபோது சலவசந்தன்கண்டு தன்னு டைய நாராயணுஸ்திரத்தை யெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம்பண்ணினன் அதுவும் வடவா முகாக்கினியைப் போல் நெருப்புகளைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டுவந்து ஒன்றுக்கொன்று யுத்தம்பண்ணி சலவசந்தன்விட்ட நாராய ணுஸ்திரத்தை கபளீகரம் பண்ணிப்போட்டு சலவசந்தனையும் அவன்ரதஞ் சாரதிகளுடனேயும் பஸ்மீகரமா யெறித்துப் போட்டது. அப்போது யுத்தம்பண்ணிக்கொண்டிருந்த இரு திறவர்படையும் நாராயணுஸ்திரத்தைக்கண்டு ஆயுத அஸ் திரங்களைகையிலெடாமலும் சிரசின்பேரிற்கைகுவித்து ஸ்ரீமந் நாராயணு நமோவென்று தோத்திரம் பண்ணுகையில் அந் தநாராயணுஸ்திரமானது சகலரையும் பார்த்துக்கொண்டு

வந்து சத்துருக்கமகாராசனுக்கு வலம்புரி இடம்புரியாக நமஸ்காரஞ்செய்து அம்புருப்பொதியில் சேர்ந்தது.

மகாமாயன் யுத்தம்.

விருத்தம்.

பட்டயம்பரிசுகத்தி பரிவாயுசிலைகள்பாணம்
திட்டனவெடுத்துக்கொண்டு சீருடன்கவசம்பூண்டு
மட்டறச்சென்றவீர சேனனைக்கொல்வேனென்று
கிட்டியேமாயன்வந்து திரிகணைதொடுத்தானென்றே.

அதுகண்டு மகாமாயன் சிந்தாக்கிரந்தனுய் இரதத்தை வேகமாக நடத்தி வீரசேனனைப்பார்த்து வில்லை யெடுத்து நிறுத்திப் புங்கானுபுங்கமாய் அஸ்திரங்களைவிட்டு வீரசேனனுடைய ரதத்தை முன்னுக்குவரவொட்டாமல் பாணங்களாலேஜாடுகிறபோது வீரசேனன்கண்டு ஏதடா அந்த ராட்சதனிலும் இவனைப்பார்த்தால் மகா பலவானைப்போல் காண்கின்றது இவன்ரூபத்தைப் பார்க்கச்சேதானே பயங்கரமாயிருக்கின்றது. இவன்வில்லோ மகமேருபர்வதம்போலு மிருக்கின்றது இவன்கோபத்திற்கு ஹரிஹரப்பிரமாதிகளும் நின்று நிர்வாகம்பண்ணமாட்டார்கள்போற்ருேன்றுகிறது, இவனை நம்முடையபாணங்களினுலே கொல்லக்கூடாமையாகத் தோற்றுகின்றது ஆகையால் இவனுக்குத் தக்க தேவதாஸ்திரங்களை விட்டறுத்துக் கொல்லவேண்டுமென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு வில்லைவளைத்து தனக்குமுன்னுலே தேவேந்திராதி தேவர்கள் கொடுத்த திவ்வியாஸ்திரங்களை யெடுத்து வில்லிற்சந்தித்து மகாமாயன்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாமறுக்கத் தலைப்பட்டது. அதுகண்டு மகாமாயன் மகாகோபத்துடனே நூறு நாராசபாணத்தையெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டான். விடவே அது நாகசற்பம்போல் ஒன்றின் மேலொன்ருய் சீறிக்கொண்டுவருகிறபோது வீரசேனன்கண்டு நூறு திவ்வியாஸ்திரம் விட்டு அறுத்தெரிந்தான். அது போகவே மகாமாயன் நூறு காளியாஸ்திரமெடுத்து வில்லிற்ருெடுத்துப் பிரயோகம்பண்ணினுன். அந்த நூறு காளியாஸ்திரமும் காலக்கோடி விஷம்போலச் சீறிக்கொண்டு அதிவேகத்துடன் வருகையில் வீரசேனன் கண்டு நூறு காளியாஸ்திரத்திற்கும் நூறு அர்த்தசந்திரபாணம்விட்டு அறுத்துத தள்ளினுன் அதுகண்டு மகாமாயன் பல்லைக்கடித்து முன்னு

லே தனக்கு ஆதிசேஷன் கொடுத்த நாராசபாணத்தையெடுத்துவில் வில்தொடுத்து மந்திராபூதிகளுடனே பூசைகள்செய்துவிடுத்தான். அதை தேவர்கள்கண்டு வீரசேன னிறந்தான் இறந்தானென்று பார்த்துக்கொண் டிருக்கிறபோது அந்த நாராசபாணமும் வில்லில்விடுபட்டு விஷங்களைக்கக்கி அந்த விஷங்களானது பூமியில்விழுந்து அதிலுள்ள புல்லு பூண்டு மரமட்டைகள் ரதங்கள் சேனைகளெல்லாம் பத்தியெரிய அக்கினி அண்டபகிரண்டமும் சுவாலைகள்வீசி சடசடவென்கிற தொனிகளுடனேயும் விஷங்களைவாரி நாலுமூலையிலும் இறைத்துக்கொண்டு புறப்படவே அதைக்கண்டு சகலரும் யுத்தம் பண்ணுகிறதைவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க வீரசேனனானவன் முன்னால் தனக்கு இந்திரனளித்த கருடாஸ்திரத்தை எடுத்துவிட்டான் அந்தஅஸ்திரமானதுபுறப்பட்டு மகம்மேருகிரிபர்வதம்போல ரூபமுண்டாகி சிறகுகளை அடித்துக்கொண்டு மகாவேகமாய்வந்து அண்டபகிரண்டங்களுந்திடுக்கிடவாற்பரீத்துகியாவென்று அட்டகாசம்பண்ணியது அத்தச்சப்தமானது நாகபாசங்கேட்டுஇடியோசையைக்கேட்ட நாகம்போலப்பயந்து தன்னுடையபலங்குன்றித் தியங்கிமயங்கிற்று அந்தவேளையில் கருடாஸ்திரமானது லகுவுபாய்ந்து அந்த நாகபாசத்தைச் சிறகாலடித்து மூக்கினாற்குத்திப் பொசித்துபோய்விட்டது அதுகண்ட சகலரும் ஆச்சரியப்பட்டு யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்க மகாமாயனானவன் அதிக உக்கிரத்துடனே கையிலேசூலம்பிடித்துக்கொண்டு புறப்பட்டான் அவனைக்கண்டு வீரசேனன் இதென்ன மாய்கையாயிருக்கின்றது சூத்திரர்களாவது நம்முடனே யுத்தம்செய்வதேதென்று சற்று நேரம் யோசனைசெய்து தன்னுடைய அம்புறாப் பொதியில் கைவைத்து ஒருமகா உக்ரவீரசக்தியை யெடுத்து பூசைநைவேத்தியங்கள் கொடுத்து விட்டுவிட்டானதுவும் வெகுவீரத்தோடு வந்து சூலத்தைக் கமளீகரம் பண்ணிவிட்டுப் போய்விட்டது, அப்போது மகாமாயன் ஏதடா ஒருமானிடவன் நம்மையெல்லாம் கொல்லவந்த எமனைப்போற் காண்கின்றது தாம்விடப்பட்ட அஸ்திரத்திற்குமுன்னே திரிமூர்த்திகளும் நில்லார்களே இவனைச்செயிக்காவிட்டால் தேவர்களும் நகைப்பார்களே நம்மோடொத்த இராட்சதர்களும் கைகொட்டிப் பரியாசம் பண்ணுவார்களே இவனை மாய்கையினால் கொல்

ஒவோமென் றெண்ணினாலும் ஒருமானிடவன் முன்னுக்கு
த்தம்பண்ணமாட்டாமல் மாய்கையிற் சூதுபண்ணி கொன்
றனென்று சகலரும் நம்மை மதியார்களே இதற்கென்ன செ
வோமென்றுயோசித்து முன்பு இவன்வில்லைக் கண்டித்துப்
ன்பு தண்டாயுதமெடுத்துக் கொல்லவேணுமென்று திடங்
காண்டு சாரதியை எச்சரித்து இரதத்தைச் சக்கிராகாரமாய்
திருப்பி வில்லை நிறுத்தி ஒன்றுபத்து நூறு ஆயிரம் பதினாயி
ம் லக்ஷம் கோடி சங்கம் மகாசங்கமென்று சொல்லப்பட்ட
அளவிறந்த பாணங்களைச் சரமாரியாகப் பொழிந்தான். யுகா
தகாலத்திலே சத்தமேகமும் ஒன்றாய்க்கூடி இடிமின்னல் கு
மறலுடனே மழைபொழிந்தாலெப்படியோ அப்படிபோலச்
ந்துகளில்லாமல் ஒருஜாமபரியந்தம் மூச்சுவிடாமல்ஒரேமூச்
ாய் பாணமெடுப்பதும் வில்லிற்றொடுப்பதும் ஒருவருக்குந்
தரியாமல் வீரசேனனை வில்லெடுக்கவொட்டாமலுந் தேரை
அப்புறமிப்புற மசையவொட்டாமலும் திக்கு மூக்காடும்படி
ாய்ப்பாணங்களை விட்டு அடிக்கிறபோது வீமசேனனானவன்
அனேக திவ்வியாஸ்திரங்களை விட்டு அறுத்துக்கொண்டிருந்
ான்.

அப்போது மகாமாயனானவன் கோபதெண்டாயுதமெடு
த்துக்கொண்டோடிவந்து கிறுகிறுவென்று சுழட்டி இரதத்
தைப் போக்கடித்தான் அந்த அடிபடவே இரதமானது அச்
சுவேறு ஆணிவேறு மச்சுவேறு கும்பகலசம்வேறு குத்துக்
கல்வேறு துவஜம்வேறு டால்வேறு கொடைவேறாகத் தூள்
தூளாயிற்று அதுகண்டு வீரசேனன் லகுவாய் தப்பித்துக்
காண்டுமறுதேரிலேறினான், அந்தத்தேரையுமுடைத்தெறிந்
தான். அப்படி நூற்றிருபத்தைந்து இரதத்தையு முடைத்
துப்போட்டான். இப்படி இராட்சதராசன் மிஞ்சிய காலாக்
னிருத்திரனைப்போற்சீறி யெழும்பிய சேனைகள்பேரில் விழு
ந்து யானை தேர் பரிசேனைகளெல்லாம் தெண்டாயுதங்கொண்
டாடுகிறபோது யானைப்பிணமும் குதிரைப்பிணமும் ராசிராசி
யாய் ஒவ்வொரு அடிக்குப் பத்துலட்சம் இருபதுலட்சம்
இந்தப்படியாகக் கொல்லத் தலைப்பட்டான்.

அப்போது சேனாதிபதிகளான இருபத்தைந்து லட்சம்
ராசாக்கள் இரதத்தைத் திருப்பிக்கொண்டு ஓடுகிற சேனை
களையெல்லாம் ஓடவொட்டாமல் அடிக்கிறபோது மகாமாய
னவன் தெண்டாயுதத்தினாலே விலக்கிவிட்டு அந்தத்தண்டா

யுதத்தை கிறுகிறென்று சுழட்டி இருபத்தைந்துலக்ஷம்சேனு திபதிகளுடைய இரதத்தையும்பார்த்து விட்டுவிட்டான் அந்தக் கோபதெண்டாயுதம் ஒருகுழவியும் இரதங்களொரு மிளகாயும் பூமியொரு அம்மியுமாக அரைபட் டகர்ந்ததுபோல் அந்த இருபத்தைந்து லக்ஷம் சேனுதிபதிகளையும் மகாமாயனுனவன் அரைத்து எமலோகஞ்சேர்ப்பித்தான்.

அதுகண்டு வீரசேனன் சற்றிளைப்பாறி இரதத்திலேறி சாரதியை எச்சரித்து இரதத்தை மகாமாயன்முன்னுக்கு நடத்தி அனைவரும் ஒருமுகமாய்த்திரும்பி மகாமாயன்பேரில் சரமாரியாய்ப்பொழிந்தார்கள் அப்படி வீரசேனனுல்விடப்பட்ட பாணங்களையெல்லாங்கையினுற்றட்டிவிட்டுமகாமாயன்வீரசேனனுடைய ரதத்தைப்பார்த்துக்கையைமுடக்கி ஒருகுத்துவிட்டான் அந்தக்குத்தினுல் சுக்கற்சுக்கலாய் பொடிப்பொடியாய் விடவே வீரசேனன்மறுதேரிலேரி வில்லைக்குணத்தொனிபண்ணி தொடைதட்டி வுறிமிநின்றுன் நிற்கவே மகாமாயன் பார்த்து ஏதடா மானிடனே மகாபலவானுகவிருக்கின்றுன் அனேகஞ் சண்டைகளிற் கைகண்டவன்போற் காண்கின்றது.

ஆனபடியால் நம்முடனே இரண்டுநாளாய் இரவும்பகலுமாய் போராடுகிறுன், இவன் மகாசமர்த்தனென்று செச்சி வீரசேனு இதோபார் உன்னுடைய ரதத்தையும் உன்னையும் ஒருகுத்தினுல் எமலோகங் குடியேற்றிவைக்கிறேன் பாரடா வீரசேனுவென்று மறுபடியுங்கையைமுடுக்கிக் கையில் தன்பலமெல்லாம்வைத்து ஓடிவருகிறபோது வீரசேனன்கண்டு சிந்தாக்கிரந்தனுய் விசனப்பட்டு மறுபடியும் தைரியப்படுத்திக்கொண்டு வில்லைவளைத்துப் பாணங்களை எய்திடவே மகாமாயன்கண்டு அந்தபாணத்தின்பேரிற்குத்தினுன் அந்தகுத்து பாணங்களின்மீதிற்படவே வந்தவழி போனவழி தெரியாமல் பாணங்கள் நொருங்கிப்போய்விட்டது.

இப்பால் வீரசேனனுக்குகண்கள்சிவந்துகடுங்கோபமாகி நூறுதிவ்யாஸ்திரம்விட்டு மகாமாயனுடைய சரீரமெல்லாஞ் சல்லடைக் கண்களாகத் துளைசெய்யவே மகாமாயன் சீறிகோபமீறி தேரேறி வில்லையெடுத்துநிறுத்தி அனேக அஸ்திரங்களைவிட்டு வீரசேனன் சரீரத்தை துளைசெய்து சாரதி குதிரைகளைக் கொல்லவே வீரசேனன் பார்த்து சற்று யோசித்து நல்லதென்று கனைத்துக் கதும்பி அடாமகாமாயா ஆகட்டுமென்று வேறொருரதமேறி காளிகாதேவிகையில் வரம்பெற்ற சத்

தியையெடுத்து வில்லிற்றொடுத்து பூசை நைவேத்தியங்கொடு த்து மகாமாயன் கண்டத்துக்கு லகுபார்த்துவிட்டான் அந்த சத்தியானது அண்டாண்டங்குலுங்க அக்கினியைவாரியிறைத் துக்கொண்டுவருகிற சத்தியின்பேரில் மிதமில்லாமல் அஸ்தி ரங்களைவிட்டு அடிக்கிறபோது மிகுதியான பாணாஸ்திரங்களை யெல்லா மறுத்துக்கொண்டு மகாமாயனிட நெஞ்சுக்குழியிற் பட்டுருவிப்போகவே அடியற்றுசாய்ந்தவனைப்போலத் தேரின் பேரில்விழுந்து ஸ்ரீராமாவென்றுகூவி மகாமாயன் ஆவியை விட்டான் அந்தரவாசிகளாகிய தேவர்கள் மகாமாயனிறந்தா னென்று விசனமுற யாவருங் கூடாரஞ்சென்றார்கள்.

மூன்றாம்நாள் யுத்தம்.

மறுநாள் வீரசேனன் உயுத்தகோலம்பூண்டு சகல சேனா சைனியங்களுடன் புறப்பட்டு ரணபூமிக்குவந்து வெற்றிச்ச ங்கையெடுத்துப் பம்பம்மென்று ஊதினான் அந்த ஓசையைக் கேட்ட ராக்ஷதர்களெல்லாம் திடுக்கிட்டு மெய்கலங்கினார்கள். அப்போது வீரசேனனானவன் இரதத்தை முடுக்கிக்கொண்டு சக்கரயூகத்திற்குள்ளே நுழைந்து பாணங்களை மிதமில்லாமற் சேனைகளின்மீதுவிட்டு கண்டதுண்டமாகக்கண்டிக்கிறபோது சத்துருக்கமகாராசன் வீரசேனனை கொல்கிறேனென்று புறப் பட்டார் அக்காலையில் காலசித்தனானவன் இரதத்தை நடத் திச் சத்துருக்க மகாராசனைச் சேவித்துச் சொல்லுகிறான் ஐயா தேவரீர் இந்தராசனை ஓர்பொருட்டாகவெண்ணி யுத்தத்திற் குப் போகவேணுமோ, அடியேன்சென்று அந்த வீரசேனனை எமலோகத்திற்குக் குடியேற்றிவைக்கிறேன் பாருமென்று கால சித்தன்கூறவே சத்துருக்க மகாராசன் குஞ்சிரிப்புக்கொண்டு ஓய் காலசித்தனே கேளும் இப்பொழுது ஐந்து துரைகள் விழுந்துபோயிருக்கிறார்கள் ஆனபடியினாலே வீரசேனன் மகாபலவான்போற்காண்கிறது ஜாக்கிரதையாயிருந்து போ ராடி அவனைக்கொல்லவல்லமையுண்டோசொல்லென்று சத் துருக்கமகாராசன் கேட்க காலசித்தன் சொல்லுகின்றான் ஐயா சத்துருக்கமகாராசரே! நீரிப்படி பரியாசமானவார்த்தைகளைச் சொல்லவேண்டாம் அடியேனுடைய சவுரியந் திரிமூர்த்தி களுக்குந் தெரிந்திருக்கும் சகல உயிர்களையுங் கொண்டுபோ கிற காலனானவன் என்கையில் எத்தனைதரமோ அகப்பட்டு அடியும்பட்டு மிகவும் வணங்கினான் ஆனபடியால் என்பே

ரால் எமலோகத்திற்கொடியும் பரக்கின்றது நீர் சலவசந்தன் மகாமாயன்போலென்னை எண்ணவேண்டாம் இதோ ஒருக்ஷ ணநேரத்திற்குள்ளே அவனையு மவனுடைய சேனைகளையும் என்பாணத்திற்குயிரைகொடுத்து தேவரீர் பாதம்வந்துசேருகி றேன்பாருமென்று இடியோசையைப்போல காலசித்தனுன வன் உதட்டியாய்ச்சொல்லவே, சத்துருக்கரானவர் ஓய் கால சித்தனே வருங்காலம் தேசகாலம் நிகழ்காலமறிந்து யுத்தம் பண்ணி ஜெயிக்கவேண்டும் அதுபோல வருவது நான்சொன் னேன் நீயேன் கோபித்துக் கொள்ளுகிருய் நீயே போய் யுத் தம்செய்துவாவென்று சமாதானமாகச் சத்துருக்கரானவர் பகரவே, காலசித்தனுனவன் வீரசிங்கத்தைப்போல உக்கிரமா கத்திரும்பி வில்லைவளைத்துப் பாணங்களை விபரீதமாக வீரசே னன்பேரில் எய்கிறபோது அவன்கண்டுவருகிற அஸ்திரங்க ளையெல்லாம் அறுத்துப்போட்டு காலசித்தன் மூன்னுக்கு ரத த்தைநடத்தி அடாராட்சதா! நீயேன் தலைகிழாய்விழுகிருய் உன்னிலும் பராக்கிரமசாலிகளெல்லாம் உனக்கு முன்னமே இறந்துபோனுர்கள், அவர்கள் போனவழியை உனக்கும் க்ஷணநேரத்திற் காண்பிக்கிறேன் சற்றுநேரம் சாக்கிரதையா யிருந்துபோராடென்று வீரசேனன் சொன்னுன்.

காலசித்தன் யுத்தம்.

விருத்தம்.

கோலமாமதகரிகளுந் துரகமுங்கொடிய
ஆலகாலம்போலார்த்தன வணிதிகழ்தேர்மேற்
காலசித்தனுமேறிவெங் கனலெழவிழித்துக்
காலமெங்கணுமொலிந்திட நாணெலிசெய்தான்.

அம்மொழியைக்கேட்டகாலசித்தனுனவன்புண்ணில்வே லாயுதம் புகுந்தாற்போற்சீறி அடாவீரசேனு! கையிலாகாத சி லராட்சதரைக்கொன்றேமென்று கர்வித்துசொற்களை மிஞ்சவி டாதே இதோ ஒருநொடிக்குள் உன்னையும், உன்சேனைகளையும் எமபுறத்திற்கேற்றிவிடுகிறேன்பாரடாவென்று கையிற்பிடித்தி ராநின்றவில்லைமுகத்திற்குநேராய்ப்பிடித்துபாணங்களைப்பூட் டிப் பிரயோகம்பண்ணினுன். அந்தப்பாணமானது புறப்ப ட்டு அதிவேகமாய் வீரசேனனிட மார்பில்வந்து சுருக்குசுருக் கென்றுதைத்து அதனுல்வீரசேனன் மிகவும்நொந்து காலசி த்தனைப்பார்த்துவில்லையெடுத்துநிறுத்திநாறுதிவ்வியாஸ்திர ங்களைத்தொடுத்துக் காலசித்தன்விட்ட பாணங்களையெல்லாம்

நடுவது பாதியிற்கண்டித்துத்தள்ளி கடுங்கோபாக்கினியுடனே ஐம்பது நாராசமெடுத்து றிவ்றிவ்வென்றுவிடுத்தான். அதை காலசித்தன் கண்டு இருபத்தைந்து நாராசம் விட்டறுத்தான். அந்தப்பாணங்கள்போகவே வீரசேனன் பின்னும் நூறுதிவ்வியாஸ்திரமெடுத்துப்பிரயோகம்பண்ணினன். அதற்குக் காலசித்தன் எண்பது காளியாஸ்திரமெடுத்துப்பிரயோகித்து அவ்வஸ்திரங்களை யறுத்தெரிந்தான். உடனே வீரசேனன் மகாஉக்கிரத்துடனே வில்லை முகத்திற்கு நேராய்ப்பிடித்து சரவருஷம் போற்சொரிந்தான். அதற்குகாலசித்தனனவன் வருகிற பாணங்களையெல்லாம் அறுத்துத்தும்சப்படுத்தி பத்துதிவ்யாஸ்திரங்களை எய்து வீரசேனன்களைக்க அடித்து வெற்றிச்சங்கையெடுத்து வாயில்வைத் தூதினன். அதையறிந்த சத்துருக்கமகாராசனும் இராட்சதக் கூட்டங்களும் சந்தோஷமானர்கள். அந்தவேளையில் காலசித்தனனவன் ஏமனைப்போலே உக்கிரங்கொண்டுசேனைகளின்பேரில் இரதத்தைநடத்தி அஸ்திரங்களினல் அநேகஞ் சேனைகளைக் கொல்லுகிறபோது சேனைகளானது காலசித்தன் முன்னின்று யுத்தம்பண்ணமாட்டாமற்கையெடுத்து கும்பிடுவாரும், காலில்விழுந்து காப்பாற்றுமென்று வெதும்புவாரும் உனதுபுண்ணியத்தினல் எங்கள்பெண்சாதி பிள்ளைகளுடனே சேர்ந்து பிழைக்கப்போகிறோம் உயிர்பிச்சை தந்திடுமென்பாரும், இந்தச்சேவகத்தைவிட்டுவிடுகிறோமென்பாரும் ஐயா உமது வில்லுக்கோர் சரணம் பாணத்துக்கொரு சரணம் உமதுகைக்கொரு சரணமென்பாரும், இப்படிபலவிதமாய்ச் சொல்லிக்கொண்டு சேனைகள் ஓடுகிறபோது காலசித்தனனவன் ஆயுதம் பிடித்தவர்களெல்லாம் கொன்று ஆயுதம் போட்டுவிட்டு சரணமடைந்த பேரையெல்லாம் துரத்திவிட்டு ரதத்தைச் சக்கிராகாரமாய் திருப்பிக்கொண்டு வருகிறபோது வீரசேனனனவன் ஆயாசந்தெளிந்து தன்னிரதத்தைக் காலசித்தன் முன்னுக்குத்துரத்தி அடா காலசித்தனே? ஏன் தலைகீழாய் விழுகிறாய் இதோ உன்னை க்ஷணநேரத்தில்எமலோகங்குடியேற்றிவைக்கிறேன் ஜாக்கிரதையாயிருந்து போராடென்றுசொல்லவே காலசித்தனனவன் அம்மொழிகளைக் கேட்டுச்சொல்லுகிறான்.

அடா வீரசேன! காட்டிலிருக்கிறயானையானது ஆண்சிங்கத்தின் வீரந்தெரியாமல் மதோமத்தினல் தும்பிக்கையை தூக்கிச்சிங்கங்கழுத்தில்மாட்டியிழுத்தால் சிங்கமானதுமேல்விழுந்

தடித்திடாதோ அதுபோல ஸ்ரீராமமூர்த்திவிட்ட புரவியை நீபிடித்துக் கட்டினபடியினாலே இப்போதுன்னையும் உன்சேனைகளையுங்கொன்று உன் பட்டினத்தையுங் கொள்ளைகொண்டு போகவல்லவனானேன் ஆகையால் உன்னால் சாமர்த்தியமுண்டானால் என்னைச்செயித்து சக்ரயூகத்தணியில் நுழையென்று காலசித்தன்சொல்ல அதுகேட்டு வீரசேனமகாராசன் இனியில்லாத கொரேங்கொண்டு அடாராட்சதா வாயால்வரிசைகெடாதே இதோஎன்பாணத்தினால்எமலோகமுன்னைச்சேர்க்கிறேன் சற்றேபொருத்திரென்று வில்லில் பாணங்களைச் சந்தித்துவிட்டான் அந்தப்பாணங்களோ வில்லைவிட்டு வேகமாகவந்து காலசித்தன்வில்லையுங்கண்டித்து மார்பிலணிந்தகவசத்தையும் பொடியாக்கிவிட்டது அதுகண்டு காலசித்தன் பூமியில் குதித்தோடிவருகிறகாலையில் வீரசேனமகாராசன் பத்துதிவ்வியாஸ்திரம்விட்டு வாளாயுதத்தைத் தூளாக்கவே காலசித்தனானவன் முன்னுக்குவைத்தகாலை பின்னுக்குவாங்காமல் ஓடிவருங்காலத்தில் வீரசேனன்கண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தைப்பிரயோகம்பண்ணினான். அந்தப் பாணம் தகத்தகாயமாய் எறிந்துகொண்டு மகாவுக்கிரத்துடன் வருவதை காலசித்தன் கண்டு வருகிற அக்கினியாஸ்திரத்தைப்பிடித்து முறுக்கித் தண்ணீர்பிக்கிழிந்து வீரசேனன் மார்பைப்பார்த்து விட்டெறிந்தான் அதுகண்டு வீரசேனன் ஒருபாணத்தைவிட் டறுத்தெறிந்து ஒரு சத்தியையெடுத்து மந்திராபூதிகள் செய்யும்போது காலசித்தன் பார்த்து சிவ்வென்றுபாய்ந்து வீரசேனன் கையிலிருக்கிற சத்தியைப் பிடுங்கி மளுக்கென்றொடித்தெறிந்து மார்பைப்பார்த்து ஓரரைகொடுத்தான்.

அந்த அறையை அவன் தப்பித்துக்கொண்டு ரதத்திலிருந்தபடியே கால்சித்தன்மார்பைப்பார்த்து ஒரு உதைவிட்டான் அவ்வுதையை அவன் சட்டைபண்ணாமல் தேரிலிருந்து வீரசேனனை எட்டிக் கையைப்பிடித்துக் கரகரவென்று சுழட்டி ஆகாயமார்க்கம் விட்டெறியவே வீரசேனன் மேகமண்டலந்தாண்டி சூரியமண்டலம்போய் சூரியனுடைய சுடரிற்காய்ந்து பூமியில்விழுந்து இரத்தங்களைக்கக்கிக்கொண்டு சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்தான். அதுகளைப் பார்த்த காலசித்தனானவன் சந்தோஷமாகி வெற்றிச் சங்கெடுத்தூதவே இராட்சதாளும் இராசாக்களும் சத்துருக்கராசனும் வியப்படைந்தார்கள் சூரியனும் மேற்குத்திசையில் மறைந்தான்.

நாலாநாள் யுத்தம்.

இப்பால் வீரசேனமகாராஜன் மூர்ச்சையாய்க்கிடப்பதை யவன் பதினாயிரங்குமாரர்களுங்கண்டு ரதத்தைநடத்திக்காலசித்தமகாராசனை வளைத்துக்கொண்டு பாணங்களை விட்டடிக்கிற போது காலசித்தனானவன் வச்சிரகோப தெண்டாயுதத்தை யெடுத்து தன்மேல்வருகிற அஸ்திரங்களையெல்லாம் அடித்து நொரிக்கிக்கொண்டு சற்றுநேரம் அவர்களுடனே போராடி வச்சிரகோபதெண்டாயுதத்தைச்சுழட்டி இரதத்தைப்பார்த்து ஓரடிவிட்டான் அவ்வடியினாலே அச்சுவேறு ஆணிவேறு கும்பகலசம்வேறு குத்துக்கால்வேறு கொடுங்கைவேறு சட்டம் வேறு பலகைவேறு துஜம்வேறு கொடைவேறு கொடிவேறு குதிரைவேறு சாரதிகளுடனே பதினாயிரங்குமாரர்களும் மடிந்தார்கள். உடனே உதிரவெள்ளம் ஆறுபோல் ஓடத்தலைப்பட்டது அக்காலையில் பன்னீராயிரம் மந்திரிமார்கள் இராசாக்களுடனே யுத்தம்பண்ணக்கண்டு பக்கமுஞ் சுற்றிவளைத்து நாண்கு வாய்வாஸ்திரம் அக்கினியாஸ்திரம் வருணாஸ்திரம் மேகாஸ்திரம் காளியாஸ்திரம் அர்த்த சந்திராஸ்திரமென்று சொல்லப்பட்ட அஸ்திரங்களை ஒவ்வொருவன்மீதிற் கணக்குமிதமில்லாமல் மாரிசொரிவதுபோலப் பிரயோகித்து காலசித்தமகாராசனைக் கைகாலாடவொட்டாமலும் ரதத்தை நடத்தவொட்டாமலும் அடிக்கிறபோது காலசித்தமகாராசனானவன் தலையையசைத்து குஞ்சிரிப்புகொண்டு வில்லையெடுத்து நிறுத்தி அனேக அஸ்திரங்களை விடுத்து அவர்கள் பாணங்களையறுத்துத்தள்ளி நபரொன்றுக்கு ஐந்துபாணத்தை எய்தான். அந்த பாணங்கள் இரதத்திற்கிரண்டும் குதிரைக்கொன்றும் மந்திரிக்கொன்றும் சாரதிக்கொன்றும் இப்படி பன்னீராயிரம் மந்திரிகளையஸ்திரங்களை விட்டு எமலோகத்திற்குப்போகும்படியான வழிகாட்டினான். பன்னீராயிரம் ரதத்திற்கட்டிய குதிரைகளு மிறந்து உதிரவெள்ளமானது காணுறுபோலோடவே காலசித்தமகாராசன் வெற்றிச்சங்கெடுத்து பம்பம்மென்றூதவே சத்துருக்கரும் இராட்சதக்கூட்டங்களும் மகாசாமார்த்திய வீரனென்று மெச்சிப் புகழ்ந்தார்கள்.

வீரவிக்கிரமபாண்டியனுக்கும் மட்சயந்த மகாராசனுக்கும் யுத்தம்.

பின்னுங் காலசித்தமகாராசனனவன் பிணயமாய் வீழ்ந்து கிடக்குஞ் சேனைகளின்மீது ரதத்தை விட்டுக்கொண்டு யானை சேனை பரிவாரங்களிற்புகுந்து வாசாயகோசரமாகிய பாணங்களை விட்டுக்கொல்ல யானை தேர் பரி சேனைகளும்முன்னிட்டவாக்கிலே நின்று யுத்தம்பண்ணுகிறபோது வீரசேனமகாராஜன் மூர்ச்சைதெளிந்தெழுந்து சக்ரயூகத்தணியில் நுழைந்து இரண்டாமணியில் காலசித்தனலே இறந்தானென்னும் மட்சயந்த மகாராஜன் கேட்டு சித்தாக்கிரந்தனய் விசாரப்பட்டு சற்றுநேரம்பொறுத்து மனதை தைரியப்படுத்திக்கொண்டு வில்லைவளைத்து பாணங்களைவிட்டு இராசமன்னர்களையும் இராட்சதர்களையும் கொல்லுகிறபோது வீரவிக்கிரமபாண்டியன் கண்டு காலாக்கினி ருத்திரனைப்போல் எரிந்துவிழுந்து இரதத்தை நடத்தி உக்கிராகாரனய் வில்லை நிறுத்திப் பாணங்களைவிட்டு மட்சயந்த மகாராசன் அஸ்திரசஸ்திரங்களை யறுத்து நல்ல கூர்மையோடுங் கூடியிராநின்ற நாராசமெடுத்து வில்லிற்றொடுத்துவிட்டான். அதுகண்டுமட்சயந்தமகாராசன் பதினைந்து நாராசபாணத்தை யெய்யவே அந்த நாராசங்கள் வீரவிக்கிரம பாண்டியன்விட்ட பத்துநாராசங்களை பிரயோகம்பண்ண மக்ஷயந்தன் கண்டு ஐம்பது திவ்வியாஸ்திரங்களை எடுத்துவிட்டான் அப்பாணமானது வருகிறதிவ்வியாஸ்திரங்களையெல்லாம் பொடியாக்கிவிட்டது. அதன்பின்பு மட்சயந்த மகாராசன் வேலாயுதத்தை எடுத்து மந்திராபூதிகள்கொடுத்துவிட்டான் அந்த வேலாயுதமானது அண்டபிண்ட சராசரங்களெல்லாம் நடுங்கத்தக்கதாக திகுதிகுவென் றெறிந்துக்கொண்டு வருகிறபோது உக்கிரசேனன் அனேக திவ்யாஸ்திரங்களைவிடவும் அதுகளை எல்லாம் வேலாயுதமானது தடுத்துகொண்டுவந்து வீரவிக்கிரமபாண்டியனுடைய மார்பிலேபட்டு முதுகிலுருகிப்போய்விட்டது. அதினலே வீரவிக்கிரமபாண்டியன் அடியற்றமரம்போல விழுந்து உயிரைவிட்டான்.

வீரவிக்கிரமபாண்டியன்விழவேமக்ஷயந்தமகாராசன்பின்னும்வாடாமல் இரதத்தைநடத்தி வெற்றிசங்குபுரிந்து வில்லை நிறுத்தி அனேகமான திவ்வியாஸ்திரங்களையெடுத்துசேனைகளின்பேரிற் பிரயோகம்பண்ணுகையில் அது சர்ப்பம்

போற்சிறிக்கொண்டு ராட்சதக்கூட்டங்களிலும் இராசமன்னர் கூட்டங்களிலும் பாய்ந்துவிழுந்து கொல்லும்போது ராட்ச தர்களும் இராசர்களும் மலைவேறு சிலைவேறு அடிவேறு முடி வேறு எலும்புகள் வேறாய் விழுவதைக்கண்டு மனந்தாளாமல் மாளவதேசாதிபதிகளான யாவரும் ரதத்தை விட்டுக்கொண்டு கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு இந்தநான்குபக்கமும் நால்வ ரும்நின்று கோடி மகாகோடி சங்கம் மகாசங்கம் அற்புதம்மகா அற்புதம் பத்மம் மகாபத்மம் கிருவம் மகாகிருவம் அக்ரோ ணி மகா அக்ரோணி சஞ்சலம் மகாசஞ்சலம் வெள்ளம் மகா வெள்ளம்சமுத்திரம் மகாசமுத்திரமென்றுசொல்லும்படியாய் மிதமில்லாத பாணங்களைவிடுகிறபோது மட்சயந்தமகாராசனு னவர்கண்டு நான்குதிக்கிலும் பாணுவஸ்திரங்களைவிட்டு அதுக ளை சங்கரித்துப் பின்பு பேருக்கிரண்டுபாணம்விட்டு நால்வர் மார்பிலணிந்த கவசங்களை யறுத்துப்போட்டார். அப்போது அந்த நால்வருங்கடுங்கோபங்கொண்டுநூறு திவ்வியாஸ்திரங் களை மட்சயந்தமகாராஜன் மீதிலெய்யவே அவ்வரசன் அதிக னங்கொண்டு மனங்கொதித்து எதிர்பாய்ந்து நூறுதிவ்வி யாஸ்திரமெடுத்து நான்குதிக்கிலிருந்து வரப்பட்ட அஸ்திர ங்களையெல்லாம் அறுத்தெறிந்து இருபது பாணங்களைவிட்டு தம் சாரதி குதிரை துவசத்தையும் அறவெட்டினான். அது ண்டு நான்குராசரும் இரதத்தைவிட்டு பூமியிற்குதித்து கத்தி கடயம் தண்டாயுதமெடுத்துச் சுழட்டிகொண்டு ஓடிவருகிற போது மட்சயந்தமகாராசன் அந்த நால்வருக்கும் நான்கு அர்த்தசந்திர பாணம்விட்டு சிரசைக்கண்டிக்கவே அவர்களு இராமாவென்று முறையிட்டு தரையில் மாண்டார்கள். அப் போது மட்சயந்த மகாராஜன் வெற்றிச் சங்கையெடுத்து பம் ம்மென்றூதிச் சேனைகளுடன் பாசறைபோய்ச் சேர்ந்தான். அந்தப்படி சத்துருக்க மகாராஜனும் தன் சேனைகளுடன் பாசறையை யடைந்தார்.

ஐந்தாம்நாள் யுத்தம்.

மறுநாள் சத்துருக்கமகாராசன் உயுத்தகோலங்கொண்டு ணபூமியையடுத்துப் பல்லைநெறநெறவென்றுகடித்துஇரதத் தநடத்தி வில்லைக்குணத்தொனிபண்ணினான். அந்த ஓசை யக் காலசித்தன்கேட்டு ஏதடாசங்கத்தொனி சத்தமும்விற்கு ணத்தொனிசத்தமுங்கேழ்க்கின்றது சக்கிராயுதத்தொனிவந்த போலுங்காணப்படுகின்றது இராசாக்கள் கோஷ்டமும் ரா சதாள்கோஷ்டமுங்கேழ்க்கின்றது நாம் சலுதியாய்ப் போக வணுமென்று இரதத்தைத் திருப்பிக்கொண்டு தென்மேற்கு

மூகமாய் நின்று யுத்தம்பண்ணச் சித்தமாயிருக்குஞ் சத்துருக்க மகாராசனை வணங்கி காலசித்தனென்பவன் சொல்லுகிறான்.

ஐயா சத்துருக்கமகாராஜனே கேளும், நீரந்த ராஜனை ஒருபொருளாயெண்ணி யுத்தம்பண்ணமுயலுகின்றீர் தேவரீர் யுத்தத்தை நிறுத்தி அடியேனுக்குச் செலவுகொடுத்தால் இந் தட்சணம் அந்த மட்சயந்தனை காலனூருக்கனுப்பி வைக்கி றேனென்று சபதங்கூறி நிற்கவே சத்துருக்க மகாராசனவர் சொல்லுகிறார் வாரும் காலசித்தனே நீமகா சாமர்த்தியனென் பதற்கு சந்தேகமில்லை இந்தராசனை ஒருபொருட்டாயெண்ணி உம்மையழைத்து யுத்தத்துக் கனுப்புகிறதோ அது நன்றல்ல வீணாக இருபத்தைந்துலட்சம் சேனாதிபதிகளும் படைத்தலை வனாக சுவேதனும் யானைசேனை குதிரைகள் வெகுவாக மாண் டும் நீ ஒருவனிருக்கிறாய் சகலரும்மடிந்தார்கள் நம்முடைய பாளையங்களில் மகாமாயன் சலவசந்தன் சூரசேனன் உக்கிர சேனன் நீலாட்சதன் வீரவிக்கிரமபாண்டிய மகாராசன் கலி ங்கராசனென்று சொல்லப்பட்ட துரைகளெல்லாமிறந்து போனார்கள் மற்ற தண்டு தளம் சேனாசமுத்திரங்கூட மாண்டு போயின மேலுமிந்த இராசனவன் நம்மையென்ன செய் தான் இப்பவும் நம்முடைய அஸ்வத்தைக் கொண்டுவந்து விட்டு நம்மை சரணம் அடைந்தானேயானால் நாமவனை ரட்சி த்துக்கொள்ளலாம் ஆகையால் நீபோய் அந்தராசனை சமா தானப்படுத்தி அழைத்துக் கொண்டுவாவென்று சத்துருக்க மகாராசர் சொல்லக் காலசித்தனுஞ் சம்மதித்து மட்சயந்த னிடஞ்சென்று ஓ மகாராஜனே தசரதமகாராசனுடைய வயிற் றில் ஸ்ரீராமர் மூன்றுதம்பிமாருடன்கூடி அவதரித்துத் தாட கையைச் சங்கரித்து கோசிகர் யாகத்தைக்காத்து அகலிகை யின் சாபந்தீர்த்து வளைக்கப்படாத வில்லையொடித்து சீதால ட்சுமியைப் பாணிக்கிரகணம் புரிந்து பரசுராமனைப் பங்கப்ப டுத்தி அயோத்தியில்வந்து தாயார்சொற்படி பதினான்குவரு ஷம் வனவாசஞ்செய்து சீதையம்மனையு மிளையபெருமாளா கிய இலட்சுமணரையும் கூட்டிக்கொண்டு தண்டகாரணியம் வரும்போது ரிஷிகளும் கும்பகர்ணன் முதலானவர்கள் உபத் திரம் பொறுக்க முடியவில்லையென்று அபயமிட ராமபத்தி ரரும் ரிஷிகளெல்லாருக்கும் இராவணசம்மார முடிப்பிக்கிறே மென்று அபயஸ்தங்கொடுத்து அகமுகியைக் கொன்று விரா தனுக்கு மோட்சங்கொடுத்து சடாயுவைக்கண்டு பஞ்சவடி தீ

ரத்தில்வந்து சூர்ப்பநகையைப்பங்கப்படுத்தி கரதூஷணுளைக்கொன்று சீதையம்மனையிழந்து மாரீசனைக்கொன்று சடாயுவுக்கு மோட்சங்கொடுத்து அனுமானைக்கண்டு சுக்ரீவனைச்சிநேகஞ்செய்து மும்மூர்த்திகளாலுஞ் செயிக்கப்படாத சுத்தவீரனுகிய வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி எழுபத்திரண்டுவெள்ளம் வானரானைத் தண்டுகூட்டி சீதையம்மனிருக்குமிடந்தெரிந்து தடங்கடலடைத்து இலங்காபுரிபட்டணம்புகுந்து இராவணன் கும்பகர்ணன் இந்திரசித்து அதிகாயன்முதல் இரண்டாயிரம்வெள்ளம் ராட்சதாளையுங் கொன்றுவிபீஷணருக்குப் பட்டங்கட்டி சீதையம்மனைச்சிறைமீட்டு அயோத்திவந்து பட்டாபிஷேகமாய் பட்டம் ஆண்டுக்கொண்டிருக்கிற நாளையில் இராவணனுக்கு உபபலமாய் வந்த சதகண்டராவணனையுஞ் சகஸ்திரகண்டராவணனையும் பதின்மூவாயிரம்வெள்ளம் ராட்சதாளையுங் கொன்று மகாமாயன் சலவசந்தனென்கிற இருவருக்கும் பட்டங்கட்டி அயோத்தியாபுரி பட்டணம்வந்து சேர்ந்து அஸ்வமேதயாகம் பண்ணவேண்டி குதிரையைவிட்டு அந்தக்குதிரையின்பின் ஐம்பதுவெள்ளம் இராட்சதாளையும் அறுபதினுயிரம் அக்ரோணிசேனைகளையும் மகாமாயன் சலவசந்தன்முதல் ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களையும் கூட்டி இவர்களுக்கெல்லா மதிபதியாகிய ஸ்ரீராமருடைய தம்பியாகிய சத்துருக்கமகாராஜனை ராஜாவாகவனுப்பி என்னையுஞ் சேனுசைனியங்களுக்கெல்லாஞ் சேனுதிபதியாக அனுப்பிவைத்தார்.

அவர்விட்ட குதிரையை உமதுகுமாரனுன வீரசேனமகாராஜாவானவர்பிடித்துக்கட்டி குதிரையின்பின் காவலாகவந்த நீலாட்சதனையும் பதினுயிரம் இராட்சதாளையுங் கொன்று சகலரையும் பறிகொடுத்து தானுமிறந்தார், இப்போது ஒண்டியாய் நீர்யுத்தம்பண்ணுகிறீர். அதுதருமமல்லவென்று சத்துருக்க மகாராஜர் என்னையழைத்து உமக்குப் பிரியவசனஞ்சொல்லி சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டுவரச் சொன்னுர். நீர் மனஞ்சஞ்சலமில்லாமல் வருவீரேயாகில் இறந்தவர்களெல்லாரையு மெழுப்பித்தருவார் நீருஞ் சத்துருக்க மகாராஜனை வணங்கிப் பிழைக்கிறதே காரியமென்முன் காலசித்தனுனவன்.

மட்சயந்தமகாராஜன் சமாதானப்பட்டு சத்துருக்கமகாராஜனிடம் வருதல்.

அதுகேட்டு மட்சயந்தமகாராஜன் சொல்லுகிறான் வாருங்காலசித்தனே இராஜர்களாய்ப் பூமியிற்பிறந்து யுத்தம்நேர்ந்தபோது இரணக்களத்திற் பிள்ளையிறந்தானென்றும் விசனப்படலாமோ எத்தனைகால மாயுசை வைத்திருந்தபோதிலும் ஒருநாளைக் கிறப்பதே நிச்சயம் உரலுக்குட் புகுந்துகொண்டு உலக்கைக்குப் பயந்தாற்றீருமோ முன்வைத்தகாலைப் பின்வைத்தால் இராஜநீதியல்லவே இகபரத்திலும் அபகீர்த்தியல்லவோ அப்படி ஒருவரைவணங்கிப் பிழைப்பதைப் பார்க்கிலும் யுத்தகளத்திலிறந்தால் கீர்த்தியுண்டாகுமென்று மட்சயந்தமகாராசன்கூற காலசித்தனவன் பின்னுஞ் சொல்லுகிறான், ஓ மட்சயந்தமகாராசனேகேளும் சாகாமல் ஆர்தானிருக்கிறார்கள் பராபரவஸ்து ஒருவர்தவிர மற்றவர்களெல்லாமிறந்து பிறப்பார்களல்லாமல் இந்தபூமியில் சாஸ்வித காலமாய் வாழப்போகிறவர்களார் அப்படிப்பட்ட சூரபத்மாசுரன் இரண்டாயிரஞ் சதுர்யுக மிராச்சியபரிபாலனம் பண்ணினபின் சிவசுப்ரமணியருடைய வேலாயுதத்தினாலே அவனுமிறந்தான் சகலவரமும்பெற்ற இராவணேஸ்வரன் கும்பகர்ணன் முதலானவர்களும் ஸ்ரீராமபாணத்தாலிறந்தார்கள் நீரிப்போ ஸ்ரீராமமூர்த்தியின் தம்பியாகிய சத்துருக்கமகாராசனைச் சேர்ந்து வாழ்கிறதே நல்லகாரியமென்றான். அதற்கு மட்சயந்தமகாராசனுஞ் சம்மதித்து ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனாகப் பிறந்து அஸ்வமேதயாகஞ் செய்யும்படிவிட்ட குதிரையை உனதுகுமாரன் பிடித்துக்கட்டினதால் இவ்வளவு துன்பம் வந்ததுவுமின்றி யாவருமிறந்தார்கள் ஆகையால் நாம் சத்துருக்கரைவணங்கிச் சமாதானப்பட்டோமேயாகில் சேனைகள் யாவரையு மெழுப்பிக்கொள்ளலாம் ஸ்ரீமந்நாராயணராய் விளங்காநின்ற பரப்பிர்மமே ஸ்ரீராமனாகவந் தவதரித்தருளியசுவாமியையுங் கண்ணாற்கண்டு சேவித்து பாவத்தை யொழித்து மோட்சத்திற் கேதுவானவழிதேடி சாயுச்சியபதவியை யடையலாமென்று நினைத்து காலசித்தனைக்கூட்டிக்கொண்டு இரதத்தைவிட்டிழிந்து இருவருஞ் சத்துருக்கமகாராசனுக் கெதிரில்வருகிறபோது சத்துருக்கமகாராசன்கண்டு சந்தோஷத்துடனே இரதத்தைவிட்டிறங்கித் தானுமெதிர்சென் றிருவர்

க்கொருவர் தழுவி வினவிக்கொண்டு சத்துருக்கமகாராஜன் சக்ரயூகத்தணிக்குள்ளே நின்றுக்கொண்டு மட்சயந்த மகாராசனைப்பார்த்து சத்துருக்கர் விசனப்பட்டு வீணிற் சேனைகள் மடிந்துபோயிற்று இதற்கென்ன செய்வோமென்று விசனப்படுகையில் மட்சயந்தமகாராசன் சத்துருக்கரைப்பார்த்துச் சொல்லுகிருன் கேளுஞ் சத்துருக்கமகாராசரே இப்போது என் குமாரனிறந்ததற்கும் சேனைகள்மடிந்ததற்கும் நான் விசனப்படவில்லை ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமமூர்த்தியாக அவதரித்திருக்க அவரைப்பணிந்துதாழ வென்னபாக்கியம் பெற்ருே மவரைப்பணிந்தமாத்திரத்திலே எங்கள் இருபத்தொரு தலைமுறைமையும் மூக்தியாகிய மோட்சம்பெறுவார்கள் உம்மாலெங்கள் சூரியவம்சமீடேறிற்று நாங்கள் செய்தவிரதமும் புண்ணியமுமின்று பலித்தது அப்படிப்பட்ட மகாபுருஷன்விட்ட குதிரையென்று அடியேன்களுக்குத் தெரியாமல் குதிரையைப்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்தபிழையைப் பொருத்தருளவேண்டுமென்று மக்ஷயந்த மகாராசா வேண்டிக் கொள்ளவே சத்துருக்க மகாராசன் சந்தோஷமுற்றுச் சொல்லுகிருர் ஓ மட்சயந்த மகாராசரே அரசர்களாகப் பிறந்தவர்களுக்கு இராஜநீதி முறைமை தவராமலும்யுத்தம்பண்ணுகிறபோது புறமுதுகுகாட்டி ஓடாமலும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனந் தவருமல் பண்ணவும் அபயமென வந்து வணங்கினவரைக் கார்க்கவு மிவைகளல்லவோ இராசநீதி முறைமை இதைவிட நமக்கு வேருென்றுமில்லை அரியரப் பிரமாதிகள் வந்தெதிர்த்தாலும் போராடிக் கீர்த்திபெறவேணுமே யல்லாமலிதனுல் குற்றமொன்றுமில்லை இறந்தசேனைகளெழுந்திருக்கவேணுமே இதற்குயோசனை எப்படி சொல்லுமென்று கேட்க மக்ஷயந்தமகாராசன் சந்தோஷமாய்ச் சத்துருக்கமகாராசனைப் பார்த்துச் சொல்லுகிருர். கேளுஞ் சத்துருக்கமகாராசனே! எங்களுக்குப்பிரசன்னமாயிருக்கப்பட்ட ரணபத்திரகாளிதேவிக்கு பூசைசெய்து நம்முடையயுத்தகளத்தி லிறந்தவர்களெழுப்பிக்கொண்டு வருகிறேன் நீர் சந்தேகப்பட வேண்டாமென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு காளியம்மனுலயம் வந்து ஸ்நானஞ்செய்து ஜெபதபங்களை முடித்துக்கொண்டு சந்நிதியுட்புகுந்து தோத்திரஞ்செய்து அம்மனைபிரத்தியக்ஷமாய் மக்ஷயந்தராசன் கண்டு ஆனந்தங்கொண்டு வணங்கித்தேவி எங்களிருதிரப் படையிலும் யுத்தத்தில் மாண்டவர்

களை எழுப்பித் தரவேண்டுமென்று தோத்திரம்புரிய காளிகா தேவியானவள் ஓ மட்சயந்தமகாராசனே பயப்படாதே உன் மனதின்படி இதோ நான்போய் எழுப்பி வருகிறேனென்று திருவாக்களித்து ரணக்களம்வந்து இருதிரப்படைகளிலு மிறந்தசேனைகள்பேரிற் பஞ்சாட்சரந்தூவிட அப்பஞ்சாட்சரம் பட்டமாத்திரத்தில் ஆனைசேனைபரியாவு முயிர்பெற் றெழுந்தார்கள் வீரசேனமகாராசனும் நித்திரைசெய் தெழுந்தவன் போல் எழுந்தான். மகாமாயன் சலவசந்தன் சூரசேனன் உக்கிரசேனன் சுவேதன் நீலாட்சதன்முதல் யாவருமெழுந்தார்கள்.

அப்போது மக்ஷயந்தமகாராசனும் காளிகாதேவி சந்நிதியைவிட்டு ரணக்களம் வருகையில், தகப்பனைக்கண்டு வீரசேனனெழுந்து எதிர்சென்று நமஸ்கரிக்க, அப்படி நமஸ்கரித்த பிள்ளையையெடுத்து மார்போடணைத்துவாழ்த்தி அப்பா வீரசேனா! உன்னால் பராபரவஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீ ராமமூர்த்தியின் தம்பியாகிய சத்துருக்கமகாராசரது சேர்வையைக்கண்டேன் நான்செய்த பாக்கியமும்பலித்தது சகலபாவமும் விமோசனமாகிச் சாயுச்சியபதவியுமுண்டாயிற்று அப்பா மகனே யென்றார் அதுகேட்டு புத்திரனாகிய வீரசேனனும் வியப்புற்று சத்துருக்கமகாராசனுடைய தண்டுதளங்களையும் வீரபராக்கிரமவேந்தர்களையு மிராட்சதக் கூட்டங்களையும் வானரசேனைகளையு மதனுபுரி பட்டணம் அழைத்துக்கொண்டு போய் அவர்களுக்குத் தக்கபடி விருந்துகள்முதலான வேடிக்கைகள் செய்துவைத்து ஐந்துநாள்வரைக்கும் பட்டணத்தில் வைத்திருந்து ஆறுநாள் சத்துருக்கமகாராசனுக்கு ஆடையாபரணமுங் குதிரை பதினாயிரம் ஸ்திரீகள் ஐந்நூறு ஆயிரம் பாரந் தங்கம் இன்னும் யானை சேனை ரதங்களும் வெகுமதியாகக்கொடுத்து அஸ்வமேதக்குதிரைக்கு பூசைகள்செய்து பட்டணத்தை மந்திரிவசம் ஒப்புவித்து மட்சயந்த மகாராசனுங் குமாரனாகிய வீரசேனனும் தங்கள் தண்டுதளங்களுடனே சத்துருக்கருடைய தண்டில்வந்து சேர்ந்தார்கள்.

அப்போது சத்துருக்கமகாராசன் சூரசேனன் உக்கிரசேனன் காலசித்தன் சகலரும் ரதமேறி வாத்தியத்தொனிகள் முழங்க குதிரைவிட்டு அதன்பின்பு நீலாட்சதனையும்பதினையாயிரம் இராட்சதர்களையும் மற்றதுரைகளையும் தாங்கள் தங்களுடைய வாகனங்களின்மீதி லேறிக்கொண்டு கொடைகள் கொடி

கள்பிடிக்க ஆலவட்டம் தாலவட்டம்வீச, இராட்சதப்படைகள் வானரக்கூட்டங்களும் கெர்ச்சிக்க, சத்துருக்கமகாராசனும் மண்விண்ணதிரப் புறப்படுகையிலே அஸ்வமானது தன்னிச்சையாய் நடந்துபோகிறபோது வாரணபுரியென்றொருபட்டணமுண்டு அந்தப்பட்டணத்திற்கு சௌபுணபுரமென்றுபேர்விளங்கும் அந்தப்பட்டணத்தை யாளப்பட்ட சோமகாசமகாராசனுடைய குமாரன் அரண்ணியமகாராசன் நூரக்குரோணிசேனையுடன் காட்டகத்தில் வேட்டைக்குப்போய் வேட்டைகளுமாடி வாரணபுரிபட்டணத்திற்கு வருகிறபோது தன் பட்டணத்திற் கருகாமையில்வருகிற அஸ்வத்தைக்கண்டு சந்தோஷங்கொண்டு பத்துசேவகரைவிட்டு அஸ்வத்தைப் பிடித்துவரச்சொல்லி அனுப்ப அப்படியே அவர்களும் குதிரையைப் பிடித்துக்கொண்டுவந்து அரண்ணியமகாராசன் முன்னேவிட்டார்கள் விடவே அந்த அஸ்வத்தினுடைய நெற்றியிலெழுதிக்கட்டியிருக்கிற பட்டத்தை அந்த இராசன்வாசித்துப்பார்த்து குஞ்சிரிப்புக்கொண்டு தலையையசைத்துச் சொல்லுகிறான் ஆ! ஆ! இந்த வையகத்தைப்போலுண்டோ, நான் சூரனென்று கர்வித்து இப்படி ஆண்மையைப் படைத்தவனையும் அவன்சேனைகளையும் அவன்சேனைகளின் சவுரியத்தையும் ஒரு சணநேரத்தில் வெளிப்படுத்துகிறேன் பாரென்று பல்லை நறநறவென்றுகடித்து நூறுசேவகரையழைத்து இக்குதிரையின்நெற்றியிற்கட்டியிருக்கும் விருதாவொளியை என்தகப்பனுக்குக்காட்டி தண்டைப் பயணப்படுத்தி யுத்தத்திற்கு வரச்சொல்லுங்கள் யென்றான்.

அரண்யமகாராசன் அஸ்வத்தைப்பிடித்துக்கட்டல்.

விருத்தம்.

காமவாம்பரிமால்வரைத் தடங்கடந்து
  சோமகாசன்வாள் வாரணபுரியதின்றோய
இராமனனவன்மகஞ்செய நலமுடன்விடுத்த
  நாமமறிந்தவன் புதல்வனும்நெருங்கிக்
குதிரையின்நெற்றியிலுற்றதோர் பட்டத்தைக்குறித்து
  மதியிலாதவன் வீரனென்றனுப்பியவண்ணம்
விதியுமாலீசனுமேற்கினும் விடுவனோவென்றம்
  பதியிற்புரவியைப்பதலமே செய்தனனரண்யன்.

அந்தப்படியே சேவகருங் குதிரையைப் பிடித்துக்கொண்டு பட்டணத்திற்குப்போகுங்காலையில் குதிரையின்பின் வரு



கிற ராட்சதாளுங் குதிரையைக்காணுமல் அரண்ணியமகாராச ளிட பாளையத்திற்புகுந்து தேடுகிறபோது அஸ்வத்தைப்பிடித்துக் கொண்டுபோகிற அரண்ணியமகாராசன் இராட்சதர்களைக்கண்டு அடா இராட்சதப் பட்டிமக்களே! எங்கேயிருந்து எவ்விடம் போகிறீர்கள். என் பாளையத்தினுள்ளேவந்த காரணமென்ன சொல்லுங்களென்றுகேட்க, இராட்சதாள் நகைத்து அயோத்தியாபுரிபட்டணத்தை யாளப்பட்ட ஸ்ரீராமமூர்த்திவிட்ட அஸ்வமேதக் குதிரையைக் காணுமல் தேடிக்கொண்டு வருகிறோம். இவ்விடம் வந்ததைக் காணீர்களோவென, அரண்ணிய மகாராசன்கேட்டு, இராட்சதாளைப்பார்த்து அடா இராட்சதர்களே! அந்த இராமன் அஸ்வமேத யாகம்பண்ணினுல் அவனைச்சார்ந்த ஊரை பிரதட்சணம்வரவேணுமேயல்லாமல் என்னுடையபட்டணத்திற்குள் அவன் குதிரை வரலாமோ அவன்தானே ரணசூரன் அவனைவிடபலவான்கள் எந்த பூமியிலுங் கிடையாதோ நான் பிடித்துக் கட்டின குதிரையை ஹரிஹரப் பிரம்மாதிகள் வந்தாலும் விடுவிக்கக்கூடுமோ நீங்கள்போய் உங்களுக்கு இராசனுகிய சத்துருக்கனுடன் வாரணுபுரி பட்டணத்தை யாளப்பட்ட சோமகாசமகாராசாவின் மூத்தகுமாரன் அரண்ணிய மகாராசன் நமது குதிரையைப்பிடித்துக் கட்டிப்போட்டு உன்னுல் சாமார்த்தியமுண்டானுல் தண்டுடன்வந்து யுத்தஞ்செய்து எங்களைவரையுஞ்செயித்து குதிரையை விடுவித்துக்கொள்ளச் சொல்லு சாமார்த்தியமில்லாவிட்டால் சத்துருக்கனைவந்து வணங்கச் சொல்லும் அப்படி வணங்காவிட்டால் தான்வந்தவழியைப் பார்த்துக்கொண்டு தன் தண்டுடனேபோகச்சொல்லும், இந்த மூன்றுவிதத்தில் எதுநலமாயிருக்கிறதோ அப்படிசெய்யச் சொல்லுங்களென்றுள். அதுகேட்டு இராட்சதாள் மிகுந்த கோபங்கொண்டு அரண்ணிய மகாராசனைப் பார்த்துச்சொல்லுகிருர்கள் ஓய் அரண்ணிய மகாராசனே! என்னவசனஞ் சொன்னீர். அந்த சத்துருக்க மகாராசனைவந்து வணங்கச் சொன்னீரே, அவரை ஆரென்று உமதுமனதில் நினைக்கிறீர். அவரையறியீரோ அறியமாட்டீரோ அண்டமாயிரத்தெட்டும் ஆளப்பட்ட தேவேந்திரனைப்பிடித்து விலங்கிட்டுச் சிறையில்வைத்து ஆயிரத்தெட்டண்டத்தையுமாண்ட இராவணேஸ்வரனையு மவன் சேனைகளையுங்கொன்று தேவேந்திராதி தேவர்கள் இக்கட்டை யொழித்து விபீஷணருக்குப் பட்டங்

கட்டி ராவணனுக்கு உதவியாய்வந்த சதகண்டராவணன் குமாரனாகிய சலவசந்தனுக்குப் பட்டங்கட்டி அயோத்தியா புரி பட்டணத்தில்வந்து அஸ்வமேதயாகம் இயற்றவேண்டி அஸ்வத்தை விட்டார்.

அவர் விடப்பட்ட குதிரையைத் திரிமூர்த்திகளும் பிடித்துக்கட்டார்கள். இந்தச் செய்தியை சத்துருக்கராசன் கேட்பாரேயானால், உம்மையும் உம்முடைய சேனையையும், உதவியாய் வரப்பட்ட இராசாக்களையும் வானுலகம்போய்ச் சேரப் பண்ணுவார். மேலும், இராட்சத சிரேஷ்டராகிய மகாமாயன், சலவசந்தன், சேனாதிபதியாகிய நீலாட்சதனும், இராட்சதாளும், இராசக்கூட்டங்களும், குதிரைப்பிடிபட்ட சேதி கேட்பார்களேயானால் உம்மையும், உமது சேனைகளையும், ஒரு கைகுத்தினாற்குத்தி உதிரத்தைப் பானம்பண்ணுவார்கள் இந்த சமாச்சாரத்தை ஸ்ரீராமமூர்த்தி கேட்பாரேயானால் அவ்விடத்தி லிருந்தபடியே இராமபாணத்தையேவி எமலோகமனுப்புவார். நீரெங்கே ஒளித்தாலும், ராமபாணம்விடாது. இதெங்களுக்கு நன்றாய்த்தெரியவரும். அப்படிவராமல் அஸ்வத்தைவிட்டுச் சத்துருக்கமகாராசனை வணங்கிப் பிழைப்பதே நலமென்று சொன்னார்கள்.

அம்மொழியைக்கேட்ட அரண்ணியமகாராசன் நகைபுரிந்து அடா இராட்சதர்களே! பனங்காட்டிலிருக்கின்ற நரியானது சலசலப்புக்கஞ்சுமோ? அஞ்சாதுபோல, அந்த அயோத்தியாபுரிபட்டணத்தையாளப்பட்ட தசரதமகாராசன் சாமார்த்தியங்கள் நாங்களறிந்திருப்போம். மேலும், அந்த தசரதன்பெற்றபிள்ளைகளை நீங்களே மெச்சவேணும், அப்படிப்பட்டசாமார்த்தியமிருந்தால் என்னையும் என்குமாரனையும், என் தகப்பனையுஞ் சேனைகளையுஞ்செயித்து, உங்கள் அஸ்வத்தை விடுவித்துக்கொண்டுபோங்கள் பார்ப்போம் என்றான். அது கேட்டு இராட்சதர்கள் கெர்வங்கொண்டு கிட்டேநெருங்கி ஆயுத அஸ்திரங்களையெடுத்துவீசியெறியும்போது அரண்ணிய மகாராசன்கண்டு வில்லைவளைத்து அனேக திவ்வியாஸ்திரங்களைச் சந்தித்துவிட்டு ஆயுத அஸ்திரங்களை அறுத்துவிடவே இராட்சதர்கள் ஈட்டி எறியீட்டி சுரிகை பாங்கு வளைதடி சக்கரம் இருப்புலக்கை தெண்டாயுதமுதலாகிய ஆயுதங்களினால் ஐயாயிரம் இராட்சதாளும் ஒன்றாய்க்கூடிசரமாரியாய் விடு

கிறபோது அரண்ணியராசனும் அனேக திவ்வியாஸ்திரங்களைவிட்டு அறுத்தெரிந்து ஐயாயிரம் இராட்சதாளுக்கும் நபுரொன்றுக்கு நாலுபாணம்விட்டுக் கொல்லுகிறபோது அதில் ஒருவன் தப்பிப்பிழைத்தோடிப்போய் சேனாதிபதியான நீலாட்சதனைக்கண்டு நடந்த செய்தியைக் கூறவே அந்த நீலாட்சதன் மிகவும் வெகுண்டு பதினாயிரமிராட்சதாளைக் கூட்டிக்கொண்டு வருகிறபோது அரண்ணியமகாராசன் தன்னுடைய சேனைகளை யூகமிட்டு நிறுத்தித் தான் முன்னின்று வில்லைவளைத்து நாணிபிடித்து மூன்று திவ்வியாஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்துவிட்டான். அதுகண்டு சேனைகளெல்லாம் பின்வாங்கி ஓடத்தலைப்பட்டார்கள். அப்போது அரண்ணியராசன் ஓடுகிறவர்களையெல்லாம் ஓடவொட்டாமல் நிறுத்தி ரதத்தை நடத்தி படைகளையெல்லாம் நெருங்கிவரவொட்டாமல் பாணங்களினாலே அடித்துக்கொல்லுகிறபோது இராட்சதாளும் பின்வாங்காமற் சேனைகள்பேரில் விழுந்து ஈட்டி குத்தம் பாசம் சூலம் கதை இருப்புலக்கை இதுகளால் குத்தியும் இடித்தும் அடித்தும் கடித்தும் அதம்பண்ணுகிறபோது சேனைகளெல்லாஞ் சின்னாபின்னமாயிறந்துவிட்டது அதுகண்டு அரண்ணிய மகாராசன் கடுஞ்சினங்கொண்டு இராட்சதாள்பேரிலே முனைந்து திவ்வியாஸ்திரங்களைவிட்டுக் கொல்லுகிறபோது நீலாட்சதன்கண்டு அதிககோபாக்கினியுடன் இரதத்தை நடத்தி வில்லைவளைத்து நூறுநாராச பாணங்களை யெடுத்து விடவே அப்பாணங்களானது நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டுவருகிறதை அரண்ணியமகாராசன்பார்த்து நூறு திவ்வியாஸ்திரமெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம்பண்ணினான். அந்த அஸ்திரங்களானது புறப்பட்டு நூறு நாராச பாணத்தையும் அறுத்துத்தள்ளவே நீலாட்சதனானவன் தட்சணம் ஒரு அக்கினியாஸ்திரமெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து அபிமந்திரித்துவிட்டான். அது அக்கினிப்பொறிகளை வாரியிறைத்துக்கொண்டுவடவாமுகாக்கினிபோல திகுதிகென்றெரிந்துக்கொண்டு புறப்பட்டது. அரண்ணியனும் ஒருவருணாஸ்திரத்தையெடுத்து மந்திரத்தையோதி விடுத்தான் அந்த அஸ்திரம் சப்தமேகங்கள்கூடி இடி மின்னல் குமுறலுடனே நடங்கொண்டு சொரிவதுபோல் அக்கினியாஸ்திரத்தின்பேரிற்சொரிகிறபோது அக்கினியாஸ்திரத்தின் வலிகுலைந்து பூமியில் விழுந்துவிட்டது.

அதனைப்பார்த்து நீலாட்சதன் கருவி மீசையை யுருவி ஆ! ஆ! இவனா என்னுடைய பாணத்தையறுக்கிறவன் பார்ப்போமென்று ஐந்து சிங்கமுகபாணம் வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான் அந்த சிங்கமுகாஸ்திரமானது புறப்பட்டு அரண்ணிய மகாராசனுடைய கவசத்தை யறுத்து சரீரத்தையும் சல்லடைக் கண்களாக துளைத்துவிட்டது. அதற்கு அரண்ணியமகாராசன் சற்றுமஞ்சாமல் அனேகதிவ்யாஸ்திரங்களைவிட்டு நீலாட்சதன் சிரசைச் சல்லடைக்கண்களாகத்துளைத்து ஐந்துபாணம்விட்டு அவனேறிவந்த இரதங் குதிரைகளுடன் பொடிப்பொடியாகும்படிச் செய்தான். அதுகண்டு நீலாட்சதன் பற்களை நெறநெறவென்று கடித்து பவுஞ்சியில் கையைவைத்து வாளையெடுத்து அரண்ணிய மகாராசனை வெட்டவேணுமென்று ஓடிவருகிறதைக்கண்டு அரண்ணியமகாராசன் ஒரு அர்த்தசந்திரபாணமெடுத்துவில்லினிடமாகச் சந்தித்துவிட்டுக் கையிற்பிடித்த வாளாயுதத்தைத் துண்டாக்கி விழச்செய்யவே நீலாட்சதனும் ஒருதெண்டாயுதத்தையெடுத்துச் சுழற்றி அரண்ணியமகாராஜன் ஏறிவந்த இரதத்தின்மேலடித்தான் அந்த அடியானதுபடவே இரதமானது சக்கைசக்கையாய்ப்பிளந்துவிட்டது. அதுபோகவே அரண்ணியமகாராசனானவன் மறுதேரிலேறி வில்லையெடுக்குமுன்னமே நீலாட்சதன் அந்த தேரையும் உடைத்துவிட்டவனையும் கைகாலாட ஒட்டாமற்செய்தானிப்படி பத்து ரதங்கள் வரைக்கும் தூள்தூளாய்ப் போகவே நீலாட்சதனுக்கு வேறு ரதமில்லாதபடியினால் பாதசாரியாய்ப் புறப்பட்டான். அது கண்டு அரண்ணிய மகாராசன் இதுதான் சமயம் இவனைக கொல்லுகிறதற்கென்று பாணங்களைச் சரமாரியாய் விடுகிறபோது நீலாட்சதன் அப்பாணங்களையெல்லாம் எட்டிப்பிடித்து ஒடித்தெறிந்துவிட்டு இனியிருந்தால் உயிர்ச்சேதம் வருமென்றறிந்து உயிர் தப்பியிருந்த ராட்சதர்களைக் கூட்டிக்கொண்டு மாய்கையாய் ஆகாயமார்க்கத்திலெழும்பிச் சத்துருக்கமகாராசனிட தண்டில்வந்து புகுந்திருந்தான். அப்போது சூரியபகவானும் மேற்குத்திசையில் மறைந்தார். அது கண்டு அரண்ணியமகாராசன் ஏதடா இராட்சதன் மோசம் பண்ணி ஓடிப்போய்விட்டான். இவ்வளவு நிர்வாகசாலியோ நம்மைச் செயிக்கப்போகிறவன் அன்றியும் எதிர் நின்று

யுத்தம்பண்ணுமற் புறமுதுகுகொடுத்து ஓடிப்போகும் வீரர்களோ அஸ்வமேதயாகம் பண்ணப்போகிறவர் அதுவுமவலந்தான் மேலும் இருட்டுகாலமாயிற்று இனி யுத்தம் நடவாது நாளையத்தினம் பார்த்துக்கொள்ளலாமென்று ரதத்தை நடத்திக்கொண்டு வாரணுபுரிக்குச் சேனைகளுடன் போகையில் சேவகருங் குதிரையைக் கொண்டுபோய் லாயத்திற் கட்டிவிட்டு சோமகாசமகாராசன் குமாரவர்க்கங்களுடனும் மந்திரி பிரதானி நால்வகைச்சேனையுடனும் ஆலோசனைசெய்துக்கொண்டிருக்கையில் அரண்ணியமகாராசன் கொலுமண்டபஞ்சென்று தன் தந்தையாகிய சோமகாசமகாராசனுக்கு இந்தச் செய்திகளைச் சவிஸ்தாரமாகச் சொன்னுன்.

சோமகாசமகாராசன் கொலுவிருந்து
மந்திராலோசனை செய்கிறது.

விருத்தம்.

துய்யவந்தனரமைச்சரு மமைச்சருஞ்சூழ
செய்யசோமனுந் திருந்தச் சிங்காதனத்திருந்து
வையமாய்திடராமனுல் வருபெருஞ்சமர்க்குச்
செல்வதென்னென மந்திராலோசனைசெய்வான்.

இதுகளைக்கேட்ட சோமகாசமகாராசன் சற்றுலோசித்துச்சொல்லுகிறுன். ஓய் மந்திரிபிரதானிகளே! இராவணகும்பகர்ணுதிகள் அற்பசொற்பரல்ல அவர்களோ திரிலோகத்தையும் ஆண்டவர்கள் அவர்களைக்கொல்ல திரிமூர்த்திகளாலுமுடியாது அப்பேர்க்கொற்றவர்களைக் கொன்று ராட்சதாளை அடிமைபடுத்திக்கொண்ட ஸ்ரீராமனுக்கு எவ்வளவுபலமிருக்கவேண்டும் அதையோசியாமல் அவர்விட்ட குதிரையைப்பிடித்துக்கட்டி யுத்தம்புரிந்து வெற்றியடைய நமக்குத் திரமுண்டோ? யுத்தத்திற்கு வருகிறவர்களோ நம்மைப்போன்ற ராசாக்களுமல்லாமல் ராட்சதக்கூட்டங்களும் மிச்சமாயிருக்கிறபடியால் நம்முடைய சேனைகள் அவர்கள் முன்னின்றுயுத்தம்பண்ணமாட்டார்கள். அந்த ராட்சதர்களோ மாய்கையில் மிஞ்சினவர்கள் அந்த மாய்கையையறிந்து செயிக்கத்தக்கவர்கள் ஆரிருக்கிறுர்கள். மேலும், அவர்களுடைய பலத்திற்கு நம்முடையபல மணுவாக முடியுமாகையால் யுத்தம்பண்ணுகிற தொழிலைவிட்டுச் சமாதானமாவதொன்று அல்லது நம்

முடைய யானை தேர் பரி சேனைகளைக் கூட்டிக்கொண்டு கோட்டைக்கு வெளியிற்சென்று ஒருவர்க்கொருவர் போர்புரிந்து கீர்த்தியடைவதென்று அதுவுமன்று நமதுபட்டணத்திற்குள்ளிருந்தபடியே கொஞ்சமாய்ச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தம்பண்ணுவதொன்று இம்மூன்றில் எதுயுத்தமாக உங்களுக்குந் தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்களென்று கேட்கையில் தூறுவாசனென்னப்பட்ட மந்திரி கூறலுற்றான் ஐயா! சோமகாசமகாராசனே! கேளும் ஸ்ரீராமபிரான்விட்ட அஸ்வமேதக் குதிரையை உமது மூத்தகுமாரனாகிய அரண்ணியமகாராசன் பிடித்துக்கட்டி ராட்சதாளுடன் யுத்தம்பண்ணி ராட்சதாளையுங்கொன்று குதிரையும் பிடித்துவந்தபின்பு சமாதானமென்றால் சண்டைசெய்யப்பயந்து சரணமடைந்தார்களென்று நம்மைப்போலிருக்கும் ராசாக்களும் கைகொட்டி கெக்கலிபுரிந்து நகைப்பார்கள் மேலும் புலிக்குப்பயந்த சிங்கம்போலும், எலிக்குப்பயந்த பூனைபோலும், யானைக்குப்பயந்த ஆண்சிங்கம்போலும், சேனைக்குப் பயந்த திறமற்றவனைப் போலும், நம்மையெல்லோரும் மதிப்பின்றி வசைசொல்லுவார்கள் அதுவா வீரம் அவ்வார்த்தையை விட்டுவிடும் அடியேன்பகருவதைக்கேளும் அண்ணலே திரிமூர்த்திகளையுஞ்செயிக்கத்தகுந்த வீரதீரமும் சூரத்துவமுமுள்ள இளையகுமாரன் சுரதமகாராஜனிருக்கையிற் பயமென்ன செயமடைவோமே தவிர, அபஜெயமடையமாட்டோம் மேலும், ராட்சதாளைவெல்லவுங்கொல்லவும் எட்டுதிக்கிலும் நமதுபேர் சொல்லவும் தேவர்திறங்களுமுண்டு இராவணாதிகளைக்கொன்ற ராமபிரானும் சுரதராசன் வில்லுக்கு நிகராகார். அவர்களே வலியவந்து நம்மைவணங்குவார்கள். இதுவுமல்லாமல் முன்னால் உம்மைமிரட்டிக்கொண்டிருந்த பரசுராமன் சுரதராசனுடைய யுத்தத்திற்குமகிழ்ந்து அனேக திவ்வியாஸ்திரங்களுங் கொடுத்து ஆசீர்வதித்துப்போயிருக்கிறார் அப்படிக்கொத்த அஸ்திரங்களிருக்கையில், இப்போது பின்வாங்குவானேன் அதுவுமல்லாமல் உம்முடைய தவத்திற்கு மெய்மகிழ்ந்து சிவசுப்பிரமணியர் கொடுத்த வேலாயுத மிருக்கும்போது குறைவென்ன அரண்ணிய மகாராசன் சுவேலமகாராச னிருவர்கள் பின்பல மிருக்கத் தாழ்வுண்டோ கையிலாகாத சில ராட்சதர்களைக் கொன்றோமென்று கெர்வத்தினாலே நம்மை யெல்லாம் பெண்களாக்கி அவனே ஆண்பிள்ளை சிங்கம் மற்றவர்களெல்லாம் வீரியமில்லாதவர்களென்று தன் பிரதாப சவுரி

யத்தையெழுதிக்குதிரைநெற்றியிற்கட்டி அதன்பின் சத்துருக்கனையும் இராட்சதாளையுங்கூட்டி யனுப்பினன். அப்படியனுப்பின இராமனுடைய திரத்தையும் அந்த சத்துருக்கனுடைய திறத்தையும் பார்ப்போம். நாம் பட்டணத்தி லிருந்தபடியே கொஞ்சமாகச் சேனைகளையனுப்பி யுத்தஞ்செய்து செயிக்கவேணுமேயல்லாமல் ஒருமிக்கக்கூட்டி போர்புரிந்தால் இராட்சதாள் மிஞ்சிவரக்கண்டு நமது சேனைகளுஞ் சின்னபின்னமாய் நாலுமூலையும் ஓடுவார்கள். அப்போது நமக்குத் தொந்தரவாகும் ஆகையால் நாளைவுதயத்திற்கே யுத்தத்திற்குப் புறப்படவேணுமென்றான் தூருவாசனென்னு மந்திரியானவன் அதுகேட்டு அச்சபையிலுள்ள சகலரு மனக்கலக்கந்தீர்ந்து சந்தோஷமானார்கள்.

அந்தவேளையில் சுவேலமகாராசன் தகப்பனாகிய சோமகாச மகாராசனைப்பார்த்துச் சொல்லுகிறான். கேளும் பிதாவே அடியேனுக்கு நாளையதினம் யுத்தஞ்செய்யச் செலவுகொடுத்தீரேயானால் நான் சென்று சத்துருக்கனுடைய சேனைகளை முறிய அடித்துச் சத்துருக்கனையும் செயம்பண்ணிவருகிறேனென்று நமஸ்கரித்துகூறச் சோமகாசமகாராசன்கேட்டு அப்பா சுவேலா நீசிறுபிள்ளையாயிற்றே, உன்னை யெப்படி இராட்சதாள் தண்டுக்குள்ளனுப்புகிறது. போகவேண்டாமென்றாலும் உன்மனதிற்குக் கோபமாயிருக்கும் அவர்களோ இராட்சதாள் மாயையில் மிகுந்தவர்கள் அவர்களைவெல்ல, உன்னால் வல்லமையுண்டோ சொல்லென்றுகேட்க, பிதாவே என்னவசனஞ் சொன்னீர் க்ஷத்திரியராய்ப் பிறந்தவர்கள் இராஜாக்கள் சண்டையென்றும், இராட்சதாள் சண்டையென்றும் பார்ப்பார்களோ அதுகீர்த்தியா சிறுபிள்ளைகளே நாளை பெரியவர்கள் சிறுபிள்ளைகள் யுத்தத்திற்குப் பின்வாங்குகிறதும் பெரியோர்கள் முனைகிறதும் நாளையதினம் சத்துருக்கன் தண்டிலேதெரியவரும் எத்தனைகாலம் உயிரோடுபிழைத்திருந்தாலும் ஒருநாளைக்கிறப்பதே நிச்சயம் இதற்கு சந்தேகப்படவேண்டாம் நாளைய உதயத்திலே யுத்தத்திற்குப் போகிறேனென்றான்.

அதுகேட்டு சோமகாசமகாராசனும் விசனந்தீர்ந்து சந்தோஷமடைந்து சேனாதிபதியான பவர்னனைப்பார்த்து ஓய், பவர்ன! நூறக்ரோணி சேனைகளும் இருநூறுலட்ச மக்ரோணிரதங்களும் நூறுலட்சமக்ரோணி குதிரைகளும், இருநூறுலக்ஷமக்ரோணி காலாள்களும், தயார்படுத்திப் பிரயாணஞ் செய்யென்றார். அப்படியே பவர்னனும் சென்று சேனைகளை வெளிப்படுத்தினன் அதெப்படியென்றால் கன்னமதங் கபோலமதங் கரடமதமென்றுசொல்லப்பட்ட மும்மதங்களும் பொ

ழியானின்ற யானைகள்மீதுங் குதிரைகள்மீதும் அம்பாரிகள் வைத்து இராசமன்னர்களும் வில்லம்புகள் ஏந்திக்கொண்டு மாவுத்தனையெச்சரித்து ஆனைகள்மீதேறிப் புறப்பட்டார்கள். அப்போது முப்பத்திரண்டு மேளவாத்தியங்களும் தாம்தா மென்று முழங்கச்செய்தார்கள். அதுகேட்டு சோமகாசமகா ராசன் சகலருக்கும் விடைகொடுத்துத் தானும் குமாரவர்க்கங் களுடனே அரண்மனைக்குப் போயினான்.

இப்பால் நீலாட்சதனும் சிலராட்சதர்களும் ரணக்களத் திற் பின்முதுகுகாட்டி ஓடி சேனாதிபதியான காலசித்தனுட னே நடந்த செய்திகளை சவிஸ்தாரமாகப் புகலக்கேட்டு கால சித்தன் சத்துருக்கமகாராசன் அண்டையிற்போய் ஐயா சத்து ருக்கமகாராசனே! நமது குதிரை வாரணாபுரி பட்டணத்தை யாளப்பட்ட சோமகாசமகாராசன் குமாரன் அரண்ணிய மகா ராசனானவன் பிடித்துக்கட்டி அதின் பின்போன ராட்சதாளை யுங்கொன்று நீலாட்சதனையும் பின்முதுகுகாட்டியோட அடி த்துத் துரத்திவிட்டானென்றும் கூறியதைக்கேட்ட சத்துரு க்கமகாராசன் சினந்து, மிகவுங் கடுகடுத்து, வாராய் காலசித் தனே! என்கையூரல்தீர யுத்தம்பண்ணினபேரைக் காணேன். விருதாவிலே நம்முடைய குதிரையைப் பிடித்துக்கட்டி மாண் டுபோனார்கள் ஆனபடியால் நம்முடைய சேனைகளையெல்லாம் வாரணாபுரிபட்டணத்தின்பேரில் நடத்தென்றான்.

அதுகேட்டு காலசித்தனும், வாரணாபுரியின் தெற்குமேற் குமுகமாய் வெட்டாரவெளியில் பாளையமிரங்கி பவுஞ்சிட்டு நிறுத்தினான். அக்காலையில் சத்துருக்கரானவர் மட்சயந்த மகாராசனைப்பார்த்து வாரும் மட்சயந்தமகாராசனே! நாம் விட்ட குதிரையை இந்த ராஜகுமாரன் பிடித்துக்கட்டி சிறிது இராக்ஷதாளைக்கொன்றுபோட்டு பட்டணம்போனான் அவனை இப்போது வெளிப்படுத்திவைக்க என்னயோசனை சொல்லு மென்றுகேட்க, மக்ஷயந்த மகாராஜன் சொல்லுகிறான்.

வாருமையா, சத்துருக்கமகாராசனே! இந்தப்பட்டணத் தையாளப்பட்ட சோமகாசமகாராசனுக்கு அரண்ணியமகாரா சனென்றும் சுரதமகாராசனென்றும் சுவேலமகாராசனென் றும் மூன்றுகுமாரர்க ளிருக்கிறார்கள் அவர்களோ ஒருவரைப் பார்க்கிலும் ஒருவர் சாமார்த்தியமுள்ள இராசாக்கள் சத்திய வாசகர் அரிபக்த சிரேஷ்டர்கள், வரப்பிரசாதிகள். இவர்க ளிலே சுரதமகாராஜன் மகாபலவான் வரப்பிரசாதி சிவன்கை

வில்லைவாங்கி பரசுராமனேமெச்ச யுத்தஞ்செய்து கீர்த்திபெற்றவன் பராக்கிரமசாலியானவன் அவனுஞ் சண்டைக்கு வருவான். அவன் வில்லுக்கு நிகரானவில் இந்த தண்டிலில்லை, ஆகையால் அவர்களுடனே யுத்தம்பண்ணமற் சமாதானமாய் குதிரையை விடுவித்துக்கொள்ளலாம், இல்லையென்றால் நமக்காக ஹரிஹரப்பிரமாதிகள் வந்தாலும் போர்புரிந்து செயிக்கமாட்டோமென்றான்.

அதுகேட்டு சத்துருக்கராஜன் கோபங்கொண்டு ஓ! மட்சயந்தமகாராஜனே! இராசாக்களாய்ப் பிறந்தவர்கள் சாகப்பயந்து எல்லாருமிப்படிச் சொல்லலாமோ சிவன்கை வில்லானுலுமென்ன, விஷ்ணுவின் நாராயணஸ்திர மானுலுமென், என் கையில் ஸ்ரீராமபாணமிருக்க எந்த பாணங் கெலிக்கப் போகுதோ பார்ப்போமென்ற சத்துருக்கமகாராஜனைப்பார்த்து காலசித்தன் சொல்லுகிறான். கேளுமையா சத்துருக்கரே, இரணமுகத்தில் முதுகிட்டோடாம லிறந்தால் கீர்த்தியுண்டு அதைவிட்டு இந்த ராஜனை ஒருபொருளாகயெண்ணி சமாதானஞ்செய்து குதிரையை விடுவித்துக்கொள்ளுகிறதா நன்மை? நம்மை வணங்குமவரை நாமாவணங்குவது அப்படிச் செய்யாமல் யுத்தம்பண்ணிச் செயித்துக் குதிரையை விடுவித்துக் கொள்ளுகிறதா நன்மை? நம்மை வணங்குமவரை நாமாவணங்குவது அப்படிச் செய்யாமல் யுத்தம்பண்ணிச் செயித்துக் குதிரையை விடுவித்துக்கொள்ளுகிறதே காரியமென்றான் அந்தச்சமயத்தில் வாரணபுரிபட்டணத்திற் பயணபேரியறைவித்தார்கள்.

இரண்டாம்நாள் யுத்தம்.

அந்தச் சத்தங்கேட்ட சத்துருக்கமகாராசன் சேனுதிபதியான சூரசேனனையும், உக்கிரசேனனையும் பார்த்துச் சொல்லுகிறார் வாருஞ்சேனுதிபதிகளே வாரணபுரி பட்டணத்தில் பயணபேரிசத்தமடிபடுது. நமது சேனைகளையெல்லாம் பவுஞ்சிட்டுநிறுத்தி யுத்தத்திற்கு ஆரம்பஞ் செய்யுமென்று உத்திரவுசெய்தான். அப்படியே சேனுதிபதிகளும் ஆனைகளொருபக்கம், இரதங்களொருபக்கம், குதிரைகளொருபக்கமாக நிறுத்தி, வீரசேனன் முதலான இராஜாக்கள் அந்தயிடங்களிலே முன்னுகநின்று வில்லைவளைத்துநாணேசைபுரிந்தார்கள். அப்போது மகாமாயன், சலவசந்தன் படைத்தலைவர் சேனுதிபதி

களும் யுத்தசன்னுத்தராய்' சேனைகளுக்கு முன்னின்று வில்லை யெடுத்து வளைத்து நாணிபிகிந்தார், சத்துருக்கமகாராசனும், மட்சயந்தமகாராஜனும், நடு அணியில் நின்றார்கள். அப்போது இரணபேரிகையைத் தாம்தாமென்று முழங்கினார்கள். சூரியனும் உதயமாக ஐந்து நாழிகை யிருக்கின்றது. அந்தச்சமயத்தில் தூதுவர்களோடி சுவேலை மகாராஜனைக்கண்டு சேவித்துச் சொல்லுகிறார்கள் ஐயா இராஜாதிராஜரே சுவேலை மகாராசனே கேளும், இராஜர்களுடைய தண்டும், இராக்ஷதாளுடைய தண்டும், நமது பட்டணத்துக் கருகாமையாய் வந்து இறங்கிவிட்டதென்றான். அதுகேட்டு சுவேலை மகாராஜன் ஸ்நான செபதபங்களை முடித்துக்கொண்டு போஜனமருந்தி கைகாலலம்பிக் கந்தகஸ்தூரி பரிமளாதிகளணிந்து கற்பூர தாம்பூலந்தரித்துத் தன்னுடைய தேவியினிடத்திற் செலவு பெற்றுக்கொண்டுகிரீடந்தரித்து கவசங்களுமணிந்துமுதுகில் அம்புருப்பொதியுங்கட்டி கையிற் றனுசும் பிடித்துக்கொண்டு அரண்மனை வாசற்படியைவிட்டு ஆடல்பாடல்சங்கீதத்துடன் வருகிறபோது சாரதியானவன் இரதத்தைச்சிங்காரித்துக்கொண்டுவந்து நிறுத்தினான். அந்த இரதத்தின்பேரில் சுவேலை மகாராஜன் ஆயுதங்கள் மூவ்ஸ்தீப்புகளாக படைகள்சூழ, ஆரோகணித்துக்கொண்டான் அப்போது பயணபேரியடித்தார்கள். அந்த ஓசையைக் கேட்டவுடனே தனக்கு நிகரானபலம் பெற்ற (1500) இராசகுமாரர் ரதாரூடராய் மந்திரிமார்களுடனும் புறப்பட்டார்கள். அப்போது சூரியனும் சுவேலைமகாராஜாவின் யுத்தம்பார்க்க வருபவரைப்போல உதயகிரி பர்வதத்தில் உதயமானார். தேவர்களும் ஆகாயவீதியில் வந்துநிறைந்தார்கள். அக்காலையில் யானைகள் முன்னும், இரதங்கள் பின்னுங் குதிரைக் ளதன்பின்னும் அணியணியாகச் சேனைகளுடன் முப்பத்திரண்டுவாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கிப் பூமியதிர, அண்டத்திலுள்ள தேவர்கள்திடுக்கிட ஆரவாரத்துடன் கோட்டைவாசற்படி கடந்து சத்துருக்கமகாராசனுடைய தண்டுக்கெதிராய்ப் பாளையமிறங்கிப் பவுஞ்சிட்டு நிறுத்தி வில்லைவளைத்துப் பாணங்களைப்பூட்டி யெதிர்த்து யுத்தம்பண்ணுகையில் இரதங்களோடு ரதங்களுடுதாக்கவும், குதிரைகளுடன் குதிரை கனைக்கவும், காலாள்களோடு காலாள்களெதிர்த்து கத்தி கேடயம் ஈட்டி எறியீட்டி குந்தம் வளைதடி சக்கரம் வேலாயுதம் சூலம் கெதை வாள் முதலிய முப்பத்திர

ண்டு ஆயுதங்களுமெடுத்து திவ்றிவ்வென்று எறிந்து யுகாந்த காலம்போல மூண்டுக்கொண்டது யுத்தமானது அப்போது இருத்திறச் சேனைகளிலும் கால்வேறு கைவேறு உடல்வேறு முழங்கால்வேருகச் சேனைகள் மடிந்துவிழுந்து உதிரவெள்ள மானது ஆறுபோல் ஓடத்தலைப்பட்டது. அதுகண்டு சுவே லைமகாராசன் கோபதீப்தனு எறிந்துவிழுந்து வில்லைவளை த்து குணத்தொனிபண்ணி பாணங்களை விட்டுக் கொல்லுகிற போது சூரசேனன்கண்டு அதிக கோபத்துடனே இரதத்தை நடத்தி வில்லைவளைத்து பாணங்களைப்பூட்டி சுவேலைமகாரா ஜன்பேரில் வந்தெதிர்த்தான். அதுகண்டு (1500) இராசாக்க ளும் இரதங்களை நடத்திச் சேனைகள்பேரில் பாணங்களைவிட் டுக் கொல்லுகிறபோது உக்கிரசேனனுனவன் கண்டு ரோஷத் துடன் இரதத்தை நடத்தி வில்லைவளைத்து ஆயிரத்தைந் நூறு இராசகுமாரர்களையும் வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய் தான். அதுகண்டு ஆயிரத்தைந்நூறு இராசகுமாரர்களும் இரதத்தை நடத்திச் சேனைகள்பேரில் கவிந்து பாணங்களைப் பூட்டிச் சேனைகளைக் கொல்லுகிறபோது வீரசேனன் கண்டு மனந்தாளாமல் இரதத்தைநிறுத்திஆயிரமந்திரிகளையும்வளை த்துக்கொண்டு யுத்தஞ்செய்தான். அந்தச்சமயத்தில் சுவேலை மகாராஜன் வில்லைவளைத்து பத்துநாராசபாணமெடுத்து வில் லிற்சந்தித்து சேனைகள்பேரிற் பிரயோகஞ்செய்தான். அந்த ப்பத்து நாராசமும் நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வருகிற போது சூரசேனனுனவன்கண்டு உக்கிராகாரனுய் மகாகோபத் துடனே பதினைந்து நாராசமெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டு அறுத்தெரிந்தான். அதுகண்டு சுவேலைராஜன் இருபது அர் த்தசந்திரபாணமெடுத்து வில்லிற்சந்தித்துவிட்டான். அந்த இருபது அர்த்தசந்திரபாணமும் வில்லில்விடுபட்டு தகத்த காயமாய் நெருப்புப்பொறிபறக்க வருகிறபோது சூரசேனனு ம் இருபத்தைந்து அர்த்தசந்திரபாணம்விட்டு அறுத்தெறி ந்து நான்குபாணம்விட்டுச் சாரதி குதிரைகளையுங் கொன்முன்.

அதைப்பார்த்துச் சுவேலைராஜனும் மறுதேரிலேறி வில் லையெடுத்து அதிகதீக்ஷணியமாயிருக்கப்பட்ட நான்கு திவ்வி யாஸ்திரங்களைவிட்டு வீரசேனனுடைய சாரதிகளை அதம்ப ண்ணிப்போட்டான். அதுபோகவே சூரசேனனுனவன் லகு விலேகுதித்து தப்பித்துக்கொண்டுமறுதேரிலேறினன். அந்த இரதத்தையும் சாரதி குதிரைகளுடன் அதம்பண்ணிவிட்

டான். அந்த ரதம்போகவே சூரசேனனானவன் லகுகொண்டு பாய்ந்து மறுதேரிலேறினான். அதையுந் தவிடுபொடியாக்கினான். இப்படி இருபத்தைந்து ரதம்வரையில் தும்சம்பண்ணவே சூரசேனனுக்குக் கண்கள்சிவப்பேறி கடுங்கோபமீறிப் பத்து திவ்வியாஸ்திரமெடுத்து சுவேலைராஜன்மார்பிலணிந்த கவசத்தைப்பொடியாக்கினான். அந்தக் கவசம்போகவே சுவேலைராஜனானவன் சிங்கமுகாஸ்திரமேவி சூரசேனனுடையவில்லைக் கண்டித்து மார்பீற்றுக்கவே சூரசேனனானவன் ஆயாசத்தோடு ஸ்ரீராமாவென்று மூர்ச்சையானான். அதுகண்டு சுவேலைராஜன் வெற்றிச்சங்கையெடுத்தூதி வில்லைநாட்டி சேனைகளின்மீது அஸ்திரங்களைவிடுத்துக் கொல்லுகிறபோது சேனைகளானது சின்னாபின்னமாய் விழுந்து உதிராறு ஓடத்தலைப்பட்டது. அதுகண்டு கொங்கணமகாராஜன் இரதத்தை நடத்தி வில்லைவளைத்து அபரிமிதமாய் பாணங்களைப்பூட்டி சுவேலராஜனைக் கைகாலாடவொட்டாமலும், பாணங்களைப் பூட்டவொட்டாமலும், இரதத்தை நடத்தவொட்டாமலுஞ் சரங்களினால் அடிக்கிறபோது சுவேலைராஜன் சற்றுநேரம் ஆயாசமடைந்து உடனே வில்லையெடுத்து நிறுத்தி நூறுநாராசம் விட்டுக் கொங்கணமகாராஜனை வில்லைத் தொடவொட்டாமலும், அஸ்திரங்களை விடவொட்டாமலும் சாரதியை இரதத்தை நடத்தவொட்டாமலும், பிரமிக்கச்செய்து நாலுதிவ்வியாஸ்திரம்விட்டு சாரதிகுதிரைகளை அதஞ்செய்து இரதத்தையுஞ் சக்கைசக்கையாய்ப்பேர்த்தெறிந்தான். அதுகண்டு கொங்கணமகாராஜன் மறுதேரிலேறினான். அந்த இரதத்தையும் நாலுபாணம்விட்டுச் சாரதிகுதிரைகளையும் அதஞ்செய்யவே மீண்டும் வேறொரு தேரிலேறினான். இப்படி பதினைந்து ரதம் உடைந்துபோகவே கொங்கணராஜன் பூமியில் நின்றபடியே சீக்கிரமாய் வில்லையெடுத்துநிறுத்தி ஐந்துதிவ்வியாஸ்திரமெடுத்துச் சந்தித்துவிட்டுச் சுவேலைராஜனை நோகச்செய்தான். அதுகண்டு சுவேலைராஜனும் மறுதேரிலேறி முப்பது நாராசம்விட்டு தேகமெங்குஞ் சல்லடைக்கண்களாகத் துளைக்க கொங்கணராஜன் வில்லை நழுவவிட்டு ஸ்ரீராமாவென்று இரதத்தைவிட்டுக் குதித்தோடிப்போக குதிரைகள் இரதத்தையிழுத்துக்கொண்டு போய்விட்டதுகள்.

அதுகண்டு சுவேலைராஜன் வெற்றிச்சங்கையெடுத்து பம்பம்மென்றூதி ரதத்தைச் சேனைகள்பேரில் நடத்தி வில்லையெ

டுத்து வளைத்து பாணங்களைத் தொடுத்து, சேனைகளென்னுங் காட்டைவெட்டிகொல்லுகையில்மாலுவராஜர்மனந்தாளாமல் சுவேலைராஜன் முன்னுக்கு இரதத்தைநடத்தி வில்லைவளைத்துப் புங்கானுபுங்கமாய் சரவருஷம்பொழியும்போது சுவேலைராஜனும் பாணங்களைவிட்டு மாலுவராஜாவின் அஸ்திரங்களையெல்லாமறுத்து அவ்வரசன் மார்பைப்பார்த்து ஐந்து நாராசத்தைப்பிரயோகித்தான். அதைமாலுவராஜன் சட்டைபண்ணமற் பதினைந்துநாராசம்விட்டு சுவேலைராஜனை பிரமிக்கச்செய்தான் அதனால் வருத்தமடைந்து சுவேலைராஜன் மிகவும் கடூரமானபாணங்களினால் மாலுவன் சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத்துளைத்துவிட்டான். மாலுவராஜன் ஸ்ரீராமாராமாவென்றுமூர்ச்சையடைந்தான். அதுகண்டு ஐம்பத்தாறு ராஜர்களும் சுவேலைராஜனுடனெதிர்த்து வெற்றியடையாமல் மூர்ச்சையானார்கள். அதுகண்டு சத்துருக்க மகாராசன் மகாகோபமாய் சாரதியை யெச்சரித்துச் சுவேலைராசன்முன் இரதத்தைநிறுத்தி வில்லையெடுத்து அதில் அதிக தீக்ஷண்யமாயிருக்கப்பட்ட பத்துநாராசமெடுத்துப் பிரயோகஞ்செய்துவிட்டுவிட்டார். அந்தப் பத்துநாராசமு மாலகாலவிஷத்தைப்போல் சீறிக்கொண்டுவந்து சுவேலைராசன் கையிற்பிடித்திருந்த வில்லையுங்கண்டித்து சாரதி குதிரைகளையுங்கொன்று, இரதத்திற்கட்டியிருந்த கொடியையும் வெட்டித்தள்ளியது அதுகண்டு சுவேலைமகாராசன் மற்றொரு இரதத்திலே ஏறிக்கொண்டு அதிக தீக்ஷண்யமான இருபத்தைந்து திவ்வியாஸ்திரங்களெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துத் தொடுத்திடவே அந்த திவ்வியாஸ்திரமானது, காட்டுத்தீயைப்போ லெறிந்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடன் வருகிறதை சத்துருக்கன்பார்த்து பத்து திவ்வியாஸ்திரமெடுத்து ஆலகால விஷத்தைப்போற் சீறிக்கொண்டுபோய் சுவேலைராசன்விட்ட திவ்யாஸ்திரத்தின்பேரில் தாக்கினதால் அவ்விருபத்தைந்து திவ்யாஸ்திர மூறிந்து பூமியில் விழுந்துபோயிற்று அதுகண்டு சுவேலைராசன் கோபாவேசங்கொண்டு பற்களை நெறநெறவென்று கடித்து ஒரு சுழற்பாணத்தை எடுத்து சத்துருக்க மகாராசன் இரதத்தைப் பார்த்துவிடவே அதற்குச் சத்துருக்கனானவன் ஒரு கண்டங்கத்திரி பாணத்தைவிட்டு அறுத்தெரிந்து ஐந்து திவ்வியாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிட அது சுவேலன்மார்பிற்பட்டு முதுகிலுருகிப்போகவே

அடியற்ற வாழைமரம் சாய்ந்தாலெப்படியோ அதுபோல ரதத்தின்மேற் சாய்ந்து மூர்ச்சையானான்.

இப்போது ஆயிரத்தைந்நூறு ராசகுமாரர்களும் வெகு கோபாக்கினியுடனே உக்கிரசேனனை வளைத்துக்கொண்டுபாணங்களையெல்லாம் அறுத்து வெட்டவெளியாக்கினான். அதனுலிராசகுமாரர்கள் கோபங்கொண்டு உக்கிரசேனன்பேரில் மிதமில்லாத அஸ்திரங்களைவிட்டு கைகாலாடவொட்டாமலும் சாரதி ரதத்தை நடத்தவொட்டாமலுமடக்கி உக்கிரசேனன் சேனைகளைக் களைக்கும்படியாய் பாணங்களாலடிக்கிறபோது அவன் நிர்வகிக்கமாட்டாமல் மெய்மறந்து போகையிற் சுகனுணவன் மனம்பொறுமல் ரதத்தை நடத்தி வில்லைக்குணத்தொனிபண்ணி அனேக அஸ்திரங்களை விடுத்து எதிர்வரும் அஸ்திரங்களையெல்லா மறுத்து வெட்டவெளியாக்கினான். அப்போது மட்சயந்த அனுமான் வெகுகோபாக்கினியுடனே ஒரு ஆலவிருட்சத்தின்பேரில் பாய்ந்து அந்த விருட்சத்தை சல்லிவேருட்பட அடியோடு பிடுங்கி அடியும் நுனியுந்தரித்து கையிற் பிடித்துக்கொண்டு ராசகுமாரர்கள் கும்பிற் புகுந்து அவர்கள் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் நொறுக்கி ரதங்களைப் பார்த்து ஓரடிக்கு பத்து இருபது இந்தப்படியாயடித்து அச்சுவேறு ஆணிவேறு மச்சுவேறு கொடைவேறு கொடிச்சீலைவேறு சாரதி வேறு குதிரை வேறு ராசமன்னர் வேறு வேருக்கத் தலைப்பட்டது. அதுகண்டு இராசகுமாரர்கள் இதேது காட்டிலிருக்கிற குரங்கானது ஒருமரத்தைப் பிடுங்கிக்கொண்டு அடித்து ராசகுமாரர்களைக்கொன்று நம்முடனே யுத்தத்திற்கு வருகிறதே யார்வளர்த்துவிட்ட குரங்கோ அதனுடைய குரங்குசேஷ்டையைக் காண்பித்தது பார்த்தீர்களோ நமது பாணத்தின் சுருக்குத் தங்கும்படியாய் அஸ்திரத்தைவிட்டுக் கொல்லவேணுமென்று அஸ்திரங்களை விடுத்துப் பிடித்திருக்கிற மரத்தை தும்பு தும்புகளாகச்செய்து மட்சயந்த அனுமானை அஸ்திரத்தால் மூடிப்போட்டார்கள். அப்போது மட்சயந்த வனுமானும் வருகிற பாணங்களையெல்லாம் உதறிப்போட்டு ராசமன்னர் கூட்டத்திற் சிவ்வென்று பாய்ந்து ஒரு ரதத்தைக் கையிற்றூக்கிக்கொண்டு கிறுகிறுவெனச்சுழற்றி ராசாக்களேறிவந்த ரதத்தைப்பார்த்து விட்டெறிந்தான்.

அந்த ரதங்களும் ஒன்றோடொன்று ஊடுதாக்கி ரதங்களழியவும் அதிலிருந்த ராசமன்னர்கள் பார்த்து இது குரங்கல்ல நம்மையெல்லாங் கொண்டுபோற எமனிப்படி உருவமெடுத்து வந்தானோ அல்லவென்று ராட்சதன்ரூபங்கொண்டு வந்தவனாகவேண்டும் இதைக் குரங்கென்று நம்பவேண்டாம் இவனை நமதுபாணங்களினாற் கொல்லவேணுமென்று ராசமன்னரெல்லோரும் ஒருமிக்கக்கூடி நாலுமூலையுங் கவிந்து மட்சயந்தவனுமானையும் உக்கிரசேனனையும் குகனையும் வளைத்துக்கொண்டு பாணங்களை விட்டு கைகாலாடவொட்டாமல் அடிக்கிறபோது உக்கிரசேனனும் குகனும் மட்சயந்த அனுமானும் ராசகுமாரர்களை பங்குபோட்டு யுத்தம்பண்ணினார்கள். அந்தச் சமயத்தில் மட்சயந்தவனுமான் கைகளை நீட்டி ரதஞ்சாரதி குதிரைகளுடனே வாரிவாரி ஆகாயத்தில் விட்டெறிந்து கொல்லத் தலைப்பட்டான் உக்கிரசேனனும் உக்கிரத்துடனனேக திவ்வியாஸ்திரங்களைவிட்டு சாரதிகுதிரை ராசமன்னர்களுடன் கொல்லத் தலைப்பட்டான்.

இப்படி இரண்டுசாமபரியந்தம்போராடி ஆயிரத்தைந்நூறுராசமன்னர்களையுங் கொன்று எமலோகங் குடியேற்றினார்கள். அப்போது ஆயிரம் மந்திரிப்பிரதானிகள் வீரசேனனைவிடாமல் வளைத்துக்கொண்டு பாணங்களைவிட்டு கைகாலாடஒட்டாமலும் ரதத்தை நடத்தவொட்டாமலும் அடிக்கிறபோது, வீரசேனனும் பயப்படாமல் ரோஷத்துவேஷங்களுடன் அனேக அஸ்திரங்களைப் பிரயோகித்து வருகிறபாணங்களையெல்லாமறுத்து நபுரொன்றுக்கு ஐந்துதிவ்வியாஸ்திரங்களைவிட்டு சாரதிகுதிரை மந்திரிப் பிரதாணிகளையெல்லாஞ் சங்காரஞ்செய்து சண்டனூருக்கனுப்பிச் சங்கையெடுத்து செயஞ்செயமென்று ஊதினா னதுகண்டுராஜசேனைகளெல்லாம் மகாகோபத்துடன் ஏகோபித்துவந்து வீரசேனனையும்மட்சயந்தவனுமானையும் வளைத்துக்கொண்டு யுத்தம்பண்ணுகையில் மட்சயந்தவனுமானனவன் யானைக்கூட்டங்களில் புகுந்து யானைகளை வாரிவாரி யானைகளுடன்மோதியும் ஆகாயத்தில்விட்டெறிந்தும் குதிரைகளைவாரிக் குதிரைகளுடன்மோதியும் ரதத்துடன் ரதங்களை வாரியடித்தும் இந்தப்படியாய் நால்வகைச்சேனைகளையும் நாசஞ்செய்கிறது, எப்படியிருந்ததென்றால்,முன்னால் இந்திரசித்து யுத்தத்தில் அனுமாரானவர் எப்படிபோர்புரிந்தாரோ அவ்வாறாய் தகப்பன்பேர்போகாமல் நாலு

பக்கமும் வளைத்துக்கொண்டு ராசக்கூட்டங்களை சாடுகிறபோது, அந்தரத்திலிருக்குந் தேவர்க ளாச்சரியப்பட்டார்க ளப்போது வீரசேனன் உக்கிரசேனன் குகன்முதலாகிய வீரர்கள் நால்வகைச்சேனைகள்பேரில் அஸ்திரங்களைவிட்டு நாடவொட்டாமல் புறமுதுகுகொடுத்து வோடும்படியாய் மாய்க்கிறகாலத்தில், உதிரவெள்ளமான துவோட, அந்தவெள்ளத்திலே அநேகமுண்டங்களெழுந்து கூத்தாடுகையில் டாகினி, ஜாகினி, மோகினி, பிசாசுகள் சாப்பிட்டு உதிரவெள்ளத்தை வாரிக்குடித்து வயிரெடுக்காம லேப்பமிட்டுக் களிகொண்டு காடுகாத்திருந்ததுகள், சூரியனு மேற்குத்திசையில் மறைந்தான். அப்போது சத்துருக்கமகாராசனும் மட்சயந்தமகாராசனும் படைத்தலைவர்களும் பாடிகூடாரம்போய்ச் சேர்ந்திருக்கையில் சத்துருக்கமகாராசன் உக்கிரசேனனை யழைத்து நம்முடைய சேனைகளில் யார் விழுந்திருக்கிறார்கள், சொல்லென்றுகேட்க, ஐயா சத்துருக்கமகாராசனே கேளும், நம்முடைய சேனைகளுக்கெல்லாம் தளகர்த்தனான சூரசேனனும், ஐம்பத்தாறு தேசராசாக்களும், அறுநூ றக்ரோணி கால்பலமும் ரணக்களத்தில் விழுந்தார்களென்றான். அதுகேட்டு சத்துருக்கமகாராசன் சகலதுரைகளுடனும் ராஜசிரேஷ்டர்களுடனும், நாளை நடக்கவேண்டிய ராஜதிட்டங்களைப் பேசிக்கொண்டிருந்து சகலரையும் பாடிகூடாரங்களுக்குப் போகச்சொல்லி, மட்சயந்தவனுமானுடனும் ராசாக்களுடனும் பந்திபோஜனஞ்செய்து அவ்விரவைப் போக்கினார்கள் அப்போது உக்கிரசேனன் தண்டைச்சுழற்றி காவலாகவிருந்தான்.

இவ்விடத்திலிப்படியிருக்க, தூதுவர்கள் தலைமீதுகையை வைத்துக்கோடுகோடென்று அழுதுக்கொண்டு வாரணபுரிபட்டணத்திராஜனாகிய சோமகாசமகாராசனிடஞ்சென்று வணங்கி, ஐயா இராஜபரமேஸ்வரா இவ்விடத்திலிருந்து யுத்தத்திற்குப்போன நால்வகைச்சேனைகளும் சுவேலராசனும் யுத்தத்திலிறந்தார்களென்றுகூறவே சோமகாசமகாராசன் சிம்மாதனத்திலிருந்தபடியே அடித்துக் கீழேவிழுந்துபுத்திரசோபம்பெரிதானபடியால் மூர்ச்சையடையவே அரண்ணியமகாராஜனும் தகப்பனுரையெடுத்துக் களையாற்றி உட்காரவைக்க, சோமகாசமகாராசனனவன் தூதுவர்களைப்பார்த்து அடா, தூதர்களே! என்னுடைய இளையகுமாரன் சுவேலன் யாருடன் யுத்தப்பண்ணி யிறந்தான் அதை யெனக்குத் தெரியச்சொல்ல

வேணுமென்றுகேட்க தூதர்கள் சொல்லுகிருர்கள். ஐயா! தங்கள்குமாரன் அனேக இராட்சதாளைக்கொன்று கடைசியில் தண்டு தளத்துக்கு இராசாவாய்வந்த சத்துருக்க மகாராஜனு டனெதிர்த்து யுத்தஞ்செய்திறந்தார். அதுவுமன்றி ஆயிரத் தைந்நூறு இராசகுமாரர்களையும் ஆயிரம் மந்திரிப் பிரதானிக ளையும், மூன் அராசாக்களாய்க் கூடிக்கொன்ருர்கள். மேலும் காட்டில்கிடக்கிற ஒருகுரங்கானது நால்வகைச் சேனைகளையுங் கொன்றுவிட்டுப் போச்சுதென்றுகூறவே, சோமகாசன் மந்தி ரியான தாறுவாசனைப்பார்த்து ஓ! மந்திரி, ஆயிரத்தைந்நூறு அக்ரோணி சேனைகளுடன் யானைபுறவி சேனைகளையும் ஒரு குரங்குகொன்றதென்ருல் லினியென்ன யிருக்கின்றது நாளைய தினம் நான்யுத்தத்திற்குப்போ யந்தக் குரங்கை முன்னே கொ ன்று அதன்பிறகு சத்துருக்கனையும் அவன்சேனைகளையுங்கொ ன்று என்பழியைத் தீர்த்துக்கொள்ளுகிறே னென்ருன்.

அதற்கு அவன்குமாரன் அரண்ணியமகாராஜன் சொல் லுகிருன். ஓ! பிதாவே நானிருக்க உமக்கிவ்வளவு ஆயாசம் வரவேண்டியதென்ன, நாளையவுதயத்தில் என்தமையனைக் கொன்றவனை அவன் படையையுங் காற்றிற் பஞ்சுபோற் பற க்கடித்து வருகிறேன் பாருமென்ருர். அத்தருணத்தில் சுரத ராஜனெழுந்து, தந்தையே நானொருவன் யுத்தத்திற்குச் செ ன்று வெற்றி யடையலாமென்று வந்த சத்துருக்க னெதிர் நின்று அவனைக் கொன்றவன்படையாகிய கரும்பைமென்று வருகிறேனென்ற சுரதராஜனைப்பார்த்து அப்பாகுமாரா சுர தா, உன்னைவிட பலவான் இந்தராஜசபையில் யாரிருக்கிருர் கள். உன்வில்லுக்கு மும்மூர்த்திகளும் நின்று யுத்தம்பண்ண மாட்டார்கள். உன்னைப்போல வரப்பிரசாதமான அஸ்திரங் களும், பேரும் பெற்றவர்கள் யாரிருக்கிருர்கள். ஆகையாலு மவர்கள் தம்பியைக்கொன்ற சத்துருக்கனையுஞ் சேனைகளையும் அந்தக் குரங்கையுங் கொன்று செயம்பெற்று வாவென்று விடைகொடுக்க, அளவில்லாத ஆயுத அஸ்திரங்களை இரதத் திலேற்றிக்கொண்டு சுரதமகாராசன் தனக்குச் சரியான பலாஷ் டிகம் படைத்த மூவாயிரத்தைந்நூறு ராசகுமாரர்களும், ஆயி ரத்தைந்நூறு மந்திரிப் பிரதானிகளும், முப்பத்தொருலக்ஷம் படைத்தலைவர்களோடும் சிம்பக்கொடிபறக்க இரதமேறிப் புறப்பட்டான்.

புறப்படவே மூப்பத்திரண்டு மேளவாத்தியங்களு முழங்க அண்டமதிர, அண்டத்திலுள்ள தேவர்கள்கண் டாச்சரியங்கொண்டு இன்று சுரதமகாராசன் யுத்தமானபடியினால் நன்றாயிருக்கும். அரிபக்தியுள்ளவன், சத்தியவாசகன், மகாவரப்பிரசாதம் பெற்றவன், இவனுக்கெதிரியான சத்துருக்கனே ஸ்ரீராமர் சகோதரன் மகாபலவான்களாகையால் இருவர்களுடைய வெற்றியுந்தோர்ப்பும் இவர்களுடைய வீரத்தன்மையுங்காணக் கண்களாயிரம்பெற்ற இந்திரனும், அந்தரத்தில்வந்து பார்த்திருக்கையில் சத்துருக்கமகாராசன் சூரியனுதயமாக ஐந்துநாழிகைக்குமுன் எழுந்திருந்து காலக்கடனை முடித்துக்கொண்டு போசனமருந்தித் தாம்பூலமென்று உக்கிரசேனனை யழைத்து இன்றைக்கு நல்ல யுத்தம்போற் காண்கின்றது. ஆகையால் சேனைகளைப்பவுஞ்சிட்டு சக்கிரயூகமாக நிறுத்திச் சாக்கிரதையாக யிருந்து போராட வேணுமென்று சொல்லக்கேட்ட உக்கிரசேனன் மகாபாக்கியமென் றெழுந்து இராட்சதாளின் ஆனை தேர் பரி சேனைகளையெல்லாம் நான்கு வட்டமாகநிறுத்தி எட்டுத்திக்குப் பதினாறு கோணத்திற்கும், சக்கிரயூகத்திற்கும், திரணவாசிகளாக அறுபதினாயிரத் தைந்நூறு அக்ரோணிசேனையை நிறுத்தி, நடுவணியில் சத்துருக்கமகாராசனையும், வீரசேனனையும் நிறுத்தி, அதற்கு முன்னணியில் தான் யுத்தசன்னுத்தனாக நின்று பேரிகையறைவித்தான். அப்போது அருணனானவன் இன்றைக்கு நல்லயுத்தம்நடக்கும், நாம்போய்ப் பார்ப்போமென்று வந்தவரைப்போலே உதயகிரி பர்வதத்தி லுதயமானார்.

மூன்றாநாள் சுரதராசன் யுத்தம்.

அந்தவேளையில் சுரதராசன் சேனைகளானது தென்கோபுரவாசற்படியாக நுழைந்துவருகிறபோது பூமியானது கிடுகிடுவென்றதிர, ஆதிசேஷன் புசமாற்ற, அஷ்டதிக்கிலும் ஆற்பரித்துவரவே, உச்சிரசேனன்கண்டு, இரதத்தை நடத்தி வில்லைநிறுத்தி சரமாரியாய் அஸ்திரங்களை யெடுத்துப் பொழிந்து சேனைகளைக் கரும்புதுண்டுபோற் சூரையாடி வரும்போது சேனாதிபதியான பவர்னன் சாரதியை யெச்சரித்து, இரதத்தை நடத்தி, வில்லைநிறுத்தி, அனேக பாணங்களை றிவ்றிவ்வென்று விடுகிறபோது உக்கிரசேனனானவன் சிங்கம்போற் குதித்து அம்புறுப்பொதியிற் கையைவைத்து பத்து

நாராசமெடுத்து சுவர்னன்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்து அவன்மார்பிலணிந்த கவசங்களைப் பொடியாக்கி கையிற்பிடித்த வில்லையுந் துண்டித்து துவசத்தையு மறுத்துக் கீழேதள்ளி சாரதிகளையுங் கண்டித்தான். அப்போது பவர்னன் வேறொரு வில்லெடுத்து நாணிபிகிந்து, பாணங்களைப்பூட்டுமுன்னம் உக்கிரசேனனுனவன் ஒரு அர்த்தசந்திர பாணத்தைவிடவே அது நாகசற்பம்போல் சீறிக்கொண்டு அதிவேகமாய்வந்து பவர்னன்சிரசை கரகரவென்றறுத்துத் தள்ளிவிட்டது. பின்னும் உக்கிரசேனன் சேனைகளின்மீது இரதத்தை செலுத்திக் கொல்லுகிறபோது சுரதமகாராஜன்கண்டு ஐந்து நாராசமெடுத்து பிரயோகஞ்செய்தான். அந்த ஐந்தும் காலக்கோடி விஷம்போற் சீறிக்கொண்டுவந்து உக்கிரசேனன் ரதம் சாரதி குதிரைகளை அதஞ்செய்து மார்பிலேநந்து நாராசபாணம் விட்டு முதுகி லுருகிப் போய்விடவே, உக்கிரசேனனுனவன் ஸ்ரீராமாராமாவென்று அடியற்ற பனைசாய்ந்தாப்போற் சாய்ந்துஉயிரைவிட்டான். உடனே சுரதமகாராஜன் இரதத்தைநடத்தி முன்னணியில்வரும்போது படைத்தலைவர்களும் சேனைகளும்முனைந்து சுரதமகாராஜனைவிடாமல் வளைத்துக்கொண்டு சிங்கத்தின்பேரில் சிறியதுரும்பை யெறிவதுபோல் அஸ்திரங்களைச் சொரிவதைக்கண்ட சுரதராஜன் ஆண்புலி புகுந்ததுபோலும், அழகிய புறுக்களருகில் ராசாளி புகுந்ததுபோலு முரசக்கூட்டத்தில் கிரிப்பிள்ளைகளண்டியதுபோலும் புகுந்து, அஸ்திர சஸ்திரத்தை யபரிமிதமாய்ப்பொழிந்து படைத்தலைவருடன் சேனைகளையும் வானுலகத்திற்குத் தானொருவனுகநின்றனுப்பிவிட்டு இன்னமுண்டோ வென்று தண்டுகளைத் தேடிவருகையில் குகனுனவன் சுரதன்பேரிற் றேரை நடத்தி மாரிபோலச் சரமாரியாய் ஐந்து திவ்வியாஸ்திரத்தைவிட்டுசுரதமகாராஜன் விடப்பட்ட அஸ்திரங்களைக் கண்டித்து வில்நாணியைப் படலென்றறுத்துவிடவே தக்ஷணம் ஓசைபெற்று அந்தவில்லானது நிமிர்ந்த சத்தமானது அவர் காதிரண்டுஞ் செவிடுபட்டுப்போயிற்று. அப்போது சுரதமகாராஜன் மறுபடியும் வில்நாணியை இருகப்பூட்டி குணத்தொனிசெய்து பத்து திவ்வியாஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்துப் பிரயோகப்படுத்திகுகனேறிவந்த இரதஞ் சாரதி குதிரைகளையுந்தும்சப்படுத்தி அக்குகனையும் "அடிமேலடியடித்தால் அம்மியும்நகரு" மென்

கிற பழமொழிபோற் கைகாலாட வொட்டாமல் சாடுகையில்குக ஞ்சிரம் அறுபட்டு ஸ்ரீராமாராமாவென்று தியானம் பண்ணிக் கொண்டு எமபுரம் புகக்கண்ட மட்சயந்த அநுமான் கோப நிப்தனாய் ரதம்விட்டுக் கீழேகுதித்தான்.

அப்படிக் கீழேகுதித்து சுரதராஜன் சேனைகளிற் புகுந்து ஆனைகளைவாரி ஆகாயத்தி லெறிந்து, இரதங்களைவாரி பூமி யோடறைந்து, குதிரைகளைவாரிக் குப்பல்குப்பலாய்மோதியும், சிலதைவாரி வாரணபுரி பட்டணத்தின்பேரில் விட்டெறிந் தும், ஆயிரத்தொருநூறு அக்ரோணி சேனைகளை ஒருசாம பரியந்தத்திற்குள் ஈயெறும்புகளைத் தேய்த்து விடுவதுபோல் வாய்வுராஜன் சேயன் வானுலகங்குடியேற்றி விடவே, மற்ற சேனைகளெல்லாம் புத்தி புத்தி இன்று தப்பிப் பிழைத்தோ மென்று வோடுகையில் சுரதராஜன்கண்டு இனியில்லாதகோப ங்கொண்டு இரதத்தைநடத்தி, ஓடுகிறவர்களை ஓடவொட்டா மலும் நிறுத்தி மட்சயந்த அநுமானைப்பார்த்து அடாவான ரமே! காட்டிற்கிடக்கிற காய்கிழங்குகளைப் பொறுக்கித்தின்று சுனைத்தண்ணீரைக்குடித்து செடியிலுறங்கிக்கிடக்கிற உனக்கு மிந்த இராஜாக்கள் கூட்டங்களுக்கு மென்ன சொந்தமிருக்கிற து நீயார் உன்பெயரென்ன, உன்தகப்பன்பேர்யாது என்சே னைகளுன்னை யென்னசெய்தார்களென்று இப்படிக் கொன்றாய் உனக்கிவ்வளவு அதிகாரங் கொடுத்தவனைச் சொல்லென்றுகே ட்க, மட்சயந்தன் யுத்தஞ்செய்வதைவிட்டு ஓய் ராஜனேகேளு ம், இராசாக்களானவர்கள் யுத்தமூண்டபோது இரணக்களத் திற்குப்பயந்து இப்படிக் குலங்கோத்திரமும் கேட்கலாமோ வெற்றியடையத்தக்க, சாமார்த்திய முடையவர்கள் வம்சபரம் பரையைக்கேட்டுப் போர்புரிவார்களோ, ஆனாலுமென்ன சொ ல்லுகிறேன்கேளும் பல்லாயிரங்கோடி அண்டத்தையுங் கெற் பத்தில்வைத்து இரட்சிக்கப்படா நின்ற ஆதிகர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணரைமடி மீதில் வைத்துக்கொண்டிருக்கப்பட்ட ஆயிரம்பணாமுடியைத்தரித்த ஆதிசேடனை முறியவடித்து கீர் த்தியடைந்த சகலப் பிரபஞ்ச சீவராசிகளிடத்திலும், பஞ்ச பூதங்களுக்கெல்லாம் இராசாவாய் விளங்காநின்ற வாய்வுதே வன் அவர்குமாரன் அநுமான் அவன்குமாரன் நான் என்பேர் மட்சயந்தன் அநுமானென்று சொல்லுவார்கள். அந்தப்பரா பரவஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணரே சிராமனாக

மூன்றுதம்பிமாருடன் தசரதமகாராஜன் வயிற்றிலவதரித்துத் தாடகையைக்கொன்று ஜனகராஜனிடமிருந்த வில்லையொடித் துசீதையைமணந்து பரசுராமர் கைவில்லைப் பறித்துக்கொண் டு அவரைத் துரத்திவிட்டு தாய்சொல்லைத் தள்ளாமல் சீதா லட்சுமண சமேதராய்ப் பதினான்குவருஷம் வனவாசஞ் செய் யவேண்டிமரவுரிதரித்து சடாயுவைக்கண்டு பஞ்சவடியிலிறங்கி இராவணன்தங்கை சூர்ப்பநகையைப் பங்கம்பண்ணி கரதூ ஷண திரிசிரு வென்னப்பட்ட பன்னீராயிரம் வெங்கலரதக் காரர்களையுங் கொன்று மானுகவநத மாரீசன்பேரில் வேட்டை யாடப்போனார். அப்போது இலங்காபுரியையாளப்பட்ட இரா வணன் சீதாதேவியைப் பர்ணகசாலையுடனே பெயர்த்து இர தத்தில் வைத்துக்கொண்டு போய்விட்டான்.

அப்பால் மாரீசனைக்கொன்று சடாயுவுக்கு மோட்சங்கொ டுத்துவிராதனைவதைத்து அசமுகிக்குமுத்தியளித்துகவந்தனை மாய்த்து சவரிக்குப்பதவிதந்து எனதுதந்தையாகிய அனுமா ரைக்கண்டு, சுக்ரீவனைச் சிநேகம்பண்ணி, வாலியைக்கொன்று பட்டங்கட்டி கொடியசெய்கையுடைய இராவணன் கும்பகர்ண ன் இந்திரசித்து, அதிகாயன், அட்சயகுமாரன் கும்பனிகும்ப ன்முதலாக இரண்டாயிரம்வெள்ளம்ராட்சதர்களையுங்கொன்று சீதையம்மனை சிறைமீட்டுக்கொண்டுவந்து அயோத்தியாபுரி பட்டாபிஷேகராய் இருக்கிறநாளில் சதகண்டராவணன் ஐயா யிரம்ராட்சதாளைக் கூட்டிக்கொண்டுவந்து யுத்தம்பண்ணின ன் அப்போது ஸ்ரீராமரும் தன்தந்தை யனுமானும் ஐயாயிர வெள்ளம் ராட்சதாளையும் சதகண்டராவணனையுங் கொன்று அவன்தம்பி மகாமாயனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைத் து அயோத்தியில்வந்து பட்டாபிஷேகரா யிருக்கிறநாளில் தி ருப்பாற்கடலின் சமீபத்தில் அத்தினபுரமென்கிற பட்டணத் தையாளப்பட்ட சகஸ்திரகண்ட ராவணன் ஐயாயிரம் வெள் ளம் ராட்சதாளைக் கூட்டிக்கொண்டுவந்து யுத்தம்புரிந்து அ ந்தஐயாயிரவெள்ளமும் அவனு மாண்டுபோகவே அவன் கு மாரனாகிய சலவசந்தனுக்குப் பட்டங்கட்டி அயோத்தியில் வ ந்து பட்டாபிஷேகராய் இராஜரீகம் பண்ணிக்கொண் டிருக்கி றபோது, குருவாகிய வசிஷ்டமுனியால் இராட்சதாளைக் கொ ன்றபாவந்தொலைய, அஸ்வமேதயாகம்பண்ணி அப்பாவத்

தைப் போக்கடித்துக் கொள்ளுமென்று திருவுளம்பற்ற அந்தப்படியே ஸ்ரீராமரும், அஸ்வமேதயாகம்பண்ண விபீஷணர் மகாமாயன், சலவசந்தன், சுக்ரீவன் முதலானபேரையும், அவர்களுடைய சேனைகளுடன் வந்து, அயோத்திமாநகரிலிறங்கினார்கள். அதன்பின்பு அஸ்வமேதகுதிரைக்கு வசிஷ்டர்சொன்ன மந்திராபூதிகளாற் பூசைசெய்து அந்தக் குதிரையைப் பூமிப்பிரதட்சணம் பண்ணவேண்டி, ஸ்ரீராமர்தம்பியாகிய சத்துருக்கமகாராஜனுடன், சலவசந்தன், மகாமாயன், சூரசேனன் ஐம்பத்தாறுதேசத்து இராஜாக்களையும், ஐம்பது வெள்ளம் இராட்சதாளையும் அறுபத்தோருயிர மக்ரோணிசேனைகளையுங்கூட்டி குதிரையின்பின் னனுப்பிவைத்தார் அவர்களுங்குதிரையை விட்டுக்கொண்டுவருகிறபோது மதனபுரிபட்டணத்தையாளும் வீரசேனனுங் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம்பண்ணி யானைசேனைகளையுந்தோற்று ஸ்ரீமந் நாராயணராய் விளங்கப்பட்ட ஸ்ரீராமருடைய பிரதாபத்தைக் கேட்டு சத்துருக்கமகாராஜனை வணங்கி இறந்துபோன சேனைகளையும் காளிகாதேவியினு லெழுப்பிக்கொண்டு குதிரையைக் காணிக்கைகப்பங்கள்வைத்து பூசைசெய்து அவரும் அவரது குமாரனும் அவர்களுடைய தண்டையழைத்துக்கொண்டு எங்கள் தளங்களுடன் வந்துசேர்ந்தார்கள் அப்பால் குதிரையைவிட்டுக்கொண்டு பாளையமானது பின்வரும்போது உன் தமையனை அரண்ணியராசன் குதிரையைப் பிடித்துக்கட்டி குதிரையின் பின்வந்து இராட்சதாளையுங் கொன்றபடியால் இப்போ உன்பிறகேவந்த சேனைகளை மாய்த்து உன்பட்டணத்தையுங் கொள்ளைகொண்டுபோகவல்லவன் நான்போதாதோ அப்படி வராதபடிக்கு குதிரையைக் கொண்டுவந்துவிட்டு சத்துருக்கராசனை வணங்கி பிழைக்கிறதே காரியமென்றான்.

அதுகேட்டு சுரதமகாராசனானவன் சற்றுநேர மாலோசனைசெய்து தலையை யசைத்து ஸ்ரீமந்நாராயணராய் விளங்கப்படாநின்ற பரப்பிர்மமே ஸ்ரீராமனாகவந்து அவதரித்து இராவணசம்மாரஞ்செய்து அஸ்வமேதயாகஞ் செய்விக்கவிட்ட குதிரையை நம்முடைய தமையன் பிடித்துக்கட்டி இராட்சதாளைக் கொன்றபடியால் நமதுதம்பியும் வெகுசேனைகளு மாண்டுபோனார்கள். இப்போது நாம் சமாதானத்திற்குப் போனோமேயானால் யுத்தஞ்செய்யப் பயந்து சத்துருக்கனை வணங்

விப் பிழைத்தானென்று தேவர்களும் நகைப்பார்கள். நம்மோ
டொத்த இராசாக்களும், இராக்ஷதாளும் பழிப்பார்கள். ஆகி
லும் என்னமுழுகிப்போயிற்று. நமதுகையிற் சிவன்கொடுத்த
வில்லிருப்பதாற்பயமென்ன, இக்குரங்கையுஞ் சேனைகளேயுஞ்
த்துருக்களேயுஞ் செயித்து இராக்ஷதாளேயுங் கொன்ருேமா
னல் இந்தசமாச்சாரம் அயோத்தியாபுரி பட்டணத்திலிருக்க
பட்ட ஸ்ரீராமபிரான்கேட்டு குதிரையைவிடுவித்துக்கொள்ள
வருவார். அப்போது அவரைச் சேவித்து வணங்கினல் நாம்
செய்தபாவம் பரிகாரமாகிக் கடைத்தேறலாமென்று மனதிலெ
ண்ணி மக்ஷயந்த அனுமானைப் பார்த்துச் சிலவசனஞ் சொல்
லுகிருன். அடா அனுமானே நீ சொன்னவையெல்லாமெய்
யாயிருந்தாலும் என்னுடன் யுத்தம்பண்ணப்பயந்து என்னேச்
மோதானப்படச் சொல்லுகிருயே அப்படியாகிறது இன்னம்
ன்னுலிருக்கின்றது. இனியுன்னுலாகிற யுத்தங்களேச் செய்
யென்றுசொல்ல, அதுகேட்டு மட்சயந்த அனுமான் அடடா
நாம் இவ்வளவுதூரஞ் சொல்லியுங் கேளாமல் யுத்தம்பண்
ணென்றுகூறினனல்லவா, நல்லதாகட்டுமென்று கோபமாகிச்
செவ்வென்று ரதத்தின்மேற்பாய்ந்து, சுரதராசனுடைய மார்
பைப்பார்த்து ஒருகுத்துவிட்டான். அந்தகுத்தை தப்புவித்
துக்கொண்டு சுரதராசனவன் வில்லைநிறுத்தி வாயுவேக
மனோவேகமான அஸ்திரங்களே மேன்மேலாய் மட்சயந்தனு
மான்பேரில்விட்டுச் சரபுஞ்சமாயடிக்கிறபோது அதுகளேயெ
ல்லாம் உதறிவிட்டு மட்சயந்தனுமான் சற்றுநேரம் சும்மா
யிருக்கச் சுரதராசன்பேரில் அளவிறந்த பாணங்களே விட்டெ
றிய, அதுகள் தன்பேரில் படவொட்டாமல் அஸ்திரங்களே
விட்டறுக்கப் பின்னும்மக்ஷயந்தனுமான் குதிரைகளேயும், ரத
ங்களேயும், வாரிவாரிச் சுரதன் ரதத்தின்பேரிலெறிய அதுகள்
தன் முன்னுக்கு வரவொட்டாமல் தடுத்துக்கொண்டு யேதடா
குரங்கு மகாபொல்லாததாயிருக்கின்றது.

நமதுசேனைகளேக்கொண்டு நம்மைத்தானே கொல்லவந்
துபார்த்தாயோவென்று கோபித்து பத்து திவ்வியாஸ்திரங்
களேயெடுத்து மந்திராபூதிகளுடன் பூசைசெய்து விட்டுவிட்
டான் அந்த திவ்வியாஸ்திரங்களோ நாகசற்பங்கள்போற்
றிக்கொண்டு வருகையில் மட்சயந்தனுமான்பார்த் தண்ட
ளாவியிராநின்ற ஓராலவிருட்சத்தைப்பிடுங்கி நுணிக்கிளே

யனைத்துஞ்சேர்த்துப்பிடித்து அஸ்திரங்களின்பேரிற் சுழட்டி யடித்தான். அதனால் அஸ்திரங்களானது கூர்மடங்கி ஒடிந்து பூமியில்விழவே சுரதமகாராசன் கண்கள் பொறியெழும்பக் கோபங்கொண்டு ஒருகுரங்கின்பேரில் இவ்வளவுதூரம் யுத்தம் புரிந்தால் இன்னமிருக்கு மற்றவர்களுடன் எப்போது நாம் யுத்தஞ்செய்வதென்று மீசைகள் துடிதுடிக்கப் பற்களை நற நறவென்று கடித்து மகாவுக்கிராகாரத்துடன் ஒருசத்தியை யெடுத்து யுச்சரித்துவிடவே அது சிவ்வென்றெழும்பி மகூஷய ந்தனுமான் மார்பிற்பட்டு முதுகிலுருகிப்போகவே ஸ்ரீராமா ராமாவென்று அடியற்ற விருட்சம்போல் மண்மீதுவிழுந்து மகூஷயந்தனுமான் உயிரைவிட்டான்.

நான்காம்நாள் யுத்தம்.

மறுநாள் காலசித்தனென ராகூஷதன்சீறி கோபமீறிச் சுரத ராசனைவந்து வளைந்துக்கொண்டு சொல்லுகிறான். ஓய் சுரத மகாராசனே! ஸ்ரீராமபிரான்விட்ட அஸ்வமேதக் குதிரையை நீ பிடித்துக்கட்டி சேனைகளைக் கொன்றபடியினால் இப்போது உன்னையும் உன் தம்பியையும் உன்தகப்பனையுங்கொன்று உன் பட்டணத்தையுங் கொள்ளைகொள்ளாமற் போனேனேயா னால் என்பேர் காலசித்தனு பாரென்று கூறவே, சுரதராசனுக் குச் சந்தோஷமாகிச் சொல்லுகிறான்! வாராய் காலசித்தனே! என்தமயனான அரண்ணியமகாராசன் உங்கள் குதிரையைப் பிடித்துக்கட்டி அதன்பின்வந்த ராட்சதாளையுங் கொன்று பட்டணம் வந்துவிட்டார். நேற்றையதினம் என்தம்பியாகிய சுவேலராசனையும் ஆயிரத்திருநூறக்ரோணி சேனைகளையுஞ் சத்துருக்கன் கொன்றபடியினாலே அப்பழிதீர சத்துருக்கனு க்கு சகாயமாகவந்த உன்னையும் உன்னுடன்சேர்ந்த சேனாசமு த்திரங்களையும் உங்களுக்கெல்லாம் ராசாவான சத்துருக்கனை யுங் கொன்று பராபரவஸ்துவாய் விளங்காநின்ற அந்த ஸ்ரீ ராமமூர்த்தியை இவ்விடத்தில் வரவழைக்காமற் போனேனே யானால் நான்பிடித்தது வில்லுமல்ல என்பேர் சுரதராசனு மல்லவென்றான்.

அதுகேட்டு காலசித்தன் மகா கோபங்கொண்டு சுரதராச னைப்பார்த்து சொல்லுகிறான். அடா சுரதா, என்னவார்த் தைசொன்னாய் என்னையும் என்சேனைகளையுஞ் சத்துருக்கமகா

ராசனையுங்கொன்று ஸ்ரீராமரைவரவழைக்க உன்னாலாகுமோ அவர்பாணம்வந்தால் அதற்குத்தரவுசொல்ல உனக்குத் திடமுண்டோ சொல்லென்றான். அதுகேட்டு சுரதமகாராசன் அடா, காலசித்தனே! என்னைச் செயிக்கத்தக்க வல்லமையுள்ளவனுமாய் ஸ்ரீராமர் திருவடியை எந்நாளும் மறவாதசிந்தையுடையவனுமாயிருப்பது மெய்யானால் யுத்தம்பண்ணும்போது வஞ்சனைசூதுமாய்கையும்விட்டுச் சத்தியவானாகச் சண்டைபண்ணி என்னைசெயிக்க உன்னால் திராணியுண்டோவென்று கேட்க, சுரதராசனைப்பார்த்து காலசித்தன் நகைபுரிந்து சொல்லுகிறான். அடாசுரதா நான் ஸ்ரீராமரை வணங்கினநாள் முதல் மாய்கை வஞ்சனை சூதுமோசம் இத்தொழில்களையெல்லாம்விட்டு ஸ்ரீராமரைப்போல் சத்தியவசனமாருமலிருக்கிறேன் அதேனென்றால், ஸ்ரீராமருடைய ராச்சியத்தில் வஞ்சனை சூது மோசஞ்செய்தால் ஸ்ரீராமத்துரோகம் உடனேவந்து சித்திக்குமாகையா லுன்னுடன் உண்மையாக யுத்தம்பண்ணி உன்னைச்செயிக்கிறேன் பாரடாவென்றான். அதனைக்கேட்டு சுரதமகாராசன் வில்லையெடுத்து நிறுத்தி அனேக அஸ்திரங்களை வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணினான். அதற்கு காலசித்தனுந் தனுசிற்சந்தித்து வைத்திருந்த அநேக அஸ்திரங்களைவிட்டு அறுத்தெரிந்து அதிகமாய்ப் பத்து நாராசம்விட்டு சுரதன் ஏறிவந்த ரதஞ் சாரதி குதிரைகளையும் அதம்பண்ணிவிடவே சுரதராசன் மறுதேரிலேறி அதிககோபங்கொண்டு உக்கிராகாரனாய் ரதத்தைநடத்தி அநேக திவ்வியாஸ்திரங்களைவிட்டுக் காலசித்தனேறிவந்த ரதத்தையதம்பண்ணி அவனது மார்பிலணிந்தகவசத்தையும் பொடியாக்கினான்.

அதுகண்டு காலசித்தன் வேறொருதேரின்மேலேறிக்கொண்டு அதிகஉக்ராகாரத்துடன் வில்லையெடுத்து நாணிபிகிந்து சரமாரியாய்ப் பொழிந்து சுரதராசனைக் கைகாலாடவொட்டாமலும் ரதத்தை நடத்தவொட்டாமலும் பாணங்க ளெடுக்கவொட்டாமலும் சாடுகிறபோது சுரதராசன்கண்டு ஆச்சரியப்பட்டவனாய் வருகிற பாணங்களையெல்லா மறுத்தெறிந்து நூறு திவ்யாஸ்திரங்களையெடுத்து வில்லிற்றொடுத்துப் பிரயோகஞ்செய்தான். அதற்குத்தகுந்த நூறு திவ்வியாஸ்திரத்தைவிடுத்து சுரதன்விட்ட திவ்வியாஸ்திரத்தை யறுத்தெரிந்தான். அதனாற்கோபங்கொண்டுபதினைந்து நாராசத்தைவிட்டு

காலசித்தன் பிடித்தவில்லேயுங் கண்டித்து ரதத்திற்கட்டியதுவசத்தையும் அறவெட்டி சாரதி தலேயறுத்துக் குதிரைகளேக் கொன்று காலசித்தன் திரேகத்தில்நோகவெய்தான் அதனுல் மகா ஆயாசத்துடனே ரதத்தின்மேற் சாய்ந்து மூர்ச்சையானுன்.

அப்போது சுரதமகாராஜன் அதிக சந்தோஷத்துடனே சாரதியை யெச்சரித்து சக்ரயூகத்தணியின்பேரில் நடத்தென்றுகூறி தனதுவில்லே முகத்திற்குநேராய் பிடித்து அஸ்திரங்களேமேலுமேலுஞ் சேனேகள்பேரில்விட்டு கொன்றுக்கொண்டே சக்ரயூகத்தண்ணியை ஐந்துதரஞ் சுற்றிக்கொண்டு வருகிறபோது ஐந்துசுற்றுக்கும் ஆயிரம் அக்ரோணிசேனேகள் மாண்டுபோயின அதுகண்டு மகாமாயன் கோபத்துடனே ரதத்தைநடத்தி சுரதராசனே அப்புறமிப்புறம் போகவொட்டாமல் அஸ்திரங்களிலுலடிக்கிறபோது மூவாயிரத்தைந்நூறு ராசகுமாரர் மகாகோபத்துடனே ரதத்தைச்செலுத்தி மகாமாயனே வளேத்துக்கொண்டு போர்புரிந்தார்களத்தருணத்தில் சலவசந்தனும் அதிகசினத்துடனே சுரதமகாராசனே வளேத்துக்கொள்ளுகையில் ஆயிரத்தைந்நூறு மந்திரிமார்களும் வெகு துரிதத்துட னிரதத்தை நடத்திச் சலவசந்தனே வளேத்துக்கொண்டு யுத்தப்பண்ணினுர்க ளப்படி யுத்தம்புரிகையில் சுரதராஜன் இதுதான் சமயமென்று சேனேகள்பேரில் ரதத்தை நடத்திப் பாணங்களேவிடுத்துக் கொல்லுகிறபோது வீரசேனமகாராசன் மகாகோபாந்தகாரனுகிய சாரதியை யெச்சரித்து ரதத்தை நடத்தி அடா சுரதா நில்லுநில்லு என்கேள்விக் குத்தரவுசொல்லு வன் தலேகீழாய் விழுகிருய் நீ கையிலாகாத சிலபேரைக் கொன்றேமென்று கெர்வித்து துள்ளுகிருய் துள்ளுகிறமாடு பொதிசுமக்காதென் றறியாயோ இதோ என்னுடைய பாணக்கினியால் உன்னேயும் பஸ்மீகரப்படுத்துகிறேன் பொறுபொறென்று வில்லிலனேகமாயிரம் பாணங்களேத் தொடுத்துவிட்டான். அதுகண்டு சுரதமகாராசன் நகைத்து, ஐம்பது திவ்வியாஸ்திரங்களேயேவி, வீரசேனன் விட்ட பாணத்தை அறுத்துவிட்டு அவன் முன்னுக்கு இரதத்தை நடத்தி அடா, வீரசேனு நீயா, என்முன்னின்று யுத்தம்பண்ணுபவன் எதோ நீசெய்கிற யுத்தத்தைப்பார்ப்போம் நில்லென்று அதட்டி வில்லே நிறுத்தி பத்துநாராசங்களேச் சந்தித்துப் பிரயோகஞ்செய்தான்.

அப்பத்துநாராசங்களும் நாகசற்பம்போற்சீறிக்கொண்டு வரவே, அதற்குப்பதில் வீரசேனன் பதினைந்து நாராசத்தை விட்டறுத்து இடிபோலொத்த இருபது திவ்வியாஸ்திரங்களைச் சுரதராஜன் இரதத்தைப்பார்த்து பிரயோகித்தான். அந்த திவ்வியாஸ்திரங்களுந் தகத்தகாயமாய் எறிந்துகொண்டு வருகிறபோது சுரதமகாராஜன்கண்டு, தானும் இருபத்தைந்து திவ்வியாஸ்திரங்களை விட்டதை யறுத்தெறிந்துவிட்டானுடனே வீரசேன மகாராசன் கோபாவேசத்துடன் ஒரு அக்கினியாஸ்திரத்தை எடுத்து மந்திராபூதிகள் செய்துவிட்டான். அதுவும் வெளிப்பட்டு அக்கினிப்பொறிகளை வாரியிறைத்துக்கொண்டு வருகிறபோது சுரதமகாராஜன்கண்டு ஒரு வருணாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து விடுத்தான் அந்த வருணாஸ்திரமானது இடி மின்னல் குமுறலுடனே குடங்கொண்டு சலம்பொழிந்தா லெப்படியோ அப்படிபோல வீரசேனன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிற் சுரதமகாராசன் சரமாரியாகப் பொழியவே அந்த அஸ்திரமானது தணிந்து பூமியிலுருகிப்போய்விட அதனால் வீரசேனன் ஒரு பர்வதாஸ்திரத்தை எடுத்துவிட்டான்அனேகபர்வதங்களுருகபகையுண்டாகி வருகிறபோது சுரதராசன்கண்டு ஒரு வச்சிராயுதத்தை எடுத்து அபிமந்திரித்து பிரயோகித்தான். அதுவுமனேகவச்சிராயுதங்களாய் ரூபங்கொண்டு வருகிற பர்வதங்களையெல்லாம் அறுத்துக் கீழேதள்ளிவிட்டது. அதுகண்டு வீரசேனமகாராஜன் ஒருசத்தியை எடுத்து ஆபூதிகள் கொடுத்தனுப்ப சுரதமகாராசனும் பதினைந்து நாராசம்விட்டு வீரசேனன்விட்ட சத்தியை இரண்டுதுண்டாக்கி அவன்மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கி மார்பிலுருகிப்போகச் செய்தான் அதனால் வீரசேனன் மகா ஆயாசமடைந்து மூர்ச்சையாய் இரதத்தின்பேரிற் சாய்ந்துவிட்டான்.

அப்போது சுரதமகாராசன் வெற்றிச்சங்கை யெடுத்தூதினான். அந்த ஒலியைக்கேட்ட சேனைகளெல்லாம் பிதுர்கலங்கிச் சுரதமகாராசனை வளைத்துக்கொண்டு பாணங்களை மேன்மேலாகப் பொழிகிறபோது அவைகளை சுரதராசனறுத்துவிட்டு ஐந்துதிவ்வியாஸ்திரம் பிரயோகித்துச் சாரதி குதிரையுங்கொன்று நீலாட்சதன் மார்பைக்கலக்கிவிட்டான். அதனாலவனும் கை மெய்சோர்ந்து ஆயாசத்துடன் ரதத்தின்பேரிற் சாய்ந்தா

ன். உடனே சுரதராசனும் பின்னுமந்த உக்கிரம்விடாமல் ரத த்தைச் சேனைகள்பேரிற்றூரத்தி அகோரமானபாணங்களைவிட் டுக் கொல்லும்போது சேனைகள் கண்டம்வேறு மூண்டம்வே று கைவேறு மெய்வேறு இடைவேறு தொடைவேருகி இரத் தப்பிரவாகம் பூமியை அறுத்துக்கொண்டோடுவதைக் கண்ட தேவர்கள்முதல் யாவர்களும் சுரதமகாராசன்சரவேகத்தையுங் கரவேகத்தையு மெச்சி ஆச்சரியமடைந்தார்கள். அந்தச் சமயத்திற் காலசித்தனைவன் ஆயாசந்தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்துச் சுரதராசனைக் காணுமல் மறு தேரிலேறி வில்லையெடுத்துக் குணத்தொனிபண்ணிசாரதியையெச்சரித்து இரதத்தை நடத்தச்சொல்லி சுரதராசன் எங்கேயென்றுவரும் போது வெகுசேனைகள் சின்னபின்னமாகத் தலைமாடு கால்மா டாய் கிடப்பதைக்கண்டு சக்ரயூகத்தணிக்குபோகிறபோதுகோ ஷ்டமெழும்பிற்று. அந்தச்சத்தங்கேட்டுகாலசித்தன் அதிவே கமாய் ரதத்தை நடத்திவரும்போது சுரதராசன் ஓய் ஒழிச்சலி ல்லாமற் பாணங்களை ஒரு சாமபரியந்தத்துக்குள்ளே முப்பத் தையாயிரம் அக்ரோணிசேனைகளைக்கொன்றுவிட்டான். அது கண்டு, காலசித்தன் கண்கள் சிவந்து கடுங்கோபங்கொண்டு ஓய், சுரதராசனே! நீ மகாபலசாலியென்று மலைக்காதே நாய் போற் குலைக்காதே, சிலரைக் கொன்றேமென்று வீரத்தைக் காட்டாதே, என் கைபாணத்திற்கு இன்றுன்னை இறையாக்கி க்கொள்ளுகிறேன் பாரென்று பத்து திவ்வியாஸ்திரங்களை வி ட்டு ரதஞ் சாரதி குதிரைகளுடன் பொடியாக்கவே சுரமகாராச ன்சிங்கக்குட்டிபோல் துள்ளியெழுந்து மறுதேரிலேறி வில் லைக் கையிலெடுத்து பல்லை நறநறவென்று கடித்து துல்லிய மான அஸ்திரங்களைத்தொடுத்து ஓய் காலசித்தனே! உன்வீர த்தை நீயே மெச்சிக்கொண்டாய், தன்னைத்தானே புகழ்பவன் ரூனோர்பதர், என்பதறியாயோ சத்தசாகரஞ் சூழ்ந்த தரணிக் குள் சுரதராசனுக்கு நிகரில்லையென்ப தறியாயோ சபாசு உன் சவுரியத்தை இதோ காண்பிக்கிறேன் சற்றுநேரத்தில் பாரெ ன்று அஸ்திரத்தால் மார்பைக் கலக்கிவிட்டான்.

அதற்கு காலசித்தன் களையாமல் இளையாமற் சொல்லுகி ருன் ஓய், சுரதனே! காலசித்தனென்றல் உன்னைப்போ லொ த்தவர்களைக் கடைசியிற் கட்டியிழுத்துக்கொண்டுபோகுங்கருங் கடாவாகனனுகிய காலனுங்கலங்கிநிலைவிலக்கிபதுங்கியொது

ங்கிப் போவானென்பது நீ கண்டிலேயோ நல்லததனைக் காண்பிக்கிறேன். சற்றே புனதுகண்குளிரப் பாரென்று கைகட்டி தோள்தட்டி கனைத்து இந்த அஸ்திரத்தை விடலாமென்று நினைத்து இரதத்தை முன்னுக்கு வாவொட்டாமல் பாணங்களால் அவன் திரேகத்தைமூடி அதிகமாகப் பத்து நாராசத்தை விட்டு ரதத்தைப் பின்னுக்கு தள்ளிக்கொண்டு போகும்படியாய்ச்செய்தான். அப்போது சுரதமகாராசனிட மார்புகலங்கிஆயாசத்தோடுங் கையிற்பிடித்த வில்லைநழுகவிட்டு இரதத்தின் பேரிற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான். அப்போது சாரதிகுதிரைகளுடன் இரதத்தைப் பின்னிட்டபடியே பதினைந்து காதவழி தூரங் கொண்டுபோய்விட்டான்.

பின்பு காலசித்தன் மகாசந்தோஷமாய் இரதத்தை நடத்திக்கொண்டு மூவாயிரத் தைந்நூறு இராச குமாரர்கள்பேரில் வந்தெதிர்த்தா னப்படி வந்தெதிர்த்த காலசித்தனையும் மகாமாயனையும்விடாமற் பாணங்களைப்பூட்டி அகோரமானயுத்தம் புரிந்தார்கள். அக்காலையில் மகாமாயனானவன் சிலையையூன்றி அஸ்திரங்களை மேன்மேலாய்ப்பொழிந்து மூவாயிரத்தைந்நூறு இராசகுமாரர்கள் ஏறிவந்த ரதசாரதிகளுடன் தும்சஞ்செய்துவிட்டான். மறுபடியும் வேறுரதத்தில் மூவாயிரத்தைந்நூறுபேருமேறிவர, அதுகளையுங் காற்றிற்பஞ்சாகப் பறக்கடித்தான். இப்படி பதினாலாயிரம் இரதம்வரையிற் பொடிபொடியாய்ப்போகவே வேறே ரதமேறவு முதவாமல் மூவாயிரத்தைந்நூறு இராசகுமாரர்கள் கத்திகேடயங்களை எடுத்துக்கொண்டு ஓடிவருகிறதைக்கண்டு மகாமாயனானவன் ஒன்றின்மேலொன்றாய்மூவாயிரத்தைந்நூறுபாணங்களைவிட்டு இராசகுமாரர்கள் முடிகளையறுத்துக் கீழே தள்ளுகிறபோது தேவர்கள்கண்டு மகாமாயனுடைய கரவேக சரவேகத்திற்கு மிகவு மாச்சரியமடைந்தார்கள். அப்போது முப்பத்தொருலட்சத்துப் பதினாயிரம் படைத்தலைவர்களும் மகாமாயனை வளைத்துக்கொண்டுமாரிசொரிவதுபோலச் சரமாரிவிட்டுமகாமாயன் இரதத்தைமூடிப்போட்டார்கள். அதுகண்டுகாலசித்தன் மிகவுங்கோபங்கொண்டு சேனைகளைக்கவிந்து சாடுகிறபோது சின்னபின்னமாகவிழுந்திறந்தபேரும், உயிருடன்தப்பியோடுகிறபேரும், சேவகம் வேண்டாமென்றபேரும், பிணங்களைவாரி மேல்போட்டுக்கொண்டு மறைந்தபேரும், காலசித்தன் உமதுகாலுக்கு ஆயி

ரஞ்சரணங்காருமென்பாரும், இரதத்திலகப்பட்டுந் தேய்ந்த பேரும், சாந்தினால் தலைசாய்ந்தபேருமாகவே, உதிரவெள்ளங்கள் ஆறுபோலோடத்தலைப்பட்டது. டாகினி, ஜாகினி மோகினி பூதப்பிரேதங்கள், நாய், நரி, கழுகு, கூளிகள் பிணங்களைப் பிடுங்கித்தின்று உதிரங்களைக்குடித்து, டமாரபேரிகைகளை யெடுத்து கழுத்தில் மாட்டிக்கொண்டு முழக்க, ஓடுகிற ரத்தவெள்ளத்தில் அனேகந்தலையில்லாத முண்டங்களெழுந்துகூத்தாடிற்று அதுகண்டு காலசித்தன் இரதத்தைத் திருப்பிக்கொண்டு சலவசந்தன் யுத்தஞ் செய்கிற இடத்திற்கு வந்தான். அவ்விடத்தில் ஆயிரம் மந்திரிப் பிரதானிகளுஞ் சலவசந்தனை வளைத்துக்கொண்டு சரங்களைவிட்டடிக்கிறபோது சலவசந்தரன் அவர்கள்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்து ஒவ்வொருவருக்கு நான்குதிவ்வியாஸ்திரங்களை விட்டு சாரதி குதிரை மந்திரி பிரதானி முதலியவர்களைக்கொன்று எமபதிக்கனுப்பினான். அப்போது மகாமாயனானவன் மகாவுக்கிரத்துடனே நபுரொன்றுக்கு நாலுபாணங்களை விட்டு முப்பத்தொருலட்சத்து பதினாயிரம் வெண்கல ரதக்காரரையும் நிமையோடு நிமைகொட்டு முன்னமே எமலோகத்திற் கனுப்பிவிட்டான். இவ்வாறு ஒருவரும் நிகரில்லாமல் இராட்சத சிரேஷ்டர்கள் இரதத்தை நடத்திக்கொண்டு சத்துருக்கமகாராசனுடைய பாளையம்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது சூரியனுதயமாகி இருபத்தைந்து நாழிகையாயிற்று.

ஐந்தாமநாள் யுத்தம்.

அதற்கு முன்னமே சோமகாசமகாராஜன் ஐந்நூரக்ரோணி யானைபரிசேனைகளைப் பயணப்படுத்தி ஐந்நூறு இராசகுமாரர்களையும், ஐந்நூறு மந்திரிப்பிரதானிகளும், தன்புத்திரனாகிய சூரதமகாராஜனுக்குப் பின்பலமாய்க் கூட்டி யனுப்பினார். அனுப்பவே மகாமாயன் ரதத்தைச் சேனைகள்பேரில் நடத்தி வில்லைவளைத்து அம்புருப் பொதியில் கையைவைத்து ஒன்று பத்து நூருயிரமாக யஸ்திரங்களைத்தொடுத்து ஒன்றின்பின் னொன்றாய்விட்டுக் கொல்லுகிறபோது சேனைகளானது சின்னபின்னமாய்க் கால்மாடு தலைமாடாக விழவே, ஐந்நூறு ராஜகுமாரர்களும், மகாமாயனை வளைத்துக் கொண்டார்கள், அதுகண்டு சலவசந்தன் ரதத்தை இராசகுமாரர்கள் பே

ரில் நடத்தினன். ஐந்நூறு மந்திரிகளும் சலவசந்தனை இராசகுமாரர்களெதிரிற் போகவொட்டாமல் தடுத்து அஸ்திரங்களைப்பூட்டி வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்தார்கள். அது கண்டு காலசித்தனனவன் யிதுதான்சமயமென்று பாணங்களைச் சரமாரியாகவிட்டுக் கொல்லுகிறபோது இராசகுமாரர்கள் தங்கள் தங்கள் வில்லைவளைத்து அமோகமாகப் பாணங்களைவருஷிக்க, அஸ்திரங்களையெல்லாம் அந்த காலசித்தன் அறுத்தெறிந்து பேருக்கிரண்டு பாணங்களை லக்காகத்தொடுத்து ஐந்நூறு இராசகுமாரர்களின் சாரதி குதிரைகளையுங் கொல்லுகையில் இரதமும் நடவாமல் நின்றுவிடவே ராசகுமாரர்கள் கத்தி கேடயம் தண்டாயுதங்களை எடுத்துக்கொண்டு இரதத்தைவிட்டுக் குதித்து ஓடிவருகிறதைக்கண்ட மகாமாயன் தன்னுடைய வச்சிரகோப தெண்டாயுதத்தை யெடுத்து சுழட்டியடித்தான். அந்த அடிபடமாட்டாமல் ஓடி ஒளிப்பாரும், ரோஷத்துடன் வந்தெதிர்த்து வச்சிரகோப தெண்டாயுதத்தாலடிபட்டு மாள்வாரும், ஸ்ரீராமா ராமா உமது திருப்பாதமே கெதியென்று துதிபண்ணி உயிர்விட்டுச் சாய்வாருமாக மடியுங்காலத்தில் இறந்தசேனைகள்போக ஓடி ஒளித்த சேனைகளெல்லாம் ஒன்ருய்க்கூடி இன்றைக்கு இராட்சதாள் புண்ணியத்தால் உயிர்தப்பி வந்தோமென்று இருநூ ரக்ரோணிசேனைகளைப் பரிகொடுத்துப் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அதில் இரண்டு தூதுவர்கள் தலைமேல் கையைவைத்து அழுதுக்கொண்டு சோமகாச மகாராசனிடஞ்சென்று வணங்கிநின்று சொல்லுகிருர்கள்.

ஐயா, இராசாதிராசரே! இராசமார்த்தாண்ட ராசபரமேஸ்வரா உமது குமாரனுகிய சுரதமகாராசனுடன் கூட இரண்டாயிரத்தைந்நூறு அக்ரோணிசேனைகளும் மாண்டு இராசமன்னர் படைத்தலைவர் சேனதிபதிகள் மந்திரி பிரதானிகளும் மாண்டு சுரதமகாராசனுக்குப் பின்பலமாக அனுப்பிவைத்த ஐந்நூரக்ரோணி சேனைகளும் ஐந்நூறு இராசகுமாரர்களும் மடிந்து முன்னூரக்ரோணி சேனைகள் சத்துருக்கர் சேனைகள் கையில் தப்பித்துக்கொண்டு ஓடிவந்தோமென்றுகூற, சோமகாச மகாராசன் திகிலடைந்து அடா தூதர்களே என்மகன் சுரதனு யிறப்பவன், நீங்களெங்கேயாவது நித்திரைசெய்து சொற்பனங்கண்டு வந்தீர்களோ சொல்லுங்களென்ன, தூதர்கள் ஐயா, தங்கள் குமாரனுகிய சுரதராசனும் வெகுசேனைகளு

மாண்டுபோயிற்று. மேலும் ஒருயிராட்சதனுடனே வெகுநேரம் போராடி அந்த ராட்சதனால் சுரதமகாராசன் கோபங்கொண்டிருக்கிறாரென்றார்கள். அதனைக்கேட்ட சோமகாச மகாராசன் சிம்மாதனத்தி லிருந்தபடியே அடித்து மோதி பூமியில் விழுந்து அலறியெழுந்து வெகுவாக பிரலாபிக்கையில் அரண்ணியமகாராசன் மந்திரிபிரதானிகளும் சோமகாச மகாராசன் துயரத்தை மாற்றுகையில், ஆயாசந்தெளிந்து கண்ணை விழித்துப்பார்த்தான். அப்போது எவ்வளவு நாழிகையாயிற்றென்றால் அஸ்தமித்து பத்துநாழிகையாயிற்று. ஆகையாலினி என்னசண்டை நடக்கப்போகிறது. எல்லாம் நாளைக்கு பார்க்கலாமென்று சாரதியையெச்சரித்து இரதத்தை நடத்தி பட்டணம்வருகிறபோது தமையனிறந்தான், தகப்பனிறந்தான், தம்பி சாய்ந்தான், பிள்ளை சாய்ந்தான், மாமன் மைத்துனன் செத்தானென்று வாரணபுரி பட்டணமுழுதுங் கோவென்ற சத்தமாக அழுதுக்கொண்டிருப்பதைச் சுரத மகாராசன் கேட்டு, அரண்மனைக்குப்போகிறபோது அவ்விடத்தில் பெண்டுபிள்ளை தாய்மார் சகலபேருமழுதுக்கொண்டிருந்தார்கள். அந்த ஓசையையுங் கேட்டுக்கொண்டே அப்பால் கொலுக்கூடஞ்சென்றான். அவ்விடத்திலுங் கோவென்ற சத்தங்களாயிருக்கவே சுரதமகாராசன் ரதத்தைவிட்டுக் கீழேயிறங்கி வில்லைக் கையிற்பிடித்துக்கொண்டு சபாமண்டபம் வருகையில் நால்வகைச் சேனைத்திரள்களுமெழுந்து கைகுவித்து சேவிக்கும்படியாய் மந்திரிபிரதானி சகல இராசமன்னர்களுடனும் நிறைந்த கொலுவாயிருக்கிற தந்தையாகிய சோமகாச மகாராசனையும் தமையனான அரண்ணியமகாராசனையுஞ் சேவித்தான் அவர்களுஞ் சுரதமகாராசனை வாழ்த்தியபின் சோமகாச மகாராசனனவர் குமாரனைநோக்கிக் கேட்கின்றார்.

அப்பா சுரதா, இன்று காலமே யுத்தத்திற்குப்போயிருந்தாயே என்னசமாச்சாரம் எனக்கு விபரமாய்ச் சொல்லென்று கேட்க, சுரதமகாராசனுஞ் சொல்லுகிறான் ஓ! பிதாவே, கேளும் இன்றுகாலமே நால்வகைச் சேனைகளுடனே யுத்தத்திற்குப்போய்ச் சேனைகளின்பேரிற் கவிழ்ந்து பலமானயுத்தம் பண்ணினேன் அப்போதுமகாஷயந்தஅனுமானென்னப்பட்ட ஒரு குரங்குவந்து யுத்தஞ் செய்தது அது காட்டிலிருக்கிற குரங்கென் றெண்ணவேண்டாம். அதனுடைய வாய்பிறப்பு கேட்கும்போது இராவண சம்மாரஞ்செய்த ஸ்ரீராமமூர்த்தியி

னுடைய தொண்டனாகிய அனுமார் புத்திரனென்று சொல்லினான். அவனையும் வீரசேனனையுங் கொன்று சேனாதிபதியான காலசித்த னென்னப்பட்ட ராட்சதனுடன் போர்புரியும் போது மட்சயந்தனுமான் செப்பியவாறே காலசித்தனென்னப்பட்ட சேனாதிபதியுங்கூறினான். அவனுடன் யுத்தஞ்செய்யும்போது அவனது அஸ்திரம் என்பேரிற்பட்டுச் சகிக்கமாட்டாமல் மூர்ச்சையடைந்தேன். அதன்பின்பு மந்திரிபிரதானி இராசமன்னர்களையுஞ் சேனைகளைக்கொன்றதும், எனக்குத்தெரியவராது இப்போதுதான் மூர்ச்சைதெளிந்து இரதத்தை நடத்திக்கொண் டிவ்விடத்திற்கு வந்தேனென்றான்.

அதனையுணர்ந்த சோமகாசமகாராசன் சொல்லுகிறான், ஓய், மந்திரிபிரதானிகளே! பராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமராக அவதரித்திருக்க அந்தப் பரப்பிரம சொரூபத்தைச் சேவிக்க என்னபுண்ணிய மியற்றினேமோ இன்று தேவர்களாலும் ரிஷியீஸ்வரர்களாலும் மகாத்துமாக்களாலுங் கற்பகோடிகாலந் தவங்கள் செய்தாலுங் காணப்படாத என்மூத்தகுமாரனான அரண்ணிய மகாராசனால் திருவடித்தாமரைகளை சேவிக்கும்படியான காலம் சமீபித்திருக்கின்றது ஆகையால் எளிதில் அவ்வாத்மாவைச் சேவிக்கும்படியான தக்கயோசனை சொல்லுங்களென்றான்.

அப்படி கூறிய சோமகாசமகாராசனைப் பார்த்து மந்திரியாகிய தூருவாசன் சொல்லுகிறான். ஐயா, சோமகாச மகாராசனே! கேளும், அந்தப்பராபரவஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீமந் நாராயணனே ராமனாக நமது சூரியவம்சத்தில் அவதரித்திருக்க அவருடைய திருவடித்தாமரைகளை எப்படி காணவேணுமென்றால் தமது சுவேலராசனைக் கொன்றபழிக்காகச் சத்துருக்கமகாராசனையும் அவனுடன் வந்த சேனாசமுத்திரத்தையுங்கொன்று பழியைத் தீர்த்துக்கொண்டோமேயானால் குதிரை விடுவிக்க சேனாசமுத்திரங்களைக் கூட்டிக்கொண்டுஸ்ரீராமரே வருவார், அப்போது அவர் திருவடிகளை தரிசித்துக்கொள்ளலாம் இல்லாவிட்டால் இப்போது சத்துருக்கமகாராசனை வணங்கிச் சமாதானம் பண்ணிக்கொண்டோமேயானால் அவர் அஸ்வத்தைவிட்டு பூமிப்பிரதட்சணம் பண்ணுகிறபோது எந்தெந்தராசாக்கள் வந்தெதிர்த்து யுத்தம் பண்ணுவார்களோ அவர்களைஜெயித்து குதிரையைவிடுவிக்க எத்தனை

காலம் எத்தனை நான் செல்லுமோ அவர் பாதாரவிந்தங் காண
ஆதலாலினி தங்கள் மனதிற்கு யுக்தமெப்படியோ அப்படி
நடத்துக்கொள்ளலாமென்றான்.

இவ்வசனங்களைக்கேட்ட சோமகாசமகாராசன் சொல்லு
கிறார் நமது சபையிலிருக்கப்பட்ட ராசாக்களே! கேளுங்கள்
இந்தப்பூமியிற்பிறந் திறவாதபேர் யாரிருக்கிறார்கள். எத்தனை
காலம் உயிருடன்பிழைத்தாலும்ஒரு நாளைக்கு யிறக்கவேண்டும்
மேலுஞ் சூரபத்மாவென்னப்பட்டவன் இரண்டாயிரஞ் சதுர்
யுக மிராச்சியபரிபாலனம்புரிந்து அக்கிரமஞ் செய்ததால் சுப்
பிரமணியர்கை வேலாயுதத்தினால் அவனுமிறந்தான் அதுக
ளுஞ் சாஸ்திரங்களினாற்சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள்
கார்த்திகை வீரியார்ச்சுனன் யென்னப்பட்ட காந்தருவராஜன்
அனேகநாட் பிழைத்திருந்து ரேணுகாதேவியினாற் பரசுராம
ன்கையால் ஆயிரம்சிரசுகளும் இரண்டாயிரம் அவயவங்களும்
அறுப்புண்டு அவனுமிறந்தான் ஆகையால் யாரிறவாம லிரு
க்கப்போகிறவர்கள் பிரமலோகத்தை யாளப்பட்ட பிரமதேவ
ரும் தேவேந்திராதிதேவர்களும் சொர்க்கமத்திய பாதாளமெ
ன்னு மிந்த மூன்றுலோகத்தி லிருக்கப்பட்ட ரிஷிகள் மகாத்
துமாக்கள் சத்தசமுத்திரஞ்சூழ்ந்த லோகமுழுதும் யாவிட
ராய்ப் பிறந்தவர்களும் எறும்புக்கடை எண்பத்து நான்குலட்
சஞ் சிவாத்துமாக்களும் பிறந்துயிறந்து போவார்களேயல்லா
மல் சாசுவதகாலம் வாழப்பட்டவர்கள் ஒருவருமில்லை ஆகை
யால் ஸ்ரீராமர் கைப்பாணம் பட்டிறந்தாலுஞ் சாயுச்சியமான
மோட்சத்தையடையலாம். இதற்கு ஒன்றுஞ் சந்தேகப்படத்
தேவையில்லை நாளைகாலமே யெல்லோரும் யுத்தத்திற்குப் பய
ணப்படுங்களென்ன, சபையிலுள்ளவர்கள் கலக்கந்தீர்ந்து
சந்தோஷமடைந்தார்கள்.

இவ்விடத்தில் இப்படியிருக்க சத்துருக்கமகாராசன் பா
ளையத்தில் யென்னசெய்தியென்றால், வீரசேனனானவன் மூர்ச்
சைதெளிந்தெழுந்து ரதத்தைநடத்திக்கொண்டு சத்துருக்க
மகாராசனுடைய படிகூடாரத்தண்டையிற்போய் இரதத்தை
விட்டிறங்கி யுட்கார்ந்திருக்கையில் சத்துருக்கமகாராசர் சொல்
லுகிறார். ஓ! இராட்சத சிரேஷ்டர்களே! ராஜமன்னர்களே!
யுத்தகளத்தில் நமது சேனைகளில் எவ்வளவுபேர் மாண்டு
போனார்கள். அதனைச் சவிஸ்தாரமாகச் சொல்லுங்களென்

றுகேட்கையில், சலவசந்தன் சொல்லுகிருன். ஐயா சத்துருக்கமகாராஜனே! கேளும், இன்றையதினத்தில் மூப்பத்தோராயிரம் அக்ரோணி சேனைகளும், சேனுபதியான உக்கிரசேனனும், நீலாட்சதனும், குகனும் மாண்டுபோனுர்கள். மற்றசேனுசமுத்திரங்களும் படைத்தலைவர் சேனுதிபதிகளும் முள்ளுமுனைகூட முறியவில்லையென்ன அதனைக்கேட்ட சத்துருக்கமகாராஜன் வீரசேனனைப்பார்த்து சொல்லுகிருர்.

வாரும் வீரசேனு, இன்றுயுத்தத்திற்கு யாரார்வந்தார்கள். அவர்களைச் சொல்லென்ருர். ஐயா, சத்துருக்கமகாராஜனே! சோமகாசமகாராஜருடைய குமாரனை சுரதமகாராஜனென்னப்பட்டவன் 2180-அக்ரோணிசேனைகளும் 2190-இராசகுமார்களும் 2000-மந்திரிமார்களும் 3000-படைத்தலைவர்களும் வந்து யுத்தஞ்செய்தார்கள். அப்போது சுரதமகாராஜன் பாணுக்கினியினுல் நான் மெய்மறந்து மூர்ச்சை யடைந்தேனென்ருன். வீரசேனனுனவன் அதுகேட்டு சத்துருக்கமகாராஜன் காலசித்தனே சுரதராஜன் யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தானே அவனென்னமாய்ப்போனுன் எனக்குத் தெரியச் சொல்லவேண்டுமென்று கேட்டார் கேட்கையில், ஐயா சத்துருக்கமகாராஜரே! கேளும், சுரதமகாராசன் தம்முடைய சேனைகள்பேரில் முனைந்து பாணங்களால் வெகுசேனைகளைக் கொன்றுபோட்டான் அதுகண்டு நான் சுரதமகாராஜனை மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்து மூர்ச்சையாக்கிவிட்டேன் இப்போதுதான் மூர்ச்சைதெளிந்து ரதத்தை நடத்திக்கொண்டு பட்டணம் போய்விட்டானென்று தூதர்கள்வந்துசொன்னுர்களென்ருன் காலசித்தனுனவன் அதுகேட்டு சத்துருக்கர் சொல்லுகிருர். வாரும் காலசித்தனே? நாளை மகாயெச்சரிக்கையுடனே யுத்தத்திற்கு வருவார்கள்போற் காண்கின்றது இனிமேலே நாமெல்லோரும் அதிகஜாக்கிரதையுட னிருந்து நாளையதினத்தில் யுத்தத்தை செயிக்கவேணுமென்று சத்துருக்கமகாராஜன்சொல்ல, காலசித்தன் சத்துருக்கமகாராஜனைப் பார்த்துச் சொல்லுகிருனையா சத்துருக்மகாராஜனே கேளும் சுரதராஜனே சிவன் கைவில்லும் அஸ்திரங்களும்பெற்றவன் நாளைய யுத்தத்திற்கு வந்தானேயாமாகில் மகாஉக்கிரத்துடன் வருவான் அவனை செயிக்கத்தக்கினபேர் நம்முடைய பாளையத்தில் யாரிருக்கிருர்கள், மகாமாயன், சலவசந்தன், நாம் ஐந்

னுபேரும், ராட்சதசேனைகளுந்தான் இவர்களைக்கொண்டு யுத்தஞ்செய்து சுரதராஜனையும் அரண்ணிய ராசனையும் தந்தையாகிய சோமகாசமாராஜனையும் சேனைகளையுங் கொன்று குதிரையை விடுவிக்கவேணுமேயல்லாமல் அசாரிசமாயுத்தம்பண்ணினேமேயானால் அவர்களை செயிக்ககக்கூடாதென்றான். சேனாதிபதியாகிய அகம்பன் குமாரனாகிய காலசித்தனெனவன் அவ்வார்த்தைக்கு யாவரும் சம்மதித்தார்கள். சத்துருக்கருங் காலசித்தனைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓய் காலசித்தனே நம்முடை சேனைகளையெல்லாம் பவுஞ்சிட்டு நிறுத்தி யுத்தத்திற்கு தயார்செய்யென்றுசொல்ல, அப்படியே தயார்படுத்திக் கொண்டிருந்தான். யாவரும் நாளையுதயத்திற்கு வரும்படியாய் தங்கள் கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் சோமகாசமகாராஜனெனவன் சூரியனுதயமாகச் சாமமிருக்கையி லெழுந்திருந்துகாலைக்கடனைமுடித்து, ஸ்நானஞ்செய்து, நியமநிஷ்டைகள் புரிந்து குமாரர்களுடனும், 8450-இராச குமாரர்களுடனும் உட்கார்ந்து பந்திபோசனமாகச் சாப்பிட்டு கந்த கதம்ப கஸ்தூரி பரிமளாதிகளணிந்து ஆடையாபரணங்களை யுடுத்திக் கிரீடம் வாகுவலயந் தரித்து அம்புருப்பொதி முதுகிற்கட்டி இரணவரிசைகள் பூண்டு மகா சந்தோஷத்துடன் புறப்பட்டார்கள். இவர்கள் புறப்படு முன்னமே சேனாதிபதியான அஸ்வசேனன் 3735 - அக்ரோணி யானைகளும் 3470 - அக்ரோணிரதங்களும் 3880-அக்ரோணி கால்பலமும், தயார்படுத்தி பேரிகை யறைவித்தார்கள் அதுகண்டு 190-மந்திரிகளும் இரதமேறிசோமகாசமகாராசனும் சுரதராசனும் அரண்ணியமகாராஜனும் வந்து சூழ்ந்தார்கள் சூழவே 8490 - ரதாரூடராய் வந்தார்கள் இலட்சம் படைத்தலைவரும் யானையின்மீது சிங்கக்கொடிபரக்க வந்து சேர்ந்தார்கள் யாவரும் ஏகோபித்து யானைகள் முன்னுங் குதிரைகள் பின்னும், இரதங்கள் பின்னும் சேனைகள் தன்பின்னுமாக, அணியணியாக, சயபேரி, வெண்கலபேரிகை, ரணபேரிகை, வீரமுரசு, வெற்றிமுரசு முதலாகிய முப்பத்திரண்டு வாத்தியங்களு முழங்கப் போர்க்களம் வந்துசேர்ந்தார்கள்.

ஆரும்நாள் யுத்தம்.

இப்பால் சத்துருக்கருடைய சேனாதிபதியான காலசித்தன், யானைகள் ஒருபக்கமும், தேர்கள் ஒருபக்கமும், குதிரைகள்

ஒருபக்கமும் நிறுத்தி, சேனைகளை நடு அணியில் நிறுத்தினான் மட்சயந்தனுமானும் சத்துருக்கரும் முன்னணியில் வந்து நின்றார்கள். மகாமாயனும், சலவசந்தனும், அதற்கு முன்ன ணியாக நின்றார்கள். வீரசேனனும் இரதாரூடனாக சேனைக ளுக்கெல்லாம் முன்பாக நின்று வில்லையெடுத்து வளைத்து அநேக திவ்வியாஸ்திரங்களை பூட்டி சோமகாசமகாராசன் சேனைகளின்மீது விட்டுக் கொல்லுகிறபோது சோமகாசன் சேனைகள் முனைந்து, சத்துருக்கமகாராஜனிட பாளையங்க ளின்பேரிற் பாணங்களை விட்டுச் சாடுகிறபோது இருதிறவர் சேனைகளுங் கவிந்துக் கொள்ளவே மூண்டுக்கொண்டது யுத்த மானது, அதுகண்டு வீரசேனன் அதிக ரோஷத்துடன் பற் களை நறநறவென்று கடித்து அச்சேனைகளை முன்னுக்கு வர வொட்டாமல் யுகாந்தகாலத்திற் சத்தமேகங்களுங்கூடி, இடி இடித்து, மின்னல்மின்னி, மாரிபொழிவதுபோல, சரமாரி யாய்ச் சோமகாசமகாராசன் சேனைகளின்மீது பொழியும் போது அச்சேனைகள் தாளமாட்டாமல் ஓலமிட்டு வலசை வாங்கியோடுவதைப்பார்த்த சேனாதிபதியான விஸ்வசேனன், அவர்களை ஓடவொட்டாமல் வீரசேனன் முன்பாக இரதத்தை நடத்தி வில்லைவளைத்து அஸ்திரங்களைப்பூட்டி வீரசேனன் விடப்பட்ட அஸ்திரங்களனைத்தும் அறுத்து எண்பது நாரா சபாணத்தைவிட்டு வீரசேனன் ஏறிவந்தரதத்தையும் உடை த்து விட்டு சாரதி குதிரைகளைக் கொன்றுவிட்டான், அது கண்டு மறுதேரிலேறினான். அதையுந் தவிடுபொடியாக்கி னான். அதனால் வீரசேனன் கடுங்கோபங்கொண்டு தெண்டாயு தம் ஒன்றைக்கையி லெடுத்துக் கரகரவென்று சுழட்டி விஸ்வ சேனன் இரதத்தைப்பார்த்து ஓரடிகொடுத்தான். அந்த அடி இரதத்தின் பேரிற் பட்டமாத்திரத்தில் இரதமானது அச்சு வேறு ஆணிவேறாய்ச் சக்கைச்சக்கையாய்ப் பிளந்து பூமியில் விழுந்துவிட்டது.

அதனால் விஸ்வசேனன், அடா, வீரசேனா! உன்னுடை ய சூரத்தனத்தை இன்றுபார்க்கிறேன். என் வஞ்சத்தைத் தீர் க்கிறேன். உன்னைக் காக்கும்படியான சத்துருக்கனும் ஆகாய வாசிகளும் பார்க்கும்படியாக எமலோகத்தில் உன்னைச் சேர்க் கிறேன் பாரென்று ஒரு கோபதெண்டாயுதத்தை யெடுத்து மலையைச் சுழட்டி யெறிவதுபோல் விசைகொண்டு சிரசைப் பார்த்து ஓங்கிவிட அதுவும்புறப்பட்டுவருகையில்வீரசேனன்

சிறியகல்லைத் தட்டுவதுபோலத் தட்டிவிட்டுச் சொல்லுகின்ருன்.

அடா, விஸ்வசேனு! பளாபளா, நன்ருய்ச் சொன்னுய் சத்தசாகரமும் வெற்றியடைந்த சத்ருக்கமகாராசரின் சேனுதிபதியென்று சற்றுமெண்ணுமல் என்னையும் அவரையும் வைதாயல்லவா, இதோ உன்சிரசைக் கொய்து விடுகிறேன்பாரடாவென்று தண்டாயுதத்தைச் சுழட்டி விஸ்வசேனன் மார்பிற் ருக்கினுன். அந்த அடிபட்டவுடனே விஸ்வசேனன் மெய்மறந்து தெண்டாயுதத்தை நழுகவிட்டு அடியற்ற மரம் போலச் சாய்ந்து பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தான்.

அதுகண்டு வீரசேனனும், சீக்கிரமாக ஒருரதத்தில் ஏறிக்கொண்டு வில்லையெடுத்து நிறுத்தி சங்கோபசங்கமாய் அஸ்திரங்களை விட்டுக் கொல்லுகிறபோது சேனைகளானது தத்தளித்து தடுமாறி ஓடத்தலைப்பட்டதைப் பார்த்து அரண்ணிய மகாராசன் ஓடுகிறவர்களை ஓடவொட்டால் நிறுத்தி இரதத்தை வீரசேனன் முன்னுக்கு நடத்தி வீரசேனனைப் பார்த்து சொல்லுகிருன். அடாவீரசேனு நீயேன் தலைகீழாய் விழுகிருய் துப்பற்ற சிலபேரைக் கொன்ருேமென்று கர்வித்திருக்கிருய் ஒருக்ஷணநேரத்துக்குள்ளே உன் மர்மங்களையெல்லாம் வெளிப்படுத்திவைக்கிறேன், பாரென்று பதினைந்து நாராசபாணத்தையெடுத்துப் பிரயோகஞ்செய்தான். அதுவும் காலகோடி விஷம்போற் சீறிக்கொண்டுவந்து வீரசேனன் விட்ட அஸ்திரங்களை கண்டித்து அவனையும் நோகச்செய்யவே வீரசேனன்பார்த்து சரீரம்வேர்த்து ஒருக்ஷணத்தில் வில்லில் அஸ்திரங்களைக்கோர்த்து ஒன்றின்மே லொன்ருய்விட்டு அரண்ணியமகாராசன் வில்லைக் கையிற் பிடிக்கவொட்டாமலும் சாரதிரதத்தை நடத்தவொட்டாமலும், செய்து மார்பின் கவசங்களையும் அறுத்துப்போட்டான் அத்தருணத்தில் அரண்ணிய மகாராசன் அதராமற் பதராமல் மகாகோபத்துடன் தன் வில்லை 1-10-100-1000-ஆயிரம்-கோடியென்று கணக்குமிதமில்லாமற் பாணங்களைவிட்டுச் சாரதி குதிரைகளைச் சாகவடித்து வீரசேனனையுங் கைகாலாட வொட்டாமற் களைத்து மெய்மறந்து தண்ணி தண்ணி என்று எண்ணி குன்றும்படியாய் மூர்ச்சை யடையச்செய்தான்.

அதுகண்டு காலசித்தன், சோமகாச மகாராஜன் சேனைகள்பேரில் இரதத்தை நடத்திப் பாணங்களைவிட்டுக் கண்ட

துண்டமாய்க் கால்மாடுதலைமாடாய் விழத்தக்கதாகக் கொன்று பின்பு கோபதெண்டாயுதமெடுத்து பூமியிற்குதித்துச் சுழட்டி அடிக்கிறபோது ஒவ்வோரடிக்கு யானை(500)தேர் குதிரை(11) காலாள் இலட்சம் இந்தப்படியாய் ஒரு ஜாமநேரத்துக்குள் ளே(1500) அக்ரோணி சேனைகள் மாண்டு இரத்தாறு ஓடத்த லைப்பட்டது. அதனாற் சேனைகளானது காலசித்தன் முன்னு க்கு நிர்வாகஞ்செய்யமாட்டாமல் வலசைவாங்கிக்கொள்ளவே சுரதமகாராஜன் பார்த்து, சாரதியை யெச்சரித்து மகாவுக்கிரத் துடனே இரதத்தை நடத்திக்கொண்டுவந்து காலசித்தனை வ ளைத்துக்கொண்டு அடாகாலசித்தனே! பனங்காட்டுநரி சலசல ப்புக்கஞ்சுமோ அதுபோல என்னிடத்தில்வந்து பூச்சிகாட்டு கிறாய் பயப்படோம் இனியுன்னைவிடோம். கர்வங்கொள்ளா தேயென்று வில்லைக்காட்டி அஸ்திரங்களைப்பூட்டி சரமாரியா ய்ப் பொழிகிறபோது அந்த அஸ்திரங்களையெல்லாந் தெண் டாயுதத்தினாலடித்துப் பொடியாக்கி மறுபடியுந் தெண்டாயுத த்தைச்சுழட்டி ஒருஅடிவிட்டான். அந்தஅடியினாற்சுரதராஜ ன் இரதமானது தூளாகிவிட்டது. அப்போது சுரதராசன் ல குவில் தப்பித்துக்கொண்டு மறுதேரிலேறி அஸ்திரவருஷங்க ளை கணக்குமிதமில்லாமற் பொழிகிறபோது அதுகளை எல் லாந் தடாய்த்துக்கொண்டு காலசித்தன் சொல்லுகிறான்.

அடா சுரதா, நீயோ என்னுடனெதிர்த்துப் போராடுகிற வன் கருடன்முன் கொசுபறக்குமா கனத்தவீரரைக் கையிலாகா தவன் கொல்வானோ நீ நேற்றையதினம் அடிபட்டு முறிந் தோடின வுனக்கு இன்றையதினம் அதிகபலம் வந்துவிட்ட தோ ஆனாலும் பார்ப்போம். நில்லும் ஓடிப்போகாதே யென் று வச்சிரகோப தெண்டாயுதத்தைச் சுழட்டி இரதத்தைப்பார் த்து ஓரடிகொடுத்தான் அந்த அடியால் குதிரைகளும் நசித் துப்போகவே சுரதராஜன் இரதத்தைவிட்டுக் கீழேகுதித்தோ டிப்போயினான்.

பின்பு காலசித்தன் தெண்டாயுதத்தை எடுத்துச் சேனை கள்பேரிற் சுழட்டிவிட்டான். விடவே சேனைகள் அடிபட்டு சிரமற்றவரும், கரமற்றவரும், உரம்போனவரும், காம்போன வரும், துண்டமானவருமாகி, காலசித்தனொருவனாற் கலங்கி யோடுகின்றபோது சோமகாசமகாராஜன்கண்டு, கண்கள்பொ றிபறக்க காதிரண்டிலும் புகைகளெழும்ப, மீசைகள் துடிக்க

பற்களைக்கடித்துச் சாரதியை இரதத்தைக் காலசித்தன் முன்பு நடத்தச்சொல்லி, வில்லையெடுத்து நிறுத்தி அக்கினியாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிடவே, அந்த அஸ்திரம் திருதிகென் றெரிந்துக்கொண்டு வருகையில் காலசித்தன் அதன்மீது ஒரு வாரணாஸ்திரத்தை விட்டு அவித்துப் போட்டான் பின்னும் சோமகாச மகாராசன் ஒரு பர்வதாஸ்திரத்தை யெடுத்துவிட்டான்.

அதை காலசித்தன் ஒரு வச்சிராயுதத்தால் அறுத்துவிட்டான். அதுபோகவே சோமகாசமகாராஜன் பிர்மாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகஞ் செய்தான். காலசித்தனுந் தன்னுடைய பிர்மாஸ்திரத்தை எடுத்துவிடவே இதுவு மதுவும் ஒன்ருேடொன்று மூட்டியும், மோதியும், பொடிப் பொடியாய்ப் பூமியில் விழுந்ததுகள். அப்போது சோமகாச மகாராஜன் இராட்சதரைக் கொல்லவேணுமென்று நாராயணாஸ்திரம் எடுக்கவே தேவர்களெல்லாம் பயந்து மேலண்டத்திற்கு ஓடிப்போய் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அந்தவேளையிற் சோமகாசமகாராசன் காலசித்தமகாராஜனைப்பார்த்து அடா, இராட்சதர்களே! இதோ என்கையிலிருக்கிற நாராயணாஸ்திரத்தைப்பார்த்தாயோ இந்த அஸ்திரத்திற்குத் திரிமூர்த்திகளும் நிகரல்ல, ஆகையால் நீயும் உன்னுடையசேனைகளும் உனக்குத்தலைவனான சத்துருக்கனும் நாராயணாஸ்திரம் விடுமுன்னே சரணமடைந்தீர்களேயாமானல் உயிர் தப்பிப் பிழைத்தீர்கள். இல்லாவிட்டால் மரணமடைவீர்கள் இதோ விடுகிறேன் பாரென்ருன். அதற்கு காலசித்தன் நகைத்துச் சொல்லுகிருன்.

ஐயா, சோமகாசமகாராஜனே! கேளும், அந்த ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனுகவந் தவதரித்து எங்கள்மனதி லிடைவிடாமற் குடியிருக்கிருர். நீர் விட்ட நாராயணாஸ்திரம் எங்களை ஒன்றுஞ் செய்யமாட்டாது, ஸ்ரீராமரை வணங்காதபேனை நாங்களா வணங்குகிறது ஒருகாலத்திலும் இல்லை நீர் பிழைக்கவேணுமென்ருல் எங்களை வணங்கிச் சுகித்திரு மென்ருன். அதற்கு சோமகாசன் கோபங்கொண்டு நாராயாணாஸ்திரத்தைப் பூசைசெய்துவிடவே, அது அக்கினிகளைவாரி யிறைத்துக் கொண்டு அண்டபகிரண்டமும் ஆயிரத்தெட்டு அண்டங்களும் குலுங்க, ஆர்ப்பரித்து வருகிறபோது காலசித்தன் வில்லை

ந்தேரின்பேரில்வைத்து இரண்டுகரத்தையுஞ் சிரத்தின்மீது குப்பி தோத்திரஞ்செய்தான்.

அப்போது நாராயணஸ்திரமானது குரூரத்தையடக்கிக் கொண்டு காலசித்தனைக் கண்டு அவனை விடுத்து ஆயுதம் பிடித்தபேரை பஸ்மீகரம் பண்ணி நிராயுதராய் நின்றபேரைக் கடாட்சித்துக் கொண்டுவந்து சத்துருக்கமகாராஜனைக் கண்டு இவர் ஸ்ரீமந் நாராயணரே யென்று மனதிலெண்ணி வலசாரி இடசாரியாக வலம்வந்து சத்துருக்க மகாராசனுடைய அம்புருப்பொதியில் நுழைந்தது, அதுகண்டு சகலரும் ஆச்சரியமடைந்தார்கள். பின்னுஞ்சோமகாசமகாராஜன் அதிககோபங்கொண்டு பாசுபதாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதிகள்செய்து வில்லிற் சந்தித்துவிட்டான். அந்தப் பாசுபதாஸ்திரம்ஆவென்று வாயைத்திறந்து அண்டமுகடு பிளக்கும்படியாய் இறைச்சலிட்டுக்கொண்டு வருகிறதைக் காலசித்தன்கண்டு சிவன் கையில் தான்பெற்ற பாசுபதாஸ்திரத்தையெடுத்து மந்திராபூதிகள் செய்து பிரயோகப் படுத்தினன்.

அந்தப் பாசுபதாஸ்திரத்துக்கு அஷ்டதிக்குப்பாலர்களுங்காவலாகப் புறப்பட்டு சப்தமேகங்களும் சாகரமும் ஓசைப்படுவதுபோல, இறைச்சலிட்டுக்கொண்டு இரண்டு பாசுபதாஸ்திரமும்நெருங்கி யுத்தம்பண்ணுகிறபோது தேவர்கள்கண்டு திடுக்கிட்டு தேவேந்திரனுடன் பரமசிவனிடத்திற்போய்முறையிடவேபரமசிவனும் ரிஷபவாகனரூடராய், இரண்டுபாசுபதாஸ்திரத்துக்கும் மத்தியில்வந்து நின்றூர். அப்போதுஅந்தபாசுபதாஸ்திரங்களும் யுத்தம்பண்ணுவதை விட்டு வலம்புரிந்து நிற்க, அப்போதுசிவனுனவர்இரண்டையும்பார்த்து யுத்தம்பண்ணவேண்டாம் அவரவர்கள் அம்புருப்பொதியிற் சேருங்களென்று உத்திரவுசெய்து மறைந்துபோயினர்.

அவ்வாறே அஸ்திரங்க ளவரவர்களிடஅம்புருப்பொதியில்வந்தடையவே காலசித்தன் ஒரு வாய்வாஸ்திரத்தைவிட, அது சோமகாசமகாராஜனுடைய இரதத்தை மேற்கு முகமாய்ப்பின்னிட்ட வண்ணம் 350-காதவழி தள்ளிக்கொண்டு போய்விட்டது அதனைக்கண்ட யாவரும் ஆகாயவாசிகளும், இதுயென்ன புதுமையென்று மிகவுஞ்சந்தோஷமடைந்தார்கள். அப்பாற் காலசித்தன், மகாமாயன் யுத்தஞ்செய்யுமிடம் வந்துசேர்ந்தான். அக்காலையில் சுரதராஜன் அதிககுரூரமான

கோபத்துடன் சொல்லிக் கொள்ளுகிறான். ஏதடா, இந்த ராட்சதன் ஆறுநாளிரவுபகலாய் போராடியும் அவன் களைக்கிறவனாகக் காணவில்லையே, இவனுக்குப்பின்பலமும் வந்திருக்கிறது. ஆனாலுமென்ன, வெந்நீரில் வீடுவெந்துவிடுமா நல்லது இவனுடனே போராடி இவனைசெயித்து இவனுக்குப் பின்பலமாக வந்திருப்பவர்களையுங் கொன்றுவிடுகிறேனென்று அநேக திவ்யாஸ்திரங்களை விட்டு மகாமாயனைக் கைகாலாடவொட்டாமல் அடிக்கிறபோது மகாமாயனும் வருகிறபாணங்களத்தனையும் அறுத்தெரிந்துபோட்டு சுரதராசன்பேரில் முனைந்து, மிகவுங் கூர்மையோடுங் கூடியிராநின்ற திவ்வியாஸ்திரங்களைவிட்டுச் சுரதராஜன் சரீரத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்து அவன்மார்பிலணிந்த கவசத்தையும் அறுத்துவிட்டான். அதனாற் சுரதராசன் ஆயாசப்படாமல் 50-திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து ஒன்றின்மேலொன்றாய்விட்டு மகாமாயனையுங் கை மெய் சலிக்கும்படியாய் ஒருவர்க்கொருவர் பின்வாங்காமல் இடசாரி வலசாரியாய் இரதத்தைத் திருப்பிக்கொண்டு ஸ்ரீராமபிரானும் இராவணனுஞ் செய்த யுத்தத்தைப்போற் புறமுதுகுகொடாமல் நின்று யுத்தஞ்செய்கிறபோது சுரதராஜன் மிஞ்சி 20-திவ்வியாஸ்திரங்களை விட்டுமகாமாயனேறிவந்த இரதத்தையுமுடைத்து சாரதிகுதிரைகளையுங் கொன்று மகாமாயன் பிடித்திருந்த வில்லையுமுறித்து நிராயுதனாக்கிவிட்டான் மறுபடியும் மகாமாயன் மற்றொரு தேரிலேறினான்.

அதையும் நாலுதிவ்வியாஸ்திரங்களைவிட்டுச் சக்கைச்சக்கையாய்ப்பேர்த்தெறிந்து மகாமாயனுக்குத் தேர்வரவொட்டாமல்பாணங்களைவிட்டு அடித்துக்கொண்டிருக்கையில்மகாமாயனுக்குகண்கள்சிவப்பேறி, கடுங்கோபமீறி, கையில்வச்சிராயுதத்தையெடுத்துக் கிறுகிறென்றுசுழட்டி ஓடிவரும்போது சுரதராசன்கண்டு இவன் ஏதோமிஞ்சி ஓடிவருகிறானென் றஞ்சாமல் பஞ்சுபோற்பறக்கடித்துத் தஞ்சந்தஞ்சமெனக்கெஞ்சத்தக்கதாக ஒருசத்தியெடுத்து தூபதீபங்களுங் கொடுத்துவிட்டான் அந்தச்சத்தியானது மகாமாயன்எங்கேயெங்கேயென்றுஅகாரவுகாரத்துடன் உருவேற்றி ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டுவந்துமகாமாயன்மார்பிற் சடாலென்றுபாய்ந்துமுதுகிலுருகிப்போய்விட்டது அதனாலடியற்ற பனைபோல் சாய்த்து ஐயனே? ராமாவென்று மகாமாயன் மரணமடைந்தான்.

காலசித்தனுக்கும் சுரதராஜனுக்கும் ஏழாம்நாள் யுத்தம்.

மறுநாட் காலசித்தன்வந்து அடா, சுரதனே! நீயொரு வீரனே அடிக்கடிவந்து யுத்தம்புரிந்து ஓடிப்போகிற தொரு வீரமோ உன்னைக்கொல்லுவது எனக்கொருபாரமோ முகத் தில் மீசையுள்ளவனானால் இப்போதாவது ஓடாமல் நின்று யுத்தம்பண்ணடாவென்றான். அதுகேட்ட சுரதமகாராஜ னவன் சொல்லுகிறான். அடா, காலசித்தனே! உன்னிலு மிஞ்சின இராட்சத சிரேஷ்டன், விழுந்ததை நீயறியாயோ "அடிமேலடியடித்தால் அம்மியும் நகருமென்ற" பழமொழி யை நீ யறியாயோ என்னுடைய கைவில்லுக்கு நீயோ சிறு புல்லு ஆகையால் குதிக்காதேயென்றான். அஃதுணர்ந்த காலசித்தன் கூறுகிறான். அடா சுரதா! நல்ல வசனஞ்சொன் னாய் செல்வஞ் சொல்லுக்கஞ்சுமா கல்வி சபைக்கஞ்சுமா அஞ் சாதுபோற் கைகண்ட வீரனான நான் யுத்தத்திற்கஞ்சுவேனே உன்னைப்பெற்ற தகப்பன்சென்றவழி நீ கண்டிலேயோ பார டாவென்று, அநேக திவ்வியாஸ்திரங்களைச் சொரிந்தான். அதற்குச் சுரதராஜன் அக்கினியாஸ்திரமொன்றெடுத்து அபி மந்திரித்துவிட்டு அதுகளைக் கொய்தான். கொய்யவே கால சித்தன் கடினமான ஒரு வருணாஸ்திரத்தையெடுத்து தனுசிற் றொடுத்து அபிமந்திரித்துவிட்டான். அது மேககர்ச்சனைபோ லிறைச்சலிட்டு யானைத்துதிக்கை நீரைப் பானம்பண்ணுவது போற் சேனைகளை ஆவாகனஞ்செய்தது சுரதராஜன் சுருக்கி னில் ஓர் பாணத்தையெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிடு முன்னமே காலசித்தன் பதினைந்து திவ்வியாஸ்திரங்களை விட்டு அந்த நாகபாணத்தைப் பார்த்து விட்டுவிட்டான். அந்த சுழற்பாணம் வருகிறதற்கு முன்னமே சுரதராஜன் லகுகொண்டு மறுதேரிலேறினான் அதைக்கண்டு காலசித்தன் கைகொட்டி சிரித்து, அதிக கோபமானான் அந்த சுழற்பாண மானது ரதத்தை ஆகாயமாகக் கிளப்பிக்கொண்டுபோய் மேக மண்டலந்தாண்டி வாயுமண்டலத்துச் சுழலி லகப்பட்டு ரத மானது தலைகீழாய்ச் சாரதி குதிரைகளுடன் பூமியில் விழுந்து நசித்துப்போனார்கள்.

அத்தருணத்தில் சுரதராஜன் உக்கிராகாரனாக வில்லை நிறுத்திச் சாங்கோபசாங்கமாய்ச் சரமாறிப் பொழிந்துக்கொ

ண்டு பருவதமேறியிழிந்து ஓடிவருபவன்போற் பாணங்களை விட்டுக்கொண்டு இரதத்தை நடத்திவருகையில் காலசித்தன் பார்த்து ஏதடா, சுரதமகாராஜன் உக்கிரத்துடன் முனைந்து யுத்தம்பண்ணுகிறான். இனி நான் அஜாக்கிரதையாயிருக்கலாகாதென்று சுரதமகாராஜன் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாந் தும்சப்படுத்தி இருவருமுனைந்து போர்புரியுங்காலத்திற் சோமகாச மகாராசனானவன் பாணவேகமடங்கி ரணக்களத்தை வந்து பார்க்கும்போது வெகுதூரத்தில் யுத்தம்பண்ணுகிறதைக்கண்டு இரதத்தை விட்டுக்கொண்டுவந்து வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தான் அக்காலையில் ராட்சதப்படைத்தலைவர்களெல்லோரும் ஒன்றாய்க்கூடி சேனைகளை மடக்கியடித்துப் போராடினார்கள். அப்போது சுரதமகாராஜனானவன் ஏதடா காலசித்தன் பொல்லாதவனாயிருக்கிறான். அன்னாகாரம் ஊணுறக்கமில்லாமல் ஏழுநாளாக இரவும்பகலும் நம்மைவிடாமற் போர்புரிகிறான். ஆகையாலிவன் தேரைப்பொடியாக்கவேண்டுமென்று மனதிற்கருதி பத்து திவ்வியாஸ்திரங்களைவிட்டு ரதத்தையொடித்து மார்பின் கவசத்தையும்பொடியாகச்செய்து கையிற்பிடித்திருந்த வில்லையுமொடித்து மறுதேரிலேறவொட்டாமல் சரக்கூடங் கட்டிப்போனான். அதுகண்டு காலசித்தனானவன் சொல்லுகிறான். அடா சுரதா, என்னுடன் திரிமூர்த்திகளானாலும் போராடமாட்டார்கள். ஆனபடியால் ஏழுநாளாக இரவும்பகலும் என்னுடன் சண்டைசெய்தாயாகையால் உன்னை மெச்சினேன் இதோ உன்னைச் சண்டனூருக்குக் கொண்டுபோகச் செய்கிறேனென்று வச்சிரகோப தெண்டாயுதத்தையெடுத்து கிறுகிறென்று சுழற்றிவிடுமுன்னஞ்சுரதராஜன்கண்டு, அடா காலசித்தா குலைக்கிற நாய் வேட்டையாடாதென்று கண்டிலாயோ மனக்கர்வத்தை விட்டிலாயோவென்று தனக்குச் சிவசுப்பிரமணியர் கொடுத்தருளிய வேலாயுதத்தையெடுத்து மந்திராபூதிகள் செய்துவிடவே அந்தவேலாயுதமானது வெளிப்பட்டு அண்டங்குலுங்க அம்புவிகலங்க, தேவர்களு மூவர்களுந்தியங்க, யாவருமயங்க, அக்கினிப்பொறிகளை வாரிவாரியிறைத்துக்கொண்டு ஆர்ப்பரித்து காலசித்தனை தேடிக்கொண்டு வேலானது வருகையில்வச்சிரகோப தெண்டாயுதத்தைச் சுழற்றிவிட்டானந்ததெண்டாயுதமானது வேலின்மேல்போய்த்தாங்கிவேலாயுதத்தை பூமியிற்றள்ளிவிட்டு சுரதராஜனைப்பார்த்துச் சுழன்றுவருகிற

போது சுரதராஜன் அநேகதிவ்வியாஸ்திரங்களைவிட தடாய்த்துக்கொண்டு சுரதமகாராஜன் இரதத்தின்மீது தபாலென்று விழுந்து இரதமுறிந்து சாரதி குதிரைகளுடன்சாகவே, சுரதராசன் தப்பித்துக்கொண்டு மறுதேரிலேறினன். அந்தச்சமயத்தில் வேலானது உயிருண்டாகிறபோது காலசித்தனுணவன் கத்திகேடயமெடுத்து வேலாயுதத்தை நறுக்கினன். அது சற்றுமசையாமற் காலசித்தனுணவன் மார்பிற் பாய்ந்து முதுகிலுருகிப்போயிற்று, அதனுல் காலசித்தன் ஸ்ரீராமா ராமாவென்று வாய்விட்டலறிப் பனைபோற் சாய்ந்து மரணமூர்ச்சையடைந்தான். அதுகண்டு தேவர்கள் துயரமானுர்கள்.

அப்பால் சுரதராசன் சந்தோஷமாய் இரதத்தைவிட்டுக்கொண்டுவருகிறபோது சேனைகள் சுரதமகாராசனைவிடாமல் வளைத்துக்கொண்டு ஆயுதஅஸ்திரங்களைவிட்டு யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையில் எண்பத்தினுன்கு இராசகுமாரர்கள் சத்துருக்கமகாராசனைவிடாமல் வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்யுங்காலத்தில் சத்துருக்கமகாராசனுணவர் இராசகுமாரர்களேறிவந்த இரதங்களையுடைத்து, இராசகுமாரர்கள்பேரில் ஒன்றுக்கு நான்குபாணம்விட்டு சிரங்களைக் கண்டித்துப்போடவே உதிரவெள்ளமானது ஆறுபோலோடியது. அதுகண்டு சத்துருக்கமகாராசன் சுரதராசன்பேரில் இரதத்தை நடத்திச் சுரதமகாராசன் இராக்ஷதாள் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்துத்தள்ளி சுரதராசனையுங் கைகாலாடவொட்டாமல் பாணங்களைவிட் டடிக்கிறபோது சுரதராசன் கண்ணுக்கு சத்துருக்கனைப்பார்க்க பயங்கரமாகி இவன்ருனே ஸ்ரீராமபிரானிட தம்பியான சத்துருக்கமகாராசனெனன்பவ னிவ்வளவு பராக்கிரமம் பொருந்தியவனுகையாற்ருனே அஸ்வத்தின்பின்னுலனுப்பிவைத்தார். ஆனுலுமென்ன, நமக்குச் சிவன்கொடுத்த வில்லும் அஸ்திரமுமிருக்க ஆர்தானென்ன செய்யக்கூடு மச்சமென்னவென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு வில்லையெடுத்து நிறுத்தி அதிக தீக்ஷண்ணியமா யிருக்கப்பட்ட பத்து திவ்வியாஸ்திரங்களையெடுத்துப் பிரயோகம்பண்ணினுன்.

அதுகள் அக்கினிச்சுவாலையாய் நாகசற்பம்போற் சீறிக்கொண்டுவேகமாகவருகிறபோது சத்துருக்க மகாராசனுணவன்

கண்டு ஒருராமபாணமெடுத்து மந்திராபூதிகள்செய்து வில்
ற்சந்தித்துப் பிரயோகம் பண்ணினான், அது யெப்படியாயி
றென்றால், எடுக்கும்போது நூறு புறப்படும்போது ஆயிர
இவ்வாறாக இராமபாணமானது ஒன்றின்மேலொன்றாய்பு
பட்டு காலக்கோட்டி விஷம்போற் சீறிக்கொண்டு சுரதராச
விடப்பட்ட பாணங்களையெல்லாம் நாசஞ்செய்து அவன் ச
ரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்து இரதத்தை முறி
து சாரதி குதிரைகளையும் அதம்பண்ணிவிட்டு அப்பாணமா
து அம்புறாப்பொதியில்வந்தடைந்தது அதுகண்டு சுரதனு
சரியப்பட்டு ஆ! ஆ! இதென்னபாண மின்றையவரைக்கு
நாம்கண்டதில்லையென்றுமறுதேரிலேறிவில்லையெடுத்து அ
புறாப்பொதியில் கையைவைத்து இதுபத்து இதுநூறு இ
ஆயிரம் இது பதினாயிரம் இது லட்சம் இது கோடியென்
கணக்குமிதமில்லாமலும் ஓய் ஒழிச்சலில்லாமலும், அஸ்தி
ங்களைச் சோனைமாரிபோற் சொரியுங்காலையில் சத்துருக்கமகா
ராசனும் ஒரு நாராயணாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப் பி
யோகம்பண்ணினார். அந்த நாராயணாஸ்திரமானது வில்லை
விட்டு வெளிப்பட்டுபத்து-நூறு-ஆயிரம்-பதினாயிரம்- நூறாயி
ரம்-லட்சம் கோடியென்று சொல்ல மிதமில்லாத பாணத்தை
அவ்வயங்காத்துக்கொண்டிருந்த நாகசற்பத்தைக் கோலாற்றட்
டினால் அதெப்படி சீறிக்கொண்டுவருமோ அதுபோலச் சுர
ராசன்விட்ட பாணங்களையெல்லாம் அறுத்துப்போட்டு அவ
ன் சரீரத்தை இரத்தமயமாக்கிவிட்டு நாராயணாஸ்திரமானது
அம்புறாப்பொதியில் வந்தடைய, அப்போது சுரதமகாராச
னும் வில்லைத் தேரின்பேரில் நழுகவிட்டு ஆயாசமடைந்தா
ன். அதுகண்டு சத்துருக்கமகாராசன் இரதத்தைவிட்டுக் குதி
த்து, சுரதமகாராசனிட இரதத்திலேறி, அவனை ஆயாசந்தெ
ளியும்படியாய் தன்னுடைய கச்சி உறையிலிருந்து சஞ்சீவி
வரிசை அவிழ்தங்களைச் சுரதராசன் பேரிற்றடவ, அவன் சரீ
ரம் எப்போதும்போலாகிச் சுரதராசன் கண்ணைத்திறந்து பார்
க்குமுன்னமே இரதத்தைவிட்டு குதித்துச் சத்துருக்கர் தமது
இரதத்தில் வந்தேறினார்.

அவாரென்றால் பல்லாயிரங்கோடி அண்டத்தையுங் கெ
ற்பத்தில்வைத்து இரட்சிக்கப்படா நின்றகர்த்தாவாகிய ஸ்ரீரா
மரிடசகோதரனான சத்துருக்கமகாராசனைக்கொண்டாடினார்கள்
அந்தச் சமயத்தில் சுரதராஜன் கண்ணைவிழித்துப் பார்த்து

றுதேரிலேறி தன்வரப்பிரசாத அக்கினியாஸ்திரத்தை எடு
து அபிமந்திரித்து வில்லிற்றொடுத்து பிரயோகம் பண்ணி
ட்டான். அந்தபாணம்வெளிப்பட்டு வடவாமுகாக்கினியை
ரி யிறைத்துக்கொண்டு திகுதிகென்றுபத்தியெரிய, அக்கி
யைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டுவருகிறதை சத்துரு
மகாராஜன் கண்டு இராமபாணமாகிய அக்கினியாஸ்திரத்
தயெடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகஞ் செய்
ர். அந்த அக்கினியாஸ்திரமானது புறப்பட்டுவடவாமுகா
னிக்குச்சமதையாய் நெருப்புகளை கக்கிக்கொண்டு சுரதராஜ
விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரிற்சடாலென்றுபாய்ந்து
ன்றொடொன் றூடுதாக்கிச் சுரதராஜனிட்ட அஸ்திரத்தைக்
ளீகரம் பண்ணிப்போட்டு அம்புறாப்பொதியில் வந்தடைந்
து. சத்துருக்கமகாராஜனைப் பார்த்து ஓ! சத்துருக்கமகாரா
னே கேளும், இதோ என்கையிலிருக்கும் பிரமாஸ்திரத்தைப்
ர்த்தையா, இந்தப்பிர்மாஸ்திரம் விருதாவிற்போகாது இத
ல் உன்னையும் உனக்குத் துணைவந்த ராட்சதாளையுங் கொன்
உன்தமையன் ஸ்ரீராமரையு மழைப்பிப்பே னப்படி வராத
டுக்கு என்தகப்பனை வணங்கிக் குதிரையை விடுவித்துக்
காண்டுபோய் உன்தமையன் கையினுல் யாகஞ்செய்து வைப்
ய் இல்லாவிட்டால் நீ யாகம்பண்ணுகிறது ஸ்ரீமந் நாரா
ணருக்கே தெரியுமென்றான். அதுகேட்டு சத்துருக்கராசன்
லுங்கநகைத்துச் சொல்லுகிறார்.

ஓ! இராஜகுமாரனே? கேளும், நல்ல வசனம் புகன்
ய், நீயோ என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கிறவன் நீபடப்
பாகிறபாடு இன்னதென்று தெரியாமல் என்னைமிரட்டுகிறாய்,
ன் பிர்மாஸ்திரம் என்னசெய்யக்கூடும். நீ முகத்திலே மீ
சபடைத்தவனேயானுல் என்னையும் என் சேனைகளையுஞ் செ
ந்து என் தமையனை யிவ்விடமழையும், பார்ப்போமென்
ர். அதுகேட்டு சுரதராஜன் சினமிகுந்து பிர்மாஸ்திரத்தை
ட்டுவிட்டான். அந்த பிர்மாஸ்திரம் வெளிப்பட்டு சப்தசா
நீரையுஞ் சுவறத்தக்கதான வடவா முகாக்கினியைப்போ
க் தகத்தகாயமாய் எறிந்துக்கொண்டு வருகிறபோது சத்து
க்கமகாராஜனுந் தம்முடைய இராமபாணமாகிய பிர்மாஸ்
ரத்தையெடுத்து பூசைநைவேத்தியங் கொடுத்துவில்லிற்சந்
ந்துவிட்டுவிட்டார். அந்தப்பிர்மாஸ்திரமும் வெளிப்பட்டு

ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டு சுரதராஜன்விட்ட பிர் மாஸ்திரத்தைக் கமளிகரஞ்செய்துப்போயிற்று. அதைப்பார் த்து சுரதராஜன் நாராயணாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய் தான். அந்த நாராயணாஸ்திரமும் வில்லிலிருந்து விடுபட்டு ஆயிரத்தெட்டண்டமுங் குலுங்க, ஆவென்று வாயைத்திற ந்து வருகிறபோது சத்துருக்கர் பார்த்து தம்முடைய இராம பாணமாகிய நாராயணாஸ்திரத்தை யெடுத்து அதற்கு பூசை நைவேத்தியங்கள் புரிந்துவிட்டார் அந்த நாராயணாஸ்திர மானது புறப்பட்டு ஆயிரத்தெட் டண்டமும் (224) புவன மும் சப்தசாகரமுங் குலுங்கும்படி தேவர்களும் பயந்தோட அதிவேகமாய் சுரதன்விட்ட நாராயணாஸ்திரத்தின்மீது திடீ லென்றுவந்துபாய்ந்து அதைக் கமளிகரம் பண்ணிவிட்டுப் போயிற்று. அதனைக் கண்டு சுரதராஜன் அதிகசினங்கொண்டு அநேக பாணங்களை வில்லிற் சந்தித்து சோனமாரியைப்போ ல சரமாரிபொழிந்து உடனே ஒருசத்தியை யெடுத்துப் பூசை கள் செய்துவிடுத்தான். அந்த சத்தியானது விடுபட்டு மண்வி ண்ணதிர, அக்கினிக்கொழுந்துகளோட, அதிவேகமாக வரு வதைச் சத்துருக்கமகாராஜனறியாமற் பாணங்களையறுத்துக் கொண்டிருந்தார் இந்தவேளையில் சத்தியானதுசத்துருக்கமகா ராஜனுடைய மார்பிற் குபீலென்றுவந்து பாய்ந்து முதுகிலு ருகமாட்டாமல் திகைத்துவிட்டது. அப்போது சத்துருக்க மகாராசன் அந்த அதிர்ச்சியினலே ஸ்ரீராமா ராமாவென்று கைவில்லை நழுகவிட்டு இரதத்தின்பேரிற் சாய்ந்துவிட்டார் அதைத் தேவர்கண்டு மகா துயரமானார்கள்.

அந்தச் சமயத்தில் இராட்சதாள் சுரதராஜனை வளைத்து க்கொண்டு யுத்தம்பண்ணினார்கள். இதிலிரண்டு இராட்சதாள் தலையின்மீது கையைவைத்து அழுதுக்கொண்டு அயோத்தி யாபுரி பட்டணஞ்சென்று இராமபத்திரசுவாமியைக்கண்டு சா ஷ்டாங்கமாக தெண்டஞ் சமர்ப்பித்துச் சொல்லுகிறார்கள். ஐயா ரகுநந்தனு, கேளும் வாரணபுரிபட்டணத்தை யாளப்ப ட்ட சோமகாசமகாராசன் குமாரன் அரண்ணியராச னென் னப்பட்டவன் நாம்விட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்த த்திற்குவந்தார். அப்போ அரண்ணியமகாராசன் தம்பியாகிய சுரதராசனும் அவர்கள் தகப்பன் சோமகாசமகாராசனும் சே னைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தஞ் செய்கிறபோது சுரதராச

ன்மிஞ்சி வெகுசேனைகளையும் இராட்சத சிரேஷ்டர்களையுங் கொன்று தண்டுக்கு இராசாவாகிய சத்துருக்கமகாராசனையும் மூர்ச்சையடையச் செய்து இராட்சதாள் தண்டிற் புகுந்து சண்டைசெய்துக்கொண் டிருக்கிறார்களென்று கூறினார்கள். அதனைக்கேட்டு ஸ்ரீராமபத்திர சுவாமியானவர் தம்பியாகிய சத்துருக்கர் மூர்ச்சித் திருக்கிறாரென்று கேழ்க்கவே, மெத்த துயரப்பட்டு பிரலாபிக்கையில் பரதலட்சுமணர் வந்து நமஸ்கரித்து சுவாமியினுடைய துயரத்தையாற்றிச் சொல்லுகிறார்கள். அண்ணாவே, அடியேன்களுக்கு செலவுகொடுத்தனுப்புவீரேயானால் அந்த சோமகாசமகாராசனையும், அவனுடைய புத்திர மித்திரசேனாதிபதிகளையுங்கொன்று, அவன் பட்டணத்தையுங் கொள்ளைகொண்டு தம்பி சத்துருக்கனையுஞ் சேனைகளையுமெழுப்பி குதிரையின்பின் னனுப்பிவிட்டுசெலுதியில்வருகிறோமென் றுரைத்த தம்பிமார்களுக்கு ஸ்ரீராமர் சொல்லுகிறார். கேளும், தம்பிமார்களே! அந்தராசனோ மிகவும்பலவான்போற் றட்டுபடுகின்றது நம்முடைய குதிரையைப்பிடிக்க, திரிமூர்த்திகளாலும் வல்லமையிராது. ஆகையால் நாமேபோய்குதிரையைவிடுவித்துக் கொள்ளவேண்டுமென்று சொல்ல அம்மொழியைக்கேட்ட பரதலட்சுமணர்முதலாகிய அச்சபையிலுள்ள சகலரும், விசனமடைந்தார்கள். அதேனென்றால், ஆயிரத்தெட்டண்டமும் (224) புவனமுஞ் சத்தசாகரமும் ஈரேழுபதினாலுலகத்தையும் ஏகசக்ரமாய் ஆண்ட இராவணேஸ்வரன் தம்பி கும்பகர்ணன், பிள்ளை பேரன்மார்ஆயிரம்வெள்ளம் மூலபலம் முதலான இப்படிக்கொத்த சூரரையெல்லாம் இராம பாணத்துக்கு இறைகொடுத்தது போதாமல் அவனுக்குச் சகாயமாகவந்த சதகண்டராவணனும், சகஸ்திரகண்டராவணனும், அவர்களுடைய அண்ணன் தம்பிமார் மைத்துனன் பிள்ளை பேரன்மார் பதினாயிரவெள்ளம் இராட்சதாள் அனைவரையும் இராமபாணத்திற் கிறைகொடுத்திருக்கையில், இந்த ராசனையும் அவன்குமாரரையும் ஒரு பெரிதாயெண்ணி இத்தனை பிரமுகாளையுந் தள்ளிவிட்டுத் தானே போகவேண்டுமென்று சொல்லுகிறாரென்று விசனப்பட்டு ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார்கள்.

அப்படி மௌனமாயிருந்த, தம்பிமாரையும் பிரமுகாளையும் பார்த்துச்சொல்லுகிறார். தம்பிமார்களே இன்னமிச்சபையிலிருக்கப்பட்டவர்களே கேளும், அந்த வாரணாபுரியாளப்பட்

டசோமகாசமகாராசனே, அற்பசொற்பரென் றெண்ணவேண்
டாம் முன்னால் நாரதர்சொல்ல, நான் கேள்விப்பட்டிருக்கிறே
ன். ஆனபடியால் நம்முடைய குதிரையைப் பிடித்துக் கட்டி
னான். நான்போகாவிட்டால் அரியப் பிரம்மாதிகள்போய்
நமக்காகப் போர்புரிந்தாலும் குதிரையை விடுவிக்கமாட்டார்
கள். அவர்களுடையமனோலயத்தில்ஸ்ரீமந்நாராயணர்இடை
விடாமல் எந்நேரமும் குடியிருக்கிறார். ஆகையால் அவர்களை
செயிக்கப் பரமசிவனாலுமாகாதென்றார். அதைக்கேட்டு தம்பிமா
ர்முதலியவர்கள்மனக்கலக்கம் நீங்கி மகிழ்வுற்றார்கள் அப்பால்
ஸ்ரீராமமூர்த்தியானவர் சேனாதிபதியான வானுகோபனையும்,
பஞ்சகண்டனையுமழைத்து நம்முடைய தண்டு தளத்தையெல்
லாம் பயணப்படுத்தென் றுத்தரவுசெய்து தாமும் தம்பிமார்க
ளுடன் கூடவெழுந்து அரண்மனைக்குச்சென்றார். அப்
போது நீலாட்சதனும், வானுகோபனும், பஞ்சகண்டனுஞ்
சென்று, தண்டை வெளிப்படுத்தினார்கள். அதெப்படியென்
றால் (13) வெள்ளம்யானைகளும் (60)வெள்ளங் குதிரைகளும்
(89) வெள்ளம் ரதமும் (342) வெள்ளஞ் சேனைகளும் தயார்
செய்தார்கள். அக்காலையில் இராமர் லட்சுமணர் பரதருடன்
கோதண்டத்தைக்கையிற்பிடித்துரதாரூடரானார்கள். இவர்கள்
ரதமேறவே (50) இராசகுமாரர்களும் இரதமேறி வந்தார்கள்
(129) மந்திரிமார்களுடன் சுமந்திரரும் இரதமேறி ஸ்ரீராம
மரிடம் வந்து சூழ்ந்தார்கள். அனுமான், அங்கதன், நீலன்,
(24) படைத்தலைவருடன்சுக்ரீவமகாராசனும், இரதத்திலேறி
வந்தார்கள் அய்யாயிர நானூற்றி அய்யாயிரம் கோடி படைத்
தலைவர் சேனாதிபதிகளுடன் வானுகோபனும், பஞ்சகண்ட
னும், இரதமேறிவந்தார்கள். தேவகந்தரனும், மாலியவானு
ம், இரதமேறிக் கருடக்கொடி பிடித்து நானாவிதவாத்தியகோ
ஷ்டமுழக்கத்துடன் யாவரும் வாரணபுரிக்கு புறப்படுகையில்
வையமளந்த ஐயனாகிய மகாவிஷ்ணுவே,ஸ்ரீராமனாகவருகிறா
ரென்று ஆகாயத்துறைபவர்கள் துதிசெய்து மலர் சொரியவு
ம், திருப்பாற்கடலி லாலிலைமேற்சயனிக்கும்வைகுந்தவாசனா
கிய ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமபிரானாகவருகிறாரென்றும்
புவியோர்கண்டு அடிவணங்கி அல்லலொழிக்கும் ஆண்டவ
ரேயென்று தவுத்தியப்புரியவும், நாடுகள் தழைக்கவும், யானை
சேனை இரதம் புரவிகள் அணியணியாய்ச் சூழவும் வருகை
யில், அப்போது சலவசந்தன் அரண்வியராசனை மடக்கிச்

கொண்டு யுத்தம்புரிந்து, அவ்வரசனை மூர்ச்சையாக்கிவிட்டுச் சூரதராசனுடனெதிர்த்து அவன்பாணங்களினாற் சலவசந்தன் மூர்ச்சையானான். பின்பு மட்சயந்தனுமானும் வீரசேனனும் மூர்ச்சையானார்கள். அதன்பின்பு சோமகாசமகாராசன் இராட்சத சேனைகளின்மேற் கவிந்து யுத்தஞ்செய்து ஐம்பது வெள்ளம் ராட்சதரை கொன்று இரத்தாறுண்டாக்கிவிட்டு யானை தேர் பரி சேனைகளையும் பறிகொடுத்து சூரதராசருடன் கூடித் தன் பட்டணஞ்சென்று கொலுமண்டபத்தி லுட்கார்ந்தார்கள். அந்தப்பட்டணத்திலுள்ள பெரியமனிதர்களும் வந்து சோமகாச மகாராசனைக்கண்டு யுத்தச்செய்திகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நாரதர் வாரணாபுரி சோமகாசமகாராஜனிடம் வருதல்.

விருத்தம்.

விண்டுவாதிவிண்ணவர்தொழுங்கைலையைவிட்டொளிர்
மண்டலத்துரும்வாரணாபுரியைநோக்கி
அண்டகோளகையமர்ந்திடநாரதர்வரவைக்கண்ட
வேந்தனுஞ்சென்றெதிர்கரங்குவித்தழைத்தான்.

இப்பால் திரிலோகசஞ்சாரியாகிய நாரதமகாமுனிவர் இத்தக்காரியங்களைக் கேள்விப்பட்டு குடிகெட்டுப் போயிற்றென்று செபதாவடங்கள் குலுங்க, வேகமாக வாரணாபுரி பட்டணம் வருவதைக் கேள்விப்பட்ட சோமகாசமகாராசனுஞ் சூரதனுமெதிர்கொண்டுபோய் அர்க்கியபாத்தியங் கொடுத்து அழைத்துவந்து அடிபணிந்து, ஆசனமளித்து உட்காரவைத்துசோமகாசமகாராஜனைப்பார்த்து நாரதர் கூறுகின்றார். வாரும், மகாராஜனே! நீங்களிப்போது யாருடன் போர்புரிந்தீர்கள், அதையெனக்குச் சொல்லுமென்று கேட்கையில் சோமகாச மகாராஜன் சொல்லுகின்றான். ஐயா, முனிநாதரே! அயோத்தியாபுரி பட்டணத்தையாளப்பட்ட தசரத மகாராசாவின் குமாரன் ஸ்ரீராமபிரான் அஸ்வமேதயாகஞ்செய்யவேண்டுமென்று குதிரையைவிட்டார். அந்தக்குதிரையை நமது பட்டணத்தில் பிடித்துக்கட்டி அதன்பின்பு வந்த சேவகரையுமடித்துத் துரத்திவிட்டான். அந்தச்சேவகர் ஓடிப்போய் தண்டிற் சொன்னார்கள். அவர்களும் நம்முடைய பட்டணத்தின்பேரில் யுத்தத்திற்கு வந்தார்கள். நானுமென் குமாரர்களுடன் சே

னைகளை கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குப்போய் அவர்கள் சேனைகளையுங் கொன்று இராஜாவாகவந்த சத்துருக்க மகாராசனையும் மந்திரி பிரதானிகளையுங் கொன்று என்னுடைய சேனைகளையும் பிள்ளைகளையும் பறிகொடுத்து நானும் என்னுடைய குமாரனுந் தங்களுடைய அனுக்கிரகத்தினாலே பிழைத்து வந்தோமென்றான். அதுகேட்டு நாரதர் சொல்லுகிறார். ஓய், இராசனே! கேளும், பராபரவஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமபிரானாக மூன்று தம்பிமாருடன் அவதரித்து இராவண இராட்சதாளையெல்லாஞ் சங்கரித்து அயோத்தியாபுரியில்வந்து பட்டாபிஷேகரா யிருக்கிறநாளில் சதகண்டராவணன் தசகண்டராவணனென்றுஞ் சொல்லப்பட்ட இருவரும், மகாரோஷத்துடன் யுத்தம்பண்ணி சேனைகளுடன் ஸ்ரீராமபாணத்திற் கிறையாய்ப்போனார்கள். அப்பேர்க்கொத்த கீர்த்தியும் புகழையும் பெற்ற ஸ்ரீராமபத்திரசுவாமி அஸ்வமேதயாகஞ் செய்யும்படிவிட்ட குதிரையை நீங்கள் பிடித்துக்கட்டி அதன்பின்னாகவந்த யானைதேர் பரிசேனைகளையு மாய்த்துச் சத்துருக்கமகாராசனையுங் கொன்றுபோட்டீர்கள், இந்த செய்தியை ஸ்ரீராமபத்திரசுவாமிகேட்டு தம்முடைய இரதகஜ துரக பதாதிகளுடனும் புறப்பட்டு வருகிறார்கள். அவருடனெதிர்த்து யுத்தம்பண்ணத்தக்கவர்களெந்தப்பூமியிலாவது யாரிருக்கிறார்கள் ஒருவருமில்லை நீங்கள் என்னபழியைத் தேடிக்கொண்டீர்கள் நீங்களெவ்விடம் போனபோதிலும் உங்களை ராமபாணம் விடாது. இனியென்ன சொல்வேனென்றார் நாரதரானவர்.

அதுகேட்டு சோமகாச மகாராசனுந் திடுக்கிட்டு ஐயா! முனி நாதரே! பராபரவஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணரே ராமபிரானாக அவதரித்திருக்கிறாரென்று அறிந்து அவர்விடப்பட்ட குதிரையையும் வீஷமத்துடனே பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்தவர்களல்ல, நாங்களெல்லாம் அவர் பாத சேர்வையைக் காணும்பொருட்டு அவர் விடப்பட்ட அஸ்வத்தைப்பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்தால் குதிரையை விடுவிக்க ஸ்ரீராமபிரானே வருவார் அவருடைய பாத தரிசனங்கண்டு சாயுச்சியபதத்தை யடையலாமென்ற கருத்தினால் அவர் விடப்பட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம் பண்ணினோமென்றார்கள். அவ்வார்த்தையைக்கேட்ட நாரதர் நகைபுரிந்து பிர்ம்மா தேவேந்திரன் தேவர்கள் மகாத்துமாக்கள் யக்ஷக்

கின்னரர் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் பன்னகர் ஏகாத சருத்திரர்கள் துவாதசாதித்தர்கள் முதலானோருங் காணுதற் கரிதாகிய பாதாரவிந்தத்தை வரவழைக்க உங்களால் வலிமை யுண்டோவென்ன, சோமகாசமகாராசனும் சூரதமகாராசனு மெழுந்து நாரதரை சேவித்து கைகட்டி வாய்பொத்தி ஐயா! நாரதமகா முனிவரே, அடியார்கள்செய்த அபசாரத்தைப் பொருத்து ரட்சித்துக் கொள்ளுமென்று மிகவும் பணிவாகச் சொல்ல, நாரத முனிவர் ஓய், சோமகாசமகாராசனே! கேளுங்கள் நீங்கள் அறிந்து மறியாமலுஞ் செய்த பிழையைப் பொருத்தருளினேன் உங்களிருதிறவர் சேனைகளையு மெழுப்பி விடுகிறேன். ஆகையால், நீங்களும் உங்கள் சேனைகளுடன் மந்திரிபிரதானிகளும் அஸ்வமேதக் குதிரையையும் அழைத்துக்கொண்டுபோய் சத்துருக்கமகாராசனை வணங்கிச் சமாதானப்படுத்திக் கொண்டீர்களானால் ஸ்ரீராமர் திருவடித்தாமரைகளைக் கண்டு சேவிப்பீர்களென்றார். அதற்கவ்வரசன் அப்படியே, தங்கள் திருவாக்குக் கெதிர்வாக்கில்லாமல் செய்கிறோமென்றார்கள்.

அதுகேட்டு நாரதர் பீடத்தை விட்டெழுந்திருந்து சோமகாச மகாராஜனையும் சூரதராஜனையு மழைத்துக்கொண்டு ரணக்களம்வந்து தமது கமண்டலத்திலிருக்குஞ் சலத்தைச் சண்டமாருதம் வீசினாற்போல் நான்கு மூலையுஞ்சுழன்று அமிர்தத்தை வீசும்பொழுது அந்த அமிர்தசஞ்சீவி காற்றானது படவே கைகால் சிரசு எலும்பு இறைச்சி தோல்யாவும்பொருந்தி நித்திரையிலிருந்து எழுபவர்போ லெழுந்தார்கள். யானை தேர் பரிவாரமும் எழுந்து நின்றதுகள், அரண்யராசன் சுவேலைராசன் மந்திரி பிரதானிகளுஞ் சோமகாச மகாராசனை வணங்கி, ஆசீர்வாதம் பெற்றார்கள். அப்போது சத்துருக்க மகாராசன், சூரசேனன், வீரசேனன், உக்கிரசேனன், மட்சயந்தமகாராசன், மகாமாயன், சலவசந்தன், காலசித்தன், நீலாட்சதன், படைத்தலைவர் சேனாதிபதி ராசமன்னர் மட்சயந்தனுமான் குகன் முதல் சகலரும் வந்துகண்டு அடிபணிந்து யுத்தத்திற்குச் செலவுகொடுமென்று கேட்டார்கள். அதற்குச்சத்துருக்கர் யோசனைசெய்து யுத்தத்திற்குச் செலவுகொடுத்தார். அந்தவேளையில் பேரிகைகளுடன் வாத்திய முழங்கச்செய்தார்கள். அதுகண்டு, இராட்சதர்களும் ராசமன்னர்களும் அட்டகாசம் பண்ணினார்கள், அந்தச்சமயத்தில் சோம

காச மகாராசனும் அரண்யனும் சுரதனும் சுவேலராசனும் மந்திரிபிரதானிகளும் புடைசூழ, அஸ்வமேதக் குதிரையுடனும் காணிக்கை கப்பங்க ளெடுத்துக்கொண்டு வாத்திய முழங்கச் சத்துருக்கருடைய பாளையத்தினுள் வருகின்றபோது சத்துருக்கமகாராசரும் மட்சயந்தராசனும் வீரசேனனும் சலவசந்த மகாமாயனும் சூரசேனனும் வீரசேனனும் யாவரும் எதிர்கொண்டுவர சோமகாசமகாராசன் சுவேலராசன் சுரதராசன் மூவரும் சத்துருக்கமகாராசனுக்கு அஸ்வமேதக்குதிரையும் காணிக்கை கப்பணங்களையுங் கொடுத்து வணங்கினார்கள். சத்துருக்க மகாராசரும் மற்ற அனைவரையுஞ் சங்கீத மேளத்துடனே சமாதானமா யழைத்துக்கொண்டு வாரணுபுரிக் கருகில் தண்டுதளங்களை நிறுத்திப்போட்டு சத்துருக்க மகாராசருடன் மட்சயந்த மகாராசருடன் உக்கிரசேனன் சலவசந்தன் மகாமாயன் சூரசேனன் வீரசேனன் காலசித்தன் ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களுடனும் கொலுமண்டபம்போய் ஆசனமளித் துட்கார்ந்து சற்றுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து யாவருமெழுந்து ஸ்நானஞ்செய்து நியம நிஷ்டைகள் முடித்துக்கொண்டு உண்டு கந்த கதம்ப கஸ்தூரி பரிமளாதிகளணிந்து அடக்காயமுது மென்று சோமகாசமகாராசனோடு கொலுமுகம்வந்து ஆடல்பாடலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தவேளையில் ஸ்ரீராமமூர்த்தியினுடைய தண்டானது வாரணுபுரிபட்டணத்தை நோக்கி மகா உக்கிரமாய் சோமகாச மகாராசனையும் அவன் பிள்ளைகள் அரண்யராசனையும் சுரதராசனையும் சேனைகளையுங் கொன்று பட்டணத்தை கொள்ளை கொள்ளுவோமென்று ஆர்ப்பரித்துக் கருந்தூள் செந்தூளெழும்ப வெகுவேகமாய் வருவதை தூதுவர்கள் கண்டுபயந்து, நடுநடுங்கி, ஓட்டமாயோடிவந்து, சோமகாச மகாராசனுக்குச் சொல்லவே அவர் அதிவிரைவாய் பிள்ளைகளுடன் மந்திரி பிரதானிகளோடுந் திட்டென் றெழுந்திருக்கவே சத்துருக்கமகாராசனுந் தன்னுடன்வந்த ராட்சதவீரரும் ராசாதிராசரும் சேனாதிபதிகளும் எழுந்திருந்து இருதிறவீரரும் ஏகோபித்து எதிர்கொண்டு வருவதைக் கேழ்விப்பட்ட ஸ்ரீராமபத்திரரும், இரதத்தைவிட்டி றங்கிப் பாதசாரியாய் வரவே யாவருங்கண்டு அடிவணங்கி, அனேகவந்தனங்கள் புரிந்து, அழைத்துவந்து தன்சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து மிகவும் பயபக்தி

விநயத்துடன் சொல்லுகிறான். ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா ஆபத்பாந்தவா அநாதரக்ஷகா ஆதிமத்தியாந்தரகிதா இராவணசம்மாரா அடியேன்செய்த பிழையைப் பொருத்து இரட்சிக்க வேண்டுமென்று அனேகவிதமாகத் தோத்திரம்புரிந்து பின்னையுஞ் சொல்லுகிறான். கேளும் ரகுநந்தனா, தேவரீருடைய தம்பியாகிய சத்துருக்க மகாராசரையும் இராசமன்னர்களையும் இராட்சத சிரேஷ்டர்களையுங் கண்டேன் இப்போது தங்கள் பாததரிசனங் கண்டுகொண்டேன் அதனால் நானும் என்பிள்ளைகளும் இனியில்லாத பாக்கியத்தையடைந்தோம் மேலும், அடியார்கள் செய்தகுற்றத்தைப் பொறுத்து இரட்சிக்க வேணடுமென்று பலவாறாகத் துதிபுரிந்து பணிந்துநின்றான். அப்போது சத்துருக்கரும் நடந்த செய்திகளை ஸ்ரீராமரிடத்தில் சவிஸ்தாரமாகச்சொல்லி வணங்கினார் அப்படி வணங்கிய சத்துருக்கரையெடுத்து மார்போடு தழுவி ஆசீர்வதித்து பிறகு ஸ்ரீராமரானவர் சோமகாசமகாராசன் சூரதமகாராசன் சத்துருக்கமகாராசர் பரதலட்சுமண சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், மாலியவான், சுமந்திரன், இன்னுமற்றுமுள்ள இராசர்களுடன் கேளிவிலாசமாய் வாரணாபுரிபட்டணத்தில் மூன்று நாளிருந்து நாலாநாள் காலையில் அயோத்திக்குப் போகவேண்டுமென்று நினைத்து தனது தம்பியாகிய சத்துருக்கமகாராசரை அழைத்து அப்பா சத்துருக்கா, நான் அயோத்திக்குப்போகட்டோ அல்லவென்று உன்னுடன்கூட வரட்டோவென்று கேட்க, அப்போது சத்துருக்கர் சொல்லுகிறார். அண்ணாரகுநந்தனா, நாங்கள் வரவேண்டியதில்லை, அயோத்திக்குப்போய்ச்சேருங்கள். நானும் சோமகாசராசரும் ஆரண்ணியமகாராசனும் சூரதராசனும் அவர்களுடைய மந்திரிபிரதானி முதலியசேனைகளும் பிரயாணப்பட்டு பூமிப்பிரதட்சணஞ் செய்துக்கொண்டு அதிசீக்கிரத்தில் அயோத்திக்குவந்து சேருகிறோமென்று சத்துருக்கர்சொல்ல, அப்படியே ஸ்ரீராமரும் சம்மதித்து தனது இரதத்தைக் கொண்டுவரச்சொல்ல, அப்படியே சாரதியும் இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்த, ஸ்ரீராமரும் சோமகாசமகாராசனிடத்திலும், மற்றுமின்னுமுள்ளவர்களிடத்திலும், விடைபெற்றுக் கொண்டு, இரதத்தின்பேரிலேறினார். அப்போது ஆலவட்டம் சாமரைவீச, முத்துக்குடைபிடிக்க, திருச்சின்னம் வெங்கலப்பேரிகை ஜயபேரிகையடிபட நாட்டியப்பெண்கள் நடனம்

புரிய, கட்டியர்கள் கட்டியங்கூற பாடகர்கள் புகழ, விருதுக் கொடிபறக்க இத்யாதி வைபவத்துடனும் சோமகாச மகாராஜனும் சத்துருக்கமகாராஜன் முதல் சகலமான இராஜகூட்டங்களும் வாரணபுரியைவிட்டு மூன்றுநாழிகை தூரம்போய் ஸ்ரீராமருக்கு வழிவிட, ஸ்ரீராமரும் சேனைகளுடன் அயோத்தியாபுரிபட்டணம்போய்ச் சேர்ந்தார்.

இப்பால் சத்துருக்கமகாராஜன் காலசித்தனைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓய், காலசித்தனே! நம்முடைய யானை தேர் பரி சேனைகளைத் தயார்படுத்தென் றுக்கியாபிக்க, அவ்வாறே காலசித்தனுங் கோட்டைக்கு வெளியில்வந்து சகலாயுத தயார்செய்து அஸ்வமேதக்குதிரைக்குப் பூசைசெய்து அதற்கு பின் 1500 இராட்சதாளையுஞ் சேனாதிபதியான நீலாட்சதனையுங் கூட்டியனுப்பி ஒருயானையின்பேரில் கருடக்கொடிபிடித்து, அடிவானங் குமுறுவதுபோல பயணபேரியானது அடிபட, சத்துருக்கமகாராஜனும், சூரசேனனும், உக்கிரசேனனும், குகனும், மட்சயந்தனுமானும், ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்களும், படைத்தலைவர் சேனாதிபதிகளும், சகலரும் இரதமேறிப் புறப்பட்டார்கள் அவர்கள் புறப்படவே சோமகாசமகாராசனும், அரண்ணியராஜனும், சுரதராஜனும், சுவேலராஜனும், அவர்களைச்சார்ந்த இருசமன்னரும், இரதமேறி சத்துருக்கமகாராசரிடம் வந்தார்கள். அந்தச்சமயத்தில் கர்ணபுரி, மத்தளம், கைத்தாளம், பட்டயம், வீரமுரசு, வெண்கலமுரசு, ஜயமுரசு, ரணமுரசு, ஜயபேரி, வெண்கலபேரி, டமாரபேரிகை, தவண்டை, மல்லரி, குடமுழா, பஞ்சநாதக்கீதமேளங்களென்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டு மேளவாத்தியங்களும், கடலொலிபோல முழங்கபுறப்பட்டு போகிறபோது யானைகள் நடக்கிற உதட்டியும், தேர்கள் நடக்கிற வேகமும், கால்பலங்களின் அதிர்ச்சியும், கால்பலமான இராசாக்களின் வில் நாணோசையினாலும் பூமியானது நடுங்க, ஆதிசேஷன் ஒடுங்க, அஷ்டகுல பர்வதங்களுங்கலங்க, செந்தூள் கருந்தூள் ஆகாயத்தையளாவிட, இந்தப்படி ஆரவாரத்துடன் வாரணபுரிபட்டணத்தை விட்டு நேர்வடக்காகப்போய், வடக்கேயிருந்து வடமேற்காகத்திரும்பி, அஸ்வமேதக் குதிரையின் பின்வருகிறபோது குதிரையின்பின்போகிற இராட்சதாளும் குதிரை மலசலம் விட்ட இடங்களில் ஓமசாந்திகள் செய்து கோவிலுங்கட்டி, குளமெடுத்து, அவ்விடத்திற்றண்டு

விட்டிறங்கி, தானதருமங்கள் செய்துக்கொண்டு போகிற
போது அஸ்வமேதக்குதிரையானது வடமேற்கிலிருந்து வட
க்கிழக்காகத் திரும்பிவருகிறபோது அஸ்வமேதக் குதிரையை
க்கண்ட இராசாக்களெல்லோருங் கையெடுத்துக் கும்பிடுவா
ரும் காணிக்கை கப்பங்களைக் கொண்டுவந்து கொடுத்து சத்
துருக்கமகாராசனை வணங்குவாரும், தண்டுவருகிற சமாச்சா
ரங்கேட்டு வலசைவாங்கி யோடிப்போவாரும், இந்தப்படியா
ய் ஒருவரும் நிகரில்லாமல் காடு செடி மலை குன்று ஆறு மடுக்
கள் ஊர் நாடு கிராமம் சீமை பூமி யாவும் கடந்து பத்மாவதி
பட்டணத்திற் கருகில்வருகிறபோது அப்பட்டணத்தை யாள
ப்பட்ட சந்தனமகாராஜனனவர் வைகறை யெழுந்திருந்து
கோட்டைக்கு வெளியில் ஸ்நானத்திற்கு வந்தார் அந்தவே
ளையில் அஸ்வமேதக் குதிரையானது அந்தக் கோட்டையோ
ரமாகப் பச்சென்றபுல்லைக்கண்டு மேய்ந்துக்கொண்டிருந்தது.
அந்தக்குதிரையை சந்தனமகாராஜன்கண்டு இதேது அஸ்
வம் மகா அழகாயிருக்கின்றது இது தேவர்கள் விடப்பட்ட
அஸ்வமோ யார்விட்ட அஸ்வமோ இந்த அஸ்வம் இவ்வி
டம்வரவேண்டிய காரணமென்னவென்று அருகில்வந்து அ
ஸ்வத்தினுடைய நெற்றியில் எழுதி கட்டியிருக்கிற விருதா
வொளிப்பட்டத்தை வாசித்துப்பார்க்கும்போது அதில் எப்
படி யெழுதியிருக்கிறதென்றால் சூரியவம்சத்து இராஜர்களனை
வருக்கும் சக்கிரவர்த்தியாய் ஆதித்தனைப்போற் பிரகாசிக்கின்
றவர் பிரதாப வீர தீர உதாரசௌரிய முள்ளவர் ஆயிரத்தெ
ட்டு அண்டமும் 224 புவனமும் சத்தசாகரஞ்சூழ்ந்த ஈரேழு
பதினாலுலகத்தையும் ஏகசக்கிரமா யாளப்பட்ட இராவணே
ஸ்வரனைவென்ற வீராதிவீரனை ஸ்ரீராமபிரான்விட்ட குதி
ரை இதன்பின்னுற் சத்துருக்கமகாராசன் வருகிறான் இந்த
சத்துருக்கமகாராசனை செயிக்கத்தக்க வல்லமை புருடர்கள்
இக்குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து வெற்றியடை
யலாம் அப்படிச்செய்ய மனமில்லாத பக்திமான்கள் இந்தக்
குதிரையைக் கண்டவுடன் பூசைசெய்து காணிக்கை கப்பங்
கொண்டுவந்துவைத்து சத்துருக்கமகாராசனை வணங்கி வாழ
லாமென்று அந்தப் பட்டயத்தில் எழுதியிருந்ததை சந்தன
மகாராசன் பார்த்து குஞ்சிரிப்புக்கொண்டு தலையையசைத்துச்
சொல்லுகிறான்.

சந்தனமகாராஜன் குதிரையைப் பிடித்துக் கட்டல்.

ஆ! ஆ! இந்தவிபவ மெங்காகிலுமுண்டோ தானே சூரனென்று கர்வித்து தானென்ற ஆண்மைப்படைத்தவ னுயிரைப்போக்கிக் கணநேரத்தி லென்சயர்த்தைக் காண்பிக்கிறேனென்று பற்களைக்கடித்து, அருகிலிருந்த சேவகர்வசங் குதிரையை ஒப்பித்து ஸ்நானத்திற்குச்சென்று ஸ்நானம்பண்ணி நியமநிஷ்டைமுடித்துக்கொண்டு அஸ்வமேதக் குதிரையுடனே கொலுமண்டபம் வந்து மந்திரிகளுடனும், இராசர்க்களுடனும, இந்தச் சங்கதியைச் சொல்லிக்கொண்டிருக்கையில் சந்தன மகாராசனுடைய பேரப்பிள்ளைகளான சவுபாலன் சவுந்திரன் என்னப்பட்ட இருவரும், குதிரையினுடைய நெற்றியிற்கட்டிய பட்டயத்தை, வாசித்துப் பார்த்து, ஐயையோ, ஸ்ரீராமன் தனக்குள்தானே ரணசூரனென்று கர்வித்து தம்மையெல்லாம் பெண்களாக்கினுன். பார்த்தையாவென்று கர்ஜ்ஜித்துக் கொதித்தெழுந்து ஆ! ஆ! இவனுடைய ஆண்பிள்ளைத் திராணியையும் சேனைகளுக்கெல்லாம் இராசனுகவரும் சத்துருக்க மகாராசனுடைய சவுரியத்தையும் இன்றையதினம் காண்போமென்று கடுங்கோபமுண்டாகி, அஸ்வமேதக் குதிரையைப் பிடித்துக்கட்டிப் பத்திரப்படுத்துங்களென்று சேவகருக்கு ஆக்கியாபித்துத் தாங்களுங் கொலுமண்டபம் வந்து உட்கார்ந்தார்கள். அப்போது சந்தனமகாராசன் சேனுதிபதியான கெதாயுதனைப் பார்த்துச் சொல்லுகிறுன். வாராய், சேனுதிபதியான கெதாயுதனே நம்முடைய தண்டுதளங்களைச் சீக்கிரந் தயார்செய்யுமென் றுக்கியாபித்து கொலுவிலிருந்தவர்களுக்கும் விடைகொடுத் தனுப்பிவிட்டு தாமும் தம்முடைய பேரன்மாருட னெழுந்து அரண்மனைக்குச்சென்று போசனமருந்தி, கந்தகதம்பங்க ளணிந்து, கிரீடந்தரித்து, புஜக்கிருதிபூண்டு, ஆடையாபரணலங்கிருதனுகி, அம்புருப்பொதி முதுகிற்கட்டி கற்பூர தாம்பூலமென்று தங்கள் தங்கள் ஸ்திரீகளுடன் வசனித்துக்கொண் டிருந்தார்கள்.

அப்போது சேனுதிபதியான கெதாயுதன், தண்டை வெளிப்படுத்தினுன். எப்படியென்றுல், ரணரங்கசூரரான இராசமன்னர்கள் முப்பத்திரண்டாயுதங்களுமெடுத்துக்கொண்டு யானைகள் மீதேறி இருநூரக்ரோணி புறப்பட்டன. அதன்பிறகு

..ாடியிற் படையைவெல்லுங் கொடிமுடி மன்னர்கள் வில்ல
..பெடுத்து இரதத்தின்மீதுட்கார்ந்து நாரக்ரோணி புறப்பட்
..ன. அதன்பின் எத்திசையிலும் வெற்றிபெற்ற சுத்தவீரர்
..ா கத்திகளை அஸ்வத்திலேந்திக்கொண்டு மனோவேகத்தி
..ம் அதிகப்பட்ட குதிரைகளின்பேரிலேறி எண்ணூறு அக்
..ாணிகள் புறப்பட்டது, அதன்பிறகு செப்புதற்கரிய ஒப்ப
..ற முப்பத்திரண்டு ஆயுதங்களுநம் இடுப்பிற் கட்டிக்கொண்டு
..ஆயிரத்தைந்நூறு அக்ரோணிசேனைகள் புறப்பட்டது. அப்
..பாது ஒருயானையின்மீது புலிக்கொடி பிடித்துக்கொண்டு
..பரிகை யறைவித்தார்கள்.

அந்த ஓசையைச் சந்தனமகாராசன்கேட்டு தானும் தன்
..குமாரர் சல்லியராசனும் சாத்மீகராசனும் அவர்களுடைய
..குமாரன் சவுபலேந்திரனும் இரதமேறி வந்தார்கள். அவர்
..ளுடன் இரண்டாயிரம் இராசகுமாரர்களும் துருபதனும்
ஆயிரத்தைந்நூறு மந்திரிகளுநம் முன்னூற்றைம்பது படைத்
..லைவரும் சேனாதிபதியான கதாயுதனும் இரதமேறிப் புறப்
..டவே பயணம்பயணமென்று இராயபேரி வெங்கலபேரியடி
..க்க, நானாவிதவாத்தியங்கள் முழங்கத்தக்கதாக யானைகள் முன்
..னும், அதன்பின் இரதங்களுநம், அதன்பின் குதிரைகளுநம்
அதன்பின் சேனைகளுமாகக் கோட்டையை விட்டு வெளியில்
வந்து பவுஞ்சிட்டு நிறுத்தி யுத்தபேரி முழங்கினார்கள்.

இவ்விடத்தி லிப்படியிருக்க, அவ்விடத்தில் அஸ்வத்தி
ன்பின்வந்த இராட்சதாள் அஸ்வமேதக் குதிரையைக் காணா
மல் குதிரையைத் தேடிக்கொண்டு பத்மாபுரிபட்டணம் வருகி
றபோது தண்டுகளானது பாளையமிறங்கி யிருப்பதைப் பார்த்
து தண்டினுட்புகுந்து தேடிக்கொண்டு வருங்காலத்தில் சல்
லியராஜன் இராட்சதாளைப்பார்த்து கோபமாகி பதினாயிரஞ்
சேவகரையனுப்பி இராட்சதாளைப் பிடித்துவரச் சொன்னார்.
அவர்கள் சென்று இராட்சதாளைப்பார்த்துச் சொல்லுகிறார்.
ஓய், இராட்சதர்களே! கேளுங்கள், எங்களிராஜ குமாரனாகிய
சல்லியராசன் உங்களை யழைத்துவரச் சொன்னார் வாருங்களெ
ன்றறைந்தார்கள். அதற்கவர்கள் மறுவுத்தரவு சொல்லாமல்
சேவகரோடுகூடவந்து சல்லியனைக் கண்டார்கள். சல்லியன
வர்களை யுற்றுநோக்கி அடா, இராட்சதர்களே! நீங்களெவ்
விடமிருந்து எங்குபோகிறீர்கள் தண்டில் நீங்கள் வந்தகாரி
யத்தைத் தெரியச்சொல்லுங்களென்றான். அதற்கு இராட்ச

தர்கள் ஓய், இராஜனே! கேளும், அயோத்தியாபுரி பட்டண த்தையாளாநின்ற தசரதமகாராசன் குமாரனாகிய ஸ்ரீராமபிரா ன் இராவண கும்பகர்ணாதிகளைச் சம்மாரஞ்செய்து அவர்க ளுக்கு சகாயமாகவந்த தசகண்டராவணனையும், சகஸ்திர கண்டராவணனையுங்கொன்று, விபீஷணன் மகாமாயன், சல வசந்தன், இம்மூவர்களுக்கும் பட்டங்கட்டி தாம் அயோத் தியாபுரியில்வந்து பட்டாபிஷேகராகி இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அச்சபைக்கு வதிஷ்டமகாமுனி வந்து ஸ்ரீராமனை அஸ்வமேதயாகஞ் செய்யச்சொல்லிந் கிருபைபுரிந்தார். தன்

ஸ்ரீராமரும், வதிஷ்ட மகாமுனிவர் திருவாக்கின்படி அ ஸ்வமேதயாகம் பண்ணவேண்டி எங்களுக்கு இராசாவா விபீஷணனையும், இராட்சத சிரேஷ்டனையும், இராட்ச களையு மழைப்பித்து குதிரையைவிட்டு அதன்பின் ஐம்பது வெள்ளம் இராட்சதாளையு மதற்குண்டான சேனாதிபதிகளையு மனுப்பி யதற்குப் பின்பலனாகவந்த நாநூராயிரம் அக்ரோணி சேனைகளையும் ஐம்பத்தாறு தேசத்து இராசாக்களையுங் கூட்டி யனுப்பிவைத்தார்.

நாங்களும் புறப்பட்டு குதிரையைவிட்டு அதன்பின் றொ டர்ந்து வரும்போது மதனாபுரிபட்டணத்தையாளப்பட்ட வீ ரசேனனும் வாரணாபுரியை பரிபாலனஞ் செய்யப்பட்ட சோ மகாசராசனும் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம் பண்ணி அவர்களால் சாயாமல் சத்துருக்கமகாராஜனை வணங்கி சமா தானஞ் செய்துகொண்டு அவர்களுஞ் சேனைகளுடன் சத்து ருக்கமகாராசன் தண்டிற் சேர்த்துக் குதிரையைவிட்டு அதன் பின் காவலாக பதினாயிரம் இராட்சதாளையும் அனுப்பிவைத் தார்கள். அந்தக்குதிரை யிவ்விடம் வந்தது நீங்கள் காணீர் களோவென்று வினவிய இராட்சதர்களைச் சல்லியன்பார்த்து அடா! இராட்சதர்களே, ஆயிரத்தெட்டு அண்டம் இருநூற் றிருபத்திநாலு புவனமுஞ் சத்தசாகரமுஞ்சூழ்ந்த ஈரேழுபதி னாலுலகத்தையும் ஏகசக்கிரமாயாளப்பட்ட இராவண ராட்ச தர்களை செயம்பண்ண சூரவீரனானாலுமென்ன, தன்னைச்சார் ந்த இராசாக்களுடைய சீமை பூமி நாடு கிராமத்தில் தன்னு டைய பிரதாப சௌரியத்தை பட்டயத்தி லெழுதி குதிரையி னுடைய நெற்றியிற்கட்டிப் பிரதட்சணம் வரவேண்டுமே யல் லாமல் தானே சூரனென்று கர்வித்து வீரபட்டயமெழுதிக் கு திரையை விட்டபடியினால் என்பட்டணத்தில் வந்து எங்கள்

கையிலகப்பட்ட குதிரையை விடுவிக்க மும்மூர்த்திகளுக்கும் வல்லமையிராது ஆகையால் நீங்கள்போய் உங்களுக்குத் தலைவனுகிய சத்துருக்கமகாராஜனைக் குதிரை விடுவிக்க வரச்சொல்லுங்கள் விடுவிக்க சாமார்த்திய மில்லாவிட்டால் தண்டுடனேடிப்பிழையுங்கள் இல்லாவிட்டால் நம்மை வணங்கி நடக்கச் சொல்லுங்கள் மூன்றில் எது யுத்தமாயிருக்கிறதோ அப்படிச் செய்யச் சொல்லுங்களென்று சொன்னான்.

முதல்நாள் யுத்தம்.

பே அதுகேட்டு இராட்சதாள் பல்லை நெறநெறவென்று கடி சல்லியனைப்பார்த்து சொல்லுகிறார்கள். அடா! இராஜகுமரனே மோசம்போகாதே வேஷமாகாதே நீயா எங்களிராகு...ரிய சத்துருக்கமகாராசனை செயிக்கிறவன் உன்னையும் உன்னுடைய தண்டு தளத்தையும் பெரிதாகயெண்ணி வணங்கவா, இப்பவுமெங்கள் குதிரையைவிட்டுச் சரண மடைந்தாயேயானல் சரணியில்வாழ்வா யில்லாவிடில் மரணமாமென்றார்கள். அதுகேட்டு வல்லமைசாலியாகிய சல்லியராசன் கொல்லுஞ் சிங்கம்போல் ஆக்கிரவியாக்கிர நிக்குரோதனுய் வில்லை வளைத்து துல்லியமான பாணங்களைத்தொடுத்துப் பிரயோகஞ்செய்யவே ராட்சதாள் திட்சண்ணியமான முப்பத்திரண்டாயுதங்களையும் றிவ்றிவ்வென்று சொரியும்போது சல்லியராஜன் சேனைகளுமுனைந்து, யுத்தம்பண்ணும்போது இராட்சதாள் மிஞ்சி சல்லியன் சேனைகள்பேரில் விழுந்து புலி ஆட்டைக்கவ்வுதல் போற் குறவளையைக் கடித்து உதிரத்தைக் குடித்து அவர்களை வாரிவாரி ஆகாயத்தி லெறியும்போது கால்பலமான சேனைகளெல்லாம் சின்னபின்னமாய் இராட்சதாள் முன்னின்று யுத்தம்பண்ணமாட்டாமல் ஓடத் தலைப்பட்டார்கள். அதுகண்டு சல்லியன் கோபங்கொண்டு அளவற்ற பாணங்களை விட்டு இராட்சதாளைக் கொல்லுகிறபோது குதிரையின் பின்வந்த இராட்சதாளுக்குச் சேனதிபதியான நீலாட்சதன்கண்டு அதிசீக்கிரமாக இரதத்தை நடத்தி இராட்சதாளைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு தான் முன்னின்று வரப்பட்ட அஸ்வங்களையெல்லாஞ் சித்திரவதைசெய்து பத்து திவ்வியாஸ்திரங்களெடுத்துப் பிரயோகம் பண்ணினன்.

அதற்குச் சல்லியராஜன் பதினைந்து திவ்வியாஸ்திரங்களெடுத்துப் பிரயோகம் பண்ணினன். அதுவும் நாகசற்பம்

போலச் சீறிக்கொண்டுவந்து நீலாட்சதன் விட்ட பத்து திவ்வியாஸ்திரங்களையு மறுத்துவிட்டு அவன்பிடித்திருந்தவில்லையிருதுண்டாக்கிவிட்டது. அப்போது நீலாட்சதன் சல்லிராஜனைப்பார்த்து, இந்தமானிடன் மகாபலவானுயிருக்கிறன் இவனை சீக்கிரத்திற் கொல்லவேணுமென் றெண்ணி இரதத்தைவிட்டு சிவ்வென்று பாய்ந்து சல்லியன் கையிற் பிடித்திருந்த வில்லைப்பிடுங்கி ஒடித்தெரிந்தான். அதுகண்டு சல்லியன் கோபங்கொண்டு, தன் வாளாயுதத்தை யுருவி, நீலாட்சதனுடைய சிரசை யறவெட்டினுன். அதனாலவன் இரதத்தை விட்டுப் பூமியில் விழுந்து எமலோகஞ் சேர்ந்தான்.

அப்போது ஒரு இராட்சதன் குய்யோமுறையோவென்று புலம்பிக்கொண்டு சத்துருக்கமகாராசன் தண்டுக்கு சேனாதிபதியான காலசித்தனிடஞ் சென்று சொல்லுகிறன். ஓ! ஐயா காலசித்தனே கேளும், பத்மாவதி பட்டணத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட சந்தனமகாராஜன் நம்முடைய குதிரையைப் பிடித்துக்கட்டி அவனுடைய குமாரவர்க்கம் பிள்ளை பேரன் மார் யானைதேர் பரிசேனையையுங் கொண்டுவந்து கோட்டைக்கு வெளியிலே தண்டுவிட்டிறங்கினுன்.

அதுகண்டு, நாங்கள் குதிரையைத் தேடிக்கொண்டு, அவ்விடம்போய் பார்த்தோம், காணுமையால் திரும்புஞ் சமையத்தில் சந்தனமகாராசன் குமாரன் சல்லியனென்னப்பட்டவன் சேவகரைவிட்டு எங்களையழைப்பித்து, தூஷணைகளாகப்பேசி எங்களுடன் யுத்தம்புரிந்து நீலாட்சதனையும் பதினாயிரம் இராட்சதாளையுங் கொன்றுவிட்டான். நான்மாத்திரம் தப்பித்துக்கொண்டோடி வந்தேனென்றுன். அதுகேட்டு காலசித்தன், அந்தத் தூதுவனை சத்துருக்கமகாராஜனிடமழைத்துப்போய்விட, அவன் நடந்த செய்திகளைச் சொன்னுன். சத்துருக்கனும் பத்மாவதி பட்டணத்துக்குத் தூதுவனை வழிகாட்டச் சொல்லி, அவனை முன்னனுப்பி அவன்பின் தண்டுகளானது சண்டையெங்கேயென்று அண்டங்குலுங்க, மண்டலங்கலங்க வந்து சேர்ந்தார்கள்.

அதுகண்டு சேனாதிபதியான கெதாயுதன் தன்னுடைய சேனைகளையெல்லாம் சத்துருக்க மகாராசன் பாளையங்களின் மேலேவித் தானும் ரதத்தை நடத்தி வில்லை யெடுத்து நாணிபிகிந்து சங்கோப சங்கமாய்ப் பாணங்களை சரமாரிபொழிந்துவிட்டான். அந்தப்பாணங்களும் வில்லில் விடுபட்டு காலக்

கோடி விஷம்போற் சீறிக்கொண்டுவந்து விழுகிறபோது சே ஜைகளானது கால்மாடு தலைமாடாய் கண்டதுண்டமாய் விழத் தலைப்பட்டது. அக்காலையில் சத்துருக்கமகாராசன் சோமகாச மகாராசனைப்பார்த்து சொல்லுகிறார்.

ஓய், சோமகாசமகாராசனே? நாமின்னந் தண்டு தளங் களை விட்டிறங்கவுமில்லை இதற்குமுன்பாக நம்முடையசேனை களை இப்படிவந்துகொல்லுகிறவனார் இந்தப்பட்டணத்தைப் பரிபாலனம் பண்ணப்பட்ட ராஜனை நீரறிந்திருப்பீர் அவன் பலாபலங்களும் உமக்குத்தெரிந்திருக்கும் அதையெனக்குவிப ரமாகத் தெரியச்சொல்லவேண்டுமெனவே, சோமகாசமகாரா சன் கூறுகிறார் ஐயா? சத்துருக்கமகாராசனே! இந்த பத்மா வதி பட்டணத்தை யாளப்பட்ட சந்தனமகாராசனே, மெத்த வும், அரிபக்தியிற் சிரேஷ்டன், சாந்தகுணம் படைத்தவன், தருமதயாளன், கர்வித்த ராசர்களுக்கு சிங்கத்தைப்போலொத் தவன், அவருடைய குமாரரோ, சல்லியன் சாத்மீகனென்று இரண்டு குமாருண்டு அவர்களோ, ஸ்ரீமந் நாராயணரை யிடைவிடாமல் தியானம் பண்ணப்பட்டவர்கள், அவர்கள் சாமார்த்தியத்திற்கு இந்தத் திரிலோகங்களும் இணையல்ல, இவர்களுக் கிரண்டுபிள்ளைகளுண்டு அவர்களோ தந்தைபாட் டனைவிட மிகவும் விஷ்ணு பக்தியுடையவர்கள், நீதிமுறை மையறிந்தவர்கள். வீரதத்துவமிருந்தவர்கள் அவர்கள்முன் னிற் காளகண்ட திரிநேத்திரன் வந்தாலும் நல்ல பூசைபண் ணுவார்கள் வரப்பிரசாதம் பெற்றவர்களென்றார் அதுகேட்டு சத்துருக்கமகாராசன் சோமகாசனைப்பார்த்து சொல்லுகின் றார். அப்படி அரிபக்த சிரேட்டர்களாய்ச் சத்தியசந்தனராய் தருமகுண தயாளர்களாக யிருப்பார்களானால் நாம்விட்ட குதி ரையைப் பிடித்துக்கட்டியும் நம்முடைய சேனையையும் அவர் கள் கொல்லுவார்களாவென்றார்.

அதற்குச் சோமகாசமகாராசன் கூறுகின்றார். நாம் விட் ட அஸ்வமானது அவர்பட்டணம்போனபடியினால்அஸ்வத் தைப்பிடித்துக்கட்டி யுத்தத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர் பட்டணம் போகாமல் நமது பட்டணத்தி லிருந்ததேயானால் ஒருவரும் பிடிக்கமாட்டார்கள். எவ்வளவு சாத்மீககுணராசனா னாலும், தன்னைத் தேடிவந்த சண்டையைவிடுவார்களோ அப் படி விட்டுவிட்டால் ஆனையைப் பூனையடித்துவிட்டதோ, ரா சாக்களாய்ப் பிறந்தவர்களுக்கு துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபால

னம் பண்ணுவது இயல்பல்லவோ வென்றான். அதற்குச் சத்துருக்கர் மெய்தானென்று உள்ளத்திற்கருதிசொல்லுகிறார் ஆனால் சமாதானமாய் அவரையழைப்பித்து குதிரையை விடுவிடுத்துக் கொள்ளலாமா அல்லது யுத்தம்புரியலாமா இவ்விரண்டுவிதத்திலும் எது நலமாயிருக்கிறது சொல்லுமென்றார். அதற்குச் சோமகாசமகாராசன் யோசனைசெய்து சொல்வதற்குள்ளாக காலசித்தன் செப்பலுற்றான்.

ஐயா! சத்துருக்கமகாராசரே? நீர் நல்லவசனஞ்சொன்னீர் நம்மைத்தேடி வணங்குபவரை நாம் வணங்கினால் தேவர்களும், முனிவர்களும், ராஜர்களும், ராட்சதசிரேஷ்டர்களும், நகையார்களா, பகைவந்தபோது நகைபுரியலாமோ அதுபோல் எவ்வளவு சாந்தகுணத்தைப்படைத்தவர்களானாலும், சத்தியவாசகரானாலும் நாம் விட்ட குதிரையை அவர் பிடித்துக்கட்டி நமது சேனையையுங் கொன்றது மல்லாமல் நாம் தண்டுவிட் டிறங்குமுன்னம் நம்முடைய சேனைகளின்பேரிற் கவிந்து அஸ்திரங்களைவிட்டுக் கொல்லுகிறதைப் பார்த்திருந்தும் நாம் சமாதானமாகலாகாது அது சரியல்ல, அடியேனுக்குச்செலவுகொடுத்தால் நான்போய் யுத்தஞ்செய்து, சகலரையுஞ் செயித்து சந்தனமகாராசனையும் நன்றாய்ப் பூசைபண்ணி நம்மையவர்வணங்கும்படியாய்ச்செய்து வருகிறேனென்றான். அதுகேட்டு சத்துருக்க மகாராசன்முதற் சகலருங் கலக்கந்தீர்ந்து காலசித்தனுக்குச் சத்துருக்கர் கூறுகிறார். வாராய் காலசித்தனே! ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கவேணுமே அதுபோல வருங்காலம், செல்காலம், நிகழ்காலமென்று மூன்று காலங்களுமறிந்து, எதிரியினுடைய பலாபலங்களும் வர்த்தமானங்களுந் தெரிந்து யுத்தஞ்செய்யவேண்டும் அப்படி யுக்தா யுக்தங்களறிந்து யாதொருகாரியங்களும் நடத்திக்கொள்ளவேண்டும் மேலும், நம்மிலும் பெரியோர்களாயிருக்கப்பட்டவர்களிடத்திலும் ஆலோசனை செய்தால் அதனாலொரு தப்பிதமுமில்லை இப்பவும், நீர்போய்ச் சந்தனமகாராஜன் நம்மைவணங்கும்படியாய்ச்செய்துக்கொண்டுவாரும். அதுவுமன்றி யுத்தமாவது புரித்து வெற்றியாவது பெற்றுவாருமென்று விடைகொடுக்க காலசித்தனனவன் ரதத்தைச் சேனைகளின்பேரில்நடத்தி வில்லைவளைத்து நாணேறிட்டுக்கொண்டு அவன்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாங் கண்டித்து அவஞ்சாரதிகளையுந் துண்டித்து ரத்தமயமாக்கித் தேரிற்கட்டிய

துவசத்தையும் வெட்டித்தள்ளினு னதனுற் சேனுதிபதியான கெதாயுதன் கோபங்கொண்டு வேறு ரதத்திலேறி வில்லையெடு க்குமுன்னமே நான்குபாணங்களைவிட்டு அந்த ரதத்தையும் பொடிசெய்தா னதற்கெதாயுதன் சின்னப்பட்டு கோபதெண் டையெடுத்துக் கிறுகிறென்று சுழட்டிக்கொண்டோடிவந்து, ரதத்தைப்பார்த்து ஓரடிகொடுத்தான். அந்தடி ரதத்தின்பேரிற் படவே ரதமானது உடையாமற் பின்னுக்குத்தள்ளிக்கொண்டு போயிற்று. அதனுற்கெதாயுதன் மறுபடியும் பின்னுக்குவாங்கி சாரதியைப்பார்த்து விசைகொண்டடித்தான். அடிக்கவே சா ரதிதலையுடைந்து பூமியில்விழுந்திறந்தான். இறக்கவே காலசித்தன் வில்லை ரதத்தின்பேரில் வைத்துவிட்டு வச்சிரகோப தெண்டாயுதத்தையெடுத்து நிலத்திற்குதித்து சுழற்றிக்கெதாயுதன் சிரசைப்பார்த்தோங்கியடித்தான். அந்த அடியை தெண்டாயுதத்தினுல் தட்டிவிட்டு காலசித்தன் புஜத்தைப் பார்த்து இரண்டடிவிட்டா னதனுலவன் கையசைந்து காலோய்ந்து, மூர்ச்சைபந்தித்து, சுவாசத்தைக்கட்டி தன்னுடைய ஆங்காரபலன்கொண்டு வச்சிரகோப தெண்டாயுதத்தை சுழற்றி, கெதாயுதன் மார்பிற்ருக்கினுன். அதையுமவன் தடாய்த்துக் கொண்டு தன்னுடைய தெண்டாயுதத்தினுற் காலசித்தனைப் பார்த்து மூன்றடி கொடுத்தான்.

அந்த அடியினுற் சிரசிலிருந்து உதிரவெள்ளம் பெருகியது அதுகண்டு காலசித்தன் ஏதடா மானிடன்மகாபலவானு யிருக்கிருன், நம்மைகளைக்க எண்ணி. அடிக்கிருன், நமதுபலமென்ன, நாம்பெற்றவரமென்ன, நம்முடைய பிரதாப சவுரியமென்ன, நம்மையொருமானிடன் இவ்வளவு கஸ்திப்படுத்தினுனல்லவா, காட்டில்வாழும்புலியை நாட்டில்வாழும் ஆடெதிர்த்ததுபோலும், தாஷ்டீகவீரனைச் சாரமற்ற மூப்பனெதிர்த்ததுபோலுமாயிற்றல்லவா, நாமிதுவரையில் ஒருவருக்கும் புறமுதுகு காட்டினதில்லை. இன்றிவனுல் நமக்கு அபஜெயம் வரும்போலிருக்கின்றது நாம் சொல்லிவந்த சபதங்களெல்லாம் வீணுவதுபோற்ருேணுது, இவனுடைய பலாபலமென்ன, இவனென்ன, அணுவுக்குச் சமதையானவன், ஒட்டைசாணில்லை, ஆகையா லிவனுண்டய தெண்டாயுதத்தை முன்னே பிளக்கவேணுமென்று மனதிலெண்ணி, வச்சிரகோபதெண்டாயுதத்தைச் சுழற்றி கெதாயுதனைப்பார்த்து விட்டுவிட்டான் அது கெதாயுதன் பிடித்திருந்த கோப தெண்டா

யுதத்தைப்பொடியாக்கி கெதாயுதனையும் யமலோகம் அனுப்பி விட்டது அதனைச் சல்லியமகாராசன் குமாரனான சவுபாலன் கேழ்விப்பட்டு காலசித்தன் முன்னுக்கு இரதத்தை நடத்தி அடா காலசித்தா, சீலமின்றி வாலுந் தலையுந்தின்று காலம் போக்குங் குருடனாகிய முறடா, எங்கள் பட்டணத்திற்கு குதிரையைவிட்டு மீட்டுக்கொள்ளலாமென்று மனப்பாற் குடிக்கிறு யல்லவா, உங்களுக்கு மிஞ்சினவர்களு மில்லையென்று பழிக்கிருயல்லவா, வச்சிரகோப தெண்டாயுத மொன் றுண்டென்று தடுக்கிருயல்லவா என்கையினுலிறந்தால் ஸ்ரீராமனெழுப்பிக் கொள்வாரென்று மனப்பாற் குடிக்கிருயல்லவா எங்களுக்கு மிஞ்சினவர்களில்லையென்று பழிக்கிருயல்லவா இராட்சதாள் முன் இராஜாக்களிணையல்லவென்றுகுலைக்கிருய் இதெல்லாம் நிலையல்ல இதோ நீ திக்குமுக்காடி செக்கினிற்பட்ட எள்ளு போலாகி நீ வாடியோடி போகும்படியான வழிதேடிக்கொள்ளென்று வில்லைநிறுத்தி ஒரு அக்கினியாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகஞ்செய்தான்.

அந்த பாணமானது திருதிகென்றெறிந்துக்கொண்டுவருகையில் காலசித்தனனவன் கண்டு ஒரு வருணஸ்திரத்தையெடுத்து விடுத்து அக்கினியாஸ்திரத்தை அணைத்துப்போட்டான் அதுபோகவே பின்னுஞ் சவுபலனனவன் காலசித்தன் முகத்திற்கு நேராகவில்லைப்பிடித்து அனேகதிவ்வியாஸ்திரங்களைப்பூட்டிச்சரம்பொழிகிறபோது காலசித்தனும் அளவற்ற அஸ்திரங்களை விட்டறுத்துவிட்டு நாலு அர்த்தசந்திராஸ்திரம்விட்டா னதுகள் புறப்பட்டு சவுபலனேறிவந்த இரதத்தையுடைத்து சாரதி குதிரைகளைக்கொன்று கையிற்பிடித்திருந்த வில்லையுமொடித்தெறிந்து சவுபலன் மார்பிற்பட்டு முதுகிலுருகிப்போய்விட்டது. அதனுற் சவுபலன் மரணமூர்ச்சையானுன்.

இரண்டாம்நாள் யுத்தம்.

அதுகண்டு சவுந்தரராஜன் தமையனிறந்தானென்று கேள்வியுற்று மகாகோபமாகி மறுநாள் இரதத்தை காலசித்தன் முன்னுக்குச் செலுத்தி வில்லி லனேக பாணங்களைச் சந்தித்து பிரயோகம்பண்ணின னது நாகசற்பம்போற் சீறிக்கொண்டுவருவதைக் காலசித்தன்கண்டு திவ்வியாஸ்திரங்கள் பல

விட்டறுத்துப் பின்னுங் காலசித்தனுனவன், இருபது நாரா சபாணங்களெடுத்து பிரயோகம்பண்ணவே அந்த நாராசபா ணங்கள் காலக்கோட்டி விஷம்போற் சீறிக்கொண்டு சவுந்தர ராசன் சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டது அதனுலவன் மெத்தவும் பயமற்று மறுபடியும் மனதைத் திட ப்படுத்திக்கொண்டு நூறு திவ்வியாஸ்திரங்களெடுத்து ஒன்றி ன்மேலொன்ரு யெய்கிறபோது, காலசித்தன் கண்டு, கடுஞ்சி னங்கொண்டு, தானும் நூறு திவ்வியாஸ்திரங்களை விட்டறுத் துச் சடுதியிலதிகமாக நாராசபாணங்களை சவுந்தரராஜன் மார் பைப்பார்த்து விடுத்தான். அதுவந்து மார்பிற்ருக்கி மார்பிற் றுளைப்பட்டு ஸ்ரீமந்நாராயணு, நாராயணுவென்று இரதத் தின்பேரிற்சாய்ந்து மூர்ச்சையடைந்தான்.

அக்காலையில் சல்லியமகாராசனும், சாத்மீகராஜனும், பிள்ளைகளிருவரும் இறந்ததுகண்டு மகாகோபாக்கினியுடன் இரதத்தை காலசித்தன் முன்னுக்குதுரத்தி, வில்லையெடுத்து நிறுத்தி, அனேக திவ்யாஸ்திரங்களை எடுத்து அவாரியாக சர மாரிபொழிந்து, காலசித்தன் இரதத்தை நேரில்வரவொட்டா மலுடைத்துச் சாரதிகுதிரைகளை கஷ்டப்படுத்தி பின்பு அன் பது திவ்வியாஸ்திரங்களைவிட்டு நோகச்செய்தான். அப்போ து காலசித்தனுனவன் கடுங்கோபங்கொண்டு வில்லில் ஒரு இ டியாஸ்திரத்தைத் தொடுத்து அவ்விருவருடைய இரதத்தை யுடைத்தான். அப்போது சல்லியன் சாத்மீகனிருவரும், லகு விற்றப்பித்துக்கொண்டு மறுதேரிலேறி கோபமீறிச் சொல்லு கிருர்கள். அடா! காலசித்தனே? நூலின் பயனையுந் தனுர் வேத சாஸ்திரப்பயனையும் மனுவிக்கியானமுந்தெரிந்த எங்க ள் இராஜனுகிய சந்தன மகாராஜன் கையிலகப்பட்ட குதிரை யை விடுவோமா எதிரியென்று வந்தால் பயப்படுவோமா எங் களை வணக்கத்துடன் சரணமென் றடைந்தால் புறவியைத்த ருவோம் தூரினுல் சரமாரியாய்ச் சொரிவோமென்று காலசித் தன்பேரில் மிதமில்லாத அஸ்திரங்களைவிட்டு சாடுகையில் கா லசித்தனுனவன்கண்டு ஆக்ருஷங்கொண்டு இரதத்தைநடத்தி வில்லை நிறுத்தி சரவருஷங்களைப் பொழிகையில் சூரசேனன் உக்கிரசேனன் அஸ்வசேனன் இம்மூவரும் வேகமாகத் தே ரைச்செலுத்த வில்லைக் குணத்தொனி செய்வதைக்கேட்டு ஆ யிரம் இராசகுமாரர்கள்வந்து மடக்கிக்கொண்டார்கள். அதுக

ண்டு மட்சயந்தனுமான் குகன் இவ்விருவரும் இரதத்தை நடத்தி இரண்டாயிரம் இராஜகுமாரர்களை வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்தார்கள்.

அப்போது சந்தனமகாராஜன் கோபமாகி, மட்சயந்தனுமானையும் குகனையும் இராஜகுமாரர்கள்பேரிற் போகவொட்டாமல் மடக்கிக்கொண்டு யுத்தம்பண்ணினான். அதுகண்டு மட்சயந்தமகாராஜன் சந்தனமகாராஜனை குகன்பேரில் செல்லவொட்டாமல் மடக்கிக்கொண்டு சண்டைசெய்தான். அவ்வேளையில் சல்லியன் சாத்மீகனென்னு மிருவருங் காலசித்தனை வளைத்துக்கொண்டு வில்லை நிறுத்தி அஸ்திரங்களை அயோகமாகச் சரமாரியாய்பொழியும்போது காலசித்தன்கண்டு ஏ நடா! இந்தமானிடவர்கள் மகாசாமர்த்தியர்களாக விருக்கிறார்கள். ஆனாலுமென்னமாயிற்று, இவர்களுடைய சாமார்த்தியம் எவ்வளவு இவர்கள் நமக்கொரு பொருளோவென்று மகாகோபமாய் வில்லையெடுத்தி நிறுத்தி, அனேக திவ்வியாஸ்திரங்களை விட்டு இருவரும் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்துத்தள்ளவே, சல்லியன் சாத்மீகனிருவருங்கண்டு அதிககோபங்கொண்டு, அளவற்ற திவ்வியாஸ்திரங்களை காலசித்தன் பேரில்விடுக்க, அதுவுஞ்சீறிக்கொண்டு வருகையில், காலசித்தன் அடுக்கடுக்காய் நூறு திவ்வியாஸ்திரங்களையெடுத்து முடுக்குடன்விடுக்க, அவ்வஸ்திரங்களையெல்லா மடுக்கென் றொடித்துவிட்டு கைவில்லையுங் கண்டித்து மார்பின் கவசத்தையுந் துண்டித்துச் சொல்லுகிறான்.

ஓய்! இராஜகுமாரர்களே? நீங்கள் சண்டைக்குதவாதவர்கள் வெற்றியடைய மாட்டீர்கள், அதுவுங்கள் சித்தத்திற்கே தெரியவரும் சண்டைவிட்டு எங்களண்டையில்வந்து தொண்டரெனக் குதிரையுடன் கப்பமுங்கட்டி சத்துருக்கனை சரணமடைந்தால் தரணியிலுங்கட்கு மரணமில்லை, இல்லாவிட்டாலுங்களிருவரையுந் திரணமாக வாரித்தேய்த்து அத்தூதிப் போட்டு உங்களுடைய சேனைகளாகிய ஆட்டுமந்தைக்குள் காட்டுப்புலி புகுவதுபோல் புகுந்து ஊட்டியைக்கடித்து உதிரத்தைக்குடித்து அல்லோல கல்லோலப் படுத்தாமுன்னம்யோசனைசெய்யுங்களென்றான். அதுகேட்டு சல்லியனும் சாத்மீகனும் மலைபோற்குதித்து கெக்கலிகொட்டி கர்ஜித்து கலகலவெ

ன்று சிரித்து, ஆர்ப்பரித்து அடாராட்சதனே "ஆடுநனையு தென்று கோனுய் குந்தியழுதது" போலுங் கூறவந்தாயல்ல வா, நல்லதென்று அதிககோபத்துடன் பிரமாஸ்திரத்தையெ டுத்து பூசைகள்புரிந்து பிரயோகஞ்செய்தார்கள் காலசித்தனு ம் அதற்குப்பதில் பிரமாஸ்திரத்தைவிட்டுக்கொய்துபோட்டா ன். அதுபோகவே இருவரும்பிரண்டு நாராயணுஸ்திரத்தை பிரயோகம்பண்ணினுர்கள். அதுகள் வில்லிலிருந்து வெளிப் படவே காலசித்தன்பார்த்து கடுங்கோபங்கொண்டு பதில்பிரம் மாஸ்திரத்தைவிட்டு அறுத்தெறிந்து சாரதிகுதிரைகளையுங் கொன்று இருவருக்கும் இரண்டிரண்டு நாராசம்விட்டு கையில் பிடித்திருந்த வில்லையுங்கண்டித்து மார்பையும் பத்தலாகக் கிழிக்கவே சல்லியனும் சாத்மீகனும் ஸ்ரீராமாராமாவென்று வாய்விட்டலறி தேரின்பேரில் மூர்ச்சையடைந்தார்கள்.

அதுகண்டு காலசித்தன் களிப்புற்று ரதத்தை சேனைகள் பேரில் நடத்தி அனேகபாணங்களைப்பூட்டி சேனைகளுயிரை வாட்டி சாட்டியில்லா பம்பரம்போலாட்டி வைக்குங்காலத்தில் சேனைகளானதுதத்தளித்துக்கொண்டுகாலசித்தனே உமக்கோ ர்சரணம் இத்தருணத்தில் எங்கள்மீது கருணைகூர்ந்து ஆள வேண்டுமென்று காலில் விழுந்தோடுவாரும் சத்துருக்கமகா ராசனுடைய வெற்றியைப் பார்ப்பவருமாக ஓடுவதைக்கண்டு மூன்றுலட்சத் தறுபத்தோராயிரம் படைத்தலைவருஞ் சேனுதி பதிகளும் இரதத்தைத்துரத்தி ஓடிவருகிற சேனைகளை ஓட வொட்டாமல் நிறுத்திக் காலசித்தனை வளைத்துக்கொண்டு யுத் தம்பண்ணினுர்கள். அப்போது ஆயிரத்தைந்நூறு மந்திரிப் பிரதானிகளையும் சூரசேனன் உக்கிரசேனன் விஷ்வசேனன் இம்மூவரையும் வரவழைத்துக்கொண்டு வில்லை வளைத்து அனேகபாணங்களை விட்டுத் தடாய்த்துக்கொண்டு மந்திரிப் பிரதானிகள் விடப்பட்ட அஸ்திரங்களின்மீது வந்து விழு கிறதைக்கண்டு மூன்று சேனுதிபதிகளும் வெகுகோபமாகி அதிதீட்சண்யமாயிருக்கின்ற அனேக திவ்வியாஸ்திரங்களை யெடுத்துப் பிரயோகம் பண்ணினுர்கள் அந்த திவ்வியாஸ் திரங்களும் விஷநாகம்போற் சீறிக்கொண்டுவர அதை மந் திரிமார்கண்டு கடுங்கோபங்கொண்டு வில்லிற் காலக்கோட்டி விஷம்போலிருக்கப்பட்ட பாணங்களை 1-10-100-1000-10,000 100-ஆயிரமென்று விடுகிறபோது மூன்று சேனுதிபதிகளும்

விடப்பட்ட அஸ்திரங்களைத் தடாய்த்துக்கொண்டு நமதுபே ரிலும் வந்து விழுகின்றதே இதற்கென்ன செய்வோமென்று ஆலோசனைசெய்து மூவரும் மூன்று சத்தியை யெடுத்துப் பூசைசெய்துவிட்டார்கள். அந்த சத்தியானது அண்டபகிரண்டங்குலுங்க ஆர்ப்பரித்துவருகிற அஸ்திரங்களையெல்லாந் தடாய்த்துக்கொண்டு வருகையில் மந்திரியான துருப்தண்டனும் ஆயிரத்தைந்நூறு மந்திரிபிரதானிகளும் சத்தி வேல் குந்தம் சக்கரமென்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டாயுதங்களையும் பிரயோகித்தார்கள். அதுகளும் அக்கினியைக் கக்கிக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடன் அதிவேகமாய் வந்து மூன்று சத்திகளையும் அறுத்துப்போட்டு மூன்றுசேனுதிபதிகளையும் சின்னுபின்னமாய் கண்டதுண்டமாகச் சரீரங்களையறுத்து உயிர்களை பறித்துக்கொண்டு போய்விட்டது.

அப்போது ஆயிரத்தைந்நூறு மந்திரிமார்களுஞ் சந்தோஷமாய் இரதத்தை நடத்திக்கொண்டுசேனைகளின்பேரிற் பாணவருஷங்களைப் பொழிகிறபோது சேனைகள் கண்டு ஆயிரத்தைந்நூறு மந்திரிப்பிரதானிகளையும் மடக்கிக்கொண்டு யுத்தம்பண்ணுகையில் சுரதனைவன் வந்தெதிர்த்து விறுவிறென சரவருஷங்களை விடுத்து ஆயிரத்தைந்நூறு மந்திரி பிரதானிகளும் விடப்பட்ட பாணங்களை யறுத்துத்தள்ளி இரதஞ்சாரதி குதிரைகளையுந் தும்சம் பண்ணிப்போட்டான். அதுகண்டு மந்திரி பிரதானிகளும் கோபமாகி கத்திகேடய மெடுத்துக்கொண்டு சுரதராஜனைவெட்டிக் கெலிக்கவேணுமென்கிற ஆசையினுல் ஓடிவருகிறபோது சுரதராஜன்கண்டுஆயிரத்தைந்நூறு மந்திரி பிரதானிகளுடைய சிரசையுங் கண்டித்துவிட்டான். அந்தவேளையிலிரண்டாயிரம் இராஜகுமாரர்கள் வந்து குகனையும் மட்சயந்த அனுமானையும் வளைந்துக்கொண்டு போர்புரிந்தார்கள். அந்தச்சமயத்தில் மட்சயந்தனுமானுனவன் இரதத்தைவிட்டுக் கீழேகுதித்து அண்டத்தைமெட்டத்தக்க ஒரு ஆலவிருட்சத்தை மடமடவென்று பிடுங்கி ஒரு கையிலெடுத்துக் கொண்டுவந்து இராஜகுமாரர்க ளேறிவந்த இரதத்தைப்பார்த்து சாடினுன் சாடும்போது அந்த ரதங்கள் அச்சுவேறு ஆணிவேறு குதிரை சாரதிவேறு இராஜமன்னர் வேறுவேருய் ஓரடிக்கு பத்து இருபது இப்படியாய் மட்சயந்தனுமானுலே இராஜகுமாரர் சின்னுபின்னமாய் முறிப்பட்

டோடிப்போனபேரும் கையிற் பிடித்திருந்த ஆலவிருட்சத்தை யொடித்தெரிந்தபேரும் இப்படியா யடிக்கிறபோது மட்சயந்தனுமான் பேரிற்பட்ட அஸ்திரங்கள்யாவையு முதறிவிட்டு இராஜகுமாரர்களிருக்கும் இரதத்தின்பேரில் பாய்ந்து இரதத்தை வாரிவாரி ஆகாயத்தில் விட்டெறிய அதுகளுங் கிறுகிறென்று சுழன்றுவருகையில் ஒன்றோடொன்று தாக்கி மாய்வாரும் சாரதிகளுடன் சாரதிகளிடிபட்டு சாய்வாரும் தனக்குத்தானே கிலிபிடித்து இரதத்திலடிபட்டு சாய்வாரும் சந்ததிவாழ்வையெண்ணி மனங்குண்ணி ஆதித்தனொளியாற் காய்ந்து தீஞ்சிப்போவாரும் குதிரைகள்சிக்குபட்டு சீவனைவிடுவதும் தேருருண்டு லகானறுந்துச் சிரந்தொங்கிச் சித்திரவதையாகி பூமியில்விழுந்து இரண்டாயிரம் இராஜமன்னர்கள் ஜீவனைவிட்டார்கள்.

பின்னுஞ் சிலரை மட்சயந்தனுமான் கைப்பிடியாகப் பிடித்து காலசித்தனிடம் ஒப்பிவைக்கலாமென்றெண்ணி பற்களை நறநறவென்று கடித்துப் பிடித்து தனுசை யொடித்துப்போட்டு தவடையிலடித்து தரையிற்போட்டுருட்டி கடகடவென்று புரட்டி சாணியுருண்டைப்போலுருட்டி தட்டுவோமென எட்டிப் பிடிக்கப் போகையிற் சந்தனமகாராஜன் சேனைகள் கண்டு சொல்லிக்கொண்டோடுகிறார்கள். அதென்னவென்றால் ஐயா முன்னால் இராவணன் யுத்தத்தில் இவனைப்போ லொருவன் வந்து இலங்கையிற் றீயிட்டு அசோகவனத்தையு மழித்து அந்த இராட்சதர்களைக் கொன்றானென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். ஆகிலும் அவன் வானரரூபமாய் வந்தான். அவன் வாலோ இலங்கைக்கோட்டை முழுமையுமிழுக்கத்தக்க நீளமுடையதாயிருந்து இராவண சிம்மாதனத்துக்குமேலாக மடித்துப்போட்டு உட்கார்ந்து அந்த ராவணனுடன் வார்த்தையாடினான். அவனிவனிலுங் கெண்டன் ஸ்ரீராமருக்குத் தொண்டன் அதுவோ முழு குரங்கென்பார் இவனோ அரை குரங்காயிருக்கிறான் போதும் போதும் இவன் கையிற் படுகிற பாதையைவிட நமன் கையிற்படலாமென்றோடுவாரும் அல்ல அல்ல குரங்கானால் கல்லு கட்டைகளை எடுக்கும் விடுக்கும் கடிக்கும் பல்லைக்காட்டும் பயமூட்டும் கதும்பும்பின்பு ஓடிப்போய்விடும் இது குரங்கல்ல எப்போது அண்டமளாவிய ஆலவிருட்சத்தைக் கொண்டுவந்தானோ அப்போதே யிவன் ராட்சத மாய்கையுடையவன் ஆகையாலிவன் கையிற்

சிக்கிக்கொள்ளலாகாதென்றும் பக்கம்பார்த்து குதித்து மூக்கா டிட்டு வெட்கி யோடுவாரும், அண்ணே, அண்ணே, நான் சொல்வதைக்கேளும், இவன்பெயர் மட்சயந்தனுமானுகும், அந்த அனுமாருக்கிவன் புத்திரனும், ஆகையா லிச்சின்ன குரங்கே யிவ்வளவு பாடுபடுத்தினு லந்தப் பெரிய குரங்கும் வரும்போற் காணுகிறது.

அதுவு மிதுவுஞ்சேர்ந்தால் சக்கிமுக்கித் தட்டினுற் போலாம் நம்முடைய சந்தனமகாராஜன் பட்டணமாகிய பத்மாபுரிக்கு என்னபாடோ யாதுகேடோ "பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள்" என்ற பழமொழியுண்டு ஆளைப் பார் முகத்தைப்பார் நாளைசம்பாதித்துக்கொள்ளலா மிப்பேர்ப்பட்ட உத்தியோகம் உயிர்போனல் வருமோ நம்மாற் சக்தியில்லை இவனுலடிப்பட்டுச் சாகிறதைப்பார்க்கிலும் ஓடிப்போனுல் சுகம் என் சொல்லைத் தள்ளவேண்டாம் வந்துவிடுங்கள் பந்துவர்க்கங்களோடு சந்துஷ்டியாய் நிறைந்து வாழலாமென்றோடிப்போய் விட்டார்கள். அதுகண்டு மட்சயந்தனுமானும் குகனும் சந்தோஷமானுர்கள். அந்தவேளையில் சந்தனமகாராஜன் கோபமாகி மட்சயந்த மகாராசனை வளைத்துக்கொண்டு யுத்தஞ் செய்கையில் சந்தனமகாராஜன் வில்லைவளைத்து அனேக அஸ்திரங்களைப் பிரயோகித்து மட்சயந்த மகாராஜனை கைகாலாடவொட்டாமலும் வில்லைக் கையில் தொடவொட்டாமலும், சாரதியை இரதமோட்டவொட்டாமலும், குதிரைகளை சிக்குபடுத்தினன். அதற்கு மட்சயந்தமகாராஜன் சற்றும் மெலியாமல் சாரதியை யெச்சரித்துக் குதிரைகளின் சிக்கை வாங்கி இரதத்தை நடத்தச்சொல்லி அமோகமான அஸ்திரங்களைச் சரசரவென்று விடும்போது சந்தனமகாராஜன் பதிலஸ்திரங்களைவிட்டு அதுகளை தட்டுகெட்டோடும்படியறுத்துச் சொல்லுகிருன். ஓய்! மட்சயந்தராஜனே! நீர் இவ்வளவு நிர்வாகசாலி யானபடியாலல்லவோ சத்துருக்கர் விட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து வெற்றியடையாமல் உமது புத்திரர் புத்திகெட்டு பக்திவினயத்துடன் அளவற்ற காணிக்கை கப்பமுங்கொடுத்து வணங்கி அவர்களுக்குச் சகாயமாகி வெட்கங்கெட்டாலென்ன தொப்பையிட்டாற் போதுமென்பதுபோலே இப்போதெங்களுடன்வந்தெதிர்த்திரல்லவா ஷபாசு இதுவோ அரசர்களுக்குவீரப்பிரதாபம்

இதுமெத்த நன்றாயிருக்கிறதென்று சொல்லி அதிககோபத்துடன் சத்தியையெடுத்து பூசைசெய்து துவேஷத்துடன் விடுத்தான். அது அண்டரண்டங்குலுங்க ஆர்ப்பரித்து ஆவென்றுவாயைத் திறந்துக்கொண்டு வருகையில் மட்சயந்தராஜன் அனேக அஸ்திரங்களையெடுத்துப் பிரயோகம்பண்ணினான்.

அந்த அஸ்திரங்களைச் சத்தியானது தடாய்த்துக்கொண்டுவருகிறபோது மட்சயந்தமகாராசன் தன்னுடைய சத்தியையெடுத்து பூசைசெய்தேவினான், அந்த சத்தியும் அதிவேகத்துடன் புறப்பட்டுவருகிற சத்தியின்பேரில் தடாலென்றுபாய்ந்து ஒன்றோடொன்று ஊடுதாக்கி இரண்டும் வெகுநேரமாய்ப்போராடி பொடிப்பொடியாய் பூமியில்விழுந்தது அதைக்கண்டு சந்தனமகாராசன்மனதி லினியில்லா கோபஞ்செய்து கண்களி லனல்பொறி பூர்த்து மட்சயந்தன் றேல்வியடைவானென்றிருதயத்திலெண்ணி கண்ணியமடைந்து வண்ணமுடைய தேவர்கள் சித்தத்திற் றியக்கமாகி மேலண்டத்திற்கோடிப்போனார்கள். அப்போது சந்தனமகாராசன் வேலாயுதத்தை எடுத்துப் பூசைசெய்துவிட்டா னந்தவேலானது திகுதிகென் றெறிந்துக்கொண்டு அதல விதல நிதல சுதல தராதல மகாதல பாதாளமுழுதும் நடுங்கத்தக்கதாக ஆவென்றுவாயைத்திறந்துக்கொண்டு வருகிற வேலாயுதத்தின்பேரில் மட்சயந்தராசன் மிதமில்லாத அஸ்திரங்களைப் பிரயோகிக்க அதுகள் வேலினால் முறியுண்டு தறிபட்டுப் போயிற்று. பின்னுமந்தராசன் அதிக சினங்கொண்டு நூறு நாராசமெடுத்து வேலின்பேரிற் பிரயோகஞ்செய்தா னதுகளையும் வேலாயுதமானது கண்டதுண்டமாய்க் கண்டித்து அதிகவேகமாக வந்து மட்சயந்தராசன் மார்பிற்பாய்ந்து மூநுகிலுருகிப்போயிற்று. அதனால் மட்சயந்தராசன் ராமா ராமாவென்ற வாக்குடன் ரதத்தின்பேரிற் சாய்ந்து பிராணனைவிட்டான் சூரியனும் அப்போது மேற்றிசைக் கடலில் மறைந்தார்.

மூன்றுநாள் யுத்தம்.

மறுநாள் வீரசேனராசன் மடிந்துபோனதை நினைந்து அதிககோபதீப்தனாகி இனிநாம் சும்மாயிருக்க லாகாதென்று திடங்கொண்டு ரதத்தை சந்தனமகாராசன் முன்னடத்தி தனுசையெடுத்துநாட்டி அபரிமிதமானசரங்களைப்பூட்டி றிவ்றிவ்வென்று பிரயோகம்பண்ணுகையில் அப்பாணங்கள் கோடை

காலத்துமழைபோல சாடவருவதை சந்தனமகாராசன்கண்டு சலுதியில் பதில்பாணங்களைவிட்டு தலைகாட்டவொட்டாமற் றுரத்தியடித்து வீரசேனன்மேற் பதினைந்து நாராசத்தைவிடவே அதுகள் நகரத்தோர்கண்டு நடுங்கும்படியாக நாகம் போற் சீறிக்கொண்டு வருகையில் வீரசேனன் பார்த்து இருபத்தைந்து நாராசங்களைப் பிரயோகஞ்செய்தா னதுகள் வெளிப்பட்டு ஒன்றோடொன்றுடுதாக்கி நெருப்புப்பொறிகள் பறக்கச் சிடசிட சடசடவென்கிற தொனியுடனும் மற்கட்டியுத்தம் பண்ணி நிலத்தில்விழுந்துபோகவே சந்தனமகாராசன்கண்டு தட்சணம் நூறு திவ்வியாஸ்திரங்களை எடுத்து ஒன்றின்மேலொன்று யடுக்கடுக்காய் விடுக்கும்போது அதுகள் கடலொலியிலும் யெண்மடங்கதிகமா யிறைந்துக்கொண்டு புறப்பட வீரசேனன் உக்கிரமாக நோக்கி வில்லை தாங்கிச் சொல்லற்கரிய மிதமற்ற அஸ்திரங்களை எல்லாம் விடுத்து கொன்று தின்று விடச்செய்து அதனிடமாகப் பதினைந்தஸ்திரமேவி சந்தன மகாராசன் ரதஞ் சாரதி குதிரைகளை யதம்பண்ணி அவனது பாணஸ்திரங்களைக் கண்டித்து கவசத்தையு மறுத்துத் தள்ளவே லகுவே தப்பித்துக்கொண்டு மறுதேரிலேறுகையில் வீரசேனன் சந்தனமகாராசனுக்குச் சொல்லுகிறான்.

ஓய்! ராசனே? கேளும், நீரென்ன யுத்தம் பண்ணுகிறீர் யுத்தத்தை நிறுத்திவிட்டு நான்சொல்லப்பட்ட விசேஷத்தைக்கேளும் என்னவென்றால் ஆயிரத்தெட்டண்டமும் 234-புவனமும் சத்தசாகரமும் ஈரேழுபதினாலுலகத்தையு மாளப்பட்ட தேவேந்திரனோடெதிர்த்து யுத்தஞ்செய்து அவ்விந்திரனைப் பிடித்துச் சிறையிலிட்டு ஏகசக்கிரமா யாண்டுக்கொண்டிருந்த இராவணனுடைய உபத்திரவந் தேவர்கள் பொறுக்கமாட்டாமல் பராபரவஸ்துவாய் விளங்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணரை வணங்கித்துதிசெய்ய அம்முறைகளைக்கேட்டு ஸ்ரீமந்நாராயணன் ஓ! தேவர்களே? நான் பூலோகத்தில் மானிடஜெனனமாக அவதரித்து ராவணாதிகளைச் சம்மாரம்பண்ணி உங்களுபத்திரவந்தை தீர்க்கிறோம் நீங்க ளியாவர்களும்வானரர்களாய் முன்னுதாகப்போய் அவதரிக்கக் கடவீர்களென்றருளினார்.

அவ்வாறே தேவர்கள் பூலோகத்தில் வானரர்களா யவதரித்தபின் ஸ்ரீமந்நாராயணரே தசரதமகாராசன் புத்திரர்களாய்

ஸ்ரீராமலட்சுமணர் பரத சத்துருக்கராயவதரித்து தேவர்கள் ரிஷிகளுக்கு வணங்காத் தாடகையைக்கொன்று சனகராசன் வைத்திருந்த வில்லையொடித்து சீதையம்மனை மணம்புரிந்து மூவேழிருபத்தொரு தலைமுறைமையும் ராசவம்சத்தைக் கருவறுத்துக் கொண்டிருந்த பரசுராமனையும் பங்கப்படுத்தி வில்லைப் பிடுங்கிக்கொண்டு துரத்திவிட்டு அன்னைவார்த்தை தள்ளாமற் பதினன்குவருஷம் வனவாசமாகச் சீதாலட்சுமியும் லட்சுமணரும் பின்வர நடந்து, மரவுரிதரித்து, கங்கைக்கரையைக்கடந்து, குகனைச் சிநேகம்புரிந்து, நந்திக்கிராமம் வந்து, பரதருக்குத்திருவடிகொடுத்து, விராதனென்னுமிராட்சதனைக்கொன்று சடாயுவைச் சினேகித்து பஞ்சவடிதீர்த்தத்திலிறங்கிச் சம்புகுமாரனை மாய்த்து ராவணன் தங்கையாகிய சூர்ப்பநகையை மூக்கினைசெய்து, கரதூஷணர்களைவதைத்து மானுகவந்த மாரீசனைச் சிதைத்து, சீதையம்மனை ராவணன்கையிற் பறிகொடுத்து, சடாயுவுக்கு மோட்சமளித்து கவந்தனைமாய்த்து தண்டகாவனத்து ரிஷிகளுக்கு அபயஸ்தங்கொடுத்து அசமுகியென்னப்பட்ட ராட்சசியைக் கொன்று, சவுரிக்கு மோட்சம் நல்கி, அனுமாரைக்கண்டு சினேகங்கொண்டு வாலியைவதைத்து சுக்ரீவனுக்குப் பட்டந்தந்து, எழுபத்திரண்டுவெள்ளம் வானரரையுஞ் சுக்ரீவனல் வரவழைத்து தண்டுவிட்டிறங்கி ராவணன் தம்பியான விபீஷணருக் கழிவில்லாத சிரஞ்சீவியுங்கொடுத்து, நளனுற் சேதுபந்தனங்கட்டி இலங்கைக்குப்போய் ராவண கும்பகர்னன் முதலான ராட்சதரையுங் கொன்று விபீஷணருக்குப் பட்டங்கட்டி, அயோத்தியில் வந்து பட்டாபிஷேகராய் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளில் ராவண கும்பகர்ணுதிகளுக்குச் சகாயமாகச் சதகண்டராவணன் பதினுயிரம் வெள்ளம் ராட்சதருடன் வந்து ஸ்ரீராமலட்சுமணர் பரதசத்துருக்கருடனெதிர்க்க, அவர்களை மடித்தும் பின்னிட்டுவந்த பதினறுவெள்ளம் ராட்சதரும் சதகண்டராவணன் சகஸ்திரகண்ட ராவணனு மண்ணிலுருண்டு மாண்டார்கள். அதன்பின்பு சதகண்டராவணன் தம்பியாகிய மகாமாயனுக்குப் பட்டங்கட்டிவைத்து அயோத்தியில்வந்து ராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கிறநாளில் ஸ்ரீமந்நாராயணராய் விளங்கப்பட்ட ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் செய்யவேண்டி ராட்சத சிரேஷ்டர்

களையும் இராஜ சமூகங்களையும் அழைப்பித்து அஸ்வமேதக் குதிரையைப் பூசைசெய்து, பூமிப்பிரதட்சணம் செய்யவேண்டிய குதிரையை முன்னேவிட்டு அதன்பின் ஐம்பது வெள்ளம் இராட்சதாளையும் அறுபத்தாறுயிரம் அக்ரோணி சேனைகளைக்கூட்டி யதற்குண்டான படைத்தலைவர் சேனாதிபதிகளையும் இராட்சத சிரேஷ்டரான மகாமாயன் சலவசந்தன் சேனாதிபதியான காலசித்தனையுங்கூட்டி அவர்களுக்கெல்லாம் இராசாவாக ஸ்ரீராமர் சகோதரன் சத்துருக்க மகாராசனையும் அனுப்ப விடைபெற்றுக் காடு மலை செடி பட்டணங் கடந்து மதனாபுரிபட்டணம் வந்துவிட்டது. அதுகண்டு நானும் என் தமயனாகிய மட்சயந்தமகாராஜனும் தண்டுவிட்டிறங்கி சத்துருக்கமகாராஜனுடைய சேனைகள்பேரிற் கவிந்து யுத்தம் புரிந்தோம் அப்போது சேனாதிபதியான காலசித்தனென்பவன் ஸ்ரீராமருடைய பிரதாபத்தைச் சொல்லிக்கொண்டாடினார். அந்தவிசேஷம் நாங்கள் கேட்டு சத்துருக்கமகாராசனை வணங்கிக் குதிரையைவிட்டுத் தண்டுடன் சேர்ந்து வரும்போது குதிரையானது வாரணாபுரி பட்டணம் போயிற்று. அப்பட்டணத்தை பரிபாலிக்கப்பட்ட சோமகாச மகாராஜனும் அவருடைய குமாரன் ஆரண்ணியராஜனென்றும், சுவேலராஜனென்று மூன்று பிள்ளைகளுடன் யானை தேர் பரி சேனைகளுடன் சத்துருக்கமகாராஜன் தண்டினில்வந்து யுத்தஞ்செய்து ஜெயப்பண்ணி பின்பு சத்துருக்கமகாராஜன் முதலானவர்களும் இறந்த சங்கதியை அயோத்தியி லிருக்கப்பட்ட ஸ்ரீராமலட்சுமண பரதரறிந்து யானை தேர் பரி சேனைகளுடனும், அநேகவெள்ளம் இராட்சதாளுடனும், மண் விண்ணதிர தேர்கள் குலுங்க வாரணாபுரி பட்டணத்தை நோக்கிவந்துவிட்டார்கள். அப்படிப்பட்ட ஸ்ரீராமபத்திர சுவாமியாருடைய பாதாரவிந்த மெப்படிப்பட்டதென்றால் பிரமதேவராலும், தேவேந்திராதி தேவர்களாலும் ரிஷிகள் முனீஸ்வரர்களாலும் யட்சகின்னரர் கிம்புருட கருடகாந்தருவர்களாலும், காணுதற்கரிதாகிய பாதாரவிந்தத்தைச் சோமகாச மகாராஜனுடைய சத்தியவசனத்தினாலுஞ் சுரதராஜன் புஜபல பராக்கிரமத்தினாலும் நாங்களனைவரும் செய்த தவம் ஓமம் விரதங்களாலும் ஸ்ரீராமருடைய பாதாரவிந்தங்கண்டு, சாஷ்டாங்கமாகச் சேவித்து தோத்திரம்புரிந்து தாங்கள் செய்த

கர்மவினைகளனைத்துந் தொலைத்து சாயுச்சியபதவியடைந்து கீர்த்திபெற்றோம்.

அப்படிப்பட்ட கீர்த்தி பெறவேணுமேயல்லாமல் வீணிற்பிள்ளை பேரன்மார் யானை தேர் பரிசேனைகளையும் பறிகொடுத்து நீர் தனிமையாய் நின்று யுத்தம்பண்ணுகிறீர் நீர்செய்யப்பட்ட யுத்தத்தைப் பார்த்தால் சற்றுநேரத்தில் முழுகிப் போகிறதுபோற் காண்கின்றது, அப்படிவராமல் இனியாகிலுஞ் சத்துருக்க மகாராஜனை வணங்கினால் உம்முடைய பிள்ளை பேரன்மார் யானைதேர் பரிசேனைகளை யு மெழுப்பித்தருவார் அவரை வணங்கிக்கொள்ளுமென்றான் வீரசேன மகாராஜன் அவ்வார்த்தைகளைக் காதுற்றுக்கேட்ட சந்தனமகாராஜன் சற்றாலோசித்து வீரசேனனைப் பார்த்துச் சொல்லுகிறான். வாரும்மகாராஜனே! நல்லவசனங் கூறினீர் ஸ்ரீமந்நாராயணரென்ன, தசரதமகாராஜன் வயிற்றில் ஸ்ரீராமாவதார மெடுக்கிறதென்ன, பளாபளா, நன்றாய்ச் சொன்னீர், இராஜாவாகப் பிறந்த பேர்களுக்கு யுத்தஞ் செய்ய புஜபல பராக்கிரமமில்லாவிட்டால் இப்படிப்பட்ட பெரும்புளுகு புளுகுவாருண்டோ ஆனாலும் யுத்தந்துடங்கின மூன்றுநாள் வரையிற் பிள்ளைகள் பேரன்மார் பந்துவர்க்கங்கள் சிநேகிதர் யானை பரிசேனைகளிறந்து நானொருவன் மாத்திரம் இருக்கிறேனென்றதாய் சமாதானமாக வணங்கிப் பிழைக்கச் சொன்னீரே போம் போமென்றான் அதனைக்கேட்ட வீரசேனன் கடுஞ்சினங்கொண்டு ஓய்! சந்தன மகாராஜனே? நல்ல வசனஞ் சொன்னீர் இப்போது நான் சொன்னவிசேஷமெல்லாம் ஒரு க்ஷணநேரத்தில் தெரியவரும், நன்றா யோசித்துப்பாரும், "வருவது சொன்னேன் படுவது தொலையவேணுமென்று" முன்னோர்கள்சொன்ன வாய்மை மெய்யா யிருக்கின்றது, ஆகையால் என்னால் அறிந்தமாத்திரம் யோசனை சொன்னேன் அதன் மேலுமக்கு யுக்தா யுக்தமென்னமா யிருக்கின்றதோ தெரியவராதென்றான்.

அதற்கு சந்தனமகாராஜன் தன்மனதிற்றானே எண்ணிக்கொள்ளுகிறான். என்னவென்றால் ஐயோ இந்த அஸ்வம் நமது பட்டணமேன்வந்தது வந்தபடியினாலல்லவோ நாம் பிடித்துக் கட்டவேண்டியதாயிற்று. அதனால் நம்மைச்சூழ்ந்திருந்த பிள்ளைபேரன்மார் பந்துவர்க்கங்கள் சிநேகிதாள் காலாட்கள் யானைகள் சேனைகளு மாண்டுபோயிற்று. அப்படி

மாண்டுபோனார்களென்று நமது பிராணனைப் பெரிதா யெண்ணி சமாதான மாவோமாகில் நம்மோடொத்த இராஜாக்கள் நகைப்பார்கள் தேவர்களு மேசுவார்களே இதற்கென்ன செய்வோமென்று சற்றுநேர மாலோசனைசெய்து பின்பு யுத்தஞ்செய்து இறந்துபோகிறதே யுக்தமென்று ஏகமனதாய் திடப்படுத்திக்கொண்டு வீரசேனனைப்பார்த்து வில்லையெடுத்து நிறுத்தி தேவதாஸ்திரங்களைத் தொடுத்தான்.

அதுகளெப்படிப்பட்ட அஸ்திரங்களென்றால், இந்திரன் கைவச்சிராயுதமும் யமன்கைதண்டும் ஈசானியன் சூலாயுதத்திற்குஞ் சமதையான அந்தபாணங்களை வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான். அந்த தேவதாஸ்திரங்களும் புறப்பட்டு அண்டங் கிடுகிடென்று குலுங்க, அண்டத்திலுள்ள தேவர்கள் நடுங்க, அக்கினிச்சுவாலைகள் வீசிக் காடுசெடிகளெல்லாம் பத்தியெரிய எங்குந்தணலெழும்ப வடவாமுகாக்கினிக்கு நிகராய் வருகிறபோது வீரசேனனவன் கண்டு மனதிற் பயங்கொண்டு ஏதடா நாம்சொன்ன வார்த்தைகளைத்துந் தடுத்துவிட்டு நமதுபேரிற்றானே அஸ்திரங்களை விடுத்தான். ஆகிலு மென்னமாயிற்றென்று வில்லையெடுத்து நாட்டி அநேக திவ்வியாஸ்திரங்களைப் பூட்டி பிரயோகஞ் செய்யவே அத்திவ்வியாஸ்திரங்களும் கப கப வென்று தீப்பொரிகளுட னெறிந்துக்கொண்டுவந்து சந்தனமகாராசன்விட்ட அஸ்திரங்களினு லடிபட்டு முறிந்து பூமியில் விழுந்துபோய்விட்டது. அதனால் வீரசேனன் மகாவுக்கிராகாரனாய் அநேகபாணங்களைப் பிரயோகம்பண்ணியும் அதுகளையெல்லாம் தேவாஸ்திரமானது கமளீகரம்பண்ணிக்கொண்டுவந்து வீரசேனமகாராசன் தேர் சாரதி குதிரைகளுடன் பஸ்மீகரப்படுத்திப் போய்விட்டது. அந்த ரதம்போகவே வீரசேனன் வேறொரு ரதத்திலேறி வில்லையெடுத்துநிறுத்தி குணத்தொனிபண்ணி அநேகபாணங்களைவிட்டு நோகச்செய்தான் அதற்கு சந்தனமகாராசன் எவ்வளவுஞ் சஞ்சலப்படாமல் மகாகோபதிப்தனாய் ஆக்கிரமித்து தன்னுடைய வில்லிலே கோடையிடிக்குச் சமானமான அநேகபாணங்களைப்பிரயோகித்து வீரசேனனுடைய சரீரமுழுதும் ரத்தமயமாக்கி சாரதியையுங் குதிரைகளையும் நோகப்பண்ணி அவன்கைவில்லையுங் கண்டித்து கியாவென்று சிங்கநாதஞ்செய்தான்.

அதற்கு வீரசேனன் பின்வாங்காமல் வேறொரு இரதத்திலேறி வில்லையெடுத்து நிறுத்தி குணத்தொனிபண்ணி அதிக கோபத்துடன் விஷங்களைக் கக்குகின்ற அதி தீட்சண்யமான நாராசபாணங்களை கணக்குமிதமில்லாமல் தொடுத்து சந்தனமகாராஜனுடைய தேரை சக்கைசக்கையாய்ப் பேர்த்தெறிந்து சாரதி குதிரைகளையுங்கொன்று ஆக்கிரவியாக்ரமநிக்ரோதனுய் காலாக்கினிருத்திரனைப்போல் அட்டகாசஞ்செய்து சங்கநாதம்பண்ணினன். அதனல் சந்தனமகாராசன் மனம்நொந்து சஞ்சலப்படாமல் வேறேயொரு தேரிலேறி இரண்டு கண்களிலும் நெருப்புப்பொறிகள் பறக்கத்தக்கதாகத் தனது வில்லில் ஒரு வாய்வாஸ்திரத்தையெடுத்துத் தொடுத்துப் பிரயோகம் பண்ணினன். அதுவும் வில்லிலிருந்துவிடுபட்டு அதிவேகமாகவந்து வீரசேனமகாராசனுடைய இரதத்தை குபீலெனஆகாயத்தில் கிளப்பிவிட்டது. அப்போதந்த இரதமானது குலாலன் சக்கரம்போல் சுழன்று, பூமியில்விழுந்து, சாரதி குதிரைகளுடன் பொடியாகிவிட்டது வீரசேனனும் பூமியில் விழுந்து மரணத்திற்குச் சரியான மூர்ச்சையடைந்தான். சூரியனும் மேற்குத்திசையில் மறைந்தான்.

நான்காம்நாள் யுத்தம்.

அதுகேட்டு மறுநாள் சத்துருக்கர் சித்தம்நொந்து கண்களில் தீப்பொறிபறக்க காசினியெங்குங் கீர்த்தியானது சிறக்க சாரதியையெச்சரித்து தேரை சந்தனமகாராசன்மீதிற் றுரத்தி தனுசையெடுத்து நிறுத்தித் தலையையசைத்து நறநறவென்று பற்களைக்கடித்து ஆக்கிரமவியாக்கிரமம்போற்சீறிக் கோபமீறி ஸ்ரீராமபாணமொன்றையெடுத்து தனுசிற்றொடுத்து கடுகடுத்துவிடுத்தான். அப்பாணமோ எடுக்கையிலொன்று தொடுக்கையில்பத்து விடுக்கையில்நூறு புறப்படுகையில் கணக்குமிதமில்லாமல் அப்பாணமானது அதிகரித்து விடுபட்டு அக்கினிப்பொறிகளைக் குபீல்குபீலென்று வாரியிறைத்து காலகோடிவிஷம்போற் சீறிக்கொண்டு வருகிறதை சந்தனமகாராஜன் கண்டு திடம் விண்டு திப்பிரமைக்கொண்டு மனோவேகத்திலுமதிவேகமாயிருக்கப்பட்ட கோடாகோடி அஸ்திரங்களை சோனைமாரிபோல் வாரிச்சொரிந்தான். அத் திவ்வியாஸ்திரமான

து புறப்பட்டு ஒன்றோடொன்றாடுதாக்கி சிடசிட படபடவெ ன்று வடவாமுகாக்கினிபோற் சொலித்துக்கொண்டு தடாலெ ன்றுவந்துவிழ, அதை ஸ்ரீராமபாணமானது கமளீகரம்பண் ணிக்கொண்டு சந்தனமகாராச னெங்கேயெங்கேயென்று தேடி வாடி யோடிவருகையில் சந்தனமகாராசன்பார்த்து, மனங்கு ண்ணி என்னசெய்வோமென் றெண்ணி, கடவுளைத் துதிபண் ணி காலகதி யெவ்வாறுமோவென்றெண்ணி நாறு நாராச பாணங்களெடுத்துத் தொடுத்துவிட்டான்.

அந்த நாறு நாராசபாணங்களையும் ஸ்ரீராமபாணமானது தவிடுபொடியாக்கிவிட்டு சாரதிமார்பிற்பாய்ந்துமுதுகிலுருகிக் குதிரைகளெட்டையுஞ் சிரசையறுத்து சந்தனமகாராசனேறி வந்த ரதத்தை சக்கைசக்கையாய்ப் பேர்த்தெரியவே, சந்தன மகாராசன் ஸ்ரீராமபாணத்தினுடைய சுருக்கறிந்து ஏதடா ஸ்ரீராமபாணமானது மகாமகிமையோடு கூடிவருகிறது இந்த ஸ்ரீராமபாணத்தின்முன்பு நம்முடைய அஸ்திரம் வேல் கத்தி முதல் நிற்கமாட்டாதுபோற் காணுகின்றது. இப்படிப்பட்ட இராமபாணங்களெத்தனையிருக்கின்றதோ ஒருபாணத்திற் குத் தரவுசொல்லமாட்டாமல் அத்தனை இராமபாணத்திற்கு உத்த ரவுசொல்ல நாம்மாற்றிரமுண்டோ, இப்படி வருவதறியாமல் வீணில் புத்திரன் பேரன்மார் பந்துவர்த்தக மதிரதர் அர்த்த ரதர் மகாரதர் சமரதர் என்றுசொல்லப்பட்ட நால்வகைச்சேனை களையும் பறிகொடுத்துவிட்டோம், ராசகுமாரன் சொன்னவார் த்தையுந் தள்ளிவிட்டோம், இனியென்ன செய்வோமென்று சிந்தாக்கிராந்தனாய், விசனப்பட்டுக்கொண்டிருக்கையில், சத்து ருக்கமகாராசன் சாரதியை எச்சரித்து இரதத்தைச் சந்தன மகாராசன் முன்புகொண்டுவந்து நிறுத்திச்சொல்லுகிறான்.

ஓ! சந்தனமகாராசனே? நான் சொல்வதைக் கவனமாகக் கேளும், ஏன் சும்மாயிருக்கிறீர், வில்லம்பு இரதமில்லாவிட் டால் நான் தருகிறேன், அதை வாங்கிக்கொண்டுவந்து உன் பிள்ளை பேரன்மார்கள் போனவழி நீரும் போகவேண்டியிருந் தால் போர்செய்யும், இல்லாவிடில் அஸ்வமேதக் குதிரையு டன்வந்து நம்மை வணங்கிப் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளுமென்றார் சத்துருக்கரானவர் அந்த வார்த்தையைக் கேட்டு சந்தனமகாராசன் சற்றுயோசனைசெய்து நாம் சும்மா யிருந்தால் காரியமல்ல, சமாதானப்படுகிறதே காரியமென்று மனதிலெண்ணிப் பாதசாரியாக மந்திரிப் பிரதானிக ளொ

ருமருமில்லாமலும், ஆயுத அஸ்திரங்களெடாமலும், நிரா யுதனாக வருகிறபோது சத்துருக்கமகாராசனும் தேரைவிட்டுக் குதித்து நின்றார். அதுகண்டு இராசகூட்டங்களும் இராட் சத சிரேஷ்டர்களும் இரதம்விட்டிழிந்து சத்துருக்கரிடம் வந்து சேர்ந்தார்கள்.

அச்சமயத்தில் சந்தனமகாராசன் சரேலென்று வந்து தன்னுடைய கிரீடஞ் சத்துருக்கமகாராசன் பாதத்திற் படும் படியாய் சாஷ்டாங்கதெண்டஞ் சமர்ப்பித்துத் தோத்திரம் பண்ணினான். அப்படி நமஸ்கரித்த சந்தனமகாராசனை சத்து ருக்கமகாராசரும் இராட்சதசிரேஷ்டரும் வாரியெடுத்து மார் போடணைத்து ஆசீர்வாதஞ்செய்தார்கள். அப்போது சந் தன மகாராசனானவன் சகலரையும் பறிகொடுத்த வருத்தத்தி னால் சந்தோஷமில்லாமல் சிந்தை வருத்தப்பட்டுக் கொண்டி ருக்கக்கண்டு, சோமகாசமகாராசன் சத்துருக்கருடன் சொல் லுகிறான்.

ஐயா சத்துருக்கமகாராசரே? கேளும் சந்தனமகாராச னுடைய சதுரங்க சேனைகளுடன் பிள்ளை பேரன்மார்களு மாண்டுபோனார்கள். ஆனபடியினால் தாங்கள் சந்தனமகாரா சன்பேரிற் கிருபைகூர்ந்து நால்வகைச் சேனைகளையு மெழுப் பிச் சந்தனமகாராசன் மனதை சந்தோஷப்படுத்தி வையுமெ ன்று பிரியவசனமாய்க் கூறுகையிற் சத்துருக்கரும் ஐயா! சோமகாசமகாராசனே? உமது கருத்தின் வண்ணஞ் செய்து வைக்கிறேனென் றுரைத்து சற்றுநேர மாலோசித்து வதிஷ் டரை நினைத்து தோத்திரஞ்செய்தார். அதனை வதிஷ்டரா னவர் கியானதிருஷ்டியாலறிந்து ஆசீர்மம்விட்டு சத்துருக்க மகாராசனிடம் வரும்போது சத்துருக்க மகாராசர் கண்டு எதிர் சென்றழைத்து ஆசனமளித்து வீற்றிருக்கச் செய்து வலம்புரி யிடம்புரியாய்வந்து நமஸ்கரித்தார் அப்படி நமஸ் கரித்த சத்துருக்கருக்குப் பல ஆசிகள்கூறி வதிஷ்டர் கூறு கிறார். வாருந்தம்பி சத்துருக்கா நம்மை நினைத்த காரியத்தை சொல்லுமென்று கேட்க சத்துருக்கமகாராசர் கூறுகின்றார்.

ஐயா! முனிநாதரே? நாங்கள் விட்டகுதிரையை இந்த சந்தனமகாராசன் பிடித்துக்கட்டி நால்வகை சேனைகளுடன் வந்தெதிர்த்து யுத்தம்புரிந்து சேனைகளையும் புத்திரன் பே ரன்மார்களையுந்தோற்று கடைசியில் நம்மிடம் சமாதானத் திற்குவந்தார். ஆகையால் இருதிறவர் படையிலு மிறந்த

சேனைகளை யெழுப்பித் தரவேண்டுமென்றுகேட்டார். அதற்கு வசிஷ்டர் சந்தோஷமாகி, வாருந்தம்பி சத்துருக்கா, அப்படியே யெழுப்பித் தருகிறேன் இன்றுமுதல் ரணக்களத்தில் நம்மை யழைப்பிக்க வேண்டாமென்று திருவாய் மலர்ந்து வசிஷ்டரானவர் வாய்வு மூலையாகத்திரும்பி, இருதிறவர் படையிலுமிறந்தவர்களெல்லா மெழுந்திருக்கக்கடவதென்று தம்முடைய கமண்டல அமிர்தத்தை வாரியிறைத்தார். இந்த அமிர்தத்தினுடைய காற்றானது இறந்த சேனைகள்பேரிற் பட்டமாத்திரத்தில் இறந்த சேனைகளெல்லாங் கைபொருந்தி கால்பொருந்தி உயிருண்டாகி தூங்கி விழித்தவர்போல் எழுந்தார்கள். அந்தச் சமயத்தில் சகலரும் வசிஷ்டரைச்சேவிக்க, வசிஷ்டரும் அவர்களுக்கு வாழிகூறி தமதாசிர்ம மெழுந்தருளினர்.

அப்போது சல்லியன் சாத்மீகன் சவுபாலன் சேனாபதியான கெதாயுதன் இருநாறு இராசகுமாரர்களும் 500-மந்திரி பிரதானிகளும் ஒன்றாய்க்கூடி சந்தனமகாராசன் சத்துருக்க மகாராசனையும் மட்சயந்தமகாராசனையும் வந்து சேவித்தார்கள். அவர்களு மவர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்தார்கள், அந்தச் சமயத்தில் மகாமாயன், சலவசந்தன், காலசித்தன், நீலாட்சதன், சூரசேனன், வீரசேனன், உக்கிரசேனன், மட்சயந்தனுமான், குகன், திவேதன், பவர்ணன், அரண்ணியன், சுவேதன் என்று சொல்லப்பட்ட பிரமுகாள் படைத்தலைவர்கள் சேனாதிபதிகள் இராசமன்னர்கள் மந்திரி பிரதானிகள் மற்றுமுள்ள ஐம்பத்தாறு தேசத்து இராசாக்களும் ஒன்றாய்க்கூடி சத்துருக்க மகாராசனையும் சந்தனமகாராசனையும் மட்சயந்த மகாராசனையுந் தழுவச் சல்லியன் சாத்மீகன் சவுபாலன் சவுந்தரன் இவர்களும்போய் ஒருவர்க்கொருவர் தழுவிச் சமாதானமாகிச் சந்தோஷமானார்களப்போது, இருதிறவர் படையிலும் ராயபேரி வெண்கலபேரி ராசமுரசு கர்ணபுரி கைத்தாளம் மத்தளம் ருத்திரவீணை சங்கீத மேள வாத்தியங்கள் முழங்கத் தக்கதாகப் பத்மாபுரி பட்டணம் வந்து சந்தனமகாராசன் கொலுமண்டபத்தில் சத்துருக்க மகாராசன் சோமகாசமகாராசன் முதற் சகலமான இராசாக்களும் அவரவர்களுக்குந் தகுந்த விடுதிகளமைத்து பிறகு சத்துருக்க மகாராசர்முதல் சகல இராசாக்களுடன் தானும் பஞ்சகச்சாயபாரமான்னத்துடன் விருந்துபுசித்து சபாமண்ட

பம் வந்து அவரவர்களுக்குத் தகுந்த ஆசனமளித்து கற்பூர தாம்பூலங்களை கொடுத்து சத்துருக்க மகாராசருக்கு வெகுமதியாக காணிக்கை கப்பங்களும் அஸ்வமேதக் குதிரையுங்கொண்டுவந்து கொடுத்து வணங்கிக்கொண்டு பின்பு வரிசை வரிசையாக சோமகாச மகாராசன் முதல்யாவத்திராளுக்கும் தகுந்தமரியாதைகளைச்செய்து சந்தனமகாராசன் தானும் சத்துருக்கமகாராசர் வலப்பக்கமாக ஒரு ஆசனத்தின்பேரில் உட்கார்ந்திருந்தான்.

அப்போது அதிக உல்லாசமாய் நாலு நாள்வரைக்கும்கேளிக்கை விநோதங்களையும் ஆடல்களையும் பார்த்து அகங்களித்து ஐந்தாநாள் காலையில் தன்னருகிலிருக்கும் சந்தனமகாராசனையும் சல்லியமகாராசனையும் பார்த்து சத்துருக்கமகாராசர் சொல்லுகிறார். ஐயா, சந்தனமகாராசனே? கேளும், நானயோத்தியை விட்டுப் புறப்பட்டு ஆறுமாதமாயிற்று யாகநாளும் சமீபித்திருக்கிறது ஆகையால் நாம் ஐலுதியிற் போகவேண்டும் நீரும் உமது சேனைகளுடன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகையிற் சந்தனமகாராசன் கூறுகிறார். ஓ! சத்துருக்கமகாராசரே? கேளும், இந்த நாடு நகரமும் நாங்களுந் தங்களுடைய ஆதீனமல்லவோவென்று பிரியவசனமாகக்கூறி யானை-500, தேர்-1000, காலாள்கள்-256, ஒரு பாரந்தங்கம் இதுகளெல்லாம் காணிக்கையாக அயோத்திக்கனுப்பிவிட்டு சத்துருக்கமகாராஜனுக்கும் சகல இராஜகூட்டங்களுக்கும் இராக்ஷத சிரேஷ்டர்களுக்கும் வெகுமதிசெய்து மந்திரியான துர்மதனையழைத்துப் பட்டணத்தை யவன்வசத்திலொப்பிவித்துப்போட்டு சேனாதிபதியான கெதாயுதனை யழைத்து 27000-அக்ரோணி சேனையுடன் சத்துருக்கருடையதண்டிற்குப்போய்ச்சேரென்றுத்திரவுசெய்து அரண்மனைக்குச்சென்றார்.

அதன்பின்பு சத்துருக்கரானவர் சேனாதிபதியான காலசித்தனையுஞ் சூரசேனனையும் உக்கிரசேனனையும் பார்த்துச் சொல்லுகிறார். வாருஞ் சேனாதிபதிகளே நம்முடைய தண்டு தளங்களை யெல்லாம் தயார்படுத்துங்களென்று கூறுகையில், அவர்கள் சென்று தயார்செய்தார்கள். எப்படி யென்றால், நாலுவெள்ளத் தேழாயிரம் அக்ரோணியானைகளும், எழுவெள்ளத்து பதினாலாயிரத் திருபத்தெண்ணாயிரம் அக்ரோணி இரதங்களும் பதினாறு வெள்ளம் கால்பலமும் தயார்செய்து யானையின்பேரில் கருடக்கொடிபிடித்துப் பயணபேரி யறைந்

னார்கள். அந்த முழக்கத்தைக் கேட்டுச் சத்துருக்கர், சோமகாசமகாராசன், மட்சயந்தமகாராசன், அரண்ணியமகாராசன், சுபதராஜன், சுவேலைராஜன், வீரசேனன், அஸ்வசேனன், குகன், மட்சயந்த அநுமான், சுவேதனும் இன்னும் ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் இராஜகுமாரர்களும் மந்திரிபிரதானிகளும் இரதமேறிப் புறப்பட்டார்கள். அப்போது சந்தனமகாராசனும், சல்லியராசனும், சாத்மீகராசனும், இரதமேறி புறப்படவே சவுபலராசனும் சவுந்தர இராசனும் ஆடையாபரணாலங்கிர்தாரகத் தேரேறி அஸ்வமேதக் குதிரையையுமழைத்துக்கொண்டு 2000- இராசகுமாரர்களுடன் யாவருமொன்றுய்ச்சேர்ந்து புறப்பட்டு அஸ்வமேதக்குதிரையைப் பூசை செய்து பதினாயிரம் இராட்சதாளையும் நீலாட்சதனையுங் காவலாகக்கூட்டி முன்னுதாக வனுப்பினார்கள் அப்பால் சேனாதிபதியான நீலாட்சதன் பதினையாயிரம் இராட்சதாளுடன் அஸ்வத்தை முன்னடத்தித் தாங்கள் பின்னடக்கையில் ராயபேரி ரணபேரி வெண்கலபேரி முதலானதும் ஒலிக்க, சங்கீத வாத்தியங்கள்முழங்க தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி குடமுழாப் பஞ்சநாதமென்றுசொல்லப்பட்ட முப்பத்திரண்டு வாத்தியங்களுந் தாம்தாமென்றடிபட, அண்டமதிர, புவிநடுங்க, யானைகளானது முன்னும் தேவர்களானது அதன் பின்னும் குதிரைகளதன்பின்னுமாகப் பத்மாபுரி பட்டணத்தை விட்டு நடக்கையில் அந்த அஸ்வம் நின்ற விடங்களிலும், ஓமசாந்திகள் தானதருமங்கள் நடத்தி, பின்பு அஸ்வம் வேசாரிப்படுத்துக் கொள்ளுமிடங்களிற் கோவில் குளங்களியற்றி தண்டுவிட்டிறங்கியிருந்து அஸ்வமெழுந்து தன்னிச்சையாய் நடக்குமாகில் அவர்களும் பின்றொடர்ந்து நடந்தும் இந்தப்படியாக நடந்துகொண்டிருந்தார்கள்.

வால்மீகரது சிங்காரவனச் சிறப்பு.

கலி விருத்தம்.

வேலைசூழிவ்வுலகில் வியப்பதாநெங்
கோலமாநகர் சப்திடங்கூறினோம்
மால்நிகர்த்தவால் மீகர்வசித்திடுஞ்
சீலமிகுவனச் சிறப்பைச்செப்புவாம்.

இப்பால் வால்மீகரிஷியின் சிங்காரவனத்தில் சீதையம்மனும் இரண்டு பிள்ளைகளுஞ் சுகமாயிருந்து நினைத்தபோது

காமதேனுவால் தேவாமிர்தமுண்டு, சீதையம்மனவள் இர ண்டுபிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு நன்விசனமெல்லா ந்தீர்ந்து சுகத்துடனிருக்கும்போது அவ்வனம் எப்படியிரு க்குதென்றால், மாதமும்மாரிபெய்யவும், காடுசெழிக்கவும், கனி வர்க்கங்கள் கமழவும், வகைக்கொரு மலர்ப்பூக்கவும், அந்தக் காட்டில் வாசம்பண்ணப்பட்ட ரிஷிகள் தபோதனர்கள் தங்க ள்தங்கள் தவமீடேறவும், அவ்வனத்திலுள்ள பட்சிசாதிகள் ஆனந்தக்கூத்தாடவும், கோட்டான் ஆந்தைகள் சப்திக்க அன்னங்கள் நடக்கும் ஒய்யாரங்களுமெப்படியிருந்ததென்றா ல், அயோத்தியில் இருக்கப்பட்ட உத்தியானவனத்தில் வசிக் கும், மயில்கள் குயில்கள் அன்னங்கள் முதலான பலவிதப்பற வைகளின் ஆடல்பாடல்களைக்கண்டு களித்து ஆனந்தமடை ந்துக் கொண்டிருந்த இராசலட்சுமியான சீதையம்மனுக்கு வால்மீகர்வனத்தில் வசிக்கும் பறவைகளானது ஓ! அம்மணீ? எங்க ளாடல் பாடல்களை சற்று கிருபாநோக்கஞ் செய்யுமென் றதுபோல குயில்கள் பாட்டகராகவும், ஆந்தை கோட்டான் சப்தமோ நட்டுவர்கள் தாளமாகவும் அன்னங்கள் இராஜஸ் திரீகளாகவும், புலி கரடி சிங்கங்கள் சேவகராகவும், நடித்து காண்பித்ததுகள் இன்னமும் புலியும், எலியும் ஓரிடத்தில் வி ளையாடவும், கீரிப்பிள்ளையும் பாம்புங் கொடூரமில்லாமல் சினே கஞ்செய்யவும், இராஜாளியும் புறுவும் ஒருமித்திருக்கவும் சிங் கமும் யானையுஞ் சேர்ந்துவாழவும், மேலும், அவ்வனத்தில் எங்கேபார்த்தாலும் ரிஷியீஸ்வரர்களிட வாசிர்மங்களும், இவர்களைச்சுற்றித் தென்னஞ்சோலைகளும், தடாகங்களும், கேணிகளும், நந்தவனங்களில் குயில்கள்பாடவும், மயில்களா னது தங்களுடைய செக்கையை விரித்து நடனம் புரியவும், வண்டுகள் புஷ்பங்களினது தேனையுண்டு, ரீங்காரங்களைப்பாட வும், இத்யாதி விநோதங்களைப் பொருந்திய அந்த வால்மீகர் வனத்தினது வியப்பை சீதையம்மனும் பிள்ளைகளும் பார் த்து, ஸ்ரீராமரைத் துதிசெய்துகொண் டிருக்கையில் வால் மீகர் செபத்தைவிட்டு கண்ணைவிழித்து செபதபங்களை முடித் துக்கொண்டு சீதையம்மனிருக்கும் பர்ணகசாலைக்குவந்து அம் மன் தரிசனங்கண்டு மனதில் தோத்திரஞ்செய்தார். அச்சம யத்தில் சீதையம்மனும் பிள்ளைகளும் வால்மீகருக்கு நமஸ் காரம் புரிந்து அவராசீர் வசனம்பெற்று, புலித்தோலாச

னம்பரப்பி அவனை வீற்றிருக்கச் செய்தார்கள். அவ்வால்மீகர் சற்றுநேரந் தன்மனதில் யோசனைசெய்தார் அஃதென்னவென்றால், சீதாலட்சுமி நம்முடைய ஆசிர்மத்திற்கு வந்த நாளும் பிள்ளைபிறந்தவயதுங் கணக்கு பார்க்கும்போது, 10-வயதும் 4-மாதமாகின்றது சிங்கக்குட்டிகள்போல மகா வீரபராக்கிரமசாலிகளா யிருக்கிறார்கள், இவர்கள் முன்னிலையில் அரியரப் பிரம்மாதிகளும் நின்று யுத்தம் பண்ணமாட்டார்கள், இந்த மண்டலத்திலுள்ள இராசாக்கள் வந்தெதிர்த்தாலும் குசலனுடைய பாணங்களினால் பஸ்மீகரப் படலமாய்ப் போவார்கள்போற் காணுகின்றது இவர்களுடைய புஜ பலபராக்கிரமந் தானென்ன இவர்களுக்கு எதிரிகள் தானுண்டோவென்று சந்தோஷித்துத் தம்முடைய கியான திருஷ்டியினாற் பார்த்தார் இன்னம் ஒருசாம பரியந்தத்திற்குள்ளே நடக்கப்போகிற யுத்தமுங் குசலவர்களால் மாளப்போகிற இராஜாக்களும், இராக்ஷதரும், தம்முடைய தீர்த்தப் பிரதாபம் வெளியாகவும், சீதையம்மனும் பிள்ளைகளும் அயோத்தியா புரியிற் சேர்ந்து அஸ்வமேதயாகம் நடக்கப்போகிற விந்தையும் தேவர்களுக்கு அவிர்பாகங் கொடுக்கப்போகிறதுங் கண்டு சந்துஷ்டியாகி நாமிவ்விடத்தி லிருக்கப்போகாது இவர்களா லின்பதுன்பம் நடக்கப்போகிறதென்று மனதி லெண்ணினவராய்ச் சீதையம்மனைப் பார்த்துச் சொல்லுகிறார். வாரும்மா சீதா, நான் பாதாளலோகத்திற்குப் போய்வர, ஐந்து நாட் செல்லும்போற் காணுகின்றது. ஆகிலுஞ் சல்தியில் வருகிறேன் போய்வரச் செலவு கொடும்மா வென்றார். அதுகேட்டு குசலவர்கள் சந்தோஷமானார்கள். சீதையம்மன் திடுக்கிட்டு வால்மீகனைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஐயா வால்மீகரே? எனக்கிதுவரையிலிருந்த சந்தோஷம் இன்றையதினம் நீங்கிவிட்டது அதேதென்றால் நீர் பாதாளலோகத்திற்குப்போய் வருகிறேனென்று செலவு கேட்கவே, எனக்கு வலது புஜமும், வலது தொடையும் துடிக்கின்றது, எனக்குச் சமாதானப்படவில்லை மனது கலக்கமாயிருக்கிறதென்றாள். அதுகேட்டு வால்மீகர் சொல்லுகிறார். கேளாயம்மா சீதாதேவியே? திரிலோகத்தையுஞ் செயிக்கத்தக்க புஜ பலபராக்கிரமுமுள்ள பிள்ளைகளிருக்க, உனக்கென்னபயம், சந்தேகந்தோன்றின மாத்திரத்தில் என்னை நினைத்தால் நான் வந்துவிடுகிறேன். நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம்.

ஆகிலும், உனக்கு இன்பதுன்பந்தானேது, இந்த துன்பங்களைவிட்டு சந்தோஷ வார்த்தையாய் செலவுதந்தால் நான் பேர்ய் நம்மைக்கோரி செய்யப்பட்ட யாகத்தை முடிப்பித்து அதிகவிரைவாய் வந்துவிடுகிறேன் செலவு தாருமம்மாவென்று பிரியவசனமாய்ச் சொன்னார். அதனைக்கேட்டு சீதையம்மன் சொல்லுகிறாள். வாருமையா முனிநாதரே தாங்கள் பாதாளலோகத்திற்குப்போய் அதிக விரைவாய் வந்துவிடுமென்ன வால்மீகர் குசலவர்களுக்குப் புத்திமதிகளைச்சொல்லி அவர்களிடத்திலுஞ் செலவுபெற்றுச் சில ரிஷிக்கூட்டங்களுடன் பாதாளலோகம் போயினார்.

குசலவர்கள் வேட்டையாடச் சீதையம்மன் விடைகொடுத்தனுப்புதல்.

ஆசிரிய விருத்தம்.

சீரோங்குதசாதன்றனையனுக்கினியளாந் திருவிலுயர்சீதைதந்த
செல்வராங்குசலவரெனுஞ்சிறுவரிருவரது திங்களணிகாவதனைநோக்கி
ஏரோங்குமகவாகவெந்தனுக்குற்றவிருபுதல்வர்காணீரின்று
இந்தவொடுகதிர்நிலவெறிக்காமனம்புகுந்தொழிலரிதிரண்மீதினும்
காரோங்குமானைத்திரண்மீதினும்போய்கரடிவெம்புலிமீதினுங்
கலைமான்கண்மீதுவேட்டமாடத்துணிவுகாளைகள்கொண்டவெண்ணம்
பாரோங்குகீர்த்திபெறுமுனிவரருளாபத்தாவினருளினாலும்
பதனமாய்ச்சென்றேகணங்களைச்சேதித்துபரிவுடன்வருகுவீரே.

அதன்பின்பு குசலவர்கள் தாயாராகிய சீதையம்மனைச் சேவித்துச் சொல்லுகிறார்கள். கேளுந்தாயே, நாங்கள் காட்டுக்குப்போய் வேட்டையாடி வரவேண்டும், எங்களுக்குச் செலவு தந்தருளுமென்று கேட்க, சீதையம்மன் சொல்லுகிறாள். அடா தம்பி, குசலவர்களே? நல்லயோசனை செய்தீர்கள் ஐயர் வால்மீகர் எப்போது பாதாளலோகத்திற்குப் போவாரோவென்று காத்துக்கொண்டிருந்தீர்களோ, அவரில்லாதகாலத்திலென்னைத் தனியேவிட்டுப் போகலாமோ, அவ்விடத்தில் கரடி புலி சிங்கங்கள் அநேகமாயிருக்குமே, உங்களையல்லாத வேளையிலெப்படி நானனுப்புவேனென்றாள், அதற்குக் குசலவர்கள் சொல்லுகிறார்கள். ஓ! அம்மா? நல்லவசனம் பகர்ந்தீர் நாங்களுன்வயிற்றிற்பிறந்து எங்களுக்குச்சவுரிய வீரபராக்கிரமமில்லாமற் போயிற்றோ, இப்பூமண்டலத்திலுள்ள கரடி புலி காட்டானை சிங்கம் இதுகளெல்லாமே கோபித்து, எங்

கள்பேரி லெதிர்த்து வந்தாலும் எங்கள் கரத்திலிருக்குஞ் சரத்தினல் கண்டதுண்டங்களாக்கி, காகம், கழுகு, கூளிகளுக்கு யிரையாக்கிவிடுவோம், மேலும், திரிநேத்திரதாரியாகிய சிவன் வந்தெதிர்த்தாலும் எங்களஸ்திரங்களால் நாங்கள் நன்ருய்ப் பூசைபண்ணி யனுப்புவோம். அதுவுமன்றி வைகுந்தவாசியாகிய ஸ்ரீமந் நாராயணர் வந்தெதிர்ந்தாலும் அவரையுமெங்கள் கையிலிருக்கும் துய்ய அஸ்திரத்தினல் மெய்யைக் கஸ்திப்படுத்தி வைகுந்தஞ் சேருமையாவென் றனுப்பத்தக்க வால்மீகருடைய ஆசீர்வாதமும், அருளும், திரிலோக ரக்ஷகியாகிய உம்முடைய கிருபா கடாக்ஷமும் அடியேன்களுக்கிருக்க, இராக்ஷதர் இராசாக்கள் எங்களுக்கு நிகரென்று சொல்லவேண்டுமோ வென்ருர்கள். அம்மொழியைக்கேட்ட அம்மணவள் மனதில் மகிழ்வுற்று, பிள்ளைகளுடைய புஜபல பராக்கிரமத்திற்கு மெச்சி, இச்சையோடுரைப்பாள். அப்பா குசலவர்களே? உங்கள் வல்லமைக்கும், வில்திறமைக்கும் யார் யெதிரென்பேன் அதல விதல சுதல நிதல மகாதல பாதாளம் வரையில் எதிரி யொருவருமில்லை. ஆதலால் நீங்கள் கானகஞ்சென்று வேட்டையாடி சீக்கிரம் ஆசிரமம் வந்துசேருங்களென் ருசீர்வாதம்புரிந்தாள்.

உடனே குசலவர்கள் சீதையம்மனைச் சேவித்து பூச்சல்லடந்தொடுத்து தட்டி வரிந்துகட்டி, உருமாடு ஜெகதாடு பூண்டு, முதுகி லம்புருப்பொதி மாட்டி இடுப்பில் முப்பத்திரண்டாயுதங்களும் வைத்துக்கொண்டு கையிற் றனுசெடுத்துப் புறப்பட்டார்கள். அது எத்தன்மை யிருந்ததென்ருல், முந்தி ஸ்ரீராம லட்சுமணர்கள் வனவாசஞ் செய்யவேண்டிப் புறப்பட்ட தன்மைபோற் சாயலும் வடிவும் முகக்களையும் நடையும் அவ்விருவர்போல இரண்டு சிங்கக்குட்டிகள் புறப்படுகையில் வால்மீகருடைய வனத்தி லிருக்கப்பட்ட பஞ்சபூத மமைந்த ஜீவராசிகளானபட்சி மிருகஜாதிகளும் குசலவர்கள் முன்னணுகாமல் மறுவனஞ் சேர்ந்ததுக ளக்காலையில் குசலவாள் யானை புலி கரடி சிங்கங்கள்மேலேறி வெகுதூரத்தில் சென்று அவ்விடத்தில் நுழைய யிடமில்லாக் காட்டையெல்லாத தங்களுடைய அஸ்திரங்களைவிட்டு வேட்டையாடி படுகூரணப்படுத்தி தேட்டையான நல்ல பாட்டையாக்கிகொண்டு வருகையில், கவரிமானுங் கஸ்தூரிமான்களுங் காணப்பட்டது.

அந்தக்கவரிமான் கஸ்தூரி மிருகங்களையும் அஸ்திரத்தினு லெய்து, சித்திரவதைசெய்து, வனத்துப்பிள்ளைகள் கையிற் கொடுத்து சீதையம்மனிடத்தில னுப்பிவிட்டு சிலபிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவேட்டையாடிவெகுதூரம்வந்துவிட்டார்கள்

அக்காலையில் குச்லவன் லவனைப்பார்த்துச் சொல்லுகிறான். அடா தம்பி, லவனே? ஆசிரமம்விட்டு இவ்விடம் வந்து வெகுநேரமாயிற்று நமதன்னை ஒண்டியாயிருக்கிறாள் நானிந்தக் காட்டைச்சுற்றி வேட்டையாடிவருகிறேன் நீ வனப்பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு சல்தியில் ஆசிரமம்போய்ச் சேரென்றுசொல்லி காட்டிற்குள் நுழைந்தான். அது கேட்டு லவனுனவன் நல்லதென்று வனத்துப்பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு காட்டிலுள்ள பழவர்க்கங்களைப் பறித்துச் சாப்பிட்டு பசியாறி ஆசிரமம்வரத் திரும்பினான்.

லவனுனவன் குதிரையைப் பிடித்துக் கட்டுதல்.

விருத்தம்.

இருண்டவனமடர்ந்தசெல்வரிருவருஞ் சிலையைத்தொட்டு
பொருவிலாவுக்கிரங்கொண்டுபுலிகரிமான்கள்மீதும்
வருமரிக்கணங்கன்மீதும்வாளியைவிடுத்துமாய்த்துச்
சருவியேமீளுநங்காலிற்றனிமிகப்பரிகைக்கொண்டான்.

அப்போது சத்துருக்கமகாராசாவிடுத்த அஸ்வமேதக்குதிரையானது கீழ்சமுத்திரக்கரையோரமாகவந்தது. அவ்விடத்திலிருந்து தென்சமுத்திரமாய்த் திரும்பி யொருவர்கையிலும் பிடிபடாமல் தெற்குபாரிசத்திலிருந்து தென்மேற்குமுகமாய்த் திரும்பி அயோத்திக்கு நேர் மேற்காகவிருக்கும் வால்மீகர் வனத்திற்குவந்து பச்சென்றபுல்லை மேய்ந்துக்கொண்டிருக்கையில் வனத்துப்பிள்ளைகளுடன்வருகிற லவனுனவன், அஸ்வமேதக் குதிரையைக்கண்டு ஆனந்தங்கொண்டு, சீக்கிரமாகவந்து ஆச்சரியத்துடன் நெற்றியிலிருக்கின்ற பட்டயத்தை வாசித்துப்பார்க்கையில், அதிலெழுதியிருக்கின்றதாவது சூரியவம்சத்து இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவான சூரியனைப்போற்றுலங்கா நின்றவர் பிரதாபசவுரியமுள்ளவர் ஆயிரத்தெட்டண்டமும் இருநூற்றிருபத்திஞலு புவனமுஞ் சத்தசாகரமும் ஈரேழுபதினலு லோகமும் ஏக சக்ரேஸ்வரனுக

ஆண்டுக்கொண்டிருந்த மகா இராஜாதிராஜனுகிய இராவ ணேஸ்வரனைச் செயித்த வீராதிவீரராகிய இராமபிரான்விட்ட குதிரை இந்தக் குதிரையின்பின் சத்துருபயங்கரன் தனுர் வேத சாஸ்திர ரணரங்கசூரனுன சத்துருக்கன் வருகிருன்.

அந்த சத்துருக்கனைச் செயிக்கத்தகுந்த சாமார்த்திய மிரு ந்தாற் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தத்திற்கு வரலாம். சாமார்த்தியமில்லாதபேர் குதிரையைக் கண்டவுடன் பூசைகள் செய்து காணிக்கை கப்பங்களுடன் கொண்டுவந்து சத்துருக் கனை வணங்கிப் பிழைக்கிறதென்று பட்டயத்திலெழுதியிருந் ததைக்கண்டு, தலையையசைத்து சொல்லுகிருன். ஆ! ஆ! இராமன் தனக்குத்தானே சூரனென்று கெர்வித்து பட்டயத் திலெழுதிக் குதிரையை விட்டான். அந்தக் குதிரையின் பின்வருகிறவனே சத்துருபயங்கரனுன சத்துருக்கன் வருகிரு னென்றெழுதி யிருக்கின்றது அந்த சத்துருக்கனுடைய சாமா ர்த்தியத்தையும் என்னுடைய சவுரியத்தையும் தேவர்களே மெச்சவேண்டும், என்தமயனு மிவ்விடமில்லை. ஆனுலுமெ ன்னமாயிற்றென, கோபமாகிப் பல்லை நெறநெறவென்றுகடி த்து அஸ்வத்தைப்பிடித்துக் காட்டுவாழை மரத்திற் கட்டி விட்டு மகாகோபாக்கினியுடன் வில்லையெடுத்து நிறுத்தி, நாணிபிகிந்து, தோளில் பாட்டிக்கொண்டு வனத்துப்பிள்ளை களை யப்புறமனுப்பிவிட்டுக் செடிமறைவில் மண்ணைக் குவித் துத் தலைக்குயரமாக வைத்துச் சயனித்திருந்தான்.

அந்தச் சமயத்தில் சேனுதிபதியான நீலாட்சதனும் பதினையாயிரம் இராட்சதாளுங் குதிரையைக்காணுமல் காடு மலை செடி பர்வதங்கள் ஆறு குன்று கழி மடுக்கள் கிராமம் சீமை பட்டணமுழுதும் தேடிக்கொண்டு சரஸ்வதியாற்றின் கரையோரமாகவந்து பார்த்துக் குதிரையைக் காணுமல் அப் பால் வால்மீகரது வனத்திற்சென்று செடிக் கொருவராய் நுழைந்து தேடிப் பார்க்கும்போது அஸ்வத்தைக் கண்டு, இராட்சதாள் சைகையாய் எல்லோரும் ஒன்ருய்க்கூடிக் குதி ரையினிடம்வந்து பார்த்தார்கள். அந்தக் குதிரையானது காட்டு வாழைமரத்திற் கட்டுண்டிருக்கக் கண்டவுடன் நீலாட் சதனுனவன், இராட்சதாளைப் பார்த்துச் சொல்லுகிருன். அடடா, இராட்சதாளே? இந்த நுழையாத காட்டில் நமது அஸ்வமேதக் குதிரையைப் பிடித்துவந்து மரத்திற் கட்டி வைத்து நம்மைக் காணவே மறைந்து போய்விட்டான்

போற் காணுகின்றது அவனெவ்விடம் போனாலும் விடாதீர்கள் இந்தவனத்திற்றான் ஒளித்துக்கொண்டிருப்பான். அவனைத் தேடிப்பிடித்து என்னிட மழைத்துக்கொண்டு வாருங்களென்றான். அதுகேட்டு இராட்சதாள் ஆங்காரங்கொண்டு செடிக்கொருவராய் நுழைந்து தேடிப்பார்க்கும்போது லவனுணவன் இராட்சதாள் கூச்சலைக்கேட்டு எழுந்திராமல் இராட்சதாள் எவ்விடந் தப்பிப் போகிறார்களோ வென்று மனதுள் வியப்புற்று மௌனமாகப் படுத்துக்கொண்டிருந்தான்.

அப்படியிருந்த லவனைப்பார்த்து அவர்கள் கண்களுக்கு அந்த லவனெப்படி விளங்கினனென்றால், அந்த ஸ்ரீராமமூர்த்தியே இராவண சம்மாரத்திற்காகக் கோதண்டத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு பள்ளிகொண்டிருந்த பாவனைபோற் காணப்பட்டான். சந்தேகித்து மறுபடியும் இராட்சதாள் லவனை நன்றாக வுற்றுப்பார்த்தார்கள் பார்க்கையில் அயோத்தியாபுரி பட்டணத்தில் வாசம் பண்ணப்பட்ட ஸ்ரீராமபத்திர சுவாமியைப்போல் முகாரவிந்தங்களும் பச்சை நிறமேனியும், பவளம்போ லுதடும், அகண்ட மார்பும் நீண்ட கைகளும், மணி மத்தளம்போற் புயங்களும் ஆலிலைபோல் வயிறும், வாழைத்தண்டுபோற் றொடையும், அமர்ந்த ஸ்ரீபாதமும் அலங்கார புஜபல பராக்கிரமமும், அண்டினபேரை ஆதரிக்கப்பட்ட பார்வையும் பொருந்தியிருந்தான்.

அப்போது சில ராட்சதாள் நீலாட்சதனிடத்தி லோடிப் போய் கூறுகிறார்கள். ஐயா! ராட்சத சிரேஷ்டரே? கேளும், நம்முடைய குதிரையைப் பிடித்துக் கட்டினவர்களைத் தேடிப் பார்த்துங் காணமல் செடியாலொன்றாக ஆராய்கிறபோது ஒரு சிறுவனானவன் ஸ்ரீராமரைப்போற் பள்ளிகொண்டிருக்கிறான் அவனைப்பார்த்தால் சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியாகிய நம்பெருமானாகிய ஸ்ரீராமரைப் பார்க்க வேண்டியதில்லை அவனைப் பார்க்கையிற் பயமாயிருக்கிறது நீரும் வந்து பாருமையாவென் றழைத்தார்கள். அதுகேட்டு நீலாட்சதன் ஆச்சரியமடைந்து புறப்பட்டு இராட்சதாளுடன் வந்து லவனைப் பார்க்கையில் ஸ்ரீராமரைப் படத்திற் பதித்துவைத்தது போலிருக்கக்கண்டு நீலாட்சதன் இராட்சதாளைப் பார்த்துச் சொல்லுகிறான். அடா ராட்சதாளே இந்தச் சிறுபிள்ளையைத் தொந்தரவுபண்ணாமல் இராசாவாகிய சத்துருக்கராசனிடத்திற் கழைத்துக்கொண்டு வாருங்கள் வராவிட்டாற்கைப்

பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்களென்றான். அதுகேட்டு லவனானவன் கிட்டநெருங்கி வரட்டுமென்று பார்த்துக்கொண்டிருந்தான், அத்தருணத்தில் இராட்சதர்கள் சற்றிடைந்து நின்று லவனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அடா, தம்பி இராசகுமாரகா நீயார் உமது பெயரென்ன உன் தாய் தந்தையர்கள் பெயரென்ன உங்களுக்கிருப்பிடமெங்கே சொல்லடா வென்றார்கள். அம்மொழியைக் கேட்டு கோபத்தை மனதில் அடக்கிக்கொண்டு ஒன்றுஞ் சொல்லாமலிருந்தான். பின்னுமிராட்சதாள் கோபங்கொண்டு அடா! இராசகுமாரா நாங்கள் சொல்லப்பட்ட விசேஷம் உன் காதிற் கேட்கவில்லையோ எங்களுக்குப் பதிலுத்தரவு சொன்னாலாயிற்று. இல்லாவிட்டால் எங்களுடைய கையைப் பார்த்தையோ இதோ ஒரு அறையினாலே அறைந்து யமலோகமனுப்பிவிடுகிறோம் பாரடாசீக்கிரங் கூறடாவென்றார்கள். அதுகேட்டு லவனானவன் கோபங்கொண்டு விரைவிலெழுந்திருந்து வில்லிற்பத்துநாராசபாணத்தையெடுத்து சந்தித்து அடா காட்டுமிருகங்களுக்குச் சமதையாகிய இராட்சதர்களே என்ன சொன்னீர் என்பேரும் தாய் தகப்பன் பேருஞ் சொல்லச் சொன்னீர்கள் அல்லவா சொல்லாவிட்டால் உங்களுடைய அகண்ட கைகளினால் என்னை அறைந்துக் கொல்லுகிறோம் என்றீர்களே நான் என்பெயரும் என் தாய்தந்தை பெயரும் சொல்லுகிறதுமில்லை உங்களாலான சாமார்த்தியத்தைப் பாருங்களென்றான் லவனானவன். அப்போது இராட்சதாள் கோபங்கொண்டு லவனைப் பார்த்து அடா! சிறுபிள்ளாய் காட்டுமிருகமா நாங்கள் மிருகங்கள் இப்படிதானாவிருக்கும் நீ சிறுவனாயிருக்கிறாய் உன்வாய் விசேஷத்தைப் பார்த்தால் பெரிதாயிருக்கிறது ஆகிலும் பெரிதல்ல, உன் தாய்தந்தைபேரும் உன்பேருஞ் சொன்னால் நாங்கள்போகிறோம் இல்லாவிட்டாற் போகிறதில்லையென்று ராட்சதாள் வெகு கோபத்துடனே கூறுகையில் லவனானவன், ஓ! இராட்சதர்களே? நீங்களார் இவ்விடம் வரவேண்டிய காரியம் என்ன எங்கள் வனத்திற்கு உங்களை யனுப்பிவைத்தவன் யார் சீக்கிரஞ்சொன்னாலாயிற்று இல்லாவிட்டால் இந்தபாணத்தினால் உங்களை யமலோகங் குடியேற்றி வைக்கிறேன் பாருங்களென்னவே இராட்சதாள் நகைத்து அடா, ஏதடா சிறுபிள்ளை யென்றல்லவோ இவ்வளவு நேரம் வெரும்மனே சும்மா கைகட்டிக் கொண்டிருந்தோம் சிறுவனென்று இருந்த

தற்கு சிறுபிள்ளை குணம் இப்பதான் தெரியவந்தது நம்முடைய சொல்லைக்கொண்டே நம்மை முடுக்கிருன் பார்த்தீர்களோவென்று இராட்சதாளெல்லாங் கலந்து பேசிக்கொண்டு நாலுமூலையும் நெருக்கிப் பிடிக்கவந்தார்கள் லவனுனவன் ராட்சதாளைத் தன் கிட்டே நெருங்கவொட்டாமல் பத்து நாராசபாணத்தை வில்லிற்பூட்டி தூபதீப நைவேத்தியங் கொடுத்துவிட்டுவிட்டான். அந்தப் பாணங்களும் வில்லைவிட்டு வெளிப்பட்டு நாகசர்ப்பம்போல் சீறிக்கொண்டு முன்வந்து நின்றுபேசிய இராட்சதவீராள் நெஞ்சுக்குழியிற்பட்டு பிடரியிலுருகிப் போய்விடவே இராட்சதர்கள் அடியற்ற மரம்போல் சாய்ந்து பூமியில் விழுந்துவிட்டார்கள். பின்னும் சில ராட்சதாள் கண்டு வெகுண்டு ஓகோ! மோசம் வந்தது பார்த்தீர்களா விரலத்தனையுள்ள சிறுவன் சொல்வதைக் கண்டீர்களா, பரியாசமாகச் சரியாக வைத்துப் பேசினதினலல்லவோ, அறியாதவன் குணத்தைக் காட்டி வில்லைநாட்டி அதிற் சரம் பூட்டி நம்மை வாட்டினன்.

ஆகையால் வில்லைஎடுங்கள் அஸ்திரங்களைத் தொடுங்கள் விசைகொண்டு விடுங்கள் என்று யாவருமொன்ருய்க்கூடி மாரிபோற் சரத்தை வாரிவாரிச் சொரிந்தார்கள். அப்படியாகச் சொரியும்போது லவனுனவன் வருகிற அஸ்திரங்களையெல்லாம் ஒன்ருவது தன்பேரிற் படவொட்டாமல் பாணங்களை அறுத்துத் தள்ளிவிட்டு வில்லில் அனேக அஸ்திரங்களைச் சந்தித்துச் சோணைமாரிபோல் இராட்சத சேனைகள் பேரிற் பொழியவே அந்த அஸ்திரங்களினுல் கால்வேறு, கைவேறு, உடல்வேறு, எலும்புவேறு, முண்டம்வேறு, இடைவேறு, இறைச்சி வேருக மடிந்துவிடவே நீலாட்சதன் கண்டு கருத்திற் கோபங்கொண்டு கண்சிவந்து தேரை நடத்தி அடா! சிறுபிள்ளாய் உனக்கு யுத்தமென்னத்திற்கு என் வீணிலென்சேனையைக் கொன்றுபோட்டாய் ஆகிலும்பெரிதல்ல உன் வரலாறு மாத்திரஞ் சொன்ஞல் அதுவே யெனக்குப்போதும் தம்பியென்று அதிகபிரியவசனத்துடன் சொன்ன நீலாட்சதனைப்பார்த்து லவனுனவன் சொல்லத்தொடங்கினன். எனது தாய்தந்தையர் பேரைச்சொல்லென்று நீர் கேட்கிறீரல்லவோ கவனமாய்க்கேளும் சொல்லுகிறேன். என் தாயார்பேர் ஜானகியம்மாள், எங்களையர்பேர் வால்மீகர், என்பேர் லவன், என் தமயன் பேர்குசலன், எங்கள் குலங்கோத்திரம் எனக்குத் தெரியவராது

நாங்கள் வால்மீகருடைய சிஷப்பிள்ளைகளென்றான். அதனை நீலாட்சதன் கேட்டு, யோசனைசெய்து இவன் சீதையம்மன் பிள்ளைதானென்று கருத்திலறிந்து சொல்லுகிறான். இவனைப்பார்த்தால் ஸ்ரீராமனைப்போலு மிருக்கின்றது. அவருடைய பிள்ளை யென்பதற்கு யாதொரு சம்சயமில்லை இவனை யெந்தவிதத்திலும் சத்துருக்க மகாராஜனிடத்தில் அழைத்துக்கொண்டு போவோமென்று லிவன்வருகிறவனாகக் காணவில்லை யுத்தஞ்செய்து பிடித்துக் கட்டிக்கொண்டு போவோமென்றால் இராட்சதனைக் கொன்றுபோடுகிறான். சீதையம்மனுடைய புத்திரரென்று அசாரிசமாய் விட்டுப் போனேமேயானால் சத்துருக்கர் நம்மையேசுவார் இதற்கெப்படியென்று சிந்தித்து லவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அடா! தம்பி லவனே? நாங்கள் விட்ட குதிரையை யார் பிடித்து மரத்தில் கட்டினது எனக்குத் தெரியச் சொல்லுமென்றுகேட்க, அதுகேட்டு லவனானவன் சொல்லுகிறான். ஆ! இராட்சதரே? கேளும், நீங்கள் விட்ட குதிரை எங்கள் வனத்திற்கு வந்தபடியால் நான் பிடித்துக்கட்டினேன். உங்கள் வீட்டிலிருந்த குதிரையை நான் பிடித்துவந்து கட்டவில்லையென்றான். அதுகேட்டு நீலாட்சதன் சொல்லுகிறான். வாருந்தம்பி! நீ சிறுபிள்ளையானபடியினால் தெரியாமற் குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டாய் எங்களிராஜாவாகிய சத்துருக்க மகாராஜர் கேள்விப்படுவாரேயானால் உனக் குயிர்ச்சேதம் வரும் அப்படி வராமுன்னங் குதிரையைவிட்டு உயிரை தப்பித்துக் கொண்டு உன் தாயிடம்போய்ச்சேருவதே நலமென்றான். அம்மொழியைக்கேட்ட லவனானவன் ஓகோ! இராட்சதரே? நல்ல வார்த்தை மொழிந்தீர் நானகுதிரையை விடுவிக்க அரியரப்பிரமாதிகள் வந்தாலும் முடியாது அதிருக்கட்டும் நீ ஆண்பிள்ளையானால் என்னைச் செயித்து குதிரையை விடுவித்துக்கொள், இல்லாவிட்டால் உன்னுயிரை தப்பித்துக்கொண்டு ஓடிப்பிழையுமெனவே, நீலாட்சதன் கோபமாகி, அடா! லவனே? நீ சிறுபிள்ளையென்று உனக்குப் பிரியவசனஞ் சொல்லிக் குதிரையை விடென்று கேட்டால் என்னைச் சற்று மதியாமல் இப்படிப்பட்ட நகாத மொழியைப் பகரலாமோ, உன் சிறுபிள்ளைதனந்தைக் காண்பித்தாய், "மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்" என்ற பழமொழியையுந் தடுத்துவிட்டாய், இனியாவது குதிரையைவிட்டு வணங்கிப் பிழைத்தாலாயிற்று. இல்லையென்றால், என்கை வாளாயுதந்திற்கு உன் மெய்யை இரையாகக்

கொடுத்து யமனுலகமனுப்பி விடுகிறேன் பாரடாவென்றான். அதுகேட்டு லவனனவன், இரண்டுகண்களுஞ் செவ்வானம் போற்சிவக்க, அதிககோபாக்கினியுடனே கண்களையுருட்டி நீலாட்சதனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

லவனுக்கும் நீலாட்சதனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

குதிரையைப்பதனஞ்செய்த கொற்றவன்மீதிலெய்ய
துதிபெறு நீலன்றானுந் துமணிரதத்தைதூண்டி
மதிமுகநோக்கிப்பிள்ளாய் மாவதைநல்காயாகில்
சதிருருஞ்சமர்விளைக்கத் தனயனேவெனவெதிர்த்தான்.

அடா! இராட்சதப்பட்டிமகனே ? உன்னைப்பெரியவனென்றுமனதிலெண்ணி, மகாவணக்கத்துடன் உயிர்தப்பிப்பிழையென்றுசொன்னால் என்னைவாளுக்கு இறைகொடுப்பேனென்றுகூறினையல்லவோ, "மூர்க்கரோடிணங்கேல்" என்றபழமொழிக்கிணங்கினை யல்லவா, உன் ஆண்பிள்ளைத்திறமை இதிற்றெரியவந்தது என்னிடத்தில் கட்டுண்டகுதிரையை உன்னைப்போலொத்த இராட்சதாள் லட்சம்பேர் வந்தாலும் விடுவிக்கமாட்டுவார்களோ, அப்போதல்லவோ, என்சிறுபிள்ளை வீரத்தைக்காண்பிப்பேன். இப்போதுன்னுயிரைத் தப்பித்துக்கொண்டு உன்னினத்தைக் கண்டு என்பேர் பிரதாபத்தைச் சொல்லிப்பிழை, அல்லவென்றாலுன் ஆண்பிள்ளைத் திறமையைக் காட்டடா இராட்சதப்பயலே யென்றான்.

அதுகேட்டு நீலாட்சதன்மீறி, கோபமென்னுங்குன்றேறி எதிரே வில்லையெடுத்து நாட்டி, நாணிபூட்டி, கூர்மையோடுங் கூடியிருக்கப்பட்ட பத்து திவ்வியாஸ்திரங்களெடுத்து சந்தித்துப் பிரயோகம் பண்ணிவிட்டான். அந்ததிவ்வியாஸ்திரங்களும்விடுபட்டு அக்கினிசுவாலைகளை வீசிக்கொண்டுமகாவேகத்துடன்வருகிறதைக்கண்டு, லவனனவன், அதிசீக்கிரத்தில் 15-திவ்வியாஸ்திரங்களை விடுத்து நீலாக்ஷதன் விட்ட பத்து திவ்வியாஸ்திரங்களைக்கண்டித்து, அவன் கைவில்லையுந்துண்டித்து அவ்விராட்சதனேறிவந்த இரதம் சாரதி குதிரைகளுடன் தும்சப்படுத்திவிட்டான். அந்தட்சணமே நீலாட்சதன் மறுதேரிலேறிவில்லையெடுத்து குணத்தொனிசெய்து அனேக



அஸ்திரங்களைச் சந்தித்து ஐப்பசி, கார்த்திகைமாதத்தில் இடி மின்னல் குமுறலுடனே மழைபெய்தா லெப்படியோ அப்படியாக, சரமாரியாய் ஓய்வில்லாமல் பாணங்களை லவன்பேரில் விடுகிறபோது லவனுனவன் கண்டு, விழிகள் துடிதுடித்து பீஜம் நடிநடித்து, அதிகவிரைவி லனேக சரங்களை பிரயோகப்படுத்தி நீலாட்சதன் விடுத்த அஸ்திரங்களை யறுத்துத் தள்ளி அவன் மார்பிலணிந்த கவசத்தையும் பொடியாக்கிவிடவே, மீளாவீராவேசங்கொண்டு வாளாயுதத்தையுருவி ஒரே வீச்சாக வீசிப்போடுகிறேனென்று அதிக வேகத்துடன் சிவ்வென்று பாய்ந்துவருமுன்னே லவனுனவன், இரண்டு சிங்கமுகாஸ்திரம் விடுத்து வாளாயுதம்பிடித்த கையை யறவெட்டி சிரசையுங் கண்டித்துவிட்டான்.

அதுகண்டு இராட்சதாளேதடா இவன் சிறுபிள்ளையென்று பார்த்ததற்கு நம்முயிருக்கே உலைவைத்திருக்கிறுன். இனியிருந்தால் இராட்சதாளாகிய அரிசியைவாரி உலையிற் கொட்டி வடித்துப்போடுவான்போற் காண்கின்றதென்று தலைமேல்கையைவைத்து அழுதுக்கொண்டு ஆகாயமார்க்கமெழும்பிப் பார்க்கும்போது சத்துருக்கமகாராஜனுடைய தண்டானது கணணுக்கெட்டின துலைவில் வருவதைக்கண்ட இராட்சதர்களெல்லாம் மனதுகலங்கி யோடிப்போவாரும், காணிக்கைகப்பங்கொண்டு சத்துருக்கமகாராசனை யிணங்கி வணங்குவாரும், இந்தப்படியாய்ப் பூமியானது நடுநடுங்க வருகிறசேனை தண்டுக்குள் இராட்சதாள் புகுந்து காலசித்தனைக்கண்டு நமஸ்கரித்துச் சொல்லுகிறுர்கள்.

ஐயா! இராட்சதசிரேஷ்டர்களே? கேளும் நம்முடைய குதிரையானது வால்மீகர் வனத்தில் ஒரு சிறுபிள்ளையான லவன்கையில் பிடிபட்டுப்போயிற்று. அந்த சிறுபிள்ளையினுல் ஆயிரம் இராட்சதாளும் சேனுதிபதியான நீலாட்சதனும் மாண்டுபோனுர்கள் நாங்கள் மாத்திரம் உயிர்தப்பி யோடிவந்தோமென்றுர்கள். அதுகேட்டு அந்த இராட்சதாளை சத்துருக்கமகாராசரண்டையி லழைத்துக்கொண்டுபோய் சொல்லுகிறுன். ஐயா! சத்துருக்கமகாராசரே? நமது அஸ்வமேதக் குதிரையானது வால்மீகர் வனத்திற்போனதாயும், அவ்வனத்திலொரு சிறுபிள்ளை லவனென்பவன் அஸ்வத்தைப் பிடித்துக்கட்டி பின்போன இராட்சதாளையும் சேனுதிபதியான நீலாட்சதனையுங் கொன்றுபோட்டான். இவர்கள் மாத்திரந் தப்பிப்பிழைத்து ஓடிவந்து விட்டனரென்றுன்.

அதுகேட்டு சத்துருக்கமகாராசன் கோபமாகிச் சொல்லுகிருர். ஒரு சிறுபிள்ளையானது தம்முடைய குதிரையைப்பிடித்துக்கட்டி இராக்ஷதாளேக் கொல்வதாவது இதென்னவாச்சரியம், இனி நம்முடைய சௌரியமென்னயிருக்கின்றது. ஆனுலும் அவனுக்கு எமலோகம்வழிகாட்ட என்கையிலஸ்திரமிருக்கிறது நீங்கள்பயப்படாமலும் பத்திரப்படுத்துங்களென்ருர். அதற்கு இராட்சதாள் சொல்லுகிருர்கள் ஐயா! சத்துருக்க மகாராசரே? அந்தகிறுபிள்ளையான லவனேப்பார்த்தால் பரப்பிரமமாய்விளங்காநின்ற ஸ்ரீராமமூர்த்தியைப்போல் வடிவும் அழகும்,வளமும் வார்ப்படச்சிலேபோலுமிருக்கிருன். அவன் தாய்தந்தை பேரைக்கேட்டால் தாயின்பேர் ஜானகியம்மாளும் ஐயர்பேர் வால்மீகரும், தமயன்பேர் குசலனும், தன்பேர் லவனும் நாங்கள் வால்மீகருடைய சிஷியர்களென்றுசொன்னுன். ஆனபடியால் எங்களாலானமட்டும் குதிரையைவிடச்சொல்லி பிரியவசனமாகக் கேட்டுப்பார்த்தோம் எங்கள் வார்த்தையுங் கேளாமல் சகலரையும் அஸ்திரம்விட்டுக்கொன்ருன். அவன் கையில் நாங்கள்பட்டபாடு என்னசொல்லுவோமென்ருர்கள்.

அதுகேட்டு சத்துருக்க மகாராசன் ஸ்ரீராமரைப்போலவே லவனுமிருக்கிருனென்றுசொல்லவே, கோபந்தணிந்து, தன்பக்கத்திலிருந்த சோமகாசமகாராசனேப் பார்த்துச் சொல்லுகிருன். ஐயா மகாராசனே? கேளுங்கள் அந்தச் சிறுபிள்ளை லவனனவன், ஆமென்றிருக்கிறீர்கள், என்தமையன் பிள்ளைகளாகவேண்டும், இல்லாவிட்டால் தாயார் சீதையம்மனென்று சொன்னதே, என் தமையனுடைய தேவியான சீதாலட்சுமிபேரில் குற்றஞ்சுமத்தி கர்ப்பவதியென்றும் பாராமல் வனத்திற் கனுப்பிவிட்டபடியால் அந்த லவன், சீதாதேவி புத்திரனென்பதற்குத் தப்பிதமில்லை, இப்போது நாம் தண்டைக் கூட்டிக்கொண்டு ஏகமாய்ப் போனேமேயானல் சிறுவனனபடியால் பயப்படுவான் ஆனபடியினலே நமது தண்டை யிவ்விடத்திற்ருனே நிறுத்திவைத்துவிட்டு சிலதூதரையும் சிலசேனேகளேயுங் கூட்டியனுப்பிவைத்து அந்தச் சிறுபிள்ளையான லவனே கைப்பிடியாகப்பிடித்துவந்தால் எல்லாச் சமாச்சாரமுங் கண்டறியலாமென்ருன், அதுகேட்டு சோமகாச மகாராசன் சொல்லுகிருன், ஐயா! சத்துருக்க மகாராசரே? கேளும், உமக்கு அப்படி சமுசயமா யிருந்தாற் கொஞ்சந் தண்டுதளத்தைக்கூட்டி அந்தச்சிறுபிள்ளை லவனே

கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வரும்படியாகச்சொல்லி யனுப்புமென்றார். அம்மொழியைக் கேட்டு சத்துருக்க மகாராசன் நல்லதென்று மகாமாயனைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓ! மகாமாயனே? கேளும் நீ இருபது வெள்ளம் இராட்சதாளைக் கூட்டிக்கொண்டுபோய், அந்த லவனுக்கு உயிர்ச்சேதம் வரவொட்டாமற் கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்றனுப்ப, அப்படியே மகாமாயனும், விடைபெற்று நல்லவீரராய்ப்பொறுக்கி, யானை தேர் பரி சேனைகளைக்கூட்டிகொண்டு டமாரபேரிகை முழங்க, லவனிருக்குமிடந் தேடிப் போகையில், லவனனவன் இராட்சதாளைக்கொன்றின்னம் சேனைகள் வருகிறதோ வில்லையோவென்று ஒரு ஆலவிருட்சத்தின்பேரிலேறி, உச்சிக்கிளையில்நின்று பார்த்தான் பார்க்கையில் யானை தேர் பரி சேனைகள் வருவதைக்கண்டு, சந்தோஷமாகி, மரத்தைவிட்டுக் கீழிறங்கி, வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து சரஸ்வதி யாற்றங்கரையோரமாக வந்து நின்றுக்கொண்டு சேனைகள்பேரிற் பார்வையாயிருக்கையில், பர்வதங்கள்போல இரதமேறித் தண்டானதுவந்து லவனைச்சுற்றி வளைத்துக்கொல்ல, மகாமாயன் பதறுகிறான். அடா! இராட்சதர்களே? சிறுபிள்ளை லவன் ஓடிப்போகப்போகிறான். அவனைக் கைப்பிடியாகப் பிடியுங்களென்றான்.

அவ்வார்த்தையைக்கேட்ட லவனனவன் கலகலவென்று நகைத்துச் சொல்லுகிறான். அடா! இராட்சதர்களே? கேளுங்கள் நீங்கள் உயிரோடு தப்பிப் பிள்ளைமுகம் பார்க்கிறபேரானால் ஓடிப்பிழையுங்கள், இல்லையென்று என்கிட்ட நெருங்குவீர்களேயானால் ஒரே பாணத்தினால் உங்களனைவரையும்யெமலோகஞ் சேர்த்திடுவேன், சிறுபிள்ளையென்றெண்ணாதீர்கள், புலியை நாம்வந்து எற்றியதுபோல் என்னைவந்து சற்றிக்கொண்டீர்கள், ஓடிப்போங்களென்றுகூற, ராட்சதாள் சொல்லுகிறார்கள். அடா! லவனே? நாங்களோடிப்போகிறோம் சற்றுநேரம் நீயோடாமல் நில்லென்றுகிட்டநெருங்கினார்கள். அக்காலையில் லவனனவன், ஏதடா, இராட்சதாள் மிதமிஞ்சி கிட்டநெருங்கி வருகிறார்களென்று ஆக்கிரக நிக்குரோதனாக வில்லைவளைத்து, பாணங்களைப்பூட்டி, நான்குமூலையுந் திரும்பித்திரும்பி ஓய்வில்லாமல் உகாந்தகாலத்தில் சப்தமேகமும் ஒன்றாய்க்கூடி இடி மின்னல் குமுறலுடனே மழைவருஷித்தால் எவ்வாறோ, அவ்வாறு சரவருஷங்களை மிதமில்லாமற்

சக்கராகாரமாய்த் திரும்பித் திரும்பிச் சுழன்று, சுழன்று, மூச்சுவிடாமற்சாடும்போது இராட்சதாள் எப்படிவிழுகிருர்களென்ருல், யானைக்குப் பாணம் (3) சவுடாலுக்குப்பாணம் (4) குதிரைக்குப் பாணம் (8) ராவுத்தனுக்குப் பாணம் (2) காலாள்களுக்குப் பாணம் (2) இந்தப்படியா யஸ்திரங்களைவிட்டு யானை தேர் பரி சேனைகள் தன்முன்னுக்கு நாடவொட்டாமல் ஜாடுகிறபோது, நெருங்கிவந்த இராட்சதாளெல்லாம் மாண்டுபோனுர்கள்.

அதனைக்கண்ட மகாமாயன், ஏதடா, சிறுபிள்ளையென்று பார்த்தால் நம்முடைய இராட்சத வமிசத்திற்கெல்லாம் எமனைப்போற்காண்கின்றது இவனுக்கு இரதமில்லை, சேனைகளுமில்லை, யானைகளுமில்லை, இவனுடைய வீரத்தை என்னசொல்வோம், இருபதுவெள்ளம் இராட்சதாளும் மாண்டுபோவதுபோற் காணுகிறது இனிநாம் சும்மாயிருக்கப் போகாதென்று மனதிலெண்ணி, இறந்தவர்போக மீதியிருந்த பதினைந்துவெள்ளம் இராட்சதாளைப்பார்த்து மகாமாயன் சொல்லுகிருன். அடா! இராட்சதர்களே? இனிச் சிறுபிள்ளையென்று பாராதீர்கள், உங்களுக்கு ரோஷமில்லையோ, மூகத்திலிருக்கிறது மீசையோ, நீங்கள் கையிற்பிடித்ததுவில்லோ, உங்கள் சவுரியசாமார்த்தியங்கள் எங்கேபோயிற்று உங்களைக்கொண்டுபோகிற இயமன்வந்தாலும் அவனையும் வெல்லத்தக்கினசாமார்த்தியங்களுமுண்டே அந்தச் சாமார்த்தியங்களை யெல்லாம் சிறுபிள்ளையாகிய லவனுக்குமுன் பாழாக்கி பெண்களாகிப்போனீர்களோ, உங்களுக்குச் சற்றுகிலும் ஈனமில்லையோ, உங்கள் சவுரியத்தைச் சிறுபிள்ளையான லவன் முன்னுக்குக் காண்பிக்கலாகாதோ, உங்களை சத்துருக்கர் கிடாவைப்போல் வளர்த்துப் பிடாரியான லவன்பாணத்திற்கு காவுகொடுக்க கொண்டுவந்தானே, அடா! இராட்சதர்களே? இந்த லவனுலே நீங்கள் இறந்தால் சத்துருக்கமகாராஜனெழுப்பிவிடுவார் நீங்கள் பின்னுக்கிடையவேண்டாம் மூனைந்து லவனைக் கைப்பிடியுங்கள் ஜாலஞ்செய்யாதீர்களென்ருன். அதுகேட்டு லவனனவன் கூறுகிருன். அடா! இராட்சதாளே? உங்களுக்கு சாமார்த்தியமுண்டானல் எதோ கிட்டவாருங்கள், பார்ப்போமென்ருன் அதுகேட்டு மகாமாயன் சொல்லுகிருன் அடா! இராட்சதாளே? லவனுக்கென்ன புத்தி சொன்னபோதிலும் லவன் கேட்கிறவனுக காணவில்லை அவன் பேசப்

பட்ட விசேஷங்களைப்பார்த்தால் நமக்கு அவமரியாதைவரு கிறதுபோற் காண்கின்றது. அப்படிவராதபடிக்கு நடந்து கொள்ளவேண்டும், இப்போதிந்த லவனைக் கைப்பிடியாகப் பிடியுங்க ளிவனைக்கொஞ்சத்தில் விடப்போகாது பிடியுங்கள் பிடியுங்களென்றான் மகாமாயனானவன். அதுகேட்டு லவன் சொல்லுகிறான். அடா! இராட்சதர்களே? சூரனென்று உங் கள்மனதிலெண்ணித் துள்ளாதீர்கள், என்கை பாணத்திற் கிரையாகவந்தீர்கள், சொன்னேன் சொன்னேன் கிட்டநெ ருங்கிவராதீர்கள். தூலவிற்றானே நின்று பேசுங்களடா, இராட்சதாளே யென்றான்.

அதுகேட்டு இராட்சதாள் நடுக்கங்கொண்டு வில்லிற் பாணங்களைப்பூட்டி, லவனை பொறுபொறென்று கிட்டேநெ ருங்கிவிட்டார்கள். அதனால் லவனானவன் கோபங்கொண்டு வில்லையெடுத்துநிறுத்தி அநேகபாணங்களை வில்லிற்சந்தித் துப் பிரயோகம்பண்ணிவிட்டான். அந்த அஸ்திரங்கள் நாக சற்பம்போற் சீறிக்கொண்டு இராட்சதாளுடைய சிரங்களையும் வில்லைப்பிடித்த கரங்களையும், கவசமணிந்த உரங்களையும், அறுத்துத்தள்ளவே, இராட்சதா ளெல்லோரும் பயந்து ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவென்று மனந்துணிந்து, அந்த ப்பதினைந்துவெள்ளம் இராட்சதர்களும் அஸ்திரங்களை லவ ன்பேரில்விட்டார்கள். அதற்கு லவனானவன், சற்றுமிடையா மல் விசைகொண்டு அநேகபாணங்களை வில்லிற் சந்தித்துப் பதினைந்துவெள்ளம் இராட்சதாள் விடப்பட்ட அஸ்திரங்க ளைக் கண்டித்தான். அதனால் ராட்சதாள் கோபங்கொண்டு யா னை தேர் பரி சேனைகளோடு முனைந்து, வில்லையெடுத்து நிறு த்தி, நல்ல கூர்மையோடுங் கூடியிராநின்ற அஸ்திரங்களை வில்லிற் சந்தித்துச் சொல்லுகிறார்கள். அடா! லவனே? உ ன்னைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போலிருக்கின்றதென்று உன் பேரிற் பாணங்களைவிடாமற் சும்மாயிருந்தோம், நீசெய்த பி ழையெல்லாம் மனம்பொறுத்தோம், எங்கள் முன்னுக்கு அரி அரப்பிரமாதிகளும் எதிர்நிற்கமாட்டார்கள் நீயும் உன்வில் லும் உன்னுடையபாணமும் எங்களுக்கொரு துரும்பாகும் உ ன்னைப்பாராவிட்டாலும் எங்களுக்கு இராசாவாகிய ஸ்ரீராம பிரமத்தைப்பார்க்கவேண்டாமோ ஆகையால் எங்கள் சொல் லைக்கடவாமல் எங்கள் இராஜாவாகிய சத்துருக்க மகாராஜரிட த்தில் வந்தாலுஞ்சரி அல்லது எங்கள் குதிரையை எங்கள்

பின்னனுப்பினுலுஞ்சரி அப்படிக்குவராமலும் குதிரையை விடாமலுமிருப்பையேயாகில் உன்னைக்கொல்லாமல் நாங்கள் போகிறதில்லையென்றூர்க ளதுகேட்டு லவனுனவன் கூறுகிறுன். அடா! இராட்சதர்களே நல்லவசனஞ் சொன்னீர்கள், நீங்கள்தானே எமனுக்கு நயனுக யிருக்கப்பட்டவர்கள், உங்கள் முன்னுக்கு அரி அரப்பிரமாதிகளும் நிற்கமாட்டார்களோ இராமன் சொத்தை நன்ருய்ச்சாப்பிட்டு நீங்கள் இராமனுக்குப் பகையாளிகள் வந்தால் அவர்களுக்குப் பிரியவசனஞ் சொல்லிப்பிழைப்பாருமுண்டோஉண்டவன்வீட்டுக்கு இரண்டகஞ் செய்யப்பட்டபேர்கள் நீங்கள்தானே அடா! இராட்சதர்களே? யுத்தம்வந்துநேர்ந்தபோது தகப்பனென்றும் ரணக்களத்தில் உறவுகொண்டாடுபவருமுண்டோ இராமன் உப்பைத்தின்று அவருக்கேரண்டகஞ்செய்யலாமோவென்று பிணமலைகள்போலிருபக்கத்திலுங்குவிக்கத்தலைப்பட்டான். அதுகண்டு ராட்சதாள் இனி லவனைவிடப்போகாதென்று கோபங்கொண்டு, யானைக்காரர் இரதக்காரரும் லவன்பேரிற் பாணப்பிரயோகம்பண்ணினுர்கள். அந்தப்பாணங்களும் நாகசற்பம்போற் சீறிக்கொண்டுவருகிறபோது லவனுனவன்கண்டு அனேக அஸ்திரங்களைவிடுத்து நடுவதுபாதியில் அறுத்துப்போட்டு சஸ்தியில் அஸ்திரங்களை அவர்கள்மீது விடுத்துக்கொல்லுகிறபோது இராட்சதாள் முன்னுக்கு வைத்தகாலைப் பின்னுக்குவாங்கியிடைந்து நான்குமூலையுஞ் சிதறியோடத் தலைப்பட்டார்கள்.

அதுகண்டு மகாமாயன் கோபமாகி, இராட்சதாளைப் பார்த்துக் கடுகடுத்துச் சொல்லுகிறுன். அடா! இராட்சதாளே? என்னமுழுகிப்போயிற்றென்று ஓடுகிறீர்கள், நீங்கள் சேவகரோ ஓடினுல் இராமத் துரோகமல்லவோ, ஓடாதீர்கள், உங்களாலே தேவர்கள் நகைக்க உடம்பெடுத்தேன், இந்தச் சிறுபிள்ளை லவனைப்பிடிக்க உங்களாலாகாதோவென்றுன். அதுகேட்டு இராட்சதா ளெல்லவரும் ஏகமாகக்கூடி வில்லுகளை வளைத்து அனேகபாணங்களை வில்லிற்சந்தித்து லவன்பேரிற் பிரயோகம்பண்ணினுர்கள் அதுகண்டு லவனுனவன், இராட்சதாளைப் பார்த்து நகைத்து அடா! ராட்சதர்களே? நீங்கள் தானே அரி அரப் பிரமாதிகளைச் செயித்தவர்கள், அந்தச் சாமர்த்தியமெல்லாம் என்முன் காட்டலாகாதோ, உங்களுடைய சாமார்த்தியங்களை நீங்கள் தானே மெச்சவேணு

மென்று சரங்களை அபரிமிதமாக வாரிவாரிச் சொரிந்துக்கொண்டு பின்னுஞ் சொல்லுகிருன். என்னைக் கைப்பிடியாகப் பிடிக்கத் திரிமூர்த்திகளுக்கும் வல்லமையில்லாதிருக்க உங்களாலாகாதென்று இராட்சதாள் ஓடியொளிக்கும்படியாய்ச் சாடிக்கொண்டிருந்தான்.

லவனுக்கும் மகாமாயனுக்கும் யுத்தம்.

கலி விருத்தம்.

நீலனங்கு நிலமிசைச்சாய்ந்தபின்
கோலமாமகா மாயன்குறுக்கிடச்
சீலமுள்ள லவன்மிகச்சீறிவெங்
காலரைப்போ லெதிர்த்தனர்காண்மினே.

அப்போது மகாமாயன் அதிக கோபமாகி, தன்னுடைய கோரைப்பற்கள் சொலிக்க, மீசை படபடவென்று துடிக்க பற்களை நெறநெறவென்று கடித்து, இரண்டு கண்களுஞ் செவ்வானம்போற் சிவக்க, வுருட்டி விழித்து இனியிவர்களாற் சாரமில்லை நாமேநேரிற்சென்று போர்செய்யவேண்டுமென்று சாரதியை யெச்சரித்து தேரை செலுத்தச்சொல்லி பாரெல்லாம் நடுங்கத்தக்கதாய் தன்வில்லை வளைத்து ஐம்பது நாராசங்களை யெடுத்து தனுசிற்றொடுத்து, பிரயோகம் பண்ணவே அதை லவனவன் கண்டு சினங்கொண்டு கொதித்து புலிபோற் குதித்து, 25-நாராசபாணங்களை யெடுத்து வில்லிற்றொடுத்து விடுத்து, மகாமாயன்விட்ட 50-நாராசபாணங்களையுமறுத்து அவனுடையமார்பிலும்பட்டு முதுகிலுருகிப்போகச்செய்தான். அதனல் மகாமாயன், யுகாந்தகாலத்திடிபோற் கனைத்து, அநேக அஸ்திரங்களைச்சந்தித்து, மாரிபொழிவதுபோற் சரமாரியாகப் பொழியும்போது, லவனு மிவனுக்குச் சளையாமற் சுருக்கில் நொறுக்கத்தக்க சுருக்கான வெகுபாணத்தைப்பொறுக்கி யெடுத்து விடுத்து மகாமாயன் பாணங்களையுமிராட்சதாள் விடப்பட்ட அஸ்திரங்களையு மறுத்துத்தள்ளி அதிகமாக சிலபாணங்களைவிட்டு அவர்கள் முடியுங் கொடிச் சீலையு மறுத்துத்தள்ளினன். அதைப் பார்த்து மகாமாயன் ஏதடா நாம்விட்ட அஸ்திரங்களையுமறுத்துஇராட்சதாளையும் நாடவொட்டாமற் கருவறுத்து வருகிருன். இவனுடைய

சாமர்த்தியந்தானென்ன! இவன் கரவேகந்தானென்ன இவனுக்கோரதமில்லை நமக்கோ இரதமிருக்கிறது மேலும்யானை சேனை குதிரைகளில்லாமல் யுத்தம்பண்ணுகிறான். இரணக்களத்தையெல்லாம் வெருங்களமாகத் துடைத்துவிடுகிறான், நாமெப்படி சத்துருக்கரிடஞ்சென்று அவர் முகத்தில் முழிக்கப்போகிறோம் நாம் வருகிறபோது யானை தேர் பரி சேனைகளென்ன, டமாரபேரிகை வாத்தியங்களென்ன சேனாதிபதிகளென்ன, யாவற்றையு மிந்த லவனுக்கு ஒப்புவித்து நாமிப்போது ஒண்டியானோம், சமுத்திரமெல்லாம்தாண்டி ஒருசிறிய கால்வாயில் வந்தகப்பட்டுக் கொண்டோம், இந்த லவனோ நமதுகையில் அகப்படுகிறவனாகக் காணப்படவில்லை இதற்கென்ன! செய்வோமென் றாலோசனை செய்துக்கொண்டிருக்கையில் லவனுனவன் சொல்லுகிறான். ஓ! இராட்சதனே? நீ என்வீணாலோசனைசெய்கிறாய் உன்னைப்போலொத்த ராட்சதாள் கோடிபேர் வந்தாலும் என்னை இந்த விடம் விட்டு வெளிப்படுத்த திராமுண்டோ வீணா யோசனைபண்ணாமல் உன்னிருப்பிடம் போய்ச்சேரும் இல்லையென்றால் என்னுடன் போர்புரிந்து செயித்து என்னை யுன்னிஷ்டமான விடத்திற் கொண்டுபோவெனகூற, மகாமாயன் சொல்லுகிறான். அடா லவனே? நீ கையிலாகாத சிலரைக் கொன்றோமென்று கெர்வித்திருக்கிறாய், விசேஷங்களை மிஞ்சிவரவொட்டாதே யானைவாயின் கரும்புபோல் எங்கள் சேனையின்வாய்க்கு நீயோசிறிய துரும்பு, ஆகிலும் ஸ்ரீராமரைப்போல வடிவுந் தேஜசும் அலங்காரமும் பொருந்தியிருக்கிறபடியால் உன்னுடன் யுத்தம்பண்ணுகிறதற்கு மனதுவரவில்லை உன் தாய்தந்தை பேரையும் உன் குலங்கோத்திரத்தையுஞ் சொன்னால் அப்பாலுன்னுடன் யுத்தம்பண்ணுகிறேன் சொல்லென்றான். அதுகேட்டு லவன்சொல்லுகிறான். என் தாய்தகப்பன்பேரைக் கூறினால் யுத்தம்புரிவேனென்று மெத்த தைரியமாய் சித்தங்களித்துரைத்ததினால் சொல்லுகிறேன்கேள். என்தாய்பேர் ஜானகியம்மாள், எங்களையர்பேர் வால்மீகர், என்பேர் லவன், என் தமயன்பேர் குசலன், எங்கள் குலமெனக்குத் தெரியவராது, நாங்கள் வால்மீகரது சிஷரென்றான்.

அதுகேட்டு மகாமாயன் யோசனைசெய்து கூறுகிறான். அடாதம்பி லவனே? கேளும், நீ ஜானகியம்மனுடைய பிள்

ளையென்றல்லவோ சொல்லுகிருய், ஆனபடியினல் வுனக்குச் சொல்லுகிறேன் என்னவென்ருல் பிடித்துக்கட்டின குதிரை யை என்கையிலொப்பித்து தாயுடன் பிள்ளையாகப்போய்ச்சேர் எங்களுடன் உனக்கென்ன போராட்டமிருக்கின்றது, எங்களை நீ யறியாயோ உன்னை நாங்களறிவோம், உனக்கு மெங்களுக் கும் த்வேஷமும், ஆயாசமும், ஏன்வரவேணும், அப்படிவரா தபடிக்கு நடந்துகொள்ளென்றுசெப்ப, அதை லவனனவன் கேட்டு, புன்னகைபுரிந்து புகலுகிருன். ஓ! இராட்சதனே? உங்கள் குதிரையை உங்களூரில் வந்து துராக்கிரமாய் பிடிக்க வில்லை. எங்கள் வனத்திற்கு உங்கள் குதிரைவந்தபடியினல் நான் பிடித்துக்கட்டினேன் என்கையி லகப்பட்ட குதிரையை விடுவிக்க அண்டரண்ட நவகண்ட சராசரங்களிலுள்ள அரசர் களாலும், உன்போலொத்த சவுரியபராக்கிரம மகா சாமர்த் தியரான இராட்சதர்களாலும், திரிமூர்த்திகளாலும், விடுவிக் கக்கூடாது இந்தக் குதிரையின் ரணரங்கசூரன் சத்துருக்கன் வருகிருன். அந்த சத்துருக்கனுடைய சாமார்த்தியமும், அரைக்ஷணநேரத்தி லறிகிறேன் நீ வேணுமென்ருல் உன் னுயிரைத் தப்பித்துக்கொண்டோடிப்பிழை, இனி யென்கையி லகப்பட்ட குதிரையை சொர்ப்பனத்திலும் விடுவேனென்றெ ண்ணுதே, உனக்கு சாமார்த்தியமுண்டானல் என்னைவென்று குதிரையை விடுவித்துக்கொண்டுபோ, இல்லையென்ருல் வந்த வழி பார்த்துக்கொண்டு போவென்ருன், அதுகேட்டு மகாமா யன், இதென்ன விபரீதகாலமாயிருக்கின்றது. ஒரு சிறுபிள் ளையானவன் இருபதுவெள்ளஞ் சேனைகளையுங்கொன்று, நம க்கும் அடங்கி உத்தரவுகொடாமல் சத்துருக்கருடைய சாமார் த்தியத்தையும், அவருக்குண்டாகிய படையினது சவுரியத்தை யும், அறிகிறேனென்ருன். இது மகாபெரிய சங்கடத்திற் கிடந்தருவதுபோல தோற்றுகின்றது. இதெப்படி முடியு மோ தெரியவராது. நாம் தப்பிப் பிழைப்போமென்ருலும் இராமத்துரோகம் வந்தணுகும், இதற்கு என்னசெய்வோ மென்று, மழையில்லாப் பயிர்போலும்வாடி, வழியைத்தேடி மயங்கி, மகாமாயன் மறுபடியும் மனதைத் திடப்படுத்தி லவ னைப் பார்த்துச் சொல்லுகிருன்.

அப்பா லவனே? நானுனக்கு எத்தனைவித புத்திசொன் னலும் ஆற்றிற்கரைத்த புளிபோல் அவலமாக்கி விடுகிருய், ஆகையால் உன்னைக்கொன்ருலும் தோஷமில்லை, இதோ

என்னுடைய அஸ்திரங்களினுல் உன்னைக் கண்டதுண்டம் பண்ணுகிறேன் பாரடாவென்று, வில்லையெடுத்து நிறுத்தி அதி தீட்சண்யமாக யிருக்கப்பட்ட பத்து திவ்வியாஸ்திரங்களை யெடுத்து, மந்திராபூதிகொடுத்து, லவனுடைய மார்புக்குந் தோளுக்கும் சிரசுக்கும் அவன் பிடித்த வில்லிற்கும் லக்கு பார்த்துவிட்டான். அப்பத்து திவ்வியாஸ்திரங்களும் ஒன்றோடு ஒன்றுராய்ந்து, அக்கினிப்பொறிகள் சிதறும்படியாய் வருங்காலத்தில் லவனுனவன் பார்த்து, தானும் பத்து திவ்வியாஸ்திரங்களெடுத்து, பூசைபுரிந்து, ஓசைபொருந்திய வில்லிற் சந்தித்துவிட்டான். அப்போதந்த பத்து திவ்வியாஸ்திரங்களையும் கஸ்திப்படுத்தி, அவன் மார்பிலணிந்த கவசங்களையும் பொடியாக்கி விட்டுப்போயிற்று. அதனுலந்த மகாமாயன் அதிககோபமாகி 50-அர்த்த சந்திராஸ்திரங்களை தனுசிற் றொடுத்துவிட்டான், அதைக்கண்ட லவனும் 50-அர்த்தசந்திர பாணங்களைத் தொடுத்து மகாமாயன் விட்ட அஸ்திரங்களை யறுத்துத்தள்ளி ரதம் சாரதி குதிரைகளை யதமாக்கிவிட்டது. அதுகண்டு மகாமாயன் சிந்தைதளர்ந்து மறுதேரின்மேலேறி வில்லையெடுத்து நிறுத்தி நாணிபிகிந்து ஓரக்கினியாஸ்திரத்தை எடுத்து பூசைநைவேத்தியம் புரிந்து இதனுல் வெற்றி யடையலாமென்ற ஆசையோடெய்தான். அதுவும் வடவா மூகாக்கினியை வாரி யிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடன் ஆலகாலவிஷம்போற் சீறிக்கொண்டு அதிகவேகத்துடன்வருவதைலவனுனவன் உற்றுநோக்கி, சற்றும் பயமில்லாமல் அதிசீக்கிரமாகத் தன்வில்லில் ஒருவருணுஸ்திரத்தை சந்தித்து பூசைகள் செய்துவிட்டான், அந்தவருணுஸ்திரம் வில்லில் விடுபட்டு சப்தமேகங்களும் ஒன்ருய்க்கூடி இடிமின்னல் குமுறலுடனே குடங்கொண்டு சொரிந்தாற்போல் ஓய்வில்லாமல் அக்கினியாத்திரத்தின்பேரில் மூச்சுவிடாமற் சொரிகிறபோது அக்கினியாஸ்திரமானது நீராயுருகிப்போயிற்று. அதுகண்டு மகாமாயன் கோபாவேசமாகி ஒருபர்வதாஸ்திரத்தையெடுத்து தனுசிற் றொடுத்து தூபங்கொடுத்து விடவே அப் பர்வதாஸ்திரமானது அநேகபர்வதங்களாக உருவுகொண்டு மகாதுரிதமாக வருகிறதை லவனுனவன்கண்டு கோபங்கொண்டு, இவனுடன் யிவ்வளவுநேரம் போராட்டமாவென்று சிந்தித்து, வர்சிராயுதமொ

ன்றெடுத்து, பூசைநைவேத்தியங்கொடுத்து தன்பேரில் வருகிற பர்வதாஸ்திரங்களின்பேரில் விடவே, அந்த வச்சிராயுதமானது அநேக வச்சிராயுதங்களாய் ரூபமுண்டாகி வருகிற பர்வதாஸ்திரங்களையெல்லா மறுத்துத்தள்ளி வச்சிராயுதமானது தடாலென்று மகாமாயன் மார்பை பத்தலாகக்கிழித்தெறிந்துவிட்டுப்போயிற்று அதனால் மகாமாயன் ஸ்ரீராமா ராமாவென்று வாய்விட்டலறி தேர்மேற்சாய்ந்து சீவனைவிட்டான்.

அதுகண்டு லவன் சந்தோஷமுற்று வில்நாணியைத் தளர்த்தி, கரத்திற் பிடித்துக்கொண்டு செடிமறைவில் சற்றுநேரமிளைப்பாறி தடாகத்தில் ஸ்நானஞ்செய்து பூசைகள் முடித்துக்கொண்டு கரையில்வந்து காமதேனுவை நினைக்க, காமதேனுவது லவனிருக்குமிடத்தில்வந்து லவனுடைய பசியையாற்றி தெய்வலோகம்போய்ச் சேர்ந்தது. பின்பு லவனானவன் தாம்பூலந்தரித்து, செடிமறைவில் வந்துட்கார்ந்து இன்னஞ் சேனைகளுண்டோ வில்லையோ எல்லாஞ் சற்றுநேர மிங்கிருந்து பார்ப்போமென்று மனதிற்கருதி மண்ணைக்குவித்து, தலையணையாகவைத்து ஸ்ரீமந் நாராயணரைப்போல் பள்ளிக்கொண்டிருந்தான். அப்படியிருக்க அந்த ரணக்களத்தில் உதிரவெள்ளமானது ஒருபனைமரமுயரம் ஓடத்தலைப்பட்டது. அதில் இரண்டு இராட்சதாளுயிரைத் தப்பித்துக்கொண்டு சிரமேற் கரங்குவித்து குய்யோமுறையோவென்று கூவியழுதுக்கொண்டு ஆகாசமார்க்கமாயெழும்பி, சத்துருக்க மகாராசனிடம் வந்து சாஷ்டாங்கமாக வணங்கிச் சொல்லுகிறார்கள்.

ஐயா! சத்துருக்கமகாராசனே? கேளும், சிறுபிள்ளை லவனென்றல்லவோ சொன்னீர்கள் அந்தச் சிறுபிள்ளைக்கு யார் தானிடென்று சொல்லுவோம், மகாமாயனையும், இருபது வெள்ளம் இராட்சதாளையும், எமலோகத்திற்கு வழிகாட்டிவிட்டு இன்னஞ் சேனைகளுண்டோவென்று, வழிபார்த்துக்கொண் டிருக்கிறான் இருக்கப்பட்ட சேனைகளெல்லாம் ஒருமிக்கசென்றாலும் ஒரேபாணத்திற் கொன்றுபோடுவான். தேவரீர்கூட நிகரல்லவென்று கூறினார்கள். அதனையுற்றுக்கேட்ட சத்துருக்க மகாராசன் மெத்தவுந் துக்கசாகரத்தி லாழ்ந்து சொல்லுகிறார். ஐயோ சிறுபிள்ளையாவதென்ன, இருபது வெள்ள மிராட்சதாளையும் இராட்சதசிரேஷ்டர்களையும் மகாமாயனையுங் கொன்றுவிடுவதென்ன, நீங்கள் நித்திரையிலிரு

ந்து சொற்பனங்கண்டு திடுக்கிட்டோடி வந்தவர்களாகவேண்டும், இராட்சதாளென்ன அற்பசொற்பர்களா, இராட்சத சிரேஷ்டர்கள்தானென்ன தீரமற்றவர்களோ அப்படிப்பட்ட சூரர்கள் மகாவரப்பிரசாதிகள் புஜபல பராக்கிரமமுள்ளவர்கள் இந்த சிறுவனல் இறந்தார்களென்றால், இனி என்னயிருக்கின்றது. நமது தண்டிற் சிறுபிள்ளை லவனைப் பிடிக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லையோவென்றார். அதற்கு இராஜாக்களும் இராட்சதர்களும் ஒன்றுஞ்சொல்லாமல் மௌனமாயிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் சுரதமகாராசன் சுருக்கிலெழுந்திருந்து சத்துருக்கமகாராசனைப்பார்த்துச் சொல்லுகிறான். ஐயா! சத்துருக்கமகாராசனே? கேளும், சிவனுக்கு மடங்காத லவனைக் கைப்பிடியாகப் பிடித்துவர இப்போது அடியேனுக்கு செலவு தருவீரேயானால் அவனுக்கு உதவியாய்வரப்பட்ட காலகண்ட திருநேத்திரானாலும் கண்டதுண்டஞ்செய்து லவன் எவ்விடம்போனாலும் விடாமல் அரைக்ஷணநேரத்தில் பிடித்து வருகிறேனென்றான். அதுகேட்டு சத்துருக்கமகாராசரும் சம்மதித்து சுரதராசனைப்பார்த்துச் சொல்லுகிறார். வாருஞ்சுரதராசனே? லவனுக்கு உயிர்ச்சேதம் வராமற் கைப்பிடியாகப்பிடித்தால் லவன் வாய்பிறப்பு விசேஷங்களையும் கேட்கலாமென்று தம்மோடொத்த ஐம்பத்தாறுதேசத் தரசர்களையும் ஐம்பதினாயிரம் அக்ரோணிசேனைகளையும் தயார்செய்து பேரிகை வாத்தியங்கள் முழங்க, பூமியானது நடுங்க, ஆர்ப்பரித்து லவன் எங்கே எங்கேயென்று ரணக்களம் வந்தார்கள். அப்போதந்த ரணக்களமெப்படியிருந்ததென்றால் செக்கச் செவேலென்று செம்மணற்கரைத்த ஆறுபோல் ஒருபனையுயரம் பிரவாகமோடுகிறது அந்தவுதிரவெள்ளத்தில் தலையில்லாதமுண்டங்களெழுந்து கூத்தாட, அந்தமுண்டங்கள்பேரிற் கழுக்கள்யேறி நடக்க பூதபிசாசுகளும் ஜாகினி டாகினி நாய் நரிகளும் பிணங்களைப் பிடிங்கித்தின்று உதிரங்களைக்குடித்து டமாரபேரிகைகழுத்தில் மாட்டியடித்துக்கொண்டு ஓடுகிறஉதிர வெள்ளத்தோடுகூட இவைகளையும் அடித்துக்கொண்டுபோகின்றது. அதுகண்டு சுரதராஜன் நல்லயுத்தங்கள் நடந்ததுபோற் காண்கிறதென்று மனதிலெண்ணி லவனைத்தேடிப்பார்க்கையில் லவனுனவன் டமாரபேரிகையினுடைய சத்தங்கேட்டு நிலத்தைவிட்டெழுந்திருந்து கையிற்றனுசைப்பிடித்து வெளிப்

புறப்பட்டான். புறப்படவே சேனைகளானதுகண்டு லவனை வளைத்து உள்ளே போட்டுக்கொண்டு ஐம்பத்தாறுதேசத்து ராசர்களும் நாலுபக்கமும் இரதங்களைவிட்டுக்கொண்டு லவன் பேரிற் சேனைகளை ஏவினார்கள். அதுகண்டு லவன் சொல்லுகிறான் அடா சேவகரே உங்களிலும் தாஷ்டீகம்படைத்த இராட்சதாள் என்கையம்பினால் இறந்தது கண்டிருந்தும் நீங்களேன் வீணிற்சாகிறீர்களப்படி மாளாமுன்னம் நான் நவிலும் விசேஷத்தைத்தள்ளாமல் உங்கள் பெண்டுபிள்ளைகளை வேண்டாதவர்கள் என்னுடன் சண்டைக்கு வாருங்களென்றான்.

அதுகேட்டு சேனைகள் சொல்லுகிறார்கள் அடா! லவனே? நாங்களிறந்தால் எங்களுயிரை மீட்டுத்தர சத்துருக்கமகாராஜனிருக்கின்றார். ஆனபடியா லுனக்கும் உன்னுடைய அஸ்திரத்திற்கும் நாங்கள் பயந்தோமென் றெண்ணாதே உன்னுலான சாமார்த்தியத்தை வஞ்சனை செய்யாமல் பாரென்றார்கள். அதுகேட்டு லவனானவன் கோபங்கொண்டு மண்டிப்போட்டு உட்கார்ந்து வில்லைப்பூமியிலூன்றி அநேக பாணங்களை யெடுத்து 1-10-100-1000-10000-கோடி-சங்கம்-மகாசங்கமென்று கணக்குமித மில்லாத பாணங்களை மழை பொழிவதுபோல் நாலுமூலையுங் கரகரவென்று சுழன்று விட்டுக்கொண்டிருந்தான். அப்படி லவனானவன் அஸ்திரங்களை மிதமில்லாமல் விடுகிறபோது சேனைகளானது திக்குமுக்காடிச் சின்னபின்னமாக சிரம்வேறு கால்வேறு இடைவேறு துடைவேறாக அறுந்துவிழுந்ததுகள். படைக்குட்சென்று ஐம்பதினாயிரம் அக்ரோணி சேனைகளுமாண்ட உதிரவெள்ளமானது உலகமுடிவிற் சத்தசாகரமும் பெருகிவந்ததுபோல் பனைமரமளவாக ரத்தாறு பெருகியோடத் தலைப்பட்டது அதுகண்டு ஐம்பத்தாறு தேசத்து ராஜர்களும் அதிககோபமூண்டு இரதத்தை முன்னுக்கு நடத்திச் சொல்லுகிறார்கள்.

அடாதம்பி! லவனே? கேள் துள்ளியமாடு பொதிசுமக்குமா, "மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்" யென்பதை கைக்கொண்டு எங்களோடுனக்கு போராட்டமென்ன, நாங்கள் சொன்னபடியேகேள். அதென்னவென்றால் குதிரையை எங்கள் வசமொப்பிவித்து எங்களுடன்கூட சத்துருக்கமகாராஜனிடத்திற்குவந்து கண்டுபேசி உன்னிருப்பிடத்திற்கு வந்துவிடு

வாய், வாராய் தம்பி என்றார்கள். அதுகேட்டு லவன் புன்னகைபுரிந்து நமது கைவில்லுக்கு நல்ல விருந்துவந் தகப்பட்டதென்று நினைத்து ஐம்பத்தாறுதேசத்தரசர்களையும் பார்த்துச்சொல்லுகிறான் ஓ! இராஜாக்களே? நல்ல விசேஷஞ்சொன்னீர்கள் என்கையிற்பிடிபட்டகுதிரையை விடுவித்துக்கொள்ளசத்துருக்கனைப்போலும், அவன் தமயன் ஸ்ரீராமரைப்போலும், 100-பேர் வந்தாலும் குதிரையை விடுவேனென் றெண்ணுதீர்கள் நான் உங்களோடுகூட வருகிறவனல்ல, உங்களுக்கு சாமர்த்தியமுண்டானால் என்னைச்செயித்து குதிரையை விடுவித்துக்கொண்டு போங்கள் இல்லையென்றால் என்னுடன் சொல்லாமல் ஓடிப்பிழையுங்கள் வீணிலேன் மடிகிறீர்கள் உங்களாலென்னை என்ன செய்யக்கூடும், உங்களை உற்பத்தி செய்த பிர்மதேவன் வந்தாலும் சளையேன், உங்கள்பின் வாறேன், சறேலென்றோடி பிழையுங்களென்றான். அதுகேட்டு ஐம்பத்தாறுதேசத்து ராசர்களுங் கோபமாக அநேகபாணங்களைத் தனுசிற் சந்தித்து யுகாந்தகாலத்து சப்தமேகங்களும் ஒன்றாய்க்கூடி இடி மின்னல் குமுறலுடனேமழைபொழிந்தாலெத்தன்மையாய்ப் பொழியுமோ அத்தன்மையாய் சரமாரியாக லவன்பேரிற் பொழிந்தார்கள்.

அதற்கு லவனானவன் கடிந்து வில்லிலநேக பாணங்களைச் சந்தித்து சோனைமாரிபோற் சேனைகளின்பேரிற் சரமாரியாய்ப்பொழிந்து இராஜாக்கள் விடுத்த அஸ்திரங்களனைத்தையுமறுத்துத்தள்ளி அவர்களேறிவந்த இரதம் சாரதி குதிரைகளையும் தும்சப்பண்ணிவிட்டான். அதுகண்டு இராஜாக்களெல்லோரும் கத்தி கேடய மெடுத்துக்கொண்டுவர, லவனனவன் பார்த்து பெருக்கிரண்டு பாணம் விட்டு கத்தி கேடயங்களை பொடியாக்கி ஐம்பத்தாறுதேசத்தரசர்களையும் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓகோ இராஜர்களே? நீங்கள் வரும்போது யானைசேனை பரிவாரத்துடன் ஏகசமூகத்தோடும் வந்தீர்களே, அதுகளெல்லா மெங்கேபோய்விட்டது. ஆனபடியினால் நீங்களும் அவ்வாறாய் விடுவீர்கள். ஆறியாயோடிப் பிழையுங்கள் அத்துமீறினவர் சித்திரவதை படுவாரென்ப தறியீர்களே, சண்டைக்கும் உங்களுக்கும் வெகுதூரம் ஜலுதியிலகன்றுபோங்களென்று கூறிய லவனைப்பார்த்து இராஜாக்களெல்லோரும்

மனது பொங்கி ஈட்டி, எறியீட்டி, சுரிகை, வாங்கு, வளைதடி, எல்லயம், சக்கரம், குந்தம், வேல் இப்படி சொல்லப்பட்ட முப்பத்திரண் டாயுதங்களையும் லவன்பேரில் றிவ்றிவ்வென் றெடுத்தெறிந்துக் கொண்டிருக்கையில் லவனுனவன், ஏதடா, நாம் தர்மமாய் பார்த்தபோது, நம்மைவிட்டுப் போகாமல் நமதுபேரிற்றானே ஆயுத அஸ்திரங்களை எடுத்து விடுகிறார் கள். இனி நாம் சும்மாயிருந்தால் காரியமல்லவென்று வில் லில் நூறு நாராசபாணங்களைச் சந்தித்துப் பிரயோகம்பண்ணி னான். அந்த நூறு நாராசபாணங்களும் வில்லில் விடுபட்டு அவயங் கார்த்துக்கொண்டிருந்த சர்ப்பம் சீறிப் புறப்பட்டா லெவ்வண்ணமோ, அவ்வண்ணமாய்ப் புறப்பட்டு, இராசாக்க ளுடைய ஆயுதங்களையு மறுத்து ஐம்பத்தாறு தேசத்துரா ஜாக்களின் மார்பிற்றைத்து முதுகிலுருகிப்போக அதனாலவர் கள் மெத்தவுங் கஸ்தியடைந்து ஸ்ரீராமாவென்ற சத்தத்து டன் அடியற்றமரம்போற் சாய்ந்து பூமியில் வீழ்ந்தார்கள்.

லவனுக்கும் சுரதராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

பாலன்கைக்கணை யாலவன்பட்டபின்
தாலமேல்வருஞ் சண்டனேவென்றயர்ந்
தோலமிட்டுழலும் படைத்துணை
வேலெடுத்துச் சுரதனுமேவினான்.

இவைகளனைத்தையுங் கண்ணினாற்கண்ட சுரதமகாராஜ னனவன் ஆக்கிர நிக்குரோதனாக பல்லைநெறநெறவென்றுகடி த்து, மீசை படபடவென்றுதுடிக்க, அக்கினிப்பொறிகளான து முகத்திற்சொலிக்க, இவனைகெலிக்க நமக்கு சாமார்த்தியமி ல்லையோவென்று கெக்கலிகொட்டி புயத்தைதட்டி சாரதியை யதட்டி இரதத்தை நடத்தச்சொல்லி லவனைப்பார்த்துச் சொ ல்லுகிறான். அடாதம்பி லவனே? நாங்கள்விட்ட குதிரையை யும்பிடித்துக்கட்டி எங்களுடையசேனைகளையுஞ் சின்னபின்ன மாய்க் கால்மாடுதலைமாடாக கொல்லலாமோ சொல்லென்றான். அதுகேட்டு லவனனவன் கூறுகிறான்.

கேளுமையா அரசனே நீங்கள்விட்ட குதிரையானது எங்கள்வனத்திற்குவந்தமையால் நான்பிடித்துக்கட்டி யுத்தத்

திற்குவந்தேன் உன்னால் சாமார்த்திய முண்டானால் என்னை செயித்து குதிரையை விடுவித்துக்கொண்டுபோம் இல்லாவிட்டாற் கூப்பிடாமற் செடிமறைவிற் படுத்துக்கொள்ளென்றான் அம்மொழியைக்கேட்ட சுரதாராஜன் புன்னகைகொண்டு லவனைநோக்கிச் சொல்லுகின்றான் அடா! லவனே? நீகையிலாகாத சிலரைக் கொன்றோமென்ற கெர்வத்தை மனதிலெண்ணியல்லவோ என்னை செடிமறைவிற் படுத்துக்கொள்ளச்சொன்னாய், உன்னை சிறுபிள்ளையென்று சும்மாவிட்டுவிட்டேனில்லாவிட்டால் இந்நேரம் பதறிச்சொன்ன நாவையறுத்துவைப்பேனடா நீதான் சூரனென்றெண்ணாதே, வீண்சவுரியம் பண்ணாதே, தானென்ற கெர்வம் யார்க்குந்தகாதென்பதையறியாயோ ஆகையால் சிறியோர் கட்டிய சிற்றுடைபோற் புரியாதே வில்லாண்மைக்கு வீரனென்று செருக்குற்று திரியாதேயென்று முன்னிலும் எண்மடங்கதிகமாக தனுசையெடுத்து நிறுத்தி நாணிபிகிந்து நாணோசைகொண்டு எட்டுதிசையுமதிர அட்டகாசஞ்செய்து, பதினைந்து திவ்வியாஸ்திரங்களையெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதி கொடுத்துவிட்டான். அதுகண்டு லவனும் பதினைந்து திவ்வியாஸ்திரங்களொடுத்து வில்லிற் சந்தித்துவிட்டு சுரதன்விட்ட திவ்வியாஸ்திரங்களையறுத்துத்தள்ளி சுரதனுடைய கவசங்களையும் பொடியாகச் செய்தான்.

அதனால் சுரதன் மிகவுங்கோபமாகி, ஐம்பது நாராசபாணங்களொடுத்து பிரயோகஞ்செய்தா னதுவும் காலகோடி விஷம்போற் சீறிக்கொண்டுவருவதை லவன்பார்த்து தானும் ஐம்பது நாராசபாணங்களையெடுத்து விட்டான். அதுகள் சுரதனுடைய பாணங்களையறுத்துத்தள்ளி வில்நாணியையுமறுத்துவிட்டது. அப்போது சுரதன் ஏதடா, சிறுபிள்ளையென்றுபார்த்தால் இவன் நாம்விட்ட பாணங்களனைத்தையும் அறுத்துத்தள்ளினான் இவனாலநேக அரசர்களுமாண்டுவிட்டார்கள். இவனோ மகாசாமார்த்தியவானாயிருக்கிறான், இவனால் நமக்கபஜெயம் வரும்போலக் காண்கிறது. இவனைக் கைப்பிடியாகப் பிடித்துவரச் சொன்னார்களே, இதற்கெப்படி யோசனையென்று சற்றுநேரஞ் சும்மாயிருந்தான். அதுகண்டு லவன் புன்னகைபுரிந்து சுரதனைப் பார்த்துச் சொல்லுகிறான் ஓ! இராசனே? உங்கள் சூரத்துவத்தை நீங்கள் மெச்சி நீங்கள் சூரனென்று குதிரையை விட்டீர்களே, அந்த வீரத்

துவத்தை சற்றென்முன் காட்டலாகாதோ, சிறுபிள்ளையென்றுசும்மாயிருக்கிறீர்களே, அப்படி நீங்களிருந்தாலும் நானிருக்கமாட்டேன். இதோ பாணந்தொடுக்கிறேன், இந்த பாணத்தை விலக்கிக் கொள்ளும் பார்ப்போமென்று வில்லில் ஏழு சுழற்பாணங்களைச் சந்தித்து சுரதனேறி வந்த இரதத்தைப் பார்த்துவிட்டான். அச்சுழல்பாணங்களேழும் இரதத்தில் வந்து புகுந்து ஆகாயமார்க்கமாய் இரதத்தைக் கிளப்பிக்குலாலன் சக்கரம்போலச் சுழன்றுக்கொண்டு மேகமண்டலம் வருணமண்டலம் வாயுமண்டலம்வரையிற்போகிறபோது சுரதன் மிகவும்பயந்து வில்லை யொருகையிலும் இரதத்தின் குத்துக்காலை யொருகையிலும் பிடித்துக்கொண்டு பாணவேக மடங்கியமாத்திரத்தில் சுரதன் பூமியிற் குதித்துவிட்டான் அவன் குதித்தவுடனே ரதமானது பூமியில்விழுந்து சாரதி குதிரைகளுடன் அப்பளம்போலானார்கள் அதுகண்டு சுரதன் வேறொரு இரதத்திலேறினு னந்த இரதத்தையு மிரண்டு யிடிபாணம்விட்டு உடைத்தெறிந்துவிட்டா னிந்தப்படி 10-இரதம் வரையில் கொடி பொடியாய்ப் போயிற்று. அதுகண்டு சுரதன் கடுங்கோபங்கொண்டு அதிசீக்கிரத்தில் வேறொருதேரிலேறி வில்லையெடுத்து வளைத்து, நாணிபிகிந்து, ஒரு நாகாஸ்திரத்தையெடுத்து வில்லிற் றொடுத்து விட்டுவிட்டான் அதுவும் வில்லிலிருந்து விடுபட்டு மகாவேகத்துடன் வருவதை ல்வனுனவன்கண்டு தன்னுடையவில்லில் ஒருகருடாஸ்திரத்தை தொடுத்துவிட்டுவிட்டான். அவ்வஸ்திரமான்து வந்து சுரதன்விட்ட நாகாஸ்திரத்தை கபளீகரம் பண்ணிவிட்டு லவனுடைய அம்புறுத்தூணியில் வந்தடைந்து. அதுகண்டு சுரதன் கண்களில் நெருப்புப் பொறிபறக்க, புருவம்நெளிக்க, மீசைகள் படபடவென்று துடிக்க, காதுகளில் புகையெழும்ப, பற்களை நெறநெறவென்று கடித்து லவனைப்பார்த்துச் சொல்லுகிறான். அடா தம்பி! லவனே? நீ சிறுபிள்ளையென்று நானசாரிசமாயிருந்து உனக்கு புத்தி மதிகளை வெகுவாகச் சொல்லியும் கேளாமல் சண்டை செய்கிறாயல்லவா, நல்லதாகட்டும் இதோ அஸ்திரம் விடுகிறேன் அதை நீ தப்புவித்துக்கொள்ளடா பார்ப்போமென்று தனது அம்புறுப்பொதியில் கையைவைத்து ஒரு அர்த்தசந்திரத்தை எடுத்து, தூபதீப நைவேத்தியத்துடன் மந்திர வுச்சாடனஞ்செய்து வில்லிற்சந்தித்து லவனுடைய கைவில்லுக்குச் சரியாய் லக்குவைத்துப் பிரயோகஞ்செய்தான் அந்த அஸ்திர

மானதுவில்லினின்றும்விடுபட்டு ஆலகாலவிஷத்தைப்போல அதிக குரூரமாகிய அக்கினிகளை வாரியிறைத்துக்கொண்டு வருகிறபோது லவனனவன்கண்டு, இந்த அஸ்திரம் மகாமகிமையுடன் வருகிறதென்று தனது வில்லில் ஒரு ருத்திராஸ்திரத்தையெடுத்துத தொடுத்துவிட்டான. அதுவும் விரைவாக வந்து சுரதன்விட்ட அஸ்திரத்தை தும்சப்படுத்திவிட்டு அவன் இரதத்தையும் சக்கை சக்கையாய் உடைத்து விட்டது. அப்படி அந்த ரதமும் போகவே சுரதன் மறுபடியும் ரதமில்லாமற் பூமியில் நின்றுவில்லெடுத்துநிறுத்தி நாணேறிட்டுப் புங்கானுபுங்கமாக அஸ்திரங்களை மழைமாரிபோல் சரமாரியாக லவன்பேரில் விடுகிறபோது லவனும் அநேக பாணங்களைவிட்டறுத்துப்போட்டு பின்னும் அதிவேகமாய்ச் சில பாணங்களை விட்டு சுரதனுடைய சரீரங்களை சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டானதனால் சுரதன் மனம் நொந்து ஒரு வேலாயுதத்தைபெடுத்து கையிற்பிடித்துக்கொண்டு லவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அடா தம்பி லவனே? நீ பிடித்த குதிரையைவிட்டுச் சத்துருக்க மகாராசனிடம் வந்தாலாயிற்று. வராவிட்டா லிந்த வேலாயுதத்தினால் உன்னை எமலோகமனுப்பிவிடுகிறேன் பாரடாவென்று சொல்லி சுரதன் மகாகோபமாகி வேலாயுதத்தையெடுத்து பூசைசெய்து விட்டுவிட்டான். அந்த வேலானது சுரதனைவிட்டு விடுபட்டு அண்டபகிரண்டங் குலுங்க, அண்டத்திலுள்ள தேவர்களுநங் கலங்க, அதிக வுக்கிரத்துடன் வருகிறபோது லவன்பார்த்து ஒருசத்தியை யெடுத்து பூசைசெய்துவிட்டான். அந்த சத்தியும் வெளிப்பட்டு அண்டசராசரமுதல் யாவும்நடுங்க, அதில்வாழும் சீவராசிகளெல்லாமொடுங்க, ஆவென்று வாயைத்திறந்து சுரதனுடைய வேலாயுதத்தை கபளீகரஞ் செய்துவிட்டுப் போயிற்று. அதனால் சுரதன் கோபமாகி, நாராயணாஸ்திரத்தை யெடுத்து கையிற் பிடித்து லவனைப்பார்த்துச் சொல்லுகிறான், அடா! லவனே? யிதுவரையி லுன்னை சிறுபிள்ளை யென்றுவிட்டு விட்டே னிதோ பார்த்தையா நாராயணாஸ்திரம், நீ எவ்விடம்போனாலும் உன் சிரசை விடாது கண்டிக்கு மாகையாலினி என்சொல்லைக் கடவாமற் சத்துருக்கமகாராசனைச் சரணமடைந்தாயானால் பிழைப்பாய், இல்லாவிடி லிக்கணமே யமலோகத்திற்குப் புகுவாய் பாரென்றான். அதுகேட்டு லவன்

புன்னகைபுரிந்து சுரதனைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ! இராஜனே? உன்னால் சாமார்த்திய முண்டானால் என்னைச்செயித்து குதிரையைக் கொண்டுபோவென்று முன்னமே நான் சொல்லியிருக்கிறே னதையே மீண்டுகூறுகிறாய், இனியெனக்குப் பிரியவசனஞ் சொல்லவேண்டாம். உன் கையிலிருக்கிற நாராயணாஸ்திரத்தை எதோ விடு பார்ப்போமென்றான்.

அதுகேட்டு சுரதன் எவ்விதத்திலுமிவன் ஒவ்வுகிறதாகக் காணவில்லையேயென்று மகாகோபமாகி நாராயணாஸ்திரத்தை பூசைசெய்து வில்லிற்சந்தித்துவிட்டான் அந்த நாராயணாஸ்திரமானது அக்கினிப்பொறிகள் சிதற, ஆவென்று வாயைத் திறந்துக்கொண்டு வெகுமகிமையுடன் வருகிறபோது லவனானவன் தன்னுடைய நாராயணாஸ்திரத்தையெடுத் தபிமந்திரித்துவிட, அதுவு மதிவேகமாய்ச் சுரதன்விட்ட நாராயணாஸ்திரத்தின்பேரில் விழுந்து ஒன்றோடொன்றுடுதாக்கி ஆகாய மார்க்கத்திலெழும்பி மற்கட்டி யுத்தம் புரிந்து சுரதனுடைய நாராயணாஸ்திரத்தைக் கபளீகரம் பண்ணிவிட்டுப் போயிற்று அதனால் சுரதராஜன் மிகவும் விசனப்பட்டு மறுபடியுந் தைரியம் விடாமல் வில்லிலநேக பாணங்களைப் பிரயோகம்பண்ணினனதற்கு லவனானவன் மிகவும் கவனமாக பாணங்களைவிட்டு அப்பாணங்களைக் கொய்து அதனமாகப் பத்து நாராசபாணமெடுத்துச் சுரதன் புஜத்திற்கும், மார்பிற்கும், லக்குபார்த்து விடவே அதனால் சுரதன் நிர்வாகம்பண்ண வொட்டாமல் ரணக்களத்திலே பின்முதுகிட்டோடத் தலைப்பட்டான், அது கண்டு லவன் கைகொட்டி நகைத்து அடா! இராஜனே? ஓடாதே, சற்று நில்லு நில்லென்று, துரத்திக்கொண்டோடினான் லவனானவன், அக்காலையில் தேவர்கள் லவனுடைய சாமார்த்தியத்தை மெச்சிக்கொண்டாடினார்கள். சுரதன் சின்னப்பட்டு மறுபடியும் லவன்முன்வந்து யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தான். லவனானவன் கண்டு ஓ இராஜனே? நீ யொரு சேவகனா முகத்திலிருப்பது மீசையா இராசாக்களாய்ப்பிறந்தவர்கள் ரணக்களத்திற் புறமுதுகுகாட்டி யோடலாமா, அரச நீதியா, தருமமா, உனக்கு புஜபலபராக்கிரமந்தானில்லையோ உன்கையிலிருக்கிற வில்லானது புல்லோ, நீ ஒரு இராசனென்றுபோர்புரிய நேர்வந்து நின்றாயே உன்னாலென்னை என்ன செய்யக்கூடும். உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிகருடனாகுமோ, எடு பாணத்தை யென்றான். அதைக்கேட்ட சுரதன், மனது

குண்ணி, லவனைப் பார்த்து, அடா! லவனே? உனக்கிந்த வீண் பெருமையே தவிர, மற்றப் பெருமை யொன்றையுங் காணேன்.

அதேதென்றால் இராசாக்களாய் சன்மித்தவர்கள் வில்லெடுத்து யுத்தம்பண்ணுவார்கள், வில் வேல் கத்தி கேடயம் கெதாயுத முதலாகியதைக்கொண்டு யுத்தஞ்செய்வார்கள் அதுகள் இராசநீதிமுறைமை நீ ரிஷிப்பிள்ளையானபடியினால் உனக்கு வில்வித்தைதவிர மற்றவித்தை தெரியாதுபோற் காண்கிறதென்றான் அதற்கு லவன் மிகவும் விசனத்துடன் சொல்லுகிறான் ஓ! இராசனே? கேளும், இரண்டு வீரர்கள் கையிலும் வில்லிருக்கிறபடியினால் வில்வளைத்துவிட்டு மற்றோராயுதங்களை யெடுத்து யுத்தஞ்செய்ய ஞாயமுண்டோ உன்னால் சாமார்த்தியமுண்டானா லிதோ நான் பிடித்திருக்கிறவில்லை கண்டித்தாயேயானால் அதன்பின் ஆயுதமெடுத்து யுத்தம்பண்ணலா மென்னக்கேட்டு, சுரதராசன் இவனை நம்மால் வெல்லமாட்டோமென்று மனதிலெண்ணி சற்றுநேரம் வாதாடிக்கொண்டிருந்தான். அப்போது லவனனவன், சுரதராசனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓய்! இராசனே? உன் சாமார்த்தியமெல்லா மிவ்வளவி லடங்கி நின்றாயோ, குதிரையை விடுவிக்க வல்லமையில்லாமல் வீணுக வில்லைக் கையிற் பிடித்துக்கொண்டு என்முன் னிற்கலாமோ வில்பிடித்து யுத்தஞ்செய்ய சாமார்த்திய மில்லாவிட்டால் வில்லைச்சுழற்றி யெறிந்துவிட்டு செடிமறைவில்படுத்துக்கொள்ளென்று முன்னமே நான் சொல்லியிருந்தே னப்படி செய்யாமல் என்னையுஞ் செயித்து குதிரையையும் விடுவிக்காம லிப்படி சும்மாயிருந்தால் உன்னை இராஜனென்றும்வில்லாளி யென்றும் எப்படி சொல்லுகிறது நீ சூரியவம்சத்து இராஜனுனல் ரோஷமில்லாமல் யானை தேர் பரி சேனைகளையும் பறிகொடுத்து இப்படி தனிமையாய் என்முன் னிற்கலாமோ, அடா? உனக்கு வீரதீரமில்லையோ வென்றான்.

அதுகேட்டு சுரதராசன் மனது நொந்து வில்லை யெடுத்து நிறுத்தி மெத்தக் கூர்மையோடுங் கூடியிருக்கப்பட்ட நூறு நாராசபாணங்களை எடுத்து வில்லிற் பிரயோகஞ்செய்து லவன் மார்புக்கும், புஜத்திற்கும், கைவில்லுக்கும், லக்கு பார்த்து விட்டான். அந்த நூறு நாராசபாணங்களும் லவன் வில்லிற் பாணஞ் சந்திக்கு முன்னமே, நாக சர்ப்பங்களைப்

போற் சீறிக்கொண்டுவந்து லவனுடையவில்லைபத்து பிளவாக்கிழித்து லவனுடைய மார்பிலும் புஜத்திலும்பட்டு நோகச்செய்ய அதற்கு லவன் சற்றுமிளையாமல் வில்லை யெறிந்துவிட்டு சிவ்வென்று வாளையுருவிக் கையில்பிடித்து சுரதராஜன் பாணந் தொடுக்குமுன்னமே, அம்பிலு மதிகவேகமாகப் பாய்ந்து வில்லையுங்கண்டித்து சுரதராசனையும் இரண்டு துண்டாக வெட்டிக் கீழே தள்ளிவிட்டு லவனனவன் தன்பேரிற்பட்ட பாணத்தைப் பிடுங்கி அப்புறம்போட்டு உரையிலிருந்த அமிர்தசஞ்சீவியை யெடுத்து பாணம்பட்ட காயத்தின்மேற்றடவி, லவனனவன் சந்தோஷமாகி, ஒரு தர்ப்பையைப் பிடுங்கி, வால்மீகர் தனக்குபதேசித்த மந்திரத்தை யுச்சரித்து ஒரு வில்லை சிருஷ்டித்து கையிற்பிடித்து இன்னம் வருவாருண்டோ, யுத்தம் புரிவாருண்டோ, அதனை சற்றுநேரம் பார்த்து அப்பாற் போவோமென்று செடிகளின் நிழலிற்போய் சயனித்துக் கொண்டிருந்தான்.

அப்போது தூதுவர்கள் ரணக்களம்விட்டு வெளிப்பட்டு அப்பா கூவினுல் மோசம் லவனருகில் மேவினுல் நாசம், கேவலம், லவன் சண்டை தேங்காய்ப்போ லுருளுது, தலைமண்டை அண்டை நெருங்கினுல் இன்னம் யாது மோசம் செய்யுமோவென்று ஒதுங்கிக்கொண்டு லவன் செய்யும் வேதையாகிய வாதைக்குக் குய்யோ முறையோவென்று கூவிக்கொண்டு சேனைகளிருக்குமிடந் தாவிக்கொண்டு, ஓட்டமாயோடி சத்துருக்க மகாராசனைச் சேவித்து ஐயா! சத்துருக்க மகாராசரே? இனி சத்துருவில்லையென்று சித்தத்திலெண்ணி யிருந்தோம் சத்துருவாகியும், பார்ப்பவருக்குச் சிறுவனுகியும் விளங்கும் லவனனவன், சுரதமகாராசனையும் ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும் ஐம்பதினுயிரம் அக்ரோணி சேனைகளையும் அண்டவொட்டாமற் கண்டதுண்டம் பண்ணி எமனூருக்குப்போமென்றனுப்பிவிட் டின்னமும் வருவார்களோவென்று வழிபார்த்துக்கொண் டிருக்கிருனென்றுகூற, சத்துருக்கராசன் இராசாக்களையும் இராட்சத சிரேஷ்டர்களையும் பார்த்துச் சொல்லுகிருர்.

ஆஹா! பார்த்தீர்களோ? ஒரு சிறுவனுன லவன், சுத்தவீரனுன நம்முடைய சுரதராசனையும் ஐம்பத்தாறு தேசத்துராசாக்களையும், ஐம்பதினுயிரம் அக்ரோணி சேனைகளையுங் கொன்றுனல்லவா இதுமெத்த ஆச்சரியமாயிருக்கின்றது ஒரு

சுண்டுவிரலத்தனையிலாத சிறுவனைக் கைப்பிடியாகப் பிடித்து வரமாட்டாமல் தோற்று ஓட்டம் பிடித்தார்களென்று சமாச்சாரமே யல்லாமல் வென்ற சமாச்சாரம் ஒன்று மின்றுகாணேன், இன்னம் நம்முடைய தண்டில் அப்படிப்பட்ட சூத்தவீரர்கள் யாரிருக்கிருர்கள். ஒருவரையுங் காணுமென்றுகூறிய சத்துருக்கர் வார்த்தையைக்கேட்டு சகலரும் ஆலோசனை செய்துக்கொண்டிருக்கையில் சுரதமகாராசன் தமயனுன அரண்ணிய மகாராசனும் சேனுதிபதியான காலசித்தனுங்கேட் டெழுந்து ஐயா! சத்துருக்க மகாராசனே? எங்களுக்கு செலவு தந்தால் லவனுனவன் எமலோகம்போயொளித்தாலும் கைப்பிடியாகப் பிடித்துக்கொண் டிப்போதே வருகிறேமென்றுர்கள். அது கேட்டு சத்துருக்க மகாராசன் சொல்லுகிருன். வாரும், அரண்ணிய மகாராசனே? காலசித்தனே? மெத்த சந்தோஷம் நீங்கள் பத்துவெள்ளம் இராட்சதர்களைக் கூட்டிக்கொண்டு போய் சிறுபிள்ளையாகிய லவனை கைப்பிடியாகப்பிடித்து அவனுக்கு உயிர்சேதம் வராமல் கொண்டுவரவேணுமென்று செலவு கொடுத்தனுப்ப அரண்ணிய மகாராசனும் விடைபெற்று பத்துவெள்ளம் யானை தேர் பரி சேனைகளைக் கூட்டிக்கொண்டு மேளவாத்தியங்களுடன் ரணக்களம் வந்து சேர்ந்தான்.

அதுகண்டு லவனுனவனெழுந்து தன்னுடைய வில்லை யெடுத்து தோளில் மாட்டிக்கொண்டு தண்டு பாளையத்தைவேடிக்கை பார்க்க வந்தவன்போல் வருகிறபோது இராட்சதாள் கண்டு யானைகள் கிழக்கும், இரதங்கள் தெற்கும், குதிரைகள் மேற்கும் சேனைகள் வடக்குமுகமாக நான்கு மூலைகளிலும் நிறுத்தி லவனை வளைத்து உட்போட்டுக்கொண்டு சொல்லுகிருர், அடா தம்பி? சிறுபிள்ளாய் குதிரையைப் பிடித்துக்கட்டினதுமன்றி சேனைகளையுங்கொன்றவன் நீதானே சொல்லடாவென்று கேட்டார்கள். அதற்கு லவன் சொல்லுகிருன். அடா! இராட்சதர்களே? அவர்கள்தான் புத்தியில்லாமல் மாண்டார்கள். உங்களுக்கென்ன விவேகமில்லையா உங்கள் குதிரை எங்கள் வனத்தில் வந்தபடியினுல் நான் பிடித்துக்கட்டினேன். வராவிட்டால் பிடித்துக்கட்டுவேனே இதுதெரியாமல் ஏன் மாண்டுபோகிறீர்கள் குதிரையையும் விடப்போகிறதில்லை இரதகஜ துரகபதாதிகள் உங்களுக்கு மிச்சமாயிருக்குதென்று அச்சமில்லாமல் வந்து மடியவேண்டாம். இந்திராதி தேவர்கள் வந்தாலும் இருதுண்டமாகச் செய்வேன் மலைக்காதிர்கள்

நீங்கள் என் கைவில்லால் மாய்ந்து பூமியில் விழுந்து ஆயுள் முடிந்துபோவீர்கள் அதனாலுங்களிராசனாகிய சத்துருக்கருங் கடிந்துகொள்ளுவார் தெரியாமற் சிறியேனென்று பரியாசமாகச் சரியாக வார்த்தையாடி வருகிறீர்க ளதுவேண்டாம், உற்றதுசொன்னா லற்றதுபகை என்பார். அதுபோல என்னை விட்டு அப்புறம் போய்விடுங்களென்றான்.

அதுகேட்டு இராட்சதப்படைத்தலைவர்கள்யாவரும் சினங்கொண்டு சொல்லுகிறார்கள் இவனைப்பார்த்தால் சிறுவனாக யிருக்கிறான். மேலும், யானை தேர் பரி சேனைகள் யாதுமில்லை இவன் சாமார்த்தியந்தான் என்னமோ, இராட்சத கூட்டத்திற்கு எமனாகவந்திருக்கிறான். காமன், சோமன், யாவரும் இவன் வாமத்திற்கீடல்ல, இவனுடைய சவுரியத்தை நாமுங் கண்டறிவோமென்று, அயுதங்களைக் கையிலெடுத்து நாலு மூலையும் நெருங்கி வருவதை லவனானவன் கண்டு, வில்லை யெடுத்து நிறுத்தி, நாணிபிகியவே, இராட்சதாள் பார்த்து, அகம் நாணி, முகங்கோணி, எச்சரிக்கை எச்சரிக்கையென்று அவனருகில் நெருங்கினார்கள். அது கண்டு லவனானவன், வில்லிலனேக பாணங்களைப் பூட்டி, நாலுமூலையுஞ் சுழன்று மாரிசொரிவதுபோலச் சரமாரியாச் சேனைகள்பேரில் சரசர வென்று விடுகையிற் கரமற்றவரும், சிரமற்றவரும், தேர்விட்டவரும், நாள்கெட்டவருமாகச் சின்னாபின்னமாகி வீழ்ந்தவர்கள்போக மற்றவர்கள் ஓடத்தலைப்பட்டார்கள். அப்போது காலசித்தன் கடுங்கோபமாகி, இந்த சிறுவனுக்கு பயந்து இப்படி ஓடுவார்களோ, ஓடவேண்டாம் ஓடவேண்டாம் நில்லுங்கள் நில்லுங்களென்று அவர்களை யழைத்துத் தன் பின்னால் நிறுத்திக்கொண்டு நான் முன்னின்று லவனைப் பார்த்துத் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

ஆஹா! இவனைப்பார்த்தால் இராசவடிவாகவும் ஸ்ரீராமரைப்போலு மிருக்கிறான். நாம் பதறிப் பாணம்விடுவோமேயானால் பாலனிறந்துபோய்விடுவான். இவனைக்கைபிடியாகப்பிடித்துக்கொண்டு போகாமல் வெறுமனே போவோமென்றால் அது இராமத்துரோக மல்லவோ, இராம னிராச்சியத்தில், வஞ்சகம், சூது, மோசம், மாய்கை, துரோகஞ்செய்தால் அவர்களை எவ்விடம்போனாலும் விடாது. ஆகையால் நாம் சொர்ப்பனத்திலும் துரோக நினைவை நினைக்கப்போகாதே,

இதற்கெப்படியென்று தேனில்விழுந்த ஈயைப்போலத் தியங்கி, ஒன்றும் தோன்றாமற் சற்றுநேரம் யோசனைசெய்துக் கொண்டிருந்தான்.

லவனுக்கும் அரண்ணிய ராஜனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

அன்னவனிலமேற்சாய வரண்யனுங்கண்டுவெம்பி
தன்னகரில்லாவிந்தத் தலையனுமந்தோவீணே
மன்னியதளங்களெல்லா மடித்தனன் கணையாலென்று
துன்னியரதத்தைத்தூண்டி சொரிந்தனன்சரத்தையெங்கும்.

அப்போது அரண்ணியராஜன் லவனைப்பார்த்துச்சொல்லுகிறான். அடா! லவனே? எங்கள் குதிரையைப் பிடித்துக் கட்டினதுமல்லாமல் எங்கள் சேனைகளையும் வீரர்களையுங் கொன்றாயல்லவா, உன்னை கொஞ்சத்தில் விடுவேனென்றெண்ணாதே, இன்னமுஞ் சொல்லுகிறேன், குதிரையை விட்டுவிட்டுச் சத்துருக்கமகாராசனை சரணமடைந்தாயாகில் பிழைப்பாய், இல்லாவிட்டால் என்னுடைய பாணத்தினால் உன்னைக்கொன்று எமலோகத்திற்கு வழிகாட்டுகிறேன் பாரடாவென்றுசொன்னான். அதுகேட்டு லவன் கோபித்து, அரண்ணிய ராசனைப் பார்த்து பற்களை நறநறவென்று கடித்து, ஒருவிசேஷம் சொல்லுகிறான் ஆரடா! இராஜனே? நீ வாயால் வண்மை கொடாதே நீங்கள் விட்ட குதிரை உங்கள் பட்டணத்திற் பிரதட்சணம்பண்ணி வைக்கவேணுமேயல்லது எங்கள் வனம் வந்தபடியால் நான்பிடித்துக் கட்டினேன். உங்கள் பட்டணத்திலிருந்த குதிரையை நான் வந்துபிடித்துக் கட்டவில்லை உனக்கு சாமார்த்தியமுண்டானால் என்னைசெயித்து குதிரை விடுவித்துக்கொண்டுபோம், சாமர்த்தியமில்லாவிட்டால் ஓடிப் பிழையுங்களென்றான், அதுகேட் டரண்யராஜன் கோபமாகி, லவன்பேரில் தேரைச் செலுத்தித் தான்முன்னின்று தனுசை யெடுத்து நிறுத்தினான் அதுகண்டு லவனானவன் ஆக்கிறவியாக்கிற நிக்ரோதனாகி, பல்லை நறநறவென்றுகடித்து, வில்லிலனேக பாணங்களைச்சந்தித்து யுகாந்தகாலத்திற் சப்தமேகங்களு மொன்றாய்க்கூடி இடிமின்னற் குமுறலுடனே குமுகுமென்ற சத்தத்துடனே சலவிருஷ்டிபொழிந்தாலெப்படியோ அப்படியாக பாணங்களைப் பொருந்துக்கொண்டிருந்தான்.

அப்படி இராட்சதாள் வந்துவிடவே 10-வெள்ளம் இராட்சதாள்மாண்டு அரண்யனுடைய சரீரமெங்குஞ் சல்லடைக்கண்களாகத் துளைப்பட்டு உதிரவெள்ளம் ஓடத்தலைப்பட்டது. அதுகண்டு காலசித்தன் லவனுடைய கரவேக சரவேகந்தானியாதோ, அவனென்ன இராட்சதாளுக்கு எமனாகவந்து பிறந்தானோ, பார்த்தால் சிறுபிள்ளையா யிருக்கிறான். பாய்ந்தாற் பெரும்புலிபோற் பாய்கிறான். இவனுடைய கரவேக சரவேகத்தின் முன்னின்று யார்தானிர்வாகஞ் சொல்வார்கள் இவன் கைவில்லுக்கு நாமுமெதிரியல்லபோற் காண்கிறது குதிரையை விடுவிக்கலாமென்றாலு மிவன் விடுகிறவனாகத் தோற்றவில்லை அதுவுமன்றி சீதாலட்சுமி யில்லாமல் ஸ்ரீராமருடைய யாகத்திற்கு பின்னம்வந்துநேர்ந்தது லவனைப்பார்த்தால் தீரஉக்ராகாரனாக திருமூர்த்தியைப்போல் சேனைகளுமில்லை, ரதமுமில்லை பக்கத்துணையுங்காணோ மிவனுடைய தைரியந்தானென்னமோ, லவனென்றுசொல்லாமுன்னமே சிரசு போய்விடுகிறது. அந்த விசேஷங்களைப் பார்த்தால் ஸ்ரீராமரென்றுஞ் சொல்லலாம் இவனைப் பெற்றவளே லோகமாதாவென்று கூறலாம் இவனாலதிக துன்பமுண்டாகும்போற் காண்கிறதென்று அரண்யராசன் யோசனைசெய்து அதிககோபமாகி வில்லிலனேக பாணங்களை சந்தித்து லவன்மீதெய்கிறபோது லவனனவன் வருகிற அஸ்திரங்களையெல்லாமறுத்து 10- திவ்வியாஸ்திரங்களைவிட்டு அரண்யனேறிவந்த ரதம் சாரதி குதிரைகளுடன் தும்சம்செய்து அரண்யன் மார்பிற்கும் புயத்திற்கும் வில்லிற்கும்பட்டு சிரசுமுடைந்து புயங்கிழிந்து மார்புதிறந்து நாராயணாவென்றுமரணமூர்ச்சையடைந்தான்.

அதுகண்டு காலசித்தன் நமக்கு மிதுதான் வழியென்று மனதிலெண்ணினவனாக இரதத்தை லவன்முன்னுக்கு நடத்திச் சொல்லுகிறான் அடா! லவனே? என்னையறிந்திருப்பாயோ அறியாயோ ஆகிலுஞ் சொல்லுகிறேன்கேள் உன்னைக் கொண்டுபோகிற காலன் என்னைக்கண்டால் கைகூப்பி கும்பிடுவான் என்பேர் சொன்னால் நடுங்குவான் திருமூர்த்திகளும் தேவர்களும் பயப்படுவார்கள் என்பேர் காலசித்தனென்று யாவருக்குந் தெரியவரும் உன்னுடைய சாமார்த்தியமெல்லாமென்முன்செல்லாதெங்கள் குதிரையைவிட்டு நீ தாயுடன்பிள்ளையாய்ப் போய்ச்சேர் இல்லையென்றால் குதிரையைக்கொண்டு

வந்துவிட்டு சத்துருக்காசனை சரணமடைந்து சமாதான மாய்ப் போவென்றான். அந்தவார்த்தையை லவன் கேட்டு நகைபுரிந்து சொல்லுகிறான். அடா! காலசித்தனே? நீ எமனுக்கு நமனாயிருந்தாலும் உன்னை தேவர்கள் வணங்கப் பேர் பெற்றாலும் என் பாணக்கினிமுன் உன் சாமார்த்தியம் சூரியனைக்கண்ட பனிபோலாய்விடும் என்றாலுன்னை இப்போது கொண்டுபோகவரும் எமனை புதியயமனாபழையயமனாவென்று கேட்டனுப்புவேன் அது யிருக்கட்டும் பலவார்த்தை என்ன வாய்வேட்டையைவிட கைவேட்டையதிகமென்று பழமொழி யுண்டாகையால் எடும் அஸ்திரம் பார்ப்போமென்றான். அம்மொழியைக்கேட்ட காலசித்தன் அடடா நாம் யிதுவரையில நேகயுத்தங்களிற் கைகண்டிருக்கிறோ மிச்சிறுவனால் நமக்கும் மோசம்வரும்போற் றட்டுப்படுகின்றது சிறிய பாம்பாகிலும் பெரியகோலினா லடிக்கவேணுமென்று பெரியோர் சொல்லுவார்கள், மேலும் ஆயிரத்தெட்டண்டமும் 224-புவனமும் சத்தசாகரஞ்சூழ்ந்த ஈரேழுபதினாலுலோகத்தையுமே சக்ரமாயாண்ட இராவணேஸ்வரன் ஸ்ரீராமர் பகையைத்தேடிக்கொண்டு இராமபாணத்தால் கும்பகர்ணன் இந்திரசித்து அதிகாய னட்சயகுமாரன் கும்ப னிகும்பனென்று சொல்லப்பட்ட இராட்சத கிரேஷ்டரும் பிரமுகாளு மிரண்டாயிரம்வெள்ளம் இராட்சதாளும் மாண்டார்கள் இராவணனுக்குச் சகாயமாக வந்த சதகண்ட இராவணனுஞ் சகஸ்திரகண்ட இராவணனும் பதினாயிரவெள்ளம் இராட்சதாளுமாண்டார்கள். அந்த ராமபாணத்தினுடைய சேதி யின்னமுனக்குத் தெரியவராது நீ யிந்தக் குதிரையைப் பிடித்துக்கட்டினசேதி இராமலட்சுமணர் கேட்டாரேயானால் அங்கிருந்தபடியே இராமபாணம் வந்துவிடும் நீஎமலோகம் போயொளித்தாலும் உன்னைவிடாது ஏன் வீணில் மாண்டுபோகிறாய் என்வார்த்தையைக் கேட்டுத் திருகொன்றுஞ் சொல்லாமல் குதிரையைவிட்டு சமாதானமாகி விடும் இல்லையென்றால் வில்லையெடுத்துப் பாணத்தைப் பூட்டு பார்ப்போமென்றான்.

லவனுக்கும் காலசித்தனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

அங்குளபாலன்கையா லரண்ணியன்மாண்டபின்னர்
மங்குல்போலடர்ந்தசேனை வாரிதிமாண்டசெய்தி
தங்கியதூதரோடி சத்துருக்குரைத்தகாலிற்
சிங்கமதனையகால சித்தனுஞ்சமர்க்கெழுந்தான்.

இப்படி காலசித்தன் கூறியதைக்கேட்ட லவனுனவன் அதிககோபங்கொண்டு அடா! காலசித்தனே? ஆயிரத்தெட்டண்டம் 224-புவனம் சத்தசாகரம் ஈரேழுபதினாலுலகத்தையுமேகசக்கரமாயாண்ட ராவணனை செயித்தாலுமென்ன அவனுடைய சூரத்துவம் அவன்மட்டிற்குமல்லாமல் என் வனத்திற்கவனதிகாரஞ் செல்லமாட்டாது. அப்படி ஏகசக்கிராதிபதியாயிருந்த இராவணனை இராமன் ஜெயமடைந்தால் மகாவீரனென்று நீபுகழுகிறுயந்த இராமன் என்கையிற்படப்போகிற பாடு இன்னதென்றுனக்குத் தெரியாமலேன் மலேக்குருய், அந்த ஸ்ரீராமபாணம் என்முன்னில்லாது அதிருக்கட்டும் நீயோ நமனைவென்றவன் அந்த பாணத்தை சற்றெடுத்து என்னை செயித்தாயேயானுல் நீ எமனைவென்றது மெய்தானில்லாவிடி லதுபொய்தா னதெப்படியென்றுல் இராஜனிடத்திலிருக்கப்பட்ட சேவகனுக்கு சேவக வீரமெத்தவுண்டானுல் இராஜனு மதிகபலவானென்று சகலரும் நடுங்குவார்கள் சேவகனிடத்தில் வீரமட்டானுல் ராஜன் பராக்கிரமசாலியாயிருந்தாலும் வணங்கார்க ளதுபோல் உன்சேவக மூங்களிராஜனுகிய சத்துருக்கனுடையசேவகமும் ஒருக்ஷணத்திலறிகிறேன்பாரடாவென்று வில்லேவளைத்து 10-திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணினன். அதைக்கண்டு காலசித்தன் முந்திபாலன் பாண மிஞ்சினனென்று 20-திவ்வியாஸ்திரங்கள் வில்லிற் சந்தித்துவிட் டதுகளை யறுத்துப்போட்டா னத்திவ்வியாஸ்திரங்க ளறுபட்டுப் போகவே அவனதிக கோபமாகி ஆக்ர நிக்கிரோதனுய் பல்லே நெறநெறவென்று கடித்து வில்லில் 10-திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்துவிட்டான். அத்திவ்வியாஸ்திரங்களான்து வில்லில் விடுபட்டு தகத்தகாயமாய் நெருப்புப் புகையுடனுஞ் சடசடவென்கிற தொனிகளுடனும் வருகிறகாலேயில் காலசித்தன் பார்த்து அதிசீக்கிரம்

20-திவ்வியாஸ்திரங்களொடுத்து விட்டு லவனுடைய 10-திவ்வியாஸ்திரங்களையு மறுத்தெரிந்தான்.

அதனால் லவனனவன் சினந்தமுனைந்து சடிதியிற் கருத்தில் நினைந்து திருத்தமான 100-நாராசபாணங்களை சந்தித்துவிட்டான். அந்த 100-நாராசபாணங்களும் வில்லைவிட்டு விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வருகிறபோது காலசித்தனுங்கண்டு வெகுண்டு தானும் 100-நாராசபாணங்களை எய்து லவன் விட்ட பாணங்களை யறுத்துத்தள்ளவே தட்சணம் பட்சணம் பண்ணுவேனென்று கடிந்து கொடிதாகிய 5-சிங்கமுகாஸ்திரத்தை வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணினன். அந்த 5-சிங்கமுகாஸ்திரம் ஆலகால விஷம்போற் சீறி அக்கினிக் கொழுந்துகளோடு அதிவிரைவாய் புறப்பட்டு காலசித்தன் பிடித்த வில்லையுங்கண்டித்து இரதத்தையும் பொடிசெய்து சாரதி குதிரைகளையுங்கொன்று காலசித்தனுடைய மார்பிலணிந்த கவசங்களையு முடைத்தெறிந்துவிட்டு போயிற்று. அதுபோகவே, காலசித்தனனவன் மறுதேரிலேறினனதையு மிரண் டிடிபாணம்விட்டு லவனுடைத் தெறிந்துப் போட்டானதுகண்டு காலசித்தன திசீக்கிரமாய் மறுதேரிலேறி வில்லெடுத்து அநேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்து சரமாரியாய்ப் பொழிகிறபோது லவனனவன் கண்டு, இந்த யுத்தத்தில் வந்தவர்களைவிட யிவன் மகா சாமார்த்தியவானென்று புகழ்ந்து அநேக பாணங்களைப் பந்திபந்தியாய் சந்தித்துளெய்து காலசித்தன் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் அறுத்து அதிகமாக நாலு திவ்வியாஸ்திரங்களைவிட்டு இரதஞ்சாரதி குதிரைகளுடனும் தும்சமாக்கிப்போட்டான். அதுகண்டு காலசித்தன் மகாகோபமாகி மறுதேரிலேறி வில்லையெடுத்து நிறுத்தி அபுரூபமான அஸ்திரங்களை தனுசிற்றொடுத்து ஐப்பிசி கார்த்திகை மாதத்தில் மேகமானது மழைக்காவிறங்கி இடி மின்னல் குமுறலுடன் பொழிந்தாலெவ்வண்ணமோ அவ்வண்ணஞ் சரவருஷமாய் பொழிந்துக்கொண்டிருக்கும்போது லவன்பார்த்து தானுமநேக பாணங்களை ஒன்றின்மேலொன்றாய் சரசரவென்று விட்டு காலசித்தன் விடப்பட்ட அஸ்திரங்களையெல்லா மறுத்துவிட்டு அதுபோகபின்னுஞ் சரபுஞ்சமான திவ்வியாஸ்திரங்களைவிட்டு வில்லை யொடித்தெறிந்தான். இதனால் காலசித்தன் கோபங்கொண்டு வேறொரு வில்லெடுத்து நாணிபிகிந்து அக்கினியாஸ்திரமொன்

றை அவ்வில்லிற் சந்தித்து தூபதீப நைவேத்தியங்களுடன் விட்டுவிட்டான் அந்த அக்கினியாஸ்திரமானது வில்லில் விடுபட்டு திருதிகென்று எரிபுகைகளுடன் நெருப்புகளை வாரியிறைத்துக்கொண்டு வருகிறபோது லவன் ஒரு வருணாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகம்பண்ணினான்.

அந்த வருணாஸ்திரமும் வில்லைவிட்டு வெளிப்பட்டு சப்தமேகங்களு மொன்றாய்க்கூடி மழைகாலிறங்கி யானை தும்பிக்கைபோற் சூடங்கொண்டு அக்கினியாஸ்திரத்தின்பேரிற் பொழியும்போது அக்கினியாஸதிரமானது நீராளமாயுருவி பூமியில் விழுந்துபோயிற்று. அதுகண்டு காலசித்தன் ஒரு பர்வதாஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிட்டான் அந்த பர்வதாஸ்திரமானது வெளிப்பட்டு அநேக பர்வதங்களாக வுருவங்கொண்டு லவன்பேரில் வருகிறபோது லவனவன் கண்டு ஒரு வச்சிராயுதத்தை யெடுத்து தனுசிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துப் பிரயோகஞ்செய்தான். அந்த வச்சிராயுதமானது விடுபட்டு வருகிற பர்வதாஸ்திரங்களனைத்தையும் நொறுக்கித் தள்ளிப்போயிற்று. அதனால் காலசித்தன் மெத்தவும் ஆக்ருஷங்கொண்டு பிர்மாஸ்திரத்தை எடுத்து மந்திராபூதி கொடுக்கும்போது லவனொரு திவ்வியாஸ்திரத்தை விடுத்து காலசித்தன் பிடித்த பிர்மாஸ்திரத்தை யறுத்துத் தள்ளிவிட்டானதைப்பார்த்து காலசித்தன் கடுங்கோபங்கொண்டு நாராயணாஸ்திரமொன்றை விடுத்தான். அதுகண்டு லவன் அவ்வஸ்திரத்திற்கு இரண்டு திவ்வியாஸ்திரம் விட்டு இரதத்திற்கொரு திவ்வியாஸ்திரமு மெடுத்துவிட்டான்.

அந்த அஸ்திரங்களும் அதிவேகமாகவந்து காலசித்தன் விடுத்த நாராயணாஸ்திரத்தையும் அறுத்து இரதத்தில் வாய்வாஸ்திரம் புகுந்து யுகாந்தகாலத்திற் சண்டமாருதம் வீசினதுபோல காலசித்தன் இரதத்தை வெகுதூலைவிற் கொண்டு போய்விட்டது அப்போது லவன் வெகு சந்தோஷமாகி தன் திரேகத்திற்பட்ட அம்பு காயங்களையெல்லாம் ஆற்றிக்கொண்டு செடிமறைவிற்போய்ச் சயனித்துக்கொண்டிருந்தான்.

இப்பால் இரண்டு இராட்சதாள் பேசிக்கொள்ளுவது யாதெனில், இவன் கையிலிருக்குஞ் சிலையோ நமது படைக

னின் தலையையறுத்து உலையில்வைத்த வாரினளையோவென்று நிலைகலங்கி யழுதுக்கொண்டோடி சத்துருக்க மகாராசரே? கேளும், அரண்யமகாராசனும் பத்துவெள்ள மிராட்சதசே னைகளும் லவன் கைசிலையின் பாணங்களால் மாண்டுபோனுர் கள். காலசித்தன் மாத்திரம் யுத்தஞ் செய்துக்கொண்டிருந் தான். அவனையும் அவன் ரதத்தையும் வாய்வாஸ்திரத்தை விட்டடித்தான். அதனல் ரதமும் காலசித்தனும் எந்த திக் கிற் போய்விட்டானே தெரியவராதென்றார்கள். அதுகேட்டு சத்துருக்கமகாராசன் மிகவும், கோபாக்கினியுடனே பற்களை நறநறெனக் கடித்துச் சொல்லுகிறார். ஓ! இராசமன்னர்க ளே? இராட்சதவீரர்களே? மந்திரிப் பிரதானிகளே? ஒருசிறு பிள்ளையின் முன் யுத்தத்திற்குப்போன வீரர் யாவரையும் அணி ப்பிள்ளை கிளிப்பிள்ளையாய் அவமதித்து முப்பது வெள்ளம் இராட்சதர்களையும், ஐம்பதினாயிரம் சேனைகளையும் அதம்பண் ணிவிட்டானல்லவா ஆகையால் இனி நம்முடைய சௌரிய மென்ன விருக்கின்றது, தேவர்கள் கேட்டால் நகைபுரிந்து பரியாசமாகப் பேசார்களா? நம்மோடொத்த ராசாக்களின் னம் லவனைப்பிடித்துவர நம்முடைய தண்டிற் சாமர்த்தியர்க ளும், வில்லில் வல்லவர்களில்லையோ வென்று சொல்லிய சத் துருக்கமகாராசனைப் பார்த்து சலவசந்தனெழுந்து சொல்லு கிறான். ஐயா! சத்துருக்கராஜரே கேளும், நானிருக்கும்போ து தங்களுடைய மனதிற்கு ஆயாசம் வருவானேன், இப் போதெனக்கு செலவு தருவீரேயானல் லவன் திரிமூர்த்திகளை சாதிக்கப்பட்டவனுயிருந்தாலும், என்னுடைய சாமார்த்திய த்தினல் லவனை கைப்பிடியாகப் பிடித்து வருகிறேன். அப் படி பிடித்துவர சாமார்த்திய மில்லாவிட்டால் என்னுடைய பாணத்திற்கு லவனை இறையாக்கி குதிரையை விடுவித்துவரு கிறேன், இவ்விரண்டிலொன்றுவது செய்துவராமற்போனல் என்னை சகந்திரகண்ட ராவணனுடைய குமாரனென்று சொ ல்லவேண்டாமென்றான்.

அதுகேட்டு சத்துருக்கமகாராசர் சலவசந்தனைப்பார்த்து சொல்லுகிறார். வாராய், சலவசந்தனே? இப்படி சொல்ல லாமோ மகாமாயனென்ன புஜபல பராக்கிரம மில்லாதவனே சேனதிபதியான காலசித்தனென்ன கைதேர்ந்தவனல்லவா, அரண்யராசனும், சூரதராசனும், ஐம்பத்தாறு தேசத்து இராசாக்களும் சாமார்த்திய மில்லாதவர்களோ, லவன்

சிறுபிள்ளையானபடியினுல் ஸ்ரீராமரைப்போல்வடிவும், தேஜசு முள்ளவனுனபடியினுல் மேற்சொன்னவர்களெல்லாம் லவனைக்கொல்ல மனமில்லாதவர்களாகி யவன் பாணத்தால் மடிந்தார்கள். மேலும் அந்த லவனைப்பிடித்துவந்தால் சீதாலட்சுமி யம்மனிருக்கிற சமாச்சாரம் லவனுலறியலாமென் றல்லவோ, சேனைகளைக் கூட்டி யனுப்பிவைத்தது லவன் சிறுபிள்ளை புத்தியானதினுல் பாணங்களைவிட்டுக் கொன்றுபோடுகிருன். அவனுடைய சாமார்த்தியமென்னவென்று சொல்லலாமென்ருர். அவ்வார்த்தையைக்கேட்டு, சலவசந்தன் மறுவார்த்தைகூற இடமில்லாமல் மனம்நொந்து அப்பாலிடைந்துபோயினுன். அத்தருணத்தில் தூதுவர்கள் சொல்லுகிருர்கள். ஐயா! சத்துருக்கமகாராசரே? கேளும் இவ்வளவு புஜபலபராக்கிரமமுள்ள சலவசந்தனைப்போல நூறு சலவசந்தரும் நூறுவெள்ளம் இராட்சதாளும் ஆயுதாஸ்திரபாணிகளாய் லவன் முன்சென்று நின்றெதிர்த்தாலும் லவன் தன்னுடைய அஸ்திரத்தினுலே ஒருநாழிகையிற் கொன்றுபோடுவான் லவனைப் பிடிக்கப்போன பிரமுகாளில் அஸ்திரங்களில்லாமலும் யுத்தஞ்செய்யாமலு மிறந்துபோகவில்லை. எல்லோருமந்த லவனிடம் போர்புரிந்தே மடிந்தார்கள். ஆதலால் அந்த லவனை திரிமூர்த்திகளாலும் செயிக்கப்போமோ வென்ருர்கள்.

அப்போது சத்துருக்கமகாராசர் சோமகாசமகாராசனையும் மட்சயந்த மகாராசனையும் பார்த்துச் சொல்லுகிருர். ஓ! இராசாதிராசர்களே? கேளுங்கள், நம்முடைய தண்டையெல்லாம் ஒருமிக்கக் கூட்டிக்கொண்டுபோய் நானே முன்னின்று அந்த சிறுபிள்ளையான லவனைப் பிடித்துக்கட்டுகிறேன். அப்படி லவனைப்பிடித்துக் கட்டாமற் போனேனேயானுல் நான் பிடித்தது கோதண்டமல்ல, என்னை ஸ்ரீராமருடைய சகோதரனென்று சொல்லவேண்டாம் லவனுடைய புஜபலபராக்கிரமத்தை அரைக்கணநேரத்தில் வெளிப்படுத்துகிறேன் பாருங்களென்று சொல்லி மகா உக்கிரத்துடனே இரதமேறிச் சாரதியை யெச்சரித்து இரதத்தை நடத்தினுர். அதுகண்டு சகல இராசமன்னரும் இராட்சதசிரேஷ்டரும், கால்பலமான ராட்சதாளும், மனதிடங்கொண்டு இரதமேறி கூட நடந்தார்கள். சேனைகளும் பின்னடந்து வருவதைக்கண்ட லவனுனவன் திடுக்கிட்டெழுந்து, வில்லையெடுத்து தோளில் மாட்டிக்கொ

ண்டு ரணக்களத்தில் வந்துநின்று இன்னமெவ்வளவு சேனை தான் இராசனுக்கிருக்கின்றதோ சமுத்திரம் புரண்டுவருவது போல வெகுசேனைகள் வருகின்றதே, நம்முடைய தமயனு மிவ்விடத்திலில்லையே, இப்போ வருகிறவன் சத்துருக்கனைப் போலுங் காண்கின்றதே, வந்தாலுமென்ன முழுகிப்போயிற் றென்று மனதை தைரியப்படுத்திக்கொண்டு மண்டிபோட்டு உட்கார்ந்து நல்ல கூர்மையோடுங் கூடியிருக்கப்பட்ட திவ்வி யாஸ்திரங்களையெடுத்து வில்லிற்றொடுத்திருந்தான்.

அந்தச்சமயத்தில் சத்துருக்கமகாராசன் இரதத்தைவிட் டுக்கொண்டு லவனுனவன், எங்கே எங்கேயென்று தேடிக்கொ ண்டு ரணக்களம் வந்துசேர்ந்தார். அப்போதந்த ரணக்களமா னது எப்படியிருந்ததென்றால், செக்கச்செவேலென் றுசிவந்த நிறத்தோடுங்கூடிய உதிரவெள்ளம் பரவியோட அந்தவெள் ளத்தில் யானை தேர் பரி சேனைகளை யடித்துக்கொண்டு ஒன் ணரைப்பனையுயரம் போவதைக்கண்டு சத்துருக்கமகாராசன் மகாகோபதிப்தனாய், உக்ராகாரத்துடனே சாரதியை யெச்சரி த்து இரதத்தை விட்டுக்கொண்டு லவன்முன் வந்து நின்று பார்த்தார். அந்த லவன் சத்துருக்கமகாராசனுடைய பார் வைக் கெத்தன்மையாயிருக்கிறதென்றால், பச்சை நிறமும், பவளச்செவ்வாயும், மலர்ந்தசெந்தாமரைப்போல வதனமும், அகண்டமார்பும், நீண்டகரங்களும், மணிமத்தளம்போற் புஜங்களும், ஆலிலைபோல்வயிறும், அமர்ந்த பாதமும் ஸ்ரீ லட்சுமிவிலாசமான பார்வையுமுடைய தன் தமயனை ஸ்ரீராமரைப்போல்தோற்றவே, இவன் சீதையம்மன் பிள்ளை யென்பதற்குச் சந்தேகமில்லை அம்மனும் இந்த வனத்திற்று னிருக்கவேண்டும், யாவுங்கண்டறிவோமென் றுஉள்ளிற்களிப் பும் வெளிக்கி கோபமாகிச்சொல்லுகிறார் வாராயப்பாசிறுபிள் ளாய், நீயார் உன்பேரென்ன குலமென்ன தாய்தந்தைபே ரென்ன, எனக்குத் தெரியச்சொல்லென்றார், அவ்வார்த்தைக் கேட்ட லவன் சொல்லுகிறான் போம்போம், இராசாக்களாய்ப் பிறந்து யுத்தம் வந்தபோது சண்டைக்குப்பயந்து குலங் கோத்திரங்களையுந் தாய் தந்தைபேருங்கேட்டு யுத்தத்திற்குத் தப்பித்துக் கொள்ளலாமா, படுகளத்தி லொப்பாரியுமுண் டோ, நின்று யுத்தம்பண்ணுமென்றான். அப்படிகூறிய லவ னுடைய வார்த்தையைக்கேட்டு சத்துருக்க மகாராசர் சொல் லுகிறார். வாராயப்பா, நான் யுத்தத்திற்கு பயந்து உன் தாய்

தந்தை பேரைக்கேட்கவில்லை உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றாய், உன்னுடன் யுத்தம்பண்ண எனக்கு மனஞ்சம்மதப்படவில்லை உன் தாய்தந்தையின் நாமதேயத்தையும் உன் குலத்தையுங் கூறுவாயாகி லதன்பின்பு யுத்தம் பண்ணலாமென்றார்.

அதுகேட்டு லவனானவன், இவன்தான் குதிரைக்குந் தண்டுதளத்திற்கும் இராசாவான சத்துருக்கன்போற் றோன்றுகின்றது இவனைப்பார்த்தால் பயங்கரமாக யிருக்கின்றது இவனுடைய புஜபலபராக்கிரம மென்னமாயிருக்குமோ நம்முடைய தமயனும் அருகிலில்லை, இவனால் நமக்கு இடர்வரும்போற் காண்கின்றது. நம்முடைய தாயார் ஜானகியம்மாள் நம்மைக்காணோமென் றேக்கமாயிருப்பாள். முன்னமே போய்விடாமற்போனோம், ஆனாலுமென்ன மூழ்கிப்போயிற்று, தாயாருடைய கிருபை நமக்கிருக்கிறவரையில் யாதொரு குறைவும் வந்தணுகாது. நம்முடைய தமயன் இச்சங்கதியைக் கேழ்விப்படுவாரேயானால் சத்துருக்கனும், தண்டு பாளயமும், எவ்விடம்போ யொளித்தாலும் விடார் இந்தராசனோ, தாய்தந்தை பேரைச் சொல்லென்று கேழ்க்கிறான். சொல்லலாமென்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு சத்துருக்கமகாராசனைப் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓ! இராஜனே? கேளும், என் தாய்பேர் ஜானகியம்மாள் எங்களையர்பேர் வால்மீகரிஷி, என் தமயன்பேர் குசலன், என் பேர் லவன், எங்கள் குலமெனக்குத் தெரியவராதென்றான். அதைக்கேட்ட சத்துருக்கர் உள்ளங்களித்து, ஜானகியம்மனித்தவனத்திற்றானிருக்கவேண்டு மிவன் ரிஷிபிள்ளையென்று கூறுகிறான். ஸ்ரீராமரைப்போல வடிவுகொண்டிருக்கிறான். மேலும், தமயனொருவனிருக்கிறு ரென்கிறான், இதுவோ சம்சயமாயிருக்கின்றது. ஆனாலு மென்னமாயிற்று நமது குதிரை விட்டுவிட்டானேயானால் சேனைகளை யெழுப்பிக்கொண்டு போகலாம் லவனைக் கைப்பிடியாகப்பிடித்து ஸ்ரீராமரிடத்திற்குக் கொண்டுபோகலாமென் றெண்ணினவராய் லவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

அடா! தம்பி லவனே? நாம்விட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி என்னுடைய சேனைகளை பாணங்களாலடித்துகண்டதுண்டம் பண்ணலாமோவென்று கேட்க, அதற்கு லவன் சொல்லுகிறான். ஐயா! சத்துருக்கமகாராசரே கேளும், நீங்

கள்விட்ட குதிரை எங்கள் வனத்திற்கு வந்தபடியினால் பிடித்துக் கட்டினேன். என் கையிலகப்பட்ட குதிரையை நீ விடுவித்து உன் தமயன்கையினால் யாகஞ்செய்துவைப்பது ஸ்ரீமந்நாராயணருக்கே அறிக்கையாகும் உன்னைப்போல நூறு சத்துருக்கர் வந்தாலும் நான் குதிரையைவிடேனென்று உமது கருத்திலெண்ணக்கடவீரென்று கூறிய லவனைப்பார்த்து சத்துருக்கர் சொல்லுகிறார். வாராய் தம்பி லவனே? நான்விட்ட குதிரை உன் வனத்திற்கு வந்து உன்னை என்னபண்ணிற்று வனத்தையழித்ததோ, அல்லவென்றுன்பேரில் யுத்தம்பண்ணிற்றோ. என்னகுற்றஞ் செய்ததென்று என் குதிரையைப் பிடித்துக்கட்டி என்சேனையை யிப்படி சின்னபின்னப் படுத்திக்கொன்றாய் சொல்லென்றுகேட்க, லவன் கூறுகிறானையா, சத்துருக்கமகாராசரே கேளும், உன் குதிரை என்வனத்திற்கு வந்து ஒன்றுஞ் செய்யவில்லை அந்தக்குதிரையினுடையநெற்றியில கட்டிய வீரபட்டத்தி லென்னவெழுதியிருக்கிறாய், சத்துருபயங்கரன், தனுர்வேதசாஸ்திரன் ரணரங்கசூரன், சத்துருக்கன் வருகிறான் அச்சத்துருக்கனை ஜெயிக்கத்தக்க சாமார்த்திய முள்ளபேர்கள் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தத்திற்கு வருகலாமென்றெழுதிக்கட்டி யிருந்தபடியினாலல்லவோ நான் குதிரையைப் பிடித்துக்கட்டி பின்வந்த சேனைகளையுங் கொன்றேனென்றான்.

அதுகேட்டு சத்துருக்கர்சொல்லுகிறார் வாருந்தம்பி லவனே? என்னோடொத்த ராஜகுமாரன் நீயானாலும் உனக்கு யானைதேர் பரிசேனைகளுமில்லை உன்னுடனெதிர்த்து எப்படியுத்தம் பண்ணுகிறது நீ இராசகுமாரனல்லவென்றுஞ் சொல்லுகிறாய், ரிஷிபுத்திரனானபடியால் நீ பாதசாரியாய் நின்றே யுத்தம்பண்ணுகிறவனானபடியினாலும் உன்னுடன் போர்புரிவது இராசதருமமல்ல, எங்களுடனுனக்கு வைராக்கிய மென்னத்திற்கு குதிரையை எங்கள்கையி லொப்பித்துவிட்டுத் தாயுடன் பிள்ளையாய்ப்போய்ச்சேரென்றான், அதுகேட்டு லவனானவன் சற்றாலோசனைசெய்து சத்துருக்கரைப் பார்த்துச் சொல்லுகிறான். ஐயா! சத்துருக்கராசனே! நல்லவார்த்தை சொன்னீர் யுத்தம் வந்தவேளையில் இராசகுமாரனென்றால் யுத்தம் பண்ணுகிறது இராசகுமாரனில்லாவிடில் யுத்தம்புரியவேண்டியதில்லையென்று இராசநீதியில் சொல்லுகிறதோ, அந்த ராசநீதி சாஸ்திரத்தை நீர்தானே அறிவீர், யானை தேர் பரி

சேனைகளில்லாமல் பாதசாரியாய் நின்று சண்டைபண்ணுகிற வனோடு யுத்தஞ்செய்யவேண்டாமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லுகின்றது குதிரையை விடுவிக்க சாமார்த்திய முண்டா னால் என்னை ஜெயித்து குதிரையை விடுவித்துக்கொண்டுபோ ம் சாமார்த்தியமில்லாவிட்டால் உன்சேனைகளுடன் தமயனி டம் போய்ச்சேரும், உன் தமயன் யாகம்பண்ணப்போகிறது உனக்கே தெரியவருமென்று னம்மொழியைக்கேட்டு சத்து ருக்கரிதென்ன சிறுபிள்ளையானது யுகமுழுகத்தக்க வார்த்தை களைப்பேசுகிறு னிவன்பேசும் வார்த்தைகளைப் பார்த்தால் இரும்பையொத்த மனதைப்படைத்தவனானாலும் கலங்கி கழி ச்சலெடுத்தோடிப் போவான்போற் காண்கின்றதென்று மனதி லெண்ணினவராய்ச் சொல்லுகிறுர்.

வாருந்தம்பி! லவனே! உன்னைப் பார்த்தால் சிறுபிள்ளை யாயிருக்கிறுய் இளங்கன்று பயமறியாதென்பது உன்னளவிற் கண்டேன் அதெப்படியென்றுல் பெரியவர்களாயிருக்கப்பட்ட பேர்கள் அந்த காரியஞ்செய்தால் நம்மை இந்த காரியஞ்செய் தாற்றுன்மை அந்த காரியமாகும் இந்த காரியமாகாதென்றுஞ் சொல்வதை "மூத்தோர்சொல் வார்த்தையமிர்த" மெனவெ ண்ணி சிறியோர்களா யிருக்கப்பட்டவர்கள் நடக்கவேண்டும் தன்னிலும் பெரியவர்கள் தன்னிடத்தில் வந்து புத்தி யோச னைகள் சொன்னுல் சிறியவர்கள் கேட்கவேண்டும். அப்படி கேளாதவர்களுக் கிடுக்கண்வந் தெய்துமென்று சான்றோர்கள் சொல்லுவார்க ளாகையாலெங்கள் பகையுனக்கு வேண்டாம் "ஊருடன்பகைக்கின் வேருடன்கெடு" மென்பது ஒருவனுக் கொருவன் பகையானுலவன் குடும்பமுழுதும் நாசமடைவார் கள். அதெப்படியென்றுல் ஆயிரத்தெட்டண்டம் 224-புவ னம் சத்தசாகரஞ் சூழ்ந்த ஈரேழுபதினாலுலகத்தையும் இரா வணன் ஏகசக்கிராதிபதியா யாண்டுக்கொண்டிருந்தான் அப்ப டிப்பட்ட ராவணனை ஜெயித்தவர்கள் வானரங்களா யவதரிக்க வும் ஸ்ரீமந் நாராயணரே இராமனாக மூன்று தம்பிமாருடனவ தரித்து ராவணசம்மாரஞ்செய்து அவனுக்கு சகாயமாகவந்த வரையெல்லாம் ஸ்ரீராமபாணத்திற்கு இரைகொடுத்து தேவ போகத்தை யந்த தேவேந்திரனுக்குக் கொடுத்து லங்கையை விபீஷணருக்களித்து சக்ரபுரியை மாயனுக்குத்தந்து ரத்தின புரத்தை சலவசந்தனுக்கு நல்கி முடியுஞ்சூட்டி யாகம்பண்ண

வேணுமென்று குதிரையைவிட்டு பின்னல் ராட்சதாளும் ராசாக்களும் வந்திருக்கிருர்கள் அவர் குதிரை பிடிபட்ட சமாச்சாரங் கேட்பார்களேயானுல் அவர்கள் வந்துவிடுவார்கள் எவ்விடஞ் சென்ருலும் உன்னை விடார்கள் ஆகையால் எங்கள் பகையைத் தேடிக்கொள்ள வேண்டாமென்ருர்.

அப்படிச் சொன்ன சத்துருக்கனுடைய வசனங்களையெல்லாம் லவன் கேட்டு குலுங்க நகைத்து, ஓ! சத்துருக்க மகாராசனே? என்னுடன் நீர் யுத்தப்பண்ண நடுங்கிக்கொண்டு இப்படி பெரும் பொய்யைப்புகன்ருல் லவன் பயந்து ஓடிப்போவானென்று நினைத்திரோ, அப்படி யோடத்தக்கவனல்ல ஆதிபராபரவஸ்துவாயிருக்கப்பட்ட நாராயணரே என்னுடன் வந்தெதிர்த்தாலும் நன்ருய் பூசைசெய்து எமலோகமனுப்பிவிடுவேன், அதிருக்கட்டுமிப்போது உனக்கு சாமார்த்தியமுண்டானுல் என்னை ஜெயித்து குதிரையை விடுவித்துக்கொண்டுபோ சாமார்த்தியமில்லாவிட்டால் ஓடிப்போவென, அப்படி சொன்னவனுடைய வார்த்தையை சகல ராசாக்களும் ராட்சத சிரேஷ்டர்களுங்கேட்டு மனதடங்கா கோபங்கொண்டவர்களாகி சத்துருக்கருடைய முகத்தைப் பார்த்தார்கள்.

அதுகண்டு சத்துருக்கர் இன்னம் லவன் என்னதான் சொல்வானே, பார்ப்போமென்று கோபத்தை மனதுள் ளடக்கிக்கொண்டு யாதொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்துவிட்டார். அப்போது லவனுனவன், சத்துருக்கரைப் பார்த்துச் சொல்லுகிருன். ஓ! சத்துருக்கராசனே? நீயோ ராசனென்று முகத்தில் மீசைவைத்துக்கொண்டு கையிற் றனுசை பிடித்திருக்கிருய், நீதானே குதிரையை விடுவித்து உன் தமயனை ராமன்கையால் யாகம் பண்ணிவைக்கப் போகிறீர் உன்னேடொத்த ராசாக்கள் எல்லோரும் உன்முகத்தை ஏறப்பார்க்கிருர்கள். உனக்கு ரோஷந்தானில்லையோ உன்னைத்தானே ரணரங்க சூரனென்று பின்னனுப்பிவைத்தார்கள். அவர்களுடைய திறமையும், உன்னுடைய சௌரியமும், சேனைகளின் புஜபல பராக்கிரமமும், உன்னளவிற் சற்றுநேரத்திற் காண்பேனென்ருன்.

சத்துருக்கமகாராஜனுக்கும் லவனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

காலனென்றெதிர்த்தோன்றன்னைக் காலனூர்வசமேசெய்யப்
பாலனும்லவன்றன்வீரம் படையுளோன்றறையக்கேட்ட
நீலமேனியனுர்தம்பி நிகரில்சத்துருக்கன்றானும்
ஆலகாலம்போற்சீறி வமர்செய்யத்தொடங்கினனே.

அப்படி கூறிய லவனுடைய வார்த்தையை சத்துருக்க மகாராசன்கேட்டு கண்களிரண்டும் செவ்வானம்போற் சிவக்க, காதுகளிரண்டும் புகையெழும்ப, கைகளிரண்டும் பதைக்க, சரீரமெங்குந் துடிக்க, மீசைகள் படபடவென்று துடிக்க, முகங்களி லக்கினிப்பொறிகளெழும்ப வந்த கோபத்தை தேவர்கள்கண்டு லவனிறந்துபோவானென்று மனதிலெண்ணிப் பார்த்துக்கொண் டிருந்தார்க ளப்படி சத்துருக்கருக்கு கோபம் உண்டாகி மறுபடியும் பிள்ளையென்ற பாசமானது வந்தடைந்து கோபத்தைத் தணித்து லவனைப்பார்த்து சத்துருக்கர் சொல்லுகிறூர். அடா லவனே? சிறுபிள்ளை பயமறியாதென்பதுபோல் நயமான வார்த்தையினுல் நீ பயனடைவாயென்று செயம் பொருந்திய இராசாக்களும் இராட்சதசிரேஷ்டர்களும்வந்து கூறியதைத் தூறிவிட்டாய், தனக்குத்தானே மீறிவிட்டாய், இப்போது என்னையுந் தூஷித்தாய் யார்க்குங் காலம் நில்லாது. அம்புவிக்கது செல்லாது, அனித்தியத்திற்கது பொல்லாது, அப்போதது வெல்லாது, அதனை நீக்கி நானுரைவதை நீ கேள் விசேஷத்தை மிஞ்சாதே, சிறுபிள்ளையென்று உன்னை சும்மா விட்டுவிட்டேன் நீசொன்ன விசேஷமற்றொருவர் சொன்னுல் இந்நேரம் எமலோகமனுப்புவேன். வீணிலிறந்துபோகவேண்டாங் குதிரையை என்னிடத்திலொப்புவித்து தாயுடன் பிள்ளையாகச் சேரென்றூர். அதுகேட்டு லவனுனவன் பல்லை நறநறவென்று கடித்து, கடுகடுத்து, ஓ! சத்துருக்கனே? உனக்கு எத்தனை விதத்திற் சொன்னுலும் வெகு நீதிமார்க்கங்களை பேசுகிறுய், நீதானே பெரியவனென்று கைவீசுகிறுய், அது வேண்டாம் உன்னுடைய புஜபல பராக்கிரமத்தையும் உனக்குப் பின்பலமாய்வந்த இராசாக்கள் இராட்சதாளுடைய சாமார்த்தியத்தையும் இதோ ஒரு க்ஷணத்திற்குள் யானறிவிக்கிறேன் பாரென்று தன்கைவில்லை நாட்டி

சரத்தைபூட்டி சாம்பிராணி தூபங்காட்டி சத்துருக்கமகாரா சன்பேரில் விட்டுவிட்டா னந்தபாணமும் வில்லேவிட்டு விடு பட்டு அதிகவேகமாய் பெருந்தொனியோடு வருவதை சத்து ருக்கர் கண்டு பாலன் மிஞ்சினனென்று வெகுண்டு தானும் வில்லேயெடுத்து திவ்வியாஸ்திரத்தை தொடுத்து மந்திராபூதி கொடுத்து லவன் விடப்பட்ட பாணத்தையறுத்து மறுபடி யும் அப்பாணம் லவன்பேரிற் போகவொட்டாமல் திவ்வி யாஸ்திரத்தை தம்மிடத்தி லழைத்துக்கொண்டார் இனி விடப்போகிற அஸ்திரங்களும் இந்தப்படியாமென் றுணர்ந் துக்கொள்ளுங்கள்.

அதுகண்டு லவன் கோபமாகி மூதற்கோணல் மூற்றுங் கோணலென்பதை கண்டவனுய் விண்டலமண்டல மன்பர்கள் கண்டு பயங்கொண்டு வாடவுந் தண்டு கமண்டலங்கொண்டவ ர்கள் பார்த்து மூகம்வேர்த்து பயம்பூந்து இடம்வேர்த்து ஓட வு மக்கணம் ஒரு சுழற்பாணத்தை எடுத்து வில்லிற்றெடுத்து சத்துருக்க மகாராசருடைய இரதத்தைப் பார்த்து விடுத்தா ன ந்த சுழல்பாணம் கரகரவென்று சுழன்றுக்கொண்டு சண்டமா ருதம்போல் உயரக்காற்றுகளெழுப்பி அதிக விரைவோடும் வ ருகையில் சத்துருக்கமகாராஜனும் ஒரு சூராவளி அஸ்திரத் தை எடுத்துவிட்டார். அதனல் திக்குகள் நடுங்க, தேவர்கள் ஒடுங்க எழுகடலும் வரள யட்சயகின்னரர் மனமானது புரள! ஆகமவேதங்கள்பாட அன்பர்கள்மனதடங்கபுறப்பட்டுவந்து லவனுடைய சுழற்பாணத்தையறுத்தெறிந்துப்போயிற்று. அ தனு லவனுனவன்சீறி கோபமீறி நூறு திவ்வியாஸ்திரங்களே வாரி இந்திரன் மூதலானேர் சித்திக்கும்படியாய் வந்தனேவழி பாடுசெய்து மந்திராபூதிகள்கொடுத்து விடுவிக்கவே ஒன்ருே டொன்றுராய்ந்துக்கொண்டு அக்கினிப்பொறிகள் சிதர வருகி றபோது சத்துருக்கமகாராஜருந் தம்முடைய ராமபாணமாகிய ஐம்பது திவ்வியாஸ்திரங்களே வில்லிற்றெடுத்து, தூபதீபங் கொடுத்து விடுத்தார். அந்ததிவ்வியாஸ்திரங்களே வில்லேவிட் டுவிடுபட்டு தகத்தகாயமாக கட்டுகளுடன் பின்பட்சியிறகுபூண் ட அஸ்திரங்களானதால் ஆலகாலவிஷம்போற்சீறிக்கொண்டு போய் லவன்விட்ட நூறு திவ்யாஸ்திரங்களேயுமறுத்து பூமி யிற்றள்ளிவிட்டு சத்துருக்க மகாராஜனு மம்புருப்பொதியில் வந்தடைந்து அதுவும்போகவே, லவன் நூறு நாராசபாணங்

களை எடுத்து விடுத்தான் அந்த நூறு நாராசபாணங்களும் நாகசர்ப்பம்போ லிரைச்சலிட்டுக்கொண்டுவருவதைச் சத்துருக்கர் கண்டு தம்முடைய இராமபாணமாகிய இருபத்தைந்து நாராசபாணங்களை எடுத்து விடுத்தார் அதுகள் பூமியாகாயமெல்லாம் புகையெழும்ப புறப்பட்டு லவன்விட்ட நூறு நாராசபாணங்களையுமறுத்து பூமியிற்றள்ளி சத்துருக்கமகாராசனிடம் வந்துவிட்டதுகள். உடனே லவனுனவன், ஒரு அக்கினியாஸ்திரத்தை எடுத்து மந்திராபூதிகள் கொடுத்து விடுவிக்கவே, அதுவும் வடவாமுகாக்கினியைப்போல் பொரி புகைகளுடன் சடசடவென்கிற தொனிகளுடன் மகாதுரிதமாய் வருகிறபோது சத்துருக்கர் தம்முடைய இராமபாணமாகிய அக்கினியாஸ்திரத்தை எடுத்து மந்திராபூதிகள் கொடுத்து விடுவிக்கவே, அதுவும் ஆவென்று வாயைத்திறந்துகொண்டக்கினிப்பொறிகளை அமோகமாகக் குபீல் குபீலென்று கக்கிக்கொண்டு புறப்பட்டு லவன்விட்ட அக்கினியாஸ்திரத்தைக் கமளீகரம் பண்ணிப்போட்டு வந்துவிட்டது.

இப்படியாக லவன்விட்ட பாணங்களையெல்லாஞ் சத்துருக்கரானவர் கண்டித்து லவனுக்குக் காயம்படாமற் செய்துவருகையில், லவனுனவன் கண்டு மனபயங்கொண்டு கண்களிரண்டுங்கருத்து மருண்டு ஓகோ! மலைபோலவந்த இராட்சசவீரர்களை வதைத்து, சிலைகளையுந் தலைகளையுங்கொய்து நிலைகலங்கச் செய்ததுமன்றி, இராஜர்களான மன்னர்களையும் சின்னமடையச் செய்வித்த நாம் இம்மன்னன் கையிலகப்பட்டுமுன்னும் பின்னும் முழிக்கலாயிற்று, என்செய்வேன் ஐயோ! அம்மணி, நானிவ்வளவு பாணங்களைவிட்டும் எதுவும் பயன்படாமற் கெட்டுப்போயிற்றல்லவா நல்லது இன்னமும் பார்ப்போமென்று ஒரு பர்வதாஸ்திரத்தை எடுத்து மந்திராபூதிகள் செய்து எய்தான்.

அப்பர்வதாஸ்திரமாந்து வெளிப்பட்டு அனேகபர்வதங்களாய் உருவங்கொண்டு சத்துருக்க மகாராசன்மேரில் வருகிறபோது அவரும் ஒரு வச்சிராயுதத்தை எடுத்து மந்திராபூதிகள்செய்து பர்வதாஸ்திரத்தை யறுத்துப்போடவே லவன், கண்டு மனதிடங்கொண்டு மறுபடியுஞ் சலுதியில் வில்லையெடுத்து முகத்திற்குநேராய்ப்பிடித்தான். அதனைக்கண்டு சத்துருக்கர் நகைபுரிந்து யவன்றிரந் தெரிந்து மனதிற் களிப்புகொண்டவராய் வாருந்தம்பி! லவனே, ஏன் வீணில் மாண்டு

போகிருய் வேண்டாம் வேண்டாங் குதிரையைவிட்டு தாயு டன் பிள்ளையாகப் போய்ச் சேர்ந்து சுகித்திருக்கக் கடவாய் நானும் மன்னனுடைய சேனைகளை யெழுப்பிக்கொண்டு குதிரையுடன் அயோத்திபோய்ச் சேருகிறேன் நீ சிறுபிள்ளையான படியால் முன்பின் யோசனைசெய்யாமல் என் சேனைகளை மாய்த்தாய் பெரிதல்ல, போருக்கு நேராகமாட்டாயென்று கூறியதை லவன்கேட்டு, ஓ! சத்துருக்கனே? கேளும், நீ என்ன பிரியவசனம் புகன்ருலு முன்னைவிடேன் பயப்படேன் என்றிருவரும் வாதாடிக் கொண்டிருக்கையில் காலசித்தனனவன் பாணவேக மடங்கினவுடனே அதிவேகமாய் இரதத்தை நடத்திக்கொண்டு ரணக்களம்வந்து சத்துருக்கருடன் கலந்து விசேஷமென்ன நடக்கிறதோவென்று அதிக சாக்கிரதையுடன் பக்கத்திலிருக்கையிற் சத்துருக்கர் லவனைப்பார்த்துச் சொல்லுகிருர்.

வாராய் தம்பி! லவனே? நான் யுத்தத்திற்கு உனக்கு பிரிய வசனம் சொல்ல வரவில்லை சிறுபிள்ளை யானபடியால் உனக்கு பிரியவசனம் புகன்றேன், அதனுற் குற்றமொன்றுமில்லை என்றுசொல்ல லவனதிக கோபமாகி ஓ! சத்துருக்கனே? நானென்ன சொன்னபோதிலு முனக்கு ரோஷத் துவேஷமில்லை ஆனபடியினுற் சிறுபிள்ளையினுடைய சாமார்த்தியத்தை இதோ காண்பிக்கிறேன் பாரென்று முகத்துக்கு நேராய்ப்பிடித்த வில்லி லனேக அஸ்திரங்களைச் சந்தித்து ஒன்று பத்து-நூறு-ஆயிரம்-பதினுயிரம்-கோடி-சங்கம் மகாசங்கமென்று சமுத்திரஜலத்தையெடுத்து குப்புரக்கவிழ்த்தா லெப்படியிருக்குமோ, அப்படியாக ஓய்ஒழிச்சலில்லாமலும் மூச்சுவிடாமலுஞ் சரசரவென்று சரங்களை பொழிகிறபோது சத்துருக்க மகாராசனும், மிதமில்லாத பாணங்களை வாரிவாரி விறுவிறென்று பொழிந்து லவன்விட்ட அஸ்திரங்களனைத்தும் ஒன்ருவது சேனைகள்பேரில் போகவொட்டாமல் அறுக்க, அவ்வம்பு சரீரத்திலும் வந்து பாயவுஞ் சேனைகள்பேரிலும் போய்விழுந்து சேனைகளுமளந்தலைப்பட்டார்கள்.

பின்னும் லவன் மண்டிபோட்டவண்ணம் பாணங்களெடுக்கிறதும் வில்லிற்ருெடுக்கிறதும் தேவர்களுக்குத் தெரியவில்லையாம், இவனுடைய கரவேக சரவேகந்தா னென்னமோவென்று கண்ட ராஜாக்கள் யாவரும் நடுங்க இராட்சதாளுமொடுங்க சேனைகள் சிதறி, சிந்தை பதறி, இந்த சேவகம் நமக்குவேண்டாம் வேண்டாமென்று உயிருண்டானல் உப்பு

மாறி பிழைக்கலாமென்று நினைவுகொண்டிருக்கையில்கால்பல மான ராசாக்கள் மனபயங்கொண்டு இந்த சண்டையில் மண்டைபோமோ, தொண்டைபோமோ, அண்டை நெருங்கினுற் கண்டம்போமே, கண்டிலோம் லவனே! உன் வில்லுக்கும் கோதண்டபாணத்திற் கிருகோடி தண்டம் உன் பாதத்திற்கு முக்கோடி தண்டமென்று கண்டகண்ட விடமாய் இனி அண்டோமென்றேடும்படியாய் சாடுகிறபோது சத்துருக்கமகாராசனுக்கும் லவனுக்கும் யுத்தமானது மெய்மறந்து போகிறது அந்த யுத்த மெத்தன்மையொத்ததென்றல் இலட்சுமணரும் இந்திரசித்தும் புரிந்த யுத்தத்தைப் போலவும் ஸ்ரீராமரும் அதிகாயனும் போர்செய்தமைபோலுமிருந்தது அப்படியாக லவன் பாணங்களை விடுகிறபோதுசத்துருக்கமகாராசர் எத்தனை பாணம் விடுப்பார் எத்தனை பாணங்குறிப்பார் இங்கு பாணங் கண்டிப்பார், இங்குபாண மங்குபாணம் எங்கும் பாணமாய் கிழக்கு தெற்குஞ் சரமேற்குஞ் சரம் வடக்குஞ்சரமாக நான்கு திக்கும் லவனுடைய பாணவேகமானது மூடிக்கொள்ளவே, அதனுற் சத்துருக்களுடைய கையுமெய்யுஞ் சலித்து மண்டிப் போட்டு காலும் வலித்துக்கொள்ள, அதுவுமன்றி பாணங்களுடைய அக்கினி வேகத்தால் முகமுமுகமுந் தீய்ந்துபோகிறது அதனை அந்தரவாசிகளாகிய இந்திரனும் தேவர்களும் பார்த்து இந்த யுத்தம் ஸ்ரீராமராவண யுத்தமென்று சொல்லலாமோ, அல்லது சுப்பிரமணியருஞ் சூரபத்மனுஞ் செய்த யுத்தமென்று சொல்லலாமோ, இந்த யுத்தத்திற் கெதுவுமினை சொல்லப்போகாதென்று பார்த்துக்கொண்டிருக்கையில் லவனுனவன் பாணங்களை மட்டிட்டு சொல்வதற்கு கட்டுப்படாத கட்டுகட்டாயுருவிவிட்டு ஒருவர்க்கொருவர் தெரியாமல்விடும் அஸ்திரங்களினுல்மூடி அந்த அஸ்திரம் போகிற வேகத்தோடுகூட அதிவேகமாக ஓடிவந்து சத்துருக்கருக்குத் தெரியாமல் அவருடைய கைவில்லையையுங் கண்டித்துத் தள்ளி அவருடைய மார்பைப்பார்த்து நாற்பது நாராசபாணங்களை விட்டானதுகண்டு சத்துருக்கமகாராசர் அதிசீக்கிரமாகவில்லையும் நாணியையு மிருக்கப்பார்த்து ஒரு திவ்வியாஸ்திரத்தை எடுத்து வில்லிற் சந்தித்துவிட்டு லவன் விட்ட பாணங்களையெல்லாம் பகலவன் பனிபோல நீக்கி வெட்டவெளியாக்கி அட்டகாசஞ்செய்து அதிசீக்கிரமாக பின்னுஞ் சிலசரங்களையெய்து நாற்பது நாராசபாணங்களையும் ஒரு ராமபாணத்தை

யும் விட்டு லவன் பிடித்திருந்த வில்லையுங் கண்டித்துப்போட்டார்.

உடனே லவனானவன், வில்லை யெறிந்துவிட்டு உடைவாளையுருவிக்கொண்டு, முன்கந்து பின்கந்து முப்பத்திரண்டு கந்துகொண்டு, சத்துருக்கனை அரவெட்டவேணுமென்று சேற்கண்டையானது சிவ்வென்று பாய்வதுபோற் பாய்ந்து வருகிறபோது சத்துருக்கமகாராசன் ஒரு இராமபாணம்விட்டு உடைவாளைப் பொடியாக்கிப்போட்டாரதுகண்டு லவன் சினங்கொண்டு சொல்லிக்கொள்ளுகிறான். அந்தோ இந்தராசன் கைவில்லையுங் கண்டித்தான். இவன் வல்லமைக்கு நிகர் இவ்வெல்லையி லொருவருமில்லையென்று சொல்லுகிறதற்கு ஐயமுண்டோ, நல்லது இன்னம் பார்ப்போமென்று இடுப்பிற் கட்டிய முப்பத்திரண்டாயுதங்களையும் ஙிவ்ஙிவ்வென்று சத்துருக்க மகாராசன்பேரில் விட்டெறிந்தான். அதுகண்டு சத்துருக்கமகாராசனும் ஒரு பாணம்விட்டு வருகிற ஆயுதங்களையெல்லாம் நடுவதுபாதியில் துண்டுதுண்டாய் கண்டனம் பண்ணிவிட்டு லவனைப்பார்த்துச் சொல்லுகிறார்.

லவன் சத்துருக்கனிடத்தில் கட்டுப்படுதல்.

கலிவிருத்தம்.

உப்பர்வாழுலகமெங்கு மிகுதிறவர்களாற்பெய்த
அப்புவணெருங்கிச்சீவ ராலியைக்கவருங்காலில்
தம்பிசத்துருக்கன்தொட்ட சரமதால்மண்மேற்சாய்ந்தான்
சப்புளாம்லவனைத்தாவி திறமுடன்கட்டினானே.

அடாதம்பி! லவனே இனியாகிலும் எங்கள் குதிரையை விட்டு நீசுகமாய் நடந்துவிடென்றுகூறவே, லவனதிககோபமாகி ஓ! சத்துருக்கனே? தானே சூரனென்று ரதத்திலேறி நின்று வில்லை கையிற் பிடித்த பிடியாக வல்லமை பேசின உன்னை இதோ என்கைகுத்தினாற் குத்தி வில்லையுமொடித்து உன்னையு மடித்து எமலோகத்திற் கனுப்பிவிடுகிறேன் பாரென்று கையைமூடிக்கொண்டு ஓடிவருகிறபோது சத்துருக்கமகாராசர் கண்டு இதுதான் லவனைப்பிடிக்க சமயமென்று இரதத்தைவிட்டுக்குதித்து இடசாரி வலசாரியாகவந்து லவனுடைய இடுப்பிற் கையைக் கொடுத்து பிடிக்கப்போகுஞ் சமயத்தில் லவன்கண்டு சிவ்வென்றுபாய்ந்து இப்பால் வந்துவிட்டான்

பின்னுஞ் சத்துருக்கமகாராஜன் கோபங்கொண்டு மறுபடியும் லவனை சேர்த்துப் பிடிக்கச்சொல்லுகையில் லவனுமதற்குத்தப்பித்துக்கொண்டான். அதனால் கண்களிரண்டுஞ் செவ்வானம் போற்சிவக்க, விழியையுருட்டிபார்த்து லவனை பாணத்தினாற் கட்டவேணுமேயல்லாமல் மற்றவிதத்தில் பிடிபடமாட்டானென்று எண்ணி லவனோடு இனி போராட்ட மென்னத்திறகென்று இரதத்திலேறி சீக்கிரமாக வில்லையெடுத்து ஒரு கட்டுபாணத்தைப் பிடுங்கி வில்லிற்சந்தித்து விட்டு லவனைக்கட்டி மூர்ச்சையாக்கி தேரின்பேரிற் கொண்டுவந்து குத்துக்காலுடன் கட்டிப்போட்டார். அதுகண்டு தேவர்கள் சத்துருக்கனை மெச்சிக் கொண்டாடினார்கள். அப்போது இராஜாக்களும் இராட்சத சிரேஷ்டர்களும் பாலபலமும் லவன் பிடிபட்டான் இனி நாம் பிழைத்தோமென்று ஜெயபேரி, ராயபேரி, வெங்கலபேரி, கர்ணபுரி, தப்பட்டம் இப்படி சொல்லப்பட்ட முப்பத்திரண்டு மேளவாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்கச்செய்து அஸ்வமேதக்குதிரையைக் கூட்டிக்கொண்டு சரஸ்வதி ஆற்றங்கரையில்வந்து கூடாரமடித்து தண்டுபாளையமிரங்கி இறந்தசேனைகளை எழுப்பிக்கொண்டிருந்தார்கள்

வனத்துப் பெண்கள் லவன் பிடிபட்டதை
சீதையம்மனுக்குச் சொல்லல்.

கலிவிருத்தம்.

வண்மைசேர்லவனுக்குற்ற வண்மையைக்கண்டமாதர்
திண்ணென நிலத்திற்சாய்ந்து சேர்ந்துபின்தெளிந்தெழுந்து
கண்புனலுதிர்தல்செய்து காரிழைக்குப்போமென்று
மண்புகல்சீதாதேவி மலரடிதொழுதுசொல்வார்.

இந்தப்படி லவன் சத்துருக்கனிடத்தில் பிடிபட்டுப்போக இதுகளெல்லாம் அவ்வனத்துப் பெண்கள் தூரத்தில்நின்று செடிமறைவில் பார்த்துக்கொண்டிருந்து ஐயையோ லவகுமாராவென்று அடித்துமோதி, பூமியில் விழுந்து, அலறியெழுந்து வால்மீகருடைய வனத்தைநோக்கி அழுதுகொண்டு வருகிறார்கள் எப்படியென்றால் அடா தம்பி! லவனே? சீதாலட்சுமியானவள் எங்களை லவகுமாரனெங்கேயென்று கேட்டால் நாங்களென்னசொல்லுவோம், உன் தமயன் குசலனுக்கு யாது தேறுதலை புகல்வோம், தப்பி இதற்கோ நாங்கள்

கூடவந்தோம், எப்படி சொல்வோம் இருவரிலொருவராவது வருவீர்களேயானல் பிரியமாகப்பெற்ற உரிய அன்னைக்கு பரிவுண்டாகும், அறியாதவர்களோடே தெரியாமல் வந்தோமே, உங்கள் சொல்லும் கல்வியும் சவுரியமுஞ் சீதையம்மன் காண்பாள், கருத்திலாசைபூண்பாள், அதுவுமன்றி உங்களையராகிய வால்மீகர் காலையு மாலையு முங்கள் கனிவாய்மொழியைக்கண்டு கமண்டலம் கோதண்டம் இவைகளை விட்டு கையிலெடுத்து கனிவாயுடன் முத்தங்கொடுத்து கருத்துற்று கவலையுற்று காத்துக்கொண்டு வளர்த்துவந்தசெல்வர்களே, அவரென்ன செய்வாரோ அப்பா லவகுமாராவென்று தாரைதாரையாக கண்களில் நீர்பெருகியழுது, ஆண்டவனைத்தொழுது, அப்பா குசலா, வேட்டையிற்றனித்தாயே, நீயாவது உன்தாயிடம்வந்து சேர்ந்தாயோ, அரி ! அரி ! அச்சுதா, பரந்தாமா ஆபத்பாந்தவாவென்று அழுது புலம்பி, காடு வனங்களைத்தாண்டி, சீதையம்மனிருக்கும் பர்ணசாலைக்கு வந்தார்கள். அப்போது சீதையம்மன் எப்படியிருக்கிறளென்ருல் மைந்தர்களை வேட்டைக்கனுப்பினேமே அஸ்தமித்து 5-நாழிகையாயிற்றே காலை 8-நாழிகை சுமாருக்குப் போனபிள்ளைகள் இதுவரையிற் காணேமேயென்று மனங்கலங்கி குசலவாள் வருகிறவழியைப் பார்த்துக்கொண்டு சீதையம்மன் பர்ணகசாலையிலிருந்தாள்.

அப்பால் தாதிப்பெண்களானவர்கள் அழுதுக்கொண்டு சீதையம்மனிடஞ்சென்று அடிவணங்கி நின்று சொல்லுகிருர்கள் அம்மா உன் குமாரர்களிருவரும் உன்னிடத்திற் செலவுபெற்றுக்கொண்டு வனத்திற்சென்று வேட்டையாடி திரும்புங்காலையில் குசலவன்மேல் நோக்கி மறுவனம் வேட்டைக்குப் போயினன். லவகுமாரனும் நாங்களும் பர்ணகசாலைக்கு வருகையில் ஒரு அஸ்வமேதக் குதிரையானது யார் விட்ட குதிரையோ தெரியவராது. அக்குதிரையின் பின் வந்த சேனைகளையுங் கொன்றுவிட்டான். அதன் பின்பு யானை குதிரை சேனைகளும் வந்துகூடி லவனுடன் போராடி லவனை கைப்பிடியாகப் பிடித்துக்கட்டி இரதத்தி லேற்றிக்கொண்டு போய் சரஸ்வதியாற்றி லெல்லோருங் கூடாரம்போட்டு தண்டிறங்கி யிருக்கிருர்கள். இந்நேரந் தம்பி லவனை யென்ன செய்தார்களோ, ஏதாயிற்ரோ, தெரியவராதென்ருர்கள். அதுகேட்டு சீதையம்மன் அடித்துமோதி, அலறி விழுந்து,

கடகடவென்று புரண்டழுது களையாகவே தாதியார் அம்மனை யெடுத்துக் களையாற்றினார்கள்.

அப்போது சீதாலட்சுமியானவள் களையாறி யெழுந்திருந்து எப்படி யழுது புலம்புகிறு ளென்றால் ஐயையோ லவகுமாரா உங்களையர் வால்மீகரில்லாத வேளையில் என்னை இப்படி தனிமையாய்விட்டு வஞ்சனைசெய்துப் போகலாமோ உன் தமையன் குசனில்லாத வேளையில் குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தஞ் செய்யலாமோ யுத்தம் பண்ணினாலும் எதிரிகள் கையிலகப்பட்டு மாண்டுபோவாயென்று இதுவரையிலிதற்குத்தானோ வளர்த்தேன். அடாமகனே! லவகுமாரகா, எதிரிகள் கையிலகப்பட்ட உன்னை என்ன செய்தார்களோ, யாதொன்று மறியேன் நான் என் பிராணநாதரை விட்டுப் பிரிந்த விசனத்தை உங்களால் மறந்தே னவராசையைத் துறந்தேன் அயோத்தியின் வாழ்வையும் நீக்கினேன் அப்பா லவகுமாரகா உன்னை கைப்பிடியாகப் பிடிக்கையில் நீ எவ்வாருய்க் கதறி யழுதாயோ உன் கையில் வில்லம்பு இல்லாமற் போய் விட்டதோ ஐயையோ லவகுமாரா அயோத்தியை யரசாள்வாயே யென்று அதிக ஆவலோடு உங்களையரும் நானும் நம்பியிருந்த எங்களை வெம்பவைத்து நமனுக் கிரையாளுயோ உன் தமையன் வந்து தம்பி லவனெங்கே யென்று கேட்டால் என்ன சொல்வேன் வால்மீகருக் கேதுரைப்பேனென்று சீதையம்மனவள் புலம்புகிற ஓசையை அந்தவனத்திற்குள் வருகிற குசலன்கேட்டு திடுக்கிட்டு நாம் வரவில்லையென்று நமது தாயார் அழுகிறுப்போல காண்கின்றது அதனை சல்தியிற்சென்று கண்டறிய வேணுமென்று பர்ணகசாலைக்கு வந்து அம்மா நானிதோ வந்தேன் நீ அழவேண்டாமென்று பாதத்திற் பணிந்தான். அப்படி வணங்கிய குசலனை யெடுத்து வாழ்த்தி உட்காரவைத்து சீதையம்மன் சொல்லுகிருள். அடா! குசலனே? உன் தம்பி லவனும் நீயும் வேட்டையாடச் சென்றீர்களே அவ்விடத்திலெங்கே கைசோரவிட்டாயென்ருள்.


அதுகேட்டு குசலன் சித்தம் நொந்து மெத்த வருத்தந்தந்து தம்பியை தனித்தனுப்பினேம் எங்கு நின்ருனே எவ்விடஞ் சென்ருனே என்னசெய்வோம் தெய்வமே எவ்வாறினி வாழ்வோமென் றெண்ணி இருதயங் குண்ணி கடவுளை நண்ணி துதிபண்ணி இது காலகெதியோ காரண விதியோ

யார்செய்த சதியோ தம்பியின் மதியோ தாயின் வாய்மொழியைத் தடுத்து சென்றோமே அதனாலோ "தாய்சொற்றாரந்தால் வாசகமில்லை" என்பதை மறந்தோமென்று வெதும்பிய கும்பியைமாற்றி பின்புபோய் தேடலாமென்று தயிரியங்கொண்டு சொல்லுகிறான். தாயே! நாங்களிருவரும் வேட்டைகளாடி ஆசிரமந் திரும்புங்காலையில் தம்பி லவனை முன்னதாக வனுப்பிவிட்டு நான் மறுவனந்தேடி வேட்டைக்குப் போயிருந்தேன் நான் பொய்சொல்லவில்லை இந்த வனத்துப் பெண்களைக் கேட்டால் சொல்லுவார்களென்றான். அதுகேட்டு சீதையம்மன் சொல்லுகிறாள். அடாமகனே? குமாரரத்தினமே உன் தம்பி ஆசிரமம் வரும்போது வனத்தில் ஒரு அஸ்வமேதக் குதிரை மேய்ந்துக்கொண்டிருந்ததாம் அதை லவன் பிடித்துக்கட்டி குதிரையின் பின் தேர் பரி சேனைகளோடு மூனைந்து யுத்தம் பண்ணுகையில் தம்பி லவனுக்கு வில்லம்பில்லாதபடியினால் எதிரிகள் லவனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டார்களாம். அவர்கள் சரஸ்வதி யாற்றங்கரையோரந் தண்டுவிட்டு பாளையமிறங்கி யிருக்கிறார்களாம் அவர்களுக்கோ ரதகஜ துரகபதாதிக ளிருக்கிறதாம் உங்களுக்கு யாதுமில்லையே நமது ஐயர் வால்மீக ரிவ்விடமிருந்தால் ரதகஜ துரக பதாதிகளும் உண்டுபண்ணிக் கொள்ளலாம் அவரில்லாத வேளையில் நான் வனவேட்டைக்குப் போகவேண்டுமென்று கூற என் வார்த்தையைத் தடுத்துப்போன உங்களுக்கு அபஜெயம் வந்ததே இனிநா னென்னசெய்வேன் மகனேயென்று புலம்புகையில் குசலன் சொல்லுகிறான். அம்மணி ஒருநாள் நானும் ஐயர் வால்மீகருந் தனித்திருக்கையில் ஒரு சுலோகஞ் சொல்லி என்னை யதற்கு பொருளென்னவென்று கேட்டார். அப்பொருள் தெரியாமல் சற்றுநேரஞ் சும்மாயிருந்துவிட்டேன். அதற்கவர் என்மீதிற் கோபங்கொண்டு அந்தச் சுலோகத்திற்கு அர்த்தஞ்சொன்னா ரதெப்படியென்றால் கைலாசவாசகராகிய பரமசிவ னிடப்பாகத்திலமர்ந்த உமாதேவியும், வைகுந்த வாசகராகிய ஸ்ரீமந் நாராயணருடைய மார்பிலுறைகின்ற மகாலட்சுமியும், சத்தியலோகவாசியாகிய பிரமதேவருடைய மனையாளாகும் சரஸ்வதிதேவியும், இம்மூன்று ரூபமும் ஒரு ரூபமாயிருக்கப்பட்ட உன் தாயார் சீதாலட்சுமியென்று தெரிந்துக்கொள்வாய் குசலனேயென்று இன்னுஞ் சில ரகசியப்பொருள் சொல்லி மனதில் வைத்துக்கொள்ளென்று சொன்னார்.

அப்படியெல்லாம் எங்களையர் வால்மீகராருளிச்செய்த திருக்க எங்களுக்கு யானைதேர் பரிசேனைகளில்லையென்றும், லவனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு போய்விட்டார்களென்றும் நீசொல்லலாமோ இந்தயீரேழுபதினாலுலகத்தையுங் கவிழ்த்துவிடவேணுமென்றாலுங் கவிழ்ப்பாய் நிறுத்தவேணுமென்றாலும் நிறுத்திரட்சிப்பாய் எங்களுக்கு ரதகஜதுரகபதாதிக ளில்லாவிட்டாலும் லோகமாதாவான நீர் ஆசீர்வாதஞ்செய்து ஒரு வில்லம்பு கொடுப்பதுனக்கரிதாகுமோவென்று ஸ்தோத்திரம் செய்யவே, சீதாலட்சுமிக்கு பூர்வக்கியானமுதித்து இனி குசலவனால் நடக்கப்போகிற காரியங்களுந் தெரிந்து சந்தோஷமாகி குசலனைப்பார்த்து கிருபைகூர்ந்து சொல்லுகிறாள்.

அப்படி! குசலனே? எதிரிகள்விடப்பட்ட அஸ்திரத்திற்கு இந்த பிரமாஸ்திரத்தைவிட்டறுத்துப்போடு நாராயணாஸ்திரங்களெய்தால் நீயிந்த நாராயணாஸ்திரத்தையெய்து அறுத்துவிடு சிவன்கை சூலமும் பாசுபதாஸ்திரமும் பிரமதெண்டும் எதிரிகள் விடுத்தால் ஸ்ரீமந் நாராயணர்கையி லிருக்கப்பட்ட நாராயணாஸ்திரத்தை யுனக்குக் கொடுத்தேன் இந்த நாராயணாஸ்திரங்கொண்டு கொய்துப்போடு எதிரிகள் சக்கரம் விட்டால் இதோ ஸ்ரீமந்நாராயணர்கையி லிருக்கப்பட்ட சக்கர முனக்களித்தேன் இச்சக்கரத்தினால் அந்தச் சக்கரத்தையுமறுத்து ரதகஜ துரகபதாதிகளெல்லாம் வந்தெதிர்த்தாலும் சம்மாரஞ் செய்துப்போட்டு இதோ உனக்கு மாளாத அட்சயத்தூணியுங் கொடுத்தேன் வில்லையுமழைப்பித்துத் தருகிறேனென்று வருணதேவனை நினைத்து கையை நீட்டினாள் அந்த வருணன் அம்மன் நினைத்த காரியத்தையறிந்து பிரசண்ட கோதண்டமென்ற வில்லையெடுத்து அம்மனுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து கொடுத்தானப்போது சீதாபிராட்டியும் அந்த வில்லைவாங்கி குசலன் கையிற் கொடுத்துக் கூறுகின்றாள்.

அப்பா! குசலனே? இந்தவில் ஸ்ரீமந்நாராயணருடைய வில் இதற்குமுன் ஈஸ்வரன் பிர்மா இந்திரன் அக்கினி இயமன் வருணனுடைய வில்லும் நிகரல்ல, இந்த யுக முழுகிப்போகுங்காலத்திலும் இவ்வில்லை எடுக்கிறதில்லை அப்பேர்ப்பட்ட பிரசண்ட கோதண்டத்தை உனக்குத்தந்தேன் இதோ உமையவள்கரத்திலிருக்கப்பட்ட பிரசண்ட கோதண்டத்தை யுனக்குத் தந்தேன் வாங்கிக்கொள், தேவர்களாவது இரா



சாக்களாவது வந்தெதிர்த்தாலுங் கொன்றுவிடும், மும்மூர்த்திகளுடைய பலமும் உனக்குத்தந்தேன் நீபோய் அவர்களை சம்மாரஞ்செய்து ஜெயமடைந்துவாரும் குமாரகாவென்று வாழ்த்தினமாத்திரத்தில் சீதையம்மனுக்கு பூர்வக்கியானமாறி கனவுகண்டதைப்போலாயிற்று சீதையம்மனானவள் காமதேனுவை நினைக்க அக் காமதேனுவானது தெய்வலோகம்விட்டு வால்மீகருடைய ஆசிர்மம் வந்தன. அதுகண்டு அம்மனானவள், வாராய் காமதேனுவே, குசலவாள் யுத்தத்திற்குப் போகிறபடியால் அவர்கள் நினைத்தயிடத்தில் நீசென்று பசியாற்றிப்போடென்று உத்தரவுகூற அவ்வாறேசெய்கிறேனென்று சீதையம்மனிடத்தில் விடைபெற்று தெய்வலோகம்போய்விட்டது. உடனே குசலனானவனெழுந்திருந்து அடிவணங்கி அம்மா, நான்போய்வருகிறேனென்று அம்புருப்பொதி முதுகிற்கட்டி வில்லை கையிலெடுத்துக்கொண்டு அன்னையை வணங்கி நின்றான். அப்படி வணங்கினவனைப் பார்த்து அடா மகனே? உன்னை அரியரப்பிரமாதிகள் வந்தெதிர்த்தாலுஞ் செயமடைந்து வருவாயென்று விடைகொடுத்தனுப்பினாள்.

குசலராஜன் சத்துருக்கமகாராஜன் தண்டைத் தேடிப் போகுதல்.

விருத்தம்.

பொய்ம்மதாகியவரக்கர்புல்லர் முதலானவர்க்குப்போதநல்கி
பொய்ம்மதத்தைநாட்டவந்த விராமனினவனுமிருடிவெழிற்காணுற்றத்
தெய்வீகக்குசலராஜேந்திரனன்னை சொற்படிசிலையம்பேந்தி
துய்யவன்தனைத்தேடிப்போரிடவே நாடுமிதைசொல்லுவோமே.

வேறு-விருத்தம்.

வனிதையிந்த வகையுரைக்கக் குசலராஜன் வணங்கி விடைகொண்டு வில்லுமம்புமேந்தி, முனிசிலைவேந்தரைமாய்த்துத் தம்பிதன்னைக் குடநிசையிற்றினகரனொளிக்கமுன்னம், இனிமைபெறக்கொண்டுன்பால் மீள்வேனென்று இருவிழியிற்கனல்பொரிப் படையைத்தேடி, தனிகரில்லாதசிங்கம் போன்றபாலன் றுவிஞனடவிதனின் மேவினானே.

இப்பால் குசலராஜனும் வனத்துப்பெண்களில் ஒருஸ்திரீயை வழிகாட்டச்சொல்லி புறப்பட்டு காடு, செடி, வனங்கடந்து சரஸ்வதியாற்றங்கரையில் வருகிறபோது ரணக்களமானது எப்படியிருந்ததென்றால் பர்வதங்கள்போல யானைகளும்

தேர்களும், குதிரைகளும், கால்பலமான ராட்சதாளும் விழுந்து, ரத்தவெள்ளத்திலுருட்டிக்கொண்டு மூன்றுபனைபிரமாணம் உதிரவெள்ளமோட அந்த ரத்தாற்றிற் காகங்கள் கத்த, கழுகுகள் பிடுங்க, நரிகள் ஊளையிட்டுப்புசிக்க, பூதப்பிரேதங்கள் பூரித்துண்டு மேளதாள பேரி சங்கங்களையெடுத்து குசலராசன் வருகிருன் இன்னங் கொற்றவர் விருந்து மெத்தத்தருவானென்று மேளத்தைக் கொட்டுகிறதும், ஆடுகிறதும் பாடுகிறதுமாக விருந்ததைக்கண்ட குசலனுணவன் மகா சந்தோஷமாக லவன் கையினல் வெகுசேனைகள் மடிந்ததென்றெண்ணி வருகிறகாலத்தில் சத்துருக்கனுடைய தண்டானது சரஸ்வதியாற்றங்கரையி லிருக்கக்கண்டு அத்தண்டில் மெதுவாகநுழைந்தான். அத்தண்டிலிருக்கப்பட்ட ராசாக்களும், இராட்சதாளும், சேனைகளும், குசலனைப்பார்த்து இவனுர் அச்சம் பயமில்லாமல் நமது தண்டில் வருகின்ருன் இவனைப்பார்த்தால் ஓட்டைசாணில்லே இவனுடைய வில்லைப்பார்த்தால் இவனுக்கு மிரண்டுகொண்டதாயிருக்கின்றதே இந்த வில்லில் மணிகளும் கட்டியிருக்கின்றது இவனைக் காணும்போதே கெற்பங் கலங்குகின்றது. இவன் வில்லிற்கு நிகரானவில் சத்துருக்கமகாராசனுடைய வில்தவிர மற்றபேர் வில் புல்லுதான் என்றெண்ணினவர்களாய் இராமனுண்டால் நமக்கென்ன நயம், லவன் தமயனுண்டால் நமக்கென்ன நஷ்டம், உமக்கென்ன எனக்கென்னவென்று சும்மாயிருந்துவிட்டார்கள்.

அதுகண்டு குசலராசனுங் குஞ்சிரிப்புகொண்டு பாராசவுக்கைதாண்டி இரண்டாமணியில் வருகிறபோது இராட்சதாள் குசலராசனைப்பார்த்து இவனுர் லவனுக்கு மூத்தவனைப் போற் காண்கின்றது இவனைப்பார்த்தால் லவனிலும் பராக்கிரமசாலியா யிருக்கின்ருன், இவனுக்கு நாம் பயப்படுவோமாகில் இராமத்துரோகம் வந்து நாடும். அசாரிசமாயிருக்கப்போகாதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு வில்லையெடுத்து நிறுத்தி பாணங்களைப்பூட்டி குசலராசன்பேரில் எய்கிறபோது அவ்விராசனும் வருகிற அஸ்திரங்களையெல்லாங் கோதண்டத்தினல் தட்டிவிட்டு தன்னுடைய பிரசண்டகோதண்டத்தை பூமியில் நிறுத்தி நாணிபிகிந்தமாத்திரத்திலண்டகடாகமும் படீலென்று வெடிக்க, பூமியானது தாழ, ஆதிசேடன் ரத்தங்களைக் கக்கிக்கொள்ள, அஷ்டகெஜங்க

ளும் வீறிட, அஷ்டகுல பர்வதங்களும் நடுங்க, அஷ்டதிக்குப் பாலகர் பயங்கொள்ள, அஷ்டவயிரவர்களுந் திடுக்கிட்டு பதுங்க, தேவர்கள் நடுங்கி மேலண்டத்திற்கு ஓடிப்போக, சத்தசமுத்திரமுங் கொதிப்பெடுத்து ஒரு சுற்று நீர் வற்றிப்போக சந்திரசேகர சடாமண்டலதாரியா யிருக்கப்பட்ட பரமேஸ்வரனும் பார்வதியுங்கேட்டு குசலன் செய்யும் யுத்தத்தைப் பார்ப்போமென்று ரிஷபவாகனமேறவே தண்டிகேஸவரர் பிரிங்கி மார்க்கண்டேயர் குண்டோதரர் முதல் பூதப்படைகளும் புடைசூழ புறப்பட்டார். அப்படி பரமசிவன் புறப்படவே, விநாயகர் வீரபத்திரர் சுப்ரமணியர் பிரமதேவர் தேவேந்திரன் அவரவர்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு தேவர்கள் புடைசூழ, தேவதுந்துமி முழங்க, தெய்வரம்பையர்கள் நடனம்புரிய, கைலாயம் பிரமலோகம் தெய்வலோகம் விட்டு ஆகாயத்தில் வந்து நிறைந்தார்கள். அந்த வில் குணத்தொனியுடைய சத்தமானது இராட்சதர்களும் கேட்டு திடுக்கிட்டுச் சொல்லுகிறார்கள். இவனுடைய வில்லின் திறத்தைப்பார்த்தால் நம்மையெல்லாம் இந்த வில்லுக்கிரை கொடுப்பான்போற் காண்கின்றது. இந்த வில்லின்முன் திரிமூர்த்திகளுடைய வில்லும் நிகரல்ல வென்பாரும், மேலும் இந்த வில் அனேக ரணங்கண்ட வில்போற் காண்கின்றதென்பாரும், அப்பா இந்த வில்லோ ஸ்ரீராமர் கைபிரசண்ட கோதண்டம்போ லிருக்கிறதென்பாரும், இது வில்லல்ல இராட்சதாளைக் கொல்லவந்த வல்லமை பொருந்திய நமன்போ லிருக்கின்றதென்பாரும், இவனைப்பார்த்தால் சிறுபிள்ளையா யிருக்கின்றான். இவன் பிடித்திருக்கப்பட்ட வில்லைப் பார்த்தால் அவனிலு மிரண்டுகொண்டதா யிருக்கிறதென்பாரும், இவனுடனெதிர்த்து யார்தான் போராடுவார்களென்பாரும், இந்தப்படியாய் நாணிபிகிந்த சப்தத்தில் சகலரும் மனங் கலங்க அந்தவேளையிற் குசலராஜனானவன் அனேக பாணங்களை வில்லிற்றெடுத்து சேனைகள்பேரில் விடுகிறபோது சேனைகளோவென்றால் சின்னபின்னமாய் கால்மாடு தலைமாடாக விழத் தலைப்பட்டார்கள்.

குசலராஜனுக்கும் சுவேலராஜனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

யானனம்போற்சென்றதிருக் குசலவேந்த னங்குள்ள சுவேலனையுமவ
ன்றன்னைச்சூழ்ந்த, யானைபரிதளங்களைசொற் கரிக்கூட்டம்போற் றுவியொ
ருகணப்போதி லொழிப்பேனென்று, வானவருமன்னவரு நடுங்கனணில்
வலமுழக்கைகாட்டியிடி முழக்கம்போலச், சோனைமழை பெய்வதுபோற்
சிலகூட்டத்தைச் சொரிந்திட்டாரிருவரும்போர் புரிந்திட்டாரே.

அதனல் சுவேலராஜன் கோபமாகி, இரதத்தை குசலராஜன் முன்பாக நடத்திச் சொல்லுகிருன். அப்பா சிறுபிள்ளாய், எங்கள் சேனை உன்னை யென்ன செய்தது நீயார், உன் தாய் தந்தை பேர் யாது, சொல்லடாவென்று கேட்டான். அதுகேட்டு குசலராஜன் சொல்லுகிருன். அடா! இராஜனே? நீயோ? என் தாய் தந்தை நாமதேயங் கேட்கிறவன், படுகளத்திலொப்பாரியாட வந்தாயோ, அடா நில்லு நில்லு, சில்லு சில்லாய் கொய்கிறேனென்று, வில்லிலிரண்டு திவ்வியாஸ்திரங்களை தொடுத்து விடுத்தான். அந்த திவ்வியாஸ்திரங்களும் விடுபட்டு தங்கக்கட்டுகளுடன் பிண்டபட்சி யிறகு பூண்ட காலகோட்டி விஷம்போல ஒன்று பதினுயிரம் லட்சங் கோடியாய் அவதரித்து சீறிக்கொண்டு வருகிறபோது, சுவேலராஜனுங்கண்டு அதிசீக்கிரமாய் ஒன்றின்மே லொன்ருய் அனேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து வருகிற திவ்வியாஸ்திரத்தின்பேரில் விட்டுவிட்டான். அந்த திவ்வியாஸ்திரங்களும் விடுபட்டு நாகசற்பப்போல் ஒன்றேடொன்றுராய்ந்துக்கொண்டு அதிவேகத்துடன் குசலராசன் விடுத்த அஸ்திரங்களின்பேரிற் சடாலென்று மோதி குசலராசன் விட்ட திவ்வியாஸ்திரம் அறுபடாமல் சுவேலராஜன் விட்ட திவ்வியாஸ்திரமெல்லாம் அறுபட்டு பூமியில் விழுந்துப்போயிற்று. அப்போது குசலனுடைய திவ்வியாஸ்திரமானது திரும்பவும் அம்புருவில் வந்தடைந்தது. அதனல் சுவேலராசன் கோபமாகி பற்களை நெறநெறவென்று கடித்து 10-நாராசபாணங்களை வில்லிற் றெடுத்துக்கொண்டு குசலனைப் பார்த்துச் சொல்லுகின்ருன்.

அடா! குசலனே? கேளாய், என் தமயன் அரண்யமகாராஜனையும், சுரதமகாராஜனையும், உன் தம்பி லவன் கொன்றபடியால் அப்பழிக்கு உன்னைக்கொன்று பழிதீர்த்துக்கொள்ளு

கிறேன் என்றதைக்கேட்ட குசலன் சுவேலராஜனைப் பார்த்துச் சொல்லுகிறான். கேளும், இராஜனே? என் தம்பி உன் தமயன்மாரைக் கொன்ற பழியை என்னைக் கொன்றல்லவோ பழிதீர்க்கிறேனென்று புகன்றாய், ஆனபடியால் என் தம்பி பங்குக்கு உன் தமயன்மா ரிருவரைக் கொன்றான். அந்த வரிசை தப்பாமல் என் பங்குக்கு உன்னைக் கொல்லாமல் போவேனேயாகில் நான் பிடித்தது கோதண்டமுமல்ல, என் பேர் குசலனுமல்லவென்று சொல்லவே, சுவேலராசனுக்குக் கோபமூண்டு கண்களிரண்டும் புகைகளெழும்ப, மீசைகள் படபடவென்று துடிக்க குசலராசனுடைய வில்லை உருட்டிப் பார்த்து 10-நாராசங்களை வில்லிற்றொடுத்து விட்டான். அந்த நாராசங்களும் வில்லிலிருந்து நாகசற்பம்போற் சீறிக் கொண்டு வந்து குசலனுடைய வில்லின்பேரிற் பட்டு கூர்மடங்கி பூமியில் விழுந்துவிட்டது. அதுகண்டு குசலனானவன் நகைத்துச் சொல்லுகிறான்.

அடா! சுவேலராஜனே? சொற்பபலத்தின் கருவங்கொண்டோ என்னை ஜெயிக்கப்போகிறாய் போபோ, உன்னைப்போலொத்த 100-சுவேலன் வந்தாலும் ஒரே பாணத்தினால் எமலோகங் குடியேற்றிவைப்பேன். உன்னால் என்னை ஜெயிக்க வல்லமை யிருந்ததேயானால் எடுபாணங்களைப்பார்ப்போமென்றான் அப்போது சுவேலராஜன் கோபமாகி கண்ணிமை கொட்டுமுன்னமே மாரிபோல சரமாரியாய் அநேக பாணங்களை வாரி குசலன்பேரில் சொரிந்ததைப் பார்த்து குசலனும் அநேக பாணங்களை வில்லிற்றொடுத்து சுவேலராஜன்விட்ட பாணங்களையெல்லா மறுத்துப்போட்டு மறுபடியும் 100-திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித்து இராட்சதாள்பேரில் விட்டான். அந்தப்பாணங்களானது 1-10-100-1000-அநேககோடி பாணங்களாய் இராட்சதாளையும் இராஜாக்களையுங்கொல்லும்போது சேனைகளானது எப்படி விழுகிறதென்றால் யானைக்கிரண்டு பாணம் மாவுத்தனுக் கொருபாணம் இராஜனுக் கிரண்டு பாணம் தேருக்கொருபாணம் குதிரைக்கு நான்கு பாணம் காலாள் ஒன்றுக் கொருபாணம் இந்தப்படியாய் காலறுந்தும் கையறுந்தும் தலையறுந்தும் மார்புபிளந்து அச்சுமுறிந்தும் ஆணிகழன்றும் குத்துக்காலொடிந்தும் குடைக ளறுந்தும் யானை சேனை பரிவாரங்கள் வெகுவாகமாண்டு உதிரவெள்ளமானது ஓடத்தலைப்பட்டது. அதுகண்டு இராட்சதாளுடைய

தண்டிற் கோவென்ற சத்தமுண்டாயிற்று அச்சத்தம் சத்துருக்கமகாராஜர் கேட்டு அருகாமையிலிருந்த சோமகாச மகாராஜனைப் பார்த்துச் சொல்லுகிறார். கேளும், சோமகாசமகாராஜனே? இதென்ன இப்படி விற்குணிசத்தமும் இராட்சதாளுடைய இரைச்சலும் கேழ்க்கின்றது இப்போது நம்முடைய தண்டில் வந்து யுத்தம் பண்ணுகிறவன் யாவன் சொல்லென்றார். அதற்கு சோமகாசமகாராஜன் யோசனை செய்துக்கொண்டிருக்கையில் இரண்டு தூதுவர்கள் வந்து சத்துருக்கரை வணங்கி ஐயா! சத்துருக்கமகாராஜரே? கேளும், நம்முடைய தண்டில் யாரோ ஒரு சிறுபிள்ளை வந்து யுத்தஞ்செய்கிறான், அவனைப்பார்த்தால் லவனுக்கு மூத்தவனைப்போற் காண்கின்றது இவனைப்பார்த்தா லவனையும் பார்க்கவேண்டியதில்லை அவன் கையிற்பற்றிய வில்லைப்பார்த்தால் கெற்பங் கலங்குகின்றது அப்படிக்கொற்ற பலமானவில் நமதுதண்டிலில்லையென்றார்கள். அதுகேட்டுச் சத்துருக்கமகாராஜன் காலசித்தனையழைத்துச் சொல்லுகிறார்.

வாராய், காலசித்தனே? நம்முடைய தண்டு பாளையங்களைப் பவுஞ்சிட்டு நிறுத்திவையுமென்றார். அந்தட்சணங்காலசித்தன் இராசாக்களுடைய கால்பலங்களை முன்னணியில் நிறுத்தி யதற்குப் பின்னணியில் இராட்சதாளை நிறுத்தி சத்துருக்க மகாராசனையும் நடுவணியில் நிறுத்தி சந்தனமகாராசன் சவுந்தரராசனையும் அதற்கு முன்னணியில் நிறுத்தி பவர்னன் கதாயுதன் மட்சயந் தனுமானையும் அதற்கு முன்னணியில் நிறுத்தி சலவசந்தனும் தானுமாக படைகளுக்கு முன்னின்று பேரிகையறைவித்தார்கள். அப்போது சுவேலராசனும் சில இராட்சதாளும் குசலராசன்பேரில் முனைந்து அஸ்திரங்களை மிதமில்லாமற் வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணிவிட்டார்கள். அந்த அஸ்திரங்களும் நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு வருகிறபோது குசலராஜனும் பாணங்களைவிட்டுவருகிற அஸ்திரங்களையெல்லா மறுத்துத்தள்ளிவிட்டான். அதனல் சுவேலராசன் மகா கோபதீப்தனாய் எறிந்து விழுந்து நாராச பாணங்களெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணிவிட்டான். அந்த நாராசபாணங்களும் வில்லைவிட்டு விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வருகிறதைக்கண்டு குசலராசனும் தட்சணம் 10-நாராசபாணங்களைப்பிடுங்கி வில்லிற்சந்தித்துவிட்டு அந்த நூறு நாராச பாணங்களையு மறுத்து அதன

மாக 2-திவ்வியாஸ்திரங்களைவிட்டு இரதஞ்சாரதி குதிரைகளு டன் தும்சம்பண்ணிப்போட்டான்.

அதுகண்டு சுவேலராசன் லகுவிற் றப்பித்துக்கொண்டு மறுதேரிலே வில்லை எடுக்குமுன்னே குசலராசன் பின்னு மிரண்டு திவ்வியாஸ்திரம்விட்டு அந்த ரதத்தையுமுடைத்தெ றிந்துபோட்டான். இந்தப்படியாய் 15-ரதம் உடைந்துபோ கவே, சுவேலராசன் அதிசீக்கிரத்தில் வேறொரு ரதமேறி வில்லையெடுத்து நாணிபிகிந்து ஒரு அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்து மந்திராபூதிகொடுத்துவிடுத்தான். அந்த அக்கினி யாஸ்திரமானது வில்லில்விடுபட்டு கொழுந்துவிட்டெரிந்து நெருப்புப்பொரிகளை வாரியிறைத்துக்கொண்டு ஆலகாலவிஷ ம்போற் சீறிவருகிறதை குசலராசன்கண்டு அதிசீக்கிரத்தில் ஒ ரு அக்கினியாஸ்திரமெடுத்து மந்திராபூதிகொடுத்து வில்லிற் றொடுத்து கடுகடுத்துவிட்டான். அந்த அக்கினியாஸ்திரமும் வெளிப்பட்டு சண்டமாருதம் வீசினதுபோல வடவாமுகாக்கி னியை வாரியிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனியுட னும் அதிவேகத்துடனும் வந்து அந்த அக்கினியாஸ்திரத் தை அடித்து கமளீகரஞ் செய்துப் போய்விட்டது.

தன்னுடைய அக்கினியாஸ்திரம் விருதாவிற் போன தைக்கண்ட சுவேலமகாராசன் கோபாவேசனாகி பற்களைநெற நெறவென்று கடித்து ஒரு சத்தியையெடுத்து பூசைநைவேத் தியத்துடன் வில்லிற்சந்தித்துவிட்டா னந்த சத்தியானது அண்டபகிரண்டங் குலுங்க குசலனெங்கே எங்கேயென்று ஆரவாரஞ்செய்து சேரவரும்போது குசலராசன்கண்டு தானு மொரு சத்தியை எடுத்து மந்திராபூதிகொடுத்து வில்லிற்றொ டுத்துவிட்டான்.

அந்த சத்தியானதுவிடுபட்டு கபகபவென்றெரிந்து பர்வ தங்களும் படீரென்று வெடிக்க ஆதிசேஷன் புயமடிக்கச் சத்திராதிகள் கிலிபிடிக்க குசலன் வெற்றியை சகலரும்படிக்க ஆவென்று வாயைத் திறந்துக்கொண்டு அதிவேகத்துடன் வந்து சுவேலராசன்விட்ட சத்தியை கமளீகரம் பண்ணிப் போட்டு அம்புறுவில் வந்தடைந்தது அதுகண்டு சுவேல ராசன் ஆக்ரம நிக்குரோதனாகி பல்லை படபடவென்று கடி த்து ஒரு நாராயணாஸ்திரத்தை யெடுத்து பூசைசெய்து சோ டசவுபசாரத்துடன் வில்லிற் சந்தித்து விட்டான். அந்த நாராயணாஸ்திரமானது வெளிப்பட்டு சகல புவனங்களும்

நடுங்கும்படி வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு உலகமுழுகிப்போகிறதுபோலவருகிறதைக்கண்ட குசலராசன் அதிசீக்கிரமாய் தன்னுடைய நாராயணாஸ்திரத்தை யெடுத்து பூசைசெய்துவிட்டான். அந்த நாராயணாஸ்திரமானது வெளிப்பட்டு எப்படி வருகுதென்றால் முன்னம் லவனாலிறந்தவர்களை சத்துருக்கமகாராச ரெழுப்பினரென்று கேள்விப்பட்டு மறுபடியுமவர்களையுங் கொல்லுகிறேனென்று சத்தசாகரங்கள் வாட, அதிகுரூரமாகிய வடவாமுகாக்கினியை வாரி யிறைத்துக்கொண்டுவந்து சுவேலராஜன் விட்ட நாராயணாஸ்திரத்துடனே நாடி போராடி வாதாடி கமளீகரம் பண்ணிவிட்டு அம்புறாவில் வந்தடைந்தது. அதனாற் சுவேலராசன் பின்னும் 10-நாராசபாணங்களை எடுத்து குசலராசனுடைய வில்லைப் பார்த்துவிட்டான். அந்த 10-நாராசங்களும் நாகசற்பம்போற் சீறிக்கொண்டுவந்து குசலராசன்வில்லின்பேரிற் சடாலென்று வந்துபாய்ந்தது 10 நாராசபாணங்களும் கூர்மடங்கி பூமியில் வீழ்ந்தது. அதை சுவேலராசன் கண்டு கோபங்கொண்டு வில்லை முகத்துக்கு நேராய் பிடித்து கண்ணிமையோடு கண்ணிமைதட்டுமுன்னமே அநேகபாணங்களை வில்லிற்றொடுத்துவிட்டான். அதுகண்டு குசலராசன் சிலபாணங்களை விடுத்துத் தன்மீது வருகிற பாணங்களை யறுத்துத் தள்ளிய பின்னும் அதனமாக 4-பாணங்களைவிட்டு சுவேலமகாராசனேறிவந்த சாரதிகளைக்கொன்று ஒரு அர்த்தசந்திரபாணம்விட்டு சுவேலராசனும் ஸ்ரீமந்நாராயணா ஸ்ரீமந்நாராயணாவென்ற சத்தத்துடன் பொன்னுலகம்போய்ச் சேரச்செய்தான். அந்தப்படியே சுவேலராசனு மரணமடைந்தான்.

அப்போது குசலராசன் சந்தோஷமாகி வில்லை நிறுத்தி வில்லி லநேகபாணங்களைச் சந்தித்து கால்பலமான இராக்ஷதாள்பேரிலெய்கிறபோது இராட்சதாளும் ராசாக்களு முனைந்து அஸ்திரங்களை விடவே அவைகளெல்லாங் குசலராசன் பாணத்தின்மீது போய்த்தாக்கி குசலராசன் பாணத்தாலறுபட்டுப்போயிற்று. அந்தமட்டில் குசலராசன்பாணத்தின் வேகமடங்காமல் மறுபடியும் ராட்சதாள்பேரில் ஓங்கி உயர்ந்து உயிரைவாங்குகிறேனென்றுவந்துவிழுகிறபோது ராட்சதாள் தலைசாய்ந்தவரும், சிரமற்றவருங், கரமற்றவரும், உறமூறிபட்டவரும், கால்போனவரும், கண்டதுண்டமானவரும்,

சலிப்பாரும், ஒளிப்பாரும், முழிப்பாரும், வழிபார்ப்பவரு மாகி, கூச்சலிட்டு ஓடுகையிற் சலவசந்தன் இரதத்தை நடத்தி ஓடுகிற இராட்சதாளை ஓடவேண்டாமென்று மடக்குங்காலையில் இராட்சதாள் சலவசந்தனுக்குச் சொல்லுகிறார்கள் ஓ! ஓ! சலவசந்தனே? கேளும், நாங்கள் பட்ட அவதி எங்களுக்குத்தெரியும். இராமன் அஸ்வமேதயாகம் செ தால் யாருக்கு நயம், இந்த குசலன் அந்தயாகத்தையழித்தால் யாருக்கு நஷ்டம், இப்படிப்பட்ட சேவகம் எங்களுக்கு வேண்டாம் குசலன் பேரை நினைக்கும்போதே குண்டியுங் குடலும் நடுங்குகின்றது நாங்கள்பட்ட அவஸ்தை நீ நின்றுபட்டால் தெரியும், சுவேலராசனும் மாண்டான். ஆகையால் சும்மாயிருப்பதுவே சுகமென்ன அவர்களை சலவசந்தன் பார்த்துச்சொல்லுகிறான். அடா! இராட்சதாளே இந்த மானிடனைப்போல் நீங்களும் சொல்லுகிறது நல்லதோ நாம் கையில் வைத்துக் கசக்கி நசுக்கி பொசிக்கிற சிறுபையனுக்கோ குய்யோமுறையோவென்று கூவி என்கையிலிருக்கும் வில்லையும் பாராமல் என் சவுரியமுங் கண்டுறமல் நமக்கையனுகிய வையகமளந்த ஸ்ரீராமன் உப்பைத்தின்று இப்போது எதிரிகள்கையில் இராமனைக் காட்டிக்கொடுத்து நாம் கடக்கப்போய் நின்றால் இராமத்துரோகம் வந்து சித்திக்காதோ சாவுக்குப்பயந்தால் தீருமா, சாகாவரம்பெற்ற யார்தானிருக்கிறார்கள். ஒருவரையுங் காணேம் நாமிறந்தால் ஸ்ரீராமர் நம்மை எழுப்பிவிடுவார் நமக்கென்னபயம் வாருங்களென்றவர்களை திருப்பிக்கொண்டு குசலன் முன்னுக்கு இரதத்தை நடத்தி வில்லையெடுத்து குணத்தொனிசெய்து 10-திவ்வியாஸ்திரங்களை வில்லிற்றெடுத்து சொல்லுகிறான்.

குசலராஜனுக்கும சலவசந்தனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

திண்ணமுறுஞ் சுவேலந்தனைத் தென்றிசையிற் சேர்த்தசெய்தி சலவசந்தனுக்கு செப்பக்கேட்டு, அண்ணலனுமிராமச்சந்திரன் செய்வேழ்விக் கந்தகாய்வக்திடு மிச்சிறுவராரோ, எண்ணியவன் றனை கேட்போமென்றே யுன்னிரதந்தூண்டிக்குசலனைக்கண் டடடாதம்பி, கண்ணிமுடிமன்னர்களைக் கொன்றநீங்க ளெவ்வுலகமாந்தாதை யிசையென்றனே.

அடா, தம்பி உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையா யிருக்கிறது உன்னுடன் சண்டைசெய்ய மனமான திசையவில்லை

ஆணைபடியினால் உன் தாய்தகப்பன்பேரும் உன்பேருஞ்சொல்லென்றான். அதுகேட்டு குசலராசன் அடா போபோ காட்டு மிருகமான உங்களுக்கெல்லாம் நான் தாய்தந்தைபேர் சொல்லுகிறதோ நீ என்ன பூதமோ பிசாசோ அல்லவென்று அரசனே காட்டுமிருகங்களுக்கு மனிதபாஷை தெரியுமோ சொல்லடாவென்று மண்டிபோட்டு வில்லில் 10-திவ்யாஸ்திரங்களை யெடுத்து சந்தித்ததைக்கண்டு சலவசந்தன் சொல்லுகிறான்.

அடாசிறுபிள்ளாய் நல்லவசனம் பகர்ந்தாய் என்னைபார்த்தால் உன்கண்ணிற்கு காட்டுமிருகம்போலும் பூதபிசாசுபோலுங் காண்கின்றதோ அப்படியல்ல நான் இராட்சதர்களுக்கெல்லாம் இராசாவாயிருக்கப்பட்டவன் என்பேர் சலவசந்தனென்று சொல்லுவார்கள் நீ முன்பின் எண்ணுமல் இப்படி என்னை காட்டுமிருகமென்று சொல்லலாமோ இன்னம் அநேகவெள்ளம் இராட்சதாள் அயோத்தியில் வாசமாயிருக்கின்றார் நாங்கள்மாத்திரந்தானென்றெண்ணவேண்டாமென்றான். அதுகேட்டு குசலராசன் கூறுகிறான். அடா! சலவசந்தனே நான் காட்டுமிருகமல்ல, இராட்சதருக்கெல்லாம் இராசனென்று பகர்ந்தாயே, உன்னுடைய தேசமெங்கே, நீயேன் எங்கள் வனத்திற்குவந்து என் தம்பியுடன் போர்புரிந்து என் தம்பியை பிடித்து கட்டிக்கொண்டு போகவந்த காரியமியாது சொல்லென்றுகேட்க சலவசந்தன் கூறுகின்றான்.

அடா? தம்பி சிறுபிள்ளாய் கேளும், ஆயிரத்தெட்டண்டமும் 224-புவனமுஞ் சத்தசாகரஞ் சூழ்ந்த ஈரேழுபதினாலு உலகத்தையும் ஏகசக்ரமா யாண்டுக் கொண்டிருந்த எங்கள் பெரிய தகப்பனாராகிய ராவணன் கும்பகர்ணன் விபீஷணனென் றவர்கள் குமாரர் இந்திரசித்து, அதிகாயன், அட்சய குமாரன், கும்ப நிகும்பன், பவர்ணன் என்று சொல்லப்பட்ட லட்சங் குமாரர்களுடனும் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் எங்கள் பங்காளியாகிய சதகண்ட ராவணனுக்கு சக்கரபுரியென்றொரு பட்டணமுண்டுபண்ணி ஐயாயிரவெள்ளமிராட்சதாள் அவரைப் பணியும்படியாய் முடியுஞ் சூட்டிவைத்து என் தகப்பன் சகஸ்திரகண்ட ராவணனுக்கு ரத்னபுரமென்றொரு பட்டணமுண்டுபண்ணி ஐயாயிர வெள்ளம் இராட்சதாள் என்தகப்பனை வணங்கி இணங்க மகுடஞ் சூட்டி தேவர்களைவல்செய்ய, ரிஷிகள் மச்சங்கள் பிடித்து

வந்து தருக, வருணன் சாணந்தெளிக்க, வாய்வு முத்தம் பெருக்க, சூரியன் லங்கைபுரத்தில் ரதம் ஓட, சந்திரன் பூமியி லிறங்கி பிள்ளைகளுடன் விளையாட, பிரமன் பஞ்சாங்கஞ் சொல்ல, விஷ்ணுமனைவரி செலவு நடத்த, ஈஸ்வரர் வரங் கொடுக்க, இயமன் இராட்சதரைக்கண்டால் கையெடுத்துக் கும்பிட, தெய்வலோகத்தை யாளப்பட்ட தேவராசனாகிய தே வேந்திரனைப் பிடித்து எத்தனைதரமோ விலங்கிட்டு தெய்வ லோகம் பிரமலோகம் வைகுந்தம் கைலாசத்திலும் இராவண னுடைய வீணைக்கொடிபறக்க இந்தப்படி சகல சராசரமும் இராவணேஸ்வரனுடைய அதிகாரமுந் துரைத்தனமுமாயிரு க்கும் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாய்வு, குபேரன், ஈசானியன், இப்படி சொல்லப்பட்ட அஷ் டதிக்குப் பாலகரும் தினந்தோறும் ஏவல்கேழ்க்க, அஷ்ட கெஜங்களும் வந்து வணங்க, ஆதிசேஷன் பாரந்தாங்க, இப் படி ஒருவரும் நிகரில்லாமல் துரைத்தனம் பண்ணி வருகிற நாளில் அயோத்தியை யாளப்பட்ட தசரதமகாராஜனுக்கு புத்திரனில்லாமல் புத்திரகாமேஷ்டியாகம் பண்ணும்போது அந்த யாகத்தில் ஒரு திவ்யபுருடன் பாயசங் கையிலேந்திக் கொண்டுவந்து கொடுக்க, அந்த பாயசத்தை தசரதர் மூன்று தேவிகளுக்கும் விருந்துகொடுக்கக் கோசலைவயிற்றில் ஸ்ரீராம ரும், கைகேசியின் வயிற்றில் பரதரும், சுமித்திரை வயிற்றில் இலட்சுமணருஞ் சத்துருக்கரும் பிறந்தார்கள். இந் நால் வரும் யாவரென்றால், ஸ்ரீமந் நாராயணர் ஸ்ரீராமனாகவும், அவர் சக்கரமே பரதாழ்வார், அவர் சங்கே சத்துருக்கர், ஆதி சேஷனே இலட்சுமணப் பெருமாளென்று கண்டுகொள்க.

இப்படியாக தசரதமகாராசன் வயிற்றில்வந் தவதரித்து விஸ்வாமித்திரர் யாகத்தை யழித்த தாடகையைச் சம்மாரஞ் செய்து அகலிகைக்கு மோட்சமளித்து ஜனகராசன் வைத்தி ருந்த வில்லை வளைத்து ஜானகியம்மனை மணம்புரிந்து பரசு ராமனை பங்கப்படுத்தி அயோத்திக்குவந்து தாய்மொழி தவ ராமல் பதினான்கு வருஷம் வனவாசஞ் செய்யவேண்டி சீதா லட்சுமண சமேதராய் ஸ்ரீராமர் பஞ்சவடி தீர்த்தத்தில் வந் திறங்கி யிருக்கும்போது இராவணன் சீதையம்மனைப் பர்ணக சாலையோடு ஸ்ரீராமர் இலட்சுமணர் இல்லாத வேளையில் பேர் த்து இரதத்தில் வைத்துக்கொண்டு இலங்கைக்குச் சென்று அசோகவனத்திற் சீதையம்மனை வைத்து சில இராட்சதப்

பெண்களையுங் காவலாக நியமித்தான் அதின் பிற்பாடு இராம லட்சுமணர் சீதையம்மனைத் தேடிக்கொண்டு வரும்போது அனுமாரைக்கண்டு சிநேகஞ்செய்து வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி தேவாம்சமாக அவதரித்த 72-வெள்ளம் வானரரை படைத்துணையாகக் கூட்டி அலைகடலடைத்து லங்கையை யடுத்து இராவணன், கும்பகர்னன், இந்திரசித்தன், அதிகாயன், அட்சயகுமாரன், கும்பனிகும்பன் முதலான இரண்டாயிரம் வெள்ளம் இராட்சதரை மாய்த்து சீதையம்மனை சிறைமீட்டு விபீஷணருக்குப் பட்டங்கட்டி அயோத்தியில்வந்து பட்டாபிஷேகராய் ஆண்டுக்கொண்டிருக்கிற நாளையில் எங்கள் பெரிய தகப்பனுர் இறந்தசேதி நாங்களும் எங்கள் பங்காளி சதகண்ட ராவணனுங் கேட்டு எங்கள் சேனைகளுடன் வந்து ஸ்ரீராமர்பேரில் எதிர்த்து யுத்தஞ்செய்து இராமபாணத்தினல் மாண்டுபோனர்கள். அதன் பிற்பாடு சதகண்டராவணன் தம்பியாகிய மகாமாயனுக்கும், சரபுரியை பட்டங்கட்டி இரத்னபுரத்தை எனக்குப் பட்டங்கட்டி தங்கள் இராச்சியஞ்சென்று யிருக்கிற நாளில் இராட்சதரைக்கொன்ற பாவந்தொலைய அஸ்வமேதயாகம் பண்ணும்படியாய் எங்களுடைய இரதகஜ துரகபதாதிகளையும் எங்களையும் அழைப்பிக்க, நாங்களும் அயோத்தியில் வந்து அஸ்வமேதக் குதிரையையும் 50-வெள்ளம் இராட்சதரையும் 1004-அக்ரோணி சேனைகளையுங் கூட்டி 56-தேசத்து இராசாக்களும் பின்பலமாகச்சேர்த்து மகாமாயனையும் என்னையும் தளகர்த்தராக நேமித்து எங்களுக்குஞ் சேனைகளுக்கும் இராசாவாக சத்துருக்கமகாராசனைக்கூட்டி யனுப்பி வைத்தார்.

அவ்வாறே பிரதட்சணம் வரும்போது மூன்று இராசாக்கள் வந்தெதிர்த்து யுத்தஞ்செய்து அவர்களாற் செயிக்கமுடியாமல் சத்துருக்கமகாராசனை வணங்க அவர்களுடைய சேனைகளோடுந் தண்டிற் கூட்டிக்கொண்டு குதிரையுடன் வருகிற குதிரையானது ஒருவர்கையி லகப்படாமல் இந்த வனமே வந்து விட்டது நாங்கள் விட்ட குதிரையை ஆரோ ஒரு சிறு பிள்ளை லவனென்னப்பட்டவன் பிடித்துக்கட்டி எங்கள்சேனைகளையெல்லாம் அதம்பண்ணிப்போட்டான். இந்தசெய்தியை சத்துருக்க மகாராசனறிந்து லவனுடன் யுத்தம் புரிந்து அவனைக்கைப்பிடியாகப் பிடித்துக்கட்டி அஸ்வமேதக் குதிரையை

யும் விடுவித்துக்கொண்டு அயோத்திக்குப் போகவேணுமெ ன்று பயணமாயிருக்கையில் நீயாரோ சிறுபிள்ளை இவ்விடத் தில்வந்து யுத்தம் பண்ணுகிறாய் உன்னையுங் கட்டுகட்டென்று தாடையிற்றட்டி நெட்டிக்கொண்டு போகாமுன்னம் உன்னு டைய தாய்தந்தை பேரையும் உன்பேரையுஞ் சொல்லவேணு மென்று கேட்டான். அப்படிசொன்ன சலவசந்தனுடைய வார்த்தைக்கு குசலன் சற்று கவனித்து தன் மனதிலெண்ணிக் கொள்ளுகிறான். இந்த ராட்சதன் நம்முடைய தாயார்பேரை யுஞ் சொல்லி மற்ற சங்கதிகளையுஞ்சொன்னான். அப்படியிருந் தால் இந்த விஸ்தாரத்தை அன்னை நமக்குச் சொல்லியி ராளோ, நல்லது நம்முடைய ஐயர் வால்மீகராகிலுஞ் சொல் லாரோ, அன்றியும் நமது தாயார் ரிஷிபத்தினியாயிற்றே நம் முடைய தாயார் பேரைப்போல் உலகிலெத்தனைப் பேரோ, நம்மைப்போல் ரூபம்படைத்தபேர் எத்தனைப்பேரோ, நாமி துவெல்லாங் கேழ்க்கவேண்டிய காரியமென்ன நாம் தாயார் சொற்றவராமல் வந்தெதிர்த்தவரில் யாவரையுஞ் சம்மாரஞ் செய்து தம்பியாகிய லவனை விடுவிக்கவேணுமே யல்லாம லிந்த கட்டுக்கதையான வார்த்தையை நாம் கேழ்க்கவேண் டியதில்லை என்று மனதிலெண்ணினான். அதேனென்றால் வால்மீகர் சொல்லிய ஸ்ரீராமர் என்கிற கீர்வாண சுலோகத் திற்கு அர்த்தந் தெரியாதவனானபடியினாலும் சிறுபிள்ளையான தினாலும் சலவசந்தன் சொல்லிய வசனத்தை கவனித்துப் பாராமல் சலவசந்தனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அடா! சலவசந்தனே? புளுகினாலும் பெரும் புளுகைப் புளுகுகிறாய் ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனாக தசரதர் வயிற் றிற்பிறக்கிறதென்ன. ஆதிசேஷன் இலட்சுமணராகவும் சங்கு சக்கரமாவது பரதர் சத்துருக்கராகவும், தசரதர் வயிற்றிற் பிற க்கிறதென்ன, இதுகளெல்லாம் உயிர்க்கு பயந்தல்லவோ கட் டுக்கதை சொல்லி தப்பித்துக்கொள்ள நினைத்தாய் நீ உயிரு டன் தப்பிப்போக வெண்ணினாலும் விடுவேனென்று பாரா தே, நின்று யுத்தம்பண்ணடா பார்ப்போமென்றான். அது கேட்டு சலவசந்தன் கோபமாகி அடா? சிறுபிள்ளாய் நான் உயிருக்குப் பயந்து உனக்குப் பிரியவசனஞ் சொல்ல வந்தே னென்று பாராதே, நீ சிறுபிள்ளை யானபடியினாலும் நான் தரும நீதியாகச் சொன்னேன் நீ கேளாவிட்டால் எனக்கு இராமத் துரோகமில்லை இனி உன் தாய் தந்தை பேரைச்

சொன்னாலுஞ்சரி என்மேற் குற்றமில்லை இனி உன்னாலான யுத்தத்தைச் செய்யென்றான்.

அப்படி சொன்ன சலவசந்தவனுடைய வார்த்தையை குசலராஜன் கேட்டு யோசனை பண்ணி தாயார் சொல் தவராமல் செய்கிறதே காரியமென்று மனதி லெண்ணினவனாக வில்லில் 10 - திவ்வியாஸ்திரங்களெடுத்து சந்தித்து சலவசந்தன் பேரிற் பிரயோகம் பண்ணினான். அந்த 10-திவ்வியாஸ்திரங்களும் வில்லில் விடுபட்டுத் தகத்தகாயமாக தங்கக் கட்டுகளுடன் பிண்டபட்சி யிறகு பூண்ட பாணமானது ஒன்றோடொன்றுராய்ந்து நெருப்புப்பொறிகள்பறக்க அதிகவேகமாக வருகிறபோது, சலவசந்தன் கண்டு பாலன் பாண மிஞ்சினானென்று 5-திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற் சந்தித்து பிரயோகப்படுத்தி குசலன்விட்ட 10-திவ்வியாஸ்திரங்களையுமறுக்க திவ்வியாஸ்திரம் அறுபடாமற் குசலனுடைய திவ்வியாஸ்திரத்தினாற் சலவசந்தனது திவ்வியாஸ்திர மறுபட்டு பூமியில் விழுந்துபோயிற்று. அதுகண்டு சலவசந்தன் கோபமாகி நூறு நாராசபாணம எடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணினான். அந்த நாராசபாணங்களும் வில்லில் விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு அதிவேகமாய் வருகிறபோது குசலராஜன் கண்டு அந்த நூறு நாராச பாணங்களையு மறுத்துத் தள்ளினான்.

அதுகண்டு சலவசந்தன் மகாகோபமாகி மீசைகள் படபடவென்று துடிக்க அதிக கோபாக்கினியுடன் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து மாரி பொழிவதுபோற் சரபாணங்களை குசலராசன்பேரிற் பொழிகிறபோது குசலராசன் கண்டு அதிசுருக்கான பாணங்களை வில்லிற் சந்தித்து விட்டு சலவசந்தன் விட்ட கொடிய பாணங்களை எல்லாம் அறுத்துத் தள்ளி சலவசந்தனை சல்லடைக்கண்களாகத் துளைத்து மிதமில்லாத அஸ்திரங்களை இராட்சதாள் பேரில் விடுகிறபோது இராட்சதாள் எப்படி விழுகிறார்களென்றால் கால்வேறு, கைவேறு, தலைவேறு, உடல்வேறு, எலும்புவேறு, இரைச்சிவேறு வேறாக வீழ்ந்து மண்டைகளுடைந்து தும்பிக்கையறுந்தும் துடைமுறிந்தும் வாலறுந்தும் யானைகள் விழத் தலைப்பட்டது இரதங்களோவென்றால் அச்சுமுறிந்து ஆணி கழன்று மச்சும் ஒடிந்து காடியறுந்து கொடைகள் முறிந்து

துவஜம்கிழிந்து பூமியில்விழத்தலைப்பட்டது குதிரைகளோ வென்றால் தலையறுந்தும் காலொடிந்தும் உடலறுந்தும் தலைகள் பிளந்தும் உருளத்தலைப்பட்டது. இப்படி யானை தேர் பரி சேனைகளும் குசலராசன் பாணங்களினால் மாண்டு உதிர வெள்ளம் பெருகியோடின அப்படி குசலராசன் இராட்சதாள்பேரில் முனைந்திருக்க இராட்சதாள் விடுகிற பாணமோ சுலபமென் றெண்ணவேண்டாம் குசலனோ எல்லாந் தேவதாஸ்திரங்களே எடுத்துவிடுகிறான்.

இந்தப்படியாய் குசலராசனுடைய அஸ்திரத்தினாற் சலவசந்தனு மெத்தநொந்து இராட்சதாளுஞ் சின்னா பின்னமாய் தலைவிரிகோலமாய் கெட்டு முறிந்தோடுகிறபோது காலசித்தன்கண்டு ஏதடா இராட்சத சிரேஷ்டரும் இராட்சதாளு முறிந்தோடுகிறார் தேவர்கள்கண்டால் நகைப்பார்களே, இது மெத்த ஏச்சல்லவோ, ஆயுசுள்ளவரைக்கும் பேச்சல்லவோ, இராஜாவோடினால் இராட்சதாள் ஓடுகிறது மகாபெரிதோவென்று தன்னுடைய சாரதியை யெச்சரித்து இரதத்தை நடத்தி இராட்சதாளைப் பார்த்துச் சொல்லுகிறான். அடா! இராட்சதர்களே? ஓடவேண்டாம் நில்லுங்கள் நில்லுங்கள், என்ன முழுகிப்போச்சென் றோடுகிறீர்கள் உங்களுக்கு ரோஷபாஷந்தானில்லையோ, ஒரு சிறுபிள்ளை குசலனுக்கு பயந்து இப்படி சின்னாபின்னமாய் விழுந்துகெட்டு ஓடுகிறவர்களு முண்டோ, ஓடினால் இராமத்துரோகம் விடுமோ, ஸ்ரீராமருடையவுப்பை நன்றாய்ச் சாப்பிட்டு எதிரிகள் வந்தெதிர்த்துக் கொண்ட வேளையில் இந்த சரீரத்தை எதிரிகள் கையில் ஒப்புவியாமல் இப்படி புறமுதுகுகாட்டி ஓடிவரலாமோ, அடா இராட்சதர்களே? ஓடாதீர்கள் ஓடாதீர்கள் அந்தச் சிறுபிள்ளை குசலனை செயித்தாலுஞ்சரி, அல்லது குசலன்கையினால் நீங்கள் மாண்டாலுஞ்சரி, உங்களை எழுப்பிக்கொள்ளுவோம் இல்லையென்று ஓடிப்போவீர்களேயானால் என் வாளாயுதத்திற்கு உங்களை இரையாகப்போடுவே னென்றான். அப்படி சொன்ன காலசித்தன் வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லாமல் மகாரோஷத் துவேஷங்களுடன் குசலன்பேரிற்றிரும்பி ஈட்டி எறியீட்டி சுரிகை வாங்கு வளைதடி சக்கரம் •இருப்புலக்கை கண்ட கோடாலி கத்தி தெண்டு • சூலம் இப்படி சொல்லப்பட்ட 32-ஆயுதங்களையு மெடுத்து குசலராசன்பேரில் றிவ்றிவ்வென்று பிரயோகஞ் செய்துவிட்டார்கள். அதுகள் வேகத்து

டன் வருவதை குசலராசன் பார்த்து அனேக பாணங்களை விட்டு ராக்கதர்கள் விடுகிற ஆயுதங்களை யெல்லாங் கண்டித்து அவர்களுடைய சிரங்களையு. மறுத்துப்போட்டான். அது கண்டு சலவசந்தன் அதிக உக்ராகாரத்துடன் குசலன் முன்னுக்கு இரதத்தை திருப்பிக்கொண்டு அனேக பாணங்களை வாரி ஓய்வில்லாமல் ஐப்பசி கார்த்திகை மாதத்தில் பெய்யும் மூடுபனிபோற் பொழிந்துவிட்டான்.

அதுகண்டு குசலராசனும் அநேக பாணங்களை வில்லிற் சந்தித்து வருகிற பாணங்களையெல்லா மறுத்து மலைபோ லிருபக்கமுங் கொண்டு சீக்கிரமாக 15-சிங்கமுகாஸ்திர மெடுத்து வில்லிற்சந்தித்து குசலராசன்மீதில்விட்டான் அதுகண்டுகுசலன் 10-அர்த்தசந்திராஸ்திரம் விட்டறுத்துபோட்டான் அதுகண்டு சலவசந்தன் குசலராசனைக்கட்டி சுழலில்விடவேண்டுமென்று சுழற்பாணத்தை எடுத்து வில்லிற்சந்தித்துவிடுத்தானதுபார்த்து குசலராசன் ஒருகூருவளி எடுத்து பிரயோகம் பண்ணிவருகிற சுழற்பாணத்தைக்கண்டித்துவிட்டான். அது போகவே சலவசந்தன் உக்ராகாரனாய் குசலன் முன்னுக்கு இரதத்தை நடத்திச் சொல்லுகிறான். அடா! சிறுபிள்ளாய் என் தலைகீழாய்விழுகிறாய், உன் தாய் தந்தை பேரைச்சொன்னால் அதன்பின் தேவதாஸ்திரங்களை எடுத்துவிட்டு யுத்தம் பண்ணுவோம் சொல்லென்று கேட்டான். அதற்கு குசலராஜன் சலவசந்தனுக்குச் சொல்லுகிறான். என் தாயார்பேர் ஜானகியம்மாள் எங்களையர்பேர் வால்மீகர் என்பேர் குசலராஜன் என் தம்பிபேர் லவன் இனியாவதெதோ எடுபார்ப்போம் தேவதாஸ்திரங்களை விடுயென்றான் அதுகேட்டு சலவசந்தன் யோசனைசெய்து இவன் ரிஷிபிள்ளையென்று சொல்லுகிறான் இவனைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போலு மிருக்கின்றது இவனது வில்லுக்குமுன் நம்முடைய வில் நில்லாதுபோற் றட்டுப்படுகின்றது இவனால் நமக்கு இடுக்கண்வரும்போலுமிருக்கின்றது சூரியனஸ்தமயமானான் இனி என்னயுத்தம் நடக்கப்போகிறது எல்லாம் நாளையுதயத்திற் பார்த்துக்கொள்வோமென்று குசலராசனைப்பார்த்து அடா! தம்பி குலசனே? கேளாய், உன்னைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போ லிருக்கின்றது ஆனபடியால் எனக்குன்பேரில் யுத்தஞ்செய்ய மனதிசையவில்லை நீ என்பேரிற் சண்டைசெய்ய வேணுமென்றாலும் பொழுதுபோய்விட்டது இனி என்னயுத்தஞ்செய்யப்போகிறாய் சுரு

தனைப்பார்த்து குசலன் சொல்லுகிறான். அடா! சலவசந்த னே? என்னவார்த்தை புகன்றாய் என்னைப்பார்த்தால் ஸ்ரீராம ரைப்போலிருக்குதென்றும் பொழுதுபோயிற்றென்றும் இனி என்ன யுத்தமாகப்போகுதென்றும் சொல்லவந்தாய் உலகில் மனிதரைப்போல் ரூபம்படைத்தவர்கள் அநேகருண்டு இனி பொழுதுபோனாலும் பொழுதுவிடிந்தாலும் இரவுபகலானா லும் பகலிரவானாலும் உங்களனைவரையும் பொழுதுவிடிகிற தற்குள் சம்மாரம்பண்ணி தம்பி லவனைமீட்டுக்கொண்டு போ காமல் போவேனேயானால் நான்பிடித்தது பிரசண்டகோதண் டமல்ல என்பேர் குசலனுமல்லவென்றுசொல்ல அவ்வார்த் தையைக்கேட்ட சலவசந்தன் பகர்கின்றான்.

அடா! குசலனே? இந்த இராக்காலத்தில் இராக்ஷதா ளுடன் யுத்தம்பண்ணி நிர்வாகம்பண்ணமாட்டுவையோ மாய் கையில் வல்லமையுள்ள இராக்ஷதாளாயிற்றே இந்த இராட்ச தாளை நீ செயிக்கமாட்டாய் உந்நூட்டியைக் கடித்து உதிரத் தைக்குடித்து ஜீவனையுங் கொண்டுபோய்விடுவார்கள். அப் படி வராதபடி உன்னுயிரைக் காப்பாற்றி தாயிடம்போய்ச் சேர்ந்து நாளையுதயத்திற்கு வாவென்றான். அதனையுணர்ந்த குசலராஜன் மொழிகின்றான், அடா! சலவசந்தனே? "மீன் குஞ்சுக்கு நயந்து விளையாடவும் வேங்கை குட்டிக்குப் பாய்ச் சலும்" உலகிற்காண்பித்துக்கொடுத்தவருண்டோ அதுபோற் பணங்காட்டில் வாசம்பண்ணும் நரியானது சலசலப்புக்கஞ் சாதென்றாற்போல் இராட்சதர்கள் மாய்கையில் மிகுந்தவர்க ளென்று பயங்காட்ட வந்தாயோ அப்படி பயங்காட்டவேண் டாம் உங்களாலான சாமார்த்தியத்தை நன்றாய்க் காண்பிக்க லாம் உங்கள் பிராணனுக்கு மிஞ்சின வஞ்சனையான யுத்தஞ் செய்து சாகவேண்டாம் உங்கள்மாய்கையும் பாணமும் எடுங்க ளேதோ பார்ப்போமென்றான். அதனைக்கேட்ட சலவசந்தன் நகைபுரிந்து நாம் மாய்கையா யுத்தம்புரிவோமாகில் வஞ்சனை மோசம் இராமத்துரோகம் வந்துவிடுமே இது நலமாய் காண வில்லை எதிர்க்கெதிராய் நின்று யுத்தம்பண்ணி வெல்லுங்க ளென்று வில்லிலனேகமாயிரம் பாணங்களைச் சந்தித்து குசல ராசன்பேரில் மழைபொழிவதுபோல இராட்சதாளும் சலவ சந்தனுஞ் சரமாரியாகப் பொழிகிறபோது அந்த பாணங்கள் ஒன்றோடொன்றுரூய்ந்து நெருப்புபொறிகள் பறக்கிறபோது இரவுபகலாய் வெளிச்சமுண்டாக மிதமில்லாத அஸ்திரங்கள்

வருகிற காலையிற் குசலராசன் கண்டு தைரியங்கொண்டு அநேக காஸ்திரங்களை விட்டறுத்துப் போட்டான். அதனுற் சலவசந்தன் கோபமாகி ஒரு அக்கினியாஸ்திரமெடுத்து பூசைகள் செய்துவிடுத்தான். அதுவும் வில்லில் விடுபட்டு காலகோடி விஷம்போற்சீறிக்கொண்டு அண்டமுகடெட்டும்படி வாயைத் திறந்து சலவசந்தன் விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரில் தடாலென்றுவந்து விழுந்து அதைக் கபளீகரம் பண்ணிப் போட்டு அம்புருவில் வந்தடைந்தது. அதுபோகவே சலவசந்தன் ஒரு பர்வதாஸ்திரத்தை எடுத்து வில்லிற்றெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து கடுகடுத்துவிடுத்தான், அந்தப்பர்வதாஸ்திரமானது விடுபட்டு அநேக பர்வதங்களாய் உருக்கொண்டு குசலராசன் எங்கேயென்று வருகிறபோது அக்குசலராசனுனவன் ஒரு வச்சிராயுதமெடுத்து பூசைநைவேத்தியங் கொடுத்து விடுத்துவருகிற பர்வதங்களையெல்லாம் அறுத்து வெட்டவெளியாக்கின னதுகண்டு சலவசந்தன் கோபமாகி ஒரு சத்தியையெடுத்து தனுசிற்றொடுத்து பக்திவிநயத்துடன் பூசை நைவேத்தியம்புரிந்து குசலன் மார்புக்கு லக்குவைத்து விட்டான்.

அந்த சத்தியானது வில்லைவிட்டுவிடுபட்டு அண்டரண்டபுவனமதிர ஆவென்று வாயைத்திறந்து குசலனைத்தேடி வருகிறதை குசலன் கண்டு சுருக்கினில் நருக்கி யுருக்கிவிடும் பெருக்கமான ஒரு சத்தியை எடுத்து பூசைநைவேத்தியம் புரிந்து வந்ததை வழிபாடு செய்துவிடுத்தா னந்த சத்தியும்விடுபட்டு ஈரேழுபதினுலுலகத்திலுள்ள யாவருந்திடுக்கிட்டேங்க கடலில் வழுசுற்று நீர் சுவரிப்போக மகாவேகத்துடன் வந்து சலவசந்தன் விட்ட சத்தியை படீலென் றிடித்தடித்து முடித்து அம்புருவில் வந்தடைந்தது அதுகண்டு சலவசந்தன் கடுங்கோபங்கொண்டு மகா சீக்கிரத்தில் நாராயணுஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள்செய்தான் அந்த நாராயணுஸ்திரமும் வில்லில் விடுபட்டு அநேகங்கோடி சூரியனைப்போற் பிரகாசித்து கபகபவென்றெரிந்துகொண்டு குசலனெங்கே அவனை யெங்குந் தங்காமல் பங்கப்படுத்துகிறேனென் றுங்கார றிங்கார ஓங்காரத்துடன் வருவதைக்கண்டு அகண்ட மண்டலாதிபனுகிய ஸ்ரீராமபிரான் புத்திரசிகாமணியாக விளங்காநின்ற குசலவனுனவன் தட்சணம் அதனைபட்சணஞ் செய்யும்படியான லட்சணம் பொருந்திய தாயார்கொடு

த்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து பாராயணம் செய்து விடுத்தா னதுவும் அதல விதல சுதல தராதல மகாதல பாதாள முற்றும் நடுங்க தேவர்கள்கண் டொடுங்க ஆவென்று வாயைத் திறந்துகொண்டு வந்து சலவசந்தன் விட்ட நாராயணாஸ்திரத்தை கபளீகரம் பண்ணிப் போய்விட்டது.

அதுகண்டு சலவசந்தன் கோபமாகி வில்லை முகத்திற்கு நேராய்பிடித்து சாங்கோபாங்கமாய் அனேக அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து மாரிசொரிவதுபோல் சரமாரியாய் பொழிகையிற் குசலராசன் கண்டு அநேக பாணங்களை வில்லிற் சந்தித்துவிட் டதையறுத்து அதனமாக 4-திவ்வியாஸ்திரங்கள் விட்டு ரதம் சாரதி குதிரைகளுடன் தும்சப்படுத்தி விட்டான் மறுபடியும் ஒரு இரதத்திலேறினா னந்த இரதத்தையும் சாரதி குதிரைகளுடன் அஸ்திரங்களாற் கஸ்திப்படுத்தினான். இந்தப்படியாய் சலவசந்தனை இரதமேறவொட்டாமல் 20-இரதம் வரையிற் குசலராசன் அதம் பண்ணினான். அதுகண்டு சலவசந்தன் அதிசீக்கிரமாய் வேறொரு ரதமேறி சாரதியை யெச்சரித்து இரதத்தை குசலராசன் முன்னுக்கு நடத்தி வில்லை யெடுத்து நாணிபிகிந்து அநேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித்துப் பிரயோகம்பண்ணவே குசலராசனும் 100-திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்து விட் டறுத்துப்போட் டதனமாய் 5-சிங்கமுகாஸ்திரம் விட்டு சலவசந்தன் இரதத்திற்கட்டிய துஜத்தையு மறுத்து கையில் லையுமொடித்து ரதஞ்சாரதிகளுடன் தும்சம்பண்ணிவிட்டுசலவசந்தனுடைய சிரசையும் கறகறவென் றறுக்கவே சலவசந்தன் ஸ்ரீராமா ராமாவென்று வைகுந்தஞ் சேர்ந்தான்.

அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகி வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து இராட்சதாள்பேரில் 1-10-100-1000-10000-கோடி-சங்கம்-மகாசங்கம்-அற்புத-நிற்புதமென்றுகணக்குமித மில்லாமற் சொரிகிறபோது இராட்சத சேனைகளானது காலறுந்தும் தலையறுந்தும் குடல் சரிந்தும் தொந்தி கிழிந்துங் கையறுந்துஞ் சின்னபின்னமாய் மாண்டு உதிர வெள்ளம் ஓடத்தலைப்பட்டது. அப்போது இராட்சதாள் யானை தேர் பரி சேனைகளுடன் முனைந்து போர் புரியும்போது சேனாதிபதியான காலசித்தன் கண்டு சாரதியை யெச்சரித்து குசலராஜன்பேரில் இரதத்தை நடத்தி குசலராசனைப் பார்த்தான். அப்போது இராக்கால மாகையால் சந்திரனுடைய

ஒளியினாலும் வில்லின் பிரகாசத்தினாலும் குசலனுரு வகப்படாமையால் தேடிக் கண்டுபிடித்து குசலனைநோக்கிச் சொல்லுகிறான். வாரும் தம்பி சிறுபிள்ளாய் நீயார் உன் தாய் தந்தைபேரியாது உன்னுடைய பேரென்ன உன்னிருப்பிடமெங்கே யெங்களுடன் யுத்தம் பண்ணவேண்டிய காரியமென்ன சொல்லென்று கேட்டான். அதனாற் குசலராசன் நகைத்து காலசித்தனைப் பார்த்து இவன் யார் பிரம்ம ராட்சதனைப்போலிருக்கிறான் ஒருவனைப்பார்க்கிலு மொருவன் சூரனாக நம்முடைய தாய் தந்தை பேரையும் நம்முடைய பேரையும் மூன் வந்து கேழ்க்கிறான் நாம் வந்தபேருக்கெல்லாஞ் சொல்லிக்கொண் டிருக்கின்றதோ வென்று கடிந்து அடா! இராட்தனே? நீயோ யென் தாய் தந்தைபேரை கேட்கிறவன் யுத்தமுனையில் உறவாட வந்தாயோ உன்னுடைய சாமார்த்தியம் இதனால் தெரியவந்தது என்னுடனென்றும் பேசாமல் யுத்தம் பண்ணடா பார்ப்போ மென்றான்.

அப்படி கூறிய குசலராஜனை காலசித்தன் பார்த்து அடா சிறுபிள்ளாய் நான் போர்செய்ய பயந்து உன் தாய் தந்தை பேரைக் கேழ்க்கவரவில்லை உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளையாயிருக்கின்றது என்னை யறியாயோ அறியமாட்டாயோ சகல உயிர் பிராணிகளையுங் கொண்டுபோகின்ற யமனுண்டே அந்த எமன் என்னைக் கண்டால் கையெடுத்து கும்பிடுவான் அப்படிப் பட்ட காலனை ஜெயங்கொண்டபடியால் என்பேர் கால சித்தனென்று ஞாலத்திற் சொல்வார்கள். அதிருக்கட்டும் உன் தாய்தந்தைபேரை முன்னஞ் சொன்னபிற்பாடு என்முன் யுத்தம் பண்ணென்றான். அப்படி சொல்லிய காலசித்தனைப் பார்த்து குசலராஜன் சொலலுகிறான், அடா! காலசித்தனே? என் தாயார்பேர் ஜானகியம்மாள் எங்களையர்பேர் வால்மீகர் என்பேர் குசலன் என் தம்பிபேர் லவன் இனியாகிலும் யுத்தம் பண்ணென்றான்.

அதைக்கேட்ட காலசித்தன் யோசனைசெய்து இவன் ரிஷிபிள்ளையென்று சொல்லுகிறான். நாமுந்திப் பதறிப் பாணம் விடப்போகாதென்று மனதி லெண்ணினவனாக குசல ராசனைப் பார்த்து அடா! குசலனே? நீயோ சிறுவன் இந்த இராட்சதாளுடன் உனக்கு யுத்த மென்னத்திற்கு உன்னை என்ன செய்தார்களென்று என்னுடைய சேனையை இப்படிக் க்கில் உன்தாயிடம்போய்ச் சேரென்று சொன்ன சலவசந்

கொன்ருய் சொல்லென்ருன். அதற்கு குசலராஜன் காலசித்தனைப் பார்த்துச் சொல்லுகிருன். அடா! காலசித்தனே? என் தம்பி லவன் உங்களை என்ன பண்ணிஞனென்று பிடித்துக் கட்டிக்கொண்டு போனீர்கள் சொல்லென்ருன்.

அடா! குசலனே? கேள் அயோத்தியாபுரி பட்டணத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட ஸ்ரீராமமூர்த்தி அஸ்வமேத யாகம் பண்ணும்படியாய் குதிரையை விட்டார். அக்குதிரையை உன் தம்பி பிடித்துக்கட்டிஞன் அதைக்காணுமற் றேடிக்கொண்டு இந்தக்காட்டில் வரும்போது குதிரையைக்கண்டுபிடித்தோரையுந் தேடிவந்தவர்களையுங்கொன்றபடியிஞல் எங்கள் தண்டுக்கு ராசாவாகவந்த ஸ்ரீராமருடைய சகோதரஞகிய சத்துருக்கமகாராசன் கேள்விப்பட்டு லவனுக்கு எத்தனையோவிதமாய்ப் பிரிய வசனஞ் சொன்னபோதிலும் கேளாமல் சத்துருக்கமகாராஜருடனே யெதிர்த்து யுத்தஞ் செய்தபடியால் சத்துருக்கமகாராசன் கோபமாய், உன் தம்பி லவனைப் பிடித்துக் கட்டி குதிரையும் விடுவித்துக்கொண்டு அயோத்திக்குப் போக பயணமாயிருக்கையில், நீவந்து இப்படி எங்கள் சேனையை கொல்லலாமோ வென்ருன். அதுகேட்டு குசலராசன் சொல்லுகிருன். அடா! காலசித்தனே? அயோத்தியாபுரி யாளப்பட்ட ஸ்ரீராமபிரான் விட்ட குதிரை தங்கள் பட்டணமட்டும் பிரதட்சணம் வரவேணுமே யல்லாமல் எங்கள் வனத்திற் கவர் விட்ட குதிரை வர ஞாயமுண்டோ குதிரை எங்கள் வனத்திற்கு வந்தபடியிஞல் என் தம்பி லவன் பிடித்துக் கட்டிஞன் அவனுடன் யுத்தம்பண்ணி அவனைப் பிடித்துக்கட்டி குதிரையை விடுவித்துக் கொண்டுபோக உங்களுக்கென்ன ஞாயமிருக்கின்றது சொல்லென்று கேட்டான். அதனைக் கேட்ட காலசித்தன் சொல்லுகிருன். அடா! தம்பி குசலனே? என்ன வசனம் புகன்ருய், அயோத்தியாபுரி பட்டணத்தைப் பரிபாலனம் பண்ணப்பட்ட ஸ்ரீராமபிரான்விட்ட குதிரை அவனுடைய பட்டணத்தை பிரதட்சணம் வரவேணுமே யல்லாமல் என்னுடைய வனத்திற்கு வந்தபடியால் என்தம்பி லவன் பிடித்துக்கட்டிஞனென்றல்லவோ ஞாயஞ்சொல்ல வந்தாய், ஆஞல் கேளுந் தம்பி சொல்லுகிறேன் 1008-அண்டம் 224-புவனம் சத்தசாகரஞ் சூழ்ந்த ஈரேழுபதிஞலுலகத்தையு மாளப்பட்ட தேவேந்திரன் அந்த தேவேந்திரனை துரத்திவிட்டு 1008-அண்டம் 224-புவனமும் சத்தசாகரஞ் சூழ்ந்த ஈரேழுபதிஞலுலகத்தையும் இராவணேஸ்வரன் இராச்சிய பரிபாலனம்

பண்ணுகையில், ரிஷிகள் தேவர்கள் மச்சங்கள் பிடித்துக் கொண்டு வந்து தருகவும், வருணன் சாணந்தெளிக்கவும், வாயுதேவன் மூத்தம் பெருக்கவும், சூரியன் இலங்கைக்குள் வாராமற் புறத்தில் நடக்கவும், சந்திரன் மாத்திரந் தன் பட்டணத்தில் வந்து தன் பிள்ளைகளுடன் விளையாடவும், பிரமதேவன் பஞ்சாங்கஞ்சொல்லவும், விஷ்ணுவானவர்மனைவரிச்சிலவுபார்க்கவும், ஈஸ்வரர்வந்து ஞாயவசனங்கூறவும், இந்தப்படியாய் சகலதேவர்களும் ரிஷிகளும் ஊழியஞ்செய்து பிழைக்கவும், எமன் லங்கைக்குள் இராட்சதரைக் கண்டால் நடுக்கங்கொண்டோடவும், அக்கினிதேவன் சுயம்பாகியா யிருக்கவு மிப்படி யொருவரும் நிகரில்லாமல் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அந்த ராவணனைச் செயித்து ஈரேழுபதினாலுலோகத்தையும் தேவேந்திரனுக்குக் கொடுத்து தேவேந்திரன் பட்டணத்தை நிலைநிறுத்தி ரிஷியீஸ்வரர்களுடைய சபதத்தையுமீடேற்றினர். அப்படிச் சர்வலோகங்களையும் நிலைநிறுத்திய ஸ்ரீராமபிரானுக்கு இந்த வனத்தில் குதிரைவிட அதிகாரஞ் செல்லாதோ நீ சிறுபிள்ளை புத்தியானபடியினா லெங்கள்வனத்திற்கு வந்த குதிரையைப் பிடித்துக்கட்டி யுத்தம்பண்ணினேனென்று சொன்னாய் அப்படி சொல்லாதே இப்பொழுது என் தம்பி யவன் செய்ததெல்லாந் தப்பென்று சத்துருக்கமகாராசனை சரணமடை யென்றான்.

குசலராஜனுக்கும் காலசித்தனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

வெஞ்சிலைதொட்டவசந்தனெனப்புகல்வெய்யோனுந்
துஞ்சுநற்கண்டுசுடர்கணையேந்திச்சொல்லுஞ்சித்தன்
செஞ்சிலைமாரனெனத்திகழுங்குசலன்றன்னை
மஞ்சதுபோலவடர்ந்துனெற்கொடுமாய்ந்தானே.

இவ்வாறு சொன்ன காலசித்தனைப்பார்த்து குசலராசன் கண்களிரண்டும் நெருப்புப் பொறிபறக்க, காதுகளிரண்டிலும் புகைகிளெழும்ப, சரீரம் படபடவென்று துடிக்க, சேனாதிபதியான காலசித்தனைப் பார்த்து அடா! காலசித்தனே? தேவேந்திராதி தேவர்களையும் வணங்காத ராவண கும்பகர்ணாதிகளை செயித்த வீராதிவீரரான ஸ்ரீராமபிரானுடைய சாமார்த்தியம் என்முன் வந்தாலல்லவோ தெரியும், அதிருக்கட்டும் இப்போது உன்னுடைய சாமார்த்தியத்தையும் உனக்கு சாரா

வாகவந்த சத்துருக்கமகாராசனுடைய சாமார்த்தியத்தையும் வந்த படையினுடைய சௌரியத்தையு மிதோக்ஷணப்போதி லறிகிறேன் பாரடாவென்று பத்து திவ்யாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்து காலசித்தன்பேரிற் பிரயோகம்பண்ணினுன்.

அந்த திவ்வியாஸ்திரங்களானது வில்லில் விடுபட்டு அக்கினிச் சுவாலையாய் நெருப்புகளை கக்கிக்கொண்டு அதிக வேகத்துடன் வருகிறபோது காலசித்தன் கண்டு குசலன் பாணத்தை மிஞ்சினனென்று திவ்வியாஸ்திரங்க ளெடுத்து வில்லிற் சந்தித்துவிடுத்து குசலராசன்விட்ட பத்து திவ்வி யாஸ்திரங்களை யறுத்துத்தள்ளி குசலராசனைப் பார்த்துச் சொல்லுகிருன். அடா! குசலனே? கையிலாகாத சில ராட்ச தாளை ஜெயித்தோமென்கிற கெர்வத்தினுலே என் வார்த்தை யைத் தள்ளிவிட்டு பாணந்தொடுத்தாயல்லவா, நீயும் உன்னு டைய பாணமும் போகிறவழி உனக்குத்தெரியாம லேன் துள் ளுகிருய் என்னுடையசேதி உனக்குத்தெரியாமல் பாணந்தொ டுத்தாய் நீ சிறுவனுனதினுலே மனம்பொறுத்தேன் இப்போ தாகிலும் என்பேச்சை தள்ளாமல் சத்துருக்கமகாராசாவை வணங்கிப் பிழைத்தால் உன் தம்பி லவனை மீட்டுக்கொள்வாய் அப்படி சமாதானமாகிறதில்லை என்ருல் இதோ என்னுடைய அஸ்திரத்தினுலே பஸ்மீகாப்படலமாய் உன்னை யெறித்துப் போடுவேனென்ருன். அப்படி கடூரமான வார்த்தைசொன்ன காலசித்தனைப்பார்த்து கண்கள் சிவப்பேறி கோபமீறி அடா காலசித்தனே? நல்லவசனமுறைத்தாய், உங்களிராசாவாகிய சத்துருக்கமகாராசனை வணங்கி என் தம்பி லவனை விடுவித்து க்கொள்ளாவிட்டால் உன்னுடைய அஸ்திரத்தினு லென்னை பஸ்மீகரப்படலம்பண்ண உன்னுல் வல்லமையுண்டோ, அப் படி வல்லமையுண்டானுல் பாணுஸ்திரத்தை எதோ எடுபார்ப் போமென்று இந்திராஸ்திரம், எமனுஸ்திரம், அக்கினியாஸ் திரம் இப்படிச்சொல்லப்பட்ட அஷ்டதிக்குப் பாலகருடைய அஸ்திரங்களைவில்லிற்சந்தித்து காலசித்தன்மீது மாரிபொழி வதுபோல் சரமாரிபொழிய அவைகள் அக்கினிகளை குபீல் குபீலென்றுகக்க அக்கினிப்பொறிக ளாகாயமெழும்பி பூமியில் விழுகிறபோது இரவும்பகலாய் பாணங்கள் மகாமகிமையுடன் வருகிறதை காலசித்தன்கண்டு தான் அஷ்டதிக்குப் பாலகரிட த்தில் வரம்பெற்ற அஸ்திரங்களையெடுத்து பூசைசெய்துவிட்

டான். அந்த அஸ்திரங்களும் ஆலகால விஷம்போல் அக்கினி சுடர்களுடனே அதிவேகமாகவந்து குசலராசனுடைய பாணங்களை காலசித்தன்பேரில் போகவொட்டாமல் மறித்து ஒன்றோடொன்றுயுத்தஞ்செய்து பொடிப்பொடியாய் பூமியில் விழுந்ததுகள் அதனாற் குசலராசன் நூறு நாராசபாணங்களெடுத்து வில்லிற் சந்தித்து காலசித்தன்பேரிற் பிரயோகம்பண்ணினன் அந்த நூறு நாராசபாணங்களும் வில்லைவிட்டு அவயத்திலிருக்கும் நாகசற்பத்தை கோலாற்றட்டினல் எப்படிச் சீறிக்கொண்டுவருமோ அப்படிபோல நாராசபாணங்களானது ஒன்றோடொன் றுருய்ந்துக்கொண்டு அக்கினிப்பொறிகள் சிதறும்படியாய் வருகிறபோது சேனதிபதியான காலசித்தன் பார்த்து அதிக பலம்பொருந்தி யிருக்கப்பட்ட நாராசபாணத்தை ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்-கோடியென்று கணக்குமிதமில்லாத நாராசபாணத்தை வில்லிற் சந்தித்து குசலராசன் விட்ட ஆயிரம் நாராசபாணங்களையுமறுத்து பூமியிற்றள்ளினன். அதைப்பார்த்து குசலராசன் ஏதடா இராட்சதன் அதிக பலவானயிருக்கிறன் இவனுடன் இப்படி யுத்தம்புரிந்தால் முடியாது என்றுன்னித் தனது வில்லை முகத்திற்கு நேராகப்பிடித்து அநேகம் பாணங்களை வில்லிற்சந்தித்து நிமையுடன் நிமைதட்டுமுன்னம் சங்கம் அற்புத நிற்புதம் யென்று கணக்குமிதமில்லாத பாணங்களைக் கட்டுகட்டாய் கோர்வை கோர்வையாய் வாசாமகோசரமாய்விட்டு இரதம் சாரதி குதிரைகளையும் தும்சப்படுத்தி காலசித்தனுடைய சரீரத்தையுஞ் சதைசதையாய்ப் பேர்த்தெரிந்துவிட்டான், அதைக் கண்ட காலசித்தன் சரீர மிகவுநொந்து அனேகபாணங்களை வாரி குசலராசன்பேரில் விட்டுவிட்டான். அதுகளை கடலொலிபோ லிரைச்சலிட்டுக்கொண்டு வருகையிற் குசலராசன்கண்டு அதிசீக்கிரமாய் 50 - திவ்வியாஸ்திரங்களெடுத்து பிரயோகஞ் செய்து காலசித்தனுடைய பாணங்களையெல்லா மறுத்துப் போட்டு ஐந்து யிடியாஸ்திரங்களையெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தினன். அந்த திவ்வியாஸ்திரங்களைந்தும் அதிவேகத்தோடுவந்து காலசித்தனேறிவந்த இரதஞ் சாரதி குதிரைகளுடன் அதஞ்செய்து போயிற் றந்தாதம்போகவே, காலசித்தன் மறுதேரிலேறுமுன்னமே குசலராசன் பின்னுமைந்து இடியாஸ்திரம் விட்டு இரதத்தையு முடைத்தெரிந்துப்போட்டான். இந்தப்படி 25-இரதம் வரையில்

குசலராச னுடைத்தெறிந்துவிடவே சேனுதிபதியான கால சித்தன் ஏதடா லவனிலுங் குசலன் பலவானுயிருக்கிருன் நம்மை இரதமேறவொட்டாமலும், வில்லைகையிற்பிடிக்கவொட்டாமலும், பாணங்களைப் பூட்டவொட்டாமலும், அஸ்திரங்களை விட்டிருக்கிருன். நாமோ, அனேக யுத்தங்களிற் கைகண்டிருக்கிறோம் அனேக தேவர்களுடனும் இராசாக்களுடனும் யுத்தம்பண்ணியிருக்கிறோமப்போது நமக்கித்தனை ஆயாச மிளைப்புவந்ததில்லை இப்போதிந்த குசலனுலே ஆயாசம் இளைப்புண்டாயிருக்கின்றது எல்லாம் ஸ்ரீராமருடையகிருபை யென்று மனதை தைரியப்படுத்தி ஸ்ரீராமா ராமாவென்று ஸ்தோத்திரம்பண்ணவே காலசித்தனுடைய இளைப்பு ஆயாசம் நீங்கி அமிர்தஞ் சாப்பிட்டவனைப்போல அதிக தைரியத்துடனே மறுதேரிலேறி சாரதியை யெச்சரித்து இரதத்தை குசலராசன் முன்னுக்கு நடத்தி வில்லைவளைத்து நாணிபிகிந்து அநேகபாணங்களை வில்லிற்சந்தித்துவிடுத்து குசலராசன் கைகாலாடவொட்டாமலும், வில்லைக் கையிற்பிடிக்கவொட்டாமலும் குசலராசனுடைய சரீரத்தை ரத்தமயமாக்கிவிட்டான். அதனுற் குசலராசனுக்கு கைசோர்ந்து மெய்சோர்ந்துபோகையிற் சொல்லுகிருன். இவனுடைய கரவேக சரவேகந்தானென்ன யுத்தம்புரிந்த பிரமுகாளில் இவன் பலவானுயிருக்கிருன்நாம்விடப்பட்ட அஸ்திரங்களையெல்லாமறுத்துப்போடுகிருன் இவனுல் நமக்கு ஆயாசம் இளைப்பு மதிகமாக வருகிறதென்று சற்றுநேரம் சும்மாயிருந்தோமானுல் இராட்சதன் கையி லகப்பட்டுப்போவோம் என்செய்வோமென்று தாயே தாயே யென்று சீதையம்மனே மனதிலெண்ணின மாத்திரத்தில் சீதையம்மனுடைய கிருபையால் குசலராசனுக்கு ஆயாச மிளைப்பும்நீங்கி அமிர்தபானம் பண்ணினவனைப்போலாகி அதிக தைரியத்துடன் அநேகாஸ்திரங்களை வில்லிற் பூட்டி வருகிற அஸ்திரங்களையெல்லாம் தன்பேரில்வரவொட்டாமல் வாட்டி சலுதியிலோர் வாய்வாஸ்திரத்தை யெடுத்துப் பக்தி விநயத்துடன் பூசைசெய்து காலசித்தன் இரதத்தைப் பார்த்து விட்டுவிட்டான் அந்த வாய்வாஸ்திரமோ யுகாந்தகாலத்தில் சண்டமாருதம் வீசினதுபோல காலசித்தனுடைய பாணத்திற்கு பிடிபடாமல் அதிவேகத்துடன் இரதத்தில்வந்து பாய்ந்து தெற்கே நூறுயோசனை தூரத்தில் இரதத்தை பின்னுக்குத் தள்ளிக்கொண்டு போய்விட்டது.

அதுகண்டு குசலராஜன் சந்தோஷமாகி அநேகபாணங்களைச் சந்தித்து யானை தேர் பரி சேனைகளின்பேரிற் பிரயோகம்பண்ணினான். அப்படி குசலராசன் மிதமில்லாத பாணங்களை சேனைகள்பேரில் விடுகிறபோது யானைக்குப் பாணம்-9 சவுடாலுக்குப் பாணம்-3 சேனைகளொன்றுக்கு ஒவ்வொரு பாணம் இந்தப்படியாய் கணக்காக எடுத்து அஸ்திரங்களை விட்டுக் கொல்லுகிறபோது யானை தேர் பரி சேனைகள் எப்படி விழுகுதென்றால் யானைகள் காலறுந்தும் வாலறுந்துமத்தகம் பிளந்தும் தும்பிக்கையறுந்தும் துடையறுந்தும் கொம்புகள் முறிந்தும் சவுடால்கள் கரிந்தும் அம்பாரிகள் ஒடிந்தும் மாவுத்தன் தலையறுந்தும் இராசா யிறந்துவிழவும் இரதங்களானது அச்சுமுறிந்தும் ஆணிகழன்றும் குத்துக்காலொடிந்தும் கொடுங்கையறுந்தும் கொடைவெட்டுண்டும் துஜந்தரிபட்டும் குதிரைகள் குடல்சரிந்தும் சாரதிதலைவிழுந்தும் இராஜாக்கள் மார்பிளந்துசாகவும் குதிரைகளோவென்றால் முக்காலிரண்டு முறிபட்டதும் சிரமறுபட்டதுமாய் விழவும் சேனைகளோவென்றால் கால்வேறு கைவேறு உடல்வேறு எலும்புவேறு இறைச்சி வேறாகவிழுந்து ரத்தாரோடத்தலைப்பட்டது அதனாற் குசலராஜன் சந்தோஷமாகி பாணங்களை விட்டுக்கொண்டு முதல் அணிகடந்து இரண்டாமணியில் வருகிறபோது அவ்விரண்டாமணியிலிருக்கப்பட்ட சேனைகள்கண்டு குசலராஜனை மடக்கிக்கொண்டு பாணங்களைவிட்டு யுத்தம்பண்ணும்பொழுதுகுசலனும் வில்லிலநேக பாணங்களைச் சந்தித்துவிட்டுகால் பலமான சேனைகள்விட்ட பாணங்களையெல்லா மறுததுப் போட்டுக் கொல்லுகிறபோது சேனைகளானது சின்னபின்னப் பட்டுத் தலைவிரிகோலமாய் அயோத்தியைநோக்கி யோடலுற்றார்கள்.

கெதாயுதனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்

விருத்தம்.

தேர்மிசையுற்றகெதாயுதனென்றசெழுஞ்சூரன்
காரிருள்போற்பெருஞ்சேனைகளோடுகலந்தேய
பாரிதிதின்றுபுரந்தரனெனவோர்பண்போனே
போர்புரியாவகையோதுகவென்றுபுகல்வானே.

அதனைப்பார்த்த கெதாயுதன் ஓட்டமாயோடுகிற சேனைகளை யோடவொட்டாமல் திருப்பிக்கொண்டுவந்து இரண்டா

மணியில் நிறுத்தி ரதத்தை குசலராஜன் முன்னுக்குத் தூரத்தி வில்லை யெடுத்து நாட்டி சரங்களைப்பூட்டி விடுகையில், குசல ராஜன் கண்டு பத்து அர்த்த சந்திராஸ்திரங்களை விட்டறுத் துத்தள்ளி அதனமாய் பத்து நாராசங்கள் விட்டு கெதாயுதன் மார்பிலணிந்த நவகவசங்களையுமறுத்துத்தள்ளிவிடவேகெதா யுதன்பார்த்து கோபமாகி பத்து திவ்வியாஸ்திரங்களை எடுத்து வில்லிற்சந்தித்து பிரயோகஞ்செய்தான் அந்த திவ்வியாஸ்தி ரங்கள் விடுபட்டு அக்கினிச் சுவாலையுடன் திகுதிகென் றெரிந் துக்கொண்டு வருகிறபோது குசலராசன்கண்டு அந்த நூறு திவ்வியாஸ்திரங்களையுங்கொய்து அதனமாக இரண்டு திவ்வி யாஸ்திரம்விட்டு சேனதிபதியான கெதாயுதனேறிவந்த ரதத் தையுடைத்துவிட்டான் மீண்டும்மறுதேரிலேறினன் அதையு முடைத்தெறிந்தான் இந்தப்படி 25-தேர்வரையி லதமாகவே கெதாயுதன் அதிசீக்கிரமாக மறுதேரிலேறி வில்லையெடுத்து நாணிபிகிந்து சரங்களைவாரிச் சொரிகையில் அதுகளையுஞ்சில அஸ்திரங்கள்விட்டு தடுமாடச் செய்துவிட்டு அதனமாய் ஒரு திவ்வியாஸ்திரம்விட்டு கெதாயுதன் பிடித்திருந்த வில்லை இரு துண்டமாகச் செய்தான் அதுபோகவே கெதாயுதன் கோப மாகி ஏதடா சிறுபிள்ளையென்று பார்த்தால் இவன் நம்மை வில்லைக் கையிற்பிடிக்கவொட்டாமல் அஸ்திரங்களைப் பூட்ட ஒட்டாமலும், சின்னபின்னப் படுத்துகிருன் பார்த்தாயோ வென்று தன்னுடைய தண்டாயுதத்தை யெடுத்துச்சுழட்டி குச லராசன்பேரில் விட்டெறிந்தான் அதுகண்டு குசலராசனதை யும் ஒரு பாணத்தினல் சுக்கல்சுக்கலாகச் செய்தான் அதுபோ கவே கெதாயுதன் கத்திகேடயமெடுத்துக்கொண்டு ரதத்துடன் வரும்போது குசலராசன் பார்த்து சலுதியில் ஒரு அர்த்தசந் திராஸ்திரத்தை எடுத்து வில்லிற்றொடுத்து கடுகடுத்து கெதா யுதன் சிரசை யறுத்துத் தள்ளினன்.

மட்சயந்தனுக்கும் குசலராசனுக்கும் யுத்தம்.

கலி விருத்தம்.

மட்சயந்தவனுமானும்வண்மைசேர்
இஷ்டனுகுங்கதாயுதனேமனர்
பட்சமானதுகண்டுபதறியத்
துஷ்டனைமுடிப்பேனெனத்தூண்டினன்.

அதனைக்கண்ட சேனதிபதியானவன் கோபங்கொண்டு ரதத்தை குசலராஜன்முன் நடத்தி வில்லை எடுத்து நிறுத்தி

நாணிபிகிந்து அநேகபாணங்களை வில்லிற் சந்தித்து குசல ராசன்பேரிலெய்து யுத்தம் செய்துக்கொண் டிருக்கும்போது மட்சயந்தவனுமான் கண்டு மனதில் அதிக கோபங்கொண்டு மேற்குமுகமாய்ப் பாய்ந்து 50-யோசனை நீளமும் எண்பது யோசனை யுயரமுள்ள பிர்ம்மாண்டமான ஓர் பர்வதத்தைக் கெல்லித் தோளின்மீதுவைத்துக்கொண்டு கோபச்சிறிப்பு சிரித்து குசலராசன் முன்னுக்குக் கொண்டுவந்து அவனைப் பார்த்துச் சொல்லுகிறான் அடா! குசலனே? கேளும் நீ கையிலாகாத சில ராக்ஷதாளைக் கொன்றோமென்று கெர்வித்தையே அதை இப்போதே அறிவிக்கிறேன் என்கையிலிருக்கின்ற பர்வதத்தைப் பார்த்தாயோ இந்தப் பர்வதம் போடுமுன்னமே எங்கள் ராசாவாகிய சத்துருக்கமகாராசனை வணங்கினல் நீபிழைப்பாய் இல்லாவிடிற் சாவாயென்றான் அப்படிகூறிய மட்சயந்த அனுமானைப்பார்த்து அடா இது ஏதடா காட்டிற்றிரிகின்ற குரங்கானது மலையைத் தூக்கிக்கொண்டுவந்து சத்துருக்கனுடைய பேரைச்சொல்லி நம்மை மிரட்டுகிறது இதையார் வளர்த்து வார்த்தை கற்றுக்கொடுத்த குரங்கோ, ஆனாலும் இவனனுவத்தை அறிவோமென்று அருகில் நெருங்கி அடா குரங்கே ஏதுமொழிந்தாய் நான் சத்துருக்கனை வணங்கினல் பிழைப்பேன் இல்லாவிடில் உன் கையிலிருக்கும் குன்றாலின்று என்னைக் கொன்று விடுவேனென்று என்முன்னிற் பகன்றாயல்லவா நல்லது அந்த சத்துருக்கனிடத்திலபலமிருந்தால் என்னை வெற்றியடைகிறான் இல்லாவிடில் என்கையில் சாமார்த்தியமிருந்தால் நான் வெற்றியடைகிறேன் நாட்டில்வாழாதகாட்டில் வாழும் குரங்கு நீயார் உனக்குமவனுக்கும் என்ன சம்பந்தமுண்டென்று தலைமேல் மலைவைத்துக்கொணடு வந்தாய் ராட்சதமாய்கையால் இப்படி குரங்கு ரூபமெடுத்து வந்தாயோ நீயார் சொல்லாவிடில் உன்னையும் உன் தோளிலிருக்கும் பர்வதத்தையும் நிர்த்தூளி படலமாக்குவேனென்றான்.

அவ்வார்த்தையைக் கேட்ட மட்சயந்தனுமான் குசலராசனைப்பார்த்து குலுங்க நகைத்து சொல்லுகிறான் அடா குசலனேகேள் பராபரவஸ்துவாய் விளங்குகின்ற ஸ்ரீமந் நாராயணரே ஸ்ரீராமமூர்த்தியாய் அவதரித்து ராவண சம்மாரஞ் செய்யுங்காலையில் வாய்வுபுத்திரன் அனுமாராகிய என் தந்தையைக்கண்டு சிநேகங்கொண்டு, வாலியைக்கொன்று சக்ரீவனுக்குப் பட்டங்கட்டி, எழுபத்திரண்டு வெள்ளம் என்னைப்போ

ன்ற வானரங்களை தண்டுகூட்டிப் படையெடுத்து லங்கைக்குள் நுதழந்து இராவணசம்மார முடிப்பித்து கீர்த்திபெற்ற அனுமார் குமாரன் நான் என்பெயர் மட்சயந்தனுமானென்று சொல்வார்கள்! அப்படியிருக்கக் காட்டில் வாழுகின்ற குரங்கானல் பேசத்தெரியுமோ இப்பேர்க்கொற்ற பர்வதத்தைத் தூக்கிக் கொண்டுவர பலன்தானுண்டோ என்னைப்போல் பலம் படைத்த எழுபத்திரண்டு வெள்ளம் வானரான் அயோத்தியிலிருக்கின்றார்கள் அதுவுமன்றி ஐந்நூறுவெள்ளம் இராக்ஷதாளும் அதற்குப் படைத்தலைவர் சேனாதிபதிகளும் இராட்சதசிரேஷ்டர்களும் வந்திருக்கிறார்கள் நீயோ சிறுபிள்ளை ஏன் வீணில் மீளாதவகையைத் தேடிக்கொள்ளுகிறாய் "ஊருடன் பகைக்கின் வேருடன்கெடு" மென்ற பழமொழி யுணர்ந்திலாயோ ஆர் பகையானாலும் ஸ்ரீராமர் பகை யாருக்கு மாகாது ஸ்ரீராமபாணம் கொஞ்சத்தில்விடாது ஆகையால் என்சொல்லைத் தள்ளாமல் வேறென்றுங் கருத்தில் கொள்ளாமற் சத்துருக்கமகாராசனை இணங்கி வணங்கி பிழைப்பதே காரியமென்றான்.

அப்படி சொல்லிய மட்சயந்தனுமானைப் பார்த்து குசலராசன் சொல்லுகிறான் அடா! மட்சயந்தவனுமானே? அந்த ஸ்ரீராமனைப்போல் லட்சம் ஸ்ரீராமன் வந்தாலும் அவன் தம்பி சத்துருக்கனைப்போல் இரண்டு லட்சம் சத்துருக்கன் வந்தெதிர்த்தாலும் உன்னைப்போல் பலம் படைத்த வானர வெள்ளமான இராட்சத சேனையானது கோடிவெள்ளம் வந்தாலும் அயோத்தியை நாடி தேடி யோடிப்போகும்படியாய் என்னுடைய நாராயணாஸ்திரத்தினால் ஒரு க்ஷணப்பொழுதில் சம்மாரஞ்செய்து போடுவேன் அந்த ஸ்ரீராமனும் அவனுடைய சேனைகளும் உனக்கேபெரிதாயிருக்கும் அதுகளெல்லாம் எனக்கோ துரும்பென்று நினைத்திருக்கிறேன் நீபோடப்பட்ட மலையை எதோ போடு பார்ப்போமென்றான்.

அப்போது மட்சயந்த அனுமான் அதிக கோபங்கொண்டு இவனைக்கொன்றாலும் தோஷமில்லை யென்று சுழட்டி குசலராசன்பேரில் விட்டான். அந்த பர்வதமானது மூங்கிற் காடு பத்தி எறிய கரடி புலி சிங்கம் காட்டானைகள் திடுக்கிட அதிக வேக வருகிறபோது குசலராசன் கண்டு சீதையம்மாள் கொடுத்த இந்திரனுடைய வஜ்ராயுதத்தை எடுத்து வருகிற பர்வதத்தின் பேரிலே விரைந்து விட்டான். அந்த வச்சி

ராயுதமானது பர்வதத்தின்பேரிலே படவே, பர்வதமானது விபூதி தூளிதம்போற் பூமியில் விழுந்துவிட்டது. அதுகண்டு மட்சயந்த அநுமான் கோபமாகி மேற்குமுகமாக நோக்கி மற்றோர் பர்வதத்தை கொண்டுவரப் பாயுமுன்னமே குசலராசன் வில்லில் அநேக பாணங்களைச் சந்தித்து மட்சயந்த அநுமான்பேரிற் பிரயோகம்பண்ணி விட்டான். பாணங்கள் வில்லில் விடுபட்டு நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு மட்சயந்த அநுமானுடைய சரீரங்களில் சுருக்குசுருக்கென்று வந்து தைக்கவே மட்சயந்தவநுமான் கையினாலும் வாயினாலும் பாணங்களை பிடுங்கி வுதறினான். அப்போது பாணங்களெல்லாம் முறிந்துபோய்விட்டது. அதற்கு குசலராசன் 10 நாராசபாணங்களெடுத்து வில்லிற் சந்தித்து மட்சயந்தநுமான்பேரிற் பிரயோகஞ்செய்தான். அந்தப் பத்து நாராசபாணங்களும் விடுபட்டு காலக்கோட்டி விஷம்போற்சீறி சிடசிட படபடவென்ற சத்தத்துடனெறிந்துக்கொண்டு வருகிற 10 நாராசங்களுநம் மட்சயந்த வநுமான் கையை நீட்டி பிடித்து கசக்கி நசுக்கி சத்துவித நீவந்தவழி போவென்று காட்டிக்கூட்டியோட்டிவிட்டான். அதனால் குசலராசன் கண்களிற் பொறி பறக்க மகாகோபத்துடன் நூறு நாராசபாணங்களை எடுத்து வில்லில் ஒவ்வொன்றாகச் சந்தித்துவிட்டான்.

அந்த நாராசபாணங்களானது ஆலகால விஷம்போற் புகைகளுடன் சீறிவரும்போது மட்சயந்த அநுமான் ரணக்களத்திலுருண்டு கிடக்கும் இரும்பு தெண்டாயுதத்தை கையிலெடுத்து வருகிறபாணாஸ்திரங்களை பறக்கடிக்கிறபோது பாணங்களானது வந்தவழி போனவழி தெரியாமற் போய்விட்டது குசலராஜன் பின்னுமதிக சினங்கொண்டு திவ்வியாஸ்திரங்களெடுத்து தனுசிற்றொடுத்து விடுத்து மட்சயந்த அநுமான் கையிற்பிடித்திருந்த இரும்பு தெண்டாயுதத்தை யறுத்தெறிந்தான். அதுபோகவே மட்சயந்தநுமான் ரணக்களத்தில் விழுந்திருந்த ஆனைகளை வாரிவாரி குசலராசன்பேரில் விட்டெறிந்தான். அதுகண்டு குசலராசன் இரண்டு அர்த்த சந்திரபாணங்களை விட்டு அதை சிதைத்தான் பின்பு மட்சயந்தநுமான் இரதங்களை வாரி குசலராசன்மீது விடுத்தான். அதற்கு மிரண்டு திவ்வியாஸ்திரங்களைவிட்டு வருகிற இரதத்தை உடைத்தெறிந்தான் அதனால் மட்சயந்தநுமான் மயங்கித் தியங்கி இவனை எவ்வாறாய் செயிப்போமென்று மனதில் யோ

சனை செய்துக்கொண்டிருக்கையிற் குசலராஜன் சொல்லு கிறான்.

அடா! மட்சயந்தனுமானே? என் யுத்தம்பண்ணுகிறாய் உனக்கு ஆயுதங்கள் அஸ்திரங்களும் கல்லும் மரம் யானை தேர்களோ இப்படி யுத்தஞ்செய்தோ ராவண இராட்சதானை செயித்தீர்கள் உங்களை சேவகத்திற்கு வைத்துக்கொண்ட ஸ்ரீ ராமனும் உங்களைப்போற்றானே யுத்தம்பண்ணுவான் உங்களு டைய வம்மிசசேஷ்டைகளையே காட்டினீர்கள் நீங்களொரு சேவகவீரனென்று என்முன் யுத்தம்பண்ணவந்தீர்கள் உன்னை ப்போல் 72-வெள்ளம் வானராளும் இப்படி தான் யுத்தம் பண்ணுவார்களோவென்றான். அதுகேட்டு மட்சயந்தனு மான் கோபத்துடன் குசலராசனைப்பார்த்துச் சொல்லுகிறான். அடா! குசனே? நீ விசேஷத்தை மிஞ்சாதே, நீதானே சூர னென்று துள்ளாதே, உன்கையில் வில்லிருக்கிறதென்று கெர் வியாதே, உன்னுடைய அஸ்திரங்கொண்டா என்னை செயிக் கப்போகிறாய் உன்னால் வல்லமையுண்டானால் வில்லம்பை பூமியில்வைத்து என்னுடன் யுத்தம் பண்ணிப்பார் உன்னு டைய சாமார்த்தியமும் என்னுடைய சௌரியமும் அப்போ தல்லவோ தெரியவரும் அப்படி யுத்தம்பண்ணுகிறதைவிட்டு விட்டு ஆயுத அஸ்திரங்கள் மிச்சமாயிருக்குதென்று நிராயுத ராய் நின்றபேரை ஏன் வீணில்கொல்லுகிறாய் நீ இராசகுமார னானால் என்னுடன் மல்லுத்தஞ்செய்துபார் அதில்தான் வீர னென்பதும் நீ சூரனென்பதுந் தெரியவரும் நீ ரிஷிபிள்ளை யானபடியினாலே உனக்கு இந்தவில்வித்தைவிட வேறேயுத்த ஞ்செய்யமாட்டாய் எதிரியுடன் வில்லம்பில்லாது கத்திகேடய மெடுத்து யுத்தஞ்செய்யவேண்டும் எதிரி நிராயுதனாக போர்புரி யவேண்டும் இதல்லவோ இராஜநீதிமுறைமை, உனக்குதனுர் வேதசாஸ்திர யுத்தம் ஒன்றுதான் தெரியுமோ நாலாவிதயுத் தமும் தெரியவராதோவென்றான். அப்படி சொன்ன மட்சய ந்தனுமானைப் பார்த்து குலுங்கநகைத்து அடா! மட்சயந்த னுமானே? நல்லவசனம் சொன்னாய் காட்டில் வாசம்பண்ணப் பட்ட மிருகங்களுக்கு சமதையான குரங்கு புத்தியை இனி நான் கேட்டல்லவோ, எந்தயுத்தமாகிலும் செய்ய விரும்பு வேன், வில்லம்பிருக்கிறமட்டும் நான் வில்லம்புகொண்டேயுத் தம்பண்ணுவேன் உன்னால் சாமார்த்தியமுண்டானால் என்னு டைய வில்லையொடித்தெறிந்து போட்டாயேயானால் அதன்

பிற்பாடு எந்த யுத்தமாகிலும் பண்ணுவோமென்று அநேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்து சரமாரியாக மட்சயந் தனுமான்பேரில் பாதாதிகேசம் வரையில் பொழிந்துவிட்டான். அதனால் மட்சயந்தனுமானுடைய சரீரங்களெல்லாம் ஜல்லடைக்கண்களாகத் துளைத்து உதிரவெள்ளம்சொரியமகா ஆயாசத்தோடு ஸ்ரீராமா ராமாவென் றடியற்றபனைசாய்ந்தது போல் மட்சயந்தனுமான் பூமியில் மரணமூர்ச்சையடைந்தான். அதனைக்கண்ட பவர்னன் மகாகோபாக்கினியுடன் அநேக அஸ்திரங்களைத் தனுசிற்றொடுத்துவிடுத்தான். அந்த அஸ்திரங்களும் காலகோடி விஷம்போற் சீறிக்கொண்டுவருகையிற் குசலராசன் கண்டு பதினைந்து அர்த்தசந்திராஸ்திரமெடுத்து விடுத்து வருகிற பாணங்களையெடுத்து அதனமாக ஐந்து திவ்வியாஸ்திரம் விடுத்து இரதம் சாரதி குதிரைகளையு மதஞ் செய்து பவர்னனுடைய மண்டையைப் பிளந்து விடவே, பவர்னனும் மிக ஆயாசத்தோடு வில்லை அடிதட்டிற்போட்டு விட்டு மூர்ச்சையடைந்தான்.

அப்போது குசலராஜன் சந்தோஷமாகிப் பின்னுமநேக அஸ்திரங்களைச் சந்தித்து இரதகஜ துரகபதாதிகளின் மீதெய்து கொல்லுகிறபோது சேனைகள் நின்று நிர்வாகம் பண்ண மாட்டாம லோடத்தலைப்பட்டது. அதுகண்டு சேனாதிபதி யான சூரசேனன் இரதத்தை நடத்தி ஓடுகிற சேனைகளை ஓட வொட்டாமல் திருப்பிக்கொண்டு வரும்போது குசலராசனுன வன் இரண்டாமணிவிட்டு மூன்றுமணியிற்புகுந்தான்.

குசலராஜனுக்கும் உக்கிரசேனனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

வஞ்சமிகுமட்சயந்த வனுமான்பாய வயவீரன் குசலன்மூன்றுமணி யைச்சார்ந்தான், பஞ்சதுபோற் பரந்தபடை யுக்கிரசேனன் பாற்சென்று குறையுறைக்கவன்றேனும், தஞ்சமென வடுத்தவர்க்குத் தணிவுசொல்லி தடந்தேர் மேலேறிசெஞ் சிலையைத்தாங்கி, செஞ்சுடரோன் முன்னமரும் மஞ்சுபோலச் சேனையோடுமேவிசில செப்புவானே.

இந்தப்படி மூன்றுமணியையடைந்த குசலராசனைக் கண்ட உக்கிரசேனன் மகாகோபாக்கினியுடன் இரதத்தை குச

லராசன் முன்னடத்திச் சொல்லுகிருன். அடா! குசலனே? நில்லு நில்லெங்கே வருகிருய் நீ கையிலாகாத சிலபேரைக் கொன்றேமென்று கர்வித்திருக்கிருய் அந்த கர்வத்தை அரை ட்சண நேரத்தில் அடக்கி வைக்கிறேன் பாரடா வென்று வில்லையெடுத்து நிறுத்தி அதிக தீட்சண்ணியமாக யிருக்கப் பட்ட 10-திவ்வியாஸ்திரங்களை வில்லிற்றெடுத்து பிரயோக ஞ்செய்தான். அதுகண்டு குசலராஜன் கோபாக்கினியுடன் ஐந்து நாராசமெடுத்து அபிமந்திரித்துவிட்டான். அதுவும் விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டுவந்து உக்கிரசேன ன் விட்ட பத்து திவ்வியாஸ்திரத்தையும் அவன் ஏறிவந்த இரதம் சாரதி குதிரைகளையும் தும்சம்பண்ணிப் போட்டது. அதுகண்டு உக்கிரசேனன் லகுவில் தப்பித்துக்கொண்டு மறு தேரிலேறினுன். அதையும் இரண்டு திவ்வியாஸ்திரங்களை விட்டு அறுத்தெரிந்தான். இப்படி முப்பது இரதம் வரை யிற் குசலராஜன் பாணங்களினுற் பொடியாகச் செய்ததால் உக்கிரசேனன் திக்குமுக்காடி அக்கணமறுதேரிலேறி சாரதி யை எச்சரித்து இரதத்தைநடத்தி வில்லையெடுத்து நிறுத்தி நாணிபிகிந்து அநேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித் து விட்டுவிட்டான். அந்தபாணுஸ்திரங்கள் அக்கினி சுவாலை யுடன் வருகிறபோது குசலராஜன்கண்டு சீக்கிரத்தில் நூறு திவ்வியாஸ்திரம் விடுத்து உக்கிரசேனன் கைவில்லைக்கொய்து அவன் திரேகத்தைச் சதைசதையாகப் பேர்த்தெரிந்து சாரதி தலையறுத்து குதிரைகளையுந் துண்டுதுண்டாகத் தறித்துப் போட்டான். அதனுல் உக்கிரசேனன் தைரியம்விடாமல் கத் தி கேடயம் எடுத்து இரதத்தைவிட்டுக் குதித்து மண்டியிட்டு சிவ்வென்று பாய்ந்து வருவதை குசலராஜன் கண்டு ஒரு திவ் வியாஸ்திரமெடுத்து சீக்கிரம் விடுத்து கத்திபிடித்த கையை அறவெட்டித் தள்ளினுன். அந்தக் கத்தியுடன் கைபோகவே அதிக கோபமாகி வேகமுடன் இடதுகையிற் றண்டாயுதமெ டுத்து சுழட்டி விட்டெறிந்தான். அதுவுங் குசலன்பேரில் ஓடிவருகிறபோது குசலராசன்கண்டு ஒரு அர்த்தசந்திரமெடு த்துவிட்டு தெண்டாயுதத்தை அறுத்துத்தள்ளி அதிசீக்கிர மாக ஒரு கண்டங்கத்திரி பாணமெடுத்து விடுத்து உக்கிரசே னன் சிரசை யறுத்துத்தள்ளினுன்.

குசலராஜனுக்கும் அசுவசேனனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வெஞ்சமர்செய்து உக்கிரசேனனைத்
துஞ்சவெங்கணை தொட்டகுசலன்மேல்
பஞ்சபாதகனு மஸ்வசேனனும்
வஞ்சமோடுசமற்கு வளைத்தனன்.

அப்போது அஸ்வசேனன் மகாவுக்கிரத்துடன் இந்த குசலனுடைய வில்லையும் இவனுக்கு உறுதியான சொல்லையும் அந்தயெல்லையிலுள்ளவர்கள் யாவரு மென்னை மெச்சத் தக்கதாய் கண்டிக்கிறேன் இவனையு மிருபிளவாகத் துண்டிக்கிறேனென்று கண்டிப்பாகச்சொல்லி அநேக அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து குசலராஜன்பேரில் சரமாரியாய்ப் பொழிந்துகொண்டிருந்தா னதுகண்டு குசலராசன் வில்லிலநேக பாணங்களைச் சந்தித்து விடுத்து அஸ்வசேனன் சரீரத்தைச் சல்லடைக்கண்களாக துளைபடச்செய்தான். அதனால் அசுவசேனன் மிகவும்நொந்து, ஒருசத்தியைஎடுத்து பூசைசெய்து விட்டான். அந்த சத்தியானது அண்டரண்ட புவனங்களும் நடுங்க ஆர்ப்பரித்துக்கொண்டு வருகிறதைக் குசலராஜன் பார்த்து, தானுமோர் சத்தியை எடுத்து வந்தனை வழிபாடுசெய்து உச்சரித்து விட்டுவிட்டா னதுவும்விடுபட்டு அண்டர் விலங்க மற்றவர்கலங்கச் சண்டப்பிரசண்ட உத்தண்டத்துடன் ஆவென்று வாயைத்திறந்துக்கொண்டு அசுவசேனன்விட்டசத்தியைக் கபளீகரம் பண்ணிப்போட்டது, அதனால் அசுவசேனன் மகாகோபாக்கினியுடன் வில்லிலநேக பாணங்களைச் சந்தித்து யுத்தம்பண்ணிக்கொண்டுவந்தான்.

அந்தச்சமயத்தில் சேனாதிபதியாகிய காலசித்தனென்பவன் பாணவேகமடங்கியதால் இரதத்தை அதிகவேகத்துடன் நடத்தி ரணக்களம்வந்து குசலராஜனைக் கண்டு சொல்லுகிறான். அடா! குசலனே? நீயொரு சேவகனென்று வில்லை கையிற் பிடித்தாய், எதிர் நின்றுயுத்தப்பண்ணப்பட்ட என்னை இப்படியஸ்திரம்விட்டு சமயத்தில் ரதத்தை தூரத்திலோடச் செய்த படியினாலே இதுவரையில் நீர்பிழைத்திருந்தாய் இல்லாவிடி லென்னுடைய அஸ்திரத்தினு லெரித்துப்போடுவேன் இப்போதுமென்ன எதோ எடுபார்ப்போமென்றான் அப்படி சொ

ன்ன காலசித்தனுடைய வார்த்தையை குசலராசன் கேட்டு சொல்லுகிறான் அடா காலசித்தனே? விசேஷத்தைமிஞ்சாதே என்னவார்த்தை புகன்றாய் நீயொரு சேவகனென்று வில்லை கையிலே பிடித்தாயென்று சமயத்தில் வாய்வாஸ்திரம் விட்டு ரதத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டாயென்றும் இல்லாவிடில் உன்னையும் என்னுடைய அஸ்திரத்தினாலே பஸ்மீகரப்படலமா எரியப்போடுவேனென்றல்லவோ சொன்னாய், அந்தப் படியானால் என்னையும் என்னுடைய அஸ்திரத்தையும் எரிக்கப்பட்ட அஸ்திரமுண்டானால் எதோ எடு பார்ப்போமென்று வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து வருஷகாலத்தில் ஈசானியமூலையில் மேகமானது விடுபட்டு இடி மின்னல்குமுறலுடனே ஓய்ஒழிச்சலில்லாமல் மாரிபொழிவதுபோலே ஒன்றரை நாழிகை பரியந்தம் மூச்சுவிடாமல் சரமாரியாய்ப் பொழிகிற போது காலசித்தன்கண் டநேகபாணங்களை வில்லிற்சந்தித்து ஐப்பசி கார்த்திகை மாதத்தில்பெய்யு மழையைப்போலே இரண்டுநாழிகைபரியந்தம் பொழிந்துக்கொண்டிருக்கையில் இதில் குசலராசன்விட்ட பாணங்கள் அதிவேகமாய் வந்து காலசித்தன் விடப்பட்ட அஸ்திரங்களையறுத்து, காலசித்தனுடைய சரீரத்தையுஞ் சல்லடைக்கண்களாகத்துளைத்து சாரதி குதிரைகளையும் அதஞ்செய்து சேனைகள்பேரிலும் அஸ்திரங்கள் பாய்ந்ததினால் அதிக கூச்சலெழும்பத் தலைப்பட்டது.

அப்படி குசலராசனுடைய அஸ்திரங்களினாற் காலசித்தன் மிகவுங் கஷ்டமடைந்து குசலராசனைப் பார்த்து பல்லைக் கடித்து ஓரக்கினியாஸ்திரமெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் கொடுத்துவிடுத்தான் அந்த அக்கினியாஸ்திரமானது வில்லில்விடுபட்டு அக்கினிபொறிகளை வாரியிறைத்து சிடசிட படபடவென்கிற தொனியோடு திகுதிகென் றெரிந்துக்கொண்டு அதிவேகமாய் வருகிறபோது குசலராசன்கண்டுஒரு அக்கினியாஸ்திரமெடுத்து தனுசிற்றொடுத்து மந்திராபூதிகளுடன் விட்டுவிட்டான். அந்த அக்கினியாஸ்திரமானது எரிபுகைகளுடன் யாவரும் மயங்க, மூவருந் தியங்க, தேவர்களும் அண்டம்விட் டண்டமொதுங்க, சந்திராதிகள் மனமொடுங்க, சிவ்வென்று வாயைத் திறந்துக்கொண்டு வந்து காலசித்தனுடைய அக்கினியாஸ்திரத்தை யறுத்து பூமியிற் றள்ளிப் போட்டு அம்புறாவில் வந்தடைந்தது.

அதனுற் காலசித்தன் கடுஞ்சினமாகி ஒரு சத்தியைக்கையி லெடுத்து மந்திராபூதிகள் செய்துவிட்டான். அந்தசத்தியா னது புறப்பட்டு அண்டரண்டபகிரண்டங்களும் ஆயிரத்தெட் டண்டங்களும் குலுங்க அக்கினிச்சுவாலையாய் அதிவேகத்து டன் சத்தியானது குரூபமாய் ஆகாயமெழும்பிச் சொல்லுதற் கரிய ஓசையுடன் குசலராசன் எங்கே எங்கேயென்று தேடிவரு கிறபோது தேவர்கள்கண்டு பயந்து ஒரு அண்டம் உயரமோ டிப்போனுர்கள். அப்போது குசலராசன்கண்டு இந்த சத்தி மகாமகிமையுடனேயும் வருகிறதென்று தன்னுடைய உக்கிர வீரசத்தியைத் தன் கையிலெடுத்து மந்திராபூதிகள் செய்து விட்டான். அந்த உக்கிரவீர சத்தியானது ஆவென்று வாயை த்திறந்து அக்கினியை குபீல்குபீலென்றுகக்கிக்கொண்டு அதி வேகமாய்வந்து காலசித்தன்விட்ட சத்தியை குசலனண்டைக் குப்போகவொட்டாமல் மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்து கால சித்தனுடைய சத்தியை கமளீகரம் பண்ணிப்போட்டு குசல ராஜன் அம்புருவில் வந்தடைந்தது.

அப்படி காலசித்தன் விட்ட சத்தி போகவே காலசித்தன் நாராயணுஸ்திரத்தைக் கையிலெடுத்தான். அதுகண்டு தேவர் களெல்லாம் பயந்து மேலண்டத்திற் கோடிப்போனுர்கள். அப்படி தேவர்கள் நடுங்கும்படியாய் நாராயணுஸ்திரத்தை பூசைசெய்து வில்லிற்சந்தித்து விட்டுவிட்டான் அந்த நாரா யணுஸ்திரமானது ஆலகால விஷத்தைப்போல் அக்கினியை வாரி யிறைத்துக்கொண்டு அதிவேகத்துடன் வருகிறபோது, குசலராசன்கண்டு இந்த நாராயணுஸ்திரமானது மகா மகிமை யுடன் வருகிறதென்று தன் தாயார்கொடுத்த நாராயணுஸ்திர த்தை எடுத்து பூசைநைவேத்தியஞ்செய்து பிரயோகஞ் செய் தான். அந்த அஸ்திரமானது அண்டங்குலுங்க ஆர்ப்பரித் துக்கொண்டு காலசித்தன் விட்ட நாராயணுஸ்திரத்தின் மீது தடாலென்று மோதி ஒன்ருேடொன்று தாக்கி சிலநேரம் யுத் தம்புரிந்து காலசித்தனுவடைய நாராயணுஸ்திரத்தை கமளீகரி த்து அம்புருவில் வந்தடைந்தது. அதுகண்டு காலசித்தன் மகாகோபாக்கினியுடனே எறிந்து விழுந்து குசலராசனைக் கொல்லவேணுமென்று பிர்மாஸ்திரத்தையுங் காலனிட வச் சிரகோப தெண்டாயுதத்தையுஞ் சிவன்கொடுத்த சூலமு மெடு த்து பூசைகள்புரிந்து குசலராஜனைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிருன். அடா! குசலனே? கேளும் இதுவரையில்

உன்னைச் சிறுபிள்ளை என்றும் ஸ்ரீராமரைப்போ லிருக்கிறு யென்றுஞ் சீதாலட்சுமியுடைய பிள்ளை என்றும் மனம் பொறுத்தேன் அப்படி மனம் பொறுத்த தோஷம் என்னுடைய சரீரமெல்லாந் துளைபட்டு மிகவுங் கஸ்தியடைந்தேன், ஆனபடியினு லிப்பொழுது பிர்மாஸ்திரமும் காலன்கொடுத்த தெண்டமும் சிவன்தந்த சூலமும் விடுகிறேன் இனியுன்னைக் கொஞ்சத்தில் விடுவேனென்று யோசிக்காதே இதோ விட்டுவிட்டேன். இதை விலக்கடா பார்ப்போமென்று ஒன்றின்மேலொன்ருய் விட்டான் அம்மூன்ருயுதமும் வெளிப்பட்டு அண்டபகிரண்டமுதல் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க, அக்கினிப் பொறிகளெழும்ப, அட்டகாசங்கள் செய்து, குசல ராஜன் எங்கே எங்கே என்று வருகிறபோது, அதை குசலராசன் பார்த்து அதிக விரைவில் தாயார்கொடுத்த நாராயணுஸ்திரத்தை எடுத்து பூசைசெய்து வில்லிற்சந்தித்துப் பிரயோகப் படுத்தினன் அந்த நாாாயணுஸ்திரமும் விடுபட்டு மண்விண்ணதிர கீழுதடு கீழுலகமு மேலுதடு மேலுலக முருவுகொண்டு வடவாமுகாக்கினிப் பொறிகள் சிந்தி பூமியில் விழுந்து ரணக்களத்திலிருக்கும் யானை தேர் பரி சேனைகளும் எரிந்து பொரிந்து சுடு நாற்றங்களெழும்ப ஆங்கார வீரபராக்கிரமத்துடன் விட்ட பிர்மாஸ்திரம் தண்டாயுதம் சூலாயுதத்தின் பேரிலும் வந்து சடாலென்று மோதி ஆகாயம் பூமியுமொன்ருய் ரூபங்கொண்டெதிர்த்துப் போராடி யுத்தம் புரிந்து அம்மூன்ருயுதத்தையும் முன்னுக்கு வரவொட்டாமல் அடித்துத் துரத்துகிறபோது, தேவர்கள் கண்டு, இந்த நாராயணுஸ்திரமானது நமதுபேரில் எங்கே வருகிறதோவென்று தியங்கி மயங்கும்படியாய் அம் மூன்றஸ்திரங்களுஞ் சின்னப்பட்டு வெட்கி அது இருப்பிடம்போய்ச்சேரவே, காலசித்தன் கண்டு பயங்கொண்டு, எல்லாம் ஸ்ரீராமருடைய கிருபையென்று மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு பாசுபாதாஸ்திரமெடுத்து வில்லிற் சந்தித்து மந்திர பூர்வத்துடனே பூசைகள்செய்து குசலராசனை செயமடைந்து வாவென்று ஆகர்னபரியந்த மிழுத்துவிட்டான்.

அந்தப் பாசுபதாஸ்திரம் விடுபட்டு அதற்கு காவலாய் அஷ்டவயிரவர்களும் பாணத்தின் மூலையில் சூலத்தைப்பிடித்துக்கொண்டிருக்க, அஷ்டதிக்குப்பாலகரு மவர்களாயுதங்களும் பாணத்தின் மத்தியில்நிற்க, ஏகாதச ருத்திராள் துவாதசாதித்தர்கள் சூலங்களை கையிற் பிடித்துக்கொண்டு பாணத்

தினுடைய வலப்புரமாக கார்க்கப்புறப்பட்டது. அந்த பாசுபதாஸ்திரத்தைக்கண்டுதேவர்கள் சொல்லிக்கொள்ளுகிருர்கள் பிர்மாஸ்திரத்தையும் சூலத்தையும் தெண்டாயுதத்தையும் நாராயணுஸ்திரஞ் செயித்து இந்தப்பாசுபதாஸ்திரத்திற்கு எந்த அஸ்திரம் விடுவாஞே பார்ப்போமென்றிருக்கையில் குசலராசன் கண்டு இந்த அஸ்திரமு மகாமகிமையுடன் வருகிறதென்று நினைத்து கனைத்து தன் தாயார்கொடுத்த நாராயணுஸ்திரத்தை எடுத்து தூபதீப நைவேத்தியங்களுஞ்செய்து, மந்திரா பூதியுடனே வில்லிற் சந்தித்து தன் தாயை துதிசெய்து காலசித்தன் விட்ட பாசுபதாஸ்திரத்தை செயித்துவாவென்று விடவே, அந்த நாராயணுஸ்திரமானது அண்டாண்ட பிர்மாண்டம் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க அட்டகாசஞ் செய்து ஆவென்று வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாரி குபீல் குபீலென்று பூமியிற் கக்குகிறபோது அந்த அக்கினிப்பொறியானது பூமியில்விழுந்து புல்லுபூண்டு மரமட்டை செடிகளும் பத்தி எறிய, அந்த அக்கினிச் சுடரில் யானை தேர் பரிசேனைகளும் சுடுநாற்றங்களெழும்ப, அண்டரண்ட புவனங்களும் நடுங்க, அஷ்டதிக்குமதிர, ஆலகால விஷத்தைப் போற் சீறிக்கொண்டு அதிவேகத்துடன் வந்து காலசித்தன் விட்ட பாசுபதாஸ்திரத்தை சடாலென்று மோதி யடிக்கவே பாசுபதாஸ்திரத்தை காத்துக்கொண்டு வந்த அஷ்டவயிரவர்களுடைய சூலமுமொடிந்து அஷ்டதிக்குப் பாலகரிட ஆயுதங்களுமொடிந்து ஏகாதச ருத்திராள் சூலமுந் தவிடுபொடியாகி அஷ்டவயிரவர்களும் அஷ்டதிக்குப் பாலகரும் ஏகாதச ருத்திராளும் நாராயணுஸ்திரத்தினுல் அடிபட்டு முறிந்தோடியும் பாசுபதாஸ்திரமானது உக்கிரம் விடாமல் நாராயணுஸ்திரத்தின்பேரி லெதிர்த்து யுத்தஞ்செய்கிறபோது, நாராயணுஸ்திரம் அதிக உக்கிரத்துடன் பாசுபதாஸ்திரத்தை முறிய அடித்து பூமியிற்றள்ளிவிட்டு அப்புருவில் வந்தடைந்தது. பாசுபதாஸ்திரமானது பின்னப்பட்டு உருவாகி சிவபிரானிடப்போய்ச் சேர்ந்தது தேவர்களும் நாராயணுஸ்திரத்தினுடைய மகிமையை ஒருவராலுஞ்சொல்லமுடியாதென்று கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது காலசித்தன் மிகவும் விசனப்பட்டு ராட்சதாளைப்பார்த்துச் சொல்லுகிருன். அடா ராட்சதர்களே குசலன் சிறுபிள்ளையென்று பார்த்தீர்கள் நம்முடைய ராட்சத குலத்தில் நமனுகவந்திருக்கிருன் இவனைக் கொஞ்சத்தில்

விடப்போகாது நாலுமூலையும் வளைத்துக்கொண்டு யுத்தஞ் செய்து செயிக்கவேண்டுமென்று சொல்லி மூன்றுமணியி லிருந்த ரதகஜ துரகபதாதிகளையுங் கூட்டி யானைக ளொருபக்கமும் ரதங்களொரு பக்கமுமாய் நிறுத்தி குசலனை நடுவில் மடக்கிக்கொண்டு தானு மஸ்வசேனனும் சேனைகளை ஏவிவிட்டு வில்லையெடுத்து நிறுத்தி அநேக பாணங்களை வில்லிற் சந்தித்து இடைவிடாமல் சரவருஷங்களைப் பொழியும்போது குசலராஜன் கண்டு நகைத்து அபரிமிதமான அஸ்திரங்களை வாரி ஈசானியமூலையிலிருந்து மேகமானது விடுபட்டு இடி மின்னல் குமுறலுடனே மழைசொரிவதுபோல ஓயாமல் நாலுமூலையும் குயவன் றிகிரிபோற்றிரும்பி எய்து ராட்சதாளுடைய அஸ்திரங்களையறுக்க மாளாமல் பாணங்களானது வந்து விழும்படியாய் அப்படி ராட்சதாளும் காலசித்தனும் அஸ்வசேனனும ரோஷத் துவேஷங்களுடன் மிதமில்லாத பாணங்களை குசலராஜன்பேரி லெய்கிறபோது குசலராஜன் எத்தனை பாணமென்றறுப்பான் எவ்வளவு தடுப்பான் என்னமாய் தானும் அஸ்திரம் விடுப்பான் ராட்சதாளோ கட்டுகட்டாய் பாணங்களை மட்டுமிதமின்றி உருவிவிடுகிறுர்கள் அதனைற் குசலராசனும் நல்லதென்று வில்லைநாட்டி அஸ்திரங்களைப் பூட்டி ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்-பதினுயிரம்-நூறுயிரம்-என்று ஒரு முகூர்த்தம் மூன்றேமுகூர்த்தம் நாழிகை சரவருஷமாக பொழிகிறகாலையில் அந்த அஸ்திரங்களானது காலசித்தனும் ராட்சதாளும் விடப்பட்ட பாணங்களை யெல்லாமறுத்து ரதகஜதுரகபதாதிகளின்பேரில் முனைந்து எப்படிவிழுகிறதென்றுல் யானையொன்றுக்கு மூன்றுபாணம், சவுடாலுக்கு ஒருபாணம், இராசாவுக் கிரண்டுபாணம், மாவுத்தனுக்கொரு பாணம், இந்தப்படி கணக்காகவிட்டுகொல்லுகிறபோது அதில் யானைகளானது காலறுந்தும், வாலறுந்தும் தும்பிக்கையறுந்தும், மத்தகம்பிளந்தும், கொம்புமுறிந்தும், குடல்சரிந்தும், விழுந்தது பின்னும் இரதத்திற் கைந்துபாணம், இராசாவுக்கிரண்டுபாணம், சாரதிக்கொருபாணம், குதிரைக்கிரண்டு பாணம், இவ்வண்ணமாக விடுகையில் அந்த இரதங்கள் அச்சுவேறு, ஆணிவேறு, குத்துக்கால்வேறு, கொடுங்கைவேறு, சட்டம்வேறு, துவசம்வேறு, கொடிவேறு, சாரதிவேறு, கால்வேறு, உடல்வேறு, தலைவேறு, குதிரை வேருகவிழத் தலைப்பட்டது. அப்பால் குதிரைகளுக்கோவென்றுல் மூன்று

பாணம் ராவுத்தனுக் கிரண்டுபாணம், சாரதிக் கொருபாணம், இந்தப்படி கணக்காய் பாணங்கள் போய்விழுகிறபோது காலறுந்தும், வாலறுந்தும், தலையறுந்தும், குடலறுந்து மாயவும் ராட்சத சேனைகளுக்கோவென்றால், நபுரொன்றுக் கிரண்டு பாணங்கள் கணக்காக விடுத்துக் கொல்லுகையில் சேனைகளெப்படிவிழுகிறதென்றால் தலைவேறு, கைவேறு, உடல்வேறு, சதைவேறு, எலும்புவேறு, குசலராசனுடைய பாணங்களினால் ரதகஜதுரகபதாதிகளுமாண்டு காலசித்தன் சரீரமுழுதுந் துளைபட்டு ஆயாசத்தோடு ஸ்ரீராமா ராமாவென்று கைவில்லை நழுகவிட்டு தேரின்பேரிற் சாய்ந்து மூர்ச்சையடைந்தான். அப்போது பாசறையிலுள்ள ஜனங்கள்மாண்டு பிணக்குவியலாய்க்குவித்து உதிரவெள்ளமானது ஓடத்தலைப்பட்டது.

வீரசேனனும் சூரசேனனும் குசலராசன்பேரில் யுத்தம்பண்ணுதல்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

அண்டமெண்டிசையுஞ் சரங்களான்மறைந்த வஸ்வமேசனன்முடிசிந்தக்
கண்டிடுவீரசேனனுஞ்சூர சேனனுங் கருவியேயெழுந்து
சண்டமாருதம்போற் றனுவிட்டடர்ந்து தனியனுங்குசலனைவளைத்து
எண்டிசையோருங் கிலிகொளக்கணைகள் மாரிபோல்வாரியேயிறைத்தார்.

அப்பால் குசலராசன் மூன்றுமணிகடந்து நான்காமணியில் வருகிறபோது மூன்றுமணியிற் காலசித்தன் செய்திருந்த யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீராமருடைய தண்டு தளங்களுக்கு சேனாதிபதியான சூரசேனனும், யட்சயந்தமகாராசனுடைய குமாரனாகிய வீரசேனமகாராசனும் இவ்விருவருங் குசலராசனை நாலாமணியில்போகவொட்டாமலும், மூன்றுமணியில் நிறுத்தி குசலவன் முன்னுக்கு இரதத்தை நடத்திச் சொல்லுகிறான். அடா குசலனே எங்களைக்கண்டு பயந்து நீயோடினால் நாங்கள் விடுவோமோ போகாதே நில்லடாவென்று வில்லைவளைத்து நாணிபிகிந்து பாணங்களை எடுத்து மாரிபொழிவதுபோல சரமாரியாய்ப் பொழிகையில் குசலராசன் கண்டு, கோபங்கொண்டு வில்லிலனேக அஸ்திரங்களைத் தொடுத்து அவர்கள்விட்ட அஸ்திரங்களையறுத்து அதனமாக 4-இடியாஸ்திரங்களைவிடுத்து வீரசேனன் சூரசேனனேறிய இரதத்தையும் உடைத்தெறிந்துப்போட்டான். இரத

மூடைந்துபோகவே, வீரசேனனும் சூரசேனனும் பூமியிற் குதித்து மறுதேரிலேறி இருதிறவரும்வில்லைவளைத்து நாணி பிகியாமுன்னமே குசலராஜன் அதிசீக்கிரமாக 4-இடியாஸ்திர மெடுத்து வில்லிற் சந்தித்துவிட்டு இருதிறவருமேறிய இரதத்தை மறுபடியு மூடைத்துவிட்டா னந்த ரதம்போகவே, வீரசேனனுஞ் சூரசேனனும் வேறுரதமேறி வில்லையெடுத்து வளைத்து பாணந்தொடுக்குமுன்னமே குசலராஜன் 2-வாய்வாஸ்திரத்தை விடுத்து சண்டமாருதம் வீசுவதுபோல் இரண்டு பாணங்களும் அதிகவேகத்துடன் இருவருடைய இரதத்தில் வந்துபுகுந்து ரதத்தை பின்னிட்டவண்ணம் 150-யோசனை தூரத்தில் கொண்டுபோய்விட்டது.

சவுபலராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

வலிமிகுத்தவிருவரும்வாளியான்
மெலிவுகொண்டவர்மேவியசெய்தியை
நலிவுளோர்சொல்கேட்டசவுபலன்
ஒலிசெயும்ரதத்தூர்ந்தவன்ஞடினன்.

அதுகண்டு குசலராசன்வில்லையெடுத்துக்கொண்டு மூன்று மணியைவிட்டு நான்காமணிக்கு வருகிறபோது, சந்தனமகாராஜனுடையபேரன் சல்லியமகாராசனுடையகுமாரன் சவுபலராசன்கண்டு, இரதத்தை குசலராசன் முன்செலுத்தி சொல்லுகிறுன் அடாசிறுபிள்ளாய், எங்கேவருகிருய் நில்லு நில்லடாவென்று வில்லைவளைத்து அநேக பாணங்களைவில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினுன், அந்த பாணங்களும் வில்லில் விடுபட்டு அதிவேகமாக வருகிறபோது குசலராசன்கண்டு 10-அர்த்தசந்திராஸ்திரமெடுத்து வில்லிற்றெடுத்துவிடுத்துவருகிற அஸ்திரங்களை அதம்பண்ணிவிட்டான். அதுகண்டு சவுபாலராசன் கோபமாகி நூறு நாராசபாணங்களெடுத்து குசலராசன் வில்லைப்பார்த்து விட்டுவிட்டான். அந்த நாராசபாணங்களும் விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு அதிகவேகத்துடன் வருகிறபோது குசலராசன் கண்டு, அதிசீக்கிரமாய் பத்துநாராசபாணங்களெடுத்துவில்லிற்சந்தித்துவிட்டுநூறு நாராசபாணங்களையு மறுத்தெறிந்து அதனமாக 2-பாணங்கள் விட்டு சவுபாலன் பிடித்திருந்த வில்லை பத்து பிளவாகப் பிளந்துபோட்டான் அதுபோகவே, தட்சணம் சவுபாலன் ஒரு

வில்லையெடுத்து நாணிபிகிந்து ஐம்பது அர்த்தசந்திராஸ்திர மெடுத்து வில்லிற்சந்தித்துப் பிரயோகம்பண்ணினான். அந்த அர்த்தசந்திராஸ்திரங்களானது வில்லில் விடுபட்டு அக்கினிச்சுவாலைகளுடன் அதிவேகமாய் வருகிறபோது குசலராசன் பத்து அர்த்தசந்திராஸ்திரமெடுத்து ஐம்பது அர்த்தசந்திராஸ்திரத்தையுமறுத்து அதனமாக ஒரு இடியாஸ்திரம்விடுத்து சவுபாலனேறிவந்த ரதத்தை சுக்கல்சுக்கலாக உடைத்துவிட்டான்.

அதனால் சவுபாலன் கோபங்கொண்டு மறுதேரிலேறினனந்த தேரையும் ஒரு இடியாஸ்திரம்விட்டு உடைத்தெறிந்தான் இந்தப்படியாக இருநூறு இரதமுடைந்துபோகவே, சவுபாலன் அதிசீக்கிரமாய் வேறொரு தேரிலேறி சாரதியை எச்சரித்து குசலராசன் முன்பு இரதத்தைநடத்தி வில்லை எடுத்து நிறுத்தி அநேக பாணங்களை வில்லிற்சந்தித்து சோனைமாரிபோல சரமாரியாய் குசலராசன்பேரிற் பொழிந்துவிட்டான். அதனை குசலராசன் பார்த்து பத்து திவ்வியாஸ்திரங்கள் விட்டு சவுபாலன்விட்ட அஸ்திரங்களையெல்லாம் கண்டனஞ்செய்து சவுபாலன் மார்பிலணிந்த நவகவசங்களையும் பொடியாக்கிவிட்டான் அதுபோகவே, சவுபாலன்சீறி கோபமீறி ஒரு சத்தியை எடுத்து மந்திராபூதிகள் செய்துவிடுத்தானந்த சத்தியானது விடுபட்டு அண்டரண்டபுவனங்களும் நடுங்க, ஆர்ப்பரித்து குசலன்பேரில வருகிறபோது குசலராசனும்வெற்றியுடைய சத்தியொன்றை அந்தட்சணமெடுத்து பூசாவிதிகள் கொடுத்து விடுத்தான். அதுவும் விடுபட்டு சவுபாலன் விட்ட சத்தியை சித்திரவதை செய்துவிட்டு அவ்வரசனேறி வந்த ரதத்திற்கட்டிய நான்கு குதிரைகளையுமாய்த்து சாரதி தலையை தேய்த்து பின்பு சவுபாலனுடைய மகரகுண்டலகேயூர மதாணிப் பதக்கங் கிரீடங்களுடனிருக்கப்பட்ட சிரசையறுத்துத்தள்ளி அம்புருவில் வந்தடைந்தது.

சவுந்தரராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வெற்றிடுசவுபாலன் மாய்ந்தபின்மேனகை
பெற்றிடுங்குசலன் பிணக்காடுபோ
லுற்றசேனைமதுவுள்ளம துருட்டவே
சற்றிரக்கமுற் சவுந்தரன்தோன்றினான்.

அதனைக்கண்ட சவுந்தராசன் தமையனிறந்தானென்று சாரதியை யெச்சரிந்து இரதத்தை நடத்தி வில்லையெடுத்து

நிறுத்தி அநேக அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து குசலரா சன்பேரிற் பிரயோகம் பண்ணினான். அதுகண்டு குசலராசன் பதினைந்து திவ்வியாஸ்திரங்களையெடுத்து தனுசிற்றொடுத்து பிரயோகப்படுத்தி சவுந்தர ராஜன்விட்ட அஸ்திரங்களை யறுத்து வெட்டவெளியாக்கினான். அதனால் சவுந்தரராஜன் கோபங்கொண்டு அடா இராஜகுமாரா, நீயிப்போது என்னுடைய தமையனை கொன்றாயல்லவா, அப்பழிக்குப்பதில் உன்னைக் கொன்றுப் பழியைத் தீர்த்துக்கொள்ளா விட்டால் என் பேர் சவுந்தரராஜனு பாரென்று சபதஞ்செய்யவே குசலராசன் அடா! சவுந்தரராசனே? என்ன வசனம் புகன்றாய் என்னைக் கொல்லாவிட்டால் நீ பிடித்தது வில்லுமல்ல, உன் பேர் சவுந்தர ராசனுமல்ல, அஸ்திரத்தினா லுன்னையும் உன் இரதம் சாரதி குதிரைகளையும் பஸ்மீகரப் படலம் பண்ணாமல் போவேனேயானால் நான் பிடித்தது பிரசண்ட கோதண்டமுமல்ல என்பேர் குசலனுமல்லவென்று சபதங்கூறி, ஒரு அக்கினியாஸ்திரத்தை யெடுத்து தனுசிற்றொடுத்து பூசை நைவேத்தியங்கள் கொடுத்து கடுகடுத்து விடுத்தான். அந்த அக்கினியாஸ்திரமானது திக்குகள் நடுங்க, தேவர்கள் வொடுங்க, சக்கரம்போற் சக்கிராகாரமாய் அக்கினிப்பொறிகளைக் கக்கிக்கொண்டு வரும்போது சவுந்தரராசன்கண்டு பத்து வருணாஸ்திரங்களை யெடுத்து தூபதீப நைவேத்தியங்கொடுத்து விடுத்தான். அதுவும் யுகாந்தகால இடிபோலிடித்துக் கொண்டு குசலன் விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரில் வருணாஸ்திரமானது சற்றுமசையாமல் எரிகிற கூர்மையின்பேரில் எண்ணையைக் குப்புறக் கவிழ்த்ததுபோல் வருணாஸ்திரத்தை கபளீகரம் பண்ணிக்கொண்டு அதிக அக்கினிச் சுவாலையுடன் திருதிகென் றெரிந்துக்கொண்டு வருகையில் சவுந்தரராசன் பின்னும் அநேக பாணங்களை விடுகிறபோது அவைகளையும் தும்சம்செய்து சவுதியாகவந்து இரதம் சாரதி குதிரைகளையும் சவுந்தரராசனையும் பஸ்மீகரப் படலம் பண்ணிவிட்டு அதிகவேமாக அம்புறாவில் வந்தடைந்தது.

சல்லியராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலி விருத்தம்.

அந்தகன்பாற் சவுந்தரனணபின்
சிந்தைநொந்து படைகள்சிதறிட
வெந்தியர்கொடு சல்லியராசனும்
வந்துதேர்மேல் வளைத்தனன்வில்லையே.

அப்படி சபதங்கூறிய சவுந்தரராச னிறந்துபோனதைச் சல்லியராசன் கண்டு பிள்ளைகளிறந்து போனார்களென்று அதிக கோபாக்கினியுடன் யானையின்மீதேறி குசலராசன் முன்பு நடத்தி அடா! குசலனே? நீ எங்களுடைய சேனையும் என்னுடைய குமாரர்களிருவரையும் என்ன நிமித்தமாய்க் கொன்றாய் சொல்லடா வென்றான். அப்படி சொல்லிய சல்லியராசனைப் பார்த்துச் சொல்லுகிறான் ஓ! மகாராசனே? என்ன வசனம் புகன்றாய் என் தம்பி லவனை உங்களிராசாவாகிய சத்துருக்கர் பிடித்துக் கட்டினபடியால் என்னை ஜெயித்து என் தம்பியைக் கொண்டுபோ இல்லாவிட்டால் நீ வந்த வழியைப் பார்த்துக் கொண்டு நடவென்றான், அவ்வார்த்தையைக்கேட்ட சல்லியராசன் குசலனைப் பார்த்துச் சொல்லுகிறான். அடா! குசலனே? என்ன வார்த்தை யுரைத்தாய் சத்துருக்க மகாராசன் விட்ட குதிரையை உன் தம்பிலவன் பிடித்துக்கட்டி யுத்தஞ்செய்து எங்கள் சேனையைக் கொன்றபடியினாலே சத்துருக்கமகாராசனனவர் கண்டு லவனுக்குப் பிரியவசனஞ் சொல்லியும் அவன் கேளாமற் சத்துருக்க மகாராசனுடனெதிர்த்து யுத்தம்புரிந்தபடியினால் சத்துருக்கமகாராசன் லவனைப் பிடித்துக் கட்டிவிட்டார் இதுகளை நீ யோசியாமல் இப்படி வீணிற் சேனைகளைக் கொல்லுகிறாய், இவ்வண்ணம் போர் புரிந்தோ உன் தம்பி லவனை விடுவிக்கப் போகிறாய், வருஷம் பன்னிரண்டானாலும் சத்துருக்க மகாராசனைச் செயிக்க வல்லமையுண்டோ இராது, நீயும் வீணில் மடிந்துபோகாமல் சத்துருக்கமகாராசனை வணங்கி உன் தம்பி லவனை விடுவித்துக் கொண்டுபோ வென்றான். அப்படிக் கூறிய சல்லியனைக் குசலராசன் பார்த்து சொல்லுகிறான். ஓ! இராசனே? கேளும், எங்கள் வனத்திற்கு நீங்கள் விட்ட குதிரையை வந்தபடியினால் என் தம்பி லவன் பிடித்துக் கட்டினான். உங்கள் குதிரை உங்கள் பட்டணத்தைச் சுற்றிப் பிரதட்சணம் வரவேண்டுமேயல்லாமல் எங்கள் வனம் வரலாமோ வந்தபடியினால் யுத்தம்பண்ணினான் அவனை நீங்கள் கட்டிக்கொண்டுபோக என்ன ஞாயமிருக்கிறது அப்படி ஞாயமின்றி அவஞாயமாக எங்கள் வனத்தில் நீங்களும் உங்களுடைய குதிரையும் அடிவைத்ததுமல்லாமல் என் தம்பி லவனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போனபடியினால் சத்துருக்க மகாராசனுக்குத் துணையாக வந்த உன்னையும் உன்னுடைய சேனைகளையும் உன் ராசனாகிய சத்துருக்க

மகாராசனையும் கொன்று என் தம்பி லவனை மீட்டுக்கொண்டு உங்கள் குதிரையைப் பிடித்துக்கட்டி அதற்குமேல் வரப்பட்ட சேனைகளைக் கொன்று இராம லட்சுமணர் பரதனைக் கொல்லாமற் போவேனேயானல் நான் பிடித்தது பிரசண்டகோதண்டமுமல்ல என்பேர் குசலராஜனுமல்லவென்று சபதம்பண்ணினன்.

அப்படி குரூரமாகச் சொல்லிய குசலராசன் வார்த்தையைச் சல்லியராசன்கேட்டு சொல்லுகிறன். அடா! குசலனே? என்னைக் கொல்ல வல்லமை யுனக்குண்டோ நல்லது உன்னை என்னுடைய பாணங்களினல் முன்னங்கொல்லாமல் விடுவேனேயானல் நான் பிடித்தது வில்லுமல்ல, நானேறிவந்தது பட்டணத்து யானையுமல்ல, என்பேர் சல்லியராசனுமல்ல, என்னைக் கொல்லப்பட்ட அஸ்திரத்தை எதோ எடுத்து விடு பார்ப்போமென்றன். அப்படி அதிக உக்கிரமாக செப்பிய சல்லியனை நோக்கி ஓ! இராசனே? உன்னிலுமிஞ்சிய புஜபலபராக்கிரமமுள்ள பேரெல்லாம் உனக்கு முன்னிறந்துபோனதை நீ கண்டிருந்தும் சபதம் பண்ணலாமோ அவர்களிலும் அதிக வீரசூர பராக்கிரமமுள்ளவன் நீயானல் எதோ எடு தொடு விடு இல்லாவிடில் அடிபடு கொடுயென்று வில்லைக் குணத்தொனிபண்ணவே அந்த ஓசையைச் சகலரும் கேட்டு மனது திடுக்கிட்டார். அப்படி திடுக்கிடும்படியாய் ஒரு சிங்கமுகாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூதி கொடுத்து தனுசிற்றெடுத்துவிடுத்தான் அந்த சிங்கமுகாஸ்திரமானது, விடுபட்டு அனேக சிங்கங்களாக உருவுகொண்டு வரும்போது சல்லியராசன் கண்டு அனேக திவ்வியாஸ்திரங்களை வில்லிற் சந்தித்துப் பிரயோகஞ் செய்தான். அந்த திவ்வியாஸ்திரங்களையும் தடாய்த்துக்கொண்டு வரும்போது மதனமென்னப்பட்ட யானையானது கண்டு பயந்து ஓடத்தலைப்பட்டது. அதனை சல்லியராசன் பார்த்து மாவுத்தனை யெச்சரித்து யானையை முன்னுக்கு நடத்தி ஒரு சத்தியை யெடுத்து பூசை நைவேத்தியஞ் செய்து குசலராசன் விடுத்த சிங்கமுகாஸ்திரத்தை யறுத்து அவ்விராசன்பேரிற் சத்தியானது வருகையில் அவன் கண்டு தானும் ஒரு சத்தியை யெடுத்து சல்லியராசன் விட்ட சத்தியை அறுத்தெறிந்தான். அதனைக்கண்ட சல்லியராசன் அதிக கோபாவேசத்துடன் மாவுத்தனை யெச்சரித்து யானையை நடத்தி வில்லிலனேக திவ்வியாஸ்திரங்களைப்

பூட்டிப் பிரயோகஞ்செய்தான். அந்த திவ்வியாஸ்திரங்களும் விடுபட்டு அதிக அக்கினிச் சுவாலேயுடன் வரும்போது குசலராசன் ஒன்பது திவ்வியாஸ்திரங்களேப் பிரயோகித்து சல்லியராசன் விட்ட திவ்வியாஸ்திரங்களனைத்தும் அறுத்து அதனமாக 100-திவ்வியாஸ்திரங்களும் விடுத்து தகத்தகாயமாய் தங்கக்கட்டுகளுடனே பிண்டபட்சி யிறகுபூண்ட நெருப்புப் பொறிகளேக் கக்கிக்கொண்டு வருகிறபோது சல்லியராசன் இருபது பாணங்களெடுத்து வில்லிற்றெடுத்து விடுத்தான் அந்த இருபது திவ்வியாஸ்திரங்களும் விடுபட்டு குசலராசன் விட்ட திவ்வியாஸ்திரத்தின்பேரில் சடாலென்று வந்துமோதி குசலனுடைய திவ்வியாஸ்திரத்தை லறுபட்டு பூமியில் விழுந்துபோயிற்று. பின்னுங் குசலனுடைய திவ்வியாஸ்திரமானது உக்கிரம் அடங்காமல் சல்லியராசன்பேரிலும் பட்டத்து யானையின்பேரிலும் அம்பாரியின்பேரிலும் எப்படி விழுகிறதென்றால் யானைக்கு திவ்வியாஸ்திரம்-2 மாவுத்தனுக்கு திவ்வியாஸ்திரம்-1 இந்தப்படி கணக்கான திவ்வியாஸ்திரம் விடுபட்டு வந்து சேனைகள்மீது விழுந்து யானை வாலறுந்தும், மாவுத்தனுக்கு மண்டையுடைந்தும், சல்லியராசனும் யானையும் சிறமறுந்து பூமியில் விழுந்து மரணமடைந்து போனார்கள். அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகிவில்லிலனேகபாணங்களே விடுவித்துக்கொண்டிருந்தான்.

சாத்மீகராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

வில்லும்வேலு மொழிந்தசல்லியன்
சொல்லொடுங்கி புவிமிசைசேரவே
ரெல்லலற்கென்செய்வோ மென்றுசாத்மீகனும்
பல்லேக்காட்டி படிகளத்தோடினன்.

அப்போது சாத்மீகராசனெனவன் குசலராசன்பேரில் யுத்தஞ் செய்துக்கொண்டிருந்த தன் பிள்ளேகளுந் தமையனும் இறந்துபோனார்களென்று கேள்வியுற்று மகா விசனப்பட்டுச் சாரதியை எச்சரித்துக்குசலன் முன்னுக்கு இரதத்தை நடத்தி அவ்விராசனேப் பார்த்துச் சொல்லுகிறான். அடா! ரிஷிகுமாரகா உன்னேப்போல் வீண்சண்டை தேடிக்கொண்ட பிள்ளேயை நானெங்குங் கண்டதில்லே அதுவுமன்றி உன் வித்தையும் சூரதத்துவமும் எங்கள் முன்பா காண்பிக்கிறது நீ சிறு

பிள்ளையென்று உனக்கு ஞாயம்சொல்லி விலக்கவந்த பேரை யெல்லாம் இப்படி அஸ்திரங்களைவிட்டு கஸ்திப்படுத்திச் சித்திரவதை செய்யலாமோ சொல்லடா வென்றான். அப்படிச் சொல்லிய சாத்மீகராஜனைப்பார்த்து குசலராசன் ஓ! இராசனே? கேளும் யெனக்கு ஞாயஞ்சொல்ல வந்தவர்களை யெல்லாம் வீணில் மாய்த்துப்போட்டேனென்று நீர் ஞாயஞ்சொல்ல வந்திரல்லவா, எங்கள் வனத்திற்கு உங்கள்குதிரைவந்தடிவைத்ததுமல்லாமல் என்தம்பி லவனுடனே யுத்தஞ்செய்து அவனைப் பிடித்துக் கட்டிக்கொணடுபோக ஞாயமுண்டோ சொல்லுமென்றுகேட்டான். அதற்குச் சாத்மீகராஜன் சொல்லுகிறான். அடா தம்பி ரிஷிகுமாரா, என்னவசனம் பகர்ந்தாய் பராபரவஸ்துவாய் விளங்கப்படாநின்ற ஸ்ரீமந் நாராயணரே ஸ்ரீராமனாகத் தசரதராஜன் வயற்றி லவதரித்த ஸ்ரீராமபிரானுக்குத் தன் பட்டணமென்றும் தன் தேசம் தன் பூமியென்றும் அவருக்கு வேற்றுமையுண்டோ, அவர் விட்ட குதிரை உங்கள் வனத்தில்வர என்னபாக்கியம் பண்ணினீர்கள் நீ சிறுபிள்ளைத் தன்மையனானபடியினாலே அவர்விட்ட குதிரையைப் பிடித்துக்கட்டி அவருடைய சேனைகளை யிப்படி அனியாயமாகக் கொன்றாய் இந்த புத்தியைக்கொண்டோ அவரைஜெயிக்கப்போகிறாய் உன்னால் அவரைஜெயிக்கவல்லமையிராது இன்னமும் நான் சொல்லப்பட்டபுத்தியைக்கேள் சிறுபிள்ளைகட்டிய சிற்றூடைபோலாகாது உன்னுயிர் தப்பித்துக்கொண்டு உன் தாய் தந்தையிடம் போய்ச்சேர் இல்லையென்றால் வானுலகமனுப்பிவிடுவார்கள். அப்படி வராதபடி சத்துருக்கமகாராஜனை வணங்கி உன் தம்பி லவனை மீட்டுக்கொண்டு போகிறதே காரியமென்றான் அப்படி சொன்ன சாத்மீகராஜனை குசலராசன் பார்த்து யிவன் வெல்வாயனென்று மனதிற் கருதினவனாக நாறு நாராசபாணமெடுத்து வில்லிற் சந்தித்துவிட்டான் அந்த பாணங்கள் விடுபட்டுச் சண்டமாருதம் வீசினதுபோல அதிகஉக்கிரமாகவந்து சாத்மீகராசனை இரத்தமயமாக்கி சல்லடைக்கண்களாகத்துளைத்துவிட்டது அதனால் தன்சரீரம் இரத்தங்கள்சொரிய ஆயாசத்தோடு ஸ்ரீராமாராமாவென்று வில்லை தேரின்மீது நழுகவிட்டு இரதத்தின் பேரில் அடியற்றமரம்போல்முடியற்று மூர்ச்சையடைந்தான்.

சூரசேனனும் வீரசேனனும் குசலராஜன்பேரில் யுத்தம்பண்ணுதல்.

விருத்தம்.

மானமிழிந்தொடியார் சாத்மீகன்றன்னை மணிரதத்தி லேற்றியப்பாற் கொடுபோய்த்தோற்ற, வானளவுமுயர்ந்தநெடுந் தேர்மேலேறி வாரிதிபோற் றிரண்டபெருஞ்சேனைசூழத், தீனபராக்கிரமசூரசேனனோடு திண்ணமுறு விற்றுகும் வீரசேனன், ஆனவிருவருங்கூடிக் குசலன்மீது அக்கினிபோற் பொறிசிதற மலர்பெய்தாரே.

அப்போது யானை தேர் பரி சேனைகளைக் குசலராசன்விடாமல் அஸ்திரங்களைவிட்டு அல்லோலகல்லோலப்படுத்துவதைப்பார்த்து சூரசேனனும் வீரசேனனும் ரதத்தை நடத்தி வில்லைவளைத்து நாணிபிகிந்து சரங்களைச் சொரியும்போது குசலராசன் கண்டு வில்லிற் பாணங்களைத்தொடுத்து விடுத்து வீரசேனன் சூரசேனன் இருவர்விட்ட அஸ்திரங்களையெல்லாமறுத்துத் தள்ளினான் அதுகண்ட மட்சயந்த மகாராசனுடைய குமாரனாகிய வீரசேனமகாராசனும் ஸ்ரீராமருடைய அறுபதினாயிரம் அக்ரோணிசேனைகளுக்கும் சேனாதிபதியான சூரசேனனும் அதிக கோபமாகி வில்லிலனேக பாணங்களைச் சந்தித்துப் பிரயோகப் படுத்தினார்கள். அப்போது குசலராசன் ஐம்பது திவ்வியாஸ்திரமெடுத்துவிட்டு அவர்களிருவர் விட்ட பாணங்களையறுத்து அதனமாக 40 - நாராசபாணங்களெடுத்து இருவர்மீதிலும் பிரயோகஞ்செய்தான் அது நாக சற்பம்போற்சீறி வருகிறபோது வீரசேனமகாராசன் கண்டு நூறு நாராசபாணங்களை வில்லிற்றொடுத்துப் பிரயோகப்படுத்தி குசலராசன்விட்ட நாற்பது நாராசபாணங்களையுமறுத்து அதனமாக நூறு அர்த்தசந்திரபாணங்களைப் பிரயோகஞ்செய்தா னதுகள் ஒன்றோடொன்றாய்ந்து நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டு அதிகவிரைவில் வருகிறபோது குசலராசன் கண்டு வெகுண்டு ஐம்பது அர்த்தசந்திராஸ்திரமெடுத்து வீரசேனனுடைய நாராசபாணங்களையுமறுத்து அதனமாக நான்கு இடியாஸ்திரங்கள்விட்டு அவனேறிவந்த ரதத்தையுடைத்தெரிந்துபோட்டான் வீரசேனன் வேறு தேரேறிவர அந்த இரதத்தையும் நான்கு இடியாஸ்திரம் விட்டு அவனேறிவந்த இரதத்தை யுடைத்தெரிந்துபோட்டான் வீரசேனன் வேறுதேரேறிவர அந்த இரதத்தையும் நான்கு இடியாஸ்திரம்விட்டு தும்சப்படுத்தினான் இந்தப்படியாய் ஆறு ரதம் வரையில் உடைந்து போகவே அதுகண்டு சூரசேன

னும் வேறுரதமேறி சாரதியை யெச்சரித்து ரதத்தை குசல ராசன் முன்னுக்குநடத்தி குசலராசனைப்பார்த்துச் சூரசே னன் சொல்லுகிறான்.

அடாதம்பி ரிஷிகுமாரா, உன்னைப்பார்த்தால் சிறுபிள்ளை யாயிருக்கிறாய் உன் தாய் தந்தைபேரையும் உன்பேரையும் உன் குலங் கோத்திரங்களையுஞ் சொல்லென்றான். அந்த சூரசே னனைப் பார்த்துக் குசலன் சொல்லுகிறான். ஓ! இராசனே? நீயோ என்தாய் தந்தைபேரைக் கேட்கிறவன் யுத்தத்திற்குவ ருகிற பேருக்கெல்லாம் தாய்தநதைபேரைச் சொல்லிக்கொண் டிருக்கின்றதோ படுகளத்தில் ஒப்பாரியுண்டோ, உமக்கு சாமா ர்த்தியமுண்டானாலென்னுடன் யுத்தஞ்செய்யும் சக்தியில்லா விட்டாற் சொல்லாமலும் என்முன்னில்லாமலும் நடந்துவிடு என் வீணில்வந்து மடிகிறீர்கள் ஒருவனாகிலும் ஒருநாழிகை பரியந்தம் நின்று யுத்தம்பண்ணினவனைக் காணேன் இவ்வ ளவு வலிவைக்கொண்டோ என்னை ஜெயிக்கப்போகிறீர்கள் அதுயிருக்கட்டும் நீ சண்டைசெய்யப்பயந்து என் தாய் தந் தைபேரைக் கேட்கவந்தாய் வருகிறவனுக்கெல்லாம் நான் சொல்லிக்கொண்டேயிருப்பேனோ நானினியொருவருக்குஞ் சொல்லமாட்டேன் நீ யுத்தம்பண்ணவேண்டாமென்று அதி கோபத்துடனே பாணங்களை யெடுத்தான். அப்படி பாணங் களை யெடுத்த குசலராசனை வீரசேனன் சூரசேனனும் பார்த்து ச்சொல்லுகிறார்கள். அடா தம்பி சிறுபிள்ளாய், அரசரான வர்கள் யுத்தம்வந்தவேளையில் அதற்குப்பயந்து தாய்தந்தை பேரை கேட்பார்களோ நீ சிறுபிள்ளையானதால் உன்தாய் தந் தைபேரைக்கேட்டு யுத்தம்பண்ணலாமென்று பெரியவர்களாக யிருக்கப்பட்டவர்கள் கேட்டால் சண்டைக்குப்பயந்து என்தா ய்தந்தைபெயரைக் கேட்கவந்தீர்களென்று சொல்லலாமோ வென்றார்கள். அப்படி சொல்லிய வீரசேனன் சூரசேனனுக் குக் குசலராசன் சொல்லுகிறான். ஓ! இராசனே? கேளாய் என்தாய்பேர் ஜானகியம்மாள், எங்களையர்பேர் வால்மீகமகா ரிஷி, என்பேர் குசலன் என்தம்பிபேர் லவன் என்குலங்கோத் திரம் எனக்குத்தெரியவராதென்றான். அப்படி சொல்லியதை சூரசேனனும் வீரசேனனும் கேட்டுச் சொல்லிக் கொள்ளுகி றார்கள் இவன் ரிஷிபிள்ளையென்று சொல்லுகிறான். இவ னுடைய ரூபத்தைப் பார்ப்போமென்றால் நிலவுவெளிச்சத்தி ற் றெரியவில்லை யுத்தம்பண்ணவேண்டாமென்றாலு மிவன்

கேட்கமாட்டான் இவனுடைய வீரபராக்கிரமத்தாலென்ன
இவனாலே வெகுஜனங்கள் மடிந்துபோனார்கள். நாம் சமுத்
திரமெல்லாந் தாண்டி சிறிய கால்வாயில் வந்து தாண்டமாட்
டாம லகப்பட்டுக்கொண்டோம் ஜெயலட்சுமியில்லாமல் இராம
ருடைய யாகத்திற்குப் பின்னம் சம்பவித்தது இதற்கெப்படி
யோசனையென்று சற்றே சும்மாயிருந்தார்கள்.

அதுகண்டு குசலராசன் ஓ! ஓ! இராஜரே? இப்படி ரணக்
களத்தில் ஒப்பாரிக்கொண்டு சும்மாயிருந்தால் நான் விடுவே
னோ நீங்கள் இனிசொல்லாமல் ஓடிப்போகிறோமென்றாலும்
உங்களை விடமாட்டேன் வில்லையெடுத்து பாணத்தைத்தொடு
ங்களென்றுசொன்னான். அப்படி சொல்லிய குசலனுடைய
வார்த்தையை யிருவருங்கேட்டு அவ்விராசனைப்பார்த்து வீர
சேனமகாராசன் சொல்லுகிறான். அடா! தம்பி குசலனே?
அவரையாரென்று இப்படி எளிதமாய்ப்பேசுகிறாய் பராபர
வஸ்துவாய் விளங்காநின்ற ஸ்ரீமந்நாராயணரே ஸ்ரீராமனாக
அவதரித்து தன்னுடைய அறுபதினாயிரம் அக்ரோணிசேனை
களுக்குச் சேனாதிபதியாக பட்டங்கட்டிவைத்தார் அப்படிப்
பட்ட வீரசூரனான சூரசேனமகாராஜனைச் சண்டைக்குப் பய
ந்தாரென்று எளிதமான அற்பவிசேஷஞ் சொல்லலாமோ
அவருடைய சாமார்த்தியம் இன்னதுனக்குத் தெரியவாராதெ
ன்றான், அதுகேட்டு குசலன் அதிக புஞ்சிரிப்போடு குலுங்க
நகைத்துச் சொல்லுகிறான், ஓ! இராஜனே? உங்களுக்கு முன்
னம்வந்து யுத்தஞ்செய்து இறந்தவர்களில் சேனாதிபதியான
காலசித்தனென்னப்பட்ட இராக்கதன்வந்து தன்னிலுமிகுந்
தசூரரில்லையென்று வெகுநேரம் போர்புரிந்துக்கொண்டிருந்
தான் அவனுக்கு மிஞ்சினவர்களானால் அஸ்திரங்களை எடுங்
கள் உங்களாற் கூடியவரையில் விடுங்கள் பார்ப்போமென்று
கூறிய குசலன்வார்த்தையை இருவருங்கேட்டு சூரசேனன்
சொல்லுகிறான் குசலனே நீவிசேஷத்தைமிஞ்சாதே அப்படி
வீரசூரராய்வரப்பட்ட பேரையெல்லாம் நீ சங்கரிக்கப்பட்ட
ரணரங்கசூரனானதையால் கையிலாகாத சிலரைக் கொன்றோமெ
ன்று கர்வித்திருக்கிறாய் அந்தகர்வத்தை க்ஷணநேரத்திற் கா
ண்பிக்கிறேன் பாரடாவென்று 50-சிங்கமுகாஸ்திரங்களை வில்
லிற் சந்தித்துக் குசலராசன்பேரிற் பிரயோகஞ்செய்தான் அ
ந்த 50-சிங்கமுகாஸ்திரங்களும் விடுபட்டு ஆலகாலவிஷம்
போற் சீறிக்கொண்டு குசலராசன்பேரில் வருகிறபோது அவ்

விராசனும் 20-சிங்கமுகாஸ்திரம் விடுத்து ஆலகாலவிஷத்தையள்ளியுண்ட ருத்திரனைப்போல வரப்பட்ட சிங்கமுகாஸ்திரத்தையுமறுத்துத் தன்பேரில் வரப்பட்ட சிங்கமுகாஸ்திரத்தையுமறுத்துத் தள்ளவே, சூரசேனன்விட்ட 50-சிங்கமுகாஸ்திரத்தின் அடி துண்டுகள் வேகமடங்காமல் அதிவேகத்துடன் வந்து சூசலராசன் பிடித்திருந்த வில்லின்பேரிலும் வில்நாணியின்பேரிலும் தடாலென்று மோதி சிங்கமுகாஸ்திரங்கள் பிளந்து பூமியில் விழுந்து போயிற்று.

அதுகண்டு சூசலராசன் சூரசேனனையும் வீரசேனனையும் பார்த்துச் சொல்லுகிறான். அடா சூரசேனனே வீரசேனனே நீங்களிருவரும் விட்ட பாணத்தினுடைய வல்லமை யிவ்வளவுதானோ இதோ இந்த அஸ்திரத்தினால் நீங்களிருவரும் பிடித்திருக்கிற வில்லைக் கண்டித்துப் போடுகிறேன் பாருங்களென்று தன் தாயாரை மனதிற்றியானித்து இரண்டு அர்த்தசந்திராஸ்திரத்தை எடுத்து மந்திரித்து வில்லிற்றொடுத்து பிரயோகம் பண்ணினான். அந்த அர்த்தசந்திராஸ்திரங்களும் விடுபட்டு தகத்தகாயமாய் 100-1000-சந்திரனைப்போலச் சோதிப்பிரகாசமாய் விரைவாகவருகிறபோது சூரசேனனும் வீரசேனனுங்கண்டு அதிசீக்கிரமாய் நிமையோடு நிமை தட்டுமுன்னமே கோடி அர்த்தசந்திராஸ்திரங்களை யெடுத்துவிட்டார்கள் அந்தகோடிபாணங்களும் சூசலன்விட்ட அர்த்தசந்திராஸ்திரத்தின்பேரில் சடாலென்றுவந்துமோதிக் சூசலராசனுடைய அர்த்தசந்திராஸ்திரத்தினாலடிபட்டு பூமியில் விழுந்துபோகவே, சூசலராசனுடைய அர்த்தசந்திராஸ்திரங்கள் வேகமடங்காமல் அதிகவேகத்துடன் வந்து வீரசேனன் சூரசேனன் பிடித்திருந்த வில்லுகளைக் கண்டதுண்டங்களாய் நறுக்கிப்போட்டு அப்புறவில் வந்தடைந்தது. அதுபோகவே சூரசேனனும் வீரசேனனும் வேறுவில்லைக் கையிலெடுத்து இரண்டு சுழற்பாணத்தையும் தனுசிற்றொடுத்துப் பிரயோகம் பண்ணினார்கள். அந்த சுழற்பாணங்களும் வில்லைவிட்டு விடுபட்டு சண்டமாருதம் வீசினதுபோல உக்கிரமாகக் காற்றுகளெழும்பிக் கிறுகிறென்று சுழன்றுக்கொண்டுவர அதைக்கண்டு சூசலராசன் அதிகவேகமாய் ஒரு சுழற்பாணத்தை எடுத்து தனுசிற்றொடுத்து விட்டு வீரசேனனும் சூரசேனனும்விட்ட இரண்டுசுழற்பாணத்தையும் அறுத்து அதனமாக 100- நாராசபாணத்தையும்விட்டு சூரசேனனுடைய சரீரத்தையும் வீரசேனனுடைய திரேகத்

தையும் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான். அதனாற் சூரசேனனுடைய மெய்யும் வீரசேனனுடைய சரீரமும் ரத்தங்கள் சொரிய மகா ஆயாசத்தோடு ஸ்ரீமந்நாராயணாவென்றுகை வில்லை தேரின்பேரில் நழுகவிட்டு இரதத்தின்பேரில் சாய்ந்து மூர்ச்சையடைந்தார்கள். அதுகண்டு சந்தனமகாராசன் கோபமாகி சாரதியை யெச்சரித்து இரதத்தை நடத்தி வில்லை யெடுத்து நாணிபிகிந்து வில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்து குசலராசன்பேரில் பிரயோகம்பண்ணினான். அந்த பாணங்கள் வில்லைவிட்டு அதிவேகத்துடன் வருகிறபோது குசலராசன் கண்டு பத்து திவ்வியாஸ்திரங்களை யெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தி சந்தனமகாராசன் விட்ட பாணங்களை யறுத்து அதனமாக ஒரு அஸ்திரமெடுத்து பிரயோகஞ் செய்தான் அந்த வாய்வாஸ்திரமும் வில்லில்விடுபட்டு சண்டமாருதம் வீசினதுபோல அதிக வேகத்துடன் வந்து சந்தனமகாராசன் ரதத்திற் புகுந்து ரதத்தை பின்னிட்டவாக்காய்கிழக்கே நூறுயோசனை தூரத்திற் றள்ளிக்கொண்டு போய்விட்டது. அப்பால் குசலராசன் யானை தேர் பரி சேனைகள்பேரில் மூனைந்து பாணங்களை வில்லிற்சந்தித்து பிரயோகஞ் செய்தான் அந்தப் பாணங்களால் யானைகள் காலறுந்தும், வாலறுந்தும் தும்பிக்கையறுந்தும், துடையறுந்தும், ரதங்கள் அச்சொடிந்தும், ஆணிகழன்றும், யச்சுமுறிந்தும், கொடியறுந்தும், குதிரைகள் வாலறுந்தும், தலையறுந்தும், குடல்சரிந்தும், சேனைகள் கைவேறு, கால்வேறு, உடல்வேறு, எலும்புவேறு, இறைச்சிவேறு, இவ்விதமாகவிழுந்து உதிரவெள்ளமோடத் தலைப்பட்டதைக்கண்ட குசலராசன் சந்தோஷமாகி நாலாவது அணிகடந்து ஐந்தாவது அணியில் வருகிறபோது ஐந்தாமணியிலிருக்கப்பட்ட படைத்தலைவருஞ்சேனாதிபதிகளும் இராக்ஷதசேனைகளுங்கண்டுகுசலராசனை ஐந்தாமணிக்குள்வரவொட்டாமல் வில்லிலநேக பாணங்களைச்சந்தித்து மழைமாரிபொழிவதுபோலச் சரமாரியாகக் குசலராஜன்மீது பொழிந்தார்கள். அதுகண்டுகுசலராசன்மேல்விழுந்துவரப்பட்ட இராட்சதசேனைகள்பேரில் அநேக அஸ்திரங்களைப் பிரயோகப் படுத்தினான். அந்த அஸ்திரங்களும் வில்லைவிட்டு வெளிப்பட்டுதிகுதிகுவென்று அக்கினிச் சுவாலைகளுடன் அதிவேகத்துடன் வந்து இராட்சதர்கள்மீது விழுகிறபோது அந்த இராட்சதாள் கால்வேறு, கைவேறு, உடல்வேறு, சதைவேறு, எலு

ம்புவேறு, இறைச்சி வேறுவேருக விழுந்து இராக்ஷதாள் விட்ட பாணங்களுமுறிந்து கோஷ்டங்களெழும்பியது.

அதுகண்டு சத்துருக்கமகாராசன் கடுஞ்சினங்கொண்டு வெகுண்டு சாரதியையெச்சரித்து இரதத்தை குசலராசன் முன்னுக்கு நடத்தச் சொன்னர். அத்தருணத்தில் வாரணுபுரி பட்டணத்தைப் பரிபாலனம் பண்ணப்பட்ட சோமகாசமகாராசன் இரதத்தை நடத்தி சத்துருக்கமகாராசனைப் பார்த்துச் சொல்லுகிருன். ஐயா, சத்துருக்கமகாராஜரே கேளும், அந்தச் சிறுவனுகிய குசலனை ஒரு பெரிதாயெண்ணி தேவரீர் அவன்பேரில் யுத்தத்திற்குப் போகவேணுமோ இன்னம் அநேக இராக்ஷதாளும் இராஜமன்னருமிருக்கையில் என்ன முழுகிப் போயிற்றென்று நீர் யுத்தத்திற்குப் போகிறது நலமாகக் காணவில்லை நில்லு நில்லுமென்று சத்துருக்கமகாராசனை நிறுத்தி சாரதியையெச்சரித்து குசலராசன் முன்னுக்கு இரதத்தை நடத்தினுன். அவன் இரதம் நடக்கையில் வீரசேனமகாராசன் தகப்பனுகிய மக்ஷயந்தமகாராசனும் இரதத்தை நடத்தினுன். அந்தவேளையிற் சந்தனமகாராசனும் பாணவேகமடங்கி இரதத்தை வேகமாக நடத்திக்கொண்டு ரணக்களம்வந்து குசலராசனை நாலாமணியிற் காணுமல் ஐந்தாமணியில் நிற்கிற குசலராசன்பேரில் வில்லைநாட்டி பாணங்களைப் பூட்டிப் பிரயோகம் பண்ணினுன்.

சந்தனமகாராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

முந்திவந்த விருவர்முனையழிந்
துந்துமித்தேரு மொழிந்திடக்கண்டதோர்
சந்தனமகாராஜ னென்றக்கயவன்
வந்துவில்லை வணங்கிப்பொழிந்தனன்.

அதனைக்கண்ட குசலராசனும்தனுசிலநேகபாணங்களைச் சந்தித்துப்பிரயோகப்படுத்திவிட்டு சந்தனமகாராசன் விட்ட பாணங்களைந்துமறுத்து அதனமாய் 20-நாராசபாணங்களெடுத்து விட்டுவிட்டான். அப்பாணங்கள் புறப்பட்டு நாகசற்பம் போற் சீறி வருகையில், சந்தனமகாராஜன் கண்டு உடனே நூறு நாராசபாணங்களெடுத்து வில்லிற் சந்தித்து விட்டு

குசலன் விட்ட இருபது நாராசபாணங்களையுமறுத்து அதிகமாகப் பத்து நாராசபாணங்களை விட்டார் விடுகிறபோது குசலராசன்கண்டு இருபது திவ்வியாஸ்திரமெடுத்துப் பிரயோகஞ்செய்து சந்தனமகாராசன் விட்ட நூறு திவ்வியாஸ்திரங்களையும் அறுத்து அதனமாக 40 - அர்த்த சந்திராஸ்திரங்களைப் பிரயோகப்படுத்தினான். அந்த40- அர்த்தசந்திராஸ்திரங்களும் தகத்தகாயமாக அக்கினிப்பொறிகள் பறக்க ஒன்றோடொன்று உராய்ந்துகொண்டுபாணச்சந்திரனைபோற்பிரகாசித்து அதிக வேகத்துடன் வருகிறதைச் சந்தனமகாராசன் கண்டு அதி சீக்கிரமாக நிமைபோடு நிமை தட்டுமுன்னமே 100- அர்த்த சந்திராஸ்திரங்களை யறுத்து அதனமாக இரண்டு அக்கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகம் பண்ணினான். அந்த இரண்டு அக்கினியாஸ்திரங்களும் வில்லில் விடுபட்டு காட்டு தீய்களுக்குச் சமதையாக திகுதிகுவென்று அக்கினிச் சுவாலைகளை வீசிக்கொண்டு நாகசர்ப்பம்போல வேகமாக வருகிறபோது குசலராஜன் பார்த்து ஒரு அக்கினியாஸ்திரத்தை எடுத்து வில்லிற் சந்தித்துச் சந்தனமகாராசன் விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரில் பிரயோகப் படுத்தினான் அந்த அக்னியாஸ்திரமும் வில்லில் விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரி இறைத்துக்கொண்டுஅதிகவேகத்துடன்வந்து சந்தனமகாராசன் விட்ட அக்கினியாஸ்திரங்களைக் கடீளிகரம்பண்ணி அம்புறுப்பொதியில் வந்தடைந்தது.

அதுகண்டு சந்தனமகாராசன் இரண்டு சத்தியை யெடுத்து பூசை நைவேத்தியங் கொடுத்து, குசலராசனுடைய மார்பைப் பார்த்து விட்டுவிட்டான். அந்த சத்தியும் விடுபட்டு அண்டரண்ட பகிரண்டங் குலுங்க அக்கினிச் சுவாலைகளுடனே, அதிகவேகமாக வருகிறபோது குசலராசனும் தன் தாயார்கொடுத்த உக்கிரவீரசத்தியை யெடுத்து பூசை நைவேத்தியங்கொடுத்து விடுத்தான். இந்த வீரசத்தியானது வில்லைவிட்டு வெளிப்பட்டு அண்ட சராசரங்களும் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க ஆலகால விஷத்தைப்போற் சீறி அக்கினிச்சுடர்க ளெழும்ப வேகத்துடன் வந்து சந்தனமகாராசன் விட்ட இரண்டுசத்தியையும் அடித்துமுறித்து கமளீகரம் பண்ணி அம்புறுவில் வந்தடையவே, சந்தனமகாராசன் கோபங்கொண்டு தூபதீபங்கொடுத்து குசலன்மீதுவிடுத்தான்.

அந்த நாராயணாஸ்திரமும் வில்லைவிட்டு வெளிப்பட்டு பாதாளமும் ஆகாயமும் அல்லோல கல்லோலப்படுவதாக வருகிறபோது குசலராசன் சற்றுவது அச்சமின்றி தன் தாயார் கொடுத்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து மந்திராபூஜையுடன் பூசைபுரிந்து, சந்தனமகாராசன்விட்ட நாராயணாஸ்திரத்தை ஜெயம் பெற்றுவாவென்று பிரயோகம்பண்ணினான். அந்த நாராயணாஸ்திரமும் வில்லில் விடுபட்டு அண்டரண்டங்களுங் குலுங்க, அம்புவிகள் நடுங்க, ஆலகால விஷம்போற் சீறிக் கொண்டு ஆவென்று வாயைத்திறந்து அக்கினிகளைக் குபீல் குபீலென்று கக்கி ஆகாயத்திலும் பூமியிலும் அக்கினிச்சுடர் கள்வீச அந்த அக்கினிச்சுடர்களினாலே ஆகாயவீதியிலிருக் கப்பட்ட தேவர்களுங்கண்டு பயந்து மேலண்ட மோடிப் போக, பூமியிலிறந்துகிடக்கிற யானை பரி சேனைகளுஞ் சுடு நாற்றங்களெழும்ப அதிக உக்கிர சிங்கம்போலவந்த சந்தன மகாராசன் விட்ட நாராயணாஸ்திரத்தையும் கமளீகரம் பண் ணியும் உக்கிரம் நீங்காமல் வரும்போது சந்தனமகாராசன் மனதுகலங்கி வில்லிலனேக பாணங்களைப் பூட்டி வருகிற நாராயணாஸ்திரத்தின்பேரில் மழைமாரிபோல சரமாரியாய்ப் பொழிந்துக் கொண்டிருந்தான். அப்படி சந்தனமகாராஜன் பாணங்களை ஓய்வுசாய்வுயில்லாமல் பொழிகையிற் குசலராச னுடைய நாராயணாஸ்திரமானது வருகிற பாணங்களையெல் லாம் கமளீகரம் பண்ணிக்கொண்டு அதிவேகத்துடன் வந்து சந்தனமகாராசன் ஏறிவந்த இரதஞ் சாரதி குதிரைகளுட னும் பஸ்மீகரம்பண்ணிச் சந்தனமகாராசனுயிரையும்பிரித்து அம்புராவில் வந்தடைந்தது. அப்போது பத்மாவதி பட்ட ணத்தை பரிபாலனம் பண்ணப்பட்ட சந்தனமகாராசன் இற ந்தது கண்டு வாரணாபுரி பட்டணத்தை யாளப்பட்ட சோம காசமகாராசன் கோபதீப்தனாகி குசலராசன் முன்னுக்கு இர தத்தை நடத்தினார். அந்த ராசன் இரதத்தை நடத்தவே, மதனாபுரிபட்டணத்தைப் பரிபாலனஞ் செய்யப்பட்ட மட்சய ந்த மகாராசன் தன் இரதத்தை நடத்திச் சோமகாசமகாராச னைப் பார்த்துச் சொல்லுகிறார். வாருஞ் சோமகாச மகாரா சரே? இன்னமனேக இராஜமன்னர்களும் இராட்சதர்களும் மந்திரிபிரதானிகளும் நானுமிருக்க நீர்முந்தி யுத்தத்திற்குப் போகிறது நலமாய்க்காணவில்லை அந்தக்குசலனை யமலோகத் துக் கனுப்பிவிடாமல் இனி நான் சும்மாவிடமாட்டேன் நீர்

நில்லும் நில்லுமென்று சோமகாசமகாராசன் இரதத்தை முன்னுக்கு நடத்திச்சொல்லுகிறார். அடா தம்பி! குசலனே? நீயார் உன் தாய்தந்தை பேரென்ன, உன்னுடைய குலங்கோத்திரமென்ன இந்தப்படிக்கு எங்களுடைய சேனைகளைக்கொல்ல நீயார், உன்னுடைய பூர்வோத்திரங்களை எனக்கு நன்றாய் இன்னாரின்னாரென்று தெரியச்சொல்லடா தம்பி குசலவனே யென்றான். அதுகேட்டு ஓகோ! இராசனே? நீரென்னவசனஞ் சொல்லவந்தீர் முந்தி யுத்தத்திற்கு வருகிறபேரையெல்லாம் நிறுத்தி எனக்கு எமலோகத்திற்கு வழிகாட்டுகிறேனென்று ரோஷத்துடன்வந்த நீர் என்னைக் கண்டு பயந்து இப்படி என் தாய்தந்தைபேரையும் என்குலங்கோத்திரங்களையுங் கேட்டு படுகளத்தி லொப்பாரி பண்ணுவாருண்டோ, நீ ஒரு இராசனென்று முகத்தில் மீசையை வைத்துக்கொண்டு என் முன்வந்து நின்று இப்படிப் பஞ்சை வார்த்தை பேசலாமோ, நீங்கள்தானே சூரியவம்சத்தில் பிறந்த சூரத்துவம் பொருந்தியிருக்கப்பட்ட இராசாக்கள் முன்னுக்குவந்து பின்னுக்கு வாங்கலாமோ உன்னுடைய சாமர்த்தியம் இவ்வளவுதானே நில்லு நில்லுமென்று சுழற்பாணத்தை யெடுத்து வில்லிற் சந்தித்துப் பின்னையும் மட்சயந்த மகாராசனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ! ஓ!! இராஜனே? உனக்கு எமலோகத்திற்கு வழிகாட்டுகிறேன் பாரென்று வில்லிற் சந்தித்த சுழற்பாணத்தை பிரயோகம்பண்ணிவிட்டான். அந்த சுழற்பாணமானது வில்லில் விடுபட்டு சண்டமாருதம் வீசுவதுபோல் உக்கிரகாற்றாகளெழும்பிச்சுழன்று அதிவேகமாய் வருகையில் மட்சயந்த மகாராசன் கண்டு பதிலஸ்திரமெடுத்து வில்லில் சந்திக்கு முன்னமே குசலனஸ்திரமானது வந்து மட்சயந்த மகாராசனுடைய இரதத்திற் புகுந்து சாரதி குதிரைகளுடன் ஆகாயத்திற்கிளம்பிக் கொண்டுபோயிற்று. மட்சயந்த மகாராசன் கண்டு ஏதடா மோசம் வந்ததென்று வில்லைத் தேரின்பேரில் வைத்துக் குத்துக்காலை யிரண்டுகையினாலும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நின்றான்.

அப்போது அந்தரதமானது எப்படிச் சுழல்கின்றதென்றால், குயவனுடைய சக்கரமானது. எப்படிச்சுழலுமோ, அப்படிபோல ஆகாயவீதியில் சுழன்று மேகமண்டலம், வருணமண்டலம், வாயுமண்டலம் மட்டுமாய் இரதமானது சுழன்று

போய் மறுபடியும் திரும்பிவருகிறபோது பாணவேகமடங்கி பூமியைச் சேரவருகிறபோது மட்சயந்த மகாராசன் சுவாசத்தைப் பந்தனம்பண்ணி பூமியிற்குதித்தான். அப்படி குதித்த மாத்திரம் இரதமானது சாரதிகுதிரைகளும்பூமியில் விழுந்து அச்சுவேறு, ஆணிவேறு, கும்பகலசம்வேறு, கட்கம்வேறு, பலகைவேறு, குத்துக்கால்வேறு, கொடுங்கைவேறு, கொடிச்சீலைவேறு, குதிரைவேறு, சாரதிவேருகப் பூமியில் விழுந்து மாய்ந்ததுகள்.

அதுகண்டு மட்சயந்தமகாராசன்கோபமாகி மறுதேரிலேறி வில்லைவளைத்து நாணிபிகிந்து வில்லில்நல்லகூர்மையோடுங்கூடியிருக்கப்பட்ட அனேகபாணங்களை வில்லில் சந்தித்துப் பிரயோகம்பண்ணினுர். அந்த நாராசபாணங்களும் வில்லில் விடுபட்டு நாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டுவருகிறபோது குசலராசன்கண்டு அதிசீக்கிரமாய் ஐம்பது நாராசபாணங்களையெடுத்து வில்லிற்றெடுத்து பிரயோகப்படுத்தி மட்சயந்த மகாராசன் விட்ட நாராசபாணங்களை நடுவதுபாதியில் துண்டித்து அந்த மட்சயந்த மகாராசன் மார்பிலணிந்த கவசங்களையும் அறுத்துசரீரங்களையும், ரத்தமயமாக்கிவிட்டான். அதுகண்டு மட்சயந்த மகாராசன் தைரியம்விடாமல் அதிக சீக்கிரமாய் வில்லை முகத்திற்கு நேராய்ப் பிடித்துப் பாணங்களையெடுத்து வில்லிற் சந்தித்து மாரிபொழிவதுபோல ஓய்வில்லாமல் ஒன்றரை நாழிகை பரியந்தம் மூச்சுவிடாமற் சலவருஷம்போல் பொழிகிறதை குசலராசன் கண்டு அனேக பாணங்களை வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தி மட்சயந்த மகாராசன் விடப்பட்ட பாணங்களையெல்லாம் நிமையோடு நிமைதட்டுமுன்னமே அறுத்து அதனமாய்பீ பத்து திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தினுன். அந்த திவ்வியாஸ்திரங்கள் வில்லில் விடுபட்டு அக்கினிச்சுவாலைகளெழும்ப அதிக வேகத்தோடு வருகிறதைக்கண்ட மட்சயந்தமகாராசன் பல்லை நெறநெறவென்று கடித்து நூறு திவ்வியாஸ்திரங்களெடுத்து வில்லிற்சந்தித்துப் பிரயோகப்படுத்திக் குசலராசன்விட்ட திவ்வியாஸ்திரங்களையுமறுத்து சாரதியை யெச்சரித்து இரதத்தைக் குசலராசன்முன் நடத்தினுன்.

அந்தச்சமயத்தில் மட்சயந்தமகாராசனுடைய குமாரனுகிய வீரசேனமகாராசன் மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்துப்பார்த்து சூரசேனனும் மூர்ச்சையாயிருக்கிறது கண்டு குசல

ராசனைக்காணுமல் இரதத்தைவிட்டுப் பூமியிற்குதித்து மறுதே ரிலேறி சாரதியையெச்சரித்து இரதத்தைக் குசலராசன் முன் னுக்கு நடத்திக் குசலராசனைப் பார்த்துச் சொல்லுகிருன் அடா! குசலனே? ஏன் தலைகீழாய்விழுகிருய் உன்னைவிட சூர னில்லையென்றுங் கையிலாகாத சில இராட்சதரைக்கொன்றே மென்று கெர்வத்தினுலே துள்ளாதே, அந்த கெர்வத்தை இதோ ஒருக்ஷணநேரத்தில் தெரிவிக்கிறேன் பாரடாவென்று வில்லையெடுத்தான்.

அதுகேட்டு குசலராசன் கோபமாகி வீரசேனனைவுற்றுப் பார்த்துப் பல்லைநெறநெறவென்றுகடித்து பத்துநாராசபாண ங்களெடுத்து வில்லிற்சந்தித்துச் சொல்லுகிருன். ஓ! இராசு னே நல்லவசனம்புகன்றுய் நீயொரு ராசனென்று முகத்தில் மீசை வைத்துக்கொண்டு என்முன்வந்து நின்றுய் உன்னைப் போல் சூரத்துவம்பொருந்திய ராஜர்களையும் ராட்சதர்களையு ம் அநேகம்பேரைக்கண்டேன் இறந்தவன் பிறந்தவன்போ லும் வந்தாய் இதோ என்னுடைய அஸ்திரத்தினுலே உன் னைக் கண்டதுண்டம்பண்ணுகிறேன் பாரடாவென்று வில்லி ற் சந்தித்த பத்து நாராசத்தையும் வீரசேனன்பேரில் பிரயோ கம்பண்ணி விட்டுவிட்டான் அந்த பத்து நாராச பாணங்களு ம் வில்லில் விடுபட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு அதிக வேகத்துடன்வந்து வீரசேனனுடைய சரீரத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்து ரத்தமயமாக்கிவிட்டுப் போயிற்று அத னுல் வீரசேனன் மிகவும்நொந்து தைரியம்விடாமல் ரோஷத் துவேஷனுக வில்லி லநேகபாணங்களைச்சந்தித்துக் குசலரா சன்மீது மழைபொழிவதுபோல சரமாரியாய்ப் பொழிகிற போது குசலராசன் கண்டு நூறு திவ்வியாஸ்திரத்தையெடுத் து வில்லிற் சந்தித்து பிரயோகம்பண்ணிவிட்டு வீரசேனன் வி ட்ட திவ்வியாஸ்திரங்களையெல்லாமறுத்து அதனமாய் இர ண்டு இடியாஸ்திரம்விட்டு வீரசேனனேறிவந்த இரதஞ் சார திகுதிரைகளுடன் உடைத்தெறிந்துபோட்டான் அந்த ரதம் போகவே வீரசேனனுனவன் லகுவில் தப்பித்துக்கொண்டு மறுதேரிலேறி வில்லையெடுத்து வளைத்து நாணிபிகிந்து சார தியை யெச்சரித்துக் குசலராசன் முன்னுக்குநடத்தி குசலனை ப்பார்த்துச் சொல்லுகிருன்.

அடா! குசலனே? உன்னைச் சிறுபிள்ளையென் றெண் ணிப் பார்த்ததற்கு உன்னுடைய சிறுபிள்ளை தனத்தையுங்

கண்டேன் வாய்ச்சொல் வாய்க்குள்ளிருந்து வருமுன்னமே பாணத்தை விட்டுக் கொல்வாருமுண்டோ அப்படிச் சிறுபிள்ளையின் தன்மையையடைந்த உன்னை என்னுடைய நாகபாசத்தைவிட்டு கண்டதுண்டம்பண்ணிவிடுகிறேன் அடா குசலனே யென்று நாகபாசத்தை யெடுத்தான். அந்த வாசுகி யென்னப்பட்ட நாகபாசமானது வீரசேனனுக்கு எப்படி வந்து சேர்ந்த தென்றால் ஒருநாள் வீரசேனமகாராசனுனவர் வேட்டைக்குப் போகவேண்டி ரதகஜதுரகபதாதிகளுடன்வெளியேபுறப்பட்டு வடமுகம் நோக்கி கந்தமாமலையென்றொரு பர்வதமிருக்கின்றது அந்தப் பர்வதத்தைச்சேர்ந்த வனத்தில் வேட்டையாடிக்கொண்டு கந்தமாமலையண்டையிலிறங்கி கூடாரமடித்திருக்கையில் வீரசேனமகாராசனுனவர் சாயந்திரவேளையில் சில துரைகளுடன் வில்லையுமெடுத்து ரதத்தில்வைத்து ஆயுதபாணியாக கந்தமாமலையைச் சுற்றிவருகிறபோது அந்த கந்தமாமலையில் ஈசானிய மூலையில் எலும்புகளை மலையாகக் குவித்திருந்து அந்த எலும்பு மலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அந்த எலும்பை சுற்றிவருகிறபோது அவ்விடத்தில் பாதாளத்திற்கு வழிபோகின்றது அதுகண்டு வீரசேனனும் கூடவந்த ராசாக்களும் ரதம்விட்டுக் கீழிறங்கி அதிசயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் வாசுகி யென்னப்பட்ட நாகமானது பூலோகத்தைப் பார்க்கவேணுமென்று சிறிது கூட்டங்களுடனே கூட்டிக்கொண்டு பாதாளலோகத்தைவிட்டு பூலோகத்தின் வாசற்படியில்வந்து கருடபகவான் வந்துவிட்டானேவென்று திடுக்கிட்டு மனதுகலங்கி வந்து நிற்கின்ற ராசாக்களைக்கண்டு மனது பிரியமாகி வாசுகியென்னும் நாகமானது வீரசேனனைப்பார்த்துச் சொல்லுகின்றது.

வாராய் இராசகுமாரா, நான் யாரென்றிருக்கிறாய் அனந்தனென்னப்பட்ட ஆதிசேஷனுண்டே அந்த ஆதிசேஷனுடைய குமாரன் என்பேர் வாசுகியென்று சொல்லுவார்கள் இப்போதெனக்குப் பூலோகம் பார்க்கவேண்டி வெகு ஆசையுடனேகூட இவ்விடம் வந்தேன் இவ்விடத்திற்கு கருடனாலே எங்களினத்தார் மாண்ட எலும்புமலையைக்கண்டேன் காணவே எனக்கு முன்னும் பின்னும் வரக்கூடவில்லை பின்னும்போகக் கூடவில்லை கருடன் வந்தால் என்னையும் என்னினத்தாரையும் கொன்றுபோடுவான் இதற்கெப்படியென்று யோசனை

செய்துக்கொண்டிருந்தேன் இப்போது உம்மைக் கண்டவுட னே மனது பயந்தெளிந்தேனென்ருன்.

அதுகேட்டு வீரசேனமகாராசன் வாசுகியைப் பார்த்துச் சொல்லுகிருன். வாராய், வாசுகியே? உனக்கிப்படிப்பட்ட ஆபத்துக் கருடனுல் வருமென்றல்லவோ பயந்து சொல்லு கிருய் அந்தக் கருடன் இந்நேரம் இவ்விடம் வந்தானேயா கில் என்னுடைய அஸ்திரங்களினுல் அந்தக்கருடனைக்கண்ட துண்டம் பண்ணிப்போடுவோம் நாங்களிருக்கும்போதே உன் னுடைய கூட்டத்துடன் வெளியே வாருங்கள் நீங்கள் பயப் படவேண்டா மென்ருன்.

அப்படி கூறிய வீரசேனமகாராசனுடைய வார்த்தையை வாசுகி யென்னப்பட்ட நாகமானது உற்றுக்கேட்டுச் சொல்லு கின்றது வாரும் இராசகுமாரனே கருடனே மகா பலவான் மும்மூர்த்திகளு மீடல்ல அந்த கருடனுலே எங்களுக்குச்சகா யமாக வந்தவர்களெல்லா மாண்டுபோனுர்கள் உம்முடைய பாணங்களைச் சட்டைபண்ணமாட்டான். அவன்சேதி உமக்கு நன்ருய்த் தெரியவராது எங்களால் நீரேன் மாண்டுபோகிறீர் அப்படி எங்களைக்காக்கவேணுமென்று வல்லமையுண்டானுல் அந்தக் கருடனைச் செயித்து என்னையும் என்னினத்தாரையும் இரட்சித்துக்கொள்ளும் அப்படி எங்களை இரக்ஷித்தீரேயாகில் உம்முடைய அம்புருப்பொதியில் நானே ஒரு பாணமாகயிருக் கிறேன் உனக்கு உயிர்ச்சேதம் வருகிறவேளையில் எதிரிபேரில் என்னையெடுத்து விட்டீரேயானுல் ஆலகால விஷத்தையுண்ட ஈஸ்வரனுனுலுஞ்சரி, ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருக் கப்பட்ட ஸ்ரீமந்நாராயணராுனுலுஞ்சரி, சத்தியலோகவாசகரா யிருக்கப்பட்ட பிரமதேவரானுலும் இன்னுமெவர்களானுலுஞ் சரி என்னுடைய விஷாக்கினியால் நசித்துப் போடுகிறேன்.

அதற்கு நீ சந்தேகப்படவேண்டாம் இந்த வேளையில் எங்களைக்காப்பாற்றவேணுமென்று சத்தியவசனமாகச் சொல் லிய வாசுகியென்னப்பட்ட நாகத்தின் வார்த்தையை வீர சேன மகாராசன் கேட்டுச் சொல்லுகிருன். வாராய் வாசுகியே அந்தக் கருடன் எவ்வளவு பலம் படைத்தவனு யிருந்தாலு மென்னுடைய அஸ்திரத்தினுல். கருடனைச் செயம்பண்ணி உன்னையும் உன்னினங்களையும் காப்பாற்றுகிறேன் அப்படிக் காப்பாற்ருமற் போனேனேயாமானுல் யென்னை மசூயந்த

மகாராசனுடைய குமாரன் வீரசேனனென்று சொல்லவேண்டாமென்று சொன்னான்.

அப்படி சொன்ன வீரசேனமகாராசனுடைய வார்த்தையை வாசுகியென்னப்பட்ட நாகமானது கேட்டு சந்தோஷமாய் வாராய் வீரசேனமகாராசனே எம்முடைய வார்த்தையை நம்பி வெளியில் வரச் செலவு கொடுமையாவென்று வாசுகி கேட்க, அதுகேட்டு வீரசேனமகாராசன் வாசுகியைப் பார்த்துச் சொல்லுகிறான், வாராய் வாசுகியே ஆகாயவாணி பூமிதேவியறிய கருடனைச் செயம்பண்ணி உன்னையும் உன்னுடைய சேனைகளையும் இரட்சிக்கிறேன் நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம் வெளியே வாருங்களென்று பரவசமாகச் சொன்ன வீரசேனமகாராசன் வார்த்தையை வாசுகியென்னும் நாகங்கேட்டு கூட்டத்துடனே பூலோகம் வந்து தன்னினத்தார்களின் எலும்பு மலையைச் சுற்றிப் பார்த்து அவ்விடத்திலிருக்கப்பட்ட கந்தமாதன பர்வதத்தின்பேரிலுள்ள காடு செடிகள் புதறுகளெல்லாம் வாசுகியினுடைய விஷங் கக்குகுறபோது அந்த விஷக்காற்றினால் காடு செடிகளெல்லாம் நீறு நீறாய் வெந்துபோயிற்று. அப்படி விஷச்சுவாலையுடன் பர்வதத்தின் பேரில் போகிறபோது அந்த வேளையிற் கருடபகவானானவர் வைகுந்தம்விட்டு கந்தமாதன பர்வதத்திற்கு வருகிறபோது இவரது இரண்டு சிறகினுடைய காற்றின் வலுவானது சண்டமாருதம் வீசினதுபோலக் காற்றுகளெழும்பி அதனால் மலைக் குன்றுகளெல்லாஞ் செண்டுபோலெழும்பிப் பதினாறுகோடி சூரியப் பிரகாசம்போலே மேனி துலங்க அதிவேகமாய் வருகிறதை வாசுகியும் குமாரர்களுங் கண்டு பயந்து பர்வதத்தைவிட்டு அதிவேகமாக எழும்பி ஓ! வீரசேனமகாராசனே? இது சமயம் அபயம் அபயம் காருமென்று ஓடிவந்து விட்டார்கள்.

அதுகண்டு வீரசேனன் வாசுகியென்னப்பட்ட நாகத்தைப்பார்த்து பயப்படாதேயென்று வாரியெடுத்துத் தன்னுடைய அம்புறாப் பொதிக்குள்ளே விட்டு நாககூட்டத்துடன் இரதமேறி வாசுகியினுடைய கூட்டங்களையுந் தங்கள் இரதங்களிலடக்கிக் கொண்டார்கள். அந்தவேளையிற் கருடபகவானானவர் சிறகுகளை அடித்துக்கொண்டு வருகிற வேகத்தினால் சண்டமாருதமான காற்றுகளெழும்பி வீரசேன மகாராசனுடைய ரதத்தையும் ராசமன்னர்கள் இரதத்தையும் ஆலமரச் சருகுபோல் 1050-காதவழி கொண்டுபோய் விட்டது.

அதுகண்டு வீரசேனனும் இராஜகுமாரர்களும் ஆச்சரியப்பட்டு இனி கருடனிடத்திற்போனால் கருடனால் மாண்டு போவது நிச்சயமென்று நாகத்தைப் பார்த்துச் சொல்லுகிறான் வாராய் வாசுகியே நீ கருடன் மகா பலவந்தனென்று சொன்னது திடமாயிற்று கருடனுடைய சிறகடிகாற்றினாலே நம்முடைய இரதத்தை வெகுதூரத்திற் கொண்டுவந்துவிட்டது ஆகையால் உன் சேனைகளும் பிழைத்தது. நானும் இராஜமன்னரும் பிழைத்தோம். அல்லவென்று எதிர்நின்றோமேயானால் எல்லோருங் கருடனாலடிபட்டு மாண்டுபோவது மல்லாமல் எங்களை நம்பிவந்த நீயும் உன் சேனைகளு மாண்டு போவீர்கள் அதற்கு சந்தேகமில்லை ஆகையால் உன்னுடைய லோகம்போக மனதிருந்தால் போய்விடு அல்லவென்று என்னிடத்தில் உனக்கிருக்க சம்மதியானால் பயமில்லாமல் இரும் உங்களை இரட்சித்துக்கொண்டு வருகிறேனென்று சொல்லிய வீரசேனன் வார்த்தையை வாசுகிகேட்டு நம்முடைய லோகம் போனாலும் கருடன் வராமலிருக்கப் போகிறதில்லை கருடனாலே அச்சமாயிருக்கும் இந்த பூலோகராசனிடத்தி லிருந்தோமேயானால் நமக்கு யாதொரு பயமிராதென்று மனதிலெண்ணி வீரசேனமகாராசனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

வாராய், வீரசேன மகாராசனே? கருடனுடைய சிறகடி காற்றினாலே வெகு துலைவில் வந்துவிட்டோம் இனி கருடனாலே நமக்குப் பயமில்லை நான் பாதாளலோகத்திற்குப் போகிறதில்லை எங்களை இரட்சித்துக் கொள்ளுமென்று வாசுகியென்னப்பட்ட நாகேந்திரன்சொல்ல, அதுகேட்டு வீரசேன மகாராசன் சந்தோஷப்பட்டு அன்றுமுத லின்றையவரைக்கும் யாதொரு விசனமில்லாமல் ரட்சித்துக்கொண்டு வந்தான் அப்படிப்பட்ட நாகபாசத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து குசலராசனைப் பார்த்து விடுத்தான். அதுகண்டு குசலராசன் வீரசேனமகாராசனைப் பார்த்து இவன் கிஞ்சித்து பலவானாகை காண்கிறானென்று யோசித்துக்கொண் டிருக்கிறபோது வீர சேனமகாராசன் விட்ட அந்த வாசுகி யென்னப்பட்ட நாக பாசமானது வெளிப்பட்டு ஆலகால விஷங்களைப்போல விஷங்களைக் கக்கிக்கொண்டு அக்கினிச்சுவாலைவீசி அக்கினியானது குபீல் குபீலென்று சிதற வேகத்துடன் குசலராசன் எங்கே எங்கேயென்று நாகாஸ்திரமானது வருகிறபோது குசலராசன்கண்டு நன்றாய் உற்றுப்பார்த்து, ஏதடா சற்பமா

ணது சீறிக்கொண்டு வருகிறதென்று அதிசீக்கிரமாகச் சக்கரத்தையெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து வருகிற நாகபாசத்தின்பேரில் பிரயோகம்பண்ணிவிட்டான். அப்படிச் சக்கரத்தாழ்வார் மந்திராபூதிகொண்டு குசலராசன் கைவில்லில் விடுபட்டு தகதகாயமாய்ப் பதினறுகோடி சூரியப் பிரகாசமாய் அண்டரண்ட பிரமாண்டங்களும் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க, தேவரெல்லாம் திடுக்கிட்டுப் பயந்தோட அதிவேகத்துடன் வீரசேனன் விட்ட நாகபாசத்தையும் கண்டம்பண்ணி அந்த வுக்கிரம்விடாமல் வீரசேனனுடைய சிரசையுமறுத்துச் சாரதி குதிரைகளையுங்கொன்று ஆயுதம் பிடித்திருந்த இராட்சதர் முடிகளைத் துணித்துக் குசலராசன்விட்ட சக்கரமானது திரும்பி யவனிடம் வந்தடைந்தது.

மட்சயந்தமகாராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

அந்தமிலானருளுஞ் சிசுவால்விளையாட
வந்தபதாதிகரித்திரள் யாவுமழிந்தவு
சந்தனனென்றுமதங்கள் கடிந்தவையோரமட்ச
யந்தனெனும் ரதமேனியடர்ந்தானே.

அதுகண்ட மட்சயந்தமகாராசன் பிள்ளையிறந்துபோனனென்று அதிககோபாக்கினியுடன் வில்லையெடுத்து நிறுத்திப் பாணங்களை வில்விற்சந்தித்து மழைபொழிவதுபோல்சரமாரியாகப்பொழிந்து ஒருசத்தியை எடுத்துப் பூசைசெய்து பாணவேகத்தோடுகூட குசலராசனுடையவில்லை பார்த்துவிட்டான் அந்த சத்தியானதுவிடுபட்டு அண்டரண்டபுவனங்களும்நடுங்க, அக்கினிச்சுவாலையெழும்ப அதிவேகத்துடன் வருகிறபோது, குசலராசன் கண்டு அதிசீக்கிரமாய்த் தன்னுடைய வில்லிலனேக திவ்யாஸ்திரங்களைச்சந்தித்துவிட்டு மட்சயந்தமகாராசனுடைய அஸ்திரங்களையெல்லாங் கண்டித்துவருகிற சத்தியின்பேரில் சடாலென்றுவந்துபாய்ந்து சத்தியினலடிபட்டுபூமியில்சாய்ந்துப்போயிற்று அப்போது சத்தியானது வேகத்துடன் குசலராஜனுடைய பிரசண்ட கோதண்டத்தின் பேரில்வந்துவிழுந்தது. அதைக்குசலன்யறவெட்டி பூமியில் தள்ளிவிட்டான்.

அப்போது சத்தியானது குசலராசனுடைய கோதண்டத்தைப்பிளக்கவொட்டாமல் பின்னப்பட்டு குசலராசனுடைய

வாளாயுதத்தினுல் வெட்டுண்டு பூமியில் விழுந்துபோனதையு மட்சயந்த மகாராஜன்கண்டு கடுங்கோபங்கொண்டு நாராயணு ஸ்திரத்தை யெடுத்துப் பூசைசெய்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம்பண்ணினுன். அந்த நாராயணுஸ்திரமானது வில் லில் விடுபட்டு அண்டரண்ட பகிரண்ட மாயிரத்தெட்டண்ட ங்களும் குலுங்க, ஆலகாலவிஷத்தைப்போல அக்கினிச்சுவா லேகளுடன் அதிவேகமாக வருகிறபோது குசலராசன் கண்டு கோபமாகி தானும் ஒரு நாராயணுஸ்திரத்தை யெடுத்துப் பூசைசெய்து வில்லிற்சந்தித்துப் பிரயோகம் பண்ணினுன். அந்த நாராயணுஸ்திரமும் வில்லில்விடுபட்டு ஆகாயம்பூமியு மொன்ருய் யுருவுகொண்டு வருவதைப்போல் அக்கினிகளேக் குபீல்குபீலென்று கக்கி, ஆலகால விஷத்தைப்போலச் சீறிக் கொண்டு அதிவேகத்துடன் மட்சயந்த மகாராசன் விட்ட நாராயணுஸ்திரத்தை கபளீகரம் பண்ணிவிட்டு அம்புருத்தூ ணியில் வந்தடைந்தது.

அதுகண்டு மட்சயந்தராசன் கணக்குமிதமில்லாத பாண ங்களையெடுத்து வில்லிற் சந்தித்து சோனேமாரிபோலக் குசல ராசன்பேரிற்பொழிந்துவிட்டார், அப்போது குசலராசனுன வன் அநேகபாணங்களைப் பிரயோகப்படுத்தி மட்சயந்தமகா ராசன்விட்ட பாணங்களையுமறுத்து மிச்சமாக ஐந்து திவ்வி யாஸ்திரங்களைவிட்டு மட்சயநத மகாராசனேறிவந்த இரதஞ் சாரதி குதிரைகளுடன் அதஞ்செய்து மட்சயந்த மகாராஜன் சிரசையுங் கரகரவென்று அறுத்துத்தள்ளிவிட்டான்.

சோமகாசமகாராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

மட்சயந்த வரசன்மடிந்தபின்
துஷ்டனும்சோம காசனுள்ளந்துடித்
திட்சணத்தி லடுத்தவனுவிலயை
பட்சணம்செய்கு வேனெனப்பாய்ந்தனன்.

அதுகண்டு வாரணுபுரியை யாளப்பட்ட சோமகாசமகா ராஜன் பல்லை நறநறவென்றுகடித்து கோபமாய் இரதத்தைக் குசலராசன் முன்னடத்தி வில்லையெடுதது நாணிபிகிந்து ஒருமுகூர்த்தம் மூணேமுக்கால் நாழிகை பரியந்தம் வோய்வி ல்லாமலும் மூச்சுவிடாமலும் சரசரவென்று குசலராஜன் மீது அனேக பாணங்களையெல்லாமறுத்து அதனமாக பத்து

திவ்வியாஸ்திரங்களெடுத்து கோதண்டத்திற் சந்தித்துப் பிர யோகம்பண்ணினன் அதுகள் கோதண்டத்தில் விடுபட்டு காட்டுத்தீயைப்போற் கனகனவென் றெரிந்துக்கொண்டு வரு கிறபோது சோமகாசமகாராஜன் கண்டு நூறு திவ்வியாஸ்திர மெடுத்து வில்லிற்றொடுத்துவிட்டுக் குசலன்விட்ட பத்துதிவ் வியாஸ்திரத்தையு மறுத்துத் தள்ளிப்போட்டான்.

அதுகண்டு குசலராஜன் வெகுண்டு நூறு நாராசபாணங் களெடுத்து பிரயோகம்பண்ணினன் அந்த நூறு நாராசபா ணங்களும் காலகோடி விஷம்போற் சீறிக்கொண்டு அதி வேகத்தோடு வருகிறபோது சோமகாசமகாராஜன் கண்டு வில் லிலனேக பாணங்களை சந்தித்துப் பிரயோகப்படுத்தி குசலன் விட்ட நூறு நாராசபாணத்தையுங் கண்டித்து அதனமாய்ப் பதினைந்து திவ்வியாஸ்திரம் விடுத்தான். அந்த அஸ்திரங் களும் வாய்வேக மனோவேகமாய் வருகையில் குசலராஜன் கண்டு நான்கு திவ்வியாஸ்திரங்களையும் தும்சஞ்செய்து அவ ன் மார்பிலணிந்த நவகவசத்தையும் பொடியாக்கினன். அப் படி நவகவசங்களும் பொடியாகவே சோமகாசமகாராஜன் அதிக கோபமாகி அறுபது சிங்கமுகாஸ்திரத்தை விடுத்தான் அதையும் குசலராஜனறுத்து இரதஞ் சாரதி குதிரைகளுடன் தும்சப்பண்ணினன்.

இந்தப்படி குசலராஜனும் சோமகாசமகாராஜனும் ரோ ஷத்துவேஷத்துடன் மிதமில்லாத அஸ்திரங்களைவிட்டு யுத் தஞ்செய்துக்கொண்டிருக்கையில், இலங்காதிபதியான கால சித்தன் மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்துக் குசலராஜனைப் பார்த்தான் அவ்விராசனுடைய விற்குணத்தொனி சத்தமான து வெகுதூரத்திற்கேட்டது அந்தசத்தங் காலசித்தன்கேட்டு சிந்தாக்கிரந்தனாகி விசனப்பட்டு சீதாலட்சுமியில்லாமல் ஸ்ரீ ராமருடைய யாகத்திற்குப் பின்னம் வந்துவிட்டது. இது யாருடைய சாபம் இப்படிவந்து விளைந்தது ஸ்ரீமந்நாரா யணா! ஸ்ரீராமபத்திரா ஓ! ரகுநந்தனாவென்று மகா விசன சித்தனாகி இரதத்தைவிட்டுப்பூமியிற்குதித்து மறுதேரிலேறிச் சத்துருக்கமகாராசனுடைய சமீபத்தில் வந்து தீர்க்கதெண் டஞ்சமர்ப்பித்து சத்துருக்கமகாராஜனால் ஆசீர்வாதம்பெற்று எழுந்திருந்து அவ்விராஜனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ! இராஜாதிராஜனே? ராஜபரமேஸ்வரா சத்துருக்க மகாராஜனே கேளும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி,

வருணன், வாயு, குபேரன், ஈசானியன், இப்படிச் சொல்லப் பட்ட அஷ்டதிக்குப் பாலகருடன் யுத்தம்புரிந்து ஜெயங் கொண்டேன், அவர்களுடைய அஸ்திரங்களும் இதற்கிணை யல்ல இந்த குசலனே நமது சேனைகளுக்கு எமனாக வந்தி ருக்கிறான். சகலவுயிர் பிராணிகளையும் கொண்டுபோகுங் கால னானவன் யென்பேரில் தூதருடன்வந்து யுத்தம்பண்ணி என் னைஜெயிக்காமல் எத்தனைதரமோ யென்கையி லடிபட்டு மிக வும் கஸ்தியடைந்து ஓடிப்போய்விட்டான்.

அப்படிப்பட்ட யெமனும் என்னைக் கண்டவுடனே கை யெடுத்துக் கும்பிட்டுக்கொண்டிருக்கிறான். அந்தக் காலனு டைய பாணத்தின் சுருக்கும் இந்தக் குசலனுடைய பாணத் தின் சுருக்குக்குநிகரல்ல இவனைச் சொற்பமான யுத்தஞ்செய் கிறானென் றெண்ணவேண்டாம் மகாவல்லவன் என்னுடைய அஸ்திரம் பிரமதேவரை நோக்கி அநேககாலந்தவஞ்செய்து அவரால் பிரமாஸ்திரமும் பெற்றேன் பரமசிவனை வருந்தி தவஞ்செய்து சூலமும்பெற்றேன் ஸ்ரீமந்நாராயணரை அநே ககாலந் தவஞ்செய்து ஸ்ரீமந்நாராயணர் வராதபடியினாலே வைகுந்த புரத்தின்பேரில் யுத்தத்திற்குப்போய் ஸ்ரீமந்நாராய ணருடன் அனேக யுத்தஞ்செய்து நாராயணாஸ்திரமும் பெற் றேன் காலனால் தெண்டும் பெற்றேன் அதனால் சகலமான ராக்ஷதாளும் தேவர்களும் வணங்கும்படியாய் இதுவரையில் பேரும்பெற்றேன் இப்போதிந்தக் குசலனால் மும்மூர்த்திகளா ல் வரம்பெற்ற ஆயுதாஸ்திரங்களுந் தோற்று என்னுடைய சரீரமும் அறுப்புண்டு மகா ஆயாசம் இளைப்போடு மூர்ச்சை தெளிந்தெழுந்து வந்தேனென்றான் அவனைச் சத்துருக்க மகாராசர் தன்னுடைய கரத்தினாற் சரீரமுழுதுந் தடவிக்கொ டுத்துச் சொல்லுகின்றார்.

வாராய், காலசித்தனே? குசலன் சிறுபிள்ளையானபடியி னால்முன்பின்யோசனையில்லாமல் அஸ்திரத்தைவிட்டுக்கொன் றுபோடுகிறான். இப்போதிந்தக் குசலனால் நம்முடைய சேனா சமுத்திரமெல்லாம் மாண்டுபோயிற்று இன்னமுனக்கு சூல மும் நாராயணாஸ்திரமும் பிரமாஸ்திரமும் காலனுடைய தெ ண்டும் அட்டதிக்குப்பாலகரைச் செயிக்கத்தக்க ஆயுதங்களு முனக்குத் தருகிறேன் நீ பயப்படாமல் இரதமேறிக்கொண்டு குசலனை எதிர்த்து எவ்விதத்திலும் உயிர்ச்சேதம் வரவொட் டாமல் கைப்பிடியாய் பிடித்துவரவேணுமென்று சொல்லி

சூலமும் நாராயணுஸ்திரமும் பிரம்மாஸ்திரமும் காலனுடைய தெண்டைப்போலொத்த தெண்டுமெடுத்து காலசித்தனுடைய கையிற்கொடுத்தார்.

அவர் யாரென்றால் பல்லாயிரங்கோடி அண்டத்தையுங் கெற்பத்தில்வைத்து ரட்சிக்கப்படாநின்ற நமது ஸ்ரீராமபத்திர சுவாமியாருடைய சகோதரனுக விளங்கப்பட்ட சத்துருக்க மகாராசன் அப்படிப்பட்ட சத்துருக்க மகாராசனைப் பார்த்துக் காலசித்தன் சொல்லுகிறான். ஐயா சத்துருக்க மகாராசனே கேளும் அந்தகுசலனது மாளாத அட்சயதூணியாயிருக்கிறது அந்த வில்லோ பிரசண்டங்கள் கண்ட வில்லுபோலிருக்கிறது அந்த வில்லினுடைய முறப்புக்கு திரிமூர்த்திகளும்முன்னிற்க மாட்டார்கள் எத்தனை அஸ்திரமந்த வில்லின்பேரில் விட்டாலுங் கூர்மடங்கி பூமியில் விழுந்துபோகிறதேயல்லாமல் வில்முறிந்தபாடில்லை குசலராசனைப் பார்த்து பாணமெடுக்கும்போதே சிரசுபோய்விடுகின்றது மேலும் அந்தகுசலனுடனே யார் நின்று யுத்தம்பண்ணுவார்கள் இது யாருடைய சாபமோ இப்படி சிறுவன் கையினுல் மாண்டுபோக காலம் வந்ததே ஸ்ரீராமருடையயாகத்திற்கு பின்னம் வந்துவிட்டதேசமுத்திரமெல்லாந்தாண்டி சிறிய கால்வாய் தாண்டமாட்டாமற் போனேமே என்ன செய்வோம் சத்துருக்கமகாராசனே என்றான்.

அப்படிசொன்ன காலசித்தனுடைய வார்த்தையை சத்துருக்கமகாராசன்கேட்டு சொல்லுகிறார் வாராய் காலசித்தனே இந்த குசலனை ஒருபெரிதாக எண்ணி இப்படி விசனப்படுவார்களுமுண்டோ இந்த குசலன் எமலோகம் அல்லது கைலாயம் வைகுந்தம்போயொளித்தாலும் என்னுடைய அஸ்திரம்விடாது நான்போயந்த குசலனுடனே யுத்தம்பண்ணி செயிக்கிறேன் பாருமென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது குசலராசனுனவன் மிதமில்லாத பாணங்களைவிட்டுசோமகாசமகாராசனுடையசரீரத்தைசல்லடைக்கண்களாகத் துளைத்து இரதத்திற்கட்டிய துவசத்தையு மறுத்துத்தள்ளினுன். துவசமறுந்துபோகவே சோமகாசமகாராஜன் கடுஞ்சினங்கொண்டு சாரதியை எச்சரித்து ரதத்தை குசலராசன் முன்னுக்கு நடத்தி குசலராசனைப்பார்த்துச் சொல்லுகிறான் வாராய் சிறுபிள்ளாய் நீயார் உன் குலமென்ன உன் தாய்தந்தை பேரென்ன நீஎங்க

ளுடன் யுத்தம்புரிய வேண்டிய காரியமென்னவென்று கேட்டான்.

அதற்கு குசலராசன் சோமகாச மகாராசனைப் பார்த்துச் சொல்லுகிறுன் ஓ ராசனே என் தாய் தந்தை பேரை கேட்கப்பட்டவர்க்கெல்லாம் சொல்லிக்கொண்டு நானிருக்கவோ யுத்த முனையில் உறவு நடத்துவாருமுண்டோ ஒருவராகிலும் என் கைதிமிர் நீங்க யுத்தம் பண்ணுவாரைக் காணேன் நீயொரு இராஜனென்று வில்லைக் கையிற் பிடித்தாய் என்முன் வந்து நின்று வாய்விசேஷங் கேட்கவந்தாய் அப்படி விசேஷங் கேட்டு தப்பித்துக்கொள்ளவந்த உன்னை இதோ என் கைபாணத்தினுல் கண்டதுண்டம் பண்ணுகிறேன் பாரென்று மகா உக்ராகாரத்துடன் 10-நாராசபாணமெடுத்துவில்லிற்றொடுத்து விடுத்து சோமகாச மகாராசனுடைய தேகத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டானதனுற் சோமகாச மகாராசன் மிகவும் மனநொந்து இவனைக் கொன்றுல் தோஷமில்லையென்று நாராயணுஸ்திரத்தை எடுத்து மந்திராபூதிகள் செய்து பிரயோகம் பண்ணினுனந்த நாராயணுஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டு அண்டபகிரண்டங்களும் நடுங்க ஆலகால விஷத்தைப்போற் சீறிக்கொண் டக்கினிப் பொறிகள் சிதறும்படியா யதிவேகத்துடன் வரும்போது குசலராசன் கண்டு கோபாக்கினியுடன் தானுமொரு நாராயணுஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து மந்திராபூதிகள் செய்துவிட்டானந்த நாராயணுஸ்திரமும் வில்லில்விடுபட்டு அண்டபகிரண்டங்களும் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க, ஆவென்று வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக் கொண்டு அதிவேகமாய் வந்து சோமகாசமகாராசன் விட்ட நாராயணுஸ்திரத்தின்பேரில் சடாலென்று பாய்ந்து அந்த அஸ்திரத்தை கமளீகரம் பண்ணிப்போட்டு அம்புருத்தூணியில் மறுபடியும் வந்தடைந்தது.

அதுகண்டு திகிற்கொண்டு சோமகாசமகாராசன் தயிலத்திற்றேய்த்து கூர்மைதங்கியிருக்கும் வேலாயுதத்தையெடுத்து தூபதீப நைவேத்தியங்கள் கொடுத்து அதை அவர்கள்போற் படைகளில் முந்திவந்திருக்கும் தசரதமகாராசன் பௌத்திரனுகிய குசலராசன் மார்பில் லக்குபார்த்து விட்டுவிட்டானந்த வேலாயுதம் விடுபட்டு அண்டரண்ட பிர்மாண்டமும் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க, அண்டமுகடு கிழிய, அண்ட



கோளத்தையும் பிளக்குமாப்போல ஆவென்று வாயைத்திறந்து அக்கினிகளை குபீலென்று கக்கிக்கொண்டு வருகிறபோது அண்டத்திலுள்ள தேவர்களு மந்த அக்கினிச் சுவாலையைப் பொறுக்கமாட்டாமல் மேலண்டத்திற் கோடிப்போய் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச்சமயத்தில் சோமகாசமகாராசன்விட்ட வேலாயுதத்தை கமளீகரஞ்செய்து அவன் மார்பில் பாய்ந்து முதுகிலுருகி திருப்பாற்கடலில் ஸ்நானஞ்செய்து அப்புறுத்தூணியில் வந்தடைந்தது. சோமகாச மகாராசன் வில்லை நழுகவிட்டு தேரின்பேரில் விழுந்து ஸ்ரீமந் நாராயணுவென்று உயிரை விட்டான்.

அதுகண்டு குசலன் சந்தோஷமாகி வில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்து இராட்சதாள் பேரில் பிரயோகம்பண்ணினுன் அந்த அஸ்திரங்களால் இராட்சதாள் தலைசாய்ந்தவரும், சிலைமாய்ந்தவரும், கண்டமானவரும், துண்டமானவரும், கதருவார்களும், உயிர்தப்பி மீளோமென்று பதறுவார்களும், நானுவிதமாக சிதறுவார்களும், சடசடவென்று வருவார்களும், படபடென்று போவார்களும் இப்படியாக சிலர் ஓடத் தலைப்பட்டார்கள்.

சத்துருக்கமகாராஜனுக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

கலி விருத்தம்.

சத்துருக்கன் சினத்துடன்வந்துபோர்
முற்றுமாடி முறியசரச்சிலை
சித்தவேதகி கற்றவனேர்புறஞ்
செத்தவன்போ லிருக்கச்சிரித்தனன்.

அதனை சத்துருக்கமகாராசன் கண்டு கண்களிற் பொறி பறக்க, காதுகளிரண்டிலும் புகைகளெழும்ப, மீசையானது படபடென்று துடிக்க, இரண்டு கைகளும் பதைக்க, உக்கிர சிங்கம்போல அதிககோபமாகி சாரதியை யெச்சரித்து குசலராசன் முன்னுக்கு இரதத்தை நடத்தி சொல்லுகிறூர். வாருந் தம்பி சிறுபிள்ளாய் நீயார் உன் தாய் தந்தை பேரென்ன உன் பெயர்யாது உன் குலமென்ன சொல்லென்றூர்.

அதற்கு குசலன் புகலுகின்றுன் ஓ! இராஜனே? கேளும் இராசாக்களாய் பிறந்தபேர்களுக்கு யுத்தம் வந்து நேர்ந்த காலையில் யுத்தத்திற்கு பின்னிடைந்து உறவு நடத்துவாருமுண்டோ வந்தபேருக்கெல்லாம் தாய் தந்தைபேரைச் சொல்

லிக்கொண்டிருக்கிறதோ யுத்தத்திற்கு பயந்தால் நான்விடுவே னே விடேனென்று னப்படிகூறிய குசலன்மொழியை சத்துருக்கமகாராச னுணர்ந்து சொல்லுகிறார். வாரும் பிள்ளாய் யான் யுத்தத்திற்குப் பயந்து உன் தாய்தந்தைபேரை வினவவில்லை நீ சிறுவனுகையால் உன்னையீன்றோர் பெயரை யறிந்துக்கொண்டு போர்புரியலாமென்றால் நீ இப்படிசொல்லலாமா ஆகையால் சந்தேகமின்றி தந்தையின் பெயரும் உன்வரலாறும் எனக்கறிவியென்றார்.

அவ்வாறு கூறிய சத்துருக்கமகாராசன் திருமொழியைச் சிறுவனுன குசலன் கேட்டுச் சொல்லுகின்றான். கேளும், இராசனே? என் தாயார்பேர் ஜானகியம்மாள் எங்கள் ஐயர் பேர் வால்மீகரிஷி என்பேர் குசலன் என் தம்பிபேர் லவன் எங்கள் குலமெனக்குத் தெரியாதென்றான். அதைக்கேட்ட சத்துருக்கமகாராசர் யோசித்து இவன் ரிஷிபிள்ளையென்றே துகிறான். ஆனுல் சீதாலட்சுமிக்கும் இரண்டு பிள்ளைகளுண்டாவானே னதிசயமா யிருக்கிறதென்று சந்தேகித்து இன்னமிவனது வாய்பேச்சை ஆராயவேணுமென்று குசலனைப் பார்த்துச் சொல்லுகிறார். வாருந்தம்பி! குசலனே? உன்தாய் தந்தை பேரையும் உன்பேரையும் புகன்றாயல்லவா என்னுடைய சேனைகள் என்னசெய்ததென்று இப்படி வீணில்மாய்த்துவிட்டாய் சொல்லென்றார்.

அதற்கு குசலராஜன் சொல்லுகிறான். ஓகோ! இராசனே? கேளும் என்தம்பி லவனுனவன் உங்களை என்னசெய்தானென்று பிடித்துக் கட்டிக்கொண்டு போனீர்கள் அதைசொல்லென்றான். அதற்கு சத்துருக்கமகாராசர் சொல்லுகிறார். வாருந் தம்பி குசலனே? அயோத்தியாபுரிபட்டணத்தை பரிபாலனஞ் செய்யப்பட்ட ஸ்ரீராமபத்திரசுவாமி அஸ்வமேதயாகம் பண்ணவேண்டி குதிரையை விட்டாரந்த அஸ்வமானது இந்த வனத்திற்கு வந்தது அதை உன்தம்பி லவன்கண்டு குதிரையைப் பிடித்துக்கட்டி பின்வந்த சேனைகளையுங்கொன்று என்னுடைய சேனைகளையு மல்லோல கல்லோலப் படுத்தினபடியால் நான்வந்து குதிரையைவிடச்சொல்லிக் கேட்டால் என்னையும் உதாசினமாக தூஷித்துப் பாணப்பிரயோகம் பண்ணினான். அந்த பாணங்களை யெல்லாமறுத்து மூர்ச்சையாக்கிப் பின்கட்டாகக் கட்டிப்போட்டோமென்றார்.

அவ்வார்த்தையைகுசலராசன்கேட்டு இரண்டுகண்களுஞ் சிவப்பேர, இரண்டுகாதிலும் புகையெழும்ப சரீரந்துடிக்க கைகளிரண்டும் பதைக்க, அதிக கோபாக்கினியுடன் சத்துருக்க மகாராசனைப் பார்த்து இடிமுழக்கத்தைப்போலே பல்லை நெறநெறவென்று கடித்து ஓ! சத்துருக்கமகாராசனே? என்ன வசனம் புகன்ருய், அயோத்தியாபுரியை பரிபாலனம் பண்ணப்பட்ட ஸ்ரீராமபிரான்விட்ட குதிரை அவர்பட்டணத்தைச்சுற்றி பிரதட்சணம் வரவேணுமேயல்லாமல் எங்கள்வனத்திற்கு அந்த குதிரை வந்தபடியினுல் என்தப்பி லவன் பிடித்துக்கட்டினுன். ஆனுலவனுடன் நீங்கள் வந்தெதிர்த்து யுத்தஞ்செய்து பிடித்து கட்டிக்கொண்டுபோக உங்களுக்கென்ன ஞாயமிருக்கிறது சொல்லென்றுன். அப்படி கூறியகுசலனுடைய வார்த்தையை சத்துருக்கமகாராசன்கேட்டு சொல்லுகின்ருர் வாருந்தம்பி குசலராசனே ஆயிரத்தெட் டண்டங்களும் 224-புவனமும் சத்தசாகரமுஞ் சூழ்ந்த ஈரேழுபதினுலுலகத்தையும் ஏகசக்கிரமா யாளப்பட்ட இராவணேஸ்வரனை இராமபாணத்தைவிட்டு சங்கரித்து ஆயிரந்தெட்டண்டம் 224-புவனமும் சத்தசாகரமுஞ் சூழ்ந்த ஈரேழு பதினுலுலோகத்தையும் நிலைநிறுத்திய ஸ்ரீராமபத்திர சுவாமியாருக்குத் தன்பட்டணமென்றும் உங்கள் வனமென்றும் மிருக்குதோ சிங்கத்துக்கு தன்காடென்றும் புறங்காடென்று மிருக்குதோ அப்படி யவர்விட்ட குதிரை உங்கள் வனமென்றும் எங்கள் வனமென்றும் வேற்றுமையிராது கண்டாய், இப்போது உன் தம்பி சேனையை வீணிலே கொன்றபடியினுலே நானவனை பிடித்துக்கட்ட ஞாயமிருக்கிறது நீ சிறுபிள்ளையானபடியினுல் உனக்கிவ்வளவு ஞாயந்தெரியாமல் என்னுடைய சேனையை முன்பின் பாராமல் அஸ்திரத்தைவிட்டுக் கொன்றுபோட்டாய் அந்தக் குற்றத்தைப் பாராட்டாமல் நீ சிறுபிள்ளையென்று நான் மனம் பொறுத்தேன் வேறே எவர்களானுலும் என் குதிரையைப் பிடித்துக் கட்டினதற்கு இந்நேரம் அவர்களை வானுலகமடையச் செய்வேன் அன்றியும் உன்னுடைய உயிரைத் தப்பித்துக்கொண்டு உன் தாயுடன் பிள்ளையாய்ப் போய்ச் சேரென்ருர்.

அதைக்கேட்ட குசலராசன் சத்துருக்க மகாராசனைப் பார்த்துச் சொல்லுகிருன். அடா! சத்துருக்கனே; என்ன வசனம் புகன்ருய் சிங்கத்திற்கு தன்காடென்றும் பிறர்காடெ

ன்று முண்டோ என்று சொல்லவந்தாய் நீயும் அந்த இராம னும் இன்னம் சற்றுநேரத்தில் படப்போகின்றபாடு தெரியா மல் என்னை யிகழ்ச்சியாகச் சொன்ன உன்னையிதோ அரைட் சணநேரத்திற்குள் உன்னுடைய மர்மசர்மமெல்லாம் வெளி ப்படுத்திவைக்கிறேன் பாரென்று பிரசண்டகோதண்டத்தைக் குணத்தொனிபண்ணி பத்து நாராசபாணங்களை யெடுத்து கோதண்டத்திற் சந்தித்து சத்துருக்க மகாராசன்பேரில் பிர யோகம்பண்ணின னந்த நாராசபாணங்களும் வில்லில் விடு பட்டு நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வருகிறபோது சத்துரு க்கமகாராசன் கண்டு பாலன் பாணமிஞ்சினனென்று பத்து நாராசபாணமெடுத்து வில்லிற்சந்தித்துவிடவே அந்தபாண ங்களானது அவயத்திலிருந்த நாகசற்பம்போற்சீறிக்கொண்டு அதிவேகமாகப் புறப்பட்டு குசலராசன்விட்ட நாராசபாணங் களின்பேரில் சடாலென்று வந்துபாய்ந்து ஒன்றோடொன்று தாக்கி ஆகாயமார்க்கத்திலெழும்பி யுத்தங்கள்செய்து இருவ ருடைய பாணங்களும் கூர்மழுங்கி பூமியில் விழுந்து அவர வர்களுடைய அம்புறுப்பொதியில் வந்தடைந்தது. அது கண்டு குசலராசன் கோபமாகி வில்லையெடுத்து அனேக அஸ் திரங்களைச்சந்தித்து வருஷகாலத்தில் சத்தமேகங்களும் ஏக காலத்தில் ஒன்றாகக்கூடி இடி மின்னல் குமுறலுடனே குமு குமுவென்று ஓய்வு வொழிச்சலில்லாமல் இடைவெளியில் லாமல் சரவருஷம்பொழிந்தா லெப்படியோ அப்படியாக சர வருஷமாய் மிதமில்லாத பாணங்களைச் சொரிகிறபோது சத் துருக்கமகாராசன் கண்டு வில்லிலனேக பாணங்களைச் சந்தி த்து ஈசானியமூலையிலிருந்து மேகமானது கெற்சித்தா லெப் படியோ அவ்வாறு கெற்சித்து சரவருஷம் பொழிந்து குசல ராசனுடைய அஸ்திரங்களுடன் ஒன்றோடொன் றாடுதாக்கி யுத்தங்கள்செய்து கூர்மடங்கி பூமியில் விழுந்து அம்புறுப் பொதியில் வந்தடைந்தனகள். அதுகண்டு குசலராசன் கோ தண்டத்தில் அமோகமான அஸ்திரங்களைச் சந்தித்து சத்து ருக்கமகாராசன்பேரில் பிரயோகப்படுத்தின னந்த திவ்வியா ஸ்திரங்களும் வில்லில் விடுபட்டு ஒன்றோடொன் றுறய்ந்து கொண்டு நெருப்புப் பொறிபறக்க வருகிறபோது சத்துருக்க மகாராசன் கண்டு தானும் வில்லிலனேக திவ்வியாஸ்திரங்க ளைத் தொடுத்து பிரயோகம் பண்ணினர். அந்த திவ்வியாஸ் திரம் அதிகவிரைவோடு அக்கினிப்பொறிகள் சிதறச்சென்று

குசலராசன்விட்ட பாணங்களின்மீது பாய்ந்து ஒன்ரூெடொன்றுதாக்கி கூர்மடங்கி பூமியில்விழுந்து அவரவர்களுடைய அம்புருப்பொதியில் வந்தடைந்தது. அதுகண்டு சத்துருக்க மகாராசர் பின்னும் நூறு சிங்கமுகாஸ்திரத்தையெடுத்து பிரயோகம்பண்ணினர்.

அந்த சிங்காமுகாஸ்திரம் வில்லில் விடுபட்டு உக்கிர சிங்கம்போல அக்கினிகளைகக்கிக்கொண்டு அதிக வேகத்துடனே வரும்போது குசலராசன் கண்டு தானும் நூறு சிங்கமுகாஸ்திரத்தை வில்லிற்சந்தித்துவிடுத்தான் இப்படி இருவர்விட்ட சிங்கமுகாஸ்திரங்களும் ஒன்ரூெடொன் ரூடுதாக்கி மற்கட்டியுத்தங்கள்செய்து கூர்மழுங்கி பூமியில்விழுந்து அவரவர்களுடைய அம்புருவில் வந்தடைந்தது அதுகண்டு குசலராசன்சினங்கொண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தையெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகம்பண்ணினன்.

அந்த அக்கினியாஸ்திரமானது வடவாமுகாக்கினியை வாரி யிறைத்துக்கொண்டு ஆலகால விஷத்தைப்போற் சீறிக்கொண்டு அதிகவேகத்துடன் வருகையிற் சத்துருக்கமகாராசன்கண்டு பிரமைகொண்டு மனம்விண்டு இந்த அக்கினியாஸ்திரம் மகாமகிமையுடன் வருகிறதென்று தன்தமயன்கொடுத்த இராமபாணமாகிய அக்கினியாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து பிரயோகம்பண்ணினுரந்த அக்கினியாஸ்திரமும்வில் லில்விடுபட்டு தகத்தகாயமாய்தங்கக்கட்டுகளுடன் அசுணபட்சியிறகு பூண்ட அக்கினியாஸ்திரமானது ஆலகால விஷத்தைப்போல் வடவாமுகாக்கினியை வாரி யிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடனேயு மதிசீக்கிரமாய் குசலராஜன்விட்ட அக்கினியாஸ்திரத்தின்பேரில் சடாலென்று வந்துபாய்ந்து ஆகாயமார்க்கம்கிளம்பி ஒன்ரூெடொன் ரூடுதாக்கி எதிர்த்துப் போராடி அக்கினிகளையுங் கக்கிக்கொண்டு யுத்தம் புரிகையில் தேவர்கள்கண்டு தியக்கங்கொண்டு அக்கினிச் சுவாலேகளே பொறுக்கமாட்டாமல் மேலண்டத்திற் கோடிப்போனர்கள். அப்படியிரண்டு அக்கினியாஸ்திரமும் ஒன்றுக்கொன்று தோர்வையில்லாமல் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டதுகள். அதனைப்பார்த்த குசலராஜனேதடா சத்துருக்கன் பலவானுயிருக்கிருன் நாம் விடப்பட்ட அஸ்திரத்துக்கெல்லாம் பதில்விட்டு யுத்தம்பண்ணுகிருன் இன்னம் அவனுடைய சமர்த்தை யறிவோமென்று தன் தாயார்கொடுத்த இந்திரனு

டைய வச்சிராயுதத்தையும் யமனுடைய கால தண்டாயுதத்தையும் ஈசனுடைய சூலாயுதத்தையும் எடுத்து மந்திராபூதிகள்கொடுத்து ஒன்றின்மே லொன்றாக விட்டுவிட்டா னந்த ஆயுதங்களும் குசலராசன்கையில் விடுபட்டு அண்டரண்ட பிரமாண்டங்களும் நடுங்க, அண்டகோளத்தைப்பற்றி எறிய அண்டச்சுவர்களும் நெக்குவிட, அண்டத்திலுள்ள தேவர்களும் பயந்தோடி வருகிறபோது, சத்துருக்கர் கண்டு எதடா குசலன் மகா பராக்கிரமசாலியாயிருக்கிறா னிவன்விட்ட அஸ்திரங்களும் மகா மகிமையோடு மிருக்கின்றது இவன் சிறுபிள்ளையாயிற்றே இவனுக்கிப்படிப்பட்ட அஸ்திரம் யார்கொடுத்தது எல்லாங்கண்டறிவோமென்று தம்முடைய ஸ்ரீராமபாணமாகிய வச்சிராயுதமுந் தண்டாயுதமுஞ் சூலாயுதமு மெடுத்து மந்திராபூதிகள்கொடுத்து ஒன்றின்மேலொன்றாய் குசலராசன் விட்ட ஆயுதத்தின்பேரில் விடுத்தார். அந்த மூன்றாயுதமும் சத்துருக்கமகாராசன்கையில் விடுபட்டு மும்மூர்த்திகளைப்போல் ஒருவரும் நிகரில்லாமல் அதிவேகத்துடன் குசலராசன்விட்ட ஆயுதங்களின்பேரில் சடாலென்று வந்து பாய்ந்து ஒன்றுக்கொன்றாடுதாக்கி ஆகாயமார்க்கஞ்சென்று இருவர்விட்டஅஸ்திரங்களும் யுத்தஞ்செய்துக்கொண் டிருக்கையில் குசலராசன் தன் தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தை யெடுத்து பூசைசெய்து வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணினான்.

அந்த நாராயணாஸ்திரமு மண்டலங்குலுங்க, அம்புவி கலங்க ஆவென்று வாயைத்திறந்து அக்கினிப் பொறியை குபீல் குபீலென்று வாரி இறைத்துக்கொண்டு சத்துருக்கமகாராசன் எங்கே எங்கேயென்று வரும்போது சத்துருக்க மகாராசன் கண்டு தன்னுடைய நாராயணாஸ்திரத்தை எடுத்து ஸ்ரீராமரைத் துதிசெய்து தூபதீப நைவேத்தியங்களுடன் பூசைசெய்து வில்லிற் சந்திந்துபிரயோகம்பண்ணினா துவும் வில்லைவிட்டு வெளிப்பட்டு அழிவானமம்புவிபரவ ஆவென்று வாயைத் திறந்துக்கொண்டு குசலராசன் விட்ட நாராயணாஸ்திரத்தின்பேரிற் சடாலென்று வந்து பாய்ந்து ஒன்றோடொன்று ஊடுதாக்கி ஆகாயவீதியிற் கிளம்பி ஒன்றுக்கொன்று தோர்வையில்லாமல் யுத்தம்பண்ணுகிறபோது இருவருடைய அஸ்திரத்தினால் தேவர்களுடைய முகங்கருகி அப்போது தேவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள் இது என்ன சுப்பிரமணியரும் சூரபத்மனுடையயுத்தத்திலும் நமக்கிப்படிப்பட்ட

துன்பமும் வந்ததில்லையே நாம் வேடிக்கை பார்க்க வந்தது போதுமென்று மேலண்டத்திற் கோடிப்போனார்க ளப்போது இருவர் விட்ட நாராயணாஸ்திரங்களும் ஒன்றோடொன்றெதிர்த்து யுத்தம்பண்ணத் தலைப்பட்டதுக ளதுகண்டு குசலராஜன் கோபமாகி சக்கரத்தைக் கையிலெடுத்து மந்திராபூதிகளுடன் விட்டுவிட்டானந்த சக்கரத்தாழ்வார் மந்திராபூதியை உட்கொண்டு குசலராசன் கையில் விடுபட்டு தகத்தகாயமாய்ப் பதினாறு கோடி சூரியனைப்போற் பிரகாசித்துக்கொண்டு அண்டங்கள் யாவுங் குலுங்க, அண்டமுகடுவரையிலும் பத்தியெரிய, மூவர்கள்வாட, தேவர்கள் பயந்தோட, ஆலகாலவிஷத்தைப்போற் சீறி எறிய, புகைகளுடன் சிடசிட படபடவென்ற சத்தத்துடன் சத்துருக்க னெங்கேயென்று வரும்போது சத்துருக்க மகாராசன் கண்டு ஏதடா சக்கரமானது மகா மகிமையுடன் வருகுதென்று தன் தமையன் கொடுத்த ஸ்ரீராமபாணமாகிய சக்கரத்தைவிட இதுவும் பூசைகொண்டு தகத்தகாயமாய் இரவு பகலாய்ப் பிரகாசித்துக்கொண்டு கீழேழுலகமும் மேலேழுலோகமும் ஒன்றாயுருவிக்கொண்டு வரும்போது அண்டத்திலுள்ள தேவர்களும் யாவரும் எங்கே நம்முடையபேரில் சக்கரம் வருகிறதோவென்று பயந்தோட, ஆர்ப்பரித்து குசலராசன்விட்ட சக்கரத்தின்பேரில் தடாலென்று மோதி ஒன்றோடொன் றாடு தாக்கி ஆகாயமே கிளம்பி ஒன்றுக்கொன்று தோர்வையில்லாமல் யுத்தம்பண்ணத் தலைப்பட்டது. அதுகண்டு குசலராசன் தன் தாயார்கொடுத்த வேலாயுதத்தை எடுத்து மந்திராபூதியுடன் பூசைசெய்து சத்துருக்கமகாராசனுடைய மார்புக்குலக்கு பார்த்து சத்துருக்கனை செயமடைந்து வாவென்று விட்டுவிட்டானந்த வேலாயுதமானது குசலராசன் கையில் நின்றும் விடுபட்டு ஆகாயம் பூமியுமொன்றாக வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாரியிறைத்து அண்டகோளத்தையும் பற்றி எறிய அண்டமுகடுகிழிய வருவதைச் சத்துருக்க மகாராசன் கண்டு இந்த வேலாயுதம் மகா உக்ரத்துடன் வருகிறதென்று தன் தமயன் கொடுத்த உக்ரவேலை எடுத்து மந்திரபூர்வத்துடனே பூசைகள் செய்து குசலன்விட்ட வேலாயுதத்தை செயம் பண்ணி வாவென்று விட்டுவிட்டார். அந்த வேலாயுதமும் விடுபட்டு அண்டம் படாலென்று வெடிக்கத்தக்கதாக அக்கினிப்பொரிகளெழும்ப கணகணவென் றதிவேகத்துடன் சடாலென்று வந்து குசலராசன் வேலாயுதத்தின்பேரில் விழுந்து

வேகமாய் ஒன்றோடொன் றாடுதாக்கி ஆகாயவீதியிற் கிளம்பி ஒன்றுக்கொன்று தோர்வையில்லாமல் பிரசண்ட யுத்தம்பண்ணத் தலைப்பட்டதுகள்.

அதுகண்டு குசலராசன் கோபமாகி தன் தாயாரைத் துதிபண்ணி உக்கிரவீர சத்தியை எடுத்து மந்திராபூதிகளுடன் பூசைசெய்து சத்துருக்கனிடம்போய் போராடியுத்தஞ்செய்து வாவென்று விட்டுவிட்டா னந்தசத்தியானது விடுபட்டு ஆகாயம் பூமியு மொன்று யுருவுகொண்டு ஆவென்று வாயைத் திறந்து அக்கினிகளைக் குபீல்குபீலென்று கக்கிக்கொண்டு அதிக உக்கிராகாரத்துடன் உக்கிரவீர சத்தியானது வருகிறபோது சத்துருக்கமகாராசன் கண்டு தன் தமையன் கொடுத்த ஸ்ரீராமபாணமாகிய சத்தியை பூசைசெய்து விட்டுவிடவே அச்சத்தியும் அதிக உக்கிராகாரத்துடன் குசலராசன்விட்ட சத்தியின் பேரில் சடாலென்று வந்துமோதி ஒன்றுக்கொன்று யுத்தங்கள் செய்து சத்துருக்கமகாராசன் விட்ட சத்தியை இரண்டு துண்டாக நறுக்கி பூமியிற் றள்ளிப்போட்டு உக்கிரவீர சத்தியானது வரும்போது சத்துருக்கமகாராசனும் வில்லையெடுத்து நிறுத்தி அனேக ராமபாணங்களை வில்லிற் சந்தித்து நிமையோடு நிமை தட்டுமுன்னமே கோடி ராமபாணம் விட்டாரந்த ராமபாணங்களை யெல்லாம் உக்கிரவீர சத்தியானது கபளீகரம் பண்ணிவிட்டு அதிவேகமாய் வருகிறபோது சத்துருக்கமகாராசன் பல்லை நறநறவென்று கடித்து நிமையோடு நிமை தட்டுமுன்னமே தன்னுடைய முப்பத்திரண் டாயுதங்களையும் திவ்திவ்வென்று சத்தியின்பேரில் விட்டுவிட்டாரந்த உக்கிரவீர சத்தியானது முப்பத்திரண்டாயுதங்களையும் கபளீகரம் பண்ணிக்கொண்டு வருகிறபோது சத்துருக்கமகாராஜன் கோபித்து தன் தமையன் கொடுத்த மந்திரவாளையுருவி சத்தியின்பேரில் வீசி வெட்டினார். அந்த வெட்டானது சத்தியின் பேரிற்படவே இரண்டு துண்டாய் பூமியில் விழுந்து உடனே யுருவாகி அக்கினிக் கொழுந்துகளைவிட்டு அதிவேகத்துடன் சத்துருக்க மகாராசனுடைய மார்பிற் சடாலென்று வந்து பாய்ந்து உருகமாட்டாமல் முதுகிலுருகி திருப்பாற்கடலில் ஸ்நானம்பண்ணி குசலராசனுடைய அம்புறாப்பொதியில் வந்தடைந்தது. அப்படி உக்கிரவீரசத்தி மார்பிற்பட்டுருகவே சத்துருக்கமகாராசன் கைசோர்ந்து மெய்சோர்ந்து குருதிகள் பீரிட ஸ்ரீராமபத்திரா ஸ்ரீராமபத்திரா ரகுநந்தனாவென்று தேரின்பேரில் விழுந்து மரணமூர்ச்சை யடைந்தார்.

அப்படி சத்துருக்கமகாராசர் தேரின்பேரில் விழவே, தேவேந்திராதி தேவர்களெல்லாங்கண்டு துக்காக்கிராந்தராய் ஸ்ரீ ராமா ராமாவென்று விசனப்பட்டார்கள். அப்போதுகுசலராசன் மகா சந்தோஷமாய் பிரசண்ட கோதண்டத்தை குமுகுமுவென்று குணத்தொனி பண்ணி குசலராசனுனவன் குகன் காலசித்தன் முப்பதினுயிரம் ராசகுமாரர்களும் ஐயாயிரம் மந்திரி பிரதானிகளு முப்பதினுயிரங்கோடி படைத்தலைவர்களுஞ் சேனதிபதிகளும் ஒன்றாய்க்கூடி குசலராசன் முன்னுக்கு இரதத்தை நடத்தி குசலராசனை வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் இரண்டு இராட்சதாள் ஆகாயமார்க்கத்திலெழும்பி வாய்வேக மனேவேகத்துக் கதிகமான வேகத்துடனே அயோத்தியாபுரியில் வந்து குதித்து சகலரோடுங் கொலுவாயிருக்குங் கொலுமண்டபம்வந்து ஸ்ரீ ராமரைக்கண் டடிபணிந்து மிகுந்த வணக்கத்தோடுஞ் சொல்லுகிறுர்கள்.

ஓ? சுவாமி, அயோத்தியாபுரியிலிருந்து நேர்வடக்காத் திரும்பி பத்மாவதி பட்டணம்போய் அவ்விடத்திலிருந்து சேதுபந்து ராமேஸ்வரம் வந்து அவ்விடத்திலிருந்து நேர் மேற்கிலிருக்கும் வால்மீகர் வனம்போய்ச்சேர்ந்து அஸ்வமானது மேய்ந்துக்கொண்டிருந்தது அதனை அவ்வனத்தில் ஒரு சிறுபிள்ளை லவனென்னப்பட்டவன் பிடித்துக்கட்டி யுத்தஞ் செய்தான். அதுகேட்டு சத்துருக்கமகாராசர்போய் யுத்தம் புரிந்து லவனை மூர்ச்சையாக்கிதம்முடைய இரதத்தின் குத்துக்காலில் பிடித்துக்கட்டிக்கொண்டு வந்துவிட்டார் அந்த சங்கதி அவன் தமயன் குசலன்கேட்டு ஓர்பெரியவில்லைக் கையில்பிடித்துக்கொண்டுவந்து நம்முடைய சேனைகளையெல்லாங் கொன்று மூர்ச்சையடையவுஞ் செய்துவிட்டான். அவனுக்குஎவ்வளவு பிரியவசனஞ் சொன்னுலுங் கேளாமல்சத்துருக்கமகாராசரோடும் எதிர்த்து யுத்தஞ்செய்து அவரையு மூர்ச்சையடையச் செய்துவிட்டான் அவர்களிருவருடைய வடிவும் அழகையும்பார்த்தால் தங்களைப்போலவே யிருக்கிறுர்க ளவர்களுடைய தாய்தந்தையின்பேரைக்கேட்டால் தாயார்பேர் சீதாலட்சுமியென்றும் ஐயர்பேர் வால்மீகரிஷியென்றும் சொல்லுகிறுர்கள். அவர்களைப்பார்த்தால் ஒட்டைச்சாணில்லை அவர்கள் கைவில்லைப் பார்த்தால் ரணரங்கங்கண்ட வில்லைப்போலிருக்கின்றது அவர்களை மடக்கிக்கொண்டு சில இராட்சதர்களும் படைத்தலைவரு

ஞ்சேனுதிபதிகளும் மந்திரிமார்களும் இராசகுமாரர்களும்யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தார்கள். அவர்களு மிந்நேரம் மாண்டுபோயிருப்பார்களென்று தோற்றுகிறதென்ருர்கள்.

அதுகேட்டு ஸ்ரீராமபத்திரசுவாமியுந் தம்பிமார்களும்மந்திரசுமந்திரரும் விபீஷணரும் அனுமார் அங்கதனும் சுக்கிரீவரும் யோசனையானுர்கள். அப்போது ஸ்ரீராமபத்திரசுவாமியாருக்கு தம்முடைய துயரமனைத்தும் நீங்கி பிள்ளைகள் தம்மைப்போலிருக்கிறதென்று சொல்லவே, மிகவும் சந்தோஷமாகி பரதலட்சுமணரே ஜானகியில்லாமல் நம்முடைய யாகத்திற்கு பின்னம்வந்து நேரிடும்போலிருக்கின்றது ஆகையால் ஜானகி வால்மீகருடைய வனத்திற்ருனிருக்கவேணும் அந்த இரண்டு பிள்ளைகளையும் கைப்பிடியாய் பிடித்துவந்தால் பிள்ளைகளாலே ஜானகி உயிருடனிருக்கிறதும் இறந்துபோனதுந்தெரிந்துக் கொள்ளலாமென்ருர். அதற்குபரதலட்சுமணர் சொல்லுகிருர்கள் அண்ணுவே தங்களுடைய திருவுளப்படி யாரை அனுப்புகிறீர்களோ அவர்சென்று சிறுபிள்ளைகளுக்கு உயிர்ச்சேதம் வரவொட்டாமற் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வருகிருேமென்ருர்கள்.

அப்போது ஸ்ரீராமர் இளையபெருமாளாகிய இலட்சுமணரை யழைத்து நம்முடைய எழுபத்திரண்டு வெள்ளம் வானரரையும் பயணப்படுத்தி அனுமார் அங்கதன் இருபத்துநான்குபடைத் தலைவர்களையும் இருபத்தைந்து வெள்ளம் இராட்சதர்களையுங் கூட்டிக்கொண்டுபோய் அந்த சிறுபிள்ளைகள் இரண்டுபேரையும் உயிர்ச்சேதம் வரவொட்டாமற் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாருங்கள் கையிலகப்படாமற் போனுல் அஸ்திரங்களை விட்டாகிலும் மூர்ச்சையாக்கி இரதத்திற் கட்டிக்கொண்டு வாருந்தம்பியென்று வில்லம்புங் கொடுத்தார். அதனை இலட்சுமணர் இரண்டுகரத்தாலும் வாங்கிக் கொண்டு சுவாமியையும் பரதரையுஞ் சேவித்து அவர்களிடத்திலாசீர்வாதம்பெற்று வெளியேபுறப்பட்டார். இலட்சுமணரானவர் அதுகண்டு அனுமார் அங்கதனும் எழுந்திருந்து சுவாமியையும் பரதரையுஞ் சேவித்து நிற்க அவர்கட்கு ஆசீர்வாதஞ்செய்து ஸ்ரீராமபத்திரசுவாமியார் அனுமார் அங்கதன் சாம்புவந்தரையுமழைத்துச் சொல்லுகிருர். நீங்களும் தம்பி இலட்சுமணர் பின்சென்று ஆலசியமில்லாமல் அந்த சிறு

பிள்ளை குசலவர்களுடைய வாய்மொழியைக் கேட்டு கிட்டே நெருங்கி கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டுவந்தால் சீதை இறந்துபோனது மிருக்கிறதுமறிந்துக் கொள்ளலாம் சீதை யில்லாமல் யாகத்திற்கு பின்னம்வந்து நேர்ந்தது சீக்கிரமாய் தண்டுதளத்தைக் கூட்டிக்கொண்டு நடவுங்களென்றார்.

அப்போது சாரதியானவன் இரதத்தைச் சிங்காரித்து ஆசாரவாசலின் முன்பாகக்கொண்டுவந்து நிறுத்தினன் அந்த இரதத்தின்பேரில் இலட்சுமண ரானவரேறி ஆரோகணித்துக்கொண்டார். அனுமார் அங்கதன் இருபத்துநான்குபடைத்தலைவர்களும் இரதமேறி புறப்பட்டார்கள். அவர்கள் புறப்படவே, சரிபந்தி போஜனஞ்செய்யப்பட்ட ஐயாயிரம் இராசகுமாரர்களும் இரதமேறி புறப்பட்டார்கள். அப்போது ராயபேரி, வெங்கலபேரி, ரணபேரி, முரசு, வெண்கலமுரசு, டங்காவணி, முரசு, மத்தளம், ருத்திரவீணை, கர்ணபுரி, தம்பட்டம், கைத்தாளம், குடமுழா, பஞ்சநாதம் என்று சொல்லப்பட்ட முப்பத்திரண்டு மேளவாத்தியங்களும் தாம் தாமென்று முழங்க, அரவக்கொடிபறக்க, அம்புவியிற்சிறக்க, அயோத்தியைவிட்டு ஆறு, மடுவு, குளங்கள் தாண்டி, பாலவனம் வந்தார்கள். அப்போது பலபலவென்று பொழுது விடிந்தது. சூரியபகவானும் இலட்சுமணருடைய யுத்தம் பார்க்க வந்தவரைப்போல உதயமாகவே, அவ்விடத்தில் தண்டுபாளைய மிறங்கினார்கள். அப்போது இலட்சுமணர் தனுசை யனுமார் கையில் கொடுத்து அங்கதன் கையில் உடைவாளைக்கழட்டிக்கொடுத்து தடாகத்திலிறங்கி ஸ்நானஞ்செய்து நித்திய நேம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

அப்போது குசலராசனானவன் வில்லி லனேகபாணங்களைச் சந்தித்து இராட்சதர்கள் பேரிலும் குகன் காலசித்தன் பேரில்விட்டு கொல்லுகிறபோது இராட்சதரும் இராசகுமாரர்களும் மந்திரி பிரதானிகளும் குகன் காலசித்தனுந் தனுசில் அஸ்திரங்களைப்பூட்டி மாரிபொழிவதுபோல சரமாரியாய்குசலராசன்மீது பொழிகிறபோது குசலராசன் அகோரமான அஸ்திரங்களைவிட்டு அவைகளை யறுத்துத்தள்ளி தன் தாயார் கொடுத்த உக்ர வீரசத்தியை யெடுத்து பூசை செய்து இராட்சதாள் இராசகுமாரர்கள் மந்திரி பிரதானிகள் குகன் காலசித்தன் பேரிலும் விட்டுவிட்டான். அந்த உக்ரவீர சத்தியும் வெளிப்பட்டு உக்ராகாரத்துடன் விண்மண்ணதிர ஆவெ

ன்று வாயைத்திறந்து வடவாமுகாக்கினியை வாயிற் குபீல் குபீலென்று கக்கிக்கொண்டு வருகிறபோது காலதத்தன் கண்டு வில்லில் நாராயணஸ்திரத்தையெடுத்து சந்தித்து மந்திர பூர்வகத்துடனே பூசைகள் செய்து குசலராஜன் விட்ட சத்தியின்பேரில் பிரயோகப்படுத்தி சத்தி, வேல், சூலம், காலதெண்டாயுதமெடுத்து ஒன்றின்மே லொன்றாய் மந்திராபூதிகள் செய்து குசலராஜன் விட்ட சத்தியின்பேரில் பிரயோகப்படுத்தி விட்டுவிட்டான். அந்த ஆயுத அஸ்திரங்களும் அண்டம் ஆயிரத்தெட்டும் நடுங்க, ஆலகால விஷத்தைப்போல அக்கினிச் சுவாலைகளை வீசிக்கொண்டு அதிக வேகத்துடன் சடாலென்று சத்தியின்பேரில் வந்து பாய்ந்து யுத்தஞ்செய்தனுகள். அப்போதந்த சத்தியானது அதிக உக்ராகாரத்துடன் ஆயுதாஸ்திரங்களை அடித்துப் பூமியிற் றள்ளிவிட்டு வருகிறபோது இராட்சதாள் விடப்பட்டு அஸ்திரங்களையும் கமளீகரம் பண்ணிவிட்டு ராட்சதாளுடைய மார்பிலும் குகன் காலசித்தன் மார்பிலும்பட்டு முதுகில் வுருகி பால் சமுத்திரத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு குசலராஜனுடைய அம்புறாப்பொதியில் வந்தடைந்தது.

அதுகண்டு குசலராஜன் மகா சந்தோஷத்துடனே கோதண்டத்தைக் கையிலே பிடித்துக்கொண்டு கொஞ்சந்தூரம் நடந்துபோய்ச் சத்துருக்க மகாராஜனுடைய இரதத்தின்பேரிலேறித் தேர்க்காலுடன் கட்டியிருக்கிற லவனுடைய கட்டையவிழ்த்துவிட்டு மூர்ச்சை தெளியவே கண்ணை விழித்து பார்த்து தன் தமயன் மூர்ச்சை தெளிய வைத்தாரென்று தெரிந்தவனுக வெழுந்திருந்து குசலராஜனை சேவித்து நடந்த சமாச்சாரத்தை யெல்லாம் குசலராஜனுக்குச்சொல்லி சத்துருக்க மகாராஜர் மூர்ச்சை யடைந்திருக்கிறதையுங்கண்டு, இரதத்தைவிட்டு இருவருங்கீழே குதித்து ஒருவர்க்கொருவர் சாமர்த்தியத்தை பேசிக்கொண்டு வருகிறபோது அஸ்வமேதக் குதிரையைக் காணுமல் ரணக்களத்தைவிட்டு புன்னைமரச் சோலையில் வருகிறபோது அவ்விடத்தில் ஒருமரத்திற் கட்டிவைத்து 150-இராக்ஷதாள் அக்குதிரைக்கு காவலிருக்கிறதையுங் கண்டு அவ்விடம் வருகிறபோது இராக்ஷதாள் குசலவர்களைக்கண்டு அதிக கோபங்கொண்டு வில்லை வளைத்து அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து குசலவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அடா! சிறுபிள்ளைகளே? எங்கே வருகிறீர்கள் நில்லு நில்

லுங்களென்று சொல்லி அஸ்திரங்களை விடுகின்றபோது அதைக் குசலராஜன் கண்டு தலையை யசைத்து குஞ்சிரிப்புகொண்டு அதிக கோபமாகி வில்லில் 100-திவ்வியாஸ்திரத்தையெடுத்து சந்தித்து விட்டு இராட்சதாள் விடப்பட்ட அஸ்திரங்கள் அனைத்தையுமறுத்து அதனமாக 15-திவ்வியாஸ்திரத்தை விட்டு 150-இராட்சதாளையுஞ் சம்மாரம்பண்ணி அஸ்வமேதக் குதிரையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு குதிரையினுடைய நெற்றியிற் கட்டியிருக்கிற பட்டயத்தை வாசித்துப்பார்த்து தம்பியாகிய லவனை நோக்கிச் சொல்லுகிருன்.

அடா? தம்பி லவனே? நம்முடைய கையிலகப்பட்ட குதிரையை விடுவிக்க சத்துருக்கன் தமயனைப்போலொத்த ராமன் நூறுராமன் வந்தெதிர்த்தாலும் நம்முடைய பாணத்தினலே நன்ருய்ப் பூசைசெய்தனுப்பலாம் நமது கையிற் சிக்கின குதிரையை விடுவித்துக்கொண்டு இராமன் கையினுல் அஸ்வமேதயாகம் பண்ணுகிறது ஸ்ரீமந்நாராயணருக்கே தெரியவரும், இன்னம் அந்த ராமனுக்கு எவ்வளவுசேனைதானிருக்கின்றதோ வருகிற சேனைகளுக்கெல்லாம் உன்கை யஸ்திரமிருக்கையிற் பயமென்னவென்று அஸ்வத்தை கட்டவிழ்த்து அப்பாற்கொண்டுபோய் சுதட்சணமரத்திற் கட்டிவிட்டு சரஸ்வதியாற்றில் ஸ்நானம்பண்ணி நேம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஒருதோப்படியில்வந்து காயதேனுவை நினைக்க அக்காமதேனுவானது வந்து அமுதளிக்க இருவர்களும் புசித்துகைகாலலம்பி சற்றுநேர மிளைப்பாறிக்கொண் டிருந்தார்கள்.

அப்போது இலட்சுமணருடைய தண்டானது மண்ணதிரவிண்ணதிர டமரபேரிகை வாத்தியங்கள் முழங்க, பாலவனத்தைவிட்டு புறப்பட்டு தமது சேனைகளானது ஆரவாரத்துடனே தண்டானது வருகிறபோது குசலவர்கள் அந்த சத்தங்கேட்டு இன்னம் வெகுசேனைத்திரள் வருகிறதுபோல காணுகிறதென்றிவரும் அண்டகோளத்தை யளாவி நின்ற சுதட்சணமரத்திலேறி உச்சிக்கிளையினின்று இலட்சுமணருடையதண்டின் பெருக்கத்தைப் பார்த்தார்கள் அது கங்குகரைகொள்ளாத சேனைகளும் யானைகளும் இரதங்களும் குதிரைகளும் கண்ணுக்கெட்டாத துலையில் வருகிறதைக்கண்டு மரத்தைவிட்டிறங்கி இருவரும் ரணக்களத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறபோது லவனுனவன் குசலராசனுடைய பிரசண்ட

கோதண்டத்தையும் அம்புருப்பொதியையும்பார்த்து சொல்லுகிறார்.

அண்ணாவே இந்த பெரியவில்லும் அம்புருப்பொதியையும் யாரளித்தது சொல்லுமென்று னதுகேட்டு குசலராசன் லவனைப் பார்த்து சொல்லுகிறான் வாருந்தம்பி லவனே, உன்னுடன் சத்துருக்கமகாராசன் யுத்தஞ்செய்து உன்னை மூர்ச்சையடையச்செய்து இரதத்திற் கட்டிக்கொண்டு போனாரென்று வனத்துப் பெண்கள் நமது தாயாருக்கு சொன்னதாய் நம்முடைய தாயார் நான் மறுவனம் வேட்டையாடி வருகிறபோது அழுதுக்கொண்டிருக்கிற சந்தங்கேட்டு சீக்கிரமாயோடிவந்து அம்மா நாங்கள் இருக்கிறபோது இப்படி உனக்கு துக்கமுந் துயரமும் வருவானேனம்மா வென்றேன். அப்போது அம்மாள் வனத்துப் பெண்கள் சொன்னபடி சொல்லி யழுது ஸ்ரீமந்நாராயணர் கைவில்லும் இந்த அஸ்திரமும் அம்புருப் பொதியு மழைப்பித்துக்கொடுத்து உன் தம்பி லவனைப் பிடித்துக் கொண்டுபோனவர்களை சம்மாரஞ்செய்து தம்பியைமீட்டுக்கொண்டுவாமகனேயென்று விடைகொடுத்தனுப்பினார்கள். அந்தப்படியே நான் அம்மாள் திருவாக்கைத்தள்ளாமல் வந்தெதிர்த்த இராசாக்களையுஞ் சம்மாரஞ்செய்து உன்னையு மூர்ச்சை தெளியவைத்தேன் தம்பி லவனே என்றான்.

அதுகேட்டு லவனனவன் நம்முடைய வில் முறிந்து போயிற்றே எதிரியினுடையதண்டானல் நெருங்கி வந்துவிட்டதே நமதுகையில் வில்லில்லாமற்போயிற்றே ஆகிலும்பெரிதல்ல நமக்கு ஐயர்சொன்ன சூரியமந்திரமிருக்கின்றதல்லவா இப்போது அந்த மந்திரபலனை யறியவேண்டுமென்று தடாகக்கரையில் வந்துநின்று சூரியநமஸ்காரஞ்செய்து சூரியமந்திரத்தை யுச்சாடனஞ்செய்யவே, சூரியபகவானும் லவனுடைய மந்திரத்திலந்நிய கோரிக்கையறிந்து லவன்முன் பிரசன்னமானார். அப்படி சூரியபகவான் பிரசன்னமாகவே லவனனவன் அதிக சந்தோஷத்துடனவரை நமஸ்கரித்தான். அந்த சூரியபகவான் லவனை ஆசீர்வதித்து தம்மை துதிசெய்து வருந்தியழைப்பித்தகாரியத்தை சீக்கிரமாய்சொல்லுந் தம்பியென்றார்.

அப்போது லவனனவன்மிகவும் வணக்கத்துடன்சுவாமி அடியேனுக்கு ஒடியாத வில்லும் அம்புருத்தூணியும் மாளா

த அஸ்திரமுந் தந்தருளவேண்டுமென்று கந்தமுருஞ் சுந்தி ரவடியில் சேவிக்க, சூரியபகவான் லவன் மனதில் நினைத்த படியே நம்முடைய வில்லம்புருப்பொதியுங் கொடுத்து ஜெய மடையக் கடவதென்று ஆசீர்வாதஞ் செய்தனர். அதனைப் பெற்ற லவனனவன் சந்தோஷமாகி முதுகில் அம்புருப் பொதியுங்கட்டி கையில் வில்லைப்பிடித்துக்கொண்டு தடாகக் கரையைவிட்டு வெளியில்வந்து தமையனுக்கு வில்லையும் அம் புருப்பொதியையுங் காண்பித்து சந்தோஷமாக பேசிக்கொண் டிருந்தார்கள்.

அப்போது இலட்சுமணருடைய தண்டானது சரஸ்வதி யாரு தாண்டி ரணக்களம் வந்து இலட்சுமணர், அனுமரர், அங்கதன், சாம்புவந்தன், நீலன், குமுதன், மத்தகன், மக் கரசன், கெந்தபிரலன், உல்முகன், கும்பன், சாம்பன், கேசரி, இடும்பன், பரதன், எமுகன், கோமுகன், தும்யசாதனன், துற்சாவலி, முகன், மநதுவாதி, அகம்பன், அரக்கன், அலு வன், இப்படிசொல்லப்பட்ட இருபத்துநாலு படைத்தலைவர் களும், எழுபத்திரண்டுவெள்ளம் இராட்சதாளும், ஐயாயிரம் இராஜகுமாரர்களுங் குசலவர்களைக் கண்டு இந்த சிறுபிள்ளை களாலே இவ்வளவு சேனைகள் மாண்டுபோயிற்றென்று மனங் கலங்கி எல்லாம் ஸ்ரீராமருடைய கிருபை என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு ரணக்களம்வந்து சேனைகளைப் பவுஞ் சிட்டு நிறுத்தி இலட்சுமணரையும் அனுமாரையும் ஐயாயிரம் இராசகுமாரர்களை நடுவணியில் நிறுத்தி அங்கதனையும் சாம்பு வந்தரையும் அதற்கு முன்னணியில்நிறுத்தி இருபத்தைந்து வெள்ளம் இராட்சதாளையும் இருபத்திநாலாயிரங்கோடி ராட் சதப்படைத் தலைவர்களையும் அதற்கு முன்னணியில் நிறுத்தி தான் முன்னின்று இராட்சதபேரிகை யறைவித்தான் வான ராள் தண்டிற்கு சேனதிபதியான நீலனனவன் அந்தச் சத் தங் குசலராசன் கேட்டு மகா சந்தோஷத்துடன் லவனைப் பார்த்து குசலராஜன் சொல்லலுற்றான்.

கேளுந்தம்பி! லவனே? இந்த தண்டில்வந்திருக்கிற பிர முகாள்பேரில் நான் யுத்தஞ் செய்கிறேன் நீ என்னைவிட்டுப் பிரியாமல் நின்றுகொண்டே சேனைகள்பேரில் யுத்தம்பண்ணு இன்றையதினம் நல்ல யுத்தம்போற் காண்கின்றது சாக்கிர தையாயிருவென்று உத்தரவுசெய்தான் அவ்வாறே லவனும்

வில்லையதிக சீக்கிரத்தில் வளைத்து நாணிபிகிந்து கையிற்பிடித்தான் அதுகண்டு குசலராஜன் அட்டகாசஞ்செய்து கோதண்டத்தை அண்டகடாகம் படீலென்று வெடிக்க, அண்டத்திலுள்ள தேவர்களும் கிலிபிடிக்க, நக்ஷத்திரங்கள் பலபலவென்றுதிர, பூமியானது நடுங்க, ஆதிசேஷன் ரத்தங்களை கக்கிக்கொண்டொடுங்க, அஷ்டகெஜங்கள் வீறிட, அஷ்டதிக்கும் அசைந்தாட, இராக்ஷதாளை வளைத்து நாணோசை கொண்டான். அதை இராக்ஷதாள்கேட்டு திடுக்கிட்டேங்கி, சேனாதிபதியான நீலன் சாரதியை யெச்சரித்து இரதத்தை குசலராஜன் முன்னுக்குச் செலுத்தி நீயார் உன் பேரென்ன சொல்லென்றான்.

சேனாதிபதியான நீலன்பேரில் குசலனும் லவனும்
யுத்தம் புரிதல்.

விருத்தம்.

விதிமுதலோர்புகழ்கானி லுறைந்திடுஞ்சீதை
சதிருடுதந்ததெனயரு மாசியத்தோனும்
துதிபெருசபைநினைந்தொரு நிழல்சொற்சேனா
பதியெனுநீலனுறம்கொடு சமர்செயவந்தனனே.

அவ்வார்த்தையைக் கேட்ட குசலராசனனவன் தம்பியாகிய லவனைப்பார்த்துச் சொல்லுகிறான். அடா! தம்பி லவனே குரங்கு சொன்ன வார்த்தையைக் கேட்டாயோ குரங்குக்கோவில்லம்பில்லை இராசாக்களைப்போல ரதமேறிக்கொண்டு நம்மை சட்டைபண்ணுமல் நம்முடைய தாய் தந்தை பேரையும் கேழ்க்கின்றது காட்டில் வாசஞ்செய்யுங் குரங்கு நம்முடைய பாஷையை கற்றுக்கொண்டு நமதுபேரிற் போர்புரிய தேரேறி நேராய் வந்துவிட்டது. இந்த குரங்குக்கு நம்முடைய தாய் தந்தை பேரையோ சொல்லுகிறதென்றான். அதுகேட்டு லவனனவன் தமையனைப் பார்த்துச் சொல்லுகிறான். அண்ணாவே? காட்டுக்கிழங்கை பிடுங்கிக் கடித்து சுனை நீரைக்குடித்து பாரைமீதுஞ் செடிமீதும் உறங்கிக்கொண்டிருக்கும் வானரத்தை இராமன் பிடித்து கும்புகூட்டி சேவகத்திற்கு வைத்துக்கொண்டவனுகவேணும். இந்தக் குரங்குகள் நம்மை என்ன செய்யக்கூடும். இந்தக் குரங்கை ஒரு பொருட்டாக யெண்ணி நாம் தாய் தந்தை பேரைச் சொல்லுகிறதோ முன்பின் பாரா

மல் பாணங்களைவிட்டு யுத்தஞ்செய்து வெற்றியடைந்து நம்முடைய தாயாரிடஞ் சலுதியிற்போய்ச் சேரவேணும் என்ருன் லவனைவன். அப்படிகூறிய லவனுடைய வார்த்தையை குசலராஜன்கேட்டு முன்பின் யோசனைபண்ணுமல் சிறுபிள்ளை புத்தியானபடியால் அம்புருப்பொதியிற் கையைவைத்து நான்கு திவ்வியாஸ்திரங்களையெடுத்து கோதண்டத்திற் சந்தித்துக்கொண்டு நீலனைப்பார்த்து அடா நீலனே? நீ என்னவார்த்தை சொல்லுகிருய் இராமன் உப்பைத்தின்று இராமனுக்கு எதிரிகள் வந்து வளைத்துக்கொண்டவேளையில் அவர்களுக்கு நீங்கள் பயந்து பிரிய வசனஞ் சொல்லி உயிர் தப்பித்துக்கொள்ள என் தாய் தந்தைபேரை கேழ்க்கவந்தாயோ அப்படி தாய் தந்தையர்பேரை எனக்குச் சமதையான மனிதருக்கல்லவோ நான் சொல்லவேண்டியது காட்டில் வாசம் பண்ணப்பட்ட குரங்குக்கோ நாம் சொல்லுகிறது அடா குரங்கேயென்று அதிக கோபாக்கினியுடன் நான்கு திவ்வியாஸ்திரங்களை விடுபட்டு தகத்தகாயமாய் தங்கக் கட்டுகளுடன் பிண்டபட்சியிறகுபூண்டு ஒன்ருேடொன் ருராய்ந்துக்கொண்டு நெருப்புப் பொறிபறக்க அதிவேகத்துடன் வருகின்றபோது, நீலனைவன் கண்டு ஏதடா சிறுபிள்ளை புத்தியைக்காண்பித்தாய் பார்த்தையோ வென்று அதிக கோபங்கொண்டு இரதத்தை விட்டு குதித்து ஆகாயமளாவிய ஒரு ஆலவிருக்ஷத்தின்மேல் பாய்ந்து மடமடவென்று வேருடன்பிடுங்கி அடியும் நுனியும்தரித்துப்போட்டு தண்டாயுதம்போற் பிடித்து காகரவென்று குசலவாள்பேரில்வருகிறதிவ்வியாஸ்திரங்களைத் தடாய்த்துக்கொள்ளவே, குசலராசன் லவனைப்பார்த்து ஏதடா குரங்கு மகா பலவான்போல் காண்கின்றதென்று கோபங்கொண்டு இராட்சத சேனைகள்பேரில் லவனும் நீலன்பேரில் குசலராசனும் மூனைந்து யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அப்போது 25-வெள்ளம் இராட்சதாளும், இருபத்து நாலாயிரங்கோடிபடைத்தலைவர்களும் வில்லைவளைத்து அநேக அஸ்திரங்களைவாரிக் குசலவர்கள்பேரில் பாணம் விடுகிறபோது இருபத்தைந்து வெள்ளம் இராக்ஷதர்களும், இருபத்து நாலாயிரங்கோடி படைத்தலைவர்களும் எத்தனை பாணம் விடவேணுமோ அத்தனைபாணமென்று கணக்கறிந்துக் கொள்ளுங்கள் ஒரு வருஷகாலத்தில் ஈசானியமூலையிலிருந்து மேகமானது விடுபட்டு இடிமின்னல் பெருங்காற்றுடன் குமுகுமுவென்று சந்தித்து சந்து பிசகா

மல் சரவருஷம் ஒண்ணரை நாழிகை பரியந்தம் பொழிந்தா லெப்படியிருக்குமோ அப்படியாக இராட்சதாள் ஓய்வு ஒழிச்ச லில்லாமல் குசலவர்கள்பேரிற் பொழிகிறபோது குசலவர்கள் மிதமில்லாத பாணங்களை இராட்சதாள் விடப்பட்ட அஸ் திரங்களின்மீதில் பிரயோகஞ்செய்து விட்டறுத்து அதிகமாக ஆயிரந் திவ்வியாஸ்திரங்களையெடுத்து வில்லிற் சந்தித்துப் பிரயோகப்படுத்தினார்கள்.

அந்த திவ்வியாஸ்திரங்களானது வில்லில் விடுபட்டு ஒன்றோடொன்றுறாய்ந்து நெருப்புப்பொறியை கக்கிக்கொ ண்டு அதிவேகமாய் வருகிறபோது இராட்சதாளநேகபாணங் களை மழைபொழிவதுபோல் குசலவர்கள்விட்ட பாணஸ்திர த்தின்பேரில் விட்டார்கள் அதுவந்து பாய்ந்து குசலவர்கள் விட்ட பாணங்களினால் அடிபட்டு பூமியில் விழுந்துபோயி ற்று அப்போது குசலவர்களுடைய அஸ்திரமானது இராட் சதாள் அஸ்திரங்களை எல்லாம் பரித்துக்கொண்டு இராட்சத கூட்டங்களில் விழுந்து அவர்களுடைய சிரசை கரகரவென் று பூமியிலறுத்துத் தள்ளிவிட்டது.

அதுகண்டு நீலனானவன் கண்களிரண்டுஞ் செவ்வானம் போற் சிவக்க, காதுகளிரண்டிலும் புகைகளெழும்ப, அதிக கோபாக்கினியுடன் கையிற்பிடித்திருந்த ஆலவிருட்சத்தை கிறுகிறென்று சுழட்டிக் குசலராசன் வில்லைப்பார்த்து விட் டெறிந்தான். அந்த விருட்சமானது சுழன்றுக்கொண்டுவரு கிறபோது குசலராசன் கண்டு நான்கு நாராசபாணத்தை வில் லிற் சந்தித்து பிரயோகப்படுத்தி வருகிற ஆலவிருட்சத்தை நூறுபத்தலாகப் பிளந்தெறிந்துப்போட்டான். அதுபோகவே நீலனானவன் கோபமாகி இறந்துகிடக்கிற ராட்சதாளு டைய இருப்புத் தண்டாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஓட்டமாயோடிவருகின்றபோது குசலராசன் பத்து திவ்வி யாஸ்திரத்தைவிட்டு நீலன் கையில் பிடித்திருந்த தண்டாயுத த்தையும் பஸ்மீகரம் பண்ணிவிட்டான் பின்னும் நீலனான வன் வால்மீகருடைய வனத்தில் அண்டகோளகைமட்டும் வளர்ந்திருக்கின்ற ஆலவிருட்சங்களையும் அகில் விருட்சங் களையும் தேக்கு விருட்சங்களையும் மடமடவென்று பிடிங்கி குசலராசன்பேரில் விட்டெறிந்தான். அதுகள் புறப்படவே குசலராசன்கண்டு ஏதடா குரங்கானால் நாம்விடப்பட்டபாண ங்களையு மறுத்துத்தள்ளி பலமான யுத்தம்பண்ணுகின்றது

இந்தக் குரங்கை கொல்லவேணுமென்று அநேக பாணங்களை நீலன்பேரில் விடுத்துச் சரீரத்தைச் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான் அதனால் நீலனுடைய சரீரங்களில் துளைப்பட்டு இரத்தங்கள் பீறிட்டு தாரைதாரையாய்வடியப் பின்னுந் தைரியம்விடாமல் மலைகளை எடுத்துவந்து போடத்தலைப்பட்டான் அம்மலைகளை எல்லாம் குசல னஸ்திரங்களினாற் பொடிசெய்துவிட்டான்.

அதுகண்டு நீலனானவன் ஏதடா நாம் ராவண கும்பகர்னன் இந்திரசித்து அதிகாயன் கும்பனிகும்பன் பவர்னன் என்றுசொல்லப்பட்ட அதிவீரசூர பராக்கிரமமுள்ள ராட்சத சிரேஷ்டர்களுடன் இரண்டாயிரவெள்ளமிராட்சதர்களுடன் யுத்தஞ்செய்தோம் அவர்களும் வரம்பெற்ற அஸ்திரங்களை எடுத்துவிட்டார்கள் அவரவர்கள்விட்ட அஸ்திரத்தினுடையசுறுக்கு நமக்கிப்படி தைத்து உதிரம் பீறிட்டோடினதுமில்லை அந்த குசலனுடைய அஸ்திரத்தினுடைய சுறுக்கு சரீரமெல்லாந் துளைபட்டு ரத்தங்கள் பீறிட்டது பார்த்தாயோவென்று கோபாவேசனாகிசிவ்வென்று ஆகாயமார்க்கமாகக்கிளம்பி குசலராசனுடைய வில்லின்பேரில்வந்து குதித்தானப்படி குதித்த வானரசேனாதிபதியான நீலனை குசலராசனானவன் தனது வில்லினாலே கட்டின மாத்திரத்தில் நூறு யோசனை பதிங்காதவழி தூரத்திற்போய் விழுந்தான்.

அதுகண்டு குசலராஜன் நகைபுரிந்து லவனைப் பார்த்து அடா! தம்பி லவனே? குரங்கினுடைய சேஷ்டை போகாமற் போய்விட்டது இப்படி துஷ்டத்தனமுள்ள குரங்குகள் எத்தனை குரங்குகள் வந்திருக்கின்றதோ தெரியவராதென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது ராட்சதாளுடைய படைத்தலைவர்கள் குசலவர்களை வளைத்து உள்ளே போட்டுக்கொண்டு யுத்தஞ் செய்கையில் சேனாதிபதியான நீலனானவன் நூறு யோசனை பதிங்காதவழியிற் போய்த் திரும்பி அதிவேகமாய்ப் புறப்பட்டு குசலராசனைக் கொல்லவேணுமென்று பிரமாண்டகெதியா யிருக்கப்பட்ட பர்வதத்தை தூக்கிக்கொண்டுவந்து குசலராசனைப் பார்த்துச் சொல்லுகிறான். அடா! குசலனே? என் கையிலிருக்கிற பர்வதத்தை பார்த்தாயோ இந்த பர்வதத்தைவிட்டு உன்னைக் கொன்றுபோடுவேன் அப்படி வராமுன்னம் அஸ்வத்தைவிட்டு எங்கள் எஜமானாகிய இலட்சுமணப் பெருமாளை வணங்கிப் பிழைத்தாலுன்னுயிர்

தப்பித் தாயுடன் பிள்ளையாய் போய்ச்சேர்வாய் இல்லையென்றால் என்கையிலிருக்கிற பர்வதத்தைவிட்டு கொன்றுபோடுவேன் பாரடா குசலனே என்றான்.

அதுகேட்டு குசலராஜன் கடிந்துசொல்லுகிறான். அடா! வானரனே? நல்லவசனங்கூறினாய், உன்னுடைய சேவகமும் பலமுமென்னுடைய கோதண்டத்தில் முன்னளவிற் கண்டுவிட்டேன். அப்போதில்லாத பலாபலன் இப்போதிந்த மலையினளவில் உனக்கு வந்துவிட்டதோ, நீ போடப்பட்ட மலையை எதோபோடு பார்ப்போமென்றானப்படிச் சொன்ன குசலராசனுடைய வார்த்தையை நீலன்கேட்டு கடினகோபமுண்டாகி கையிலிருந்த பர்வதத்தை விட்டெறிந்தான். அந்த பர்வதமானது சுழன்று வருவதைக் குசலராசன் கண்டு சீக்கிரமாய் தன்னுடைய வில்லிலனேக திவ்வியாஸ்திரங்களைச் சந்தித்து வருகிற பர்வதத்தின்பேரிற் பிரயோகம்பண்ணினான். அந்த திவ்வியாஸ்திரங்களும் விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரி யிறைத்துக்கொண்டுவந்து அப்பருவத்தை தும்சம் பண்ணியும் அப்பாணத்தின் வேகம் அடங்காமல் நீலனுடைய நெஞ்சுக்குழியிற்பட்டுப் பிடரியிலுருகிப்போய்விட்டது அப்போது நீலனானவன் ஸ்ரீமந் நாராயணரை நினைத்து கண்ணீரானது இருபக்கத்திலும் ஆறாயோடவிட்டு பிராணனைவிட்டான்.

அப்போது இராட்சதப் படைத்தலைவர்கள் சினங்கொண்டு இந்திரபாணம், சந்திரபாணம், மேகபாணம், நாகபாணம் என்று சொல்லப்பட்ட பாணங்களை மிதமில்லாமற் குசலராசன்பேரி லமோகமாய்க் குடங்கொண்டு பொழிவதுபோல பொழியத் தலைப்பட்டார்கள். அந்த பாணங்களும் வில்லைவிடுபட்டு ஒன்றின்மேலொன்றாய்ச் சடசடவென்கிற தொனிகளுடனே காட்டுத்தீயைப்போல கனகனவென் றெரிந்துக்கொண்டு வேகமாக வருகிறபோது குசலராசன்கண்டு வாய்வாஸ்திரம், வருணாஸ்திரம், பிரம்மாஸ்திரம், அக்கினியாஸ்திரம், சூரியாஸ்திரம், எமனாஸ்திரம் என்று சொல்லப்பட்ட அஸ்திரங்களை யெடுதது வில்லிற்றொடுத்து பிரயோகம்பண்ணினான். அதுகள் ஒன்று-பத்து-நூறு-ஆயிரமாகியவடவாமுகாக்கினிக்கு சமதையாய் நெருப்புகளைவாரி யிறைத்துக்கொண்டு படபடவென்கிறசத்தத்துடன் இரைச்சலிட்டுக்கொண்டு இராட்சதப் படைத்தலைவர்கள்விட்ட பாணங்களை குசலராசன் முன்போகவொட்டாமல்வருகிறபாணங்களையெல்லாம் அறுத்துத்தள்ளிவிட்டு இராட்சதப் படைத்தலைவர்கள் பிடித்திருந்த

வில்லையு மார்பிலணிந்தகவசங்களையுமறுத்துவிட்டது. அது கண்டு இராட்சதப் படைத்தலைவர்கள் மறுவில்லெடுத்து மகா உக்ராகாரத்துடன் காளியாஸ்திரம், பர்வதாஸ்திரம், நாராயணாஸ்திரம், சிங்கமுகாஸ்திரம், சண்முகாஸ்திரம், கமலாஸ்திரம், கருடாஸ்திரமென்று சொல்லப்பட்ட அஸ்திரங்களை வில்லிற் சந்தித்து மந்திராபூதிகள்செய்து குசலராசனுடைய மார்பிற்கும், தோளிற்கும், கண்டகத்திற்கும், லக்குபார்த்து பிரயோகம்பண்ணிவிட்டார்கள்.

அப்படி இருபத்துநாலாயிரம்கோடி இராட்சதப்படைத் தலைவர்களும் விட்ட பாணங்களானது அண்டரண்ட புவனங்களுமதிர ஆவென்று வாயைத்திறந்துகொண்டு அக்கினியைக் குபீல் குபீலென்று கக்கிக்கொண்டு குசலராசன் எங்கே எங்கேயென்று தேடிக்கொண்டு வருகிறபோது குசலராசன் கண்டு மகா கோபங்கொண்டு தன் தாயார்கொடுத்த நாராயணாஸ்திரத்தை எடுத்து பூசைசெய்து வில்லிற் சந்தித்து பிரயோகம் பண்ணினன். அந்த நாராயணாஸ்திரமானது வில்லில் விடுபட்டு அண்டபகிரண்டம் ஆயிரத்தெட்டண்டங்களும் குலுங்க, அண்டத்திலுள்ள தேவர்களும் பயந்தோட, அண்டகோளகையுந் திகுதிகென்று பத்திஎறிய, அண்டச்சுவர்களும் வெடிக்க, ஆங்கார ஓங்காரத்துடன் அநேகமாயிர ரூபங்கொண்டு ராக்ஷதப்படைத்தலைவர்விட்ட அஸ்திரங்களுக்கெல்லாம் பதிலஸ்திரங்களாக ஒன்றுக்கொன்று வூடுதாக்கி கமளீகரம் பண்ணிவிட்டு வில்லம்புபிடித்த இரண்டாயிரம்கோடி இராட்சதப்படைத்தலைவர்களையும் இருபத்தையாயிரவெள்ளம் பரிசேனைகளையும் கரகரவென் றறுத்துத்தள்ளி திருப்பாற்கடலில் ஸ்நானம்பண்ணி குசலராசனுடைய அம்புருப்பொதியில் வந்தடைந்தது.

அப்படி 25000-வெள்ளம் யானை தேர் பரி சேனைகளும் 24000-கோடிபடைத்தலைவர்களும் மாண்டு உதிரவெள்ளமானது 2-பனைமரமுயரம் ஆறுபோலோடத்தலைப்பட்டது. அந்த உதிரவெள்ளமானது ஆனை தேர் பரி சேனைகள் புரட்டிக்கொண்டுபோகையில் தலையில்லாத மூண்டங்கள் எழுந்து கூத்தாட, அந்த முண்டங்கள்பேரிலே கழுகுகள் கூத்தாடவும், டாகினி, ஜாகினி, பூதப்பிசாசுகளும் பிணங்களைபிடிங்கிப்புசித்து இராட்சதர்களுடைய டமாரபேரிகைகளை கழுத்தில் மாட்டிக்கொண்டு உதிரவெள்ளத்திலோடுகிறதையும் இராட்சத சேனை

களும் படைத்தலைவர்களு மாண்டு தலைமாடு கால்மாடு தெரியாமல் விழுந்து கிடப்பதைக் கண்ட வானராளும் வானரப் படைத் தலைவர்களும் பேசிக்கொள்ளுகிறார்கள். அப்பப்பா, இவனுடைய கரவேக சரவேகந்தானென்ன இவன் வில்லின் பெருமைதானென்ன இவன் புஜபல பராக்ரமந்தா னென்ன இவனோ ஒட்டைச்சாணில்லை இவன் பிடித்திருக்கிற வில்லைப் பார்க்கச்சே கெற்பங் கலங்குகிறது நாமோ இராவணன், கும்பனிகும்பன், அதிகாயன், கும்பகர்ணன் முதலான இராட்சத சிரேஷ்டர்களோடு யுத்தஞ்செய்து செயங்கொண்டோம் அந்த கூட்டத்திலேயும் இப்படிப்பட்ட கரவேக சரவேகத்துடனே பாணந் தொடுப்பாரையுங் காணோம். இவன் மூன் சாம்புவந்தர் எப்படி நிர்வகிக்கப் போகிறாரென்று யோசனையானார்களந்தசமயத்தில் 25-வெள்ளம் வானராளும் 24000-படைத் தலைவர்களும் மலை வனங்களையும் விருட்சங்களையும் பிடுங்கிக் கொண்டு வந்து குசலவர்கள்பேரில் யுத்தஞ் செய்துக் கொண்டிருக்கையில், இரத்தமழை பெய்தது. அதனை இலட்சுமணர் அங்கதன் சாம்புவந்தர் முதலானவர்களுங்கண்டு திடுக்கிட்டார்களப்போது லட்சுமணரானவர் அனுமாரைப் பார்த்துச் சொல்லுகிறார். வாரும் அனுமாரே? நாம் அனேக யுத்தங்களில் கைகண்டிருக்கிறோம் அந்த யுத்தங்களில் நமக்கிப்படிக் கொத்த அவசகுனங் கண்டதில்லை இப்போதிந்த குசலவர்கள் யுத்தத்தில் நமக்கு துன்பத்துக் கடையாளமான சகுனங் காணவேண்டியதென்ன சொல்லும் அனுமாரே யென்றார். அதற்காஞ்சநேயர் சொல்லுகிறார் வாரும் இளையபெருமாளே? சதகண்டராவணன் முதலான மூவருடைய யுத்தத்திலேயும் நம்முடைய சேனைகள்பேரில் இப்படிக்கொத்த இரத்த மழை பெய்ந்ததில்லை மகாலட்சுமி இல்லாதபடியால் ஸ்ரீராமருடைய யாகத்திற்கு பின்னம் வந்ததென்று திரிகாலங்களையும் உணர்ந்த அனுமார் சொன்னார்.

அதைக்கேட்ட இலட்சுமணர் பதிலுத்தரவுசொல்லாமல் மௌனமா யிருந்துவிட்டார். அப்போது குசலராஜனானவன் பிரசண்ட கோதண்டத்தில் நாராசபாணங்களை மிதமில்லாமற் பிரயோகம் பண்ணிவிட்டா னந்தபாணங்களும் வில்லில் விடுபட்டு 10-100-பதினாயிரம்-நூறாயிரம்-கோடி-சங்கம்-மகாசங்கமென்று சொல்லப்பட்ட கணக்கில்லாத பாணங்கள் பிறந்து நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வந்து வானரப் படைகளின்

மீது விழுந்து கொல்லத் தலைப்பட்டது. அப்போது வானரர்கள் கால்வேறு, கைவேறு, தலைவேறு, உடல்வேறு, சதைவேறு, எலும்பு வேருக விழுந்து உதிரவெள்ளம் ஓடிற்று. இப்படி வானரரள் மாண்டுபோகவே, குமுதன், சாம்பன், உல்மூகன், கெந்தமாதனன், அரக்கன், மந்துவால்கேசரி அகம்பனென் 8-வானரப்படைத் தலைவர்களும் மகா கோபத்துடனே பேருக்கொரு மலையைப் பிடுங்கி குசலன் தலையை உடைக்கிறேமென்று குசலவர்கள்முன் னின்றுக்கொண்டு அடா சிறுபிள்ளாய் பதராதே, ஒரு வசனஞ் சொல்கிறேம் கேள். நீமகா சிறுபிள்ளை உன்னேடு யுத்தம்பண்ண எங்களுக்கு ஞாயமில்லை ஆகையால் எங்களஸ்வத்தை விட்டு லட்சுமணப் பெருமாளை வணங்கி சேவித்துக் கொண்டால் தாயுடன் பிள்ளையாய்ப் போய்ச் சேருவீர்களென்று பிரிய வசனத்தோடு சொன்னர்களதனைக்கேட்ட குசலராசன் அந்த 8-வானரப்படைத் தலைவரைப்பார்த்து குலுங்க நகைத்து ஒரு வசனம் சொல்லுகிருனடா வானரங்களே? நல்ல தந்திரஞ்சொல்லி தப்பித்துக் கொண்டு போகவந்தீர்கள் நீங்களும் ஒரு சேவகரென்று சேவகத்தில் வைத்துக்கொண்டு இராமன் உங்களிலும் பலவானுயிருப்பானே நீங்கள் தப்பித்துக்கொண்டு போகிறேமென்ருலும் நான் விடுவேனென்று நம்பவேண்டாம் நீங்கள் ஒன்ருக் கூடிவந்து சபதவார்த்தையை பேசிக்கொண்டு மலையைப் போடுகிறேமென்றீர்கள் அந்த மலையை எதோ போடுங்கள் வானரங்களே யென்ருன்.

அப்படிகூறிய குசலராசனுடைய வார்த்தையைக் கேட்ட வானரவீரர்கள் மகாகோபங்கொண்டு அட்டகாசஞ் செய்து குசலவன்பேரில் தங்கள் கையிலிருந்த மலைகளை விட்டெறிந்து விட்டு ஆகாயமளாவிய விருட்சங்களைப்பிடுங்கி அடியும் நுனியுங்கொய்து நடுத்துணுக்கையை தண்டாயுதம்போலே கையில்பிடித்துக்கொண்டு வருகுமுன்னமே கிறுகிறுவென்று சுழன்றுவரும் மலைகளைக் குசலராஜன் பார்த்து 8-திவ்வியாஸ்திரமெடுத்து விடுத்து வருகிற மலையை தூளிதப்படச் செய்து விட்டு வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து வருகிற வானரவீரர்கள் பேரிலே ஐப்பசி கார்த்திகை மாதத்தில் ஈசானிய மூலையிலிருந்து விடுபட்டு இடிமின்னல் குமுறலுடன் மழைபெய்தால் எப்படியோ, அப்படிபோலே பாணங்களைப் பொழிந்துவிட்டா னதுகளுங் காலகோட்டி விஷம்போல சீறிக்

கொண்டு வந்து வானரப்படைத் தலைவர் கையிலிருந்த தண்டாயுதத்தையும் பொடியாக்கிவிட்டு அவர்கள்பேரிலுஞ் சுருக்குசுருக்கென்று தைத்து குறுதிகள் பீறிட்டோடச் செய்தது அப்போது வானரவீரர்கள் அதுகளையெல்லா மூதறிப்போட்டு இறந்து கிடக்கிற இராட்சதாளுடைய கத்திகேடயங்களை எடுத்துக்கொண்டு வந்து முன்கந்து பின்கந்து முப்பத்திரண்டு கந்து பாய்ந்து குசலராசனை வெட்டவேணுமென்று ஓடிவரும்போது குசலராசன் கண்டு நாலிரண்டெட்டு கண்டங்கத்திரி பாணமெடுத்து விடுத்து கத்தி கேடயம் பிடித்திருந்த கையை அறுத்துத்தள்ளினான். அவர் கைகள் பூமியில் விழவே 8-வானரவீரரும் கோபங்கொண்டவராய் எழும்பி குசலராசனை உதைத்து கொல்லவேணுமென்று வருகிறதை குசலராசன் கண்டு இவர்களுடைய சாமர்த்தியந்தானென்ன கையற்றுஞ் சரீரங்களெல்லாந் துளைப்பட்டுஞ் சாகாதிருக்கிறார்கள். நல்லதாகட்டுமென்று நாலிரண்டெட்டு அர்த்த சந்திராஸ்திரமெடுத்துவிட்டு வானரப்படைத் தலைவர்கள் சிரசுகளையறுத்துத்தள்ளினான். அவர்கள் மாண்டுபோகவே வானரதண்டில் கூக்குரலெழும்பத் தலைப்பட்டது.

அப்போது இடும்பன், பரசன், திருமுகன், மந்தகன், மக்கரன், கும்பன், சரவலி, துன்முகன் முதலான படைத்தலைவர்களும் மகா கோபத்துடன் கடுகடுத்து பெருக்கொருவிருட்சங்களை பிடுங்கிக்கொண்டு அடியும் நுனியுந் தரித்துவிட்டுகையில் பிடித்துக்கொண்டு ஓடிவரும்போது குசலராசன் கண்டு அதிக கோபங்கொண்டு வில்லை நிறுத்தி அநேகபாணங்களைச் சந்தித்து மாரிசொரிவதுபோல் ஓய்வில்லாமல் ஒரு ஜாமபரியந்தம் சரமாரியாய் பொழிகிறபோது வானரப்படைத் தலைவருடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைபட்டுகுருதிகள் தாரைதாரையாய் பீறிட்டோடி வழிந்து பூமியில் விழுந்தது. அது எத்தன்மையா யிருந்ததென்றால், முன்னால்இந்திரசித்தனானவன் ராவண சம்மாரகாலத்தில் 4-நாள் யுத்தத்தில் 24-படைத்தலைவர்பேரிலும் மூனேந்து பாணங்களைவிட்டு சரீரங்களைச் சல்லடைக்கண்களாக எப்படி துளைத்துவிட்டானே அத்தன்மையா யிருந்தது. மேலும் குசலராசனுடைய அஸ்திரங்களினால் வுதையுண்ட வானரப்படைத் தலைவர்களுடைய சரீரங்கள் தளர்ந்து கைகால் ஓய்ந்து நடக்கச் சீவனற்று சுவாசமின்றி ஸ்ரீராமா ரகுநந்தனாவென்று வாய்விட்டலறி சாவுக்குச் சமதையானவர்களாய் பூமியில் விழுந்து

மூர்ச்சை யடைந்தார்கள். அதுகண்டு குசலராசன் சந்தோஷமாய் இன்னஞ் சிறிது வானரப்படைத் தலைவரும் வானராளுமிருக்கிறார்க ளவர்களையுங்கொன்று இராஜாவாய் வந்திருக்கிற லட்சுமணரையுங் கொன்று அஸ்வத்தைக் கொண்டுபோக வேணுமென்று மனதிலெண்ணினவனாய் முன்னணியில் வந்து நின்று வில்லி லநேக பாணங்களைச் சந்தித்துவிட்டு கொல்லுகிறபோது வானரசேனைகள் கால்வேறு, கைவேறு, எலும்பு வேறு வேறாகவிழுந்து உதிரவெள்ளமானது ஆறுபோல ஓடியது. அப்போது சில வானராள் பாணங்களினால் காயம்பட்டு முன்வைத்தகாலை பின்வைத்து ஒருவருடன் ஒருவர் சொல்லாமல் ஓடினார்கள். அவ்வேளையில் சிலது வானரப் படைத்தலைவர் அவர்களை ஓடவொட்டாமல் மடக்கிக்கொண்டு சொல்லுகிறார்கள்.

அப்பா வானராளே முன்னம் இராட்சதாளை ஜெயித்து பெற்ற கீர்த்தியை இன்றோடு ஒழிந்துதேவர்கள் நகைக்க அபகீர்த்தி பெற்றோம், இப்போது குசலவரை ஜெயிக்க சாமார்த்தியம் உங்களுக்கில்லையோ ரோஷபாஷந்தான் உங்களுக்கில்லையோ நாமெல்லோரும் ஒருமுகமாய்க்கூடி குசலவர்களை ஜெயிக்கக்கூடாதோ ஓடினாலும் ஸ்ரீராமதுரோகம் விடாதே பயப்படாதே நீங்கள் வாருங்களென்று ஒன்றாய்க்கூடி மலை குன்று விருட்சங்களை பிடுங்கிக்கொண்டு குசலன்பேரில் கரகரவென்று சுழட்டி விட்டார்கள். அதனைக் கண்ட குசலராசன் தனுசில் அநேக அஸ்திரங்களைச் சந்தித்து சரசரவென்றுவிட்டு மலை குன்று விருட்சங்களை தவிடுபொடியாக்கிவிட்டு அவர்களையுங் கொன்று உதிர ஆறோடும்படிச் செய்துவிட்டான்.

அதைக்கண்ட இளையபெருமாளாகிய இலட்சுமணர் சிந்தாக்கிரந்தராய் மகா கோபத்தோடு செவ்வானம்போ லிருகண்களும் சிவக்க, கையிலிருந்த வில்லை வளைத்து நாணிபிகிந்து பல்லை நெறநெறவென்று கடித்து மீசை படபடவென்று துடிக்க உக்கிரத்துடன் சாரதியை அதட்டின மாத்திரத்தில் இரதமானது குசலராசன்முன் வந்துவிட்ட ததனைக்கண்ட வானர சிரேஷ்டர்களாகிய அனுமார், அங்கதன், சாம்புவந்தரும், இலட்சுமணர் முன்னமேவந் தடிபணிந்து கைகட்டி வாய் பொத்தி மிகுந்த வணக்கத்துடன் நின்று சொல்லுகிறார்கள் கேளும் இளையபெருமாளே நாங்களெல்லாமிருக்க எந்தப்படை முழுகிப்போச்சுதென்று வில்லெடுத்தீர், பாலன் பயப்படுவான், வில்நாணியைத் தளர்த்திவிடும், எதிரிமீதில் ஸ்ரீராம

பாணந் தொடுத்தாப்போல் நாங்களிருக்க தாங்கள் போவது தகுதியல்ல, நில்லுஞ் சற்றுநேரம் தேவரீர் வேடிக்கைப்பார்த்துக்கொண் டிருங்களென்று அனுமார், அங்கதன், சாம்புவந்தர் சொல்ல, இலட்சுமணர் கோபமடங்கி வில்நாணியைத் தளர்த்தினர்.

இவையெல்லாம் குசலராசன் கண்டு நல்லதாகட்டுமென்று பல்லை நெறநெறவென்று கடித்து வில்லைக் குமுகுமென்று குணத்தொனிபண்ணி நின்றான். அந்த சத்தமானதை அனுமார், அங்கதன், சாம்புவந்தன் முதல் சகல இராசாக்களும் மந்திரி பிரதானிகளுங் கேட்டு மனது தியக்கங்கொண்டார்கள் இலட்சுமணரும் குணத்தொனிபண்ணின சத்தங்கேட்டு ஆச்சரியப்பட்டு தமது தமயனுடைய கோதண்டத்திற்கு நிகராமென்று அனுமார் அங்கதன் சாம்புவந்தருக்குக் காண்பித்து இந்தப் பிரசண்ட கோதண்டத்திற்குமுன்னே சூலபாணியாய் விளங்கப்பட்ட காளகண்ட திரிநேத்திரமுடையவர் பூதப்படைகளுடன் எதிர்வந்தாலும் இவன்முன்னின்றாலும் முன்னிற்கமாட்டார்கள். இது மகாபலம்பொருந்திய வயிரகோதண்டம் இந்தக் கோதண்டத்தினுடைய பெருமையைச்சொல்ல என்றால் முடியாது வுலகமுழுகிப்போகிற காலங்களிலேயும் இந்தப் பிரசண்ட கோதண்டத்தையெடுக்கிறதில்லை இப்போதிந்த பிரசண்ட கோதண்டத்தை யார் யெடுத்து உலகத்தை முழுகப்பண்ணினார்களோ தெரியவராது. இந்தப்பூலோகத்து நரஜென்மங்கள் என்னபாவம் பண்ணினார்களோ கடல்கொள்ளாத யானை தேர் பரிவாரங்களை க்ஷணநேரத்தில் உதிர வெள்ளத்தில் கலந்துவிட்டான்.

இவனுடைய சேவகந்தானென்ன, அந்தப் பரஞ்சுடராயிருக்கப்பட்ட ஸ்ரீராமபிரமத்திற்கு பிடிபடுமேயல்லாமல் மற்ற பேர் கையில் பிடிக்கப் பலம்போராது இதிலே தெரிந்துக்கொள்ளும் அனுமாரே யென்றார் இலட்சுமணப் பெருமாளானவர். அதைக்கேட்ட அனுமார் அங்கதன் சாம்புவந்தர் முதலாகிய இராஜாக்களும் மனதுதிடுக்கிட்டு முன்வைத்தகாலை பின்வைத்தார்கள். அதைக்கண்ட இலட்சுமணப்பெருமாள் தன் தமயனாகிய ஸ்ரீராமபிரமத்தை மனதிலெண்ணினவராய் மகாதைரியங்கொண்டு அனுமார் அங்கதன் சாம்புவந்தரைப் பார்த்துச் சொல்லுகிறார். வாரும வானரசிரேஷ்டர்களே? ஸ்ரீராமா ராமாவென்று துதிபண்ணி தைரியத்துடனின்று

குசலன் வில்லை லகுவிற்பிடித்துக்கொள்ளவேணும் அதற்குப் பின் சிறுபிள்ளையான லவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொள்ளவும் வேணும் அவனுக்கோ யானை தேர் பரிவாரங்களில்லை பாதசாரியாய் நின்று யுத்தம்பண்ணுகிறான். அப்படி பண்ணுகிறவன்பேரில் வில்லெடுத்து யுத்தம்பண்ணினேமேயானால் தேவர்கள் நகைப்பார்கள். ஸ்ரீராமபிரமந்தான் என்ன சொல்லுவாரென்றார் அதைக்கேட்டு அதிபக்திவிநயத்தோடு இலட்சுமணரைநோக்கி அனுமார் சொல்லுகிறார்.

கேளும், இளையபெருமாளே சின்னபாம்பானாலும் பெரிய தடிகொண் டடிக்கவேண்டும் அவர்களைப்பார்த்தால் ஸ்ரீராமரைப்போல வடிவழகும் நடையுமா யிருக்கிறார்கள் அந்தச் சிறுபிள்ளைகளினுடைய வாய்விசேஷத்தைக்கேட்டு யுத்தம் பண்ணுவோம் இனி ஒரு க்ஷணப்பொழுதில் கண்டறிந்து விடுகிறேனென்று இலட்சுமணரைச் சேவித்து குசலராசன் முன்னுக்கு அங்கதன் சாம்புவந்தர் திரும்பினார்கள். அதைக் கண்ட குசலராசன் தம்பியாகிய லவனைநோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறான். வாருந்தம்பி லவனே? அதோவருகிற மூன்று குரங்குகளைப்பார்த்தாயோ இரதத்தை நடத்திவந்த ராசனை குறுக்கேவந்து மடக்கிக்கொண்டு இரண்டொருவிசேஷம் சொல்லி நிறுத்திப்போட்டுத் தாங்களே சாமார்த்தியரென்று அதி வேகத்தோடு வருவதைப்பார்த்தால் நம்மையெதிர்த்து யுத்தம் பண்ணிக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போவார்கள் போற் காண்கிறது முன்வந்துயெதிர்த்து மாண்டுபோன குரங்குகளுக்கெல்லாம் எசமான்போற காணுகின்றது இந்த மூன்று குரங்குகளுடனே நான் யுத்தம்பண்ணுகிறேன் பின்னேயிருக்கிற இலட்சுமணன்பேரிலும் சேனைகளின்பேரிலும் நீ யுத்தஞ்செய். இந்தவேளை யென்னுட நின்று யுத்தம் பண்ணவேண்டாம் சலுதியில் இராட்சதப்படைகளை வெல்ல வேண்டும் தம்பியென்று சொல்லிய வார்த்தையை லவன்கேட்டு வாருமண்ணவே, செங்குரங்கு, கருங்குரங்கு ஒரு குட்டக் குரங்குமாக வருகிறதைப் பார்த்தால் நீர் சொல்லியபடியே செய்வார்போற் காணுகின்றதாகையால் தாங்கள் மிகுந்த சாக்கிரதையுடன் நின்று 'யுத்தம்பண்ணு மண்ணவென்று சற்றிடைந்துபோய் யுத்தஞ்செய்துக்கொண்டிருந்தான்.

அப்போது அனுமார், அங்கதன், சாம்புவந்தர் இம்மூவரும் அதிகவேகத்துடன்வந்தெதிரில்நின்று குசலவர்களைப்

பார்த்து அனுமார் ஒருவசனஞ்சொல்லுகிருர். தம்பி சிறுபிள்ளைகளா காட்டுகிழங்குகளைத்தின்று சுனைநீர்குடித்துப் பாரைமேல் படுத்துக்கிடக்கிற குரங்குகள் உங்களை யென்னபண்ணினதென்று இப்படிக்கொன்று பிணக்குவியலும் இரத்தப்பிரளயமுமாக்கிவிட்டீர்கள் அதிருக்கட்டும் நீங்கள்யார் உங்கள்பேரென்ன உங்கள் தாய்தந்தை பேரென்ன சொல்லுந் தம்பியென்று கேட்டதற்கு குசலராசன் தம்பி லவனை முகத்தை யேரப்பார்த்தான். அச்சாடை யறிந்தவனய் அருகில் நெருங்கி அனுமாரைப்பார்த் தொருவசனஞ் சொல்லுகிருன் அடா! குரங்கே? என்னவார்த்தை சொன்னய், காட்டுக் கிழங்குகளைத் தின்று சுனைநீர் குடித்துப் பாரைமேல் படுத்துகிடக்கிற குரங்குகள் யென்னபண்ணிற்றென்றல்லவோ கேட்டாய், ஆனல் சொல்லுகிறேன்கேள், அயோத்தியாபுரியை யாளப்பட்ட ஸ்ரீராமர் யாகம்பண்ணவேண்டி அஸ்வத்தைவிட்டார் அந்த அஸ்வமானது எங்கள் வனத்தில் வந்தபடியால் அதை நான் பிடித்துக்கட்டினேன் அந்தச் சமாச்சாரங்கேட்டு சத்துருக்கன் தன் சேனைகளைக் கூட்டிக்கொண்டுவந்து எங்களுடனே யெதிர்த்து யுத்தம்புரிந்து அவனும் அவனுடைய சேனைகளும் மாண்டுபோய்விட்டார்கள்.

அந்தச்சமாச்சாரம் ஸ்ரீராமர் கேட்டு அவன் தம்பிலட்சுமணனை அனுப்பினனும் அவன்கையில் எங்கள் பிராணனையாகிலும் கொடுக்கிறேம் அல்லது எங்கள் கையில் அவனகிலு மிறக்கிருன். அப்படி ஞாயமிருக்க நீங்களார் உங்களை யுத்தத்திற் கழைத்தவர்கள்யார் சோளத்தட்டில் நெருப்புப் பற்றியெறிந்து வுதிர்த்தாப்போல் நீங்களேன் வீணில்வந்து மடிகிறீர்கள் இனியாகிலும் நீங்களிருக்கும் காட்டகத்தில் தப்பிப்பிழையுங்கள் எங்கள்முன் நில்லாதீர்கள் நின்றீர்களேயானல் சிரசு போய்விடும் காட்டில் வாசம்பண்ணப்பட்ட குரங்குக்கோ எங்கள் தாய்தந்தைபேரைச் சொல்லுகிறது எங்கள் பேர் குசலவர்களென்றுசொன்ன விசேஷத்தைக்கேட்ட அனுமாருக்கு இரண்டுகாதிலும் புகைகளெழும்ப சரீரமாதியந்தமும் அக்கினிப்பற்றியெரிய அதிககோபத்தோடும் மண்டியிட்டுக் குசலவர்களைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிருர்.

அடா! குசலவர்களே? என்னையறிவீர்களோ நீங்கள் சிறுபிள்ளைகளானபடியினல் அறியமாட்டீர்கள். அரிஹரப்பிரமாதிகளும் என்னைக்கண்டால் நடுங்குவார்கள் காலனு

மொடுங்குவான் இந்திரனும் பயந்தோடுவான் அப்படி சகல தேவர்களும் வாய்வுபுத்திரன் ஸ்ரீராமருடைய சேவகன் அனுமந்தனென்று மறிவார்கள். அப்படியென்னைச் சற்றுகிலும் யெண்ணமல் சிரசைத் துணிப்பேனென்றுசொன்ன வாயைக் கிழித்தெறிவேன் நீங்கள் சிறுபிள்ளைகளென்று மனம் பொறுத்தேன் வீணிலேன் ஆயுளை முடித்துக்கொண் டிறந்து போகிறீர்கள் உங்கள் தாய் தந்தை பேரைச் சொல்லி லகுவிற் குதிரையை விட்டுவிட்டு இலட்சுமணப் பெருமாளை சரணமடைந்தால் பிழைப்பீர்கள் இல்லாவிடில் என்கை குத்தினல் உங்களிருவருயிரையும் எமலோகமெட்டிப் பார்க்கச்செய்வேன் அப்படி வராதபடிக்கு நடந்துக்கொள்ளுங்களென்று அஞ்சனுதேவி குமாரன் சொல்லிய வசனத்தைக்கேட்ட குசலராசன் குலுங்க நகைத்துச் சொல்லுகிருன். ஓகோ! அனுமந்தா கேளும், சூட்சமறியாதவனுக்கு மோட்சமில்லை யென்பதுபோல காட்டில் வாசம்பண்ணப்பட்ட குரங்குகளுக்குத் திரிமூர்த்திகளும் பயந்து எதிர் நின்று போராடமாட்டாரென்று சொல்லிச் சூட்சத்தில் வெல்லவந்தாயோ அப்படி திரிமூர்த்திகளை வென்ற சாமர்த்தியமுடையவன் நீயானல் என்பேரில் எதோ காட்டு பார்ப்போமென்ருன். அதனைக்கேட்ட அனுமார் சொல்லுகிருர் அடா! குசலனே? என்னைக் காட்டில் வாசம் பண்ணப்பட்ட குரங்கென்று பலத்தை காட்டென்று மல்லவோ சொல்லுகிருய் ஆனல் என்பலத்தைக் காட்டுகிறேன் அதோ தெரிகிற அந்த பர்வதத்தை நான் இங்கிருந்தபடியே யழைப்பிக்கிறேன் பாரென்று தன்னுடைய வாலைவளர்த்தி அந்தப்பர்வதத்தை மூன்றுசுற்றுகச்சுற்றி நெருக்கி யிழுத்த மாத்திரத்தில் பர்வதம் அருகில் வந்தவுடனே தன் வாலை சுருக்கிக்கொண்டார்.

அதுகண்டு குசலராஜன் தம்பி லவனைப்பார்த்துச் சொல்லுகிருன். இந்த அனுமான் ஜெகஜாலவித்தை கற்றவன் துலைவிலிருந்த மலையை வாலைவிட்டுநெருக்கியிழுத்ததை நாம் கண்ணினலேகண்டோம் நம்மையு மிப்படிதான் வாலைவிட்டிழுப்பானே என்னமோ தெரியவில்லை முன்வந்த குரங்குகளிலேயும் இவன் மந்திரங் கற்றவனைப்போலு மிருக்கின்ருன். நாம் அசாக்கிரதையாயிருந்தால் வாலைவிட்டுக் கட்டிக்கொண்டுபோவான்போற் காண்கின்றது பாணத்தை வில்லிலே பூட்டிக்கொள்ளுந் தம்பியென்ருன். அதுகேட்டு லவன்

சொல்லுகிறுன். வாரும் அண்ணுவே, அப்படி ஜெகஜால வித்தை கற்றவன் என்னமோசம் பண்ணுவானே முன்பின் பாராமற் பாணப்பிரயோகம் பண்ணுகிறதே காரியமென்றுன்.

அதுகேட்டு அங்கதன் சொல்லுகிறுன் வாருந் தம்பி குசலனே? இளங்கன்று பயமறியாதென்பதுபோலப் பெரியோர்கள் சொன்ன வார்த்தையைச் சிறியோர்களாயிருக்கப்பட்டவர்கள் கேழ்க்கவேணும். அவர் ஆரென்று இப்படிச் சொல்லுகிறீர் ஆயிரத்தெட்டண்டத்தையும் கவிழ்த்துப் போடவும், இந்த பூமியைப் பிடுங்கிச் சமுத்திரத்திற் போடச்சொன்னலும் போடுவார், இந்த லோகத்தையும் எடுத்து சுழட்டி எறிவார். அவர் யாருக்கும் பயப்படார். ஸ்ரீராமமூர்த்தியின் ஊழியன், அநுமார் அவர் எப்படிச் சொல்லுகிறுரோ அப்படியே கேளுங்கள் தம்பி யென்றுன்.

அதுகேட்டு குசலராசன் நகைத்து ஒருவசனஞ் சொல்லுகிறுன் அடா! வானரங்களே, தங்கள் பெருமையை தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறீர் அந்தப் பெருமையும், பராக்கிரமமும் என் முன்னே சற்றுநேரங்காண்பிக்கலாகாதோ நீங்கள் சொல்லப்பட்ட விசேஷமெல்லாங் கூத்தாடிச் சிலம்புபோலாச்சுது. இப்படிக்கொத்த சொற்களெல்லாம் உங்களுக்கு யார் கற்பனை பண்ணினது ஆராகிலுந் தியாகங் கொடுக்கிற இடத்தில் உங்கள் பெருமைகளையும் பிரதாபத்தையும் சொன்னல் தியாகங் கொடுப்பார்கள். உங்களில் கையூரல் தீர யுத்தம் பண்ணுவார் ஒருவரு மில்லையென்று குசலராசன் மொழிந்தான்.

அநுமாருக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

கஞ்சமலர்க்கரவேகமதாய் மிருகாளையாகித்
துஞ்சிய நீலனைக்கண்ட சொலத்தகுதேர்ப்பாகன்
வெஞ்சமர்பூமியைவிட்டு பதஞ்செலமேலானேம்
அஞ்சனைபாலனெனும் அநுமானும்நடந்தானே.

அதுகேட்டு அநுமாரும் சாம்புவந்தரும் அதிக கோபமுண்டாகி அங்கதன் முகத்தைப் பார்த்தார். அதுகண்டு அங்கதன் அநுமார் பின்னுலிருந்த பர்வதத்தை செண்டுபோலெடுத்து குசலன்பேரில் விட்டெறிந்தான். அந்தப் பர்வதமானது சுழன்று வருமுன்னமே குசலராசன் ஒரு வச்சிராயுதத்தை எடு

த்து விடுத்து அப்பர்வதத்தை பொடிப்பொடியாய் உடைத்து விட்டான். அதுகண்டு அனுமார் பூமியிலே கிடக்கிற தெண்டாயுதங்களையெல்லாம் பொறுக்கி தன்னிடத்திலொரு பர்வதம் போலக் குவித்துக்கொண்டார் அதுகண்டு அங்கதன் பிரமாண்டகதியாயிருக்கப்பட்ட ஆலவிருக்ஷத்தை மடமடவென்று பிடுங்கி அடிநுனியையுங்கொய்து கையிலே பிடித்துக்கொண்டு கிறுகிறுவென்று சுழட்டி குசலராசன்பேரில் விட்டெறிந்தான் அதுகண்டு குசலராசன் நாலிரண்டிட்டு சூருவளிபாணம் விட்டு அதைத் தும்சம்பண்ணிப் போட்டான். அதுகண்டு அங்கதன் லவன்பேரி லெதிர்த்து யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தான்.

அப்போது அனுமார் இந்தக் குசலராசனுடைய சாமார்த்தியத்தைப் பார்க்கவேணுமென்கின்றதாய் தன்னண்டை பர்வதம்போலக்குவித்திருக்கிற தெண்டாயுதங்களை எடுத்து 1-10-100-1000-10000-சங்கம் மகாசங்கம் அற்புதம் நிற்புதமென்று கண்ணிமையோடு நிமைகொட்டுமுன்னமே வாலினாலும் கையினாலும் வாரிவாரி குசலராசன்பேரில் விட்டெறிந்தான். அப்போது குசலன் 1-10-100-1000-இப்படியாக பாணங்கள்விட்டு விடுகிற தண்டாயுதத்தை யெல்லாம் உடைத்தெறிந்து இடைவிடாமல் அஸ்திரங்களைவிட, அனுமார் இவன் இந்திரசித்திலும் மகா சாமார்த்தியனா யிருக்கிறான். இவன் மாய்கை சூது தெரிந்தவன். இவனுக்கு மாய்கை சூது தெரியாது. நிலமையுடனே நின்று யுத்தம் பண்ணுகிறான். இவனுடனே நாம் கையூரல்தீர யுத்தம் பண்ணவேணுமென்று தன்பேரில் வந்து விழுகிற பாணங்களையெல்லாம் ஒரு நொடியிலுதறிவிட்டு குசலராசன் வில்லின்பேரில்வந்துபாய்ந்தார். அதுகண்டுகுசலராசன் அனுமாருடைய சிரசைப் பார்த்து வில்லினாலடித்தான். அந்த அடி அனுமாருடைய சிரசில்பட்டு கபாலந்திறந்து உதிரவெள்ளமோட ஸ்ரீராமா ராமாவென்று வாய்விட்டலறி அடித்துமோதி பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார்.

சாம்புவந்தருக்கும் குசலராஜனுக்கும் யுத்தம்.

சந்த விருத்தம்.

அண்டமனைத்தும் அதிரிடவந்திடும் அனுமந்தனும்
கண்டகனுந்தியகணைவலியாற் கணைபட்டோய

விண்டுவெழுந்திடுபுவனென்றிடு வில்லோன்தேர்
கொண்டுபழங்கணைபெய்து கொடுஞ்சமர்செய்தானே.

அதுகண்டு தேவர்களெல்லாம் துயரப் பட்டார்கள் சாம்புவந்தர் கோபமாகி சேற்கண்டை பாய்ந்து வருவது போல் கையை முறித்துக்கொண் டோடிவந்தார். அவ்வேளை குசலராசன் இந்தக் கிழக்குரங்கினுடைய சாமார்த்தியத்தைப் பார்ப்போமென்று வில்லை யெடுத்து 10 - நாராசபாணங்களைச் சந்தித்து விட்டு சாம்புவந்தரை நோகவெய்தான். அந்த நாராசபாணங்களை சாம்புவந்தர் பிடுங்கி யெறிந்துப்போட்டு இறந்துகிடக்கிற ராட்சதர்களுடைய சந்திராயுதத்தை யெடுத்துக்கொண்டு குசலராசனையும் அவன் வில்லையும் ஒரே வீச்சினாலே வெட்டி யெறிந்து போடுகிறேனென்று மகா கோபத்துடனே ஓடி வருகிறபோது குசலராசன் கண்டு ஏதடா குரங்கானுலுஞ் சந்திராயுதத்தை யுருவிக்கொண்டு ஓடிவருகிறதென்று மகா கோபாக்கினியுடனே நாலுதிவ்வியாஸ்திரங்களை யெடுத்து கடுகடுத்து வில்லில் தொடுத்து விடுத்து சந்திராயுதத்தை இரண்டு துண்டாக வெட்டிப் போட்டான்.

அதுகண்டு சாம்புவந்தர் இரணக்களத்தில் புகுந்து இரதங்களை வாரி குசலராசன்பேரில் விட்டெறிந்தார். அப்போது குசலராசன் ஒரு இடியாஸ்திரம்விட்டு இரதங்களை யெல்லாஞ் சுக்கல் சுக்கலாய் உடைத்தெரிந்தான். அதன் பின்பு சாம்புவந்தர் இறந்துகிடக்கிற யானை குதிரைகளை வாரிவாரிக் குசலராஜன்பேரிற் போடவே, குசலராஜன் 10- திவ்வியாஸ்திரங்களைவிட்டு துண்டுதுண்டாகயெறிந்துவிட்டான். அதுபோகவே, சாம்புவந்தர் இராட்சதப் பிணங்களை வாரிவாரி விட்டெறிந்தார் அதுகண்டு குசலராஜன் கோபங்கொண்டு வருகிற இராட்சத பிணங்களையெல்லாம் பாணங்களைவிட்டு அறுத்துப்போட்டு 100- நாராசபாணங்களை யெடுத்து வில்லிலே சந்தித்துவிட்டு சாம்புவந்தரை மிகவும் நோகச்செய்தான். அதனாலே சாம்புவந்தர் நொந்து தன் திரேகத்தில் வைத்திருக்கும் பத்து நாராசபாணங்களைக் கையினாற் பிடுங்கி குசலராசன்பேரில்விட்டெறிந்தார். அதுகண்டு குசலராசன் ஏதடா கிழக்குரங்கு நாம் விடும் பாணத்தைப் பிடுங்கி நம்முடையபேரிலே விட்டெறிந்தது நல்லது ஆகட்டுமென்று வில்லில் அநேக பாணத்தைச் சந்தித்து ஒன்றின்மே லொன்ருய் மழை பொழிவதுபோற் பிரயோகம் பண்ணிவிட்டான். அந்தப் பாணங்கள் வில்லை

விட்டு விடுபட்டு சடசடவென்று தொனிகளுடனேயும், அக்கினியானது பத்திக்கொண்டு வருவதுபோலும் அதிவேகமாய் வந்து சாம்புவந்தர்பேரில் பாய்ந்து சரீரத்தை இரத்தமயமாக்கி விட்டது. அதனாலே சாம்புவந்தர் மிகவும் நொந்து கைகா லுதரிக்கொண்டு ஸ்ரீராமா ராமாவென்று அடியற்றமரம் போல் முடியற்றுப் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார்.

அதுகண்டு குசலராசன் கருங்குரங்கும் செங்குரங்கும் மாண்டுபோயிற்றென்று அதிக சந்தோஷமடைந்து இராட்சதப் படைத் தலைவர்களின்பேரில் வருகிறபோது இலட்சுமணர் கண்டு கண்கள் செவ்வானம்போற் சிவக்க, காதுகளில் புகைகளெழும்ப, மீசைகள் துடிக்க, பல்லை நெறநெறவென்று கடித்து வில்லையெடுத்து நாணிபிகிந்து சில பாணங்களைத் தொடுத்து சாரதியை யதட்டி இரதத்தை குசலராசன் முன்னுக்குக் கொண்டு நிறுத்தி குசலராசனுடைய முகத்தைப்பார்த்து இப்பிள்ளைதான் ஸ்ரீராமரைப்போ லிருக்கிறதென்று அதிக சந்தோஷமாகி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினவராய் கையில் பிடித்திருந்த வில்லைத் தேரின்பேரில் வைத்துவிட்டு சும்மா யிருந்து விட்டார்.

அப்போது குசலராசன் ஏதடா, இரதத்தைநடத்திக் கொண்டு நமது முன்வந்த ராஜன் நம்மைக்கண்டுபயந்து வில்லை இரதத்தில் வைத்துவிட்டு சும்மாயிருந்தால் நாம் சும்மா விடப்போமா நம்முடைய தாயார் சொன்னபடி வந்தபேரை யெல்லாங்கொன்று ஜயங்கொண்டு போகவேணுமென்று மனதில் கருதினவனாக இலட்சுமணரைப்பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறான். ஓ! இராசனே? என்னைக் கண்டவுடனேபயந்தது நீதியோ, நான் சும்மா விடுவேனோ, இவ்வளவு சாமர்த்தியமில்லாதபேர் யாகஞ்செய்யக் குதிரையை விடலாமா முகத்திலே யிருப்பது மீசையல்லவோ நீ பிடித்தது தனுசு அல்லவோ உனக்கு சாமர்த்தியம் போதாதோ நீ க்ஷத்திரியனானால் நான் சொல்லப்பட்ட விஷயம் உனக்கு ரோஷம் உண்டாகுமென்று சொல்லவே அதற்கு இலட்சுமணர் ஒரு வசனஞ் சொல்லுகிறார். வாருந் தம்பி சிறுபிள்ளாய், ஏன் அதிக விசேஷத்தை மிஞ்சிப் பேசுகிறாய் நீயார் சிறுபிள்ளை உன்னுடைய தாய்தந்தை பேரைச்சொல்லும் அப்புறம் உன்னுடன் யுத்தம் பண்ணுகிறேனென்றார்.

அதுகேட்டுக்குசலன் இலட்சுமணரைப்பார்த்துச் சொல்லுகிறான். ஓ! இராசனே? கேளும், என்பேர் குசலன், என் தம்பிபேர் லவன், என் தாய்பேர் ஜானகியம்மாள், எங்களையர் பேர் வால்மீகரிஷி. இனி எதோ உம்முடைய சாமார்த்தியத்தைக் காட்டும் பார்ப்போமென்று ஒரு அர்த்தசந்திராஸ்திரத்தையெடுத்து வில்லிற்சந்தித்து விட்டுவிட்டானப்போது இலட்சுமணர் வில்லெடுக்கநேரமில்லாமல் மண்டியிட்டு தன்பலத்தையெல்லா முன்கையிலேகொண்டு பாயவந்த பாணத்தை ஒரு அரைகொடுத்து வந்தவழி தெரியாமலோடவிட்டா ரப்போது குசலராஜன் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து அற்பிசி கார்த்திகை மாதத்தில் ஈசானியமூலையிலிருந்து மேகமானது விடுபட்டு இடிமின்னல் குமுறலுடன் ஓய்வில்லாமல் ஜலம் வருஷிப்பதுபோல பாணங்களைக் கட்டுகட்டா யுருவிவிடுகிறபோது, இலட்சுமணரும் வில்லிலனேக அஸ்திரங்களைப் பூட்டி மழைபொழிவதுபோல சரமாரியாய் பொழிந்து வருகிற அஸ்திரங்களையெல்லா மறுத்து, மிதமில்லாத பாணங்களை எடுத்துவிடுகிறபோது பாணங்களானது ஆகாயமார்க்கத்தில் எழும்பி ஒன்றுக்கொன்று தோர்வையில்லாமல் யுத்தங்கள் புரிந்துக்கொண்டிருக்க, அவ்வேளையி லனுமார் மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்துக் குசலனெங்கேயிருக்கிறானென்று பார்த்தார். குசலன் வெகுதூலவில் யுத்தப்பண்ணுகிறானென்றறிந்து யெழுந்து சாம்புவரிடத்தில்வந்து அவர் மூர்ச்சையடைந்திருப்பதைக்கண்டு அவ்விடம்விட்டுலவனிடத்தில் யுத்தம்புரிந்துக்கொண்டிருக்கும் நீலனைக்கண்டு இவனுடனேயின்ன மென்னத்திற்குப் போராட்டம் ஒரேயறையிலே யமலோக மனுப்பிவிடுமென்று கூறிட மொழியை லவன் கேட்டு, அதிக கோபங்கொண்டு அனுமாரையுங்கூட வளைத்துக் கொண்டு யுத்தம்பண்ணும்போது சாம்புவந்தர் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து அனுமார் அங்கதன் யுத்தம்புரியுமிடம் வந்தார். அதுகண்டு லவன் சாம்புவந்தரையு மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்தான் மூன்றுபேருங்கூடி அதிக உக்ராகாரத்துடன் தேவர்களும் நடுங்க யுத்தம்புரிந்தார்கள்.

அதெப்படி யிருந்ததென்றால், அனுமார் பாய்ந்து பாணத்தை யுடைத்தெறிந்து போடுவார் சாம்புவந்தர்பேரில் பாணம்பட்டால் அங்கதனெழும்பி பாணத்தை உடைத்தெரிந்துபோடுவான் இந்தப்படி லவனைவளைத்துக்கொண்டு யுத்தம்

பண்ணினார்கள். இம்மூவரையும் இலேசாக யெண்ணவேண்டாம் மும்மூர்த்திகளாலும் இவர்களெதிர் நின்று நிர்வாகம் பண்ணார்கள். இவர்கள் அநேக யுத்தங்களில் கைகண்டு கீர்த்திபெற்றவர்கள் லவனேவென்றால், இலட்சுமணப்பெருமானுக்கு சரிபலன் படைத்தவன், அவன் பாணமெடுக்கிறதுந் தொடுக்கிறதும் இம்மூவருக்குந் தெரியவில்லை இவனுடைய கரவேகஞ் சரவேகந்தானென்னமோ, கைதான் சலியாதோ, புஜந்தான் வலியாதோ, மண்டியிட்டகால் புறந்தா னெறியாதோவென்று, தேவர்கள் மெச்சும்படியா யுத்தம்புரிந்துக்கொண்டிருந்தார்கள். அப்போது குசலராசனுடைய பாணமும், இலட்சுமணருடைய பாணமும், ஆகாயத்தில் யுத்தம்பண்ணுகிறபோது, அதில் குசலராஜன் பாணமிஞ்சி லட்சுமணருடையபாணங்களை அதம்பண்ணிப்போட்டு அம்புறுத்தூணியில் வந்தடைந்தது. அதுகண்டு இலட்சுமணர் மகாகோபாக்கினியுடன் அதிகவிரைவில் நூறு திவ்வியாஸ்திரமெடுத்து மந்திராபூதிகள் கொடுத்து வில்லிலேதொடுத்து பிரயோகஞ் செய்தார். அந்த நூறு திவ்வியாஸ்திரங்களும் வில்லில்விடுபட்டு அவயத்திலிருந்த நாகசர்ப்பத்தைக் கோலால்தட்டினால் எப்படி சீறிக்கொண்டுவருமோ அப்படி சீறிக்கொண்டு விஷாக்கினியுடனே வருகிறபோது குசலன் கண்டு நூறு திவ்வியாஸ்திரமெடுத்து வில்லிலே சந்தித்துவிட்டு இலட்சுமணர் விட்ட நூறு திவ்வியாஸ்திரங்களையும் கண்டித்து அதனமாய் பத்து நாராசபாணங்களெடுத்து தனுசிற்றொடுத்துவிட்டான். அந்த நாராசபாணங்களும் அதிக உக்கிரத்துடன் வருகிறபோது, லட்சுமணர் கண்டு தமயன் கொடுத்த ராமபாணமாகிய ஐம்பது நாராசபாணங்களெடுத்து பிரயோகஞ்செய்து அந்த நூறு திவ்வியாஸ்திரங்களையு மறுத்தெரிந்துபோட்டார்.

அதுகண்டு குசலராசன் நூறு அர்த்தசந்திராஸ்திரமெடுத்து தூபதிபங்கொடுத்து இலட்சுமணர்பேரில் பிரயோகஞ் செய்தான். அதுகண்டு லட்சுமணர் நூறு அர்த்தசந்திராஸ்திரத்தைவிட்டு அறுத்தெரிந்தார், அதுகண்டு குசலராசனுக்கு கண்களிரண்டும் செவ்வானம்போல்சிவந்து, காதுகளிரண்டும் புகைகளெழும்ப, அதிகரோஷத்துவேஷனாய் அம்புறுப்பொதியிற் கையைப்போட்டு ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், கோடி, சங்கம், மகாசங்கமென்று கணக்குமிதமில்லாத பாணங்களை மழைபொழிவதுபோல சாமபரியந்தம் சரமாரியா

யைப் பொழிந்துவிட்டான். அதுகண்டு லட்சுமணர் தாமும் அப்படியே பாணங்களையெடுத்துவிட்டறுத்துப்போட்டு நாலு சிங்கமுகாஸ்திரமெடுத்து வில்லிலே சந்தித்துவிட்டு குசலராசனுடைய வில்நாணியை படீலென் றறுத்தெறிந்துவிட்டார் வில்நாணி அறுபடவே அண்டகடாகம் படீலென்று வெடித்ததுபோலிருந்தது குசலராசனுந் திடுக்கிட்டுப் பிதிர்கலங்கி தைரியப்படுத்திக்கொண்டு அந்த நாணியை உருவப்பார்த்தான் அது ஒன்ருய்க் கூடியதைக்கண்டு குசலராசன் சலுதியிலேயே நாணியைப்பிகிந்து பாணங்களைச் சாங்கோபசாங்கமாய் வில்லிற் சந்தித்துவிட்டு அதனமா யிரண்டு நாராசபாணங்களெடுத்து லட்சுமணருடைய வில்லுக்கு லக்குபார்த்துப் பாணத்தினுடைய சந்திலே விட்டுவிட்டான். குசலன் விடப்பட்ட பாணங்களுக்கு பதில் பாணங்கள் விட்டறுத்துக்கொண்டேயிருந்தார்.

அந்தச்சமயத்தில் இரண்டு நாராச பாணங்களும் வந்து இலட்சுமணருடைய கைவில்லை நாலுபத்தலாகக் கிழித்தெறிந்துப்போட்டது. அதுகண்டு லட்சுமணர் குசலராசனை மெச்சி பளாபளா நன்ருச்சுது இராவணன், கும்பகர்ணன், இந்திரசித்து, அதிகாயன், கும்பனிகும்பன் இப்படி சொல்லப்பட்ட பிரமுகாளிடத்திலேயும் பின்னையும் இராட்சதாளுடனேயும், யுத்தம்பண்ணினேன் இதுவரையில் நம்முடைய வில்லை யிப்படிப்பிளந்தவர்களில்லை இவன் மகாபலவந்தனென்றுசொல்லிக்கொண்டு வில்லை உருவப்பார்த்தார் ஒன்ருய்க்கூடிவிட்டது அப்போது இலட்சுமணரிவனை ஜெயம்பண்ணிக் குதிரையை விடுவிக்கவேணுமென்றும் அசாரிசமாய் இவனுடனே யுத்தம் பண்ணலாகாதென்றும் அப்படிப்பண்ணிஞல் கொன்றுவிடுவானென்றும்மனதில் திடப்பட்டவராய் தன்னிடத்திலிருக்கப்பட்ட பாணங்களையெல்லாம் வில்லிலே சந்தித்து மந்திராபூதிகள் செய்து குசலவனுடைய மார்புக்கும் கண்டத்திற்கும் லக்குபார்த்து விட்டுவிட்டார். அந்த இராமபாணங்களானது எடுக்கச்சே ஒன்று, வில்வில் வைக்கச்சே பத்து, கொடுக்கச்சே நூறு, யிழுக்கச்சே ஆயிரம், விடுக்கச்சே பதினுயிரம், புறப்படச்சே லட்சம், ஒருபாண மித்தனையாஞல் விடப்பட்ட இராமபாணத்துக்கெல்லாம் எத்தனையென்று கணக்குப்பார்த்துக் கொள்ளுங்கள் அந்த பாணங்களானது விடுபட்டு தகத்தகாயமாய் தங்கக்கட்டுகளுடனே பிண்டபட்சி யிறகுபூண்ட வடவா

முகாக்கினிக்குச் சமதையான அக்கினிக் கொழுந்துகள் விட்டெறிந்துக்கொண்டு அதிவேகத்துடனே வருகிறபோது குசலராஜன் கண்டு அநேக பாணாஸ்திரங்களை வாரி அபரிமிதமில்லாமல் பிரயோகம்பண்ணி வருகிற இராமபாணங்களையெல்லாம் அறுத்தெறிந்துபோட்டான்.

அதுகண்டு இலட்சுமணர் முப்பத்திரண்டு சிங்கமுகாஸ்திரமெடுத்து வில்லில் சந்தித்து மந்திராபூதிகள் கொடுத்து பிரயோகம்பண்ணிவிட்டார். அதுகண்டு குசலராசனறுபத்திநாலு சிங்கமுகாஸ்திரமெடுத்து வில்லிற்சந்தித்து பிரயோகம்பண்ணிவிட்டான். அதனமாய் அக்கினியாஸ்திரமெடுத்து அபிமந்திரித்துப் பிரயோகம்பண்ணினான். அதுவும் விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு கடகடவென்கிற தொனியுடனே காடுசெடிகள் பத்தியெறிய கரகரவென்று அதிக உக்கிரத்துடன் வருவதை இலட்சுமணர் கண்டு தம்மிட ஸ்ரீராமபாணமாகிய அக்கினியாஸ்திரம் ஒன்றெடுத்து விடுத்தார். அதுவும் விடுபட்டு வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு சடசடவென்கிற தொனிகளுடனே புறப்பட்டு குசலராஜன்விட்ட அக்கினியாஸ்திரத்தின் பேரில் தடாலென்றுவந்து மோதி ஒன்றுக்கொன்றுடுதாக்கி ஆகாயமே கிளம்பி யுத்தம்பண்ணத் தலைப்பட்டது.

அதுகண்டு குசலராஜன் ஒரு பர்வதாஸ்திரத்தை யெடுத்துவில்லிற்றொடுத்து மந்திராபூதிகள்செய்து விட்டுவிட்டான் அந்த பர்வதாஸ்திரமானது வில்லில் விடுபட்டு அனேகபர்வதங்களாக வுருவுகொண்டு வருகிறபோது இலட்சுமணரானவர் அந்த பர்வதாஸ்திரங்களானது வருமுன்னம் தம்முடைய ஸ்ரீராமபாணமாகிய பர்வதாஸ்திரத்தை யெடுத்து வில்லிற் சந்தித்து மனோபூஜைகள் செய்து பிரயோகப்படுத்தினார் அந்த பர்வதாஸ்திரமும் ஆகாயமார்க்கங்கிளம்பிக் குசலராசன்விட்ட பர்வதாஸ்திரத்துடனெதிர்த்து ஒன்றோடொன்று கிட்டிமுட்டி கட்டிப்புரண்டு செயித்திடவேண்டுமென்று யுத்தம்பண்ணத்தலைப்பட்டது அதுகண்டு தேவர்களெல்லாம் நமதுபேரி லெங்கேவந்து விழுகிறதோவென்று ஓரண்டமுயரமோடிப்போனார் அப்போது குசலராசன் பிரம்மாஸ்திரத்தையெடுத்துப் பூசைபுரிந்து மந்திர உச்சாடனங்களுடன் வில்லிற் சந்தித்துப் பிரயோகம் பண்ணினான் அந்த பிரமாஸ்திரமானது வெளிப்பட்டு அண்டபுவனங்களும் நடுங்க ஆலகால

விஷம்போற் சீறிக்கொண்டு இலட்சுமண ரெங்கேயென்று திருதிசென்றெரிந்துகொண்டு வருகிறபோது இலட்சுமணப் பெருமாளானவர் கண்டு தம்முடைய ராமபாணமாகிய பிரமாஸ்திரத்தையெடுத்து வில்லிற் றொடுத்துப் பிரயோகம்பண்ணிவிட்டார் அதுவும் வில்லில் விடுபட்டு தகத்தகாயமாய் தங்கக்கட்டுகளுடனே பிண்டபட்சி யிறகுபூண்ட பிரமாஸ்திரமானது குசலராசன் விடப்பட்ட பிரமாஸ்திரத்தின்பேரிற் பாய்ந்து இரண்டு பிரமாஸ்திரமானது சந்தித்து யுத்தம்பண்ணத் தலைப்பட்டதுகள் அத்தருணத்தில் குசலராசன் ஈதடா இலட்சுமணன் மகா பலசாலியாயிருக்கிறான் நாம் விடப்பட்ட அஸ்திரத்திற்கு பதிலஸ்திரம்விட்டு யுத்தம் பண்ணுகிறான் நம்முடைய அஸ்திரமோ வைகுந்த வாசகரா யிருக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணருடைய தாயிற்றே இந்த லட்சுமணன் நராணுச்சுதே இவனுக்கேது பலம்பொருந்திய அஸ்திரம் நம்முடைய அஸ்திரமெல்லா மறுத்துவிடுகிறான். இவனோ புஜபல பராக்கிரமசாலியா யிருக்கிறான். யுத்தங்களிற் கைகண்டவன் போலும் காணுது. நாம் சாரிசமா யிருந்தோமேயானால் நம்மை யெமனுலக மனுப்பி விடுவானென்று மனதிற் றிடங் கொண்டவனாகத் தன் தாயார் கொடுத்த சக்கரத்தைக் கையிலேந்தினான். அதுகண்டு மண்ணுளோரும்விண்ணுளோரும் யோசனை பண்ணிக் கண்ணணை யெண்ணி துதிபண்ணி மனங்குண்ணி வாடிப்போனார்களப்போது குசலராசனானவன் சக்கரத்திற்குத் தக்க மந்திராபூதிகள் செய்து தூபதீப நைவேத்தியங்களுடனே சோடசோபசாரஞ் செய்து இலட்சுமணருடைய கண்டத்திற்கு லக்குபார்த்து விட்டுவிட்டனன். அந்தச் சக்கரமானது வெளிப்பட்டு காடுகள் எரியத்தக்கதாக இலட்சுமணரைப் பட்சணஞ் செய்வேனென்று தேடியோடி வரும் போது அதுகண்டு இலட்சுமணரானவர் நிமையோடு நிமைதட்டு முன்னமே கோடி ராமபாணங்களைச் சக்கரத்தின்பேரில் விட்டார். கோடி ராமபாணங்களையு மறுத்து பூமியிற் றள்ளிவிட்டு இலட்சுமணர்பேரில் சக்கரமானது வருகையில் இலட்சுமணர் பயந்து நாராசத்தையும் பாசுபதாஸ்திரத்தையும் சிவாஸ்திரத்தையு மெடுத்து விடுத்தார். அம்மூன்றஸ்திரங்களும் புறப்பட்டு சக்கரத்தின்பேரி லெதிர்த்து யுத்தம்பண்ணத் தலைப்பட்டதுகள். அதுகண்டு குசலராஜன் தன் தாயார் கொடுத்த உக்கிரவீர சத்தியை யெடுத்து கையிற்பிடித்து மந்திர உச்

சாடனஞ் செய்யும்போது அனுமார் கண்டு ஏதடா குசலவன் உக்கிரவீரசத்தியை யெடுத்து உச்சாடனம் பண்ணுகிறான் இந்தச் சத்தி விட்டால் இலட்சுமணர் பிழையாரென்று திடுக்கிட்டு மனதுகலங்கி குசலராசனுடைய சத்தியை யொடித் தெரிந்து போடவேணுமென்று மனதிலெண்ணி சத்தியின் பேரில் வந்து பாய்ந்தார். அதுகண்டு குசலராச னேதடா செங்குரங்கு நமதுபேரில் வருகுதென்று பிரசண்ட கோதண் டத்தைச் சுழட்டியடித்தான். அவ்வடியானது அனுமார்மேற் படவே, கபாலந்திறந்து ஸ்ரீராமா ராமாவென்று வாய்விட் டலறி குப்புறப் பூமியில் விழுந்துவிட்டார்.

அந்த வேளையிற் குசலன் சத்தியையெடுத்து விட்டுவிட் டான். அந்தச் சத்தியானது மேலுலகமேழுந் தத்தளிக்க மூயர்வா பெழுப்பி தெந்தனம் பாடிக்கொண்டுவர இலட்சு மணர்கண்டு கோபமாகி அநேக இராமபாணங்களை கண்ணிமை யோடு நிமை தட்டுமுன்னமே கட்டுகட்டா யுருவிவிட்டார். அந்த இராமபாணங்களை யெல்லாஞ் சத்தியானது கமளீகரம் பண்ணிக்கொண்டு இலட்சுமணர்மீது வருகிறபோது அங்கத னேதடா நமது லட்சுமணர்மீது வருகின்றது இந்தச் சத்தி பட்டால் இலட்சுமணர் பிழையாரென்று கருடனானவன் நாக சர்ப்பத்தை லகுவா யடித்துக்கொண்டு போவதெப்படியோ, அவ்வாறாக அங்கதனானவன் சத்தியைப்பிடிக்க வருகிறபோது குட்டிக்குரங்கின் சேஷ்டை காண்பிக்காமற் போகாதென்று நான்கு நாராசபாணங்களைத் தொடுத்து அங்கதனுடைய திரே கமுழுதுஞ் சல்லடைக்கண்களாகத் துளைசெய்தான். அதனா லங்கதன் இரத்தங்களைக்கக்கிக்கொண்டு ஸ்ரீராமா ராமாவெ ன்று வாய்விட்டலறி பூமியில் விழுந்தான்.

அந்தவேளையிற் சத்தியானது மகாவுக்கிரத்துடன் வரும் போது இலட்சுமணர் கண்டு கத்தி வேல் சூலம் இம்மூன்றை யுஞ் சத்திமேலெடுத்துவிட்டார். இம்மூன்றாயுதங்களுஞ்சத்தி யின்பேரி லெதிர்த்து யுத்தம்பண்ணி சத்தியினாலடிபட்டு பூமி யில் விழுந்துபோயிற்று. மேலுமந்த உக்கிரவீர சத்தியானது உக்கிரம்விடாமல் இலட்சுமணர்பேரில் வருகிறபோது இலட்சு மணர் மந்திரவாளை யெடுத்து உக்கிரவீர சத்தியை இரண்டு துண்டாக வெட்டினார். வெட்டவே துண்டமிரண்டாகி மறு படியு மொன்றாய்க்கூடி இலட்சுமணருடைய மார்பிலே தடா லென்று வந்து பாய்ந்து முதுகிலுருவிப் போய்விட்டது அத

ஞல் இலட்சுமணர் ஸ்ரீமந் நாராயணுவென்று தேர்தட்டில் விழுந்து விட்டார். சாரதியானவன் குதித்தோடிப்போயினுன். அந்தரவாசிகள் சுந்தரம்பொருந்திய இலட்சுமணர் இறந்தாரென்று துயரமுற்ருர்கள். அந்தவேளையி லுக்கிரவீர சத்தியானது சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து அம்புருத்தூணியில் வந்தடைந்தது. அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகி வில் நாணியைத் தளர்த்திஞ னப்போது லவனுனவன் 51-இராசகுமாரர்களுடனும் சாம்புவந்தனுடனும் யுத்தம் பண்ணிக்கொண் டிருக்கிறபோது இராத்திரி பதினெட்டு நாழிகையாயிற்று.

அப்போதிரண்டு தூதர்கள் உச்சியின்மீது இரண்டு கைகளைக் கூப்பி இசைக்குகந்த இலட்சுமணர் செய்தியை இட்சணம் சொல்லவேண்டுமென்று கூவியழுதுக்கொண்டே ஆகாயமார்க்கமாகச்சென்று ஆவிக்குரிய ஸ்ரீராமரைக் குறித்துத் தொழுது குய்யோ முறையோவென் றவரிருக்குமிடந்தேடியோடி அயோத்தியைநாடி பலவாய் துதிகள்பாடி எங்களைக் கார்க்குமையனே தேர்சார்ந்தமெய்யனே கேட்டருள்வீர் இலட்சுமணப்பெருமாள் அனுமார் அங்கதன் சகல வானரத்தலைவர்களும் இராட்சதாளும் குசலவாள்பேரில் யுத்தஞ்செய்துமாண்டார்கள். நாங்கள்மாத்திரந்தப்பி வோடிவந்தோமென்ருர்கள். அதுகேட்டு இராமபத்திராள், இலட்சுமணர், அனுமார், அங்கதன் இறந்தார்களென்று சொல்லவே, ஆயாசமுற்று அருட்கண்ணீர் பெருகி அப்பா தம்பி இலட்சுமணு முன்ஞல் பரசுராமன் நமது தந்தையாகிய தசரதமகாராசரை மடக்கிக்கொள்ள அந்த பரசுராமனை ஒரேபாணத்திஞற் கொன்றுவிடுகிறேனென்று யுத்தரவு கொடுமென்ருயே அந்ததைரியமுஞ்சவுரியமும் பலாபலமும் சிறுபிள்ளை குசலவாள்பேரில்காண்பித்தால் பிள்ளைகள் பயப்படுவார்களென்று சிறுபிள்ளைகள் பாணத்திஞலிறந்தாயோ கைகேசியம்மன் சொற்பிரகாரம் பதிஞலுவருஷம்காட்டிற்குப்போகச் சொன்ஞர்களே அப்போதாசாரவாசலில் நீவந்து கைகேசியையும் தசரதனையும் கொல்வேனென்று வில்லை குணத்தொனிசெய்து ஆரவாரஞ்செய்யவே அதுவுமன்றி சீதையுடன் பஞ்சவடி தீர்த்தத்திலிருக்கிறபோது சூர்ப்பனகியானவள் வநது உன்னைத்தோதகஞ்செய்யுமவளை மூன்ருக்கினைபுரிய அவளால்கரதூஷணன்யுத்தத்திற்குவர அவனை நான் கொன்றேனே பின்னையுஞ் சுக்ரீவன் வாலியைக் கொல்ல

வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய நாமதற்கிசைய அப்போது சுக்ரீவன் சொன்ன துந்துபி யெலும்பு மராமரமுமிருக்கிறது அதை யெய்தால் வாலியைக் கொல்லத் தக்கினவர்களென்று சொன்னதைக்கேட்டு உன்னைக்கண்டுஜாடை செய்ய நீ அதையறிந்து துந்துபி யெலும்பை பெருவிரலினு லிரடிவிட்டாய் அதுஎந்தசமுத்திரம்போய்விழுந்ததோ தெரியாதே பின்னும் என்னைக்காப்பாற்றவேணுமென்று பதினுறுவருஷம் அன்னுகார நித்திரையில்லாமலிருந்து இராவணசம்மாரமுடிப்பித்துக்கொண்டு என்னைக் கார்த்தாயே அப்படிப்பட்ட உயிர்த்தோழனுகிய உன்னைவிட்டு எப்படிப் பிரிந்திருப்பேன் தம்பி லட்சுமணுவென்று பிரலாபிக்கையில் பரதாழ்வாரானவர் அண்ணுவே அடியேனுக்கு திருவுளம்புரிந்தால் நம்முடைய தம்பிமார்களைக்கொன்ற இரண்டு பிள்ளைகளையுங் கண்டதுண்டம் பண்ணி சகலரையு மெழுப்பிக்கொண்டு வருகிறேனென்ருர்.

அதனைக்கேட்ட ஸ்ரீராமபத்திர சுவாமியானவர் சொல்லுகின்ருர். வாராய் தம்பி பரதாழ்வாரே சிறுபிள்ளைக ளிருவரையுங் கொன்ருல் சீதையிருப்பிட மெவ்வாறறியலாம் சீதை இல்லாமல் யாகத்திற்கு பின்னம் வந்து சம்பவித்தது. ஆகையாலந்த இரண்டு பிள்ளைகளையுங் கொல்லாமல் கைப்பிடியாகப் பிடித்துவந்தால் அந்தச் சிறுவர்களால் சீதை இருக்குமிடங் கண்டறியலாமென்று நூறுவெள்ளம் இராட்சதாளைக் கூட்டிக்கொண்டுபோய் அந்தப் பிள்ளைகளை எந்தவிதமாகிலுங் கைப்பிடியாகப்பிடித்துக்கொண்டுவாவென்று நாராயணுஸ்திரத்தை யெடுத்துக் கொடுத்து சில ராமபாணமும் சத்திவேல் சூலமுங் கொடுத்து மந்திரங்களையுஞ் சொல்லியனுப்பினுர்.

பரதமகாராஜன் யுத்தத்திற்குப் புறப்படுதல்.

கலிவிருத்தம்.

வரதமோங்கு குசலன் றன்வாளியாற்
றரதவமுனி கரியுந்துணிபட
விரதமோய்ந்து விலட்சுமணன்றனைப்
பரதன்க்ண்டு பரிந்துடன்வந்தனன்.

அப்படியே பரதாழ்வார் சகலமான சேனைகளையும் யானைகளையும் காலாட்களையுங் கூட்டிக்கொண்டு சர்வாடம்பரத்துடனே தேவசுந்தரன் ஒரு யானையின்மீது சிங்கக்கொடி பிடிக்க அயோத்தியைவிட்டுப்புறப்பட்டார்கள். பொழுதுவிடிய இன்

ணைந்துநாழிகை இருக்கின்றது. அப்போது லவனுனவன் 51-இராஜகுமாரர்களுடனும் மந்திரி பிரதானிகளுடனும் யுத்தம் பண்ணுகையில் சாம்புவந்தர் இறந்துகிடக்கின்ற இராட்சதப் பிரேதங்களை வாரிவாரி குசலன்பேரில் விட்டெறிந்து யுத்தம் செய்துக்கொண் டிருக்கையில் அனுமார் மூர்ச்சை தெளிந்தெழுந்து இலட்சுமணர் சோகித்திருப்பதைக் கண்டு அதிக கோபாக்கினியுடன் இரண்டு கண்களுஞ் செவ்வானம் போற்சிவக்க, மீசை படபடவென்று துடிக்க, உக்கிர சிங்கம் போல் கியாவென்று அட்டகாசஞ்செய்தார். அந்த அட்டகாசத்தை தேவர்கள் கேட்டு நடுங்கவுங் குசலவர்களுங் கண்டு பயங்கொள்ளவும் வருகிறபோது ஏதடா செங்குரங்கு மகா பொல்லாததாய் காண்கிறது இந்தக் குரங்கை யெத்தனைதரங் கொன்றுலும் சற்றுநேரம்பொறுத்து சண்டைக்கு வருகிறது இந்தக் குரங்கை முன்னே கொல்லவேணுமென்று ஐம்பது நாராசபாணங்களை யெடுத்து வில்லிற்பூட்டி அனுமார்பேரில் விட்டானந்தபாணமானது நாகசற்பம்போற் சீறிக்கொண்டு வருகிறபோது சாம்புவந்தர் ஆகாயமார்க்கங் கிளம்பிவந்து ஐம்பது நாராசபாணங்களையும் பிடித்தொடித்துப் போட்டாரதுகண்டு குசலராசன் நகைத்து இருபது திவ்வியாஸ்திரத்தையெடுத்து சாம்புவந்தர்பேரில் பிரயோகம் பண்ணினுன் அதுகண்டு அனுமார் கெந்துபாய்ந்து இருபது திவ்வியாஸ்திரங்களையும் பிடித்து ஒடித்தெறிந்துபோட்டார். இந்தப்படியாய் குசலராஜன் விடப்பட்ட பாணங்களையெல்லாம் ஒடித்தெறிந்தார்கள்.

அப்போது குசலராசன் அதிககோபாக்கினியுடன் அக்கினியாஸ்திரத்தையெடுத்து வில்லிற்சந்தித்து மந்திராபூதிகளுடனே அனுமார்பேரிற் பிரயோகம்பண்ணினுன். அதுகண்டு அனுமார் வருகிற அக்கினியாஸ்திரத்தைப்பிடித்து முறுக்கிப் பிழிந்துபோட்டார் அதுபோகவே, குசலராசன் ஒருவேலெடுத்து பூசைசெய்து அனுமார் மார்புக்கு குறிபார்த்துவிட்டான் அந்தவேலாயுதமோ சுப்பிரமணியருடைய வேலாயுதம் அந்த வேலினுல் சூரபதுமனை ஜெயமடைந்தது. அப்படிப்பட்ட வேலாயுதத்தை மகாலட்சுமியான சீதையம்மன் வாங்கித் தன் பிள்ளை குசலனுக்குக் கொடுத்தாள். அதனை அனுமார்பேரில் விட்டபடியினுல் அதுபுறப்பட் டாயிரத்தெட்டண்டமுநடுங்க ஆங்கார ஓங்கார ரீங்கார சத்தத்துடன் அக்கினிச்சுவாலைகள்

ஜொலிக்க வருவதை சாம்புவந்தர் கண்டு இதென்ன யுகமுழு கிப் போவதுபோல வருகின்றதே இந்த வேலாயுதத்தைத் தடுக்க நம்மாலாகாது ஸ்ரீராமராண்டால் நயமென்ன குசல னுண்டால் நஷ்டமென்ன போம்போம் அனுமாரே யென்று சாம்புவந்தர் பின்னிடைந்தார்.

அதுகண்டு அனுமார் நகைத்து அதிசீக்கிரமாய் விஸ்வ ரூபத்துடன் முன்கையிற் பிடித்து அடிமானங்கறுத்து, நுனி மானஞ்சிவந்து, நடுமானம்மின்னல்மின்னி, உச்சியில் பேரிடி யிடித்தா லெப்படியிருக்குமோ, அப்படியாக வேலாயுதத்தின் பேரில் தபாலென் றொருகுத்தானது விட்டார் அப்போதந்த வேலானது பின்னிடைந்து மறுபடியு முருவுகொண்டு அனு மார்பேரில் வருகிறபோது அனுமார் சற்றும் பயமில்லாமல் ஸ்ரீராமாவென்று ஆகாயமெழும்பி வேலாயுதத்திற் குறுக்கே பாய்ந்து வேலாயுதத்தைப்பிடித்து முழங்காலில் வைத்து இரு துண்டாய் ஒடித்தெறிந்துபோட்டார். மறுபடியும் வேலாயுத மானது இருதுண்டும் ஒன்றாய்க்கூடி மகா உக்கிரத்துடன் அனுமாருடைய மார்பில் வந்து பாய்ந்து உருவமாட்டாம லுருவிப்போய் திருப்பாற்கடலில் ஸ்நானம்பண்ணி குசலரா சனுடைய அம்புறுப்பொதியில் வந்தடைந்தது. அனுமாரா னவர் ஸ்ரீராமா ராமாவென்று வாய்விட்டலறி பர்வதம்போல பூமியிற் சாய்ந்துவிட்டார். அதனால் சுவர்க்கவாசிகள் துயர மடைந்தார்கள். அப்போது சாம்புவந்தர் பசங்கள் கண்ணி லகப்படலாகாதென்று பதுங்கி யொதுங்கிப் போகிறவரை குச லராச னெதிரோடி வளைத்துக்கொண்டு பாணப்பிரயோகம் பண்ணினன், அப்பாணங்கள் சாம்புவந்தர்மீது வந்துதைக்க வே சாம்புவந்தர் இந்த சண்டை நமக்குவேண்டாமென்று போகிறவன்மீது வலிய சரங்களை விடுகிறானே இந்தக் குசல னுடைய ஆண்மைதானென்ன இவனுடைய புஜபலபராக்கிர மந்தானென்ன இலட்சுமணர் அனுமார் முதலாயினோர் விழு ந்துபோனார்கள். நாம் சும்மா போகிறோமென்றாலும் பாணம் விட்டுக் கொல்லுகிறான். இதற்கென்ன செய்வேன் ஓய் ஸ்ரீ ராமராமா எங்களை யிந்த பசங்கள் கையிற் காட்டிக்கொடுத்து நீர் அயோத்தியில் இருக்கலாகுமோ ஸ்ரீராமா ராமாவென்று கன்றைப்பிரிந்த பசுவைப்போல சாம்புவந்தர் கதறி மூன்று தரம் ராமநாமத்தைச்சொல்லவே சாம்புவந்தருக் கிரட்டிப்பு பலமுண்டாகி தைரியமேலிட்டு தன்மேற்படிந்த அம்புகளை

யெல்லாம் பிடிங்கி யெறிந்துவிட்டு குசலராஜன் முன்னுக்குத் திரும்பி இராட்சதாளேறிவந்த இரதங்களையெல்லாம் வாரி வாரி குசலராஜன்பேரில் விட்டெரிந்தார். அதுகண்டு குசல ராஜன் கோபமாகி ஐம்பது அர்த்தசந்திராஸ்திரத்தை யெடுத்துவிட்டு வருகிற இரதங்களையெல்லா மறுத்து அதனமாய் நூறு நாராசபாணங்களெடுத்து சாம்புவந்தர்பேரிலே பிரயோகம் பண்ணிவிட்டான். அந்த நூறு நாராசபாணங்களும் சாம்புவந்தர்பேரிலே வந்துபாய்ந்தது. அதனாலே சாம்புவந்தருக்குச் சரீரம் தொந்து கைகால்களை யுதறிக்கொண்டு ஸ்ரீராமா ராமாவென்று பூமியிலே விழுந்து மூர்ச்சை யடைந்தார். பூமிவுண்டாகி மூன்றுநாட் பிறந்தவராகிய சாம்புவந்தரானவர்.

அப்போது 102-வெள்ளம் வானராளும், 25-வெள்ளம் ராட்சதாளும் ஐயாயிரம் இராஜகுமாரர்களும், மாண்டு, மந்திரிபிரதானிகளுமிறந்து, இரத்தவெள்ளம் ஆறாக ஓட அந்த இரத்த வெள்ளத்திலே தலையில்லாத முண்டங்களெழுந்து கூத்தாட, அந்த முண்டங்கள்பேரிலே கழுகுகளேறிக் கூத்தாடிக்கொண்டுபோக, டாகினி, ஜாகினி, பூதபைசாசங்கள் பிணங்களின் சதைகளைப் பிடுங்கித்தின்று, உதிரங்களைக்குடித்து, கழுத்தில் பேரிகைகளை மாட்டிக்கொண்டு அயோத்தியை நோக்கி இன்னஞ் சண்டையுண்டோவென்று பேரிகை வாத்தியங்களை முழக்கிக்கொண்டு ஓடுகிற உதிரவெள்ளத்திலே ஓடுகிறதும், அப்போது குசலவர்கள் வில்நாணியைத் தளர்த்தி ஒருவர்க்கொருவர் சாமார்த்திய வார்த்தைகளைப் பேசிக்கொண்டு சரஸ்வதியாற்றில் ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு காமதேனுவால் பஞ்சகச்சாய வர்க்கங்களுஞ் சாப்பிட்டு கதம்பகஸ்தூரி பரிமளாதிகளை யணிந்து மரத்தடியில் கட்டியிருக்கின்ற ஒருலட்சண அஸ்வத்தண்டையில் வந்து உட்கார்ந்துக்கொண்டு அஸ்வத்தினுடைய இலட்சணத்தையும் குறிகுணத்தையும் பார்த்துக் குசலன் சொல்லுகிறான். வாரும், தம்பி லவனே இந்த அஸ்வத்தை நம்முடைய தாயாரிடத்திற்குக் கொண்டுபோய் காண்பித்து நாமேறிக்கொண்டு திரிவோமென்றான் குசலராசனானவன். அப்படி ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கிறபோது பரதருடைய தண்டானது பாலவனங்கடந்து சரஸ்வதியாற்றின் சமீபத்தில்வந்தன.

அதுகண்டு குசலன் தம்பி லவனைநோக்கிச் சொல்லுகிறான். வாருந்தம்பி லவனே? இன்னம் ஸ்ரீராமபிரானுக்கெவ்வளவு சேனைத்திரள்தா னிருக்கிறதோ தெரியவில்லை ஆனாலும் இப்போது வெகு சேனைத்திரள் வருவதுபோற் காணுகின்றது இன்றைக்கு யுத்தத்திற்கு வருகிறவன் நல்லபலவான்போற் காணுகின்றது நாம் ஜாக்கிரதையுடனே யுத்தஞ்செய்ய வேணுமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் பரதாழ்வாருடைய தண்டானது இரணக்களம்வந்து சூழ்ந்துக்கொண்டு குசலவர்க ளெங்கே எங்கேயென்று தேடும்போது பொழுதுவிடிந்தது சூரியபகவானும் பரதாழ்வாருடைய யுத்தத்தைப் பார்க்கவந்தவர்போல உதயகிரி பர்வதத்தில் வந்து உதயமானர் அப்போது தேவசுந்தரன் யானைகளை யொருபக்கத்திலும் இரதங்களை யொருபக்கத்திலுஞ் சேனைகளை யொருபக்கத்திலும் ராஜகுமாரர்களையும் பரதாழ்வாரையும் நடு அணியில் நிறுத்தி தானே யுத்தசன்னத்தனாக இரதமேறி வில்லை வளைத்து குணத்தொனிபண்ணினான்.

அதுகண்டு குசலவர்கள் வில்லைவளைத்து நாணிபிகிந்து தண்டிருக்குமிடமே வந்தார்கள். அப்போது தேவசுந்தரன் குசலவர்கள் முன்னுக்கு இரதத்தைநடத்தி குசலவர்களைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான். வாருந்தம்பி சிறுபிள்ளைகளே இந்தப்படி ஸ்ரீராமபத்திர சுவாமியாருடைய தண்டுகளை ஏன் வீணிலே கொல்லுகிறீர் உங்களை என்ன பண்ணினார்கள் நீங்கள் சிறுபிள்ளையென்று உங்களுக்கு ஞாயஞ்சொல்ல வந்தபேரையெல்லாங் கொன்று போட்டீர்கள். ஸ்ரீராமபத்திரசுவாமியார் பாணப்பிரயோகம் பண்ணினால் நீங்கள் தெய்வலோகம் பிரமலோகம் வைகுந்தம்போனாலும் விடாது விடாதேயென்று சொல்லினான் அதுகேட்டு குசலராசன் கண்களிரண்டுஞ் செவ்வானம்போற் சிவந்து காதுகளிரண்டிலும் புகைகளெழும்ப கைகளிரண்டும் பதைபதைக்க கால்களிரண்டுந் துடிதுடிக்கக் கோபமாகி தேவசுந்தரனைப் பார்த்து ஒரு விசேஷம் சொல்லுகிறான். அடா! இராட்சதப் பட்டிமகனே? யென்னவார்த்தைசொன்னாய் ஞாயஞ்சொல்ல வந்தபேரையெல்லாம் கொன்றதா யல்லவோ சொல்லுகிறாய், நீ ஆண்பிள்ளையானால் பாணத்தைவிட்டு யுத்தம்பண்ணி யென்னை ஜெயங்கொள்ளடா, இராட்சதனேயென்று வில்லிலநேக பாணங்களைச் சந்தித்துவிட்டு தேவசுந்தரன் ரதத்தைப் பத்தல் பத்த

லாக உடைத்தெறிந்தான். உடனே தேவசுந்தரன் லகுவிற் குதித்து மறுதேரிலேறி வில்லைவளைத்து அனேகபாணங்களை ப்பூட்டி மழைமாரி பொழிவதுபோற் பிரயோகம் பண்ணி விட்டான். அதுகண்டு குசலராஜன் வில்லிலனேக பாணங் களைத் தொடுத்துவிட்டு தன்பேரில் வருகிற பாணங்களையெ ல்லா மறுத்து வெட்டவெளியாக்கி அதிகமாய் நூறு பாணம் விட்டு கால்கைக ளாடவொட்டாமலும் வில்லைப் பிடிக்கவொ ட்டாமலும், அஸ்திரங்களைப் பூட்டவொட்டாமலும், சாரதி ரதத்தை நடத்தவொட்டாமலும், பிரமிக்கச் செய்துவிட்டு இரதத்தையும் உடைத்தெறிந்தான்.

அப்போது தேவசுந்தரன் லகுவிற்குதித்து மறுதேரிலே றிக்கொண்டு இராட்சதாளை யேவிவிட்டுத் தானும் வில்லி லனேக பாணங்களைப்பூட்டி மழைமாரி சொரிவதுபோல பொ ழிந்துவிட்டான். 102-வெள்ளம் இராட்சதாளும் ஆளொன் றுக்கு நூறு பாணப்பிரயோகம் பண்ணினார்கள் அதுகள் எத் தனை பாணங்களாகுமோ, அத்தனை பாணங்களுக்குக் குசல வர்கள் பதிலஸ்திரங்கள் ஒன்றரை நாழிகை பரியந்தம் விட்டு அறுத்துத் தள்ளியும் மாளாமலும் பாணங்களானது சூரியனை மறைத்துக்கொண்டு காரிருள் சூழ்ந்துக்கொண்டது.

அவ்வேளையில் குசலவர்கள் அனேக பாணங்களை விட்டு தங்கள்பேரில் அநேகமாய்வருகிறபாணங்களை எல்லாமறுத்து வெட்டவெளியாகக்கண்டு சற்றுகிலும் பயப்படாம லெதிர்த் துப் பாணங்களைவிட்டு இராட்சதாளைக் கொல்லுகிறபோது இராட்சதாள் கால்வேறு, உடல்வேறு, சதைவேறு, வேறு வேருக விழத்தலைப்பட்டார்கள். யானைகளோவென்ருல் மத்த கம் பிளந்தும், காலறுந்தும், வாலறுந்தும், முகமறுந்தும், தும்பிக்கையறுந்தும், துடையறுந்தும், விழுந்ததுகள். குதி ரைகளோவென்ருல், கால்வேறு, வால்வேறு, உடல்வேறு, தலைவேறு, இப்படியறுந்து விழுந்ததுகள். இரதங்களோ வென்ருல, அச்சுமுறிந்தும், ஆணிசுழன்றும், மச்சுமுறிந் தும், துஜமறுந்துஞ் சாரதி தலையறுந்துங், கொடையறுந் தும், இராஜமுடிகளறுந்துஞ், சவுடால்கள் முறிந்துங், கல் லணைகள் முறிந்தும், இந்தப்படி பத்துவெள்ளம் இராட்ச தாள் மாண்டு இரத்தவெள்ள மோடிற்று. மற்ற இராட்சதர்க ளோவென்ருல் உயிரிருந்தால் உப்புமாரி பிழைக்கலாம் இந்த சண்டை நமக்கு வேண்டாமென்று ஓடத்தலைப்பட்டதுகள்.

அதுகண்டு தேவசுந்தரனானவன் இரதத்தை நடத்தி இராட்சதாள்முன் கொண்டுவந்து இராட்சதாளை மடக்கிக் கொண்டு ஒரு வசனஞ் சொல்லுகிறான். அடா! இராட்சதர்களே? ஏன் ஓடுகிறீர் இப்போதென்ன முழுகிப்போச்சுது நீங்கள் முன்னே நல்ல யுத்தங்களிற் கைகண்டவர்களாச்சுதே உங்களை இப்போ தேவர்கள் கண்டால் நகைப்பார்களே, ஸ்ரீராமத்துரோகிக ளாகவேண்டாம். ரோஷத்துவேஷத்தோடு நின்று யுத்தஞ் செய்யவேண்டும் வாங்களென்று ஒன்றாய்க் கூடி கத்தி கேடயம் ஈட்டி எறியீட்டியென்று சொல்லப்பட்ட 32-ஆயுதங்களுடன் குசலவர்களை வளைத்துக்கொண்டு நாலு பக்கத்திலும் குடைசூழ்ந்தா லெப்படியோ, அப்படி அறுபது வெள்ளம் ராட்சதாளும் றிவ்றிவ்வென்று புற்றிலிருந்த ஈசல் கிளம்பினா லெப்படியோ, அப்படிபோல் ஆயுதங்களை சுழட்டி விட்டுக்கொண்டிருக்கும்போது தேவசுந்தரனும் வில்லில் அநேக பாணங்களைச் சந்தித்துவிட்டான். அதுகண்டு குசலவாள் அதிக கோபங்கொண்டு அநேகபாணங்களை எடுத்துக் கடுகடுத்து வில்லிற்றொடுத்து விடுத்து தங்கள்பேரில் வருகிற ஆயுத அஸ்திரங்களையெல்லா மறுத்துத் தள்ளினதுமன்றி ஐம்பது வெள்ளம் இராட்சதாளைக் கொன்றுபோட்டார். அப்போது இரத்தாரோடத் தலைப்பட்டது. அதுகண்டு தேவசுந்தரன் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்துவிட்டான். அது கண்டு குசலவாள் அதிக கோபங்கொண்டு அநேக பாணங்களை எடுத்துக் கடுகடுத்து வில்லில் தொடுத்து விடுத்து தங்கள் பேரில் வருகிற ஆயுத அஸ்திரங்களை யெல்லா மறுத்துத் தள்ளினதுமன்றி 50-வெள்ளம் இராட்சதாளையுங் கொன்றுபோட்டா ரப்போது இரத்தாரோடத் தலைப்பட்டது. அது கண்டு தேவசுந்தரன் வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து விட்டான். குசலராஜன் நூறு அர்த்தசந்திராஸ்திரத்தை வில்லிற் சந்தித்து விட்டு தேவசுந்தரனுடைய இரதஞ் சாரதி குதிரைகளுடனே தும்சம்பண்ணினான். அந்தச் சமயத்தில் குசல்ராஜனானவன் இராட்சதப்படைகள் பேரிலும் இராட்சதப்படைத் தலைவர்பேரிலும் பாணப்பிரயோகம் பண்ணிக்கொல்லுகிறபோது குசலர்ராஜன் கையில் நூறு வெள்ளம் இராட்சதர்களுள் சில இராட்சதப்படைத் தலைவர்கள் தவிர மற்றவர்கள் லவன் கையில் மாண்டுபோனார்கள். அப்போது இராட்சத தண்டில் பெரிய சத்தமுண்டாயிற்று அந்தச் சத்தம் பர

தாழ்வார் கேட்டு சாரதியை அதட்டினார். உடனே இரதமுங் குசலராஜன் முன்னுக்கு வந்துவிட்டது.

அப்போதனுமார் மூர்ச்சைதெளிந்து இராட்சதாள் யுத்தம் பண்ணுகிறதையும், பரதமகாராஜன் வந்துவிட்டதையுங் கண்டு பெருஞ் சந்தோஷமடைந்தார். அத்ததியில் சாம்புவந்தர் மூர்ச்சைதெளிந்து குசலவர்களுக்குப்பயந்து செத்துகிடக்கிற பிணங்களைவாரி மேலே போட்டுக்கொண்டு கண்ணைமூடி சுவாசத்தைப் பந்தனஞ் செய்துக்கொண்டிருப்பதை அனுமாரறிந்து நகைபுரிந்து சொல்லுகிறார். ஐயா சாம்புவந்தரே நீரிப்படிசெய்தால் மற்றவர்க ளெப்படிசெய்யார் பரதமகாராசனும் தண்டுடன்வந்து யுத்தம்பண்ணுகிறார். இந்தச் சமயத்தில் நாம் சும்மா யிருக்கப்போகாது இராமத்துரோகம் வந்து சித்திக்குமென்று சொல்லுகிற அனுமாரை சாம்புவந்தர் கண்ணைத்திறந்து பார்த்துச் சொல்லுகிறார். இலட்சுமணரைப் பார்க்கிலும் பரதமகாராசன் சாமார்த்தியனோ எல்லாம் பொழுதுபோனால் தெரியும். அந்தப் பசங்கள் நம்மைக் கண்டால் சும்மாவிடமாட்டார்கள் முன்பின் பாராமல் பாணம் விட்டுக் கொன்றுகொண்டே யிருக்கிறார்கள். நான் வரமாட்டேனென்றான். அதுகேட்டு அனுமார் மனதிடஞ்சொல்லி கூட்டிக் கொண்டு பரதமகாராசனைக்கண்டு சேவித்து ஆசீர்வாதங்கள் பெற்று ஒருவசனஞ்சொல்லுகிறார் கேளும், பரதமகாராசனே? ஸ்ரீராமரைப்போல அழகும் வடிவுமுள்ளவர்களா யிருக்கிறார்கள். நாம் சந்துருஷ்டியுடனே அவர்களிடத்திற்கு போனால் உடனே பாணம்விட்டுக் கொல்லுகிறார்கள். நாம் நியாயஞ் சொன்னாலும் அவர்கள் கேளாரென்று சொன்னார்.

அதைப் பரதாழ்வார் கேட்டு சொல்லுகிறார் அந்தச் சிறுபிள்ளைக ளத்தனை சூரரோ அப்படி சூரரானால் தனுர்சாஸ்திர விதிப்படி யுத்தம் பண்ணுவார்களல்லவோ, அந்த சாமார்த்தியத்தை ஒருக்கண நேரத்தி லறிகிறேன் பாரென்றுசொல்லி குசலவாளைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார். வாருந் தம்பி! சிறுபிள்ளைகளா? உங்கள் தாய் தகப்பன் பேரென்ன உங்கள் குலம் யாதென்று எனக்குத் தெரியச் சொல்லுந் தம்பி யென்றுரதுகேட்டு குசலன் சொல்லுகிறான். ஓ! இராசனே? யுத்தத்திற்கு வந்தபேருக்கெல்லாம் என் தாய் தகப்பன்பேரையும் எங்கள் பேரையுஞ் சொல்லிக்கொண் டிருக்கிறதோ, ஆனாலுஞ் சொல்லுகிறேன் கேளும், என் தாய்பேர் ஜானகியம்

மாள், எங்களையர்பேர் வால்மீகரிஷி, எங்கள் குலம் எனக்குத்
தெரியவராது. என்பேர் குசலன், என் தம்பி பேர் லவன்,
என்றானதைக்கேட்ட பரதாழ்வார் யோசனைப்பண்ணிச் சொல்
லுகிறார். வாருந் தம்பி குசலனே உன் தாய் பேர் ஜானகி
யம்மாள் என்று சொன்னபடியினாலே உங்களுடனே யுத்தம்
பண்ணமாட்டேன் என்னுடைய சேனைகளையுஞ் சகோதரர்
களையும் மற்றுமுள்ளஉறவின்முறை கூட்டங்களையுமெழுப்பிக்
கூட்டிக் கொண்டுபோய் அஸ்வத்தை யழைத்துக் கொண்டு
அயோத்திக்குப்போய் யாகஞ் செய்வித்துக் கொள்ளுகிறேன்
நீங்களுந் தாயுடன் பிள்ளையாய்ப்போய்ச் சேருங்களென்றார்.
அதைக்கேட்ட குசலன் ஒருவசனஞ் சொல்லுகிறான். ஓ! இரா
சனே? நல்ல விசேஷஞ் சொல்லவந்தாய், உன் தம்பி சத்துரு
க்கன் என் தம்பியை மூர்ச்சையாக்கி இரதத்திற்கட்டிக்கொண்டு
வந்துவிட்டான் அந்தச் சங்கதி என் தாயாரறிந்து என்னை
யழைத்துச் சொன்னது என்னவென்றால், உன் தம்பியை
யாரோ ஒரு அரசன் மூர்ச்சையாக்கி கட்டிக்கொண்டு போய்
விட்டானும் அவனையுஞ் செயித்து அவனுக்கு உபபலமாக
வருகிறவர்களையுஞ் செயித்து உன் தம்பியை விடுவித்துக்
கொண்டுவா மகனேயென்று அனுப்பிவைத்தபடியினாலே அந்
தப்படியே நான் உன்தம்பி சத்துருக்கனை செயித்து அவனுக்கு
உபபலமாய் வந்த இராசாக்களையுஞ் சேனைகளையுங் கொன்
றேன் உன்னையுங் கொன்று இன்னம் வரப்பட்டவர்களையுங்
கொன்றுவிட்டுப் போவேனே யொழிய மற்றப்படி யோசிக்க
வேண்டாமென்றான். அதைக்கேட்ட பரதமகாராசன் குலுங்க
நகைத்துச்சொல்லுகிறார். வாருந்தம்பி குசலனே? என்தமைய
னுத்தரவின்படி உன்னையும் உன்தம்பி லவனையும் கைப்பிடியா
கப் பிடித்து வரச்சொன்னபடியினாலே நீங்கள் தடையின்றி
வந்தாலாச்சுது வராவிடில் உங்களை மூர்ச்சையாக்கிக்கொண்டு
போவேன் பாரென்றார்.

அதைக்கேட்ட குசலராசனுக்கு அதிககோபமாகிபரதாழ்
வானை நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறான். ஓ! இராசனே?
நல்ல வசனஞ் சொல்லவந்தாய் உன் சொற்படி எங்களைப்
பிடிக்கவந்தபேரெல்லாம் உனக்கு முன் மாண்டு கிடப்பதை நீ
பார்க்கவில்லையோ உங்களுக்குச் சேனைகள் மிச்சமாயிருக்கு
தென்று ஒட்டைத் தப்பட்டை தமுக்குகளை யடித்துக்கொண்டு
இவ்விடத்திலோடி வருகிறதுஞ் சாகிறதும் உங்களுக்கொரு

வீரியம்போற் காணுகிறதென்றான். அதைக்கேட்ட பரதாழ்வார் ஏதடா குசலன் நம்மையெண்ணமற் பேசுகிறான். இவனுடைய ஆண்மைதானென்னவென்று இவனைக் கொன்றாலுந் தோஷமில்லை அப்படிக்கொன்றால் நமது தமையன்மனதிற்கு ஆயாசம் வருமேயென்று யோசனை பண்ணி குசலவனைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார். அடா! குசலனே? நாங்கள் ஒரு ஓட்டைத் தமுக்கை யடித்துக்கொண்டு ஓடிவருகிறதுஞ் சாகிறதும் எங்கள் சாமார்த்திய மென்றல்லவோ சொல்லுகிறாய், இப்போது உன் தம்பியைக் கூட்டிக்கொண்டு தாயுடன் பிள்ளையாய்ப் போய்ச்சேர் இல்லாவிடி லுங்களைக் கொன்று விடுவேன் பாரென்றார்.

குசலராசனுக்கும் பரதமகாராசனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

மண்ணும்விண்ணுங் கலங்கவறிச்சிலை
எண்ணுதற்கரிய தாகவளைத்தலால்
கண்ணுதலி லெழுந்தகணலெண
பண்ணுவர்களும் பார்த்துவெருண்டனர்.

அதைக்கேட்ட குசலராசன் கண்களிரண்டுஞ் செவ்வானம்போற் சிவக்க காலாக்கினி ருத்திரனைப்போலச்சீறி வில்லை வளைத்து நாணிபூட்டி அநேக அஸ்திரங்களையெடுத்து கடுகடுத்து வில்லிற்றொடுத்து விடுத்து பரதமகாராசனை நோக வெய்தான் அதுகண்டு பரதாழ்வார் பாலன் பாணமிஞ்சினானென்று வில்லையெடுத்து நிறுத்தி அநேகபாணங்களைச் சந்தித்து பிரயோகம்பண்ணினார் அது அவயத்திலிருந்த தாகசர்ப்பம்போற் சீறிக்கொண்டு வரும்போது குசலராஜன் கண்டு அதிகசீக்கிரததில் 45-வாய்வாஸ்திரமெடுத்துவிடுத்துபாதனுடைய அஸ்திரத்தை யறுத்துத் தள்ளி அதனமாக நூறு திவ்வியாஸ்திரத்தை வில்லிலேசந்தித்துப் பிரயோகம்பண்ணி விட்டான். அதுகண்டு பரதமகாராசன் மகாகோபமாகி 150-திவ்வியாஸ்திரத்தையெடுத்து வில்லில் தொடுத்து விடுத்துக் குசலராசன் விடுத்த நூறு திவ்வியாஸ்திரங்களையு மறுத்து அதனமாய் 50-திவ்வியாஸ்திரமெடுத்து வில்லிற் சந்தித்து விட்டு குசலராஜன் கைகாலாடவொட்டாமலும், வில்லை பிடிக்கவொட்டாமலும் பாணங்களையெடுக்கவொட்டாமலும், அங்

கே நிற்கவொட்டாமலும், இரண்டுநாழிகை பரியந்தம் பிர மிக்கப்பண்ணி பின்னையுமிரண்டு திவ்வியாஸ்திரங்களை விட்டு குசலராசனுடைய சரீரங்களையெல்லாஞ் சல்லடைக்கண்களா கத் துளைத்துவிட்டு இரண்டு சிங்கமுகாஸ்திரத்தை யெடுத்து விட்டுவிட்டான். அந்த சிங்கமுகாஸ்திரங்கள் வில்லைவிட்டு விடுபட்டு சிங்கத்தைப்போற் சீறிக்கொண்டு அதிக வேகத் துடனே வந்து குசலனுடைய வில்நாணியைப் படீலென்ற றுத்து குசலனுடைய நெற்றியிற் பாய்ந்து உருகிப்போகவே உதிரவெள்ளம் ஆறுபோயோடிற்று. அப்போது குசலராஜன் பாணம்பட்டு நிர்வாகம்பண்ணமாட்டாமல் வில்லை நழுகவிட்டு அம்மா சீதாவென்று புலம்பி பூமியில் விழுந்து மூர்ச்சை யடைந்தான்.

அதுகண்டு அனுமார், சாம்புவந்தர் முதலானபேர்களுந் துயரப்பட்டார்கள். பரதமகாராஜன் சந்தோஷமாயிருக்கிற தையொழிந்து இரதத்தைவிட்டுக் கீழேகுதித்து வில்லையுங் குசலனையு மெடுக்கவோடிவந்தார். அந்தச்சமயத்தில் இராட் சதாளுடனே யுத்தம் புரிந்துக்கொண்டிருக்கும் லவன் வந்து பரதமகாராஜனுக்குங் குசலன் மூர்ச்சையடைந்திருக்கிறயிடத் திற்கு மத்தியில் சரக்கூடம்போட்டு பரதனை மடக்கிவிட்டு குசலனையெடுத்து மூர்ச்சை தெளியவைத்தான். அதுகண்டு அனுமார், சாம்புவந்தர், இலட்சுமணருடைய பலாபலத்தி ற்கு பரதருடைய பலாபலமெவ்வளவென் றிருந்தோமே இப் போதிவருடைய பலாபலந் தெரியவந்தது பரதனுடைய பலாபலத்துக்கு குசலன்கூட எதிர்நின்று போராட மாட்டான் போற்காண்கின்றது எல்லாமின்னமரைநாழிகையிற் றெரிய வரும் நாம் மௌனமாய் இப்போதிருக்கக்கூடாதென்று பரத ருடனே கூடிக்கொண்டு போனார்கள். அப்போது பரதமகா ராஜன் தேரிலேறி வில்லிலநேககரோமானபாணங்களைச் சந்தி த்துவிட்டு சரக்கூடத்தையறுத்தெரிந்தார். அதுகண்டு லவன் உக்கிராகாரத்துடன் வில்லையெடுத்து நிறுத்தி குணத்தொனி பண்ணி வில்லிலனேக பாணங்களைப்பூட்டி பரதமகாராசருக் கும் அனுமாருக்கும் சாம்புவந்தருக்கும் லக்குபார்த்து விட்டு விட்டான். உடனே பரதமகாராஜன் சிலபாணங்களை விட்டு தங்கள் மூவர்பேரிலேயும் வருகிற பாணத்தையெல்லா மறுத் துப்போடவே, அப்போ தனுமாருஞ் சாம்புவந்தரும் பரத மகாராஜனை மெச்சினார்கள்.

அதுகண்டு லவன் பல்லை நெறநெறவென்று கடித்து அதிகோபத்துடனே வில்லில் ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்-பதினாயிரம்-நூறாயிரம்-கோடி-சங்கம்-மகாசங்கம்-அற்புத நிற்புதமென்று ஆச்சரியப்படத்தக்கதாக கணக்கிலடங்காத பாணங்களைச் சந்தித்து விட்டுவிட்டான். உடனே பரதமகாராஜன் வில்லில் அநேக ஸ்ரீராமபாணங்களைத் தொடுத்து அறுத்துப் போட்டு அதனமாய் ஐந்து பாணங்களைவிட்டு லவன் பிடித்திருந்த வில்லையுங் கண்டித்து பத்தலாய்க் கிழித்துப்போட்டு லவனுடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான் அதனாலே அவன் மிகவும் நொந்து தைரியம்விடாமல் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு வில்லிலே கடோமாயிருக்கப்பட்ட பாணங்களைச் சந்தித்துவிட்டு பரதமகாராஜனைக் கைகாலாடவொட்டாமலும் வில்லைப்பிடிக்கவொட்டாமலும் வில்லில் பாணங்களைத் தடுக்கவொட்டாமலும், செய்துவிட்டு பரதமகாராஜனுடைய சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டானதனாலே பரதமகாராஜன் மிகவும் நொந்து தைரியம் விடாமல் சிங்கமானது குகையிலிருந்து சீறிக்கொண்டுவந்தாலெப்படியோ அப்படிபோல அதிக உக்கிராகாரத்துடன்சீறி ஸ்ரீராமபாணங்களை வில்லில் தொடுத்துவிடுத்து லவனுடைய வில்லை இரண்டுதுண்டாய் உடைத்தெறிந்து அவன் மார்பையும் பத்தலாய்க் கிழித்தெறிந்துபோட்டார் அப்போது லவன் கைவில்லை நழுவவிட்டு அம்மா சீதா சீதாவென்று பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்தான். அதுகண்டு தேவர்களெல்லாம் துயரமானார்கள். பரதமகாராஜன் சந்தோஷமாகினான் அனுமாரும், சாம்புவந்தரும், குசலன் மூர்ச்சைதெளிந்திருக்கிறான் எல்லாம் பொழுதுபோனால் தெரியவருமென்று மவுனமாயிருந்துவிட்டார்கள்.

அதுகண்டு குசலராஜன் சீதாலட்சுமியுடைய பரம கிருபையால் எழுந்து பிரசண்டகோதண்டத்தைக் கையிலெடுத்து குமுகுமுவென்று குணத்தொனிபண்ணி வில்லிலே ஒன்று-பத்து-நூறு-ஆயிரம்-பதினாயிரம்-லட்சம்-கோடி-சங்கம் - மகாசங்கம்-அற்புதம் நிற்புதமென்று சொல்லப்பட்ட கணக்கிலடங்காத பாணங்களைப்பூட்டி சாமம்வரையில் மழைகாலத்தில் மாரிபொழிவதுபோல் கட்டுகட்டாயுருவி கைசலியாமல் விட்டுவிட்டான். அந்த பாணங்கள் வில்லைவிடுபட்டு புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப்போல் ஒன்றின்மேலொன்றாய் சிடசிடவெ

ன்ற தொனிகளுடனே அக்கினிபொறிகள் சிதறும்படியாய் அதிவேகத்துடனேவந்து பரதமகாராஜன்பேரில் வருகையில் அப்போது பரதமகாராஜன் தன்பேரில் வருகிற அஸ்திரங்களையெல்லாமறுத்து அதனமாய் 500-பாணத்தை யெடுத்து விட்டான். அதுகண்டு குசலராஜன் 4-நாராசபாணங்களைவிட்டு அறுத்துத்தள்ளி அதனமாய் 100- அர்த்தசந்திராஸ்திரத்தையெடுத்து வில்லிலேதொடுத்து கடுகடுத்துவிடுத்து கைகாலாடவொட்டாமலும், ஒருநாழிகை பரியந்தம் பிர்மிக்கச்செய்து அதனமாய் 2-பாணம் விட்டுவிட்டான். அந்த பாணங்கள் பரதருடைய நெற்றியில்பட்டு உதிரவெள்ளம் ஆறுயோடத்தலைப்பட்டது அதனாலே பரதர் மிகவாய் நொந்து கையில்லை நழுகவிட்டு தேரில்விழுந்து ஸ்ரீராமாராயாவென்றுமூர்ச்சையடைந்தார். அப்போது தேவர்களெல்லாம் துயரமானார்கள். குசலராஜன் அதிக சந்தோஷமுற்று தம்பி லவனை வாரியெடுத்து மூர்ச்சைதெளிவித்தான், லவனுஞ் சீதாலட்சுமியை அபார கிருபாகடாட்சத்தினாலே மூர்ச்சைதெளிந்து எழுந்து இருவரும் இராட்சதாள்பேரில் பாணங்களைப் பிரயோகம்பண்ணினார்கள்.

அதுகண்டு அனுமார் சாம்புவந்தர் ஒருபெரிய ஆலவிருட்சத்தை மடமடவென்று பிடுங்கி அடியும் நுனியும் தரித்துப்போட்டு நடுத்தண்டை தண்டாயுதமாக ஒருகையிற் பிடித்துக்கொண்டு குசலவர்கள் முன்னேவந்து நின்றுக்கொண்டு அனுமார் ஒரு வசனஞ் சொல்லுகிறார். அடா! குசலவர்களே? ஏன் தலைகீழாய் விழுந்துபோகிறீர்கள் கையிலாகாத சிலபேரைக் கொன்றோமென்று கெர்வம் வேண்டாம் அந்தத்துள்ளலை ஒரு க்ஷணநேரத்தில் காட்டுகிறேன் பாரடா, இதோ என் கையிலிருக்கிற விருட்சத்தைப் பார்த்தாயோ, நாங்கள் எத்தனையாய்ச் சொன்னாலுங் கேளாமென்றீர்கள். ஸ்ரீமந்நாராயணராய் விளங்கப்பட்ட ஸ்ரீராமர் வரும்படியாய்ச் செய்கிறீர்கள் அவர் வந்தாரேயானால் அவர் முன்னின்று எதிர்த்து போராடமாட்டீர்கள் உங்களுடையபாணம் அவரை யென்ன செய்யக்கூடும் ஒன்றுஞ் செய்யமாட்டாது எங்கள் வார்த்தையைக்கடவாமல் அஸ்வமேதக்குதிரையை விட்டால் நாங்கள் எங்களுடைய ஜனங்களை எழுப்பிக்கொண்டு போகிறோம் இல்லாவிடில் ஸ்ரீராமரிவ்விடம் வருவார் நாங்களுங்களை ஜெயிக்கமாட்டோமென் றெண்ணாதீர்கள்.

அதுகேட்டு குசலராஜன் லவனை நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறான் வாரும், தம்பி லவனே? செங்குரங்குங் கருங் குரங்குஞ் சொன்ன வார்த்தையைக் கேட்டாயோ, நாம் எத்தனைபாணம் விட்டுக்கொன்றாலும் மறுபடியும் எழுந்து வந்து யுத்தம்பண்ணுகிறார்கள். இவர்களுக்குச் சாவுதானில்லையோ எண்ணுஞ் சிரஞ்சீவியோ, தெரியவில்லையென்றான். அது கேட்டு லவன் சொல்லுகிறான் வாரும் அண்ணாவே, காட்டி லே வாசம்பண்ணப்பட்ட குரங்குகளுக்கு எண்ணுஞ் சிரஞ் சீவியேது? காட்டிலே வாசம்பண்ணின வானரங்களுக்கு தலைமையான குரங்குகள் இதுகளுக்கு ஸ்ரீராமர் பாஷையைக் கற்றுக்கொடுத்து தன்னிடத்தில் சேவகத்துக்கு வைத்துக்கொண்டிருக்கிறான்போற் காண்கிறதென்றான். அதுகேட்டு குசலராசன் சிறுபிள்ளையானபடியினாலே எத்தனை வேதசாஸ்திரங்களைப் படித்திருந்தாலுஞ் சிறுபிள்ளைகளுடைய பாலிய புத்தியினாலே அனுமாரையும், சாம்புவந்தரையும் பார்த்துச் சொல்லுகிறான். அடா வானரர்களே கேளும் நாங்கள் பிடித்த குதிரையை விடுவிக்க அரியரப்பிர்மாதிகள் வந்தாலும் எதிர்த்து யுத்தம் பண்ணுவோம் தெரிந்துக்கொள்ளுங்கள் நான் உங்களை எத்தனைதரங் கொன்றாலும் உங்களுக்குவெட்கமில்லாமல் எழுந்தெழுந்து யுத்தத்திற்கு ஓடிவருகிறீர்கள் நீங்கள் குரங்கென்றல்லவோ அசகாயமாய் விட்டுவிட்டோம் முன்னே உங்களைக் கொன்றுபோட்டு பின்பு இராட்சதானைக் கொன்று எமலோக மனுப்புகிறோம் பாரடாவென்றான்.

அதுகேட்டு அனுமார் குசலனைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார். உன்னைப்போலும், உன் தம்பி லவனைப்போலும், 1008-குசலவாள் வந்தாலும் எங்களிருவரையும் செயிக்க மாட்டார்கள். நாங்கள் வேணுமென்றால் நீங்கள் மிகவுஞ் சிறு பிள்ளைகளென்றும், ஸ்ரீராமருடைம் வார்த்தைக் கஞ்சுகிறோம். இல்லாவிடில் ஒரு கைகுத்தினால் எங்களை யமலோக மனுப்பிவிடுவோ மென்றார். அதற்குக் குசலராஜன் தம்பி லவனை நோக்கி, ஒரு வசனஞ் சொல்லுகிறான். வாருந்தம்பி லவனே செங்குரங்குங் கருங்குரங்கும் சொன்ன வார்த்தையைக் கேட்டாயோ, நீ கருங்குரங்குடன் சாக்கிரதையாய் யுத்தம் பண்ணி யெமலோக மனுப்பிவிடும். நான் செங்குரங்குடன் யுத்தம் பண்ணுகிறேனென்று அதிககோபத்துடனே தன் வில்லிலே அனேக நாராசபாணஞ் சந்தித்து விட்டுவிட்டான்.

அந்த நாராசபாணங்கள் வில்லைவிட்டு வெளிப்பட்டு காலக் கோடி விஷத்தைப்போல் சீறிக்கொண்டு அதிகவேகத்துடனே அனுமார்பேரில் வருகிறபோது அனுமாரானவர் தன்கையி லிருக்கிற விருட்சத்தினாலே அடித்துப் பாணங்களை வந்தவழி போனவழி தெரியாமலோட்டி விட்டார்.

அதுகண்டு குசலராசன் கடுங்கோபங்கொண்டு 10-திவ்வி யாஸ்திரத்தை யெடுத்துக் கடுகடுத்து வில்லிலே தொடுத்து விடுத்து அனுமார் பிடித்திருந்த விருட்சத்தை தூள்தூளாக் கிப்போட்டு அதனமாய் 5-நாராசபாணமெடுத்து அனுமார் மார்புக்கு லக்குபார்த்து விட்டுவிட்டான். அதுகண்டு அனு மார் கோபங்கொண்டு மார்பிற்பதித்த அஸ்திரங்களைப் பிடுங் கிப்போட்டு யானை தேர் பரி சேனைகளை வாரிவாரி குசலராஜன் பேரில்விட்டெறிந்துக்கொண்டேயிருந்தார். அதுகண்டுகுசல ராசன் அநேக பாணங்களை விட்டு அவைகளை யெல்லாம் தும் சம்பண்ணிப்போட்டு ஒரு சத்தியை எடுத்து பூசை நைவேத்தி யங்கள் செய்து விட்டுவிட்டான். அந்த சத்தியானது வில் லில் நின்றுவிடுபட்டு அண்டரண்டமதிர, அண்டத்திலுள்ள தேவர்களெல்லாம் நடுங்க ஆலகால விஷத்தை குபீல் குபீ லென கக்கிக்கொண்டு அக்கினிச் சுவாலையை எங்கும் வீசிக் கொண்டு அதிவேகத்துடனே அனுமார் எங்கே எங்கே யென்று வருகிறபோது அனுமார் கண்டு ஏதடா நம்மைக் கொல்லவே சத்தியை விட்டானென்று மனதில் கருதினவராய் கையை ஆகாயத்திலே ஓங்கிக் கிறுகிறுவென்று சுழட்டி சத்தி யின்பேரிலே ஒரு குத்துவிட்டார். அந்தச் சத்தியானது வந்த வழி தெரியாமல் அடிபட்டு முறிந்துபோய் பின்னும்மந்திரத் தினாலே உருவாகி அதிக வேகத்துடனே வந்து அனுமார் மார்பிலே தடாலென்று பாய்ந்து உருவமாட்டாமல் உருகிப் போய்விட்டது. அப்போது அனுமார் ஸ்ரீராமாராமாவென்று வாய்விட்டலறி பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார்.

அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகி சாம்புவந்தவர் பேரிலே திரும்பி லவனுடனேகூடி பாணங்களைவிட்டு அடிக் கிறபோது சாம்புவந்தர் தாளமாட்டாமல் கையுதறிக்கொண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தார். அப்போது குசல வான் மிகுந்த சந்தோஷமடைந்து அனுமார் சாம்புவந்தர் இருவரையும் வந்து பார்த்து சுவாசம் இல்லாததைக் கண்டு ராட்சதாள்பேரிலே மூண்டு யுத்தம் பண்ணுகிறபோது

இராட்சதாளும், இராசட்தப்படைத்தலைவர்களும் முனைந்து, யுத்தம் பண்ணிக்கொண் டிருந்தார்கள். அப்போது இரண்டு இராட்சதாள் தலைமீதில் கையைவைத்துக் குய்யோமுறையோ வென் றழுதுக்கொண்டு அயோத்தியை நாடி அதிகவேகமா யோடி ஸ்ரீராமர் கொலுமண்டபந்தேடி அவரைக் கண்டு மிக வணக்கங்கொண்டு அவருடைய பாதத்தில்விழுந்துசேவித்து எழுந்து நின்றுசொல்லுகிறார். ஓ! சுவாமி? பரதமகாராஜனும் சேனைகளும் மூர்ச்சையாய்ப் போனார்கள். கொஞ்சம் இராட்சதாள் மாத்திரம் குசலவாளை மடக்கிக்கொண்டு யுத்தம் பண்ணிக்கொண் டிருக்கிறார்கள் அந்த 2-சிறுபிள்ளைகளை ஜெயிக்க அரியரப் பிர்ம்மாதிகளாலேயும் ஆகாதென்றார்கள்.

அதுகேட்டு ஸ்ரீராமபத்திர சுவாமி அடித்துமோதி பூமியிலே விழுந்து அலறியெழுந்து தம்பி பரதா இலட்சுமணு! என்னைத்தனியேவிட்டு சிறுபிள்ளை குசலவர்களாலே மூர்ச்சையானீர்களோ, உங்கள்கையில் பலமில்லாமற்போச்சுதோ உங்கள் புஜபலபராக்கிரமங்களை காட்டினால் பாலர்கள் பயப்படுவார்களென்று அஞ்சி யவர்கள்கையால் மூர்ச்சையானீர்களோ உங்கள் பலத்துக்கு அரியரப்பிர்மாதிகள் தானீடோவென்று கன்றிழந்த பசுவைப்போலவே கதறிக்கதறி யழுதுக்கொண் டிருந்தார் அவர் யாரென்றால் பல்லாயிரங்கோடி அண்டத்தையும் கெற்பத்தில் வைத்து இரட்சிக்கப்படாநின்ற பரப்பிரமமாய் விளங்கப்பட்ட ஸ்ரீராமரானவர். அப்போது அவர் துக்கத்தை விபீஷணரும் சுக்ரீவனு மாற்றினார்கள். அந்தப் புரத்திலே கௌசலை கைகேசி சுமித்திரை சகலருங்கேட்டு, பரதருக்கு துக்கங்கொண்டாடினார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீராமர் விபீஷணரையும் சுக்ரீவரையும் பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறார். விபீஷணரே சுக்ரீவரே கேளுங்கள், நாம் மூன்று தம்பிமாருடன் பிறந்து விஸ்வாமித்திரருடைய யாகத்தை அழித்த தாடகை சுவாகுவைக்கொன்று, மாரீசனை ஓட அடித்து அகலிகைக்கு மோட்சங்கொடுத்து, ஜனகன் வைத்திருந்த ஒருவராலும் வளைக்கப்படாத வில்லை உடைத்தெறிந்து, ஜானகியை மணம்புரிந்து பரசுராமனைப் பங்கப்படுத்தி வில்லைப் பறித்துக்கொண்டு 14-வருஷம் வனவாசஞ்செய்ய அவ்விடத்திலிருந்து பஞ்சவடியில் போயிருக்கச்சே என் தம்பி, இலட்சுமணனை சூர்ப்பநகை தோதகம்பண்ண அந்த சூர்ப்பநகைக்கு மூன்றுக்கினையுஞ்செய்து, அவளாலே கரதூ

ஷணனைக்கொன்று அப்புறம லங்காதிபதியாகிய இராவண ன் ஜானகியை எடுத்துக்கொண்டுபோய், அசோகவனத்தில் வைத்திருக்க நானும் தம்பி இலட்சுமணனுஞ் சீதையைத் தே டிக்கொண்டுபோய் அனுமார் சுக்ரீவனைச் சிநேகம்பண்ணி வா லியைக்கொன்று சமுத்திரத்தை நளனாலேயடைத்து 72-வெ ள்ளம் வானரசேனையுடனே இலங்கைக்குள் புகுந்து இராவ ணசம்மார மூடிப்பித்து அதிகாயன் மூதலான 2000-வெள் ளம் இராட்சதாளைக்கொன்று ஜானகியை சிறைமீட்டி அயோ த்திக்குவந்து பட்டாபிஷேகராய்ப் பட்டந் தரித்துக்கொண்டு ராஜரீகம் பண்ணுகிறபோது சதகண்ட ராவணனென்னும் 12000-வெள்ளம் ராட்சதாளுடனே வந்து யுத்தம்பண்ணினர் கள். அவர்களை கொன்றுபோட்டு ஒருவரும் நிகரில்லாமல் ஜெயங்கொண்டாடி நமக்கு ஜானகி வனம்போகவே இவ்விட மும் மாரிபொழியப்பட்ட மழையும் மட்டிட்டு விளைவுமில்லா மல் குடிகளும் தொந்து மண்மாரிபொழிந்து பெருங்காற்றடி த்து அரண்மனை ஆஸ்தானங்களுமிடிந்து யானை குதிரை சேனை மடிந்து வீதிகள்தோறும் பாழடைந்ததுபோதாமல் அஸ்வமேதயாகம் பண்ணுகிறதற்கு குதிரையைவிட்டு பிரத ட்சணம்பண்ண அனுப்பிவைத்தோம் அந்த அஸ்வத்தை 2-சிறுபிள்ளைகள் பிடித்து நம்முடைய சேனைகளையுந் தம்பி மார்களையுங் கொன்றுபோட்டார்கள். இது நமக்கு அபஜெ யகாலமல்லவோ வந்தது, இப்போதிதற்கு என்னசெய்யலாம் விபிஷணு சுக்ரீவாவென்றார்.

அதைக்கேட்ட விபீஷணருஞ் சுக்ரீவருஞ், சொல்லுகி றூர்கள். ஓய்சுவாமி, முன்னாலே சீதாலட்சுமியை ராவணன் பர்ணகசாலேயோடு பேர்த்துக்கொண்டுபோய் அசோகவனத் தில் வைக்கவே அந்த அம்மனமுத கண்ணீராலே லங்கை தீப்பட்டுப்போச்சுது அந்த மகாலட்சுமியான சீதையம்மன் வனம்போய் அழுதகண்ணீரால் அயோத்தியாபுரி பட்டணம் பாழடைந்து பரதரும் இலட்சுமணரும் மாண்டுபோனார்களெ ன்று அதிக விசனத்துடனே சொன்னார்கள்.

அதுகேட்டு இராட்சத சிரேஷ்டனான மாலியவான் ஒரு வசனஞ் சொல்லுகிறான். வாருஞ்சுவாமி பரப்பிர்மமே நீர் லோகத்து மனிதரைப்போல் இப்படிவிசனப்படலாமோ கை லாயத்தில் பார்வதிசமேதராய் விளங்கப்படாநின்ற காலகண் ட திரிசூலநேத்திர முடையவர் நீரல்லவோ! வைகுந்தத்தில்

மகாலட்சுமி சமேதராய் விளங்கப்படாநின்ற ஸ்ரீமந்நாராய ணர் நீரல்லவோ! பிரம்மலோகத்திலே சரஸ்வதி சமேதராய் விளங்கப்படாநின்ற அந்த பிரமதேவர் நீரல்லவோ! அப் படியிருக்க! உமக்கு பெண்சாதி பிள்ளை தானேது சகோதராள் தானேது தாய்தந்தைதானேது நீர் ஆணுக்கு ஆணுமல்ல பெண்ணுக்கு பெண்ணுமல்ல அனாதரட்சகராய் விளங்கப்ப ட்ட பரஞ்சுடர் நீரல்லவோ! தேவர்களுக்கும் முனிவர்களுக் கும் ராவணன் கும்பகர்ண னிவர்களாலே உண்டாகிய துன்ப த்தை நீக்கும்பொருட்டு தசரதமகாராசனுடைய வயற்றிலவ தரித்த தினதயாளரட்சகர் நீரல்லவோ! தேவர்கள், முனிவர் கள், இராட்சதாள், மானிடர்கள், கண்ணாரக்கண்டு சேவித்து காட்சி காணக்கிடையாத திருப்பாதாரவிந்தத்தைக் காணும் படியாக கிருபைபெற்ற நாங்கள் என்னபுண்ணியம் பண்ணி னோமோ சுவாமி இந்தலோகநடத்தைவிட்டு யாகம் நிறைவே றுங் காரியத்தைப்பாருஞ் சுவாமியென்றான். அதைக்கேட்ட ஸ்ரீராமருக்கு பூர்வக்கியானம் வந்து இனி நடக்கப்போகிற காரியங்களெல்லாந் தெரிந்தவராய் மனதிலதிக சந்தோஷ மடைந்தார். உடனே பூர்வக்ஞானம் மறந்துவிட்டது. இப் பால் ஸ்ரீராமர் மால்யவானுக்கு கிருபைகூர்ந்து சுக்ரீவனைப் பார்த்து வாராய் சுக்ரீவரே நம்முடைய தண்டுதளத்தை யெல் லாம் தயார்பண்ணி பட்டணத்திலுண்டாகிய அறைஞாண் கயறு கட்டின பிள்ளைமுதல் வில்லெடுத்து யுத்தத்திற்கு வரும் படியாய் தண்டோரு போடும் சுக்ரீவராசனே யென்று உத் திரவு பண்ணினார்.

அப்படி திருவாய் மலர்ந்தருளியவுடனே சுக்ரீவனெழு ந்து சுவாமியைச் சேவித்து மதனென்னப்பட்ட சேனாதிபதி யையழைத்து அயோத்தியிலுள்ள அறைஞாண் கட்டின பிள்ளைமுதல் ஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டு வரும் படி தண்டோரு போட்டுவையுமென்று உத்தரவுபண்ணி இரா சதண்டிருக்குமிடம்போய் தண்டை வெளியே கொண்டுவந்து நிறுத்தி கன்னமதங் கபோலமதங் கரடமதமென்று சொல்லப் பட்ட கன்னங்கரேலென்றிருக்கும் கருமலைக்கு கைகால் முளை த்து வந்ததைப்போலுள்ள யானைகள்பேரில் அம்பாரிசவுடால் கள்வைத்து யானைகளுக்கு எண்ணெயிட்டு வர்ணந்தடவி சங் கிலி இருப்புலக்கைகள் கையிற்கொடுத்து இராசமன்னர்கள் ஆபரணம்பூண்டு ஏறிக்கொண்டு வரிசைவரிசையாகபவுஞ்சிட்

டு 90-வெள்ளம் இராசமன்னர்களும் இரதங்கள் அச்சுக்கு எண்ணெயிட்டு மச்சுக்கு வர்ணந்தீர்த்து குத்துக்கால் கொடுங் கைசட்டம் பரப்பி குடை கொடி சீலைகளிட்டு டால் துவசங்கட்டி மேகமண்டலத்தை யளாவியிருக்கப்பட்ட இரதங்களின் பேரில் இரதகஜ மன்னர்களேறி வில்லைக் கையில் பிடித்துக் கொண்டு 90-வெள்ளம் இராஜமன்னர்கள் புறப்படச் செய்தார்! அதன் பின்னே குதிரைகளானது சூரியபகவானுடைய இரதத்திற் கட்டிய பச்சைப் புரவிகளுக்கு மேலாகியும் வாய்வேக மனோவேகத்திலும் மிஞ்சினதாயு மிருக்கப்பட்ட புரவிகள்பேரிலே கல்லணைகள் வைத்து நல்ல வீரராயிருக்கப்பட்ட 180-வெள்ளம் இராட்சதாள் ஏறிப் புறப்படச் செய்தான் அந்தவீரர்களானவர்களும் 550-சிங்கத்தினுடைய பலாபலம் பொருந்தினவர்களாய் அதன் பின்னே கால் பலமான 420-வெள்ளம் இராட்சதாளையும் 142-ஆயுதங்களையும் பிடித்துக் கொண்டு புறப்படச் செய்தார்கள்.

அப்போது மதனென்னப்பட்ட சேனாதிபதி பட்டணத்திலுள்ள ஆண்பிள்ளைகளும் தேர் பரி சேனைகளையுந் தயார் படுத்தி இராட்சத தண்டுடனே கொண்டுவந்து சேர்த்துவிட்டான். அதெவ்வளவென்றால், இலட்சத்தி 59-அக்ரோணி சேனைகள், அதுவுமல்லாமல் அடிமானங் குமுறினாற்போல் இராயபேரி, ரணபேரி, வெங்கலபேரி, கர்ணபேரி, தப்பட்டை, புள்ளாங்குழல், மத்தளம் ருத்திரவீணையென்று சொல்லப்பட்ட 22-சங்கீத வாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்கிக்கொண்டு, முன்னே ஒரு யானையின்பேரில் கருடக்கொடி பிடித்து சேனைகளானது புறப்பட்ட சத்தங்கேட்டு ஸ்ரீராமபத்திரசுவாமி கிரீடந்தரித்து புஜகீர்த்தியணிந்து முதுகிலிரண்டு பக்கத்திலும் அம்புருப்பொதிகட்டி காதிலே கவசகுண்டலமணிந்து மார்புக்கு முத்துமாலை மோகனமாலை இரத்தின பதக்கந்தரித்து பாதத்தில் வீரகெண்டாமணியணிந்து மல்லிகை முல்லை, இருவாட்சி, பாதிரி, புன்னை, மருக்கொழுந்து, வெட்டிவேர், வில்வம், துளசி, வெண்டாமரை, அலரி, பாரிசாதம் இப்படி சொல்லப்பட்ட வாசனை பொருந்திய புஷ்பங்களைக் கண்டமாலையாகத்தரித்து கையில் கோதண்டத்தைப் பிடித்து 1008-கன்னியர் புடைசூழ, மத்தளம் ருத்திரவீணை புள்ளாங் குழல் தப்பட்டை சங்கீத மேளவாத்தியங்கள் முழங்க, வேதியர்கள் நடனமாட, கவிவாணர்பாட, வித்வான்கள்புகழ, கட்

டியக்காரர் கட்டியங்கூற, பொற்பிரம்புக்காரர் பராமரிபண்ண திருச்சின்னம் பரிமாற, வெற்றிசங்குகளுநங் குறிக்க, முத்துக் குடை ரத்தினக்குடைகள் கவிய, ஆலவட்டம் வெண்சாமரை கள்வீச 32-விருதுகளும் பிடிக்க, சகல ஆடம்பரத்துடனே அரண்மனை கோபுரவாசற்படி யேழுங்கடந்து வருகிறபோது சாரதியானவன் இரதத்தின் அச்சுக்கு எண்ணையிட்டு மச்சுக்கு வர்ணந் தீர்த்து குத்துக்கால் கொடுங்கை சேர்த்து சட்டம் பரப்பி பூச்சக்கிரக் குடைகளேந்தி இருபக்கத்திலுங் கெருடக் கொடி அனுமக்கொடிபறக்க, மகா சிங்காரங்களுடனே நாலு குதிரைகள் பூட்டி அலங்கரித்து முதல் கட்டிலே சாரதி காந் தார னென்னப்பட்டவன் ஸ்ரீராமபத்திரசுவாமியை இரதத்தி லேற்றி தானும் முதல் தட்டிலே உட்கார்ந்தான். அப்போது ஸ்ரீராமர் இரதத்தில் ஆரோகணித்துக்கொண்டார் அப்போ து விபீஷணரும் மாலியவானும் சுக்ரீவனும் தங்கள் தங்கள் இரதமேறினார்கள்.

ஸ்ரீராமர் அயோத்தியைவிட்டு யுத்தத்திற்குப் போகுதல்.

கலி விருத்தம்.

ஒருதனியாகிய சராசரமெங்கு முயர்சீலன்
திருமகள்மேவு மயோத்தியில்வாழ் தசரதபாலன்
இருவினையாளர் தமக்கரியானெனு மெங்கோனும்
பொருரதமேறி படைத்திரள்கொண்டு புகுந்தனனே.

அப்போது ஸ்ரீராமர் சகல சேனைகளையும் கூட்டிக்கொ ண்டு 32-சங்கீத மேளவாத்தியங்களுந் தாம்தாமென்று முழ ங்க அயோத்தியை விட்டு புறப்பட்டு பாலைவனங்கடந்து வா ல்மீகி வனமெங்கேயெனச்சென்று அவ்வனம்புகுந்துபோகி றபோது, ரணக்களத்தில் குசலவர்கள் இராட்சதாள் படைத் தலைவர்களை வளைத்துக்கொண்டு யுத்தம் பண்ணுகிறபோது பரதர் மூர்ச்சைதெளிந்து எழுந்து சாரதியைக்கொண்டு இர தத்தை நடத்தி குசலவாள் முன்னுக்கு வந்ததை குசலன் கண் டு இராட்சதாளை விட்டுவிட்டு பரதமகாராஜன்பேரில் திரும்பி வில்லி லநேக பாணங்களைப் பூட்டி விட்டுவிட்டான். அந்தப் பாணங்களும் வில்லில் நின்று விடுபட்டு வருவதைப் பரதர் கண்டு வில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்து விட்டு தன் பேரில் வருகிற பாணங்களை அறுத்து வெட்ட வெளியாக்கி

விட்டார். அதுகண்டு குசலராஜன் 50-நாராசபாணங்களை எடுத்து வில்லிலே தொடுத்து கடுகடுத்து விடுத்து பரதமகாராஜனுடைய வில்லைக் கண்டித்து மார்பிலணிந்த கவசங்களையும் அறுத்துப்போட்டான். அதுகண்டு பரதமகாராஜன் கோபமாகி வேலாயுதத்தையெடுத்து மந்திராபூசை நைவேத்தியஞ் செய்து குசலராசனுடைய மார்புக்கு லக்குபார்த்து விட்டார்.

அந்த வேலாயுதமானது வில்லைவிட்டு விடுபட்டு அண்டரண்ட பிர்மாண்டம் 1008-அண்டங்களும் நடுங்க, அண்டங்கள் வெடிக்க, அண்டத்திலுள்ள தேவர்களெல்லாங் கலங்கி நடுங்கிட ஒடுங்கிட ஆவென்று வாயைத்திறந்து குபீல் குபீலென்று அக்கினிப் பொறிகளை இரைத்துக்கொண்டு வருகிறபோது குசலன் கண்டு தன் தாயார் கொடுத்த வேலாயுதத்தை எடுத்து பூசைசெய்து விட்டுவிட்டான் அந்த வேலாயுதமும் புறப்பட்டு அக்கினிக்கொழுந்துகள் விட்டுக்கொண்டு அதிவேகத்துடன் பரதராஜன்விட்ட வேலாயுதத்தின்பேரில் தடாலென்று பாய்ந்து ஆகாயத்தில் கிளம்பி ஒன்றுக்கொன்று யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தது. அதுகண்டு பரதமகாராஜன் அதிக கோபமாகி ஸ்ரீராமபாணமாகிய சூலாயுதத்தையெடுத்து மந்திரபூசைசெய்து விட்டுவிட்டார். அந்த சூலாயுதமும் வருகிறபோது குசலராஜன் தன் தாயார் கொடுத்த சூலாயுதத்தைப் பிரயோகம் பண்ணிவிடவே, அந்த சூலாயுதமும் பரதமகாராஜன் விட்ட சூலாயுதத்தின்பேரில் வந்து பாய்ந்து ஆகாயவீதியில் கிளம்பி ஒன்றுக்கொன்று யுத்தம் புரிந்துக்கொண்டிருந்ததுகள். அதுகண்டு பரதமகாராசன் ஆக்கிரதிக்குரோதனாய் பல்லைப் படபடவென்று கடித்து ஒரு சத்தியை எடுத்துப் பூசை செய்துவிட்டார்.

அந்தச் சத்தியானது அதிக உக்கிராகாரத்துடன் லோகாலோகங்கள் தடுமாறும்படியாய்ப் புறப்படவே, குசலராஜன் கண்டு தனக்கு வால்மீகர் கொடுத்திருந்த சத்தியை யெடுத்து பூசைசெய்து விட்டுவிட்டான். அந்தச் சத்தியானது ஆலகால விஷத்தைப்போலே சீறிக்கொண்டு பரதர் விட்ட சத்தியின்பேரில் சடாலென்று வந்துபாய்ந்து ஆகாயத்திற்கிளம்பி ஒன்றுக்கொன்று யுத்தம் பண்ணிக்கொண்டிருந்ததுகள். அப்போது குசலராசன் தாயார்கொடுத்த சக்கரத்தை யெடுத்து பூசைசெய்து ஸ்ரீமந் நாராயணரைத் தோத்திரஞ்செய்து கிறுகிறுவென்று சுழட்டி விட்டு விட்டான். அது கோடி சூரியப்

பிரகாசமாய் புறப்பட்டு அண்டரண்டம் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க, அண்டகோளகை பத்தியெறிய, அண்டத்திலுள்ள தேவர்களும் பயந்தோட, குசலவனைக் கொண்டாட ஒரு அண்டமுயரம் பயந்துக்கொண்டாட, அதிவேகத்துடன் வருகிறபோது பரதர் அதிக கோபமாகி பிரமாஸ்திரத்தையும் இன்னமதிக கொடிதாகிய பாணங்களையுமெடுத்து வில்லிலே சந்தித்து விட்டுவிட்டார். அப்போது சக்கரமானது பரதர் விட்ட சகல அஸ்திரங்களையு மறுத்துத்தள்ளி பரதருடைய மகரகுண்டல கிரீட கேயூரஆரமணி பதக்கங்களுடனேவிளங்கப்பட்ட சிரசை கரகரவென்று அறுக்கிறபோது சரியாய் அறுபடாதபடியால் இவர் விராட சொரூப முள்ளவரென்று சக்கரத்தாழ்வார் வெட்கி குசலராசனிடமேபோய்ச் சேர்ந்தது. அப்போது பரதருக்குப் பாதிசிரசு அறுப்புண்டபடியால்தேர் தட்டிலேவிழுந்து மூர்ச்சையானார்.

அதுகண்டு குசலராசன் சந்தோஷமாகி லவனுடனே கூடி வில்லிலனேக பாணங்களைச் சந்தித்து இராட்சதாள் பேரிலும் யானை தேர் பரிசேனைகள் பேரிலும் விட்டுக்கொண்டு ரத்தாரோடச்செய்து வில் நாரியை தளர்த்தி சாமார்த்தியங்கள் பேசிக்கொண்டுவந்து சரஸ்வதியாற்றிலே ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைகள் முடித்துக்கொண்டு காமதேனுவால் பசியாறி ஒருமரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறிக்கொண்டிருக்கும்போது சூரியபகவானும் ஸ்ரீராமர் குசலவன் யுத்தத்தைப் பார்க்கவந்தவரைப்போல் உதயகிரியி லுதயமானார் அப்போது ஸ்ரீராமர் தண்டானது சரஸ்வதி யாற்றைக்கடந்து ரணக்களம் வந்து யானைகளை ஒருபக்கத்திலும் தேர் பரி சேனைகளை ஒருபக்கத்திலும் நிறுத்தி தடம்போருமல் ரணக்களத்துக்கடுத்த அடாத வெளியில்வந்து நிறுத்தி பவுஞ்சிட்டு சுக்ரீவன் தேரிலேறிக்கொண்டு முன்னின்றபோது மரத்தடியை விட்டெழுந்து வருகிற குசலவர்களைப் பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான். வாருந் தம்பி குசலவர்களே? நீங்களார் உங்கள் தாய் தந்தையர் பேரென்ன நீங்கள்சொல்லுங்கள் தம்பியென்றான் அடா! வானரனே? நீயோ, எங்கள் தாய்தந்தைபேரைக்கேழ்க்கிறவன் அப்படி சொல்லமாட்டேன் இப்போது யுத்தம்பண்ணிலாச்சுது இல்லையென்றால் ஒருபாணத்தினால் சிரசை வாங்கிவிடுவேன் தப்பியோடிப் பிழையடாவென்றான்.

அதைக்கேட்ட சுக்ரீவன் கடுஞ்சினமடைந்து இராட்சதாளைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான். அடா? இராட்

சதாளே! இவாள் சிறுபிள்ளைகளென்றும் ஸ்ரீராமரைப்போல வடிவு மழகுமா யிருக்கிறார்களென்றும் யோசியாமல் நெருங்கிப்பிடியுங்களென்றான். அப்போது இராட்சதாள் ஒருபக்கமும், தேர் ஒருபக்கமும், சேனைகளொருபக்கமும், இந்தப்படியாய் 4-பக்கமும் குடைகவிழ்ந்தாப்போலே நெருங்கிப்பிடிக்க வருவதைக் குசலன் கண்டு அதிசீக்கிரத்தில் வில்லிலனேக பாணங்களைத்தொடுத்து 4-மூலையுஞ் சுழன்று விடுத்து இராட்சதாளையும் யானைதேர் பரிசேனைகளையும் கொல்லுகிறபோது எப்படி விழுகுதென்றால், கால்வேறு, கைவேறு, துடைவேறு, தலைவேறு, அம்பாரி வேறுவேறாக இப்படி 50-வெள்ளம் இராட்சதர்களுமாண்டு இரத்தவெள்ள மோடினது அதைக்கண்ட சுக்ரீவன் பல்லை நறநறவென்றுகடித்து இரதத்தைவிட்டுக் கீழேகுதித்து ஒரு இரும்புதண்டாயுதத்தைக் கையிலேயெடுத்துக்கொண்டு குசலவர்களை கொல்லவேணுமென்று ஓடிவருகிறதைக் குசலன்கண்டு 4 - அர்த்தசந்திராஸ்திரம் விட்டு தெண்டாயுதத்தையறுத்து சுக்ரீவராஜனுடைய சிரசையுங் கரகரவென்றறுத்துப் போட்டான். அந்த சிரமானது ஸ்ரீராமா ராமாவென்று பூமியில் விழுந்தது. அதுகண்டு தேவர்களெல்லாம் துயரமானார்கள்.

அப்போது குசலன் தம்பி லவனோடு கூடிக்கொண்டுவில்லைவளைத்து நாணிபிகிந்து பவுஞ்சிட்டிருக்கும் யானை தேர் பரி சேனைகளின்பேரிலும் பாணங்களைக் கட்டுகட்டா யுருவி வில்லில்தொடுத்துக் கடுகடுத்துவிடுத்துக் கொல்லுகிறபோது வானுகோபன் இராட்சதாளை ஏவிவிட்டான். ராட்சதாளும் வில்லிலநேகபாணங்களைச்சந்தித்துசரமாரியாய்ப்பொழிந்து குசலவாள்விட்ட அஸ்திரங்களை எல்லாமறுத்துப்போட்டார்களதுகண்டு குசலவாள் கொடிதாகிய பாணங்களைச் சந்தித்து ஐப்பசி கார்த்திகைமார்கழிமாதத்தில் ஈசானியமூலையிலிருந்து மேகமானதுகுமுகுமுவென்றுகெர்ச்சனைசெய்து இடிமின்னல் குமுறல் பெருங்காற்றுடன்மழைபெய்தால் எப்படியோ அப்படிபோலே கட்டுகட்டா யுருவிவிட்டு பாணமழையைப் பொழிந்துவிட்டார்கள். அப்போது இராட்சதாள் கால்வேறு, கைவேறு, தலைவேறு, எலும்புவேறு, சதைவேறாகவும் யானைகள் தும்பிக்கையறுந்தும், கழுத்தறுந்தும், இரதங்கள் அச்சுமுறிந்தும், மச்சுமுறிந்தும், கொடிமுறிந்தும், குடமுறிந்தும், துஜமறுந்தும், புரவிகள் வயிறுகிழிந்தும், எலும்பு

ஒடிந்தும், தலைகிழிந்தும், குடல்சரிந்தும், இப்படியாக 150-வெள்ளம் இராட்சதாளும் யானை தேர் பரிசேனைகளும் மாண்டு உதிரவெள்ளம் ஒருபனையுயரமோடினது அப்போது அந்த குசலராசனுடைய கோதண்டத்தில் கட்டியிருக்கிற 7-தங்க மணியில் மூன்று தங்கமணிகள் ஒன்றறை நாழிபரியந்தம் கல கலவென்று அடிபட்டது அதுகண்டு குசலவர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அதென்னவென்றால் யானைகள் ஆயிரம் தேர் நூறாயிரம் குதிரைகள் இலட்சம் காலாள்கள் கோடி மாண்டால் தலையில்லா முண்டங்கவெழுந்து கூத்தாடும் அந்த முண்டத்தின்பேரில் கழுகுகள் ஒருவெள்ளம் ஏறிக்கூத்தாடினுல் கோதண்டத்தில் கட்டியிருக்கிற ஒருதங்கமணி கலகலவென்று அடிபடும் இப்படி 3-தங்கமணிகளும் அடிபடுகிறதற்கு தற்கு எவ்வளவு சேனைகள்மாளவேணுமோ, அந்த கணக்கை புத்திமான்கள் உணர்ந்துக்கொள்வீர்களாக.

குசலராசனுக்கும் பானுகோபனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

வடகரிநீழலோங்கு மாதவன்போலவாங்கு
கடகரிபோன்றசெல்வ காளையாங்குசலன்மீது
தடனெடுந்தேர்மீதேறித் தானவரவுணராதிப்
படைகொடுசமர்விளைக்க வானுகோபன்வந்தானல்.

அதுகண்டு வானுகோபன் கோபமாகி பல்லைநெறநெற வென்று கடித்து இரதத்தை குசலன்முன்னுக்கு நடத்த வில்லைவளைத்து குழுகுயென்று குணத்தொனிபண்ணி நல்ல கூர்மையோடுங் கூடியிராநின்ற பாணங்களை வில்லிலே சந்தித்து பிரயோகம் பண்ணிவிட்டான். அப்போது குசலன் இராட்சதாளைவிட்டு வானுகோபன் பக்கந்திரும்பி 4-திவ்வியாஸ்திரத்தையெடுத்து வில்லிலே தொடுத்து விடுத்து பானுகோபன் விட்ட அஸ்திரங்களையறுத்து அவனேறிவந்த ரதஞ் சாரதி குதிரைகளுடன் தும்சம்பண்ணிவிட்டான் அதுகண்டு பானு கோபன் மறுதேரிலேறி வில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்து விட்டவிட்டான். அந்த அஸ்திரங்கள் வில்லைவிட்டுவிடு பட்டுநாகசற்பம்போற் சீறிவருகிறபோது குசலராசன்கண்டு திவ்வியாஸ்திரங்களை வில்லிற்சந்தித்துப்பிரயோகம்பண்ணி பானுகோபன் விட்ட பாணங்களையறுத்து அவனுடைய சரீ



ரங்களையுஞ் சல்லடைக் கண்களாகத் துளைத்து அதனமாய் ஒரு அக்கினியாஸ்திரம் எடுத்துவிட்டு பானுகோபனையும் இரதஞ் சாரதி குதிரைகளையும் யெரித்துப்போட்டான்.

குசலராசனுக்கும் பஞ்சகண்டனுக்கும் யுத்தம்.

கலிவிருத்தம்.

பஞ்சுபோலபானு கோபனெரிந்திடத்
துஞ்சலில்சுகு மாரனையிக்கணம்
நஞ்சுகிர்பத றித்தெறிப்பேனென
பஞ்சகண்டன் படைகொடுமீறினன்.

அதுகண்டு பஞ்சகண்டகன் கோபமாகி வில்லிலே அநேகபாணங்களைபூட்டி குசலவன்பேரில் விட்டுவிட்டான் அப்போது குசலவன் இவனுர் 40-சிரசும் 5-கையில் வில்லுமுடையவனுயிருக்கிருன். இவன் சாமார்த்தியத்தைப் பார்ப்போமென்று 5-திவ்வியாஸ்திரம் வில்லிலே தொடுத்து கடுகடுத்து விடுத்து பஞ்சகண்டன்விட்ட அஸ்திரங்களையறுத்து அவன் பிடித்திருந்த 40-வில்லையுங் கண்டித்து அவன் மார்பிலணிந்த கவசங்களையு மறுத்துப்போட்டான். அதுகண்டு பஞ்சகண்டன் மறுபடியும் 40-வில்லைக் கையிலெடுத்து வளைத்து நாறு நாராசபாணங்களைப்பூட்டி பிரயோகம் பண்ணிவிட்டான். அந்த நாராசபாணங்கள் வில்லில் விடுபட்டு ஆலகால விஷத்தைப்போல் சீறிக்கொண்டு வேகமாய் வருகிறபோது குசலராஜன் கண்டு சினங்கொண்டு நாராசபாணங்களை வில்லிலே தொடுத்துவிட்டான். அதனலே பஞ்சகண்டன் மிகவும் நொந்து மூர்ச்சையடைந்தான்.

அப்போது குசலராசன் லவனுடன் கூடிக்கொண்டு இராட்சதாள்பேரில் கொடூரபாணங்களைக் கட்டுகட்டாக விட்டுக் கொல்லுகிறபோது இராக்ஷதாள் தண்டிலே அதிக கோஷ்டமுண்டாகி முன்வைத்தகாலை பின்வைத்தார்கள். அப்போது ஸ்ரீராமபிரான் தண்டுகள் யோசனைதூரத்தில் வருகிறது முன் வந்த தண்டுகளெல்லாம் மாண்டுபோகப் படைத்தலைவருஞ் சேனுதிபதிகளுநங்கண்டு இரதத்தை குசலன் முன்னுக்கு நடத்தவே குசலன் மடக்கிக்கொண்டு அநேக பாணங்களை விட்டு சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டான். அதுகண்டு, படைத் தலைவருஞ் சேனுதிபதிகளும் தைரியம் விடாமல்

அநேக அர்த்தசந்திராஸ்திரத்தை வில்லிலே தொடுத்து விட்டு விட்டார்கள் அப்போது குசலராஜன் அநேக சிங்கமுகாஸ்திரமெடுத்து அவர்கள் விட்ட அர்த்த சந்திராஸ்திரங்களையும் அவர்களையும் மூர்ச்சை யடையச்செய்து விட்டான். அதுகண்டு மீதியான இராக்ஷதாள் கோபங்கொண்டு பாணங்களை சந்தித்து விடுகிறபோது குசலன்விட்ட பாணங்களை யறுத்துத் தள்ளினார்கள். அப்போது மீதியான இராக்ஷதாள்பேரில் அநேக பாணங்களை விட்டுக் கொன்றுபோட்டான். அப்போது நாலுபனைமர மூயரம் உதிரவெள்ள மோடிற்று அதுகண்டு கற்கோடகனும் காந்தாரனும் குசலன்முன் இரதத்தை நடத்தி அநேக திவ்வியாஸ்திரங்களையெடுத்து வில்லிலே தொடுத்து விட்டுவிட்டார்கள் அப்போது குசலன் 50-திவ்வியாஸ்திரங்களை யெடுத்து கடுகடுத்து வில்லில் தொடுத்து அவர்களிருவர் விட்ட அஸ்திரங்களை யறுத்துத்தள்ளி அதனமாய் இரண்டு சிங்கமுகாஸ்திரம்விட்டு அவர்களிருவரையுங் கொன்றுபோட்டான் அப்போது அனுமார் மூர்ச்சை தெளிந்து சாம்புவரை கூட்டிக்கொண்டு குசலவாள் முன்னுக்கு வந்தார் அதைக்கண்ட குசலன் அதிக கோபங்கொண்டு வில்லில் 8-சிங்கமுகாஸ்திரம் பூட்டிவிட்டான் அதுகள் அக்கினிக் கொழுந்துகளுடனே வந்து அனுமார் சாம்புவந்தர் பேரில் படவே ஸ்ரீராமா ராமாவென்று கீழ்விழுந்து மூர்ச்சை யடைந்தார்கள்.

அப்போது ஸ்ரீராமர்பின் தண்டானது சரஸ்வதியாற்றைக்கடந்து ரணக்களம்வந்து வெறுங்களமா யிருப்பதைக் கண்டு அதிக துயரமுற்றார்கள் விபீஷணரோவென்றால் இராக்ஷதாளையும் யானை தேர் பரி சேனைகளையும் யூகம் வகுத்து நிறுத்தி தான் முன்னின்று குசலவனைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறார் வாருந்தம்பி சிறுவர்களே உங்கள் பேரென்ன சொல்லுங்கள் தம்பியென்றார் அதைக்கேட்ட லவன் குசலவனைப் பார்த்துச் சொல்லுகிறான் வாரும் அண்ணாவே, வந்த பேருக்கெல்லாம் நம்முடைய தாய் தந்தைபேரைச் சொல்லிக் கொண்டிருந்தால் பொழுதுபோகிறது இவனையும் இரண்டொருபாணம் விட்டுக்கொல்லும் யூகம் வகுத்திருக்கிற இராக்ஷதாளுடனே நான் யுத்தம் பண்ணுகிறேன் அண்ணாவே யென்றான் அதைக்கேட்ட குசலன் மெய்தானென்று ஒரு சுழற்பாணத்தையெடுத்து வில்லிலே தொடுத்துவிட்டான். அந்த

சுழற்பாணம் விபீஷணர் இரதத்தின்பேரில் வந்து விழுந்து ஆகாயத்திற் கிளப்பிவிட்டது அதுகண்டு விபீஷணர் சீக்கிரத்தில் கீழே குதித்துவிட்டாரப்போதந்த இரதமானது மேகமண்டலம் வருணமண்டலம் வரையிற் சுழற்காற்றிலகப்பட்டு அச்சுவேறு, ஆணிவேறு யொடிந்து விழுந்து சாரதி மாண்டான். அப்போது விபீஷணர் அதிக கோபங்கொண்டு வேறொரு இரதத்திலேறி வில்லையெடுத்து வளைத்து நாணிபிகிந்து அதிசீக்கிரமாய் நூறு நாராசபாணமெடுத்து வில்லிலே தொடுத்து விட்டுவிட்டார்.

அந்த நாராசபாணங்கள் வில்லைவிட்டு விடுபட்டு அவயத்திலிருக்கும் நாகம் எழுந்தாலெப்படியோ அப்படிபோல சீறிக்கொண்டு வருகிறதைக் குசலன்கண்டு கடுஞ்சினங் கொண்டு 50-திவ்வியாஸ்திரமெடுத்து வில்லில்தொடுத்து அந்த 100-நாராச பாணங்களையு மறுத்து அவன் கைவில்லையு மொடித்து அவன் மார்பிலணிந்த கவசங்களையு மறுத்துப் போட்டான் அப்போது விபீஷணரானவர் 100-திவ்வியாஸ்திரம்விட்டுகுசலவன் வில்நாரியை அறுத்துப்போட்டார் அந்த நாரி அறுபட்டசத்தம் அண்டகடாகமும் படீலென்று வெடித்ததுபோலிருந்தது அதுகண்டு குசலன் வில்நாரியை உருகப் பார்த்தவுடன் ஒன்ருய்க் கூடிவிட்டது. அதுகண்டு குசலன் வில்நாரியைப்பூட்டி வில்லிலனேக அஸ்திரங்களைச் சந்தித்து மழைபொழிகிறதுபோல பொழிந்து விபீஷணருடைய மார்பை பத்தலாய்க் கிழித்துப்போட்டான். அப்போது விபீஷணர் தைரியம்விடாமல் அதிககோபங்கொண்டு வில்லிலே அனேக சிங்கமுகாஸ்திரங்களைப் பூட்டிவிட்டார். அதுகண்டு குசலன் கடுஞ்சினங்கொண்டு 100-சிங்கமுகாஸ்திரங்களை யெடுத்து கடுகடுத்து வில்லிலே தொடுத்து விடுத்து விபீஷணர்விட்ட சிங்கமுகாஸ்திரங்களை யறுத்துத்தள்ளி சாரதி குதிரைகளையுங் கொன்று விபீஷணருடைய சரீரமாதியந்தமும் சல்லடைக்கண்களாகத் துளைத்துவிட்டான். அதனாலே விபீஷணர் ஸ்ரீராமாராமாவென்றுதேர்தட்டில்விழுந்து மூர்ச்சையடைந்தார்.

அதுகண்டு மாலியவான் கோபங்கொண்டு இரதத்தை குசலராசன் முன்னுக்கு நடத்தி ஒரு வசனஞ் சொல்லுகிருர். வாருந் தம்பி சிறுபிள்ளாய் யுத்தம்பண்ணிக் கொல்லுவாருமுலகத்திலுண்டோ அப்படி உங்களுக்குநேர்ந்த பகையென்னசொல்லுந்தம்பி இவ்விடத்தில் சுவாமியும் வந்திருக்கிருர்.

அவர் திருப்பாதத்தண்டை உங்களைக் கொண்டுபோய் அவருக்கு மனமிறங்கும்படியாய்ச் சொல்லி சமாதானம் பண்ணிவைக்கிறேன் அவர் ஆரென்றிருக்கிறீர்கள் ஆதிகர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணரே ஒரு காரண நிமித்தமாய் தசரத மகாராஜனுடைய வயிற்றிலவதரித்திருக்கின்றார் அவர் முன்னுக்கு உங்கள் பாணங்கள் செல்லாது உங்கள் சாமார்த்தியங்களும் நடவாது என் வார்த்தையைத் தள்ளாமல் நடத்திக்கொள்ளுந்தம்பியென்றான் அதைக்கேட்டு குசலன் கோபங்கொண்டு இந்த இராட்சதனார் நம்மைவந்து வணங்கச் சொல்லுகிறானென்று இரண்டு பாணமெடுத்து வில்லிலே தொடுத்துவிட அது மாலியவானைக் கண்டு சண்டமாருதம் வீசினாற்போல வந்து மாலியவான் இரதத்தைப் பத்துயோசனை தூரத்தில் கொண்டுபோய்விட்டது.

அப்போது குசலன் தம்பி லவனுடன்கூடி இராட்சதாள் பேரில் திரும்பி பாணங்களை விட்டுக் கொல்லுகிறபோது மகனென்னப்பட்ட சேனாதிபதிகண்டு கோபங்கொண்டு யானை தேர் பரி சேனைகளை குசலவாள்பேரில் ஏவி தானுந் தன்னுடைய வில்லைவளைத்து பாணங்களைச் சந்தித்துவிட்டு யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஸ்ரீராமர் ரணைக்களஞ்சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கையில் ரணக்கள மெப்படி யிருக்கிறதென்றால் செக்கச்செவேலென்று செய்மானம் போற்சிவந்து மாண்டுகிடக்கிற யானை தேர் பரி சேனைகளை உதிரவெள்ளத்திலடித்துக்கொண்டு போகிறதைக்கண்டு சீதாலட்சுமி நம்மைவிட்டுப் பிரிந்தபடியால் நம்முடைய யாகத்திற்கு பின்னம் வந்தது இவ்விரண்டு பிள்ளைகளால் இப்படி நம்முடைய தண்டுதளத்தைக் கொல்வதாவது அவர்களைப் பார்ப்போமென்று வருகிறபோது அந்த ரணக்களத்தில் அனுமாரானவர் மகமேருகிரி பர்வதம் சாய்ந்தாற்போல பூமியில் விழுந்து கிடப்பதைக்கண்டு ஸ்ரீராமர் இரதத்தை விட்டுக் கிழே குதித்து அனுமார்பேரில் விழுந்து எப்படிப் புலம்புகிறாரென்றால், என்னையனே, என்னப்பனே, அனுமந்தா, என்னைத் தனியேவிட்டு நீ எப்படிபோவாய் உனக்கு அரியாப் பிரமாதிகள் தானீடோ அந்த பராக்கிரமத்தை எங்கே ஒளித்துப்போட்டாய் என் மகனே ஒரு அறியாத பாலன்கையில் உங்களைப் பறிகொடுத்துவிட்டு நான் எப்படி அயோத்திக்குப் போவேன் மகனே உன் தாய் சீதாதேவியைக் கண்டுபிடிக்கவே

ணுமென்று லோகாலோகங்களைத் தேடிக்காணுமல் சமுத்திரத்தைத்தாண்டி லங்கைக்குள் நுழைந்து சீதையைக்கண்டு அசோகவனத்தையழித்து கும்பகர்னன், இந்திரசித்து, முதலானவர்களைக் கொன்று சூடாமணி புத்தகமுங் கணையாழி மோதிரமும் அடையாளமாக வாங்கிக்கொண்டு சமுத்திரந் தாண்டி என்னிடத்தில்வந்து சீதையைக்கண்டேன் கண்டேனென்று சூடாமணி புத்தகத்தையும் கணையாழி மோதிரத்தையும் காண்பித்தாயே மகனே மகனேயென்று அநுமாருடைய பிரதாபத்தை யெல்லாஞ் சொல்லி கன்றைவிட்டுப் பிரிந்த பசுவைப்போலக் கதறிக்கதறி அழுதுபுலம்பி அப்புரம் கொஞ்சதூரம் இரதமேறிப் போகிறபோது சாம்புவந்தர் மூர்ச்சை தெளிந்து இறந்துகிடக்கிற யானை தேர் பரி சேனைகளை வாரி வாரி தன்பேரில் போட்டுக்கொண்டு பசங்கள் வரப்போகிறார்களென்று கண்ணை மூடிக்கொண் டிருப்பவரைப் பார்த்துக் கொண்டு அப்புறம் போகும்போது அங்கதன் இறந்துகிடப்பதைக்கண்டு இரதத்தைவிட்டுக் கீழேகுதித்து அங்கதன்பேரில் விழுந்து எப்படி சுவாமி புலம்புகிறாரென்றால், ஐயோ மகனே? அங்கதா, உங்களை நம்பிய என்னைத் தனியேவிட்டு உன் தகப்பனாகிய வாலியைக் காணப்போய்விட்டாரோ அடா மகனேயென்று சொல்லுதற்கரிய துயரத்தோடு புலம்பிக் கதறி அழுதுக்கொண்டிருந்தார்.

அப்போது அநுமார் மூர்ச்சைதெளிந்து எழுந்து சுவாமி புலம்புகிறதைக்கேட்டு சாம்புவந்தர் விழுந்துகிடக்குமிடந் தேடிப்போய் அவர் மூர்ச்சைதெளிந்து கண்ணைமூடிக்கொண்டு பிணங்களைவாரி தன்பேரிலே போட்டிருப்பதைக்கண்டு ஒருவசனஞ் சொல்லுகிறார் வாருஞ் சாம்புவந்தரே? நல்ல காரியம் பண்ணினீர், இப்படி பிணங்களைவாரி மேலேபோட்டுக்கொண்டிருக்கலாகுமோஒளித்துக்கொண்டிருந்தால்ஸ்ரீராம துரோகஞ் சித்திக்கும் எழுந்திரும் சாம்புவந்தரே யென்றார் அதுகேட்டு சாம்புவந்தர் வரும்விதிவந்தால் பட்டுத்தொலைக்க வேணுமென்று கண்ணைத்திறந்து அநுமாரைப்பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறார். நான்தானே உன்கையி லகப்பட்டுக் கொண்டேன் நானே தள்ளாத பெரிய மனுஷன், நீயோவாலிபன், உனக்கார்யீடு என்னை ஏன்வீணில் அந்தப் பசங்களிடத்தில் அடிபட்டு சாகப்பண்ணுகிறாயென்றார், அதைக்கேட்டு அநுமார் இப்போது சுவாமி வந்திருக்கி

ரூர், நீர் வாராமற்போனால் வருகிறதைப் பட்டுக்கொள் நான் போகிறேனென்று புறப்பட்டார். அதுகண்டு சாம்புவந்தரும் புறப்பட்டு இருவரும்வந்து சுவாமியைக்கண்டு வலம்புரி இடம்புரிவந்து சுவாமிபாதத்தில்விழுந்து நமஸ்கரித்தார்கள் அவர்களைச் சுவாமி வாரியெடுத்து ஆசீர்வதித்து ஒருவசனஞ் சொல்லுகிறார். வாரும், என்னையனே, அப்பனே, அனுமந்தா. உன்னைப்போல பிள்ளை எனக்கு ஆர்கிடைப்பார்கள் உன்னாலேயல்லவோ, சீதையிருக்குமிடமறிந்து இராவணசம்மார முடிப்பித்தேன் உன்னை நம்பியல்லவோ அஸ்வமேதயாகம் பண்ண குதிரையை விட்டேன் என்னைத் தனியேவிட்டு நீ சிறுபிள்ளைகள் கையில் மாண்டுபோகலாமா, நீ வேணுமென்றால், அவர்கள்மாத்திரம்உனக்கும் சீதாலட்சுமிக்கும் இரண்டு சிறுபிள்ளைகளென்றும்யோசித்து அவர்கள் கையில் மாண்டீர்களோ யென்றழுதார்.

அப்படி புலம்பியழுகிற சுவாமியைச் சேவித்து அனுமார் ஒருவசனஞ் சொல்லுகிறார். ஓ! கிருபைக்கடலே? நீரிப்படி அடியேனை யொருபொருட்டாக யெண்ணி புகழலாமோ வென்றார். அதைக்கேட்ட சுவாமியார் மிகவும் திருவுளமகிழ்ந்து ஆசீர்வதித்து ஒரு வசனஞ் சொல்லுகிறார். சத்துருக்கனையும், இலட்சுமணரையும், பரதரையும் பார்க்கவேண்டும் அவர்களைக்கொண்டுவாரும் அனுமாரேயென்றார். உடனே அனுமாரானவர்போய் சத்துருக்கர், இலட்சுமணர் பரதரையும், சுவாமிமுன்னே கொண்டுவந்துவைத்து நமஸ்கரித்து பின்னிடைந்தார். அப்போது சுவாமியானவர் மூன்று தம்பிமாரையும் பார்த்து மேலேவிழுந்துபுரண்டு அழுது புலம்புகிறபோது சுவாமியார் மூர்ச்சையாய்விட்டார். அதுகண்டு சாம்புவந்தரும், அனுமாருஞ் சுவாமியை களையாற்றினார்கள். அப்போது சுவாமியார் தன்மூன்று தம்பிமாரையும் பார்த்து எப்படிபுலம்பியழுகிறாரென்றால், ஐயோ! தம்பிமார்களே நானிருக்க என்னைத் தனியேவிட்டு நீங்கள்மாத்திரம் வைகுந்தம் போகலாமோ உங்களுடைய புஜபலபராக்கிரமங் களையுஞ் சுத்தவீரத்தன்மையையும் வில்பெருமையுங் காட்டினால் பாலர்கள் பயப்படுவார்களென்று அஞ்சி அவர்கள்கையால் மாண்டீர்களோ தம்பிமார்களேயென்று கதறிக் கதறியழுதுக்கொண்டிருப்பதை அனுமாரும் சாம்புவந்தரும் சுவாமிக்குத் தம்பிமார்களுடைய துயரத்தை யாற்றினார்கள். அப்போது குசல

வர்கள் மயனென்னப்பட்ட சேனுதிபதியின்பேரிலும் இராட்ச தாள்பேரிலும் அநேகம் பாணங்களை கட்டுக் கட்டாயுருவி வில்லில்தொடுத்து விடுத்துக்கொன்று கைசலியாமல் எங்கும் உதிரவெள்ளமாக்கிப்போட்டு இன்னம் சேனைகளுண்டோ வென்று இரணக்களத்தை சுற்றிக்கொண்டுவருகிறதைக்கண்ட ஸ்ரீராமர் தம்பிமார்களுடைய துயரத்தினுலே ஒன்றுந் தோன் ருமல் புலம்பிக்கொண்டேயிருந்துவிட்டார்.

குசலராசன் ஸ்ரீராமர்பேரில் யுத்தத்திற்குப்போகுதல்.

கலிவிருத்தம்.

செய்யமேனிய னுனக்குசலனும்
வையமுய்ய வெழுந்தமகிபனும்
மையனும்ராமச் சந்திரன்மீதினில்
பைய்ம்போர்செய விண்டெழுந்தானரோ.

அதுகண்டு குசலராசன் தம்பி! குசலனே இரணக்களத் திலே செத்தபிணங்களை யெடுத்து வைத்துக்கொண்டுதான் சாகாப்பிணம்போலே யாரோ ஒரு இராஜன் அழுது புலம்பு கிருன். அவனுக்கு குடைகளைப் பிடித்துக்கொண் டிருக்கிருர் கள். அவன்தான் அவர்களுக்கெல்லாம் தலைமையா யிருக்கப் பட்ட இராஜனுகயிருக்கவேணுமென்று சிறுபிள்ளைகளுடைய விளையாட்டு புத்தியினுலே ஒரு அர்த்த சந்திராஸ்திரத்தை யெடுத்து விடுத்து சுவாமியாருக்குப் பிடித்திருந்த முத்துக்கு டை, இரத்தினக்குடை, பூச்சக்கிரக்குடையையறுத்துப்போட் டான். அது எத்தன்மையா யிருந்ததென்ருல் முன்னுலே இராவணன் சுவாமியினுடைய தண்டுபெருக்கத்தைப் பார்க்க வேணுமென்று 10000-கன்னியர்கள்புடைசூழ, முத்துக்குடை கள் இரத்தினக்குடைகள் பூச்சக்கிரக்குடைகள் கவிய மேள வாத்தியங்கள் முழங்க, கோபுரத்திலேறி பார்க்கவந்தவன் பேரில் சுவாமியார் ஸ்ரீராமபாணம் விட்டறுத்து எப்படி வெட்டவெளியாக்கினுரோ அப்படிபோலிருந்தது.

அப்போது ஸ்ரீராமபத்திரசுவாமிக்கு கண்களிரண்டிலும் அக்கினிப்பொறிகளெழும்ப, காதுகளிரண்டிலும் புகைகளெ ழும்ப, மீசைகள் படபடவென்று துடிக்க, கைகளிரண்டும் பதைக்க, முன்னே திரிபுரத்தையெரித்த கோபத்தை மனதில் வைத்து வாலியைக்கொன்ற ஸ்ரீராமபாணத்தை யெடுத்து க்கை

யில் பிடித்து சாரதியைக் கட்டவே, உடனே இரதங் குசலவர்கள் முன்னுக்கு வந்துவிட்டது. அந்தச் சமயத்தில் ஜெனக மகாராசனும் அசூயமகாராசனும் இரதமேறி சுவாமிபக்கத்தில்வந்து நின்றூர்கள். அப்போது ஸ்ரீராமர் பிள்ளைகளுடைய வடிவையு மழகையும் அவர்கள் கைகோதண்டத்தையும் பார்த்துகோபத்தைப் பிள்ளைகள்முன் காட்டப்போகாதென்று கருதி இவர்கள் வாய்விசேஷத்தை யறியவேணுமென்று நினைத்து குசலவர்களைப் பார்த்து ஒரு வசனஞ் சொல்லுகிறூர். வாருங்கள் தம்பி சிறுபிள்ளைகளே உங்கள் தாய்தந்தை பேரென்ன ஒளியாமற் சொல்லுங்கள் தம்பியென்றூர். அதைக்கேட்டு குசலன் ஒரு வசனஞ்சொல்லுகிறூன். இராஜனே? எங்கள் தாய் பேர் ஜானகியம்மாள், எங்களையர்பேர் வால்மீகரிஷி, என்பேர் குசலன், என் தம்பிபேர் லவன், எங்கள் குடும்பமெங்களுக்குத் தெரியாது என்றூன். அதைக்கேட்ட ஸ்ரீராமபத்திரசுவாமி, இவனென்ன ரிஷிபிள்ளையென்று சொல்லுகிறூன். இவனுடைய வாய் விசேஷத்தை நன்றூயறியவேணுமென்று மனதிலெண்ணி வாருந்தம்பி குசலவர்களே? உங்களையர் வால்மீகரென்று சொல்லுகிறூயே உங்கள் தாயாரைப் பெற்ற தகப்பனே எனக்குத் தெளிவாய் சொல்லுந் தம்பியென்றூர். அதைக் கேட்ட குசலன் ஒரு வசனஞ் சொல்லுகிறூன். ஓ! இராசனே? இப்படி யெல்லாங் கேட்டால் எங்களுக்குத் தெரியவராது ஆனல் எங்களுக்குத் தாய் தந்தை குரு தெய்வம் யாவும் வால்மீகரிஷி தவிர வேறெருவரில்லை யென்றூன். அதனைக்கேட்ட ஸ்ரீராமர் குசலனை நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறூர். நான் அஸ்வமேதயாகஞ் செய்யவிட்ட குதிரையை நீங்கள் பிடித்துக்கட்ட யென்ன நியாயமுண்டென்றூர்.

குசலன் ஸ்ரீராமர்பேரில் யுத்தம்பண்ணுதல்..

கலிவிருத்தம்.

வெஞ்சிலைக்கணை தொட்டவிருவரும்
மிஞ்சுகவ்வைமும் விண்ணுலகெங்கணும்
தஞ்சுவாணி யிறைந்தேநடுக்குலப்
பஞ்சுபோலப் பரக்கமெலித்தனன்.

அதைக்கேட்ட குசலனெனவன் சொல்லுகிறூன். ஓ! இராசனே? உன் தம்பி சத்துருக்கன் என் தம்பி லவனை மூர்ச்சை

செய்து கட்டிக்கொண்டுவர என்ன நியாயமுண்டு அப்படிப் பட்ட அனியாயஞ் செய்தபடியால் உன் தம்பிமார் மூவர்களை யுங்கொன்று அவர்களுக்கு சகாயமாக வந்தபேர்களையும் இரா சாக்களையும் இராக்ஷதர்களையும் யானை தேர் பரி சேனைகளையுங் கொன்று பிறகு இரணக்களத்தையும் வெருங்களமாக்கி விட் டேன், இப்போது உம்மையுங் கொல்லுகிறேன் பாரென்று வில்லிலே பாணங்களைச் சந்தித்து விட்டுவிட்டான். அது வில்லைவிட்டு விடுபட்டு அக்கினிக் கொழுந்துகளுடன் வருகிற தை சாரதிகண்டு சுவாமிக்குத் தெரிவித்தான். சுவாமி வருகிற பாணத்தை எட்டிப்பார்த்தார். அது தன்னுடைய சுயரூபத் தை யடக்கிக்கொண்டு சுவாமியை வலம்புரி யிடம்புரிவந்து அவருடைய அம்புருப்பொதியி லடைந்துவிட்டது.

அதுகண்டு குசலன் நாம்விட்ட பாணங்களைத்தடுக்க, அரியரப் பிரமாதிகளாலேயும் முடியாது இந்த ஸ்ரீராமன் மந்தி ரங்கற்றவனைப்போற் காணுகிறதென்று பின்னையும் அக்கினி யாஸ்திரத்தை யெடுத்து விடுத்தான். அந்த அக்கினியாஸ்தி ரம் வில்லில்விடுபட்டு அண்டகடாகமும் பத்தியெரிவதுபோல் வருவதைக்கண்டு ஸ்ரீராமர் வாரும் அக்கினியாஸ்திரமேயென அவரைச் சேவித்து அவருடைய அம்புருப் பொதியில் வந் தடைந்தது. அதைக்கண்ட குசலன் தன் தம்பியை நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறான் அடா! தம்பி லவனே? ஸ்ரீராமன் செய்த மந்திரவித்தையைப் பார்த்தாயோ, நாம் விடப்பட்ட பாணங்களையெல்லாம் தன்னுடைய அம்புருப்பொதியி லடை யச் செய்கிறானென்றான். அப்போது லவன் சொல்லுகிறான் வாரும் அண்ணாவே? பிரம்மாஸ்திரம், நாராயணாஸ்திரம், சக்கரம், சூலம், வேல், சத்தி, அவைகளைத் தடுக்க ஒருவரா லுங் கூடாது அவைகளைப் பிரயோகம்பண்ணும் அண்ணா வேயென்றான். அதுகேட்டு குசலன் பிரம்மாஸ்திரத்தை விட் டுவிட்டான். அது வில்லில் விடுபட்டு ஆலகாலவிஷத்தைப் போல் அண்டங் குலுங்க, யாவரு மொடுங்க வருகிறதைக்க ண்டு ஸ்ரீராமர் வாரும் பிரம்மாஸ்திரமேயென அது உடனே சுவாமியை நமஸ்கரித்து சுடரையடக்கிக்கொண்டு சுவாமியி னுடைய அம்புருப் பொதியில் வந்தடைந்தது. அது கண்டு குசலன் நாராயணாஸ்திரத்தை யெடுத்து பூசைசெய்து விட்டு விட்டான்.

அந்த நாராயணாஸ்திரமும் வில்லில்விடுபட்டு தகத்தகாயமாய் மகா காந்தியுடனே அண்டங்குலுங்க, யாவருங்கலங்க, அண்டகோளகை பத்தியெறியத்தக்கதாய் வருகிறதைக்கண்டு ஸ்ரீராமர் வரட்டுமென்று மௌனமா யிருந்துவிட்டார். அப்போது நாராயணாஸ்திரம்வலம்வந்து துளசிமாலையாகசுவாமி கழுத்தில் விழுந்தது. அதுகண்டு சகல தேவர்களும் சந்தோஷமானார்கள். குசலன் கண்டு கடுஞ்சினங்கொண்டு சக்கரத்தை யெடுத்து பூசைசெய்து சுவாமியினுடைய கழுத்திற்கு லக்கு பார்த்து கிறுகிறுவென்று சுழட்டி விட்டுவிட்டான். அந்தச் சக்கரமானது கோடிசூரியப்பிரகாசமாய்ப்புறப்பட்டு அண்டம் நடுங்க, யாவருமொடுங்க, அக்கினிபோ லெறிந்துக்கொண்டு அண்டகோளகை பத்தியெரியத் தக்கதாய் வருகிறதைக்கண்ட சகலரும் பயந்து கலங்கினார்கள், அப்போது சக்கரத்தாழ்வார் சுவாமி முகத்தைப்பார்த்து தன் சொரூபத்தையடக்கி சுவாமியுடைய திருக்கரத்தில் நின்றுவிட்டார். அதுகண்டு குசலன் அதிக கோபங்கொண்டு வேலாயுதத்தையெடுத்து மந்திராபூதிகள் செய்து விட்டுவிட்டான். அந்த வேலாயுதமானது அண்டரண்ட பிர்மாண்ட முதல் ஆயிரத்தெட்டண்டங்களும் நடுங்க அண்டகோளகை பத்தியெரிய, அக்கினிச் சுடர்கள் வீசிக் கொண்டு சர்வலோகமுங் குலுங்க, யாவரும் கலங்க, அண்டம் படீலென்று வெடிக்கத் தக்கதாய் வருகிறதை சாரதியான காந்தாரன்கண்டு சுவாமி எனக்கு மிகவும் பயமாயிருக்கிறதென்று சொல்ல சுவாமியானவர் இரதத்திலிருந்தபடியே கியாவென்று சிங்கநாதம் பண்ணினார். அந்தத்தொனி வேலாயுதம் கேட்டு தன் ஆங்காரத்தை யடக்கிக்கொண்டு சுப்பிரமணியரிடம் போய்ச் சேர்ந்தது. அப்போது தேவர்களெல்லாங்கண்டு ஆச்சரியப்பட்டு உளமகிழ்ந்தார்கள். அதுகண்டு குசலன் கோபங்கொண்டு சிவன்கை சூலமெடுத்து பூசைசெய்து விட்டுவிட்டான். அந்த சூலமானது ஆயிரத்தெட்டண்டமுமொடுங்க, நடுங்கக் குலுங்க, அதிக தீட்சண்ணியமான அக்கினிச் சுவாலையை வீசிக்கொண்டு அண்டகோளகை பத்தியெரிய, ஆகாயம் பூமியுமொன்று யுருவுகொண்டு வடவாமுகாக்கினியை வாரியிறைத்துக்கொண்டு வருகிறதைக் கண்ட சாரதி காந்தாரன் மெய்மறந்து போயினன்.

அப்போது சுவாமியார் இரதத்திலிருந்தபடியே ஒரு ஓங்காரசத்தம்போட்டார். அந்தச் சத்தங்கேட்டு சூலாயுதமும்

தன் ஆங்கார பலத்தை யடக்கிக்கொண்டு பரமசிவனிடம் போய்ச்சேர்ந்தது அதனைக் குசலன் கண்டு துயரமுற்று கடுஞ் சினங்கொண்டு தன் தாயார் கொடுத்த உக்கிரவீரசத்தியை யெடுத்துத் தன் தாயாரைத் தோத்திரஞ்செய்து விட்டுவிட்டான் அந்தச் சத்தியானது வில்லில் விடுபட்டு ஈரேழு பதினாலு லோகமும் ஆயிரத்தெட்டண்டமும் நடுங்க, ஆலகால விஷத்தைப்போற் சீறிக்கொண்டு ஆகாயம்பூமியு மொன்றுயுருவுகொண்டு வடவாமுகாக்கினியைக் குபீல்குபீலென்று கக்கி அண்டத்திலுள்ள தேவர்களுநங் கலங்கிவாட, குசலனைக் கொண்டாட, அக்கினிக் கொழுந்துகளுடன் வருகையில் சுவாமிக்கு பூர்வக்கியானம்வந்து போய்விடவே, கனவுகண்டாற்போலாச்சுதாம் அப்போ வுக்கிரவீரசத்தியானது சுவாமி திருமுகத்தைப் பார்த்து மார்பிலே தடாலென்று பாய்ந்து கூர்முனை யழுந்தி உருவமாட்டாமல் வெட்கி குசலராசன் அம்புருப்பொதியில் வந்தடைந்தது. அந்த உக்கிரவீர சத்திபட்ட அதிர்ச்சியிலே தேர்தட்டில் சாய்ந்து மூர்ச்சையடைந்தார். அந்த தெப்பை பரமசிவன் முதலானவர்களுக்கும் பட்டது.

அதுக்கண்டு குசலவாள் ஜனகமகாராஜனையும், அனுமாரையும், சாம்புவந்தரையும், யடக்கிக்கொண்டு யுத்தம்பண்ணுகிறபோது, அனுமார், சாம்புவந்தர், மாண்டுகிடக்கிற யானை தேர் பரி சேனைகளை வாரி குசலவாள்பேரில் விட்டெறிந்தார்கள். சோமகாசமகாராசனும் மாலியவானும் வில்லில் அநேக பாணங்களைச் சந்தித்து விட்டுவிட்டார்கள். அதுகண்டு குசலவர்கள் ஆள் ஒன்றுக்கு இரண்டு சிங்கமுகாஸ்திரமெடுத்து விட்டு விட்டார்கள். அது ஆலகால விஷத்தைப்போலும் ஐந்து சிங்கங்கள் சீறிவருவதைப்போலும் வந்து இந்த ஐந்துபேரையும் பட்சணம்பண்ணித் தட்சணமேபோய்விட்டது.

அதுகண்டு குசலவர்கள் ஆனந்தக் களிப்படைந்து மாண்டுகிடக்கிற சேனாதிபதிகள் ராஜசம்பந்தர்கள் இவர்களுடைய ஆபரணங்களையும் கிரீடங்களையும் கழட்டி மூட்டைகட்டி ஒருபக்கத்தில் வைத்துவிட்டு சத்துருக்கர், பரதர், இலட்சுமணர், இவர்க ளணிந்திரா நின்ற ஆடையாபரணங்களையும் கிரீடங்களையுங் கழட்டி ஒருபக்கத்தில் வைத்து ஸ்ரீராமரணிந்திரா நின்ற இரத்தின கிரீடத்தையும் ஆடையாபரணங்களையுங் கழட்டி மூட்டைகள்கட்டி வைத்துவிட்டு எதிர்ப்பாரில்லா

மல் ரணக்களத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகிறபோது அனுமார் சாம்புவந்தர் கண்ணைவிழித்துப் பிணங்கள் கீழே யிருந்தபடியே எட்டியெட்டிப் பார்ப்பதை கண்ணுற்ற குசலவர்கள் ஓடி அனுமாரையும் சாம்புவந்தரையுந் தூக்கி அவர்கள் தலைமீதில் வைத்து அழைத்துக்கொண்டு அஸ்வமேதக் குதிரையின் கழுத்தில் கயிற்றைக்கட்டி யிழுத்துக்கொண்டு வால்மீகராசிரமம் வருகையில் சூரியபகவான் அஸ்தமிக்க ஒரு நாழிகைபொழுது இருந்தது அப்போது அனுமாரையும் சாம்புவந்தரையும் ஆசிரமத்துக்குவெளியே நிறுத்திப்போட்டு குசலவர்கள் உள்ளேசென்று தாயாரைக்கண்டு பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள் அப்படி நமஸ்கரித்தபிள்ளைகளை வாரியெடுத்து ஆசீர்வதிக்க ஆசீர்வதித்த தாயாருக்கு யுத்தத்திற்கு வந்த இராசாக்களுடைய பேரையும் பலாபலத்தையும் சத்துருக்கர் இலட்சுமணர் பரதர் ஸ்ரீராமர் வந்து மூர்ச்சையடைந்ததையும் அவர்கள் ஆடையாபரணங்களைக் கழட்டி மூட்டைகட்டிச் செங்குரங்கு கருங்குரங்கு தலைமீதில் வைத்து அஸ்வமேதகுதிரையுடன் வந்ததையும் விபரத்துடன் சொன்னார்கள்.

அதைக்கேட்ட சீதாலட்சுமியும் குடிகெட்டுதே மக்களாவென்று மோதியடித்து பூமியில்விழுந்து அலறியெழுந்து பிள்ளைகளைத் தூக்கிக்கொண்டு வெளியேவந்து அனுமாரையுஞ் சாம்புவந்தரையும் அஸ்வமேதக் குதிரையையுங்கண்டு சொல்லரிய துயரங்கொண்டு மகனே அனுமந்தா ஐயோசாம்புவந்தரே இந்தச் சிறுபிள்ளைக்கு அவர்களுங்கள் தகப்பனுரென்று சொல்லப்போகாதோவென்று அழுகிறபோது குசலவர்கள் அம்மா நீங்களாகிலும் வால்மீகராகிலும் என் தகப்பன்மார் அயோத்தியிலிருக்கிறார்களென்று சொன்னதில்லை அதனாலேதான் எங்களிடத்திற்கு யுத்தத்திற்கு வந்தவர்களெல்லாம் எங்கள் தாய்தகப்பன்பேரைக் கேட்டார்களென்று சொல்ல சீதை அவர்களைக் கூட்டிக்கொண்டு ரணக்களம்வந்து அங்கதன் சுக்ரீவன் விழுந்து கிடப்பதைக் கண்டு அழுது அவர்கள் பிரதாபத்தைச்சொல்லிப்புலம்பி தன்தகப்பன்ஜெனகமகாராஜனும் சத்துருக்கர் பரதர் இலட்சுமணர் ராமபத்திரரும் மூர்ச்சையடைந்திருப்பதைக்கண்டு பூமியில்விழுந்தழுது கண்ணீரை ஆறாக யோடவிட்டு அவர்களுடைய பிரதாபத்

தைச் சொல்லி புலம்பிக்கொண்டிருக்க அவ்விடத்திலயோத்தியில் கௌசலை கைகேசி முதலானவர்கள் அழுது புலம்புகிறதை கியான திருஷ்டியினலறிந்து வசிஷ்டமகாமுனிவர் சிஷியர்களோடு எழுந்தருளி அயோத்திக்குவந்து கௌசலை கைகேசி முதலானவர்களைப் பார்த்துச்சொல்லுகிறார். சீதாலட்சுமி வனம்போய் அழுதகண்ணீர்வீணய்ப்போகாமல் இத்துன்பங்கள் நேரிட்டது இப்பவுமென்ன நாளை யுதயத்திற்குச் சகலருமெழுந்து சீதாலட்சுமியையும் பிள்ளைகளையுங் கூட்டிக் கொண்டு வருவீர்களென்று ஆறுதல் சொல்லிப்போனார்.

அவையெல்லாம் அறிந்து நாரதமகாமுனிவர் பாதாளலோகத்தில் ஆதிசேஷனிடத்தில் யாகம் பண்ணிக் கொண்டிருக்கிற வால்மீகரிடத்திற்குப்போய் சொல்ல வால்மீகர்கேட்டு திடுக்கிட்டு அவ்விடத்தில் நில்லாமல் பூலோகத்திற்கு நாரதமகாமுனியுடன் ரணக்களம்வந்து யாவர்களையும் சீதாலட்சுமியையும் பிள்ளைகளையும் அனுமார் சாம்புவந்தரையும் ஆசீர்வதித்து வாயுதேவரையழைத்து கமண்டலத்திலுள்ள அமிர்தத்தையெடுத்து நாலுமூலையும் விசிறினமாத்திரத்தில் அந்த அமிர்தத்தினல் எலும்பு தோல் சிரசு உடல் கால்கைகளொன்றாய்க்கூடி சகல யானை தேர் பரி சேனைகளுஞ் சத்துருக்கர் பரதர் இலட்சுமணர் ஸ்ரீராமபத்திரசுவாமியுஞ் சகல இராஜாக்களுமெழுந்தார்கள். அப்போது பரமசிவன் முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களும் 48000-ரிஷிகளும் ரணக்களத்திற்கு வந்து ஆனந்தக்களிப்புடனே புஷ்பமாரி பொழிந்தார்களதுகண்டு ஸ்ரீராமர்கண்டு தம்பிமாருடனே எழுந்து வால்மீகருக்கும் நாரதருக்கும் சகலரு மர்க்கியபாத்தியங் கொடுத்து நின்றார்களப்போது சகலரும் ஸ்ரீமந்நாராயணவென்று ஸ்தவுத்தியம் பண்ணினர்கள் ஜானகியம்மாளும் பிள்ளைகளும் ஸ்ரீராமரை வலம்வந்து சேவித்தார்கள். அப்போது ஸ்ரீராமர் சீதையையும் பிள்ளைகளையுங்கண்டு வெட்கி அம்மன் முகத்தை பாராமலும் பிள்ளைகளை யெடுத்து ஆதரணை பண்ணமலுமிருந்திடவே சகல தேவர்களு முனிவர்களும் சுவாமியை நோக்கி சீதாதேவியின் பேரிலும் பிள்ளைகள் பேரிலும் கோபம் வேண்டாமென்று சொன்னர்கள். அதுகண்டு சுவாமி தேவர்களையும் முனிவர்களையும் நோக்கி சொல்லுகிறார் சீதாலட்சுமிக்கு இரண்டு பிள்ளைகள் வந்த காரணமென்னவென்று கேட்டதற்கு ஸ்ரீமந் நார்ராயணரை எப்போதும் தியானஞ்செய்யாநின்ற

நாரதமகாமுனி சொல்லுகிருர் ஓ! சுவாமி? ரகுநந்தன நீ வண்ணான்பேரிலே போக்குக்காட்டி கர்ப்பவதியாகிய சீதாதே வியை லட்சுமணரைக்கொண்டு வால்மீகர் ஆசிர்மத்துக் கடுத் தவனத்தில் விட்டுவிட்டீர் அவ்விடத்தி லம்மன் அழுது புல ம்புகிறபோது வால்மீகர் கண்டு அழைத்துக்கொண்டுபோய் தன் ஆசிர்மத்தில் வைத்துக்கொண்டிருக்கிற காலத்தில் அம் மன் ஒரு பிள்ளையைப்பெற்று குசலனென்று பேரிடப்பட்டு அந்தக் குழந்தையை வால்மீகர் சமீபத்திற் கொண்டுபோய்வி ட்டு பின்பு குழந்தையை எடுத்துவந்துவிட்டாள் ஐயர் ஜபத்தி லிருந்தார் அதன்பின் கண்ணேவிழித்துப் பார்த்தார் குழந்தை யில்லாமற்போகவே பயந்து ஒரு தர்ப்பைபுல்லைப்பிடுங்கி அந் தக் குழந்தைபோலே சிருஷ்டித்தவுடனே அம்மனும் வந்து இந்தப் பிள்ளை ஏதென்று கேட்டதற்கு வால்மீகர் நடந்தகாரி யத்தைச் சொன்னர் அம்மனும் இதுவுமென்பாக்கியமென்று வளர்த்துக்கொண்டபிள்ளை லவனென்ருர். அதைக்கேட்ட ஸ்ரீராமர் சந்தேகந்தெளிந்து வால்மீகர் முதலான முனிவர்க ளுடைய ஆசிர்வாதங்களையும் பெற்று சீதாலட்சுமியையும் பிள்ளைகளையும் ஆசீர்வதித்து அங்கீகரித்து சகல யானை தேர் பரிசேனைகளையும் அஸ்வமேதக் குதிரையையுங் கூட்டிக்கொ ண்டு சகல இராசாக்களையுந் தம்பிமாரையுஞ் சீதாலட்சுமியை யும் பிள்ளைகளையும் இரதமேறச்செய்து தாமும் இரதமேறிச் சகலருடன் 32-மேளவாத்தியங்களுடனேயும் முத்துக்குடை கள் பூச்சக்கிரக்குடைகள் இரத்தினக்குடைகள் கவிய, வெகு ஆடம்பரத்துடனே சகலவிருதுகளும்பிடிக்க, ஆலவட்டம் வெண்சாமரைவீச, தாம்தாமென்று அவ்விடம்விட்டு சகல ரும் புறப்பட்டு வசிஷ்டரால் நியமிக்கப்பட்ட வனத்தில்வந் துசேர்ந்தார்கள். அப்போது இலட்சங்கன்னியர்கள் பவழங் களால் ஆலாத்தியெடுத்து வீதியில் கொண்டாடினர்கள் சுவாமியார் அஸ்வத்தைப்பார்த்து ஆனந்தக்களிப்புகொண்டு இராட்சதாளைப்பார்த்து அஸ்வத்தை லாயத்தில் கட்டிவை யுங்களென்று உத்திரவுசெய்து ஸ்ரீராமரும் சீதையம்மனும் பின்னல் குசலவர்கள் நடக்க, அதன் பின்னே சத்துருக்கர் பரதர் இலட்சுமணர் நடக்க, யாகசாலையினுள் வரும்போது கவுசலை, கைகேசி சுமித்திரை, முதலானவர் பேரப்பிள்ளைகள் மருமகள் வருவதைக் கண்ணாரக் காட்சிகொண்டு எழுந்து நின்ருர்கள்.

அவர்களை ஸ்ரீராமர் சீதாலட்சுமி பிள்ளைகள் பரதர், இலட்சுமணர், சத்துருக்கர் முதலானவர்கள் சேவித்து ஆசீர்வாதங்களைப்பெற்று யாகமண்டபத்தில் தம்பிமார்களும் சகல இராசாக்களும் மந்திரிப்பிரதானிகள்முதலான சகலரும்புடைசூழ்ந்து நவரத்தினங்களா லிழைத்த சிம்மாசனத்தின்பேரில் உட்கார்ந்தார். மற்றயாவரும் அவர்களுக்குத்தக்க பொற்பீடங்களின்மீ துட்கார்ந்தார்கள். அப்போது வசிஷ்டர் சகல ரிஷிக்கூட்டங்களுடனே கொலுமண்டபத்துக் கெழுந்தருளினார். அதைக்கண்டு ராமரும் தம்பிமார் முதலானவர்களுமெழுந்தெதிர்சென்று பயபக்தி வினயத்துட னழைத்துவந்து மான்தோல் புலித்தோலாசனங்களின்மீ துட்காரச்செய்து அவரவர்க ளாசனங்களிற்போ யுட்கார்ந்தார்கள். அப்போது ஸ்ரீராமபத்திரசுவாமி சொல்லுகிறார். ஐயா, எங்கள் குருசிகாமணியாகிய வதிஷ்டரே நான் செய்த பூஜாபலத்தினாற் சகலரும் வந்திருக்கிறார்கள். யாகத்துக்குவேண்டிய பூஜாதிரவியங்களுந் தயாராயிருக்கிறது சித்திராபருவமும்வந்துவிட்டது இனியென்ன தாமதம் யாகத்தை நிறைவேற்றுமையாவென்றார்.

ஸ்ரீராமர் யாகஞ்செய்கிறது.

அப்போது வதிஷ்டர் சகல ரிஷிக்கூட்டங்களுடனேயாகசாலைக்கெழுந்தருளி அந்த யாகசாலையை அலங்காரஞ்செய்து காராம்பசுவின் சாணங்கொண்டு மெழுகி கோஜலந்தெளித்து நவரத்தினங்களால் கோலமிட்டு தங்கத்தினாற் குந்தளமிழைத்து வாழைமரங்கள் நிறுத்தி சுற்றிலும் நீலக்கண்ணாடி பதித்துக் கர்ப்பூர தீபங்களேற்றி அனுமார் அங்கதனாலே சகல பூஜாதிரவியங்களு மழைப்பித்துக்கொண்டு வதிஷ்டர் பிரகஸ்பதி பகவானுடனேயும் கலைக்கோட்டு மகாரிஷியுடனே ஆலோசனைசெய்த காலத்தில் ஸ்ரீராமருக்குஞ் சீதாலட்சுமிக்கும் ஸ்நானஞ்செய்விக்க அறுபது வெள்ளை யானைகளின்பேரில் அறுபது பிராமண ஸ்திரீகளையும் அனுப்பித் தங்கக்குடங்களில் சரஸ்வதி தீர்த்தங்கள் கொண்டுவரச்செய்து அந்தக்குடதீர்த்தங்களை வாங்கி மந்திராபூதிகள்செய்து யாகசாலைக்குள் கொண்டுவந்து நேமநியமத்துடன் சுவாமியையும் அம்மனையும் அத்தீர்த்தத்தினால் ஸ்நானஞ்செய்து பீதாம்பரப் பட்டுகளுடுத்தி அலங்கிருதராய் யாகசாலையில் வந்துநின்றார்கள்.

அப்போது வசிஷ்டர்யாககுண்டத்தில் மந்திரப்பூர்வத்துடன் அக்கினிபகவானை யாககுண்டத்தில் நிறுத்தி அதில் நெய்களை யானைத் தும்பிக்கைபோல் சொரிந்து பஞ்சதிரவியங்கள் முதலானவைகளை அபரிமிதமாய்ப்போட்டு வேதகோஷ்டங்கள் பூமியு மாகாயமு மதிரத்தக்கதாகவும், அப்போது வசிஷ்டர் பிரகஸ்பதி பகவானையுஞ் சங்குவர்ணனையும் பிரபுக்களாக வைத்து பிரம்மரிஷிகளை நித்தசுத்தகாரியரா யிருக்கச்செய்து சோமயாதிகளை யேற்படுத்தி தாம் புரோகிதராய் அகஸ்தியரோடு கூடவிருந்து சுவாமிக்கும் அம்மனுக்கும் மந்திரபூர்வகத்துடன் ஓமம் வளர்க்கவே அந்த அக்கினிபகவானிடத்திலுண்டாகிய புகை மேகமண்டலஞ் சொர்க்கம்வரையில்போய் கப்பிக்கொண்டது. அதைக்கண்ட பரமசிவன் பார்வதிசமேதராய் ரிஷபவாகனரூடராயும், பிரமதேவர் சரஸ்வதி சமேதராய் அன்னவாகனரூடராயும், தேவேந்திர னிந்திராணிசமேதராய் விமானமேறிச் சகலதேவர்களும் புடைசூழ, எழுந்தருளி ஸ்ரீராமர் யாகமண்டபத்துக்கு நேராய் ஆகாயவீதியில் வந்து நிறைந்தார்கள். அதுகண்டு நாற்பத்தெட்டாயிரம் ரிஷிகளும் சகலருமெழுந்து சேவித்து யாகத்தி லுட்கார்ந்தார்கள். அப்போது யாகமண்டபம் முழுமையும் முனிவர்கள், இராஜாக்கள், இராட்சதாள், வானராள் முதலானவர்கள் நிறைந்து இடம்போதாமல் இருந்தது.

ஸ்ரீராமர் சீதையம்மனை இரண்டாவது சபதம் செய்யெனல்.

விருத்தம்.

இங்கிதமாதுசீதைக்கு யிமையனுமிராமச்சந்திரன்
துங்கமாம்யாகந்தன்னை தூயதாரன்மூகித்தே
சங்கைமேற்கொண்டுவாங்கு சதியனன்வதனநோக்கி
மங்கைநீயெனக்குசத்திய மகமதிற்செய்வாயென்றார்.

அப்படியிருக்கிற சமயத்தில் அயோத்தியில் ரசகனுகியவண்ணான் சொன்ன விசேஷம் ஸ்ரீராமருக்கு கியாபகம்வந்து இதற்கென்ன செய்யலாமென்று வால்மீகரைப்பார்த்து சொல்லுகிறார், கேளும் வால்மீகரே முன்னால் இராவணன் சம்மாரமுடிந்தவுடன் நமது சீதையை சத்தியம் செய்யும்படியாகச் சொன்னோம். அவளு மப்படியே தேவர்களறியச் சத்தியஞ் செய்தாள் அதை ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களும் மற்ற ச

கலரும் அறியமாட்டார்கள். ஆகையால் இப்போது சகலதே சத்துராஜாக்களும் ரிஷிகூட்டங்களும் பந்துவர்க்கங்களும் ராட்சதர்களும், வானராளும், இன்னம் மற்றுமுள்ள சகலவித ஜெனங்களும் நிறைந்த யாகசாலையில் லோக அபவாதந்தீர சீதைமாதை இரண்டாஞ் சத்தியஞ் செய்யச்செய்தால் அதன் பின்பு இந்த ஈரேழுபதினலு லோகத்திலும் நம்மையொருவரும் இகழ்ச்சி சொல்லமாட்டார்களென்று ஸ்ரீராமர்சொன்னார் அப்படிச்சொன்ன ஸ்ரீராமருடைய விசேஷத்தை யாகசாலைக்கு நேராக ஆகாயமார்க்கத்தில் வந்திருக்கும் பிர்மதேவர் முப்பத்துமுக்கோடி தேவர்கள் கின்னரர், கிம்புருடர், காந்தருவர், சித்த வித்தியாதரர் முதல் சகல தேவர்களுங் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் லோகபிராட்டியாராகிய சீதையம்மனவள் ஸ்ரீராமர்சொன்ன வாக்கியத்தையெல்லாம் தன்னிரண்டுகாதுங் குளிரக்கேட்டு அந்த யாகசாலையில் ஸ்ரீராமருக் கெதிராக சத்தியந்தைச்செய்து பிறகு பூமிதேவியைப் பார்த்து தனக்கு யிடந்தரவேணுமென்று பிரார்த்திக்கிருள். அதெப்படியெனில் ஓ! அம்மா பூமிதேவி நான் பூமியின்கண் மிதுலாபுரி பட்டணத்தை யரசாட்சிசெய்யும் ஜனகமகாராசனிடம் பிறந்து அயோத்தியாபுரியையாளும் தசரத மகாராசனுடைய குமாரர் ஸ்ரீராமருக்கு நான் மணமாலை சூட்டினது உண்மையானல் இந்த ஸ்ரீராமமூர்த்தியை ஏதுவேளையும் என் மனதிலுங் கினவிலும் நினைத்திருக்கிறது மெய்யானலும் கற்புடைய பெண்களுக்கு தங்கள் மனக்காவலல்லாமல் பெரிய மதிற்காவல் வைத்தாற் பிரயோசன மென்ன அதைப்போல எனதுமனதிலிந்த ஸ்ரீராமமூர்த்தியே பத்தாவாக திரிகாலத்திலும் நினைத்திருப்பது நிச்சயமாயிருந்தால் அட்டியில்லாமல் வந்து இடந்தரவேண்டும் பூமாதேவியேயென்று அநேக விசமாகக் கேட்கிறபோது அவ்விடத்தில் பூமியானது இரண்டாக வெடித்தது அதனிடத்தில் ஒரு பெரிய பிலத்துவாரமுண்டாகி அதிலிருந்து சங்கீதமேளவாத்தியங்கள் முழங்க, குடை கொடிச்சீலைகள் முதல் 32-விருதுகள் நாககன்னியர்கள் பிடிக்க, ஆலவட்டம் மயில்விசிறி வெண்சாமரைவீச, நாககன்னியர்கள் நடனம்புரிய, ஆதிசேஷன் பராமரிக்கைபண்ண திருதராட்டிரன், ஜனகமகாராசன், காற்கோடகன், தட்சகன், இன்னம் சகலமான மந்திரிகள், பொற்பிரம்பு வெள்ளித்தடியெடுத்துவர, சில நாககன்னியர்கள் கட்டியங்கூற சில நாக

கன்னியர்கள் நவரத்தினங்களிழைத்த ஒரு சிம்மாதனமெடுத்துவர பூமிதேவியானவள் அநேக ஆடையாபரணங்களெடுத்துக்கொண்டு பிலத்துவாரத்தைவிட்டு சகலரும் வெளியில்வரப் பூமிதேவியானவள் சீதையம்மனருகில் வந்து அம்மனுக்கு அநேகவிதத்தில் தேறுதலைசொல்லித் தான் கொண்டுவந்த ஆடையாபரணங்களா லலங்கிர்தஞ்செய்து நவரத்தினசிம்மாதனத்தில் ஏறிக்கொண்டு சகல மேளவாத்தியங்கள் முழங்க இதுகளெல்லாம் ஆகாயத்திலிருக்கும் தேவர்கள் பார்த்து, புஷ்பமாரிபொழிய சகலவைபவத்துடன் பூமாதேவி சீதையுடன் பிலத்துவார வழியாய்ப் பாதாளலோகம்போய்ச் சேர்ந்தார்கள் துவாரமும் பூமியும் எப்போதும்போல மூடிக்கொண்டது.

அதன்பிறகு ஸ்ரீராமரானவர் ஒன்றுந்தோன்றுமல் மயங்கி சீதையம்மன் பிரிவினுலுண்டான வருத்தத்தினுல் அநேகமாகப்புலம்பி மறுபடியுந் தானே மனதைத்திடப்படுத்தி அதிக கோபமீறிக் கண்கள்சிவக்க, மீசைகள் படபடவென்று துடிக்க பற்களை நறநறவென்று கடித்து எழுந்திருந்து அண்டையிலிருப்பவர்களைத் தூறி இந்த பூமாதேவிக்கு இத்தனைகெர்வமா நானுஞ் சீதையும் வந்திருக்கும்போது அச்சம்பயமில்லாமலும் என்னுடன் சொல்லாமலும் சீதையை அழைத்துக் கொண்டுபோனுளே அந்த பூமாதேவியையும் அண்டரண்டங்களையும் இதோ ஒரேபாணத்தினுல் பேர்த்து சமுத்திரத்தில் தள்ளிவிடுகிறேன் பாருங்களென்று அதிக உக்ராகாரமாய் இலட்சுமணருடைய கையிலிருக்கும் வில்லை வெடுக்கென்று பிடுங்கி குமுகுமுவெனக் குணத்தொனிசெய்து இராமபாணத்தை யெடுத்து வில்லிற்சந்தித்தார். அதை ஆகாயத்திலிருக்கும் பிரமன் பார்த்து இதேது யுகமுடிவுகாலம் வந்ததுபோலிருக்கிறதென்று அதிக சீக்கிரமாய் ராமருக்கு முன்னேகுதித்து அவருடைய இரண்டுகையும் பிடித்துக்கொண்டு ஓ! சுவாமி தாங்களே இப்படி கோபித்துக்கொண்டால் தங்கள்கோபத்தை யார் தணிக்கவல்லவர் தாங்கள் ஆக்யாபித்த பிரகாரம் நடந்ததேயொழிய வேறில்லை நான் தங்களுடைய உந்திக்கமலத்திற் பிறந்த பிரமன் தாங்கள் இராவண சம்பாரமுடித்து சகலகாரியங்களும் நிறைவேற்றினது ஆதியில் தாங்கள் ஆக்கியாபித்த பிரகாரம் சீதையம்மனும் வைகுந்தத்திற்போய் தங்கள் வரவுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறுள் ஆகையால்

தாங்கள் லோகநடத்தையைவிட்டு கோபத்தைத் தணிக்கவே ண்டும் இதுவல்லாமல் வால்மீகர் உத்தரகாண்ட முழுமையும் குசலவர்களுக்கும் கற்பித்திருக்கிறார் அதைப்போல் நடந்து கார்த்து ரட்சிக்கவேண்டுஞ் சுவாமியென்று பிரமதேவன் சொல்லவே இராமரும் கோபந்தணிந்தார் பிரமன் ஆகாயவீதியில் அவர்களுடன் போய்ச்சேர்ந்தார் இவரும் வில்லை இலட்சுமணர்கையில் கொடுத்துவிட்டு அதிக சந்தோஷத்துடன் தர்ப்பாசனத்தின்பேரில் உட்கார்ந்தார் அப்போது வதிஷ்டருத்திரவுபடி இராமர் லட்சுமணரைக்கொண்டு அஸ்வமேதக் குதிரையை யழைப்பித்து காட்டுமுருக்கமரத்தில் நன்றாயிழைத்து அமைந்த யாககுண்டத்துக் கிழக்கே நிறுத்தி புட்பம் தாம்பூலங்கள் வைத்து பூசைசெய்துக்கொள்ளுகிறார். ஓ! உத்தம அஸ்வமே நாங்கள் கீர்த்திபிரதாபத்தை யடையும் பொருட்டு இந்த அஸ்வமேதயாகம்பண்ணுகிறோம் நீ தயவுசெய்து உன்சரீரத்தை யாககுண்டத்தில்விட்டு திவ்வியசரீரந் தரித்து சுவர்க்கலோகம்போய்ச் சேரென்றார். அப்போது வதிஷ்டர் அந்தக் குதிரையை தூபதீபங்களினாலேபூசைபண்ணி தோத்திரங்கள்செய்து இலட்சுமணரை நோக்கி குதிரையைக் கண்டியுமென்றார் அதுகேட்டு உடனே இலட்சுமணர் சிரசறுத்து உதிரமில்லாம லமிர்தம் தாரைதாரையாக சொரிய சிவ்வென்று கேசரிமார்க்கத்திலெழுந்து ஸ்ரீமந்நாராயணரைத் தோத்திரம்பண்ணி சூரியபகவானுடன் கலந்துவிட்டது. அப்போது இலட்சுமணர் அஸ்வத்திலுள்ள மாமிசத்தை வச்சிரம்போலும் பவளம்போலும் தரித்து ஸ்ரீராமர் வாங்கி வதிஷ்டர் சொல்லுகிற மந்திராபூர்வகத்துடன் யாககுண்டத்திற்போட அக்கினிபகவானும் பிரியத்துடன் வாங்கிக்கொண்டு தன்பக்கத்தில் சேர்த்துவைத்தார் அப்போது வதிஷ்டர் இராமர்கையில் பரமசிவன் பிரமதேவர் முதலான தேவர்களுந் தேவரிஷிகளுக்கும் யாகபாகத்தை யெடுத்துக்கொடுக்க அவரவர்கள் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதங்களளித்துப்போயினர் இப்பால் பிரம்மரிஷிகளுக்கு யாகபாகத்துடன் ஆனைகள் எண்பது குதிரைகள் - நூற்றிருபதினாயிரம் பாரந் தங்கமுங்கொடுத்து ஆசீர்வாதம்பெற்று இப்படியே சகல பிராமணாளுக்கும் ஏழைபரதேசிகளுக்கும் அளவற்ற திரவியங்களை அவரவர்கள் வாங்கிக்கொண்டு தங்கள் தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள் இப்பால் ஸ்ரீராமரானவர் கிரமப்பிரதிஷ்டை செய்யும்படி

நினைத்து அங்கிருக்கும் இராசாக்களையும் சேனைகளையும் புறப் படும்படியாய் உத்தரவுசெய்து சந்தனமகாராசன் முதலான ஸ்திரீஜனங்களெல்லாரும் நவரத்தினமயமான ரதங்களேறி நடக்கவும், குசலவர் முதலான இராசகுமாரர்க ளெல்லோ ரும் குதிரைகளின்பேரி லேறிக்கொண்டு ஆயுதங்களைப் பிடித் துக்கொண்டு வரிசையாகநடக்கவும், இப்படி சகல ஆடம்பர த்துடன் ஸ்ரீராமரானவர் விபீஷணர், சுக்ரீவர், தம்பிமாருட னும் ரதாரூடராய்ப் புறப்பட்டு அனுமார், அங்கதன் முதலா னவர்களும் புடைசூழ்ந்து வரத்தக்கதாக தண்டுவிட்டு நடக் கும்போது பதினெட்டுவாத்தியங்களும் தாம்தாமென்று முழ ங்கவும், அநேகமாயிரம் நாடகப்பெண்கள் விநயத்துடன் பரதநாட்டியங்களைச் செய்துக்கொண்டுவரவும் திருச்சின்னங் களினுடைய ஓசைகளானது பூர்வத்தில் தசரதமகாராஜனு டைய வாக்கியந்தப்பாமல் பதினாலுவருஷம் வனவாசஞ் செய்ய பஞ்சவடிதீரத்தில்வந்து கரதூஷணரைக் கொன்று மாரீசனை வதைத்து சீதையையிழந்து வாலியைச் சங்கரித்து சமுத்திரத்தில் அணைகட்டி இராவணன், கும்பகர்னன், இந் திரசித்து, அதிகாயன், கும்பநிகும்பன், இப்பேர்ப்பட்ட இரா ட்சதாளை த் தும்சம்பண்ணி சீதையம்மனைச் சிறைமீட்டி அ யோத்தியில்வந்துபட்டாபிஷேகராய் குசலவர்களையும்பெற்று அஸ்வமேதயாகஞ்செய்து முடித்து பிரம்மக்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய நான்கு வருணத்தார்களுக்கும் ஆசையடங் கத்தக்க தட்சணைகள்கொடுத்து அன்னதானம், சுவர்னதானம் வஸ்திரதானமுதலான சோடசமகாதானங்கள்செய்து ஈரேழு பதினாலுலோகத்திலுங், கீர்த்திப்பிரதிஷ்டைபெற்று தரும சொருபனாகி அயோத்தியாபுரியைப் பரிபாலனம் பண்ணுகிற ஸ்ரீராமமூர்த்தி வருகிறாரென்றூதவும் அநேகவீரர் வெற்றிச் சங்குகள் குறிக்கவும் பொற்பிரம்புக்காரர் சேனைகளுக்கு முன் னே நின்று மகாமகிமைபொருந்திய ஸ்ரீராமமூர்த்திபவனிவரு கிறார் விலகிநில்லுங்கோளென்று சந்தடிவிலக்கிவரவும் இரு ண்டுபக்கத்திலும் ஆயிரம்பேர்கள் கற்பூரதிவட்டிகள்பிடித்துக் கொண்டு வரிசைவரிசையாய்வரவும், ஆகாயத்திலிருக்கும் தே வர்கள் பாரிஜாதபுட்பங்களை சலசலவென்று வருஷிக்கவும் இப்படிப்பட்ட வைபவத்துடனே இராமமூர்த்தியானவர் நகர் பிரதிஷ்டைசெய்து மறுபடியும் நல்லசுபமுகூர்த்தத்தில் திரு ம்பி அயோத்தியாபுரியில் பிரவேசித் அந்தரண்மனைவாசலில்

வந்து இரதத்தைவிட்டிறங்கி சகல ஆடம்பரங்களையும் நிறுத்தி அவர்களை யனுப்பிவிட்டு அனுமார், சாம்புவந்தர், விபீஷணர் சுக்ரீவன், சந்தனமகாராசன் முதலான இராசாக்களுக்கும் வெவ்வேறு விடுதிக ளமர்த்திவைத்து தம்பிமார்களும் குசலவர்களுடனும் கௌசலை, கைகேசி, சுமித்திரை முதலானவர்களுடனும் அரண்மனைக்குள் பிரவேசித்துயிருந்து மறுநாளுதயத்தில் ராமமூர்த்தியானவர் யெழுந்திருந்து காலோசிதமான கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சர்வாலங்கிருதராய்ப் புறப்பட்டு தம்பிமார்கள் குமாரர்கள் மந்திரி சாமந்திரிகள் பிரதானியர்கள் புடைசூழ்ந்துவரக்கொலுமண்டபத்திற்கு வந்து நவரத்தின சிம்மாசனத்தின்பேரி லுட்கார்ந்து கொலுவாயிருந்தார். அப்போது விபீஷணர் முதல் சகல ராசாக்களும் வந்து நமஸ்கரித்து அவரவர்களுக்குத் தகுந்த ஆசனத்திலுட்கார்ந்தார்கள்.

அப்போது விபீஷணர்முதல் சகல இராசாக்களும் சுவாமியை வணங்கிச் சொல்லுகிறார்கள். ஓ! சுவாமி, தங்கள் அனுக்கிரகத்தினால் யாகதரிசனம் பண்ணினோ மிதுவரையில் எங்களுடைய தேகமெல்லாம் எப்படியிருக்கிறதோ ஆதலால் நாங்கள் போய்வருகிறோம் எங்களுக்குச் செலவுகொடுத்து அனுப்புங்களென்று பிரார்த்திக்க ராமரும் மெய்தானென்று அவரவர்களுக்குத்தக்கபடி யானைதேர் பரிசேனை தங்கம் இவைகளெல்லாம் வெகுமதியாகக்கொடுத்து பரத சத்துருக்கரால் அவர்களுக்கு வழிவிடும்படிசெய்து பிறகு தம்பிமார் குசலவர் அனுமார் மந்திரி பிரதானிகளுடனும் இராசநீதிதவறாமல் மாதமும்மாரிபொழிய நித்தியமங்கல சுபசோபனங்களுடனே தானதருமங்களைச்செய்து அயோத்தியாபுரி பட்டணத்தை பரிபாலனஞ் செய்துக்கொண்டிருந்தார் இந்த அஸ்வமேத யாகத்தை பயபக்தியுடன் யார்படித்தாலும் எழுதினாலும் காதுகுளிரக் கேட்டாலும் அவர்கள்செய்த பாவங்கள் நீங்கி இம்மையில் சகலத்தையு மனுபவித்து மறுமையும் ராமமூர்த்தியின் பாதாரவிந்தமாகிய சாயுச்சிய பதவியை பெறுவார்கள்.

உத்தரகாண்டம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



மகாவிந்தம்.

வெண்பா.

சீர்திருச்சிற்றம்பலையர் செய்துஞ்செய்யாமல்விட்ட
ஓர்திருச்சரித்திரத்தி லோதுமிகுஞ்—சார்வாக
வேண்டியெழுதினதை மெய்ந்நூல்வல்லோர்பொறுக்க
வேண்டிமிகவணங்கு வேன்.

கலிவிருத்தம்.

கனைகடலுலகெலாங் கடகடன்னுடன்
துணைபரிவல்லியுந் துயன்றுநிற்குண
இணையநாளாண்டர சியற்றிச்செலவழி
மணைகழலிராகவன் மகிழ்ந்திருந்தனன்.

விருத்தம்.

வானவர்துயரைப்போக்க வன்மைசேரயோத்திவந்த
போனகாம்வஸ்துவாய னாவுலகளந்தமாயன்
தானவர்தமையொழித்துத் தகைபெரும்பதவியீந்து
மானிலத்தோர்களேத்த வைகுந்தமேவினானே.

பிர்ம தேவனேவலாலே யமதருமராசன் அக்காலத்திலே தன்வடிவுமாறி அயோத்திமா நகரத்தில் மலைப்போல் நிலை கொண்டதான அரண்மனைவாசலில் முன்னே தருந்த ஒரு முனிவடிவுகொண்டுவந்து அங்கேவளர்ந்த கரடிகளுடனே அங்கதாயிடிபோல முழங்குஞ் சொற்களையுடையவ ளாகையினாலே பிரம்புங்கொண்டுவரிந்துகச்சையுடனே அங்கிகரித்து சிங்கங்கள்போல நிற்கிற வாயில்காக்கு மிலேச்சர்களைப்பார்த்து நான் உள்ளேபோய் முறம்போலுங் காதுகளையுடைய சத்துரு சஞ்சயமென்னும் பட்டத்து யானைமேல் வரத்தக்க ஸ்ரீராமமூர்த்தியைக் காணவேணும், நீங்கள்போய் ஒருதவ

முனிவந்து உம்முடைய கடைவாசலில் நிற்கிருரென்று சொல்லுங்களென்று மிகவும்வேண்ட அப்போது கோபமில்லாத போதும் அக்கினிபோற் கொதிக்குங் கண்களையுடைய வாயில் காப்பவர்களில் ஒருவன் முப்புரிநூலணிந்த முனிவரே நன்றென்று வணங்கிக்கொண்டுபோய் இராமமூர்த்தியைக் கண்டு வணங்கித் துதிசெய்து சக்கிரவர்த்தித் திருமகனுன சுவாமி சந்நியாசி வேடத்தைக்கொண்ட ஒரு வைதிகமுனிவர் வந்து நம்முடைய மணிமதில் சூழ்ந்த கோயிலின் முன்னே கட்டிய கோபுரவாசலில் நிற்கின்ருர் உம்மைக் காணுதற் கென்று சொல்ல அதுகேட்டு மழைபொழிகின்ற மலைபோலும் யானைமேல் அலங்கிருதராய்ப் பவனிவந்து உலகையாண்டு ரட்சிக்கின்ற இராமமூர்த்தியானவர் அந்த வாயல்காக்கும் வீரனைப்பார்த்து நான் முனிவர்கள்பேரில் நீங்காத் தயவுகொண்டு உலகத்திலே தகாதசெய்கைகள் செய்கிற அசுரர்களை வேரறுக்கிறதே எனக்கு விரதமான படியினுலே அந்தமுனிவர் எந்த காரணத்தினுலோ வந்தாரோ தெரியவில்லை நீங்கள் எவ்வளவுந்தடைசெய்யாமல் அவரை இங்கழைத்துவாருங்களென்று அருளிச்செய்தவுடனே வாயில் காப்பவன் விரைவாய் ஓடிவந்து முனிவரைக்கண்டு வணங்கி ஓ! சுவாமி, ஸ்ரீராமமூர்த்தியின்னேமனமாயிற்று தாங்களினித் தடையின்றி உள்ளே போய் சபாமண்டபத்தில் காணலாமென்றபோது உலகமெல்லாம் ஆள்கின்ற இராமமூர்த்தியை முனிவேடங் கொண்ட யமதருமராசன் வாசல்கடைநீங்கிவந்து காணலாயிற்று ஆதலாலே கடல்சூழ்ந்த உலகத்திலுள்ளவர்க் கெல்லாம் யமன் தப்பாமல்வந்து உயிர்கொள்வானென்றுபயந்து நல்லதவங்கள் செய்யவேணும் இன்னமும் பரயோத்தமரான இராமசுவாமியின் உயிர்கொள்ள உலகிலே கண்ணுக்குத் தோற்ற வந்த தவமுனிவடிவை ஸ்ரீராமர்கண்டு ஐயாமுனிவரே நீர் வேண்டுவதையில்லையென்பேனென்றுவேருருவரைப்போல் என்னையிகழவேண்டாம் நீர்என்னைக்கேழ்க்கத்தக்கது ஆலோசிக்கும்போது உம்மை யொப்பானவர்க ளொருவருமில்லை கடல்சூழ்ந்த வுலகத்திலே நான்கண்டதேயில்லை ஆகையால் உங்களையெல்லாம் நன்ருக சிருஷ்டிக்கின்ற உந்திக்கமலத்தில் பிறந்த பிரமதேவனைப்போலும் பெருமையை யுடைய நீர் வேண்டிவந்ததைச் சொல்லுமென்று இராமர்கேட்க அதற்கு முனிவேடங்கொண்ட எமன் சொல்லுகிருர் கேளும் அர

சனே நான் அந்த மகாவிஷ்ணுவினுடைய அம்சத்தினிடத்தில் ஜெயசீலனாகிய பெரிய முனிவன் ஓய் செவ்வைக் குணத்தினரே! தேனொழுகுகின்ற மலர்மேற்கடவுளான நான்முகன் எனக்கு விடைகொடுத்தபடியே செய்யவந்தவன் யானென்று எடுத்துச் சொல்லத்தொடங்கினான் கேளுஞ் சக்கிரவர்த்தித் திருமகனே? நான் சொல்லுவதொன்றுண்டு அதாவது நாமிருவரும் இவ்விடத்தே தனியேயிருந்து பேசவேண்டும் நாம் தனித்து பேசிக்கொண்டிருக்கும்போது யாராகிலுஞ் சரியே இங்கே நம்முடைய ரகசியம் தெரிய வருவார்களேயானால் அவர்கள்மேல் தாட்சணியஞ் செய்யாமல் அவர்களை நீக்கி விடவேண்டுமென்ன அதுகேட்டு இராமன் இப்படிக் கேட்டுக்கொண்ட அந்த வைதிகமுனிவருக்குஞ் சம்மதித்துக் கூடியிருந்த இளையபெருமாளான இலட்சுமணரைப்பார்த்து தம்பி இலட்சுமணா உன்னைப்போலே யார்வந்தாலும் உள்ளேவிடாமல் ஜெயபேரிகை முழங்குகின்ற அழகான நம்முடைய கடைவாசலுக்குப்போய்க் காத்துக்கொண்டிருவென்று தம்பிக்கு விடைகொடுத்துவிட்ட பின்பு இதழ்கள் விரிய முறுக்குடைந்தொழுகுகின்றமலராகிய மாலையணிந்த ஸ்ரீரகுவீரன் ஓய்முனிவரே இனி நீர் உம்முடைய மனமகிழ்ச்சியுடனே சொல்லுமென்றுகேட்க, அப்போ ரகசியமான பழைய கீர்வாண பாஷையில் வழங்குகின்ற அந்த வைதீக முனிவர் சக்கரவர்த்தித் திருமகனுரைநோக்கிமூன்றுலகங்களையு முடிவு செய்ய வேண்டினாலும் செய்ய வல்லவ னெவ்விதத்திலும் சமர்த்தனான எமதருமன் நானென்றுசொல்லத்தொடங்கினான் எப்படியென்றால் முடிவைச் சொல்வதான கற்பனென்னும் வாழ்நாளையுடைய நான்முகனான பிரமதேவன் முறையே நாலாயிரப் பிரபந்தம்போலப் பழையதான நான்குவேதங்களையும் பாடுவனாய் திருமாலுந்திக்கமலத்திலே பிறந்துபிரமதேவராகவந்து இந்த ஏழுலகங்களையும் சிருஷ்டித்த நான்முகக்கடவுளாலே சொல்லிய முடிவான நீ விசேஷத்தைக் கேட்பாயாக முன்னே என்னாலும் தேவர்கள் கூட்டத்தாலும் வெல்லக் கூடாதவனாய் சடாதரனாகிய சிவன் பொருந்துகின்ற கைலாயமலையையு மெடுத்த ஒப்பற்ற பெரிய பலமுள்ளவன் இன்னமும் வாளியைப்பெற்றவன் சூரியனுஞ் சந்திரனும் வொதுங்கிச் செல்லத்தக்க இலங்கைத்தீவி லுள்ளவர்க்கு அரசனானவன் பின்னும் மல்யுத்தத்தினாலே நிறைந்தபெ

ரிய புஜவலிமையையுடை யவனும் தேவர்களிலே சிறந்தவர்க ளான மூவராலும் தொலையாத முக்கோடி என்னும் அளவை யுடைய ஆயுசுள்ளவன் இன்னும் கொன்றைமாலை விளங்கு கின்ற சிவந்த சடையையுடைய சிவனிடத்தில் மிகவும் வலிவு பொருந்திய வாளாயுதம் பெற்றவன் இரவைப்போலக் கருத்த நிறமுடைய இராவண னென்றபெயர் நான்கு திக்கிலும் ஜெயம்பெற்ற இராவணனுடைய உயிரைக் கொல்வதற்காகத் திருவவதாரஞ் செய்கிறேனென்று தேவருக்கு வரந்தந்த கூரி யவேலைக்கொண்ட இராமனென்னும் பிரபுவே சூரியனுடைய பெரியரதம் வருகின்ற குளத்திலே பள்ளிகொண்ட சற்பசயன மும் திருப்பாற்கடலும் விட்டு இந்தத் திருவயோத்தியிலே பிறந்தாய் அப்படி அவதாரமானகாரணத்தை முடிவுசெய்தாய் இனி உன்னுடைய மெய்யான மேன்மையைக்கொண்ட பரம பதத்துக் கெழுந்தருளவேண்டும் என்பதாக இப்படிச் சொன் னதுமன்றி தாமதம்பண்ணுமல் நான்சொன்ன யிந்தப்படியே செய்யக்கடவாயென்று சொல்லுமளவில் நவரத்தின மாளி கையினைச் சூழ்ந்த வாலிபன் முன்னே எரிகின்ற சிவந்தமூன் றுதீயும் வளர்ந்து வேள்வி செய்கின்ற அத்திரிமகாமுனிவ ருடைய பெரிய புத்திரனுக விளங்குகின்ற முப்புரிநூலணிந்த தூறுவாசமுனிவன் வந்து ஒருவராலும் வளைக்கக்கூடாத நீ ண்டவில்லைக் கையிலேகொண்ட இலட்சுமணப் பெருமாளை நோக்கி ஓ! இளையபெருமாளே? வேலாயுதங்கொண்ட ரகுவீ ரனிடத்தில் நான் கருதியுள்ளதான ஒருவார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது ஆதலால் தூறுவாசமாமுனிவன் வந்து வெளிவாசலில் நிற்கிறுனென்று ஸ்ரீராமரிடத்தில் சொல்ல வேண்டிய துனக்குக்கடனென்று நான்குவேதங்களுணர்ந்த முனிவன்சொல்ல அந்த வார்த்தையை இலட்சுமணர் கேட்டு வெண்புரி நூலணிந்த பழையவைதிகரே நீர்சொன்னபடியே உமக்கு யாதொரு குறைவுமில்லாமல் உம்முடைய காரியத்தை முடித்துத்தருவேன் அந்தவார்த்தையை சொல்லவேணுமெ ன்று இளையபெருமாள் மிகவும் வணங்கிக்கேட்க உடனே அ ந்தமுனிவர் மனதிலே மிகவுங் கோபங்கொண்டு நீ உன்தமை யனுக்கு இப்படியாக என் வரவைச் சொல்லுகிறையா அல்ல து இப்பொழுது உங்களுடைய படைமுழுதும் அழிவதான அப்படிப்பட்ட ஒரு சாபத்தைக் கொடுப்பேனென்று சொல்ல

அப்படி உத்தாரத்தோடு கூறிய பெரிய வேதங்களுக்குத் தலைவரான முனிசிரேஷ்டர்சொல்லைக்கேட் டிளையபெருமாள் திடுக்கிட்டவராய் விசனத்துடனே ஆலோசித்து இவரிடுஞ்சாபமானது நம்முயிற்கு நேருமேயென்று பெரியவேலைக் கைக்கொண்டவராயும் பயந்து நடுநடுங்கி இளையபெருமாளும் விரைந்து சென்று தன் குறைதீர ஸ்ரீராமரைப்போய்க் கண்டு சுவாமி மிகுந்தபெருமையையுடைய அத்திரிமகாமுனிவர் புத்திரனாகிய ஞானத்தில் மிகுந்த தூறுவாசமுனிவர் வாசலில் வந்திருக்கின்றார் ஏதோ விசேஷந் தங்களைக்கண்டு பேசவேணுமென்று பாதங்களில் வணங்கிச் சொல்ல அதைக் கருங்கொம்பும் நெருப்பைச் சிந்துகின்ற கண்களுங்கொண்ட எருமைக்கடா வாகனத்தில் நன்றாக மகிழ்ந்தேறுகின்றவரும் கண்ணுக்குத் தோன்றாதவருமாகிய யமனைநோக்கிவந்த தூறுவாச மகாமுனிவரை உபசரித்து போகச்செய்து பின்னரங்கே வருகிறோமென்று ஒரே உறுதியான வார்த்தைசொல்லி யனுப்பிவிட்டு தன்னிடத்தில் வந்துசொன்ன தம்பியுடனே நிலையான பெரிய வேதங்களெல்லாந் தெரிந்த தூறுவாசமகாமுனிவரை வரவழைத்து அவர் வந்தபின்பு பாதங்களை வணங்கிச் சதுர்வேத முனிவரே நீரென்னிடத்தில் வந்தது என்ன காரியமென்று கேட்க அதற்கு தூறுவாசமகாமுனிவர் கேளும் ஸ்ரீராமா உங்கள் குலத்து முன்னோர்கள் முறையே முடிசூட்டி அரசாளுகிற அக்காலந் துடங்கி ஆயிரவருஷத்திற் கொருதரம் நான் ஒருநாள் வந்து உங்களிடத்திலே போஜனஞ்செய்துக்கொள்ளுகிறதாகிய அந்தநா ளின்றாகையால் நான் போஜனஞ் செய்யவேண்டுமென்று வந்தேனென்று சொன்னார். அதுகேட்டவுடனே எட்டுத்திக்கிலும் யாகஞ்செய்வதினாலேயே கீர்த்திச்செலுத்த வல்லவனும் அமுதுபாக்கியமான முப்புரிநூலணிந்த மார்பினராய் அரசர்களுக்கு தகுந்த மனமும் நிழலும்போல்வரான சுயம்பாகிகளை தகுந்தபடி அழையுமென உத்திரவளித்தனர்.

வெற்றிமாலையணிந்த இலட்சுமணராலே வரப்பட்ட தூதர்கள் வாயுவேக மனோவேகமா யோடி ஒரு நொடிக்குள்ளே சுயம்பாகியைக்கண்டு விரைவிலோடி ஸ்ரீராமர் சபாமண்டபத்தினருகே வரும்படி கூட்டிவா அமுதுசெய்பவனும் ஸ்ரீராமமூர்த்தியினிடம் வந்து வணங்கி நின்றான். அவனைக் கண்ட

ஸ்ரீராமர் சொல்லுகிறார். கேளும் சுயம்பாகியே இந்தப் பெரி யோருக்குத் திருப்தியாகும்படியான அறுசுவையோடுங் கூடி ன உண்டி சமையல் சீக்கிரமாக வேணுமென்று கட்டளையிட் டார். அந்தப்படியே செய்கிறேனென்று ஒருவன் பொன்னி னாலும் வெள்ளியினாலு மிருக்கும் பாத்திரங்களையெல்லாம் து லக்கி இரத்தினகுடங்களில் நீர்க்கொண்டு வைத்துக் கொண் டேயிருந்தான். மற்றொருவன் சாதஞ் சமைத்துக் கொண் டேயிருந்தான். அதெப்படியென்னில் மிகுந்த சந்தனகட் டைகளாலும் குளிர்ந்த அகிற்கட்டையாலும் எங்கும்வைத்து அந்தப் பானைகளெல்லாம் நல்ல வஸ்திரத்தாலே மூட மற்ற பேர்கள்வந்து அவர்களுடைய திருமடப்பள்ளியில் வெந்த வெள்ளைசாதங்களை வீரர்களாலே அடுப்பெரியமாட்டிக் கொ டிய நோய்களில்லாமல் நல்ல முனைதெரியாத புழுகுசம்பா அரிசி ஆயிரம்படியரிசியை உலையில் பெய்து பொன் துடிப்பி னாலே துழாவி பதமாகவடித்து வகைவகையாகயிறக்கி அறுசு வையோடு கூடிய கறிவகைகளைச் சமைத்து அதற்குப்பின் நன் றாகத் தாளிதஞ்செய்துவைத்துப் பசுவிநெய்யை பதமாகக்கா ய்ச்சி முதிர்ந்த பசுமையுள்ள முக்கனிகளுடனே குழம்புபால் களுங்காய்ச்சி இன்னும் பலவகைகளெல்லாஞ் செய்துவைக்கு ம்போது வந்திருக்கிற தூறுவாச மகாமுனிவரையும் பார்த்து ஐயா முனிவரே நீர் கேட்டபோஜனம் உண்டருளுமென்று வண்டுகள் இன்னிசை ராகங்களையெடுத்து திறந்துப்பாடுகிற மாலையணிந்த ஸ்ரீராமன்சொல்ல திருமாளிகையிலே ஆசன மிட்டு ஒரு பொன்பாத்திரத்தில் நீர் கொண்டுவந்து கொடுக்க அந்த முனிவர்கள் கழுவிவந்தபின்பு பலவகைகறிகளுடனே நல்ல திருவமுது படைத்து நின்றார்கள் அப்போது தூறு வாசமகாமுனிவர் மெய்யானமந்திரவிதிப்படி நல்லதினத்தில் குற்றமற்றதீயினால் சுற்றினகையிலே கொண்ட நீரைப் பானஞ் செய்து அன்புடனே ஐவகை மந்திரத்தினாலே அமுதருந்தி பாலாக்கினி பால் தேன் நிலாவைப்போல் விளங்குகின்றமலை க்கொப்பாகக் குவித்த வெண்சோறு இவைகளை விள்ள உலா வித்திரிகின்ற உதராக்கினி அடங்க விலாப்பக்கத்திலுள்ளபள் ளங்களெல்லாம் நிறம்பவுண்டு அவர்கையிலேகொண்ட நீருங் குடித்து வேதத்திலே சிறந்தமுனிவர் உயர்ந்தபெரியரத்தினக் கிரீடங்களணிந்த பரிசுத்தரான அரசர் தங்கள் சிவந்த கையி னாலே பொன்னாகிய சொம்பிலே கொண்டுவந்த கங்காசலத்

தினாலே சிவந்தகைகள் கழுவிக்கொண்டு நாவிலே அறுசுவையும்பெருகி சர்க்கரைப் பாலுஞ்சோறுமான பாயாசமுஞ் சாப்பிட்டு எட்டுத்திக்கிலு மிப்படிப்பட்ட சாப்பாடுசெய்துபடைப்போர் கிடைக்கமாட்டார்களென்று சமையல் செய்தவரிற் சிறந்தவரைக் கொண்டாடிமகிழும்போது ஸ்ரீராமர் இந்த அமுது செய்தவர்கள் யோக்கியமான குலத்தினரேயென்று அவர்கள் குலமரபும் தமக்குறவானதையுந் தெரியச்சொல்ல அதுகேட்டு துறுவாசமகாமுனிவர் மகிழ்ந்து தமக்கிஷ்டமான திக்கை நோக்கிச் சென்றனர் பின்பு ரகுநந்தனரானவர் மகரகேயூர கங்கணங்களணிந்த எமதருமன் சொன்ன உறுதிவார்த்தையை எண்ணிப்பார்க்கும்போது தம்மோடுகூடிப் பிரியாதிருக்கிற இளையபெருமாள் இனிப் பிரிகிறதற்கிடமாயிற்றேயென்று நைந்துநைந்து துன்பத்திலே முழுகியிருப்பதைக் கண்ட இளையபெருமாள் ஓ! சுவாமி, நீர்வளம்பொருந்திய கேகய தேசத்தரசன் மகளுக்கு வரங்கொடுத்து உமதுயிரை எமனுக்குக்கொடுக்க நிச்சயித்திருக்கும் நீரெனக்காகத்துக்கிக்க வேண்டாம் வெற்றிமாலையணிந்த வேலாயுதங்கொண்ட இராமாவென்று பாதத்திலேவிழுந்து சேவித்து சுவாமி உம்மாலே நமது பிதாவானவர் தம்முடைய வாக்கை நிலைசெய்துக்கொண்டதினாலே அவர் பொய்சொல்லாதவரென்று உலகத்திலே அக்காலந்துடங்கி நிலைபெருகலாயிற்று அப்படி நம்முடைய தாய்மார்கள் வரங்கொடுத்து நிலைசெய்ததினாலே உமக்குக் கீர்த்தியும் புகழுமுண்டாயிற்று அதுபோலவே இக்காலத்திலும் எமக்குச் சம்மதமான வரங்களைக் கொடுத்தருளும் எனக்கு அவ்வரம் நிறைவேற விடையுங் கொடுமென்று மிகவும் வேண்டித் தளர்வுகொள்ள அதுகேட்ட ஸ்ரீராமன் தன்னிரண்டு கண்களிலும் அருவிபோல நீரொழுகி மார்பிலேவழியத் தன்னைவிட்டு நீங்காத தமது நிலையான நிழல்போன்றவனாகிய இளையவன் பிரிவுக்கஞ்சி மிகவும் வருந்துதலாய் மிகுந்ததேனொழுகுகின்ற துளசிமாலையணிந்த பராபரன் ஸ்ரீராமன் தூதர்களை நோக்கி! தூதர்களே, நம்முடைய வளமைபொருந்திய பட்டணத்துச் சனங்களை வசிஷ்டகுருவுடனே கூட்டிவாருங்களென்றனுப்ப அந்தப்படியேசென்று தூதர்சொன்ன வாய்மொழியானதைக்கேட்டபின்பு யெரியபட்டணத்து ஜனங்களும் வசிஷ்டரும் வந்து அரசனாகிய தம்மைக் கண்டபின் ஸ்ரீராமர் நிறைந்த பெரிய சபையாரையும் வசிஷ்டரையும்

பார்த்து எமதருமராசன்வந்து தம்மிடத்தில் வரங் கேட்டுக் கொண்டதும் அத்திரிபுத்திரரான தூறுவாச னேவுதலாலே வாசல் கார்க்கின்ற தம்பி தம்மிடத்தில் வந்ததும் தெரியச் சொன்னார்.

அதுகேட்டு வதிஷ்டர் ராமனைப்பார்த்துக் கேளும் ராமா உமது தகப்பனார்தானே தாவுகின்ற குதிரைகட்டின பலமான தேர்மேல் வருகிற தசரதன் அவரிடத்தில் ஒருநாள் வந்த அத்திரிபுத்திரனான தூறுவாசர் பாதங்களில் வணங்கித் துதித்து ஐயா என்னுடைய ராஜாங்கத்துக்குத் தக்க புத்திரர்களில்லா திருக்கிறேன் அதற்கு நான் செய்யத்தக்கது என்னவென்று மிகவும் வருந்திக்கேட்டார் அதற்குத் தூறுவாசர் பெரிதான அஸ்வமேதயாகஞ் செய்தீரானால் அறிவுள்ள நான்கு புத்திரர்களைப் பெறுவீர் ஆனால் அந்தப் பிள்ளைகளில் ஒருவரிறந்தால் மற்ற மூவரும் இறந்துபோவார்களென்று சொல்லிய தூறுவாசர்மொழிப் பிசகமாட்டாது என்று வதிஷ்டர் சொன்னதை தான்கேட்டு மிகவும் வெகுண்டதனால் விதியை வெல்ல ஒருவராலு முடியாது என்று தேறியிருக்க இனி நீர் தம்பிக்காக விசனப்படவேண்டாமென் றிப்படிச் சொல்லும் போது இளையபெருமாள் கேட்டீரோ சுவாமி நமது குலகுருவான வதிஷ்டர்சொன்னதை இனியெனக்கு விடையருளவேண்டுமென்று சிவந்த திருவடிகளில்விழுந்து சேவிக்கக்கண்ட ஸ்ரீராமன் தருமத்தில் கன்றுபோன்ற தம்பி பிரியவல்லவர்கள் நெஞ்சைப்பிளக்கிறதினாலே மலர்போலுங் கண்களிலேயருவி சோர விதியின் முடிவை ஆலோசித்து ஒன்றும் பேசாமல் நினைவு மூச்சுமில்லாமல் மௌனமா யிருக்கும்போது இளைய பெருமாள் மரப்பாவைப்போல் பதில்வார்த்தை யொன்றும் பேசாதிருக்கிற ஸ்ரீராமனுடைய பாதங்களை வணங்கித் துதித்து பேசாதிருக்கிறதே விடையென் றெண்ணிக்கொண்டு அங்கே நில்லாமல் அந்தப் பட்டணத்தைவிட்டுப் போகும் போது சிலர் தன்னை நம்பின நான்மறையோருக்கெல்லாம் உபசாரஞ் செய்துகொண்டு போவதனால் இதை யோசித்தால் தேவர்கள் சொன்ன வார்த்தை உலகத்திலே பிசகுமோ யென்பார்கள் சிலர்மனம் நடுங்குகிறது முடிவுகாலம் வந்ததென்பார்கள் சிலர் தம்பியைப்பிரிந்து தமையன் உயிர் நிற்குமாவென்பார்கள் சிலர் வீரத்தன்மை பொருந்திய யரசாட்சியைக் கொ

ண்டு அயோத்திமாநகரத் தரசர்களுக்கு வரங்கொடுத்து உயிரைவிடுகிறது குலசுபாவமே யென்பார்கள் சிலர் இந்த அரசர்களுயிரை யமன்தானுவது கொள்ளத்தகுவானோ வென்பார்கள் சிலர் இந்த அயோத்தியாபுரியில் துன்பப்படாமல் சுகமடைவதுண்டா வென்பார்கள் சிலர் இலட்சுமணர் பிராணனைவிடுவாரானல் நாம் இனிப் பிராணனோ டிருப்போமா வென்பார்கள் இப்படி அயோத்தியாபுரிவாசிகள் நைந்துநைந்து கரைந்துகரைந்து துக்கித்து வருந்த இளையபெருமாள் அந்தப் பட்டணத்து வாயிலை நீங்கி நவமணிகளைக் கொழித்து முத்துகளைப் பொன்னுடனே வாரிக்கொண்டு எவ்விடத்தும் சலப்பிரவாகமாகி தனக்குச்சரியான நதியொன்றுமில்லை என்ன உலகங் கொண்டாடும்படியான சரயுநதிக்கு வந்து சேர்ந்தார் வந்தபின்பு குற்றமில்லாத மணிகள் பதித்த மதில் சூழ்ந்த அயோத்தியாபுரியில் வாசஞ்செய்கின்ற வெகுஜனங்களும் துன்பத்தினுல் வருந்தவும் பெண்கள் செந்தீயில் மூழ்கவும் பாசபந்தத்தி லகப்படாத பரதமகாராஜன் துக்க சாகரத்தில் மூழ்கவும் இளையபெருமாள் சரயுநதியில் மூழ்கினர் அப்படி மூழுகி வராகவதாரத்தில் அதனுடைய நீண்ட கொம்பினுலே பொறுக்கப்பட்ட துன்பத்தைத்தீர்த்து கடலிலழுந்தின உலகையாண்ட மகாவீரனுன சூரியகுலத்து இராமருடைய முதிர்ந்த பிணி நோய்கள் முதலான பெரிய பிறவிக்கடலின் கரையேறுதற்கு அந்தப் பெரிய நதிக்கரைமேலேறினன். அப்படியேறினபின் காமக்குரோத லோபமோக மதமாச்சரியமான பகைகளை விளைக்கின்ற பஞ்சேந்திரியங்களையும் உள்ளேயடக்கி வெண்மையான சங்குகள் மேய்கின்ற பெரிய மணற்கரைமேலே குத்துகின்ற வேலையுடைய இளையபெருமாள் யாகஞ்செய்துக்கொண்டிருக்கையில் தேவேந்திரன் ஆகாயத்தில் விளங்குகின்ற செம்பொன் விமானத்தின் மேலேவந்து தன்னையுத்தஞ்செய்து கொன்ற பெருமையுள்ள இளைய பெருமாளைச் சொல்லுதற்கரிதான புகழைக்கொண்ட சரீரத்துடனே மகிழ்ந்து பொன்மயமான விமானத்தின்மேலேறிக்கொண்டுபோக பெரிய வுலகத்தா ரெல்லாரும் அயோத்தியாபுரி வாசிகளுடனே புலம்பியழ வெற்றிவேலைக்கொண்ட இளைய பெருமாள் பொருந்தியுடனே தேவலோகத்துக்குப்போய் அங்கேயிருந்து திவ்விய தேகத்தைக்கொண்டு நித்தியசூரிகள் சூழ்ந்துவர வைகுந்தம் போய்ச் சேர்ந்தருளினர்.

ஸ்ரீராமர் இலட்சுமணரைப்பார்த்து புலம்பல்.

விருத்தம்.

ஏங்கியேதரையில்வீழ்ந் திடியிடித்ததுபோலெண்ணி
தாங்கியேமனந்தளர்ந்து சதிர்ப்பரதரையும்பார்த்து
பாங்குளதம்பியேநீ பட்டணமாள்வாய்நானும்
நீங்கியேபோறேனென்று நிலைதளர்ந்துருகுவாரே.

அப்பால் நடந்ததைச் சொல்லுகிறோம் எப்படியென்றால் இங்கே எப்போது தன்னைவிட்டு நீங்காத தம்பியை நினைந்து மிகவும் வருந்துகின்ற துன்பத்துக் கிடமாகிய இராமன் தனக்குள்ளே மெலிந்து நாலுதிக்கிலும் பார்த்து தம்பியைக் காணாமல் மனந்துடித்து வேர்த்துத் திருமேனியெல்லா மெலிந்து நினைந்து நெடுங்காலமெல்லா மென்னைக் கைவிடாமல் காத்ததம்பி இப்போதென்னைக் கைவிட்டுப்போனாயோவென்று தாமரைப்போலும் கண்களிலே நீராகப் புலம்பத் தொடங்கி வெற்றிக்குடைகொண்ட மேகநாதனான இந்திரசித்தை ஒரு அம்பினாலே கொன்று அறியாத பாவியான எனக்கு ஜெய முண்டாகச்செய்த என்னுயிரை திவ்விய பரிமளமாலையணிந்த தசரத சக்ரவர்த்தி புத்திரனே புத்தியில்லாதவனுக்குத் துணை யான தம்பி இனி நான் உலகத்திலே நிலைகொள்ளேன் நிலை கொள்ள மாட்டேன் ஓ! ஓ! நான் பொறுத்திருப்பேனோ என் னரசசிங்கமே யடைக்கலம்புகுந்த விபீஷணர் முன்னேயவன் வந்து சேராதபடி காத்துப் பகையான இராவணன் விட்ட வேல் முன்னேசென்று மலைபோல மார்பிலே தாங்கின என் தம்பி இலட்சுமணா என்னுயிரே இனிநானென்னசெய்வே னென்றிப்படி பலவகை நினைத்து பிரலாபித்து பொன்னாலும் இரத்தினங்களினாலும் அலங்கிருதமான மலைபோலே மழை விழுவதுபோலவும் அருவி வொழுகுவது போலவும் கண் ணீர் பெருக அழுது பிரலாபித்தார் அப்படி தன் செவந்த திருவடிகளையே எல்லோருக்குந் தந்து ரட்சிக்கும் ஸ்ரீராமர் அழும்போது அவர் நிறத்தைக்கொண்டமலைகளும் அழுதன பெரியதிக்கு யானைகளுமழுதன ஆகாயமும் பெரியதிக்கும் உல கங்களும் அழுதன இப்படி நினைத்து யெண்ணி யெண்ணிக் கரைந்து நையாத பொருள்களொன்றுமில்லை பின்னையும் ஸ்ரீ

ராமர் என்னுடைய இனிதானவுயிர்போனால் பொய்யான யென்னுடம்பு நிற்குமோ, ஆகையாலே இனி யெனக்கிளைய வன் போனவழியே நானும் போகக்கடவேனே யென்று ரத் னங்கள் பதித்த ராஜமுடியை நீ சூட்டிக்கொள்ளென்று எல் லாரும் துதிக்கத்தக்க யானையைப்பார்க்க அப்படிப் பார்த்த வுடனே, பரதன் விரைவிலே தமதுகைகளைத் தலைமேலே குவி த்துக்கொண் டெதிர்நிற்க அவரைக்கண்டு வாசமிகுந்த மாலை யணிந்த ஸ்ரீராமரானவர் ஓ! தம்பி பரதா, இனி உலகை காத்த ல் உனக்கே கடனென்றுசொல்ல அதுகேட்டு பாதன் மிகவுந் துக்கித்து இராமர் பாதத்தின் கீழே செத்தவன்போலே விழு ந்து ஐயையோ இந்த ஸ்ரீராமர் விளங்குகின்ற இராஜமுடி யை சூட்டிக்கொள்ளென்று எவ்வளவுந் துன்பங்கொள்ளா மற்சொன்ன தகப்பனிடத்திலே பெருமைகொண்ட கேகயரா ஜன்பெற்ற கைசேசி பெற்றுக்கொண்டவரத்திலும் கெட்டதா யிருக்கிறதென்று சுவாமி நீர் அரசாட்சி செய்கின்ற வுலகத் தை ஆலோசித்து என்னிடத்தே கொடுக்கிறது தெய்வத்தன் மையைக்கொண்ட தாங்கள் தாங்குகின்ற இந்த நால்வகை யான வுலகத்தை இந்தவுலகத்திலே திரிகிற பாம்பைத் தாங்க ளென்று சொல்வதிலுஞ் சிறந்ததே யின்னம் மத்தங்காய்ப் புல்லரிசி செந்நெல்லுக் கொப்பாகுமானாலும் மின்மினிப் பூச் சிஒளி சூரியனுக்கொப்பாமோ, ஆனாலும் வுமக்கொப்பாக நானிருந்தரசாளுகிறது வுள்ளுக்கு குற்றமேயாம் ஆனதால் முன்னேவும்மைப்போலே ஆண்மைத்தொழிலைக்கொண்டவர் கள் தன் பின்னும் நிலையாக இந்த உலகத்தை நடத்த வல்ல வர்கள் யாரென்றால் குற்றமில்லாமல் உதாரகுணங்களுடைய குசலவர்களுக்கு நீர் உம்முடைய வொளிபொருந்திய முடி யைச் சூட்டுமென்று சொல்லி பரதன் வணங்கினான்.

குசலவர்களுக்கு முடிசூட்டடல்.

விருத்தம்.

துங்கமுறு முத்து நவ ரத்தினத்தாலுன்
  சொல்லரிய மரகதமா ணிக்கத்தாலும்
பொங்கமுறு சதுர்பந்த லமைத்து விண்ணோர்
  புளகமுற மேதினியோர் வியப்பதாகத்
திங்கள் நிகர் குசலவர்க்கு மகுடஞ்சூட்டச்
  செய்திகேட் டரசர்களுஞ் சேரவந்து
தங்கடங்கள் காணிக்கை கப்பணமுங் கட்டி
  சார்ந்திட்டார் மனங்களிப்பு கூர்ந்திட்டாரே.

அப்போது இராஜாதிராஜனான ஸ்ரீராமர் மனமகிழ்ந்து அவ்விடத்தே கொல்லனாற்செய்த கொலைவேலைக்கொண்டு நிற்கிற குசலவர்களுக்கு அப்பொழுதுதானே முடிசூட்டுதற் கேற்ற காப்புக்கட்டி உயர்ந்தபெரிதான மதயானைமேல் ஏறுகின்ற அரசர்களுங்கூடிப் பிராமணர்கள் சூழ்ந்து பேரிகைகள் முழங்க, சங்குகள் முழங்க, வாசனைப்பொருந்திய பூவையணிந்த கூந்தலையுடைய பெண்கள் விளக்குகள் தாங்க பெரிய யானை மேலே நூற்றெட்டுத் தங்கக்குடங்களின் வாய்நிறம்ப கங்காசலங் கொண்டுவரச்செய்து உலகநாதரை நீங்கின ஸ்ரீராமர் தம்முடையபிள்ளைகளுக்குமகிழ்வுடனே பட்டாபிஷேகம்பண்ணி பெரிய வேதங்களிலே சொல்லியபடி ஆராய்ந்து நல்லநாளிலே பொன்னாலாகிய சிங்காதனத்தின்மேலேற்றி பொன்னுடையணிந்து யானைவீரர்களெல்லாந் தங்கள் அழகிய கைகளை தலைமேல்சூடக் குசலருக்கும் பெரியராஜ முடிசூட்டியருளிய பச்சிலையுடைய பழுத்த குலைகளைக்கொண்ட வாழைமரங்கள் குற்றமற்ற பெண்கள் துறையிலே நீண்டுவளர்கின்ற அந்த கோசலநாட்டிலே குசலவதியென்று ஒரு குற்றமற்ற நீண்ட

மதில்சூழ்ந்த பெரிய ஒரு பட்டணம்உண்டுபெண்ணி தகுதியான நால்வகைச் சேனைகளும் அதற்குத்தகுந்த செல்வமும் வகை வகையாகவைத்து கொத்துகளோடு மலர்ந்த மாலையணிந்த குசலவனென்பவனை அந்தப் பெரியபட்டணத்திலே அரசாள வைத்து கிரீடமணிந்த அதற்கரசனுகிய ஸ்ரீராமர் பின்னும் உத்தரகோசமென்று விளங்குகின்ற திருநாட்டில் அதிகவிசித்திரமான க்ஷீராப்தியென்கிற ஒரு சிறந்தநகரத்தில் வரிசையாக ரத்தினங்களால் பதித்து உயர்ந்த ராஜதானியான மாளிகையொன்றுகட்டி தம்முடைய சதுரங்கசேனைகளும் நிலைபெற்ற செல்வமும் நன்றாகக்கொடுத்துப் பொன்னாலாகிய கீர்த்தியைக் கொண்ட மதில்சூழ்ந்த சிறந்த அந்த நகரத்திலே லவனை அரசாளவைத்து பின்பு அந்நாள்கடந்த மறுநாளையதினம் இலட்சுமணர்போனபடி நானும்போய்ச் சேரவேணும் சத்துருக்கருக்கும் நீங்கள்போய் சொல்லுங்களென்று வண்டுகள் தேனைக்குடித்துப் பாடுகின்ற மாலையணிந்த ஸ்ரீராமர் தூதரையனுப்பிவிட்டார். தூதர்கள் சத்துருக்க மகாராசனுடைய அதிருங் கழல்களை வணங்கி அயோத்தியாபுரியிலே விசேஷமுண்டானதும் பின்பு நடந்த சமாச்சாரமும் விரைவிற்சொன்னார்கள் வாயுகதியாகவந்தவர் அப்படி ஓட்டத்துடனேவந்து சொன்னவர்கள் வார்த்தை விசேஷங்களையெல்லாஞ் செவிகொடுத்துக்கேட்டு மெலிந்த நெஞ்சுடனே கண்களில் நீரொழுக உடம்பெல்லாம் நடுங்கி மலைபோன்றதோள் மிகவுமெலிந்துசோர தனக்கொப்பில்லாதமாலையணிந்த ஸ்ரீராமனுடைய பொன்னடிகளை இனி வணங்கி உச்சீவிக்கப் போகிறேன் நீங்கள் இந்தப் பட்டணத்தை யாண்டுக்கொண்டு சுகமாயிருங்களென்று தன்னுடைய பிள்ளைக்கு இராஜமுடிசூட்டிப் பின்பு சந்திரன் தவழுகின்றமாலையுடைய மதிற்புறத்திலே விதிப்படி க்ஷீராப்தியென்று மிகுதியைக் கொண்டே புதிதான ஒரு மண்டபத்தை யுண்டுபண்ணித் தன் புத்திரர்களை அந்தப் பட்டணத்திலே யிருக்கச்செய்து பின்பு பாதுகையணிந்த சிற்றடியும் பவளம்போலும் சிவந்தவாயும் கங்கணங்களணிந்த கைகளையுடைய பெண்கள் வருந்திச் சோர்வடைய பெரிய

மாடமாளிகையுடைய மதுரைமாநகரத்தை விட்டு சொர்ண மதில்கள் சூழ்ந்த அயோத்தியாபுரிக்கு வந்து ஸ்ரீராமருடைய இரண்டு திருவடிகளையும் வணங்கிய தன் புத்திரர்களுக்குப் பொன்முடி சூட்டினதும் குதிரை யானை தேர்களாகிய இவைகளைக்கொடுத்ததும் முதலாகத் தெரியச் சொன்னான் அதெல்லாங் கேட்டபின்பு அருவிப்போல் நீரொழுகுங் கண்களையுடைய தனக்கொப்பில்லாத வெற்றிமாலையை யணிந்த ஸ்ரீராமர் முந்தின நாளில் தன்னைவிட்டுப்பிரிந்த பெரியதோள்களையுடைய இளையபெருமாள்போன நல்லவழியேசெல்ல ஆலோசிக்கும்போது சந்திரனை வொப்பாக வெள்ளையானை முத்துக்குடை ஆகாயத்தின்மேலே அழகுகாட்ட கட்டுத்தறியை முறிக்கப்பட்ட மும்மதங்களைக்கொண்ட வெவ்விதமான பகைகள் மூளுகின்ற யானைமேலே விபீஷணனென்னும் மெய்ஞ்ஞானியானவன் பின்பு எல்லோரும் அஞ்சத்தக்க இராவணனுடைய பெரிதான பத்துமகுடங்களிலும் விளங்குகின்ற இரத்தினங்களையும் பரித்துக்கொண்டுவந்து தமயனைப்போல் சஞ்சரிக்கின்ற ஏழு குதிரைக்கட்டிய தேரின்மேலே எட்டுதிக்கும் விளங்குகின்ற சூரியகுமாரனென்னுஞ் சுக்ரீவனும்வந்துசேர்ந்தான் அவனுடனேமகிழ்ந்து உதயமாகின்ற சூரியபகவானை ஒருபழுத்த சிவந்தகனியென்றுமுறையுடையவனுகக் கோபித்து வந்து உலகமெல்லாம்மோதுகின்றபெரிய வாயுபுத்திரனும் வந்துகூடினான் அநேகமலைகளைப் பலம் கொண்டு போகப்போக ஒரு கையாலே வாங்கி அவ்வானவர் மேலே கர்ச்சித்து மோதுகின்றகடலை அணைகட்டினநளனும் வந்துசேர்ந்தான் பின்பு குரங்குடனே யுத்தஞ்செய்ய இதுதானென் றெண்ணங்கொண்டு தன்பாணஸ்திரங்களால் யுத்தம் பண்ணிவருகிற இராட்சதசேனைகளை கைகளாலும் கால்களாலும் மலைகளாலும் பிரகாசியாநின்ற வெண்மையான பரவைகளாகப் பிறந்தவர்களும் மற்ற அரசர்களும் வந்து கூடினார் ஆகையாலே முன்னேபோன இளையபெருமாளுடனே கூடப் பெருமை பொருந்திய மாலையணிந்த ஸ்ரீராமர் தெரியச்சொல்லி முன்னே விபீஷணரைப் பார்த்து மின்னுகின்ற வேலைக்

கொண்ட நீண்டகைகளையுடைய விபீஷணு? நீ உன்னுடைய பொன்மயமான இலங்கைக்குப் போய் உலகத்திலுள்ள சீவ கோடிகளுள்ளளவும் வாழ்ந்திருக்கக் கடவை போவென்று அன்புடனே விடைகொடுத்தனுப்பிவிட்டு சுக்ரீவனைப்பார்க்க அதுதெரிந்து சூரியகுமாரனுன சுக்ரீவன் தனக்கும் விடை கொடுத் தனுப்புவாயென்று பயந்து சுவாமி இராகவா அங் கதனுக்கு மகுடஞ்சூட்டி அங்கேவைத்துச் சிலருடனே இங் கேகூடவருகிறதற்காக வந்தேன் என்றுவணங்கினுன். அப் படி வணங்க வேலைக்கையிலேகொண்ட ஸ்ரீராமர் பின்னே சூரி யகுமாரன் சுக்ரீவன் வருவது தெரிந்து ஸ்ரீராமனானவர் ஓ! சுக்ரீவா? நிறைந்த குணத்துடையவர்களானுல் திரிலோகத்தி லே யுள்ளவர்கள் யாராலும் ஒருவர் செய்த நன்றியை மற க்க மாட்டுவார்களோ வென்று வாய்வு புத்திரனுன அனுமா ரை மிகவும் மகிமையுடனே பார்த்து முன்னே நான்சொன்ன தெல்லாம் கேட்டாயல்லவோ, இனிவுலகத்திலே வாழ்ந்திரு ப்பது உன்கருத்துடனே கூடினதாதலால் பொன்மலைபோலு யர்ந்த தோள்களையுடைய அனுமாரே சுகமாயிருக்கக் கடவீ ரென்று சொல்லிக்கொண்டேபோக அதுகண்ட சூரிய குமார னுன சுக்ரீவன் சாம்புவந்தர் வணக்கத்தையுடைய குமுதன் அரக்கரைக் கொலைசெய்த சுமிந்தன் மகா விவேகியர் ரணரங் கன் நீலன்மற்றுமுள்ளவானரவீராள்உலகத்தரசர்கள்முதலிய யாவரும் ராமனுடைய வுத்திரவினுலே விலகி நில்லாதவர் களாய் அவர்களுடனே தோரணங்கட்டியும் பெரிய அயோத் தியாபுரியி லுள்ளவர்கள் அழகுமிக்க பெண்களும் வேதங்கள் நான்குமுணர்ந்த பிராமணர்களும் ஒரேமனதான அன்பினு லே பிரியமாட்டாதவர்களாய் ஸ்ரீராமருடைய நிலையான திருவடிகளிலே கொண்டபக்தியினுலே அந்தப் பழையதான பட்டணமெல்லாம் பாழாகவிறைந்து சூழ்ந்துவர அவர்கள் கோட்டைவாசலைவிட்டுக் கடந்துபோனுர்கள் அப்படியாகும் போது இராமனிடத்தே கொண்ட பக்தியினுலே உலகத்தா ஸை்யை வெறுத்தவர்களாய் சொல்லுதலாலே அவர்கள் பிற ந்தநாள முதலுள்ள அயோத்தியானது முத்தமிழிலுள்ளவ

ரான அகத்தியமுனிவர் கையிலே மொண்டுகுடித்த முன்னுளி லே வற்றிய கரணமிகுந்த மணலையுடைய கடலைப்போலிருந் தது பின்பு ஸ்ரீராமருடனேகூடி பெருகிவருகிற நதியிலேபோ ய்த் தீர்த்தமாடுகிற விடத்திலே நீராடி வெளியே கரையிலே றினவுடனே பூவிலிருக்கின்ற நான்முகக்கடவுள் மகா வேகத் தில் மிகுந்து அனேக பிரகாசத்தையுடைய விமானங்களுட னே அழகியதான ஆகாசமுகட்டிலே வந்து தோன்றி அய் யனே மெய்யனே துய்யவே விளங்கும் விண்ணோர் கையனே இனி உம்முடைய திவ்விய தேகத்துடனே வந்தருளவேண்டு மென்று வணங்கிச்சொல்ல அதுகேட்டு ஸ்ரீராமரானவர் முன் னே தன்னைச் சரணுகதி பண்ணுந் தேவர்கள் துன்பத்தை நோக்குதற்காக உலகத்திலே நிலையாகப் பிறந்த வகையை நி னைந்து அங்கே தனக்கு நேரில்லாத அந்த சரயுநதியிலே கழி த்துவிட்டு தம்முடைய தம்பிமாருடனே பரிசுத்தமான சரயு நதியைவிட்டுப் பின்பு ஒரு தன்மையாய்ச் சேரும்போது சம் பந்தாதிகளைவென்ற வேலாயுதத்தைக் கொண்ட சோமகாச னுலே காவல் செய்யப்பட்ட பிரதான சேவகர்கள் அப்பியாசி க்கின்ற நான்கு வேதங்களுந் தங்களுடைய நாலுருவும் ஒரு வடிவுகொண்டதுபோலாகப் பின்பு செழுமையையுடைய முத் துகளைப் பழிக்கப்பட்ட சரயுநதி தீரத்திலே சகலரும் குளிர்ச் சியாகக் கொண்டவர்களாய் முழுகிக்கூடி நெருங்கின பின்பு பிரியமாட்டாத விசனத்துடன்வந்த வானர வீரர்களெல்லாம் பழைய தங்கள் தெய்வலோகத்தைக்கண்டு நிற்க ஸ்ரீராமர்கண்டு தம்மை வணங்கும் நான்முகக் கடவுளைப்பார்த்து மேகங்கள் மோதுகின்ற கொடிகள் கட்டின அயோத்திமாநகரத்திலே கூ ட்டங்கள்கொண்டு வாசஞ்செய்தவர்க ளெல்லாரும் அன்புட னே வாழ்ந்திருக்கத்தக்க வீடுகளமைக்கவேண்டுமென்ன நீல மேக நிறங்கொண்டு விளங்காநின்ற திவ்விய சரீரத்தைக்கொ ண்ட சக்கிரவர்த்தித்திருமகன் அருளிச்செய்வதைக்கேட்டு வீ ணை நாதத்தைச் செய்யும் வண்டுகள் மொய்த்த செந்தாமரை மலரின்மேவிய பிரமதேவன் எல்லாத் தருமங்களும் விளங்கு கின்ற கிருபைக்கடலானவர் அருளிச்செய்தபடியே அயோத்

தியாபுரி வாசிகளுக்கெல்லாம் விளங்காநின்ற சந்தானமென்னும் ஒரு பெரிய பட்டணத்தை யுண்டுபண்ணினன். அப்படியே அமலனான கடவுள் அங்கே அவர்களிருக்கப் பட்டணம் உண்டுபண்ணியபின்பு அயோத்தியாபுரியி லுள்ளவர்களெல்லாம் நவமணிபோல் நிறங்கொண்டு தெளிந்த நீரையுடைய சரயுவென்கிற நதியிலே மூழ்கி தேவவடிவு கொண்டு கணக்கில்லாமல் வந்துலாவுகின்ற செம்பொன்னாலாகிய விமானத்தின் மேலேற்றிக் கொண்டுபோய் விசாலமாக விளங்குகின்ற சந்தனமென்னும் பட்டணத்திலே நிலைகொண்டு வந்தார்கள் பின்பு திருவாழியைக் கையிலேகொண்ட சுவாமியானவர் அதிக மகிழ்ச்சியுடனே பூவின்மேற் கடவுள் தாம் பிரமதேவன் வேதங்களைக்கொண்டு வாழ்த்த முகபடாமணிந்த மாணிக்க மாலைகொண்ட இந்திரன் துதிசெய்து வாழ்த்தினவுடன் சிவகணமெல்லாம்போற்ற தேவர்கள்வாழி சோபனங்கள் சொல்ல ஸ்ரீராமர் வைகுந்தமடைந்தார்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கலைமறைமுனிவர்வாழ்த்தக் காரிகையாகங்கூற
நிலைபெறமன்னர்செங்கோ நீணிலந்தன்னில்வாழ்க
அலைகடலிலங்கைமூதா ராக்கரைவேரறுத்த
சிலைதொடுவெல்வதாகச் செந்தமிழ்வாழவென்றே.

இனியவர்காதைமுற்று மெழுதினோர்வியந்தோர்கற்றோர்
அனையதனதனைச்சொல்வோர்க் கரும்பொருள்கொடுத்துகேட்
கனயநற்புவியின்மீதே காவலர்புகழத்தாழ்ந்து [போர்
வினையையுமறுத்துமேலே விண்ணவர்பதத்துச்சேர்வார்.

மகாவிந்தம் முற்றுப்பெற்றது.

சக்கரவர்த்தித் திருமகனார் திருவடிகளே சரணம்.

அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நிகரற்றமருந்து, ஆங்கிலமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. இதை உட்கொண்ட இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இத்திராவகத்தால் தீரும் வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினாலாவது புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர்வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவைதீரும் முகவசீகரத்தை உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு அதிக வலுவைத்தரும் தேகத்தில் நல்ல ரத்தத்தைச் சுரப்பிக்கும் க்ஷயரோகத்தைத்தீர்க்கும் வாத பித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும் சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத்தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைகள் தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்லபோஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது 40-நாள் மருந்து உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமேயாகும் இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறையும் இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைய மருந்தின் விலை ரூ. 1-4-0
டஜன் 1-க்கு ரூபா. 12-0-0

ஒருமண்டலம் 40-நாளைய மருந்தின் விலை ரூ. 2-0-0
டஜன் 1-க்கு ரூபா. 2[illegible]-0-0

பி. நா. சிதப்பா முதலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர் பாரெக்ஸ் பே[illegible]வ்டு, மதருஸ்.